


வைணவ ஆசாரியர்களின்

வாழ்வும் வாக்கும்


(ஐதிஹ்ய நிர்வாஹ விளக்கம்)

Dr. M.A. வேங்கடகிருஷ்ணன் M.A., M.Phil. Ph.D.

பேராசிரியர், வைணவத்துறை, சென்னைப் பல்கலைக் கழகம்

கீதாசார்யன்

7, தெற்கு மாடவீதி, திருவல்லிக்கேணி, சென்னை 600 005



Released by Maaran's Dog ,Toronto , Canada

ஸ்ரீமத்வேதமார்க்க ப்ரதிஷ்டாபனாசார்ய
ஸ்ரீமத் பரமஹம்ஸபரிவ்ராஜகாசார்ய ஜகத்குரு
ஸ்ரீ கலியன் வானமாமலை ராமானுஜ ஜீயர்ஸ்வாமி
அநுக்ரஹித்த மங்களாஶாஸன ஸ்ரீமுகம்

அன்பார்ந்த ஸ்ரீ வைஷ்ணவப் பெருமக்களே! தமிழ் கூறும் நல்லுலகின் சான்றோர்களே! இதோவொரு மிகவருமையான, மிகப்பரந்தும் விரிந்தும் விளங்காநிற்கும் "வைணவ ஆசாரியர்களின் வாழ்வும் வாக்கும் (ஐதிஹ்ய நிர்வாஹ விளக்கம்)" என்ற நூல்



வெளிவருகின்றது. இச்சீரிய ஆய்வினை மேற்கொண்டு வெளியிடும் ஆய்வாளர், நமக்கும், நமது வானமாமலை ஸ்ரீமடத்திற்கும் மிகவும் அணுக்கரான முனைவர் ஸ்ரீ உ.வே. மண்டயம் அனந்தாண்பிள்ளை வேங்கடகிருஷ்ணன் அவர்கள். இவர் சென்னைப் பல்கலைக் கழகத்தின் வைணவத் துறையில் பேராசியராய் மிகச் சிறந்த பணியாற்றிக் கொண்டிருப்பவர். நமது ஸ்ரீவைஷ்ணவ ஸம்பிரதாயத்தின் மிகச் சிறந்த வித்வான்களாக, திக்கு நிறை புகழாளராகத் திகழ்ந்த ஸ்ரீஉ.வே. சதாபிஷேகம் கோவிந்த நரஸிம்ஹாசார்ய ஸ்வாமி, ஸ்ரீ உ.வே. வேளுக்குடி வரதாசார்ய ஸ்வாமி, ஸ்ரீஉ.வே. திருமலை அனந்தாண் பிள்ளை கிருஷ்ணமாசார்ய ஸ்வாமி ஆகிய பெரியவர்களிடம் ஸம்ப்ரதாய க்ரந்தங்களை வரியடைவே கற்றுப் பயன் பெற்றவர். யாவற்றுக்கும் சிகரம் வைத்தாற்போன்று, நமது தென்னாசார்ய ஸம்பிரதாயத்தின் நிகரற்ற மஹாவித்வான், மஹாமஹிமோபாத்யாய ஸ்ரீஉ.வே. பிர.ப. அண்ணங்கராசார்யர் ஸ்வாமியின் "ஆம் முதல்வனிவன்" என்ற திருவருட் பார்வைக்கு இலக்காகிய மிகப்பெரும் பேறு பெற்று அவராலேயே "மேதாவிமணி" என்ற விருதும் அளிக்கப் பெற்றவர். இவரது அயராத பெரு முயற்சியின் பயனாக சென்னைப் பல்கலைக் கழகத்து வைணவத்துறை மேலும் மேலும் வளர்ந்து ஓங்கியொளி பரந்து மிளிரா நிற்கின்றது. "கீதாசார்யன்" என்ற அருமையான மாத விதழைக் கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக வெளியிட்டும் நம் வைணவத்துக்கு அருந் தொண்டாற்றிவரும் இந்த நமது ஆத்யாத்மிக மித்ரமணி, நம் ஸ்ரீமடத்து சிஷ்யமணி இப்போது இந்த அரிய பெரிய நூலினை தமது முனைந்த ஆய்வின் பெரும் பயனாக வெளியிட முனைவது முத்தான முயற்சி என்பது வெள்ளிடைமலை.

Released by Maaran's Dog ,Toronto , Canada

இவர் தமது முன்னுரையிலேயே ஸாராம்சமான சில பல விஷயங்களை எழுதி, நூலைப் படிக்கும் அன்பர்களனைவர்க்கும் ப்ரேரணை (motivation) நல்கியுள்ளார். தமிழாரணமாய் விளங்கும் ஒப்புயர்வற்ற ஆழ்வார்கள் பன்னிருவரது திவ்யப்ரபந்தங்கட்கே அஸாதாரணப் பெருமை சேர்க்கும் நம் பூருவாசாரியப் பெருமக்களது ஈடுமுப்பத்தாறாயிரம் முதலிய பேருரைகள் விளங்காநிற்பதையும், அவற்றுக்கும் ப்ராமாணிகத் தன்மையையும், சுவை மிகுதியையும் விளைத்து விளங்காநிற்பவை ஐதிஹ்யங்களும், நிர்வாஹங்களும் என்பதையும் எடுத்துரைத்துள்ளார் ஆய்வாளர். இந்த பற்பல ஐதிஹ்யங்களும், பல பூர்வாசார்யர்களது நிர்வாஹங்களுமே திவ்யப்ரபந்த வ்யாக்யானங்களது தனிச்சிறப்பைப் பறைசாற்றுபவை என்பதையும் எடுத்துக் காட்டியுள்ளார். முதலாயிரத்துத் திருப்பல்லாண்டு துவங்கி இறுதியில் திருவாய்மொழி பத்தாம் பத்தின் கடைசிப் பதிகமான "முனியே நான்முகனே" முடிவாக வெவ்வேறு வியாக்யானங்களில் காட்டப்பட்டுள்ள ஐதிஹ்யங்கள்–நிர்வாஹங்கள் அனைத்தையும் முறையே எடுத்துத் தொகுத்திருக்கும்பாங்கே இவ்வாய்வு நூலின் தனித்தன்மை. முன்னர் 1953 ஆம் ஆண்டில் மஹாவித்வான் ஸ்ரீஉ.வே. ப்ரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசார்ய ஸ்வாமியின் "ஐதிஹ்ய நிர்வாஹ ரத்னமாலா" என்ற விரிவான நூலையும் இந்நூல் விஞ்சி நிற்கின்றது. காரணம் – ஸ்ரீ உ.வே. ப்ர.ப. அண்ணாஸ்வாமி முக்கியமாக வியாக்கியானங்களில் காணும் ஐதிஹ்ய நிர்வாஹங்களையே எடுத்துக் காட்டித் தொகுத்தருளியுள்ளார். ஸ்ரீஉ.வே அண்ணாஸ்வாமியின் அடிச்சுவட்டில் சென்று, அப்பெரியவர் நூலையும் வழிகாட்டியாகக் கொண்டு, அவை அனைத்திற்கும் மிகத் தெளிய நடையில் விளக்கங்களுடன் இப்பெரிய நூலை எழுதியுள்ளமை அறிஞரவரனைவரது பாராட்டுதல்கட்கும் கட்டாயம் இலக்காகி இயங்கும் என்பதில் ஐயமில்லை.

இந்த சந்தர்ப்பத்தில், வெகு காலமாக மிக அழகாக உபயோகிக்கப்பட்டு வரும் 'ஐதிஹ்யம்' என்ற சொல்லைப் பற்றி ஒரு வார்த்தை. 'இதிஹ' – ஏவ – ஐதிஹ்யமென்பது நமது கருத்து. கருணா – ஏவ – காருண்யம் என்பதுபோல். 'இதிஹோவாச வ்யாஸ: பாராசர்ய:' முதலிய இடங்களில் – என்று ப்ராமாணிகத்வத்தை நிலை நாட்டிக் காட்ட இவ்வாறு கூறப்படும் வசனங்கள் காண்கின்றன. இந்த அடிப்படைக் கருத்தினையடியொட்டியே 'ஐதிஹ்யங்கள்' பல பெருமக்களது, ஆசார்யர்களது வாழ்க்கை வரலாற்றில் சில உண்மை நிலைகளை உணர்வதற்கும் நம் சிந்தனைகளைத் தூண்டுகின்றன.

அன்பர்களே, ஐதிஹ்யங்கள் வாயிலாக திவ்யப் ப்ரபந்தங்களின் பல பாசுரங்களின் ஆழ்பொருளை நாம் உணர்ந்து கொள்ள முடிகின்றது. பூர்வாசார்யர்களது நிர்வாஹங்கள் நம் மனங்களிலே சுவையூற்றைத் தோற்றுவித்து மகிழ்விக்கின்றன. இம்மாபெரும் முயற்சியை மேற்கொண்டு, முனைந்துழைத்து பெரு வெற்றி பெற்றுள்ளார் நமது ஆப்தர் முனைவர் ஸ்ரீ உ.வே. வேங்கடகிருஷ்ணன் என்பதை யுணர்ந்து நாம் அளவிலா ஆனந்தமடைகின்றோம். இளைஞர் பருவத்தை முழுமையாகத் தாண்டாத ஸ்ரீ உ.வே. வேங்கடகிருஷ்ணன் மேன்மேலும் இன்னும் பல ஆய்வு நூல்களை எழுதி வெளியிட்டு ஞாலம் புகழவே வாழ்வெய்தி வாழ்க என மனமார்ந்த மங்களாசாஸனம் செய்கின்றோம்.

வானமாமலை.
சுபாநு சித்திரை–14
27. 4. 03

ஸ்ரீராமானுஜன்

ஸ்ரீமத் அஹோபிலமடம் ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹஸ்வாமி திவ்யாஸ்தாநத்தில்
45 ஆவது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருக்கும்
ஸ்ரீமத் வேதமார்க்க ப்ரதிஷ்டாபநாசார்ய, பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய,
ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரோபய வேதாந்தாசார்ய, ஸ்ரீபகவத் ராமாநுஜ ஸித்தாந்த
நிர்தாரண ஸார்வபௌம ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹ திவ்யபாதுகாஸேவக

ஸ்ரீவண் ஶடகோப ஸ்ரீநாராயண யதீந்த்ர மஹாதேஶிகன்

அநுக்ரஹித்த மங்களாஶாஸன ஸ்ரீமுகம்

மிகப்பெரிய புண்யத்தின் பயனாய் வருவது – கிடைப்பது ஸ்ரீவைஷ்ணவ ஜன்மம் என்பர் பெரியோர். இதை எப்படி அறிவது என்று ஆராய்ந்தால், பலர் பலவாறாகக் கூறுவர்.

ஆனால் நாலாயிரமும் இவர்களுக்குப் பெரும் தனமாகக் கிடைத்திருப்பதைக் கண்டே, கொண்டே இதை அறியலாம்.



வேதத்தை அத்யயனம் செய்யும் உரிமை கிடைத்தமையைக் கொண்டே வைஷ்ணவ ஜன்மம் மிக உயர்ந்தது என்று கூறலாம். ஆனாலும் நால்வகை வர்ணத்தவரும் அறியும்படிக் கிடைத்துள்ள, பெருமை பெற்ற நாலாயிரமும் கிடைத்துள்ளதே! எல்லோருக்கும் ஏற்பட்ட பாக்யமாகும்.

ஸ்வாமி ஸ்ரீ தேஶிகனும் "செய்யதமிழ் மாலைகள் நாம் தெளியவோதித் தெளியாத மறைநிலங்கள் தெளிகின்றோமே" என்று அருளியுள்ளார்.

இப்படிப்பட்ட பெருமையுடைய திவ்ய ப்ரபந்தங்களைவிட, இவற்றுக்கு நம் பூர்வர்கள் அருளியுள்ள உரைகள் மிக மிகச் சிறந்தன ஆகும். 'வ்யாக்யான சக்ரவர்த்தி' என்ற சிறப்புப் பெயர் பெற்ற பெரியவாச்சான் பிள்ளை நாலாயிரத்துக்கும் உரை அருளியுள்ளார். இவருடைய ஆசார்யரான நம்பிள்ளையிடம் காலக்ஷேபம் செய்து கேட்ட அர்த்தங்களை ஒன்று விடாமல், திருவாய்மொழி முதலான சில ப்ரபந்தங்களுக்கு உரையாக, மிகப்பெரிய "ஈடு" என்ற பெயர் பெற்ற அத்புதமான வ்யாக்யானம் எழுதியுள்ளார் வடக்குத் திருவீதிப் பிள்ளை. இது மிகச் சிறந்த வியாக்யானம்.

இவற்றின் பெருமையைக் கண்ட ஶைவர்கள் பலர் தங்கள் திருமுறைகளுக்கு இம்மாதிரியான ஓர் உரை இல்லையே என்று இன்னும் வருந்துகிறார்கள்.

ஸ்ரீ உ.வே. ஸ்வாமிநாத ஐயரைச் சிலர் சைவத் திருமுறைகளுக்கு இம்மாதிரி உரை ஒன்றை எழுதும்படி தனிகர்களைக் கொண்டு நிர்பந்திக்க, அவரும் 'இம்மாதிரியான உரை எழுத வேறு எவர்களாலும் முடியாது. ஸ்ரீவைஷ்ணவ ப்ரபந்தங்களுக்கு உரை எழுதிய பெரியோர்கள், வடமொழி, தென்மொழி முதலான எல்லாவற்றிலும் புலமை பெற்றவர்கள். அதனால் அவர்களால் இம்மாதிரி உரை எழுத முடிந்தது. நம்மில் இம்மாதிரி புலமை பெற்றவர்கள் ஒருவரும் இலர். அவர்கள் எழுதிய உரைகளின் மூலமான 'திருவாய்மொழி' முதலான ப்ரபந்தங்களே பெருமை பெற்றவை. ஆகவே, அம்மாதிரி நம்மால் ஒருவராலும் சைவத் திருமுறைகளுக்கு உரை எழுத முடியாது. ஆகவே, இது விஷயமாக என்னை நிர்பந்தப்படுத்த வேண்டாம்" என்று கூறிவிட்டதாக அவரே தம்முடைய சரித்திரத்தில் எழுதியுள்ளார்.

இப்படிப்பட்ட பெருமை படைத்த உரைகளை நாம் பெற்றிருக்கிறோம் என்பதை நினைத்து நாம் மிகவும் பெருமைப் படவேண்டும்.

இந்த வியாக்யானங்களில் ஆங்காங்கே பற்பல ஐதிஹ்யங்கள் எழுதப்பட்டுள்ளன. அவற்றை முன்னோர்களிடம் கேட்டு அறிந்தால்தான் நம் போன்றவர்களால் ரஸிக்க முடியும். இல்லையேல், அவற்றின் அர்த்தங்கள் நமக்கு எளிதில் புரியா.

இந்த நிலையில் "ஸ்ரீகீதாசார்யன்" பத்ரிகையின் ஆசிரியரும், திவ்யப்ரபந்த வல்லுநரும், நம்முடைய அபிமானத்திற்குப் பாத்ரபூதருமான ஸ்ரீ உ.வே. வேங்கட கிருஷ்ணன் ஸ்வாமி, திருப்பல்லாண்டு உரை தொடங்கி எல்லா உரைகளிலும் உள்ள ஐதிஹ்யங்களை எடுத்து, அவற்றை யாவரும் அறிந்து, அநுபவித்து, ரஸிக்கும்படியாக விளக்கம் தந்து, "வைணவ ஆசார்யர்களின் வாழ்வும் வாக்கும் (ஐதிஹ்ய நிர்வாஹ விளக்கம்)" என்ற பெரியதொரு புத்தகம் வெளியிட்டுள்ளார். இந்த ஸ்வாமி (டாக்டர் எம்.ஏ. வேங்கடகிருஷ்ணன்) சென்னைப் பல்கலைக் கழகத்தில் வைணவத் துறையில் பேராசிரியராகப் பணியாற்றி வருகிறார். ஆங்காங்கு உபந்யாஸங்களும் செய்து வருகிறார். ஆகவே, இவர் எழுதிய இந்தப் பெரிய நூல் எல்லோருக்குமே குறிப்பாக வைணவர்களுக்கு மிகவும் பயன்படக் கூடியதாகும். ஆகவே, எல்லோரும் இந்த நூலை வாங்கிப் படித்து, ஆழ்வார்களுடைய அநுக்ரஹத்திற்குப் பாத்ரர்களாக வேண்டுமாய் ஆசாஸிக்கிறோம்.

வெகுகாலமாக, இம்மாதிரி ஒரு நூல் வெளிவந்தால் நன்றாக இருக்கும் என்று நாம் விரும்பியிருந்தோம். இந்த மனோரதம், இன்று ஸ்ரீ உ.வே. வேங்கடகிருஷ்ணன் ஸ்வாமியால் நன்கு நிறைவேறியுள்ளது. யாவரும் இதை வாங்கி வாசித்து, ரஸிக்க வேண்டும் என்று மனோரதிக்கிறோம். எல்லோருக்கும் ஸ்ரீ மாலோலன் ஸர்வாபீஷ்டங்களையும் அநுக்ரஹிக்க வேண்டுமாய் ஆசீர்வதித்து இந்த ஸ்ரீமுகத்தை அநுக்ரஹிக்கிறோம்.

முகாம்:
ஸ்ரீஅஹோபிலமடம்,
காஞ்சீபுரம்
19-5-2003

ஸ்ரீ சடகோப ஸ்ரீ:

ஸ்ரீமதுபயவேதாந்த வித்வான் ந்யாய வேதாந்த வித்வச்சிரோமணி
திருமலை அனந்தாண்பிள்ளை

கிருஷ்ணமாசார்ய ஸ்வாமி

அநுக்ரஹித்த ஸ்ரீமுகம்

ஆறு, கடல், மலை, சுரங்கம் ஆகியவற்றில் முத்து பவழம், வயிரம், மணி, பொன் என்றிவைகள் கிடைக்கின்றன. அவற்றையெல்லாம் கொண்டு வந்து முகமறிந்த ஒருவன் கோத்து ஒரு மாலையாக்கினால் அது ஒரு சிறந்த ஆபரணமாகத் திகழ்கிறது.

அதுபோன்று ஒரு விஷயத்தைப் பற்பல நூல்களில் முத்தும் மணியும் வயிரமும் பவழமும் நன்பொன்னும் போன்று விசித்திர விசித்திரமாக உள்ள பலபல குறிப்புகளை ஓரிடத்தில் சேர்த்து ஒரு மிகப்பெரிய நூலாகச் செய்தால் அந்நூல் மிகச் சிறந்த மதிப்பைப் பெறும் என்பதைத் தனிப்படச் சொல்ல வேண்டுமோ?

ஆழ்வார்கள் அருளிச்செய்த அந்தமிழ்ப் பாசுரங்களுக்கு, ஸர்வஜ்ஞஸார்வபௌமர்களான நஞ்சீயர், நம்பிள்ளை, பெரியவாச்சான்பிள்ளை, வடக்குத் திருவீதிப் பிள்ளை, அழகியமணவாளப் பெருமாள் நாயனார், திருநாராயணபுரத்து ஆய், மணவாளமாமுனிகள் ஆகியோர் அருளிய வியாக்கியானங்களில் இடம்பெற்றுள்ள ஐதிஹ்யங்கள் நிர்வாஹங்கள் முதலியவைகளை அனைத்தையும் திரட்டி, அவற்றுக்கு மிக ரஸமாக விளக்கங்களும், ஆராய்ச்சிமுறையில் அடிக்குறிப்புகளும் ஸ்ரீ உ.வே. டாக்டர், மண்டயம் அனந்தாண்பிள்ளை வேங்கடகிருஷ்ணன் எழுதியுள்ளார். எல்லாவற்றுக்கும் மேலாக இந்நூலில் பல இடங்களிலும் இவரை மேதாவிமணியாக்கிய ஸ்ரீ காஞ்சீமஹாவித்வான் ப்ரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசார்ய ஸ்வாமியின் தேனும் பாலும் கன்னலும் அமுதுமான விளக்கங்கள் பலவற்றையும் ஆங்காங்கே எடுத்துக் காட்டியுள்ளார். இந்நூலில் பெரும்பகுதியை ஓரெழுத்தும் விடாமல் வாசித்து ஆங்காங்கே சில திருத்தங்களையும் செய்யும் வாய்ப்பினையும் ஸ்ரீமான் வேங்கடகிருஷ்ணன் அடியேனுக்கு நல்கியிருந்தார். வியாக்கியானங்களில் ஆழ்ந்து அனுபவிக்கக் கூடிய வித்வான்களும் சுவைத்து இன்புறும் வகையிலும், அதேசமயத்தில் வியாக்கியானங்களில் அவ்வளவு பரிசயமில்லாதவர்கள் படித்தாலும் எளிதில் புரிந்து கொள்ளும் வகையிலும் விளக்கங்களை இவர் எழுதியிருப்பது மிகவும் பாராட்டத்தக்கது. தாம் எழுதும் விஷயங்களைப் பிறர் நன்றாகப் புரிந்து கொள்ளவேண்டும் என்பதற்காகவே, விளக்கங்களை மிக விரிவாக எழுதியுள்ளது மிகவும் பயனுள்ளதாய் அமைந்துள்ளது. குறிப்பாக இவர் எழுதியுள்ள மிக நீண்ட முன்னுரை, ஆராய்ச்சியாளர்களுக்கு அரியதோர் விருந்தாக அமைந்துள்ளது.

ஸ்ரீவைஷ்ணவஸம்ப்ரதாய வரலாற்றில் இந்த நூல் மிகச் சிறந்ததொரு இடத்தைப் பெறும் என்பதில் எந்தவித ஐயமும் இல்லை. இந்நூலைப் போலவே மேலும் பல சிறந்த நூல்களை எழுதித் தாமும் நற்போது போக்கிப் பிறரையும் நற்போது போக்கும்படி செய்வதற்கு உறுப்பாக ஆயுராரோக்யைச்வர்யாதிகளை இவர்தமக்கு அள்ளியள்ளி அளித்தருளுமாறு பலராமானுஜனாய், ருக்மிணீப்ராணநாதனான ஸ்ரீபார்த்தஸாரதி எம்பெருமானுடைய தேருக்குக் கீழே நாற்றின திருவடித் தாமரைகளில் ப்ரார்த்தித்து நிற்கிறேன்.

அணிந்துரை

ஸ்ரீ உ.வே. வித்வான் இளையவில்லி
ஸ்ரீநிவாஸ பூவராஹாசார்யர் ஸ்வாமி எம்.ஏ
ஓய்வுபெற்ற சமஸ்க்ருத பேராசிரியர்,
ஆழ்வார் திருநகரி.

பூருவாசாரியர்கள் போதமநட்டானங்கள்
கூறுவார் வார்த்தைகளைக் கொண்டு நீர் - தேறி
இருள் தருமா ஞாலத்தே இன்பமுற்று வாழும்
தெருள்தருமா தேசிகனைச் சேர்ந்து

என்று உபதேச ரத்தின மாலையில் ஸ்வாமி மணவாள மாமுனிகள் 72ம் பாசுரத்தில் அருளிச் செய்கிறார். இந்நிலவுலகம் மேன்மேலும் அறிவின்மையை வளரும்படி செய்யும் தன்மையது. இதில் பூர்வாசார்யர்களின் ஞானம், அதற்குத்தகுந்த அநுட்டானம் (செயல்பாடு) இவைகளைத் தெளிவாகக் கூறும் ஆசார்யனை அடைந்து, அவர்களது ஒழுக்கங்களைக் கடைப்பிடித்து இன்பமுற்று வாழுங்கோள் - என்பது இப்பாசுரத்தின் திரண்ட பொருள்.

நாதமுனி முதலான நம் பூர்வாசார்யர்களின் அறிவின் சிறப்பு என்ன? அவர்கள் கடைப்பிடித்த ஒழுக்கங்கள் என்ன? என்பவைகளை அறிந்து கொள்வதற்கு குருபரம்பரை நூலும், நாலாயிர திவ்வியப்பிரபந்த வியாக்கியானங்களில் ஆங்காங்கே காட்டப் பெற்றுள்ள ஐதிஹ்ய நிர்வாஹங்களுமே உதவும். அதில் குருபரம்பரை நூலைக் காட்டிலும், வியாக்கியானங்களும் அவற்றிலுள்ள ஐதிஹ்ய நிர்வாஹங்களுமே மிகச் சிறந்த ப்ரமாணங்கள் ஆகும் என்பதில் யாதொரு ஐயமும் இல்லை.

ஆழ்வார்களுடையவும், நாதமுனிகள் தொடங்கி மணவாள மாமுனிகள் ஈறாக நம்முடைய ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்திற்கு பெருமையூட்டிய பெரியோர்களுடையவும் ஞானபக்தி வைராக்யர்கள் பற்றிய செய்தியை அருளிச் செயல்களிலிருந்தும் அதன் வியாக்கியானங்களிலிருந்தும், அவற்றின்கண் பொதிந்துள்ள ஐதிஹ்ய நிர்வாஹங்களி லிருந்துமே அறிந்து கொள்கிறோம். அதிலும் முக்கியமாக ஆசாரியர்கள் ஒருவருக்கொருவர் எப்படி நடந்து கொண்டார்கள்? ஸ்ரீவைஷ்ணவனின் குணநலன்கள் என்ன? எம்பெருமானிடத்திலும் ஆசார்யனிடத்திலும் எப்படி நடந்து கொள்ள வேண்டும், இவ்வுலக வாழ்க்கையை எவ்வாறு நடத்த வேண்டும் என்பன போன்ற பல விஷயங்களை இவற்றிலிருந்தே நாம் அறிந்து கொள்கிறோம்.

ஆழ்வார்கள் 'பெற்றார் பெற்றொழிந்தார்' என்கிறபடியே தங்களுடைய பகவதநுபவத்தை திவ்வியப் பிரபந்தங்களாக அருளிச் செய்து போனார்கள். அவைகளை வளர்த்த இத்தாயான இராமாநுசன் கட்டளையினால் பிள்ளான், நஞ்சீயர், பெரியவாச்சான்பிள்ளை, தெள்ளார் வடக்குத் திருவீதிப்பிள்ளை, மணவாளயோகி, அழகிய மணவாளப் பெருமாள் நாயனார், ஆய் ஜநந்யாசார்யர், மணவாளமாமுனிகள் ஆகிய இவர்கள் தங்கள் மிக்க கிருபையாலே

அருளிச் செய்த வியாக்கியானங்களாலே திவ்வியப் பிரபந்தங்களைக் காத்த குணவாளர்களாகத் திகழ்கிறார்கள்.

அந்த வியாக்கியானங்களில் அவர்கள் புகுத்திய சிறந்த யுக்தியாக நாம் காண்பது, அரியபெரிய ஐதிஹ்யங்களும், நிர்வாஹங்களுமேயாகும். இவைகள் வெகுகாலமாக ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாய வித்வான்களால் தங்கள் தங்கள் ஆசார்யர்களிடம் காலக்ஷேப முறையில் கேட்கப் பெற்று அவரவர்களுடைய காலக்ஷேபங்களிலும், உபந்யாஸங்களிலும் கேட்பார் கல்நெஞ்சும் கரையும்படியாக உரைக்கப் பெற்று வந்துள்ளன. ஆனால் இக்காலத்தில் காலக்ஷேப முறையில் கேட்பது அரிதாகிவிட்டது. அதற்கு முக்கியக் காரணம் ஸ்ரீவைஷ்ணவர்கள் வாழ்க்கை வாழ்வதற்கு அவசியமான பொருள் ஈட்டுவதற்கே காலம் போதாமல் போவது ஒன்று. ஆங்கிலக் கல்வியினால் வடமொழி அறிவும், தென்மொழியறிவும் மிகவும் குறைந்து போனது மற்றொன்று, மேலும் அருளிச் செயல் மூலத்தை அறியாமற் போனது மிகவும் வருந்தத்தக்க மிகவும் முக்கியமான காரணம் ஆகும்.

தற்காலத்தில் உபந்யாஸங்களே (ஆன்மிகப் பேருரைகளே) அதிகம் வீறுபெற்றுள்ளன. ஆங்காங்கு உபந்யாஸங்கள் நிகழ்த்தும் உபந்யாஸகர்களும், வித்வான்களும் இவ்வைதிஹ்யங்களையும் நிர்வாஹங்களையும் கூறும்போது அதில் மிக்க கவனம் செலுத்திக் கூற பலவிதங்களில் சிரமங்களை அடைகிறார்கள். அதற்குக் காரணங்கள் பல. (1) காலக்ஷேப முறையில் கற்காமல் உபந்யாஸங்கள் மூலமாகவும், விரிவுரையாளர்களின் நூல்கள் மூலமாகவுமே இந்த ஐதிஹ்ய நிர்வாஹங்களை அறிந்திருப்பது. (2) கேட்பவர்கள் ஸ்ரீவைஷ்ணவ ஆசார்யர்களின் பெயரையோ அவர்களது வாழ்க்கை வரலாறுகளையோ அறியாமல் இருப்பது. (3) ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்திற்கென்றே ஆழ்வார்களது அருளிச் செயல்களிலிருந்து தொகுக்கப்பெற்ற மணிப்ரவாள நடையில் அமைந்த பரிபாஷைகளை (technical terms) முற்றிலும் அறியாதது. இப்படிப் பல காரணங்களை அடுக்கிக் கொண்டே போகலாம். கலிகாலத்தின் கொடுமையால் இப்படிப்பட்ட சீரழிவுகள் ஏற்பட்டுள்ளமையைக் கண்டு வருந்தி நாம் நிற்கும் நிலையில், கோடை ஓடின பயிரிலே ஒரு பாட்டம் மழை பெய்தற்போலே ஸ்ரீ உ.வே டாக்டர். எம்.ஏ. வேங்கடகிருஷ்ணன் ஸ்வாமியின் சீரிய முயற்சியினால் வெளிவந்துள்ள "வைணவ ஆசார்யர்களின் வாழ்வும் வாக்கும் (ஐதிஹ்ய நிர்வாஹ விளக்கம்)" என்ற இந்நூல் நம் மனைத்தை மிகவும் குளிரச் செய்கிறது.

இதற்கு முன்பு எழுந்தருளியிருந்த மஹாவித்வான்கள் பலரும் இப்பணியை செய்யாமல் போனதற்கு முக்கியக்காரணம், காலக்ஷேப முறையிலேயே இவைகளைத் தங்கள் தங்கள் ஆசார்யர்களிடம் கேட்டு எந்த ஏற்றக் குறைவும் இல்லாமல் ஐதிஹ்யங்களை நன்கு புரிந்து கொண்டு உபந்யாஸமோ, காலக்ஷேபமோ செய்ய வேண்டும் என்கிற உயர்ந்த எண்ணத்தினாலேயாம். ஆனால் அதற்கு அவகாசம் இல்லாத இக்காலத்திலும், இனி வருங்காலத்திலும் இந்த ஐதிஹ்ய நிர்வாஹங்களைத் தாங்களே படித்து அவர்களுடைய உண்மைப் பொருளை அறிந்து கொள்ள சிரமப்படாமல் இருக்க வேணும் என்கிற உயர்ந்த எண்ணத்தினால் ஸ்ரீ உ.வே. வேங்கடகிருஷ்ணன் ஸ்வாமி அடியேனிடம் பல ஆண்டுகளுக்கு முன்பே ஐதிஹ்ய நிர்வஹங்களுக்கு விளக்கங்களை எழுதித் தந்தால் 'கீதாசார்யன்' மாத இதழில் பிரசுரிப்பதாகக் கூறினார். ஆனால் அடியேனுக்குக் கல்லூரி வேலைப் பளுவின் காரணமாகவும், பெங்களூரில் தினமும் நடந்துவந்த காலக்ஷேபத்திற்கு உரிய ஸ்ரீகோசங்களை ஸேவிப்பதிலேயே பொழுது கழிந்தமையாலும் இவ்வரிய பெரிய செயலைச் செய்யத் துணிவு

வரவில்லை. இப்போது இவர் எழுதிய நூலைக் கண்டவுடன் 'த்ருஷ்ட்டா ஸீதா' (கண்டேன் ஸீதையை) என்ற திருவடி (அனுமன்) வார்த்தையைக் கேட்ட பெருமாள் (இராமன்) அடைந்த எல்லையற்ற ஆனந்தத்தை அடைந்தேன். பெரிய நிதி கிடைத்தாற் போலே இருந்தது. ஒரு அக்ஷரம் விடாமல் ஊன்றி வாசித்து ஆங்காங்கே சொல் வாக்கியம், பொருள் தொடர்பு முதலியவற்றில் உண்டான பிழைகளை த்ருத்துவதற்கு, முன்னோர் மொழிந்த முறைதப்பாமல் கேட்கும் பாக்கியம் பெற்றிருந்தமை கைகொடுத்து உதவியது. அடியேன் திருத்தியவைகளை மனமுவந்து ஏற்றுக் கொண்ட இந்நூலாசிரியப் பெருந்தகையின் மனப்பாங்கிற்கு மங்களாசாஸனம் பண்ணுகிறேன். அடியேனுக்கு இப்படிப்பட்ட ஒரு நல்வாய்ப்பை அளித்ததற்கு அவரிடம் நன்றி பாராட்டுகிறேன்.

நம் பூர்வாசார்யர்களும், கீதாசார்யனும் திருவுள்ளம் உகக்கும் இதுபோன்ற பல தலைசிறந்த கைங்கர்யங்களைச் செய்து கொண்டு தம் தேவியாருடனும், சிரஞ்ஜீவி குமாரனுடனும் 'வையம் மன்னி வீற்றிருந்து விண்ணுமாள்வர் மண்ணூடே' என்று ஆழ்வாருடைய மிக விலக்ஷணமான மங்களாசாஸனத்திற்கு பாத்பூதராக (இலக்காக) வேணும் என்று அடியேன் அநவரதம் தொழும் ஸ்ரீ ஆண்டாளைப் புருஷகாரமாகக் கொண்டு ஸ்ரீரங்க மன்னார் திருவடித் தாமரைகளில் பிரார்த்திக்கிறேன். இந்நூலைப் பற்றிய சிறப்பு அம்சங்களில் சிலவற்றைத் தெரிவிக்கிறேன்.

(1) இந்நூலின் முன்னுரை மிகவும் போற்றத் தக்க முறையில் அமைந்துள்ளது. "சோம்பாது இப்பல்லுருவையெல்லாம் படர்வித்த வித்தா" என்று எம்பெருமானுக்கு ஆழ்வார் ஒரு திருநாமம் சாற்றுகிறார். அதேபோன்று சிறிதும் சோம்பலில்லாமல் ஸ்ரீவைஷ்ணவ வியாக்யான கர்த்தாக்களின் (பேருரை ஆசிரியர்களின்) திருநாமங்களை ஒவ்வொன்றாக எடுத்து அவர்கள் செய்த வியாக்கியானங்கள் எவை எவை என்று கூறி அவர்களைப் பற்றிய வாழ்க்கை வரலாற்றினையும் சில அரிய செய்திகளையும் அறிய உதவும் ஐதிஹ்யங்களைக் கருத்திற்கொண்டு அவர்களுடைய பெருமையை நாம் அறியும்படி இனிய எளிய தமிழில் பண்டிதர்களும், பாமரர்களும் அறியும்படியாக புனருக்தி தோஷத்திற்கு (கூறியது கூறல் என்னும் குறைக்கு) அஞ்சாமல் எழுதியுள்ளார். ஐதிஹ்யத்தின் எண்ணையும் ஆங்காங்கே தவறாமல் குறிப்பிட்டுள்ளார். இது காலக்ஷேபம் செய்பவர்களுக்கும், உபந்யாஸகர்களுக்கும் செய்துள்ள பேருதவியாகும்.

(1) ஒரு ஆசார்யரைப் பற்றி உபந்யஸிக்க உரை நிகழ்த்த வேண்டுமானால் இந்நூலின் முன்னுரையில் அவ்வாசிரியரைப் பற்றி எழுதியுள்ளமையைப் படித்தால் வருடக் கணக்காக அவ்வாசிரியரைப் பற்றிப் பேருரை நிகழ்த்தலாம்.

(2) வழக்கத்தில் உள்ள எளிய தமிழ் சொற்களைக் கொண்டே இவ்விவரணம் எழுதப் பட்டுள்ளமையால் எல்லோருக்கும் மிக எளிதாகப் புரியும்படி அமைந்துள்ளது இதன் தனிச்சிறப்பாகும்.

(3) நிகழிடம் காட்டப்பட்டுள்ளமையால் எல்லோருக்கும் மிகவும் எளிதாக அப்பாசுரங்களைக் கண்டுபிடித்துவிடலாம். அதில் எந்தப் பகுதிக்கு அல்லது சொல்லுக்கு இந்த ஐதிஹ்யம் எடுத்துக் காட்டாகக் கூறப்பட்டுள்ளது என்பதையும் நன்கு விளக்கியிருக்கிறார்.

(4) எடுக்கப்பட்ட ஐதிஹ்யம் இந்தப் பாசுரத்தில் எப்படிப் பொருந்துகிறது என்பதையும் சேர்ப்பிடித்துத் தெரிவிக்கப்பட்டிருப்பது ஓர் சிறப்பு அம்சம்.

(5) நம் பேராசிரியப் பெருந்தகைகளின் குணநலன்களையும் பரந்த மனப்பாங்குகளையும், பண்புகளையும், மற்ற உயிரினங்களையெல்லாம் தம் உயிரைப் போல் கருதும் உள்ளத்தின் உயர்ந்த நிலையையும் ஆங்காங்கே சுட்டிக் காட்டியிருப்பதைப் படிப்பவர்கள் கண்ணீர் மல்கப் படிப்பார்கள் என்பது திண்ணம்.

(6) ஸ்ரீ வைஷ்ணவர்கள் ஏன் பிறதெய்வங்களைத் தொழுவதில்லை என்பது பற்றி நம் ஆசார்யர்கள் காட்டியுள்ள விவரணத்தைச் சிறிதும் அச்சம், கூச்சம் இல்லாமல் வெளியிடும் ஐதிஹ்யங்களைத் தெள்ளத் தெளிவாக விளக்கியிருக்கிறார். மற்ற மதங்களிலோ அல்லது தேவதைகளிடத்திலோ ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கும், அவர்களின் பேராசிரியர் பெருந்தகைகளுக்கும் சிறிது கூட வெறுப்போ அல்லது துவேஷ மனப்பான்மையோ இல்லை. ஆனால் ஸ்ரீவைஷ்ணவர்கள் பெற விரும்பும் மோக்ஷத்தை அவர்களால் கொடுக்க இயலாது ஆகையாலும் அதை அளிப்பவன் ஸ்ரீமன் நாராயணன் ஒருவனே என்று வேதமும், வேதாந்தமும், இதிஹாஸ புராணங்களும், ஆழ்வார்களது அருளிச் செயல்களும் ஒருமிடறாக முருங்குகின்றமையாலும் இதர தேவதைகள் ஸ்ரீவைஷ்ணவர்களுக்குப் பின் தொடரத் தக்கவர்கள் அல்லர்; அவர்களும் ஜீவாத்மாக்களே; ஓர் புண்ய கர்மத்தின் பலனாக பிரமன் முதலியவர்களின் பதவிகளை அடைந்தவர்கள் என்று வேத நூல் ஓதுகின்றமையால் அதைப் பரம ப்ரமாணமாகக் கொண்ட ஆழ்வார்களும் ஆசார்யர்களும் இவ்வுண்மையை எடுத்துக் காட்டுகிறார்களாதலால் யாரிடமும் த்வேஷபுத்தி வெறுப்புணர்வு முதலியவைகள் கிடையாது. இதை உணர்த்தும் ஐதிஹ்யங்களை விளக்கி எழுதும் பொழுது, இந்நூலின் ஆசிரியர் இக்கருத்தினை ஆணித்தரமாக எடுத்துரைத்திருப்பது மிகவும் போற்றத்தக்கது.

(7) ஸ்ரீவைஷ்ணவ எழுத்துலகில் முடிசூடா மன்னராக விளங்கிய காஞ்சீ ஸ்ரீ உ.வே. மஹாவித்வான் ப்ரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசார்ய ஸ்வாமியின் பேரருளுக்கு இலக்கானவர் ஸ்ரீமான் வேங்கடகிருஷ்ணன். ஸம்ப்ரதாய விஷயங்களை எழுதுவதிலும், ஸம்ப்ரதாயப் புத்தகங்களை அச்சிடுவதிலும் அவராலேயே பயிற்றுவிக்கப்பட்டவர். அடியேனுடைய சிறிய தகப்பனாரான ஸ்ரீ உ.வே. சதாபிஷேகம் ஸ்வாமியிடம் அடிபணிந்து முறையாக வரியடைவே பகவத்விஷய காலக்ஷேபம் செய்தவர். எனவே இந்த ஸ்வாமிகளின் எழுத்துத் திறமை எல்லாம் பிரகாசிக்கும்படியாக இந்நூல் அமைந்துள்ளதில் வியப்பேதும் இல்லை. காஞ்சீ ஸ்வாமி இவருக்களித்த ‘மேதாவிமணி’ என்ற விருது இவருக்கு மிகவும் பொருத்தமானதே என்பதை இந்நூல் நன்கு பறைசாற்றுகிறது.

(8) நம் பூர்வாசாரியர்களைப் பற்றியும், ஸ்ரீ வைஷ்ணவ மதக் கோட்பாக்களையும் உள்ளபடி உலகத்திலுள்ள மக்களனைவரும் அறியும்படி எளிய நடையில் எழுதி வெளியிடப்பட்ட இந்நூலை எல்லாரும் வாங்கிப் படித்து, அந்தமிழால் நற்கலைகள் ஆய்ந்துரைத்த ஆழ்வார்களின் பெருமைகளையும், அவர்கள் அருளிச் செயல்களுக்கும் கவசமாக ஆசாரியர்கள் அருளிச் செய்த வியாக்யானங்களையும் அதிலுள்ள ஐதிஹ்யங்களையும் படித்து எங்கும் திருவருள் பெற்று இன்புற வேண்டும் என்பதே அடியேன் பிரார்த்தனை.

பெங்களூர் அடியேன் ராமாநுஜதாஸன்

15-5-2003 இளையவில்லி ஸ்ரீநிவாஸ பூவராஹதாஸன்

இந்நூல் அச்சிடுவதற்கு நன்கொடை அளித்தவர்கள்

ஸ்ரீ T.C.A. ராமானுஜம் I.R.S. (Retd.)

ஸ்ரீ V.T. கோபாலன், Addl. Solicitor General.

ஸ்ரீ S.V.S. ராகவன்

ஸ்ரீ Dr. T.S. ராமஸ்வாமி, Advocate.

ஸ்ரீ நல்லி குப்புஸ்வாமி செட்டியார்

ஸ்ரீ ஸுதர்சனம், மைசூர்

ஸ்ரீ G. பாலகிருஷ்ணன், C.A.

ஸ்ரீ R. கிருஷ்ணஸ்வாமி

ஸ்ரீமதி Dr. சுசீலா பத்மநாபன்

ஸ்ரீமதி ஸரளா கிருஷ்ணன்

ஸ்ரீமதி ஸ்ரீலதா ராமன்

ஸ்ரீமதி சுந்தரவல்லி ஸ்ரீனிவாஸன் & ஜகந்நாதன்

ஸ்ரீமதி W.C. ஸரோஜா

M/s Swami Nammalvar (India) Foundation

M/s Sundaram Charities

M/s Curzon Co. Seshachalam Chimata Foundation.

M/s V.S.Charities

M/s K.R.S. Charities & Family

M/s Singhvi Charitable Trust

M/s G.R.Thanga Maligai

M/s Lister Laboratory & Research Centre (P) Ltd.

M/s Srinivasa Roadways (P) Ltd.

M/s Macmillan India Limited

M/s Sharpwire Industries (India) Pvt. Ltd.

M/s Hotel President

முன்னுரை

திருமாமகள் கேள்வனால் மயர்வற மதிநலம் அருளப் பெற்ற ஆழ்வார்கள் அவ்வெம்பெருமானுடைய ஸ்வரூபம் (தன்மை), ரூபம் (திருமேனி), குணங்கள், விபூதி (உடைமைகள்) முதலியவற்றை உள்ளபடி அறிந்து கொண்டு அவற்றில் ஆழ்ந்து அனுபவித்தமையால் ஆழ்வார்கள் எனப் பெற்றனர். அவர்களுக்கு ஏற்பட்ட அவ்வனுபவமானது உள்ளடங்காமல் அழகிய தமிழ்ப் பாசுரங்களாக வெளிப்பட்டன. வேத வேதாந்தக் கருத்துகளைத் தன்னகத்தே கொண்ட அப்பாசுரங்கள் 'திவ்வியப்பிரபந்தம்' என்றும், 'அருளிச் செயல்' என்றும், 'திராவிட வேதம்' என்றும் பலவாறு போற்றப் பெறுகின்றன. 'செய்ய தமிழ்மாலைகள் நாம் தெளியவோதித் தெளியாத மறைநிலங்கள் தெளிகின்றோமே' என்று வேதாந்த தேசிகரும், 'செய்யமறை தன்னுடனே சேர்ந்து, அருளிச் செயல் வாழி' என்று மணவாளமாமுனிகளும் திவ்விப்பிரபந்தங்களைப் போற்றியுள்ளனர்.

ஆழ்வார்கள்

முதன் முதலில் வேதாந்தக் கருத்துகளை அழகிய தமிழ்ப் பாசுரங்களாக வெளியிட்டவர்கள் ஆழ்வார்களேயாவர்.

வருத்தும் புறவிருள்மாற்ற எம் பொய்கைப்பிரான் மறையின்
குருத்தின் பொருளையும் செந்தமிழ் தன்னையும் கூட்டி ஒன்றத்
திரித்து அன்று எரித்த திருவிளக்கை........

என்று திருவரங்கத்தமுதனார் இராமானுசநூற்றந்தாதியில் (8) அருளிச் செய்துள்ளார். மறையின் குருத்தாகிய வேதாந்தங்களின் பொருளைச் செந்தமிழிலே கூட்டி முதன் முதலில் தமிழ்ப் பாசுரங்களை அருளிச் செய்யத் தொடங்கியவர் பொய்கையாழ்வாரே ஆவார். அவரைத் தொடர்ந்து பிற ஆழ்வார்களும் தமிழ்ப்பாசுரங்களை அருளிச் செய்தனர். ஆழ்வார்கள் பதின்மர் என்றும், பன்னிருவர் என்றும் கூறுவதுண்டு. எம்பெருமானுடைய அருளை நேரடியாகப் பெற்ற ஆழ்வார்கள் பதின்மர் ஆவர். அவர்களோடு நம்மாழ்வாரை ஆசாரியராகக் கொண்ட மதுரகவிகளையும், பெரியாழ்வாரை ஆசாரியராகக் கொண்ட ஆண்டாளையும் சேர்த்துப் பன்னிருவர் என்றும் குறிப்பிடுவர்.

பொய்கையார் பூதத்தார் பேயார் புகழ்மழிசை
ஐயன் அருள்மாறன் சேரலர்கோன் - துய்யபட்ட
நாதன் அன்பர்தாள்தூளி நற்பாணன் நற்கலியன்
ஈதிவர் தோற்றத்து அடைவாம் இங்கு.

என்று மணவாளமாமுனிகள் தமது உபதேசரத்தினமாலையில் (5) ஆழ்வார்களுடைய அடைவுமுறையை (வரிசைக்கிரமத்தை) அருளியுள்ளார். ஆழ்வார்கள் அருளிச் செய்த பாசுரங்கள் அனைத்தும் ஆழ்வார்கள் காலத்திற்குப் பிறகு, கற்பார் இல்லாமல் மறைந்து விட்டன. அவற்றை மீட்டு வெளிக் கொணர்ந்தவர் நாதமுனிகள் எனும் ஆசார்யரேயாவார்.

திவ்வியப்பிரபந்தங்கள் மீட்கப் பெற்றமை

நாதமுனிகள் அவதரித்த தலமான காட்டு மன்னார் கோயிலுக்கு, மேல்நாட்டிலிருந்து வந்த ஸ்ரீவைஷ்ணவர்கள், நம்மாழ்வார் அருளிச் செய்த "ஆராவமுதே" எனும் திருவாய்மொழிப் பதிகத்தை இனிய இசையில் பாடக் கேட்ட நாதமுனிகள், அப்பாடல்களின் சொல்நயத்திலும் கருத்தாழத்திலும் மிகவும் ஈடுபட்டார். அப்பதிகத்தின் இறுதிப் பாசுரத்தில் "குருகூர்ச் சடகோபன் குழலின் மலியச் சொன்ன ஓராயிரத்துள் இப்பத்து" என்றுள்ளதைக் கேட்ட நாதமுனிகள், ஆயிரம் பாசுரங்களையும் பெற்றுவிடவேண்டும் என்று எண்ணினார். அந்த ஸ்ரீவைஷ்ணவர்களை இது பற்றிக் கேட்டபோது அவர்கள் தங்களுக்கு அந்தப் பத்துப் பாசுரங்கள் மட்டுமே தெரியும் என்று கூறிவிட்டனர். பாசுரத்தில் 'குருகூர்ச் சடகோபன் சொன்ன' என்றுளதால் திருக்குருகூருக்குச் சென்றால் ஏதாவது வழி பிறக்கும் என்று முடிவு செய்து திருக்குருகூருக்குச் சென்றார். அங்கும் நம்மாழ்வார் அருளிச் செய்த திருவாய்மொழியை ஒருவரும் அறிந்திருக்கவில்லை. ஆயினும் அங்கிருந்தவரான ஸ்ரீபராங்குசதாஸர் என்பவர் நம்மாழ்வாரைத் துதித்து மதுரகவியாழ்வார் அருளிச் செய்த 'கண்ணிநுண்சிறுத்தாம்பு' எனும் பிரபந்தம் தமக்குத் தெரியும் என்றும், நம்மாழ்வார் எழுந்தருளியிருந்த திருப்புளியமரத்தின் அடியில் அமர்ந்து பன்னிரண்டாயிரம் முறை அப்பிரபந்தத்தை இடைவிடாமல் தொடர்ந்து ஓதினால் நம்மாழ்வாரே நேரில் காட்சி தருவார் என்றும் கூறினார். நம்மாழ்வார் அருளிச்செய்த திருவாய்மொழிப் பாசுரங்களை எப்படியும் பெற்றுவிடவேண்டும் என்ற உறுதியுடன் நாதமுனிகள் அவ்வாறே பன்னிரண்டாயிரம் முறை 'கண்ணிநுண்சிறுத்தாம்பு' ஓதினார். நம்மாழ்வரும் நாதமுனிகள் முன் தோன்றி, தாம் அருளிச் செய்த பிரபந்தங்களை மட்டுமல்லாமல், மற்ற ஆழ்வார்கள் அருளிச்செய்த பாசுரங்களையும், அவற்றின் உட்பொருள்களையும் நாதமுனிகளுக்கு வழங்கினார். எம்பெருமானால் நம்மாழ்வார் மயர்வற மதிநலம் அருளப் பெற்றதுபோல் நம்மாழ்வாரால் மயர்வற மதிநலம் அருளப்பெற்ற நாதமுனிகள், ஆழ்வார்கள் அனைவரும் அருளிச் செய்த திவ்வியப்பிரபந்தங்கள் அனைத்தையும் பெற்று மகிழ்ந்தார்.

திவ்வியப்பிரபந்த உரைகள் தோன்றியமை

நம்மாழ்வாருடைய அருளால் தாம் பெற்ற பாசுரங்களைத் தொகுத்து அவற்றை நான்கு ஆயிரங்களாக வகுத்த நாதமுனிகள், அப்பாசுரங்களையும், அவற்றின் உட்பொருள்களையும் தம்முடைய சீடர்களுக்கு உபதேசம் செய்தார். நாதமுனிகளிடமிருந்து இவைகளைப் பெற்ற உய்யக் கொண்டார், அவற்றைத் தம்முடைய சீடரான மணக்கால் நம்பிக்கு வழங்கினார். மணக்கால்நம்பி, ஆளவந்தாருக்கு வழங்கினார். ஆளவந்தார் தம்முடைய சீடர்கள் பலருக்கு திவ்யப்பிரபந்தங்களின் ஆழ்பொருள்களைக் கற்பிக்க, அச்சீடர்களிடமிருந்து ஸ்ரீராமானுசர் பெற்றார். இவ்வாறு ஸ்ரீராமானுசர் காலம்

வரை வாய்மொழி உபதேச மார்க்கமாகவே திவ்வியப்பிரபந்தங்களும் அவற்றின் உட்பொருள்களும் வழங்கப் பெற்று வந்தன. இவற்றை ஏட்டில் நூல்களாக எழுதிவைக்க வேண்டும் என்ற எண்ணம் முதன்முதலில் இராமானுசருக்கே ஏற்பட்டது. தாமே நேரடியாக திவ்யப் பிரபந்தங்களுக்கு உரை எழுதிவைத்தால், அதுவே முடிந்த கருத்தாக நிலை பெற்றுவிடும் என்றும், அதற்குப் பிறகு வேறு எவரும் உரைகள் எழுதத் துணிய மாட்டார்கள் என்றும் இராமானுசர் கருதினார். திவ்யப்பிரபந்தங்களுக்கு மிக மிக விரிவாகப் பல்வேறு உரைகள் தோன்ற வேண்டும் என்று எண்ணிய இராமானுசர், தாம் உரை எழுதாமல் தம்முடைய சீடரான திருக்குருகைப்பிரான் பிள்ளானைத் திருவாய்மொழிக்குச் சுருக்கமாக ஓர் உரை எழுதும்படி நியமித்தார். அவருடைய ஆணையின்படியே, பிள்ளான் திருவாய்மொழிக்கு மிகவும் சுருக்கமான ஓர் உரை அருளிச் செய்தார். ஆறாயிரப்படி என்று வழங்கப் பெறும் அவ்வுரையே திவ்யப்பிரபந்தத்திற்கு எழுத்துவடிவில் தோன்றிய முதல் உரையாகும். அதைத் தொடர்ந்து திவ்யப் பிரபந்தங்களுக்குப் பல்வேறு காலகட்டங்களில் பல உரைகள் தோன்றத் தொடங்கின. இவ்வாறு உரைகள் நூல்வடிவில் தோன்றுவதற்கு வித்திட்டவர் இராமானுசரே ஆவார். இராமானுசர் வைணவத்திற்கு எத்தனையோ சீரிய பணிகளை ஆற்றியிருந்தாலும், அப்பணிகளில் மிக முக்கியமான பணி இதுவே என்று மணவாளமுனிகள் திருவுள்ளம் பற்றினார் எனலாம் என்ற கருத்தை, 'நஞ்சீயர் ஆற்றிய வைணவ சமயப்பணி' எனும் நூலில் டாக்டர் பூமா வேங்கடகிருஷ்ணன் அவர்கள் பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

> *"உபதேசரத்தினமாலை எனும் நூலில் மணவாளமாமுனிகள் நாலாயிர திவ்வியப்பிரபந்தத்திற்கு இயற்றப்பட்டுள்ள அனைத்து உரைகளைப் பற்றியும் குறிப்பிடப் போவதாக முப்பத்து நான்காம் பாசுரத்தில் குறிப்பிடுகிறார். முப்பத்தொன்பதாம் பாசுரம் தொடங்கி நாற்பத்தொன்பதாம் பாசுரம்வரை அனைத்து உரைகளைப் பற்றியும் பதினொரு பாசுரங்களில் அருளிச் செய்துள்ளார். இடையில் முப்பத்தேழு, முப்பத்தெட்டு ஆகிய இரு பாசுரங்களில் அவர் குறிப்பிடும் செய்திகள் வியாக்கியானங்களைப் பற்றியனவாக அமையாமல், எம்பெருமானாரின் சிறப்புகளைப் பற்றியனவாக அமைந்துள்ளன. உரைகளைப் பற்றிக் குறிப்பிடுவதாகத் தொடங்கியவர் இடையில் உரைகள் எவற்றையும் நேரடியாக அருளிச் செய்யாதவரான எம்பெருமானாரைப் பற்றிக் குறிப்பிடுவதற்குக் காரணம் என்ன என்பது ஆராய்த்தக்கது. ஸ்ரீராமாநுஜர் காலம் வரை திவ்வியப் பிரபந்தங்களுக்கு உரைகள் வாய்மொழியாகவே (உபதேசமார்க்கமாகவே) அருளிச் செய்யப்பட்டு வந்தன. முதன்முதலில் எழுத்து வடிவில் உரைகளைக் கொண்டு வருவதற்கு அருளாணையிட்டவர் எம்பெருமானாரே ஆவார். அவருடைய கட்டளைப்படியே திருக்குருகைப் பிரான் பிள்ளான் முதன்முதலில் திருவாய்மொழிக்கு ஆறாயிரப்படி என்கிற*

உரையை அருளிச் செய்தார். வடமொழியும் தமிழும் விரவிய நடையில் முதன்முதலில் எழுதப்பட்ட மணிப்பிரவாள உரைநூல் இதுவே ஆகும். திவ்வியப்பிரபந்தங்களின் பொருளை அறிந்து கொள்ள வேண்டும் என்ற ஆசையையுடைய பிற்காலத்தவருக்கும் பயன்பட வேண்டும் என்கிற காரணத்தினால் வாய்மொழியாகவே உபதேசிக்கப்பட்டு வந்த உரைகளை எழுத்துவடிவில் கொண்டு வரச்செய்தவர் எம்பெருமானாரே என்ற கருத்தை வலியுறுத்தவே,

ஓராண் வழியாய் உபதேசித்தார் முன்னோர்
ஏரார் எதிராசர் இன்னருளால் - பாருலகில்
ஆசையுடையோர்க்கெல்லாம் ஆரியர்காள் கூறும் என்று
பேசி வரம்பறுத்தார் பின்.

என்று மணவாள மாமுனிகள் அருளிச்செய்தார் எனலாம். மேலும் எம்பெருமானார் செய்த இவ்வரிய பணியே மிகவும் முக்கியமானது எனும் கருத்தில் மணவாளமாமுனிகள்,

எம்பெருமானார் தரிசனம் என்றே இதற்கு
நம்பெருமாள் பேரிட்டு நாட்டி வைத்தார் - அம்புவியோர்
இந்தத்தரிசனத்தை எம்பெருமானார் வளர்த்த
அந்தச் செயலறிகைக்கா.

என்றும் அருளிச்செய்தார் எனலாம். மேற்கூறிய பாசுரங்களைத் தொடர்ந்து மணவாளமாமுனிகள் தமது உபதேசரத்தினமாலையில், நாலாயிர திவ்வியப்பிரபந்த உரைகளைப் பற்றியே பல பாசுரங்கள் அருளிச் செய்துள்ளார் என்பது இக்கருத்திற்கு மேலும் வலிமை சேர்க்கிறது."

ஆக, இராமானுசர் வைணவத்திற்குச் செய்துள்ள பணிகளில் மிகச் சீரிய பணி திவ்யப்பிரபந்தங்களுக்குப் பல்வேறு வியாக்கியானங்கள் அவதரிக்கும்படி செய்தமையேயாகும். 'பெருக்காறு போலே விபவங்கள்; அதிலே தேங்கின மடுக்கள் போலே அர்ச்சாவதாரம்' என்பதுபோல, வாய்மொழியாக வழங்கிவந்த உரைகள் பெருக்காறு போல அக்காலத்திலிருந்தவர்களுக்கு மட்டுமே பயன்பட்டிருக்கும். ஆனால் எழுதிவைக்கப்பெற்ற உரைகள் அதிலே தேங்கின மடுக்கள் போலப் பிற்காலத்தவர்களுக்கும் பயன்படும் வகையில் அமைந்துள்ளன. எனவே உரைகளைத் தோற்றுவித்த பணியே இராமானுசர் செய்துள்ள பணிகளில் மிகச் சீரிய பணியாகும்.

திவ்வியப்பிரந்த உரைகள் பற்றிய செய்திகள்

நாலாயிர திவ்வியப்பிரபந்தங்களுக்குப் பூர்வாசார்யர்கள் அருளிச் செய்துள்ள வியாக்யானங்கள் எவை எவை என்பது பற்றி மணவாளமாமுனிகள் 'உபதேசரத்தினமாலை' எனும் திவ்யப்பிரபந்தத்தில் அருளிச் செய்துள்ளார்.

நம்மாழ்வார் அருளிச் செய்த திருவாய்மொழிக்குப் பிள்ளான், நஞ்சீயர், நம்பிள்ளை, பெரியவாச்சான்பிள்ளை, அழகியமணவாளச்சீயர் ஆகிய ஐவரும் வியாக்கியானம் செய்துள்ளமை பற்றி மணவாளமாமுனிகள் உபதேசரத்தினமாலையில் 39ம் பாசுரம் முதல் 45ம் பாசுரம் வரை அருளிச் செய்துள்ளார்.

திருவாய்மொழியைத் தவிர மற்றுமுள்ள திவ்யப் பிரபந்தங்கள் அனைத்திற்கும் வியாக்கியானம் அருளிச்செய்துள்ளவர் பெரியவாச்சான்பிள்ளை ஒருவரே என்பதை 46ம் பாசுரத்தில் அருளிச் செய்கிறார்.

திருவாய்மொழியைத் தவிர மற்ற திவ்யப்பிரபந்தங்கள் சிலவற்றிற்கு வியாக்கியானம் அருளிச்செய்துள்ள ஆசார்யர்களைப் பற்றி 47ம் பாசுரத்தில் அருளிச் செய்கிறார்.

அப்பாசுரத்தில் 'நஞ்சீயர் செய்த வியாக்கியைகள் நாலிரண்டுக்கு' என்று மாமுனிகள் அருளிச் செய்துள்ளமைக்கு வியாக்கியானமிடும் பிள்ளைலோகம் சீயர், 'இவர் தாம் செய்தருளினதாய்க் கண்டது. திருப்பாவைக்கும் கண்ணிநுண்சிறுத்தாம்புக்குமிறே உள்ளது. பின்னையும் உண்டாகில் கண்டு கொள்வது' என்று அருளிச் செய்துள்ளார். ஆனால், நஞ்சீயர் அருளிச் செய்துள்ளதாகப் பிள்ளைலோகம்சீயர் கூறும் திருப்பாவை வியாக்கியானம் தற்போது கிடைப்பதில்லை; கண்ணிநுண்சிறுத்தாம்பு வியாக்கியானம் மட்டும் கிடைக்கின்றது. ஆனால் நஞ்சீயர் அருளிச் செய்ததாகத் திருப்பள்ளியெழுச்சி வியாக்கியானம் ஒன்று தற்போது அச்சிடப்பெற்றுள்ளது. நஞ்சீயர் திருப்பள்ளியெழுச்சிக்கு ஒரு வியாக்கியானம் அருளிச்செய்துள்ளதாகப் பிள்ளைலோகம் சீயருடைய உரையிலோ அல்லது பெரியதிருமுடி அடைவு போன்ற நூல்களிலோகூடக் கூறப்படவில்லை என்றாலும் அவ்வியாக்கியானம் நஞ்சீயர் அருளிச் செய்ததாகவே வழங்கப்படு வருகின்றது.

அதேபோல் மேற்கூறிய உபதேசரத்தினமாலைப் பாசுரத்தில் 'வையகுருவின் தம்பி, மன்னு மணவாளமுனி செய்யுமவை தாமும் சில' என்று மணவாளமாமுனிகள் அருளிச் செய்துள்ள பகுதிக்கு வியாக்கியானமருளும் பிள்ளைலோகம் சீயர், "திருப்பாவைக்கும் கண்ணிநுண்சிறுத்தாம்புக்கும் நாயனார் செய்தருளினதாயும், திருவிருத்தத்துக்கு ஸ்வாபதேச வ்யாக்யானம் சீயர் செய்தருளினதாயும் கண்டது; இன்னமும் இவற்றை யொழிய உண்டாகிலும் கண்டு கொள்வது" என்று அருளிச் செய்துள்ளார். அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் அருளிச் செய்துள்ளதாகப் பிள்ளைலோகம் சீயர் குறிப்பிட்டுள்ள திருப்பாவை, கண்ணிநுண்சிறுத்தாம்பு வியாக்கியானங்களைத் தவிர, தற்போது அமலனாதிபிரான் வியாக்யானம் ஒன்றும் நாயனார் அருளிச் செய்துள்ளதாகவே வழங்கப்பட்டு வருகிறது. இந்த வியாக்கியானமும் பிள்ளைலோகம் சீயருடைய உரையிலோ அல்லது பெரியதிருமுடி அடைவு போன்ற நூல்களிலோகூடக் கூறப்படவில்லை என்றாலும் அவ்வியாக்கியானம் நாயனாருடையதாகவே வழங்கப்பெற்று வருகின்றது.



எனக்குத் தாயாய் தந்தையாய் அறியாதன அறிவித்து, பொருளல்லாத என்னைப் பொருளாக்கி அடிமை கொண்டு,
அறியாக் காலத்துள்ளே அடிமைக்கண் அன்பு செய்வித்து, பணிமானம் பிழையாமே அடியேனைப் பணிகொண்ட
ஸ்ரீமதுபயவேதாந்த மஹாவித்வான் மஹாமஹோபாத்யாய ஜகதாசார்ய ஸிம்ஹாஸனாதிபதி

பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசார்ய ஸ்வாமி

திருவடித் தாமரைகளில் இந்நூலைக் காணிக்கையாக்குகிறேன்

Released by Maaran's Dog ,Toronto , Canada

“பின்னையும் உண்டாகில் கண்டு கொள்வது” என்று பிள்ளைலோகம் சீயர் அருளிச் செய்துள்ளபடியால், திருப்பள்ளியெழுச்சி வியாக்கியானத்தை நஞ்சீயருடையதாகவும், அமலனாதிபிரான் வியாக்கியானத்தை நாயனாருடையதாகவும் கொள்வதில் தடையேதுமில்லை என்று சிலர் கூறுவர்.

இவை எல்லாவற்றையும் விட மிக வியப்பான செய்தி ஒன்று உண்டு. திருவாய்மொழிப் பேருரையான ஈடுமுப்பத்தாறாயிரப்படியைத் திருவாய் மலர்ந்து அருளியவரான நம்பிள்ளை அருளிச் செய்துள்ளதாகத் திருவிருத்த வியாக்கியானம் ஒன்றும், கண்ணிநுண்சிறுத்தாம்பு வியாக்கியானம் ஒன்றும் மிகவும் பிரசித்தமாக வழங்கிவருகின்றது. இவற்றையும் தவிர, பழைய தெலுங்குப் பதிப்பு ஒன்றில் நம்பிள்ளை அருளிச் செய்துள்ளதாகப் பெரிய திருமடல் வியாக்கியானம் ஒன்று அச்சிடப்பட்டுள்ளது. (தற்போது அதே வியாக்கியானத்தை அழகியமணவாளப்பெருமாள் நாயனாருடைய வியாக்கியனமாக ஸ்ரீ உவே. புத்தூர் எஸ். கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார் வெளியிட்டுள்ளார்.)

உபதேசரத்தினமாலையில் “வியாக்கியைகள் உள்ளதெல்லாம் வையமறியப் பகர்வோம்” என்று உறுதி செய்து கொண்டு, வியாக்கியானங்கள் அனைத்தைப் பற்றியும் அருளிச்செய்கிற மணவாளமாமுனிகள், ஈடு முப்பத்தாறாயிரப்படியைத் தவிர நம்பிள்ளை வேறு வியாக்கியானங்கள் எவையும் அருளிச் செய்துள்ளதாகக் குறிப்பிடவேயில்லை. அதிலும் (திருவாய்மொழியைத் தவிர) ஐம்பதுக்கும் குறைவான பாசுரங்களுக்கு வியாக்கியானமருளிச் செய்துள்ள நஞ்சீயர், நாயனார் ஆகியோரைப் பற்றி அருளிச் செய்துள்ள மாமுனிகள், நூற்றுக்கு மேற்பட்ட பாசுரங்களுக்கு வியாக்கியானம் அருளிச் செய்துள்ள நம்பிள்ளையைப் பற்றி அருளிச் செய்யாதது புதிராகவே உள்ளது.

மேலும் பெரியாழ்வார்திருமொழிக்குத் திருவாய்மொழிப்பிள்ளை அருளிச் செய்துள்ளதாக ஒரு வியாக்கியானம் ஒன்றும் அச்சிடப்பெற்றுள்ளது. இதுபற்றியும் உபதேசரத்தினமாலையில் ஏதும் குறிப்பிடப்பெறவில்லை. திருவாய்மொழிப்பிள்ளை என்பவர் மணவாளமாமுனிகளுக்கு நேரே ஆசார்யர் ஆவார். “எந்தை திருவாய்மொழிப் பிள்ளை இன்னருளால் வந்த உபதேசமார்க்கத்தைச் சிந்தை செய்து பேசுகின்றேன்” என்றே உபதேசரத்தினமாலையைத் தொடங்கியிருக்கின்ற மாமுனிகள், தம்முடைய ஆசார்யர், பெரியாழ்வார்திருமொழிக்கு ஓர் உரை எழுதியிருப்பாரானால், அதை அவ் உபதேசரத்தினமாலையில் குறிப்பிடாமல் இருந்திருப்பாரா என்ற கேள்வி எழுகிறது. மேலும், நான்காயிரம் பாசுரங்களுக்கும் பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியானம் அருளிச் செய்திருந்தாலும், அவற்றில் பெரியாழ்வார் திருமொழிக்கு அவர் அருளிச் செய்திருந்த வியாக்கியானத்தில் முதல் நானூறு பாசுரங்களுக்குரிய வியாக்கியானம் செல்லரித்து அழிந்து விட்டது என்றும், அப்பகுதிக்கு மட்டும் மணவாளமாமுனிகள் வியாக்கியானம் செய்தார் என்றும் அவருடைய வரலாறு தெரிவிக்கின்றது. அந்த வியாக்கியானத்தின்

சிறப்பைக் கண்ட மாமுனிகளுடைய சீடர்கள், நான்காயிரம் பாசுரங்களுக்கும் ஓர் உரை எழுதும்படி மாமுனிகளை வேண்ட, பெரியவாச்சான் பிள்ளையின் உரைக்கு மேற்படத் தாம் ஓர் உரை எழுதுவது தகாது என்று மாமுனிகள் மறுத்துவிட்டார் என்றும் அவருடைய வரலாற்றைத் தெரிவிக்கின்ற 'யதீந்த்ரப்ரவணப்ரபாவம்' எனும் நூல் குறிப்பிடுகின்றது. அதனால்தான் பெரியாழ்வார் திருமொழியில் கூட செல்லரித்துவிட்ட நானூறு பாசுரங்களுக்கு மட்டுமே மாமுனிகள் வியாக்கியானம் அருளிச் செய்தார். பெரியாழ்வார் திருமொழியிலேயே மீதியுள்ள (நாற்பதுக்கு மேற்பட்ட) பாசுரங்களுக்குக் கூட மாமுனிகள் வியாக்கியானம் அருளிச்செய்யவில்லை. மேலும், நானூறு பாசுரங்களுக்குள்ளேயும் ஆங்காங்கே சிற்சில ஓலைகள் செல்லரிக்கப்படாமல் கிடைத்தன என்றும் அவ்விடங்களில்கூட மாமுனிகள் தாம் வியாக்கியானம் செய்யாமல் பெரியவாச்சான் பிள்ளையின் வியாக்கியானத்தையே சேர்த்துக் கொண்டார் என்றும் கூறுவதுண்டு. ('நாவகாரியம்', 'தன்னடியார்' ஆகிய பாசுரங்களுக்குப் பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியானமே உள்ளதாக அரும்பத உரையில் காட்டப்பெறுகிறது.) இவ்வாறு இருக்கும்போது, தமக்கு நேரே ஆசார்யரான திருவாய்மொழிப்பிள்ளை பெரியாழ்வார் திருமொழிக்கு ஒரு வியாக்கியானம் அருளிச் செய்திருப்பாராயின், மாமுனிகள் தாமும் அதற்கு ஒரு வியாக்கியானம் அருளிச் செய்திருப்பாரா என்பது ஆராய வேண்டிய விஷயமாகும். (இந்த வியாக்கியானம், மணவாள மாமுனிகளின் ஆசார்யரான திருவாய்மொழிப்பிள்ளையால் அருளிச் செய்யப்பட்டது அல்ல என்றும், திருவாய்மொழிப் பிள்ளையின் வம்சத்தில் தோன்றியவராய், திருவாய்மொழிப்பிள்ளை என்ற திருநாமத்தையே உடையவராய், மணவாளமாமுனிகள் காலத்திற்குப் பிற்பட்டவரான ஒருவரால் அருளிச் செய்யப்பட்டதாக இருக்க வேண்டும் என்றும் காஞ்சீ மஹாவித்வான் ஸ்ரீ உவே. பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசார்ய ஸ்வாமி நிர்ணயித்துள்ளார்.)

திருவாய்மொழிப்பிள்ளைக்கு ஒருசாலை மாணாக்கரும் (ஸப்ரம்மசாரியும்), மாமுனிகள் காலத்திலும் எழுந்தருளியிருந்தவருமான ஆய் ஜநந்யாசார்ய ஸ்வாமி, திருப்பாவைக்கு ஈராயிரப்படி, நாலாயிரப்படி என்ற இரு வியாக்கியானங்களை அருளிச் செய்துள்ளார். இவை பற்றியும் உபதேசரத்தினமாலையில் குறிப்பிடப்பெறவில்லை. பெரிய திருமுடி அடைவு எனும் நூலில் ஆசார்யர்கள் பலர் அருளிச் செய்துள்ளதாகப் பல வியாக்கியானங்கள் கூறப்பெறுகின்றன. அவற்றில் பெரும்பாலானவை தற்போது கிடைப்பதில்லை. திருநெடுந்தாண்டகத்தில் 'மைவண்ண நறுங்குஞ்சி' என்று தொடங்கும் ஒரு பாசுரத்திற்கு மட்டும் பராசரபட்டர் ஓர் உரை அருளிச் செய்ததாகக் கூறப்படுகிறது. ஆயினும் பட்டர் காலத்திற்குப் பிற்பட்டவரான வேதாந்த தேசிகர் அருளிச்செய்த சுலோகம் ஒன்று இவ்வியாக்கியானத்தில் குறிப்பிடப் பெற்றுள்ளமையால் இந்த வியாக்கியானம் பட்டர் அருளிச்செய்தது அன்று என்றே அறிஞர்களால் முடிவு செய்யப் பெற்றுள்ளது.

திவ்வியப்ரபந்தங்களின் அடைவும் வியாக்கியானங்களும்

நம்மாழ்வாருடைய அருளால் பெற்ற பாசுரங்களை, நாதமுனிகள் நான்கு ஆயிரங்களாகத் தொகுத்தார். நாதமுனிகளால் தொகுக்கப் பெற்ற நாலாயிர திவ்யப்பிரபந்த பாசுரங்களின் அடைவும், அவற்றிற்குத் தற்போது வழக்கிலுள்ள (அச்சிடப்பெற்றுள்ள) வியாக்கியானங்களும் பின்வருமாறு:

திவ்வியப்பிரபந்தம்	பாசுரங்கள்	வியாக்கியானம் அருளிச்செய்தவர்கள்
முதலாயிரம்		
1. திருப்பல்லாண்டு	12	பெரியவாச்சான்பிள்ளை
2. பெரியாழ்வார் திருமொழி	461	மணவாளமாமுனிகள் (420 பாசுரங்கள்) பெரியவாச்சான்பிள்ளை (41 பாசுரங்கள்)
3. திருப்பாவை	30	பெரியவாச்சான்பிள்ளை அழகியமணவாளப்பெருமாள் நாயனார் ஆய் ஜநந்யாசார்யர் (இரண்டு உரைகள்)
4. நாச்சியார் திருமொழி	143	பெரியவாச்சான்பிள்ளை
5. பெருமாள் திருமொழி	105	பெரியவாச்சான்பிள்ளை
6. திருச்சந்தவிருத்தம்	120	பெரியவாச்சான்பிள்ளை
7. திருமாலை	45	பெரியவாச்சான்பிள்ளை
8. திருப்பள்ளியெழுச்சி	10	நஞ்சீயர், பெரியவாச்சான்பிள்ளை
9. அமலனாதிபிரான்	10	பெரியவாச்சான்பிள்ளை அழகியமணவாளப்பெருமாள் நாயனார் வேதாந்ததேசிகர்
10. கண்ணிநுண்சிறுத்தாம்பு	11	நஞ்சீயர், நம்பிள்ளை, பெரியவாச்சான்பிள்ளை அழகியமணவாளப்பெருமாள் நாயனார்
இரண்டாமாயிரம்		
11. பெரிய திருமொழி	1084	பெரியவாச்சான்பிள்ளை
12. திருக்குறுந்தாண்டகம்	20	பெரியவாச்சான்பிள்ளை
13. திருநெடுந்தாண்டகம்	30	பெரியவாச்சான்பிள்ளை

மூன்றாமாயிரம்

14. முதல் திருவந்தாதி	100	பெரியவாச்சான்பிள்ளை
15. இரண்டாம் திருவந்தாதி	100	பெரியவாச்சான்பிள்ளை
16. மூன்றாம் திருவந்தாதி	100	பெரியவாச்சான்பிள்ளை
17. நான்முகன் திருவந்தாதி	96	பெரியவாச்சான்பிள்ளை
18. திருவிருத்தம்	100	நம்பிள்ளை, பெரியவாச்சான்பிள்ளை, அழகியமணவாளச்சீயர்
19. திருவாசிரியம்	7	பெரியவாச்சான்பிள்ளை
20. பெரிய திருவந்தாதி	87	பெரியவாச்சான்பிள்ளை
21. திருவெழுகூற்றிருக்கை	1	பெரியவாச்சான்பிள்ளை (2 உரைகள்)
22. சிறியதிருமடல்	1	பெரியவாச்சான்பிள்ளை
23. பெரிய திருமடல்	1	பெரியவாச்சான்பிள்ளை, நம்பிள்ளை (அல்லது) நாயனார்

நான்காமாயிரம்

24. திருவாய்மொழி	1102	பிள்ளான், நஞ்சீயர், நம்பிள்ளை பெரியவாச்சான்பிள்ளை, அழகியமணவாளச்சீயர்

ஆக மொத்தம் பாசுரங்கள் 3776

வியாக்கியானங்களின் சிறப்புகள்

திவ்வியப்பிரபந்தங்களுக்கு அமைந்துள்ள வியாக்கியானங்கள் அனைத்துமே வியக்கத்தக்க வகையில் அமைந்துள்ளன. இதற்கு முன்னர் பல்வேறு நூல்களுக்கு இயற்றப்பட்டிருந்த எந்த உரைகளிலும் கையாளப்படாத பல உத்திகள் வைணவ உரையாசிரியர்களால் கையாளப் பெற்றுள்ளன. நான்கு வரிகளில் அமைந்துள்ள பாசுரங்களுக்கு மிக மிக விரிவான முறையில் (சில இடங்களில் நான்கு பக்கங்களுக்கும் மேல்) விளக்கமான உரைகள் வைணவ உரையாசிரியர்களால் மட்டுமே எழுதப் பெற்றுள்ளன என்பதனைக் கண்கூடாகக் காணலாம். பல்வேறு ஆசார்யர்களால் இயற்றப்பட்டவையாக அமைந்திருந்தபோதிலும், அவ்வுரைகள் அனைத்தும் சில பொதுவான தன்மைகளைக் கொண்டவைகளாக அமைந்துள்ளன. பிள்ளான் தொடங்கி, மணவாளமாமுனிகள் வரை ஆசார்யர்கள் அனைவராலும் எழுதப்பட்ட உரைகள் அனைத்தும் வடமொழியும் தமிழும் கலந்த மணிப்ரவாள நடையிலேயே அமைந்துள்ளன;

வேதங்கள், உபநிஷத்துக்கள், ஸ்ம்ருதிகள், இதிஹாஸங்கள், புராணங்கள், ஆகமங்கள் முதலிய பலநூல்களிலிருந்தும் தமிழிலக்கியங்களிலிருந்தும் மேற்கோள்கள் எடுத்தாளப் பெற்றுள்ளன; ஆங்காங்கே விசிஷ்டாத்வைதக் கொள்கைகளைப் பற்றிய விளக்கங்கள் மிக நுணுக்கமாகவும் அதே சமயத்தில் மிகத் தெளிவாகவும் கூறப்பட்டுள்ளன.

ஐதிஹ்யங்கள் நிர்வாஹங்கள் முதலியன

மேற்கூறிய எல்லாவற்றையும்விட மிகச் சிறந்த உத்தி ஒன்று வைணவ உரையாசிரியர்களால் கையாளப்பட்டுள்ளது. வைணவ உரையாசிரியர்கள், தங்கள் காலத்திலும், தங்கள் காலத்திற்குச் சற்று முற்பட்ட காலத்திலும் வாழ்ந்திருந்த ஆசார்யர்களுடைய திருப்பெயர்களைத் தங்கள் உரைகளில் இடம்பெறச்செய்திருப்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இதற்கு முன்னர் அமைந்த எந்த உரையிலும் இப்படிப்பட்ட உத்தியானது எவராலும் கைக்கொள்ளப்படவில்லை என்றே கூறலாம். பொதுவாக ஒரு நூலுக்கு உரை எழுதுபவர்கள், தனிப்பட்ட நபர்களைப் பற்றி அவ்வுரையில் குறிப்பிடுவது கிடையாது என்றே கூறலாம். ஆனால் வைணவ உரையாசிரியர்கள், தங்கள் காலத்திலும், தங்கள் காலத்திற்குச் சற்று முற்பட்ட காலத்திலும் எழுந்தருளியிருந்த ஆசார்யர்களுடைய திருப்பெயர்களைத் தங்கள் வியாக்கியானங்களில் ஆறு வகைகளில் இடம்பெறச் செய்துள்ளனர். அவை பின்வருமாறு:

1. ஐதிஹ்யம்

ஆழ்வாருடைய பாசுரங்களில் அமைந்துள்ள கருத்துகளை விளக்குவதற்கு, ஆசார்யர்களுடைய வாழ்க்கையில் நடைபெற்ற நிகழ்ச்சிகளையே எடுத்துக் காட்டாகக் கூறியுள்ளனர். உதாரணமாக, பெரியாழ்வார், அருளிச்செய்துள்ள 'நல்லதோர் தாமரை' என்று தொடங்கும் பதிகமானது தன் மகளைப் பிரிந்த திருத்தாயார் வருந்திக் கூறுவதாக அமைந்துள்ளது. தன் மகளை எம்பெருமான் அழைத்துக் கொண்டு சென்று விட, அவளைப் பிரிய மனமில்லாத அவளுடைய தாயார் 'ஒருமகள்தன்னை உடையேன், உலகம் நிறைந்த புகழால் திருமகள்போல வளர்த்தேன், செங்கண்மால்தான் கொண்டு போனான்' என்று கதறுவதாக அதில் ஒரு பாசுரம் அமைந்துள்ளது. இதற்கு விளக்கம் உரைக்கும் மணவாளமாமுனிகள், கூரத்தாழ்வான் இவ்வுலகை விட்டு நீங்கவேண்டிய காலம் நெருங்கியபோது, அவரைப் பிரிய மனமில்லாமல் எம்பெருமானார் இதேபோல் கதறிய நிகழ்ச்சியை இங்கு எடுத்துக் காட்டுகிறார். (எண் 23 பார்க்க.) இவ்வாறு பல்வேறு இடங்களில் ஆழ்வார்களுடைய பாசுரங்களில் உள்ள கருத்துகளுக்கு ஏற்ப, ஆசார்யர்கள் பற்பலருடைய வாழ்க்கையில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் எடுத்துக் கூறப்பெற்றுள்ளன. இந் நிகழ்ச்சிகளே ஐதிஹ்யங்கள் எனப்பெறுகின்றன. 'இதி ஹ, இதி ஹ – இப்படியாம், இப்படியாம் என்று வெகுகாலமாகச் சொல்லிவரும் கதை ஐதிஹ்யம் என்றதாயிற்று' என்று ஸ்ரீ உ.வே. பிரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசார்ய ஸ்வாமி அருளிச்செய்துள்ளார்.

2. நிர்வாஹம்

ஆழ்வார்களுடைய பாசுரங்களுக்கு விளக்கமுரைக்கும்போது, ஆசார்யர்கள் பற்பலரும் கூறிய சிறப்புப் பொருள்களையும் அவரவர்கள் பெயரைக் குறிப்பிட்டு இவர் இப்படிக் கூறுவார், அவர் அப்படிக் கூறுவார் என்று அவரவர்கள் தந்த விளக்கங்களையும் தங்கள் உரைகளில் குறிப்பிட்டுள்ளனர். உதாரணமாக, எம்பெருமானைப் பிரிந்த வருத்தத்தினால் உயிர் பிரியும் நிலை பராங்குச நாயகிக்கு ஏற்பட அப்போது 'இன்பம் தலைப்பெய்து எங்கும் தழைக்கவே' என்று கூறுவதாக நம்மாழ்வார் பாசுரம் அமைந்துள்ளது. தன் உயிர் நீங்கும் நிலையில் 'உலகம் இன்பமாக வாழ்ந்திடுக!' என்று பராங்குச நாயகி கூறியதன் கருத்தை விளக்குகின்ற உரையாசிரியர், 'நான் முடிந்தாலும் நாடு சுகமாக வாழட்டும் என்கிறாள்' என்று ஆளவந்தாரும், 'என்னைப்போல் துன்பப்படாமல் உலகம் இன்பமாக வாழட்டும் என்கிறாள்' என்று எம்பெருமானாரும், 'நான் முடியப்போவதால் உலகம் இனி என் துயரைக் கண்டு துன்பப்பட வேண்டியதில்லை ஆகையால், இனி இன்பமாக வாழட்டும் என்கிறாள்' என்றும் பட்டரும் உரைத்த விளக்கங்களை எடுத்துக் காட்டியுள்ளார். (எண் 780 பார்க்க.) இவ்வாறு காட்டப்பெறும் பல்வேறு விளக்கங்களே நிர்வாஹங்கள் எனப்பெறுகின்றன.

3. வார்த்தை

ஆழ்வார்கள் பாசுரங்களுக்குப் பொருள் உரைக்கும்போது, அவ்விடத்திற்குத் தகுதியாக ஆசார்யர்கள் அருளிச்செய்த சுவையான வார்த்தைகள் ஆங்காங்கே எடுத்துக் காட்டப் பெற்றுள்ளன. உதாரணமாக, 'கல்லெடுத்துக் கல்மாரி காத்தாய்' என்று திருமங்கையாழ்வார் அருளிச்செய்துள்ளார். இந்திரன் பொழிந்த கல்மழையிலிருந்து ஆயர்களைக் காப்பதற்காக கோவர்த்தனம் எனும் கல்லை (மலையை) எடுத்துக் குடையாகப் பிடித்தமையை ஆழ்வார் அருளிச்செய்கிறார் என்று விளக்கிய உரையாசிரியர், "கல்மாரியாகையாலே கல்லை எடுத்து ரக்ஷித்தான்; நீர்மாரியாகில் கடலை எடுத்து ரக்ஷிக்கும் காணும்" என்று இங்கு பட்டர் அருளிச்செய்த சுவையானதொரு வார்த்தையை எடுத்துக் காட்டுகிறார். (எண் 299 பார்க்க.) ஒரு சில இடங்களில் ஆசார்யர்கள் அருளிச்செய்துள்ள கதைகளும் எடுத்துக் காட்டப்பெற்றுள்ளன. (எண் 424, 455, 509.)

4. ஸம்வாதம்

ஆழ்வார்களுடைய பாசுரங்களின் கருத்தை விளக்கி வருங்காலையில், ஆங்கே சில ஐயங்கள் எழுவது இயற்கையே யாகும். அப்போது, அங்கே ஆசார்யர்களுக்கு இடையே அவ்வையம் குறித்து நடைபெற்ற உரையாடல்கள் குறிப்பிடப்பெறுகின்றன. உதாரணமாக, 'மாவலி வேள்வியில் தக்கது இது அன்று என்று தானம் விலக்கிய சுக்கிரன் கண்ணைத் துரும்பால் கிளறிய சக்கரக் கையன்' என்று பெரியாழ்வார் அருளிச்செய்துள்ளார். "வந்திருப்பவன் உண்மையில் யாசகன் அல்லன் என்ற உண்மையைச் சொன்ன சுக்கிரன்

கண்ணை இழந்தான்; தானம் கொடுத்த மகாபலி ராச்சியத்தை இழந்தான்; இது ஏன்?" என்று சீடர் கேட்க, "இருவருக்கும் இரண்டு குற்றங்கள் உண்டு; தானத்தை விலக்கியது சுக்கிரனுடைய குற்றம், ஆசார்யன் சொன்னதைக் கேளாதது மகாபலியின் குற்றம்" என்று ஆசார்யர் பதிலுரைத்ததாக ஒரு உரையாடலை உரையாசிரியர் எடுத்துக் காட்டுகிறார். (எண் 6 பார்க்க.) இப்படிப்பட்ட உரையாடல்களே ஸம்வாதங்கள் எனப்பெறுகின்றன.

5. உதாரணம்

சில இடங்களில் அந்தந்த இடங்களுக்குப் பொருத்தமாக ஆசார்யர்களையே உதாரணமாகவும் உரையாசிரியர்கள் குறிப்பிட்டுள்ளனர். 'அனைத்தில்லத்தாரும் அறிந்து' என்ற திருப்பாவைப் பகுதிக்கு விளக்கமருளிச்செய்யும் உரையாசிரியர், இப்பாசுரத்தில் எழுப்பப்பெறுகிற கோபிகை, ஒருவர் தப்பாமல் எல்லோரும் எம்பெருமானைப் பற்றி அறிந்துகொள்ள வேண்டும் என்று விரும்புபவள் என்று விளக்கி, "எம்பெருமானார் திருவவதரித்தாற்போலே காணும் இப்பெண்பிள்ளையும்" என்று அருளிச்செய்துள்ளார். (எண் 87 பார்க்க.) ஆசையுடையோர் அனைவரும் ரகசியார்த்தங்களை அறிந்து கொள்ளவேண்டும் என்பதற்காக, தமது ஆசார்யரான திருக்கோட்டியூர் நம்பியின் ஆணையையும் மீறி ரகசியார்த்தங்களை வெளியிட்ட எம்பெருமானாரையே இக்கோபிக்கைக்கு உதாரணமாகக் காட்டுகிறார் உரையாசிரியர்.

6. மேற்கோள்கள்

ஆளவந்தார், எம்பெருமானார், கூரத்தாழ்வான், பட்டர் போன்ற ஆசார்யர்கள், ஆழ்வார்களுடைய அருளிச்செயலை அடியொற்றி வடமொழியில் தோத்திரங்களை அருளிச்செய்துள்ளனர். சில இடங்களில் ஆழ்வார்களுடைய பாசுரங்களுக்கு விளக்கம் உரைக்கும்போது, அவ்வாசார்யர்கள் அருளிச்செய்துள்ள நூல்களிலிருந்து பொருத்தமான சுலோகங்கள் மேற்கோள்களாக எடுத்தாளப்பெறுகின்றன. அவ்வாறு சுலோகங்கள் மேற்கோளாக எடுக்கப்படும்போது, அவற்றை அருளிச்செய்த ஆசார்யர்களுடைய திருநாமங்களும் குறிக்கப்பெறுகின்றன. உதாரணமாக, 'நீண்ட அப்பெரியவாய கண்கள்' என்று ஸ்ரீரங்கநாதனுடைய திருக்கண்களைத் திருப்பாணாழ்வார் வருணித்துள்ளார். இங்கு, "பெரிய பெருமாளுடைய திருக்கண்களானவை திருச்செவிகளளவும் நீண்டிருக்கிறபடிக்கு ஒரு நினைவு உண்டு என்கிறார் பட்டர்" என்றுரைத்து, பட்டர் அருளிச்செய்த ஸ்ரீரங்கராஜஸ்தவத்தில் உள்ள ஒரு சுலோகத்தையே இங்கு மேற்கோளாகக் காட்டி உரையாசிரியர் விளக்குகின்றார். (எண் 188 பார்க்க.) (ஒரு சில இடங்களில் ஆசார்யர்களுடைய திருநாமங்களைக் குறிப்பிடாமல், அவர்கள் அருளிச்செய்துள்ள சுலோகங்கள் மட்டும் மேற்கோளாகக் காட்டப்பெற்றுள்ளன. அவை இந்நூலில் எடுத்துக் கொள்ளப்பெறவில்லை. ஆசார்யர்களுடைய திருநாமங்களைக் குறிப்பிட்டுள்ள இடங்கள் மட்டுமே இந்நூலில் எடுத்துக் கொள்ளப்பெற்றுள்ளன.)

முதன்முதலில் தோன்றிய உரையான (திருக்குருகைப்பிரான் அருளிச் செய்த) ஆறாயிரப்படியில் ஐதிஹ்யங்கள், நிர்வாஹங்கள் முதலியவை எவையும் இடம் பெறவில்லை. ஸ்ரீவைஷ்ணவ ஆசார்யர்களுடைய திருநாமங்களை தமது உரையில் இடம் பெறச் செய்யும் உத்தியை முதன்முதலில் கையாண்டவர் நஞ்சீயரே ஆவார். கண்ணிநுண்சிறுத்தாம்பு உரையில் 'நன்மையால் மிக்க நான்மறையாளர்கள்' என்ற பகுதிக்கு, பிறர் துன்பம் கண்டால் பொறுக்கமாட்டாதவர்கள் என்று உரையிட்ட நஞ்சீயர், இதற்கு எடுத்துக் காட்டாக "கூரத்தாழ்வானும் ஆண்டாளும் பிராட்டியும் போல்வார்" என்று குறிப்பிடுகிறார் (எண் 196). அதே போல் 'நம்புவார்பதி வைகுந்தம் காண்மினே' என்ற பகுதியின் உரையில் (எண் 198) "நம்பிதிருவழுதி வளநாடு தாஸர் வார்த்தை; 'கூரத்தாழ்வான் மகன் பிறந்து பின்பு இடைச்சுவர் தள்ளி ஒரு போகியாய்த்துக் காண்' என்று பணித்தான்" என்று ஒரு வார்த்தையையும் குறிப்பிட்டுள்ளார். திருவாய்மொழியில் இரண்டு பாசுரங்களின் உரையில் (எண் 419, 819) 'இது கூரத்தாழ்வான் நிர்வாஹம்' என்று தமது ஒன்பதினாயிரப்படி உரையில் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு மூன்று வகைகளில் ஆசார்யர்களுடைய திருநாமத்தைத் தமது உரையில் குறிப்பிடும் உத்தியை முதன் முதலில் தொடங்கி வைத்தவர் நஞ்சீயரே ஆவார். அவரைத் தொடர்ந்து உரையாசிரியர்கள் பிறர், மேற்கூறியவாறு ஆறுவகைகளில் ஆசார்யர்களின் திருநாமங்களைத் தமது உரைகளில் குறிப்பிட்டுள்ளனர். (திருச்சந்தவிருத்தம், இரண்டாம் திருவந்தாதி ஆகிய இரண்டு திவ்யப்பிரபந்தங்களின் வியாக்கியானங்களிலும், வேதாந்த தேசிகர் அருளிய அமலனாதிபிரான் விக்கியானம், திருவாய்மொழி பன்னீராயிரப்படி வியாக்கியானம் ஆகியவற்றிலும் ஐதிஹ்யங்கள் முதலியவை எவையும் இடம்பெறவில்லை.)

ஐதிஹ்யங்களின் பயன்கள்

"திருவாய்மொழிப் பேருரையாளர் நம்பிள்ளை உரைத்திறன்" என்ற நூலில் டாக்டர் இரா. அரங்கராஜன் அவர்கள் ஐதிஹ்யங்களைப் பற்றிப் பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

> *"ஆசார்யர்களில் நாதமுனிகள் தொடங்கி நஞ்சீயர் வரை பலரையும் இவற்றில் காணமுடிகிறது. சோழப் பேரரசர்களையும், சாமந்தர்களையும் முதலமைச்சர்களையும் அரசவைப் புலவர்களையும் இவற்றில் சந்திக்க முடிகிறது. ஏறத்தாழ தமிழகத்தின் ஐந்நூறு ஆண்டு வரலாற்று நிலைகளையும், அக்காலப் பகுதியில் வைணவ சமயத்தின் வளர்ச்சிகளையும் சேவைகளையும் நன்கு தெளிவிப்பதில் இவை கல்வெட்டுகளையும் செப்புப் பட்டயங்களையும் போல் பயன் தருகின்றன."*

ஐதிஹ்யநிர்வாஹங்கள் முதலியவைகளைக் கொண்டு அக்காலத்திலிருந்த சமய நிலை, சமூகநிலை, அரசியல் நிலை, ஆசார்யர்களின் உயர்ந்த பண்புகள் முதலியவற்றை நன்கு அறிந்து கொள்ள முடிகின்றது.

ஐதிஹ்யங்களின் மிக முக்கியமான பயன்களில் ஒன்று ஆசார்யர்களின் வாழ்க்கைச் செய்திகள் பற்றிய பல ஐயங்களுக்கு விடையளிப்பதாகும். நாதமுனிகள் தொடங்கி நம்பிள்ளை வரை ஆசார்யர்கள் அனைவருடைய சரித்திரங்களையும் நாம் அறிந்து கொள்ள உதவுவது நம்பிள்ளையின் சீடரான பின்பழகிய பெருமாள் சீயர் என்பவரால் இயற்றப்பெற்ற ஆறாயிரப்படி குருபரம்பராப்ரபாவம் எனும் நூலே ஆகும். ஆனால், இந்நூலிலும் சொல்லப்படாத பல செய்திகள் நாலாயிர திவ்விப்பிரபந்த வியாக்கியானங்களில் உள்ள ஐதியங்களில் கூறப்பெற்றுள்ளன.

அழகிய மணவாளன் அமுது செய்த பிரசாதத்தை உட்கொண்ட மகிமையினால் கூரத்தாழ்வான் தேவியான ஆண்டாளுக்குப் பராசரபட்டரும், சீராமப்பிள்ளையும் அவதரித்தாக குருபரம்பரை நூல் கூறுகிறது. பட்டர் அவதரிப்பதற்கு முன்பே கூரத்தாழ்வானுக்கு ஒரு குழந்தை பிறந்திருந்ததாகவும் அக்குழந்தை சிறுவயதிலேயே மரித்து விட்டதாகவும் ஓர் ஐதிஹ்யத்தில் கூறப்படுகிறது (எண் 387). இது குருபரம்பரை நூலில் கூறப்பெறவில்லை.

எம்பார் பரமபதித்த பிறகே பட்டர் நஞ்சீயரைத் திருத்திப் பணிகொண்ட செய்தி குருபரம்பரை நூலில் கூறப்படுகிறது. ஆனால் ஓர் ஐதிஹ்யத்தில் (எண் 661) எம்பாரும் முதலியாண்டானும் ஒருவரை ஒருவர் வணங்கித் தழுவிக் கொண்டதைத் தாம் நேரில் கண்டதாக நஞ்சீயர் கூறிய செய்தி ஒன்று இடம் பெற்றுள்ளது. எம்பார் காலத்திலேயே நஞ்சீயரை பட்டர் திருத்திப்பணிகொண்டிருந்தால், அவரை எம்பாருடைய திருவடிகளிலேயே ஆச்ரயிக்கும்படி பட்டர் செய்திருப்பார். எனவே நஞ்சீயர் பட்டரால் திருத்திப் பணிகொள்ளப் பெறுவதற்கு முன்னரே ஒருமுறை திருவரங்கம் வந்திருந்தபோது எம்பாரும் ஆண்டானும் தழுவிக்கொண்டதைக் கண்டிருக்கலாம்.

பராசரபட்டர் மிகச்சிறிய வயதிலேயே பரமபதித்துவிட்டதாக குருபரம்பரை நூல் கூறுகிறது. திவ்வியப்பிரபந்த வியாக்கியானத்தில் ஓர் இடத்தில் (எண் 551) "பட்டரை பால்யத்திலே பறிகொடுத்தாரிறே அவர் (நஞ்சீயர்)" என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே பட்டர் மிகக் குறைந்த வயதிலேயே பரமபதித்திருக்க வேண்டும் என்று கருத இடமேற்பட்டுவிட்டது. ஆனால் திவ்வியப்பிரபந்த வியாக்கியானங்களில் உள்ள வேறு சில ஐதிஹ்யங்களைக் கொண்டு பார்க்கும் போது, இது தவறான செய்தி என்பது உறுதியாகிறது. பட்டர் அருளிச் செய்த விளக்கங்களைத் தாம் நேரில் கேட்டிருந்ததாக நம்பிள்ளை தெரிவித்ததாகப் பல ஐதிஹ்யங்களில் குறிப்பிடப் பெற்றுள்ளன. (எண் 242, 244, 403, 407, 705 முதலியவை பார்க்க.) பட்டரின் சீடரான நஞ்சீயருடைய சீடர் நம்பிள்ளை என்பதைக் கருத்தில் கொண்டு பார்க்கும் போது, பட்டர் குறைந்தது ஐம்பது வயதிற்கு மேல் இவ்வுலகில் எழுந்தருளியிருக்க வேண்டும் என்பது திண்ணமாகிறது. நூற்றிருபது வயது எழுந்தருளியிருந்த இராமானுசரைப் போலல்லாமல், ஐம்பது அல்லது அறுபது

வயதிலேயே பட்டர் பரமபதித்தமை காரணமாக, அவர் பால்யத்திலே பரமபதித்தாகக் குறிப்பிடப்பட்டிருக்கலாம். பட்டரை விட நஞ்சீயர் வயதில் மூத்தவர் ஆதலால் தம்மைக் காட்டிலும் வயதில் சிறியவரான பட்டர், தாம் அவரை ஆசார்யராக அடைந்த சில வருடங்களுக்குள்ளே பரமபதித்தமை காரணமாகவும் நஞ்சீயர் அப்படிக் கூறியிருக்கலாம். (மதுரைப் பேராசிரியர் டாக்டர் இரா. அரங்கராஜன் அவர்கள் தமது "திருவாய்மொழிப் பேருரையாளர் – நம்பிள்ளை உரைத்திறன்" என்ற நூலில் (பக். 13–15) இக்கருத்துகளை ஆதரித்துள்ளார்.)

ஐதிஹ்யங்கள் நிர்வாஹங்கள் முதலியவற்றில் உள்ள சில சிக்கல்கள்

ஐதிஹ்யங்கள், நிர்வாஹங்கள் முதலியவை பல வியாக்கியானங்களிலும் இடம் பெற்றிருந்தாலும், அவற்றிலும் சில சிக்கல்கள் உள்ளன.

பட்டர் மிகவும் உகந்த திருநாமம் எது என்று தமது இறுதிக் காலத்தில் கேட்டவர் அனந்தாழ்வான் என்று எண் 31ல் கூறப்பெற்றுள்ளது. ஆனால் எண் 356ல் இப்படிக் கேட்டவர் திருமலை நம்பி என்று கூறப்பெற்றுள்ளது.

பகவானிடம் எதை விண்ணப்பிக்க வேண்டும் என்ற கேள்விக்கு, காளியன் கூறிய வார்த்தைகளையே விண்ணப்பிக்க வேண்டும் என்று ஆளவந்தார் அருளிச்செய்ததாக எண் 109ல் கூறப்பெறுகிறது. ஆனால் இவ்வார்த்தையை எம்பெருமானார் அருளிச்செய்ததாக எண் 366ல் கூறப்பெற்றுள்ளது.

இராவணன் சீதையிடம் மாயத்தினால் செய்த இராமன்தலையைக் காட்டியபோது சீதையின் உயிர் பிரியாதிருந்தது எங்ஙனம் என்ற கேள்வியை பட்டரிடம் கேட்டதாக எண் 599ல் குறிப்பிடப்பெறுகிறது. ஆனால் இக் கேள்வியை நஞ்சீயரிடம் நம்பிள்ளை கேட்டதாக எண் 122ல் குறிப்பிடப்பெறுகிறது.

'சிங்கக் குருகு' என்ற வார்த்தையை பட்டர் அருளிச்செய்ததாக எண் 55ல் கூறப் பெற்றுள்ளது. ஆனால் அவ்வார்த்தையை ஆழ்வான் அருளிச்செய்ததாக அப்பாசுரத்தின் மற்றொரு வியாக்கியானத்தில் கூறப்பெற்றுள்ளது. அதேபோல் 'முலையெழுந்தார்படி மோவாய் எழுந்தார்க்குத் தெரியாதிறே' என்ற வார்த்தையை எம்பெருமானார் அருளிச்செய்ததாக 50லும் பட்டர் அருளிச்செய்ததாக எண் 80லும் கூறப்பெற்றுள்ளது. இதேபோல் ஒருவார்த்தையை எம்பெருமானார் அருளிச்செய்ததாக எண் 791லும் அதே வார்த்தையை எம்பார் அருளிச்செய்ததாக எண் 792லும் குறிப்பிடப்பெற்றுள்ளது. மற்றொரு வார்த்தையை எம்பார் அருளிச்செய்ததாக எண் 294லும் பட்டர் அருளிச்செய்ததாக எண் 346லும் குறிப்பிடப் பெற்றுள்ளது.

ஆசார்யர்கள் அனைவரும் பேசிற்றே பேசும் ஏககண்டர்களாகையால் ஒருவர் கூறிய வார்த்தைகளையே மற்றொரு ஆசார்யரும் கூறியிருக்கலாம்.

ஒருசில இடங்களில் ஆசார்யர்கள் அருளிச்செய்த வார்த்தைகள் இன்னதென்று வியாக்கியானங்களில் குறிப்பிடப்பெறவில்லை. ஒருசில இடங்களில் அரும்பத உரைகளைக் கொண்டே அவ்வார்த்தைகள் என்ன என்று தெரிந்து கொள்ள முடிகிறது. (உதாரணமாக எண் 92, 769 முதலியவை பார்க்க.) அரும்பதவுரை இல்லாமையால் ஓரிடத்தில் குறிப்பிட்டுள்ள வார்த்தை என்ன என்ற விளக்கமே தெரியவில்லை (எண் 517). ஓரிடத்தில் வார்த்தை இன்னதென்று அரும்பத உரையில் குறிப்பிடப்பெறாவிட்டாலும் வேறொரு நூலில் குறிப்பிட்டிருப்பதைக் கொண்டுதான் அவ்வார்த்தையை அறியமுடிகிறது (எண் 30). ஓரிடத்தில் குறிப்பிடப் பெற்றிருக்கும் வார்த்தையின் விளக்கம் என்ன என்பது, இன்னும் அச்சில் வெளிவராமல் ஓலைச்சுவடியிலேயே மறைந்து கிடக்கும் வேறொரு வியாக்கியானத்தில் இடம்பெற்றிருந்ததைக் கொண்டு புரிந்து கொள்ளவேண்டியிருந்தது (எண் 67). அக்காலங்களில் அவர்கள் அருளிச்செய்த வார்த்தைகள் இன்னதென்று செவிவழியாகவே உரைக்கப்பட்டு மிகவும் பிரசித்தமாக இருந்தபடியால், அவற்றை வியாக்கியானங்களில் குறிப்பிடவேண்டிய அவசியம் இல்லாமல் இருந்திருக்கலாம்.

வியாக்கியானங்களில் இடம்பெற்றுள்ள நிர்வாஹங்களிலும் சில சிக்கல்கள் உள்ளன. நஞ்சீயரால் மறுக்கப்பெற்றதாகக் கூறப்பெறும் சில நிர்வாஹங்கள் நஞ்சீயர் அருளிச்செய்த ஒன்பதினாயிரப்படி உரையிலேயே இடம்பெற்றுள்ளன. (எண் 727, 729). ஓரிடத்தில் நஞ்சீயர் ஒரு விளக்கம் அளித்ததாகவும், பிள்ளை திருநறையூர் அரையர் ஒரு விளக்கம் அளித்ததாகவும் குறிப்பிடப்பெற்றுள்ளது. (எண் 763). ஆனால் நஞ்சீயருடைய ஒன்பதினாயிரப்படி உரையில் அரையருடைய விளக்கம் மட்டுமே இடம்பெற்றுள்ளது. நஞ்சீயர் நூறுமுறைக்குமேல் திருவாய்மொழி காலக்ஷேபம் ஸாதித்ததாக குருபரம்பரை நூலில் கூறப்பெறுவதால் அவர் ஒருமுறை ஸாதித்த விளக்கங்கள் மட்டுமே அவருடைய உரையில் இடம் பெற்றிருக்கலாம். அவர் வேறொருமுறை ஸாதித்தவை பிற வியாக்கியானங்களில் உள்ள நிர்வாஹங்களில் இடம்பெற்றிருக்கலாம்.

இதுபோன்ற சில புதிர்கள் ஐதிஹ்ய நிர்வாஹங்கள் முதலியவற்றில் இடம் பெற்றிருந்தாலும் வைணவ ஆசார்யர்கள் பலரைப் பற்றி குருபரம்பரைநூல்களிலும் கூறப்படாத பல சுவையான செய்திகள் திவ்யப்பிரபந்த வியாக்கியானங்களில் பல்வேறு இடங்களில் குறிப்பிடப்பெற்றுள்ளன. அவற்றில் சிலவற்றைப் பார்ப்போம்.

நாதமுனிகள்

நம்மாழ்வாரிடமிருந்து நாலாயிரதிவ்வியப்பிரபந்தங்களையும் அவற்றின் ஆழ்பொருள்களையும் பெற்றவரான நாதமுனிகளே வைணவ ஆசார்யர்கள் வரிசையில் முதல் ஆசார்யர் ஆவார். (இவருடைய காலம் கி.பி. 823 முதல் 918 வரை என்பர்.) திவ்வியப்பிரபந்த வியாக்கியானங்களில் நாதமுனிகளைப் பற்றி மிகச் சில இடங்களில்

மட்டுமே குறிப்பிடப்பெற்றுள்ளது. அதுவும் அவருடைய இறுதிக்காலத்தைப் பற்றிய குறிப்பாகவே அமைந்துள்ளது. அரசன் ஒருவன் தன்னுடைய சாமந்தன் (படைத்தலைவன்) தலையிலே காலை வைத்து யானைமீது ஏறுவதை நாதமுனிகள் கண்டார்; 'எம்பெருமானும் இதுபோலவன்றோ பிரமன் முதலியவர்கள் தலைமீது திருவடிகளை வைத்து, கருடவாகனத்தில் ஏறியருள்வான்!' என்று நினைத்து மோகித்து விழுந்தார். நாதமுனிகள் ஒருமுறை காட்டுமன்னார்கோயிலில் எழுந்தருளியுள்ள மன்னாரைச் சேவித்துக் கொண்டிருந்தபோது பெண்பிள்ளை வந்து, 'நம் இல்லத்தில் ஒரு குரங்கும், இரண்டு வில்லிகளும், ஒரு பெண்ணும் வந்தார்கள்' என்று கூற, இராமபிரான், இலக்குமணன், சீதைப்பிராட்டி, அனுமன் ஆகியோரே வந்தவர்கள் என்று கருதி அவர்களைத் தேடிக் கொண்டு கங்கைகொண்டசோழபுரம் வரை சென்று அவர்களைக் காணாமல் மோகித்து விழுந்து திருநாட்டிற்கு எழுந்தருளினார் என்றும் ஓரிடத்தில் குறிப்பிடப்பெற்றுள்ளது. (எண் 553 பார்க்க.) இவ்விரு நிகழ்ச்சிகளும் ஆறாயிரப்படி குருபரம்பராப்ரபாவ நூலிலும் குறிப்பிடப்பெற்றுள்ளன. இவை தவிர நாதமுனிகளைப் பற்றி வேறு எந்த நிகழ்ச்சிகளும் திவ்வியப்பிரபந்த வியாக்கியானங்களில் குறிப்பிடப்பெறவில்லை. 'பெரிய முதலியார்' என்றும் நாதமுனிகள் வழங்கப்பெறுவதுண்டு ஆகையால், திவ்வியப்பிரபந்த வியாக்கியானங்களில் (எண் 298, 647, 786 ஆகிய) சில இடங்களில் 'பெரியமுதலியார் வார்த்தை' என்று சுட்டிக் காட்டப் பெறுகின்ற வார்த்தைகளை நாதமுனிகள் அருளிச்செய்த வார்த்தைகளாகவே கொள்ளலாம். (ஆனால் பெரியமுதலியார் என்பது நாதமுனிகள், ஆளவந்தார் ஆகிய இருவரையுமே குறிக்கும். நம்பிள்ளை எண் 553ல் பெரிய முதலியார் என்று நாதமுனிகளையே குறித்துள்ளார். அழகிய மணவாளப்பெருமாள் நாயனார் எண்94ல் நாதமுனிகளையும், கண்ணிநுண்சிறுத்தாம்பு வ்யாக்யான ப்ரவேசத்தில் ஆளவந்தாரையும் பெரிய முதலியார் என்று குறித்துள்ளார்.)

மணக்கால் நம்பி

நாதமுனிகளுடைய சீடரான உய்யக்கொண்டாரைப் பற்றிய செய்திகள் எவையும் திவ்வியப்பிரபந்த வியாக்கியானங்களில் இடம்பெறவில்லை. ஆனால் உய்யக் கொண்டாருடைய சீடரான மணக்கால் நம்பியின் திருநாமம் சில இடங்களில் குறிப்பிடப் பெற்றுள்ளது. எம்பெருமானிடம் பறவைகளைத் தூதனுப்ப நினைத்த ஆழ்வார், பறவைகள் தாமே முன்வந்து நிற்பதைக் கண்டு அவற்றை 'நன்னலப்புள்ளினங்காள்' என்று அழைக்கின்றார். தாமே ஆளவந்தாரைத் தேடிவந்து, பலமாதங்கள் சிரமப்பட்டு அவரைச் சந்திக்கும் வாய்ப்பை ஏற்படுத்திக்கொண்டு, பிறகு அவருக்கு உபதேசங்கள் செய்த மணக்கால் நம்பியைப் போன்ற பறவைகள் என்று அப்பறவைகளை மணக்கால் நம்பியுடன் உரையாசிரியர் ஒப்பிடுகிறார். (எண் 684 பார்க்க.) எம்பெருமானை அடையும் ஆசையை விடாதிருக்கவேண்டும் என்று தம்முடைய நெஞ்சை இரந்து கேட்டுக் கொள்கின்ற

ஆழ்வாரையும் மணக்கால் நம்பியோடு உரையாசிரியர் ஒப்பிடுகிறார். (எண் 773 பார்க்க.) திருமகிழ்மாலைமார்வன் என்பவரை மிகவும் அன்புடன் 'மாணி' என்ற சொல்லையிட்டு மணக்கால் நம்பி அழைத்த செய்தி ஓரிடத்தில் (எண் 178) குறிப்பிடப்பெறுகிறது.

ஆளவந்தார்

நாதமுனிகளுடைய திருப்பேரனாரான ஆளவந்தாரைப் பற்றியும் சில செய்திகள் மட்டுமே திவ்வியப்பிரபந்த வியாக்கியானங்களில் இடம்பெற்றுள்ளன. சிறுவயதிலேயே அரசவைக்கு எழுந்தருளி அரசவைப் பண்டிதனை வாதில் வென்றமை முதலிய நிகழ்ச்சிகள் திவ்வியப்பிரபந்த வியாக்கியானங்களில் குறிப்பிடப்பெறவில்லை என்றாலும், அரசவைக்கு எழுந்தருளியபோது ஆளவந்தாரின் நடையை அரசன் கொண்டாடியதாக ஒரு செய்தி மட்டும் ஓரிடத்தில் (எண் 596) குறிப்பிடப்பெற்றுள்ளது. மணக்கால்நம்பியிடம் எம்பெருமானைப் பற்றிக் கேட்ட ஆளவந்தார், 'எம்பெருமானை உடனே காண வழி உண்டோ?' என்று கேட்ட செய்தி ஓரிடத்தில் (எண் 665) குறிப்பிடப்பெற்றுள்ளது. நாதமுனிகளுடைய சீடரான குருகைகாவலப்பன் என்பவரை ஆளவந்தார் சந்திக்கச் சென்ற நிகழ்ச்சி ஓரிடத்திலும் (எண் 478), 'அனந்தபுரம் நடமினோ நமர்கள் உள்ளீர்' என்று அரையர் பாடக்கேட்ட ஆளவந்தார், உடனே திருவனந்தபுரம் சென்ற நிகழ்ச்சி ஓரிடத்திலும் (எண் 802) குறிப்பிடப்பெறுகிறது. ஆளவந்தார் எம்பெருமானாரை கடாக்ஷித்த நிகழ்ச்சி "திருப்புற்றுக்குக் கிழக்கே கரியமாணிக்காழ்வார் திருமுன் பின் ஸோபாநத்திலே ஆளவந்தார் எழுந்தருளியிருக்க, உடையவர் திருப்புற்றுக்குக் கிழக்காக எழுந்தருளி யிருக்கிறவரைப் பார்த்து, 'ஆமுதல்வனிவன்' என்று அருளிச்செய்தாராம்" என்று ஓரிடத்தில் (734) குறிப்பிடப்பெற்றுள்ளது. ஆளவந்தார் திருவரங்கம் திருக்கோயிலில் எம்பெருமானைத் தொழுவதற்கு எழுந்தருளினால், எம்பெருமான் திருமுடியை வைத்துள்ள மேற்குப் பக்கத்தில் ஒருபோதும் எழுந்தருளியிரார் என்றும், எம்பெருமான் திருவடிகளை நீட்டியுள்ள கிழக்குப் பக்கத்தில் அவர் எழுந்தருளியிராத இடமே இல்லை என்றும் ஓரிடத்தில் (எண் 176) குறிப்பிடப்பெற்றுள்ளது.

கோஷ்டியாகப் பலர் அமர்ந்து திவ்வியப்பிரபந்தங்களின் பொருள்களைப் பற்றி ஆராய்ச்சி செய்வது முதன்முதலில் ஆளவந்தார் காலத்திலேயே ஏற்பட்டது என்று கூறலாம். 'ஆளவந்தார் கோஷ்டியிலே' என்று திவ்வியப்பிரபந்த வியாக்கியானங்களில் ஒரு சில இடங்களில் வரும் சொற்றொடர்கள் இதை உறுதிப்படுத்துகின்றது. 'எம்பெருமானைக் கடும் சொற்களால் வைத சிசுபாலனும் வீடுபேறு அடைந்து விட்டானே!' என்று ஆளவந்தார் கோஷ்டியில் சிலர் கூற, 'அவன் அடைந்தது பேறு ஆகாது; அவனால் நாடு கெட்டுவிடக்கூடாது என்பதற்காக அவனை எம்பெருமான் பரமபதத்திற்குள் தள்ளிவிட்டான்' என்று ஆளவந்தார் அருளிச்செய்துள்ளார். (எண் 134 .) 'எம்பெருமானைக் காணவேண்டும் என்று நள்ளிரவில் தனியாகச் சென்ற பராங்குநாயகி, எம்பெருமானோடு

கூடவே சென்ற பரகால நாயகி ஆகிய இருவரில் யாரைக் குறித்து அதிகம் அச்சம் கொள்ள வேண்டும்?' என்று ஆளவந்தார் கோஷ்டியில் சிலர் சர்ச்சை செய்துகொண்டிருந்தபோது, 'எம்பெருமானுடன் கூடச்சென்ற நாயகிக்கே யாரால் என்ன ஆபத்து வருமோ என்று அஞ்சவேண்டும்' என்று ஆளவந்தார் நயமாக விடை பயந்தார். (எண் 670 பார்க்க.) ஆளவந்தார் கோஷ்டியில் சிலர், 'எம்பெருமான் திருமுன்பே எதை விண்ணப்பிக்க வேண்டும்?' என்று விசாரித்துக்கொண்டிருந்தபோது, 'காளியன் சொன்ன வார்த்தைகளை விண்ணப்பிக்க வேண்டும்' என்று அருளிச்செய்துள்ளார். (எண் 109 பார்க்க.)

திருவாய்மொழிப் பாசுரங்களுக்கு ஆளவந்தார் அருளிச்செய்த விளக்கங்கள் பலவற்றை அவருடைய சீடரான திருமாலையாண்டான் எம்பெருமானாருக்கு வழங்கினார். திவ்வியப்பிரபந்தப் பாசுரங்களுக்கு மட்டுமல்லாமல் இதிகாச புராண சுலோகங்களுக்கும் ஆளவந்தார் அருளிய சுவையான விளக்கங்கள் பல்வேறு இடங்களில் எடுத்துக் காட்டப்பெற்றுள்ளன. (எண் 573, 714, 793 முதலியவை பார்க்க.)

ஆளவந்தாருக்கு, சொட்டை நம்பி என்ற மகனார் இருந்தார் என்றும், அவர் அரசாங்க உத்யோகம் செய்து கொண்டிருந்தார் என்றும், அவர் தமது அந்திம காலத்தில் ஆளவந்தாருடன் தமக்குள்ள தொடர்பு நிச்சயம் வீடுபேறு அளிக்கும் என்ற உறுதியுடன் இருந்தார் என்றும் ஓரிடத்தில் (எண் 141) குறிப்பிடப்பெறுகிறது. அவர் திருவாய்மொழிப் பாசுரம் ஒன்றிற்கு அளித்த விளக்கமும் ஓரிடத்தில் (எண் 559) குறிப்பிடப் பெற்றுள்ளது.

ஆளவந்தாருடைய சீடர்கள்

ஆளவந்தாருக்குச் சீடர்கள் பலர் இருந்ததாக குருபரம்பரைநூல் கூறுகின்றது. அவர்களுள் முக்கியமானவர்களான பெரியநம்பி, திருமலை நம்பி, திருக்கோட்டியூர் நம்பி, திருமாலையாண்டான், ஆழ்வார் திருவரங்கப்பெருமாள் அரையர் ஆகிய ஐவரிடம் இராமானுசர் ஸ்ரீவைஷ்ணவஸம்ப்ரதாய நூல்களைக் கற்றதாகவும் கூறப்பெற்றுள்ளது. இவர்களைத் தவிர திருக்கச்சி நம்பி, மாறநேர் நம்பி ஆகியோரும் ஆளவந்தாருடைய சீடர்களேயாவர். இவர்களைப் பற்றிப் பல செய்திகள் உரைகளில் குறிப்பிடப்பெற்றுள்ளன.

பெரியநம்பி

இராமானுசருக்குப் பஞ்சஸம்ஸ்காரம் செய்தமையால் அவருக்கு முதல் ஆசார்யரானவர் பெரிய நம்பி. ஆயினும் அவர் இராமானுசரைத் தமது சீடராக நினைக்காமல், தமது ஆசார்யரான ஆளவந்தாராகவே எண்ணியிருந்தார். இராமானுசர் பெரிய கோஷ்டியுடன் நீராடுவதற்காகக் காவிரிக் கரைக்கு எழுந்தருளிக் கொண்டிருந்தபோது பெரிய நம்பி அவரைக் கீழே விழுந்து வணங்கியதாகவும், அப்படிச் செய்ததற்குக் காரணம் என்ன என்று கேட்டபோது, ஆளவந்தார் எழுந்தருள்வதாகவே நினைத்து வணங்கினேன் என்று கூறியதாகவும் இரண்டு இடங்களில்

குறிப்பிடப்பெற்றுள்ளது. (எண் 57, 300 பார்க்க.) இராமானுசருடைய ஆசார்யராக இருந்தபோதும், இராமானுசருடைய எண்ணத்தை நிறைவேற்றுவதில் கண்ணும் கருத்துமாக இருந்தவர் பெரிய நம்பி. திருவரங்கத்தில் எழுந்தருளியிருந்த இராமானுசர் ஒருமுறை பெருமாள்கோயிலில் (காஞ்சீபுரத்தில்) திருக்கச்சி நம்பி எப்படி எழுந்தருளியிருக்கிறார் என்று விசாரித்து வருபவர்கள் யாரேனும் உண்டோ என்று (தம்முடைய சீடர்களைக்) கேட்க, ஒருவரும் அதற்கு முன்வரவில்லை. மறுநாள் பெரிய நம்பி தாம் பெருமாள்கோயில் சென்று பேரருளாளனைச் சேவித்துவிட்டு வர விரும்பி அதற்கு இராமானுசரிடம் அனுமதியும் வேண்டினார். காஞ்சீபுரம் சென்று திருக்கச்சி நம்பியை நலம் விசாரித்து உடனே திருவரங்கம் திரும்பினார். இச்செய்தி மிகவும் விரிவாக ஓரிடத்தில் (எண் 333) குறிப்பிடப்பெற்றுள்ளது. ஆளவந்தாருடைய சீடரும் ஐந்தாம் வருணத்தவருமான மாறநேர் நம்பியிடம் மிகவும் அன்புடையவர் பெரிய நம்பி. மாறநேர் நம்பி தமது இறுதிக்காலத்தில் நோயினால் மிகவும் துன்பப்பட்டபோது பெரிய நம்பி மிகக் கலங்கினார். (எண் 102 பார்க்க.) மாறநேர்நம்பி பரமபதித்தபோது, அவர் ஐந்தாம் வருணத்தவர் என்று பாராமல் அவருக்குத் தாமே ப்ரம்மமேதஸம்ஸ்காரம் செய்தார். (எண் 263 பார்க்க.) ஆயிரத்தளி என்ற இடத்தில் அரசன் செய்த துன்பம் தாங்காமல் கூரத்தாழ்வான் மடியில் தலையை வைத்துக் கொண்டிருந்து, பெரியநம்பி திருநாட்டிற்கு எழுந்தருளியதாக ஓரிடத்தில் (எண் 522) குறிப்பிடப் பெற்றுள்ளது. பெரியநம்பியின் பொருளாட்சிகள் எவையும் திவ்வியப்பிரபந்த வியாக்கியானங்களில் குறிப்பிடப் பெறவில்லை.

திருக்கோட்டியூர்நம்பி

ஆளவந்தாருடைய மற்றொரு சீடரான திருக்கோட்டியூர் நம்பி எம்பெருமானாருக்கு ரஹஸ்யத்ரயத்தின் பொருள்களை உபதேசித்தவராவார். அவர் ரகசியார்த்தங்களைத் தகுதியில்லாதவர் எவருக்கும் வெளியிடக்கூடாது என்ற கருத்துடையவராக இருந்தார். (எண் 461 பார்க்க.) எனவே அவர் ஒருவரும் அறியாதவண்ணம் ஒரு திண்ணையிலே அமர்ந்து பகவானுடைய குணங்களைச் சிந்தித்துக் கொண்டிருப்பராம். இராமானுசர் திருக்கோட்டியூருக்கு எழுந்தருளி அவருடைய திருமாளிகை எது என்று அங்குள்ளவர்களைக் கேட்டு அறிந்துகொண்டு, அத்திக்கு நோக்கி தண்டனிட்டு வணங்கியபோதுதான் அவ்வூரில் இருந்தவர்களும் திருக்கோட்டியூர் நம்பியின் பெருமையை அறிந்துகொண்டார்கள். (எண் 145 பார்க்க.) திருக்கோட்டியூர் நம்பியின் இயற்பெயர் திருக்குருகைப்பிரான் என்பது. அவரிடம் அர்த்த விசேஷங்களைக் கேட்க வருபவர்கள் ஆறுமாதங்களுக்கும்மேல் காத்திருப்பர்கள். (எண் 145). அவர் இராமானுசருக்கும் பரமரகசியமாகவே அர்த்தங்களை உபதேசித்தார். ஒருமுறை அவர் திருவரங்கத்திற்கு எழுந்தருளியிருந்தபோது சரமச்லோகத்திலுள்ள 'ஏகம்' என்ற

சொல்லின் உட்பொருளை இராமானுசருக்கு உபதேசிக்க விரும்பி, ஒருவரும் வராத ஏகாந்தமான ஒரு இடத்திற்கு இராமானுசரை அழைத்துச் சென்று, உபதேசிப்பதற்கு முன்னர் சுற்றுமுற்றும் பார்த்தார். அங்கே ஒரு மூலையில், திருக்கோயில் கைங்கர்யம் செய்பவன் ஒருவன் உறங்கிக் கொண்டிருப்பதைப் பார்த்தவுடன், அங்கே உபதேசித்தால் அவன் காதிலும் விழுந்துவிடுமோ என்று அஞ்சி அன்று உபதேசிக்காமலே, தம் ஊருக்குச் சென்று விட்டார். பிறகு மற்றொருமுறை வந்தபோதுதான் பரமரகசியமாக உபதேசித்தார். (எண் 385). ஒருமுறை இராமானுசர் தமக்குத் தஞ்சமாக நினைத்திருக்கும்படி ஒன்றைச் சொல்ல வேண்டும் என்று வேண்டியபோது, ஆளவந்தார் நீராடுவதற்காக ஆற்றில் இறங்கி முழுகும்போது ஆமை மணையைக் கவிழ்த்தாற்போல் தெரிகின்ற அவருடைய திருமுதுகையே தஞ்சமாகத் தாம் நினைத்திருப்பதாகத் திருக்கோட்டியூர் நம்பி அருளிச்செய்தார். (எண் 335). இதிலிருந்து அவருக்குத் தம் ஆசார்யரின் திருமேனியில் உள்ள ஈடுபாடு புலனாகிறது. 'ஜீவாத்மாவின் அந்தரங்க அடையாளம் எது?' என்ற ஐயத்திற்கு விடையாக நம்மாழ்வார் அருளிச்செய்த 'அடியேனுள்ளான்' என்ற பாசுரத்தைத் திருக்கோட்டியூர்நம்பி எடுத்தியம்பியமை மூன்று இடங்களில் (எண் 145, 375, 753) குறிப்பிடப் பெற்றுள்ளது. திருக்கோட்டியூர் நம்பியின் பொருளாட்சி ஓரிடத்தில் (எண் 47) குறிப்பிடப்பெற்றுள்ளது. திருவிருத்தத்தில் 'யாதானும் ஓராக்கையில் புக்கு' என்ற பாசுரம் அவர் மிக மிக விரும்பியிருந்த பாசுரம் என்றும் ஓரிடத்தில் (எண் 377) குறிப்பிடப்பெற்றுள்ளது.

திருமாலையாண்டான்

ஆளவந்தாருடைய சீடர்களுள் ஒருவரான திருமாலையாண்டான் இராமானுசருக்குத் திருவாய்மொழியின் பொருளை உபதேசித்தார். இவருடைய வாழ்க்கையில் நிகழ்ந்த நிகழ்ச்சிகள் எவையும் திவ்யப்பிரபந்த வியாக்கியானங்களில் குறிப்பிடப்பெறவில்லை. ஆளவந்தார் அருளிச்செய்த திருவாய்மொழிப்பொருளை இவர் இராமானுசருக்குக் கூறி வந்தபோது, இராமானுசர் அவ்விடத்திற்கு மிகவும் பொருத்தமான வேறு பொருளைக் கூறியதாகப் பல இடங்களில் குறிப்பிடப்பெற்றுள்ளன. (எண் 437,466, 468 முதலியவை பார்க்க.) அதைத் திருமாலையாண்டான் ஏற்றுக்கொள்ள விரும்பவில்லை என்பது, 'இது விச்வாமித்ர சிருஷ்டி; ஆளவந்தார் அருளிச்செய்யக் கேட்டறியேன்' என்று அவர் கூறியதாக ஓரிடத்தில் (எண் 482) குறிப்பிடப்பெறுவதிலிருந்து அறியலாம். (திருக்கோட்டியூர் நம்பி திருமாலையாண்டானிடம் ஒருமுறை வந்து, இராமானுசர் கூறியபொருள்களைத் தாம் ஆளவந்தாரிடத்தில் கேட்டிருப்பதாகவும், ஆளவந்தார் திருவுள்ளத்தில் உள்ள பொருள் தவிர வேறு பொருள் இராமானுசர் நெஞ்சில் தோன்றாது என்று கூறியதாகவும் குருபரம்பரை நூல் தெரிவிக்கின்றது.) இவ்வுலக வாழ்க்கையில் ஈடுபடுத்தும் உடல் முதலியவை கைவிடத்தக்கவை என்று சாத்திரங்களில் கூறியிருக்கச்

செய்தேயும், ஆளவந்தாருடைய திருவடிகளை அடைவதற்கு உதவுவதால் உடலையும் தாம் விரும்புவதாகத் திருமாலையாண்டான் அருளிச்செய்ததாக ஓரிடத்தில் (எண் 144) குறிப்பிடப் பெற்றுள்ளதிலிருந்து அவருடைய ஆசார்யபக்தியை உணரலாம்.

திருமலை நம்பி

ஆளவந்தாருடைய சீடர்களுள் ஒருவரான திருமலை நம்பி இராமானுசருக்கு ஸ்ரீராமாயணத்தின் உட்பொருள்களை உபதேசித்தார். இவர் இராமானுசருக்கு மாதுலர் (தாய்மாமன்) ஆவார். இவருடைய வாழ்க்கை நிகழ்ச்சிகள் பற்றியும் திவ்வியப்பிரபந்த வியாக்கியானங்களில் அதிகம் இடம்பெறவில்லை. இவருடைய இறுதிக்காலத்தைப் பற்றி இரண்டு செய்திகள் கூறப்பெற்றுள்ளன. இறுதிக்காலத்தில் உடல் மிகவும் தளர்ந்த நிலையில் தமது திருவாராதன எம்பெருமானான வெண்ணெய்க்காடும் பிள்ளையைப் பார்த்து, 'சாயலொடு மணிமாமை தளர்ந்தேன் நான், இனி உனது வாயலகில் இன்னடிசில் வைப்பாரை நாடாயே' என்று அருளிச்செய்தார். (எண் 443 பார்க்க.) இராமானுசருக்கு ஆசார்யரான இவர் கூரத்தாழ்வான் திருக்குமாரரான பட்டரிடத்தில் மிகவும் ஈடுபட்டவர். எனவே தம்முடைய இறுதிக்காலத்தில் பட்டர் மிகவும் விரும்பியிருந்த திருநாமம் எது என்று கேட்டு அறிந்து கொண்டு அத்திருநாமத்தையே கூறித் திருநாட்டிற்கு எழுந்தருளினார். (இதுகுறித்து மாறுபட்ட கருத்துகள் உண்டு. எண் 356 பார்க்க.) இவர் அருளிச்செய்த பொருளாட்சிகள் சில இடங்களில் (எண் 89, 133, 331, 352, 548) குறிப்பிடப்பெற்றுள்ளன. எந்த சொல்லைச் சொன்னாலும் மிக உயர்ந்த சொற்களாலேயே கூறவேண்டும் என்பதற்கு எடுத்துக் காட்டாக, 'பொன்னாலே தோடுபண்ணினால் இடவொண்ணாத காதை உடையராயிருக்குமவரை அறிந்தருளுகை உண்டோ?' என்று திருமலை நம்பி அருளிச்செய்த வார்த்தை ஓரிடத்தில் (எண் 386) குறிப்பிடப்பெற்றுள்ளது. நாச்சியார் திருமொழியில் இரண்டு பாசுரங்களை இவர் மிகவும் விரும்பியிருந்ததாக ஓரிடத்தில் (எண் 138) குறிப்பிடப்பெற்றுள்ளது.

ஆழ்வார் திருவரங்கப்பெருமாள் அரையர்

ஆளவந்தாருடைய சீடர்களுள் ஒருவரான ஆழ்வார் திருவரங்கப்பெருமாள் அரையரிடம் இராமானுசர் திவ்யப்பிரபந்தங்களும் நல்வார்த்தைகளும் கற்றார். இவர் திருவரங்கன் திருமுன்பே திவ்யப்பிரபந்தங்களைப் பாடும் அரையர் குலத்தில் தோன்றியவராய், இசையிலும் வல்லவராய்த் திகழ்ந்தார். எனவே 'பாலேய் தமிழர் இசைகாரர் பத்தர் பரவும் ஆயிரம்' என்று நம்மாழ்வார் அருளிச்செய்துள்ள பாசுரத்தில் இசைகாரர் என்பது திருவரங்கப்பெருமாள் அரையரைக் குறிக்கும் என்று கூரத்தாழ்வான் அருளிச்செய்வராம் (எண் 446). 'வாலிமாவலத்து' என்று தொடங்கும் பெரியதிருமொழிப் பதிகத்தை என்னோடு பாடமுடியுமானால் பாட வாருங்கள் என்று அறைகூவல் விடுக்குமளவுக்குத் தம்முடைய இசைத் திறமையில் அரையர் நம்பிக்கை கொண்டிருந்தார்

(எண் 206). இவர் எம்பெருமான் திருமுன்பே அரையர் சேவை செய்யும்போது இராமானுசர் எழுந்தருளியிருந்து, இவருக்கு அபிநயங்களில் சில யோசனைகளைக் கூறியிருக்கிறார் (எண் 604, 636). எம்பெருமான் திருமுன்பே பாசுரங்களைப் பாடும்போது அப்பாசுரங்களின் கருத்தில் மிகவும் ஈடுபட்டுவிடுவார். 'ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி வழுவிலா அடிமை செய்ய வேண்டும் நாம்' என்ற நம்மாழ்வார் பாசுரத்தை எம்பெருமான் திருமுன்பே பாடும்போது 'ஒழிவில் காலமெல்லாம், காலமெல்லாம், காலமெல்லாம் . . . ' என்று நாள்முழுவதும் கண்ணீருடன் அதையே பாடிக்கொண்டிருப்பராம் (எண் 53, 504). வெளியூரிலிருந்து திருவரங்கத்திற்கு வருபவர்களைத் திருவரங்கனிடம் அழைத்துச் சென்று சேவை செய்து வைப்பதும் உண்டு. ஒருமுறை வடதேசத்திலிருந்து மிக நன்றாகப் பாடக் கூடிய ஒருவர் திருவரங்கம் வந்தபோது, அவரை அழைத்துக் கொண்டு நம்பெருமாளிடம் சென்று, 'வெகு தூரத்திலிருந்து வந்திருக்கின்ற இவரை கௌரவிக்கவேண்டும்' என்று வேண்டிக்கொண்டதாகவும், அதன்படியே நம்பெருமாள் அவருக்காகத் தம்முடைய நடையழகைக் காட்டியதாகவும் இரண்டு இடங்களில் (எண் 634, 688) குறிப்பிடப் பெற்றுள்ளது. எம்பெருமானை வற்புறுத்தி வேண்டிக்கொண்டு அவனுடைய திருவுள்ளத்தைப் புண்படுத்தக்கூடாது என்ற எண்ணமுடையவராக இவர் இருந்தார். ஒருமுறை பிள்ளை தேவப்பெருமாள் அரையர், எம்பெருமான் திருமுன்பே நம்மாழ்வார் அருளிச்செய்த 'தொண்டரோர்க்கருளிச் சோதிவாய் திறந்து உன் தாமரைக் கண்களால் நோக்காய்' என்ற பாசுரத்தைப் பாடும்போது, 'நோக்காய், நோக்காய், நோக்காய்' என்று எம்பெருமானிடமிருந்து எதையோ எதிர்பார்ப்பவர்போல இதையே சொல்லிக் கொண்டு நின்றபோது, திருவரங்கப்பெருமாள் அரையர், "பிள்ளாய்! எதற்காக நீ அவன் திருவுள்ளம் புண்படும்படியாகப் பலமுறை நோக்காய் நோக்காய் என்கிறாய்? அவன் உனக்கு என்ன குறை வைத்திருக்கிறான்? உனக்கு அழகிய குரலைத் தந்து, அருளிச்செயலிலும் உன்னை வல்லவனாக்கி, பிள்ளைகளையும் கைங்கர்யச் செல்வத்தையும் தந்து இவ்வளவும் செய்திருக்கிறபோது, அவன் உனக்கு என்ன செய்யவில்லை என்று நினைத்து நீ இப்படிப் படுகிறாய்?" என்று அருளிச்செய்தாராம் (எண் 766). இவருடைய இறுதிக்காலத்திலும் திருவரங்கத்தைப் பற்றிய நினைவுடனே எழுந்தருளியிருந்தார். இவருடைய இறுதிக்காலத்தில் இவரைக் காணவந்த இராமானுசர், "இப்போது திருவுள்ளத்தில் ஓடுகின்ற நினைவு எதைப்பற்றியது?" என்று வினவ, "எம்பெருமானுக்கு எத்தனையோ திருநாமங்கள் இருந்தாலும், 'திருவரங்கம்' என்ற நாலைந்து எழுத்துக்கள் சேர்ந்திருக்கிறபடிதான் என்னே! என்று நினைத்துக் கொண்டிருக்கிறேன்" என்றாராம். இதைக் கேட்டு வியந்த இராமானுசர் அரையர் விரும்பிய திருநாமம் என்று தாமும் திருவரங்கம் என்ற திருநாமத்தையே விரும்பியிருந்தாராம். ஆழ்வார் திருவரங்கப்பெருமாள் அரையருடைய பொருளாட்சிகள் எவையும் திவ்வியப்பிரபந்தத்தில் குறிப்பிடப் பெறவில்லை.

ஆளவந்தாரின் சீடர்கள் பிறர்

ஆளவந்தாருடைய சீடர்கள் பிறரைப் பற்றிய செய்திகள் வியாக்கியானங்களில் அதிகம் இடம்பெறவில்லை. ஆளவந்தாருடைய சீடர்களுள் ஒருவரான திருக்கச்சி நம்பிகளுக்கு தேவப்பெருமாள் கஜேந்த்ரதாஸர் என்ற திருநாமத்தை வழங்கினார் என்ற செய்தி ஓரிடத்திலும் (எண் 27), பெரிய நம்பி ஒருமுறை பெருமாள் கோயிலுக்கு எழுந்தருளியபோது தேவப்பெருமாள் திருநாள் நெருங்கிவிட்டதாகையால் அதையும் சேவித்துவிட்டுத் திருவரங்கம் திரும்பலாமே என்று திருக்கச்சிநம்பி அவரிடம் கூறிய செய்தி ஓரிடத்திலும் (எண் 333) குறிப்பிடப் பெற்றுள்ளது. ஆளவந்தாருடைய மற்றொரு சீடரான மாறநேர் நம்பி அந்திம காலத்தில் நோயினால் துன்பப்பட்டமை ஓரிடத்திலும் (எண் 108), அவருக்குப் பெரியநம்பி அந்திமக்ரியை செய்தமை ஓரிடத்திலும் (எண் 263) குறிப்பிடப்பெற்றுள்ளது. எதைப் பார்த்தாலும் எம்பெருமானுடைய தோற்றமே புலப்படுவதால் எம்பெருமானை மறப்பதற்கே வழியில்லை என்று மாறநேர் நம்பி கூறிய வார்த்தை ஒன்றும் ஓரிடத்தில் (எண் 313) எடுத்துக் காட்டப்பெறுகிறது.

எம்பெருமானார்

இராமானுசர், உடையவர், ஸ்ரீபாஷ்யகாரர் என்று பல திருப்பெயர்களால் வழங்கப் பெறும் எம்பெருமானாரைப் பற்றி குருபரம்பரை நூல்களில் மிக விரிவாகக் கூறப்பெற்றுள்ள இளமைக்கால நிகழ்ச்சிகள் திவ்வியப்பிரந்த வியாக்கியானங்களில் அதிகமாகக் குறிப்பிடப்பெறவில்லை என்றாலும், எம்பெருமானாரைக் கடாக்ஷிப்பதற்காகவே காஞ்சீபுரத்திற்கு எழுந்தருளிய ஆளவந்தார், கரியமாணிக்காழ்வார் ஸன்னிதியிலிருந்துகொண்டு அவரை 'ஆமுதல்வனிவன்' என்று கடாக்ஷித்த செய்தியும் (எண் 734), இராமானுசர் காஞ்சீபுரத்தில் தேவப்பெருமாளுக்கு (சாலைக்கிணற்றிலிருந்து) தீர்த்தம் ஸமர்ப்பித்து வந்த செய்தியும் (எண் 275) குறிப்பிடப்பெற்றுள்ளன. திருக்கோட்டியூர் நம்பியிடம் தாம் கேட்ட சரமச்லோக அர்த்தங்களைத் தம்மிடம் வந்து ஆசையுடன் கேட்டவர்களுக்கு அவர் வெளியிட்ட செய்தியும் ஓரிடத்தில் (எண் 741) குறிப்பிடப்பெற்றுள்ளது. 'செவிதாழ்த்தார்க்கெல்லாம் வார்த்தை சொல்லிப் போந்தார் உடையவர்' என்றும் (எண் 297), 'ருசியுடையார் என்று தோற்றின அளவிலே சொல்லுவர் எம்பெருமானார்' என்றும் (எண் 397) பல இடங்களில் இந்நிகழ்ச்சி குறிப்பிடப்பெறுகிறது.

திருக்கோட்டியூர் நம்பியிடமிருந்து ரஹஸ்யார்த்தங்களைப் பெறுவதற்காக முதன்முறையாகத் திருக்கோட்டியூருக்கு இராமானுசர் எழுந்தருளியபோது, திருக்கோட்டியூர் நம்பியின் திருமாளிகை எது என்று அவ்வூரில் உள்ளவர்களைக் கேட்டுத் தெரிந்து கொண்டு, அந்தத் திக்குநோக்கி தண்டனிட்டார் என்றும் (எண் 145), ஒவ்வொரு முறை திருக்கோட்டியூர் நம்பி திருவரங்கம் வந்து திரும்பிச் செல்லும்போதும் அவரை மாராச்சிப்புரம் வரை பின்தொடர்ந்து சென்று வழியனுப்புவதை வழக்கமாகக்

கொண்டிருந்தார் என்றும் (எண் 335) குறிப்பிடப் பெறுவதிலிருந்து திருக்கோட்டியூர் நம்பிபால் எம்பெருமானாருக்கு இருந்த மதிப்பும் மரியாதையும் புலனாகிறது.

திருமாலை ஆண்டானிடம் திருவாய்மொழியின் பொருள் கேட்டுவருகின்றபோது, ஆளவந்தார் அருளிச்செய்த பொருள் சிலவற்றைத் திருமாலையாண்டான் கூற, எம்பெருமானார் அதனினும் சிறந்தபொருள் ஒன்றைக்கூறி, 'இப்படிக் கொள்ளலாமே!' என்று கூறுவார். திருவாய்மொழி வியாக்கியானத்தில் பல இடங்களில் இது குறிப்பிடப் பெற்றுள்ளது. (எண்கள் 420, 437, 466, 468, 474, 472, 482, 490, 491, 508, 592, 593, 597, 633, 644, 708, 732, 751, 757, 777, 780, 790 முதலியவை பார்க்க.)

மாறநேர் நம்பியின் இறுதிக் காலத்தில் அவர் பட்ட துன்பங்களை நினைத்துக் கலங்கிய பெரிய நம்பிக்கு, அவருடைய கலக்கம் தீரும்படியான வார்த்தைகளை எம்பெருமானார் அருளிச்செய்துள்ளார் (எண் 108).

ஆண்டாள் அருளிச்செய்த திருப்பாவையில் மிக மிக ஈடுபாடு உடையவர் எம்பெருமானார். அதனால் அவருக்குத் திருப்பாவை ஜீயர் என்றே ஒரு சிறப்புப் பெயரும் உண்டு. ஒருமுறை திருப்பாவைக்குப் பொருள் அருளிச்செய்யவேண்டும் என்று எம்பெருமானாரைக் கேட்டபோது, 'திருப்பல்லாண்டுக்கு ஆள்கிடைத்தாலும், திருப்பாவைக்கு ஆள் கிடையாது; ஆண்டாளே சொல்லி ஆண்டாளே கேட்கவேண்டும். அவளுடைய மனப்பாங்கு இல்லாதவர்கள் திருப்பாவையைச் சொல்வதற்கோ கேட்பதற்கோ தகுதி உடையவர்கள் அல்லர்' என்று அருளிச்செய்தார் (எண் 50). திருப்பாவையில் 'உந்து மதகளிற்றன்' என்கின்ற பாசுரத்தில் எம்பெருமானார் மிகவும் ஈடுபட்டவராவார் (எண் 96). ஆண்டாள் திருமாலிருஞ்சோலை அழகருக்கு நூறுதடா வெண்ணெயும், நூறுதடா அக்கார அடிசிலும் வாயால் நேர்ந்து கொண்டதை நினைத்த எம்பெருமானார், 'ஆண்டாள் வாயால் நேர்ந்து கொண்டதைச் செயலில் செய்ததாகத் தெரியவில்லை. எனினும் அவளுடைய பிரார்த்தனையை நிறைவேற்றுவது அவளுடைய குலத்தில் பிறந்தவர்க்குக் கடமை' என்று, தாம் நூறுதடா வெண்ணெயும், அக்காரவடிசிலும் அமுதுசெய்வித்தமை ஓரிடத்தில் (எண் 128) குறிப்பிடப்பெற்றுள்ளது. இதனால் அவருக்குக் கோயிலண்ணன் என்ற திருநாமம் ஏற்பட்டது பற்றியும் மற்றோரிடத்தில் (எண் 84) குறிப்பிடப்பெற்றுள்ளது.

சோழ நாட்டை அக்காலத்தில் ஆண்டுவந்த அரசனிடமிருந்து தப்புவதற்காக இராமானுசர் காவியைக் களைந்து, வெள்ளை வஸ்த்ரம் அணிந்து மேல்நாட்டிற்கு எழுந்தருளியதாக குருபரம்பரை நூல் கூறுகிறது. எம்பெருமானார் வெள்ளை வஸ்த்ரம் அணிந்தமை பற்றி எண் 195ல் குறிப்பிடப்பெற்றுள்ளது.

எம்பெருமானாரைப் பற்றி குருபரம்பரை நூல்களில் கூறப்படாத பல செய்திகள் திவ்வியப்பிரபந்த வியாக்கியானங்களில் குறிப்பிடப்பெற்றுள்ளன. சிலவற்றைக் காண்போம்.

எம்பெருமானார் ஆழ்வார்களுடைய பாசுரங்களில் மிகமிக ஈடுபட்டிருப்பார். அவர் பகலெல்லாம் ஸ்ரீபாஷ்யத்திலேயே ஈடுபட்டவராக இருப்பார். இரவு பாலமுது செய்தபிறகு பள்ளிக்கட்டிலிலே ஏறியருளினால் (வடுகநம்பியை) சந்தை சொல்லிக்கொள்ள வாராயோ என்று அழைப்பராம். முதல் சந்தை சொல்லிக்கொடுக்கும்போதே பாசுரத்தில் மிகவும் ஈடுபட்டு புளகிதராக ஆவர். இரண்டாம் முறை சொல்லும்போது நெஞ்சு உடைகுலைப் பட்டு சிதிலராக ஆகிவிடுவர். ஏதேனும் பாசுரத்தின் பொருளை நினைத்து ஈடுபட்டு விட்டாரானால் பல உத்தரீயங்கள் கொண்டு துடைக்குமளவுக்கு எம்பெருமானாருக்குக் கண்ணீர் வெள்ளம் பெருகுமாம் (எண் 381).

எம்பெருமானுடைய விபவாதாரங்களிலும் அர்ச்சாவதாரங்களிலும் எம்பெருமானார் மிகமிக ஈடுபட்டிருப்பர். இராமபிரான் மாயமானை வதம் செய்துவிட்டு மீண்டு எழுந்தருளுகிறபோது அடிக்கொதித்து நடக்கமாட்டாமல் தளிர்களை இட்டு அதன்மீது எழுந்தருளினார் என்று ஒருவன் கவிபாட, அதைக் கேட்ட எம்பெருமானார், ''மாறியிடுகிற திருவடிகளின்கீழே அத்தளிர்களுக்கு பதிலாக என்னுடைய தலையை வைக்கப் பெற்றிலேனே!'' என்று கூறினாராம் (எண் 395).

திருவரங்கத்தில் எம்பெருமானுக்கு கறியமுது நெய்யமுது முதலியவை இன்ன அளவு இருக்க வேண்டும் என்று கணக்கிட்டு வைத்து, திருக்கோயில் கைங்கர்யபரர்களிடம் 'அவற்றை எம்பெருமான் அமுது செய்வதற்கு முன்னேயும், அமுது செய்த பிறகும் என்னிடம் காட்டிச் செல்லுங்கள்' என்று கூறியிருந்தார். அவர்களும் அவர் எதற்காக அப்படிச் சொல்லுகிறார் என்று அறிந்துகொள்ளாமலே அப்படியே செய்து வந்தார்கள். இவ்வாறாக ஆறு மாதம் சென்றபிறகு ஒருநாள் எம்பெருமான் அமுது செய்த பிறகு வந்த பிரசாதத்தைக் கண்ட எம்பெருமானார், 'எம்பெருமானே! ஒரே ஒருநாளாவது இந்த பிரசாதத்தை அமுது செய்ததற்கு அடையாளம் இதில் தெரியும்படி குறியழித்து வைத்திடக் கூடாதோ?' என்று அருளிச்செய்தாராம் (எண் 382). எம்பெருமானாருடைய திருவாராதனப் பெருமாள் (வெண்ணெய்க்காடும்) பிள்ளை என்று ஓரிடத்தில் (எண் 527) குறிப்பிடப் பெற்றுள்ளது.

ஆழ்வார்களுடைய பாசுரங்களைப் பற்றி எம்பெருமானாரிடம் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பற்பல உதாரணங்களைக் காட்டி மிகவும் எளிமையாகப் புரியும் வகையில் பதில் கூறியுள்ளார். 'சீற்றத்தோடு அருள் பெற்றவன் அடிக்கீழ்ப் புக நின்ற செங்கண்மால்' என்று நம்மாழ்வார் அருளிச்செய்துள்ளார். ''இரணியன் மீது கோபம்கொண்டிருந்த அதே சமயத்தில் பிரகலாதன் எம்பெருமானை நெருங்கும்படி இருந்தது எப்படி?'' என்று கேட்க, அதற்கு எம்பெருமானர், ''சிங்கம் யானைமீது சீறுகின்ற அதே சமயத்தில் தன் குட்டிக்குப் பால் கொடுத்துக் கொண்டிருக்குமன்றோ?'' என்று விடை அளித்தார். (எண் 524)

'என்னால் தன்னை இன்கவி பாடிய ஈசன்' என்று நம்மாழ்வார் அருளிச்செய்துள்ள பாசுரத்தை எம்பெருமானார் மிகவும் சுவையாக உதாரணத்துடன் விளக்கியுள்ளார். 'ஒரு

குழந்தை தானே எழுதப்புக்கால் ஒருவாறு எழுதும். தந்தையோ ஆசிரியரோ எழுதினால் நன்றாகவே எழுதிவிடுவர். ஆனால் தந்தை குழந்தையின் கையைப் பிடித்துக் கொண்டு எழுதுவித்தால், குழந்தை ஒருபக்கம் இழுக்க, தந்தை ஒருபக்கம் இழுக்க, எழுதுவது எழுத்தாகவே இருக்காது. ஆனால் எம்பெருமான் தன்னைக் கொண்டு கவிபாடுவித்துக் கொள்ளச் செய்தேயும், தன்னால் வரும் குற்றம் எதுவும் தன்பக்கல் தீண்டாதபடி அழகுறப் பாடுவித்தான் என்கிறார் ஆழ்வார்' என்று எம்பெருமானார் விளக்கியுள்ளார் (எண் 732).

ஒருசமயம் திருவரங்கத்தில் நம்பெருமாள் திருப்புன்னை மரத்தடியில் எழுந்தருளியிருந்தபோது சற்று தூரத்தில் எம்பெருமானாரும் எழுந்தருளியிருந்தார். அங்கே நம்பெருமாளை ஸேவிக்க வந்தவர்கள் எம்பெருமானாரையும் தண்டனிட்டு வணங்கினார்கள். இதைக் கண்ட (அரசாங்க அதிகாரியான) சுப்ரமண்யபட்டர் என்பவர் 'பெருமாள் எழுந்தருளியிருக்கும்போது உம்மை வணங்கலாமோ?' என்று கேட்டார். அதற்கு எம்பெருமானார் அந்த அதிகாரி நாள்தோறும் பார்க்கின்ற ஒரு நிகழ்ச்சியையே உதாரணமாகக் காட்டி விடையிறுத்தார். அதாவது அரசனைக் காணவருகின்ற குடிமக்கள் அரசனுடைய பாதுகைகளைத் தலைமீது வைத்துக் கொள்வதுபோல, எம்பெருமானை ஸேவிக்க வருபவர்கள் எம்பெருமானுடைய (பாதுகை போன்ற) அடியவர்களான தங்களையும் வணங்குகிறார்கள் என்பது எம்பெருமானார் அளித்த விடையாகும். (இது குறித்து விரிவாக எண் 365ல் காண்க.)

ஆழ்வார்களுடைய பாசுரங்களில் மிகவும் ஈடுபாடு உடையவரான எம்பெருமானார் அரையர் சேவைகள் நடைபெறும்போது அரையர்கள் செய்யும் அபிநயங்களையும் கூர்ந்து கவனித்து, பல இடங்களில் திருத்தங்களும் காட்டியிருக்கிறார். ஒருமுறை வாசுதேவன் வலையில் தாம் அகப்பட்டதாக நம்மாழ்வார் அருளிச்செய்துள்ள பாசுரத்திற்கு அபிநயம் செய்த ஆழ்வார் திருவரங்கப்பெருமாள் அரையர், 'வலை' என்பதற்கு கைகளால் வலைபோல் அபிநயம் செய்து காட்டினார். இதைக் கண்ட எம்பெருமானார், எம்பெருமான் தன்னுடைய திருக்கண் நோக்கத்தினாலேயே ஆழ்வாரை வசப்படுத்தியமையால், ஆழ்வார் வலை என்றது எம்பெருமானுடைய திருக்கண்களையே என்பதைத் தெரிவிக்கும் வகையில் வலை என்று திருக்கண்களைக் காட்டியருளினார் (எண்604). ஒருமுறை அரையர் 'நின்றவாறும் இருந்தவாறும் கிடந்தவாறும்' என்று பாடியபோது எம்பெருமானார், 'இவையெல்லாம் கண்ணபிரான் தொட்டிலிலே செய்தவை' என்றாராம் (எண் 636).

ஸ்ரீவைஷ்ணவர்களை உபசரிப்பதிலும் எம்பெருமானார் மிகவும் கவனம் உடையவராகத் திகழ்ந்தார். ஒருமுறை எம்பெருமானாருடைய மடத்தில் ஸ்ரீவைஷ்ணவர்களுக்குத் ததீயாராதனம் நடந்து கொண்டிருந்தபோது தண்ணீர் பரிமாறிக் கொண்டிருந்த கிடாம்பியாச்சான், ஒருவருக்கு நேரே நின்று பரிமாறாமல், ஒருபக்கமாக நின்று பரிமாற, இதைக்கண்டு எம்பெருமானார் ஓடிவந்து கிடாம்பியாச்சான் முதுகில்

அமறைந்து 'நேரே நின்றன்றோ பரிமாறவேண்டும்! இப்படிப் பரிமாறினால் தண்ணீர் குடிப்பவருக்குப் புரைக்கேறுமே!' என்று கடிந்து கொண்டாராம் (எண் 575).

மிகவும் எளியவர்களிடமும் எம்பெருமானார் அன்புடன் பழகுவார். ஸ்ரீவைஷ்ணவ வண்ணாத்தான் திருவரங்கப்பெருமாளுடைய வஸ்திரங்களை மிகவும் நன்றாகத் துவைத்து வெளுத்துக் கொண்டு வந்து எம்பெருமானாரிடம் காட்ட, மிகவும் மகிழ்ச்சியடைந்த எம்பெருமானார் அவ்வண்ணானின் கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு பெருமாள் ஸன்னிதிக்கு எழுந்தருளி அவனை அனுக்ரஹிக்க வேண்டும் என்று எம்பெருமானிடம் வேண்டினார். (எண் 549, 635 பார்க்க.)

ஸ்ரீரங்கத்தில் மணலிலே விளையாடுகின்ற சிறு பிள்ளைகள் சிலர், கோயிலில் நடக்கின்ற நிகழ்ச்சியை அப்படியே பின்பற்றி விளையாடிக் கொண்டிருந்தனர். மணலிலேயே பெருமாள், நாச்சிமார், மண்டபம் இவைகளைச் சமைத்து, பிறகு சிறிது மணலையே எடுத்துப் பெருமாளுக்கு அமுது செய்யும் பிரசாதமாகவும் வைத்தனர். பிறகு கோயிலில் அழைப்பது போலவே "எம்பெருமானார்! பிரசாதத்தைப் பெற்றுக் கொள்ளும்" என்று கூறி அச்சிறுவர்கள் மணலை முகந்து எடுக்க, தற்செயலாக அப்போது பிக்ஷைக்காக எழுந்தருளிக் கொண்டிருந்த எம்பெருமானார் அதைக் கேட்டு, உண்மையாகவே அங்கே பெருமாள் எழுந்தருளியிருப்பதாகவும், அந்த மணலை உண்மையாகவே பிரசாதமாகவும் கொண்டு, கீழே விழுந்து வணங்கி, அந்தப் பிரசாதத்தை (மணலை)த் தம்முடைய பிக்ஷைப் பாத்திரத்தில் ஏற்றுக் கொண்டருளினார் (எண் 318).

எம்பெருமானாருடைய சீடரான வங்கிப்புரத்து நம்பி, திருவாராதனம் செய்யும் முறை பற்றி அருளிச்செய்ய வேண்டும் என்று எம்பெருமானாரைப் பலமுறை வேண்டிக் கொண்டிருந்தார். ஆயினும் நேரம் வாய்க்காமையினால் அது நிறைவேறாமலே இருந்தது. ஒருசமயம் திருமலையில் எழுந்தருளியிருந்தபோது ஆழ்வானுக்கும் மற்றொருவர்க்கும் திருவாராதனம் செய்யும் முறை பற்றி விளக்கிக் கூறநேர்ந்துவிட்டது. அது முடிகிற தறுவாயில் வங்கிப்புரத்து நம்பி அங்கே வந்தார். அவரைக் கண்டவுடன் எம்பெருமானாருடைய திருவுள்ளம் துணுக்கென்று அஞ்சியது. 'இவர் பலமுறை நம்மைக் கேட்டும் இவருக்கு நாம் கூறாமலே இருந்து விட்டோம். இன்று இவ்விருவர்க்கு உபதேசம் செய்தபோதாவது இவரையும் கூட்டிக் கொண்டிருக்கலாம்; அதுவும் செய்யப் பெற்றிலோம்; இப்படி இருவகைக் குற்றங்களுக்கு ஆளானோமே?' என்று வருந்தினார். உடனே வங்கிப்புரத்து நம்பியைப் பார்த்து "எனக்கு நெடுநாள்களாக இருந்த ஐயம் ஒன்று இன்று நீங்கியது. எம்பெருமானும் மற்றவர்களுக்கு அஞ்சி, கட்டுண்டு, அடியுண்டு அழுது ஏங்கினான் என்று கூறப்படுகிறதே! எல்லோரையும் ஆளுபவனான பரம்பொருள், தன்னாலே ஆளப்படும் சிலரிடத்திலே அஞ்சினான் என்றால் இது பொருந்துமோ என்ற ஐயம் இதுநாள்வரை எனக்கிருந்தது. இப்போது நான் உம்மிடத்திலே அஞ்சி

வருந்தினேனாகையால், அது நடந்திருக்கக் கூடியதே என்று என் ஐயம் தெளியப் பெற்றேன்'' என்று எம்பெருமானார் அருளிச் செய்தார் (எண் 255).

ஒரு அயன புண்ய காலம் பிறந்தவன்று குன்றத்து சீயர் என்பவர் எம்பெருமானார் திருவடிகளில் தண்டம் ஸமர்ப்பிக்க, "இன்று அயனம் காண்'' என்று கூறினார் எம்பெருமானார். எக்கருத்தைத் திருவுள்ளத்திலே கொண்டு எம்பெருமானார் இப்படி அருளிச் செய்தார் என்பதை அறியாமையால் திகைத்த குன்றத்து சீயர் பேசாமல் இருந்தார். இதையுணர்ந்த எம்பெருமானார் "இவ்வுடலை விட்டு உயிர் நீங்கியவுடன் நமக்குப் பேறு கிட்டுவது நிச்சயம் என்றானவுடன், அப்படிப் பேற்றை அடைவதற்கு இடையூறாக உள்ள காலத்திலே ஒரு ஆண்டு கழியப் பெற்றது உனக்கு ஒரு பேறாகத் தோன்றவில்லையோ!'' என்றருளிச் செய்தார் (எண் 425).

எம்பெருமானார் திருவரங்கத்தில் எழுந்தருளியிருந்த காலத்தில் ஏதோ காரணத்தால் மனவெறுப்பு உண்டாகித் திருமலைக்கு எழுந்தருள எண்ணினார். அப்போது ஸ்ரீவைஷ்ணவர் ஒருவருக்குச் சிறிது நெல் கொடுக்க விரும்பினார். தமது கையில் இருந்த திருப்பவித்திரத்தை அந்த ஸ்ரீவைஷ்ணவரிடம் கொடுத்து அதைப் பிள்ளை உறங்காவில்லி தாஸரிடம் அடையாளமாகக் காட்டி நெல்லைப் பெற்றுக்கொள்ளும்படி கூறினார் என்று ஓரித்தில் (எண் 334) குறிப்பிடப்பெற்றுள்ளது. இது எம்பெருமானாருடைய நிர்வாக முறையை எடுத்துக் காட்டுகிறது.

எம்பெருமானார் அருளிச்செய்த சுவையான பொருளாட்சிகள் பல இடங்களில் குறிப்பிடப் பெற்றுள்ளன. 'சுற்றம் எல்லாம் பின்தொடரத் தொல்கானம் அடைந்தவனே' என்று இராமபிரானைப் பற்றிப் குலசேகராழ்வார் அருளிச்செய்துள்ளார். சுற்றத்தார் அனைவரும் இராமபிரானுடன் வனத்திற்குச் செல்லவில்லையே என்ற கேள்வி எழ, சுற்றத்தார் அனைவரும் செய்ய வேண்டிய அடிமைகள் அனைத்தையும் செய்பவனாக இலக்குமணன் ஒருவனே சென்றபடியால், சுற்றத்தார் அனைவரும் பின்தொடர்ந்ததாகக் கூறுவதில் தவறு ஏதும் இல்லை என்று விடை அளித்தார் (எண் 166). 'துயரறு சுடரடி' என்ற நம்மாழ்வார் அருளிச்செயலுக்கு, 'அடியவர்களுடைய துயரங்களை அறுக்கும் சுடரடி' என்று முன்புள்ள ஆசார்யர்கள் பொருளுரைத்தனர். ஆனால் எம்பெருமானார், 'அடியவர்களுடைய துன்பங்களைப் போக்குவதால், தான் (எம்பெருமான்) தன் துயர் அற, அதனால் சுடர்மிகும் திருவடி' என்று சுவைமிகு பொருள் உரைத்தார் (எண் 416). இதுபோல் எம்பெருமானார் அருளிய சுவைமிகு பொருள்கள் வியாக்கியானங்களில் பல இடங்களில் குறிப்பிடப்பெற்றுள்ளன. (எண்கள் 235, 281, 338 முதலியவை பார்க்க.)

எம்பெருமானாரைப் பற்றி திவ்விப்பிரபந்த வியாக்கியானங்களில் குறிப்பிடும் இடங்களிலெல்லாம் மிக மிக உயர்வாகக் குறிப்பிட்டுள்ளனர். 'அருங்கலம்' என்ற திருப்பாவைப் பகுதிக்கு உரையிடும்போது 'எம்பெருமானாரைப் போன்ற அருங்கலம்'

என்றும் (எண் 85), 'அனைத்தில்லத்தாரும் அறிந்து' என்ற திருப்பாவைப் பகுதிக்கு உரையிடும்போது 'எம்பெருமானார் திருவவதரித்தாற்போலே காணும் இப்பெண்பிள்ளையும்' என்றும் (எண் 87) குறிப்பிடப்பெற்றுள்ளது காணலாம். ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயமே எம்பெருமானார் தர்சனம் என்றே வழங்கப்படுவதாகவும் ஓரிடத்தில் குறிப்பிடப்பெற்றுள்ளது. 'மிகவும் மதிப்புள்ள ரத்தினத்தை நடுவே இட்டுக் கோத்தால் முன்னும் பின்னும் உள்ள கற்களும் மதிப்படைவதுபோல, ஸ்ரீராமானுஜர் ஸ்ரீவைஷ்ணவஸம்ப்ரதாயத்தின் நடுநாயகமாக அமைந்துள்ளதால் அவருக்கு முன்பும் பின்பும் உள்ள ஆசார்யர்கள் பொலிவு பெற்றனர்' என்று பிள்ளான் அருளிச்செய்வராம் (எண் 224). இவற்றை அடியொற்றியே 'எம்பெருமானார் தரிசனமென்றே இதற்கு நம்பெருமாள் பேரிட்டு நாட்டிவைத்தார்' (உபதேசரத்தினமாலை 38) என்று மணவாளமாமுனிகளும், 'யதிராஜேந நிபத்த நாயகஸ்ரீ:' (யதிராஜஸப்ததி 15) என்று வேதாந்ததேசிகரும் அருளிச்செய்தனர் எனலாம். எம்பெருமானார் நூற்றிருபது ஆண்டுகள் இவ்வுலகில் எழுந்தருளியிருந்தார். "எம்பெருமானாரைப் போலே நூறாண்டு ஸ்ரீவைஷ்ணவஸ்ரீயோடே இருந்து" என்று (ஈடு 5–1–11ல்) நம்பிள்ளையும், "பூமியிலே எம்பெருமானார் எழுந்தருளியிருந்த காலம் குறைவற்ற ஸ்ரீவைஷ்ணவஸ்ரீயோடே இருந்தது" என்று பெரியவாச்சான்பிள்ளையும் (எண் 551ன் அடிக்குறிப்பு காண்க) குறிப்பிட்டுள்ளவற்றிலிருந்து எம்பெருமானாருடைய பெருமையை நன்கு அறியலாம்.

எம்பார்

எம்பெருமானாருடைய சீடர்களில் ஒருவரான எம்பார் எம்பெருமானாருடைய சிறியதாயார் குமாரர் ஆவார். யாதவப்ரகாசர் எம்பெருமானாரை கங்கையில் தள்ளி மாய்த்துவிட நினைத்தபோது, எம்பாரே எம்பெருமானாரைக் காத்தார். சிலகாலம் சைவராக இருந்த அவர், எம்பெருமானாரின் வேண்டுகோளுக்கிணங்கிய திருமலை நம்பியால் திருத்திப் பணிகொள்ளப்பெற்றார். கோவிந்தப்பெருமாள் என்ற இயற்பெயருடைய அவருக்கு எம்பெருமானார் என்ற பெயரையே சுருக்கி எம்பார் என்ற பெயரை இட்டார். எப்பாரைப் பற்றிய இச்செய்திகள் குருபரம்பரை நூலில் கூறப்பெற்றுள்ளன. அந்நூலில் கூறப்படாத பல செய்திகள் திவ்வியப்பிரபந்த வியாக்கியானங்களில் இடம்பெற்றுள்ளன.

எம்பார் வடிவில் மிகவும் சிறியவராக இருப்பார். 'சிறுவண்டே' என்ற திருமங்கையாழ்வார் பாசுரப்பகுதிக்கு உரையிடும்போது, 'எம்பார் திருமேனிபோலே வடிவு சிறுத்து' என்று (எண் 229) குறிப்பிடப்பெற்றுள்ளதிலிருந்து இதை உணரலாம். 'சிறுமாமனிசர்' என்பதற்கு விளக்கம் உரைக்கும்போதும் எம்பாரையும் எடுத்துக்காட்டாக ஆழ்வான் அருளிச்செய்துள்ளார். (எண் 760).

எம்பார் திருமணம் நடந்தவன்றே இல்வாழ்க்கையைத் துறந்து துறவறம் மேற்கொண்டுவிட்டார். எனவே பகவானைப் பற்றி விஷயங்களைத் தவிர, இவ்வுலக

விஷயங்கள் ஒன்றும் அறியாதவராக இருப்பார். "பெண்களுடைய தனிப்பட்ட அடையாளங்கள் எவை?" என்று அவர் சிங்கப்பிரான் என்பவரைக் கேட்டாராம். ஆனால் அவரே நம்மாழ்வார் நாயகி நிலையில் எம்பெருமானுடன் ஊடல் கொண்டு அருளிச்செய்த 'மின்னிடை மடவார்' என்று தொடங்கும் திருவாய்மொழியை விளக்கும்போது சிருங்காரம் ததும்பும்படியாக விளக்கியருளுவார் (எண் 649).

திவ்வியப்பிரபந்தப் பாசுரங்களுக்குப் பொருள் உரைப்பதில் எம்பார் மிகவும் வல்லவராவார். ஆயினும் அவற்றைத் தாம் உரைப்பது தம்முடைய ஆசார்யரான எம்பெருமானாருடைய திருவருளாலேயே என்று கூறியுள்ளார் (எண் 49). மேலும் தமது ஆசார்யரான எம்பெருமானாருடைய திருவுள்ளத்தில் ஓடுகின்ற நினைவு என்ன என்பதை நன்கு அறிந்தவர் எம்பார். ஒருமுறை எம்பெருமானார் தமது மனத்திற்குள் திருவாய்மொழியை அநுஸந்தித்துக் கொண்டு உலாவிக்கொண்டிருக்கையில், திடீரென்று திரும்பினார். அதைப் பார்த்துக் கொண்டிருந்த எம்பார், 'திருமாலிருஞ்சோலைப் பாசுரம் திருவுள்ளத்தில் ஓடுகிறதோ?' என்றாராம். 'மடித்தேன்' (=திரும்பினேன்) என்ற ஆழ்வார் அருளிச்செயலை எம்பெருமானார் அநுஸந்தித்போது அதன் பொருளில் மனம் சென்றவராய் எம்பெருமானார் திரும்பியிருக்கிறார் என்பதை உணர்ந்து எம்பார் இவ்வாறு கூறினார். (எண் 816). இந்நிகழ்ச்சிகளிலிருந்து அவருடைய ஆசார்யபக்தி வெளிப்படுகிறது.

திருவரங்கன் திருமுன்பே அரையர்கள் திவ்வியப்பிரபந்தப் பாசுரங்களுக்கு அபிநயம் செய்யும்போது, எம்பார் சுவைமிகு திருத்தங்களைக் கூறியுள்ளார். கண்ணபிரான் அப்பூச்சிகாட்டியமை பற்றிய பாசுரத்திற்கு அரையர் அபிநயம் செய்யும்போது, கண்களை இறுத்துக் காட்டியதாக அபிநயம் செய்ய, எம்பார் கண்ணன் அவ்வாறு செய்திருக்கமாட்டான் என்றும், சங்குசக்கரங்களைக் காட்டியே ஆயர்சிறுவர்களை அப்பூச்சிகாட்டி அச்சமுறுத்தியிருப்பான் என்றும் அரையருக்குக் குறிப்பால் உணர்த்தினார் என்றும், இதைக் கண்டு எம்பெருமானார் மிகவும் ரசித்தார் என்றும் ஓரிடத்தில் (எண் 8) குறிப்பிடப்பெறுகிறது. எம்பெருமானுடன் ஊடல் கொண்ட (குலசேகர) நாயகி, எம்பெருமான் தன்முன்னே வந்தால் அப்போது தன்னுடைய சினத்தைத் தீர்த்துக் கொள்வதாக அருளிச்செய்துள்ள பாசுரத்திற்கு அபிநயம் செய்த அரையர், அவனைக் கையாலும் காலாலும் நாயகி உதைத்துத் தன்சினம் தீர்வதாக அபிநயம் செய்தபோது, எம்பார், 'நாயகி அவ்வாறு செய்யமாட்டாள்; அவனுக்கு முகம் கொடுக்காமல் தன்னுடைய முகத்தை திருப்பிக்கொண்டாளானால் அதைவிட அவனுக்கு வேறு தண்டனை இல்லை; எனவே முகத்தைத் திருப்பிக்காட்டி அபிநயம் செய்ய வேண்டும்' என்று அரையருக்குக் குறிப்பால் உணர்த்தினார் (எண் 165, 648).

ஆழ்வார் பாசுரங்களை அநுஸந்திக்கும்போதே அதன் பொருள் தோன்றும்படி எம்பார் அநுஸந்திப்பார். 'பூவியல் பொழிலும் தடமும் அவன் கோயிலும் கண்டு ஆவியுள் குளிர

எங்ஙனே உகக்கும்கொல்' என்ற நம்மாழ்வார் பாசுரத்தை அனுஸந்திக்கும்போது 'ஆவி உள் குளிர' என்று (உள் என்ற சொல்லுக்கு அழுத்தம் தந்து) மிகவும் ஆழ்ந்து அனுபவித்து அனுஸந்திப்பராம் (எண் 677). நம்மாழ்வார் அருளிச்செய்துள்ள திருவாய்மொழியில் ஒரு பதிகத்திற்கும் அடுத்த பதிகத்திற்கும் இடையே உள்ள தொடர்பை விளக்குவதில் எம்பார் மிகவும் வல்லவர். 'வீற்றிருந்து' என்கின்ற (4–5) பதிகத்தில் மிக மிக மகிழ்ச்சியுடன் இருந்த ஆழ்வார், உடனே அடுத்ததான 'தீர்ப்பாரை' என்கின்ற (4–6) பதிகத்தில் மிக மிகத் துன்பத்துடன் இருந்ததாகக் கூறப்பெற்றுள்ளது. இதற்குக் காரணம் என்ன என்று எம்பாரைக் கேட்டபோது அவர் மிகவும் நயமாக, 'எல்லா இடங்களுக்கும் தொடர்பு கூறிவிடமுடியுமோ? அஸங்கதியே (தொடர்பு இல்லாமையே) ஸங்கதி (தொடர்பு) என்றாராம் (எண் 562). எல்லாச் சாத்திரங்களையும் கற்றவர்களும்கூடப் பரம்பொருள் எது என்று தெரிந்துகொள்ளாமல் கண்டதெய்வங்களையும் வணங்குவர்; ஆனால் எம்பெருமானார் தரிசனத்தைச் சேர்ந்தவர்களில் பெண்கள் உட்பட அனைவரும் பிறதெய்வங்களை அடுப்பிற்கு வைக்கும் கல்லைப்போல நினைத்திருப்பது நம்மாழ்வார் 'ஒன்றும் தேவும்' என்ற திருவாய்மொழியை அருளிச்செய்திருப்பதனால்தான் என்று எம்பார் கூறுவார். (எண் 584). திருவேங்கடமலையே நற்கதியைத் தந்தருள வல்லது என்ற பொய்கையாழ்வார் பாசுரத்தில் எம்பார் மிகவும் ஈடுபட்டிருப்பராம். (எண் 321)

திவ்வியப்பிரபந்தப் பாசுரங்களில் எழும் ஐயங்களுக்கும் சுவையாக விடைபகர்வதில் எம்பார் மிக மிக வல்லவராகத் திகழ்ந்தார். எல்லோருடைய செயல்கள், செயலின்மை அனைத்தும் எம்பெருமானுடைய அதீனத்தில் உள்ளது என்று நம்மாழ்வார் ஒரு பாசுரத்தில் அருளிச்செய்துள்ளார். 'ஒருவன் செயல்களைச் செய்வது எம்பெருமானுடைய அதீனத்தில் உள்ளது என்பது பொருந்தும். எந்தச் செயல்களையும் செய்யாமல் இருப்பதற்கும் அவன் வேண்டுமோ?' என்று கேட்டபோது எம்பார், 'மேல் உலகிற்குச் செல்ல விரும்பிய திரிசங்குவை மேலுலகிற்கு அனுப்புவதற்கு மட்டுமல்லாமல், இந்திரனால் அந்த திரிசங்கு கீழே தள்ளிவிடப்பட்டபோது, அவனைக் கீழே விழாமல் ஆகாயத்திலேயே நிற்க வைப்பதற்கும் விச்வாமித்திரமுனிவன் ஆணையிட்டான் அன்றோ! எனவே செயலுக்குப் போலவே செயலிழந்து போகையும் அவன் இட்ட வழக்காயிருக்கும்' என்று அருளிச்செய்தார் (எண் 418). இதேபோல் பற்பல கேள்விகளுக்கு அவர் சுவையாக விடையளித்துள்ளார். (எண் 125, 214, 488, 489, 667 முதலியவை பார்க்க.)

மிகவும் சுவையான வார்த்தைகள் பலவற்றை எம்பார் அருளிச்செய்துள்ளர். பிரகலாதன், திரௌபதி, கஜேந்திரன் ஆகியோர் எம்பெருமானை அழைத்தபோது ஆபத்து ஏற்பட்டிருந்தது அவர்களுக்கல்ல, எம்பெருமானுக்கே என்பராம் எம்பார். அதாவது அவர்கள் அழைத்த உடனே அவன் ஆங்கே தோன்றாமல் இருந்திருந்தால் உலகோர்கள் 'எம்பெருமான் என்று ஒருவன் இல்லவேயில்லை' என்று கூறிவிட்டிருப்பார்கள். எனவே

அப்படித் தனக்கு வர இருந்த ஆபத்தைப் போக்கிக் கொள்ளவே அவர்கள் அழைத்தபோது அவ்வவ்விடங்களில் உடனே தோன்றினான் என்றார் எம்பார் (எண் 37). எல்லாம் வல்லவனும் எல்லாமறிந்தவனுமான எம்பெருமானுக்கும் அசக்தியும், அறியாமையும், மறப்பும் உண்டு என்று எம்பார் அருளிச்செய்வராம். அடியவர்களைக் கைவிடுவதில் அசக்தி, அடியவர்கள் தன்னைப் பற்றுவதற்கு முன் செய்த பாவங்களில் மறப்பு, அதற்குப்பின் அறியாமல் செய்து விடுகின்ற பாவங்களில் அறியாமை ஆகியவை எம்பெருமானுக்கு உண்டு என்பது எம்பாரின் சுவைமிகு வார்த்தைகளாகும் (எண் 589).

நகைச்சுவையுடன் விளக்கமளிப்பதிலும் எம்பார் சிறந்து விளங்கினார். சீதையை அனுமன் கண்டுவந்தமையால் ஏற்பட்ட மகிழ்ச்சிக்குப் போக்குவீடாக வானர வீரர்கள் மதுவனம் அழித்த நிகழ்சியை விளக்க நேர்ந்தபோது, எம்பார், 'சீதையைக் கண்டுபிடித்து விட்ட மகிழ்ச்சிக்குப் போக்குவீடாக அத்தனை குரங்குகளும் இராமலக்ஷ்மணர்களுடைய முதுகைத் தட்டியிருந்தால் அவர்கள் முதுகு என்ன ஆகியிருக்கும்! நல்லவேளையாக மதுவனம் இருந்ததோ, அவர்கள் முதுகு பிழைத்ததோ!' என்றாராம் (எண் 294).

துன்பத்தில் இருப்பவர்களை எப்படியும் காப்பாற்றியே தீரவேண்டும் என்பதில் மிகவும் உறுதி உடையவர் எம்பார். வீரசுந்தரன் என்ற அரசாங்க அதிகாரி எம்பாரிடம் விரோதம் கொண்டிருந்தான். (நீசர்களைப் புகழ்ந்து பொருள் ஈட்டுவதைக் காட்டிலும் மூட்டை சுமந்தாவது பிழைக்கலாமே என்று எம்பார் கருதியிருந்தார்(எண் 542). இதுகாரணமாகவே அவன் எம்பாரிடம் விரோதம் கொண்டிருக்கலாம்.) அவ்வதிகாரியிடம் அஞ்சி ஒருவன் எம்பாரிடம் சரணம் புகுந்தான். அப்போது எம்பாருடைய சீடர்கள், 'ஏற்கனவே வீரசுந்தரனோடு விரோதம் உண்டாயிருக்கிறபோது, அவனுடைய விரோதியான இவனுக்கு அடைக்கலம் கொடுத்து அவனுடைய கோபத்தை மேலும் தூண்டவேண்டுமோ?' என்று கேட்டபோது, நம்மைச் சரணடைந்தவர்களை நாம் காப்பாற்றியே தீரவேண்டும். அப்படிச் செய்தால் அந்த சரணாகதி தர்மமே நம்மையும் காப்பாற்றும்' என்று எம்பார் அருளிச்செய்தார் (எண் 345).

திவ்யதேசங்களில் உள்ள இயற்கை எழிலை அழிக்காமல் பேணிப் பாதுகாப்பதிலும் எம்பார் அக்கரை உடையவராகத் திகழ்ந்தார். திருவரங்கத்தில் திருமுடிக்குறையில் உள்ள சில மரங்களை ஜநநாதப்ரம்மராயர் வெட்ட முயன்றபோது, எம்பெருமான் தன் திருக்கைப்பட வளர்த்த மரங்களை வெட்டக் கூடாது என்று தடுத்தாராம் (எண் 622, 798).

எம்பெருமானுடைய எளிமைக் குணத்தில் எம்பார் மிகவும் ஈடுபட்டவராவார். இது குறித்து எம்பெருமானாரே வியந்து அவரைப் பாராட்டியிருக்கிறார். (எண் 142, 428). ஒருமுறை திருவரங்கன் பிரம்மோத்ஸவம் முடிந்து தன்னுடைய ஸன்னிதிக்குள் எழுந்தருளியபோது, 'அகங்காரமமகாரங்களே வடிவெடுத்தவர்களான ஸம்ஸாரிகள் நடுவே மிகவும் மென்மையான திருமேனியைக் கொண்டு நம்பெருமாள் பத்துநாள் உத்ஸம்

கண்டருளி அபாயம் எதுவும் இல்லாமல் உத்ஸவம் முடிந்து ஸன்னிதிக்குள் எழுந்தருளினானே' என்று மகிழ்ச்சியுடன் எம்பாரும் முதலியாண்டானும் ஒருவரை ஒருவர் தண்டனிட்டுத் தழுவிக்கொண்டார்கள். (எண் 661).

தம்முடைய சீடரான பட்டரைப் பாராட்டிய உயரிய பண்புடையவர் எம்பார். ஒருநாள் பட்டர் மிகவும் இனிமையாகப் புராணம் வாசித்தபடியைக் கேட்ட எம்பார், உளம் நெகிழ்ந்து ஆனந்தக் கண்ணீர் பெருக எழுந்து நின்று பட்டரைப் பாராட்டினார். (எண் 225)

கூரத்தாழ்வான்

எம்பெருமானாருடைய மிக முக்கியமான சீடரான கூரத்தாழ்வானைப் பற்றி, குருபரம்பரை நூல்களிலும் கூறப்படாத அரிய செய்திகள் திவ்வியப்பிரந்த வியாக்கியானங்களில் கூறப்பெற்றுள்ளன.

கூரத்தாழ்வானுடைய திருத்தகப்பனார் பெயர் கூரத்து ஆழ்வார் என்பதாகும். அவர் ஆழ்வானுடைய சிறுவயதிலேயே அவரிடம் மிக மிக அன்புடையவராகத் திகழ்ந்தார். நடுவயதிலேயே தம்முடைய மனைவியை இழந்த அவர் மறுமணம் செய்துகொள்ள முதலில் எண்ணினார். ஆனால் அதனால் கூரத்தாழ்வான் மாற்றாந்தாய்க்கு அடிமைப்பட்டிருக்க வேண்டி வரும் என்றும், அவள் மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடந்து கொண்டால் அதனால் ஆழ்வானுக்குத் துன்பம் ஏற்படும் என்றும் கருதி மறுமணம் செய்துகொள்வதைத் தவிர்த்துவிட்டாராம். (எண் 4. 607). ஆனால் அதே சமயத்தில் அவர் ஆழ்வானை மிகவும் கண்டிப்புடன் வளர்த்தார். ஒருசமயம் ஆழ்வான் ஓரிடத்தில் யாரோ ஒருவர் 'இஷ்டஸித்தி' என்கிற ஸாங்க்ய மதநூலை விளக்கிக் கொண்டிருந்ததைக் கேட்டுக்கொண்டு அங்கேயே சிறிது நேரம் நின்றுவிட்டார். அதனால் தாமதித்து இல்லம் திரும்பிய அவரைக் கண்ட தகப்பனார் தாமதத்திற்குக் காரணம் என்ன என்று கேட்க, ஆழ்வான் காரணத்தைக் கூறினார். உடனே தகப்பனார், "புலையறமாகி நின்ற புத்தொடு சமணமெல்லாம் கலையறக் கற்ற மாந்தர் காண்பரோ கேட்பரோதாம்" என்று கூறி ஆழ்வானை மறுபடியும் நீராடிவிட்டு வரச்சொல்லி, ஸ்ரீபாததீர்த்தம் கொடுத்துப் பரிசுத்தராக்கிய பின்பே இல்லத்தினுள் அனுமதித்தார் (எண் 169).

இப்படி மிகவும் கண்டிப்பாக வளர்க்கப்பெற்றமையால் ஆத்மகுணங்கள் அனைத்தும் பொருந்தியவராகத் திகழ்ந்தார். 'மொழியைக் கடக்கும் பெரும்புகழான் வஞ்சமுக்குறும்பாம் குழியைக் கடக்கும் நம் கூரத்தாழ்வான்' என்று திருவரங்கத்தமுதனார் கூரத்தாழ்வானைப் போற்றியுள்ளார். செல்வச் செருக்கு, கல்விச் செருக்கு, குலச்செருக்கு ஆகிய மூன்று செருக்குகளும் இல்லாதவர் கூரத்தாழ்வான் என்பது இதன் கருத்து. இதை விளக்கும் பல நிகழ்ச்சிகள் திவ்வியப்ரபந்த வியாக்கியானங்களில் குறிப்பிடப்பெற்றுள்ளன.

மிகுந்த செல்வமுடையவராகத் திகழ்ந்த கூரத்தாழ்வான் தம்முடைய செல்வம் அனைத்தையும் தானம் செய்துவிட்டு, தம்முடைய மனைவி கொண்டுவந்த பொன் வட்டிலையும் காட்டில் எறிந்துவிட்டு, காஞ்சீபுரத்திற்கு வந்து எம்பெருமானாரை அடைந்தார் என்றும் உஞ்சவ்ருத்தி செய்து வாழ்ந்தார் என்றும் குருபரம்பரை நூல்களில் கூறப் பெற்றுள்ளமை அவருக்குச் செல்வச்செருக்கு சிறிதுமில்லை என்பதைக் காட்டுகிறது.

ஸ்ரீபாஷ்யம் எழுதுவதில் தம்முடைய ஆசார்யரான எம்பெருமானாருக்கு உறுதுணையாக இருந்து, எம்பெருமானாராலும் போற்றப்பெற்ற மேதாவிலாஸம் படைத்த கூரத்தாழ்வான் தம்முடைய கல்வியால் செருக்குக் கொண்டதேயில்லை. இதுகுறித்து ஒரு நிகழ்ச்சி ஓரிடத்தில் (எண் 265) குறிப்பிடப்பெற்றுள்ளது. மிகச் சாதாரணமான பண்டிதர் ஒருவர் ஆழ்வானிடம் ஒரு நூலுக்கு விளக்கம் கேட்கவேண்டும் என்று விரும்பினார். ஆனால் தாம் ஆழ்வானிடம் விளக்கம் கேட்பது வேறு யாருக்கும் தெரியக் கூடாது என்ற நிபந்தனையுடன் ஆழ்வானிடம் காலக்ஷேபம் கேட்கலானார். ஆழ்வானும் ஒருவரும் வராத ஏகாந்தமான ஓர் இடத்தில் அவருக்குக் காலக்ஷேபம் ஸாதித்துக்கொண்டிருந்தார். அப்போது அங்கே ஒருவர் வந்துவிடவே, கூரத்தாழ்வான் தம்மிடம் காலக்ஷேபம் கேட்பவரிடமிருந்த புத்தகத்தைச் சடக்கெனத் தாம் வாங்கிக்கொண்டு படிக்கத்தொடங்கி, தாம் அந்தப் பண்டிதரிடத்தில் படிப்பதுபோன்ற தோற்றத்தை உண்டாக்கிவிட்டார். அதாவது தம்மைக் காலக்ஷேபம் கேட்பவராகவும், அந்தப் பண்டிதரைக் காலக்ஷேபம் சொல்பவராகவும் மற்றவர்கள் நினைக்கும்படி செய்துவிட்டார். கூரத்தாழ்வான் கல்விச்செருக்கு சிறிதும் இல்லாதவர் என்பதை இந்த நிகழ்ச்சி எடுத்துக்காட்டுகிறது.

மிக உயர்ந்த குலத்தில் பிறந்தவரான கூரத்தாழ்வான் ஒருபோதும் குலச்செருக்குக் கொண்டதில்லை. இது குறித்தும் ஒரு நிகழ்ச்சி கூறப்பெற்றுள்ளது. ஒருமுறை திருவரங்கத்திற்கு ஏற்பட்டிருந்த ஆபத்தைப் போக்குவதற்காகப் பெரியநம்பிகள் திருவரங்கனைப் பிரதக்ஷிணம் செய்யவேண்டும் என்று விரும்பினார். அப்போது தம்முடைய பின்னால் ஒருவர் வரவேண்டும் என்றும், ஆனால் அப்படி வரும்போது 'ஒருவர் பின்னால் போக வேண்டியிருக்கிறதே!' என்று நினையாதவராக அவர் இருக்கவேண்டும் என்றும் எம்பெருமானாரிடம் கூறினார். 'அப்படிப்பட்டவர் யார் என்று தேவரீரே கூறவேண்டும்' என்று எம்பெருமானார் பெரிய நம்பியைக் கேட்டபோது, 'நம் ஆழ்வானை அனுப்பலாகாதோ' என்றாராம் பெரியநம்பி (எண் 738). கூரத்தாழ்வான் குலச்செருக்கு சிறிதும் இல்லாதவர் என்பதை இந்நிகழ்ச்சி எடுத்துக்காட்டுகிறது.

இப்படி முக்குறும்பும் அறுத்து விளங்கிய கூரத்தாழ்வானைக் கண்டவாறே தீயவர்களும் திருந்திவிடுவர் என்பதற்குச் சான்றாக ஒரு நிகழ்ச்சியும் காட்டப்பெறுகிறது. ராஜேந்த்ரசோழபுரத்தில் வாழ்ந்து வந்த அந்தணன் ஒருவனுடைய மகனுக்குப் பிறமதத்தவர்களோடு தொடர்பு ஏற்பட்டுத் தலையை மொட்டை அடித்துக்கொண்டு

பூணூலையும் அறுத்துவிட்டான். ஒருநாள் கூரத்தாழ்வான் அவ்வூருக்கு எழுந்தருளியபோது அவருடைய திருக்கண் அவன்மீது படவே அவன் திருந்திப் பூணூலணிந்துகொண்டு தன் இல்லம் திரும்பினான். அதைக் கண்ட அவனுடைய தந்தை 'கூரத்தாழ்வானைக் கண்டாயோ?' என்றானாம். 'எப்படிப்பட்ட தீயவர்களும் கூரத்தாழ்வானைக் கண்டால் திருந்திவிடுவார்கள்' என்றானாம். (எண் 268).

இப்படி ஆத்மகுணங்கள் பல பொருந்தியவராக இருந்தும் அவற்றை ஒரு பொருளாகக் கொள்ளாமல் தம்முடைய ஆசார்யரான எம்பெருமானாருடைய திருவடி ஸம்பந்தத்தை மட்டுமே உயர்வாகக் கருதியிருந்தார். எம்பெருமானார் தீவிர சைவனான சோழ அரசனிடமிருந்து தப்பி மேல்நாட்டிற்குச் சென்றுவிட, அதனால் கோபம் கொண்ட அரசன் திருவரங்கம் கோயிலுக்குள் எம்பெருமானாரைச் சேர்ந்தவர்கள் எவரையும் விடக்கூடாது என்று காவலிட்டுவைத்தான். இதையறியாத கூரத்தாழ்வான் கோயிலுக்குள் செல்ல முயன்றபோது காவல்காரன் அரசனுடைய கட்டளைப்படியே அவரைத் தடுத்தான். அப்போது மற்றொரு சேவகன் 'நீர் ராமானுசருடைய சீடர்தான் என்றாலும் நற்குணங்கள் பொருந்தியவராதலின் நீர் பெருமாளைச் சேவிக்கச் செல்லலாம்' என்றான். இதைக் கேட்ட கூரத்தாழ்வான் 'நான் நற்குணங்கள் கொண்டவனாக இருப்பது ஆசார்யருடைய கடாக்ஷத்தாலே என்று நினைத்துக் கொண்டிருக்கிறேன். ஆனால் அந்த நற்குணங்களே இப்போது ஆசார்யருடன் உள்ள தொடர்பை அறுத்துக் கொள்வதற்குக் காரணமாக ஆகிவிட்டது. நற்குணங்கள் கொண்டவன் என்ற முறையில் பெருமாளை சேவிப்பதைக் காட்டிலும் எம்பெருமானாருடைய சீடன் என்ற முறையில் கோயிலுக்குள் செல்லாமல் இருப்பதையே விரும்புகிறேன்' என்று கூறிப் பெருமாளைச் சேவிக்காமலே திரும்பிவிட்டார். (எண் 92, 195).

ஆழ்வான் எம்பெருமானார் மீது அளவற்ற ஆசார்யபக்தி கொண்டிருந்தது போலவே எம்பெருமானாரும் மற்றெல்லாச் சீடர்களையும்விட ஆழ்வானிடம் அளவற்ற அன்பு கொண்டிருந்தார். திருக்கோட்டியூர்நம்பி ஒருமுறை திருவரங்கத்திற்கு எழுந்தருளியபோது தமக்குப் பரமரகசியமாக உபதேசித்த சரமச்லோகார்த்தத்தை, கொதிக்கின்ற வெயிலையும் பொருட்படுத்தாமல், ஆழ்வானுடைய இல்லத்திற்கு எழுந்தருளி, 'திருக்கோட்டியூர் நம்பி இவ்வர்த்தத்தை ஒருவருக்கும் சொல்லக் கூடாது என்று கூறி உபதேசித்தார். ஆனால் உமக்கு மட்டும் சொல்லாமல் என்னால் இருக்கமுடியாது' என்றுகூறினாராம். (எண் 385). ஆத்மாவிற்குத் தனிப்பட்ட அடையாளம் அறிவுடைமையா (ஜ்ஞாத்ருத்வமா) அல்லது சேஷத்வமா (அடிமைத்தன்மையா) என்பதை அறிவதற்குத் திருக்கோட்டியூர் நம்பியிடம் கூரத்தாழ்வானையே எம்பெருமானார் அனுப்பினார். (எண் 375).

சோழ அரசனுடைய சபையில் சிவனைக்காட்டிலும் மேம்பட்ட தெய்வமில்லை என்று ஓலையில் எழுதிக் கையெழுத்திட மறுத்த ஆழ்வான், "இந்த ஓலை தொலையாமல்

காப்பாற்றி வைத்தால்தான் நீ நினைக்கிறவனுடைய பரத்துவத்தை நிரூபிக்கமுடியும். இன்று நீ என்ன செய்ய நினைத்திருக்கிறாயோ அதைச் செய்துகொள்" என்று கூறினார். (எண் 632). இதைக்கேட்டுக் கோபம் கொண்ட அரசன் ஆழ்வானுடைய கண்களைப் பிடுங்கிவிடும்படி உத்தரவிட்டான். 'பாவியான உன்னைப்பார்த்த கண்கள் எனக்குத் தேவையில்லை' என்று தாமே தமது கண்களைப் பிடுங்கிக் கொண்டுவிட்டார். அதைக் கேள்விப்பட்ட எம்பெருமானார் மிக மிக வருத்தை அடைந்தார் என்பதனை 'ஆழ்வான் திருநயனங்கள் நோவுபட்ட பின்பு எம்பெருமானார் திருவுள்ளம் நோவுபட்டாற்போலே' என்று ஓரிடத்தில் (எண்555) என்று குறிப்பிடப்பெற்றுள்ளதைக் கொண்டு அறியலாம்.

ஆழ்வான் மீண்டும் திருக்கண்களைப் பெறவேண்டும் என்பதற்காக காஞ்சி வரதராஜனைக் குறித்து ஒரு தோத்திரம் விண்ணப்பம் செய்யும்படி எம்பெருமானார் கூறினார். ஆழ்வானும் வரதராஜஸ்தவம் என்ற தோத்திரத்தை அருளிச்செய்ய, அதில் ஒரு சுலோகத்தைக் கேட்ட எம்பெருமானார், 'ஆழ்வான்! இப்பாசுரம் கேட்டால் பெருமாள் நிச்சயம் இரங்குவார்' என்று அருளிச்செய்தார். (எண் 572).

ஆயினும் ஆழ்வான் தனக்குக் கண்களைக் கொடுக்கும்படி தேவப்பெருமாளை வேண்டாமல் தாம் கண்களை இழப்பதற்குக் காரணமாக இருந்த நாலூரானுக்கும் நல்ல கதி கிடைக்க வேண்டும் என்று வேண்டிக்கொண்டார். 'நன்மையால் மிக்க நான்மறையாளர்கள்' என்ற மதுரகாவியாழ்வாருடைய பாசுரப்பகுதிக்கு விளக்கம் உரைக்கும்போது, தமக்குத் தீங்கு செய்தவர்களுக்கும் நன்மையை விரும்பிய ஆழ்வானை உரையாசிரியர் உதாரணமாகக் காட்டியுள்ளார் (எண் 196).

தமக்குத் தீமை செய்தவர்களுக்கும் நன்மை விரும்பியதோடு மட்டுமல்லாமல், அனைத்து உயிர்களிடமும் இரக்கம் கொண்டவராகக் கூரத்தாழ்வான் திகழ்ந்தார். ஒருசமயம் ஒரு பாம்பின் வாயில் அகப்பட்டுக்கொண்ட தவளை கத்துவதைக் கேட்ட கூரத்தாழ்வான் 'இத்தவளை தன்னை யார் பாம்பின் வாயிலிருந்து விடுவிக்கப் போகிறார் என்று கத்துகிறது?' என்று மோகித்து விழுந்து விட்டாராம். (எண் 180, 579).

ஸ்ரீவைஷ்ணவர்களிடம் மிக மிக மதிப்புடையவர் கூரத்தாழ்வான். ஒருவன் உய்வு பெறவேண்டுமானால், ஸ்ரீவைஷ்ணவன் ஒருவனுடைய க்ருஹயாத்திரையை நினைத்தால் போதும் என்று அருளிச்செய்வராம் (எண் 82). எம்பெருமானும், அவனுடைமைகளும் ஸ்ரீவைஷ்ணவர்களுக்குக் கைங்கர்யம் செய்யக் காத்திருக்க, ஸ்ரீவைஷ்ணவனுமாய் உற்றார் உறவினர் ஒருவருமில்லாதவன் ஒருவன் உண்டோ? என்று ஆழ்வான் அருளிச்செய்தார் (எண் 522). பாகவத கைங்கர்யம் செய்வதையே நோக்கமாகக் கொண்டிருந்த ஸ்ரீவைஷ்ணவர் ஒருவர் இறந்துவிட, ஒருவர் கூரத்தாழ்வானிடம் வந்து 'அவர் திருவடிச் சார்ந்தார்' என்று கூற, கூரத்தாழ்வான், 'அடியவர்களுக்குத் தொண்டு செய்வதையே

குறிக்கோளாகக் கொண்டிருந்த ஒருவரை அப்படிச் சொல்லக் கூடாது; அடியவர்கள் நாடான திருநாட்டிற்குப்போனார் என்று கூறவேண்டும்' என்று அருளினார். (எண் 34).

சோழ அரசவைக்குச் சென்று, நாராயணனே பரம்பொருள் என்று நிலைநாட்டியவர் கூரத்தாழ்வான். அப்படிப்பட்டவரிடம் ஒருவர், "நீங்கள் ஏன் பிறதெய்வங்களைத் தொழுவதில்லை?" என்று கேட்டார். கேட்டவர் மிகவும் சாமன்யமான அறிவு படைத்தவர் போலும்! எனவே அவருக்குச் சாத்திரங்களைக் கொண்டு விளக்கம் கூறாமல், மிகவும் எளிமையாக, "எங்கள் முன்னோர்கள் எவரும் பிறதெய்வங்களை வணங்காமையினால் நாங்களும் வணங்குவதில்லை" என்று பதில் கூறினார் (எண் 62). சாத்திரங்கள் தேவதைகளை அவமதிக்கக் கூடாது என்கின்றன; ஆனால் வைணவர்களோ பிறதெய்வங்களை வணங்கமாட்டார்கள்; எனவே "பிறதெய்வங்களைக் கண்டால் வைணவர்களாகிய நீங்கள் எப்படி நடந்து கொள்வீர்கள்?" என்று ஒருவன் கேட்டான். உடனே கூரத்தாழ்வான் மிகவும் நயமாக, "நீ கேட்ட கேள்வியே தவறு; நீ கேள்வியையே மாற்றிக் கேட்டிருக்கவேண்டும். ஸ்ரீவைஷ்ணவர்களைக் கண்டால் பிற தெய்வங்கள் எவ்வாறு நடந்துகொள்ளும் என்றன்றோ கேட்டிருக்க வேண்டும்" என்றாராம். (எண் 68). எம்பெருமானுடைய அடியவர்களைக் கண்டால் பிறதெய்வங்களும் வணங்கி வழிபட்டுச் செல்லும் என்று சாத்திரங்களில் கூறப்பட்டிருப்பதை அடியொற்றிக் கூரத்தாழ்வான் இவ்வாறு கூறினார்.

கூரத்தாழ்வானுடைய தேவியாரான ஆண்டாள், திருவரங்கன் அமுதுசெய்த பிரசாதத்தை உட்கொண்டதால் பராசரபட்டரும், சீராமப்பிள்ளையும் அவருக்குக் குமாரர்களாக அவதரித்ததாகவும் குருபரம்பரை நூல் பகர்கிறது. ஆனால், பராசரபட்டர் பிறப்பதற்கு முன்பே கூரத்தாழ்வானுக்கு ஒரு பிள்ளை பிறந்திருந்ததாகவும், அப்பிள்ளை சிறுவயதிலேயே இறந்துவிட்டமையால், பட்டரையும் அங்ஙனம் இழந்துவிடக்கூடாது என்பதற்காக எம்பெருமானார், பட்டரை ஸ்ரீரங்கநாதனுக்கு சுவீகாரம் கொடுத்துவிட்டார் என்றும் ஓரிடத்தில் (எண் 387) கூறப்பட்டுள்ளது. (அப்போது ஆழ்வானுடைய மற்றொரு குமாரரான சீராமப்பிள்ளை அவதரித்திருக்கவில்லை என்று தோன்றுகிறது.) வீராணத்தில் ஒரு பெண்பிள்ளையைத் தமது மடியில் வைத்துக் கொண்டிருந்து 'கள்வன் கொல்' என்ற திருமொழிப்பாசுரத்தைக் கூரத்தாழ்வான் சந்தை சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தார் என்றும் அப்போது அப்பெண்ணினுடைய கணவன் வந்து அப்பெண்பிள்ளையை அழைத்துக் கொண்டு சென்றுவிட்டான் என்றும், எம்பெருமானே வந்து நாயகியை அழைத்துச் செல்வதாக நினைத்து ஆழ்வான் மோகித்துவிட்டார் என்றும் மற்றோரிடத்தில் குறிப்பிடப்பெற்றுள்ளது. இதைக் கொண்டு சிலர் கூரத்தாழ்வானுக்கு ஒரு பெண்ணும் உண்டு என்றும், அவளை வீராணத்திலே மணமுடித்துக் கொடுத்திருந்தார் என்றும் கூறுவர். (எண் 379ம் அதன் அடிக்குறிப்பும் காண்க.)

எல்லோரையும் காப்பவன் எம்பெருமானாகையால், ஸ்ரீவைஷ்ணவர்கள் எல்லா நிலைகளிலும் எம்பெருமானே தங்கள் காரியங்களைச் செய்து தலைக்கட்டுவான் என்ற உறுதியுடன் இருக்க வேண்டும் என்ற உறுதி உடையவராகக் கூரத்தாழ்வான் விளங்கினார். கூரத்தாழ்வான் தேவியாரான ஆண்டாள் "பிள்ளைகள் திருமண வயதை அடைந்து விட்டார்கள்; இவர்களுக்குத் திருமணம் செய்விப்பதற்கு இன்னும் எந்த முயற்சியும் மேற்கொள்ளாமலிருக்கலாமோ?" என்று கேட்டபோது, கூரத்தாழ்வான், "எம்பெருமானுடைய குடும்பத்திற்கு நான் கரையவேண்டுமோ? அவனே செய்விப்பான்; நாளை நான் கோயிலில் புராணம் வாசிக்கும்போது அவர்களை அனுப்பிவை" என்றார். மறுநாள் எம்பெருமானிடம் ஆழ்வான் "பிள்ளைகள் திருமணவயதை அடைந்துவிட்டார்கள் என்று கூறுகிறார்கள்" என்று விண்ணப்பிக்க, இரண்டு மூன்று நாள்களுக்குள் பட்டருக்குத் திருமணம் நடைபெற்றது. (எண் 348, 698 பார்க்க.)

நம்மாழ்வார் அருளிச்செய்த திருவாய்மொழியில் மிக மிக ஈடுபாடு உள்ளவர் ஆழ்வான். 'உயர்வற உயர்நலம் உடையவன்' என்ற திருவாய்மொழியின் முதல்பாசுரத்தை விளக்கப் புகுந்தபோது, "எம்பெருமானுக்கு குணங்களே கிடையாது என்று கூறுபவர்களுடைய கழுத்தை நெரிப்பதுபோல, ஆழ்வார் தொடங்கும்போதே நலமுடையவன் என்பதே!" என்று மிகவும் ஈடுபட்டுச் சொல்வராம் (எண் 411). 'பிறந்தவாறும்' என்ற திருவாய்மொழியை விளக்கப் புகுந்த ஆழ்வான் எம்பெருமானிடத்தில் ஆழ்வாருக்குள்ள ஈடுபாட்டை நினைத்து நெடுநேரம் கண்ணும் கண்ணீருமாக இருந்து, 'இவ்வாழ்வாரும் ஒருவரே! இவருக்குள்ள மனப்பாங்கு இல்லாத நாம் ஆழ்வாருடைய பாசுரங்களுக்கு விளக்கம் சொல்லுகையாவது என்?' என்று சிறிது நேரம் கண்ணீர் பெருக்கி, "இன்று என்னால் சொல்லமுடியாது; விட்டுவிடுங்கள்" என்றராம் (எண் 383).

திருவாய்மொழியில் உள்ள பல பதிகங்களின் திரண்ட கருத்தை ஆழ்வான் நயம்பட விளக்கியுள்ளார். (எண் 579, 630, 756 முதலியவை பார்க்க.) 'கற்பார் இராமபிரானை' என்ற திருவாய்மொழியில் உள்ள பாசுரங்கள் அனைத்தும் இராமாவதாரத்தையே கூறுகிறது என்று ஒரு முறை விளக்கினானராம் (எண் 720). திருவாய்மொழிப் பாசுரங்களுக்கும் அழகிய பொருளாட்சிகளை வழங்கியுள்ளார். (எண் 462, 492, 605, 820 முதலியவை பார்க்க.) குறிப்பாக 'உளனெனில் உளன்', 'முனியே நான்முகனே' ஆகிய பாசுரங்களுக்குப் பொருளை ஆழ்வான் காட்டியதாகக் குறிப்பிடப்பெற்றுள்ளது (எண் 419, 819 பார்க்க). ஒருசில பாசுரங்களுக்குப் பொருள் உரைக்கும்போது தமது காலத்தில் வாழ்ந்த ஆசார்யர்களையே எடுத்துக்காட்டாகக் காட்டி விளக்கியுள்ளார். 'பாலேய்தமிழர் இசைகாரர், பத்தர்' என்று திருவாய்மொழிப் பாசுரத்திலுள்ள சொற்களுக்கு முறையே ஸ்ரீபராங்குச நம்பி, ஆழ்வார் திருவரங்கப்பெருமாள் அரையர், பிள்ளை உறங்காவில்லி தாஸர் ஆகியோரை எடுத்துக்காட்டி விளக்கினார் (எண் 446). 'சிறுமாமனிசர்' என்று

அடியவர்களைப் பற்றி ஆழ்வார் அருளிச்செய்துள்ளமை பற்றி பட்டர் ஆழ்வானிடம் ஓர் ஐயம் எழுப்பினார். சிறுமை பெருமை ஆகியவை இரண்டும் எப்படி ஒரே இடத்தில் இருக்கமுடியும் என்பது பட்டருடைய ஐயமாகும். இதற்கு விடையளித்த ஆழ்வான், "முதலியாண்டான், அருளாளப்பெருமாள் எம்பெருமானார், எம்பார் முதலியவர்களும் நம்மைப்போலவே உணவு தண்ணீர் முதலியவைகளை உட்கொள்வதால் நம்மைப்போல் சிறுமை உடையவர்கள் என்றே தோன்றும்; ஆனால் அவர்களுக்கு எம்பெருமானிடம் உள்ள ஈடுபாட்டின் ஆழத்தை நோக்கினால் மிகப் பெருமை உள்ளவர்கள் என்பது புலப்படும். எனவே அவர்களைப் போன்றவர்களே சிறுமாமனிசர்" என்று தம்முடைய காலத்தில் வாழ்ந்த ஆசார்யர்களையே உதாரணம் காட்டி விளக்கினார். (எண் 816).

திவ்வியப்பிரபந்த வியாக்கியானங்களில் ஒருசில இடங்களில் ஆழ்வான் அருளிச்செய்த ஸ்தோத்ரங்களிலிருந்து மேற்கோள்கள் எடுத்துக் காட்டப்பெற்றுள்ளன. (எண் 28, 29). ஓரிடத்தில் (எண் 97) ஆழ்வான் உதாரவாக்குகளில் ஒருவராகக் குறிப்பிடப் பெற்றுள்ளார்.

ஆழ்வானிடம் அளவற்ற அன்பு உடையவரான எம்பெருமானார், கூரத்தாழ்வான் இவ்வுகை விட்டு நீங்க நினைத்தபோது மிக மிக மனவேதனை அடைந்தார். திருவரங்கனிடம் தமக்கு வீடுபேறு அளிக்க வேண்டும் என்று ஆழ்வான் வேண்ட, திருவரங்கனும் அப்படியே அருள்செய்தான். இதைக் கேட்ட எம்பெருமானார், "ஆழ்வான்! என்னை விட்டுப் பிரிந்து செல்ல எப்படி மனம் வந்தது?" என்று கேட்டார். (எண் 36). முடிவில் ஆழ்வான் திருநாட்டிற்கு எழுந்தருளியபோது அவருடைய பிரிவைப்பொறுக்க முடியாமல், "ஒருமகள்தன்னை உடையேன் உலகம் நிறைந்த புகழால் திருமகள்போல வளர்த்தேன் செங்கண்மால்தான் கொண்டுபோனான்" என்று அருளிச்செய்தார். (எண் 23).

முதலியாண்டான்

எம்பெருமானாருடைய பாதுகையாகப் போற்றப் பெறுபவர், அவருடைய மற்றொரு சீடரான முதலியாண்டான் ஆவார். இவருடைய வாழ்க்கையில் நடைபெற்றதாக குருபரம்பரை நூல்களில் கூறப்பெற்றுள்ள நிகழ்ச்சிகள் அதிகமாக திவ்வியப்பிரபந்த வியாக்கியானங்களில் குறிப்பிடப்பெறவில்லை. ரகசியார்த்தத்தை அறிந்து கொள்வதற்காகத் திருக்கோட்டியூர் நம்பியிடம் ஆறுமாதங்கள் காத்திருந்தமை பற்றி மட்டும் ஓரிடத்தில் (எண் 145) குறிப்பிடப்பெற்றுள்ளது. பிற நிகழ்ச்சிகள் எவையும் குறிப்பிடப் பெறவில்லை. ஆயினும் குருபரம்பரைநூல்களில் இடம்பெறாத சில நிகழ்ச்சிகள் வியாக்கியானங்களில் இடம்பெற்றுள்ளன.

ஒருமுறை பிரம்மோத்ஸவம் முடிந்து, திருவரங்கன் தன்னுடைய ஸன்னிதிக்குள் எழுந்தருளியபோது, 'எம்பெருமான் அபாயம் எதுவும் இல்லாமல் உத்ஸவம் முடிந்து ஸன்னிதிக்குள் எழுந்தருளினானே' என்று மகிழ்ச்சியுடன் எம்பாரும் முதலியாண்டானும்

ஒருவரை ஒருவர் தண்டனிட்டுத் தழுவிக்கொண்டார்கள். (எண் 661). ஆச்சானும் ஆண்டானும் திருவரங்கத்திற்குக் கிழக்கே சென்று கொண்டிருந்தனர். அப்போது திருப்பேர் நகரான் திருக்கோயிலைத் தாண்டி மேற்கொண்டு போகவும் முடியாமல், கோயிலுக்குள் சென்று எம்பெருமானைத் தொழவும் முடியாமல் கோயிலையே மிகவும் ஈடுபாட்டுடன் பார்த்துக் கொண்டிருந்தார்களாம். (எண் 676). திருவரங்கத்தில் ஸ்ரீஜயந்திப் புறப்பாட்டின்போது வங்கிப்புரத்து நம்பி, இடைச்சிகள் நடுவே நின்று கொண்டு எம்பெருமானை சேவித்தபோது, இடைச்சிகள் எம்பெருமானை அழகிய தமிழில் தோத்திரம் செய்ய, வங்கிப்புரத்து நம்பி 'விஜயஸ்வ' என்று வடமொழியில் தோத்திரம் செய்ததாக அவர் கூறியதைக் கேட்ட ஆண்டான், வங்கிப்புரத்து நம்பியை நோக்கி "அங்குப்போயும் உமது முரட்டு ஸம்ஸ்க்ருதத்தை விடவில்லையே!" என்றார். (எண் 769). முதலியாண்டானிடம் ஏற்கெனவே சிஷ்யராக இருந்த ஒருவர் ஆண்டான் வெளியூர் சென்றிருந்தபோது எம்பாரிடம் ஆச்ரயித்துவிட்டார். ஆண்டான் ஊர் திரும்பியபிகே இதை அறிந்து கொண்ட எம்பார், ஆண்டானிடம் இது பற்றிக் கூறி வருந்த, ஆண்டான் மிகவும் பெருந்தன்மையுடன் "கிணற்றில் விழுந்தவனுக்கு இருவர் கை கொடுத்தால் எடுப்பவர்களுக்கும் எளிது; ஏறுபவனுக்கும் எளிது" என்று அருளிச்செய்தார் (எண் 487). 'சிறுமாமனிசர்' என்பதற்கு எடுத்துக்காட்டாக ஆண்டானையும் காட்டினார் ஆழ்வான். ஆண்டான், தம்முடைய கோபத்தால் அடித்துத் துரத்தியும் தம்மை விட்டுப் பிரியாத ஆசார்யபக்தியுடைய நம்பி திருவழுதி வளநாடு தாஸரைச் சீடராகப் பெற்றிருந்தார் (எண் 163).

முதலியாண்டான் அருளிச்செய்த விளக்கங்கள் சிலவும் வியாக்கியானங்களில் குறிப்பிடப்பெற்றுள்ளன. அர்ச்சாவதாரத்தின் சிறப்பை அருளிச்செய்யும் நம்மாழ்வார், "நெஞ்சினால் நினைப்பான் யவன் அவனாகும் நீள்கடல் வண்ணனே" என்று அருளிச் செய்துள்ளார். இங்கு ஆண்டான், 'பரமபதத்தில் எழுந்தருளியுள்ளவன்தான் இங்கு எழுந்தருளியுள்ளான் என்று நினையாமல், இங்கு அர்ச்சாவதாரமாக எழுந்தருளியுள்ள எம்பெருமான்தான் பரமபதத்திலும் எழுந்தருளியுள்ளான் என்று கொள்ளுங்கள்' என்று அர்ச்சாவதாரத்திற்கு முக்கியத்துவம் அளித்து விளக்கம் அருளிச்செய்துள்ளார். (எண் 529). 'உற்றார்களை அழிப்பேனும் யானே' என்ற ஆழ்வாருடைய அருளிச்செயலுக்கு, "உற்றார்களைத் தன்னுடைய அழகைக் காட்டி உடைகுலைப்படும்படி செய்து அழிப்பவனும் யானே என்கிறார்" என்று ஆண்டான் விளக்கம் உரைத்தார். (எண் 610). இதேபோல் ஆண்டான் அருளிச்செய்த விளக்கங்கள் மற்றும் (எண் 54, 503, 618, 754, 755 முதலிய) சில இடங்களில் குறிப்பிடப்பெற்றுள்ளன.

அருளாளப்பெருமாள் எம்பெருமானார்

யஜ்ஞமூர்த்தி என்ற பெயரில் அத்வைதியாகத் திகழ்ந்தவரும் பல நாள்கள் வாதப் போர் செய்து எம்பெருமானாரால் திருத்திப் பணிகொள்ளப்பெற்றவருமான அருளாளப்

பெருமாள் எம்பெருமானாரைப் பற்றி மிகச்சில செய்திகள் மட்டுமே வியாக்கியானங்களில் இடம்பெற்றுள்ளன. வடுகநம்பி திருநாட்டுக்குப் போனார் என்று சொன்னபோது, அருளாளப் பெருமாள் எம்பெருமானார் சிறிது நேரம் மோகித்துக் கிடந்து, பிறகு, "உடையவர் திருவடிகளை அடைந்தார்" என்று கூறவேண்டும் என்றாராம். (எண் 35). எம்பெருமானாருடைய மற்றொரு சீடரான கூரத்தாழ்வானிடம் மிக மதிப்புடையவராகத் திகழ்ந்தார். அருளாளப்பெருமாள் எம்பெருமானார் நோய்வாய்ப்பட்டுக் கிடந்தபோது அவரை நலம் வினவுவதற்காக ஆழ்வான் வந்தபோது, பரமபதம் அளிப்பதற்குரிய வல்லமை ஆழ்வானுக்கு இருந்தபோதும் அவர் அதைத் தரவில்லையே என்ற வருத்தத்துடன் கூறினார். (எண் 681). தம்முடைய இறுதிக்காலத்தில் "ஒரு பறவை எம்பெருமானுடைய திருவுள்ளத்தைப் புண்படுத்தியதே என்றிருந்தேன்" என்றாராம். (இதன் விளக்கத்தை எண் 686ல் காண்க.) 'சிறுமாமனிசர்' என்பதற்கு எடுத்துக்காட்டாக அருளாளப்பெருமாள் எம்பெருமானாரையும் ஆழ்வான் காட்டியுள்ளார். அருளாளப்பெருமாள் எம்பெருமானார் அருளிச்செய்த பொருளாட்சிகள் எவையும் வியாக்கியானங்களில் குறிப்பிடப் பெறவில்லை.

அனந்தாழ்வான்

எம்பெருமானாருடைய மற்றொரு சீடரான அனந்தாழ்வானைப் பற்றிப் பல செய்திகள் வியாக்கியானங்களில் குறிப்பிடப்பெற்றுள்ளன. நம்மாழ்வார் அருளிச்செய்த 'ஒழிவில் காலமெல்லாம்' என்ற திருவாய்மொழியை எம்பெருமானார் விளக்கியபோது, 'திருமலையில் தங்கித் திருவேங்கடமுடையானுக்குக் கைங்கர்யம் செய்பவர்கள் எவரேனும் உண்டோ?' என்று கேட்க, அனந்தாழ்வான் எழுந்து அக்கைங்கர்யத்தைத் தாம் செய்வதாக விண்ணப்பித்தார் என்று குருபரம்பராப்ரபாவ நூலில் கூறப்பெற்றுள்ளது. ஆனால் அச்செய்தி திவ்வியப்பிரபந்த வியாக்கியானங்களில் கூறப்பெறவில்லை. ஆசார்யருடைய நியமனம் காரணமாகத் திருவேங்கடமுடையானுக்குக் கைங்கர்யம் செய்து வந்தபடியால், அவர் திருவேங்கடமுடையான் திருநாமத்தில் மிக மிக ஈடுபாடு உடையவராக இருந்தார். "அனந்தாழ்வான் 'திருவேங்கடமுடையான்' என்னும்போது பாவபந்தமடையத் தோற்றியிருக்கும்" என்ற செய்தி பல இடங்களில் (எண் 245, 311, 666) குறிப்பிடப்பெற்றுள்ளது. திருவேங்கடத்தில் ஏதேனும் ஒரு பிறவி பிறக்கின்றமையே வேண்டுவது என்ற கருத்தில் குலசேகர ஆழ்வார் 'எம்பெருமான் பொன்மலைமேல் ஏதேனும் ஆவேனே' என்றருளிச்செய்துள்ளார். இதற்கு அனந்தாழ்வான் "திருவேங்கடமுடையான் ஆகவுமாம்" என்று உரைப்பராம். 'அடியவர்களுடைய அடிமைத் தன்மைக்குப் புறம்பாக (சேஷத்வஸ்வரூபத்திற்கு விருத்தமாக) எம்பெருமானாகவே ஆகிவிட்டாலும் அமையும்; திருவேங்கடமலையில் இருப்பு ஒன்றே வேண்டுவது' என்பது இதன் கருத்து (எண் 160). திருவேங்கடமுடையானிடம் ஈடுபாடு கொண்டிருந்தது போலவே ஆண்டாளிடமும் மிகுந்த ஈடுபாடு கொண்டவராகத் திகழ்ந்தார். அனந்தாழ்வான் ஸ்ரீவில்லிபுத்தூருக்கு

எழுந்தருளியபோது, திருமுக்குளத்தில் தண்ணீருக்கு அடியில் அவர் எதையோ துழாவிக்கொண்டிருப்பதைக் கண்ட சிலர், "என்ன தேடிக் கொண்டிருக்கிறீர்?" என்று வினவ, "ஆண்டாள் இக்குளத்தில் நீராடியபோது தேய்த்துக் கொண்ட ஒரு மஞ்சள் கொழுந்தாவது கிடைக்குமா என்று பார்க்கிறேன்" என்றாராம்.

ஸ்ரீவைஷ்ணவர்கள் திவ்யதேசவாஸத்தைக் கைவிடக் கூடாது என்ற கொள்கையை உடையவர் அனந்தாழ்வான். சோழகுலாந்தகன் என்ற ஊரில் விவசாயம் செய்து கொண்டிருந்த ஒரு ஸ்ரீவைஷ்ணவனைப் பார்த்து அனந்தாழ்வான், "உம்முடைய ஊர் எது?" என்று கேட்க, அவர் "திருக்கோளூர்" என்று விடையளித்தார். "திருக்கோளூரைவிட்டு இந்த கிராமத்திற்கு ஏன்வந்தீர்" என்று அனந்தாழ்வான் கேட்க, அவர் "திருக்கோளூரில் வயிற்றுப் பிழைப்பு நடத்தமுடியாமையாலே இங்கு வந்தேன்" என்றார். அனந்தாழ்வான் "திருக்கோளூரில் ஒரு கழுதை மேய்த்தாவது பிழைக்கக் கூடாதோ? திவ்யதேசத்தில் நிலைநின்ற வாழ்ச்சியை விட்டு இப்படி கிராமத்தில் வசிக்கிறீரே!" என்றார். (எண் 672).

ஆழ்வார்கள் பாசுரங்களுக்குச் சுவையான விளக்கங்களை அனந்தாழ்வான் அருளிச்செய்துள்ளார். (எண் 75, 317, 510, 606 பார்க்க.) ஸ்தோத்ர ரத்தினத்தில் 'அமர்யாத:' என்ற சுலோகத்தில் ஆளவந்தார் தமக்குப் பல தாழ்வுகளைக் கூறிக் கொள்கிறார். "அந்த சுலோகம் ஆளவந்தார் அருளிச்செய்ததேயாகிலும், நான் என்வாயால் சொல்லமாட்டேன்" என்று அனந்தாழ்வான் கூறுவராம். (விளக்கம் எண் 102ல் காண்க.)

திவ்வியப்பிரபந்தப் பாசுரங்களில் எழும் ஐயங்களுக்கும் அனந்தாழ்வான் சுவையாக விடை கூறியிருக்கிறார். எம்பெருமானிடம் பறவையைத் தூது அனுப்புகின்ற பராங்குசநாயகி, அதற்குக் கைம்மாறாக அப்பறவைக்கு நித்யவிபூதி, லீலாவிபூதி இரண்டையும் கொடுப்பதாக, 'பொன்னுலகாளீரோ புவனிமுழுதாளீரோ' என்ற பாசுரத்தில் கூறுகிறாள். "இரண்டு உலகங்களையும் பறவைக்குக் கொடுத்துவிட்டால் பிறகு தானும் எம்பெருமானுமாக எங்கே இருப்பாள்?" என்ற கேள்விக்கு, "அக்குருவி காட்டின இடத்தில்" என்று நயமாக விடையளித்தார்.

அனந்தாழ்வான், எம்பெருமானாரைக் காணவேண்டும் என்பதற்காகத் திருமலையிலிருந்து திருவரங்கம் நோக்கிச் சென்று கொண்டிருந்தபோது, திருவரங்கத்தில் வடதிருக்காவேரியின் வடக்குக் கரைக்கு அருகில் வந்து கொண்ருந்தபோது, ஏகாங்கிகள் சிலர் எம்பெருமானார் பரமபதித்துவிட்ட செய்தியைக் கூறினார்கள். அப்போது அனந்தாழ்வானுடன் கூடவந்த ஒருவர் எம்பெருமானாரைப் பிரிந்த வருத்தம் தாளாமல் தற்கொலை செய்துகொள்வதற்காக ஒரு மரத்தின்மீது ஏறிக் கீழே குதிக்க முயன்றார். இதைக் கண்ட அனந்தாழ்வான், "எம்பெருமானார் பிரிந்தார் என்று கேட்டவுடன் உயிர் பிரியாமல் தெளிந்திருந்து மரத்தில் ஏறிய நீ, மரத்திலிருந்து குதித்தாலும் சாகமாட்டாய், கைகால்கள்தான் முறியும்; கீழே இறங்கி வா' என்றாராம். (எண் 149.)

எம்பெருமானுக்கும் ஆசார்யருக்கும் தொண்டுகள் செய்வதற்குத் துறவறம் மேற்கொள்ளவேண்டிய அவசியம் இல்லை என்று கருத்துடையவர் அனந்தாழ்வான். பராசரபட்டரால் திருத்திப்பணிகொள்ளப்பெற்ற நஞ்சீயர், துறவறம் மேற்கொண்டதைக் கண்ட அனந்தாழ்வான் "ஒரு பூவைச் சூடி, வெற்றிலை தின்று, சந்தனத்தைப் பூசி, எம்பெருமானே ரக்ஷகன் என்றிருந்தால் பரமபதத்திலிருந்து தள்ளிவிடுவார்களோ? எதற்காகத் துறவறம் பூண்டீர்?" என்றாராம். (எண் 126.)

ஆழ்வார் 'என்திருமகள்சேர்மார்பனே' என்று அருளியுள்ளதைக் கருத்தில் கொண்டு, அனந்தாழ்வான் தம்முடைய மகளுக்கு 'என்திருமகள்' என்றே பெயரிட்டிருந்தார் என்று ஓரிடத்தில் (எண் 706) குறிப்பிடப்பெற்றுள்ளது.

அனந்தாழ்வானை ஆதிசேஷனுடைய அவதாரம் என்று கூறுவதுண்டு. இதற்குச் சான்று பகர்வதுபோல் ஓர் ஐதிஹ்யம் அமைந்துள்ளது. ஆதிசேஷன் மடியின்மீது எம்பெருமான் சயனித்திருக்கின்றமையை வருணிக்கின்ற நம்மாழ்வார் 'கவர்தலை அரவின் அமளியேறி' என்றருளிச்செய்துள்ளார். 'குழந்தையைத் தன்மடி மீது வைத்திருக்கும் தாய் போல ஆதிசேஷன் தன் மடியின்மீது எம்பெருமானை வைத்திருக்கிறான்' என்று விளக்கிய உரையாசிரியர், அனந்தாழ்வான் ஒருசமயம் திருக்கோட்டியூருக்கு எழுந்தருளியபோது, அங்கு எழுந்தருளியிருந்த பட்டரைத் தமது மடியில் ஆசையுடன் வைத்துக் கொண்டமையை எடுத்துக் காட்டாகக் கூறுகிறார். எம்பெருமானார், பட்டரைப் பெரியபிராட்டியாருக்குத் தத்துப்பிள்ளையாகக் கொடுத்தபடியால், பட்டரைப் பெரியபிராட்டியார் மகன் என்றே அனந்தாழ்வான் கூறுவராம். (பெரியபெருமாளை ஆதிசேஷன் தனது மடியில் வைத்துக் கொண்டிருப்பதுபோலவே பெரியபிராட்டியார் மகனான பட்டரைத் தமது மடியில் அனந்தாழ்வான் வைத்துக் கொண்டார் என்பது உரையாசிரியர் கருத்துப் போலும்!) (எண் 387.)

தம்மைவிட வயதில் சிறியவரும், தமக்கு மகன் நிலையில் உள்ளவருமான பட்டரிடம் தம்முடைய ஐயங்களைத் தெளிவித்துக் கொள்ளவும் அனந்தாழ்வான் தயங்கியதில்லை. "பரமபதத்தில் எழுந்தருளியுள்ள எம்பெருமானுக்குத் திருக்கைகள் இரண்டா நான்கா?" என்று அனந்தாழ்வான் பட்டரிடம் வினவியிருக்கிறார். (எண் 187, 534.) பட்டரிடம் மிக மிக ஈடுபட்டவரான அனந்தாழ்வான் தமது இறுதிக்காலத்தில், "பட்டர் உகந்த திருநாமம் எது?" என்று கேட்க, அருகிலிருந்தவர்கள் 'அழகியமணவாளப்பெருமாள்' என்கிற திருநாமமே பட்டர் உகந்த திருநாமம் என்று கூறினார்களாம். 'திருவேங்கடமுடையான்' என்ற திருநாமத்தையே அனந்தாழ்வான் மிக மிக விரும்பியிருந்தாலும், பட்டர் உகந்த 'அழகியமணவாளப் பெருமாள்' என்ற திருநாமத்தையே கூறித் திருநாட்டிற்கு எழுந்தருளினாராம். (எண் 31.)

திருக்குருகைப்பிரான் பிள்ளான்

எம்பெருமானாருடைய அபிமானபுத்திரர் என்றே கொண்டாடப்படுகிற திருக்குருகைப்பிரான் பிள்ளானைப் பற்றி குருபரம்பரைநூல்களில் அதிகமாகக் கூறப்பெறவில்லை. திவ்வியப்பிரபந்த வியாக்கியானங்களில் பிள்ளானுடைய திருநாமம் பல இடங்களில் குறிப்பிடப்பெற்றுள்ளது. பிள்ளானைப் பற்றிய நிகழ்ச்சிகள் மிகச் சில இடங்களிலும், பிள்ளான் அருளிய விளக்கங்கள் பல இடங்களிலும் குறிப்பிடப்பெற்றுள்ளன. பிள்ளான் ஒருமுறை கொங்குநாட்டிற்கு எழுந்தருளியபோது ஒரு ஸ்ரீவைஷ்ணவர் இல்லத்திலே தங்கினார். அங்கு தாமே தளிகை செய்து அமுதுசெய்வதாக (உண்பதாக) இருக்கையில், அங்குள்ளவர்கள் ஆசார்யருடைய திருநாமங்களைச் சொல்லாமல் எம்பெருமானுடைய நாமங்களை மட்டும் சொல்லிக்கொண்டிருப்பதைக் கண்டு, ஆசார்யபக்தி இல்லாதவர்களுடைய இல்லத்தில் அமுது செய்வது தகாது என்று எழுந்தருளிவிட்டாராம் (எண் 30). அதே சமயத்தில், விவேகம் உள்ள சிஷ்யனை ஆசார்யன் வணங்குவதும் தவறல்ல என்றும் பிள்ளான் அருளிச்செய்துள்ளார் (எண் 136).

பெருவிலையுள்ள ரத்தினத்தை ஒரு ரத்தினஹாரத்தின் நடுவே கோத்தால், அந்த ஹாரத்தின் முன்னும் பின்னும் உள்ள ரத்தினங்களும் மதிப்புப் பெறுவதுபோல, எம்பெருமானார் நமது ஆசார்ய கோஷ்டியின் நடுநாயகமாக அமைவதால் ஆசார்ய கோஷ்டியே சிறப்புப் பெறுகிறது என்று பிள்ளான் அருளிச்செய்வாராம் (எண் 224).

பிறர் கேட்ட நுட்பமான கேள்விகளுக்கும் பிள்ளான் விடையளித்துள்ளார். "எம்பெருமானுக்கு விக்ரஹவ்யாப்தியும் உண்டோ?" என்று நஞ்சீயர் கேட்டபோது, "விக்ரஹ வ்யாப்தியும் உண்டு என்று எம்பார் அருளிச்செய்யக் கேட்டிருக்கிறேன்" என்று அருளிச்செய்தார் (எண் 609, 713). "தமக்கு அருளாதபோதும் ஆழ்வார் எம்பெருமானைத் திருமாலார் என்று கூறுவதன் காரணம் என்ன?" என்று நஞ்சீயர் கேட்டபோது, "இப்படி நம்மை மிகவும் துன்புறுத்துவதற்கு அவன் கற்றுக் கொண்டது பிராட்டியிடம்தானே! என்று அவளையும் சேர்த்து வெறுக்கிறார்" என்று அருளிச்செய்தார். இதை பட்டரும் ஆமோதித்தார் (எண் 154, 441).

திவ்வியப்பிரபந்தப் பாசுரங்களுக்குப் பிள்ளான் அருளிச்செய்த விளக்கங்கள் வியாக்கியானங்களில் பல இடங்களில் குறிப்பிடப்பெற்றுள்ளன. (எண் 441, 429, 432, முதலியவை பார்க்க.) சில திருவாய்மொழிகளின் மையக் கருத்துகளையும் பிள்ளான் அருளிச்செய்துள்ளார். (எண் 464, 630, 653, 680, 711, 750 முதலியவை பார்க்க.)

பிள்ளானுடைய இறுதிக் காலத்தில் அவரைக் காண்பதற்காக நஞ்சீயர் சென்றார். அப்போது பிள்ளான் தனக்கு வீடுபேறு அடைவதில் உள்ள துடிப்பை வெளிப்படுத்தும் வகையில் "கூவிக் கொள்ளும் காலம் இன்னம் குறுகாதோ" என்று பலமுறை கூறிக்

கொண்டிருந்தார். பிள்ளானைப் பிரிய வேண்டுமே என்ற வருத்தத்தால் நஞ்சீயர் அழத் தொடங்கினார். அப்போது பிள்ளான், "சீயரே! எதற்காகக் கிடந்து அழுகிறீர்! நான் பெறப்போகின்ற பேறு இந்த ஸம்ஸாரத்தைக் காட்டிலும் தாழ்ந்தது என்று தோன்றுகிறதோ? (இதைவிட மிக உயர்ந்த பேற்றை அன்றோ நான் அடைய போகிறேன். அப்படியிருக்க, நீர் வருந்தி அழலாமா?)" என்று அருளிச் செய்தாராம். (எண் 689)

கிடாம்பியாச்சான்

எம்பெருமானாருடைய மற்றொரு சீடரான கிடாம்பியாச்சானைப் பற்றிச் சில நிகழ்ச்சிகள் வியாக்கியானங்களில் குறிப்பிடப்பெற்றுள்ளன. திருமாலிருஞ்சோலை அழகரைச் சேவிக்கச் சென்றபோது, ஆளவந்தார் அருளிச்செய்த சுலோகம் ஒன்றை விண்ணப்பித்தபோது அதிலுள்ள 'அகதிம்' என்ற வார்த்தையைக் கேட்டு அழகர், "நம் இராமானுசனுடைய சீடரான நீர் அகதி என்று சொல்லலாமோ?" என்றாராம் (எண் 101). கிடாம்பியாச்சானும் முதலியாண்டானும் திருவரங்கத்திற்குக் கிழக்கே சென்று கொண்டிருந்தபோது திருப்பேர் நகரான் திருக்கோயிலைத் தாண்டி மேற்கொண்டு போகவும் முடியாமல், கோயிலுக்குள் சென்று எம்பெருமானைத் தொழவும் முடியாமல் கோயிலையே மிகவும் ஈடுபாட்டுடன் பார்த்துக் கொண்டிருந்தார்களாம். (எண் 676). எம்பெருமானாருடைய மடத்தில் தண்ணீரமுது பரிமாறுகின்றபோது, ஓரருகே சாயநின்று கிடாம்பியாச்சான் தண்ணீர் பரிமாறியதைக் கண்ட எம்பெருமானார் ஓடிவந்து ஆச்சானுடைய முதுகிலே அறைந்து, "நேரே நின்றன்றோ பரிமாறவேண்டும்" என்று கடிந்து கொள்ள, கைங்கர்யம் செய்வதில் சிறிதும் குறை ஏற்படாவண்ணம் தம்மைத் திருத்திப் பணிகொண்ட எம்பெருமானாரைப் போற்றினாராம் (எண் 575). கிடாம்பியாச்சான் கூரத்தாழ்வானிடம் திருவாய்மொழி காலக்ஷேபம் கேட்டதாக ஓரிடத்தில் (எண் 383) குறிப்பிடப்பெற்றுள்ளது.

பிறர் கேட்ட கேள்விகளுக்கும் கிடாம்பியாச்சான் நயமான விடைகளைப் பகந்துள்ளார். நம்பி திருவழுதிவளநாடுதாஸர் முதலியவர்கள் கிடாம்பியாச்சானிடம் 'அந்யத் பூர்ணாம் அபாம் கும்பாத்' என்ற சுலோகத்திற்கு விளக்கம் கேட்டுக் கொண்டிருந்தபோது, "இவையும் ஒருக்கால் அமையும்" என்கிறதோ என்று கேட்க, கிடாம்பியாச்சான் "அரைக்கால் அமையும்" என்றாராம். (இதன் விளக்கத்தை எண் 347ல் காண்க.) திவ்வியப்பிரபந்தப் பாசுரங்களுக்கு மிகநயமான விளக்கங்களை அளிப்பதில் வல்லவரான பட்டரும் இவரிடம் ஒரு கேள்வி கேட்டார். அப்போது கிடாம்பியாச்சான், "துடுப்பு இருக்கக் கை வேகவேண்டுமோ?" என்று கூறி இக் கேள்விக்கு எம்பெருமானார் அளித்துள்ள விடையை அவருக்கு எடுத்துக் கூறினார். (எண் 235 பார்க்க.) ஆயினும் தம்மைவிட வயதில் மிகவும் சிறியவரான பட்டரிடம் கிடாம்பியாச்சான் மிகவும் மதிப்புடன் பழகிவந்தார். இளையாழ்வான் என்பவர் கிடாம்பியாச்சானிடம் "எம்பெருமானாருடைய

சீடரான நீர் பட்டருடைய சீடர்களைக் காட்டிலும் அவரிடம் தாழ நின்று பழகுவது ஏன்?" என்று கேட்க, "தம்மைப்போலவே பட்டரை நினைத்திருக்கும்படி எம்பெருமானார் ஒருநாள் அருளிச்செய்தார். அதனால்தான் பட்டரை எம்பெருமானாரைப்போலவே நினைத்துத் தாழநின்று பழகுகிறேன்" என்றாராம். (எண் 811.) இதனால் கிடாம்பியாச்சானுடைய ஆசார்யபக்தி நன்கு புலனாகின்றது.

பிள்ளை உறங்காவில்லி தாஸர்

எம்பெருமானாருடைய சீடரான பிள்ளை உறங்காவில்லிதாஸரைப் பற்றிப் பல சுவையான செய்திகள் வியாக்கியானங்களில் கூறப்பெற்றுள்ளன. இவர் எம்பெருமான்மீது மிகமிகப் பரிவு கொண்டவர் ஆதலின் திருவரங்கன் புறப்பாடு கண்டருளும்போது, ஒரு கத்தியை உருவிப்பிடித்துக் கொண்டு செல்வராம். பெருமாளை எழுந்தருளச் செய்யும்போது யாரேனும் இடறினாலோ அல்லது அசைந்தாலோ அக்கணமே தம்முடைய உயிரை மாய்த்துக் கொள்வதற்காகவே அப்படிக் கத்தியைப் பிடித்துக் கொண்டிருப்பராம். இதனால் இவரை மஹாமதி (பேரறிஞர்) என்றே அழைப்பர்களாம். (எண் 218, 718). கூரத்தாழ்வானிடம் திருவாய்மொழி கேட்கும்போது, தாஸர் அப்பாசுரங்களில் மிகவும் ஈடுபட்டுக் கண்ணும் கண்ணீருமாக இருப்பராம். இதைக் கண்ட கூரத்தாழ்வான், "எம்பெருமானுடைய குணங்களை நினைத்தவுடனே உருகும் நெஞ்சை உடைய உம்முடைய பிறவியும் ஒரு பிறவியே!" என்று கொண்டாடினாராம். (எண் 379). அதனால் 'பாலேய்தமிழர் இசைகாரர் பத்தர்' என்ற ஆழ்வார் அருளிச்செயலில் பத்தர் என்பதற்குப் பிள்ளை உறங்காவில்லி தாஸரை உதாரணமாக ஆழ்வான் எடுத்துக்காட்டியிருக்கிறார் (எண் 446).

ஆசார்யரான எம்பெருமானாரிடம் தாஸர் மிக்க ஈடுபாடு உடையவர். ஒருசமயம் எம்பெருமானார் திருவரங்கத்தில் ஏதே மனக்கசப்பு உண்டாகித் திருமலைக்குச் செல்ல நினைத்தார். அப்போது ஒரு ஸ்ரீவைஷ்ணவனுக்கு நெல் கொடுக்க விரும்பிய எம்பெருமானார், மடத்துக் களஞ்சியத்தின் காவலரான பிள்ளை உறங்காவில்லிதாஸரிடம் அந்த ஸ்ரீவைஷ்ணவனை அனுப்பினார். தமது திருக்கையில் அணிந்திருந்த பவித்திரத்தைக் கழற்றிக் கொடுத்து, அதை தாஸரிடம் காட்டி நெல் பெற்றுக் கொள்ளுமாறு சொன்னார். ஆனால், எம்பெருமானார் திருமலை செல்லப் போவதை அறிந்த தாஸர், அவரைப் பிரியவேண்டுமே என்ற வருத்தத்தினால் கதவைச் சாத்திக்கொண்டு அழுதுகொண்டிருந்தாராம். (எண் 334.)

பிள்ளை உறங்காவில்லி தாஸரைக் கண்டால் பிறதெய்வங்களும் நடுங்கும் என்பதற்கு எடுத்துக்காட்டாக இரண்டு நிகழ்ச்சிகள் கூறப்பெற்றுள்ளன. ஒருமுறை தாஸருடைய வேலையாள் ஒருவனுக்கு ஐயனார் ஏறி வலிக்கவே, தாஸருடைய ஆபரணங்களைக் கொண்டு வந்து அவனுக்குப் பூட்ட, முன்னைக் காட்டிலும் அதிகமாக வலித்ததாம். காரணம் கேட்டபோது, "தாஸர் சாத்திக் கொள்வதை எனக்குப் பூட்டினால்

நான் தாங்குவேனோ?'' என்று அத்தேவதை கூறியதாம். (எண் 565.) பிறதெய்வத்தை அறியாமல் தொழுதுவிட்டு அதனால் மயங்கிக் கிடந்தவரைத் தெளிவிப்பதற்கு, தாஸருடைய ஸ்ரீபாததூளியை அவர்மேல் இட்ட நிகழ்ச்சியும் ஓரிடத்தில் (எண் 568) குறிப்பிடப்பெற்றுள்ளது.

கிருஷ்ணாவதாரத்தில் பிள்ளை உறங்காவில்லிதாஸர் மிகவும் ஈடுபாடு கொண்டவர் என்பது பல இடங்களில் அவரைப்பற்றிக் குறிப்பிடப்பெற்றுள்ள செய்திகளிலிருந்தும், அவர் அருளிய வார்த்தைகளிலிருந்தும் புலனாகின்றது. கண்ணபிரான் ஒருத்தி மகனாய்ப் பிறந்து ஓரிரவில் ஒருத்தி மகனாய் வளர்ந்தான். இதை நினைக்கின்றபோது தாஸர், 'கண்ணபிரானோ அப்போதுதான் பிறந்த குழந்தை; எனவே தன்னைத் தானே காப்பாற்றிக் கொள்ளக்கூடிய பருவம் அவனுக்கு இல்லை. கம்ஸனோ எப்படியும் இவனுக்குத் தீங்குசெய்துவிடவேண்டும் என்று துடிக்கிறான். அப்படிப்பட்ட சமயத்தில் கண்ணனுக்கு உதவியது அவன் பிறந்த இரவின் இருள் அன்றோ! எனவே கண்ணனைக் காப்பாற்றிய அந்த இருளையே நாம் சரணம் புகவேண்டும்' என்பராம் (எண் 117, 658). ''கண்ணனுடைய கண்ணழகுக்குக் காரணம் அவனுடைய தாயான யசோதை அழகான கண் படைத்திருந்ததேயன்றோ! தாயைப்போலவன்றோ பிள்ளை!'' என்பராம் (எண் 58, 258). எத்தனை வெண்ணெய் விழுங்கினாலும் திருப்தியில்லாமல் மேலும் மேலும் வெண்ணெயைக் களவு செய்கின்ற கண்ணனைப் பற்றி, ''இவனுடைய வயிற்றை வண்ணானுக்கு இடலாமே!'' என்று நகைச்சுவை தோன்றக் கூறுவராம் (எண் 326).

கண்ணனை யசோதை உரலோடு கட்டினாள் என்பதைக் கேட்ட தாஸர் கண்ணனுக்கு ஏற்பட்ட இந்த அவமானத்தைப் பொறுக்கமாட்டாமல், 'கண்ணன் என்ன, பூட்டை உடைத்து விலைமதிப்பில்லாத மாணிக்கத்தையா திருடிவிட்டான்? வெண்ணெயைத்தானே உண்டான். அதுவும் அவனுடைய இல்லத்தில் இல்லாத வெண்ணெயா? தன்னுடைய இல்லத்திலேயே வேண்டிய வெண்ணெய் இருக்கும்போது, தன் இல்லத்திற்கும் பிறர் இல்லத்திற்கும் வேறுபாடு தெரியாமல் ஏதோ செய்துவிட்டான். இவனைப் போய் வெண்ணெய் திருடினான், பாலைத் திருடினான் என்றெல்லாம் கூறுகிறார்களே! இது என்ன அநியாயம்?' என்று சிறுபிள்ளையைப்போலப் புலம்புவராம் (எண் 15). ஒருமுறை யாரோ இடையன் ஒருவன் பாலைத் திருடிவிட, அவ்விடையனைக் கட்டி அடித்துக் கொண்டிருப்பதைத் தற்செயலாக அவ்வழியே வந்த பிள்ளை உறங்காவில்லி தாஸர் கண்டார். கண்ணபிரானே கட்டுண்டு நிற்பதாக நினைத்து, 'அவ்விடையன் செய்த தவறுகளுக்கெல்லாம் நானே பொறுப்பேற்றுக் கொள்கிறேன்; அவனுக்குப் பதிலாக என்னைத் தண்டியுங்கள்' என்று கூறி, அவ்விடையனை விடுவித்தாராம் (எண் 378). இந்நிகழ்ச்சிகள் அனைத்தும் பிள்ளைஉறங்காவில்லி தாஸருக்கு கிருஷ்ணாவதாரத்தில் உள்ள ஈடுபாட்டைக் காட்டுகின்றன.

ஆண்டாள்

கூரத்தாழ்வானுடைய தேவியாரான ஆண்டாளைப் பற்றியும் வியாக்கியானங்களில் சில இடங்களில் குறிப்பிடப்பெற்றுள்ளன. 'நன்மையால் மிக்க நான்மறையாளர்கள்' என்ற மதுரகவியாழ்வாருடைய பாசுரப்பகுதிக்கு விளக்கம் உரைக்கும்போது, தமக்குத் தீங்கு செய்தவர்களுக்கும் நன்மைவிரும்பிய ஆண்டாளை உதாரணமாகக் காட்டியுள்ளார் உரையாசிரியர். (எண் 196). ஆண்டாள் ஏகாதசியன்று பட்டினியிருந்து மறுநாள் காலை தம்முடைய மகனாரான பட்டரிடம் தீர்த்தம் ஸாதிக்கும்படி வேண்டுவதுண்டு என்று ஓரிடத்தில் குறிப்பிடப்பெற்றுள்ளது (எண் 88). தம்முடைய மகனாரான பட்டருடைய ஸ்ரீபாததீர்த்தத்தை ஆண்டாள் உட்கொள்வராம் (எண் 56). திருமங்கையாழ்வாரை வெட்டிமையர் என்றும், எம்பெருமானாரைக் கோயிலண்ணன் என்றும் ஆண்டாள் அருளிச்செய்வராம். (இதன் விளக்கத்தை எண் 84ல் காண்க.)

பிற சீடர்கள்

எம்பெருமானாருடைய சீடர்களான வங்கிப்புரத்து நம்பி, சோமாசியாண்டான், பிள்ளை அமுதனார் முதலிய சீடர்கள் சிலரைப் பற்றியும் சில இடங்களில் குறிப்பிடப் பெற்றுள்ளன. ஆயினும் அவர்களைப் பற்றிய நிகழ்ச்சிகள் அதிகம் குறிப்பிடப்பெறாமல், அவர்கள் அருளிச்செய்த விளக்கங்களே அதிகமாகக் குறிப்பிடப்பெற்றுள்ளனன.

பராசர பட்டர்

நாலாயிர திவ்வியப்பிரபந்த வியாக்கியானங்களில் ஆசார்யர்கள் அனைவரைக் காட்டிலும் மிக அதிகமாகக் குறிப்பிடப் பெற்றுள்ளவர் பராசரபட்டரே ஆவார். முன்னர் கூறிய ஆறு வகைகளிலும் பட்டரைப் பற்றிப் பல இடங்களில் குறிப்பிடப் பெற்றுள்ளன. ஆயினும் பட்டருடைய வாழ்க்கை நிகழ்ச்சிகள் மிகமிகக் குறைவாகவே இடம்பெற்றுள்ளன. பட்டர் பிறந்தவுடன் எம்பெருமானார் அவரைப் பெரிய பிராட்டியார்க்கு நீராட்டி மஞ்சள் நீர் குடித்தபிள்ளையாக (தத்துப்பிள்ளையாக)க் கொடுத்தார் (எண் 387).

பட்டருக்கும் அவருடைய தம்பியான சீராமப்பிள்ளைக்கும் அவர்களுடைய திருத்தகப்பனாரான ஆழ்வானே திருவாய்மொழியின் பொருள்களை விளக்கினார் (எண் 427).

திருக்கோயிலை பட்டர் பிரதக்ஷிணம் செய்யும்போது மிகவும் ஈடுபாட்டுடன் மண்டபங்களையும் திருக்கோபுரங்களையும் கண்களால் பருகுவதுபோல் பார்த்துக் கொண்டே மிக மெதுவாகப் பிரதக்ஷிணம் செய்வார் (எண் 42). வடமதுரைப் பிறந்தான் மகன் ஸ்ரீரங்கவிமானத்தின்முன் கண்களை மூடிக்கொண்டு ஜபம் செய்து கொண்டிருப்பதைக் கண்ட பட்டர், "கோயிலாழ்வாரைப் பார்க்க வேண்டிய கண்களை மூடிக்கொண்டிருக்கிறானே! இவன் கண்படைத்த பயன் பெறமாட்டான் அன்றோ?" என்று

கூறி வருத்தத்துடன் எழுந்தருளிவிட்டார். சில நாள்களுக்குள் அவனுக்கு கண்பார்வை போய்விட்டது.

பட்டர் ஒருநாள் மிக இனிதாக வாசித்தபடியைக் கண்ட எம்பெருமானார் மிக மிக மகிழ்ந்து, பட்டரைத் தம்மைப் போலவே பாவிக்குமாறு தம்முடைய சீடர்களிடம் கூறினார். அதனால் எம்பெருமானாருடைய சீடரான கிடாம்பியாச்சான், பட்டருடைய சீடர்களைக் காட்டிலும் அவரிடம் தாழ நின்று பழகுவார் (எண் 811). பட்டரை விட வயதில் மூத்தவர்களான எம்பார், பிள்ளை திருநறையூர் அரையர் ஆகியோர் பட்டரை மிகவும் கொண்டாடியிருக்கிறார்கள் (எண் 225, 137, 363, 364).

பட்டருடைய காலத்தில் வாழ்ந்தவனான அகளங்கப்ரம்மராயன் (ஆறாயிரப்படி குருபரம்பராப்ரபாவத்தில் வீரசுந்தரப்ரம்மராயன் என்று குறிப்பிடப் பெற்றுள்ளது.) திருவரங்கம் திருக்கோயிலில் ஒரு மதிள் கட்டி வரும்போது, வழியில் இளையாழ்வான் (ஆறாயிரப்படி குருபரம்பராப்ரபாவத்தில் பிள்ளைப்பிள்ளையாழ்வான் என்று குறிப்பிடப்பெற்றுள்ளது) என்பவருடைய இல்லம் குறுக்கிட, அதை இடிக்க முயன்றபோது, பட்டர் அதைத் தடுக்க முயன்றார் (எண் 699). (ஆயினும் அவன் பட்டருடைய சொல்லைக் கேளாமல் இளையாழ்வான் இல்லத்தை இடித்து விட்டு மதிள் கட்டினான். இதனால் மனவருத்தமடைந்து) பட்டர் திருவரங்கவாஸத்தை வெறுத்துத் திருக்கோட்டியூரில் சில காலம் தங்கியிருந்தார் (எண் 377). அகளங்கப்ரம்மராயன் பட்டரை சமாதானம் செய்வதற்காக இருகை மதவாரணம் என்பவனை அனுப்பினான். இருகைமதவாரணனை பட்டர் 'கர்ப்பதாஸர்' என்று கொண்டாடினார் (எண் 778).

ஒரு பெண் தவறு செய்து விட்டதாகக் கூறி அவளைத் தண்டிக்க வேண்டும் என்று பட்டரிடம் அனுமதி வேண்டியபோது, 'திருவரங்கத்தில் வாழ்வதையே பேறாகக் கொண்டிருப்பவளை எப்படித் தண்டிப்பது?' என்றார் (எண் 344).

ஆச்சிமகன், நல்லான் முதலியவர்களுடைய இறுதிக்காலத்தில் அவர்களை நலம் வினவ, பட்டர் அவர்களுடைய இல்லங்களுக்கு எழுந்தருளியுள்ளார் (எண் 357, 623).

பட்டர் எம்பெருமானுடைய விபவாவதாரங்களில் இராமாவதாரத்திலும் (எண் 213) அர்ச்சாவதாரத்தில் திருவரங்கனிடமும் மிக்க ஈடுபாடு உடையவராக இருப்பர். மூலவர் பெரியபெருமாளே கிருஷ்ணன் என்றும், உத்ஸவர் நம்பெருமாளே இராமன் என்றும் அவர் அருளிச்செய்வர் (எண் 175). "பரமபதத்தில் எம்பெருமானுக்கு இரண்டு திருக்கரங்களா அல்லது நான்கு திருக்கரங்களா?" என்ற கேள்விக்கு, "இரண்டுபடியாகவும் இருக்கும்" என்று பட்டர் விடையளித்தார். "இரண்டிலும் அழகியது எது?" என்று கேட்க, "இரண்டுமே அழகியதுதான்; இரண்டு திருக்கரங்களோடு எழுந்தருளியிருந்தால் மூலவர் பெரியபெருமாளைப்போல இருக்கும், நான்கு திருக்கரங்களோடு எழுந்தருளியிருந்தால்

உத்ஸவர் நம்பெருமாளைப்போல இருக்கும்'' என்று பட்டர் விடையளித்தார் (எண் 187). "எம்பெருமானுடைய எல்லாநிலைகளினுடைய அழகையும் திருவரங்கத்திலேயே காணலாம் நின்ற நிலையில் அழகை உத்ஸவர் நம்பெருமாளிடமும், இருந்த நிலையில் அழகை ஸ்ரீரங்கநாச்சியாரிடமும், கிடந்தநிலையில் அழகைப் பெரியபெருமாளிடமும் காணலாம்'' என்று பட்டர் அருளிச்செய்வர் (எண் 770). பட்டர் மிக விரும்பியிருந்த திருநாமம் 'அழகிய மணவாளப் பெருமாள் என்கிற திருநாமமே என்று பல இடங்களில் (எண் 31, 245, 311, 666) கூறப்பெற்றுள்ளது.

பட்டர் தம்முடைய இறுதிக்காலத்திலும் திருவரங்கனைப் பிரியவேண்டுமே என்றுதான் வருந்தினார். பட்டர் தம்முடைய இறுதிக்காலத்தில் முதுகில் புண்ணாலே வருந்திக் கிடந்தபோது, பெருமாள் பட்டரைப் பார்த்து, "உமக்கு என்ன வேண்டும்?'' என்று கேட்க, பட்டர் "தேவரீர் அணிந்து கொண்டிருக்கின்ற ஆடையைச் சற்றே விலக்கி, தேவரீருடைய திருவரை, திருத்துடை முதலிய திருமேனியழகு முழுவதையும் நான் சேவிக்கும்படி காட்டியருள வேணும்'' என்றாராம். பெருமாளும் அப்படியே காட்டியருள, பட்டரும் சேவித்தார். பெருமாளுடைய திருமேனியை இப்படி சேவிப்பவர்கள் விரைவிலேயே பரமபதம் எய்திவிடுவார்கள் என்பதொன்றுண்டு. எனவே, பெருமாள் "பட்டரே! சீக்கிரம் பரமபதம் போக வேண்டுமே என்று பயப்படுகிறீரோ?'' என்று வினவினாராம். அதற்கு பட்டர், "நாயந்தே! தேவரீர் எனக்குச் செய்து கொடுக்காத பெருமைகள் எதுவுமேயில்லை. இங்கேயிருந்து கொண்டே அடியேன் 'இவனுக்குப் பரமபதம் தந்தருளவேணும்' என்று ஒரு சிறிய ஓலையிலெழுதி அதை ஒருவனிடம் கொடுத்து தேவரீரிடம் அனுப்பினால் அவனுக்குத் தேவரீர் பரமபதம் தந்தருளும்படியன்றோ தேவரீர் அடியேனுக்கு அருள் புரிந்துள்ளது. அதில் எந்தக் குறையுமில்லை. ஆனால் இங்கே நம்பெருமாளாக எழுந்தருளியுள்ள தேவரீருடைய குளிர்ந்த முகத்தையும், திருநாமம் சாற்றியதாலுண்டான தழும்பையும், புன்முறுவலையும் இழந்து அங்கே செல்ல வேண்டும் என்றால் வருந்தாமல் இருக்க முடியுமோ?'' என்றாராம் (எண் 140, 539).

திவ்வியப்பிரபந்தப் பாசுரங்களுக்கு பட்டர் அருளிச்செய்த விளக்கங்கள் ஆங்காங்கே குறிப்பிடப்பெற்றுள்ளன. பிற ஆசார்யர்களுடைய விளக்கங்களைக் காட்டிலும் பட்டருடைய விளக்கங்கள் மிகவும் நயமாகவும் சுவையாகவும் அமைந்துள்ளன. (362, 780 முதலியவை பார்க்க.) ஒரு சில இடங்களில் பாசுரங்களில் உள்ள கருத்தைக் கதைகள் மூலம் பட்டர் விளக்கியுள்ளார். (எண் 424, 455, 509 ஆகியவை பார்க்க.)

பட்டர் தம்முடைய சீடர்கள் கேட்ட கேள்விகளுக்குச் சுவையான விடைகளை அருளிச்செய்துள்ளார். ஆழ்வார் எல்லோரும் கிருஷ்ணாவதாரத்திலேயே மிகவும் பரிவு உடையவர்களாக இருப்பதற்குக் காரணம் என்ன? என்ற கேள்விக்கு, இராமாவதாரத்திலே எல்லாம் பாதுகாப்பாக இருந்தது என்றும், கிருஷ்ணாவதாரத்தில் எல்லாமே அஞ்சும்படியாக

இருந்தது என்றும் அதனால்தான் ஆழ்வார்கள் கிருஷ்ணவாதாரத்திலேயே அதிகம் பரிவு கொள்கிறார்கள் என்றும் அருளிசெய்தார் (எண் 1). இதேபோன்ற மற்றொரு கேள்விக்கு மற்றொரு வகையாகவும் பதிலருளிச்செய்துள்ளார் (எண் 629). இதேபோல் நஞ்சீயர் பல கேள்விகளைக் கேட்க, பட்டர் மிகமிகச் சுவையாக அளித்த விடைகள் பல இடங்களில் குறிப்பிடப்பெற்றுள்ளன. (எண் 1, 5, 10, 14, 24, 43, 48, 61, 66, 119, 124, 143, 152, 154, 167, 170, 200, 211, 288, 293, 367, 373, 389, 399, 404, 431, 447, 514, 525, 560, 629, 800, 817 முதலியவை பார்க்க.) நஞ்சீயருக்கு மட்டுமே அல்லாமல் மற்றும் சிலர் கேட்ட கேள்விகளுக்கும் மிகச்சுவையாக பட்டர் விடை அருளிச்செய்துள்ளார். அனந்தாழ்வான் (எண் 187), பிள்ளை அமுதனார் (எண் 262), பிள்ளை திருநறையூர் அரையர் (எண் 256, 316), சீராமப்பிள்ளை (எண் 499), பிள்ளை விழுப்பரையர் (எண் 351), ஆப்பான் (587), சிறியாத்தான் (எண் 213, 277, 715), வண்துவரைப்பெருமாள் (660), நம்பி திருவழுதி வளநாடு தாஸர் (107), நிலாத்துக்குறி பகவர் (எண் 269), தமிழ்ப்புலவர்கள் (எண் 438, 476), ஆலவாயுடையான் (எண் 243) முதலிய பலர் கேட்ட கேள்விகளும், அதற்கு பட்டர் அளித்த சுவையான விடைகளும் வியாக்கியானங்களில் பல இடங்களில் குறிப்பிடப்பெற்றுள்ளன.

பட்டர் அருளிச்செய்த வார்த்தைகளும் மிக மிக அதிகமான இடங்களில் குறிப்பிடப்பெற்றுள்ளன. அந்தந்த இடங்களுக்குப் பொருத்தமாக பட்டர் அருளிச் செய்த வார்த்தைகள் மிக மிகச் சுவையாக அமைந்துள்ளன. நந்தகோபர் திருமாளிகை வாசலில் கண்ணனுடைய தீம்புக்கு இலக்கான பெண்கள் படுத்தபடுக்கையாக் கொண்டுவரப்பட்டுக் கிடத்தப்பட்டிருப்பர். இதற்கு உதாரணம் காட்டும் பட்டர், 'மருத்துவன்வீட்டு வாசலில் நோயாளிகள் படுக்கைகளுடன் (stretcher) கொண்டுவரப்பட்டுக் கிடத்தப்பட்டிருக்குமா போலே நந்தகோபன் வாசல் திகழ்கிறது என்பராம் (எண் 52, 147). கஜேந்திரனுடைய காலைக் கவ்வின முதலைக்கும் எம்பெருமான் அருள்புரிந்தமையைப் பற்றி அருளிச் செய்த பட்டர், 'ராஜகுமாரனைச் சிறையிலிட்டால், கைக்கூட்டனுக்கும் பால்சோறிடுவதுபோல முதலைக்கும் அருள்செய்தான்' என்பராம் (எண் 257). இதுபோல் பட்டர் அருளிச்செய்த பல வார்த்தைகள் வியாக்கியானங்களில் குறிப்பிடப்பெற்றுள்ளன.

திருவாய்ப்பாடியில் உறங்கிக் கிடக்கின்ற கோபிகையை மற்ற கோபிகைகள் எழுப்புமிடத்தில், பட்டர் போதுவிடியும் வரை உறங்கியிருக்க, ஆசார்யர்கள் கொண்டகோலங்களும் தாங்களுமாய்ச் சென்று அவரை எழுப்புதுபோல எழுப்புகிறார்கள் என்று பட்டரையே உரையாசியர் உதாரணமாகக் காட்டியுள்ளார் (எண் 81).

சில இடங்களில் பாசுரங்களுக்குப் பொருத்தமாக பட்டர் அருளிச்செய்த சுலோகங்களும் மேற்கோள்களாக எடுத்துக் காட்டப்பெற்றுள்ளன. (எண் 43, 188 முதலியவை பார்க்க.)

நஞ்சீயர்

பட்டருடைய சீடரான நஞ்சீயரைப் பற்றிச் சில செய்திகள் வியாக்கியானங்களில் கூறப்பெற்றுள்ளன. சிறிய திருமடலில் 'வெந்நரகம் சேரா வகையே சிலை குனித்தான்' என்ற பகுதிக்கு பட்டர் அளித்த விளக்கத்தைக் கேட்டது முதல் அவரைப் பார்க்க வேண்டுமென்று நஞ்சீயர் ஆவலுடன் இருந்ததாக ஓரிடத்தில் (எண் 401) குறிப்பிடப் பெற்றுள்ளது. இதனால் நஞ்சீயர் மேல்நாட்டில் (கர்நாடகத்தில்) பிறந்திருந்தாலும், தமிழில் புலமை உடையவராகத் திகழ்ந்திருக்கலாம். நஞ்சீயரைப் பற்றி பட்டரிடம் கூறி, பட்டர் மேல்நாட்டிற்குச் எழுந்தருளி நஞ்சீயரைத் திருத்திப் பணிகொள்வதற்குக் காரணமாக அமைந்தவர் பெயர் திருமழிசை தாஸர் என்றும், அவருடன் சேர்ந்து நஞ்சீயர் திருவாய்மொழி ஓதுவதுண்டு என்றும் எண் 380ல் குறிப்பிடப் பெற்றுள்ளது. பட்டர் நஞ்சீயரைத் திருத்திப் பணிகொண்டமை பற்றி வியாக்கியானங்களில் குறிப்பிடப்பெறவில்லை என்றாலும், ஒரு புருஷகாரமும் இல்லாமல் பட்டர் தாமே எழுந்தருளித் தம்மைத் திருத்திப் பணிகொண்டமை பற்றி நஞ்சீயர் அருளிச்செய்த வார்த்தை (எண் 192ல்) குறிப்பிடப்பெற்றுள்ளது. நஞ்சீயர் துறவறம் மேற்கோண்டபோது, "முக்கோலைப் பார்த்து 'நீ எனக்குத் துணையாவாய்' என்று கூறவேண்டியிருக்கின்றதே!" என்று கூறினார் (எண் 208). நஞ்சீயர் துறவறம் மேற்கொண்டதைக் கண்ட அனந்தாழ்வான், அதுபற்றி வருந்தினார் என்றும் (எண் 126ல்) கூறப்பெற்றுள்ளது.

நஞ்சீயர் அத்வைதியாக இருந்து, பிறகு பட்டரால் விசிஷ்டாத்வைதியாகத் திருத்திப் பணிகொள்ளப்பட்டமையால், விசிஷ்டாத்வைதக் கொள்கைகளில் மிகவும் ஈடுபாடு கொண்டவராகத் திகழ்ந்தார். பரப்பிரம்மத்திற்கு குணங்கள் முதலியவை எவையும் கிடையா என்று அத்வைத மதம் கூறுகிறது. ஆனால் விசிஷ்டாத்வைத மதம், எம்பெருமான் எல்லாக் கல்யாணகுணங்களும் பொருந்தியவன் என்று கூறுகிறது. இதில் மிகவும் ஈடுபட்ட நஞ்சீயர் "பரப்பிரம்மத்திற்கு குணங்கள் முதலியவை கிடையா என்று கூறுகின்ற சூன்யவாதிகள் உலவுகின்ற இந்த உலகத்தில் அழகிய திருமேனியை உடையவன் எம்பெருமான் என்று கூறுகின்ற ஆழ்வார்களைப் பற்றப் பெற்றோமே! இதுவன்றோ நம்முடைய பேறு" என்று கூறுவராம் (எண் 168, 475). 'விசேஷணத்தில் ஈடுபடாமல் விசேஷ்யத்திலேயே ஈடுபடுகின்ற என்நெஞ்சுக்கு மாயாவாத ருசி உண்டோ' என்று நஞ்சீயர் அருளிச்செய்ததாகவும் ஓரிடத்தில் குறிப்பிடப்பெற்றுள்ளது. (இதன் விளக்கத்தை எண் 603ல் பார்க்க.) ஸ்ரீவைஷ்ணவர்களிடம் மிகவும் மதிப்பும் மரியாதையும் கொண்டிருந்த நஞ்சீயர் ஸ்ரீவைஷ்ணவனின் இலக்கணத்தை அருளிச்செய்துள்ளார். "பிறர் துன்பம் கண்டால் ஐயோ என்று இரங்குபவன் எவனோ அவனே வைஷ்ணவன்" என்று நஞ்சீயர் அருளிச்செய்துள்ளார் (எண் 202). ஸ்ரீவைஷ்ணவன் ஒருவனை தண்டனிட்டு வணங்கியவன்று, தமக்கு உண்டு பசிகெட்டாற்போலிருக்கும் என்று நஞ்சீயர்

அருளிச்செய்வராம் (எண் 639). ஸ்ரீவைஷ்ணவர்கள் ஒருவர்க்கொருவர் வெறுப்புக் கொள்ளக்கூடாது என்றும் அவர்கள் நட்புடன் கலந்து பழகவேண்டும் என்றும் அவர் அருளிச்செய்துள்ளார் (எண் 537).

நஞ்சீயரிடம் பட்டர் மிகவும் அன்புடன் இருந்தார். திவ்வியப்பிரபந்தப் பாசுரங்களைச் சொல்லும்படி நஞ்சீயருக்கு நியமித்து, அவர் பாசுரங்கள் சொல்லும் அழகை பட்டர் ரசிப்பதுண்டு (எண் 614). ஒருமுறை நஞ்சீயரைப் பாசுரங்கள் சொல்லச் சொல்லி கேட்டுக் கொண்டிருந்தபோது, நஞ்சீயர் 'என்திருமகள்சேர்மார்பனே என்னுமென்னுடை ஆவியே என்னும்' என்று வரிகளைச் சேர்த்து அருளிச்செய்ய, அதைக் கேட்ட பட்டர், அதன் பொருளில் ஆழ்ந்து, அப்படியே அணையில் சாய்ந்துவிட்டார் (எண் 707). சில சமயங்களில் பட்டர் தமக்கு பதிலாக நஞ்சீயரை விளக்கங்கள் கூறும்படி நியமிப்பதுண்டு (எண் 377). பிள்ளை அழகிய மணவாள அரையருக்குத் துவயம் உபதேசித்தபோது எல்லோரையும் வெளியே அனுப்பிய பட்டர், நஞ்சீயரைத் தேடியழைத்து வைத்துக் கொண்டு த்வயத்தின் பொருளை உபதேசித்தார் (எண் 690). ஒருமுறை பட்டர் 'மைப்படிமேனியும்' என்ற திருவிருத்தப் பாசுரத்தை விளக்கிக் கொண்டிருந்தபோது, அப்பாசுரத்தின் கருத்திற்குப் பொருத்தமாக 'இன்னார் என்றறியேன்' என்ற பெரிய திருமொழிப்பாசுரத்தை நஞ்சீயர் எடுத்துக் கொடுக்க, இதனால் அகமகிழ்ந்த பட்டர், "பலநூறுகாதங்களுக்கு அப்பால் பிறந்திருந்தும், இவ்வளவுதூரம் வந்து, இப்பாசுரத்தை எடுத்துக் கொடுப்பதே!" என்று வியந்து கொண்டாடினார் (எண் 376). நஞ்சீயருக்குத் தமது மகிழ்ச்சியைத் தெரிவிக்கும் வண்ணம் அவருக்குத் தாம் அமுது செய்து மிகுந்த பிரசாதத்தைப் போனகம் செய்த சேடமாக பட்டர் வழங்கினார் (எண் 181).

நஞ்சீயர் பட்டரிடம் பல நுட்பமான வினாக்களை எழுப்ப அவைகளுக்கெல்லாம் பட்டர் சுவையான விளக்கம் அளித்திருக்கிறார். (எண் 1, 5, 10, 14, 24, 43, 48, 61, 66, 119, 124, 143, 152, 154, 167, 170, 200, 211, 288, 293, 367, 373, 389, 399, 404, 431, 447, 514, 525, 560, 629, 800, 817 முதலியவை பார்க்க.) பட்டரிடம் மட்டுமல்லாமல் பிள்ளானிடமும் கேள்வி கேட்டிருக்கிறார் (எண் 713). பின்னாளில் நஞ்சீயரின் சீடரான நம்பிள்ளை முதலானோர் கேட்ட கேள்விகளுக்கு நஞ்சீயர் சிறந்த விடைகளை அளிப்பதற்கு இவையே அடிப்படையாக அமைந்தன. (எண் 115, 121, 129, 272, 278, 281, 332, 339, 567, 569, 594, 690, 724, 794 முதலியவை பார்க்க.) சில இடங்களில் தாம் கூறிய விளக்கங்களைவிடச் சிறந்த விளக்கங்களை நம்பிள்ளை கூறியபோது, அவற்றை மனம் திறந்து பாராட்டியதோடல்லாமல், தம்முடைய விளக்கங்களைவிட அவையே பொருத்தமான விளக்கங்கள் என்று பெருந்தன்மையுடன் கூறியிருக்கிறார். (எண் 201, 205, 212, 284, 679, 783 முதலியவை பார்க்க.) நம்பிள்ளையின் ஐயங்களுக்கு மட்டுமல்லாமல் மற்றும் பலருடைய ஐயங்களுக்கும் நஞ்சீயர் விடை கூறியிருக்கிறார். சுந்தரபாண்டியன் என்ற

அரசன் நஞ்சீயரைச் சந்தித்து கேள்விகள் கேட்டிருக்கிறான் (எண் 127). கரிகால்சோழப்ரம்மராயன் என்பவன் திருவாய்மொழிக்கு ஓர் உரை எழுதி அதை நஞ்சீயரிடம் காட்டியிருக்கிறான் (எண் 541).

ஸ்ரீவைஷ்ணவஸம்ப்ரதாயத்தின் அடிப்படைத் தத்துவங்களை விளக்கி நஞ்சீயர் அருளிச்செய்த வார்த்தைகள் பல இடங்களில் குறிப்பிடப் பெற்றுள்ளன. 'தர்மங்களை விடுகையும் உபாயமன்று, அவனைப் பற்றுகையும் உபாயமன்று, விடுவித்துப் பற்றுவிக்குமவனே உபாயம்' என்றும் (எண் 86), 'அறிந்து செய்யும் பாவங்களையும் பிரபத்தி போக்கும்' என்றும் (எண் 261) நஞ்சீயர் அருளிச்செய்துள்ளார். சில கருத்துகளை மிகவும் நகைச்சுவையுடன் கூறியிருக்கிறார். "இவ்வுலக வாழ்க்கையில் அரைநொடியும் பொருந்தாதவரான ஆழ்வார் போல்வார்க்கும், இவ்வுலக வாழ்க்கையையே பற்றித் திரிகிற நமக்கும் வேறுபாடு தெரியாத மூடனாக எம்பெருமான் இருந்தால்தான் நமக்கு உய்வு கிடைக்கும்; ஆயினும், நண்பன் என்ற பாவனையோடு வருபவனையும் கைவிடமாட்டேன் என்று எம்பெருமான் கூறியிருப்பதனால், நம்மிடத்தில் உள்ள பக்தி பொய்யானாலும் நமக்கு நிச்சயம் பேறு கிடைக்கும்" என்று நஞ்சீயர் அருளிச்செய்துள்ளார் (எண் 290).

நஞ்சீயருடைய திருவாராதனப் பெருமான் திருநாமம் 'ஆயர்**தேவு**' என்பதாகும் (எண் 16, 319). வராஹப்பெருமான் மீது மிகவும் ஈடுபாடு உடைய நஞ்சீயர், "எம்பெருமான் வராகமாக அவதரித்ததோடு மட்டுமல்லாமல் பன்றிகள் மிகவிரும்பி உண்ணும் கோரைக் கிழங்கையும் விரும்பி அமுது செய்கின்றானே! இது என்ன மெய்ப்பாடு" என்று வியந்து கூறுவராம் (எண் 41).

நஞ்சீயர் திருவாய்மொழிக்கு நூறுமுறை காலக்ஷேபங்கள் அருளிச்செய்ததாக குருபரம்பரை நூல் கூறுகின்றது. 'உருத்தோறும் அருளிசெய்வர்' என்று வியாக்கியானங்களிலும் குறிப்பிட்டுள்ளமை (எண் 551) இதை உறுதி செய்கின்றது. சில சமயங்களில் நஞ்சீயர் தம்முடைய சொந்த அனுபவங்களைக் கொண்டும் பாசுரங்களை விளக்கியிருக்கிறார். பராங்குச நாயகி, திருவல்லவாழில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானைச் சேவிக்கச் சென்றவள், அவ்வளவுதூரம் செல்லமுடியாமல், நடுவே தளர்ந்து ஊரின் புறச்சோலையிலேயே தங்கிவிட்டாள். அப்போது திருவல்லவாழ் நகரில் எழும் ஆரவாரங்களையெல்லாம் செவிப்பட்டும், அங்கே போகமுடியாமல் வருத்தப்படுகிற படியை ஒரு பதிகத்தில் அருளிச்செய்கிறார். இதை விளக்கும்போது நஞ்சீயர், "இதேபோன்ற நிலையை நான் ஒருமுறை அனுபவித்தேன். பட்டர் திருவடிகளை அடைந்தபின்பு ஒருமுறை மேல் நாட்டிற்குச் சென்றுவிட்டு மறுபடியும் திருநாளிற்காகத் திருவரங்கத்திற்கு விரைவாக வந்தேன். திருக்கரம்பன் துறையருகில் வந்தபோது, திடீரென்று ஆற்றில் பெருவெள்ளம் புரண்டோட, இரவெல்லாம் இக்கரையிலேயே தங்கியிருக்க நேர்ந்தது. அக்கரையில் நடைபெறுகிற திருநாளின் ஆரவாரமெல்லாம்

காதில் விழச் செய்தேயும், அங்கே உடனே செல்லமுடியாமல் மிகவும் துன்பமடைந்தேன். அதேபோன்ற நிலைதான் இங்குப் பராங்குச நாயகிக்கும் ஏற்பட்டுள்ளது" என்று நஞ்சீயர் விளக்கினார் (எண் 620). தம்முடைய காலத்தில் அல்லது தமக்குச் சற்றுமுன்னர் வாழ்ந்த ஆசார்யர்களைப் பற்றிய நிகழ்ச்சிகள் (எண் 287,42), அவர்கள் அருளிச்செய்த வார்த்தைகள் (எண் 400) முதலியவற்றை நஞ்சீயர் தம்முடைய விளங்கங்களில் கூறியிருக்கிறார்.

திருவரங்கத்தில் அடையவளைந்தான் மதிளுக்கு வெளியிலேயே வசித்து வந்த ஆசார்யர்கள் அனைவரும், வெள்ளம், அந்நியர் படையெடுப்புகள் முதலிய ஆபத்துக்களின்போது, கோயிலுக்குள் கைந்நிரை (கைகளால் வேய்ந்த ஓலைக் குடிசை) கட்டிக் கொண்டு வசிப்பர். அப்படி வசிக்க நேர்ந்த அந்த நிலையிலும் நஞ்சீயர் திருவாய்மொழி விளக்கங்கள் கூறியிருக்கிறார் (எண் 569).

நஞ்சீயருடைய இறுதிக்காலத்தில் அவரைக் காணவந்த பெற்றி என்பவர், அவருடைய விருப்பங்கள் என்ன என்று கேட்க, நம்பெருமாள் எழுந்தருள முன்னும் பின்னும் சேவிக்க வேண்டும் என்றும், 'தூவிரிய மலருழக்கி' என்ற திருமங்கையாழ்வார் பதிகத்தை அரையர் சேவிக்கக் கேட்கவேண்டும் என்றும் நஞ்சீயர் தெரிவித்தார். உடனே வரந்தரும் பெருமாள் அரையரை அழைத்து வந்து நஞ்சீயர் முன் சேவிக்கச் சொல்ல, அப்பதிகத்தில் நான்காம் பாசுரத்தை அரையர் சேவித்தபோது, அப்பாசுரத்தின் பொருளில் ஈடுபட்டுச் சில வார்த்தைகள் பேசிய நஞ்சீயர் அப்படியே பரமபதமடைந்துவிட்டார் (எண் 230).

நம்பிள்ளை

நஞ்சீயரின் சீடரான நம்பிள்ளையைப் பற்றி வியாக்கியானங்களில் பல இடங்களில் குறிப்பிடப்பெற்றுள்ளன. நம்பிள்ளையின் வாழ்க்கைச் செய்திகள் எவையும் வியாக்கியானங்களில் இடம்பெறவில்லை. ஆயினும், நாலாயிர திவ்யப்பிரபந்தப் பாசுரங்களுக்கு நம்பிள்ளை வாய்மொழியாக விளக்கம் அருளிச்செய்தபோது கூறியவை அவருடைய சீடர்களால் ஏடுபடுத்தப் பெற்றுள்ளன. தம்முடைய சிறிய வயதில் பிள்ளை அமுதனார் அருளிச்செய்த விளக்கங்களைத் தாம் கேட்டிருந்ததாகவும், அப்போது அவை புரியவில்லை என்றும், பிற்காலத்தில்தான் அவற்றைத் தாம் புரிந்துகொண்டதாகவும் நம்பிள்ளையே அருளிசெய்துள்ளதாக ஓரிடத்தில் (எண் 271) குறிப்பிடப்பெற்றுள்ளது. பட்டர் அருளிச்செய்த விளக்கங்களைத் தாமே நேரில் கேட்டதாக நம்பிள்ளையே அருளிச்செய்ததாகப் பல இடங்களில் குறிப்பிடப் பெற்றுள்ளன. (எண்கள் 242, 244, 405, 406, 407, 577 முதலியவை பார்க்க.) எனவே நஞ்சீயருடைய சீடராவதற்கு முன்னரே நம்பிள்ளை திவ்வியப்பிரபந்தப் பாசுரங்களின் விளக்கங்களைக் கேட்பதில் மிகவும் ஈடுபாடு உடையவராகத் திகழ்ந்திருக்கிறார் என்று அறியமுடிகிறது.

ஒருமுறை திருவையாற்றிற்கு ஏதோ காரியமாக நஞ்சீயர் நம்பிள்ளையை அனுப்பிவைக்க, அங்கே ஒரு சைவப்புலவர் நம்பிள்ளையிடம் வந்து 'அரியல்லால் தேவியில்லை' என்ற அப்பர் பாடலுக்குப் பொருள் கூறும்படி கேட்டார். அப்போது நம்பிள்ளை "புருஷோத்தமனான பகவான் அடியவர்களுக்காகப் பெண்வேடம் பூண்டான்; அவனிடம் சிவன் காமம் கொண்டான் என்று கூறுவது சிவனுடைய மடமையையே காட்டுகிறது; இப்படி உங்கள் தெய்வத்திற்கு இழுக்குக் கற்பிப்பதைக் காட்டிலும், இப்படிச் சொன்னவன் உற்றவனல்லன் என்று கொள்வதே சிறந்தது" என்று விடை பகர்ந்தார். இந்நிகழ்ச்சியை நம்பிள்ளையே கூறியதாக குறிப்பிடப்பெற்றுள்ளது. (எண் 219ல் விரிவாகக் காண்க.)

ஒருமுறை பிள்ளையாத்தான் என்பவர் நஞ்சீயரிடம் வந்து தமக்குத் திருவாய்மொழி காலக்ஷேபம் கூறவேண்டும் என்று கேட்க, நம்பிள்ளையிடம் கேட்குமாறு நஞ்சீயர் கூறினார். அதற்கு நம்பிள்ளையை வணங்கவேண்டுமே என்று பிள்ளையாத்தான் கூற, உனக்கு விருப்பமில்லாவிட்டால் வணங்கவேண்டாம் என்று நஞ்சீயர் கூறினார். நம்பிள்ளையும் பிள்ளையாத்தானுக்கு அப்படியே காக்ஷேபம் ஸாதித்துக் கொண்டு வந்தார். அடியவர்களுடைய பெருமையைக் கூறும் 'பயிலும்சுடரொளி' திருவாய்மொழியைக் கேட்டதும், பிள்ளையாத்தான் தன்னுடைய தவற்றை உணர்ந்தார். இந்நிகழ்ச்சியையும் நம்பிள்ளையே கூறியதாகக் குறிப்பிடப்பெற்றுள்ளது. (எண் 636ல் விரிவாகக் காண்க.)

நம்பிள்ளை ஒருமுறை வெளியூர் சென்றிருந்தபோது வேல்வெட்டி நம்பி என்பவர் அவரிடம் ஒரு சந்தேகம் கேட்டு ஒருவரிடம் ஒரு ஓலை கொடுத்தனுப்பினார். ஏனெனில் இந்த ஸந்தேஹத்தைத் தீர்க்கவல்லவர் நம்பிள்ளையைத் தவிர வேறு எவரும் இலர் என்பதால் அந்த ஸந்தேஹத்தை நம்பிள்ளையிடம் கேட்டனுப்பினார். "சரணாகதி என்பது எந்த விதிமுறையும் இல்லாமல் செய்யக் கூடியது என்று கூறப்பட்டிருக்கும்போது, இராமபிரான் கடலரசனை நோக்கிச் சரணாகதி செய்தபோது கிழக்கு நோக்கியிருத்தல் முதலிய விதிகளைப் பின்பற்றினார் என்று கூறப்பெற்றுள்ளதே! சரணாகதிக்கு விதிமுறைகள் உண்டோ?" என்று வேல்வெட்டிப் பிள்ளை கேட்டிருந்தார். அதற்கு நம்பிள்ளை "சரணாகதிக்கு விதிமுறைகள் எவையும் இல்லை. சரணாகதி செய்பவருடைய தகுதிக்கேற்ப நியமங்களை அவர்கள் அனுஷ்டிக்கிறார்கள். இராமன் கிழக்குமுகமாக இருத்தல் முதலிய விதிமுறைகளை அனுஷ்டித்ததும் அவன் ஆசாரமான இக்ஷ்வாகு குலத்தில் பிறந்தமையாலேயே" என்று விடையளித்தார். (எண் 199ல் விளக்கமாகக் காண்க.)

கரிகால்சோழ ப்ரம்மராயன் என்பவன் திருவாய்மொழிக்கு ஓர் உரை எழுதிக் கொண்டு வந்து, நஞ்சீயரிடம் காட்டி, அவருடைய மதிப்புரையைக் கேட்க, நஞ்சீயர் நம்பிள்ளையிம் அதைக் கொடுத்தார். (எண் 541ல் விளக்கம் காண்க.)

பெரிய திருமொழியில் ஒருபாசுரத்தின் பொருள்சுவைக்காகப் பாசுரத்தின் பாடத்தை மாற்றலாமே என்று ஸ்ரீபராங்குசதாஸர் என்பவர் கூறியபோது, பாடத்தை மாற்ற நமக்கு வலிமை இல்லை என்று கூறினார் (எண் 210). ஆனால் நாச்சியார் திருமொழியில் ஒரு பாசுரத்தில் 'அயன் தன்னைத் தந்த' என்றுள்ள பாடபேதத்தை ஒப்புக் கொண்டால் பொருள் அழகாகப் பொருந்தும் என்றும் நம்பிள்ளை அருளிச்செய்துள்ளார் (எண் 158).

நம்பிள்ளை அருளிச்செய்த சுவையான வார்த்தைகள் பல இடங்களில் குறிப்பிடப் பெற்றுள்ளன. நம்பிள்ளையிடம் கேட்கப்பெற்ற கேள்விகளுக்கு அளித்த சுவையான விடைகளும் குறிப்பிடப்பெற்றுள்ளன. (எண் 588, 674 முதலியவை காண்க.)

அரையர்கள்

திருவரங்கம் பெரியகோயிலில் எம்பெருமான் திருமுன்பே திவ்யப்பிரபந்தப் பாசுரங்களைப் பாடும் உரிமையைப் பெற்றவர்கள் அரையர்கள் எனப்படுவர். அரையன் என்பது அரசனைக் குறிக்கும் சொல்லாகும். மிகச் சிறந்த கைங்கர்யமாகிய ஸாம்ராஜ்யத்திற்கு உரியவர்கள் ஆதலால் இவர்களுக்கு அரையர்கள் என்ற பெயர் ஏற்பட்டது என்று கூறுவர். (அறைதல் என்ற சொல் கூறுதல் என்ற பொருளை உடையது. எம்பெருமான் திருமுன்பே திவ்வியப்பிரபந்தப் பாசுரங்களை விண்ணப்பம் செய்பவர்கள் ஆதலால் இவர்களை அறையர்கள் என்று கூறலாம் என்றும் சிலர் கூறுவர்.)

திவ்வியப்பிரபந்த வியாக்கியானங்களில் அரையர்கள் பலரைப் பற்றிய குறிப்புகள் இடம் பெற்றுள்ளன. ஆழ்வார் திருவரங்கப்பெருமாள் அரையர் என்பவர் ஆளவந்தாருடைய சீடராவார். இவர் இராமானுசருடைய ஆசார்யர்கள் ஐவருள் ஒருவராவார். பிள்ளை தேவப்பெருமாள் அரையர் இவர் காலத்தில் வாழ்ந்தவராவார் (எண் 766).

உய்ந்த பிள்ளை என்ற அரையர் எம்பெருமானார் காலத்தில் வாழ்ந்தவராவார். இவருடைய அபிநயங்களைக் கண்ட எம்பார் சில சுவைமிகு திருத்தங்களைக் கூறியிருக்கிறார் (எண் 8, 165). இவர் நஞ்சீயர் காலத்திலும் வாழ்ந்திருக்கிறார் (எண் 702). இவர் அருளிச்செய்த நிர்வாஹம் ஒன்றும் ஓரிடத்தில் (எண் 626) குறிப்பிடப்பெற்றுள்ளது.

பட்டர் காலத்தில் வாழ்ந்தவரான பிள்ளை திருநறையூர் அரையரைப் பற்றி மிக அதிகமான குறிப்புகள் இடம்பெற்றுள்ளன. பாசுரங்களின் பொருள்நயம், இசைநயம் முதலியவை குறித்து ஆப்பான் திருவழுந்தூர் அரையருடன் இவர் சர்ச்சைகள் செய்திருக்கிறார் (எண் 342, 700). ஓரிடத்தில் இவருடைய திருநாமம் ஆழ்வார் திருநறையூர் அரையர் என்றும் கூறப்பெற்றுள்ளது (274). எம்பாரிடமும் (எண் 489), பட்டரிடமும் (எண் 256, 316) கேள்விகள் கேட்டிருக்கிறார். தம்மைவிட வயதில் சிறியவராயினும் பட்டரை மிகவும் கொண்டாடியிருக்கிறார் (எண் 137, 363, 364). பட்டருடன் சேர்ந்து மிகவும் ஈடுபாட்டுடன் இவர் செய்த பிரதக்ஷிணம் குறித்துப் பல இடங்களில்

குறிப்பிடப்பெற்றுள்ளது (எண் 42, 221, 494, 675, 797). ஒரு பாசுரத்திற்கு இவர் அருளிச்செய்த பொருளைத் தாம் கேட்டிருந்ததாக நஞ்சீயர் அருளிச்செய்துள்ளார் (எண் 390). நஞ்சீயர், பிள்ளை திருநறையூர் அரையரிடம் தாம் மூன்று திருவாய்மொழிகள் காலக்ஷேபம் கேட்டதாகவும், அவர் அப்பாசுரங்களுக்குப் பொருள் கூறத்தொடங்கி, அப்பாசுரங்களில் மிகவும் ஈடுபட்டுக் கண்ணும் கண்ணீருமாக இருப்பார் என்றும், அதையே தாம் நினைத்திருப்பதாகவும் அருளிச்செய்துள்ளார் (எண் 671). இவ்வரையர் அருளிச் செய்த நிர்வாஹங்களும் வார்த்தைகளும் பல இடங்களில் குறிப்பிடப் பெற்றுள்ளன. தொட்டியம் திருநாராயணபுரத்தில் உள்ள கோயிலுக்குச் சில விரோதிகள் நெருப்பு வைத்துவிட்ட போது, அங்கு எழுந்தருளியுள்ள எம்பெருமானுடைய திருமேனிக்கு ஆபத்து ஏற்படாத வண்ணம் தடுப்பதற்காக, பிள்ளை திருநறையூர் அரையர் தம்முடைய குடும்பத்துடன் எம்பெருமானுடைய திருமேனியைக் கட்டிக்கொண்டு உயிர்த்தியாகம் செய்த செய்தி குறிப்பிடப்பெற்றுள்ளது (எண் 164, 171).

ஆப்பான் திருவழுந்தூர் அரையர் என்பவரைப் பற்றியும் சில குறிப்புகள் இடம் பெற்றுள்ளன. ஆப்பான், கூரத்தாழ்வானுடைய சீடர் என்றும், அவரிடமே திருவாய்மொழி கேட்டார் என்றும் ஓரிடத்தில் (எண் 762) குறிப்பிடப்பெற்றுள்ளது. ஆழ்வான் கூறிய விளக்கங்களைப் பிறருக்கு ஆப்பான் எடுத்துக் கூறியிருக்கிறார் (எண் 133, 762). பட்டர் திவ்வியப்பிரபந்தப் பாசுரங்களுக்கு விளக்கமளித்தபோதும் இவர் கேட்டிருக்கிறார் (எண் 376). நஞ்சீயர் விளக்கமளித்தபோதும் கேட்டிருந்த இவர், அவரிடம் கேள்வியும் கேட்டிருக்கிறார் (எண் 652). ஒருமுறை பிள்ளை திருநறையூர் அரையர் இவரிடம் ஓர் ஐயம் கேட்டபோது, இசையின் நயத்திற்குப் பொருத்தமான விடையளித்திருக்கிறார் (எண் 700). இவருடைய இல்லத்தின் மச்சிலே இருந்துகொண்டு பிள்ளை திருநறையூர் அரையர் திவ்வியப்பிரபந்தப் பாசுரங்களைப் பற்றி சர்ச்சைகள் செய்திருக்கிறார் (எண் 342). பட்டரிடம் இவர் பல கேள்விகள் கேட்டுள்ளார் (எண் 237, 239, 274, 320, 587). எம்பெருமான் திருமுன்பே பாசுரங்களை அநுஸந்திக்கும்போது அப்பாசுரங்களின் பொருள்களில் மிகவும் ஈடுபட்டுப் பாசுரங்களை அநுஸந்திப்பராம் (எண் 615). ஆப்பான் அருளிச்செய்த நிர்வாஹங்களும் இரண்டு இடங்களில் (எண் 595, 616) குறிப்பிடப்பெற்றுள்ளன.

பிள்ளை அழகிய மணவாள அரையர் என்பவர் பட்டர் காலத்தில் வாழ்ந்தவராவார் (எண் 118). இவர் பட்டரிடம் திவ்வியப்பிரபந்தப் பாசுரங்களில் எழுந்த ஐயம் பற்றிக் கேள்வி கேட்டிருக்கிறார் (எண் 209). இவர் பிள்ளை அழகியமணவாளப்பெருமாள் அரையர் என்றும் வழங்கப் பெற்றிருக்கிறார் (எண் 216). இவர் மிக அழகாக அபிநயங்கள் செய்வதில் வல்லவர் ஆகையால் திருவரங்கத்து எம்பெருமானே இவரிடம் தன்னுடைய நடைக்கு ஈடாக ஆடமுடியுமா என்று கேட்டிருக்கிறான் (எண் 768). இவருடைய இறுதிக் காலத்தில் ஒரு க்ரந்தியால் (கட்டியால்) துன்பப்பட்டதாகவும், இவ்வுலகை நீத்தபோது, அந்த க்ரந்தியைப்

பார்த்து 'உன்னை வென்றுவிட்டேன்' என்று கூறிச் சிரித்ததாகவும் ஓரிடத்தில் (எண் 812) குறிப்பிடப்பெற்றுள்ளது.

பிள்ளை விழுப்பரையர் என்பவர் பட்டர் காலத்தில் எழுந்தருளியிருந்தவராவார். இவரும் பட்டரிடம் கேள்விகள் கேட்டிருக்கிறார் (எண் 237, 351, 587). வரந்தரும் பெருமாள் அரையர் என்பவர் நஞ்சீயர் காலத்தில் எழுந்தருளியிருந்தவர் (எண் 227). பிள்ளை தேவப்பெருமாள் அரையர் (எண் 766), பிள்ளை திருக்கண்ணபுரத்து அரையர் (எண் 270), ஐயன் திருக்குருகைப் பெருமாள் அரையர் (எண் 570) ஆகியோரைப் பற்றியும் ஒவ்வோர் இடங்களில் குறிப்பிடப்பெற்றுள்ளன.

தாஸர்கள்

அக்காலத்தில் எழுந்தருளியிருந்த ஆசார்யர்களின் அடியவர்கள் தாஸர்கள் எனப்பெறுவர். பிள்ளை உறங்காவில்லி தாஸரைப் பற்றிப் பல இடங்களில் குறிப்பிடப்பெற்றுள்ளமை பற்றி முன்பே கூறப்பட்டது. ஆச்சான் திருவாலிநாடு தாஸர் (எண் 799), திருமழிசை தாஸர் (எண் 380), ராமானுஜதாஸர் (எண் 64), நம்பி ஏறுதிருவுடையார் தாஸர் (எண் 439), நம்பி திருவரங்க நாராயணதாஸர் (எண் 789), நம்பி திருவழுதிவளநாடு தாஸர் (எண் 107), நம்பி ஸ்ரீகோவர்த்தன தாஸர் (எண் 174), நம்பி ஸ்ரீஸேநாபதி தாஸர் (எண் 654), நம்பி ஹநுமத்தாஸர் (எண் 255), ஸ்ரீநம்பி குஹதாஸர் (எண் 148), ஸ்ரீபராங்குச தாஸர் (எண் 210), ஸ்ரீவத்ஸாங்கதாஸர் (எண் 330) ஆகிய தாஸர்கள் பலரைப் பற்றிய குறிப்புகள் திவ்யப்பிரபந்த வியாக்கியானங்களில் இடம்பெற்றுள்ளன.

அரசர்களும் அதிகாரிகளும்

திவ்வியப்பிரபந்த வியாக்கியானங்களில் அரசர்கள் சிலரைப் பற்றியும் அரசாங்க அதிகாரிகள் பலரைப் பற்றியும் குறிப்புகள் இடம்பெற்றுள்ளன. இவர்களில் ஒரு சிலரைப் பற்றியே சரித்திரக் குறிப்புகள் கிடைக்கின்றன. பேரரசர்களை தேவர் என்ற சொல்லால் மிகவும் மரியாதையாக வியாக்கியானங்களில் குறிப்பிட்டுள்ளனர். (உதாரணமாக விக்ரமசோழனை விக்ரமசோழதேவர் என்றும் (எண் 276, 309), சுந்தரபாண்டியனை சுந்தரபாண்டியத் தேவர் என்றும் (எண் 127, 285) குறிப்பிட்டுள்ளனர். அரசாங்க அதிகாரிகளை பிரம்மராயர் என்று குறித்துள்ளனர்.

நாதமுனிகளுடைய இல்லத்திற்கு ஓர் அரசன் வந்ததாக ஒரு குறிப்பு இடம் பெற்றுள்ளது. (எண் 553 பார்க்க.) ஆனால், இவ்வரசன் பெயர் வியாக்கியானத்தில் குறிப்பிடப்பெறவில்லை.

எம்பெருமானார் திருவரங்கத்தை விட்டு மேல்நாட்டிற்குச் செல்வதற்குச் சோழ அரசன் ஒருவனே காரணமானவன் என்பது ஆறாயிரப்படி குருபரம்பராப்ரபாவத்தில் கூறப்பெறுகிறது. அதனால் 'அவ்யபதேச்யன்' (பெயர் சொல்லத்தகாதவன்) என்றே

அவனை ஆசார்யர்கள் குறிப்பிடுகின்றனர். (கி.பி. 1070 முதல் 1120 வரை சோழநாட்டை ஆண்ட முதலாம் குலோத்துங்க சோழனே இவ்வரசன் என்று கூறுவர்.) இவ்வரசனுடைய மகன் வைணவப் பற்று உள்ளவனாகத் திகழ்ந்தான் என்பர். இவன் கூறிய வார்த்தை ஒன்று எண் 814ல் 'அவ்யபதேச்யனுக்கு அனந்தரத்திலவன் வார்த்தை' என்று குறிப்பிடப்பெற்றுள்ளது. (அவ்யபதேச்யன் = பெயர் சொல்லத்தகாதவன்; அநந்தரத்திலவன் = அவனுக்குப் பிறகு வந்தவன்.) ஆனால் இவ்வரசனுடைய பெயர் இவ்விடத்தில் குறிப்பிடப்பெறவில்லை. முதலாம் குலோத்துங்கனின் மகன் பெயர் விக்கிரம சோழன் என்று சரித்திர ஆசிரியர்கள் கூறுகின்றனர். திவ்யப்பிரபந்த வியாக்கியானங்களில் விக்ரமசோழதேவர் என்று குறிப்பிடுவது இவனையே என்று கொள்ளலாம். 'மின்னிலங்கு திருவுருவும்' என்ற திருநெடுந்தாண்டகப் பாசுரத்தைக் கேட்டுப் பாராட்டியதாகவும் (எண் 309), பெரிய திருமொழிப் பாசுரம் ஒன்றிற்கு நகைச்சுவையாக விளக்கம் அளித்ததாகவும் (எண் 276) குறிப்பிடப்பெற்றுள்ளது. இவனுடைய மனைவியே திரிபுராதேவியார் என்று கூறுவர். எம்பெருமானாரிடம் மிகவும் பக்தி கொண்டு திரிபுராதேவியார் கூறிய வார்த்தை ஒன்று (எண் 189ல்) குறிப்பிடப் பெற்றுள்ளது.

அகளங்கநாட்டாழ்வான் என்பவன் நாச்சியார் திருமொழிப் பாசுரம் ஒன்றிற்குக் கூறிய விளக்கம் ஓரிடத்தில் (எண் 150) குறிப்பிடப் பெற்றுள்ளது. இவனை அரையன் என்று மற்றோரிடத்தில் (எண் 568) குறிப்பிட்டிருப்பதால் இவன் ஓர் அரசன் என்று கருத இடமுள்ளது. இவன் பிள்ளை உறங்காவில்லி தாஸர் காலத்தில் வாழ்ந்தவனாவான். (விக்ரமசோழனே இவ்விளக்கங்கள் என்று சிலர் கூறுவர்.)

அகளங்கப்ரம்மராயர் என்ற பெயரும் ஓரிடத்தில் குறிப்பிடப்பெற்றுள்ளது. (பிரம்மராயர் என்பது பெரும்பாலும் அதிகாரிகளையே குறிக்கும் என்பர்.) இவன் அடைவளைந்தான் மதிளைக் கட்ட முயன்றபோது, இளையாழ்வான் என்பவருடைய இல்லம் குறுக்கிட்டதாகவும், அதை அவன் இடித்துவிட்டு மதிள் கட்டத் தலைப்பட்டபோது, பட்டர் அவனுக்கு உபதேசம் செய்து அதைத் தடுக்க முயன்றதாகவும் (எண் 699ல்) குறிப்பிடப் பெற்றுள்ளது. (ஆனால் ஆறாயிரப்படி குருபரம்பராப்ரபாவத்திலும் வார்த்தாமாலையிலும் மதிள் கட்ட முயன்றவன் வீரசுந்தரப்ரம்மராயன் என்றும், குறுக்கிட்டது பிள்ளைப்பிள்ளை யாழ்வானுடைய இல்லம் என்றும் குறிப்பிடப்பெற்றுள்ளது.)

வீரசுந்தரன் என்பவன் எம்பாருடன் விரோதம் கொண்டிருந்தான் என்று எண் 345ல் குறிப்பிடப்பெற்றுள்ளது. "வீரசுந்தரன் சோழக்குடியில் இட்டமதில்போலேயிறே இவன்தான் பண்ணிக் கொள்ளும் அரண் விநாச பர்யந்தமாய் முடியும்படி" என்று திருமாலை 6ம் பாசுரவியாக்கியானத்தில் குறிப்பிடப் பெற்றுள்ளது. எம்பாரும் பட்டரும் ஒரே காலத்தில் வாழ்ந்தவர்கள் ஆதலால் எம்பாரிடம் விரோதம் கொண்டிருந்த வீரசுந்தரனே, பட்டரிடம் விரோதப்பட்ட அகளங்கப்ரம்மராயன் என்று கருத இடமுள்ளது. அகளங்க ப்ரம்மராயருடன்

ஏற்பட்ட கருத்து வேற்றுமையால், பட்டர் திருவரங்கவாஸத்தை வெறுத்து, திருக்கோட்டியூரில் எழுந்தருளியிருந்தபோது, அவரைச் சமாதானப் படுத்துவதற்காக அகளங்கப்ரம்மராயர் இருகைமதவாரணம் என்ற திருவேளைக்காரனை அனுப்பிவைத்ததாக எண் 778ல் குறிப்பிடப்பெற்றுள்ளது. வீரசுந்தரன் அல்லது அகளங்கப்ரம்மராயன் என்பவனைப் பற்றி வரலாற்று நூல்களில் குறிப்பிடப் பெறவில்லை.

ஜநநாதப்ரம்மராயர் என்பவர் திருவரங்கத்தில் உள்ள மரங்களை வெட்ட முயன்றபோது அதை எம்பார் தடுத்தார் என்று எண் 622லும், எண் 798லும் கூறப்பெறுகிறது. இவரும் எம்பார் காலத்தில் வாழ்ந்த அரசாங்க அதிகாரியாக இருக்கலாம்.

சுப்ரமண்யபட்டர் என்பவர் எம்பெருமானார் காலத்தில் வாழ்ந்த அரசாங்க அதிகாரியாவார். எம்பெருமான் திருமுன்பே, எம்பெருமானாரை வணங்குவது முறையோ என்று அவர் எம்பெருமானாரையே கேட்டபோது, அரசவையில் நடைபெறும் நிகழ்ச்சியையே எடுத்துக்காட்டி அவருக்கு எம்பெருமானார் விடை கூறிய செய்தி எண் 365ல் குறிப்பிடப்பெற்றுள்ளது. அவர் ஸ்ரீவைஷ்ணவர்களிடம் மிகவும் ஈடுபாடு உடையவராதலால், அரைக்கணமும் அவர்களைப் பிரியமுடியாது என்று கூறிய வார்த்தை ஒன்று எண் 91ல் எடுத்துக்காட்டப்பெறுகிறது.

குணமலைப்பாடியுடையார் காங்கேயன் தெற்கே படையெடுத்தபோது பிள்ளையாத்தான் அல்லது கோயிலாத்தான் என்பவர் அவனுக்கு உதவியமை எண் 194ல் குறிப்பிடப் பெறுகிறது. கோயிலாத்தானுடைய மகன் இறந்தபோது அவருக்கு பட்டர் ஆறுதல் கூறியதாக எண் 772ல் குறிப்பிடப் பெற்றுள்ளதால், காங்கேயனும் பட்டர் காலத்தவன் என்பது தெளிவாகிறது.

சோழசிகாமணிப் பல்லவராயர் என்பவருக்குத் தஞ்சமாக, 'கடற்கரை வெளியை நினைத்திரும்' என்று பட்டர் அருளிசெய்ததாக எண் 174ல் குறிப்பிடப்பெற்றுள்ளது. இவரும் பட்டர் காலத்திலிருந்த சோழ அரசாங்க அதிகாரிகளில் ஒருவர் என்று கொள்ளலாம். பட்டர் திருக்கோட்டியூரில் எழுந்தருளியிருந்தபோது, திருக்கோட்டியூர்நம்பியின் சீடனான வளவன் பல்லவதரையன் என்பவன் நஞ்சீயரிடம் திருவிருத்தம் கேட்டான் என்று எண் 377ல் குறிப்பிடப்பெறுகிறது. வாணவதரையன் என்பவனைச் சந்திப்பதற்காக பட்டர் ஸ்ரீதேவிமங்கலம் என்ற ஊரில் எழுந்தருளியிருந்தார் என்று எண் 132ல் குறிப்பிடப் பெறுகிறது.

சுந்தர பாண்டியன் என்ற அரசன் நஞ்சீயர் காலத்தில் வாழ்ந்தவனாவான். அவன் நஞ்சீயரைச் சந்தித்து இராமாயணத்தில் ஒரு விஷயம் பற்றி வினாவைக் கேட்டிருக்கிறான். (எண் 127). இரண்டாம் ராசராசசோழனோடு கி.பி.1219ல் போரிட்டு வென்ற மாறவர்மன் சுந்தரபாண்டியனே இவன் என்று கூறுவர்.

கல்ப்ரம்மதேசத்தில் க்ராமகார்யம் செய்பவனான கரிகால்சோழப்ரம்மராயன் என்பவன் திருவாய்மொழிக்கு ஓர் உரை எழுதிக் கொண்டு வந்து அதை நஞ்சீயரிடம் காட்டினான் என்றும், அவன் செய்து வரும் உதவிகளைக் கருத்தில்கொண்டு, அவ்வுரையை நம்பிள்ளையிடம் கொடுத்து, அவ்வுரையைப் பாராட்டி வைக்குமாறு கூறியதாக எண் 541ல் கூறப்பெறுகிறது.

இறையிலி நிலம் குறித்துப் பேசுவதற்காகத் திருவையாற்றில் யாதவராயன் என்பவனைக் காண்பதற்காக நஞ்சீயர் நம்பிள்ளையை அனுப்பிவைத்த செய்தி எண் 219ல் குறிப்பிடப்பெற்றுள்ளது. இவனும் நஞ்சீயர் காலத்திலிருந்த அரசாங்க அதிகாரியாக இருக்கலாம்.

ராஜகோஷ்டியில் திருவாய்மொழிபாசுரம் ஒன்றின் பொருள்பற்றி விக்ரமசிங்கன் என்பவன் கூறிய வார்த்தை ஒன்று எண் 664ல் கூறப்பெறுகிறது.

விக்ரமசோழன், சுந்தரபாண்டியன் ஆகிய அரசர்கள் இருவரைத் தவிர, மேற்கூறிய அதிகாரிகள் எவரைப்பற்றியும் வரலாற்று நூல்களில் ஏதும் காணப்படவில்லை.

ஐதிஹ்யங்களில் காணப்படும் அரிய செய்திகள்

திவ்வியப்பிரபந்தப் பாசுரங்களில் உள்ள கருத்துகளை விளக்குவதற்கே ஆசார்யர்களுடைய வாழ்க்கை நிகழ்ச்சிகளை உரையாசிரியர்கள் எடுத்துக் காட்டுகின்றனர். அப்படி எடுத்துக் காட்டும்போது உரைவிளக்கத்திற்குத் தேவையான அளவு மட்டும் நிகழ்ச்சியினைக் குறிப்பிடாமல் மேலும் செய்திகளை ஆங்கே குறிப்பிட்டிருப்பது சுவைத்து இன்புறத்தக்கது.

உதாரணமாக, நாயகனுடைய உருவ அழகையே நாயகி நினைத்திருப்பதாக ஒரு பாசுரம் அமைந்துள்ளது. ஆளவந்தாருடைய திருமேனி அழகையே தஞ்சமாகத் திருக்கோட்டியூர் நம்பி நினைத்திருந்தமையை உரையாசிரியர் எடுத்துக் காட்டுகிறார். 'ஆளவந்தார் திருமேனி அழகே தஞ்சம் என்று திருக்கோட்டியூர் நம்பி அருளிச்செய்வர்' என்று உரைத்திருந்தால் போதுமாயிருக்க, அதற்கும்மேலே இங்கே பல செய்திகள் கூறப்பெற்றுள்ளன. திருக்கோட்டியூர் நம்பி ஒவ்வொருமுறை திருவரங்கத்திற்கு வந்து செல்லும்போதும் எம்பெருமானார், மாராச்சிப்புரம் வரை அவரைப் பின்தொடர்ந்து சென்று அவரை வழியனுப்பிவிட்டுப் பிறகு திருவரங்கம் திரும்புவார். அதில் ஒருமுறை திருக்கோட்டியூர் நம்பி ஜலகார்யத்திற்கு எழுந்தருளியிருந்தபோது, 'எனக்குத் தஞ்சமாக இருப்பதொரு வார்த்தை அருளிச்செய்ய வேண்டும்' என்று எம்பெருமானார் கேட்க, திருக்கோட்டியூர் நம்பி, "ஆளவந்தார் நீராடுவதற்காக முழுகிக் குளிக்கும்போது ஆமை மணையைக் கவிழ்த்தாற்போலே இருக்கிற அவருடைய திருமுதுகையே தஞ்சமாக நினைத்திருக்கிறேன்; நீரும் அதையே தஞ்சமாக நினைத்திரும்" என்று அருளிச்செய்தார்.

(எண் 335). இவ்வைதிஹ்யத்தில் பல அரிய செய்திகள் கூறப்பெற்றுள்ளன. திருக்கோட்டியூர் நம்பி பலமுறை திருவரங்கம் வந்து சென்றுள்ளார். ஒவ்வொரு முறையும் எம்பெருமானார் அவரை மாராச்சிப்புரம்வரை பின்தொடர்ந்து சென்று வழியனுப்பிவைப்பார். ஆளவந்தார் நீராடும்போது, அவருடைய திருமேனி அழகை சேவிப்பதற்காகத் திருக்கோட்டியூர்நம்பி உடனிருந்திருக்கிறார். ஆளவந்தாருடைய திருமுதுகு ஆமை பலகையைக் கவிழ்த்தாற்போல் மிக அழகாக இருக்கும் – என்பது போன்ற பல செய்திகள் இந்த ஐதிஹ்யத்தில் தெரிவிக்கப்பெற்றுள்ளன. இத்தனைக்கும், பாசுரத்திலுள்ள கருத்துகளை விளக்குவதற்கு இவ்வளவு செய்திகளையும் கூறவேண்டும் என்ற அவசியம் இல்லாமல் இருக்கின்றபோதும், இவ்வளவு செய்திகளைக் கூறியுள்ளமை கருத்தில் கொள்ளத்தக்கது.

நாயகனைப் பிரியமாட்டாத நாயகி வருந்திப் பேசுவதாக ஒருபாசுரம் அமைந்துள்ளது. அதற்கு விளக்கம் உரைக்கும்போது, எம்பெருமானாரைப் பிரியமுடியாமல் பிள்ளை உறங்காவில்லி தாஸர் வருந்திக் கிடந்தமை எடுத்துக் காட்டாகக் கூறப்பெறுகிறது (எண் 334). பிள்ளை உறங்காவில்லிதாஸர் வருந்தியமையை மட்டும் கூறியிருந்தாலே போதுமாயிருக்க, அதற்கு முன்னால் சில செய்திகள் கூறப்பெறுகின்றன. எம்பெருமானாருக்குத் திருவரங்கத்தில் ஏதோ காரணத்தால் மனக்கசப்பு உண்டாகித் திருமலை செல்ல நினைத்தார். அப்போது ஒரு ஸ்ரீவைஷ்ணவருக்கு நெல் கொடுக்க விரும்பினார். அதற்காகத் தம்முடைய பவித்திரத்தை அந்த ஸ்ரீவைஷ்ணவரிடம் கொடுத்து, அதைப் பிள்ளை உறங்காவில்லி தாஸரிடம் கொடுத்து நெல் பெற்றுக் கொள்ளும்படி கூறினார். அந்த ஸ்ரீவைஷ்ணவர் பிள்ளை உறங்காவில்லி தாஸரிடம் சென்றபோது, எம்பெருமானாரைப் பிரியவேண்டுமே என்ற வருத்தத்தால் கதவைச் சாத்திக்கொண்டு அழுதுகொண்டிருந்தபடியால், ஸ்ரீவைஷ்ணவர் எம்பெருமானாரிடமே திரும்பி வந்துவிட்டார். 'ஏன் இவ்வளவு விரைவாக வந்துவிட்டாய்? நெல் பெற்றுக் கொள்ளவில்லையா?' என்று எம்பெருமானார் கேட்க, ஸ்ரீவைஷ்ணவர் தாஸருடைய நிலைமையைச் சொன்னார் – என்று இவ்வளவு விரிவாக அங்கு குறிப்பிடப் பெற்றுள்ளது. எம்பெருமானாரைப் பிரியமுடியாத தாஸருடைய நிலை மட்டும் இன்றி இந்த ஐதிஹ்யத்தில் பல செய்திகள் தெரிவிக்கப் பெற்றுள்ளன. திருவரங்கத்தை விட்டுச் செல்லுமளவுக்கு எம்பெருமானாருக்கு வெறுப்பு உண்டாகியமை, நெற்களஞ்சியத்தின் காவலராகப் பிள்ளை உறங்காவில்லிதாஸர் இருந்தமை, ஸ்ரீவைஷ்ணவருக்குப் பிள்ளை உறங்காவில்லிதாஸர் நெல்லைக் கொடுக்க வேண்டும் என்பதற்கு அடையாளமாக எம்பெருமானார் தம்முடைய பவித்திரத்தைக் கொடுத்தமை முதலிய பல செய்திகள் இந்த ஐதிஹ்யத்தில் கூறப்பெற்றுள்ளன.

'ஞானப்பிரானை அல்லாவில்லை' என்ற பாசுரப்பகுதிக்கு உரையிடும்போது இது சரமச்லோகத்தில் உள்ள ஏகசப்தத்தின் பொருளைக் கூறுகிறது என்று கருத்துரைத்த உரையாசிரியர், ஏகசப்தத்தின் பொருளை மிகவும் ரகசியமாகத் திருக்கோட்டியூர் நம்பி

எம்பெருமானாருக்கு உபதேசித்தார் என்பதை மட்டுமே கூறியிருந்தால் போதுமாயிருக்க, திருக்கோட்டியூர் நம்பி மிக மிக ரகசியமாக உபதேசித்தது எவ்வாறு என்றும், அதை எம்பெருமானார் ஆழ்வானுக்கு உபதேசிப்பதற்காகத் தாமே சுட்டெரிக்கின்ற வெயிலையும் பொருட்படுத்தாமல், ஆழ்வான் அமுதுசெய்கின்ற வேளையில் அவருடைய இல்லத்திற்கு எழுந்தருளி உபதேசித்தார் என்றும் கூறப்பெற்றுள்ள செய்திகள் நெஞ்சை உருக்கும் வகையில் அமைந்துள்ளன (எண் 385).

எம்பெருமானை அனுபவிப்பதற்குத் தகுதி எதுவும் தேவையில்லை என்றும், கொடியவனான இராவணனுடைய தம்பியான விபீஷணன் ஒரு முழுக்குமிடாமல் எம்பெருமானுடைய திருவடிகளைச் சரணடைந்தான் என்றும் விளக்குகின்ற உரையாசிரியர் இத்தொடர்பில் நம்பிள்ளை அருளிச்செய்த வார்த்தை ஒன்றை எடுத்துக் காட்டுகிறார். அவ்வார்த்தையை எடுத்துக்காட்டுவது ஒன்றே போதுமாயிருக்க, அவ்வார்த்தையை அவர் கூறுவதற்குக் காரணமாக அமைந்த நிகழ்ச்சியை விரிவாக உரையாசிரியர் விளக்கியுள்ளார் (எண் 199). நம்பிள்ளை ஒருமுறை ஒரு திருக்கார்த்திகைத் திருநாளன்று (நம்பிள்ளையின் திரு அவதாரதினம்?) திருவரங்கத்திற்குக் கிழக்கே மூன்றுகாததூரத்தில் ஏதோ ஒரு ஊரில் எழுந்தருளியிருந்தார். அப்போது வேல்வெட்டிநம்பி என்பவருக்கு ஒரு சந்தேகம் எழுந்தது. தம்முடைய சந்தேகத்தை ஒரு ஓலையில் எழுதி நம்பிள்ளையிடம் அனுப்பினார். "இந்த சந்தேகத்தைப் பற்றி வேறு சிலரைக் கேட்டால், என்னைப் பற்றித் தாழ்வாக நினைப்பார்கள்; மேலும் தேவரீரைத் தவிர இந்த சந்தேகத்தைத் தீர்த்துவைக்கக் கூடியவர்களும் எவரும் இலர். எனவே இந்த சந்தேகத்தை உடனே தீர்த்து வைக்க வேண்டும்" என்று நம்பிள்ளையிடம் அவர் கேட்டிருந்தார் என்று மிக மிக விரிவாக இந்நிகழ்ச்சி குறிப்பிடப் பெற்றுள்ளது. வேல்வெட்டி நம்பிக்கு நம்பிள்ளையிடம் இருந்த மதிப்பு, ஐயங்களைத் தீர்த்து வைப்பதில் நம்பிள்ளைக்கு இருந்த திறமை போன்ற பல செய்திகள் இவ்விடத்தில் கூறப்பெறுகின்றன.

நாச்சியார் திருமொழியில் 'என் தத்துவனை வரக் கூகிற்றியாகில் என் தலையல்லால் கைம்மாறிலேனே' என்று ஆண்டாள் அருளிச்செய்துள்ள பாசுரத்தில் 'தலையல்லால் கைம்மாறிலேனே' என்பதற்கு என்ன பொருள் கூறவேண்டும் என்பது பற்றி ஓர் ஐதிஹ்யம் எடுத்துக் காட்டப்பெறுகிறது. "என் தலையை உன்னுடைய காலில் மடுத்து, காலமெல்லாம் வணங்கியிருப்பேன்" என்கிறாள் ஆண்டாள் என்று நஞ்சீயர் பொருள் உரைத்ததாக இவ்வைதிஹ்யம் தெரிவிக்கிறது (எண் 123). ஆனால் இப்பொருளை மட்டும் கூறாமல் இங்கே மேலும் பல செய்திகள் கூறப்பட்டுள்ளன. பெற்றி என்பவர் தவறான ஒரு பொருளைக் கூறிவிட்டதாகவும், பிறகு நம்பிள்ளையிடம் வந்து இப்பாசுரத்திற்கு நஞ்சீயர் அருளிச்செய்யும் பொருள் என்ன என்று கேட்டு அறிந்ததாகவும் இவ்வைதிஹ்யத்தில் கூறப்பெறுகிறது. அவ்விடத்தில் அவ்வளவு கூறியதே போதுமாயிருக்க, அவ்வளவோடும்

நில்லாமல், பெற்றி என்பவர் கூறிய வார்த்தைகள் விரிவாகவே கூறப்பெற்றுள்ளன. "நான் நஞ்சீயரிடம் பதினொரு முறை திருவாய்மொழிக்குப் பொருள் கேட்டேன். ஒருமுறைகூட நாச்சியார் திருமொழிக்குப் பொருள் கேட்கும் வாய்ப்பு எனக்குக் கிட்டவில்லை. ஆயினும் கேட்காத பாசுரங்களுக்கும் பொருள் எனக்குத் தெரியும் வகையில் வரமருளவேண்டும் என்று நஞ்சீயரிடம் நான் கேட்டேன். ஆனால், வரம் பெற்று இவ்வர்த்தங்களைத் தெரிந்து கொள்ள முடியாது, ஆசார்யனிடம் முறையாகக் காலக்ஷேபம் கேட்டே இவ்வர்த்தங்களை அறியமுடியும் என்று நான் உணர்ந்து கொண்டேன்" என்று பெற்றி கூறிய வார்த்தைகள் பொன்னெழுத்துக்களில் பொறிக்கப்படவேண்டியவை ஆகும்.

இவ்வாறு ஒவ்வொரு ஐதிஹ்யத்திலும் முன்னும் பின்னும் கூறப்பெற்றுள்ள நிகழ்ச்சிகளில் பல செய்திகள் தெரிவிக்கப்பெறுகின்றன. மேலே நாம் தெரிவித்தவை மிகப் பெரிய கடலின் ஒரு சில திவலைகளே ஆகும். அவை முழுவதையும் நாம் அனுபவிக்க வேண்டும் என்றால் நான்காயிரம் பாசுரங்களுக்கும் அமைந்துள்ள வியாக்கியானங்களில் இடம் பெற்றுள்ள ஐதிஹ்யங்கள் நிர்வாஹங்கள் முதலியவை அனைத்தையும் சுவைத்து இன்புற வேண்டும். அதைக் கருத்தில் கொண்டே இந்நூல் எழுதப் பெற்றுள்ளது.

நான்காயிரம் பாசுரங்களுக்கும் அமைந்துள்ள அனைத்து வியாக்கியானங்களிலும் உள்ள ஐதிஹ்யங்கள் நிர்வாஹங்கள் முதலியவற்றைத் திரட்டவேண்டும் என்ற முயற்சி பல நூறு ஆண்டுகளுக்கு முன்னரே மேற்கொள்ளப்பெற்றிருந்தது எனலாம். நம்பிள்ளையின் சீடரான பின்பழகிய பெருமாள் சீயர் தொகுத்த(தாகக் கூறப்பெறும்) 'வார்த்தாமாலை' எனும் நூலில் முதன் முதலில் இதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டது என்று கூறலாம். திவ்வியப்பிரபந்த வியாக்கியானங்களிலுள்ள பல ஐதிஹ்யங்கள், நிர்வாஹங்கள், ஸம்வாதங்கள் முதலியவை இந்நூலில் இடம்பெற்றுள்ளன. ஆயினும் திவ்வியப்பிரபந்த வியாக்கியானங்களில் இடம்பெற்றுள்ள அனைத்து ஐதிஹ்ய நிர்வாஹங்களும் இந்நூலில் இடம்பெறவில்லை. மேலும் திவ்வியப்பிரபந்த வியாக்கியானங்களில் இடம்பெறாத பல ஐதிஹ்யங்கள் முதலியவைகளும் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

திரு அரங்கநாத முதலியார் என்பவர் திருவாய்மொழிக்கு அமைந்துள்ள ஈடு முப்பத்தாறாயிரப்படி வியாக்கியானத்திலுள்ள ஐதிஹ்யங்கள் முதலியவைகளை மட்டும் தொகுத்து, 'பகவத்விஷயம்' என்ற நூலில் 1939ல் வெளியிட்டுள்ளார்.

காஞ்சீ மஹாவித்வான் ஸ்ரீஉ.வே. பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசார்ய ஸ்வாமி 1953ல் நாலாயிர திவ்யபிரபந்த வியாக்கியானங்களில் உள்ள ஐதிஹ்ய நிர்வாஹங்கள் அனைத்தையும் தொகுத்து, "ஐதிஹ்ய நிர்வாஹ ரத்னமாலா" என்ற பெயரில் வெளியிட்டுள்ளார். (இந்நூலே அடியேன் இப்போது வெளியிடும் நூலுக்கு அடிப்படையாக அமைந்ததாகும்.) ஒன்றிரண்டு ஐதிஹ்யங்களுக்கு மட்டும் மிகச் சுருக்கமான விளக்கமும் இந்நூலில் தரப்பெற்றுள்ளன. ஆயினும் அனைத்து ஐதிஹ்யங்களுக்கும் இதில் விளக்கம்

தரப்பெறவில்லை. மேலும் ஒருசில முக்கியமான ஐதிஹ்யங்கள் முதலியவை இதில் இடம் பெறாமலே விடுபட்டுப் போயிருக்கின்றன. (உதாரணம்: எண் 329, 386, 389 முதலியவை.) மேலும் ஈடு முப்பத்தாறாயிரப்படியில் உள்ள ஐதிஹ்ய நிர்வாஹங்கள் முதலியவை மட்டுமே இந்நூலில் இடம் பெற்றுள்ளன. ஈடு முப்பத்தாறாயிரப்படியில் இடம் பெறாமல் இருபத்து நாலாயிரப்படியில் மட்டும் இடம் பெற்றுள்ள பல ஐதிஹ்யநிர்வாஹங்கள் முதலியவையும் இந்நூலில் இடம் பெறவில்லை. பெரியாழ்வார்திருமொழிக்கு அமைந்துள்ள திருவாய்மொழிப்பிள்ளை வியாக்கியானம், திருப்பாவைக்கு அமைந்துள்ள ஈராயிரப்படி, நாலாயிரப்படி வியாக்கியானங்கள் முதலிய வியாக்கியானங்களில் இடம் பெற்றுள்ள ஐதிஹ்யநிர்வாஹங்கள் முதலியவைகளும் இந்நூலில் இடம்பெறவில்லை.

எனவே நாலாயிரதிவ்வியப்பிரபந்தங்களுக்கு ஏற்பட்டுள்ள வியாக்கியானங்கள் அனைத்திலும் இடம்பெற்றுள்ள ஐதிஹ்யங்கள், நிர்வாஹங்கள், வார்த்தைகள், ஸம்வாதங்கள் முதலியவைகள் அனைத்தையும் ஒன்று தப்பாமல் திரட்டி அவற்றிற்கு மிகவும் எளிய நடையில் விளக்கமும் எழுதவேண்டும் என்ற எண்ணம் பல்லாண்டுகளுக்கு முன்னரே அடிமனத்தில் தோன்றிய வண்ணமிருந்தது. ஸ்ரீ உ.வே. மஹாவித்வான் பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரிய ஸ்வாமி, தம்முடைய உபந்யாஸங்களில் அவ்வப்போது ஐதிஹ்யங்களைக் கூறிச் சுவையாக விளக்கும்போதெல்லாம் அந்த எண்ணம் மேலும் மேலும் வளர்ந்தது. (குறிப்பாக 23ம் எண் ஐதிஹ்யத்திற்கு ஸ்ரீகாஞ்சீஸ்வாமி உரைத்த பொருள் இன்னும் காதில் ஒலித்துக்கொண்டே இருக்கிறது.) அவ்வப்போது ஐதிஹ்ய நிர்வாஹங்கள் முதலியவைகளை வாசிப்பதும், அவ்வப்போது எழும் சந்தேகங்களை அவரிடமே கேட்டுத் தெளிவு பெறுவதும், அவற்றைக் குறிப்புகளாக எழுதி வைப்பதுமாகப் பல்லாண்டுகள் கழிந்தன.

பொருளல்லத என்னைப் பொருளாக்கி அடிமை கொண்டு, அறியாக் காலத்துள்ளே அடிமைக் கண் அன்பு செய்வித்து, அறியாதன அறிவித்து, ஸம்ப்ரதாய விஷயங்களில் ருசியை அடியேனுக்கு விளைவித்தவர் ஸ்ரீ உ.வே. மஹாவித்வான் பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசார்ய ஸ்வாமியே ஆவார். அடியேனை வளர்த்த தாயான (அத்தை) ஸ்ரீமதி கிருஷ்ணம்மா, ஸ்ரீஸ்வாமியின் உபந்யாஸங்கள் எங்கு நடந்தாலும் தவறாமல் செல்லும் வழக்கமுடையவர் ஆதலால், அடியேனைச் சிறுவயதிலேயே அவ்வுபந்யாசங்களுக்கு அழைத்துச் செல்வார். அப்போதே ஸ்ரீஸ்வாமியின் கடாக்ஷத்திற்கு அடியேன் இலக்கானேன். உபந்யாஸங்களில் பாசுரங்களை மேற்கோளாகக் காட்டுமிடங்களில், இடையிடையே பாசுரங்களை உரக்கச் சொல்லும்படி அடியேனுக்கு நியமித்து, சபைக் கூச்சத்தைப் போக்கியருளினார். அதுமட்டும் அல்லாமல், தாம் அச்சிடும் புத்தகங்களில் பிழை (ப்ரூப்) திருத்தும் விதத்தையும் பொறுமையாகச் சொல்லிக்கொடுத்து, பல புத்தகங்களை அச்சிடும் பொறுப்பையும் அடியேனிடமே கொடுத்திருந்தார். இதுவிஷயமாக அடியேன்

பற்பல கடிதங்களை ஸ்ரீஸ்வாமிக்கு எழுத நேர்ந்தது. அப்போது, கடிதங்களில் அடியேன் செய்துள்ள பிழைகளை யெல்லாம் ஒன்றுவிடாமல் சுட்டிக் காட்டி, திவ்வியப்பிரபந்தப் பாசுரங்களில் உள்ள சொற்களைக் கொண்டே திருத்தங்கள் காட்டுவார். "நாட்கள் என்று எழுதக் கூடாது. நாட்கள் என்றால் புதிய கள் என்றே பொருள். நாள்கள் என்றே எழுதவேண்டும்; 'ஒழிந்தன கழிந்த அந்நாள்கள்' என்றுள்ள பெரியதிருமொழிப்பாசுரம் பார்", "முயற்சிக்கிறேன் என்பது தவறு; முயல்கின்றேன் என்பதுதான் சரி. 'முயல்கின்றேன் உன்றன் மொய்கழற்கு' என்ற கண்ணிநுண். பார்", "இரண்டு ஆழ்வார்கள் என்பது தவறு; அஃறிணைக்குத்தான் ஒன்று இரண்டு வரும். உயர்திணைக்கு ஒருவர் இருவர் என்பது தான் பொருந்தும். ஆழ்வார்கள் இருவர் என்பதே சரி. 'எண்மர் பதினொருவர்' என்ற திருவந்தாதிப்பாசுரம் பார்" என்றெல்லாம் கடிதங்கள் மூலமாகவே அவர் அடியேனுக்கு முறையாக எழுதும் விதத்தைக் கற்பித்தார். "வர்த்திஷ்ணுவான (வளரவேண்டியனான) உனக்கு நான் எழுதுமவற்றுக்கு நீ சிறிதும் மனம் வேறுபடக்கூடாது. உன்னிடத்தில் நாபி வரை நிறைந்த அன்பும் ஆர்வமும் உடையவன் நான் ஒருவனே. அடுத்தபடிதான் அத்தையும் அம்மாவும்" என்று அவர் அடியேனுக்கு எழுதியுள்ள ஸ்ரீமுகத்தை இன்றும் பொக்கிஷமாகப் பாதுகாத்து வருகிறேன். இவ்வாறு ஸ்ரீஸ்வாமி, பணிமானம் பிழையாமே அடியேனைப் பணிகொண்டமையே, எழுத்துத் துறையிலும், பத்திரிகைத் துறையிலும் ஈடுபடுவதற்கு அடியேனுக்குத் துணிவை உண்டாக்கியது. இதனிடையில், சுமார் பத்தாண்டுகளுக்கும் மேலாக ஸ்ரீ உ.வே. வாகம்ருதவர்ஷீ வேளுக்குடி வரதாசார்யஸ்வாமியின் கிரந்த காலக்ஷேபங்கள் அனைத்தையும் கேட்கும் பாக்கியமும் கிட்டியது.

இந்நிலையில் ஸ்ரீ உ.வே. சதாபிஷேகம் கோவிந்த நரஸிம்மாசார்ய ஸ்வாமியிடம் மூன்றாண்டுகளுக்கும் மேலாக பகவத்விஷய காலக்ஷேபம் கேட்கும் பாக்கியமும் ஏற்பட்டது. பூர்வாசார்யர்களுடைய வியாக்கியானங்களில் உள்ள பங்க்திகளை (வரிகளை) நன்றாக அந்வயித்து (பொருத்தி)ப் பொருள் கூறுவதில் ஸ்ரீசதாபிஷேகம் ஸ்வாமிக்கு நிகர் எவருமிலர். ஒரு பள்ளிக்கூட மாணவனுக்குக் கற்பிப்பதுபோல் மிகவும் பொறுமையாகவும் மிகவும் எளியமுறையிலும் ஸம்ப்ரதாயநூல்களை விளக்குவார். ஸம்ப்ரதாய விஷயங்களில் அறியாதன அறிவித்து அடியேனுக்கு ஈன்ற முதல்தாயாகத் திகழ்ந்தவர் ஸ்ரீகாஞ்சீ ஸ்வாமி. அடியேனை வளர்த்த இதத்தாயாகத் திகழ்ந்தவர் ஸ்ரீசதாபிஷேகம் ஸ்வாமி. ஐதிஹ்யங்கள் நிர்வாஹங்கள் முதலியவற்றின் பொருள்களை விளக்கியுரைப்பதில் வல்லவர்களான ஸ்ரீ உ.வே. திருமலை அனந்தாண்பிள்ளை கோவிந்தப்பங்கார் ஸ்வாமி, ஸ்ரீ உ.வே. இளையவில்லி சடகோபாசார்ய ஸ்வாமி ஆகியோர் அருளிச்செய்த பொருள்களை யெல்லாம் ஸ்ரீசதாபிஷேகம் ஸ்வாமி நினைவில் வைத்துக் கொண்டிருந்து வர்ஷிப்பார். குறிப்பாக எண் **336**க்கு அவர் மிகவும் நகைச்சுவையுடன் அளித்த விளக்கம் இன்னும் பசுமையாக நினைவில் உள்ளது. அவற்றையும் குறிப்புகளாக எழுதி வைத்துக்

கொண்டிருந்தேன். ஸ்ரீ உ.வே. வேளுக்குடி வரதாசார்ய ஸ்வாமி, ஸ்ரீஉவே. திருமலை அனந்தாண்பிள்ளை கிருஷ்ணமாசார்ய ஸ்வாமி போன்ற அறிஞர்களிடமும் அவ்வப்போது சந்தேகங்களைக் கேட்டு, அவர்கள் அளிக்கும் விளக்கங்களையும் எழுதிவைத்திருந்தேன்.

இவ்வாறு, மஹாவித்வான்கள் பற்பலருடைய அருளால், திவ்வியப்பிரபந்த வியாக்கியானங்களில் இருந்த ஐதிஹ்ய நிர்வாஹங்கள் முதலியவை அனைத்திற்கும் விரிவான விளக்கம் எழுதும் துணிவு அடியேனுக்கு ஏற்பட்டது. முதலில் நாலாயிர திவ்வியப் பிரபந்தங்களுக்கு அமைந்துள்ள அனைத்து வியாக்கியானங்களையும் வரியடைவே வாசித்து, எங்கெங்கெல்லாம் ஆசார்யர்களுடைய திருநாமங்கள் வியாக்கியானங்களில் குறிப்பிடப்பெற்றுள்ளனவோ அவற்றையெல்லாம் ஒன்று தப்பாமல் திரட்டினேன். பிறகு, ஏற்கனெவே சேமவைப்பாக வைத்திருந்த குறிப்புகளைக் கொண்டு ஒவ்வொரு ஐதிஹ்யத்திற்கும் நிர்வாஹத்திற்கும் விரிவான விளக்கங்கள் எழுதத் தொடங்கினேன். பற்பல நூல்களுடன் ஒப்பிட்டுப் பார்த்து, ஆங்காங்கே தேவையான அடிக்குறிப்புகளையும் எழுதினேன். சிறிது சிறிதாகப் பல்லாண்டுகள் எழுதிவந்தவை அனைத்தையும் சேர்த்துப் பார்த்தபோது, எனக்கே மலைப்பாக இருந்தது. எழுதி முடித்த கையேட்டுப்பிரதி ஏறக்குறைய ஆயிரம் பக்கங்களுக்குமேல் இருந்தன. அவற்றைப் புத்தகமாக அச்சிடலாமா என்ற எண்ணமும் எழுந்தது. ஆயினும் எழுதியுள்ள விஷயங்களில் பிழையேதும் இல்லாமல் இருக்கவேண்டுமே என்ற அச்சமும் ஏற்பட்டது.

கையேட்டுப் பிரதியினை (திருப்பதியில் எழுந்தருளியிருக்கும்) ஸ்ரீஉவே. திருமலை அனந்தாண்பிள்ளை கிருஷ்ணமாசார்ய ஸ்வாமியிடம் கொடுத்து, இதை முழுவதும் கடாக்ஷித்து, ஏதேனும் பிழை இருந்தால் திருத்தித் தரவேண்டும் என்று பிரார்த்தித்துக் கொண்டேன். தம்முடைய வயோதிகத்தின் காரணமாக ஏற்பட்டுள்ள உடல் நலக்குறைவையும் பொருட்படுத்தாமல், அடியேன் எழுதியிருந்த கையேட்டுப் பிரதியை முழுவதும் வாசித்துப் பார்த்து, ஆங்காங்கே மிகப் பொருத்தமான திருத்தங்களைச் செய்து இவ்வாய்வேட்டைப் பொலிவுறச் செய்துள்ளார். குறிப்பாக (எண் 307, 384, 386, 413 முதலிய) சில இடங்களில் என்ன எழுதுவது என்றே புரியாதிருந்த நிலையில் அவ்விடங்களுக்கு விளக்கங்கள் அளித்து உபகரித்தார். அவருடைய திருவடிகளில் தலையால்லால் கைம்மாறிலேன் என்று கூறுவது தவிர வேறு எதுவும் செய்யலாவதில்லை.

பெங்களூரில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ உ.வே. இளையவில்லி ஸ்ரீனிவாஸ பூவராஹாசார்ய ஸ்வாமியிடமும் இந்நூலைக் கொடுத்து, இதில் ஏதேனும் பிழைகள் இருந்தால் திருத்தித் தரவேண்டும் என்று பிரார்த்தித்துக் கொண்டேன். இந்நூல் குறைகள் ஏதுமில்லாமல் வெளிவரவேண்டும் என்பதற்காக அவர் மேற்கொண்ட சிரமங்களை எழுத்தால் வர்ணிக்கமுடியாது. உடல்நலக் குறைவையும் பொருட்படுத்தாமல் இரவுபகலாக இந்நூல் முழுவதையும் ஒரு வரி விடாமல் வாசிக்கக் கேட்டு பல அருமையான

திருத்தங்களைச் செய்து கொடுத்தார். குறிப்பாக, (எண் 183, 302 முதலிய) சில இடங்களில் ஏற்கனவே அடியேன் எழுதியிருந்த விளக்கங்களைத் திருத்தி அவர் அளித்த விளக்கங்களே இந்நூலில் எழுதப்பெற்றுள்ளன. அவை மட்டுமேயல்லாமல் நூல் நெடுகிலும் அவர் காட்டியுள்ள திருத்தங்களால் இந்நூல் பொலிவடைந்துள்ளது. அவருக்குத் தலையல்லால் கைம்மாறிலேன்.

அதேபோல் இந்நூலை முழுவதும் வாசித்து, பல இடங்களில் அரிய திருத்தங்களைச் செய்துள்ள மதுரைப் பேராசிரியர் டாக்டர் ஸ்ரீ உ.வே. இரா. அரங்கராஜன் ஸ்வாமிக்கும் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். குறிப்பாக எண் 84, 476 ஆகியவற்றிற்கு அவர் திருத்தியளித்த விளக்கங்களே இந்நூலில் எழுதப்பெற்றுள்ளன.

இந்நூலை உருவாக்குவதற்குப் பல்வேறு வகைகளில் ஒத்துழைப்பு தந்த வைணவத்துறையின் முன்னாள் தலைமைப் பேராசிரியர் டாக்டர் நரசிம்மாசாரி அவர்களுக்கும், வைணவத்துறையின் தலைமைப் பேராசிரியர் டாக்டர் இராகவன் அவர்களுக்கும் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலை உருவாக்குவதற்கு ஒவ்வொரு கணமும் உறுதுணையாக இருந்து உதவிகள் பல புரிந்த எனது துணைவி டாக்டர் ஸ்ரீமதி பூமாவிற்கும் எனது குமாரன் சிரஞ்சீவி மதுசூதனனுக்கும் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பல வகைகளிலும் உதவி புரிந்த சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர், பதிவாளர், மற்றும் பணியாளர்கள் அனைவருக்கும் நன்றியினைத் தெரிவிக்கிறேன்.

இவ்வாய்வினை மேற்கொள்வதற்குரிய உதவிகளைச் செய்த பல்கலைக்கழக மானியக் குழுவிற்கும் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரு தந்தையைப் போல் அடியேனுடைய எல்லாப் பணிகளிலும் மிகவும் அக்கறையும் ஆர்வமும் கொண்டு ஊக்குவித்து வருவதோடு மட்டுமல்லாமல், இவ்வாய்வேடு புத்தகமாக வருவதற்கு வேண்டிய உதவிகள் எல்லாவற்றையும் செய்து கொடுத்த, வருமானவரித்துறை முன்னாள் தலைமை ஆணையர், திருமலை அனந்தாண்பிள்ளை (T.C.A.) ராமானுஜம் அவர்களுக்கு நன்றி கூற வார்த்தைகளே இல்லை.

இந்நூல் வெளிவருவதற்குரிய நன்கொடைகளை அளித்த பெருந்தகையாளர்கள் அனைவருக்கும் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலில் பிழைகள் எவையேனும் இருந்தால், அடுத்த பதிப்பில் திருத்தி வெளியிடுவதற்கு உதவியாக, அவற்றை அடியேனுக்குத் தெரிவிக்குமாறு வேண்டுகிறேன்.

திருவல்லிக்கேணி ஸ்ரீவைஷ்ணவபாததூளி

சென்னை **வேங்கடகிருஷ்ண தாஸன்**

பொருளடக்கம்

எண்	பொருள்	திருநாமங்கள்	பக்கம்
1	ஆழ்வார்கள் கிருஷ்ணாவதாரத்தில் பரிவு கொள்ளக் காரணம் என்ன?	பட்டர்–நஞ்சீயர்	1
2	ஏடு நிலம் எது?	பிள்ளை அமுதனார்	2
3	கண்ணன் அப்பூச்சி காட்டியது எவ்வாறு?	எம்பார்	4
4	கூரத்து ஆழ்வார் மறுமணம் தவிர்ந்தமை.	கூரத்து ஆழ்வார்	4
5	இராமபிரான் ஏன் தூது செல்லவில்லை.	பட்டர் – நஞ்சீயர்	5
6	மகாபலி அரசையும், சுக்கிரன் கண்ணையும் இழந்தது ஏன்?	நாலூர்பிள்ளை– ஆச்சான் பிள்ளை	5
7	ஆழ்வார் சொல் இளம் சொல் அல்ல.	நாலூர் ஆச்சான் பிள்ளை	6
8	கண்ணன் அப்பூச்சி காட்டியது எவ்வாறு?	எம்பார்	7
9	திருவேங்கடமுடையான் அலைவலை.	குறும்பறுத்த நம்பி	8
10	கடம்பமரம் பூத்துக் குலுங்கியது எங்ஙனம்?	பட்டர்–நஞ்சீயர்; நம்பிள்ளை	9
11	எம்பெருமான் பெருமை மறைந்துவிடாதோ?	சிற்றாட்கொண்டான்	10
12	கல்மாரி ஆகையால் கல்லைக் குடையாகப்பிடித்தான்!	பட்டர்	11
13	ஆலிலை எங்கு இருந்தது?	நாலூர் ஆச்சான்பிள்ளை	11
14	எம்பெருமானுக்கு ஆகாத பூ எதுவுமில்லை.	பட்டர்–நஞ்சீயர்	12
15	கண்ணன் என்ன தவறு செய்துவிட்டான்?	பிள்ளை உறங்காவில்லிதாஸர்	12
16	நஞ்சீயர் மகன் ஆயர்தேவு.	எங்களாழ்வான், நஞ்சீயர்	13
17	நம்பெருமாள் திருமுளை சாத்துவது.	திருவரங்கப்பெருமாள் அரையர், பிள்ளைதிருநறையூர் அரையர், ஆப்பான் திருவழுந்தூர் அரையர்	14
18	பகவத் தத்வம் வளருவது எப்படி?	பட்டர்	15
19	அந்யசேஷத்வமும், இந்த்ரியகிங்கரத்வமும் கழிவது எப்போது?	பெரியவாச்சான்பிள்ளை, வடக்குத்திருவீதிப்பிள்ளை	16
20	மரங்களுக்கும் வீடு பேறு அருளியமை.	பிள்ளைலோகாசாரியர்	16
21	மணக்கோலமும் பிணக்கோலமும்.	நாலூர்பிள்ளை, ஆச்சான்பிள்ளை	17
22	அமுதுபடியும் சாத்துப்படியும்.	நாலூர்பிள்ளை	17
23	ஆழ்வான் பிரிவில் எம்பெருமானார்.	எம்பெருமானார்–கூரத்தாழ்வான்	18
24	இருபிராட்டிமார் நிலை கூடுவது எங்ஙனம்?	பட்டர் – நஞ்சீயர்	20
25	மாற்றுத்தாய் – ஈற்றுத்தாய் – கூற்றுத்தாய்	நாலூர்பிள்ளை–திருவாய்மொழிப் பிள்ளை	21

எண்	பொருள்	திருநாமங்கள்	பக்கம்
26	சூரியனைச் சக்கராயுதம் மறைத்தது எப்படி?	பெரியவாச்சான்பிள்ளை	24
27	திருக்கச்சி நம்பிக்குத் திருநாமம் அருளியது.	திருக்கச்சி நம்பி	25
28	மாயக்குழவியைப் பற்றி ஆழ்வான்.	கூரத்தாழ்வான்	26
29	திருமாலிரும்சோலையில் யானைகள்.	கூரத்தாழ்வான்	26
30	நாவகாரியமும் திருக்குருகைப்பிரான்பிள்ளானும்.	திருக்குருகைப்பிரான்பிள்ளான்	28
31	பட்டர் உகந்த திருநாமம் எது?	பட்டர் – அனந்தாழ்வான்	28
32	நாவகாரியமும் வடுகநம்பியும்.	வடுகநம்பி	29
33	திருவரங்கப்பெருமாள் அரையரும் திருவரங்கமும்.	திருவரங்கப்பெருமாள் அரையர், உடையவர்	30
34	பாகவத கைங்கர்யம் செய்தவர்களைத் திருநாட்டுக்குப் போனார் என்றே கூறவேண்டும்.	கூரத்தாழ்வான்	31
35	ஆசார்ய கைங்கர்யம் செய்தவர்களை ஆசார்யன் திருவடி அடைந்தார் என்றே கூறவேண்டும்.	வடுக நம்பி – அருளாளப் பெருமாள் எம்பெருமானார்	32
36	ஆழ்வானைப் பிரியமுடியாத எம்பெருமானார்.	எம்பெருமானார்–கூரத்தாழ்வான்	33
37	ஈச்வரனுக்கு வந்த மூன்று ஆபத்துகள்.	எம்பார்	35
38	எம்பெருமான் பெயர் வைப்பதே சிறந்தது.	ஆச்சான்பிள்ளை	36
39	உடையவர் ஸ்ரீபாததீர்த்த மகிமை.	வடுகநம்பி	37
40	வளர்த்ததனால் பயன் பெற்றவர்கள்.	உடையவர் முதலானோர்	38
41	வராஹப்பெருமானிடம் நஞ்சீயரின் ஈடுபாடு.	நஞ்சீயர்	38
42	பட்டரும் அரையரும் செய்த பிரதக்ஷிணம்.	பட்டர், பிள்ளை திருநறையூர் அரையர் – நஞ்சீயர், நம்பிள்ளை	39
43	கண்ணன் ரகசியத்தை உபதேசித்தது ஏன்?	பட்டர் – நஞ்சீயர்	40
44	பெரியபெருமாளே கிருஷ்ணன்.	பட்டர்	42
45	இங்குப்புகேல்மின்!	பட்டர்	43
46	எம்மனா! என் குலதெய்வமே! என்னுடை நாயகனே!	ஆளவந்தார் – உடையவர்	43
47	தூறு என்பது ஸம்ஸாரிகளை.	திருக்கோட்டியூர்நம்பி	44
48	உடல் உருகியபின் அவனைத் தேக்கியது எங்ஙனம்?	பட்டர் – நஞ்சீயர்	45
49	சாயைபோலப் பாடவல்லார் தாமும் அணுக்கர்களே!	எம்பார்	46
50	திருப்பாவைக்கு அதிகாரிகள் எவரும் இலர்.	எம்பெருமானார்	47
51	அனந்தாழ்வான் தேடிய மஞ்சள் கொழுந்து.	அனந்தாழ்வான்	49
52	மருத்துவன் வாசலும் நந்தகோபன் வாசலும்.	பட்டர்	49

எண்	பொருள்	திருநாமங்கள்	பக்கம்
53	ஒழிவில் காலமெல்லாம், காலமெல்லாம்	திருவரங்கப் பெருமாள் அரையர்	50
54	மந்த்ரலிங்கம் தோற்றாமே கூறும் ஆண்டாள்.	முதலியாண்டான்	51
55	சிங்கக்குருகு.	பட்டர்	52
56	பட்டருடைய ஸ்ரீபாததீர்த்தம் கொள்ளும் ஆண்டாள்.	ஆண்டாள்	52
57	எம்பெருமானாரை தண்டனிட்ட பெரியநம்பி.	எம்பெருமானார் – பெரியநம்பி	53
58	பிள்ளையின் கண் தாயைப்போன்றது.	பிள்ளை உறங்காவில்லிதாஸர்	54
59	திருப்பாவையும் பூணூல் சாத்தாதாரும்.	பட்டர்	55
60	சிறியாத்தானைப் போன்ற நந்தகோபர்.	சிறியாத்தான்	55
61	தயரதன் மோக்ஷம் பெறாதது ஏன்?	பட்டர் – நஞ்சீயர்	56
62	பிற தெய்வங்களை ஏன் தொழுவதில்லை?	கூரத்தாழ்வான்	58
63	எம்பெருமானுக்கும் வருத்தமுண்டோ?	பட்டர்	58
64	கருணை சாத்திரத்தைக் கொண்டோ பிறக்கிறது?	மாறநேரி ராமானுஜதாஸர்	59
65	அடியவர்களுக்கு ஆட்பட்டவனே உத்தமன்.	பட்டர்	61
66	திருநாமம் சொல்வதற்குத் தகுதி வேண்டுமோ?	பட்டர் – நஞ்சீயர்	62
67	உலக நன்மைக்காகவன்றோ நீ போகிறாய்!	தேவப்பிள்ளை	63
68	பிறதெய்வங்களிடம் எப்படி நடந்து கொள்வீர்கள்?	கூரத்தாழ்வான்	64
69	நாச்சியார் விழி விழிக்க முடியாது!	பட்டர்	65
70	யமுனைத் துறைவனை என்று மறைக்கிறாள்!	பட்டர்	66
71	நம்பெருமாள் திருவயிற்றில் தழும்பு.	நஞ்சீயர்	66
72	எம்பெருமானுடைய திருவிலச்சினை.	பட்டர்	67
73	பறவையின் ஒலியே விரும்பத்தக்கது.	பிள்ளைப்பிள்ளையாழ்வான்	68
74	ஆண்டாள் பிறந்த ஊரில் பறவைகள் உறங்குமோ?	ஆச்சான்பிள்ளை	69
75	இலக்குமணன் எழுப்பிய நாணொலி.	அனந்தாழ்வான்	69
76	கண்ணன் விஷயத்தில் சிந்தயந்தி புதியவள்.	பட்டர்	71
77	பகவத்விஷயத்தில் ருசி உண்டாவது எப்போது?	ஆட்கொண்டவில்லிசீயர்,நஞ்சீயர்	73
78	அடியவர்களுடைய மெய் நம்மளவும் வருகிறது.	பட்டர்	73
79	பறவைகள் எழுப்புவதே! இது என்ன கொடுமை!	ஆய்த்தான்	74
80	முலையெழுந்தாரும் மோவாய் எழுந்தாரும்.	பட்டர்	75
81	போதுவிடியும் வரை உறங்கும் பட்டர்.	பட்டர்	75
82	ஸ்ரீவைஷ்ணவனுடைய திருமாளிகைச் சிறப்பு.	கூரத்தாழ்வான்	76

எண்	பொருள்	திருநாமங்கள்	பக்கம்
83	பாகவத கைங்கர்யம் செய்தவர்களைத் திருநாட்டுக்குப் போனார் என்றே கூறவேண்டும்.	பட்டர், தொண்டனூர் நம்பி நஞ்சீயர்,ஏறுதிருவுடையார்தாஸர்	77
84	வெட்டிமையரும் கோயிலண்ணனும்.	எம்பெருமானார் – ஆண்டாள்	77
85	எம்பெருமானாரைப்போல அருங்கலம்.	எம்பெருமானார்	79
86	விடுகையும் உபாயமல்ல; பற்றுகையும் உபாயமல்ல.	திருநறையூரரையர் – நஞ்சீயர்	79
87	எம்பெருமானாரைப்போலே இக்கோபிகையும்.	எம்பெருமானார்	80
88	பெரியதிருநாளில் ஏகாதசி எங்கே தேடி எடுத்தீர்கள்?	ஆண்டாள் – பட்டர்	81
89	தாமஸ ஸந்யாஸிகளும், ஸாத்விக ஸந்யாஸிகளும்.	எம்பார், திருமலை நம்பி	82
90	பரிசலில் சங்கு ஊதிய ஸந்யாஸி.	எம்பார்	83
91	அரைக்ஷணமும் வைஷ்ணவர்களைப் பிரியமுடியாது.	சுப்ரமண்யபட்டர்	84
92	திருவரங்கனை ஸேவிக்காத ஆழ்வான்.	கூரத்தாழ்வான்	85
93	எம்பெருமானை வசத்தில் உடையவர்கள் பெருமை.	நஞ்சீயர் – நம்பிள்ளை	86
94	நாதமுனிகளை முன்னிட்ட ஆளவந்தார்.	நாதமுனிகள் – ஆளவந்தார்	87
95	பெரியபெருமாளைத் தஞ்சம் என்றவரே தஞ்சம்.	பட்டர் – நஞ்சீயர்	88
96	எம்பெருமானார் உகந்த பாட்டு.	எம்பெருமானார்	89
97	உதாரவாக்குகள்.	ஆளவந்தார், ஆழ்வான், பட்டர்	91
98	பராசரர் எனும் வள்ளல்.	ஆளவந்தார்	91
99	பிரமனுக்கும் நமக்கும் மோக்ஷம் எப்போது?	பட்டர்	92
100	குட்டிக்குப் பால் கொடுக்கும் சிங்கம்.	பட்டர்	93
101	இராமானுசனுடையார் அகதிகள் அல்லர்.	கிடாம்பியாச்சான்	93
102	ஆளவந்தார் சொன்னதை நான் சொல்ல வேண்டா.	அனந்தாழ்வான்	94
103	வெள்ளம் சென்றபின் அணைகட்டுவது.	நஞ்சீயர்	95
104	அவளுக்கு முலை சுரந்தது; இவன் உண்டான்.	பட்டர்	96
105	சீதைக்கு இராமன் கொடுத்த சம்மானம்.	ஆழ்வான், பட்டர்	97
106	யாம்பெறும் சம்மானம் வந்தது.	பட்டர்	98
107	நெய் வாயிலே ஏன் தங்கவில்லை?	பட்டர்– திருவழுதிவளநாடுதாஸர்	99
108	பகவானைப் பற்றினவர்கள் அஞ்சவேண்டா.	பெரியநம்பி – எம்பெருமானார்	100
109	பகவானிடம் எதை விண்ணப்பிக்க வேண்டும்?	ஆளவந்தார்	101
110	இற்றைப் பறை கொள்வான் அன்று காண்.	பட்டர்	102
111	தோற்கன்றுக்கு இரங்கும் பசுவைப் போல.	பட்டர்	103

எண்	பொருள்	திருநாமங்கள்	பக்கம்
112	மாதவனும் கேசவனும்.	பட்டர்	103
113	விடிவோரை திருப்பாவை அனுசந்திப்பது.	பட்டர்	105
114	தரை விளக்குவதே பயன்.	திருக்கண்ணமங்கையாண்டான்	105
115	சீதை உயிர் தரித்திருந்தது எங்ஙனம்?	நஞ்சீயர் – நம்பிள்ளை	106
116	இந்தப்பக்கம் நின்றவர் என்சொல்லார்!	நம்பிள்ளை	108
117	இருளை அன்றோ சரணம் புகவேண்டும்	பிள்ளை உறங்காவில்லி தாஸர்	109
118	பள்ளிகொள்ளும் இடமாவது கோயில்	பட்டர், அழகியமணவாளவரையர்	110
119	இரண்டு அடியா? மூன்று அடியா?	பட்டர் – நஞ்சீயர்	111
120	ஆய்ச்சிகளின் நிறை புகழ்	எம்பார்	112
121	வில்லிபுத்தூர் உறைவானை ஆண்டாள் ஏன் காணவில்லை?	நஞ்சீயர் – நம்பிள்ளை	113
122	சீதை தரித்திருந்தது எங்ஙனம்?	நஞ்சீயர் – நம்பிள்ளை	114
123	தலை அல்லால் கைம்மாறு இலேன்	பெற்றி, நம்பிள்ளை, நஞ்சீயர்	115
124	வாமனாவதாரத்தில் பூமி நெளிந்தது ஏன்?	பட்டர் – நஞ்சீயர்	116
125	இராமன் சீதையின் கையைப் பிடித்தவிதம்	எம்பார்	117
126	நஞ்சீயர் ஸந்யாஸம் மேற்கொண்டது அவசியமா?	நஞ்சீயர், அனந்தாழ்வான்	118
127	எம்பெருமானையே பின்பற்ற வேண்டும்	நஞ்சீயர் – சுந்தரபாண்டியன்	119
128	எம்பெருமானார் நூறு தடா ஸமர்ப்பித்தது	எம்பெருமானார்	121
129	நூறு தடாவும் அற்பமானவையே	நஞ்சீயர் – நம்பிள்ளை	122
130	ஏறுதிருவுடையான்	வங்கிப்புரத்துநம்பி–சிறியாத்தான்	123
131	பறவைகளுக்கு வேறு போதுபோக்கு உண்டோ?	ஆச்சான், சீயர்	124
132	அடியவர்களுடைய மெய் நம்மளவும் வருகிறது	பட்டர், வாணவதரையன்	124
133	மாற்றோலைப்பட்டவர்	திருமலைநம்பி–எம்பார்–ஆப்பான்	125
134	சிசுபாலன் பெற்றது பேறாகாது	ஆளவந்தார்	127
135	நம்மைத் தேய்த்தாகிலும் இங்கே கிடக்கை நல்லது	பட்டர்,நஞ்சீயர், தேவப்பிள்ளை	129
136	தன் சீடனைத் தான் வணங்கலாமா?	அம்மணியாழ்வான், நஞ்சீயர், பிள்ளான்	129
137	பட்டரை திருநறையூர் அரையர் கொண்டாடியது	திருநறையூர் அரையர், பட்டர்	130
138	திருமலை நம்பி ஈடுபட்ட பாசுரங்கள்	திருமலை நம்பி	131
139	திரிபுராதேவியார் வார்த்தை	திரிபுராதேவியார்	132

எண்	பொருள்	திருநாமங்கள்	பக்கம்
140	நம்பெருமாள் குளிர்ந்த திருமுகத்தை இழக்கவோ?	பட்டர்	132
141	பரமபதத்திலிருந்து குதித்துவிடுவேன்	சொட்டை நம்பி	134
142	எம்பெருமானுடைய எளிமையில் ஈடுபட்ட எம்பார்	எம்பெருமானார்–எம்பார்	135
143	இருவரும் சரணமடைந்தவர்களைக் காக்கிறார்கள்	பட்டர் – நஞ்சீயர்	135
144	உடலையும் விரும்புகிறேன்	திருமாலையாண்டான்	136
145	திருக்கோட்டியூர் நம்பியின் பெருமை	திருக்கோட்டியூர்நம்பி–உடையவர்	136
146	கண்ணன் விஷயத்தில் சிந்தயந்தி புதியவள்	பட்டர்	138
147	மருத்துவன் வாசலும் நந்தகோபன் வாசலும்	பட்டர்	139
148	போர்க்களமாக நிருத்தம் செய்தது எப்படி?	பட்டர்	139
149	தெளிந்து ஏறினவன் சாகமாட்டான்	அனந்தாழ்வான்,நம்பிகுஹதாஸர்	140
150	பாடோடிக் கிடந்த கிடை	அகளங்கநாட்டாழ்வான்	141
151	முலை எழுந்தாரும் மோவாய் எழுந்தாரும்	பட்டர்	141
152	மேலிட்ட உத்தரீயம் ஆகாதோ?	பட்டர் – நஞ்சீயர்	142
153	சிறியாத்தானைப் போன்ற நந்தகோபர்	சிறியாத்தான்	142
154	அருளாத திருமாலார்	பிள்ளான், பட்டர், நஞ்சீயர்	143
155	வானிளவரசு	பட்டர்	144
156	இட்டீறிட்டு விளையாடுவதே!	சிறியாத்தான்	144
157	வினதை சிறுவன் என்றபடி என்தான்!	நம்பிள்ளை	145
158	அயன் தன்னைத் தந்த என்ற பாடம்	நம்பிள்ளை	146
159	சிறியாத்தானைப்போல மெய்தழும்பத் தொழுது	சிறியாத்தான்	147
160	எம்பெருமான் பொன்மலைமேல் ஏதேனும் ஆவேனே	அனந்தாழ்வான், பட்டர்	149
161	பாவம் எது? புண்ணியம் எது?	கிடாம்பிப்பெருமாள், பிள்ளை திருநறையூர் அரையர்	149
162	குருவியின் பிணையும் எம்பெருமான் பிணையும்	பிள்ளைதிருநறையூர் அரையர்	150
163	அரிசினத்தால் அகற்றிடினும்	முதலியாண்டான் – நம்பி திருவழுதிவளநாடு தாஸர்	151
164	சற்றுப்போதன்றோ துன்பம்!	பிள்ளை திருநறையூர் அரையர்	152
165	கோபிகை சினம் தீர்ந்தது எப்படி	உய்ந்தபிள்ளை, எம்பார்	153
166	சுற்றமெல்லாம் பின் தொடர்ந்தார்களோ?	எம்பெருமானார்	154
167	திருநாமம் சொல்வதற்குத் தகுதி வேண்டுமோ?	பட்டர் – நஞ்சீயர்	155

எண்	பொருள்	திருநாமங்கள்	பக்கம்
168	திருமேனியை ஆதரித்தவர்களைப் பெற்றோமே!	நஞ்சீயர்	155
169	பிற மதங்களைக் காண்பரோ கேட்பரோ?	கூரத்து ஆழ்வார், ஆழ்வான்	156
170	ராஜ்யத்தை இழப்பாய் என்று சபித்தது ஏன்?	பட்டர் – நஞ்சீயர்	157
171	பிள்ளை திருநறையூர் அரையரின் பரிவு	பிள்ளை திருநறையூர் அரையர்	158
172	மகாபாரதத்தில் இது என்ன வேதார்த்தம் கூறுகிறது?	பட்டர்	158
173	ஏழைக்கும் பேதைக்குமன்றோ அரசன் உள்ளான்	நஞ்சீயர்	160
174	கடற்கரையில் வெளியை நினைத்திரும்	பட்டர், நஞ்சீயர், சோழசிகாமணிப் பல்லவராயர், விழுப்பரையர்	160
175	பெரியபெருமாள் க்ருஷ்ணன்; நம்பெருமாள் ராமன்.	பட்டர்	162
176	திருமுடிப்பக்கம் துர்யோதனஸ்தானம்	ஆளவந்தார்	163
177	எம்பெருமானே தந்தையும் தாயுமாவான்	பட்டர், சீராமப்பிள்ளை	164
178	நம் மாணி என்னப் பெற்றவர்கள்	மணக்கால்நம்பி, திருமகிழ்மாலை மார்வன், பிள்ளைப்பிள்ளை ஆழ்வான், அப்பிள்ளையாழ்வான்	164
179	எம்பெருமான் நம்மை விட்டுக்கொடுக்க மாட்டான்	திருக்கண்ணமங்கையாண்டான்	165
180	தவளை யார் அறியக் கத்துகிறது?	கூரத்தாழ்வான்	165
181	பட்டர் நஞ்சீயருக்கு அளித்த பரிசு	பட்டர், நஞ்சீயர்	166
182	நாவைக் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும்	ஆழ்வான் – பிள்ளைப்பிள்ளை	167
183	பெரியபெருமாள் க்ருஷ்ணன்; நம்பெருமாள் ராமன்.	பட்டர்	168
184	திருவேங்கடமுடையானைப் பாடியது ஏன்?	திருநறையூரரையர், பட்டர்	168
185	திருவேங்கடத்திற்கு இனிப் போகிலும் போம்	அழகிய மணவாள அரையர்	170
186	ஒரு முழுக்கால் நம் பாவங்கள் போகுமோ?	பட்டர், தெற்காழ்வான், கோளரியாழ்வான்	171
187	பரமபதநாதனுக்குக் கைகள் இரண்டா நான்கா?	அனந்தாழ்வான் – பட்டர்	171
188	பெரியபெருமாள் திருக்கண்கள்	பட்டர்	172
189	எம்பெருமானார் ஆச்ரயிப்பதுவே பரம்பொருள்	திரிபுராதேவியார்	173
190	சத்ருக்னாழ்வான் படி	எம்பெருமானார்	174
191	ஆசார்யர்களை நம்பி என்றவர் மதுரகவி	நஞ்சீயர்	175
192	தாமே வந்து என்னை ஆட்கொள்வதே!	நஞ்சீயர், பட்டர்	176
193	எம்பெருமானார் ஆச்ரயிப்பதுவே பரம்பொருள்	திரிபுராதேவியார்	177
194	ஆசார்யன் உகப்பே நம் உகப்பு	பிள்ளையாத்தான், காங்கேயன்	177

எண்	பொருள்	திருநாமங்கள்	பக்கம்
195	ஆழ்வானுடைய ஆசார்ய பக்தி	உடையவர், கூரத்தாழ்வான்	178
196	நன்மையால் மிக்க நான்மறையாளர்கள்	கூரத்தாழ்வான், ஆண்டாள்	179
197	என்னை ஆண்டது எப்படி?	வடக்குத்திருவீதிப்பிள்ளை	179
198	நம்புவார் பதி வைகுந்தம்	திருவழுதிவளநாடுதாஸர், பெற்றி	180
199	சரணாகதிக்கு நியமங்கள் உண்டோ?	நம்பிள்ளை, வேல்வெட்டிநம்பி	181
200	திருநாமம் சொல்வதற்குத் தகுதி வேண்டுமோ?	பட்டர் – நஞ்சீயர்	183
201	ஆழ்வாரைக் காட்டிலும் நல்ல ரஸிகர்நம்பிள்ளை	நஞ்சீயர் – நம்பிள்ளை	184
202	வைஷ்ணவன் யார்?	நஞ்சீயர்	185
203	பகவத் தத்வம் வளருவது எப்படி?	பட்டர்	186
204	நெருப்புப்போன்ற மலர்கள்	நம்பிள்ளை	186
205	யானையை விழுங்கும் மலைப்பாம்புகள்	நஞ்சீயர் – நம்பிள்ளை	187
206	அரிய இன்னிசை	திருவரங்கப்பெருமாள் அரையர்	189
207	ஒரே உடலைப் பற்றி இரண்டு கருத்துகள்	பட்டர்	190
208	ஸந்யாஸ ஆச்ரமம்தான் என்னே!	நஞ்சீயர்	190
209	தண்டு காலா ஊன்றி, ஊன்றி	பட்டர்–அழகியமணவாளவரையர்	191
210	பாடத்தைத் திருத்த பலம் போதாது	நம்பிள்ளை – ஸ்ரீபராங்குசதாஸர்	192
211	செல்வமும் விரும்பத்தக்கதாகிவிட்டது	பட்டர் – நஞ்சீயர்	193
212	முன்பே படைத்த நரகங்கள் போதாது	நஞ்சீயர் – நம்பிள்ளை	194
213	தூதுபோன பெருமை இராமனுக்கு இல்லையே!	பட்டர் – சிறியாத்தான்	194
214	திரௌபதி கண்ணன் பெயரைக் கூறியது ஏன்?	எம்பார், பட்டர்	195
215	முனிக்கரையன் யார்?	அழகப்பெருமாள் அரையர்	197
216	கன்றுகளை நீரூட்டிய கண்ணன்	பட்டர், நஞ்சீயர், பிள்ளை அழகிய மணவாளப் பெருமாள் அரையர்	197
217	புழு குறித்தது எழுத்தாகுமா போலே	பட்டர்	199
218	பிள்ளை உறங்காவில்லி தாஸர் மஹாமதிகள்	பிள்ளை உறங்காவில்லிதாஸர்	200
219	ஆண்பிள்ளைச் சொற்றாழ்வியைப் பின்தொடர்ந்தவன்	நம்பிள்ளை	201
220	இருவரும் சரணமடைந்தவர்களைக் காக்கிறார்கள்	பட்டர்	204
221	பட்டரும் அரையரும் செய்த பிரதக்ஷிணம்	பட்டர், திருநறையூர் அரையர்	204
222	துளம் என்பது பீலிக்காம்பு	தமிழன், நஞ்சீயர்	204
223	உண்ணவும் பொறாதவர், பட்டினியும் பொறாதவர்	பட்டர்	205

எண்	பொருள்	திருநாமங்கள்	பக்கம்
224	எம்பெருமானார் தரிசனம் என்பது போல	எம்பெருமானார், பிள்ளான்	206
225	பட்டரைப் பாராட்டிய எம்பார்	எம்பார், பட்டர்	207
226	ஆழ்வார்களும் தங்களையே பாடிக்கொண்டார்கள்	திருவிளக்குப்பிச்சன்	208
227	நஞ்சீயருடைய சரமதசை	நஞ்சீயர், பெற்றி	209
228	துணை என்பது இரண்டைக் குறிக்காது	சிறியாத்தான்	210
229	சிறுவண்டைப் போன்ற எம்பார்	எம்பார்	211
230	நஞ்சீயருடைய சரமதசை	நஞ்சீயர்	211
231	அம்மங்கியம்மாள் சரமதசை	நஞ்சீயர், அம்மாள், நம்பிள்ளை	212
232	எம்பெருமான் திருவாழி அழகுக்கு மட்டுமே!	பட்டர்	213
233	பயிலும்சுடரொளி, நெடுமாற்கடிமை கடலோசையோ?	பெரியநம்பி – எம்பெருமானார்	213
234	தலைமகளை அழைத்துச் சென்ற நாயகன்	பிள்ளை அமுதனார், பட்டர்	214
235	துடுப்பிருக்கக் கை வேகவேணுமோ?	எம்பெருமானார்,ஆச்சான்,பட்டர்	215
236	நந்தா விளக்கே அளத்தற்கரியாய்	கூரத்தாழ்வான்	216
237	இளமேதிகள் வைகி, வைகி	ஆப்பான், விழுப்பரையர்,பட்டர்	216
238	செல்வமும் விரும்பத்தக்கதாகிவிட்டது	பட்டர் – நஞ்சீயர்	217
239	தான்போலும் என்றெழுந்தவன் இராவணன்	ஆப்பான், பட்டர்	218
240	வ்ருத்தவானும் வ்ருத்தஹீனனும்	நம்பிள்ளை	219
241	சிந்தை தன்னுள் முந்தி நிற்கிறீர்	பிள்ளான்	220
242	என்னையன்றோ மடியில் கொள்ளவேண்டும்!	பட்டர், நம்பிள்ளை	220
243	பிள்ளைக்கன்றோ இரை தேடுகிறது	பட்டர் – ஆலவாயுடையான்	221
244	திருவேங்கடமுடையானைப் பாடியது ஏன்?	பட்டர், நம்பிள்ளை	222
245	அவரவர்களின் ஈடுபாடு கொண்ட திருநாமங்கள்	பட்டர், அனந்தாழ்வன், நஞ்சீயர்	223
246	கண்ணன் விஷயத்தில் சிந்தயந்தி புதியவள்	பட்டர்	224
247	சரணாகதிக்கு நியமம் உண்டோ?	நம்பிள்ளை, வேல்வெட்டிநம்பி	224
248	நம்பிள்ளையைப் போன்ற ஸாந்தீபினி	நம்பிள்ளை	225
249	திருவேங்கடமுடையான் அலைவலை	குறும்பறுத்தநம்பி	226
250	அணிபொழில் திருவரங்கம் எங்கே ஒளிந்தது?	பட்டர்	227
251	அவளுக்கு முலை சுரந்தது; இவன் உண்டான்.	பட்டர்	228
252	மறந்தேன் உன்னை	ஒப்பில்லாத பெருமாள்	229
253	திருநறையூர்ப்பெருக்கு சினையாறு படுகிறது	பட்டர்	230

எண்	பொருள்	திருநாமங்கள்	பக்கம்
254	பட்டரின் வாக்கு வன்மை	பட்டர், கிடாம்பியம்மாள், சிறியாண்டான் பெருமாள்	230
255	வங்கிப்புரத்து நம்பியிடம் நடுங்கிய எம்பெருமானார்	எம்பெருமானார், வங்கிப்புரத்து நம்பி, ஆழ்வான், ஹநூமத்தாஸர்	231
256	கேள்வியில்லாத பெண்ணரசு நாடு	பட்டர், திருநறையூரரையர்	233
257	கைக்கூட்டனுக்கும் பால்சோறு	பட்டர்	234
258	பிள்ளையின் கண் தாயைப்போன்றது	பிள்ளை உறங்காவில்லிதாஸர்	235
259	இந்திரனுடைய நன்றிக்கேடு	பிள்ளையமுதனார்	236
260	ஸக்ருதேவ என்பதற்கு ஸஹஸைவ என்று பொருள்	கூரத்தாழ்வான் எம்பார்	237
261	அறிந்து செய்தபாவங்களையும் பிரபத்தி போக்கும்	நஞ்சீயர், எண்ணாயிரத்துத் திருவாய்க்குலத்தாழ்வான்	237
262	கறவாதபசுவும் கன்றும்	பிள்ளை அமுதனார், பட்டர்	239
263	பயிலும்சுடரொளி, நெடுமாற்கடிமை கடலோசையோ?	பெரியநம்பி – எம்பெருமானார்	240
264	கலியன் திருமுடிமீது கால்வைக்கவல்லார் யார்?	அழகியமணவாள அரையர்	241
265	ஆழ்வானுடைய எளிமை	கூரத்தாழ்வான்	242
266	செல்வமும் விரும்பத்தக்கதாகிவிட்டது	பட்டர்	243
267	செல்வமும் விரும்பத்தக்கதாகிவிட்டது	பட்டர்	243
268	ஆழ்வானைச் சந்தித்தாயோ?	கூரத்தாழ்வான்	243
269	பரமபதநாதன் சதுர்புஜன் என்பதற்கு ப்ரமாணம்	பட்டர்--நிலாத்துக்குறிபகவர்	244
270	செருவரை ஆசறுத்த சிலையன்றோ கைத்தலத்தது	திருக்கண்ணபுரத்தரையர்	245
271	பிள்ளை அமுதனார் கூறிய விளக்கங்கள்	அமுதனார், நம்பிள்ளை	246
272	முன்பே கண்ட முகமும்; முன்பு கண்டறியாத முகமும்	நஞ்சீயர் – நம்பிள்ளை	247
273	கோயிலாழ்வாரைக் காணாதவன்	பட்டர்	248
274	மகள் அநுகாரத்தைத் தாய் கூறுகிறாள்	பட்டர், திருவழுந்தூரரையர், ஆழ்வார் திருநறையூர் அரையர்	249
275	உடையவர் பெருமாளுக்குத் திருமஞ்சனமெடுத்தது	உடையவர்	250
276	இதென்ன வைக்கோல் போரா?	விக்ரமசோழதேவர்	251
277	கர்த்தரி அன்று கர்மணி	பட்டர், சிறியாத்தான்	251
278	அல்லிக்கமலக் கண்ணனாகிறான்	நஞ்சீயர்–நம்பிள்ளை	252
279	புகலற்றவனைக் கைவிடுதல் தகாது	நஞ்சீயர்	253

எண்	பொருள்	திருநாமங்கள்	பக்கம்
280	பொன் இவர்	பிள்ளை அமுதனார்	254
281	ஆருயிர் பட்டது, எனதுயிர் பட்டது?	எம்பெருமானார், திருவரங்கப் பெருமாள் அரையர், நஞ்சீயர்–நம்பிள்ளை	254
282	என் நலம் ஐந்தும் கொண்டு போனவன்	அமுதனார்	256
283	தக்கமரம்	பட்டர்	256
284	அரக்கர் ஆடு அழைப்பார் இல்லை	பட்டர், நஞ்சீயர்–நம்பிள்ளை	257
285	தசரதனுடைய குணங்களில் பாதியே இராமனுக்கு	நஞ்சீயர்–சுந்தரபாண்டியத்தேவர்	258
286	கண்ணன் மடியில் கோழி	பட்டர், நஞ்சீயர், நம்பிள்ளை	259
287	சாமன்யன் என்று இடும் ஈடெல்லாம் இடுங்கள்	பிள்ளை உறங்காவில்லிதாஸர்	261
288	இருபிராட்டிமார் நிலை கூடுவது எங்ஙனம்?	பட்டர் – நஞ்சீயர்	262
289	குருவியின் பிணையும் எம்பெருமான் பிணையும்	பிள்ளைதிருநறையூர் அரையர்	263
290	நாம் பேறு பெறமுடியுமோ?	நஞ்சீயர்	263
291	இதுவே அமையும்	நம்பிள்ளை	264
292	சிசுபாலன் பெற்றது பேறாகாது	ஆளவந்தார்	265
293	தேவர்கள்முன்னே திருமார்பில் ஏறலாமோ?	நஞ்சீயர்–பட்டர்	266
294	மதுவனம் இருந்ததோ இராமன் முதுகு பிழைத்ததோ!	எம்பார்	267
295	தம்பி வளைக்காரி அன்றோ!	நஞ்சீயர்	268
296	கண் போயிற்று; தொடுவுணர்ச்சியாவது உள்ளதா?	பட்டர்	269
297	எம்பெருமானாரைப் போன்ற கட்டுவிச்சி	எம்பெருமானார்	269
298	மன்னனாரே குணபாலமதயானை	பெரியமுதலியார்	270
299	கல்மழையாகையால் கல்லைக் குடையாகப்பிடித்தான்!	பட்டர்	272
300	எம்பெருமானாரை தண்டனிட்ட பெரிய நம்பி	எம்பெருமானார், பெரியநம்பி	272
301	திருக்கண்ணபுரமும் திருவாய்ப்பாடியும்	பட்டர்	273
302	பெருமாள் எழுந்தருளிய திருவீதி	பட்டர்	274
303	முகரி என்பதன் பொருள்	பட்டர்	274
304	ஆற்றிலே கெடுத்துக் குளத்திலே தேடுகிறாள்	நம்பிள்ளை	275
305	மச்சித்தா: மத்கதப்ராணா: போதயந்த:பரஸ்பரம்	பட்டர்	276
306	பெண்மையை அழிக்க அவன் செய்த ஆடல்கள்	பட்டர், நஞ்சீயர்	277
307	ஜனகராஜன்திருமகள் வார்த்தை	நஞ்சீயர்	277

எண்	பொருள்	திருநாமங்கள்	பக்கம்
308	திருநகரி முதல் கோயில் வரை பொழிலோ?	பட்டர்	278
309	தலைமகளும் பிணம்தின்னியும்	விக்ரமசோழதேவன்	278
310	வண்டுக்கு ஆறுகால்கள் எதற்கு?	பட்டர்	279
311	அவரவர் ஈடுபாடு கொண்ட திருநாமங்கள்	அனந்தாழ்வான், பட்டர், சோமாசியாண்டான்	280
312	கடலைக் கடைந்ததும் அடைத்ததும் திருமகளுக்காக	ஆளவந்தார்	281
313	எம்பெருமானை மறக்க வழியுண்டோ?	மாறநேர்நம்பி	282
314	இதுவே தாரகமான ஸாதுவை நலியாதே	பட்டர், சீராமப்பிள்ளை	282
315	பரமபதநாதன் சதுர்புஜன் என்பதற்கு ப்ரமாணம்	பட்டர்–நிலாத்துக்குறிபகவர்	283
316	வெண்ணெய் உண்டது எப்படி?	பட்டர்–திருநறையூர் அரையர்	283
317	திருமகட்கே தீர்ந்தவாறு என்கொல்!	அனந்தாழ்வான், பட்டர்	284
318	பிள்ளைகள் விளையாட்டும் எம்பெருமானாரும்	எம்பெருமானார், நஞ்சீயர்	285
319	நஞ்சீயர் மகன் ஆயர்தேவு	எங்களாழ்வான், நஞ்சீயர்	287
320	மன்னுயிர்க்கு அரணாய பேராழி கொண்ட பிரான்	ஆப்பான், பட்டர், நஞ்சீயர்	288
321 88	எம்பார் விடியற்காலையில் அனுஸந்திக்கும் பாசுரம்	எம்பார்	289
322	உலகத்தை உலாவி அளந்தமை	பட்டர்	290
323	நாடோறும் மருவாதார்க்கு உண்டாமோ வான்	நஞ்சீயர்	290
324	அல்லாதவற்றில் உறைந்த மாத்திரமே!	நம்பிள்ளை	291
325	வேங்கடம்பாடும், துழாய் சூடும், நீட்கடல்புகும்	(பெரியவாச்சான்பிள்ளை)	292
326	வயிற்றை வண்ணானுக்கு இட்டாலோ!	பிள்ளை உறங்காவில்லி தாஸர்	293
327	இல்லறமும் துறவறமும், நாரணனும்	பட்டர்	294
328	ஆழ்வார் நித்யஸம்ஸாரி	வங்கிப்புரத்து நம்பி	294
329	இந்நின்ற நீர்மை	அம்மாள், ஆளவந்தார்	295
330	ஆழ்வார் பிறந்த பின் அவன் பிறக்கவேண்டியதில்லை	பட்டர், ஸ்ரீவத்ஸாங்கதாஸர்	296
331	ஆழ்வார் மனநிலைக்குக் காரணங்கள்	திருநறையூரரையர், திருமலை நம்பி, பட்டர், நஞ்சீயர், நம்பிள்ளை	297
332	முன்பே கண்ட முகமும்; கண்டறியாத முகமும்	நஞ்சீயர் – நம்பிள்ளை	298
333	திருக்கச்சிநம்பியைக் காணச்சென்ற பெரியநம்பி	எம்பெருமானார், பெரியநம்பி, திருக்கச்சிநம்பி	299
334	உடையவரைப் பிரிய முடியாத உறங்காவில்லிதாஸர்	எம்பெருமானார், பிள்ளை உறங்காவில்லிதாஸர்	300

எண்	பொருள்	திருநாமங்கள்	பக்கம்
335	ஆளவந்தாரின் திருமுதுகே தஞ்சம்	திருக்கோட்டியூர்நம்பி, உடையவர்	302
336	பெரியதிருநாளில் ஏகாதசி எங்கே தேடி எடுத்தீர்கள்?	பட்டர்	303
337	விசும்பூர் தேர்வன	நம்பிள்ளை, திருநறையூரரையர்	304
338	அடியவர்களோடு ஸம்பந்தமே கிடைத்துவிடும்	எம்பெருமானார், நம்பிள்ளை	305
339	குகனோடு நின்றபோது காலம் நெடுகியது ஏன்?	நஞ்சீயர்—நம்பிள்ளை	306
340	அச்நாமி என்னுமாபோலே	பிள்ளை உறங்காவில்லிதாஸர், பொன்னாச்சியார்	307
341	சிறுநாண் எறிவிலம்	ஆசார்யர்கள்	308
342	திருப்புளியமரத்தின்கீழ்ப் போய்க் கெட்டேன்	பிள்ளை திருநறையூர் அரையர், ஆப்பான் திருவழுந்தூர் அரையர்	309
343	சீதைக்கு இராமன் கொடுத்த சம்மானம்	பழையவர்கள், பட்டர்	310
344	திருவரங்கத்திலிருப்பவளை எப்படித் துன்புறுத்துவது?	பட்டர்	310
345	சரணாகதியே எல்லோரையும் காப்பாற்றும்	எம்பார்	311
346	மதுவனம் இருந்ததோ இராமன் முதுகு பிழைத்ததோ!	பட்டர்	312
347	அரைக்கால் அமையும்	கிடாம்பியாச்சான், நம்பி திருவழுதிவளநாடு தாஸர்	313
348	பகவத்குடும்பத்திற்கு நான் கரையவோ?	ஆழ்வான், ஆண்டாள், பட்டர்	314
349	திரௌபதி கண்ணன் பெயரைக் கூறியது ஏன்?	ஆளவந்தார்	315
350	கூடலைச் சிதைத்தது ஏன்?	பட்டர்	315
351	இவள் கால் பட்ட மணல் பரத்தத்வமாகாதோ?	பட்டர், விழுப்பரையர்	316
352	இலங்கையை அழித்தது ஏன்?	எம்பார், திருமலைநம்பி	317
353	எம்பெருமானை மறக்க வழி சொல்லமுடியுமோ?	குருகைகாவலப்பன்	318
354	நமக்கும் ஆழ்வார்களுக்கும் உள்ள வேறுபாடு	எம்பார்	319
355	முலையும் திருவடியும்	பிள்ளைப் பிள்ளையாழ்வான்	320
356	பட்டர் விரும்பியிருந்த திருநாமம் எது?	திருமலைநம்பி, சிறியாத்தான்	320
357	ஆச்சிமகனுடைய அந்திமதசை	பட்டர், ஆச்சிமகன்	321
358	பரமபதத்திலிருந்து குதித்துவிடுவேன்	சொட்டை நம்பி	322
359	நம்பெருமாள் குளிர்ந்த திருமுகத்தை இழக்கவோ?	பட்டர்	322
360	பட்டாபிஷேகப்பொருள்களை இராமன் பார்த்தது ஏன்?	பட்டர்	323
361	கடலரசன் அலங்காரத்துடன் வந்தது ஏன்?	பட்டர்	325

எண்	பொருள்	திருநாமங்கள்	பக்கம்
362	பூமிப்பிராட்டி ஏன் அழுதாள்?	ஆளவந்தார், பட்டர்	326
363	பட்டரைக் கொண்டாடிய திருநறையூர் அரையர்	பட்டர், திருநறையூர் அரையர்	328
364	வளர்த்ததனால் பயன் பெற்றேன்	பட்டர், திருநறையூர் அரையர்	329
365	எம்பெருமான் முன் எம்பெருமானாரை வணங்கலமா?	எம்பெருமானார், சுப்ரமண்யபட்டர்	330
366	காளியன்வார்த்தையே தஞ்சம்	எம்பெருமனார்	332
367	கடல் மண்ணெல்லாம் விலையோ எனும் கண்	பட்டர் – நஞ்சீயர்	334
368	முகில்வண்ணரே என்று கூறுங்கள்	எம்பார்	335
369	பசுவிடமிருந்து தப்பினாலும் புலியிடம் தப்பமுடியுமோ?	பிள்ளை அமுதனார்	336
370	வையம் அவனுடையது; வைகுந்தம் அடியாருடையது	பிள்ளைதிருநறையூர் அரையர்	337
371	அவன் முடிசூடியுள்ளது எதற்கு?	பிள்ளான், பட்டர்	338
372	ஆழ்வார் ஆற்றாமை நமக்கு உண்டோ?	நஞ்சீயர்	338
373	வால்மீகிக்குத் திருத்தாயார்படி உண்டு	பட்டர்–நஞ்சீயர்	339
374	முற்றத்தில் பனை நடலாமோ?	வங்கிப்புரத்து நம்பி	340
375	ஆழ்வார் அடியேனுள்ளான் என்றது கண்டீரே	திருக்கோட்டியூர் நம்பி,ஆழ்வான், பிள்ளைப்பிள்ளையாழ்வான்	341
376	இன்னார் என்றறியேன் என்னப் பண்ணுகையன்றோ!	பட்டர், நஞ்சீயர், விழுப்பரையர், ஆப்பான் திருவழுந்தூர் அரையர்	342
377	திருக்கோட்டியூர் நம்பி விரும்பியிருந்த பாசுரம்	பட்டர், நஞ்சீயர், திருக்கோட்டியூர் நம்பி, வளவன் பல்லவதரையன்	343
378	பால் களவுக்கு என்னை தண்டியுங்கள்	பிள்ளை உறங்காவில்லிதாஸர்	344
379	உறங்காவில்லி ஈடுபாடும், ஆழ்வான் ஈடுபாடும்	ஆழ்வான்,உறங்காவில்லிதாஸர்	345
380	நஞ்சீயருக்குத் திருவாய்மொழியில் ஈடுபாடு ஏன்?	பட்டர், நஞ்சீயர், ஆண்டான், திருமழிசைதாஸர்	346
381	திருவாய்மொழியில் எம்பெருமானாருடைய ஈடுபாடு	எம்பெருமானார்	347
382	அடையாளம் தெரியும்படி அமுது செய்யக்கூடாதோ?	எம்பெருமானார்	348
383	திருவாய்மொழியில் ஆழ்வானுடைய ஈடுபாடு	கிடாம்பியாச்சான், ஆழ்வான், எம்பெருமானார்	349
384	வேதாந்த வாக்யங்கள் ப்ரமாணங்களே!	எம்பெருமானார்	349
385	பரம ரகசியமாகக் கூறின ஏகசப்தார்த்தம்	திருக்கோட்டியூர்நம்பி, எம்பெருமானார், ஆழ்வான்	351

எண்	பொருள்	திருநாமங்கள்	பக்கம்
386	பொன்னால் தோடுசெய்தாலும் இடமுடியாதவர்	திருமலை நம்பி, எம்பெருமானார்	352
387	அனந்தாழ்வான் மடியில் பட்டர்	அனந்தாழ்வான், பட்டர்	353
388	மகாபாரதத்தில் இது என்ன வேதார்த்தம் கூறுகிறது?	பட்டர்	354
389	ஆலிலைக்கு ஆதாரமாக இருந்தது எது?	பட்டர்	355
390	நும்மை நுமக்கு – அந்வயம் எப்படி?	திருநறையூர் அரையர், நஞ்சீயர்	356
391	அவனைச் சிந்திக்கும் தகுதி நமக்கு உண்டோ?	நம்பிள்ளை	357
392	எம்பெருமானைப் பேசாதது பாவத்தின் பயனே!	பட்டர், திருநறையூர் அரையர்	358
393	நமக்கும் ஆழ்வார்களுக்கும் உள்ள வேறுபாடு	சிறியாத்தான், நம்பிள்ளை	359
394	எம்பெருமானும் மேகமும்	நஞ்சீயர், நம்பிள்ளை	360
395	திருவடிகளிலே என் தலையை வைக்கப்பெற்றிலேனே!	எம்பெருமானார்	361
396	கைக்கூட்டனுக்கும் பால்சோறு	பட்டர்	362
397	ருசியுடையார்க்கெல்லாம் கூறுவர் எம்பெருமானார்	எம்பெருமானார்	363
398	திருநாள் சேவித்த இரட்டை	ஆசார்யர்கள்	363
399	தோள் உள்ளவரை கைநீட்டியது எப்படித் தெரிந்தது?	பட்டர் – நஞ்சீயர்	364
400	பிராமணர் தனத்தைப் பாழாக்கினான்	பட்டர்	364
401	வேறொரு நரகம் அனுபவிக்க வேண்டா	பட்டர், நஞ்சீயர்	365
402	ஸந்யாஸமே மடல்	ஆளவந்தார்	366
403	மறைந்து சயனிக்கக்கூடாதோ? கொடி வேண்டுமோ?	பட்டர், நம்பிள்ளை	367
404	பிரபந்நனும் கர்மங்களை அனுஷ்டிக்கவேண்டுமோ?	பட்டர் – நஞ்சீயர்	368
405	உலகில் ஓர் ஆந்தராளிகன் இல்லையோ?	பட்டர், நம்பிள்ளை	369
406	என்னையன்றோ மடியில் கொள்ளவேண்டும்!	பட்டர், நம்பிள்ளை	369
407	பெண்கொலை புரிந்தது ஏன்?	பட்டர், நம்பிள்ளை	370
408	குருவியின் பிணையும் எம்பெருமான் பிணையும்	பிள்ளைதிருநறையூர் அரையர்	371
409	நம்மாழ்வார் தீர்க்க சிந்தயந்தி	ஆசார்யர்கள்	372
410	ஸகலவேததாத்பர்யம் அர்த்தபஞ்சகம்	பெரிய வங்கிப்புரத்து நம்பி	372
411	தொடங்கும்போதே நலமுடையவன் என்பதே!	ஆழ்வான், பிள்ளைப்பிள்ளை	372
412	ஆளவந்தார் அருளிச்செய்த சந்தை	ஆளவந்தார்	373
413	ஜ்ஞாநாநுதயம், அந்யதாஜ்ஞாநம், விபரீதஜ்ஞாநம்	நம்பிள்ளை	373
414	மதிநலம் என்பது என்ன?	பட்டர்	375

எண்	பொருள்	திருநாமங்கள்	பக்கம்
415	ஆழ்வார் ப்ரபந்நரா? பக்தி நிஷ்டரா?	எம்பார்	375
416	துயரறு சுடரடி	எம்பெருமானார்	376
417	ஸாதர்ம்ய த்ருஷ்டாந்தமும் வைதர்ம்யத்ருஷ்டாந்தமும்	பட்டர்	377
418	நிவ்ருத்திக்கும் அவன் வேண்டுமோ?	எம்பார்	379
419	உளன் அலன் எனில் உளன் – ஆழ்வான் நிர்வாஹம்	ஆழ்வான்	379
420	ஆழ்வார் உபதேசித்தது பக்தியா? ப்ரபத்தியா?	ஆளவந்தார், எம்பெருமானார், திருமாலையாண்டான், எம்பார்	380
421	வைஷ்ணவன் யார்?	நஞ்சீயர்	381
422	வீடுடையானிடை வீடு செய்ம்மின்	நம்பிள்ளை	382
423	பற்றிலன் ஈசனும், முற்றவும் நின்றனன்	பட்டர்	382
424	தகப்பனும் மகனும் படகோடிய கதை	பட்டர்	383
425	ஓராண்டு கழிந்தது குறித்து மகிழ வேண்டாமோ?	எம்பெருமானார், குன்றத்துசீயர்	384
426	ஆக்கை விடும்பொழுது எண்ணவேண்டுமோ?	எம்பார்	385
427	திருமந்திரப்பொருளை பட்டருக்கு உரைத்த ஆழ்வான்	ஆழ்வான், பட்டர், சீராமப்பிள்ளை	386
428	எம்பெருமானுடைய எளிமையில் ஈடுபட்ட எம்பார்	எம்பெருமானார்–எம்பார்	387
429	கடைவெண்ணெய் களவு	பிள்ளான்	388
430	நிலை வரம்பில	பட்டர்	388
431	பிராட்டி புருஷகாரம் எதற்கு?	பட்டர் – நஞ்சீயர்	389
432	அலற்றுவன் தழுவுவன் வணங்குவன்	பிள்ளான், நஞ்சீயர்	390
433	அலற்றுவன் தழுவுவன் வணங்குவன்	பிள்ளான், நஞ்சீயர்	390
434	வானரங்களும் பறவைகளும்	பட்டர்	391
435	ஒரு முழுக்கால் நம் பாவங்கள் போகுமோ?	பட்டர், தெற்காழ்வான், கோளரியாழ்வான்	392
436	நன்மை இல்லாத பின்னும் தாழ்க்கலாமோ?	பிள்ளைதிருநறையூர் அரையர்	393
437	உலகிரந்த கள்வன்	திருமாலையாண்டான்,உடையவர்	394
438	கேட்டிரங்கி என்னாமல் கண்டிரங்கி எனலாமோ?	பட்டர்–தமிழன்	395
439	பாகவத கைங்கர்யம் செய்தவர்களைத் திருநாட்டுக்குப் போனார் என்றே கூறவேண்டும்	பட்டர், ஏறுதிருவுடையார்தாஸர்	396
440	'அருளாத நீர்' – பொருள் என்ன?	பிள்ளான், நஞ்சீயர்	396
441	அருளாத திருமாலார்	நஞ்சீயர், பிள்ளான்	398

எண்	பொருள்	திருநாமங்கள்	பக்கம்
442	ஏதேனும் நமஸ்காரம் பிரதக்ஷிணம் செய்ததுண்டோ?	நம்பிள்ளை	498
443	இனி, இன்னடிசில் வைப்பாரை நாடாயே!	திருமலை நம்பி	499
444	நாடாத மலர் எது?	நஞ்சீயர்	400
445	படைக்கும்போது எம்பெருமானின் நினைவு	பிள்ளை அமுதனார்	401
446	பாலேய் தமிழர், இசைகாரர், பத்தர்	ஆழ்வான், ஸ்ரீபராங்குசநம்பி, திருவரங்கப்பெருமாள் அரையர், பிள்ளை உறங்காவில்லிதாஸர்	401
447	கண்டகாலிப்பூ அவனுக்கு ஆகுமோ?	பட்டர் – நஞ்சீயர்	402
448	வராஹப்பெருமான் அமுது செய்யும் முத்தக்காசு	நஞ்சீயர்	403
449	தேவஜாதி வெறும் மரையோ?	நம்பிதிருவழுதிவளநாடுதாஸர்	404
450	தீது, அவம், ஏதம்	பட்டர்	405
451	ஒவ்வொருவரும் மத்தாலே அடிப்பர்கள் போலும்	பட்டர்	406
452	பின்னை யான் ஒட்டுவேனோ	பிள்ளான்	406
453	ஊன் ஒட்டி நின்று என் உயிரில் கலந்து	நஞ்சீயர்	407
454	'ஒடும்புள்ளேறி' திருவாய்மொழியின் கருத்து	பட்டர்	408
455	இளிம்பனும் சதிரனும் களவு கண்ட கதை	பட்டர்	408
456	படுக்கைப் பற்று	பட்டர்	409
457	திருவடிகளில் சூடிய திருத்துழாய் நமக்கே	பட்டர்	410
458	கேள் இணை ஒன்றும் இலாதான்	பட்டர்	411
459	ஆழ்வாருடைய மகிழ்ச்சிக்குக் காரணம் என்ன?	பட்டர்	412
460	சரணாகதிக்கு நியமங்கள் உண்டோ?	நம்பிள்ளை, வேல்வெட்டிநம்பி	413
461	பகவத்விஷயம் ஒருவரும் அறியலாகாது	திருக்கோட்டியூர் நம்பி	414
462	இவனையோ பூர்ணன் என்பது?	ஆழ்வான்	415
463	ஆற்றாமைக்கு தரிக்கமுடியாமல் இருள்வந்து நலிதல்	எம்பெருமானார்	415
464	'திண்ணன்வீடு' திருவாய்மொழியின் கருத்து	பிள்ளான்	417
465	பிரமன் எப்போதும் திருமேனியில் இருப்பனோ?	பட்டர் – நஞ்சீயர்	417
466	தேனும் பாலும் கன்னலும் அமுதும்	ஆளவந்தார், திருமாலை ஆண்டான், எம்பெருமானர்	418
467	ஆத்மாவிற்கு முதல் குரு யார்?	எம்பார்	419
468	அறியாக்காலத்தில் அடிமைக்கண் அன்புசெய்வித்து	ஆளவந்தார், திருமாலை ஆண்டான், எம்பெருமானார்	420

எண்	பொருள்	திருநாமங்கள்	பக்கம்
469	சீதையின் கண்ணில் பெருகும் கண்ணீர்	பட்டர், பிள்ளான்	421
470	தன் கொய்சகம் உட்படப் பாராநின்றாள்	பட்டர்	422
471	அரக்கும் மெழுகும்	பட்டர், திருநறையூர் அரையர்	423
472	தவளவண்ணர் தகவுகள்	எம்பார், பட்டர்	423
473	சக்கரம் அழகாலும் ஆயுதமாகவும் அழிக்கும்	நஞ்சீயர்	424
474	அந்தாம வாள் முடி சங்கு ஆழி நூல் ஆரம் உள	ஆளவந்தார், திருமாலை ஆண்டான், எம்பெருமானார்	425
475	திருவுடம்பு வான்சுடர் என்பதே!	நஞ்சீயர்	426
476	ஆணல்லன் பெண்ணல்லன் அலியுமல்லன்	பட்டர்–தமிழன்	427
477	'வைகுந்தா' திருவாய்மொழியின் கருத்து	ஆளவந்தார்	428
478	சொட்டைக் குலத்தார் வந்தாருண்டோ?	குருகைகாவலப்பன், ஆளவந்தார்	429
479	ஸ்ரீவைஷ்ணவன் ஆனேன்	எம்பார்	430
480	பிராட்டியின் மணவாளன் என்றதே கொண்டு	பட்டர்	431
481	தன்னையும் என்பது ஆச்ரிதபாரதந்த்ரியத்தை	பட்டர்	431
482	எம்பெருமான் திருமேனியின் அழகு	ஆளவந்தார், திருமாலை ஆண்டான், எம்பெருமானார்	431
483	மரீஇய தீவினை மாள, இன்பம் வளர	பட்டர்	434
484	அணைவதரவணை திருவாய்மொழியின் கருத்து	பட்டர்	435
485	நீந்தும் துயர்ப்பிறவி – நீத்தும்	பிள்ளைதிருநறையூர் அரையர்	436
486	'எம்மாவீடு' திருவாய்மொழியின் சிறப்பு	எம்பார்	437
487	கிணற்றில் விழுந்தவனுக்கு இருவர் கைகொடுத்தால்	எம்பார், ஆண்டான்	438
488	தனக்கேயாக எனைக் கொள்ளும் ஈதே	எம்பார்	438
489	தனக்கேயாக என்று பிரார்த்திக்க வேண்டுமோ?	எம்பார், திருநறையூர் அரையர்	439
490	மற்று எக்காலத்திலும் யாதொன்றும் வேண்டேன்	ஆளவந்தார், எம்பெருமானர்	440
491	'எம்மாவீடு' – 'கிளரொளியிளமை' தொடர்பு	ஆளவந்தார், திருமாலை ஆண்டான், எம்பெருமானார்	442
492	கருமவன் பாசம் கழித்துழன்று உய்யவே	எம்பெருமானார், ஆழ்வான்	443
493	மலமறு மதிசேர் மாலிருஞ்சோலை	பிள்ளான்	444
494	பட்டரும் அரையரும் செய்த பிரதக்ஷிணம்	பட்டர், பிள்ளை திருநறையூர் அரையர், நஞ்சீயர்	445
495	முடிச்சோதியும் முகச்சோதியும்	பட்டர்	445

எண்	பொருள்	திருநாமங்கள்	பக்கம்
496	வாழ்த்துவார் பலர் உண்டாயிடுக!	பட்டர்	446
497	அமரர் கோன் வழிப்பட்டாலும் மாசூணாதோ?	பட்டர்	447
498	சுடர்ச்சோதி மறைந்து விடாதோ?	சிற்றாட்கொண்டான்	448
499	'முன்னீர்ஞாலம்' திருவாய்மொழியின் கருத்து	பட்டர், சீராமப்பிள்ளை	450
500	ஆக்கையின் வழி உழல்வேன்	எம்பார்	451
501	இனி உன்னை என்று அடையப்போகிறேன்!	எம்பெருமானார்	452
502	ஓவுதல் இன்றி வணங்கிற்றிலேன்	எம்பார்	453
503	அவ்வல்லல் எது?	எம்பார், ஆண்டான்	454
504	ஒழிவில் காலமெல்லாம், காலமெல்லாம்	திருவரங்கப்பெருமாள் அரையர்	454
505	ஆளவந்தார் சொன்னதை நான் சொல்ல மாட்டேன்	அனந்தாழ்வான்	455
506	நீசனேன் நிறைவு ஒன்றுமிலேன்	பிள்ளை திருநறையூர் அரையர்	455
507	என்கண் பாசம் வைத்த	நஞ்சீயர்	456
508	கடன்கள் வேம், மேல் வினை சாரா	ஆளவந்தார், எம்பெருமானார்	457
509	மொட்டைத்தலையன் கதை	பட்டர்	458
510	தாங்கள், தங்கட்கு	அனந்தாழ்வான்	460
511	புகழும் நல் ஒருவன் என்கோ	பிள்ளான்	460
512	எம்பெருமானை மறக்க வழி கூறமுடியுமா?	ஆசார்யர்	461
513	ஆதுமில் காலத்து எந்தை – அமலன்	நம்பிள்ளை	461
514	கண்ணன் ரகசியத்தை உபதேசித்தது ஏன்?	பட்டர் – நஞ்சீயர்	462
515	பாவனை அதனைக் கூடில் அவனையும் கூடலாம்	எம்பெருமானார்	463
516	எம்பெருமானும் நாமும்	பட்டர்	464
517	பிரம்மதேசத்தில் அப்பன் வார்த்தை	அப்பன், பிள்ளை	465
518	கிராமணிகள் புகுந்து நெருக்குமாபோலே	பிள்ளைப்பிள்ளை	465
519	அவைஷ்ணவன் கொண்டாடிய வைஷ்ணவன்	மிளகாழ்வான்	466
520	ஆழ்வாருக்கு எல்லாருடைய தன்மைகளும் உண்டு	நம்பிள்ளை	466
521	முனிவின்றி ஏத்திக் குனிப்பார்	நம்பிள்ளை	467
522	ஒருவனுமில்லாத வைஷ்ணவன் எங்கே கிடைப்பான்?	பெரியநம்பி, ஆழ்வான்	468
523	அவைஷ்ணவன் கொண்டாடிய வைஷ்ணவன்	மிளகாழ்வான்	469
524	இரணியனிடம் கோபமும் பிரகலாதனிடம் அன்பும்	எம்பெருமானார்	470

எண்	பொருள்	திருநாமங்கள்	பக்கம்
525	ஆழ்வார் தஞ்சமாக நினைத்திருப்பது இராமனையே!	பட்டர் – நஞ்சீயர்	471
526	தூதுபோன பெருமை இராமனுக்கு இல்லையே!	பட்டர் – சிறியாத்தான்	471
527	தேவைபிடாதார் எழுந்தருளினார்	எம்பெருமானார்	472
528	கப்பல் மீதுள்ள நம்பிக்கை அவனிடம் வேண்டாமோ?	நம்பிள்ளை	473
529	இங்குள்ளவனே பரமபதத்தில் எழுந்தருளியுள்ளான்	ஆண்டான்	474
530	அடியவர்களோடு ஸம்பந்தமே கிடைத்துவிடும்	எம்பெருமானார்	474
531	ஆழ்வாரைப் பின்பற்றிய சத்ருக்னன்	எம்பெருமானார்	475
532	சத்ருக்னாழ்வான் படி	எம்பெருமானார்	475
533	முன்பே கண்ட முகமும்; முன்பு கண்டறியாத முகமும்	நஞ்சீயர் – நம்பிள்ளை	476
534	பரமபதநாதனுக்குக் கைகள் இரண்டா நான்கா?	அனந்தாழ்வான் – பட்டர்	476
535	பரமபதநாதன் சதுர்புஜன் என்பதற்கு ப்ரமாணம்	பட்டர்–நிலாத்துக்குறிபகவர்	477
536	நம்பிள்ளையை வணங்காத பிள்ளையாத்தான்	நஞ்சீயர்,நம்பிள்ளை, ஆத்தான்	477
537	வைஷ்ணவர்கள் தங்களிலே வெறுக்கலாமோ?	நஞ்சீயர், வீரப்பிள்ளை, பாலிகைவாளிப்பிள்ளை	479
538	ஆழ்வார் விரும்பியதை நம்பினோமாகிறோம்	நஞ்சீயர்	479
539	குகனோடு நின்றபோது காலம் நெடுகியது ஏன்?	மிளகாழ்வான்	480
540	பிராட்டியைப் பற்றிய பிரமாணங்கள் கூறுவது என்ன?	நஞ்சீயர்	481
541	கரிகால்சோழன் செய்த திருவாய்மொழி உரை	நஞ்சீயர், நம்பிள்ளை	481
542	மூட்டை சுமத்தல், புல்சிரைத்தல் செய்யமாட்டீர்களோ?	எம்பார்	482
543	ஒன்றும் கொடுத்திலோம் என்றிருக்கும்	ஆசார்யர்கள், தமிழன்	483
544	பிறந்த குழந்தைகளுக்கு ஒப்பனைகள் உண்டோ?	பட்டர்	484
545	பணிமின் திருவருள் என்னும் அரசர்கள்	பட்டர்	485
546	சுவர்க்கத்திற்கும் சிலர் ஆசைப்படுகின்றனரே!	பட்டர்	486
547	நிலையில்லாத செல்வமும் நிலையான பரமபதமும்	நம்பிள்ளை	486
548	'கோவைவாயாள்' திருவாய்மொழியின் கருத்து	எம்பார், திருமலை நம்பி, பட்டர்	487
549	வண்ணான் செய்த குற்றம் பொறுத்தமை	எம்பெருமானார்	488
550	இவன் எம்பெருமான் இட்ட வழக்காக முடியுமோ?	ஆளவந்தார்	489
551	நம்மைப்போல வாய்புகு சோற்றை பறிகொடாதே. . .	நஞ்சீயர், பட்டர்	490
552	நின்ற குன்றமும் நெடுமாலும்	பிள்ளான், நஞ்சீயர்	491

எண்	பொருள்	திருநாமங்கள்	பக்கம்
553	அரசனைக் கண்டு நாதமுனிகள் மோகித்தது	நாதமுனிகள்	493
554	மேகத்தைக்கண்டு மோகித்தமை	திருவாய்க்குலத்தாழ்வார்	494
555	ஆழ்வான் துயர் கண்ட எம்பெருமானாரின் வருத்தம்	ஆழ்வான், எம்பெருமானார்	495
556	'வீற்றிருந்து' திருவாய்மொழியின் சிறப்பு	நஞ்சீயர்	496
557	ஆற்றல் மிக்கு ஆளும் அம்மான்	பட்டர், அம்மங்கியம்மாள்	496
558	பரமபதத்திலிருந்து அருளிச்செய்கிறார் போலும்!	நஞ்சீயர்	497
559	தன் தனக்கு இன்றி நின்றானை	சொட்டை நம்பி	498
560	இருவரும் சரணமடைந்தவர்களைக் காக்கிறார்கள்	பட்டர் – நஞ்சீயர்	499
561	சொல்மாலைகள் சொல்லுமாறு அமைக்கவல்லேற்கு	பட்டர்	500
562	அஸங்கதிரேவ ஸங்கதி:	எம்பார்	500
563	சீதை தரித்திருந்தது எங்ஙனம்?	நஞ்சீயர் – நம்பிள்ளை	500
564	தீர்ப்பாரை யாம் இனி எங்ஙனம் நாடுதும்?	நம்பிள்ளை	502
565	துர்தேவதைகள் ஸ்ரீவைஷ்ணவரிடம் வராது	பிள்ளை உறங்காவில்லிதாஸர்	503
566	ஆச்சிமகனுடைய அந்திமதசை	பட்டர், ஆச்சிமகன்	505
567	'மிக்கசீர்த்தொண்டர்' என்றதற்குக் கருத்து என்ன?	நஞ்சீயர் – நம்பிள்ளை	505
568	பாகவதபாததூளியே பரிகாரம்	பிள்ளை உறங்காவில்லி தாஸர், அகளங்கநாட்டாழ்வான், வண்டர், சொண்டர்	506
569	சுக்கிட்டு ஊதியன்றோ மோர்க்குழம்பு கொடுப்பது!	நஞ்சீயர் – நம்பிள்ளை	508
570	கழுதை உதடாட்டம் கண்டு என் பயன்?	திருக்குருகைப்பெருமாளரையர்	509
571	சற்று உணர, மோர்க்குழம்பு குடித்தாள் என்பதுபோல	அம்மங்கியம்மாள்	510
572	இப்பாசுரம் கேட்டால் அவன் இரங்காமை இல்லை	எம்பெருமானார், ஆழ்வான்	511
573	அழகியவார்த்தை வகுத்த இடத்தில் கூறப்படவில்லை	ஆளவந்தார்	512
574	ஆபரணத்துக்கு ஆபரணமான தோள்	நஞ்சீயர், தமிழன்	513
575	நேரே நின்றன்றோ தண்ணீர் பரிமாறவேண்டும்!	உடையவர், ஆச்சான்	513
576	சாந்தைப் பரணியோடே உடைக்கிறார்	நஞ்சீயர்	514
577	இருபிராட்டிமார் நிலையை வேண்டுகிறாள்	பட்டர், நம்பிள்ளை	515
578	உஷைக்குக் கூறையுடை அழகாக இருக்கும்	வங்கிப்புரத்துநம்பி	516
579	'நண்ணாதார்' திருவாய்மொழியின் கருத்து	எம்பார், ஆழ்வான்	516
580	ஏமாறிக் கிடந்து அலற்றும்	பிள்ளை அமுதனார்	520

எண்	பொருள்	திருநாமங்கள்	பக்கம்
581	சேர்க்கைப்பல்லிபோல இதுவேயன்றோ பணி	சிற்றாட்கொண்டார்	521
582	குருவியின் பிணையும் எம்பெருமான் பிணையும்	பிள்ளை திருநறையூர் அரையர்	521
583	ஆயிரத்துள் இப்பத்து	பூர்வாசார்யர்கள், பட்டர்	522
584	பெண்களும் பரம்பொருளை அறிவதற்குக் காரணம்	எம்பார்	522
585	எம்பெருமானுக்கும் வருத்தமுண்டோ?	பட்டர்	523
586	ராஜ்யத்தை இழப்பாய் என்று சபித்தது ஏன்?	பட்டர்	524
587	மகாபாரதத்தில் இது என்ன வேதார்த்தம் கூறுகிறது?	பட்டர், விழுப்பரையர், ஆப்பான்	525
588	யாதவர்களும் முடிவில் நாசமடைந்தது ஏன்?	நம்பிள்ளை	525
589	எம்பெருமானுக்கும் அஜ்ஞானம், அசக்தி, விஸ்ம்ருதி	எம்பார்	527
590	என்கண் மலினமறுத்து என்னைக் கூவியருளாய்	பட்டர்	528
591	அம்மான் ஆழிப்பிரான்! யானார்?	பிள்ளை அமுதனார்	529
592	ஆழி வெண்சங்கோடு வந்தது ஏன்?	ஆளவந்தார், திருமாலை ஆண்டான், எம்பெருமானார்	529
593	ஆழ்வார் மங்களாசாஸன்ம் செய்தது யாருக்கு?	ஆளவந்தார், திருமாலை ஆண்டான், எம்பெருமானார்	530
594	பகவானுக்கன்றோ முதலில் மங்களாசாஸனம்?	நஞ்சீயர், நம்பிள்ளை	531
595	பெரிய கிதயுகம் எது?	ஆப்பான்	532
596	எம்பெருமானார் நடையும் ஆளவந்தார் நடையும்	எம்பெருமானார், ஆளவந்தார்	532
597	சென்று தொழுது உய்ம்மின்	திருமாலையாண்டான்,உடையவர்	533
598	மடல் எடுப்பது ஏன்?	பட்டர்	534
599	சீதை உயிர் தரித்திருந்தது எங்ஙனம்?	பட்டர்	535
600	ஆதிமூர்த்தியன்றோ அவன்!	நஞ்சீயர்	536
601	ஏசறும் ஊரவர்	நம்பிள்ளை	537
602	முன்செய்ய மாமை இழந்து	நம்பிள்ளை	537
603	என் நெஞ்சுக்கு மாயாவாத ருசி உண்டடோ?	பிள்ளான், நஞ்சீயர்	538
604	கண்களே அவனுடைய வலை	திருவரங்கப்பெருமாள் அரையர், எம்பெருமானார்	539
605	தலைமகள் தலைவனை வணங்குவாளோ?	ஆழ்வான், ஆமருவிநிரைமேய்த்தான் நம்பி	540
606	இவள் மடலூர, அவன் கலங்கினபடி	அனந்தாழ்வான்	541
607	கூரத்து ஆழ்வார் மறுமணம் தவிர்ந்தமை	கூரத்து ஆழ்வார், ஆழ்வான்	542

எண்	பொருள்	திருநாமங்கள்	பக்கம்
608	பகவத்குடும்பத்திற்கு நான் கரையவோ?	ஆழ்வான், ஆண்டாள், பட்டர் சீராமப்பிள்ளை	543
609	ஈச்வரனுக்கு விக்ரஹவ்யாப்தியும் உண்டோ?	நஞ்சீயர், பிள்ளான்	544
610	அவர்களை அழகால் அழிப்பவனும் நானே!	ஆண்டான், இளையபெருமாள்	545
611	'கொடியான்' என்பது திருத்தாயார் வார்த்தை	நஞ்சீயர்	546
612	கோலம் கொள் சுவர்க்கம்!	நம்பிள்ளை	547
613	ஸாதனத்தை அனுஷ்டிக்கவும் சக்தியற்றவன்	பூர்வர்கள்	547
614	ஆழ்வார்களுடைய ஈரச்சொற்கள்!	பட்டர், நஞ்சீயர்	548
615	வந்தருளி, வந்தருளி	ஆப்பான் திருவழுந்தூர் அரையர்	549
616	ஆறு எனக்கு நின் பாதமே சரணாகத் தந்தாய்	பிள்ளான், பட்டர், ஆப்பான்	550
617	ஆராவமுதே என்றும் ஒரு திருநாமமே!	லோகஸாராங்கமஹாமுனிகள்	551
618	ஆகாசத்தை நோக்கி அழுவனே	ஆண்டான்	552
619	செழுமாமணிகள் யாவர்?	ஆசார்யர்கள்	552
620	காவிரிக் கரைக்கு இப்பால் நஞ்சீயர் பட்ட துன்பம்	நஞ்சீயர்	552
621	'மானேய் நோக்கு நல்லீர்' என்றதன் கருத்து	பிள்ளான்	554
622	திருவரங்கத்தில் மரங்களை வெட்டலாமா?	ஜநநாதப்ரம்மராயர், எம்பார்	554
623	நல்லானுக்கு பட்டரிடத்தில் இருந்த ஈடுபாடு	நல்லான், பட்டர்	555
624	சூடுமலர்க் குழலாராகக் காண்பது எப்போது?	பிள்ளான்	557
625	இவ்வளவுதூரம் ஹிதம் சொல்லி என்ன பயன்?	பிள்ளான்	558
626	பச்சிலை நீள் கமுகும் பலவும் தெங்கும் வாழைகளும்	உய்ந்தபிள்ளை	559
627	பாதங்கள் மேலணி பூந்தொழக் கூடுங்கொல்	நஞ்சீயர், நம்பிள்ளை	559
628	நா நீருண்டாய்த் திருநாமம் சொல்ல வல்லோமே!	அம்மங்கியம்மாள்	560
629	ஆழ்வார்கள் கிருஷ்ணாவதாரத்தில் ஈடுபடுவது ஏன்?	பட்டர் – நஞ்சீயர்	561
630	'பிறந்தவாறும்' திருவாய்மொழியின் கருத்து	ஆழ்வான், எம்பார், பிள்ளான்	562
631	'அது, இது, உது' என்பதன் கருத்து	பிள்ளான்	561
632	ஓலை கெடாதவன்றோ பரத்வம் ஸாதிப்பது?	கூரத்தாழ்வான்	564
633	ப்ரம்மருத்ரர்கள் நடுவே நின்ற களவும், ருத்ரனுக்குப் பண்ணின உபகாரங்களும்	ஆளவந்தார், திருமாலை ஆண்டான், எம்பெருமானர்	565
634	இவன் வந்ததூரத்திற்கு நாம் நடந்ததூரம் போதுமோ	திருவரங்கப்பெருமாள் அரையர்	566
635	வண்ணான் செய்த குற்றம் பொறுத்தமை	எம்பெருமானார்	568

எண்	பொருள்	திருநாமங்கள்	பக்கம்
636	தொட்டிலில் நின்றவாறு, இருந்தவாறு, கிடந்தவாறு	எம்பெருமானார்	568
637	ஆழ்வார் ஏன் இப்படித் துன்பப்படுகிறார்?	நஞ்சீயர்	569
638	பெரியமுதலிகள் எனவே கும்பிட்டுச் சொல்லுங்கள்	பூர்வர்கள், பட்டர்	569
639	ஸ்ரீவைஷ்ணவனை தண்டனிட்டால் பசிகெட்டிருக்கும்	நஞ்சீயர்	571
640	சக்கரக்கைக் கனிவாய்ப்பெருமான்	பட்டர்	572
641	எனக்கு பவ்யனாய், இன்று எட்டாதே இருப்பவன்	பட்டர்	572
642	போற்றி என்று தாழச்சொல்லியிருக்குமோ?	பட்டர், பிள்ளையமுதனார், திருவிருந்தவரைமார்பன்	572
643	ஒருவண்ணம் சென்று புக்கு	நம்பிள்ளை	573
644	நானும் ஒருத்தி உண்டு என்னுங்கோள் என்றதும் இன்றியமையாமையும்	ஆளவந்தார், திருமாலை ஆண்டான், எம்பெருமானார்	574
645	எம்பெருமானுடன் ஆழ்வாருக்கு ஊடல்	பூர்வாசார்யர்கள், பட்டர்	575
646	மாமகா: என்றதே விநாசத்திற்குக் காரணம்	சிறியாத்தான்	576
647	கண்ட காட்சி புல்லெழுந்துபோனபடியாலே	பெரியமுதலியார்	577
648	கோபிகை சினம் தீர்வது எப்படி?	உய்ந்தபிள்ளை, எம்பார்	578
649	எம்பாரும் மின்னிடை மடவாரும்	எம்பார், சிங்கப்பிரான், பிள்ளை உறங்காவில்லிதாஸர்	579
650	என்னே எம்பெருமானுடைய ஸௌசீல்யம்!	பட்டர்	579
651	வன்மம் என்ன என்று நான் கூறமுடியுமோ?	எம்பார்	580
652	இவர்களைக் கடந்து போனால் அது யார் காரியம்?	நஞ்சீயர், ஆப்பான்	581
653	'நல்குரவும் செல்வும்' திருவாய்மொழியின் கருத்து	பிள்ளான், பட்டர்	582
654	ஈச்வர விபூதியை நலியலாமா?	நல்லார், ஸேநாபதிதாஸர்	582
655	இகுளை என்பது செவிலித்தாய்	தமிழர்கள், ஆசார்யர்கள்	583
656	நான் உனக்கு வேணுங்காண் என்று தந்தவன்	நஞ்சீயர்	584
657	'நோவ' என்று அருளிச்செய்யும் அழகு காணும்	நஞ்சீயர்	584
658	இருளை அன்றோ சரணம் புகவேண்டும்	பிள்ளை உறங்காவில்லி தாஸர்	585
659	நெஞ்சே நினைக்கும், காணவும் செய்யும்	பிள்ளான்	585
660	சோளேந்திரசிங்கனை உளுக்காக்குகிறேன்	பட்டர், வண்துவரைப்பெருமாள்	586
661	எம்பெருமான் ஆபத்தில்லாமல் திரும்பினானே!	ஆண்டான், எம்பார், நஞ்சீயர்	587
662	ஆழ்வாருடைய தன்மை கூறும் திருவாய்மொழி	ஆசார்யர்கள்	587
663	'துவளில்' திருவாய்மொழியின் கருத்து	பூர்வாசார்யர்கள், பட்டர்	588

எண்	பொருள்	திருநாமங்கள்	பக்கம்
664	நின்று நின்று உகும் இறும்	விக்ரமசிங்கன்	589
665	எம்பெருமானை இப்போதே காண வழியுண்டோ?	ஆளவந்தார், மணக்கால்நம்பி	590
666	அவரவர் ஈடுபாடு கொண்ட திருநாமங்கள்	பட்டர், சோமாசியாண்டான், அனந்தாழ்வன்,	590
667	மரங்களும் இரங்குமோ?	எம்பார்	591
668	பின்னைகொல் நிலமாமகள்கொல் பிறந்திட்டாள்	ஆசார்யர்கள்	592
669	தாய் 'அவ்வூர்' என்றது மகள் கூறியதுபோல் இல்லை	நஞ்சீயர்	593
670	'உண்ணுஞ்சோறு', 'கள்வன்கொல்' ஒப்பீடு	ஆளவந்தார்	593
671	திருவாய்மொழியில் திருநறையூரரையரின் ஈடுபாடு	நஞ்சீயர், திருநறையூர் அரையர்	595
672	கழுதையை மேய்த்து வாழ முடியாதோ?	அனந்தாழ்வான்	595
673	திருக்கோளூரில் புக்க பெண்களும் போவர்களோ?	எம்பெருமானார்	596
674	பந்து தூதை பேர் பிதற்றுமோ?	நம்பிள்ளை, பெற்றி	597
675	பட்டரும் அரையரும் செய்த பிரதக்ஷிணம்	பட்டர், திருநறையூர் அரையர், நஞ்சீயர்	598
676	திருப்பேர் நகரைத் தாண்டாமல் பார்த்தமை	ஆச்சான், ஆண்டான்	597
677	ஆவி உள் குளிர என்று அருளிச்செய்யும் அழகு	பட்டர், சீராமப்பிள்ளை, எம்பார்	599
678	'மெய்யமர் காதல்' எது?	நஞ்சீயர், பிள்ளான்	600
679	நம்பிள்ளையை நஞ்சீயர் கொண்டாடியது	நஞ்சீயர், நம்பிள்ளை, அம்மணியாழ்வான்	600
680	'பொன்னுலகாளீரோ' திருவாய்மொழியின் கருத்து	பட்டர், பிள்ளான்	602
681	ஆழ்வான் செய்த நெஞ்சாறல் தீர்வது எப்போது?	அருளாளப்பெருமாள் எம்பெருமானார், ஆழ்வான், பிள்ளை உறங்காவில்லிதாஸர்	603
682	குருவி காட்டின இடத்தே இருப்பார்கள்!	அனந்தாழ்வான்	604
683	உங்கள் தரத்துக்கு அவை அற்பமானவையே!	பிள்ளை அமுதனார்	604
684	மணக்கால்நம்பியைப்போலே	ஆளவந்தார், மணக்கால்நம்பி	605
685	மதுவனம் இருந்ததோ இராமன் முதுகு பிழைத்ததோ!	எம்பார்	605
686	எம்பெருமான் திருவுள்ளத்தைப் புண்படுத்திய பக்ஷி	அருளாளப்பெருமாள்,நம்பிள்ளை	606
687	நாயகியின் நிறத்தையும் பறவைகள் காட்டாதோ!	நஞ்சீயர்	607
688	இவன் வந்ததூரத்துக்கு நாம் நடந்ததூரம் போதுமோ	திருவரங்கப்பெருமாள் அரையர்	608
689	பிள்ளானுடைய அந்திம தசை	பிள்ளான், நஞ்சீயர்	609

எண்	பொருள்	திருநாமங்கள்	பக்கம்
690	பிரபத்தியைப் பற்றிய கேள்விகளும் விடைகளும்	நஞ்சீயர், நம்பிள்ளை	609
691	வைஷ்ணவன் யார்?	நஞ்சீயர்	611
692	அமுதுசெய்யப்பண்ணும்போது விண்ணப்பிப்பது	பட்டர்	612
693	ஸாத்விகனாக சிவன் சொல்வதைக் கொள்வோம்	பட்டர்	613
694	பிராட்டி புருஷகாரம் எதற்கு?	பட்டர், நஞ்சீயர், பிள்ளை அழகியமணவாள அரையர்	614
695	புலியின் வாயில் அகப்பட்ட குழந்தை கூறுவது	பிள்ளை திருநறையூர் அரையர்	615
696	எண்ணிறந்த குணங்களை உடையவனே!	பிள்ளான்	616
697	ஆழ்வார் பாவம் இல்லாமல் நாம் என்ன கூறுவது?	பட்டர்	616
698	பகவத்குடும்பத்திற்கு நான் கரையவோ?	ஆழ்வான், ஆண்டாள், பட்டர்	617
699	மதிள் எம்பெருமானுக்குக் காப்பன்று	பட்டர், இளையாழ்வான் அகளங்கப்ரம்மராயர்	618
700	சங்கு சக்கரம் என்று இயல் ஆனாலோ?	திருநறையூரரையர், ஆப்பான்	619
701	வட்கிலள் – இவள் முடிந்தாள்	நஞ்சீயர்	619
702	இவள் தேறும் என்பதே!	நஞ்சீயர், உய்ந்தபிள்ளை	620
703	பெருமாளே என்னும்	நஞ்சீயர்	620
704	இப்போது உம்முடைய படி விபரீதமாயிற்றோ?	பிள்ளான்	621
705	பாட்டில் தலைக்கட்டு இல்லாமைக்குக் காரணம்?	நஞ்சீயர், வங்கிப்புரத்துநம்பி	622
706	பிராட்டிக்கு வேண்டியவன்	அனந்தாழ்வான், பட்டர்	622
707	திருமகள்சேர்மார்பனே என்னுமென்னுடைய ஆவி	பட்டர், நஞ்சீயர்	623
708	மூவுலகாளி, கொன்றைச்சடையன், நான்முகக்கடவுள்	திருமாலையாண்டான், எம்பெருமானார்	624
709	அடி அடையாதாள்போல் அடைந்தனள்	பூர்வர்கள், எம்பெருமானார்	625
710	பெரியபெருமாளுக்கே திருவாய்மொழி ஆயிரமும்	நம்பிள்ளை	627
711	'வெள்ளைச்சுரிசங்கு' திருவாய்மொழியின் கருத்து	பிள்ளான்	627
712	பரமபதநாதன் சதுர்புஜன் என்பதற்கு ப்ரமாணம்	பட்டர்–நிலாத்துக்குறிபகவர்	628
713	எம்பெருமானுக்கு விக்ரஹவ்யாப்தியும் உண்டோ?	நஞ்சீயர், பிள்ளான், எம்பார், பாஷ்யகாரர்	628
714	கண்ணின் குற்றமே, விளக்கின் குற்றமல்ல	ஆளவந்தார்	629
715	கண்ணெச்சில் படாமைக்காகச் சொல்லுகிறான்	(பட்டர்)–சிறியாத்தான்	630

எண்	பொருள்	திருநாமங்கள்	பக்கம்
716	அவனுடைய வெற்றிகளை அனுஸந்திக்கிறார்	பிள்ளைதிருநறையூர் அரையர்	631
717	ஆயிரம் காதம் பறப்பதன் குட்டி	நம்பிள்ளை	631
718	மஹாமதிகள்	பிள்ளை உறங்காவில்லிதாஸர்	632
719	உலகம் உண்டபோது எழுந்த ஒலி	அம்மாள்	633
720	திருவாய்மொழி முழுவதும் ராமாவதாரம்	கூரத்தாழ்வான்	633
721	தூதுபோன பெருமை இராமனுக்கு இல்லையே!	பட்டர் – சிறியாத்தான்	634
722	கீழ்ப்பாட்டில் சொன்ன குணம் குணஹாநி	நம்பிள்ளை	634
723	சிசுபாலன் பெற்றது பேறாகாது	ஆளவந்தார்	635
724	அர்ஜுனன் எம்பெருமானைப் பெற்றானோ?	நஞ்சீயர் – நம்பிள்ளை	635
725	ஆழ்வாருடைய ஆர்த்திக்குப் பாசுரமிடமுடியுமோ?	அம்மங்கியம்மாள்	636
726	ராஜத்ரோகியைப்போன்ற கம்ஸன்	அம்மாள்	637
727	அசுரர்களுக்கு பாதகமாகிறது என்பது வேண்டா	தமிழன், நஞ்சீயர்	637
728	கீழில் திருவாய்மொழியை ஸ்மரிக்கிறார்	பிள்ளான்	638
729	கீழில் திருவாய்மொழியை நினைப்பது பொருந்துமா?	பிள்ளான், நஞ்சீயர்	639
730	கீழே சொன்னது பின்னாட்டுகிறது	பிள்ளான்	640
731	வல்லதோர் வண்ணம் சொன்னால்	நம்பிள்ளை	640
732	ஆழ்வாரைக் கொண்டு கவிபாடிய எம்பெருமான்	ஆளவந்தார், எம்பெருமானார்	641
733	கீதை கற்றவனும் திருவாய்மொழி கற்றவனும்	நம்பி திருவழுதிவளநாடு தாஸர்	642
734	உடையவரை ஆளவந்தார் கடாக்ஷித்தமை	ஆளவந்தார், உடையவர்	643
735	ஆழ்வாரைக் கொண்டு கவிபாடிய எம்பெருமான்	எம்பார்	643
736	உறப்பல இன்கவி	பிள்ளான், நஞ்சீயர்	644
737	இடையாற்றுக்குடி நம்பி வந்திலனே!	இடையாற்றுக்குடிநம்பி	644
738	ஆழ்வானை அனுப்பலாகாதோ?	பெரியநம்பி, எம்பெருமானார், ஆழ்வான்	646
739	கைக்கூட்டனுக்கும் பால்சோறு	பட்டர்	647
740	சிந்தை மற்றொன்றின் திறத்தது அல்லாத் தன்மை	நஞ்சீயர், பிள்ளான்	648
741	உடையவர் சரமச்லோகார்த்தத்தை உபதேசித்தது	திருக்கோட்டியூர்நம்பி, உடையவர்	649
742	ஆளவந்தார் அருளிச்செய்த சுலோகம்	ஆளவந்தார்	649
743	பத்த ஸமஷ்டியும், முக்தஸ்வரூபமும்	பிள்ளான்	650
744	எம்பெருமான் தலையாட்டினான் போலும்!	அம்மங்கியம்மாள்	651

எண்	பொருள்	திருநாமங்கள்	பக்கம்
745	ராஜத்ரோஹியைப்பான்ற கம்ஸன்	அம்மங்கியம்மாள்	652
746	எம்பெருமானை அனுபவிக்கும் நன்னாடு	பிள்ளான்	652
747	அல்லல் என்னும் இருள் சேர்தற்கு உபாயம் என்னே!	பட்டர், அம்மாள்	653
748	ஆற்றாமைக்கு ஆடல் கொடுத்த ஆழ்வார்	ஆளவந்தார்	654
749	பாலோடு அமுதன்ன ஆயிரம்	ஆளவந்தார்	654
750	'இருத்தும்வியந்து' திருவாய்மொழியின் கருத்து	பிள்ளான்	655
751	மூவுலகும் பொருளல்ல	ஆளவந்தார், திருமாலை ஆண்டான், எம்பெருமானார்	655
752	வைத்தேன் மதியாலே	பட்டர்	656
753	அடியேன் உள்ளான் என்றபடி கண்டாயே!	திருக்கோட்டியூர்நம்பி, ஆழ்வான்	657
754	ஆத்மஸ்வரூபம் சொல்லுகிறது	எம்பார், ஆண்டான்	658
755	கூடிற்றாகில் நல்லுறைப்பு	ஆண்டான்	659
756	ப்ரீதியில் அந்யாபதேசமுள்ள திருவாய்மொழி	ஆழ்வான்	660
757	புகழும் பொருபடை	ஆளவந்தார், எம்பெருமானார்	661
758	ஊருக்கு வேதஒலியைச் சிறப்புச் சொல்லுகிறார்	பட்டர்	661
759	உன் தன்மைக்குச் சேர 'நெடுமாற்கடிமை' கேள்	பட்டர், அம்முணியாழ்வான்	662
760	சிறுமாமனிசர் என்பது எப்படிப் பொருந்தும்?	ஆழ்வான், பட்டர், ஆண்டான், அருளாளப்பெருமாள், எம்பார்	663
761	நல்லபதத்தால் மனை வாழ்வர்	செல்வநம்பி, நங்கையார், தொண்டனூர்நம்பி, எச்சான்	663
762	சயமே அடிமை, நீக்கமில்லா அடிமை, கோதிலடிமை	ஆப்பான், ஆழ்வான்	665
763	என்னே என்பாரும் இல்லை	நஞ்சீயர், திருநறையூரரையர்	666
764	அடிபரவுகையைப் போதுபோக்கு ஆக்காதவர்கள்	பட்டர்	667
765	திருவலகிடுவதற்கு என்ன பயன்?	திருக்கண்ணமங்கையாண்டான்	667
766	உன் தாமரைக் கண்களால் நோக்காய்	பிள்ளை தேவப்பெருமாளரையர், திருவரங்கப்பெருமாள் அரையர்	669
767	எலியெலும்பனான என்னை இப்படிச் செய்வதே!	பட்டர்	669
768	தேவரீருக்கு ஈடாக ஆடவல்லேனோ?	பிள்ளையழகியமணவாளவரையர்	671
769	முரட்டு ஸம்ஸ்க்ருதத்தை விடவில்லையே!	வங்கிப்புரத்து நம்பி, ஆண்டான்	672
770	எல்லா அழகும் திருவரங்கத்தில் காணலாம்	பட்டர்	672
771	'ஓராயிரம்' திருவாய்மொழியும் திருமந்த்ரமும்	நடுவில்திருவீதிப்பிள்ளைபட்டர்	673

எண்	பொருள்	திருநாமங்கள்	பக்கம்
772	அப்பெயர் உடைய நாம் இருந்தோமே!	கோயிலாத்தான், பட்டர்	674
773	மணக்கால் நம்பியோடு ஒப்பர் ஆழ்வார்	மணக்கால்நம்பி	674
774	இனமேதுமிலான் ஆகையாவது நேற்றுப் புறப்பட்டபடி	நஞ்சீயர்	675
775	எம்பெருமானுடைய சீலகுணத்தைச் சொல்லுகிறது	ஆசார்யர்கள்	675
776	அவனைக் கிட்டாதொழியில் நான் தரியேன்	ஆத்தான்	676
777	இம்மஹாகுணத்திற்கு நான் புறம்பாகிறேனோ?	ஆளவந்தார், எம்பெருமானார்	677
778	எனக்கு ஆரருள் செய்யும் நெடியான்	பட்டர், அகளங்கப்ரம்மராயன், இருகைமதவாரணம்	678
779	அவனைப்போல பாக்யத்தைப் பெற்றிலேன்	பிள்ளான்	679
780	இன்பம் தலைப்பெய்து எங்கும் தழைக்கவே!	ஆளவந்தார், எம்பெருமானார், பட்டர்	679
781	இருத்தும்வியந்தில் அனுபவத்தை இதிலே சேர்ப்பதே!	நஞ்சீயர், ஆளவந்தார்	680
782	இச்சொல்லையும் இழப்பரோ பாவியார்!	எம்பார்	681
783	மீள உயிர்ப்பெய்து என்பது எப்படிப் பொருந்தும்?	நஞ்சீயர் – நம்பிள்ளை	682
784	ஆருயிர் பட்டது எனதுயிர் பட்டது?	எம்பெருமானார், நஞ்சீயர்–நம்பிள்ளை	683
785	திருநாடாத் தீவினையேன் மனத்து உறையும்	சிற்றாட்கொண்டான், உடையவர்	684
786	பெரியமுதலியார் திருவாய்மொழி	பெரியமுதலியார்	685
787	தேசபாஷையாலே ஆழ்வார் அருளிச்செய்வதே!	எம்பெருமானார்	686
788	தெருளே தரு தென்திருநாவாய் என் தேவே	பிள்ளான்	686
789	மல்லிகை கமழ் தென்றலும் மாலைப்பூசலும்	நம்பிள்ளை, பெற்றி, நம்பி திருவரங்கநாராயணதாஸர்	688
790	'மல்லிகைகமழ்' திருவாய்மொழியின் கருத்து	ஆளவந்தார், எம்பெருமானார்	688
791	மோர் உள்ளதனையும் சோறேயோ?	எம்பெருமானார்	689
792	ஆழ்வார் 'அது' என்றதற்கு நாம் பாசுரமிடமுடியுமோ?	எம்பார்	690
793	மேட்டிலும் ஏறிப்பாயாநின்றால் சொல்லவேணுமோ?	ஆளவந்தார்	691
794	தோடிட்டு வளர்ந்த காது என்று தெரியும் காண்!	நஞ்சீயர்–நம்பிள்ளை	692
795	பலதிருப்பதிகளை அருளிச்செய்வதற்குக் கருத்தென்?	பட்டர் – நஞ்சீயர்	692
796	அவனடியார்களை யமன் தண்டித்துவிடுவானோ?	பட்டர்	693
797	பட்டரும் அரையரும் செய்த பிரதக்ஷிணம்	திருநறையூர் அரையர், பட்டர்	694
798	திருவரங்கத்தில் மரங்களை வெட்டலாமா?	ஜநநாதப்ரம்மராயர், எம்பார்	695

எண்	பொருள்	திருநாமங்கள்	பக்கம்
799	திருவருள் கமுகிலிருந்து வந்த பாக்குகளோ?	பட்டர், திருவாலிநாடுதாஸர்	695
800	திருநாமம் சொல்வதற்குத் தகுதி வேண்டுமோ?	பட்டர் – நஞ்சீயர்	696
801	ஒரே உடலைப் பற்றி இரண்டு கருத்துகள்	பட்டர்	696
802	அனந்தபுரம் நடமினோ நமர்கள் உள்ளீர்	ஆளவந்தார்	697
803	மதிப்பன் தலையிலே கிடாவதது பயனற்றது	பட்டர், பரிஜையப்பர்	798
804	துணை என்பது இரண்டைக் குறிக்காது	சிறியாத்தான்	799
805	பசுவின் காலில் முள்; இடையன் தலையில் சீ!	பிள்ளை அமுதனார்	799
806	இதுவும் ஒரு திருவாய்மொழியே!	நஞ்சீயர்	700
807	எம்பெருமான் பக்தி லப்யன்	பிள்ளான்	700
808	ஆழ்வார் உபதேசித்தது பக்தியா? ப்ரபத்தியா?	ஆளவந்தார், திருமாலை ஆண்டான், எம்பெருமானார்	701
809	திருவாய்மொழியின் முதலும் முடிவும் பொருந்தியபடி	ஆளவந்தார், திருமாலையாண்டான்	701
810	அது நமது விதிவகையே	பூர்வர்கள், எம்பெருமானார்	703
811	சேனைமுதலியாருக்கு எம்பெருமான் கட்டுப்பட்டது	பட்டர், கிடாம்பியாச்சான் இளையாழ்வான்	704
812	க்ரந்தியைப் பார்த்துச் சொன்ன வார்த்தை	பிள்ளையழகியமணவாளவரையர்	706
813	உயிர் காத்து ஆட்செய்மின்கள்	சிற்றாட்கொண்டார், உடையவர்	706
814	மதிளை இடித்தால் வைணவம் அழிந்துவிடுமோ?	அவ்யபதேச்யனுக்கநந்தரன்	707
815	கீதை கற்றவனும் திருவாய்மொழி கற்றவனும்	நம்பிதிருவழுதிவளநாடுதாஸர்	708
816	திருமாலிருஞ்சோலையோ திருவுள்ளத்தில்?	எம்பெருமானார், எம்பார்	709
817	எம்பெருமான் சொன்ன பதில் என்ன?	நஞ்சீயர் – பட்டர்	709
818	அவைஷ்ணவன் கொண்டாடிய வைஷ்ணவன்	மிளகாழ்வான்	710
819	ஆழ்வான் காட்டிய பதயோஜனை	ஆழ்வான்	711
820	வடிவழகைக் காட்டி என்னை விஷயீகரித்தவனே!	ஆழ்வான்	712
821	‘கோலமலர்ப்பாவை’ பாசுரமும் த்வயமும்	பட்டர், நஞ்சீயர்	712



எனக்குத் தாயாய் தந்தையாய் அறியாதன அறிவித்து, பொருளல்லாத என்னைப் பொருளாக்கி அடிமை கொண்டு,
அறியாக் காலத்துள்ளே அடிமைக்கண் அன்பு செய்வித்து, பணிமானம் பிழையாமே அடியேனைப் பணிகொண்ட
ஸ்ரீமதுபயவேதாந்த மஹாவித்வான் மஹாமஹோபாத்யாய ஜகதாசார்ய ஸிம்ஹாஸனாதிபதி

பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசார்ய ஸ்வாமி

திருவடித் தாமரைகளில் இந்நூலைக் காணிக்கையாக்குகிறேன்

Released by Maaran's Dog ,Toronto , Canada

[1]

(ஐந்தலைய பைந்நாகத் தலைப் பாய்ந்தவனே) "கிருஷ்ணாவதாரமென்றால் ஆழ்வார்கள் எல்லாருமாகப் பரிவராயிருப்பர்கள்; இதுக்கடி என்?" என்று சீயர் ப$_4$ட்டரைக் கேட்க, "ராமாவதாரத்தில் பிள்ளைகள் தாங்கள் மிடுக்கராய், கு$_3$ணாதி$_4$கருமாய், பிதா ஸம்ப$_3$ராந்த$_4$னுமாய், மந்த்ரிகள் வஸிஷ்ட$_2$ாதி$_3$களுமாய் இருக்கையாலே அங்குத்தைக்கு ஒரு ப$_4$யமும் இல்லை. இங்கு வந்து பிறந்தவிடம் ஶத்ருக்$_3$ருஹமாய், கம்ஸன் இடம் பார்த்து நலியும் து$_3$ஷ்ப்ரக்ருதிகளை வரக்காட்டும் க்ரூரனுமாய். தமப்பன் இடையனுமாய், ஊர் இடைச்சேரியுமாய், பிள்ளைகள் தாங்கள் தீம்பருமாய், காலம் கலிகாலத்தோடு தோள்தீண்டியா யிருக்கையாலே என் வருகிறதோ என்று பரிகைக்கு ஆழ்வார்களல்லதில்லை காணும்!" என்றருளிச் செய்தார்.

(திருப்பல்லாண்டு - 10)

நிகழிடம்

எம்பெருமானுக்கு யாரால் என்ன தீங்கு வந்துவிடுமோ என்று அஞ்சுகின்ற பெரியாழ்வார் எப்போதோ அவனுக்குத் தீங்கு செய்ய வந்தவர்களை நினைத்து, பிற்காலத்தில் அஞ்சி மங்களாசாஸனம் செய்தார். அப்படி மங்களாசாஸனம் செய்யும் கிரமத்தில் கண்ணபிரான் காளியன் எனும் பாம்பின் மீது பாய்ந்து அதன் மீது நடமாடிய நிகழ்ச்சியை நினைத்துப் பெரியாழ்வார், 'அந்தக் கொடிய பாம்பினால் கண்ணனுக்கு என்ன ஆபத்து நேருமோ' என்று அஞ்சி, "ஐந்தலைய பைந்நாகத் தலைப் பாய்ந்தவனே உன்னைப் பல்லாண்டு கூறுதுமே" என்று மங்களாசாஸனம் செய்தார். இவ்வாறு ஆழ்வார் கிருஷ்ணாவதாரத்தில் மிகவும் பரிவு கொண்டிருப்பதற்குக் காரணம் என்ன என்று நஞ்சீயர் கேட்க அதற்கு பட்டர் விடை அளித்த **ஸம்வாதம்** *எடுத்துக் கூறப்பெறுகிறது.*

விளக்கம்

இப்பாசுரத்தை பட்டர் விளக்கிக் கொண்டிருக்கையில் அவருடைய சீடரான **நஞ்சீயர்,** *"ஆழ்வார்கள் அனைவருமே ராமாவதாரத்தை விட, கிருஷ்ணாவதாரத்தை நினைத்தே அதிகமான பரிவு காட்டுகிறார்களே, இதற்கு என்ன காரணம்?" என்று பட்டரைக் கேட்டார். இத்திருப்பல்லாண்டிலேயே பெரியாழ்வார், "மல்லாண்ட திண்டோள் மணிவண்ணா"(1) என்றும், "வாணனை ஆயிரம் தோளும் பொழிகுருதி பாய" (7) என்றும், "ஐந்தலைய பைந்நாகத் தலைப் பாய்ந்தவனே" (8) என்றும் மூன்று முறை கண்ணனுடைய ஆபத்துக்களையே நினைத்துப் பல்லாண்டு பாடியுள்ளார். இதேபோல் நம்மாழ்வாரும் திருவாய்மொழியில் "மத்துறு கடைவெண்ணெய் களவினில் உரவிடையாப்புண்டு, எத்திறம் உரலினோடு இணைந்திருந்தேங்கிய எளிவே"*

(1-3-1) என்றும், "பிறந்தவாறும் வளர்ந்தவாறும்" (5-10-1) என்றும் கிருஷ்ணாவதார சரித்திரங்களை நினைத்தே மோகித்தார். இப்படி ஆழ்வார்கள் எல்லாரும் கிருஷ்ணாவதாரத்திலேயே மிகவும் ஈடுபட்டிருப்பதற்குக் காரணம் என்ன என்பது நஞ்சீயருடைய கேள்வியாகும். அதற்குப் பராசர பட்டர் மிக அழகாக விடை தருகிறார். ராமாவதாரத்தில் சகோதரர்கள் நால்வருமே மிகுந்த வீரமுடையவர்கள். அனைவரும் கொண்டாடும்படியான நற்குணங்கள் பொருந்தியவர்கள். இவர்களுடைய தகப்பனாரான தசரத சக்ரவர்த்தியோ இந்திரனுடைய விரோதியான சம்பராசுரனையும் கொன்றவர். அவருடைய மந்திரிமார்களோ அளவற்ற ஞானம் பெற்ற வஸிஷ்டர் முதலியவர்கள்; அவர்கள் பிறந்த ஊர் பகைவர் எவரும் புக முடியாதது என்பதனாலேயே அயோத்யா என்று பெயர் பெற்றது. இராமபிரான் அவதரித்ததும் மிகவும் நல்ல காலமான திரேதாயுகத்திலேயாகும். இப்படி எல்லாமே அவ்வவதாரத்தில் பாதுகாப்பாக இருந்தமையால் அந்த அவதாரத்தைப் பற்றி அஞ்ச வேண்டியதில்லை. ஆனால் கிருஷ்ணாவதாரத்திலோ இவை எல்லாமே நேர்மாறாகவன்றோ இருக்கிறது! கண்ணன் பிறந்த இடமோ அவனுடைய எதிரியான கம்ஸனுடைய சிறைக் கூடம். கண்ணன் சற்று அயர்ந்திருக்கும் நேரம் பார்த்து அவனைக் கொன்று விடுவதற்காக அசுரர்களை ஏவிவிடும் கொடியவன் கம்ஸன். தகப்பனாரோ ஒன்றும் தெரியாத சாது இடையன் நந்தகோபன். கண்ணன் வளருகிற ஊரோ எந்தவிதப் பாதுகாப்பும் இல்லாத இடைச்சேரி. பிள்ளைகளோ (கண்ணனும் பலராமனும்) தீம்பு செய்வதில் வல்லவர்கள். கண்ணன் அவதரித்த காலம் கலியுகத்திற்கு மிகவும் சமீபமான துவாபரயுகத்தின் கடைசி நாள்கள். எனவே கிருஷ்ணாவதாரத்தில் எதை நினைத்தாலும் அஞ்சும்படியாகவே அன்றோ இருக்கிறது! எனவேதான் ஆழ்வார்கள் அனைவரும் கிருஷ்ணாவதாரத்தை நினைத்தே அதிகம் அஞ்சுகிறார்கள். இப்படி என்றைக்கோ நடந்தவைகளை நினைத்துப் பிற்காலத்திலும் அச்சம் கொண்டு மங்களாசாஸனம் செய்வதற்கு ஆழ்வார்களைத் தவிர வேறுயாருமிலர் என்பது பட்டர் அளித்த விடையாகும்.[1]

[2]

(ஏடு நிலத்திலிடுவதன் முன்னம்) ஏடு என்பது பொல்லாங்கு. 'உங்களைப் பொல்லாத நிலத்திலே இடுவதற்கு முன்னம்' என்று பிள்ளையமுதனார்.

(திருப்பல்லாண்டு - 4)

நிகழிடம்

பெரியாழ்வார் எம்பெருமானைக் கண்டவுடன் தம்முடைய தன்மையை (எம்பெருமானே காப்பவன்; தாம் அவனால் காக்கப் படுபவர் என்கின்ற

1. இதே கேள்விக்கு பட்டர் வேறொரு விதமாக பதிலளித்ததை எண் 629ல் காண்க.

தன்மையை) மறந்து, அவனைக் காப்பவராகத் தம்மை நினைத்துக் கொண்டு, அவனுக்குப் பல்லாண்டு பாடினார். தாம் ஒருவர் பல்லாண்டு பாடினமையால் மட்டும் திருப்தி அடையாமல், மேலும் பலரையும் அவனுக்குப் பல்லாண்டு பாடுவதற்கு அழைத்தார். அவ்வாறு அழைக்கும்போது, முதன்முதலில், எம்பெருமானையே எல்லாமாகக் கொண்டிருக்கின்ற அநந்யப்ரயோஜனரை அழைத்தார். அடுத்தபடியாக, பரமபதத்திற்குச் சென்றும் தம்மைத் தாமே அனுபவிக்க நினைக்கிற கைவல்யார்த்திகளை அழைக்கிறார். அப்படி அழைக்கும்போது அவர்களை நோக்கி "உங்களை ஏடு நிலத்தில் இடுவதற்கு முன்பு என்னோடு வந்து கூடி பகவானுக்குப் பல்லாண்டு பாட வாருங்கள்" என்று அழைக்கிறார். இங்கு 'ஏடு நிலம்' என்பதற்குப் பல பொருள்கள் காட்டப்படுகின்றன. அவற்றில் ஒன்று 'பிள்ளை அமுதனார்' என்பவர் அருளிச் செய்த **நிர்வாஹம்** (விளக்கம்) எடுத்துக் காட்டப்பெறுகிறது.

விளக்கம்

'உங்களைப் பொல்லாத நிலமான சுடுகாட்டிலே இடுவதற்கு முன்னர், என்னோடு வந்து கூடி பகவானுக்குப் பல்லாண்டு பாடுங்கள்' என்று கைவல்யத்தை விரும்புபவர்களைப் பெரியாழ்வார் அழைக்கிறார்' என்பது பிள்ளை அமுதனாருடைய கருத்து. கைவல்யம்[2] என்பது பரமபதத்திற்குச் சென்றும், அங்கு அவனை அனுபவிக்காமல் தம்மைத் தாமே அனுபவிக்கும் ஆத்மானுபவம் ஆகும். இந்தக் கைவல்ய அனுபவத்தை ஆசைப்பட்டு பகவானை உபாஸிப்பவர்களுக்கு, அந்த உடல் நீங்கியவுடன் கைவல்யம் கிடைத்துவிடும். அப்படிக் கைவல்யம் கிடைத்துவிட்டால், பிறகு பகவானை அடையும் பேறு அவர்களுக்குக் கிட்டவே கிட்டாது. எனவே அவர்கள் கைவல்யம் கிடைப்பதற்கு முன்பே மனம் திருந்தினால்தான் பகவானை அடையமுடியும். எனவேதான் பெரியாழ்வார் இந்த உடலைச் சுடுகாட்டிலே இடுவதற்கு முன்னமே மனம் திருந்தி பகவானுக்குப் பல்லாண்டு பாட வாருங்கள் என்று அவர்களை அழைக்கிறார் - என்று பிள்ளை அமுதனார் விளக்கம் தருகிறார்.

1. பிள்ளையமுதனார் என்பவர் கூரத்தாழ்வானுடைய சீடர். இவர் திருவரங்கத்து அமுதனார் என்றும் அழைக்கப்படுவார். இவர் இராமானுசருடைய பெருமைகளைப் பற்றி இராமானுச நூற்றந்தாதி எனும் 108 பாசுரங்கள் கொண்ட நூலொன்று இயற்றியுள்ளார். இந்நூலுக்கு வியாக்கியானம் (உரை) அருளிச்செய்துள்ள மணவாளமாமுனிகள் இவரைப் பிள்ளையமுதனார் என்றே குறிப்பிடுகின்றார்.

2. கைவல்யம் என்பது பரமபதத்திலேயே ஒரு பகுதி என்றும் அங்கு ஆனந்தமே வடிவாகக் கொண்ட தன் ஆத்மாவை அனுபவிப்பதில் ஆழ்ந்தவன், அவ்வனுபவம் முற்றுப் பெறாது ஆகையால் அதிலிருந்து விடுபட்டு, பகவானிடம் சென்று ஆட்படுதல் என்பது ஒரு போதுமில்லை என்றும் கூறப்படுகிற கருத்தை அடியொற்றியே இங்குப் பிள்ளை அமுதனார் விளக்கம் அமைந்துள்ளது.

[3]

(நெய்த்தலை நேமியும்........) "அப்பூச்சி காட்டுகின்றான்" என்று இவற்றையிறே எம்பார் அருளிச்செய்தது!

(பெரியாழ்வார் திருமொழி 1-2-12 திருவாய்மொழிப்பிள்ளை வியாக்கியானம்)

நிகழிடம்

யசோதை, கண்ணபிரானுடைய அவயவங்களை ஒவ்வொன்றாக ஆய்ச்சியர்களுக்குக் காட்டிவரும் அடைவில், "நெய்த்தலை நேமியும் சங்கும் நிலாவிய கைத்தலங்கள் வந்து காணீரே!" என்கிறாள். கண்ணபிரானுடைய திருக்கரத்தில் சக்கரமும் சங்கும் உண்டோ என்ற ஐயத்திற்கு விடையளிக்கும் உரையாசிரியர், எம்பார் பற்றிய **ஐதிஹ்யம்** ஒன்றை நினைவூட்டுகின்றார்.

விளக்கம்

எண் 8ன் விளக்கம் காண்க.

[4]

(மக்களைப் பெறுவர்களே) கூரத்து ஆழ்வார், நங்கையார் திருவடிச் சார்ந்தவாறே பின்பு ஆவர்த்திப்பதாக அறுதியிட்டது கூடுகிறவளவில் தம்முடைய புத்ரரான ஆழ்வானுடைய ஸ்ரீவைஷ்ணவத்வத்தைக் கண்டு, 'இதினுடைய எடுப்பு இருந்தமை கண்டோமுக்கு, ஆழ்வானுக்கு அந்யஶேஷத்வம் வரவொண்ணாது' என்று ஆவர்த்திக்கை தவிர்ந்தாரிறே.

(பெரியாழ்வார் திருமொழி 1-7-11 திருவாய்மொழிப்பிள்ளை வியாக்கியானம்)

நிகழிடம்

தம்முடைய திருமொழியில் பதிகம் ஒன்றைக் கற்பவர்களுக்குப் பயன் கூறுகின்ற பெரியாழ்வார், "மாயன் மணிவண்ணன் தாள் பணியும் மக்களைப் பெறுவர்களே" என்று பயன் கூறுகின்றார். இதனை விளக்குகின்ற உரையாசிரியர், 'மணிவண்ணன் தாள்பணியும் மகனாகக்' கூரத்தாழ்வானைக் கருதியமையை ஓர் **ஐதிஹ்யம்** மூலம் எடுத்துக்காட்டாகக் கூறுகின்றார்.

விளக்கம்

கூரத்தாழ்வானுடைய திருத்தகப்பனாரான கூரத்து ஆழ்வார், தம்முடைய மனைவியான நங்கையார் வீடுபேறு அடைந்தபிறகு, மறுமணம் செய்து கொள்ள எண்ணினார். ஏறக்குறைய அது கைகூடும் நிலையையும் அடைந்து விட்டது. ஆனால், தம்முடைய மகனாரான கூரத்தாழ்வான் ஸ்ரீவைஷ்ணவ இலக்கணங்கள் அனைத்தும் பொருந்தியவராக இருப்பதை நினைவு கூர்ந்து, அப்படிப்பட்ட கூரத்தாழ்வான் தம்முடைய மறுமணத்தால், மாற்றாந்தாய்க்கு அடிமைப்

பட்டிருக்க வேண்டி வரும் என்றும், அவள் மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் ஆழ்வானைக் கொடுமைப்படுத்தினால், தமக்கு பாகவதாபசாரம் ஏற்படும் என்றும் கருதி மறுமணம் செய்துகொள்வதைத் தவிர்த்துவிட்டாராம்.[1]

[5]

"முன்னோர் தூது வானரத்தின் வாயில் மொழிந்து - அவனே - இன்னார் தூதனென நின்றான்" என்றிறே சீயர்க்கு ப$_4$ட்டர் அருளிச்செய்தது.

(பெரியாழ்வார் திருமொழி 1-8-3 திருவாய்மொழிப்பிள்ளை வியாக்கியானம்)

நிகழ்டம்

கண்ணபிரான் பாண்டவர்களுக்காகத் தூது சென்றமையை "பஞ்சவர் தூதனாய்ப் பாரதம் கைசெய்து" என்று பெரியாழ்வார் அருளிச்செய்துள்ளார். இத்தொடர்பில் நடைபெற்ற ***ஸம்வாதம்*** *ஒன்று எடுத்துக் காட்டப்பெறுகிறது.*

விளக்கம்

எண் 213ன் விளக்கம் காண்க.

[6]

"ஸத்பாத்ரத்தில் அபீ$_4$ஷ்டத$_3$ாநம் செய்தவனுக்கு நிக்$_3$ரஹமும் சிறையிருப்பும் வந்தது; 'இது மாயா ரூபம், தகுதியன்று' என்று ஸத்யம் சொன்னவன் கண்ணழிந்து நின்றான். இது ந்யாயமோ?" என்ன, இவ்விடத்துக்குப் பிள்ளை அருளிச்செய்தாராக ஆச்சான்பிள்ளை அருளிச்செய்யும்படி: "அவனுக்கு தோ$_3$ஷம் கு$_3$ருவசநம் கேளாமை; இவனுக்கு தோ$_3$ஷம் த$_3$ாநம் விலக்குகை" என்று.

(பெரியாழ்வார் திருமொழி 1-8-7 திருவாய்மொழிப்பிள்ளை வியாக்கியானம்)

நிகழ்டம்

எம்பெருமான் வாமனனாகச் சென்று மஹாபலியிடம் மூன்றடி மண் யாசித்தபோது அதைச் சுக்கிரன் தடுக்கவந்தமை பற்றியும் அவனுடைய கண்களை வாமனன் துரும்பால் கிளறியது பற்றியும் பெரியாழ்வார் "தானம் விலக்கிய சுக்கிரன் கண்ணைத் துரும்பால் கிளறிய சக்கரக் கையன்" என்று அருளிச் செய்கிறார். இவ்விடத்தில், நாலூராச்சான்பிள்ளை கேட்க, நாலூர்பிள்ளை பதில் அருளிச்செய்த ***ஸம்வாதம்*** *எடுத்துக் காட்டப்படுகிறது.*

விளக்கம்

"மிகவும் நல்ல பாத்திரமான வாமனனுக்கன்றோ மகாபலி தானம் செய்தான்! அதுவும் தானம் கேட்டவன் விருப்பத்தின்படியே அன்றோ தானமும் செய்தான்! இவ்வளவு நல்ல காரியம் செய்திருந்தும் மகாபலிக்குப் பாதாளத்தில்

1. இவ்வைதிஹ்யம் மற்றோரிடத்திலும் உள்ளது. எண் 607 பார்க்க.

சிறையிருப்பன்றோ கிடைத்தது! அதேபோல் தானம் கேட்க வந்திருப்பவன் உண்மையில் யாசகனே அல்லன் என்ற உண்மையைச் சொன்ன சுக்கிரனுக்குக் கண்ணே போய்விட்டது. இப்படி, தானம் கொடுத்தவன் ராஜ்யத்தை இழந்ததும், உண்மை சொன்னவன் கண்ணை இழந்ததும் நியாயமா?" என்று நாலூர்பிள்ளையிடம் **நாலூராச்சான்பிள்ளை** கேட்டார். அதற்கு **நாலூர் பிள்ளை**, "இருவரிடமும் இரண்டு குற்றங்கள் உள்ளன. 'தானம் கொடுக்காதே' என்று ஆசார்யனான சுக்கிரன் எவ்வளவோ தடுத்துக் கேளாமல் அன்றோ மகாபலி தானம் கொடுத்தான். எனவே மஹாபலியின் குற்றம் தன்னுடைய ஆசார்யனுடைய சொல்லைக் கேளாமை. எனவேதான் அவனுக்கு ராஜ்யம் போயிற்று. சுக்கிரன் சொன்னது உண்மைதான் என்றாலும் ஒருவன் தானம் கொடுக்க முன்வரும்போது அதைத் தடுப்பது மிகப்பெரிய பாவம். எனவேதான் சுக்கிரனுக்குக் கண்போயிற்று" என்று சுவையாக விடையளித்தார்.

[7]

(வட்டு நடுவே....) இவ்விடத்துக்கு ஆச்சான்பிள்ளை அருளிச்செய்யும் படி: ராஜகோஷ்டியிலே இப்பாட்டு ப்ரஸ்துதமாக, "ஶைஶவாவஸ்தையைப் பேசினபடியென்!" என்று ராஜா கொண்டாட, அறியாதானொருத்தன், "இது இளம் சொல்லு; கொண்டாடப்படுமதாயிருந்ததோ?" என்ன, அதைக் கேட்ட ப்ரஸாதவிடைக்காரன், "'அதிர்முகமுடைய வலம்புரி குமிழ்த்தி' என்கிற பாட்டும் இவர் அருளிச் செய்ததன்றோ?" என்ன, அத்தைக் கேட்டு ராஜா 'அங்ஙனே கொடு' என்றான் - என்று.

(பெரியாழ்வார் திருமொழி 1-9-1 திருவாய்மொழிப்பிள்ளை வியாக்கியானம்)

நிகழிடம்

கண்ணபிரானுடைய குழந்தைப் பருவத்தை அனுபவித்துவருகின்ற பெரியாழ்வார்,

வட்டு நடுவே வளர்கின்ற மாணிக்க
மொட்டு நுனையில் முளைக்கின்ற முத்தேபோல்
சொட்டுச் சொட்டென்னத் துளிக்கத் துளிக்க
என் குட்டன் வந்தென்னைப் புறம்புல்குவான்
கோவிந்தன் என்னைப் புறம்புல்குவான்

(இரண்டு நீலரத்தின வட்டுக்களிடையே வளர்ந்த மாணிக்கத்தின் மொட்டின் நுனியில் உண்டாகின்ற முத்துப்போல (ஆண்குறியின் நுனியில் சிறுநீரானது) சொட்டுச் சொட்டாகத் துளிக்கத் துளிக்கக் கண்ணன் ஓடிவந்து என்முதுகைக் கட்டிக் கொள்வான்) என்று யசோதையின் பாவனையில் அருளிச் செய்கின்றார். இப்பாசுரம் பற்றி **ஆச்சான்பிள்ளை** *ஒரு* **ஐதிஹ்யம்** *கூறுகிறார்:*

விளக்கம்

அரசசபையில் இப்பாட்டைப் பற்றிப் பேச்சு எழுந்தபோது, அரசன் "குழந்தைப் பருவத்தைப் பெரியாழ்வார் எவ்வளவு அழகாகக் கூறியுள்ளார்!" என்று கொண்டாடினானாம். அப்போது இதன் சிறப்பை அறியாதான் ஒருவன், "இப்பாசுரத்தில் மிகவும் தாழ்ந்த (சிறுநீர் கழிக்கும்) விஷயத்தையன்றோ பெரியாழ்வார் பேசியுள்ளார். எனவே அவருடைய சொல் மிகவும் தாழ்ந்த சொல்லே!" என்று கூறினானாம். அப்போது அரசவையிலிருந்த ப்ரஸாதவிடைக் காரன், பெரியாழ்வார் மிகவும் கம்பீரமாக அருளிச்செய்துள்ள பாசுரமான,

அதிர்முகமுடைய வலம்புரி குமிழ்த்தி அழலுமிழாழி கொண்டெறிந்து அங்
கெதிர்முகவசுரர் தலைகளையிடறும் எம்புருடோத்தமனிருக்கை
சதுமுகன் கையில் சதுப்புயன் தாளில் சங்கரன் சடையினில் தங்கி
கதிர்முக மணிகொண்டிழிபுனல் கங்கைக் கண்டமென்னும் கடிநகரே

என்ற பாசுரத்தை (4-7-3) எடுத்துக்கூறி, "இப்படிப்பட்ட கம்பீரமான பாசுரத்தை அருளிச் செய்தவரும் பெரியாழ்வாரே! எனவே அவருடைய சொல் தாழ்ந்த சொல் என்று கூறாதே!" என்றானாம். இதைக் கேட்ட அரசன் மிகவும் மகிழ்ந்து பிரஸாதவிடைக்காரனைப் பார்த்து, "அப்படி எடுத்துக் கொடு" என்றானாம்.

[8]

(அத்தாதன் அப்பூச்சி காட்டுகின்றான்) இவ்விடத்தை உய்ந்தபிள்ளை (ஆ)பாடா நிற்க, திருவோலக்கத்திலே அத்தாதனென்று பெருமாளைக் காட்டுவது அப்பூச்சியென்று கண்ணையிறுத்துக் கொண்டு வருவதாய் அபி$_4$நயிக்க, உடையவர் பின்னே ஸேவித்தெழுந்தருளியிருந்த எம்பார் திருக்கைகளைத் திருத்தோள்களோடு சேர்த்துக்காட்ட, அவரும் அப்படியே அபி$_4$நயித்துக் கொண்டு வர, 'இதுக்கடியென்?' என்று விசாரித்துப் புரிந்து பார்த்தருளி, "ஸ்ரீ கோவிந்தப் பெருமாள்! இருந்தீரோ?" என்றருளிச் செய்தாரென்று ப்ரஸித்$_3$த$_4$மிறே.

(பெரியாழ்வார் திருமொழி 2-1-1)

நிகழிடம்

*குழந்தைகள் ஒருவரை ஒருவர் பயமுறுத்திக் கொண்டு விளையாடுகை அப்பூச்சி காட்டுதல் எனப்படும். இப்படிக் கண்ணபிரான் ஆயர் சிறுவர்களோடு அப்பூச்சி காட்டி விளையாடியதைப் பற்றிப் பெரியாழ்வார் ஒரு பதிகம் அருளிச்செய்துள்ளார். இத்தொடர்பில் ஓர் **ஐதிஹ்யம்** கூறப்பெறுகிறது.*

விளக்கம்

ஸ்ரீரங்கம் கோயிலில், பெருமாள் திருமுன்பு அரையர் என்போர் ஆழ்வார்கள் பாசுரங்களைப் பாடி அப்பாசுரங்களின் பொருளுக்கேற்ப

அபிநயமும் காட்டுவர். ஸ்ரீராமாநுஜருடைய காலத்தில் **உய்ந்த பிள்ளை** எனும் பெயருடைய அரையர் ஒருவர் அத்யயன உத்ஸவத்தின் அரையர் ஸேவையில் 'அத்தூதன் அப்பூச்சி காட்டுகின்றான்' என்கிற இப்பாசுரத்திற்கு அபிநயம் பிடிக்கும்போது 'அத்தூதன்' என்பதற்கு எதிரே இருக்கும் நம்பெருமாளைக் காட்டி, 'அப்பூச்சி காட்டுகின்றான்' என்பதற்கு கண்ணிமையை உட்புறம் வெளிப்புறமாகும்படி மடக்கி (இக்காலத்துச் சிறுவர்கள் பூச்சி காட்டுவது போலவே) அபிநயம் செய்து காட்டினார். அப்போது அங்கே வீற்றிருந்த ஸ்ரீ வைஷ்ணவர்களுடைய திரளிலே **உடையவர்**, அவருக்குப் பின்னே அவருடைய சீடரான **எம்பார்** முதலியோர் எழுந்தருளியிருந்தனர். அரையர் காட்டின அபிநயத்தைக் கண்ட எம்பார், கண்ணபிரான் அப்பூச்சி காட்டியது அப்படியல்ல என்று நினைத்தார். பிறக்கும்போதே சங்கு சக்கரங்களுடன் பிறந்த கண்ணபிரான், தனது பெற்றோர்களுடைய விருப்பத்திற்கிணங்க அவற்றை மறைத்துக் கொண்டாலும், ஆய்ப்பாடியில் சிறுவர்களுடன் விளையாடும்போது, தான் மறைத்துக் கொண்ட சங்கு சக்கரங்களை அடிக்கடி காட்டி அச்சத்தை விளைவித்திருப்பான்; இப்படிக் கண்ணைப் புரட்டி விழித்து அல்ல என்று நினைத்தார் எம்பார். எனவே அரையர் மட்டும் புரிந்துகொள்ளும்படியாக தம்முடைய கைகளைத் தோளோடு சேர்த்து வைத்துச் சங்கு சக்கரங்களை ஏந்துவது போலக் காண்பித்தார் எம்பார்! இக்குறிப்பை உணர்ந்து கொண்ட அரையர் உடனே அந்த வரிகளை இரண்டாவது முறை அபிநயம் செய்யும்போது 'அப்பூச்சி காட்டுகின்றான்' என்பதற்குச் சங்கு சக்கரங்களைக் காட்டுவது போல அபிநயிக்க, இதைக்கண்ட உடையவர், முதலில் வேறுவிதமாக அபிநயம் செய்த அரையர், இரண்டாம் முறை இப்படி அபிநயம் செய்ததற்குக் காரணம் என்ன என்று ஒரு கணம் யோசித்தார். உடனே அவருக்குக் காரணம் புரிந்துவிட்டது. பரமரசிகரான எம்பாரைத் தவிர வேறு யாரும் இதை உணர்த்தியிருக்க முடியாது; எனவே எம்பார் உணர்த்தியபடியாலேயே அரையர் இப்படி மாற்றிக் கொண்டிருக்க வேண்டும் என்று நினைத்துத் திரும்பிப்பார்த்து "கோவிந்தப் பெருமாள், நீர் இங்கேதான் இருக்கிறீரா?" என்றாராம்.

[9]

குறும்பறுத்த நம்பியும் "திருவேங்கடமுடையானாகிற அலைவலை வெளியிட்டானோ?" என்றாரிறே.

(பெரியாழ்வார் திருமொழி 2-1-2 திருவாய்மொழிப்பிள்ளை வியாக்கியானம்)

1. இதேபோல் வெறொரு பாசுரத்திற்கு உய்ந்தபிள்ளை ஒருவிதமாக அபிநயம் செய்ய அதைத் திருத்தி எம்பார் வேறு அபிநயம் காட்டித் தந்தமை பற்றி எண் 165ல் காண்க.

நிகழ்டம்

கண்ணபிரானை "அலைவலை" என்றருளிச்செய்கிறார் பெரியாழ்வார். இதேபோல் குறும்பறுத்தநம்பி கூறிய **வார்த்தை** *எடுத்துக் காட்டப்பெறுகிறது.*

விளக்கம்

எண் 249 பார்க்க.

[10]

(காயு நீர் புக்கு) "பண்டு நீர்க்கடம்பாய்க் குளிர்ந்து நின்ற பாத₂பம் பட்டது விஷஜலத்தாலேயிறே! ஆனால் அது இவனேறப் பொறுக்கபடி என்?" என்று நஞ்சீயர் கேட்க, "ஏறுகிறவன் பார்த்து ஏறுகையாலே, விஷத்தால் வந்த தோ₃ஷம் அவன் பார்வையாலே தீர்ந்து ப்ராணன் பெற்றுப் பச்சிலைப் பூங்கடம்பாயிற்று" என்று ப₄ட்டர் அருளிச்செய்தார். அன்றிக்கே நம்பிள்ளை அருளிச்செய்தாராக ஆச்சான் பிள்ளை அருளிச்செய்யும்படி: "வெந்துபோன உத்தரைதன் சிறுவனையும் உய்யக் கொண்ட திருவடிகளிறே. அந்தத் திருவடிகளாலே மிதித்தேறினால் பச்சிலைப் பூங்கடம்பாகாதோ?" என்று.

(பெரியாழ்வார் திருமொழி 2-1-2 திருவாய்மொழிப்பிள்ளை வியாக்கியானம்)

நிகழ்டம்

காளியநாகத்தின் விஷத்தால் கொதிக்கின்ற மடுவின் கரையிலிருந்த ஒரு கடம்ப மரத்தின்மீது ஏறிக் காளியன்மீது குதித்துக் கண்ணபிரான் நடமாடியதைப் பெரியாழ்வார் "காயுநீர் புக்குக் கடம்பேறிக் காளியன் தீய பணத்தில் சிலம்பார்க்கப் பாய்ந்தாடி" என்றருளிச்செய்கிறார். இத்தொடர்பில் நஞ்சீயர் கேட்க, பட்டர் விடை அளித்த **ஸம்வாதம்**, *நம்பிள்ளை அளித்த மற்றொரு விளக்கம் ஆகியவை எடுத்துக் கூறப் பெறுகின்றன.*

விளக்கம்

"காளியனுடைய விஷத்தால் மடுவும் கொதித்து, கடம்பமரமும் காய்ந்து பட்டுப்போயன்றோ இருக்கும்? அதன் மீது கண்ணன் எப்படி ஏறமுடிந்தது?" என்று நஞ்சீயர் *பட்டரைக் கேட்டாராம். அதற்கு* பட்டர், *"கடம்பமரத்தின்மீது ஏறிய கண்ணபிரான், ஏறுவதற்குமுன் அம்மரத்தை ஒருமுறை பார்த்திருப்பான். அவன் கடாக்ஷம் பட்டவாறே விஷத்தால் காய்ந்துபோன கடம்பமரமும் துளிர்த்துப் பச்சிலைப் பூங்கடம்பாக ஆகிவிட்டது" என்றாராம். இதே கேள்விக்கு நஞ்சீயரின் சீடரான* நம்பிள்ளை *மற்றொரு விளக்கம் கூறுவார் என்று* ஆச்சான் பிள்ளை *அருளிச் செய்வராம். அதாவது, பாரத யுத்தத்தின் முடிவில் அச்வத்தாமனால் ஏவப்பட்ட பாணத்தினால், அபிமன்யுவின் மனைவியான உத்தரையின் கர்ப்பத்தில் இருந்த குழந்தை வெந்து வெறும் கரிக்கட்டையாகப்*

பிறக்க, கண்ணபிரான் தன் திருவடிகளால் அக்கரிக்கட்டையைத் தடவியவுடன் அது உயிர்த்தெழுந்தது அன்றோ![1] அந்தத் திருவடிகளாலன்றோ அந்தக் காய்ந்துபோன கடம்பமரத்தையும் கண்ணன் மிதித்தேறினான்! அவனுடைய திருவடிகள் பட்டவுடனே காய்ந்த கடம்பும் பச்சிலைப் பூங்கடம்பாக மாறிவிட்டது என்று நம்பிள்ளை விளக்கினார்.

[11]

(உறு துயர்.....) இத்தைப் பற்றவிறே भगवतस्त्वरायै नम: ($ப_4க_3$வதஸ்த்வராயை நம:) என்று $ப_4$ட்டர் அருளிச்செய்தது. இப்படித் த்வரித்திலனாகில் "மறையும் மறையும்" என்றாரிறே சிற்றாட்கொண்டார்.

(பெரியாழ்வார் திருமொழி 2-1-9 திருவாய்மொழிப்பிள்ளை வியாக்கியானம்)

நிகழிடம்

முதலையின் வாயில் அகப்பட்ட யானையின் துயர்தீர்த்தவன் என்று எம்பெருமானைப் பற்றிக் கூறுகின்றார் பெரியாழ்வார். இத்தொடர்பில் பட்டர் அருளிச்செய்த **சுலோகம்** ஒன்றும், சிற்றாட்கொண்டான் என்பவர் அருளிச்செய்த **வார்த்தை** ஒன்றும் எடுத்துக் காட்டப்பெறுகின்றது.

விளக்கம்

முதலையின் துயர் தீர்ப்பதற்காகப் பரமபதத்திலிருந்து எம்பெருமான் ஓடிவந்தமையைப் பராசரபட்டர் ஸ்ரீரங்கராஜ ஸ்தவத்தில்,

அதந்த்ரிதசமூபதிப்ரஹிதஹஸ்தமஸ்வீக்ருத
ப்ரணீத மணிபாதுகம் கிமிதிசாகுலாந்த:புரம்
அவாஹநபரிஷ்க்ரியம் பததராஜமாரோஹத:
கரிவரப்ரும்ஹிதே பகவதஸ்த்வராயை நம: (2-57)

(கஜேந்திரனுடைய கூக்குரல் செவிப்பட்டவளவில், சேனைமுதலியாரால் கொடுக்கப்பட்ட கைலாகை கவனியாமலும், கொண்டு வரப்பட்ட ரத்தின பாதுகைகளை அணிந்துகொள்ளாமலும், 'இதுவென், இதுவென்' என்று அந்தப்புரத்திலுள்ளோர் வியக்கும்படியாகவும், வாகன அலங்காரங்கள் செய்யப்படாத கருடன் மீது ஏறியும் வந்த எம்பெருமானுடைய வேகத்துக்கு வணக்கம்) என்று வருணித்துள்ளதை உரையாசிரியர் நினைவு கூர்கிறார். தொடர்ந்து நம்மாழ்வார் அருளிச்செய்த பாசுரம் ஒன்றிற்குத் சிற்றாட்கொண்டான் என்பவர் கூறிய வார்த்தையொன்றையும் நினைவு கூர்கிறார். "மழுங்காத வைந்நுதிய சக்கரநல் வலத்தையாய்" என்று தொடங்கும் திருவாய்மொழி (3-7-5?) பாசுரத்தில் நம்மாழ்வார், எம்பெருமான் நேரில் வந்து

1. இந்த வரலாற்றை மகாபாரதம் ஸௌப்திகபர்வம் 15ம் அத்யாயத்தில் காண்க.

ஆனைக்கு அருள் புரியாமல் இருந்திருந்தால், அவனுடைய பெருமை மறைந்துபோகாதோ? என்று கேட்கிறார். அதற்குச் சிற்றாட்கொண்டார் என்பவர் 'நிச்சயமாக மறைந்து போகும்' என்ற கருத்தில் "மறையும் மறையும்" என்றாராம்.[1]

[12]

(மலையை எடுத்து) ப$_4$ட்டர் "கல்மாரியாகையாலேயிறே கல்லை எடுத்தது; நீர்மாரியாகில் கடலை எடுக்கும்போலே காணும்" என்றருளிச்செய்தார்.

(பெரியாழ்வார் திருமொழி 2-3-7 திருவாய்மொழிப்பிள்ளை வியாக்கியானம்)

நிகழிடம்

கண்ணபிரான் செய்த செயல்களை (யசோதையின் பாவனையில் வர்ணிக்கும் பெரியாழ்வார் "மலையை எடுத்து மகிழ்ந்து கல்மாரி காத்து" என்று அருளிச் செய்கிறார். இந்திரன் கோபம் கொண்டு கல் மழை பொழிய அப்போது கண்ணன் கோவர்த்தன மலையைக் குடையாகப் பிடித்து ஆயர்களைக் காத்த இந்த நிகழ்ச்சியை விளக்கிய பராசரபட்டர் அருளிச்செய்த சுவையான ஒரு **வார்த்தை** *எடுத்துக் காட்டப்பெறுகிறது.*

விளக்கம்

கண்ணபிரான் கோவர்த்தனமலையை எடுத்துக் குடையாகப் பிடித்து இந்திரன் பொழிந்த கல்மழையிலிருந்து ஆயர்களைக் காத்த சரிதத்தைத் திருமங்கையாழ்வார் "கல்லெடுத்துக் கல் மாரி காத்தாய்" (திருநெடுந் தாண்டகம்-13) என்று அருளிச்செய்துள்ளார். **பராசர பட்டர்,** *"இந்திரன் கல் மழை பொழிந்தபடியாலே கண்ணபிரானும் கல்லை (மலையை) எடுத்துக் குடையாகப் பிடித்தான். இந்திரன் நீர் மழை பொழிந்திருந்தால் கண்ணனும் கடலை எடுத்துக் குடையாகப் பிடித்திருப்பான்போலும்!" என்றாராம்.*[2]

[13]

(ஆலத்திலையான் அரவினணை மேலான்) "ஆலன்று வேலைநீருள்ளதோ விண்ணதோ மண்ணதோ சோலை சூழ் குன்றெடுத்தாய் சொல்லு என்று பிரார்த்தித்துக் கேட்டார்" என்று ஆச்சான்பிள்ளை அருளிச்செய்தருளினார்.

(பெரியாழ்வார் திருமொழி 2-6-6 திருவாய்மொழிப்பிள்ளை வியாக்கியானம்)

நிகழிடம்

எம்பெருமான் "ஆலத்திலையான் அரவினணைமேலான்" (ஆலிலையில் துயில் கொண்டவன், ஆதிசேஷனைப் படுக்கையாக உடையவன்) என்று

1. எண் 498 பார்க்க

2. பட்டர் இப்படிக் கூறியமை மற்றோரிடத்திலும் காட்டப்பெற்றுள்ளது. எண் 299 பார்க்க.

பெரியாழ்வார் அருளிச் செய்கிறார். இதனை விளக்கும் உரையாசிரியர், பொய்கையாழ்வார் பாசுரம் ஒன்றை மேற்கோள் காட்டி ஆச்சான்பிள்ளை கூறிய **வார்த்தை** *ஒன்றையும் நினைவு கூர்கிறார்.*

விளக்கம்

பிரளயகாலத்தில் எல்லாப் பொருள்களையும் தனது திருவயிற்றுக்குள் வைத்துக்கொண்டிருந்து ஆலிலையில் எம்பெருமான் சயனித்துக் கொண்டமை பற்றிப் பொய்கை ஆழ்வார், 'பாலன்தனதுருவாய் ஏழுலகுண்டு ஆலிலையின் மேலன்று நீ வளர்ந்த மெய் என்பர் ஆலன்று வேலைநீருள்ளதோ விண்ணதோ மண்ணதோ சோலை சூழ் குன்றெடுத்தாய் சொல்லு' (சிறு குழந்தை வடிவாக நீ ஏழுலகங்களையும் உண்டு ஆலிலையின் மேல் கண்வளர்ந்தாய் என்பதை மெய் என்று கூறுகிறார்கள்; அந்த ஆலந்தளிர் கடலில் இருந்ததோ, ஆகாயத்தில் இருந்ததோ, அல்லது பூமியில் இருந்ததோ?) என்று எம்பெருமானைக் கேட்டார். (இதற்கு பட்டர் அளித்த நயமான விடையை எண் 389ல் காண்க). இக்கேள்வியை **(நாலூர்) ஆச்சான்பிள்ளை** *நினைவு கூர்ந்தமை எடுத்துக் காட்டப்பெறுகிறது.*

[14]

“ந கண்டகாரிகா புஷ்பம் (ந கண்ட₂காரிகா புஷ்பம்) என்றதும் பறிக்கிறவன் கையில் முள்பாயாமைக்கு” என்றிறே சீயருக்கு ப₄ட்டர் அருளிச்செய்கையாலே அவனுக்கு ஆகாதவையில்லை.

(பெரியாழ்வார் திருமொழி 2-7-10 திருவாய்மொழிப்பிள்ளை வியாக்கியானம்)

நிகழிடம்

“செண்பக மல்லிகையோடு செங்கழுநீர் இருவாட்சி எண்பகர் பூவும் கொணர்ந்தேன்” என்று பெரியாழ்வார் அருளிச்செய்துள்ளார். எம்பெருமானுக்கு ஆகாத பூவே இல்லை என்றுரைக்கின்ற உரையாசிரியர் இத்தொடர்பில் பட்டருக்கும் நஞ்சீயருக்கும் இடையே நடைபெற்ற **ஸம்வாதம்** *ஒன்றை எடுத்துக் காட்டுகிறார்.*

விளக்கம்

எண் 447ன் விளக்கம் காண்க.

[15]

பிள்ளை உறங்காவில்லி தா₃ஸர் இந்தப் பரிப₄வம் பொறுக்கமாட்டாமல், “எந்தக் கருங்காளுதினான்? எந்த மணிக்குழாயெடுத்தான்? இவனையே இதெல்லாம் சொல்லிற்று? கறப்பன கடைவனவெல்லாம் ஸ்வக்₃ருஹத்திலே உண்டாயிருக்க, விளைவதறியாமல் ஸ்வக்₃ருஹத்துக்கும் பரக்₃ருஹத்துக்கும் வாசி அறியாமல்

புகுந்தான். வெண்ணெயைத் தொட்டான், பாலைத் தொட்டான் என்றாப் போலே கதறுகிறதெல்லாம் என்தான்?" என்று பிள்ளைப் பிணங்கு பிணங்குவராம்.

(பெரியாழ்வார் திருமொழி 2-9-2 திருவாய்மொழிப்பிள்ளை வியாக்கியானம்)

நிகழிடம்

கண்ணபிரான் செய்த தீம்புகளைக் கோபிகைகள் யசோதையிடம் வந்து முறையிட, அவள் "அசலகத்தார் பரிபவம் பேசத் தரிக்ககில்லேன்" (அண்டை வீட்டார் உன்னைக் குறை கூறுவதை என்னால் தாங்கமுடியவில்லை) என்று கூறுவதாகப் பெரியாழ்வார் பாசுரம் அமைந்துள்ளது. இத்தொடர்பில் பிள்ளை உறங்காவில்லிதாஸர் பற்றிய **ஐதிஹ்யம்** *ஒன்று எடுத்துக்காட்டப்பெறுகிறது.*

விளக்கம்

கண்ணபிரான் திருடினான் என்று பிறர் குறை கூறுவதைப் பொறுக்கமாட்டாத **பிள்ளையுறங்காவில்லி தாஸர்**, *"கண்ணபிரான் எந்தப் பூட்டை உடைத்துவிட்டான்? எந்த மாணிக்கத்தைத் திருடிவிட்டான்? அவனைப் பற்றி இப்படியெல்லாம் குறை கூறுகிறார்களே! அவனுக்கே கறக்கவேண்டிய பசுக்களும் கடையவேண்டிய வெண்ணெயும் மிகுதியாகத் தன்வீட்டிலேயே இருக்கும்போது, ஏதோ தன் வீட்டிற்கும் பிறருடைய வீட்டிற்கும் வேறுபாடு தெரியாமலும், மேலே விளையப்போவது அறியாமலும் வேறொரு வீட்டில் புகுந்துவிட்டான். வெண்ணெயைத் திருடினான், பாலைத் திருடினான் என்று அவனைப் பற்றி ஏன் இப்படிக் கூசாமல் கூறுகிறார்கள்?" என்று சிறுபிள்ளையைப் போலப் புலம்புவராம்.*

[16]

பிள்ளை எங்களாழ்வார் கண்வளர்வதற்கு முன்னே ஜாக்₃ரத்ஸ்வப்நத்திலே சென்று "எனக்கு நாவற்பழம் கொண்டிடவேணும்" என்று ஒரு சிறுபிள்ளையாய்ச் சென்றுணர்த்த, அவர் கண்வளரப்புகுந்தவாறே, பலகாலும் உணர்த்திக் கண்வளரவொட்டாமையாலே ஒருகாலாக, "பிள்ளாய்! நீயார்?" என்ன, "நான் சீயர் மகன் ஆயர்தேவு" என்ன, அவரும் அவ்வளவிலே உணர்ந்து, "சீயரே! உம்முடைய மகன் என்னைக் குடியிருக்கவும் உறங்கவுமொட்டுகிறானில்லை" என்ற சேதிகளைக் அவரும் கேட்டருளி, திருப்பள்ளியறையிலே சென்று புக்கு, "நாயந்தே! இப்படிச் செய்கை கர்த்தவ்யமன்று" என்று போரநியமித்தார் என்று ப்ரஸித்₃த₄மிறே.

(பெரியாழ்வார் திருமொழி 2-9-10 திருவாய்மொழிப்பிள்ளை வியாக்கியானம்)

நிகழிடம்

"நல்லன நாவற்பழங்கள் கொண்டு நானல்லேன் என்று சிரிக்கின்றானே" என்று கண்ணபிரான் நாவற்பழங்களை விரும்பியுண்டமையைப் பெரியாழ்வார்

அருளிச்செய்கிறார். கண்ணபிரான் நாவற்பழங்களை மிகவும் விரும்பி யிருந்தமைக்கு ஓர் **ஐதிஹ்யம்** எடுத்துக் காட்டப்படுகிறது.

விளக்கம்

பிள்ளை எங்களாழ்வான் என்பவர் ஒருநாள் உறங்கச் சென்றபோது அவருக்கு நல்ல உறக்கம் வருவதற்குமுன்னே கனவில் சிறுபிள்ளை ஒருவன் வந்து "எனக்கு நாவற்பழம் தாரும்" என்று கேட்டானாம். அவர் அதைப் பொருட்படுத்தாமல் உறங்கப்புக, அவன் மறுபடியும் மறுபடியும் அவரிடம் வந்து நாவற்பழம் கேட்டுத் தொந்தரவு செய்து அவரை உறங்கவே விடவில்லை. அதனால் அவர் "குழந்தாய்! நீயார்?" என்று அவனைக் கேட்க, அச்சிறுவன் "நான் நஞ்சீயர் மகனான ஆயர்தேவு" என்றானாம். உடனே எங்களாழ்வான் நஞ்சீயரிடம் சென்று, "சீயரே! உம்முடைய மகன் என்னை வாழவிடமாட்டேன் என்கிறான். என்னைத் தூங்கவே விடுவதில்லை" என்று நடந்தவற்றைக் கூறினார். அதைக் கேட்ட **நஞ்சீயர்**, தம் திருவாராதனப் பெருமாளான ஆயர்தேவு எழுந்தருளியிருக்கும் அறைக்குச் சென்று, பெருமாளிடம் "இப்படியெல்லாம் செய்யக் கூடாது" என்று கடிந்து கொண்டாராம்.[1]

[17]

(பண்ணேர் மொழியாரைக் கூவி முளையட்டிப் பல்லாண்டு கூறுவித்தேன்)

....நம்பெருமாள் பெரிய திருநாளைக்குத் திருமுளை சாத்தும்போது, ஆழ்வார் திருவரங்கப்பெருமாளரையர், பிள்ளைதிருநறையூரரையர், ஆப்பான் திருவழுந்தூரரையர் முதலான தம்பிரான்மாரை அழைப்பித்து உகப்பித்துத் திருப்பல்லாண்டுபாட, அவர்களும் தாங்களுமாய் நம்பூர்வாசார்யர்கள் திருமுளை சாத்துமாயோலேயிறே.

(பெரியாழ்வார் திருமொழி 3-3-8 திருவாய்மொழிப்பிள்ளை வியாக்கியானம்)

நிகழிடம்

யசோதைபாவனையில் பாசுரம் அருளிச்செய்கின்ற பெரியாழ்வார், கண்ணபிரானுடைய பிறந்தநாளுக்காக, அழகிய மொழி உடையவர்களை அழைத்துத் திருமுளைசாத்தி, அவர்களைக் கொண்டு பல்லாண்டு கூறுவித்த தாகக் கூறுகிறார். உரையாசிரியர் திருவரங்கத்தில் பூர்வாசார்யர்களைப் பற்றிய **ஐதிஹ்யம்** ஒன்றை இங்கு எடுத்துக் காட்டுகிறார்.

விளக்கம்

நம்பெருமாளுடைய பெரியதிருநாளான பங்குனி ப்ரம்மோத்ஸவத்தின் போது, **ஆழ்வார் திருவரங்கப் பெருமாளரையர், பிள்ளை திருநறையூர் அரையர்,**

1. இவ்வைதிஹ்யம் மற்றோரிடத்திலும் இடம்பெற்றுள்ளது. எண் 319 பார்க்க.

ஆப்பான் திருவழுந்தூர் அரையர் முதலிய அரையர்களை அழைத்துவந்து அவர்களுக்குரிய மரியாதைகளைச் செய்து அவர்களை மகிழ்வித்து, அவர்களுடன் சேர்ந்து நம் பூர்வாசார்கள் திருமுளை சாத்துவதுபோல, யசோதையும் திருமுளை சாத்துகிறாள் என்கிறார் உரையாசிரியர். (உத்ஸவத்திற்காக அங்குரார்ப்பணம் செய்தல் அதாவது பாலிகை விதைத்தல் திருமுளைசாத்துதல் எனப்படும்.)

[18]

(வானிளவரசு) "திருவனந்தாழ்வான் மடியிலும் ஸ்ரீ ஸேநாபதியாழ்வான் பிரம்பின் கீழிலும், பெரிய திருவடி சிறகின் கீழிலுமாய்த்து இக்தத்வம் வளர்வது" என்றிறே ப$_4$ட்டர் அருளிச் செய்வது.

(பெரியாழ்வார் திருமொழி 3-6-2 மணவாளமாமுனிகள் வியாக்கியானம்)

நிகழிடம்

பரமபதத்தில் எழுந்தருளியிருக்கின்ற எம்பெருமானை 'வான் இளவரசு' என்கிறார் பெரியாழ்வார். இங்கு 'இளவரசு' என்ற சொல்லின் நயத்தை பட்டர் விளக்கிய **வார்த்தை** எடுத்துக் காட்டப்பெறுகிறது.

விளக்கம்

பரமபதநாதன், பரமபதத்தில் உள்ள நித்யசூரிகளில் முதல்வரான ஸ்ரீசேனாபதி ஆழ்வான் எனப்படுகின்ற விஷ்வக்ஸேனரிடம் உலகங்கள் அனைத்தையும் ஆளுகின்ற பொறுப்பை ஒப்படைத்துள்ளமையால் அரசுப் பொறுப்பற்ற இளவரசன், வயதில் மூத்த அமைச்சர்களாலும் சிற்றரசர்களாலும் வளர்க்கப்படுவது போலேயும், ஆசிரியருடைய பிரம்புக்கு அடங்கியிருக்கும் மாணவனைப் போலேயும் ஸ்ரீசேனாபதியாழ்வானுடைய பிரம்புக்கு அடங்கியும்,[1] பெரிய திருவடியான கருடனுடைய சிறகின் பாதுகாப்பான நிழலுக்கு கீழேயும்,[2] திருவனந்தாழ்வானது மடியிலும் அடங்கி சுகமாக இருப்பான் எம்பெருமான் என்று **பட்டர்** அருளிச்செய்வர்.[3]

1. ஸ்ரீசேனை முதலியாரது ஆணைக்கு எம்பெருமான் கட்டுப்பட்டிருத்தலை பட்டர் விவரித்துள்ளமை பற்றி எண் 811ல் காண்க.
2 'வினதைசிறுவன் சிறகென்னும் மேலாப்பின் கீழ்வருவானை' என்று ஆண்டாள் (நாச்சியார் திருமொழி 14-3) அருளிச்செய்துள்ளமை காண்க.
3. ஆளவந்தார் அருளிச் செய்த ஸ்தோத்தர ரத்னத்தில் 40, 41, 42 ஆகிய சுலோகங்களில் இக்கருத்து குறிப்பால் தெரிவிக்கப்பட்டுள்ளது காண்க.

பட்டர் இவ்வாறு அருளிச்செய்தமை மற்றும் இரண்டு இடங்களில் குறிப்பிடப்பெற்றுள்ளது. எண் 155, 203 காண்க.

Released by Maaran's Dog ,Toronto , Canada

[19]

தே₃ஹேந்த்₃ரியங்களைப்பற்றி வருகிற ஆஹாரஸௌஷ்டவப்ராவண்யம் கழிகை அரிதிறே. இதுக்குப் பெரியவாச்சான்பிள்ளை "இவ்வந்யஶேஷத்வம் கழிவதென்?" என்று அருளிச்செய்தார். வடக்குத்திருவீதிப்பிள்ளையும், "இந்த்₃ரிய கிங்கரத்வமும் சேரவந்ததே!" என்றுமருளிச்செய்தாரிறே.

(பெரியாழ்வார் திருமொழி 3-6-9 திருவாய்மொழிப்பிள்ளை வியாக்கியானம்)

நிகழிடம்

கண்ணபிரானுடைய குழலோசையைக் கேட்ட மான்கூட்டங்கள், மேய்கையையும் மறந்து, அசைவற்று நின்றுவிட்டன என்கிறார் பெரியாழ்வார். இதற்கு ஸ்வாபதேசம் கூறுகின்ற உரையாசிரியர், ஆசார்யன் உபதேசத்தால் சிஷ்யனுக்கு ஞானம் ஏற்பட்டு உலக விஷயங்களிலும் ஈடுபாடு நீங்குகிறது என்றுரைத்து, முடிவில், உணவில் உள்ள ஆசை நீங்குவது மிகமிகக் கடினம் என்றுரைக்கிறார். இதற்குச் சான்றாக, பெரியவாச்சான்பிள்ளை வடக்குத் திருவீதிப்பிள்ளை ஆகிய இருவரும் கூறிய **வார்த்தை***களைக் காட்டுகிறார்.*

விளக்கம்

"உணவிற்கு அடிமைப்பட்டிருத்தலாகிய அந்யசேஷத்வம் இந்த ஜீவாத்மாவுக்குக் கழிவது எப்போதோ?" என்று பெரியவாச்சான்பிள்ளை கூறுவராம். "உணவுக்கு மட்டுமல்லாமல், இந்திரியங்களுக்குமன்றோ இவன் அடிமைப்பட்டுள்ளான்!" என்று வடக்குத்திருவீதிப்பிள்ளை கூறுவராம்.

[20]

(திருமால் நின்ற நின்ற பக்கம் நோக்கி அவை செய்யும் குணமே) பிள்ளைலோகாசார்யர், பெருமாள் 'உம்மோடு அந்வயமுடையார்க்கெல்லாம் நாம் வீடு கொடுக்கக் குறையில்லை' என்று திருவுள்ளமானபின்பு, தூ₃ரஸ்த₂மான வ்ருக்ஷங்களையெல்லாம் கடாக்ஷிப்பது, ஆஸந்நமான வ்ருக்ஷங்களையெல்லாம் திருக்கைகளாலே ஸ்பர்ஶநாதி₃களை உண்டாக்குவது, நித்ய ஸம்ஸாரிகளுக்கும் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கும் தம்மோடே அந்வயமுண்டாம்படி செய்தருளினார் என்று ப்ரஸித்₃த₄மிறே.

(பெரியாழ்வார் திருமொழி 3-6-11 திருவாய்மொழிப்பிள்ளை வியாக்கியானம்)

நிகழிடம்

கண்ணபிரான் குழலோசையைக் கேட்ட மரங்களிலிருந்து தேன் பெருகும்; அம்மரங்கள் கண்ணபிரான் நின்ற பக்கமாகச் சாயும் என்று பெரியாழ்வார் அருளிச்செய்துள்ளார். 'ஆசார்யனுடைய வசனம் கேட்டவாறே மரங்கள் முதலிய

Released by Maaran's Dog ,Toronto , Canada

பொருள்களும் உருகும்' என்று இதற்கு ஸ்வாபதேசம் அருளிச்செய்த உரையாசிரியர், பிள்ளைலோகாசார்யருடைய கடாக்ஷத்தால் மரங்களும் பேறு பெற்ற **ஐதிஹ்யம்** *ஒன்றை எடுத்துக் காட்டுகிறார்.*

விளக்கம்

நம்பெருமாள் பிள்ளைலோகாசாரியருக்கும் அவரோடு தொடர்பு உடையவை அனைத்திற்கும் வீடுபேறு அருளுவதாகக் கூறியபின்னர், **பிள்ளை லோகாசாரியர்,** *அருகிலிருந்த மரங்களையெல்லாம் தன்கைகளால் தடவியும், தூரத்திலிருந்த மரங்களைத் தன் கண்களால் நோக்கியும், சாதாரண மனிதர்களையும் ஸ்ரீவைஷ்ணவர்களையும் கடாக்ஷித்தும், தம்மோடு மரங்களுக்கும் மனிதர்களுக்கும் ஒரு தொடர்பு உண்டாகும்படி செய்து, வீடுபேறு அடையும்படி செய்தாராம்.*

[21]

"இம்மணக்கோலம் பிணக்கோலமாகிறதென்றிறே இவள் நினைத்திருப்பது" என்று நாலூர்பிள்ளை அருளிச்செய்தாராக ஆச்சான் பிள்ளை அருளிச்செய்வர்.

(பெரியாழ்வார் திருமொழி 3-7-8 திருவாய்மொழிப்பிள்ளை வியாக்கியானம்)

நிகழிடம்

"காறைபூணும் கண்ணாடி காணும் தன்கையில் வளைகுலுக்கும் கூறை உடுக்கும்" என்று, எம்பெருமான் வரவுக்காகத் தன்னை அலங்கரித்துக் கொண்டிருக்கும் தன்மகளைப்பற்றித் தாயார் கூறுவதாகப் பெரியாழ்வார் பாசுரம் அமைந்துள்ளது. இத்தொடர்பில் நாலூர்பிள்ளை அருளிச்செய்த **வார்த்தை** *ஒன்று எடுத்துக் காட்டப்பெறுகிறது.*

விளக்கம்

நாயகி தன்னை இப்படி அலங்கரித்துக்கொண்டிருக்கச் செய்தேயும் நாயகனான எம்பெருமான் வந்திலனாகில், இவ்வலங்காரம் என்னாவது என்ற கேள்விக்கு, "இவள் தன்னுடைய மணத்திற்காக அலங்கரித்துக் கொண்ட கோலம் அவன் வந்திலனாகில், பிணத்திற்குச் செய்தகோலம் போல் வீணாகிவிடும்" என்று **நாலூர்பிள்ளை** *அருளிச்செய்வர் என்று அவருடைய திருக்குமாரரும் சீடருமான* **நாலூராச்சான்பிள்ளை** *அருளிச்செய்வராம்.*

[22]

"இவள்தான் அமுதுபடி திருத்துவது, சாத்துப்படி திருத்துவதாகா நின்றாள்" என்று பிள்ளை அருளிச்செய்வர்.

(பெரியாழ்வார் திருமொழி 3-7-8 திருவாய்மொழிப்பிள்ளை வியாக்கியானம்)

நிகழ்டம்

எம்பெருமான் வரவுக்காகத் தன் மகள் தன்னை அலங்கரித்துக் கொள்வதைக் கூறுகின்ற திருத்தாயார், "காறைபூணும் கண்ணாடி காணும் தன் கொவ்வைச் செவ்வாய் திருத்தும்" (ஆபரணங்களை அணிந்து கொள்கிறாள், கண்ணாடியைக் காண்கிறாள், தன் அதரங்களை அலங்கரிக்கிறாள்) என்பதாகப் பெரியாழ்வார் அருளிச் செய்கின்றார். இதுகுறித்து நாலூர்பிள்ளை அருளிச்செய்த **வார்த்தை** *எடுத்துக்காட்டப்பெறுகிறது.*

விளக்கம்

நாயகியின் செயலை விளக்கும் நாலூர்பிள்ளை, "எம்பெருமானுடைய அமுதுபடி (உணவு) சாத்துப்படி (சந்தனம்) களை இவள் திருத்துகிறாள்" என்று அருளிச்செய்வராம். அதாவது, எம்பெருமானுக்கு இவளுடைய அதரங்களே உணவாகவும், இவளுடைய உடலே சந்தனமாகவும் இருக்கின்றமையால் அவற்றை அலங்கரிக்கிறாள் என்ற கருத்தில் இவ்வாறு அருளிச் செய்தார்.

[23]

ஆழ்வான் திருநாட்டுக்கு எழுந்தருளினபோது உடையவர் விஶ்லேஷம் பொறுக்க முடியாமல் "ஒருமகள் தன்னையுடையேன்" என்றும், "உலகம் நிறைந்த புகழால் திருமகள் போல வளர்த்தேன்" என்றும், "செங்கண்மால்தான் கொண்டு போனான்" என்றும் அருளிச் செய்தார் என்று ப்ரஸித்$_{3}$த$_{4}$மிறே. "उपमानमशेषाणां साधूनां यस्सदा भवत्" (உபமாநமஶேஷாணாம் ஸாது$_{4}$நாம் யஸ் ஸதா$_{3}$ ப$_{4}$வத்) என்கிறபடியே ஸாது$_{4}$க்களுக்கெல்லாம் உபமாநமாகச் சொல்லலாம்படி இருக்கையாலே உலகம் நிறைந்த புகழுள்ளது ஆழ்வானுக்கேயிறே.

(பெரியாழ்வார் திருமொழி 3-8-4 மணவாளமாமுனிகள் வியாக்கியானம்)

நிகழ்டம்

கண்ணபிரானுடைய எல்லாச் சரித்திரங்களையும் வரிசையாக அனுபவித்த பெரியாழ்வார் மற்ற ஆழ்வார்களைப் போலவே எம்பெருமானைத் தாமும் அடைந்து அனுபவிக்க விரும்பினார். உடனே அவ்வனுபவம் கிடைக்காமையினால் ஆற்றாமை அதிகமாகி ஆண் தன்மை நீங்கிப் பெண் தன்மையை அடைந்தார். அப்போது தாம் படும் பாட்டையும் தம் வாயால் சொல்லச் சக்தி அற்றவராய்த் தம்முடைய நிலையைத் தம் தாயார் பேசும் பேச்சாகப் பல பாசுரங்களை அருளிச் செய்துள்ளார். இரவில் படுக்கையில் படுத்திருந்த பெண்ணைத் தாயான தனக்குத் தெரியாத வண்ணம் எம்பெருமான் அழைத்துக் கொண்டு போய்விட, அப்போது தாயார் பெண்ணை நினைத்து வருந்துகிற போது:- 'ஒரு மகள் தன்னை உடையேன் உலகம் நிறைந்த புகழால் திருமகள் போல வளர்த்தேன் செங்கண்மால்தான் கொண்டு போனான்' (ஒரே ஒரு பெண்ணை

உடைய நான், உலகம் நிறைந்த புகழுண்டாம்படி திருமகளைப் போல அவளை வளர்த்தேன்; அப்படிப்பட்ட என் அருமையான பெண்ணை செங்கண்மால் அழைத்துக் கொண்டு போய்விட்டானே!) என்று தாய் வருந்துவதாகப் பாசுரம் உள்ளது. இதேபாசுரத்தைக் கூரத்தாழ்வான் விஷயமாக உடையவர் அருளிச்செய்த **ஐதிஹ்யம்** ஒன்றை உரையாசிரியர் காட்டுகிறார்.

விளக்கம்

உடையவர் தமது அன்புக்குக் கொள்கலமான சீடரான கூரத்தாழ்வானை இழக்க நேர்ந்தபோது இந்தப் பாசுரத்தைச் சொல்லி வருந்தி அழுதார் என்பது மிகவும் பிரசித்தமானது. ஸ்ரீராமனுஜருக்குச் சீடர்கள் பலர் இருந்தாலும் **கூரத்தாழ்வான்** மீது அவருக்குண்டான அன்பு மிக மிக அதிகமானது.[1] எனவேதான் அவர் 'ஒரு மகள் தன்னையுடையேன்' என்று கூறி அழுதார்.[2] உலகம் நிறைந்த புகழ் உள்ளதும் கூரத்தாழ்வான் ஒருவருக்கே. ஏனெனில் "உபமானம் அசேஷாணாம் ஸாதூநாம் யஸ்ஸதாபவத்"[3] (ஸாதுக்களுக்கெல்லாம் எப்போதும் எடுத்துக் காட்டாக யாவனொருவன் திகழ்ந்தானோ) என்று கூறப் பட்டுள்ளபடி திகழ்ந்த பெருமை கூரத்தாழ்வான் ஒருவர்க்கே உரியது.[4] "மொழியைக் கடக்கும் பெரும்புகழான் . . . நம் கூரத்தாழ்வான்" என்கிற இராமானுச நூற்றந்தாதிப் பாசுரம் (7) நினைவு கூரத்தக்கது.

1. உடையவருக்குக் கூரத்தாழ்வான்மீதுள்ள மிகுந்த அன்பிற்கு எடுத்துக் காட்டாக எண் 385 பார்க்க.

2. இங்குப் பாசுரமானது, ''ஒரு மகள் தன்னையுடையேன் உலகம் நிறைந்த புகழால் திருமகள் போல வளர்த்தேன் செங்கண்மால்தான் கொண்டு போனான்'' என்று தொடர்ச்சியாக இருக்கிறது. ஆனால் மேலேகுறிப்பிட்டுள்ள ஐதிஹ்யத்தில் உடையவர் 'ஒருமகள் தன்னையுடையேன்' என்றும், 'உலகம் நிறைந்த புகழால் திருமகள் போல வளர்த்தேன்' என்றும், 'செங்கண்மால்தான் கொண்டு போனான்' என்றும் அருளிச் செய்தார் என்று மூன்று இடங்களில் இடையிடையே என்றும் என்றும் என்றும் என்று வியாக்யானத்தில் மணவாள மாமுனிகளால் எடுத்துக் காட்டப் பெற்றிருக்கிறது. எனவே கூரத்தாழ்வானைப் பிரிந்த வருத்தத்தினால் தொடர்ச்சியாகப் பாசுரத்தைச் சொல்ல முடியாத உடையவர், ஒரு வாக்கியத்தைச் சொல்லிவிட்டுச் சிறிது நேரம் அழுது கண்ணீர் வடித்துவிட்டு, அடுத்த வாக்யத்தைக் கூறியிருக்கிறார்; மீண்டும் சிறிது அழுத பிறகு அடுத்த வாக்கியத்தைக் கூறியிருக்கிறார்; அந்த அளவுக்கு துக்கம் தொண்டையை அடைத்திருக்கிறது என்பது மாமுனிகள் வியாக்யானத்தால் உணர்த்தப்படுகிறது என்று ஸ்ரீ உ.வே. பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியர் ஸ்வாமி கூறுவார்.

3. தர்மாத்மா ஸத்யசௌசாதி குணாநாமாகர: பர:
உபமாநமசேஷாணாம் ஸாதூநாம் யஸ்ஸதாபவத்

(தர்மாத்மாவாகவும், உண்மை நல்லொழுக்கம் முதலிய நற்குணக் கடலாகவும், சாதுக்களுக்கெல்லாம் எப்போதும் உதாரணமாக யாவனொருவன் இருந்தானோ) - என்று பிரஹ்லாதனைப் பற்றி ஸ்ரீவிஷ்ணு புராணத்தில் (1-15-156) குறிப்பிடப்படுகிறது.

4. இதற்குச் சான்றாகப் பல நிகழ்ச்சிகளைக் குறிப்பிடலாம். (எண் 180, 265, 268, 738 முதலியன காண்க.)

[24]

'மானமருமென்னோக்கி' என்கிற திருமொழியிலே, "இரண்டு பிராட்டிமார் தசைகளை ஏக காலத்திலே கூடும்படியென்?" என்று சீயர் பட்டரைக் கேட்க, "தேஶ விஶேஷத்தில் அநேக ஶரீர பரிக்ரஹம் ஏக காலத்தில் கூடுகிறபடி எங்ஙனே? அப்படியே இவரையும் பார்த்தருளினால் கூடும்!" என்றருளிச் செய்தாரென்று ப்ரஸித்தமிறே.

(பெரியாழ்வார் திருமொழி 3-9 ப்ரவேசம்)

நிகழிடம்

கண்ணபிரானுடைய சரிதங்களையெல்லாம் அனுபவித்த பெரியாழ்வார், ராமனையும் கண்ணனையும் சேர்த்து அனுபவிக்க ஆசைப்பட்டு, 'என்னாதன் தேவிக்கு' என்கிற திருமொழியில் இரண்டு பெண்களின் நிலையைத் தாம் ஒருவரே அடைந்து, ஒருத்தி ராமாவதாரத்தைப்பாடுவதாகவும், மற்றொருத்தி கிருஷ்ணாவதாரத்தைப் பாடுவதாகவும் பாசுரங்கள் அருளிச் செய்கிறார். இப்பாசுரங்களுக்கு உரையருளுகின்ற மணவாளமாமுனிகள், 'ஆழ்வார் ஒருவரே ஒரே சமயத்தில் இருபெண்களின் நிலையை எப்படி அடைய முடியும்?' என்று திருமங்கையாழ்வாருடைய பதிகம் ஒன்றைப் பற்றி நஞ்சீயர் கேட்க அதற்கு பட்டர் விடையளித்த **ஸம்வாதம்** *ஒன்றை இங்கே எடுத்துக் காட்டுகிறார்.*

விளக்கம்

திருமங்கையாழ்வாரும் இதே போல் ஒரே சமயத்தில் பெண்கள் இருவருடைய நிலையை அடைந்து 'மானமருமென்னோக்கி' என்று ஒரு பதிகம் (பெரிய திருமொழி 11.5) அருளிச்செய்துள்ளார். "ஒரே சமயத்தில் இரண்டு பேருடைய நிலையை ஒருவர் எப்படி அடைய முடியும்?" என்று **நஞ்சீயர்** *பட்டரைக் கேட்டார். அதற்கு* **பட்டர்**, *"பரமபதத்திற்குப் போனால் ஒருவன் எத்தனை சரீரம் வேண்டுமானாலும் எடுத்துக் கொண்டு, பகவானுக்குப் பல கைங்கர்யங்கள் செய்யலாம் என்று சாஸ்த்ரங்கள் சொல்கின்றனவே;[1] அது மட்டும் எப்படி கூடும்? அது எம்பெருமானுடைய அருளாலே கூடும் என்றுதானே சமாதானம் சொல்லப்படுகிறது. அதேபோல் எம்பெருமான் ஆழ்வாரையும் பார்த்து அருளினால் இவ்வுலகிலேயே ஆழ்வார் இருவருடைய நிலையை ஒரே சமயத்தில் அடைய முடியாதோ?" என்று பதிலளித்தார்.[2]*

1. ஒருவன் பரமபதத்திற்குப் போனால் பல கைங்கர்யங்களையும் ஒரே சமயத்தில் செய்வதற்காக பல உடல்களையும் உருவங்களையும் கொள்ளலாம். அங்கேயுள்ள நித்யஸூரிகளும், முக்தர்களும் பல உடல்களைக் கொள்வார்கள் என்று உபநிஷத்துக்கள் கூறுகின்றன. "ஸ ஏகதா பவதி, த்விதா பவதி" என்று சாந்தோக்ய உபநிஷத் கூறுகிறது.

2. எண் 288 பார்க்க.

[25]

முற்பட்ட யோஜநை நாலூர் பிள்ளையிட்டருளின வ்யாக்₂யானப்ரக்ரியை. பிற்பட்ட யோஜநை பிள்ளையிட்டருளின வ்யாக்யானப்ரக்ரியை. முற்பட்ட யோஜநையில் சென்று 'வனம்போகே' என்கிறவிதுக்கு ஸ்வரஸம் ஸித்₃தி₄க்கையும், 'கூற்றுத்தாய் சொல்லக் கொடிய வனம் போன' இது, 'தண்டகம் நூற்றவள் சொற்கொண்டு போகி' என்றும், 'குலக்குமரா காடுறையப் போவென்று விடை கொடுப்ப இலக்குமணன் தன்னோடுமங்கேகியது' என்றும், 'கொடியவள்வாய்க் கடிய சொற் கேட்டுக் கான் தொடுத்த நெறி போகி' என்றும் கீழ் மேல் அருளிச் செய்தவற்றுக்குச் சேர்ந்திருக்கையுமுண்டு. ஸம்ப்ரத₃ாயத்திலும் வந்தால் நம்பிள்ளை ஸ்ரீபாதத்திலே கேட்ட சிறியாழ்வானப்பிள்ளை குமாரர் பக்கலிலே கேட்ட நாலூர் பிள்ளையருளிச் செய்ததாகையாலே வந்த ப்ராப₃ல்யமுண்டு. அவர்தாம் ஆச்சான்பிள்ளை திருத்தகப்பனாராகையாலே பிள்ளைக்குப் பரமாசார்யருமிறே. ஆகையாலே அந்த யோஜநை முற்பட எழுதி, பிள்ளையருளிச் செய்த யோஜநை பிற்பட எழுதப்பட்டது.

(பெரியாழ்வார் திருமொழி 3-9-4 மணவாளமாமுனிகள் வியாக்கியானம்)

நிகழிடம்

ராமபிரான் கானகம் சென்றதைப் பற்றிய பெரியாழ்வார் பாசுரம் :

மாற்றுத்தாய் சென்று வனம்போகே என்றிட
ஈற்றுத்தாய் பின்தொடர்ந்து எம்பிரானென்றழக்
கூற்றுத்தாய் சொல்லக் கொடிய வனம் போன
சீற்றமிலாதான்

இப்பாசுரத்திற்கு உரையிடும் மணவாள மாமுனிகள், தயரதன் மனைவியர் மூவரையும் குறிக்கும் சொற்களான 'மாற்றுத்தாய்' - 'ஈற்றுத்தாய்' - 'கூற்றுத்தாய்' என்பனவற்றிற்கு **நிர்வாஹங்கள்** *இரண்டைத் தமது உரையில் காட்டுகிறார்.*

விளக்கம்

'மாற்றுத்தாய்' என்பது ராமபிரானுக்கு மற்றொரு தாயான சுமித்ரையையும், 'ஈற்றுத்தாய்' என்பது ஈன்ற தாயான கௌசல்யையையும், 'கூற்றுத்தாய்' என்பது மனத்தில் சிறிதும் இரக்கமில்லாத கூற்றத்தை (யமனை)ப் போல் இராமபிரானைக் காட்டிற்குப் போகச் சொன்ன கைகேயியையும் குறிக்கிறது என்பது முதல் வகை விளக்கம். இது நாலூர்பிள்ளை என்பவர் அருளிச் செய்த விளக்கம் என்று *காட்டுகிறார் மாமுனிகள்.*

இனி இரண்டாவது வகை விளக்கமாவது: 'மாற்றுத்தாய்' என்பது ராமனைக் கொடுமைக்குள்ளாக்கின மாற்றாந் தாயான கைகேயியையும்,

ஈற்றுத்தாய் என்பது ஈன்றெடுத்த தாயான கௌசல்யையையும், கூற்றுத்தாய் என்பது கூறுபட்ட ஹவிஸ்ஸை உண்ட தாயான சுமித்ரையையும் குறிக்கின்றது. இந்த விளக்கம் திருவாய்மொழிப்பிள்ளை அருளிச்செய்தது என்று குறிப்பிடுகின்றார் மணவாளமாமுனிகள்.

'மாற்றுத்தாய் சென்று வனம் போகு' என்று பாசுரத்தில் உள்ளதால், "என் பிள்ளைக்கு ராச்சியம் வேண்டும் என்று ஒரு பெண்ணான கைகேயி பறித்துக் கொண்ட ராச்சியம் உமக்கு (இராமனுக்கு) வேண்டாம்; ஒருவரும் விரும்பாத கானகமே உமக்குச் சிறந்தது; எனவே நீர் கானகத்திற்கே செல்வீராக!" என்று சுமித்திரை இராமனைப் பார்த்துக் கூறியதாகக் கொண்டால், 'மாற்றுத்தாய்' என்பது சுமித்ரையையே குறிக்கும் என்பது நன்கு பொருந்திவிடுகிறது.[1]

'கூற்றுத்தாய் சொல்லக் கொடிய வனம் போன' என்று பாசுரத்தில் உள்ளதால், சிறிதும் இரக்கம் இல்லாத எமனுக்கு ஒப்பானவளான கைகேயியின் சொற்படி இராமன் வனம் போனான் என்பதும் சரியாகப் பொருந்தி விடுகிறது. மேலும் இப்பெரியாழ்வாரே, 'தண்டகம் நூற்றவள் சொற்கொண்டு போகி' (3.9.8) (இராமனை காட்டிற்கு அனுப்பக் கடவோம் என்ற எண்ணம் கொண்ட கைகேயியினுடைய சொல்லை ஏற்றுக் கொண்டு தண்டகவனம் போய்) என்றும், 'கைகேசி.......... குலக்குமரா காடுறையப் போவென்று விடை கொடுப்ப

1. சுமித்திரையை மாற்றுத்தாய் என்று கொண்டாலும் சரி, அல்லது கூற்றுத்தாய் என்று கொண்டாலும் சரி, 'மாற்றுத்தாய் வனம் போகே என்றிட' என்றும், 'கூற்றுத்தாய் சொல்ல' என்றும் பாசுரம் இருப்பதால் இராமபிரானை வனத்திற்குப் போகும்படி சுமித்திரை சொன்னதாகக் கொள்ள வேண்டும். ஆனால் வான்மீகி ராமாயணத்தில், சுமித்திரை இராமனை வனம்போகும்படி சொன்னதாக இல்லை. எனவே இங்கு மணவாள மாமுனிகள் தமது உரையில்,

> "இரண்டு யோஜனைகளிலும், ஸௌமித்ரையார் பெருமாள் முகம் பார்த்து சொன்னதாகச் சொல்லப்பட்ட வசனம் ஸ்ரீராமாயணத்தில் இல்லையேயாகிலும், இதிஹாஸ புராணாந்தராதிகளிலேயாதல், கல்பாந்தரத்திலேயாதல் உண்டென்று கொள்ளவேணும், மயர்வற மதிநலமருளப்பெற்ற இவர் இப்படி அருளிச் செய்கையாலே!"

என்று அருளிச் செய்துள்ளது குறித்துக் கொள்ளத்தக்கது.

ஆனால் சுமித்திரை ராமனைக் குறித்து வனம்போகச் சொன்னதாக இல்லாவிட்டாலும் லக்ஷ்மணனை நோக்கி, "ஸ்ருஷ்டத்வம் வநவாஸாய" (ரா.அ.8-5) ("நீ வனவாசத்திற்காகவே என்னால் பெறப்பட்டிருக்கிறாய்") என்றும், "அயோத்யாமடவீம் வித்தி கச்சதாத யதாஸுகம்" (ரா.அ.40-6)("வனத்தையே அயோத்தியாக நினைத்துக் கொண்டு சுகமே செல்வாயாக") என்றும் கூறியதாகக் காண்பதானால் 'மாற்றுத்தாய் சென்று வனம் போகே' என்று இலக்குவனை நோக்கிக் கூறியதாகக் கொள்ளலாம். 'வனம் போகே' என்பதில் உள்ள ஏகாரத்தைப் பிரித்துக் கூட்டி, 'வனமே போகு' என்றாகி வனத்திற்கே போய் ஆக வேண்டும் என்று வற்புறுத்தும் வகையில் அமைந்திருப்பதால், லக்ஷ்மணனை ராமனுக்குத் துணையாக வனம் போகுமாறு சுமித்திரை பணித்ததற்கு மிகவும் பொருத்தமாக வுள்ளது.

இலக்குமணன் தன்னொடும் அங்கேகியது' (3.10.3) (கைகேயியானவள் "குலக்குமரனே! காட்டிலே வசிப்பதற்காகப் போவாயாக!" என்று விடை கொடுக்க இலக்குமணனோடு அங்குச்சென்றது) என்றும், 'கொடியவள்வாய்க் கடிய சொல் கேட்டுக் கான் தொடுத்த நெறி போகி' (4.8.4) (மிகவும் கொடியவளான கைகேயியின் வாயிலிருந்து எழுந்த சொல்லைக் கேட்டு வனத்திற்குச் சென்று) என்றும் அருளிச் செய்துள்ளமையால், கைகேயியை மிகக் கொடியவள் என்றும், அவளுடைய சொற்களினாலேயே இராமபிரான் வனம் போக நேர்ந்தது என்றும் பெரியாழ்வார் கருதியுள்ளார் என்பது புலப்படுகிறது. எனவே கூற்றுத்தாயான கைகேயி சொல்லக் கொடியவனம் போன என்பது நன்கு பொருந்துகிறது (எனவே நாலூர்பிள்ளை அருளிய நிர்வாஹமே பொருத்தமுடையது) என்கிறார் மணவாளமாமுனிகள்.

ஆனால் மணவாளமாமுனிகள் தமக்கு நேரே ஆசார்யரான திருவாய்மொழிப்பிள்ளையின் கருத்தை முதலில் கூறாமல், நாலூர்பிள்ளையின் கருத்தை முதலில் கூறியதற்கும் மாமுனிகளே காரணத்தைக் கூறுகிறார்.

ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தில் வந்த ஆசார்ய பரம்பரையில் **நம்பிள்ளை** என்பவர் மிகவும் புகழ் பெற்றவர். அவருடைய சீடர் ஈயுண்ணி மாதவப் பெருமாள் என்கிற **சிறியாழ்வானப்பிள்ளை**; அவருடைய குமாரரும் சீடருமானவர் **பத்மநாபப் பெருமாள்**; அவருடைய சீடர் **நாலூர்பிள்ளை** என்று இப்படி வழிவழியாக ஆசார்ய பரம்பரையிலே வந்த நாலூர்பிள்ளை அளித்த விளக்கமாகையாலே முதல்வகை விளக்கத்திற்குப் பெருமையுண்டு. மேலும் அந்த நாலூர்பிள்ளையின் குமாரரான நாலூராச்சான் பிள்ளையிடம் திருவாய்மொழிப்பிள்ளை ஈடுமுப்பத்தாறாயிரப்படி காலக்ஷேபம் கேட்டபடியால், **நாலூராச்சான்பிள்ளை** திருவாய்மொழிப்பிள்ளைக்கு ஆசார்யர் ஸ்தானத்திலுள்ளவர். எனவே இரண்டாம் வகை விளக்கமளித்த திருவாய்மொழிப் பிள்ளைக்கு, முதல் வகை விளக்கமளித்த நாலூர்பிள்ளை பரமாசார்யர் ஆகிறார்.[1] எனவே திருவாய்மொழிப்பிள்ளைக்கும் கூட, தமது விளக்கத்தைவிட தமது பரமாசார்யரான நாலூர்பிள்ளை அருளிச் செய்த விளக்கமே மிகவும் உகப்புகிலக்காக இருக்கும். எனவேதான் அந்த விளக்கம் முதலில் கூறப்பட்டுப் பிறகு திருவாய்மொழிப் பிள்ளையின் விளக்கம் கூறப்பட்டது என்கிறார் மணவாளமாமுனிகள்.

1. நம்பிள்ளையின் சிஷ்ய பரம்பரைகள் வந்தவிதத்தை மணவாளமாமுனிகள் உபதேசரத்தினமாலையில் இரண்டு பாசுரங்களில் (48, 49) அருளிச்செய்துள்ளார். இப் பாசுரங்களுக்குப் பிள்ளைலோகம் ஜீயர் அருளியுள்ள உரையில் விவரங்கள் காணத்தக்கன. யதீந்த்ரப்ரவணப்ராபவம் என்ற நூலிலும் இவ்விவரங்கள் காணலாம்.

[26]

(ஆழிகொண்டு அன்று இரவி மறைப்ப) நிரவதிக தேஜோரூபமான திருவாழியாலே ஆதித்யனை மறைத்தால் லோகத்துக்கு மிகவும் வெளிச்செறிப்பு உண்டாமத்தனை யன்றோ! ஆதித்யன் அஸ்தமித்தான் என்று கண்ணுக்குத் தோற்றுவானென் எனில் இந்த ஆதித்யனுடைய தேஜஸ்ஸு கண்ணாலே முகக்கலாம்படி அளவுபட்டிருக்கையாலே தமஸ்ஸு போம்படியாயிருக்கும். அங்ஙனன்றிக்கே திருவாழியாழ்வானுடைய தேஜஸ்ஸு நேர்கொடுநேர் கண்கொண்டு பார்க்கவொண்ணாதபடி மிக்கிருக்கையாலே பளபளத்துக் கண்ணை இருளப் பண்ணிற்று. இதுதான் 'ஆழியால் அன்றங்காழியை மறைத்தா(ர்)' என்கிற இடத்திலே பூர்வர்கள் அருளிச் செய்தார்களிறே.

(பெரியாழ்வார் திருமொழி 4-1-9 மணவாளமாமுனிகள் வியாக்கியானம்)

நிகழிடம்

"ஆழிகொண்டன்றிரவி மறைப்பச் சயத்திரதன் தலையை பாழிலுருளப் படைபொருதவன் பக்கமே கண்டாருளர்" என்று பெரியாழ்வார் அருளிச்செய்துள்ளார். அர்ஜுனன், தன் மகன் அபிமன்யு கொலையுண்பதற்குக் காரணமான ஜயத்ரதனை மறுநாள் மாலை சூரியன் அஸ்தமிப்பதற்குள் கொன்று விடுவதாக சபதம் செய்கிறான். ஆனால் ஜயத்ரதன் சூரியாஸ்தமனம் வரை ஒளிந்து கொண்டிருந்து விட்டால் தன்னை அர்ஜுனன் கொல்ல முடியாது என்றெண்ணி மறைந்து கொண்டு விட, கண்ணபிரான் சூரிய அஸ்தமனத்திற்குச் சில நாழிகைகள் முன்பே தன்னுடைய சக்கராயுதத்தைப் பிரயோகித்து சூரியனை மறைத்து விட, சூர்யாஸ்தமனம் ஆகிவிட்டது என்று எண்ணி ஜயத்ரதன் வெளியே வர, உடனே கண்ணபிரான் சக்கராயுதத்தை மறுபடி விலக்கிக் கொள்ள, அர்ஜுனன் சூர்யாஸ்தமனம் ஆகவில்லை என்று உணர்ந்து கொண்டு ஜயத்ரனைக் கொன்று விடுகிறான். இது மகாபாரதத்தில் உள்ள நிகழ்ச்சியாகும்.[1] இந்நிகழ்ச்சி பற்றி ஓர் ஐயமும் அதற்கு விடையும் கூறப்படுகிறது.

விளக்கம்

பகவானுடைய சக்கராயுதமோ கோடி சூரியர்களுக்கு ஒப்பான ஒளியுள்ளது. அப்படிப்பட்ட ஒளியுள்ள சக்கராயுதத்தைக் கொண்டு சூரியனை மறைத்தால் இன்னும் ஒளி அதிகமாகத் தெரியுமே தவிர, சூரியன் மறைந்தது போன்ற (இருட்டு) தோற்றம் எப்படி உண்டாகும் என்ற ஐயம் எழுகின்றது. இதற்கு விடை: சூரியனுடைய ஒளி, கண்ணாலே பார்க்கும்படியாக ஓரளவுபட்டிருப்பதால் உலகில் இருட்டைப் போக்கி வெளிச்சத்தை உண்டாக்கும்; ஆனால்

1. மஹாபாரதத்தில் துரோண பர்வத்தில் 147 வது அத்யாயத்தில் ஜயத்ரதவதம் பற்றிய விவரங்கள் காணத்தக்கன.

சக்கரதாயுதத்தின் ஒளியோ மிகமிக அதிகமாக இருப்பதால் கண்கொண்டு பார்க்க முடியாமல் கூசி, கண்ணை இருட்டாக்கி விடும்; எனவேதான் சக்கராயுதத்தால் சூரியனை மறைத்த போது அதைப் பார்த்தவர்களுக்கு உலகம் இருண்டு விட்டதாகத் தோன்றியது என்று "ஆழியால் அன்றங்காழியை மறைத்தான்" என்ற பெரிய திருமொழிப் (5-7-8) பாசுரத்தின் உரையில்[1] முன்னோர் (பெரியவாச்சான் பிள்ளை) அருளிச் செய்துள்ளனர் என்கிறார் மாமுனிகள்.

[27]

திருக்கச்சிநம்பி அருளாளப்பெருமாள் திருவடிகளிலே சென்று "தேவரீர் திருவுள்ளத்துக்கு உகந்ததொரு திருநாமம் தந்தருளவேணும்" என்று விண்ணப்பம் செய்த அநந்தரத்திலே "ஸ்ரீகஜேந்த்ரதாஸன் என்றழைக்கக் கடவோம்" என்றருளிச் செய்தார்.

(பெரியாழ்வார் திருமொழி 3-7-8 திருவாய்மொழிப்பிள்ளை வியாக்கியானம்)

நிகழிடம்

"ஒருவாரணம் பணிகொண்டவன் பொய்கையில்" என்று, ஸ்ரீகஜேந்த்ராழ்வானுக்கு எம்பெருமான் அருள்புரிந்தமையைக் கூறுகிறார் பெரியாழ்வார். எம்பெருமானுக்கு கஜேந்த்ரன் மிகவும் உகந்தவன் என்பதற்கு ஓர் **ஐதிஹ்யம்** *எடுத்துக் காட்டுகின்றார் உரையாசிரியர்.*

விளக்கம்

காஞ்சீபுரத்தில் எழுந்தருளியிருக்கும் தேவப்பெருமாளுக்குத் திருவாலவட்ட (விசிறி) கைங்கர்யம் செய்துவந்த திருக்கச்சி நம்பிகள், தேவப்பெருமாளிடம் "தேவரீருக்கு மிகவும் விருப்பமான பெயர் ஒன்றை எனக்கு இடவேண்டும்" என்று வேண்டிக்கொண்டாராம். உடனே தேவப்பெருமாள் "உம்மை நாம் கஜேந்த்ர தாஸன் என்று அழைக்கக் கடவோம்" என்றருளிச் செய்தாராம். (காஞ்சீபுரத்தில் எழுந்தருளியுள்ள பேரருளாளனான வரதராஜனை கஜேந்திரன் பலகாலம் ஆராதித்ததாக அத்தலத்தின் புராணம் கூறுகிறது. அதனால் அத்தலத்திற்குக்

1. பெரியதிருமொழி 5-7-8 பாசுரத்தின் உரையில்,

> "ஆதித்யனானவன் ஒளி மழுங்கும்படியாக அவனுடைய பிரகாசத்துக்கு அடைத்த காலந்தன்னிலே அனேகமாயிரம் ஆதித்யர்கள் சேரவுதித்தாற்போலேயிருந்துள்ள புகரையுடைய திருவாழியைக் கொண்டு அந்த ஆதித்யனை மறைத்தவன். இந்த ஆதித்யனுடைய தேஜஸ்ஸு கண்ணாலே முகக்கலாம்படி அளவுபட்டிருக்கையாலே தமஸ்ஸு போம்படியிருக்கும். அங்ஙனன்றிக்கே திருவாழியாழ்வான் தேஜஸ்ஸு நேர்கொடு நேர் கண் கொண்டு பார்க்க வொண்ணாதபடி மிக்கிருக்கையாலே பளபளத்துக் கண்ணை இருளப் பண்ணிற்று."

என்று பெரியவாச்சான் பிள்ளை அருளிச்செய்துள்ளார்.

கரிகிரி என்றும் அவ்வெம்பெருமானுக்கு கஜேந்திரவரதன் என்றும் பெயர்கள் வழங்கப்படுகின்றன. எனவே பேரருளாளன் தனக்கு மிகவும் உகந்தவனான கஜேந்திரனுடைய பெயரையே திருக்கச்சி நம்பிகளுக்கு அளித்தான் போலும்!)

[28]

(மாயம் இத்யாதி) ... "मुग्धशिशुवटदलेशयितोसितन्वातन्वाजगन्तिभिबृषे सविकासमेव। ऐशीमिमान्तवतुशक्तिमतर्कितव्यामव्याजतः प्रथयसे किमिहावतीर्णः॥" **(முக்3த4ஶிஶு வடத3ளேஶயிதோஸிதந்வாதந்வா ஜக4ந்தி பி4ப்3ருஷே ஸவிகாஸமேவ, ஐஶீமிமாந்தவதுஶக்திமதர்கிதவ்யாமவ்யாஜத: ப்ரத2யஸே கிமிஹாவதீர்ண:) என்றாரிறே ஆழ்வான்.**

(பெரியாழ்வார் திருமொழி 4-1-4 மணவாளமாமுனிகள் வியாக்கியானம்)

நிகழிடம்

"தோயம் பரந்த நடுவு சூழலில் தொல்லை வடிவு கொண்ட மாயக்குழவி" என்று எம்பெருமான் வடபத்திரசாயியாக எழுந்தருளியிருந்த நிலைனைப் பற்றி அருளிச்செய்கிறார் பெரியாழ்வார். "மாயக்குழவி" என்பதற்கு ஆச்சர்யமான ஸாமர்த்யம் உடையவன் என்று பொருளுரைத்து, இத்தொடர்பில் ஆழ்வான் அருளிச்செய்த **சுலோகம்** *ஒன்று மேற்கோளாக எடுத்துக் காட்டப்பெறுகிறது.*

விளக்கம்

"ஆலிலையில் பள்ளிகொண்ட சிறு குழந்தையான நீ, மிகவும் சிறிய திருமேனியால் உலகங்களையெல்லாம் தாங்கினாய்! இப்படிப்பட்ட உன்னுடைய சக்தியை இவ்வுலகில் அவதரித்துக் காரணம் எதுவுமில்லாமல் எதற்காக வெளியிட்டருளினாய்?" என்று **கூரத்தாழ்வான்** *அதிமாநுஷஸ்தவத்தில் (14) இந்த சுலோகத்தில் எம்பெருமானைக் கேட்கிறார். சிறுகுழந்தையாக அவதரித்திருந்த போது உலகங்கள் அனைத்தையும் தன் வயிற்றுக்குள் வைத்திருந்து மிகவும் ஆச்சர்யமான செயலாகையாலே, 'மாயக்குழவி' என்று பெரியாழ்வார் அருளிச்செய்ததற்குப் பொருத்தமாக இந்த சுலோகத்தை எடுத்துக் காட்டுகிறார்.*

[29]

(கடல்வண்ணன் திருவாணை கூறத்திரியும்) ... "सुन्दरदोर्दिव्याज्ञालम्भनकातर- वशानुयायिनि करिणि। प्रणयजकलहसमाधिः यत्र वनाद्रिः स एष सुन्दरदोष्णः॥" **(ஸுந்த3ரதோ3ர் தி3வ்யாஜ்ஞா லம்ப4நகாதரவஶாநுயாயிநி கரிணி, ப்ரணயஜகலஹஸமாதி4ர் யத்ர வநாத்3ரிஸ் ஸ ஏஷ ஸுந்த3ரதோ3ஷ்ண:" என்று இவ்வ்ருத்தாந்தத்தை அருளிச்செய்தாரிறே ஆழ்வான்.**

(பெரியாழ்வார் திருமொழி 4-2-5 மணவாளமாமுனிகள் வியாக்கியானம்)

நிகழிடம்

திருமாலிருஞ்சோலையின் இயற்கைக் காட்சிகளை வருணிக்கின்ற பெரியாழ்வார், "கருவாரணம் தன்பிடி துறந்தோடக் கடல்வண்ணன் திருவாணை கூறத்திரியும் தண்மாலிருஞ்சோலையே" என்று அருளிச் செய்துள்ளார். இப்பாசுரத்தின் கருத்தை அடியொற்றிக் கூரத்தாழ்வான் அருளிச்செய்துள்ள **சுலோகம்** ஒன்று மேற்கோளாக எடுத்துக் காட்டப் பெறுகிறது.

விளக்கம்

திருமாலிருஞ்சோலையில் வாழும் ஆண்யானையைப் பெண்யானையானது பிரிந்து செல்ல முற்பட, அப்போது ஆண்யானையானது திருமாலிருஞ்சோலை அழகர்மீது ஆணையிட்டு அப்பெண்யானையைத் தடுத்தது என்பது பாசுரத்தில் உள்ள கருத்தாகும். அக்கருத்தையே கூரத்தாழ்வான் தமது ஸு‍ந்தரபாஹு ஸ்தவத்தில் (8) இந்த சுலோகத்திலும் அருளிச்செய்துள்ளமை எடுத்துக் காட்டப் பெறுகிறது.

[30]

(நாவகாரியம் சொல்லிலாதவர்) கொங்கிலே திருக்குருகைப்பிரான் பிள்ளான் எழுந்தருளி ஒரு ஸ்ரீவைஷ்ணவர் திருமாளிகையிலே விட்டவளவிலே பிறந்த வார்த்தையை ஸ்மரிப்பது.

(பெரியாழ்வார் திருமொழி 4-4-1 மணவாளமாமுனிகள் வியாக்கியானம்)

நிகழிடம்

திருக்கோட்டியூரில் வாழும் ஸ்ரீவைஷ்ணவர்களை 'நாவகாரியம் சொல் இலாதவர்' என்கிறார் பெரியாழ்வார். 'நாவினால் சொல்லத் தகாதவற்றைச் சொல்லமாட்டார்கள்' என்பது இதன் பொருள். இதற்குச் சான்றாக, ஆசார்யன் திருநாமம் சொல்வதே நாவுக்குக் காரியம் என்று கருதிய திருக்குருகைப்பிரான் பிள்ளான் பற்றிய **ஐதிஹ்யம்** ஒன்றை எடுத்துக் காட்டுகிறார் உரையாசிரியர்.

விளக்கம்

திருக்குருகைப்பிரான் பிள்ளான் ஒருமுறை கொங்கு நாட்டிற்கு எழுந்தருளியபோது ஒரு ஸ்ரீவைஷ்ணவர் இல்லத்திலே தங்கினார். அங்கு தாமே தளிகை பண்ணி (சமைத்து) உண்பதாக நினைத்திருக்கையில், அங்குள்ளவர்கள் அனைவரும் ஆசார்யருடைய திருநாமங்களைச் சொல்லாமல் வெறும் பகவந்நாமங்களை மட்டுமே பாடிக் கொண்டிருந்தனர். ஆசார்யர்களுடைய நாமங்களுடன் சேர்த்துச் சொல்லாமல் தனிப்பட எம்பெருமான் திருநாமத்தை மட்டும் சொல்வது 'நாவகாரியம்' ஆதலால், இப்படி ஆசார்யாபிமானம்

இல்லாதவர்கள் இல்லத்திலே அமுது செய்வது தகாது என்று கருதி அவ்வில்லத்தை விட்டு எழுந்தருளிவிட்டார்.[1]

[31]

(நாவகாரியம் சொல்லிலாதவர்) அனந்தாழ்வான் சரமஸமயத்திலே "ப$_4$ட்டர் உகக்கும் திருநாமமேது?" என்று கேட்க, "அழகிய மணவாளப் பெருமாள் என்கிற திருநாமம்" என்று சொல்ல, "இது ப$_4$ர்த்ருநாமக்$_3$ரஹணம் பண்ணுமாபோலேயிரா நின்றது; ஆகிலும் பட்டர் விரும்பின திருநாமமன்றோ!" என்று இத்திருநாமத்தைச் சொன்ன அநந்தரத்திலே திருநாட்டுக்குப் போனான்.

(பெரியாழ்வார் திருமொழி 4-4-1)

நிகழிடம்

திருக்கோட்டியூரில் வாழும் ஸ்ரீவைஷ்ணவர்களை 'நாவகாரியம் சொல் இலாதவர்' என்கிறார் பெரியாழ்வார். 'நாவினால் சொல்லத் தகாதவற்றைச் சொல்லமாட்டார்கள்' என்பது இதன் பொருள். இதற்குச் சான்றாக, ஆசார்யன் விரும்பிய திருநாமம் சொல்வதே நாவுக்குக் காரியம் என்று கருதிய அனந்தாழ்வானைப் பற்றிய **ஐதிஹ்யம்** *ஒன்று காட்டப்பெறுகிறது.*

விளக்கம்

ஸ்ரீராமானுஜருடைய சீடராகிய அனந்தாழ்வான் மரணத்தறுவாயிலிருந்த போது "பட்டர் மிகவும் விரும்பியிருந்த திருநாமம் எது?" என்று அருகில் இருந்தவர்களைக் கேட்க, அவர்கள் "அழகிய மணவாளப் பெருமாள் என்கிற திருநாமமே பட்டர் மிகவும் விரும்பியிருந்த திருநாமம்"[2] என்று பதில் கூறினர்.

1. இந்நிகழ்ச்சியைப் பற்றிய விவரங்கள் இங்கு வியாக்கியானத்தில் குறிப்பிடப்படவில்லை. ஆனால் அந்திமோபாயநிஷ்டை எனும் நூலில் (பக். 31) பின்வருமாறு காணப்படுகின்றன:

 "திருக்குருகைப் பிரான் பிள்ளான் கொங்கு நாட்டுக்கு எழுந்தருளி, ஸ்ரீவைஷ்ணவ க்ருஹத்திலே விட்டு, ஸ்வயம்பாகம் பண்ணுவதாக எழுந்தருளியிருக்க, அங்குள்ளவர்கள் எல்லாரும் கேவல பகவந்நாம ஸங்கீர்த்தனங்களைப் பண்ண அது இவர் திருவுள்ளத்துக்குப் பொருந்தாதபடியாலே அமுது செய்தருளாமல் அவ்வருகே எழுந்தருளினார்."

2. பட்டர் மிக விரும்பியிருந்த திருநாமம் அழகிய மணவாளப் பெருமாள் என்கிற திருநாமமே என்றும், அனந்தாழ்வான் மிக விரும்பியிருந்த திருநாமம் திருவேங்கடமுடையான் என்கிற திருநாமமே என்றும் மற்றும் மூன்று இடங்களில் (எண் 245, 311, 666) குறிப்பிடப்பட்டுள்ளன. எனவே தாம் மிகவும் விரும்பியிருந்த திருவேங்கடமுடையான் திருநாமத்தைச் சொல்லவேண்டிய நாவால் அழகிய மணவாளன் திருநாமத்தைச் சொல்வது கணவன் பெயரை மனைவி வாய்விட்டுச் சொல்வது போல் (தகாதது) என்று அனந்தாழ்வான் கூறினார் என்றும் இவ்வைதிஹ்யத்திற்குப் பொருள் கொள்ளலாம்.

இதைக் கேட்ட அனந்தாழ்வான், "ஆசார்யனுடைய திருநாமததைக் கூறவேண்டிய நாவால் பகவான் திருநாமத்தைக் கூறுவது கணவனின் பெயரை மனைவி வாய்விட்டுக் கூறுவது போலாகிவிடுமன்றோ! கணவன் பெயரை மனைவி கூறுவது ஸ்வரூபவிருத்தம் (அவளுடைய தன்மைக்குப் பொருந்தாதது). அதுபோல ஆசார்யனையே எல்லாமாகக் கொண்டிருப்பவர்க்கு எம்பெருமான் திருநாமத்தைக் கூறுவது ஸ்வரூபவிருத்தம். ஆயினும் ஆசார்ய ஸ்தானத்திலுள்ள பட்டர்[1] மிகவும் விரும்பிய திருநாமம் இதுவாகையாலே இதைக் கூறுவதே நாவுக்குக் கார்யம்" என்று கூறித் தாமும் 'அழகிய மணவாளப் பெருமாள்' என்று சொன்னவுடனே திருநாட்டுக்கு எழுந்தருளிவிட்டார்.[2]

[32]

(நாவகாரியம்).......உடையவர் எழுந்தருளியிருக்கிற காலத்திலே வடுகநம்பியருகே ஒரு ஸ்ரீவைஷ்ணவர் எழுந்தருளியிருந்து 'ஓம் நமோ நாராயணாய' என்று இத்தைச் சொல்ல, இத்தைக் கேட்ட வடுகநம்பி, "நாவகாரியம்" என்று கடக்கப் போனார்.

(பெரியாழ்வார் திருமொழி 4-3-1)

நிகழிடம்

திருக்கோட்டியூரில் வாழும் ஸ்ரீவைஷ்ணவர்கள் 'நாவகாரியம் சொல் இலாதவர்' என்கிறார் பெரியாழ்வார். 'நாவினால் சொல்லத் தகாதவற்றைச் சொல்லமாட்டார்கள்' என்பது இதன் பொருள். இதற்குச் சான்றாக, ஆசார்யன் திருநாமம் சொல்வதே நாவுக்குக் காரியம் என்று கருதிய வடுகநம்பி பற்றிய **ஐதிஹ்யம்** *ஒன்றை எடுத்துக் காட்டுகிறார் உரையாசிரியர்.*

விளக்கம்

வடுகநம்பி என்பவர் இராமானுஜருடைய சீடராவார். தம்முடைய ஆசார்யரைத் தவிர வேறு யாரையும், எம்பெருமானையும் கூட நெஞ்சாலும்

1. அனந்தாழ்வான் ஸ்ரீராமானுஜருடைய சீடர். அவருடைய மற்றொரு சீடரான கூரத்தாழ்வானுடைய திருமகன் பராசர பட்டர் ஆவார். பட்டர் வயதில் சிறியவரானாலும் இவர்ரையும் அனந்தாழ்வான் ஆசார்ய ஸ்தானத்திலே கொண்டிருக்கக் கூடும். இதற்குக் காரணம் ஸ்ரீராமானுஜர் பட்டரைத் தம்மைப் போலவே நினைக்கும்படி கட்டளையிட்டிருந்ததேயாகும். (எண் 811 பார்க்க).

2. இதேபோன்ற நிகழ்ச்சி மற்றோரிடத்திலும் (எண் 356) கூறப்படுகிறது. ஆனால் அங்கு இப்படிக் கூறியவராக அனந்தாழ்வானுக்குப் பதிலாக திருமலை நம்பி குறிப்பிடப்படுகிறார். திருமலை நம்பி என்பவர் ஸ்ரீராமானுஜருடைய தாய்மாமனும், ஆசார்யர்களில் ஒருவருமாவார். (ஆனால் அங்கு உரையின் அரும்பதத்தில் ஐதிஹ்யத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவர் திருமலை நம்பி பின் குமாரரான சிறிய திருமலை நம்பி என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அனந்தாழ்வான், சிறியதிருமலை நம்பி ஆகிய இருவருமே ராமானுஜருடைய சீடர்களே யாவர்.)

நினையாதவர். நம்மாழ்வாரைத் தவிர வேறு தெய்வமறியாமல் 'தேவுமற்றறியேன்' என்றிருந்த மதுரகவிகளைப் போல் ஸ்ரீராமானுஜரைத் தவிர தேவுமற்றறியாதவர் வடுகநம்பி. உடையவர் எழுந்தருளியிருந்த காலத்தில் ஒருமுறை வடுக நம்பியருகே இருந்த ஸ்ரீவைஷ்ணவர் ஒருவர், "ஓம் நமோ நாராயணாய" என்று எம்பெருமானுடைய திருநாமத்தைச் சொல்ல, இதைக் கேட்ட வடுகநம்பி, "நம்முடைய நாவைக் கொண்டு ஆசார்யரான உடையவர் திருநாமத்தைக் கூறாமல் எம்பெருமானுடைய திருநாமத்தைக் கூறலாமோ? 'ஸ்ரீமதே ராமானுஜாய நம:' என்று சொல்லாமல் 'ஓம் நமோ நாராயணாய' என்று கூறுவது நாவுக்குத் தகாத காரியமன்றோ! அப்படிச் சொல்பவர் அருகில் நாம் இருப்பதும் தகாது" என்று எழுந்துபோய் விட்டாராம்!

[33]

(நாவகாரியம்) ஆழ்வார் திருவரங்கப் பெருமாளரையர் சரம காலத்திலே உடையவரெழுந்தருளி, "இப்போது திருவுள்ளத்தில் அநுஸந்த₄ானமேது?" என்று கேட்க, "பகவந்நாமங்களாயிருப்பன அனேகம் திருநாமங்களுண்டாயிருக்க, 'திருவரங்கம்' என்கிற நாலைந்து திருவக்ஷரமும் கோப்புண்டிருந்தபடியே என்று

1. வடுக நம்பிக்கு ஸ்ரீராமானுஜர் மீது இருந்த அளவற்ற பக்திக்கு எடுத்துக்காட்டாக ஒரு நிகழ்ச்சி கூறப்படுகிறது. ஒருமுறை வெளியூருக்குச் சென்று கொண்டிருந்த ராமானுஜர் தாம் திருவாராதனம் செய்யும் பெருமாளை வடுக நம்பியிடம் கொடுத்து எழுந்தருளப் பண்ணிக் கொண்டு வருமாறு கூறினார். அப்படியே வடுகநம்பியும் ஒரு கூடையில் (பெட்டியில்) பெருமாளை எழுந்தருளப் பண்ணிக் கொண்டு ராமானுஜரைப் பின் தொடர்ந்தார். வழியில் ஓரிடத்தில் எம்பெருமானார் அனுஷ்டானங்களை முடித்துக் கொண்டு பெருமாளுக்குத் திருவாராதனம் செய்வதற்காகப் பெருமாளை வெளியே எழுந்தருளப் பண்ணும்படி வடுகநம்பியிடம் கூறினார். வடுக நம்பி கூடையைத் திறந்து முதலில் ராமானுஜருடைய பாதுகைகளை வெளியே எடுத்தார். பிறகு பெருமாளை வெளியே எழுந்தருளப் பண்ணினார். இதைக் கண்ட ராமானுஜர் "என்னுடைய பாதுகைகளையும் பெருமாளையும் ஒன்றாக வைத்துக் கொண்டு வரலாமா?" என்று வடுகநம்பியைக் கோபித்தார். அதற்கு வடுகநம்பி, "அது உம்முடைய பெருமாளானால், இது (ஸ்ரீராமானுஜருடைய பாதுகை) என்னுடைய பெருமாள்" என்று பதிலளித்தாராம். வடுகநம்பியின் ஆசார்ய பக்தி மிக உயர்ந்தது என்று பலவிடங்களில் கூறப்பட்டுள்ளது. "வடுகநம்பி ஆழ்வானையும் ஆண்டானையும் இரு கரையரென்பர்" என்ற ஸ்ரீவசன பூஷண ஸூத்ரமும் (411) மணவாள மாமுனிகள் அருளிய ஆர்த்திப்பிரபந்தத்திலுள்ள

உன்னையொழியவொரு தெய்வம் மற்றறியா
மன்னுபுகழ்சேர் வடுகநம்பி - தன்னிலையை
என்றனக்கு நீதந்தெதிராசா வெந்நாளும்
உன்றனக்கே யாட்கொள்ளுகந்து.

என்கிற பாசுரமும் (11) இதற்கு சான்றுகளாகும்.

நினைத்திருந்தேன் காணும்!" என்று அருளிச் செய்ய, அத்தை ஆழ்வார் திருவரங்கப் பெருமாளரையர் விரும்பின திருநாமமென்று உடையவர் விரும்பியிருப்பர்.

(பெரியாழ்வார் திருமொழி 4-3-1)

நிகழிடம்

திருக்கோட்டியூரில் வாழும் ஸ்ரீவைஷ்ணவர்களை 'நாவகாரியம் சொல் இலாதவர்' என்கிறார் பெரியாழ்வார். 'நாவினால் சொல்லத் தகாதவற்றைச் சொல்லமாட்டார்கள்' என்பது இதன் பொருள். இத்தொடர்பில், ஆசார்யன் விரும்பிய திருநாமம் சொல்வதே நாவுக்குக் காரியம் என்று கருதிய உடையவர் பற்றிய **ஐதிஹ்யம்** *ஒன்றை எடுத்துக் காட்டுகிறார் உரையாசிரியர்.*

விளக்கம்

ஆழ்வார் திருவரங்கப் பெருமாள் அரையர் *உடையவருடைய ஆசார்யர்கள் ஐவருள் ஒருவர். அவரிடத்திலேதான் உடையவர் திவ்யப் பிரபந்தங்களைக் கற்றார். அவர் மரணத்தறுவாயில் எழுந்தருளியிருந்தபோது அவரிடம் சென்ற உடையவர் "இப்போது தேவரீர் மனத்தில் ஓடுகின்ற நினைவு எதைப் பற்றியது?" என்று கேட்க, அரையர், "எம்பெருமானுக்கு பற்பல திருநாமங்கள் இருந்தாலும், 'திருவரங்கம்' என்ற நாலைந்து எழுத்துக்கள் சேர்ந்திருக்கின்ற அழகுதான் என்னே! என்று நினைத்துக் கொண்டிருக்கிறேன்" என்று கூறினார். (எம்பெருமானுடைய திருநாமங்களைக் காட்டிலும் அவன் உகந்து எழுந்தருளியுள்ள திவ்யதேசங்களில் மிக முக்கியமான திருவரங்கமே அரையருடைய உகப்பு இலக்காக இருந்தது.) இதையறிந்த அன்று முதல் உடையவர் திருவரங்கம் என்ற திவ்யதேசத் திருநாமத்தை திருவரங்கப் பெருமாளரையர் மிகவும் உகந்து விரும்பிய திருநாமம் என்று தாமும் விரும்பியிருப்பார்.*[1]

[34]

ஆழ்வானுக்கு "ஒரு ஸ்ரீவைஷ்ணவர் திருவடிச் சார்ந்தார்" என்று விண்ணப்பம் செய்ய, "ப₄ாக₃வத கைங்கர்யமே யாத்ரையாய்ப் போந்தவரை அப்படிச் சொல்லலாகாது; திருநாட்டுக்குப் போனார் என்று சொல்ல வேணுங்காணும்" என்று அருளிச் செய்தாராம்.

(பெரியாழ்வார் திருமொழி 4-4-7)

1. திருவரங்கத்து அமுதனார், "பொன்னரங்கம் என்னில் மயலே பெருகுமிராமானுசன்" என்று இராமாநுசநூற்றந்தாதியில் (35) அருளிச் செய்துள்ளமை இங்கே நினைவுகூரத்தக்கது.

நிகழிடம்

'பத்தர்கள் இருந்த ஊரில் இருக்கும் மானிடர் எத்தவங்கள் செய்தார் கொலோ' (அடியவர்கள் வாழுகின்ற இடத்திலே கூடி வாழப் பெற்றவர்கள் என்ன பாக்யம் செய்தார்களோ!) என்கிறார் பெரியாழ்வார். அடியவர் வாழும் ஊரில் இருப்பதே விரும்பத்தக்கது என்பதற்கு ஓர் **ஐதிஹ்யம்** கூறப்படுகிறது.

விளக்கம்

பாகவத கைங்கர்யம் செய்வதையே நோக்கமாகக் கொண்டிருந்த ஸ்ரீவைஷ்ணவர் ஒருவர் இறந்துவிட, ஒருவர் கூரத்தாழ்வானிடம் வந்து, "அவர் திருவடிச் சார்ந்தார்" (பகவானை அடைந்துவிட்டார்) என்று கூறினாராம். உடனே கூரத்தாழ்வான், "அடியவர்களுக்குத் தொண்டு செய்வதையே குறிக்கோளாகக் கொண்டிருந்த ஒருவரை அப்படிச் சொல்லக்கூடாது. எம்பெருமானுடைய அடியவர்களான நித்யசூரிகள் நிறைந்தவிடமாதலால்' 'வானவர் நாடு' என்று கொண்டாடப்படுகின்ற திருநாட்டுக்குப் போனார் என்று கூறவேண்டும் என்று அருளிச் செய்தாராம்.[2] (திருநாடு என்பது இங்கு இடவாகுபெயராய், திருநாட்டிலுள்ள நித்ய முக்தர்களைக் குறிக்கின்றது.)

[35]

"வடுகநம்பி திருநாட்டுக்குப் போனார்" என்று ஒரு ஸ்ரீவைஷ்ணவர் அருளாளப் பெருமாள் எம்பெருமானார்க்கு விண்ணப்பஞ் செய்ய, சிறிது போது மோஹித்துக் கிடந்து உணர்ந்தருளி அவரைப் பார்த்து, "திருநாட்டுக்குப் போனார்

1. பரமபதம் எனப்படுகின்ற திருநாடு பகவானுடைய அடியவர்களால் நிறைந்தது என்பதனாலேயே சிறப்புப் பெற்றது. நம்மாழ்வாரும் "அடியார்கள் குழாங்களை - உடன் கூடுவதென்று கொலோ" (திருவாய்மொழி 2-3-10) என்று பரமபதத்தில் உள்ள நித்யசூரிகளோடு கூடியிருக்குமிருப்பையே ஆசைப்பட்டார். முடிவில் பரமபதமடைந்ததும் "அந்தமில் பேரின்பத்து அடியரோடிருந்தமை" (திருவாய்மொழி 10-9-11) என்று தாம் ஆசைப்பட்டபடியே அடைந்தமையையும் கூறுகிறார். எனவே பரமபதம் 'அடியார் நிலாகின்ற வைகுந்தம்' (திருவிருத்தம்-75) என்றே கூறப்படுகிறது. அடியவர்களிடத்திலே மிகவும் ஈடுபட்டிருந்த ஒருவர் அவ்வடியவர்களால் சிறப்பு பெறுமிடத்திற்குச் சென்றார் என்று கூறுவதே அவருடைய திருவுள்ளத்திற்குச் சேரும் என்பது ஆழ்வான் திருவுள்ளக் கருத்து.
2. இதேபோல், "தொண்டனூர் நம்பி திருவடிச் சார்ந்தார்" என்று சொல்ல, "அவர் திருநாட்டுக்கு நடந்தார் என்று சொல்லவேண்டும்" என்று பட்டர் கூறியதாகவும், நம்பியேறு திருவுடையார் தாஸர் திறத்தில் நஞ்சீயர் இப்படிச் சொன்னதாகவும் எண் 83ல் கூறப்படுகிறது. "நம்பியேறு திருவுடையார் தாஸர் திருநாட்டுக்கு நடந்தார்" என்று பட்டருக்கு விண்ணப்பம் செய்ய, "அப்படிச் சொல்லக்கூடாது. திருநாட்டுக்கு எழுந்தருளினார் என்று சொல்ல வேணும்" என்று பட்டர் கூறியதாக எண் 439ல் உள்ளது. அடுத்த ஐதிஹ்யமும் (எண் 35)பார்க்க.

என்னலாகாது காணும், உடையவர் ஸ்ரீபாத$_2$த்துக்குப் போனார் என்னவேணுங்காணும்!" என்றருளிச் செய்தாராம்.

(பெரியாழ்வார் திருமொழி 4-4-7)

நிகழ்டம்

'பத்தர்கள் இருந்த ஊரில் இருக்கும் மானிடர் எத்தவங்கள் செய்தார் கொலோ' (அடியவர்கள் வாழுகின்ற இடத்திலே கூடி வாழப் பெற்றவர்கள் என்ன பாக்யம் செய்தார்களோ!) என்கிறார் பெரியாழ்வார். ஆசார்யன் திருவடிகளை அடைவதே விரும்பத்தக்கது என்பதற்கு ஓர் **ஐதிஹ்யம்** *கூறப்படுகிறது.*

விளக்கம்

ஒவ்வொருவரைப் பற்றிச் சில வார்த்தைகள் சொல்லும்போது, அவரவர்கள் தன்மைகளுக்கு ஏற்ப அவர்களைப் பற்றிச் சொல்லவேண்டும். கீழ் (34ம் எண்) ஐதிஹ்யத்தில் பாகவதர்கள் திறத்தில் மிகவும் ஈடுபட்டிருந்தவர்களை 'திருவடிச் சார்ந்தார்' என்று சொல்லக்கூடாது. 'திருநாட்டுக்கு எழுந்தருளினார்' என்று சொல்லவேண்டும் என்று கூறப்பட்டது. இவ்வைதிஹ்யத்தில், ஆசார்ய பக்தியுள்ளவர்களைப் பற்றி எப்படிக் குறிப்பிடவேண்டுமென்பது காட்டப் படுகிறது. ஸ்ரீராமானுஜரிடம் மிகுந்த பக்தி கொண்டிருந்தவரான **வடுகநம்பி** *பரமபதித்த செய்தியை* **அருளாளப்பெருமாள் எம்பெருமானாரிடம்**[1] *தெரிவித்தவர்கள், "வடுகநம்பி திருநாட்டுக்கு எழுந்தருளிவிட்டார்" என்று கூற, உடனே அவர் இந்த அதிர்ச்சியான செய்தியால் மூர்ச்சை அடைந்துவிட்டார். சிறிது நேரம் கழித்து உணர்வு திரும்பியதும், "வடுக நம்பி உடையவரிடத்தில் மிகுந்த பக்தி கொண்டிருந்தவர்.[2] எனவே அவரைத் திருநாட்டுக்குப் போனாரென்று சொல்லக்கூடாது. அவர்* **உடையவர்** *திருவடிகளில் கொண்டிருந்த பக்திக்கு ஏற்ப, உடையவர் திருவடிகளை அடைந்தார் என்றே கூற வேண்டும்" என்று கூறினாராம். (ஆக, பாகவதர்களிடத்தில் பக்தி உள்ளவர்கள் பரமபதித்தால் 'திருநாடு எழுந்தருளினார்' என்று கூறவேண்டும் என்பது முன் ஐதிஹ்யத்திலும், ஆசார்யரிடத்தில் அளவற்ற பக்தியுள்ளவர்கள் பரமபதித்தால் 'ஆசார்யன் திருவடியடைந்தார்' என்று கூற வேண்டும் என்பது இந்த ஐதிஹ்யத்திலும் கூறப்படுகிறது.)*

[36]

ஆழ்வான் ஸம்ஸாரத்தில் ஆர்த்தியின் க$_4$னத்தாலே கலங்கிப் பெருமாள் திருவடிகளிலே, "அடியேனைத் திருநாடேறப் போம்படி திருவுள்ளமாக வேணும்"

1. அருளாளப் பெருமாளெம்பெருமானார், வடுகநம்பி இருவருமே உடையவருடைய சீடர்கள்.

2. வடுக நம்பியின் ஆசார்ய பக்தி பற்றி எண் 32ல் குறிப்பிட்டுள்ளவை காண்க.

என்று விண்ணப்பஞ் செய்ய, பெருமாள் திருவுள்ளமாய், ஆழ்வார் திருவரங்கப் பெருமாளரையர் திருமாளிகையிலே புறவீடுவிட்டிருக்கிறவளவிலே, இத்தை உடையவர் கேட்டருளி, பஞ்சுக்கொட்டன் திருவாசலளவாக எழுந்தருளி, 'பெருமாளுக்கு விண்ணப்பஞ் செய்தால் விண்ணப்பஞ் செய்தது பெருமாளும் செய்தருளுவர்; நாமடியாகப் பெருமாள் இரண்டு வார்த்தை அருளிச் செய்தாராக வொண்ணாது' என்று மீண்டும் ஆழ்வானிருக்கிற இடத்தேற வெழுந்தருளி, "ஏன் ஆழ்வான்?" என்ன, "அடியேன் மறந்தேன்" என்று விண்ணப்பஞ் செய்தான்.

(பெரியாழ்வார் திருமொழி 4-4-7)

நிகழிடம்

'பத்தர்கள் இருந்த ஊரில் இருக்கும் மானிடர் எத்தவங்கள் செய்தார் கொலோ' (அடியவர்கள் வாழுகின்ற இடத்திலே கூடி வாழப் பெற்றவர்கள் என்ன பாக்யம் செய்தார்களோ!) என்கிறார் பெரியாழ்வார். கூரத்தாழ்வானோடு கூடியிருக்கமுடியாமல் இராமானுசர் வருந்திய **ஐதிஹ்யம்** *ஒன்று இங்கு எடுத்துக் காட்டப்பெறுகிறது.*

விளக்கம்

ஸ்ரீராமானுஜருடைய சீடரான கூரத்தாழ்வான் இவ்வுலகில் வாழ்ந்திருக்க வேண்டிய துன்பத்தின் மிகுதியால் கலங்கி, திருவரங்கனிடம் போய், "அடியேனுக்கு மோக்ஷம் அளிக்க வேண்டும்" என்று பிரார்த்தித்தார். எம்பெருமானும் "அப்படியே!" என்று அனுமதி கொடுத்தான். கோயிலிலிருந்து திரும்பிய ஆழ்வான் தம்முடைய இல்லத்திற்குச் செல்லாமல் ஆழ்வார் திருவங்கப்பெருமாளரையர் (ராமானுஜருடைய ஆசாரியர்களில் ஒருவர்) இல்லத்திலே பரஸ்தானமாகத் தங்கியிருந்தார். (பரஸ்தானம் என்பது = ஓர் ஊருக்குச் செல்வதற்கு நல்ல நாள் அமையாமல் போனால், தாம் ஊருக்குப் புறப்படுவதற்கு முன்னர் ஓர் நல்ல நாளில் ஊருக்குப் போகவேண்டிய திசையில் உள்ள ஒருவர் வீட்டில் தம் பெட்டி முதலியவைகளை வைத்துவிட்டு, பிறகு தாம் விரும்பிய நாளில் அங்கிருந்து புறப்பட்டு ஊருக்குச் செல்வது. அதுபோல கூரத்தாழ்வானும் தாம் மோக்ஷம் செல்வதற்கு முன் பரஸ்தாநமாக அரையர் திருமாளிகையில் தங்கியிருந்தார் போலும்!) ஸ்ரீராமானுஜர் (உடையவர்) இதைக் கேள்விப்பட்டதும் திகைத்தார். தம்முடைய அன்புக்கு மிகவும் இலக்கானவரான கூரத்தாழ்வானைப் பிரிய மனமில்லாமல்[1] 'ஆழ்வானுக்கு மோக்ஷமளித்து, அவரை என்னிடமிருந்து எப்படிப் பிரிக்கலாம்?' என்று திருவரங்கனையே கேட்பதற்காக கோயிலுக்குப் புறப்பட்டார் உடையவர். பஞ்சுக் கொட்டன் (ஆரியபடாள்) திருவாசல் வரை எழுந்தருளியவர் ஒரு கணம் யோசித்தார்.

1. உடையவருக்கு ஆழ்வான் மீது உள்ள ஈடுபாட்டிற்கு 23ம் எண் ஐதிஹ்யம் பார்க்க.

'ஆழ்வானுக்கு மோக்ஷம் அளிக்கக் கூடாது என்று இப்போது நான் பெருமாளிடம் கேட்டேனாகில், அவரும் சரி என்று கூறிவிடுவார். ஆனால் ஆழ்வானுக்கு ஒரு பேச்சு, எனக்கு ஒரு பேச்சு என்று, என்னால் பெருமாள் இரண்டு பேச்சுக்கள் பேசியதாகிவிடும். அது கூடாது. ஆழ்வானுக்குப் பெருமாள் அளித்த பேச்சே நிலைக்கட்டும்' என்று உறுதிபூண்டு, ஆழ்வான் இருக்கிற இடத்திற்கு வந்தார். "என்ன ஆழ்வான்! என்னைப் பிரிந்து மோக்ஷம் செல்ல எப்படி உமக்கு மனம் வந்தது?" என்று கேட்டார். உடனே ஆழ்வான், "இவ்வுலகில் வாழ்ந்திருந்தால் ஏற்படக்கூடிய துன்பமானது என்னை மோக்ஷம் கேட்கும்படி தூண்டிவிட்டது. ஆனால் மோக்ஷம் பெற்றுவிட்டால், இங்கு தேவரீரோடு சேர்ந்திருக்கும் இருப்பை இழக்க நேருமே என்பதை மறந்துவிட்டேன்" என்று கூறினார்!

[37]

எம்பார் அருளிச் செய்யும் வார்த்தை - "ஈஶ்வரனுக்கு மூன்று ஆபத்து வந்து கழிந்தது" என்று அருளிச் செய்வர். அதாவது த்$_3$ரௌபதி$_3$க்கும்,

1. பின்பழகிய பெருமாள் ஜீயர் அருளிச் செய்த ஆறாயிரப்படி குருபரம்பராப்ரபாவத்தில் ஆழ்வான் கூறிய பதில் இன்னும் விளக்கமாகப் பின்வருமாறு காண்கிறது:

> உடையவரும் சோகாவிஷ்டராய், ஸ்ரீபாதத்து முதலிகளெல்லாரையும் கூட்டிக் கொண்டு ஆழ்வானிருந்த விடத்தேறச் சென்று, "ஆழ்வான் நீர் அப்படிச் செய்தருளலாமோ?" என்ன ,ஆழ்வானும் பேசாதேயிருந்தார். உடையவரும், "ஆழ்வான்! உமக்கு முற்பட வேண்டும் அபிப்ராயம் என்? பேசாதேயிருக்கிறதென்?" என்று கேட்டருள, ஆழ்வானும் "பரமபதத்தில் நடக்கும் அடைவுகேட்டுக்கு அஞ்சி" என்ன, உடையவரும் "அது சொல்லிக் காணீர்" என்ன, ஆழ்வானும் "முடியுடை வானவர் முறை முறையெதிர் கொள்ள என்று முற்பட்டவர்கள் நித்ய ஸூரிகளுடன் பிற்பட்டவர்களை எதிர் கொள்ள வருவார்கள். அது அடியேன் பிற்படில் அடைவுகேடாம்" என்ன, உடையவர் அதுகேட்டு "ந சாஸ்த்ரம், நைவசக்ரம: என்று அடைவு கெட்டிருக்கும் போகவிபூதியிலே நீர் அடைவு தேடுவதே! இதொரு சேஷத்வம் இருந்தபடியே!" என்று போரவித்தராய்த் திருமுத்துதிர்த்து

ஆக உடையவருக்குப்பிறகு தாம் பரமபதம் போனால் தம்மை அங்கே உடையவர் வணங்கி வரவேற்க நேரிடும்; சிஷ்யரான தாம் அதைத் தவிர்க்கவே உடையவரைத் தாம் வணங்கி வரவேற்பதற்காகத் தாம் முன்பே பரமபதம் செல்வதாக ஆழ்வான் கூறியதாக ஆறாயிரப்படி குருபரம்பராப்ரபாவம் நூலிலுள்ளது. எனவே எம்பெருமானாருக்குப் பிறகும் இவ்வுலகில் வாழ்ந்திருந்து பரமபதம் சென்றால் ஏற்படக்கூடிய அபசாரத்தைப் பற்றிய நினைவினால் ஏற்பட்ட துன்பமே இந்த ஐதிஹ்யத்தில் ஸம்ஸாரத்தில் ஆர்த்தி (இவ்வுலக வாழ்க்கையில் துன்பம்) என்று குறிப்பிடப்படுவதாகக் கொள்ளலாம்.

ஸ்ரீகஜேந்த்₃ராழ்வானுக்கும், ஸ்ரீப்ரஹ்லாத₃னுக்கும் உதவிற்றிலனாகில் ஸம்ஸாரிகள் ஈஶ்வரதத்த்வமில்லை என்றெழுதி எழுத்திடுவர்களிறே.

(பெரியாழ்வார் திருமொழி 4-4-9)

நிகழிடம்

பெரியாழ்வார், 'நம்பனை நரசிங்கனை' என்கிறார். நரசிங்கன் நம்பத் தகுந்தவன் என்பது பொருளாகும். ஏனெனில் பிரஹ்லாதன் பகவானை நம்பி அழைத்தபோது வந்தவனல்லவா நரசிங்கன்! அப்படி அவனுடைய நம்பிக்கையை மெய்யாக்கியது போலவே நமக்கும் நம்பத் தகுந்தவன் என்கிறார் பெரியாழ்வார். இத்தொடர்பில் எம்பார் கூறிய **வார்த்தை**யொன்று எடுத்துக்காட்டப்படுகிறது.

விளக்கம்

"பகவானுக்கு மூன்று ஆபத்துக்கள் வந்தன. கௌரவர்களுடைய ராஜசபையிலே துச்சாஸனன் திரௌபதியை மானபங்கப் படுத்த முயன்றபோது கண்ணபிரானை அவள் நம்பிக்கையுடன் அழைத்தாள். ஸ்ரீகஜேந்திரன் பொய்கைக் கரையில் முதலையினால் பீடிக்கப்பட்டபோது 'ஆதிமூலமே!' என்று நம்பிக்கையுடன் அழைத்தான். 'எங்கேயிருக்கிறான் நாராயணன்?' என்று ஹிரண்யகசிபு ஆணவத்துடன் கேட்டபோது 'எங்குமுளன்' என்று நம்பிக்கையுடன் பதிலுரைத்தான் ப்ரஹ்லாதன். இப்படி இம்மூவரும் அழைத்த போது அந்தந்த இடங்களில் எம்பெருமானுக்கு வந்தது பேராபத்து. ஏனெனில் ஏதாவது ஒரு காரணத்தால் அந்தச் சமயங்களில் அந்தந்த இடங்களில் அவன் திரௌபதிக்கும், கஜேந்திரனுக்கும், பிரஹ்லாதனுக்கும் ஏற்பட்ட ஆபத்துக்களைப் போக்கியிரா விட்டால் இவ்வுலகோர்கள் 'இறைவன் என்று ஒருவன் இல்லவே இல்லை. இருந்தால். இம்மூவர் நம்பிக்கையுடன் அழைத்தபோது அவர்களுக்கு உதவியிருப்பானே! எப்போது உதவவில்லையோ, அப்போதே இறைவன் என்பவன் இல்லவே இல்லை என்பது நிச்சயமாகிவிடுகிறது' எழுதிக் கையெழுத்தும் போடுவர்களாம். நல்லவேளையாக அம்மூவருக்கும் ஆபத்து ஏற்பட்ட சமயங்களில் அந்தந்த இடங்களில் அவர்களுக்கு வந்த ஆபத்தைப் போக்கித் தனக்கு வந்த ஆபத்தையும் போக்கிக் கொண்டான்" என்று எம்பார் அருளிச்செய்வர். திரௌபதியும், கஜேந்திரனும், பிரஹ்லாதனும் எம்பெருமானை அழைத்தபோது ஆபத்து ஏற்பட்டிருந்தது அவர்களுக்கல்ல எம்பெருமானுக்கே என்பது எம்பார் தரும் விளக்கத்தின் உட்கருத்து.

[38]

'ஒரு ப்₃ராஹ்மணன் தன் பிள்ளையை பேரிடுகிற ஸமயத்திலே "ஐஶ்வர்யம் தர வல்லானொருவன் பேரிட வேணும்" என்ன, "வைஶ்ரவணன் பேரையிடு" என்றவளவிலே, "ஜளிபிளி என்றிட்டழைத்து ஜீவிப்பதில் நாராயணன் என்கிற

திருநாமத்தைச் சாத்தி பிக்ஷுபுக்கு ஜீவிக்கவமையும்" என்றான்' என்று ஆச்சான்பிள்ளை அருளிச் செய்ததாகப் பிள்ளை யருளிச் செய்வர்.

(பெரியாழ்வார் திருமொழி 4-6-3 மணவாளமாமுனிகள் வியாக்கியானம்)

நிகழிடம்

"பிச்சை புக்காகிலும் எம்பிரான் திருநாமமே நச்சுமின்" (பிச்சையெடுத்து வாழ்ந்தாலும் எம்பெருமான் திருநாமங்களையே குழந்தைக்கு இடுங்கள்) என்கிறார் பெரியாழ்வார். இத்தொடர்பில் ஓர் **ஐதிஹ்யம்** *கூறப் பெறுகிறது.*

விளக்கம்

ஒருவன் தன் பிள்ளைக்குப் பெயர் வைக்கிறபோது, நல்ல செல்வம் கொடுக்கவல்ல ஒரு தெய்வத்தின் பெயரை இக்குழந்தைக்கு வைக்கவேண்டும் என்று நினைத்தான். அப்போது ஒருவன் "செல்வத்துக்கு அதிபதியான குபேரனுடைய பெயரை வைக்கலாமே!" என்று கூறினான். அதைக் கேட்ட ஆஸ்திகன் ஒருவன், செல்வத்துக்கு ஆசைப்பட்டு இவனுக்கு 'ஐளிபிளி'[1] என்று பெயர் இடுவதைக் காட்டிலும், பிச்சையெடுத்தாலும் எடுக்கட்டும் என்று 'நாராயணன்' என்ற பெயரை வைப்பதே சிறந்தது என்றானாம். இதை **நாலூர் ஆச்சான் பிள்ளை** *அருளிச் செய்ததாகத்* **திருவாய்மொழிப்பிள்ளை** *கூறுவர்.[2]*

[39]

வடுகநம்பி உடையவர் தீர்த்தத்தாலே கீழ்நாட்டில் க்ஷாமம் தீர்த்த வார்த்தையை இவ்விடத்தே ஸ்மரிப்பது.

(பெரியாழ்வார் திருமொழி 4-7-1 திருவாய்மொழிப்பிள்ளை வியாக்கியானம்)

நிகழிடம்

"கங்கை கங்கை என்ற வாசகத்தாலே கடுவினை களைந்திடகிற்கும் கங்கை" என்றருளிச்செய்கிறார் பெரியாழ்வார். தீர்த்தத்தின் மகிமையால் நன்மை ஏற்படும் என்பதை **ஐதிஹ்யம்** *ஒன்றின்மூலம் சுட்டிக்காட்டுகிறார் உரையாசிரியர்.*

1. குபேரனுடைய பல பெயர்களில் ஐலபில: என்பதும் ஒன்று. (அமரகோசத்தில் குபேரனுடைய பெயர்களைக் கூறும் பிரகரணத்தில் (1-71) ஐலபில: என்று குறிப்பிடப்படுவது காண்க. ஈடு 3-9-7ல் ஐலபில: என்ற பெயர் குறிப்பிடப்படவதும் காண்க) குபேரனுடைய மகன் என்று கூற வேண்டுமானால் அது வடமொழி இலக்கணப்படி ஐலிபிலி: என்றாகும். செல்வத்துக்கதிபதியான குபேரனுடைய மகன் என்ற பொருளில் ஐலிபிலி என்ற பெயர் வைப்பதைக் காட்டிலும் நாராயணன் என்ற பெயர் வைப்பது சிறந்தது என்கிறார்.

2. இவைதிஹ்யம் திருவாய்மொழிப்பிள்ளை வியாக்கியானத்திலும் உள்ளது. ஆனால் இவ்வார்த்தையை, ".......(நாலூர்)பிள்ளை அருளிச்செய்வரென்று (நாலூர்)ஆச்சான்பிள்ளை அருளிச்செய்வர்" என்றுள்ளது.

விளக்கம்

உடையவருடைய *ஸ்ரீபாததீர்த்தத்தால் கீழ்நாட்டில் ஏற்பட்டிருந்த பஞ்சத்தை வடுக நம்பி போக்கியமையை இங்கு நினைவு கூர்தல் பொருத்தமானது என்கிறார் உரையாசிரியர்.*

[40]

.... உடையவர் திருக்குருகைப்பிரான்பிள்ளானையும் அருளாளப்பெருமாள் எம்பெருமானாரையும் திருவுள்ளம்பற்றியிருக்குமாபோலேயும், பெரியநம்பி முதலானார் உடையவரைத் திருவுள்ளம்பற்றியிருக்குமாபோலேயும், நஞ்சீயர் நம்பிளைளையைத் திருவுள்ளம்பற்றியிருக்குமாபோலேயும், பெரியவடக்கில் திருவீதிப்பிள்ளை தம்மகனாரான லோகாசார்யரைத் திருவுள்ளம் பற்றியிருக்குமா போலேயும், வளர்த்ததனால் பயன்பெற்றுச் சிறப்புடைய மறையவர் வாழ் என்னுதல்.

(பெரியாழ்வார் திருமொழி 4-8-3 திருவாய்மொழிப்பிள்ளை வியாக்கியானம்)

விளக்கம்

“சிறப்புடைய மறையவர் வாழ் திருவரங்கம்” என்றருளிச்செய்கிறார் *பெரியாழ்வார். மறையவர்களுக்குச் சிறப்பாவது சிறந்த சீடர்களைப் பெற்றிருத்தல் என்ற கருத்தில் இதற்கு உரையிடும் உரையாசிரியர், சிறந்த சீடர்களைப் பெற்றிருந்த ஆசார்யர்களை* **உதாரணம்** *காட்டுகிறார்.*

விளக்கம்

திருக்குருகைப்பிரான்பிள்ளான், அருளாளப் பெருமாள் எம்பெருமானார் ஆகியோரை உடையவர் *மிக்க அன்பு செய்து அபிமானித்துத் திருவுள்ளம் பற்றியிருக்குமாபோலவும், உடையவரைப்* **பெரிய நம்பி** *முதலான ஆசார்யர்கள் திருவுள்ளம் பற்றியிருக்குமா போலவும்,* **நம்பிள்ளையை நஞ்சீயர்** *திருவுள்ளம் பற்றியிருக்குமாபோலவும், தம்முடைய திருமகனாரான* **பிள்ளை லோகாசார்யரை வடக்குத் திருவீதிப் பிள்ளை** *திருவுள்ளம் பற்றியிருக்குமாபோலவும், சிறந்த சீடர்களைப் பெற்று, வளர்த்ததனால் பயன் பெற்றுள்ள மறையவர்கள் வாழும்படியான திருவரங்கம் என்று கூறுகின்றார் உரையாசிரியர்.*

[41]

வராஹ கல்பம் வாசியா நிற்கச் செய்தே ‘ஸ்ரீவராஹநாயனார்க்கு முத்தக்காசை அமுது செய்விப்பது’ என்று கிடந்ததாய், “இதென்ன மெய்ப்பாடுதான்!” என்று நஞ்சீயர் வித்$_2$க$_4$ராயருளுவர் என்று ப்ரஸித்$_2$த$_4$மிறே.

(பெரியாழ்வார் திருமொழி 4-8-8)

நிகழ்டம்

'வல்லெயிற்றுக் கேழலுமாய்' என்று எம்பெருமானுடைய வராஹ அவதாரத்தை அனுபவிக்கிறார் பெரியாழ்வார். இங்கு, 'கேழலும் ஆய்' என்றது, அப்படி வராஹமாக அவதரித்தபோது அந்த அவதாரத்தில் மிகவும் தாழ்ந்த விலங்கினமாகிய பன்றியின் தன்மைகளை உண்மையாகவே எம்பெருமான் கொண்ட மெய்ப்பாடு அருளிச் செய்யப்படுகிறது. இதைக் குறித்து நஞ்சீயர் அருளிச்செய்த **வார்த்தை** ஒன்று எடுத்துக் காட்டப்பெறுகிறது.

விளக்கம்

வராஹகல்பம் என்னும் நூலை வாசித்துக் கொண்டு வருகிறபோது[1] ஸ்ரீவராஹப்பெருமானுக்கு முத்தக்காசு[2] (கோரைக் கிழங்கு) அமுது செய்விக்க வேண்டும் என்றிருப்பதைக் கண்ட **நஞ்சீயர்**, "மனிதர்கள் உண்ணாத கோரைக்கிழங்கைப் பன்றிகள் மிகவும் விரும்பியுண்ணும். பன்றியுருக் கொண்ட எம்பெருமான், அந்தப் பன்றிகள் உண்கிற கோரைக் கிழங்கையும் உண்ணுமளவுக்கு அந்த அவதாரத்தில் மெய்ப்பாடு கொண்டிருந்தானே! இது என்ன ஆச்சரியம்!" என்று வியந்து கூறினார்.[3]

(ராவணனுக்கு உதவி செய்வதற்காக மாரீசன் மான் வேடம் பூண்டு வந்தான். அந்த மானை மற்ற மிருகங்கள் முகர்ந்து பார்த்தபோது ராக்ஷஸ வாசனை வீசியதால், மிருகங்கள் மாயமானின் அருகில் வராமல் பயந்து ஓடிவிட்டனவாம். ஆனால் எம்பெருமான் பன்றியாக வந்தபோது மற்ற பன்றிகளும் 'நம்மினம்' என்று கொண்டு உடலால் உராயுமளவுக்கு அந்த அவதாரத்தில் மெய்ப்பாடு கொண்டானாம். அதையே நஞ்சீயர் வியந்து போற்றுகிறார்.)

[42]

பிள்ளை திருநறையூரரையரும் ப$_4$ட்டரும் ப்ரத$_3$க்ஷிணம் பண்ணாநிற்கப் பின்னே ஸேவித்துக் கொண்டு போனேன். அல்லாதாரெல்லாரும் கடுங்குதிரை போலே வாராநிற்க, இவர்கள் திருக்கோபுரங்களையும், திருமாளிகைகளையும் கண்ணாலே பருகுவாரைப்போலே பார்த்து மகிழ்ந்து கொண்டு வருகிறபடியைக்

1. வராஹ புராணத்தில் வராஹப் பெருமானுக்கு முத்தக்காசு (கோரைக்கிழங்கு) அமுது செய்யப்பண்ணும்படி கூறப்பட்டிருக்கிறது.
2. முஸ்தா என்கிற வடமொழிச் சொல்லுக்கு கோரைக்கிழங்கு என்று பொருள். அதுவே இங்கு முத்தக்காசு எனக்குறிக்கப்பட்டுள்ளது. இன்றும் ஸ்ரீவராஹபெருமான் கோயில் கொண்டுள்ள ஸ்ரீ முஷ்ணம் முதலான திவ்ய தேசங்களில் முஸ்தா சூர்ணம் அமுது செய்யப் பண்ணும் வழக்கம் இருந்து வருகிறது.
3. நஞ்சீயர் இவ்வாறு அருளிச்செய்தமை மற்றோரிடத்திலும் குறிப்பிடப்பெற்றுள்ளது. (எண் 448)

கண்டு, அல்லாதார்க்கும் இவர்களுக்கும் செயல் ஒத்திருக்க, இவர்களான வாசி தோற்றவிருந்தபடி என்! என்றிருந்தேன் காணும்!" என்று நஞ்சீயர் நம்பிள்ளைக்கு அருளிச் செய்தாரென்று ப்ரஸித்₃த₄மிறே.

(*பெரியாழ்வார் திருமொழி 4-9-3 மணவாளமாமுனிகள் வியாக்கியானம்*)

நிகழிடம்

"அணியரங்கம்" என்ற பெரியாழ்வார் அருளிச்செயலை விளக்கும் உரையாசிரியர், திருவரங்கமானது மாடங்கள், மாளிகைகள், திருமதிள்கள், திருக்கோபுரங்கள், திருச்சோலைகள் முதலானவற்றுடன் கூடி மிகவும் அழகுற அமைந்திருக்கும் என்றுரைத்து, இவ்வழகைக் கண்களால் பருகுவதுபோல் பார்த்துக் கொண்டே சென்ற பட்டரையும் பிள்ளை திருநறையூர் அரையரையும் பற்றி நஞ்சீயர் அருளிச்செய்த **ஐதிஹ்யம்** *ஒன்றை எடுத்துக் காட்டுகிறார்.*

விளக்கம்

பிள்ளை திருநறையூர் அரையரும், பட்டரும் *ஸ்ரீரங்கநாதன் திருக்கோயிலை ப்ரதக்ஷிணம் செய்வதற்காகச் செல்வார்களாம். மற்றவர்கள் எல்லோரும் மிகவும் வேகமாகக் கண்ணை மூடிக் கொண்டு ஓடும் குதிரை போலே வேகமாக பிரதக்ஷிணம் செய்து கொண்டிருக்க, இவ்விருவர் மட்டும் மிகவும் ஸாவதானமாக (ஊக்கமாக) அழகியமணவாளனுடைய மண்டபங்களையும், கோபுரங்களையும், ஸன்னிதிகளையும் கண்ணால் பருகுவது போல் பார்த்து மங்களாசாஸனம் செய்து கொண்டே போவார்களாம். இவர்களைப் பின் தொடர்ந்து சென்ற* **நஞ்சீயர்**, *"உண்பது உடுப்பது முதலிய செயல்களால் மற்ற மனிதர்களைப் போலவே இவர்களும் இருந்தாலும், இவர்களுக்கும் மற்றவர்களுக்கும் உள்ள வேறுபாடுதான் என்னே! அவர்கள் பிரதக்ஷிணம் செய்வதையும் ஏதோ கடனாக நினைத்து, வேக வேகமாகச் செய்து விட்டுப் போக, இவர்கள் மிகவும் ஈடுபாட்டுடன் எம்பெருமானுடைய உடைமைகளை மனமார மங்களாசாஸனம் செய்து கொண்டு எழுந்தருள்கிறார்களே!" என்று வியந்து, இதைத் தம்முடைய சீடரான* **நம்பிள்ளைக்கும்** *அருளிச் செய்தார் என்பது மிகவும் பிரசித்தமானது.*[1]

[43]

"इदं तु ते गुह्यतमं प्रवक्ष्यामि" (இத₃ம் து தே கு₃ஹ்யதமம் ப்ரவக்ஷ்யாமி) என்றவோபாதி, "इदं ते नातपस्काय" (இத₃ம் தே நாதபஸ்காய) என்கிற இதுவும் முன்னே சொல்லிக் கொள்ளவிறே அடுப்பது. அங்ஙன் செய்யாதே முந்துற

1. இந்நிகழ்ச்சி மற்றும் நான்கு இடங்களில் குறிப்பிடப்பெற்றுள்ளது. (எண் 221, 494, 675, 797)

அர்த்தூத்தையருளிச் செய்து வைத்துப் பின்னை இத்தையருளிச் செய்வானென்?" என்று சீயர் பட்டரைக் கேட்க, "த்ரௌபதி குழல் விரித்துக்கிடக்கையாலே செய்வதறியாமல் மூலையிலே கிடந்தாரை முற்றத்திலே இடுவாரைப் போலே, பரமரஹஸ்யமானத்தை வெளியிட்டுக் கொண்டு நின்றான். பின்னை அர்த்தூத்தின் சீர்மையை அநுஸந்தியா, கைப்பட்ட மாணிக்கத்தைக் கடலில் பொகட்டோமென்று புகண்புகணென்றான் காணும்" என்றிறே அருளிச் செய்தது.

(பெரியாழ்வார் திருமொழி 4-9-6 மணவாளமாமுனிகள் வியாக்கியானம்)

நிகழிடம்

"மைத்துனன்மார் காதலியை மயிர்முடிப்பித்து" என்றருளிச்செய்கிறார் பெரியாழ்வார். 'கௌரவர்களின் இரத்தத்தைப் பூசியல்லது என்னுடைய குழலை முடியமாட்டேன்' என்று சபதம் செய்திருந்த திரௌபதி குழல் முடிக்கைக்காகவே கண்ணபிரான் தூதுசென்றது, தேரோட்டியது, கீதையை உபதேசித்தது முதலிய செயல்களைச் செய்தான். இதை விளக்குகின்ற உரையாசிரியர், இக்கருத்தை உறுதிப்படுத்தும் **ஸம்வாதம்** *ஒன்றை எடுத்துக் காட்டுகிறார்.*

விளக்கம்

பாரதயுத்தத்தின் போது, போர் செய்வதற்குத் தயங்கிய அர்ஜுனனைப் போர் செய்யும்படித் தூண்டுவதற்காக ஸ்ரீமத் பகவத் கீதையை அருளிச் செய்த கண்ணபிரான் பக்தியைப் பற்றி உபதேசிக்கத் தொடங்கும் போது "இதந்து தே குஹ்யதமம் ப்ரவக்ஷ்யாமி" (9-1) (இப்போது உனக்கு மிகவும் ரகசியமான ஒன்றைச் சொல்லப்போகிறேன்) என்று கூறிவிட்டுப் பிறகுதான் பக்தியைப் பற்றி உபதேசித்தான். ஆனால் பிரபத்தியைப் பற்றி உபதேசிக்கும்போது எல்லாவற்றையும் உபதேசித்தபிறகு, "இதந்தே நாதபஸ்காய" (18-67) (இதை நீ தாழ்ந்தவனுக்குச் சொல்லிவிடாதே) என்று முடிவில் கூறினான். இதைப் பற்றி **நஞ்சீயர்,** *"பக்தியோகத்தைப் பற்றிக் கூறும்போது மிகவும் ரகசியமான ஒன்றைக் கூறப் போகிறேன் என்று கூறிப் பிறகு பக்தியோகத்தை உபதேசித்தது போலவே, மிகவும் ரகசியமானதும் உயர்ந்ததுமான பிரபத்தியைப் பற்றிக் கூறுவதற்கு முன்னாலும் 'இதை ஒருவர்க்கும் சொல்லிவிடாதே' என்றன்றோ கூறியிருக்கவேண்டும்? பிரபத்தியோகத்தை உபதேசித்த பிறகு முடிவில் "இதம் தே நாதபஸ்காய" என்று கூறுவதற்குக் காரணமென்ன?" என்று கேட்டார். இதற்கு* **பட்டர்,** *"கண்ணபிரானிடத்தில் மிகுந்த பக்தியுள்ளவளான திரௌபதி கௌரவர்களுடைய ரத்தத்தைப் பூசியல்லது தன் குழலை முடிப்பதில்லை என்று சபதம் செய்து விட்டாள். எப்படியாவது அவளுடைய சபதத்தை நிறைவேற்றித் தந்துவிடவேண்டும் என்பதற்காக 'மூலையிலே கிடந்தாரை (விளக்குமாற்றை) முற்றத்திலே இடுவதுபோல, அர்ச்சுனனை முன்னிறுத்தி பாரத யுத்தத்தையும் மூட்டிவிட்டான் கண்ணன். ஆனால் போர் தொடங்கும் சமயத்தில் அர்ஜுனனோ*

தயங்கினான்; எப்படியாவது போரை நடத்தி, எதிரிகளைக் கொன்று, திரௌபதியின் சபதத்தை நிறைவேற்றி விடவேண்டும் என்று நினைத்த கண்ணனுக்கு அப்போது என்ன செய்வது என்றே புரியவில்லை. அர்ஜுனனைப் போரில் ஈடுபடுத்தவேண்டும் என்பதற்காக மிகவும் உயர்ந்ததும் ரகசியமானதுமான பிரபத்தியோகத்தை உபதேசித்துவிட்டான். உபதேசித்த பிறகுதான் கண்ணன் தான் உபதேசித்த அர்த்தத்தின் பெருமையை நினைத்தான். 'ஐயோ மிக ரகசியமானதும் உயர்ந்ததுமான அர்த்தத்தை இப்படி நீசர் நடுவே அர்ஜுனனுக்கு உபதேசித்துவிட்டோமே! கையிலே கிடைத்த மாணிக்கத்தைக் கடலிலே எறிவது போல் இப்படிச் செய்துவிட்டோமே! என்று அவனுடைய நெஞ்சு பதண், பதண் என்று அடித்துக் கொண்டது. எனவேதான் அவன் இப்படிப்பட்ட உயர்ந்த அர்த்தத்தைத் தாழ்ந்தவர்களுக்குச் சொல்லிவிடாதே, என்று முடிவில் கூறினான்" என்று விடையளித்தார்.[1]

[44]

(மறையோர்கள் ஏத்தும் ஆயர்கள் ஏற்றினை) ... பெரிய பெருமாளை க்ருஷ்ணாவதாரமாகவிறே நம்பூர்வாசார்யர்கள் அநுஸந்திப்பது. कूर्मव्याग्रीनखपरिमिलत्पञ्चहेती यशोदानद्धामौग्ध्याभरणमधिकं नस्समाधिं धिनोति॥ **(கூர்மவ்யாக்$_3$ரீ நக$_2$பரிமிளத்பஞ்சஹேதீ யஶோத$_3$ா நத்$_3$த$_4$ா மௌக்$_3$த்$_4$யாப$_4$ரண மதி$_4$கம் நஸ்ஸமாதி$_4$ந்தி$_4$நோதி) என்று, யஶோதைப் பிராட்டி பிள்ளைப் பணியாகச் சாத்தின திருவாபரணம் இப்போதும் பெரிய பெருமாள் திருக்கழுத்திலே கிடக்கிறது என்று கண்டு அனுபவித்தாரிறே பட்டர். ஆகையால் இவ்விடத்தில் 'மறையோர்கள்' என்கிறது திருப்பாணாழ்வார், பட்டர் போல்வாரை.**

(பெரியாழ்வார் திருமொழி 4-10-10 மணவாளமாமுனிகள் வியாக்கியானம்)

நிகழிடம்

அரங்கத்தது அரவணைப் பள்ளியானைப் பற்றிப் பதிகம் அருளிச்செய்கின்ற பெரியாழ்வார், 'மறையோர்களால் துதிக்கப்படும் ஆயர்கள் தலைவன்' என்று அருளிச்செய்கிறார். பூர்வாசாரியர்கள் பெரியபெருமாளை (ஸ்ரீரங்கநாதனான மூலவரை) கண்ணனாகவே அனுபவித்துள்ளார்கள் என்றருளிச்செய்த உரையாசிரியர், இத்தொடர்பில் பட்டர் அருளிச்செய்த **சுலோகம்** ஒன்றை மேற்கோளாக எடுத்துக் காட்டுகிறார்.

விளக்கம்

யசோதைப்பிராட்டி, தன் குழந்தையான கண்ணபிரானுக்குச் சாத்தின அச்சுத்தாலி, ஆமைத்தாலி முதலிய திருவாபரணங்கள் இன்றும் பெரியபெருமாளுடைய திருமேனியில் விளங்குகின்றன என்று பராசரபட்டர்

1. இவ்வைதிஹ்யம் மற்றோரிடத்திலும் உள்ளது. (எண் 514)

தமது ஸ்ரீரங்கராஜஸ்தவத்தில் (1-111) இந்த சுலோகத்தில் அருளிச்செய்துள்ளார். (திருப்பாணாழ்வார் 'கோவலனாய் வெண்ணெய் உண்ட வாயன் - அணியரங்கன்' என்று அருளிச்செய்துள்ளார்.) இவ்வாறு பெரியபெருமாளைக் கண்ணபிரானாக அனுபவித்துள்ள திருப்பாணாழ்வார், பட்டர் போல்வாரையே இங்குப் பாசுரத்தில் உள்ள 'மறையோர்கள்' என்ற சொல் குறிக்கின்றது என்று உரையாசிரியர் அருளிச்செய்கிறார்.

[45]

(இங்குப் புகேல்மின்) "இங்கு என்று திருப்பல்லாண்டோடே அந்வயம் உடையார் எல்லாரையும் கூட்டிக் கொள்ளுகிறார்" என்று ப$_4$ட்டர்.

(பெரியாழ்வார் திருமொழி 5-2-4)

நிகழிடம்

தம்முடைய திருவுள்ளத்தையே எம்பெருமான் தனக்கு இருப்பிடமாகக் கொண்டு விட்டபடியால், உடல் நோய்கள் அல்லது பிறவி நோய் எதுவும் தம்மை அணுகவொண்ணாதபடிக்குக் காவல் ஏற்பட்டவிட்டுது என்று கூறி நோய்களை விரட்டுகிறார் ஆழ்வார். அப்படி அருளிச் செய்யும்போது, ஒரு பாசுரத்தில் நோய்களை நோக்கி, 'இங்குப் புகேல்மின்!' என்று அருளிச்செய்கிறார். இதற்கு பட்டர் அருளிச்செய்யும் **நிர்வாஹம்** எடுத்துக் காட்டப் பெறுகிறது.

விளக்கம்

"இங்கு என்று தம்மை மட்டும் பெரியாழ்வார் குறிப்பிட்டுக் கொள்ளவில்லை. தாம் திருப்பல்லாண்டு பாடியபோது, தாம் மட்டும் பல்லாண்டு பாடியதில் திருப்தியடையாமல் மற்றுமுள்ள அநந்யப்ரயோஜனரையும், முன்பு கைவல்யத்தை விரும்புபவர்களாகவும், ஐச்வர்யத்தை விரும்புபவர்களாகவும் இருந்து, பின்பு தமது உபதேசத்தால் அநந்யப்ரயோஜனர்களாய்த் திருந்தினவர்களையும் தம்மோடு கூட்டிக் கொண்டு பல்லாண்டு பாடினார். அப்படித் தம்மோடு சேர்ந்து திருப்பல்லாண்டு பாடிய எல்லோரையுமே சேர்த்துத்தான் இங்கு (=நாங்கள் இருக்கும் இவ்விடத்தில்) என்று குறிப்பிடுகிறார்" என்று பட்டர் அருளிச் செய்வாராம். (திருப்பல்லாண்டு பாடுபவர் அனைவரையுமே நோய்கள் அண்டக் கூடாது என்பது பட்டர் தரும் விளக்கத்தின் கருத்து.) 'கடல் சூழ்ந்த மன்னுலகம் வாழ!' என்றும், 'லோகாஸ் ஸமஸ்தாஸ் ஸுகிநோபவந்து' என்றும் கூறியுள்ளபடி உலகனைத்தும் வாழவேண்டும் என்றே மகான்கள் ஆசைப்படுவர்.

[46]

'எம்மனா!' 'என் குலதெய்வமே!' 'என்னுடை நாயகனே!' என்கிற இம்மூன்றாலும் ஜ்ஞான விரோதி$_4$யும் ஆஶ்ரயண விரோதி$_4$யும், மோக்ஷ

விரோதி$_4$யும் போனபடியென்று ஆளவந்தார். தே$_3$ஹாத்மாபி$_4$மானமும், அந்ய ஶேஷத்வமும் ஸ்வஸ்வாதந்த்ர்யமும் கழிந்தபடியென்று உடையவர்.

(பெரியாழ்வார் திருமொழி 5-4-3 மணவாளமாமுனிகள் வியாக்கியானம்)

நிகழ்டம்

'எம்மனா! என் குலதெய்வமே! என்னுடைநாயகனே!' என்று பெரியாழ்வார் அருளிச் செய்கிறார். இதற்கு ஆளவந்தார், உடையவர் ஆகிய இருவரும் அளித்த **நிர்வாஹங்கள்** காட்டப்படுகின்றன.

விளக்கம்

'எம் அனா' என்பது என்னுடைய அன்னையே என்று கூறுகிறபடி. தாய் முலைப்பால் கொடுப்பது போலே எனக்கு ஞானத்தைக் கொடுத்தவனே என்பது பொருள். அதாவது ஸ்ரீமந் நாராயணனுக்கே அடிமைப்பட்டவன் என்கிற சேஷத்வ ஞானத்தைக் கொடுத்தபடி சொல்லுகிறது. இந்த ஞானத்துக்கு விரோதி, வேறு சிலர்க்கு அடிமைப்பட்டிருக்கையாகிற அந்ய சேஷத்வம். எனவே எம்மனா என்பது ஜ்ஞான விரோதி போனபடி சொல்லுகிறது. 'என்குலதெய்வமே!' என்பதற்கு என் குலத்துக்குப் பரதேவதையானவனே என்று பொருள். இதனால் வேறொரு தேவதையையும் அடிபணிகையாகிற பகவதாச்ரயண (பகவானைப் பற்றுவதற்கு) விரோதி போனபடி சொல்லுகிறது. 'என்னுடைநாயகனே!' என்கிற இத்தால், அவன் தன்னுடைய திருவடிகளில் சேர்த்துக் கொண்டமை சொல்லுகிறது. இதனால் மோக்ஷத்திற்கு விரோதியாகிற ஸம்ஸாரம் போனபடி சொல்லுகிறது. இது ஆளவந்தாருடைய விளக்கம்.

'எம்மனா!' என்பதனால் ஞானம் பெற்றமை சொல்லப்படுகிறது. ஞானமாவது உடலைக் காட்டிலும் ஆத்மா வேறுபட்டது என்கிற அறிவு. இதனால் தேஹமே ஆத்மா என்கிற விரோதி கழிந்ததைச் சொல்லுகிறது. 'என் குலதெய்வமே!' என்பது, குலத்துக்கெல்லாம் ஒரே முதல்வன் என்பதை உணர்த்துகிறது. எனவே வேறொருவர்க்கு அடிமைப்பட்டிருத்தலாகிற அந்யசேஷத்வம் கழிந்ததைச் சொல்லுகிறது. 'என்னுடை நாயகனே!' என்பது எனக்குத் தலைவன் என்ற பொருளை உணர்த்துகிறது. எனவே, தானே தனக்கு யஜமானன் என்ற நினைவாகிய ஸ்வஸ்வாதந்தர்யம் கழிந்ததைச் சொல்லுகிறது. இது உடையவருடைய விளக்கம்.

[47]

(தூறுகள் பாய்ந்தனவே) "தூறு என்கிறது ஸம்ஸாரிகளை" என்று திருக்கோட்டியூர்நம்பி அருளிச் செய்வர்.

(பெரியாழ்வார் திருமொழி 5-4-3)

நிகழ்டம்

எம்பெருமானோடு தொடர்பு பற்றிய ஞானம் ஏற்பட்ட பிறகு பாவங்கள் எல்லாம் ஓடிப்போய் தூறு (புதர்)களில் ஒளிந்து கொண்டன என்கிறார் பெரியாழ்வார். இதற்குத் திருக்கோட்டியூர் நம்பி அருளிச்செய்த **நிர்வாஹம்** எடுத்துக் காட்டப்பெறுகிறது.

விளக்கம்

இங்குத் தூறு என்பது ஸம்ஸாரிகளைக் குறிக்கின்றது என்பராம் **திருக்கோட்டியூர் நம்பி.** அதாவது எம்பெருமானை அறிந்துகொண்டவனுடைய பாவங்கள் ஸம்ஸாரிகளைச் சென்று அடைகின்றன[1] என்பது திருக்கோட்டியூர் நம்பியுடைய விளக்கத்தின் கருத்து. (தூறு என்பது செடி அது கிளைவிட்டு கிளை படருவது போல, ஸம்ஸாரமும் கிளை கிளையாகப் பரவி கிடப்பது காரணமாக அப்படி அருளிச் செய்தார்.)

[48]

'நெஞ்சிடிந்துகும்' என்று, "நெஞ்சுமழிந்து, உடலும் உருகும் என்று இட்ட கரையுமழிந்து, ஸ்வரூபமும் அளவுபட்டிருக்க, இவர் தேக்கிக் கொண்டபடி எங்ஙனே?" என்று சீயர் பட்டரைக் கேட்க, "விட்டுசித்தன் மனம் என்று அவ்வம்ருதம் வ்யாபித்த இடமெல்லாம் திருவுள்ளமும் வ்யாபிக்கும்" என்றருளிச்செய்தார்.

(பெரியாழ்வார் திருமொழி 5-4-4 மணவாளமாமுனிகள் வியாக்கியானம்)

நிகழ்டம்

"கடல்கடைந்தமுதங்கொண்டு கலசத்தை நிறைத்தாற்போல் உடலுருகி வாய்திறந்து மடுத்துன்னை நிறைத்துக் கொண்டேன்" (கடலைக் கடைந்து அமுதத்தையெடுத்துக் கலசத்தினுள் நீ நிறைத்தது போல, நான் உடல் உருகப் பெற்று வாயைத் திறந்து கொண்டு உன்னை உட்கொண்டு என்னுள்ளே தேக்கிக் கொண்டேன்) என்று பெரியாழ்வார் அருளிச்செய்துள்ளார். ஸம்ஸாரமாகிய கடலைக்கடைந்து ஈச்வரனாகிய அமுதத்தை யெடுத்து, ஆத்மாவாகிய கலசத்தில் நிறைத்துக் கொண்டார் ஆழ்வார். அப்படி நிறைத்துக் கொண்டு, பகவானை அனுபவிக்கும்போது உடலும் உருகப் பெற்றது என்கிறார் பெரியாழ்வார். இங்கு 'நினைதொறும் சொல்லுந்தொறும் நெஞ்சு இடிந்துகும்' (திருவாய்மொழி

1. எம்பெருமானைப் பற்றிய ஞானமடைந்து மோக்ஷம் அடைபவர்களுடைய பாவங்கள் அவர்களுடைய விரோதிகளை அடைகின்றன என்று உபநிஷத்துக்கள் கூறுகின்றன. "தஸ்ய புத்ரா: தாயமுபயாந்தி த்விஷந்த: பாபக்ருத்யாம் ஸுஹ்ருத: ஸாது க்ருத்யாம்" (முக்தனுடைய பிள்ளைகள் சொத்தை அடைகிறார்கள்; விரோதிகள் பாவங்களையும், நண்பர்கள் புண்ணியங்களையும் அடைகின்றார்கள்) என்று கௌஷீதகீ உபநிஷத் கூறுகிறது.

9-6-2) என்று கூறியுள்ளபடி உருவற்ற நெஞ்சே உருகும் என்றால் உடல் உருகச் சொல்ல வேணுமோ? என்ற உரையாசிரியர், இத்தொடர்பில் நஞ்சீயருக்கும் பட்டருக்கும் இடையே நடந்த **ஸம்வாதம்** ஒன்றை எடுத்துக்காட்டுகிறார்.

விளக்கம்

“இப்படி உடலும் நெஞ்சும் உருகிவிட்டால் பின்னர் அணு உருவாகிய ஆத்மாவில் எம்பெருமானாகிற அமுத வெள்ளத்தைப் பெரியாழ்வார் தேக்கிக் கொண்டது எப்படி?” என்று **நஞ்சீயர்** கேட்க, “ ‘விட்டுசித்தன் மனத்தே கோயில் கொண்ட கோவலன்’ (5-4-10) என்று எம்பெருமான் எப்போதும் பெரியாழ்வாருடைய நெஞ்சையே இருப்பிடமாகக் கொண்டிருப்பதாக அவரே அருளிச் செய்துள்ளபடியால், எங்கெங்கெல்லாம் எம்பெருமானாகிற அமுதம் பரவியிருக்கிறதோ அங்கெல்லாம் அந்த எம்பெருமானுக்கு இருப்பிடமாக பெரியாழ்வாருடைய நெஞ்சும் பரவியேயிருக்கும் என்று கொள்வீராக!” என்று **பட்டர்** விடைளித்தார்.

[49]

(சாயை போலப் பாட வல்லார் தாமும் அணுக்கர்களே) எம்பாரைச் சிலர் “இப்பதூத்துக்குப் பொருளென்?” என்று கேட்க, “நான் உடையவர் ஸ்ரீபாதத்திலே இது கேட்டிலேன்; ஆகிலும் நீங்கள் கேட்ட அர்த்தம் போராதென்ன வொண்ணாது. இப்போதே கேட்டு உங்களுக்குச் சொல்ல வொண்ணாதபடி உடையவரும் திருக்கோட்டியூர் நம்பி ஸ்ரீபாதத்தேற வெழுந்தருளினார். ஆகிலும் உங்களுக்கு இப்போதே சொன்னேனாக வேணும்” என்று உடையவர் திருவடி நிலைகளையெடுத்துத் தம் திருமுடியிலே வைத்துக் கொண்டு, “இப்போது உடையவர் எனக்கருளிச் செய்தார், கேட்கலாகாதோ என்று, பாடவல்லார் - சாயை போல - தாமும் அணுக்கர்களே!” என்றருளிச் செய்தார்.

(பெரியாழ்வார் திருமொழி 5-4-11 மணவாளமாமுனிகள் வியாக்கியானம்)

நிகழ்டம்

“சாயைபோலப் பாடவல்லார் தாமும் அணுக்கர்களே” என்று பெரியாழ்வார் அருளிச்செய்துள்ளார். இதற்கு எம்பார் பொருளுரைத்த **ஐதிஹ்யம்** ஒன்று எடுத்துக்காட்டப்பெறுகிறது.

விளக்கம்

உடையவர் ஒருசமயம் திருக்கோட்டியூர் நம்பியைச் சேவிப்பதற்காக திருக்கோட்டியூருக்கு எழுந்தருளியிருந்த சமயம் எம்பாரிடம் வந்த சிலர் ‘சாயைப் போலப் பாட வல்லார் தாமும் அணுக்கர்களே!’ என்கிற (பெரியாழ்வார் பாசுர) வரிகளுக்குப் பொருள் என்ன என்று கேட்டார்கள். (சாயை என்பதற்கு நிழல்

என்பது பொருள். 'சாயைபோலப் பாடவல்லார்' என்பதற்கு நிழல் போலப் பாடவல்லவர்கள் என்று பொருள்கொண்டால் பொருந்தவில்லை. எனவேதான் அவர்கள் எம்பாரிடம் வந்து இப்படிக் கேட்டனர்.) அதற்கு எம்பார் "இதற்கு *நான் உடையவரிடம் பொருள் கேட்டிலேன். இப்போதே அவரைக் கேட்டு உங்களுக்குச் சொல்லலாம் என்று பார்த்தால் அவர் திருக்கோட்டியூர் நம்பியைச் சேவிப்பதற்காகத் திருக்கோட்டியூருக்கு எழுந்தருளியிருக்கிறார். இதன் பொருள் எனக்குத் தெரியாது என்று சொல்லிவிடுவதும் அழகல்ல. எனவே உங்களுக்கு இப்போதே நான் பொருள் சொல்லி ஆக வேண்டும். அதற்கும் ஒரு வழி உண்டு" என்று சொல்லிவிட்டு, உள்ளே சென்று உடையவருடைய பாதுகைகளை எடுத்துத் தம் திருமுடி மீது வைத்துக் கொண்டு எம்பெருமானார் திருவடிகளையே தியானித்துக் கொண்டு யோசித்தார். உடனே பாசுரத்தின் பொருள் எம்பாருக்குப் புரிந்துவிட்டது. தன்னைக் கேட்டவர்களைப் பார்த்து, "இப்போது எம்பெருமானாருடைய அருளாலே இப்பாசுரத்தின் பொருளை நான் தெரிந்து கொண்டுவிட்டேன்; கேளுங்கள். அந்தணர்கள் அமுதமான பெரியாழ்வார் திருமொழிப் பாசுரங்களைப் பாட வல்லவர்கள், எம்பெருமானுக்கு சாயை போல - நிழல் போல - அணுக்கர்கள் - நெருங்கியிருக்கப் பெறுவர்கள் என்பதுதான் இவ்வடியின் பொருள் என்று அருளிச் செய்தார்.*[1]

[50]

எம்பெருமானாரை "ஓர் உரு திருப்பாவைக்கு அர்த்தம் அருளிச் செய்ய வேணும்" என்ன, "திருப்பல்லாண்டுக்கு ஆள் கிடைக்கினும், திருப்பாவைக்கு ஆள் கிடையாது" என்றருளிச் செய்தார். "மோவாயெழுந்த முரடர் கேட்கைக்கு அதிகாரிகளல்லர். முலையெழுந்தார் கேட்க வேணும்; அவர்களிலும் பரிவாணிச்சிகளான பிராட்டிமார்க்கும் கேட்க நிலமல்ல. பல சொல்லியென்? பத்து ஆழ்வார்களுடைய ஸாரபூ$_4$தையான தானே சொல்லித் தானே கேட்குமித்தனை" என்று அருளிச் செய்தார்.

(திருப்பாவை ஈராயிரப்படி அவதாரிகை)

1. எம்பார் ஆழ்வார்களுடைய பாசுரங்களுக்கு விளக்கமளிப்பதில் மிகவும் வல்லவர் என்றும் அரையர்களுக்கும் தகுந்த அபிநயங்களைக் குறிப்பால் உணர்த்தியிருப்பவர் என்றும் அச்சமயங்களில் எம்பெருமானாரும் எம்பாரைப் பாராட்டி யிருக்கிறார் என்றும் பல இடங்களில் கூறப்பட்டுள்ளன. (எண் 8 பார்க்க.) அப்படிப்பட்டவர், கேட்காத பாசுரமொன்றின் பொருளை எம்பெருமானாருடைய அருளாலேயே தாம் அறிந்து கொண்டதாக கூறுவதிலிருந்து அவருடைய ஆசார்ய பக்தி புலப்படுகிறது. (திருவாய்மொழிப்பிள்ளை வியாக்கியானத்தில், "பாடவல்லார் சாயை போலே தாமும் அணுக்கர்களே என்று எம்பார் யோஜனை" என்றுள்ளது.)

நிகழிடம்

திருப்பாவையின் அவதாரிகையில், திருப்பாவையின் பெருமை குறித்து எம்பெருமானார் அருளிச்செய்த **வார்த்தையை** *உரையாசிரியர் எடுத்துக் காட்டுகிறார்.*

விளக்கம்

'ஒரு முறை திருப்பாவைக்குப் பொருள் அருளிச் செய்ய வேண்டும், அதாவது ஒருமுறை திருப்பாவை காலக்ஷேபம் ஸாதிக்க வேண்டும்' என்று சிலர் **எம்பெருமானாரைக்** *கேட்டார்கள். அதற்கு அவர் "பெரியாழ்வார் அருளிச் செய்த திருப்பல்லாண்டுக்கு ஆள் கிடைத்தாலும் கிடைக்கும்; ஆனால் ஆண்டாள் அருளிச் செய்த திருப்பாவைக்கு ஆள் கிடைப்பது அரிது[1] இந்த திருப்பாவையைச் சொல்வதற்கும் கேட்பதற்கும், மோவாய் எழுந்த (தாடிமீசை முளைத்த) ஆண்கள் தகுதி படைத்தவர்களல்லர். முலைகள் அமையப் பெற்ற பெண்களே அதற்குத் தகுதியானவர்கள்.[2] அவர்களிலும் மிகவும் பரிவுடையர்களான மற்ற பிராட்டிகளுக்கும் கேட்பதற்குத் தகுதி இல்லை. அவ்வளவு ஏன்? ஆழ்வார்கள் பதின்மருக்கும் ஒரே பெண்பிள்ளையான ஆண்டாள்[3] தானே சொல்லித் தானே கேட்க வேண்டும். (எனவே திருப்பாவையின் பொருளை ஆண்டாளுடைய மனப்பாங்குடன் சொல்வதற்கு நானும் தகுதிபடைத்தவனல்லன்; கேட்பதற்கு நீங்களும் தகுதிபடைத்தவர்கள் அல்லீர்கள்)" என்று பதில் அருளிச் செய்தார்.*

1. பெரியாழ்வார் அருளிச் செய்த திருப்பல்லாண்டில் "கூழாட்பட்டு நின்றீர்களை எங்கள் குழுவினில் புகுதலொட்டோம்" என்றும், "வரம்பொழி வந்தொல்லைக் கூடுமினோ" என்றும் ஐச்வர்யம், கைவல்யம் இவைகளை ஆசைப்பட்டவர்களை நோக்கி, அவர்கள் ஆசைப்பட்ட அவற்றை விட்டுவிட்டே வரவேண்டும் என்று உறுதியாகக் கூறுகிறார். ஆனால் அப்படிப்பட்ட திருப்பல்லாண்டுக்கு ஆள் கிடைத்தாலும் கிடைக்கும்; திருப்பாவைக்கு ஆள் கிடைப்பது அரிது என்று எம்பெருமானார் கூறுகிறார். ஏனெனில் ஆண்டாளுடைய மனப்பாங்குடன் திருப்பாவையின் பொருளைச் சொல்வது ஒருவர்க்கும் முடியாது என்பது அவருடைய கருத்து.

2. மோவாயெழுந்தார் - மோவாயில் தாடிமீசையெழுந்த ஆண்கள்; முலையெழுந்தார் - பெண்கள். 'முலையெழுந்தார்படி மோவாயெழுந்தார்க்குத் தெரியாதிறே' என்று பட்டர் அருளிச்செய்ததாகக் குறிப்பிடப்பெற்றுள்ளதை எண் 80, 151 ஆகியவற்றில் காண்க.

3. பத்து ஆழ்வார்களுடைய ஸாரபூதையான ஆண்டாள் என்பது ஆழ்வார்கள் பதின்மருடைய ஞானமும் பக்தியும் சீதனமாக வந்து ஒருங்கே அமையப் பெற்றவள் என்ற கருத்துடையது. மணவாள மாமுனிகளும் உபதேசரத்தின மாலையில் (24) "அஞ்சுகுடிக்கு ஒரு சந்ததியாய்" என்றருளிச் செய்வது காண்க.

[51]

அனந்தாழ்வான் திருமுக்குளத்திலே புக்குத் தடவினார். "இதுவென்?" என்ன, "அப்பெண்பிள்ளைகள் குளித்ததொரு மஞ்சட்கொழுந்தாகிலும் கிடைக்குமாகக் கருதிக் காண்" என்றார்.

(திருப்பாவை நாலாயிரப்படி அவதாரிகை)

நிகழ்டம்

திருப்பாவையின் அவதாரிகையில் ஆண்டாளுடைய நிலையினை விளக்குகின்ற உரையாசிரியர், திருவாய்ப்பாடியில் கோபிகைள் கண்ணபிரானை அனுபவித்ததுபோலத் தானும் அனுபவிக்க ஆண்டாள் ஆசைப்பட்டாள்; ஆயினும் அது நடைபெற்றது வெகுகாலத்திற்கு முன்னராகையாலே அவளுக்கு அவ்வாறு அனுபவிக்க இயலவில்லை என்றும், அக்காலத்தில் அவனோடு தொடர்பு பெற்ற யமுனையாறு, கோவர்த்தன மலை முதலியவற்றைக் கண்டாகிலும் தரிப்போம் என்று பார்த்தாள் என்றும் அருளிச்செய்து, இத்தொடர்பில், கண்ணனோடு தொடர்புடைய பொருள்களைக் காண ஆண்டாள் ஆசைப்பட்டதுபோலவே, ஆண்டாளோடு தொடர்புடைய பொருளைப் பெறவேண்டும் என்று அனந்தாழ்வான் ஆசைப்பட்டமையை **ஐதிஹ்யம்** *ஒன்றின்மூலம் எடுத்துக் கூறுகிறார்.*

விளக்கம்

அனந்தாழ்வான் ஸ்ரீவில்லிபுத்தூருக்கு எழுந்தருளியபோது அங்குள்ள திருமுக்குளத்தில் நீராடச் சென்றார். அங்கு குளத்தின் தண்ணீருக்கு அடியில் அவர் எதையோ தேடித் தடவிக் கொண்டிருப்பதைக் கண்ட சிலர், "என்ன தேடுகிறீர்?" என்று வினவியதற்கு, "ஆண்டாள் எழுந்தருளியிருந்தபோது தானும் தோழிகளுமாய், இத்திருக்குளத்தில் தானே நீராடியிருப்பாள். அப்படி நீராடியபோது தேய்த்துக் கொண்ட ஒரு மஞ்சள் கொழுந்தாவது இப்போது கிடைக்குமா என்று பார்க்கிறேன்" என்று அனந்தாழ்வான் கூறினாராம்.[1]

[52]

(மதிநிறைந்த) "பி$_4$க்ஷுக்கள் வாசல் ஆர்த்தர் கட்டணமாய்க் கிடக்குமாபோலே நந்த$_3$கோ$_3$பர் வாசல் க்ருஷ்ணனாலே புண்பட்ட பெண்கள் கட்டணமாய்க் கிடக்குமாய்க் கொள்ளீர்" என்று பட்டர்.

(திருப்பாவை 1 – ஆறாயிரப்படி)

1. பல நூறு ஆண்டுகளுக்கு முன்பு ஆண்டாள் இக்குளத்தில் நீராடியபோது தேய்த்துக் கொண்ட மஞ்சள் துண்டு இப்போது கிடைக்காது எனும் உண்மையை, ஆண்டாள் மீது அனந்தாழ்வானுக்கு உள்ள பக்தி மறக்கச் செய்துவிட்டது.

நிகழிடம்

கோபிகை பாவனையில் நோன்பு நோற்கின்ற ஆண்டாள், நோன்புக்கு வாய்த்த காலத்தை "மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாள்" என்று கொண்டாடுகிறாள். இங்கு 'மதி நிறைந்த' என்பதற்கு நிலவு முழுவதுமாக ஒளிர்கின்ற (பௌர்ணமி) நாள் என்று பொருளுரைத்த உரையாசிரியர், இதற்கு முன்னர் கண்ணனோடு சேருவதற்கு கோபிகைகள் இருளையே எதிர்பார்த்திருந்தனர் என்றுரைத்து, அத் தொடர்பில், "நந்தகோபன் கடைத்தலைக்கே நள்ளிருட்கண் என்னை உய்த்திடுமின்" என்று கோபிகை கதறுகின்ற (நாச்சியார்திருமொழி 12-3 பாசுரத்தை) மேற்கோளாகக் காட்டுகிறார். அங்கு 'நந்தகோபாலன் கடைத்தலை' என்பதற்கு பட்டர் அளித்த சுவைமிகு **வார்த்தை**யை எடுத்துக் காட்டுகிறார்.

விளக்கம்

கண்ணனால் நெஞ்சு புண்பட்ட பெண்கள், கண்ணபிரானுடைய தகப்பனான நந்தகோபன் வீட்டின் வாசலில் எப்போதும் கூட்டமாகத் திரண்டிருப்பர்களாம். தத்தம் உடலிலே நோய் உள்ளவர்கள் நடக்கவும் முடியாமல் கட்டணத்தில் (strecher) கொண்டுவரப்பெற்று மருத்துவன் வீட்டு வாசலில் திரண்டிருப்பதுபோலவே கண்ணபிரானாலே நெஞ்சு புண்பட்ட பெண்களனைவரும் நடக்க முடியாமையாலே கட்டணத்திலே தூக்கி வரப்பெற்று (பசலை மீதூர்ந்து) நந்தகோபன் வீட்டு வாசலிலே வரிசையாகக் காணப்படுவர் என்பராம் பட்டர்.[1] நந்தகோபன் திருமாளிகை வாசலைப் பார்த்தாலே, கண்ணன் தீம்பின் அளவை அறியலாம் என்பது பட்டர் கருத்து.

[53]

(மார்கழித் திங்கள்.......) ஆழ்வார் திருவரங்கப் பெருமாளரையர் எம்பெருமானார் கேட்டருளியிருக்க, 'ஒழிவில் காலமெல்லாம், ஒழிவில் காலமெல்லாம்' என்றிங்ஙனே ஒரு நாளெல்லாம் பாடிப்பாடிக் கண்ண நீரோடே விட்டுப்போம்.

(*திருப்பாவை 1 நாலாயிரப்படி*)

நிகழிடம்

கோபிகை பாவனையில் நோன்பு நோற்கின்ற ஆண்டாள், நோன்புக்கு வாய்த்த காலத்தை "மதிநிறைந்த நன்னாள்" என்று கொண்டாடுகிறாள். பகவானுக்குக் கைங்கர்யம் செய்யவேண்டும் என்று பிரார்த்திக்கின்ற காலமே கொண்டாடத் தக்கது என்பதற்குச் சான்றாக ஆழ்வார் திருவரங்கப் பெருமாள் அரையரைப் பற்றிய **ஐதிஹ்யம்** ஒன்று எடுத்துக் காட்டப்படுகிறது.

1. பட்டர் இவ்வாறு அருளிச்செய்தமை மற்றோரிடத்திலும் குறிப்பிடப் பெற்றுள்ளது. (எண் 147)

விளக்கம்

நம்மாழ்வார், தாம் எம்பெருமானுக்கு இடைவிடாமல் எல்லாக் காலங்களிலும் கைங்கர்யம் செய்யவேண்டும் என்று பாரித்து அருளிச்செய்த பாசுரம் "ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி வழுவிலா அடிமை செய்யவேண்டும் நாம்" (திருவாய்மொழி 3-3-1) என்பது. திருவரங்கன் திருமுன்பே, எம்பெருமானாரும் கேட்டுக்கொண்டு எழுந்தருளியிருந்தபோது, இப் பாசுரத்தை விண்ணப்பம் செய்த ஆழ்வார் திருவரங்கப் பெருமாள் அரையர் "ஒழிவில்காலமெல்லாம், ஒழிவில் காலமெல்லாம்" என்று இதையே நெடுநேரம் கண்ணும் கண்ணீருமாக விண்ணப்பம் செய்து மேலே பாசுரம் பாடாமல் நிறுத்திவிடுவாராம். (இப்படிக் கைங்கர்யம் செய்யப் பாரிக்கின்ற காலத்தைக் கொண்டாடியதுபோலவே ஆண்டாளும் காலத்தைக் கொண்டாடுகிறாள்.)

[54]

(இளம் சிங்கம்) இங்கு ஆண்டான், "மந்த்ரலிங்கம் தோற்றாமே சொல்லுகிறாள் காண்!" என்னுமாம்.

(திருப்பாவை 1 ஆறாயிரப்படி)

நிகழ்டம்

கண்ணபிரானைக் குறிப்பிடுகின்ற ஆண்டாள் அவனுடைய பெயரைக் கூறாமல் "யசோதை இளம் சிங்கம்" என்று அருளிச்செய்கிறாள். இப்படிப் பெயரை மறைத்துக் கூறுவதன் காரணத்தை முதலியாண்டான் அருளிச்செய்யும் **வார்த்தை**யைக் கொண்டு விளக்குகிறார் உரையாசிரியர்.

விளக்கம்

பகவானுடைய திருநாமங்களைக் கொண்ட மந்திரங்கள் மிகவும் ரகசியமாக உபதேசிக்கப்படவேண்டியவையாதலால், அம்மந்திரங்களை வெளிப்படையாகக் கூற நேரும் போது, அனைவரும் தெரிந்து கொண்டு விடக்கூடாது என்பதற்காக மந்திரங்களின் லிங்கத்தை (தனிப்பட்ட அடையாளங்களை) மறைத்தே கூறுதல் மரபு ஆகும். அதேபோல் ஆண்டாளும் கண்ணபிரான் மீதுள்ள பரிவால் அவனுக்கு யாரால் என்ன தீங்கு நேருமோ என்று அஞ்சி அவனுடைய பெயரை வெளிப்படையாகக் கூறாமல் 'அசோதை இளம்சிங்கம்' என்று மறைத்துக் கூறுகிறாள்' என்பராம் **முதலியாண்டான்.**

1. திருப்பாவை 25ம் பாசுர உரையில் ''பேர்சொல்லாதே 'ஒருத்தி' என்றது 'அத்தத்தின் பத்தாநாள்' என்றவர் மகளாகையாலே பயத்தாலே ஒளிக்கிறாள்'' என்று பெரியவாச்சான்பிள்ளையும், ''கம்ஸன் முடிந்து பழைநாள் பட்டிருக்கச் செய்தேயும் 'இன்னாள்' என்னாதே மறைத்துப் போருகிறார்கள், பொல்லாங்கு விளையும் என்னும் அச்சத்தாலே'' என்று அழகிய மணவாளப்பெருமாள் நாயனாரும் அருளிச்செய்துள்ளமை இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.

[55]

(இளஞ்சிங்கம்) "சிங்கக் குருகு" என்று ப$_4$ட்டர் அருளிச் செய்வர்.

(திருப்பாவை 1 மூவாயிரப்படி)

நிகழிடம்

கண்ணபிரானை ஆண்டாள் 'நந்தகோபன் குமரன்' என்றும் 'அசோதை இளம் சிங்கம்' என்றும் அருளிச்செய்கிறாள். கண்ணபிரான், தன்னுடைய தந்தையைக் கண்டால் மிகவும் பயத்துடன் அவனருகு செல்வானாதலால் 'நந்தகோபன் குமரன்' என்றும், தாயான யசோதையிடம் சிறிதும் அச்சமில்லாமல் செருக்கோடு செல்வானாதலால் 'அசோதை இளம் சிங்கம்' என்றும் ஆண்டாள் கூறுகிறாள் என்று உரையிட்ட பெரியவாச்சான்பிள்ளை, இதுகுறித்து பட்டருடைய **வார்த்தை** *ஒன்றையும் எடுத்துக் காட்டுகிறார்.*

விளக்கம்

'இளம் சிங்கம்' என்பதை **பட்டர்**, *'சிங்கக் குருகு' என்று வர்ணிப்பாராம்.*[1] *சிங்கக் குருகு*[2] *- சிங்கக் குட்டி. அதாவது கண்ணபிரான் செருக்குள்ள சிங்கக் குட்டி போல் யசோதையிடம் நடந்து கொள்வான் என்பது பட்டருடைய கருத்தாகும்.*

[56]

(நீராட) ப$_4$ட்டர் ஸ்ரீபாத$_3$த்தைக் கழுவித் தீர்த்தம் கொள்ளும் ஆண்டாள்.

(திருப்பாவை 1 ஆறாயிரப்படி)

நிகழிடம்

பெரியாழ்வார் பெண்பிள்ளையான ஆண்டாள் தன்னுடைய தோழிகளை மார்கழி நோன்பில் கலந்து கொள்ள அழைக்கும் போது 'நீராடப் போதுவீர்' என்றழைக்கிறாள். தன்னுடைய தோழிகளை அழைக்கும்போதும் கூட மிகவும் கௌரவமாக 'நீராட' என்று அழைக்க வேண்டுமோ என்றால், ஒருவர்க்கொருவர் சாதாரணமாகப் பழகுபவர்களேயானாலும், அவர்கள் எம்பெருமானுடைய அடியவர்கள் என்பதை வைத்துப் பார்க்கும்போது அவர்களை கௌரவந்தோற்ற அழைத்தல்வேண்டும்; வயிற்றில் பிறந்தவர்களானாலும் எம்பெருமானுடைய

1. திருப்பாவை நாலாயிரப்படியிலும் "சிங்கக் குருகு என்று பட்டர்" என்றேயுள்ளது. ஆனால் திருப்பாவை ஆறாயிரப்படி வியாக்யானத்தில் மட்டும் "சிங்கக் குருகு என்று ஆழ்வான் வார்த்தை" என்று இவ்வார்த்தையைக் கூரத்தாழ்வான் கூறியதாக உள்ளது.

2. விலங்குகங்களின் குட்டிகளைக் குட்டி என்றும் பறவைகளின் குஞ்சுகளைக் குருகு என்றும் கூறுவதுண்டு. இங்கு சிங்கக்குட்டி என்று கூறாமல் சிங்கக்குருகு என்றதால் கண்ணபிரான் பாய்ந்து பறக்கும் சிங்கம் என்ற கருத்தில் சிங்கக்குருகு என்று கூறியிருக்கலாம். 'மேலெழப்பாய்ந்து பிடித்துக் கொள்ளும் வெகுளுமேல்' என்று பெரியாழ்வார் திருமொழியில் (-4-7) அருளிச் செய்துள்ளதும் காண்க.

அடியவராக இருப்பவர்களானால் அவர்களைக் கௌரவிக்க வேண்டும். இதற்குச் சான்றாக ஒரு **ஐதிஹ்யம்** காட்டப்படுகிறது.

விளக்கம்

எம்பெருமானாருடைய சீடரான கூரத்தாழ்வானுடைய தேவிகள் திருநாமம் **ஆண்டாள்** என்பது. அவ்வாண்டாள், தன்னுடைய மகனான **பட்டருடைய** திருவடிகளை விளக்கின ஸ்ரீபாததீர்த்தத்தைப் பருகுவளாம்.[1] இதிலிருந்து பாகவதர்களுடைய பிரபாவத்தை நன்குணரலாம்.

[57]

எம்பெருமானாரும் ஸ்ரீ வைஷ்ணவர்களும் எழுந்தருளா நிற்கப் பெரிய நம்பி தெண்டனிட்டுக் கிடந்தார். "நம்மை இங்ஙனே செய்தருளிற்றென்?" என்று கேட்க, "ஆளவந்தார் எழுந்தருளுகிறார் என்றிருந்தேன்" என்றருளிச் செய்தார்.

(திருப்பாவை 1 ஆறாயிரப்படி)

நிகழிடம்

பெரியாழ்வார் பெண்பிள்ளையான ஆண்டாள் தன்னுடைய தோழிகளை மார்கழி நோன்பில் கலந்து கொள்ள அழைக்கும் போது 'நீராடப் போதுவீர்' என்றழைக்கிறாள். தன்னுடைய தோழிகளை அழைக்கும்போதும் கூட மிகவும் கௌரவமாக 'நீராட' என்று அழைக்க வேண்டுமோ என்றால், ஒருவர்க்கொருவர் சாதாரணமாகப் பழகுபவர்களேயானாலும், அவர்கள் எம்பெருமானுடைய அடியவர்கள் என்பதை வைத்துப் பார்க்கும்போது அவர்களை மதிப்புடனே நடத்தவேண்டும்; தங்களுடைய சீடர்களேயானாலும் அவர்கள் எம்பெருமானுடைய அடியவர்களாக இருப்பின், அவர்களை மிகவும் மரியாதையுடன் நடத்த வேண்டும். இதை **ஐதிஹ்யம்** ஒன்றின் மூலம் உரையாசிரியர் நிரூபிக்கிறார்.

விளக்கம்

பெரியநம்பிகள் எம்பெருமானாருக்கு ஆசார்யராவார். ஒரு நாள் **எம்பெருமானார்** ஸ்ரீவைஷ்ணவர்கள் பலர் புடை சூழ எழுந்தருளிக் கொண்டிருந்தபோது, அவரைத் தம்முடைய சீடர் என்றும் பாராமல் **பெரியநம்பிகள்** கீழே விழுந்து வணங்கினாராம். பெரிய நம்பிகளுடைய எண்ணத்தை எம்பெருமானார் நன்கு அறிந்தவரானாலும் மற்றவர்களும் தெரிந்து கொள்ள வேண்டுமென்பதற்காகப் பெரிய நம்பிகளை நோக்கி, "தேவரீருடைய சீடனான அடியேனை தேவரீர் வணங்குவது எதற்காக?" என்று

1. "ஆண்டாள் பட்டர் ஸ்ரீபாதத்தைக் கழுவித் தீர்த்தம் கொள்ளும்" என்று நாலாயிரப்படி உரையிலும் குறிப்பிடப்பெற்றுள்ளது.

கேட்க, “அடியேனுடைய ஆசார்யரான ஆளவந்தார் எழுந்தருள்வதாகவே நினைத்து வணங்கினேன்” என்று பெரியநம்பிகள் பதிலளித்தாராம்.[1]

[58]

(ஏராந்த கண்ணி........) “பிள்ளைக்குத் தாய் வழியாகாதே கண்!” என்று பிள்ளை உறங்காவில்லிதாஸர் வார்த்தை.

(திருப்பாவை 1 ஆறாயிரப்படி)

நிகழ்டம்

கண்ணபிரானுடைய தாயான யசோதைப் பிராட்டியின் கண்களை ‘ஏரார்ந்த கண்ணி’ என்று வர்ணிக்கிறாள் ஆண்டாள். கண்ணபிரானுடைய குழந்தைப் பருவத் திருவிளையாடல்களையெல்லாம் கண்டு களித்த மகிழ்ச்சியினால் மலர்ந்த கண்களையுடையவள் யசோதை என்று இதற்கு உரையிடுகின்றார். திருமங்கையாழ்வாரும் ‘அம்பன்ன கண்ணாளசோதை’ (பெரிய திருமொழி 6-8-6) என்கிறார். ‘கார்மேனிச் செங்கண்’ என்று கண்ணபிரானும் கண்ணழகு படைத்தவனேயாவான். கண்ணபிரானுடைய கண்ணழகுக்கு காரணத்தைப் பிள்ளை உறங்காவில்லிதாசருடைய **வார்த்தை** ஒன்றைக் கொண்டு உரையாசிரியர் காட்டுகின்றார்.

விளக்கம்

கண்ணன் அழகிய கண்களைப் பெற்றிருந்ததற்குக் காரணம் அவனுடைய தாயான யசோதைப் பிராட்டி அழகுள்ள கண்ணைப் பெற்றிருந்ததே என்பராம் **பிள்ளை உறங்காவில்லி தாசர்.** “மகனுடைய கண் அவனுடைய தாயினுடைய கண்ணைப்போலவே அன்றோ இருக்கும்” என்று அவர் கூறுவராம்.[2]

1. இதேபோல் பெரிய நம்பிகள் எம்பெருமானாரை தண்டம் ஸமர்ப்பித்தபோது பெரிய நம்பிகளின் வணக்கத்தை எம்பெருமானார் ஏற்றுக் கொள்ளாமல் பேசாமல் எழுந்தருளியதாகக் குறிப்பிடப்பட்டுள்ளதை எண் 300ல் காண்க.

2. மற்றெவரைக் காட்டிலும், பிள்ளை உறங்காவில்லிதாசர் இவ்வார்த்தை அருளிச்செய்துள்ளது மிகவும் பொருத்தமானது. ஏனெனில் அவர் முதலில் தமது மனைவியான பொன்னாச்சியாரின் கண்ணழகில் ஈடுபட்டிருந்தவரென்றும், பின்பு எம்பெருமானார் அவரைப் பெரியபெருமாளிடம் அழைத்துச் சென்று அவனுடைய ‘கரியவாகிப் புடைபரந்து மிளிர்ந்து செவ்வரியோடி நீண்டவப் பெரியவாய’ கண்களைக் காண்பித்துத் திருத்திப் பணி கொண்டார் என்றும், அன்று முதல் தாசர் எம்பெருமானுடைய கண்ணழகிலேயே ஈடுபட்டிருந்தார் என்றும் குருபரம்பரை நூல்கள் பகர்கின்றன. அவ்வெம்பெருமானும், தன் கண்ணழகைத் தன் தாயான யசோதையிடமிருந்துதான் பெற்றான் என்று கண்ணழகின் தரத்தை நன்கறிந்தவரான தாசர் கூறியது மிகவும் பொருத்தமே யாகும். தாசர் இவ்வாறு அருளிச்செய்தமை மற்றோரிடத்திலும் குறிப்பிடப் பெற்றுள்ளது. (எண் 258)

[59]

(ஆய்ப்பாடி) ப$_4$ட்டர் திருப்பாவை அருளிச்செய்யாநிற்க, பூணூல் சாத்தாத ஒரு வைஷ்ணவர் வர, "கூசாதே உள்ளே புகுவீர்! இவ்விடம் திருவாய்ப்பாடியாய்க் காணும் செல்கிறது!" என்றருளிச் செய்தார்.

(திருப்பாவை 1 நாலாயிரப்படி)

நிகழிடம்

பாவை நோன்பு நிகழ்ந்த இடத்தை "சீர்மல்கும் ஆய்ப்பாடி" என்று கொண்டாடுகிறாள் ஆண்டாள். வசிஷ்டர் முதலிய மகரிஷிகளின் கட்டுப்பாட்டில் இருக்கும் அயோத்திபோலல்லாமல் இடையர்களுக்கும் உரிய ஊர் என்று கூறும் உரையாசிரியர், இத்தொடர்பில் **ஐதிஹ்யம்** ஒன்றினைக் கூறுகிறார்.

விளக்கம்

பட்டர் ஒரு முறை திருப்பாவை காலக்ஷேபம் சொல்லிக் கொண்டிருக்கையில் பூணூல் அணியாதவர் (அந்தணர் அல்லாதவர்) ஒருவர் வந்து அங்கே தயங்கி நிற்க, அவரைக் கண்ட பட்டர், "தயங்காமல் வாரும்; இப்போது நாம் அனுபவிப்பது திருப்பாவை. ஆகையாலே இது திருவாய்ப் பாடியாகவே உள்ளது. எனவே அந்தணர்கள் அந்தணர்களல்லாதவர் என்கிற வேறுபாடில்லாமல் இந்த கோஷ்டியில் யாவரும் கலந்து கொள்ளலாம்" என்றாராம்.

[60]

(கூர்வேல் கொடுந்தொழிலன்) சிறியாத்தானைப்போலே பசும்புல் சாவமிதியாதவர், பிள்ளை பிறந்தவாறே வேலைப் புகரெழக் கடையவிட்டார்.

(திருப்பாவை 1 ஆறாயிரப்படி)

நிகழிடம்

கண்ணபிரானுடைய தகப்பனான நந்தகோபனைக் 'கூர்வேல் கொடும் தொழிலன்' என்றருளிச்செய்கிறாள் ஆண்டாள். இங்கு நந்தகோபனுக்குச் சிறியாத்தான் எனும் ஆசார்யரை **உதாரணம்** கூறுகிறார் உரையாசிரியர்!

விளக்கம்

சிறியாத்தான் எனும் ஆசார்யர் மிகமிகச் சாதுவானவர். பசும்புல்லைக்கூட அவர் அழுந்த மிதிக்க மாட்டார்.[2] அவரைப்போலவே நந்தகோபர் மிகவும் சாதுவானவர் என்றுரைக்கிறார் உரையாசிரியர். (ஆனால் கண்ணபிரான் பிறந்த பிறகு, அவன்மீதுள்ள பரிவினால், அவனுக்கு யாரால் என்ன தீங்கு

1. மூவாயிரப்படி, நாலாயிரப்படி உரைகளிலும் இது குறிப்பிடப்பெற்றுள்ளது.

2. சிறியாத்தானைப் பற்றி இதுபோல் மற்றோரிடத்திலும் குறிப்பிடப்பெற்றுள்ளது. எண் 153

ஏற்பட்டுவிடுமோ என்றஞ்சி, தம்முடைய வேலை நன்றாகச் சாணைபிடித்துக் கண்ணனுக்குக் காவலாக இருப்பதனால் அவரைக் 'கூர்வேல்கொடுந்தொழிலன்' என்கிறாள் ஆண்டாள் என்று உரையாசிரியர் கூறுகிறார்.)

[61]

(வையத்து வாழ்வீர்காள்.............) "இப்படி வ்யதிரேகத்தில் முடியும்படியானவன் மோக்ஷப$_{2}$லம் பெறாதொழிவானென்?" என்று நஞ்சீயர் ப$_{4}$ட்டரைக் கேட்க, "இவனுக்குள்ளது நரகமே! பெருமாள் ஆந்ருஶம்ஸ்யத்தாலே ஸ்வர்க்க$_{3}$ஸ்த$_{2}$னானான்" என்றருளிச் செய்தார்.

(திருப்பாவை 2 ஆறாயிரப்படி)

நிகழிடம்

ஆயர் சிறுமியர்களை நோன்புக்கு அழைக்கின்ற ஆண்டாள் "வையத்து வாழ்வீர்காள்" என்றழைக்கிறாள். எம்பெருமான் கண்ணபிரானாகத் திருவவதரித்திருக்கின்றபோது திருவாய்ப்பாடியில் பிறந்து அவனோடு கூடியிருக்கும் பேற்றைப் பெற்ற ஆய்ப்பெண்களே வையத்தில் வாழ்பவர்கள்; அவன் இங்கே அவதரித்திருக்கும்போது பரமபதத்திலேயே இருந்தாலும் அது வாழ்ச்சி அல்ல; அதனாற்றான் இராமபிரானிடத்தில் மிகுந்த அன்புடைய அனுமன் பரமபதத்திற்கும் செல்ல மறுத்தான் என்று அருளிச்செய்த உரையாசிரியர், எம்பெருமானிடத்தில் மிகுந்த அன்பாவது அவனைப் பிரிந்த அடுத்தகணம் உயிரைவிட்ட தசரதசக்ரவர்த்தியின் நிலையே ஆகும் என்று விளக்கம் உரைத்து, இத்தொடர்பில் **ஸம்வாதம்** *ஒன்றினைக் காட்டுகிறார்.*

விளக்கம்

ராமபிரான் மீது அளவற்ற அன்பு உடையவனான தசரத சக்ரவர்த்தி, கைகேயியின் வரத்தினால் ராமபிரானைக் காட்டிற்கு அனுப்ப நேர்ந்தவுடன், அந்தப் பிரிவைத் தாங்க முடியாமல் உயிரையே விட்டுவிட்டான். அப்படி உயிரிழந்த தசரதன் இந்திரலோகத்திற்குச் சென்றதாக ஸ்ரீ ராமாயணத்தில் கூறப்படுகிறது.[1] "ராமபிரானை விட்டுப் பிரிந்த உடனே மூச்சு அடங்குமளவுக்கு

1. "ஏஷ ராஜா விமாநஸ்த்த: பிதா தசரதஸ் தவ, காகுஸ்த்த மாநுஷேலோகே குருஸ்தவ மஹாயச: இந்த்ரலோகம் கத: ஸ்ரீமாந் த்வயா புத்ரேண தசரத: லக்ஷ்மணேந ஸஹ ப்ராத்ரா த்வமேதம் அபிவாதய" (ரா.யு. 122-78) ("ஸ்ரீராமா! இதோ விமானத்தில் இருப்பவர் உனது தந்தையாகிய தசரத சக்ரவர்த்தி; மனித உலகில் உனக்குத் தந்தையாக விளங்கியவர். புதல்வனாகிய உன்னால் கரையேற்றப்பட்டு இந்திர லோகத்தை அடைந்து விளங்குகிறார். லக்ஷ்மணனோடு சேர்ந்து இவரை வணங்குவாயாக") என்று சிவன் ராவண யுத்தம் முடிந்தவுடன் ராமனைக் குறித்துக் கூறியதாக வால்மீகி ஸ்ரீராமாயணத்தில் உள்ளது. இதனால் தசரத சக்ரவர்த்தி சுவர்க்கம் அடைந்தார் என்பது தெளிவாகிறது.

அன்புடையவன் ஏன் சுவர்க்கத்தத்தான் அடைந்தான்? மோக்ஷத்தை ஏன் அடையவில்லை?" என்று நஞ்சீயர் பட்டரைக் கேட்க, பட்டர், *"உண்மையே பேசுதல் என்ற ஆபாஸ தர்மத்தை (போலித் தருமத்தை) காப்பாற்றுவதற்காக, தர்மமே வடிவெடுத்தவனான இராமபிரானைக் காட்டிற்கு அனுப்பியதனால் தசரதன் உண்மையில் அடைய வேண்டியது நரகம்தான். ஏதோ இராமபிரானின் கருணையால்தான் அவன் சுவர்க்கத்தை அடைந்தான்"* என்று விடையளித்தார்!

[62]

(செய்யாதன செய்யோம்) ஆழ்வான், "எங்கள் பூர்வர்கள் தே₃வதாந்தர ப₄ஜனம் பண்ணாமையாலே" என்றானாம்.

(திருப்பாவை 2 ஆறாயிரப்படி)

நிகழிடம்

பாவை நோன்பில் ஈடுபட்டவர்கள் செய்யக்கூடாதவைகளைக் கூறுகின்ற ஆண்டாள் 'செய்யாதன செய்யோம்' என்கிறாள். 'முன்னோர்கள் செய்யாதனவற்றைச் செய்யமாட்டோம்' என்கிறாள் ஆண்டாள் என்று இதற்குப் பொருளுரைத்த உரையாசிரியர், இத்தொடர்பில் ஓர் **ஐதிஹ்யம்** *காட்டுகிறார்.*

விளக்கம்

கூரத்தாழ்வானைச் *சிலர் "நீங்கள் ஏன் ஸ்ரீமந் நாராயணனைத் தவிர வேறு தெய்வங்களைத் தொழுவதில்லை?" என்று கேட்டார்களாம். அதற்கு அவர், "எங்கள் முன்னோர்கள் வேறு தெய்வங்களைத் தொழாமையினால் நாங்களும் தொழுவதில்லை" என்று பதிலளித்தாராம்.*[2]

1. "ராமோ விக்ரஹவாந் தர்ம:" (ரா.ஆ. 37-13) (ராமன் தர்மமே வடிவெடுத்தவன்) என்று மாரீசன் கூறுவதாக ஸ்ரீராமாயணத்தில் உள்ளது. ஆபாஸ தர்மமான ஸத்யத்தைக் காப்பதற்காக இப்படிப்பட்ட ராமனோடு கூடிவாழ்விருந்த பேற்றை தசரதசக்ரவர்த்தி இழந்ததை "சக்ரவர்த்தியைப் போலே இழக்கைக்கு உறுப்பு" என்று பிள்ளைலோகாசாரியரும் (முமுக்ஷுப்படி 204) அருளிச் செய்துள்ளார். "தர்ம ஸம்ஸ்தாபநம் பண்ணப் பிறந்தவன்தானே எல்லா தர்மங்களையும் விட்டு என்னைப் பற்று என்கையாலே ஸாக்ஷாத் தர்மம் தானே என்கிறது" என்றும் அவர் (முமுக்ஷுப்படி 213) அருளியுள்ளது நினைவு கூரத்தக்கது. ஸாக்ஷாத் தருமமாவது பயனைத் தானே நேராக உண்டாக்கும் உபாயம். எனவே ஸாக்ஷாத் தர்மமமான இராமபிரானைக் காட்டுக்கு அனுப்பியதனால் தசரதனுக்கு நரகம்தான் கிடைத்திருக்க வேண்டும் என்று பட்டர் கூறினார்.

2. 'சிவனைக் காட்டிலும் மேம்பட்ட தெய்வமில்லை' என்று கையெழுத்திடச் சொன்ன சோழ மன்னனை எதிர்த்து 'ஸ்ரீமந் நாராயணனே பரம்பொருள்' என்று வாதம் புரிந்து, நிலை நாட்டியவர் கூரத்தாழ்வான். அவரே இப்படி கூறியது குறிப்பிடத்தக்கது. சாத்திரங்களில் கூறப்பட்டிருந்தாலும் கூட, முன்னோர்கள் செய்தவை என்பதனாலேயே தாமும் அவற்றைப் பின்பற்றுவதாகவே ஆழ்வான் கூறுவது, பெரியோர்களின் அனுஷ்டானத்தைப் பின்பற்ற வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றது. இவ்வைதிஹ்யம் நாலாயிரப்படி உரையிலும் உள்ளது. தவிர, பிறதேவதைகள் வணங்குதல் பற்றிய வேறு கேள்விக்கு ஆழ்வான் வேறு பதிலளித்துள்ளதை (எண் 68ல்) காண்க.

[63]

(ஓங்கி) "ஸ்ரீ வைகுண்ட₂த்திலிருக்கும்போது ஸம்ஸாரிகளுடைய இழவுக்குத் திருவுள்ளம் நொந்திருக்கும்" என்று ப₄ட்டர் அருளிச் செய்ய, சிலர் அத்தைக் கேட்டு, "அவாப்தஸமஸ்தகாமனாய், நிரதிசயாநந்த₃யுக்தனாயிருக்கிற ஸர்வேஶ்வரனுக்கு ஓரிழவுண்டோ திருவுள்ளத்தில்?" என்ன, व्यसनेषुमनुष्याणाम् (வ்யஸநேஷு மநுஷ்யாணாம்) என்கிறது கு₃ணப்ரகரணமோ தோ₃ஷப்ரகரணமோ?" என்றருளிச் செய்தார்.

(திருப்பாவை 3 ஆறாயிரப்படி)

நிகழிடம்

"ஓங்கி உலகளந்த உத்தமன்" என்று ஆண்டாள் அருளிச்செய்கிறாள். மகாபலியால் இந்திரன் துன்பத்தை அடைந்தபோது வாமனனாய்ச் சுருங்கிய எம்பெருமான், மகாபலியிடமிருந்து உலகங்களை தானமாகப் பெற்ற உடனே, அடியவனான இந்திரனுடைய துயர் தீர்ந்தது என்ற மகிழ்ச்சியினால் ஓங்கி உயர்ந்தான்; மனிதர்களுடைய சுருக்கம், பெருக்கம் ஆகியவை அவர்களுடைய கர்மங்களால் ஏற்படுபவையாதலாலும், தங்கள் பயனுக்காகவே ஆதலாலும் அவை குற்றமாகும்; ஆனால் எம்பெருமானுடைய சுருக்கமும் பெருக்கமும் பிறர்களுக்காகவாகையாலும், கருணையினால் ஏற்படுபவையாகையாலும், அவை குணமேயாகும் என்று விளக்குகின்ற உரையாசிரியர், எம்பெருமான் அடையும் துக்கமும் குணமேயன்றி தோஷமல்ல என்று பட்டர் உரைத்த **ஐதிஹ்ய***த்தை எடுத்துக் காட்டுகிறார்.*

விளக்கம்

எம்பெருமான் ஸ்ரீவைகுண்டத்தில் எழுந்தருளியிருக்கும் போதும் 'இங்குள்ள நித்யசூரிகளும், முக்தர்களும் நம்மை அனுபவித்துக் கொண்டிருக்க, மற்ற ஜீவாத்மாக்கள் அனைவரும் இவ்வனுபவத்தை இழந்து கிடக்கின்றார்களே!' என்று வருத்தப்பட்டுக் கொண்டிருப்பான் என்று பட்டர் *அருளிச் செய்தார். இதைக் கேட்ட சிலர், "எல்லா விருப்பங்களையும் அடையப் பெற்றவனாய், எல்லையில்லாத ஆனந்தத்தையும் உடையவனான எம்பெருமானுடைய திருவுள்ளத்திலும்கூடத் துயர் உண்டு என்று கூறலாமோ? நற்குணங்களை மட்டுமே உடையவனான எம்பெருமானிடம் துயரம் எப்படி இருக்க முடியும்?" என்று கேட்டனர். அதற்கு பட்டர், "பிறர்படும் துயரைக் கண்டு தான் துயரடைவது நற்குணமேயாகும். இராமபிரானுடைய நற்குணங்களைக் கூறி வருகின்ற அயோத்தி மக்கள் "வ்யஸநேஷு மநுஷ்யாணாம் ப்ருசம்பவதி துக்கித:" (ரா. அயோ. 2-30) (மக்கள் துன்பமடையும் போது இராமன் அதிகத் துன்பமடைகின்றான்) என்று கூறுகின்றனர். இது இராமனுடைய நற்குணத்தைக்*

கூறும் பகுதியிலுள்ளதா அல்லது தோஷத்தை (குற்றத்தை)க் கூறும் பகுதியிலுள்ளதா?" என்று பட்டர் கேட்டாராம்.[1]

[64]

(ஓங்கி) மாறனேரியிலே ராமாநுஜதாஸர் என்பாரொருத்தர் "அவன் வருகிறபடியைக் கண்டு கடக்கப் போவென்பதே! நாலடி விலகிப் போதல் இல்லையாகில் ஒரு முழுக்கிட்டுக் கொள்ளுதல் செய்யவன்றோ அடுப்பது!" என்ன, "சண்டாளனேயாகிலும், ஆர்த்தனான ஸமயத்தில் அல்லாதார் விலங்கிப் போவர், த்$_3$விஜனாகில் அவன் விலங்குவான் என்று விதி$_4$ விஶேஷித்த அம்ஶம் அழிந்ததே!" என்று அவர்கள் சொல்ல, "கெடுவிகாள்! விதி$_4$ பூர்வகமாயோ க்ருபை இருப்பது?" என்றருளிச் செய்தார்.

(*திருப்பாவை 3 ஆறாயிரப்படி*)

நிகழிடம்

"ஓங்கி உலகளந்த உத்தமன்" என்று ஆண்டாள் அருளிச்செய்கிறாள். மகாபலியால் இந்திரன் துன்பத்தை அடைந்தபோது வாமனனாய்ச் சுருங்கிய எம்பெருமான், மகாபலியிடமிருந்து உலகங்களை தானமாகப் பெற்ற உடனே, அடியவனான இந்திரனுடைய துயர் தீர்ந்தது என்ற மகிழ்ச்சியினால் ஓங்கி உயர்ந்தான்; மனிதர்களுடைய சுருக்கம், பெருக்கம் ஆகியவை அவர்களுடைய கர்மங்களால் ஏற்படுபவையாதலாலும், தங்கள் பயனுக்காகவே ஆதலாலும் அவை குற்றமாகும்; ஆனால் எம்பெருமானுடைய சுருக்கமும் பெருக்கமும் பிறர்களுக்காகவாகையாலும், கருணையினால் ஏற்படுபவையாதலாலும், அவை குணமேயாகும் என்று விளக்குகின்ற உரையாசிரியர், எம்பெருமானின் துக்கமும் குணமேயன்றி தோஷமல்ல என்று பட்டர் உரைத்தமையை எடுத்துக் காட்டி, தொடர்ந்து, 'வ்யஸநேஷு மநுஷ்யாணாம் ப்ருசம் பவதி துக்கித:' என்ற ராமாயண சுலோகத்தை உரையாசிரியர் விளக்குகிறார். மக்கள் துன்பமடையும் போது ராமபிரான் அதிகத் துன்பம் அடைந்தான் என்று இந்த சுலோகத்திற்குப் பொருளுரைத்த உரையாசிரியர், துன்பப்படும் ஒருவனிடத்தில் கருணை காட்ட வேண்டியது மிகவும் அவசியம் என்பதற்கு ஓர் **ஐதிஹ்யம்** *காட்டுகிறார்.*

விளக்கம்

மாறனேரி எனும் ஊரில் அந்தணர்கள் சிலர் ஒற்றையடிப்பாதையில் சென்று கொண்டிருந்தபோது எதிரே தாழ்குலத்தவன் ஒருவன் மிகப் பெரும் தலைச் சுமையுடன் வந்து கொண்டிருந்தான். அது மிகவும் குறுகிய ஒற்றையடிப்

1. இதே ஐதிஹ்யம் இன்னும் சற்று விரிவாக மற்றுமோரிடத்தில் உள்ளது. (எண் 585). அங்கு இப்படிக் கேட்டவர்கள் ஆச்சானும் பிள்ளையாழ்வானும் என்று குறிப்பிடப் பெற்றுள்ளது.

பாதையாகையால் ஓரேசமயத்தில் எதிரெதிரில் இருவர் செல்ல இடம் இல்லாமல் இருந்தது. எனவே அவனை விலகிப் பின்சென்று வழிவிடும்படி அந்தணர்கள் அவனிடம் கூறிக் கொண்டிருந்தனர். அப்போது **ராமானுஜதாஸர்** *என்பவர், "மிகப் பெரிய தலைச்சுமையுடன் அவன் வந்து கொண்டிருப்பதைப் பார்த்தும், அவனை விலகிப் போகச் சொல்லுகிறீர்களே! நீங்கள்தான் விலகிப் போனால் என்ன? விலகிப் போக முடியவில்லையானால் அவனைத் தாண்டிச் சென்றபிறகு ஒரு முறை நீங்கள் நீராடிவிட்டால்தான் என்ன?" என்று கூறினாராம். அதற்கு அந்த அந்தணர்கள் "எதிரே வருபவன் தலைச் சுமையுடன் வருபவனானால் மற்றவர்கள் அவனுக்கு வழிவிடவேண்டும்; ஆனால் அந்தணர்களுக்குத் தலைச்சுமையுடன் வருபவனும் வழிவிடவேண்டும் என்று சாத்திரம் கூறியிருக்கிறதே![1] இப்போது இவன் எங்களுக்கு வழிவிடவில்லையானால் அந்த சாத்திர விதியன்றோ மீறப்பட்டதாகும்?" என்றார்களாம். அதற்கு ராமானுஜதாஸர், "சாத்திரம் அப்படிச் சொல்வது உண்மைதான். ஆனால் இவ்வளவு பெரிய சுமையுடன் வருகிறானே என்று அந்தணர்களாகிய நீங்களே கருணையுடன் விலகி அவனுக்கு வழிவிட்டுவிட்டால் அதைச் சாத்திரம் தடை செய்து விடுமோ? கருணை என்பது சாத்திரத்தைக் கொண்டோ உண்டாகின்றது?" என்று கேட்டாராம்.*

1. மனு ஸ்ம்ருதியில் யாருக்கு யார் வழிவிட வேண்டும் என்பது பற்றிய குறிப்புகள் உள்ளன.

சக்ரிணோ தசமீஸ்த்தஸ்ய ரோகிண: பாரிண: ஸ்த்ரியா:
ஸ்நாதகஸ்ய ச ராஜ்ஞச்ச பந்தாதேயோ வரஸ்யச

தேஷாந்து ஸமவேதாநாம் மாந்யெள ஸ்நாதக பார்த்திவெள
ராஜஸ்நாதக யோச்சைவ ஸ்நாதகோ ந்ருபமாநபாக். (2-138,139)

(வண்டிக்காரன், தொண்ணூறு வயதுக்கு மேற்பட்டவன், வியாதிக்காரன், சுமையுடன் வருபவன், பெண்கள், ஸ்நாதகனானவரன் (வ்ரதம் செய்து கொண்டு கலியாணத்துக்கு முன்பு காசியாத்திரை செய்யும் அந்தணன்) அரசன் இவர்களுக்கு (மற்றவர்கள்) வழி விட்டு விலகிச் செல்லவேண்டும். இவர்கள் அனைவருமே எதிரெதிரே ஒன்றாகச் சேர்ந்தார்களானால் ஸ்நாதகனுக்கும் அரசனுக்கும் மற்றவர்கள் முதலில் வழிவிடவேண்டும். ஸ்நாதகனும் அரசனும் ஒருவருக்கொருவர் எதிரெதிராகச் சேர்ந்தார்களானால் ஸ்நாதகனுக்கு அரசன் வழிவிட்டு விலகிச் செல்லவேண்டும்.)

ஆக, பாரம் சுமந்து வருபவனுக்கு மற்றவர்கள் வழிவிடவேண்டும் என்பதும், பாரம் சுமந்து வருபவனும் ஸ்நாதகனுக்கு வழிவிடவேண்டும் என்பதும் மனுதர்ம சாஸ்த்ரத்தில் உள்ள விதி.

அந்தஸ்ய பந்தா பதிரஸ்ய பந்தா: ஸ்த்ரிய: பந்தா: பாரவாஹஸ்ய பந்தா:
ராஜ்ஞ: பந்தா ப்ராஹ்மணே நாஸ மேத்ய ஸமேத்யது ப்ரஹ்மணஸ்யைவ பந்தா:
(மஹாபாரதம் வனபர்வம் 35-1)

(குருடன், செவிடன், பெண், சுமைதாங்குபவன் அரசன் இவர்களுக்கெதிரில் அந்தணன் வரவில்லையானால், (எதிரில் வருகின்ற அந்தணனல்லாதவன்) இவர்களுக்கு வழிவிட்டு விலகிச் செல்ல வேண்டும். இவர்களுக்கு எதிரில் அந்தணன் கலந்தாலோவென்னில் அந்த அந்தணனுக்கே மற்றவர்கள் விலகி வழிவிடவேண்டும்) ஆகச் சுமை தாங்கி வருபவனும் அந்தணனுக்கு வழிவிடவேண்டும் என்று மகாபாரதத்திலும் கூறப்பட்டதாகிறது.

[65]

(உத்தமன்) பட்டர் அருளிச் செய்த வார்த்தை, "'கருமாணியாய் இரந்த கள்வனே உன்னைப் பிரமாணித்தார் பெற்ற பேறு' என்று சிறுகாலைக் காட்டி இரந்து பெரிய காலைக் கொண்டு அளந்து நீ பண்ணின ஓரம் உன்னை ஆஶ்ரயித்தார் நிர்ப்ப₄ரராகைக்கு அவர்களுக்கு நீ வைத்த ஸந்தானச்சாபமிறே! இவ்வாந்தராளிக த்₃ருஷ்டாத்₃ருஷ்டங்களில் ஒருவர்க்கு அஞ்சாதே யமாதி₃களுக்கு முழங்கை காட்டிச் செருக்கராய் இவர்கள் திரிகைக்கு அடியென் என்னில், அறிந்தோம்; ஒரு பரமத₄ர்மிகன் செவியிலே, 'துர்ப₃லரான நம்மால் நம் கார்யம் நிர்வஹித்துக் கொண்டு கரையிலேற வொண்ணாது; உன்னுடைய ரக்ஷணத்துக்கு ஒரு ப்ரப₃லனை அண்டை கொண்டு த்₃ருஷ்டாத்₃ருஷ்ட விஷயமான உன்னுடைய யத்நங்களையடைய அவன்வஶத்திலே பொகட்டு நிர்ப்ப₄ரனாயிரு' என்று சொல்லிப்போம். இவனும் அத்தையே விஶ்வஸித்து 'அப்படியே' என்றிருக்கும். எம்பெருமான் கழுத்திலே ஓலைகட்டித் தூது போயும், மார்பிலே அம்பேற்றும், ஸாரத்₂யம் பண்ணியும், பகலை இரவாக்கியும், ஸத்யப்ரதிஜ்ஞனாயும் அஸத்யப்ரதிஜ்ஞனாயும், பொய் சொல்லியும், மெய் சொல்லியும், வார்கொத்துக் கொத்தியும், எல்லை நடந்தும், இங்ஙனொத்த செயல்களைச் செய்து இவர்கள் கார்யமே நிர்வஹியா நிற்கும்" என்றார்.

(திருப்பாவை 3 நாலாயிரப்படி)

நிகழிடம்

'உலகளந்த உத்தமன்' என்பதற்கு விளக்கமாக, உலகளந்த சரிதமும் எம்பெருமான் அடியவர்க்கு ஆட்பட்டவன் என்பதையே தெரிவிக்கின்றது என்று பட்டர் அருளிச்செய்த ***வார்த்தை*** *கூறப்படுகிறது.*

விளக்கம்

பட்டர் *பின்வருமாறு அருளிச்செய்தார்: 'கருமாணியாய் இரந்த கள்வனே உன்னை பிரமாணித்தார் பெற்ற பேறு' (இரண்டாம் திருவந்தாதி 61) என்று பூதத்தாழ்வார் அருளிச்செய்துள்ளார். அதாவது எம்பெருமான் மகாபலியிடம் சென்று மூன்றடி மண்ணை யாசித்து, இந்திரனிடத்தில் காட்டிய ஓரம் (=பக்ஷபாதம்), இந்திரன் ஒருவனுக்கு மட்டுமே செய்ததல்ல. அப்பெருமானை நாமும் பற்றினோமானால் நமக்காகவும் தன்னை அழியமாறி அவன் காரியம் செய்வான் என்று ஒவ்வொருவரும் நம்பியிருப்பதற்காக, எல்லார்க்குமாகச் செய்த செயலாகும் என்கிறார் பூதத்தாழ்வார். இப்படி அவன் சிறிய காலைக் காட்டி, பெரிய காலைக் கொண்டு மூவுலகையும் அளந்தது, தன்னை நம்பியவர்களுடைய நம்பிக்கை ஒரு போதும் வீண் போகாத வண்ணம் ஸந்தானச்சாபமாக (பரம்பரையாக) அந்த நம்பிக்கை துளிர்க்கும்படி செய்வதற்கேயாகும். எம்பெருமானைப் பற்றியவர்கள் ஒருவர்க்கும் அஞ்சாமல் யமன் முதலானவர்களையும் எதிர்த்துக் கொண்டு கர்வத்தோடு இருப்பதற்கு காரணம்*

என்ன எனில், முன்பே கண்ணபிரான், அர்ஜுனன் போன்றவர்களுக்கு “நீங்கள் மிகவும் எளியவர்களாகையாலே உங்களால் எதையும் செய்ய முடியாது. எனவே உங்களுடைய பொறுப்புக்களை வலிமையுள்ள என்னிடத்திலே வைத்துவிட்டு நிம்மதியாக இருங்கள்” என்று கூறியிருக்கிறான். அவர்களும் எல்லாவற்றையும் அவனிடத்திலேயே ஒப்படைத்து விட்டார்கள். எனவே இப்போது பொறுப்பு கண்ணனுடையதாகையால் அவன் தூது சென்றும், அர்ஜுனன் மீதுவிட்ட அம்பைத்தன் மார்பில் ஏற்றும், தேரோட்டியும், சூரியனை மறைத்துப் பகலை இரவாக்கியும், உண்மை பேசியும், பொய் பேசியும், பற்பல செயல்களைச் செய்து இவர்கள் காரியமே செய்தருளுவான். எனவே இப்படிப்பட்ட தன்மைகளை உடையவனே உத்தமன் ஆவான்” (என்பது பட்டர் அருளிய வார்த்தையாகும்.)

[66]

(பேர் பாடி) ... “திருநாமம் சொல்லுகைக்கு அதி$_4$காரஸம்பத்தி வேண்டாவோ?” என்று நஞ்சீயர் ப$_4$ட்டரைக் கேட்டருள, “யோக்$_3$யனாகில் இருந்தபடி சொல்லுகிறான்; அயோக்$_3$யனாகில் யோக்$_3$யதை ஸம்பாதி$_3$க்க வேண்டா” என்றருளிச் செய்தார். “எங்ஙனே?” என்ன, “மேலுள்ள நன்மைகளைத் தரக்கடவதாக விஶ்வஸித்தவனுக்குக் கீழுள்ள விரோதி$_3$களையும் போக்க மாட்டாதோ? க$_3$ங்கையாடப் போமவனுக்கு வேறொரு உவர்க் குழியிலே முழுகிப் போக வேணுமோ?” என்றருளிச் செய்தார்.

(திருப்பாவை 3 ஆறாயிரப்படி)

நிகழிடம்

“உலகளந்த உத்தமன் பேர் பாடி” என்று, பாவை நோன்பில் ஈடுபட்டவர்கள் எம்பெருமானுடைய திருநாமங்களைப் பாடுவதுபற்றிக் கூறுகிறாள் ஆண்டாள். இத்தொடர்பில், திருநாமம் கூறுகைக்குத் தகுதி வேண்டாமா என்று நஞ்சீயர் கேட்க, பட்டர் விடையளித்த **ஸம்வாதம்** *எடுத்துக்காட்டப்பெறுகிறது.*

விளக்கம்

“எம்பெருமானுடைய திருநாமங்களைச் சொல்வதற்குத் தகுதி எதுவும் வேண்டாமோ? தகுதியில்லாதவன் திருநாமத்தைச் சொல்லலாமோ?” என்று **நஞ்சீயர்** *பட்டரைக் கேட்டார். பட்டர், “தகுதியுள்ளவன் இருந்தபடியே திருநாமத்தைச் சொல்லலாம். தகுதியில்லாதவன் திருநாமத்தைச் சொல்வதற்காகத் தகுதி எதுவும் உண்டாக்கிக் கொள்ளத் தேவையில்லை” என்றாராம். “தகுதி யில்லாதவன் எப்படித் திருநாமத்தைச் சொல்லலாம்?” என்று நஞ்சீயர் கேட்க, “திருநாமத்தை சொன்னால் பாவங்கள் விலகி இனிமேல் நமக்கு நன்மை ஏற்படும் என்று நம்புகிறவனுக்கு அந்தத் திருநாமம் சொல்வதற்கு முன்னால் அவன் செய்த பாவங்களையும் அந்தத் திருநாம உச்சாரணமே போக்கி விடாதோ? எனவே,*

பாவங்களைப் போக்கிக் கொண்டுதான் திருநாமத்தைச் சொல்ல வேண்டும் என்பதில்லை. தன் பாவங்களைப் போக்கிக் கொள்வதற்காக, கங்கையில் நீராடச் செல்பவன், அந்த கங்கையில் நீராடத் தகுதி உண்டாக்கிக் கொள்வதற்காக வேறொரு உப்புநீர் நிறைந்த குளத்தில் நீராடிச் செல்ல வேண்டுமோ? அதுபோல், திருநாமத்தைச் சொல்வதற்கு தகுதி எதுவும் தேடிக் கொள்ள வேண்டியதில்லை. திருநாம உச்சாரணமே எல்லாப் பாவங்களையும் போக்கி, எல்லாத் தகுதிகளையும் உண்டாக்கிக் கொடுக்கவல்லது" என்று பட்டர் பதிலருளினார்.[1]

[67]

(நாடெல்லாம்) தேவப் பிள்ளைக்கு, "லோக ஹிதார்த்தமாகக் காண் நீ போகிறது" என்று அருளிச் செய்த வார்த்தை.

(திருப்பாவை 3 ஆறாயிரப்படி)

நிகழிடம்

எம்பெருமானுடைய திருநாமங்களைச் சொன்னால் நாடெல்லாம் தீங்கின்றி இருக்கும் என்றருளிச்செய்கிறாள் ஆண்டாள். எம்பெருமானுடைய திருநாமங்களைச் சொல்பவர்களுக்கு மட்டுமல்லாமல், அவர்களோடு தொடர்பு உடையவர்களுக்கும் நன்மை ஏற்படும் என்று உரைத்த உரையாசிரியர், இத்தொடர்பில், தேவப்பிள்ளை என்பவருக்கு அவருடைய ஆசார்யர் உரைத்த **வார்த்தை** *ஒன்றை எடுத்துக் காட்டுகிறார்.*

விளக்கம்

தேவப்பிள்ளை *என்பவர் ஏதோ ஒரு காரியமாக வெளியூருக்குச் செல்ல நேர்ந்தபோது, ஆசார்யனைப் பிரிந்திருக்க மனமில்லாமல் அவர் தயங்கவே, ஆசார்யர்* **(பட்டர்?)**, *"நம்மை நீ பிரிந்து சென்றாலும் பிறருக்கு நன்மை செய்வதற்காகவன்றோ நீ போகிறாய், எனவே பிரிவை நினைத்து வருந்தாதே" என்றருளிச் செய்தாராம்.*[2]

1. இவ்வைதிஹ்யம் மற்றும் மூன்று இடங்களில் உள்ளது. (எண் 167, 200, 800)

2. இப்படி அருளிச் செய்தவர் பெயர் இங்கு குறிப்பிடப்படவில்லை. பட்டருடைய சீடராகப் பெரிய தேவப்பிள்ளை என்பவர் (எண் 135ல்) குறிப்பிடப்படுவதால், இங்கு குறிப்பிடப்படும் ஆசார்யர் பட்டராகவும் இருக்கலாம். சென்னை அரசாங்க கீழ்த்திசைச் சுவடி நூலகத்திலுள்ள ஒரு ஓலைச்சுவடியில் (எண் R. 119) உள்ள இரண்டாம் திருவந்தாதி 14ம் பாசுர வியாக்கியானத்தில் இவ்வைதிஹ்யம் பின்வருமாறு அமைந்துள்ளது:

 "பிள்ளானுக்கு மூத்த தேவப்பிள்ளை பட்டரைக் கண்டு, 'பந்துக்களான நீங்கள் இங்கே இருக்க ஆர் முகத்திலே விழிக்க மேனாட்டுக்குப் போகிறேன்!' என்று அழ, பட்டர், 'த்ருணத்துக்கும் அகப்பட பரமபதம் கொடுத்த சக்ரவர்த்தி திருமகனுக்கு, பிள்ளைகளுக்குத் திருநாடு கொடுக்கையில் அருமையில்லையிறே! ஜகத்தை ரக்ஷிப்பிக்கைக்கன்றோ பிள்ளைகளை வைத்துப்போயிற்று; அப்படி அத்தேசத்துக்கு ஒருவர் இல்லையே!' என்றருளிச்செய்தார்."

[68]

ஆழ்வானை ஒரு ப₄ட்டன், "தே₃வதாந்தரங்களை நீங்கள் கண்டால் பண்ணும் ஆசாரமென்?" என்று கேட்க, "ஶாஸ்த்ரவிருத்₃த₄மாகக் கேளாதே கொள்ளாய்; தே₃வதாந்தரங்கள் உங்களைக் கண்டால் பண்ணும் ஆசாரமென்? என்று கேளாய்!" என்றார்.

(திருப்பாவை 4 நாலாயிரப்படி)

நிகழிடம்

கண்ணனுடைய மனத்திற்கு மிகவும் உகந்தவர்களான கோபிகைகள் (பாவனையில் ஆண்டாள்) பாவை நோன்பு நோற்கத் தொடங்கியவுடன் மழைக் கடவுளான வருணன் 'நான் உங்களுக்குச் செய்ய வேண்டியது என்ன?' என்று மிகவும் பணிவுடன் கேட்க, அவன் எப்படியெல்லாம் மழை பொழியவேண்டும் என்பதைத் தெரிவிக்கும் வகையில் 'ஆழிமழைக்கண்ணா' என்கின்ற நான்காம் பாசுரத்தில் கட்டளை இடுகிறார்கள். பிறதேவதைகளும் எம்பெருமானுடைய அடியவர்களுக்குத் தொண்டு செய்யக் காத்திருக்கும் என்றுரைத்த உரையாசிரியர், இத்தொடர்பில் ஓர் ***ஸம்வாதம்*** *காட்டுகிறார்.*

விளக்கம்

கூரத்தாழ்வானை நோக்கி அந்தணர் ஒருவர், "பிற தேவதைகளைக் கண்டால் நீங்கள் (ஸ்ரீ வைஷ்ணவர்கள்) எப்படி நடந்து கொள்வீர்கள்?" என்று கேட்க, அதற்கு அவர், "சாத்திரத்திற்கு மாறாகக் கேள்வி கேட்காதே. ஸ்ரீவைஷ்ணவர்களைக் கண்டால் மற்ற தேவதைகள் எப்படி நடந்து கொள்ளும் என்று கேள்" என்றாராம்.[1] ஸ்ரீவைஷ்ணவர்களைக் கண்டால் மற்ற தேவதைகளும் வணங்கி வழிபட்டுச் செல்லும் என்ற கருத்தினை உட்கொண்டு ***கூரத்தாழ்வான்*** *இப்படி அருளிச் செய்தார்.[2]*

1. "'அவைதான் ஸ்ரீவைஷ்ணவர்களை அநுவர்த்தியாதொழிவதென்? என்று கேளாய்' என்று ஆழ்வான்" என்று இப்பாசுரத்தின் ஆறாயிரப்படி உரையிலும் இவ்வைதிஹ்யம் உள்ளது.

2. த்ரவந்தி தைத்யா: ப்ரணமந்தி தேவதா: நாச்யந்தி ரக்ஷாம்ஸ்யபயாந்தி சாரய:
யத்கீர்த்தநாத் ஸோத்புதரூபகேஸரீ மமாஸ்து மாங்கல்ய விவ்ருத்தயே ஹரி:

(எந்த ஹரியை ஸ்தோத்ரம் செய்பவர்களைக் கண்டால் அசுரர்கள் ஓடிப் போகிறார்களோ, தேவதைகளும் மிகவும் வணங்குகிறார்களோ, ராக்ஷஸர்கள் நசிக்கிறார்களோ, சத்ருக்களும் ஓடுகிறார்களோ அற்புதமான திருமேனியழகுடைய நரசிங்க உருக் கொண்ட அந்த ஹரியானவர் அடியேனுடைய மங்களத்தை மிகவும் வளரச் செய்யட்டும்) என்கிற (விஷ்ணு தர்மம் – மாங்கல்ய விவ்ருத்தி ஸ்தவம்) சுலோகத்தில் தேவதைகள், விஷ்ணு பக்தர்களைக் கண்டால் வணங்கும் என்பது கூறப்படுகிறது.

[69]

(ஊழி முதல்வனுருவம் போல்) "நாச்சியார்விழி விழிக்க வொண்ணாது" என்றாப் போலே.

(*திருப்பாவை 4 ஆறாயிரப்படி*)

நிகழிடம்

வருண தேவனைப் பார்த்து, இப்படி இப்படி மழை பொழிய வேண்டும் என்று கட்டளையிடுகின்ற ஆண்டாள், 'ஊழி முதல்வனுருவம் போல் மெய் கறுத்து' நீ இருக்க வேண்டும் என்று கூறுகிறாள். அதாவது ஊழிமுதல்வனான எம்பெருமானுடைய திருமேனியைப் போலே உன் உடல் கறுத்திருக்க வேண்டும் என்று மேகத்தை நோக்கிக் கூறுகிறாள் ஆண்டாள். இங்கு, 'ஊழி முதல்வன் உருவம் போல் கறுத்து' என்று கூறுவதே போதுமாயிருக்க, '**மெய்** கறுத்து' என்றது எதற்காக என்பதற்கு விடையாக ஒரு **ஐதிஹ்யம்** காட்டப்படுகிறது.

விளக்கம்

ஊழி முதல்வனான எம்பெருமானுடைய திருமேனியின் நிறம் போலவே மேகமும் உடலில் மட்டும் கருமை அடையலாமே தவிர, அவனுடைய கருணையை மேகங்களாலும் ஏறிட்டுக் கொள்ள முடியாது. இப்படிக் கூறுவது எதுபோல என்னில்,

திருவரங்கத்தில் மார்கழி மாதம் கொண்டாடப்படும் உத்ஸவமான பகல் பத்து என்னும் உத்ஸவத்தின் முடிவு நாளன்று ஸ்ரீரங்கநாதன், தனது தேவியான ஸ்ரீரங்க நாச்சியாரைப் போலவே திருக்கோலம் பூண்டு ஸேவை ஸாதித்தான். அப்போது அங்கே பராசர பட்டர் எழுந்தருளிப் பெருமாளைச் சேவித்தார். ஸ்ரீரங்கநாதன் நாச்சியார் திருக்கோலம் பூண்டு கொண்டிருப்பதைக் கண்ட அவர், 'நாச்சியார் திருக்கோலம் தேவரீருக்குப் பொருத்தமாகவே இருந்தாலும், அந்த நாச்சியாருடைய வேடத்தை ஏறிட்டுக் கொள்ளலாமே தவிர, அவருடைய கருணை விழியை ஏறிட்டுக் கொள்ள உம்மாலும் முடியாது' என்றாராம்.[1]

அதுபோல, எம்பெருமானுடைய நிறத்தை மேகங்களானவை ஏறிட்டுக் கொள்ளலாமே தவிர அவனுடைய கருணையை ஏறிட்டுக் கொள்ள முடியாது என்பது 'ஊழி முதல்வனுருவம் போல் மெய் கறுத்து' என்பதன் உட்கருத்து ஆகும்.

1. இங்கு ஆறாயிரப்படி வ்யாக்யானத்தில் 'நாச்சியார் விழி விழிக்க வொண்ணாதாப் போலே' என்றுதான் பல பதிப்புகளிலும் காணப்படுகிறது. ஆனால் ஸ்ரீ உ.வே. பி.ப. அண்ணங்கராசாரியர் ஸ்வாமி, "நாச்சியார் விழிவிழிக்க வொண்ணாது என்றாப்போலே" என்று திருத்தம் காட்டியுள்ளார்.

[70]

(யமுனைத் துறைவனை)........ "கம்ஸன் அபாயத்துக்கு அஞ்சி, ஒளிக்க வந்து சேர்ந்தாரைச் சொல்லுமாபோலே சொன்னபடி பாரீர்" என்று பட்டர்.

(திருப்பாவை 5 ஆறாயிரப்படி)

நிகழிடம்

கோபிமார் பாவனையிலுள்ள ஆண்டாள் கண்ணபிரானைப் பற்றிக் கூறும் போது நேரடியாக அவன் பெயரைக் குறிப்பிடாமல், 'யமுனைத் துறைவனை' என்று குறிப்பால் காட்டுகிறாள். இதுபற்றி பட்டர் அருளிச்செய்த **வார்த்தை** *எடுத்துக் காட்டப்பெறுகிறது.*

விளக்கம்

கம்ஸனால் கண்ணனுக்கு என்ன ஆபத்து விளைந்துவிடுமோ என்று அஞ்சி, அவனுடைய பெயரை வெளிப்படையாகச் சொல்லாமல், ஒளிந்து கொள்வதற்காக வந்தவர்களைக் குறிப்பிடுவது போல் அவனுடைய பெயரை மறைத்துச் சொல்லுகிறாள் ஆண்டாள் என்பது பட்டர் அளிக்கும் விளக்கம்.[1]

[71]

(தாமோதரனை) "பணைகளிலே தாவினவாறே உடைகழுவத் தழும்பைக் கண்டு இடைச்சிகள் சிரித்தார்கள். அத்தழும்பு தோன்றாமைக்கிறே நம்பெருமாள் கணையம் மேல் சாத்துச் சாத்துகிறது" என்று சீயர்.

(திருப்பாவை 5 ஆறாயிரப்படி)

நிகழிடம்

கண்ணபிரானைக் கூறுகின்ற கோபிகை (பாவனையில் உள்ள ஆண்டாள்) 'தாமோதரன்' (கயிற்றின் அடையாளத்தை வயிற்றிலே உடையவன்) என்கிறாள். இத்தொடர்பில் நஞ்சீயர் அருளிச்செய்த **வார்த்தை** *ஒன்று எடுத்துக் காட்டப் பெறுகிறது.*

விளக்கம்

கண்ணபிரான் வெண்ணெய் திருடித் தின்பதைக் கண்ட யசோதை அவள் அவனைக் கையும் களவுமாகப் பிடித்து உரலோடு கட்டிவிட்டாள்.[2] *கயிற்றினால்*

1. எண் 54 பார்க்க

2. கண்ணபிரான் உரலில் கட்டுண்டது முதலிய சரிதங்களை ஸ்ரீ விஷ்ணு புராணம் (5-6 : 10-15) ஹரிவம்சம், ஸ்ரீபாகவதம் (10-10) முதலிய நூல்களில் விரிவாகக் காணலாம்.

கண்ணன் வயிற்றை உரலோடு சேர்த்துக் கட்டியதனால் கண்ணபிரானுடைய வயிற்றில் கயிறு நன்றாக அழுந்தி, அதனால் தழும்பும் ஏற்பட்டுவிட்டது. கண்ணபிரான் அந்தத் தழும்பைத் தன் உத்தரீயத்தினால் மறைத்துக் கொண்டே எப்போதும் திரிவான். ஒரு முறை கண்ணபிரான், ஆற்றில் குளித்துக் கொண்டிருந்த இடைச்சிகளின் துணிகளை எல்லாம் எடுத்துக் கொண்டு ஒரு குருந்த மரத்தில் ஏறியிருந்தபோது[1] ஒரு கிளையிலிருந்து அவன் மற்றொரு கிளைக்குத் தாவுகிறபோது, அவனுடைய உடை சற்று நழுவியது; வயிற்றில் இருந்த தழும்பும் இடைச்சிகளுக்குத் தெரிந்தது. உடனே அவர்கள் கண்ணனைப் பார்த்து சிரித்து விட்டார்களாம். அதனால் கண்ணன் வெட்கமடைந்தான். அதனால்தான் ஸ்ரீரங்கத்திலே எழுந்தருளியிருக்கும் நம்பெருமாள் வயிற்றிலே இருக்கும் அத்தழும்பு ஒருவர்க்கும் தெரியாமல் இருப்பதற்காக, மேலாகச் சாத்தும் திருப்பரிவட்டம் திருவயிற்றை மறைக்கும்படி கணையம்போல்[2] சாத்தப்படுகிறது என்று நஞ்சீயர் கூறுவர்.

[72]

(தாமோதரனை) "தான் எழுத்து வாங்கின தழும்பு காட்டி நம்மை எழுத்து வாங்குவித்துக் கொள்ளும் லேஷியுடைய திருவிலச்சினை" என்று பட்டர்.

(திருப்பாவை 5 நாலாயிரப்படி)

நிகழிடம்

கண்ணபிரானைக் கூறுகின்ற கோபிகை (பாவனையில் உள்ள ஆண்டாள்) 'தாமோதரன்' (கயிற்றின் அடையாளத்தை வயிற்றிலே உடையவன்) என்கிறாள். கண்ணபிரான் வெண்ணெய் திருடி உண்டபோது யசோதை அவனைக் கையும் களவுமாகப் பிடித்து, ஒரு கயிற்றினால் உரலோடு சேர்த்துக் கட்டிவிட்டாள். அப்படிக் கட்டுண்டிருந்ததனால் கண்ணனுடைய திருவயிற்றில் நிரந்தரமாகத் தழும்பு ஒன்று ஏற்பட்டு, அதன் காரணமாக அவன் தாமோதரன் என்ற

1. கண்ணபிரான் கோபிகைகளுடைய துணிகளை அபகரித்துச் சென்றது பற்றி ஸ்ரீபாகவதத்தில் (10-22) விரிவாக உள்ளது. இச்சரிதம் பற்றி பெரியாழ்வாரும் (பெரியாழ்வார் திருமொழி 2-10-1), ஆண்டாளும் (நாச்சியார் திருமொழியில் 3ம் திருமொழி) அருளிச்செய்துள்ளனர்.

2. கணையம் என்பது மதில், கதவு என்று பல பொருள்களை உடையது. நம்பெருமாள் திருமேனியில் இருக்கும் தழும்பு வெளியில் தெரியாமல் இருப்பதற்காக மேலே சாத்தப்படும் வஸ்திரம் தழும்பை மறைக்கும் கதவுபோலமைவதால் கணையம் எனப்பட்டது. ஸ்ரீரங்கம் நம்பெருமாள் (உற்சவர்) அணிந்து கொள்ளக்கூடிய உள்சாத்து ஒன்று உண்டு. அதைக் களையும்போது, மேல்சாத்து ஒன்றைக் கணையம்போல் சாத்தி (தழும்பு வெளியில் தெரியாமல் மறைத்துத்தான்) உள்சாத்தைக் களைவார்கள். இப்போதும் நம்பெருமாளுக்குத் திருமஞ்சனம் நடைபெறும்போது இப்படியே செய்யப்படுவதைக் காணலாம்.

திருநாமத்தையும் அடைந்தான். இத்தொடர்பில் பட்டர் அருளிச்செய்த சுவையான **வார்த்தை** ஒன்று எடுத்துக் காட்டப் பெறுகிறது.

விளக்கம்

கண்ணபிரானுடைய திருவயிற்றிலுள்ள தழும்பை 'சேஷியுடைய திருவிலச்சினை' என்பராம் பட்டர். அதாவது, நாமெல்லாரும் எம்பெருமானுக்கு அடிமைப்பட்டவர்கள் என்பதைத் தெரிவிக்க அவனுடைய சங்கு சக்கர சின்னங்களை நம்முடைய தோள்களில் திருவிலச்சினைகளாக - அடையாளமாக தரித்துக் கொள்வது போல[1] எம்பெருமானும், தான் அடியவர்களுக்கு ஆட்பட்டவன் என்பதைத் தெரிவிக்க, யசோதை தன்னைக் கட்டியமையால் தன் வயிற்றில் உண்டான தழும்பைத் திருவிலச்சினையாக - அடையாளமாக - தரிக்கிறான் என்பது கருத்து. அடியவர்களுக்குத் தான் ஆட்பட்டவன் என்பதற்கு இத்தழும்பை அடையாளமாகக் காட்டித் தன் எளிமையால் நம்மை அடிமைப்படுத்துகிறான். எனவே இது அவனுடைய சேஷித்வத்துக்கும் திருவிலச்சினை என்பது பட்டர் கருத்து ஆகும்.[2]

[73]

(புள்ளும் சிலம்பினகாண்) இவ்விடத்திலே பிள்ளைப் பிள்ளையாழ்வான் "ப₄க₃வத் ஸமாஶ்ரயணத்துக்கு அநுகூலமான காலத்தை ஸூசிப்பிக்கின்ற பக்ஷிநாத₃மல்லது இவ்வாத்மாவுக்கு உத்₃தே₃ஶ்யமில்லை" என்று பணிக்கும் என்றருளிச் செய்வர்.

(*திருப்பாவை 6 மூவாயிரப்படி*)

நிகழிடம்

பொழுது விடிந்ததற்கு அடையாளமாக ஆண்டாள் விடியற்காலையில் பறவைகள் கூவுகின்ற ஒலியைக் கூறுகிறாள். இத்தொடர்பில் பிள்ளைப்பிள்ளை ஆழ்வான் அருளிச்செய்த **வார்த்தை** கூறப்படுகிறது.

விளக்கம்

"எம்பெருமானை நாம் அணுகுவதற்கு ஏற்றகாலமான விடியற் காலத்தை உணர்த்துகின்ற பறவைகளின் ஒலியைத் தவிர இவ்வாத்மாக்களுக்கு

1. வைணவர்கள் தங்கள் ஆசார்யனிடம் பெறும் பஞ்ச ஸம்ஸ்காரங்களில் ஒன்று. சங்கு சக்ர சின்னங்களை நெருப்பிலிட்டுக் காய்ச்சி, தங்களது தோள்களில் ஆசார்யன் திருக்கரத்தால் பொறித்துக் கொள்வது. இது அவர்கள் ஸ்ரீமந் நாராயணனுடைய அடியவர்கள் என்பதைக் காட்டும் அடையாளமாகும்.

2. "சேஷியினுடைய திருவிலச்சினை என்று பட்டர் அருளிச் செய்வர்" என்று ஈராயிரப்படியிலுமுள்ளது.

விரும்பத்தக்கது வேறொன்றும் இல்லை[1] *என்று* **பிள்ளைப்பிள்ளை ஆழ்வான்**[2] *கூறுவர்" என்று* **(நம்பிள்ளை)** *அருளிச் செய்வர்.*

[74]

(புள்ளும் சிலம்பினகாண்) "ஆண்டாள் பிறந்த ஊரில் பக்ஷிகளுக்குத்தான் உறக்கமுண்டோ?" என்று ஆச்சான்பிள்ளை.

(திருப்பாவை 6 நாலாயிரப்படி)

நிகழிடம்

வீட்டின் உள்ளே உறங்கிக் கிடக்கின்ற கோபிகையை எழுப்புவதற்காகப் பொழுது விடிந்தமைக்கு அடையாளம் கூறும்போது "புள்ளும் சிலம்பின காண்" என்று பறவைகள் எழுப்பும் ஒலி கூறப்படுகிறது. ஆண்டாள் நாச்சியார் திருமொழியில் (9-8) "காலையெழுந்திருந்து கரிய குருவிக் கணங்கள் மாலின் வரவு சொல்லி மருள் பாடுதல் மெய்ம்மை கொலோ" (விடியற்காலையில் கரிய குருவிக்கூட்டங்கள் எழுந்திருந்து எம்பெருமானுடைய வருகையைச் சொல்லிக் கொண்டு மருள் என்கிற பண்ணைப்படுவது உண்மையாகுமா?) என்று அருளிச் செய்வது இங்கே மேற்கோளாக எடுத்துக் காட்டப்பட்டு, ஆச்சான்பிள்ளை அருளிச்செய்த **வார்த்தை** *ஒன்றும் எடுத்துக் காட்டப்படுகிறது.*

விளக்கம்

ஆச்சான் பிள்ளை, *"ஆண்டாள் பிறந்த ஊரில் பறவைகளுக்கும் உறக்கம் உண்டோ? (ஆண்டாளைப் போலவே அவைகளும் கண்ணுறங்கா. எனவேதான் அவை விடியற்காலையில் ஒலியெழுப்புகின்றன)" என்றருளிச் செய்வராம்.*[3]

[75]

(பேரரவம்) "மஹாராஜர் வாசலிலே சென்று இளைய பெருமாள் சிறு நாணேற்றி எறிந்தார்" என்ன, அனந்தாழ்வான் "தாரையினுடைய

1. எம்பெருமானை நாம் அணுகுவதற்கு ஏற்றகாலம் விடியற்காலை என்பதை, "சிற்றஞ்சிறு காலை வந்துன்னைச் சேவித்து" என்ற ஆண்டாள் (திருப்பாவை 29) பாசுரத்தால் அறியலாம். பறவை என்பது உள்ளுறை பொருளில் (ஸ்வாபதேசத்தில்) ஆசார்யனைக் குறிக்கும் ஆதலால், பகவானை அடைவதற்குத் தகுதியான காலத்தை நமக்குத் தெரிவிக்கின்ற ஆசார்யனுடைய திருவாக்கல்லது இவ்வாத்மாவுக்கு விரும்பத்தக்கது வேறொன்றும் இல்லை என்பதாகவும் பொருள் கொள்ளலாம்.
2. பிள்ளைப் பிள்ளையாழ்வான் என்பவர் கூரத்தாழ்வானால் திருத்திப் பணி கொள்ளப்பட்டவர் என்று ஸ்ரீவசனபூஷணம் (203) வ்யாக்யானத்தில் குறிப்பிடப்படுகின்றது.
3. இப்படி அருளிச் செய்தவர் ஆச்சான் என்று எண் 131ல் குறிப்பிடப்படுகிறது.

ஸ்தநோஷ்மாவைப் பற்றிக் கிடந்த ஆநந்த$_4$யமும் தீருகைக்குப் போரும் த்$_4$வனி" என்றான்.

(*திருப்பாவை 6 நாலாயிரப்படி*)

நிகழிடம்

உள்ளே படுத்துக் கிடக்கிறவளை எழுப்புகிறபோது பொழுது விடிந்ததற்கு அடையாளமாக, திருவாய்ப்பாடியில் உள்ள கோயிலில் ஊதப்படும் சங்கின் பேரொலி கூறப்படுகின்றது. இதற்கு உதாரணமாக, லக்ஷ்மணன் சுக்ரீவனுடைய அரண்மனை வாயிலில் தன்னுடைய வில்லிலிருந்து எழுப்பிய ஒலி எடுத்துக் காட்டப்பட்டு, அதற்கு அனந்தாழ்வான் அருளிச்செய்த **வார்த்தை** *ஒன்றும் எடுத்துக் காட்டப்படுகிறது.*

விளக்கம்

வாலியைக் கொன்று சுக்ரீவனுக்கு இராச்சியத்தை மீட்டுக் கொடுத்த இராமபிரான், மழைக்காலத்தில் இன்பங்களை அனுபவித்து விட்டுப் பிறகு வருமாறு அவனிடம் கூறினார். ஆனால் மழைக் காலம் முடிந்த பின்னரும் சுக்ரீவன் வந்து சீதைப் பிராட்டியைத் தேடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்யாமல் போகவே, இலக்குமணனை அனுப்பி, சுக்ரீவனைச் சற்று பயமுறுத்தி உணர்த்தும்படி கூறியனுப்பினார். லக்ஷ்மணனும் சுக்ரீவனுடைய அரண்மனைவாயிலுக்குச் சென்று, தன்னுடைய வில்லினுடைய நாணைச் சுண்டி, பேரொலியெழுப்பி, தான் வந்திருப்பதை அறிவித்தான். இந்த நாணொலியைச் செவியுற்ற சுக்ரீவன் அந்தப்புரத்தில் இருந்தபடியே நடுநடுங்கிவிட்டான்! இதை விளக்கும் **அனந்தாழ்வான்,** *"தாரையின் வெம்மையான முலைகளை அணைத்துக் கொண்டு ஆனந்தத்தில் மயங்கிக் கிடந்த சுக்ரீவனுக்கும் கூட மயக்கம் தெளியும்படியான பேரொலி லக்ஷ்மணனுடைய வில்லிலிருந்து புறப்பட்டது" என்றாராம்.*

1. லக்ஷ்மணன் எழுப்பிய நாணொலிபற்றி வான்மீகி ஸ்ரீராமாயண சுலோகங்கள்:

 ரோஷ வேக குபித: ச்ருத்வா சாபரணஸ்வநம்
 சகார ஜ்யாஸ்வநம் வீர: திச: சப்தேந பூரயத்

(மிகவும் கடுமையான கோபத்தைடைந்த லக்ஷ்மணன் எல்லா திசைகளும் நிறையும்படியான பெருத்த நாணோசையை எழுப்பினார்.)

 தேந சாபஸ்வநேநாத ஸுக்ரீவ: ப்லவகாதிப:
 விஜ்ஞாயாகமநம் த்ரஸ்த: ஸஞ்சசால வராஸநாத்

(வானர மன்னனாகிய சுக்ரீவன் அந்த வில்லின் ஒலியால் லக்ஷ்மணன் வந்திருப்பதை அறிந்து நடுநடுங்கி எழுந்தான்.) (கிஷ்கிந்தா காண்டம் 33-26, 28)

[76]

(பிள்ளாய்) .. ப₄ட்டர், "திருவாய்ப்பாடியில் உள்ளாரில் சிந்தயந்தியோபாதி க்ருஷ்ண ஸம்ப்₄லேஷத்தில் புதியாரில்லை" என்றருளிச் செய்வர்.

(திருப்பாவை 6 ஆறாயிரப்படி)

நிகழிடம்

அடியவர்களோடு சேர்ந்துதான் எம்பெருமானை அனுபவிக்கவேண்டும் என்பதை அறியாதவள் ஒருத்தியை 'பிள்ளாய்' (அறிவில் குறைந்தவளே!) என்று எழுப்புகிறாள். இத்தொடர்பில் சிந்தயந்தி என்பவளை அறிவில் குறைந்தவள் என்று பட்டர் அருளிச்செய்த **வார்த்தை** ஒன்று எடுத்துக்காட்டப்படுகிறது.

விளக்கம்

திருவாய்ப்பாடியில் உள்ள ஆய்ப்பெண்களைக் கவர்வதற்காகக் கண்ணன் விருந்தாவனத்தில் புல்லாங்குழலை ஊதுவான். அப்படிக் கண்ணன் ஊதத் தொடங்கியவுடனே, அக்குழலோசையைக் கேட்ட ஆயப்பெண்கள் அனைவரும் தத்தம் இல்லங்களில் தாங்கள் செய்து கொண்டிருந்த காரியங்களை அப்படியே விட்டுவிட்டு, தங்கள் மாமியார், மாமனார் முதலியோரையும் பொருட்படுத்தாமல் கண்ணன் இருக்குமிடத்திற்கு விரைந்து ஓடுவார்களாம். அப்போது சிந்தயந்தி என்ற ஒரே ஒரு கோபிகை மட்டும் கண்ணனுடைய திருக்குழலோசை கேட்டவுடன், அவனிருக்குமிடத்திற்குச் செல்ல நினைத்தும், வீட்டு வாசலில் மாமனாரைக் கண்டவுடன் திடுக்கிட்டு நின்று அவரை மீறிப் போக முடியாமல் வீட்டினுள்ளேயே நின்றுவிட்டாள். கண்ணனுடைய குழலோசையைக் கேட்டு அவனையே நெஞ்சினால் நினைத்துக் கொண்டிருக்கையால் வந்த இன்பத்தையும், அவன் இருக்குமிடம் சென்று அவனோடு சேர்ந்து இருக்க முடியாமையால் வந்த துன்பத்தையும் ஒரே க்ஷணத்தில் அனுபவித்தாள். இதனால் அவளுடைய இன்பத்துக்குக் காரணமான புண்ணியம், துன்பத்துக்குக் காரணமான பாவம் இரண்டும் ஒரே சமயத்தில் அழியப் பெற்று, உடனே மூச்சடங்கி வீடு பேறு அடைந்தாள். இப்படிக் கண்ணபிரானோடு சேரப் பெறாமையால் ஒரு நொடியில் மூச்சடங்கிய சிந்தயந்தியைப் பற்றி பட்டர் கூறும்போது, "திருவாய்ப்பாடியிலுள்ள ஆய்ப் பெண்களனைவரும் கண்ணனிடத்தில் மிகுந்த ஈடுபாடு உள்ளவர்கள். ஆதலால் கண்ணபிரானிடம் செல்வதற்காக விரைந்த போது, எதிரே நிற்கும் மாமனார், மாமியார் முதலியோரும் அவர்களுடைய கண்களுக்குப் புலப்படவில்லை. கண்ணபிரான் மீதுள்ள பக்தி காரணமாக அவர்களுக்குக் கண் இருண்டுபோய், கண்ணனைத் தவிர வேறு எதுவுமே தெரியவில்லை. ஆனால் சிந்தயந்திக்கோ எதிரே இருந்த பெரியவர்கள் கண்ணுக்குத் தெரிந்து அதனால் அவள் திடுக்கிட்டு

நின்றுவிட்டாள்.[1] *எனவே இவள் கண்ணனிடம் உள்ள ஈடுபாட்டில் மிகவும் புதியவள் என்று தோன்றுகிறது. மற்ற கோபிகைகளைப் போல் இவளும் பழகியவளாயிருந்தால் தயங்காமல் கண்ணனிடம் போகத் துணிந்திருப்பாள்" என்றருளிச் செய்தார்.*[2]

[77]

ஆட்கொண்ட வில்லி சீயர் எழுந்தருளா நிற்கச் செய்தே, நஞ்சீயர் தண்டனிட்டு நிற்க, "ப$_{4}$க$_{3}$வத்$_{3}$ விஷயத்தில் ருசி நமக்கு மெய்யாகப் பிறந்ததில்லை காணும்" என்றருளிச்செய்ய, "உம்மைப் போலே ஆசார்யவான்கள் உண்டோ? இங்ஙனேயருளிச் செய்வானென்?" என்ன, "ப$_{4}$க$_{3}$வத்$_{3}$விஷயத்தில் மெய்யே ருசி உண்டென்றிருக்கையாவது ப$_{4}$ாக$_{3}$வதர்களைக் கண்டால் உகக்குமன்று காணும்!" என்றருளிச் செய்தார்.

(திருப்பாவை 7 ஆறாயிரப்படி)

நிகழிடம்

கோபிகையின் பாவனையில் உள்ள ஆண்டாள் திருப்பாவை நோன்பு நோற்பதற்காக, உறங்கிக்கிடக்கும் தன் தோழியரை எழுப்புகிறாள். எம்பெருமானுடைய அடியவர்களிடம் அவளுக்குள்ள ஈடுபாட்டை

1. இப்பெண்ணுடைய சரித்திரம் ஸ்ரீவிஷ்ணு புராணம் 5வது அம்சம் 13வது அத்யாயத்தில் கூறப்படுகிறது. அங்கு இவளுக்குப் பெயர் எதுவும் குறிப்பிடப்படவில்லை.

காசிச் சாவதஸ்யாந்தே ஸ்தித்வா த்ருஷ்ட்வா பஹிர்குரும்
தந்மயத்வேந கோவிந்தம் தத்யௌ மீலிதலோசநா (20)

(ஒருத்தி (கோபிகை) வாசலில் வந்த நின்று வெளியே (மாமனார் முதலிய) பெரியவர்கள் நிற்பதைக் கண்டாள். கண்களை மூடிக் கொண்டு கோவிந்தனையே நினைத்தாள்.)

தத்சித்த விமலாஹ்லாத க்ஷீண புண்யாசயா ததா
ததப்ராப்தி மஹாது:க்க விலீன அசேஷ பாதகா (21)

(அவனை நெஞ்சில் நினைத்ததனால் உண்டான மகிழ்ச்சியினால் எல்லாப் புண்ணியங்களையும் அனுபவித்துக் கழித்தவளாகவும், அவனை அடைய முடியாத பெரும் துயரினால் எல்லாப் பாவங்களையும் அனுபவித்துக் கழித்தவளாகவும் ஆனாள்.)

சிந்தயந்தீ ஜகத்ஸூதிம் ப்ரப்ரஹ்மஸ்வரூபிணம்
நிருச்வாஸதயா முக்திம் கதாந்யா கோபகந்யகா (22)

(உலகை ஈன்றவனும் பரப்ரம்மமுமான அவனையே சிந்தித்துக் கொண்டிருந்தவளாய் மூச்சடங்கி அந்த கோபகன்னிகை முக்தியடைந்தாள்.)

இவ்வாறு அவள் கண்ணனையே சிந்தித்துக்கொண்டு உயிர்நீத்ததாக ஸ்ரீ விஷ்ணு புராணத்தில் கூறப்பட்டுள்ளமையால் அவளை சிந்தயந்தீ என்றே ஆசார்யர்கள் குறிப்பிடுகின்றனர்.

2. பட்டர் இவ்வாறு அருளிச்செய்தமை மற்றும் இரு இடங்களில் குறிப்பிடப்படுகிறது. எண் 146, 246

விளக்குவதற்காக, ஆட்கொண்டவில்லி சீயர் என்பவர் நஞ்சீயரிடம் அருளிச் செய்த **வார்த்தை** ஒன்றை உரையாசிரியர் எடுத்துக் காட்டுகிறார்.

விளக்கம்

ஆட்கொண்டவில்லி சீயர் என்பவர் எம்பெருமானாருடைய சீடர்களில் ஒருவர். ஒருநாள் அவர் சென்று கொண்டிருந்த போது எதிரே வந்த **நஞ்சீயர்** அவரைக் கீழே விழுந்து வணங்கினார். இதைக் கண்ட ஆட்கொண்ட வில்லி சீயர், "எம்பெருமானிடத்தில் நான் ஈடுபாடுள்ளவன் என்று நினைத்தன்றோ என்னை நீர் வணங்குகிறீர். உண்மையில் அந்த ஈடுபாடு நம்மிடம் மெய்யாக இல்லையே!" என்றருளிச் செய்தார். அதைக் கேட்ட நஞ்சீயர், "எம்பெருமானார் திருவடிகளில் சீடராக இருக்கும் பேறு பெற்ற உம்மைப் போன்ற பாக்கியவான்கள் உண்டோ? அப்படியிருக்க, தேவரீர் இப்படியருளிச் செய்யக் காரணம் என்ன?" என்று கேட்டார். அதற்கு ஆட்கொண்டவில்லி சீயர் "எம்பெருமானுடைய அடியவர்களைக் கண்டால் நமக்கு என்றைக்கு உண்மையான மகிழ்ச்சி ஏற்படுகிறதோ அன்றுதான் எம்பெருமானிடத்தில் உள்ள ஈடுபாடும் உண்மையானதாக அமையும்" என்றருளிச் செய்தார்.[1]

[78]

ஸ்ரீதே₂விமங்கலத்திலே கமுகிலே நஞ்சீயர் ஸ்ரீபாத₂த்தையுடையார் சிலர் இருப்போரையடைய அமுது செய்விக்கக் கண்டு ப₄ட்டர், பிடாத்தையிட்டுக் கொண்டிருந்து ப்ரீதராய், "நம்முடையகையிலே சில மெய்யுண்டாயன்று, அடியிலே சில மெய்யர் உண்டாய் அவர்களுடைய மெய் இவ்வளவும் வரப் பேசுகிறது!" என்றருளிச் செய்தார்.

(திருப்பாவை 7 நாலாயிரப்படி)

நிகழிடம்

கோபிகையின் பாவனையில் உள்ள ஆண்டாள் திருப்பாவை நோன்பு நோற்பதற்காகத் தன் தோழியரை (அடியவர்களை) எழுப்புகிறாள். இங்கு, அடியவர்களோடுள்ள தொடர்பு காரணமாகவே நமக்குப் பெருமை உண்டாகின்றது என்பதை விளக்க ஒரு **ஐதிஹ்யம்** எடுத்துக்காட்டப்படுகிறது.

1. "ஆட்கொண்டவில்லி சீயர் எழுந்தருளாநிற்க, நஞ்சீயர் தண்டனிட்டு நிற்க" என்று இவ்வைதிஹ்யத்தில் உள்ளமையால், ஆட்கொண்டவில்லி சீயரை நஞ்சீயர் கீழே விழுந்து வணங்கினார் என்பது பெறப்படுகிறது. ஆனால் பதிலுக்கு ஆட்கொண்டவில்லி சீயர் நஞ்சீயரை வணங்கியதாக இங்கே கூறப்படவில்லை. எனவே, தம்மை வணங்கிய அடியவரான நஞ்சீயரைத் தாம் முதலில் வணங்காவிட்டாலும், பிறகு அப்படி வணங்காமைக்கு வருந்தி, தமக்கு எம்பெருமானிடத்தில் உண்மையான ஈடுபாடு இல்லை என்று ஆட்கொண்டவில்லி சீயர் கூறிக்கொண்டதாகக் கொள்ளலாம்.

விளக்கம்

பட்டர் ஒரு சமயம் (வாணவதரையன் என்பவரைக் காண்பதற்காக மேலக்கோட்டை திருநாராயணபுரத்திற்கு அருகிலுள்ள) ஸ்ரீதேவிமங்கலம் என்ற ஊருக்குத் தமது சீடர்கள் பலருடன் எழுந்தருளினார். அங்கிருந்த நஞ்சீயருடைய சீடர்கள், வந்திருந்த ஸ்ரீவைஷ்ணவர்கள் அனைவருக்கும் மிகவும் அன்போடு விருந்து படைத்தனர். தாம் இன்னார் என்று காட்டிக் கொள்ளாமல் பிடாத்தையிட்டுக் கொண்டிருந்த (துணியில் முட்டாக்கிட்டுக் கொண்டிருந்த) பட்டர், அவர்களுடைய உபசரிப்பினால் மிகவும் மகிழ்ச்சியடைந்து, "நம்மை இன்னார் என்று தெரிந்துகொள்ளாமலே இவர்கள் இப்படி அன்புடன் உபசரிக்கிறார்களாதலின், இந்த மதிப்பும் மரியாதையும் நம்முடைய சிறப்புகளால் வந்தவையல்ல. நம்முடைய சீடரான நஞ்சீயரிடம் (அல்லது எண் 132ன்படி நம்முடைய ஆசார்யர்களான ஆழ்வான் எம்பார் போல்வாரிடம்) இவர்களுக்குள்ள மதிப்பும் மரியாதையும் இவர்களை நம்மளவும் வரச்செய்துள்ளது" என்றருளிச் செய்தார்![1]

[79]

(கீசு)..... "விடிவோரை மாளிகையிலே சென்று எழுப்புவாரும், கவிசொல்லுவாரும், வம்ஶாவளி ஓதுவாருமாக எழுந்திருக்கக் கடவ இவர், பக்ஷிகளுக்கு முன்னே உணரும்படி ஆவதே! என்ன த₄ர்மஹாநி!" என்று ஆய்த்தான் அருளிச் செய்வர்.

(*திருப்பாவை 7 ஈராயிரப்படி*)

நிகழ்டம்

உள்ளே படுத்துக் கிடக்கின்ற கோபிகையை எழுப்பும்போது பொழுது விடிந்ததற்கு அடையாளமாக ஆனைச்சாத்தன் எனும் பறவை கூவுகின்ற ஒலி கூறப்படுகிறது. இதேபோல் ஸ்ரீராமாயணத்தில் ராமபிரான் லக்ஷ்மணனிடம் பறவைகளின் ஒலியைப் பொழுது விடிந்ததற்கு அடையாளமாகக் காட்டிய நிகழ்ச்சி ஒன்று இங்கு உரையில் மேற்கோளாகக் காட்டப்பட்டு இத்தொடர்பில் ஆய்த்தான் என்பவர் அருளிச்செய்த **வார்த்தை** கூறப்படுகிறது.

விளக்கம்

தசரதரின் கட்டளைப்படி வனவாசம் புறப்பட்ட இராமபிரான் யமுனா நதியைத் தாண்டி யமுனாவனத்தில் ஓரிரவு தங்கினான். மறுநாள் காலை லக்ஷ்மணனைப் பார்த்து, பொழுது விடிந்ததற்கு அடையாளம் கூறுகின்றபோது, "ஸௌமித்ரே ச்ருணு வந்யாநாம் வல்கு வ்யாஹரதாம் ஸ்வநம்" (லக்ஷ்மணா

1. பட்டர் அருளிச்செய்தமை மற்றோரிடத்திலும் குறிப்பிடப்பெற்றுள்ளது. எண் 132 பார்க்க.

வனத்திலுள்ள பறவைகள் கூவுகின்ற ஒலியைக் கேள்) (ஸ்ரீரா. அயோ. 56-2) என்று கூறுகின்றான். இவ்விடத்தில் **ஆய்த்தான்** என்பவர், "விடியற்காலையில் மாளிகை வாசலில் சென்று எழுப்புபவர்களும், இனிய பாடல்களைப் பாடுபவர்களும், வம்சபரம்பரையின் பெருமைகளைச் சொல்லி எழுப்புபவர்களும் திருப்பள்ளி உணர்த்த எழுந்திருக்க வேண்டியவரான சக்ரவர்த்தி திருமகன் இப்போது பறவைகளின் ஒலியைக் கேட்டு எழுந்திருக்கும்படி ஆகிவிட்டதே! இது என்ன அநியாயம்!" என்று அருளிச் செய்தாராம்.

[80]

(கோதுகலமுடைய பாவாய்)................... "முலையெழுந்தார்படி மோவாயெழுந்தார்க்குத் தெரியாதிறே!" என்று ப$_4$ட்டர்.

(திருப்பாவை 8 ஆறாயிரப்படி)

நிகழிடம்

உறங்கிக் கொண்டிருக்கின்ற ஒரு கோபிகையை எழுப்புகின்ற (கோபிகையின் பாவனையில் உள்ள) ஆண்டாள், "ஒரு பெண் படக்கூடிய வருத்தத்தை மற்றொரு பெண் அறியாமல் இருப்பாளோ? நாங்கள் இப்படி வருத்தப்பட்டுக் கொண்டு இருக்கையில் எங்களைப் போன்ற பெண்ணான நீ உறங்கலாமோ?" என்கிறாள் என்று உரையிட்ட உரையாசிரியர், இத்தொடர்பில் பட்டர் அருளிச்செய்த **வார்த்தை** ஒன்றை எடுத்துக் காட்டுகிறார்.

விளக்கம்

"முலையெழுந்தார்படி மோவாயெழுந்தார்க்கு தெரியாதிறே!" என்பராம் பட்டர்.[1] அதாவது 'முலையெழுந்தவர்களான பெண்களுக்கு ஏற்படக்கூடிய வருத்தத்தை மோவாய் (மீசை தாடி) முளைத்தவர்களான (கண்ணபிரானை யுள்ளிட்ட) ஆண்களன்றோ உணரமாட்டார்கள்! ஆனால் முலையெழுந்த பெண்ணான நீயும் உணராதிருப்பது என்னே! இது தகாது!!' என்பது கருத்து.

[81]

(எழுந்திராய்) ப$_4$ட்டர் போது விடியுந்தனையும் கண்வளர்ந்தருள, ஶிஷ்டர்கள் எல்லாரும் கொண்ட கோலங்களும் தாங்களுமாய் வந்து கிடக்குமா போலே.

(திருப்பாவை 8 நாலாயிரப்படி)

1. இவ்வார்த்தையை எம்பெருமானார் அருளிச் செய்ததாக எண் 50லும், இங்குள்ளது போலவே பட்டர் அருளிச் செய்ததாக எண் 151லும் காணப்படுகிறது.

நிகழிடம்

உள்ளே உறங்கிக்கிடக்கின்ற கோபிகையை எழுப்புகின்றவர்கள், 'எழுந்திராய்' என்று கூறுவதன் கருத்தை விளக்குகின்ற உரையாசிரியர், "நாங்கள் உன்னை எழுப்ப நீ எழுந்தாய் என்ற பெருமையை எங்களுக்கு அளிக்கும் வண்ணம் எழுந்து வருவாயாக என்கிறார்கள்" என்று கூறி இதற்குச் சான்றாக பட்டரை எழுப்பியதை **உதாரணம்** காட்டுகிறார்.

விளக்கம்

பராசரபட்டர் போது விடியும் வரை உறங்கிக்கிடக்க, பெரியவர்கள் எல்லோரும் தாங்கள் நீராடி, பன்னிருதிருமண்காப்பு, திருமணித்தாழ்வடம் முதலியவை அணிந்து, கொண்ட கோலங்களோடு வந்து பட்டரை எழுப்புவார்களாம். பட்டரை எழுப்புகிற கைங்கர்யம் தங்களுக்கு வாய்த்ததே என்று மகிழ்ந்து மிகவும் பெருமையுடன் இதைச் செய்வார்களாம்.[1] (அதுபோல உறங்கிக் கிடப்பவளை மற்ற கோபிகைகள் எழுப்புகிறார்கள்.)

[82]

(தூமணி மாடம்) ...ஆழ்வான், "ஹிதாம்ஸத்துக்கு ஒரு வைஷ்ணவனுடைய க்₃ருஹயாத்ரையை அநுஸந்தி₄க்க அமையும்" என்றாப்போலே இவர்களும் இவளுடைய மாளிகையிலழகை அனுப₄விக்கிறார்கள்.

(திருப்பாவை 9 ஆறாயிரப்படி)

நிகழிடம்

கோபிமார் பாவனையில் மற்றொரு கோபிகையை எழுப்புகின்ற ஆண்டாள், அவளுடைய மாளிகையை, 'தூமணி மாடம்' என்று கொண்டாடுகிறாள். அடியவர்கள் எழுந்தருளியிருக்கும் மாளிகையைக் கொண்டாடுவது மிகவும் சிறந்தது என்பதற்குக் கூரத்தாழ்வான் அருளிச்செய்த **வார்த்தை** ஒன்று எடுத்துக்காட்டப்படுகிறது.

விளக்கம்

"ஒருவன் உய்வு பெற வேண்டுமானால் அதற்கு உடலாக ஒரு ஸ்ரீவைஷ்ணவனுடைய திருமாளிகையின் சிறப்பை நெஞ்சினால் நினைத்தாலும் போதும்!" என்று கூரத்தாழ்வான் அருளிச் செய்வராம். அதாவது அந்த ஸ்ரீவைஷ்ணவன் தனது திருமாளிகையை அடியவர்களுடைய உகப்புக்காக மணிமயமாகவும், தீபமயமாகவும் ஸதா தூபம் கமழும்படியாகவும், துயிலணையுள்ளதாகவும் தனது செல்வத்தை உபயோகித்துச் சிறப்பித்துள்ள

1. "பட்டர் விடியுந்தனையும் கண்வளர்ந்தருள, சிஷ்யர்களெல்லாம் திருவாசலிலே வந்திருக்குமா போலே" என்று இவ்வைதிஹ்யம் ஈராயிரப்படி உரையிலுமுள்ளது.

இந்நடைமுறையை நெஞ்சால் நினைத்தாலும் போதும். அடியவருக்கு ஆட்பட்டிருத்தல் என்கிற உயர்வான பண்புடையவர்களுக்கு, அவ்வடியவர் களோடு தொடர்புடைய பொருள்களும் உயர்வாகவே கருதப்படும் என்பது கருத்து.

[83]

(துயிலணை மேல் கண் வளரும்) ப$_4$ட்டர்க்குச் சிலர் "தொண்டனூர் நம்பி திருவடிச் சார்ந்தார்" என்று விண்ணப்பஞ் செய்ய, அவர், "ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு அடிமை செய்து போந்தபடிக்கு, 'திருநாட்டுக்கு நடந்தார்' என்று சொல்ல வேண்டாவோ?" என்று அருளிச் செய்தார். நம்பி ஏறுதிருவுடையார் த$_3$ாஸர் இடையாட்டமாகவும் நஞ்சீயர் இப்படியருளிச் செய்தார்.

(திருப்பாவை 9 ஆறாயிரப்படி)

நிகழ்டம்

உள்ளே உறங்கிக் கிடப்பவளை எழுப்புகின்ற கோபிகைகள் 'துயிலணைமேல் கண்வளரும் மாமான்மகளே!' என்கிறார்கள். மாமான் மகளையும் எழுப்புகின்றபோது 'உறங்கும் மாமான் மகளே' என்று கூறாமல் மிகவும் கௌரவம் தோன்றும்படியாக 'கண்வளரும் மாமான் மகளே' என்றதன் கருத்தினை விளக்குகின்ற உரையாசிரியர், எம்பெருமானுடைய அடியவர்களைப் பற்றிக் கூறும்போது மிகவும் உயர்ந்த சொற்களாலேயே கூறவேண்டும் என்பதற்கு **ஐதிஹ்யம்** *காட்டுகிறார்.*

விளக்கம்

எண் 34ன் விளக்கமும் அதன் அடிக்குறிப்பும் பார்க்க.[1]

[84]

(மாமீர் அவளை எழுப்பீரோ)......'தாய் என்று பழியிட்டுப் போக வேணுமோ அடியேனாயிருக்கிற என்னை?' என்னும் திருமங்கை ஆழ்வாரை வெட்டிமையர் என்றும், எம்பெருமானாரைக் கோயிலண்ணன் என்றும் ஆண்டாள் அருளிச் செய்யும். அத்தை எம்பெருமானார் கேட்டருளி, "நான் அடியேன் அல்லேனோ? என்னை இப்படி அருளிச் செய்வதே!" என்றாப்போலே இத்திருவாய்ப்பாடியும்.

(திருப்பாவை 9 நாலாயிரப்படி)

1. பட்டரும் நஞ்சீயரும் இவ்வாறு அருளிச்செய்தமை நாலாயிரப்படியிலும் குறிப்பிடப்பெறுகிறது.

நிகழிடம்

உள்ளே உறங்கிக் கிடப்பவளை எழுப்புகின்ற கோபிகைகள் முதலில் 'மாமான்மகளே! மணிக்கதவம் தாள் திறவாய்!' என்றார்கள். பிறகு உறங்குபவளின் அருகே அமர்ந்திருக்கும் அவள் தாயை நோக்கி, 'மாமீர்! அவளை எழுப்பீரோ!' என்றார்கள். "உறங்குபவள் உன் மகள்தானே! அவளை நீ எழுப்பக்கூடாதோ?" என்கிறார்கள் வெளியிலிருப்பவர்கள். ஆனால் அத்தாயோ, தன்னைத் தாயாக நினையாமல், கண்ணபிரானின் அன்புக்கு உரியவளான அந்த கோபிகைக்கு (உறங்குபவளுக்கு) அடியவளாகவே தன்னைக் கருதியிருப்பாள் என்கிறார் உரையாசிரியர். வினைப்பயன் காரணமாக ஏற்படும் உடல் உறவைக் காட்டிலும் ஆத்மாவுக்கு அடியார்களிடத்து உண்டாகும் அடிமைத்தன்மையே உயர்ந்தது. ஏனெனில் உடல் அழியக்கூடியது. எனவே அதனால் உண்டான உறவும் அழிந்துவிடும். ஆனால் ஆத்மா அழியாததாகையால் ஆத்மாக்களுக்கு இடையே உண்டான உறவும் நித்யமாகவே இருக்கும். இதற்குச் சான்றாக திருமங்கையாழ்வார் பாசுரம் ஒன்று எடுத்துக் காட்டப்பட்டு, எம்பெருமானார் அத் தொடர்பில் அருளிச்செய்த **வார்த்தை** ஒன்றும் கூறப்படுகிறது.

விளக்கம்

திருமங்கை ஆழ்வாராகிற நாயகி, தன் தாயிடம் கூடச் சொல்லிக் கொள்ளாமல் எம்பெருமானோடு சென்று விட்டதைக் குறித்துத் தாய் கதறுவதாக 'கள்வன்கொல்' என்று தொடங்கும் பெரிய திருமொழிப் பதிகம் (3-7) அமைந்துள்ளது. அதில் ஒரு பாசுரத்தில் "அன்னையும் அத்தனும் என்று அடியோமுக்கு இரங்கிற்றிலள்" (எங்களைத் தாயாகவும், தகப்பனாராகவும் நினைத்தாளே தவிர, நாங்கள் அவளுக்கு அடியவர்களாக இருப்பதை அவள் உணராமல், என்னைத் தாய் என்று ஒரு பழியிட்டுப் போனாள்) என்கிறாள் பரகாலநாயகியின் தாயார். அதாவது, பரகாலநாயகிக்குத் தான் அடியவளாக இருப்பதைக் கருத்தில் கொள்ளாமல், தாய் என்ற உறவைக் காரணம் காட்டிப் பிரிந்து சென்றுவிட்டாள் என்று தாயார் கூறுகிறாள்.

பெரியாழ்வார் திருமகளான ஆண்டாள் 'மாலிருஞ்சோலை நம்பிக்கு நான் நூறுதடா நிறைந்த வெண்ணெயும் நூறுதடா அக்காரவடிசிலும் சொன்னேன்' என்று வாய்நேர்ந்தபடியே திருமாலிருஞ்சோலை அழகருக்கு நூறு தடா வெண்ணெயும் அக்காரவடிசிலும் எம்பெருமானார் ஸமர்ப்பித்தார். (இதன் விளக்கத்தை எண் 128ல் காண்க.) ஸ்ரீவில்லிபுத்தூரில் அர்ச்சை வடிவில் எழுந்தருளியிருக்கும் ஆண்டாள் இதனால் மிக மகிழ்ந்து எம்பெருமானாரைத் தனக்குத் தமையனாக பாவித்து 'கோயிலண்ணர்' என்று கொண்டாடினாள்.

கூரத்தாழ்வானின் தர்மபத்தினியான **ஆண்டாள்**, உறவு காரணமாகத் தாயின் அடிமைத் தன்மையை மறந்த திருமங்கை ஆழ்வாரை 'வெட்டிமையர்'

(கடினமாகப் பேசுபவர்) என்று கூறுவராம். பெரியாழ்வார் திருமகளான ஆண்டாளுக்கும் எம்பெருமானாருக்கும் தேகசம்பந்தம் ஏதுமில்லாவிட்டாலும், அவளுடைய விருப்பத்தை நிறைவேற்றும் வகையில் திருமாலிருஞ்சோலை அழகருக்கு நூறுதடா நிறைந்த வெண்ணெயும் அக்காரவடிசிலும் ஸமர்ப்பித்த படியால், அவ்வாண்டாள் எம்பெருமானாரை 'கோயிலண்ணர்' என்று அழைத்தமையைக் கொண்டு, அப்பட்டத்தையிட்டே எம்பெருமானாரைக் கூரத்து ஆண்டாள் குறிப்பிடுவளாம். இதைக் கேட்ட எம்பெருமானார், "என்னையும் அண்ணன் என்று உறவு சொல்லிப் பழியிடலாமோ, நான் அடியவன் அல்லேனோ?" என்றாராம். அன்னை, அத்தன் என்கிற உறவு, அவர்களுடைய அடிமைத் தன்மையை பரகாலநாயகி மறப்பதற்குக் காரணமானதுபோல, அண்ணன் என்கிற உறவும், தம்முடைய அடிமைத் தன்மையை (பெரியாழ்வார் திருமகளான) ஆண்டாள் மறப்பதற்குக் காரணமாகிவிடுமே என்று வருந்தி எம்பெருமானார் இப்படி அருளிச் செய்தார். (அதுபோலவே உறங்குகின்ற பெண்ணின் தாயாரை 'மாமீர்' என்று உறவு கூறி அழைத்ததனால் வருந்தினாள்.)

[85]

(அருங்கலமே) எம்பெருமானாரைப்போலே.

(திருப்பாவை 10 நாலாயிரப்படி)

நிகழிடம்

உள்ளே உறங்கிக் கிடப்பவளை எழுப்புகின்ற கோபிகைகள் 'அருங்கலமே!' என்கிறார்கள். மிகவும் உயர்ந்தவள் (ஸத்பாத்ரம்) என்ற கருத்தில் கொண்டாடப் பெற்ற கோபிகைக்கு உரையாசிரியர் எம்பெருமானாரை **உதாரணம்** *கூறுகிறார்.*

விளக்கம்

ஸ்ரீவைஷ்ணவகுருபரம்பரையில் எம்பெருமானார் மிகவும் தனிச்சிறப்பு பெற்ற ஆசார்யராவர். ஆசாரியர்களுடைய கோஷ்டியில் எம்பெருமானார் எப்படி அருங்கலமாக விளங்குகின்றாரோ அப்படியே இந்த கோபிகையும் அருங்கலமாக விளங்குகிறாள் என்பது உரையாசிரியர் கருத்தாகும்.

[86]

சீயர், பிள்ளை திருநறையூர் அரையர்க்கு அருளிச் செய்த வார்த்தை, "விடுகையும் உபாயமல்ல; பற்றுகையும் உபாயமல்ல; விடுவித்துப் பற்றுவிக்குமவனே உபாயம்" என்று.

(திருப்பாவை 12 நாலாயிரப்படி)

நிகழிடம்

'கற்றுக்கறவை' என்கின்ற பதினொன்றாம் பாசுரத்தில், தங்கள் குலத் தொழிலான பசுக்களைக் கறத்தலைச் செய்கின்ற குடியில் பிறந்த பெண் ஒருத்தி எழுப்பப்பட்டாள். 'கனைத்திளம் கற்றெருமை' என்கின்ற பன்னிரண்டாம் பாசுரத்தில், குலத்தொழிலான பசுக்களைக் கறத்தலை விட்டுவிட்டு, கண்ணன் பின்னே கைங்கர்யம் செய்து திரிவான் ஒருவனுடைய தங்கை எழுப்பப்பட்டாள். பதினோராம் பாசுரத்தில் கூறப்பட்டபடி தங்கள் தொழிலை விடாமல் செய்தவர்களுடைய அனுஷ்டானம் (நடைமுறை) மோக்ஷம் அடைய உபாயமா அல்லது, பன்னிரண்டாம் பாசுரத்தில் கூறப்பட்டபடி அத்தொழிலை விட்டுக் கைங்கர்யத்தில் இழிந்தவனுடைய அனுஷ்டானம் உபாயமா என்ற கேள்விக்கு விடையாக நஞ்சீயர் அருளிச்செய்த **வார்த்தை** எடுத்துக்காட்டப் பெறுகிறது.

விளக்கம்

"ஸர்வதர்மாந் பரித்யஜ்ய மாம் ஏகம் சரணம் வ்ரஜ" (மோக்ஷம் அடைவதற்கு நான் முன் சொன்ன எல்லா உபாயங்களையும் வாசனையோடு விட்டு என் ஒருவனையே சரணமாகப் பற்றுவாயாக) என்று கண்ணபிரான் அர்ச்சுனனுக்கு உபதேசித்துள்ளான். இதை விளக்கியருளிய **நஞ்சீயர்** "எல்லா தர்மங்களையும் விடுவதும் மோக்ஷத்தை அடைவதற்கு உபாயம்(வழி) அல்ல. அவனைப் பற்றுவதும் உபாயம் அல்ல. பின் எதுதான் உபாயம் எனில், எல்லாவற்றையும் விடுவித்துத் தன்னைப் பற்றும்படி செய்கிற அவனே உபாயம்" என்று **பிள்ளை திருநறையூர் அரையரிடம்** அருளிச் செய்தார்.

[87]

(அனைத்தில்லத்தாரும் அறிந்து) எம்பெருமானார் திருவவதரித்தாற் போலே காணும் இப்பெண்பிள்ளையும்.

(திருப்பாவை 12 மூவாயிரப்படி)

நிகழிடம்

உள்ளே உறங்குகின்றவளை எழுப்புகின்றவர்கள் 'இனித்தான் எழுந்திராய், ஈதென்ன பேருறக்கம், அனைத்தில்லத்தாரும் அறிந்து' என்கின்றனர். இதன் கருத்தை விளக்கும் உரையாசிரியர், "எம்பெருமானை மிகவும் ரகசியமாக தனியாகத்தான் அனுபவிக்கவேண்டும்; எம்பெருமானை அனுபவிப்பதற்குத் தகுதியுள்ளவர்கள் வேறு எவரும் இல்லையே என்று நினைத்து உள்ளேயே கிடக்கிறாயோ? எம்பெருமானுடைய பெருமையை அனைத்து இல்லத்தில் உள்ளவர்களும் (எல்லோரும்) அறிந்து கொண்டுவிட்டார்கள். எனவே இனியாவது எழுந்து வா" என்பதாக விளக்கி, உள்ளே சயனித்திருக்கின்ற கோபிகைக்கு எம்பெருமானாரை **உதாரணம்** காட்டுகிறார்.

விளக்கம்

திருக்கோட்டியூர் நம்பி, பகவானை அனுபவிப்பதற்குத் தகுதியுடையவர்கள் கிடைப்பது அரிது என்று கருதி ஒருவரும் அறியாதவண்ணம் அர்த்தங்களை மறைத்து வைப்பாராம்.[1] ஆனால் எம்பெருமானார், தாம் ஒருவர் மட்டும் அர்த்தங்களை அறிந்துகொண்டால் போதாது; எல்லோரும் இவ்வர்த்தங்களை அறிந்து கொண்டு உய்ய வேண்டும் என்ற பரந்த எண்ணத்தினால், அவ்வர்த்தங்களை, ஆசையுடையோர்க்கெல்லாம் கூறி வெளியிட்டார். எனவே தான் ஒருத்தி மட்டும் எழுந்து வந்து எம்பெருமானை அனுபவித்தால் போதாது; எல்லோரும் எம்பெருமானை அனுபவிப்பதற்கு வரவேண்டும் என்ற கருத்துடன் உள்ளேயே கிடக்கின்ற கோபிகையை எம்பெருமானாரோடு ஒப்பிட்டு, 'எம்பெருமானார் திரு அவதரித்தாற்போலேகாணும் இப்பெண்பிள்ளையும்' என்கிறார் உரையாசிரியர்.[2]

[88]

(நன்னாள்) ஆண்டாள், திருவேகாத$_3$ஶி பட்டினி விட்டு, ப$_4$ட்டரை "தீர்த்தம் தாரும்" என்ன, "இப்பெரிய திருநாளிலே இதொரு திருவேகாத$_3$ஶி எங்ஙனே தேடியெடுத்துக் கொண்டிகோள்!" என்றருளிச் செய்தார்.

(திருப்பாவை 13 நாலாயிரப்படி)

நிகழிடம்

கோபிகை பாவனையில் உள்ள ஆண்டாள், உள்ளே சயனித்துக் கிடக்கின்ற கோபிகை எழுப்பும்போது, தாங்கள் நோன்பு நோற்பதற்கு வாய்த்த காலத்தை 'நன்னாள்' என்று கொண்டாடுகிறாள். 'இந்த நன்னாளில் எம்பெருமானை அனுபவிப்பதைத் தவிர வேறொன்றையும் நினையாதிருக்க வேண்டியிருக்க, நீ பகவதனுபவத்திற்குத் தடையாக உறக்கத்தைக் கொள்ளலாமா?' என்று ஆண்டாள் கேட்கிறாள் என்று உரையிட்டு, இத்தொடர்பில் பட்டர் அருளிச்செய்த **வார்த்தை** ஒன்றை எடுத்துக் காட்டுகிறார் உரையாசிரியர்.

விளக்கம்

கூரத்தாழ்வான் தேவியாரான **ஆண்டாள்** வைகுண்ட ஏகாதசியன்று முழுவதும் உபவாஸம் (பட்டினி) இருந்து மறுநாள் துவாதசியன்று காலை தம்முடைய மகனான பட்டரைப் பார்த்து, "பெருமாள் தீர்த்தம் கொடும்" என்று

1. எண் 145 காண்க.

2. "எம்பெருமானார் திருவவதரித்தாற்போலே காணும் இப்பெண்பிள்ளையும்" என்று ஆறாயிரப்படி உரையிலும், "எம்பெருமானார் திருவவதரித்தாற்போலே காணும் இந்நாச்சியார் அவதரித்தபின்பு எல்லாரும் பகவத் விஷயமறிந்தது" என்று நாலாயிரப்படி உரையிலும் உள்ளது.

கேட்க, "இப்படியொரு பெரிய திருநாளுக்குள்ளே இப்படியொரு ஏகாதசி எங்கிருந்து தேடி எடுத்தீர்கள்?" என்று பட்டர் அருளிச் செய்தாராம்![1]

பெரிய திருநாள் எனப்படும் திருவத்யயன உத்ஸவம் இருபது நாள்கள் நடைபெறுவம் உத்ஸவமாகும். வைகுண்ட ஏகாதசிக்கு முன் பத்து நாள்கள் பகல்பத்து என்றும், வைகுண்ட ஏகாதசியிலிருந்து பத்துநாட்கள் இராப்பத்து என்றும் வழங்கப்படும். இவ்விருபது நாள்களும் நடைபெறும் உத்ஸவத்தில் அனைவரும் பகவானை அனுபவிப்பதிலே மூழ்கியிருப்பர். அப்படிப்பட்ட உத்ஸவத்தினிடையில் ஏகாதசியன்று பட்டினி இருப்பது உடல் பலத்தைக் குறைத்து, பகவானை அனுபவிப்பதற்கு இடையூறு செய்யுமாதலால், திருவத்யயன உத்ஸவத்தின் நடுவே, எம்பெருமானை அனுபவிக்க முடியாதபடி இப்படி ஒரு பட்டினிநாள் வருவதே என்று வெறுத்து, "இவ்வளவு சிறந்த அத்யயன உத்ஸவத்தின் நடுவே, இப்படி எம்பெருமானை அனுபவிப்பதற்குத் தடையாக அமையக் கூடிய பட்டினிநாளை எங்கே தேடி எடுத்தீர்கள்?" என்று பட்டர் கேட்டார். (அல்லது நன்கு அனுபவிக்க உரியதான பெரிய திருவத்யயன உத்ஸவத்தினிடையே ஒருவருக்கும் உணவு பற்றிய நினைவே எழக்கூடாது; அப்படியிருக்க, அவ்வுத்ஸவத்தினிடையில் ஒரு நாள் ஏகாதசி என்றும், அன்று உணவு உண்ணாமல் பட்டினி கிடக்கவேண்டும் என்றும் நினைவு எப்படி வரலாம்? என்று கருதி பட்டர் இவ்வாறு கேட்டார் என்றும் பொருள் கொள்ளலாம்.)

[89]

(செங்கல் பொடிக் கூறை) "தாமஸப்ரக்ருதிகளைச் சொல்லுகிறது" என்று எம்பார். 'தம:ப்ரசுரர் உணர்ந்தார்களென்று சொல்லியோ எழுப்புவது என்று அவள் நினைத்திருக்கும்' என்று "ஸத்வ நிஷ்டரான ஸந்யாஸிகளைச் சொல்லுகிறது" என்று திருமலை நம்பி.

(திருப்பாவை 14 ஆறாயிரப்படி)

நிகழிடம்

உள்ளே படுத்திருக்கின்ற கோபிகையை எழுப்புவதற்காக, பொழுது விடிந்ததற்கு அடையாளம் கூறுமிடத்தில், 'செங்கல் பொடிக் கூறை வெண்பல் தவத்தவர் தங்கள் திருக்கோயில் சங்கிடுவான் போகின்றார்' (காவிநிற உடை அணிந்தவர்களும், வெளுத்த பற்களை உடையவர்களுமான துறவிகள் தங்கள் கோயில்களைத் திறப்பதற்காகத் திறவுகோல்களுடன் செல்கிறார்கள்) என்று கூறப்படுகிறது. இங்கே கூறப்படுகின்ற துறவிகளைப் பற்றி எம்பார், திருமலை நம்பி ஆகிய இருவரும் கூறிய **நிர்வாஹங்கள்** கூறப்படுகின்றன.

1. இவ்வாறு பட்டர் கூறியமை மற்றோரிடத்திலும் குறிப்பிடப்பெறுகிறது. எண் 336 காண்க.

விளக்கம்

இங்கே கூறப்படுகின்ற துறவிகள் கெட்ட நடத்தையுள்ள வேஷதாரிகள் (தாமஸர்கள்) என்பது எம்பார் கருத்தாகும். அதாவது இரவெல்லாம் வெற்றிலை தின்று, செருக்குடன் கிடந்து, இன்பங்களை அனுபவித்துவிட்டு, பொழுது விடிந்தவாறே, நாம் இப்படி இருந்தோமானால் ராஜதண்டனைக்கு உள்ளாவோம் என்று அஞ்சி, செங்கல் பொடியிலே துணிகளைப் புரட்டி, காவித் துணியாக்கி அதை அணிந்து கொண்டு, பல்லையும் நன்றாக விளக்கி (வெற்றிலைக் காவியைப் போக்கிக் கொண்டு) உண்மையான துறவிகள் போல் வேஷம் போடுபவர்களும் தங்கள் தேவதைகளைப் பூஜை செய்யப் புறப்பட்டு விட்டார்கள்; தாமஸர்களும் எழுந்துவிட்ட பிறகு இன்னும் நீ உறங்கிக் கிடக்கலாமா? என்று உள்ளே உறங்குபவளை வெளியிலிருப்பவர்கள் கேட்கிறார்கள் என்று எம்பார் விளக்கம் உரைத்தார்.[1] தீய நடத்தையுள்ளவர்கள் தாமதித்துத் துயிலெழுவார்கள், அவர்களும் எழுந்து போகின்றார்கள் என்றால் உள்ளேயிருப்பவள், 'ஐயோ வெகுநாழிகை யாகிவிட்டதே!' என்று விரைவாக எழுந்து வருவாள் என்ற கருத்தில் எம்பார் இவ்விளக்கத்தை அருளினார். ஆனால், 'பொழுது விடிந்ததற்கு அடையாளம் சொல்லி, கண்ணபிரானிடத்தில் மிகுந்த அன்புள்ள கோபிகையை எழுப்பும்போது, தீய நடத்தை உள்ளவர்களையோ அடையாளமாகச் சொல்லுவது? போது விடியும்போது எழுப்புகிறவர்களும் தீயவர்களைப் பற்றிப் பேசக்கூடாது; எழுந்திருப்பவளும் அப்படிப்பட்ட பேச்சுக்களைக் கேட்கக் கூடாது. எம்பெருமானடியார்களைப் பற்றியே பேசவும் கேட்கவும் வேண்டும். எனவே இங்கு கூறப்படுகின்ற துறவிகள் உண்மையிலேயே முற்றும் துறந்த நல்ல துறவிகளே!' என்பது திருமலை நம்பியின் கருத்து.[2]

[90]

(தங்கள் திருக்கோயில்) "சிறுபுகத்தூற்றத் துறையிலே ஒரு தபசி பரிசலிலேறி ஆற்றினுள்ளேபுக்கு, காவேரி தேவிக்குச் சங்கு ஊதுகிறேனென்று அங்கே ஊத, பரிசலிலே போகிற குதிரை மிதித்து அதிலேறின மனிச்சரடைய செத்துப் போச்சுது" என்று எம்பார் அருளிச்செய்த வார்த்தை.

(திருப்பாவை 14 நாலாயிரப்படி)

1. எம்பார் சில காலம் சைவராக இருந்து, பிறகு திருமலை நம்பியால் திருத்தி பணி கொள்ளப்பட்டவர் என்பது இங்கே நினைவு கூரத்தக்கது.

2. "சிற்றெயிற்று முற்றல் மூங்கில் மூன்று தண்டரொன்றினர், அற்றபற்றர் சுற்றி வாழும் அந்தணீர் அரங்கமே" என்ற திருமழிசை ஆழ்வார் பாசுரப்படி (திருச்சந்த விருத்தம் -52) ஸ்ரீ வைஷ்ணவ ஸந்யாஸிகள் திவ்ய தேசங்களில் எழுந்தருளியிருந்ததைக் கருத்தில் கொண்டு திருமலை நம்பி இப்படி அருளிச் செய்திருக்கலாம்.

நிகழிடம்

உள்ளே படுத்திருக்கின்ற கோபிகையை எழுப்புவதற்காக, பொழுது விடிந்ததற்கு அடையாளம் கூறுமிடத்தில், ‘செங்கல் பொடிக் கூறை வெண்பல் தவத்தவர் தங்கள் திருக்கோயில் சங்கிடுவான் போகின்றார்’ (காவிநிற உடை அணிந்தவர்களும், வெளுத்த பற்களை உடையவர்களுமான துறவிகள் தங்கள் கோயில்களைத் திறப்பதற்காகத் திறவுகோல்களுடன் செல்கிறார்கள்) என்று கூறப்படுகிறது. இத்தொடர்பில் எம்பார் அருளிய **வார்த்தை** கூறப்படுகிறது.

விளக்கம்

சிறுபதத்தூற்றத் துறையில் ஒரு தபசியும் மற்றும் சிலரும் ஒரு பரிசலில் (படகில்) ஏறி அக்கரைக்குச் சென்று கொண்டிருந்தார்கள். அப்பரிசலில் ஒரு குதிரையும் ஏறியிருந்தது. வழியிடையில் அந்தத் தவசி காவேரி தேவிக்கு சங்கு ஊதுவதாகக் கூறி சங்கை எடுத்து ஊத, அதனால் பரிசிலில் இருந்த குதிரை மிரண்டு அப்பரிசலில் இருந்தவர்களை மிதித்துவிட அதிலிருந்த மனிதர்கள் அனைவரும் (ஆற்றில் முழுகி) இறந்துவிட்டார்கள் என்று இவ்விடத்தில் எம்பார் அருளிச்செய்வர்.

[91]

(ஒல்லை நீ போதாய்)........................ “அரைக்ஷணம் வைஷ்ணவ கோ$_3$ஷ்டியைப் பிரிய நின்று வரும் மாத்$_4$யஸ்த்$_2$யம் எனக்கென் செய்ய” என்கிற ஸுப்$_3$ரமண்ய ப$_4$ட்டர் வார்த்தையை ஸ்மரிப்பது.

(திருப்பாவை 15 நாலாயிரப்படி)

நிகழிடம்

உள்ளே படுத்திருக்கின்ற கோபிகையை எழுப்புகிறபோது, ‘ஒல்லை நீ போதாய்’ (விரைவாக நீ எழுந்து வருவாயாக) என்று வெளியில் இருப்பவர்கள் கூறுகின்றார்கள். அடியவர்களைப் பிரிந்து ஒரு கணமும் இருக்கலாமோ? ஆகவே விரைவாக எழுந்து வரும்படி அழைத்தனர் என்று உரைத்த உரையாசிரியர், இத்தொடர்பில் ஸுப்ரமண்ய பட்டர் என்பவர் கூறிய **வார்த்தை** ஒன்றை எடுத்துக்காட்டுகின்றார்.

விளக்கம்

ஸுப்ரமண்ய பட்டர் என்பவர் சோழவரசனிடம் ராஜபுரோஹிதராகவும் உத்தர மந்திரியாகவும் இருந்தவர். எம்பெருமானாரிடம் பெருமதிப்புக் கொண்டிருந்த அவர்,[1] ஸ்ரீவைஷ்ணவர்களிடம் மிகவும் பற்றுடையவராகத்

1. ஸுப்ரமண்ய பட்டர் என்பவர் எம்பெருமானார் காலத்தில் வாழ்ந்திருந்தவர்; அவர் அரசனிடம் சேவை புரிந்து வந்தார் என்பது போன்ற விவரங்களுக்கு எண் 365 பார்க்க.

திகழ்ந்தார். ஒரு சமயம் திருவரங்கத்தில் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கும் மற்றும் சிலர்க்கும் இடையே ஒரு சர்ச்சை ஏற்பட்டபோது, அதை மத்யஸ்தம் (நடுநிலை நின்று தீர்ப்பு வழங்குதல்) செய்வதற்காக சுப்ரமண்ய பட்டரை அரசன் போகச் சொன்னான். மத்யஸ்தம் செய்யப் புகுந்தால், மத்யஸ்தம் செய்யும் காலத்தில் மட்டுமாவது இரண்டு பட்சங்களிலிருந்தும் விலகி இருந்து இருவருக்கும் பொதுவாக இருக்க வேண்டுமே! எனவே ஸ்ரீவைஷ்ணவர்களிடத்தில் தமக்குள்ள பற்றை அரைக்கணமும் ஒதுக்கிவைத்து விட்டு நடுநிலை வகிக்க விரும்பாமல், "நடுநிலை வகிப்பதற்காகவும் கூட என்னால் அரைக்கணமும் ஸ்ரீவைஷ்ணவர்களை விட்டு விலகியிருக்க முடியாது. எனவே மத்யஸ்தம் செய்யும் பணி எனக்கு வேண்டாம்" என்று கூறிவிட்டராம்.

[92]

(உனக்கென்ன வேறுடையை) "நீ ஒருவர்க்கும் விரோதியல்லை; நீ புக்குத் திருவடி தொழு" என்ன, ஆழ்வான் வார்த்தையை நினைப்பது.

(திருப்பாவை 15 மூவாயிரப்படி)

நிகழிடம்

உள்ளே படுத்திருக்கின்ற கோபிகையை எழுப்புகிறபோது, "விரைவாக நீ எழுந்து வருவாயாக; மற்றவர்கள் எல்லோரும் சேர்ந்து எம்பெருமானை அனுபவிக்க நினைத்திருக்க, நீ மட்டும் தனியாக எம்பெருமானை அனுபவிக்க நினைக்கிறாயோ? உனக்கு மட்டும் தனி வழி ஏன்?" என்று வெளியில் இருப்பவர் கேட்கின்றனர். இத்தொடர்பில் ஓர் **ஐதிஹ்யம்** கூறப்படுகின்றது.

விளக்கம்

தீவிர சைவனான சோழவரசன் ஒருவன் சிவனைக் காட்டிலும் மேம்பட்ட தெய்வமில்லை என்றெழுதிக் கையெழுத்திடும்படி எல்லோரையும் வற்புறுத்தினான். ஸ்ரீ ராமானுஜரையும் அப்படியே கையெழுத்திடும்படி செய்ய ராஜஸபைக்கு அவரை அழைத்து வர ஆட்களை அனுப்பினான். ஸ்ரீ ராமானுஜர் ராஜஸபைக்குச் சென்றால் அவருக்கு ஏதாவது ஆபத்து விளையும் என்றெண்ணி, **கூரத்தாழ்வான்** ராமானுஜர் வேடத்தில் ராஜஸபைக்குச் சென்றார். அரசன் அவரை சிவனைக் காட்டிலும் மேம்பட்ட தெய்வமில்லை என்றெழுதிக் கையெழுத்திடுமாறு கூற, கூரத்தாழ்வான் கையெழுத்திட மறுத்ததோடு மட்டுமல்லாமல், ஸ்ரீமந் நாராயணனே பரம்பொருள் என்பதையும் தகுந்த ஆதாரங்களோடு நிலைநாட்டி வாதம் புரிந்தார். இதனால் கோபம் கொண்ட அரசன் அவருடைய கண்களைப் பிடுங்கி விடும்படி உத்தரவிட்டான். கூரத்தாழ்வான் அரசனை நோக்கி, "பாவியான உன்னைப் பார்த்த கண்கள் இனி எனக்கு வேண்டாம்" என்று கூறித் தாமே தமது கண்களைப் பிடுங்கிக் கொண்டு

விட்டார்! இதனால் அரசன் மேலும் கோபம் கொண்டான். 'ஸ்ரீராமாநுஜரோ, அவரைச் சேர்ந்தவர்களோ இனி ஸ்ரீரங்கம் கோயிலுக்குள் நுழையக் கூடாது' என்று கட்டளையிட்டுக் கோயிலுக்குக் காவலும் போட்டுவிட்டான்.

இதையறியாத கூரத்தாழ்வான் பெரிய பெருமாளைச் சேவிப்பதற்காகக் கோவிலுக்குச் சென்றபோது கோயில் வாசலிலிருந்த சேவகர்களில் ஒருவன் அரசனின் கட்டளைப்படியே அவரைக் கோயிலுக்குள் புகவிடாமல் தடுக்க, மற்றொரு சேவகன், "நீர் ராமாநுஜருடைய சீடர்தான்; ஆயினும் நீர் மிகவும் நல்லவர். நீர் ஒருவர்க்கும் விரோதியல்லர். சமமும் தமமும் (புலனடக்கமும், மனவடக்கமும்) உடையவர். எனவே நீர் போய் பெருமாளைச் சேவிக்கலாம்" என்று அவரை உள்ளே அனுமதித்தான். இதைக் கேட்ட கூரத்தாழ்வான் சமமும் தமமுமாகிய நற்குணங்கள் கொண்டிருப்பது ஆசார்யரோடுள்ள தொடர்புக்குக் காரணம் என்று தான் நினைத்திருந்தேன். ஆனால் அவையே இப்போது ஆசார்யரான ஸ்ரீராமாநுஜருடன் அடியேனுக்குள்ள தொடர்பை அறுத்துக் கொள்ளவன்றோ காரணமாகிவிட்டது. நற்குணங்கள் கொண்டவன் என்ற முறையில் பெருமாளைச் சேவிப்பதைக் காட்டிலும், ஸ்ரீராமாநுஜருடைய சீடன் என்ற முறையில் கோயிலுக்குள் செல்லாமல் இருப்பதையே விரும்புகிறேன்" என்று கூறி[2] கோயிலுக்குள் செல்லாமலே திரும்பி விட்டார். (பிறகு ஸ்ரீரங்கத்தில் தங்கியிருக்க விரும்பாமல் திருமாலிருஞ்சோலைக்கு எழுந்தருளிவிட்டார்.)

[93]

நஞ்சீயர் பிள்ளைக்கு, "ரஸவாதமும் கைப்பட்டவன் இருந்தவிடமெல்லாம் பொன்னாமாபோலே, ப்ரமேயம்கைப்பட்டவனுக்குச் சொல்லிற்றெல்லாம் வார்த்தையாம்" என்றார்.

(திருப்பாவை 16 ஆறாயிரப்படி அவதாரிகை)

நிகழிடம்

திருவாய்ப்பாடியிலுள்ள ஆய்ப்பெண்களுடைய பாவனையை அடைந்த ஆண்டாள் பாவை நோன்பு நோற்கின்ற போது மற்ற கோபிகைகளை யெல்லாம் எழுப்பிக் கொண்டு நந்தகோபர் திருமாளிகை வாசலுக்குச் செல்கின்றாள். அங்கு முதலில் கோயில் காப்பானை அணுகி, உள்ளே புகுவதற்கு அவனுடைய அனுமதியை வேண்டுகிறாள். கோயில்களில் எழுந்தருளியுள்ள எம்பெருமானைச் சேவிக்கச் செல்லும்போது அங்கு நகரக் காவலர்களையும், துவார பாலகர்களையும் அனுமதி கேட்டுக் கொண்டே ஸன்னிதிக்குள் செல்ல வேண்டும் என்று சாத்திரங்கள் பகருகின்றன. அந்தச் சாத்திர விதிகளை, ஆயர் சிறுமியர்கள்

1. சோழ அரசவையில் நடந்த நிகழ்ச்சிகள் குருபரம்பராப்ரபாவத்தில் விரிவாகக் காணத் தக்கன.

2. ஆழ்வான் கூறிய வார்த்தைகள் எண் 195ல் கூறப்பட்டுள்ளது காண்க.

அறிந்திலர்களேயானாலும் இயற்கையாகவே இவர்களுடைய செயல் சாத்திர விதிகளைப் பின்பற்றி அமைந்து விடுகிறது. சாத்திரங்களைக் கற்பவர்கள் வெகுகாலம் மிகவும் சிரமப்பட்டு அர்த்தத்தைத் தெரிந்து கொண்டு, பின்பு அவற்றைக் கடைபிடிக்க வேண்டியிருக்கும். ஆனால் அப்படி சிரமப்பட்டுக் கற்றுக் கொண்டு கடைபிடிப்பவர்களை கேட்டுத் தெரிந்து கொள்பவர்கள் அவர்களைப் போல் சிரமப்படாமல் சுலபமாக உடனே அனுஷ்டிக்கும்படி யிருக்கும். இதை விளக்குவதற்காக நஞ்சீயர் நம்பிள்ளைக்கு அருளிச் செய்த **வார்த்தை** ஒன்று எடுத்துக் காட்டப்படுகிறது.

விளக்கம்

ஒருவன் மிகவும் சிரமப்பட்டுப்ப பல வேர்களையும் மூலிகைகளையும் சேகரித்துப் பல நாள் முயன்று இரும்பைப்பொன்னாக்கும் குளிகையொன்றைச் செய்கிறான். ஆனால் அந்தக் குளிகையைத் தன் வசத்தில் வைத்திருக்கின்ற மற்றொருவன் எந்தவித சிரமமும் படாமல் அந்தக் குளிகையைக் கொண்டே இரும்பைப் பொன்னாக்கி விடுகிறான். அது போலச் சாத்திரங்களைக் கற்பவன் மிகவும் சிரமப்பட்டுப் பலகாலம் சாத்திரங்களைக் கற்று அவற்றை அனுட்டிக்க முயல்கிறான். ஆனால் எம்பெருமானையே தம் வசத்தில் கொண்ட அடியவர்கள் அனுட்டித்ததெல்லாம் சாத்திரமாகி விடுகிறது. அவர்கள் சொல்லுவதெல்லாம் சாத்திரமே என்று நம்பிள்ளைக்கு நஞ்சீயர் அருளிச் செய்தார்!

[94]

(நாயகனாய் நின்ற) ஆளவந்தார் எம்பெருமானை ஸ்தோத்ரம் பண்ணவென்று புக்கு ஆசார்ய ஸ்தோத்ரத்திலே இழிந்தார். அதுக்கடி ஒருவன் ஒரு ரத்நத்தைக் கொடுத்தால் அதின் விலை அறியவறிய கொடுத்தவன் பக்கலிலே விருப்பம் பிறக்குமாபோலே; ஶாஸ்த்ரங்களெங்கும் அப்$_4$யஸித்துப் பார்க்குமிடத்து, உபாயமாகத் தோற்றுகிற கர்மஜ்ஞாநப$_4$க்திகள் பேற்றுக்கு ஸாத$_4$நமாகமாட்டாது. ப$_4$க$_3$வத்ஸம்ப$_3$ந்தி$_4$களை முன்னிட்டுக்கொண்டு அவனையே உபாயமாகப் பற்றுமது பேற்றுக்குடலென்று ஸ்வப்ரப$_3$ந்த$_4$த்திலே முதலிலும் முடிவிலும் பரமாசார்யரான பெரியமுதலியாரைப் பற்றினார். त्वत्पादमूलं शरणं प्रपद्ये (த்வத்பாத$_3$ மூலம் ஶரணம் ப்ரபத்$_3$யே) என்று தாம் பண்ணின ப்ரபத்தியையும் கீழிலவற்றோடே காற்கடைக் கொண்டு नाथमुनिं विलोक्य (நாத$_2$முநிம் விலோக்ய) என்று பெரிய முதலியாரை முன்னிட்டார்.

(திருப்பாவை 16 ஆறாயிரப்படி)

1. "கட்டின குளிகையைக் கையிலே கொடுத்தரல் அப்போதே இரும்பைப் பொன்னாக்கி விடுமாப் போலே என்று சீயர் வார்த்தை" என்று நாலாயிரப்படி வியாக்யானத்தில் காணப்படுகிறது.

நிகழிடம்

நோன்பிற்கு வேண்டிய பொருள்களைப் பெறுவதற்காகக் கண்ணபிரானிடம் செல்லும் ஆய்ப்பெண்கள், நந்தகோபர் திருமாளிகைக்குச் சென்றனர். அங்கு 'நாயகனாய் நின்ற நந்தகோபனுடைய கோயில் காப்பானிடம்' உள்ளே செல்வதற்கு அனுமதி வேண்டி நின்றனர். இவர்களுக்குக் கண்ணபிரான் நாயகனேயன்றி, கோயில்காப்பானோ அல்லது நந்தகோபனோ நாயகன் அல்லனே! அப்படியிருக்கும்போது அவர்களை நாயகன் என்று கூறியது ஏன் என்ற கேள்விக்கு விடையாக ஆளவந்தார் அருளிச்செய்த ஸ்தோத்ர ரத்னத்திலுள்ள **ச்லோகங்களை** உரையாசிரியர் எடுத்துக் காட்டி விளக்குகின்றார்.

விளக்கம்

எம்பெருமானைக் காட்டிலும் எம்பெருமானை நமக்குப் பெற்றுத் தருபவர்களே உயர்ந்தவர்கள். அதனால்தான் **ஆளவந்தார்**, தமது ஸ்தோத்ர ரத்னத்தில் முதலில் எம்பெருமானைத் துதிக்கத் தொடங்கியவர் இரண்டாம் சுலோகத்திலேயே பரமாசார்யரான நாதமுனிகளைத் துதித்தார். மிகவும் விலை உயர்ந்த ஒரு ரத்தினத்தை ஒருவன் நமக்குக் கொடுத்தால், அந்த ரத்தினத்தின் மதிப்பை அறிய அறிய, அந்த ரத்தினத்தின்மீதுள்ள ஈடுபாட்டைக் காட்டிலும் 'இவ்வளவு உயர்ந்த ரத்தினத்தை நமக்குக் கொடுத்தானே!' என்று அதைக் கொடுத்தவனிடம் நமக்கு அன்பு பெருகும். சாத்திரங்கள் அனைத்தையும் முழுமையாகக் கற்றாலும், கர்மயோகம், ஞானயோகம், பக்தியோகம் போன்ற எவையும் எம்பெருமானை அடைவதற்கு ஸாதனம் ஆகமாட்டா; எம்பெருமானுடைய அடியவர்களை முன்னிட்டுக் கொண்டு அவனையே உபாயமாகப் பற்றுவதே அவனை அடையும்வழி என்ற கருத்தில்தான் ஆளவந்தார் தம்முடைய ஸ்தோத்ரரத்நம் என்கின்ற ஸ்தோத்ரத்தில் தொடக்கத்தில் "நாதாய நாதமுநயே அத்ர பரத்ரசாபி" என்றும், முடிவில் "பிதாமஹம் நாதமுனிம் விலோக்ய" என்றும் **பெரியமுதலியார்** என்று வழங்கப் பெறுகின்ற **நாதமுனிகளைப்** பற்றினார். நடுவில் "த்வத்பாதமூலம் சரணம் ப்ரபத்யே" என்று எம்பெருமானைத் தாம் பற்றிய பற்றுதலையும் காற்கடை கொண்டு (உபாயமன்று என்று கைவிட்டு) "நாதமுனிம் விலோக்ய" என்று பரமாசார்யரான பெரியமுதலியாரை (நாதமுனிகளை) முன்னிட்டார். (அதுபோலவே இங்கும் கோபிகைகள் கண்ணபிரானை அடைவதற்கு நந்தகோபரை முன்னிடுகிறார்கள்.)

[95]

(நாயகனாய் நின்ற) ப$_4$ட்டர், நஞ்சீயருக்கு, "பெருமாளே உமக்குத் தஞ்சம் என்றிரும். பெருமாள் தஞ்சம் என்று சொல்லுகையாலே நானும் உமக்குத் தஞ்சம்" என்றருளிச் செய்தார்.

(திருப்பாவை 16 ஆறாயிரப்படி)

நிகழ்டம்

பாவை நோன்பிலீடுபட்ட ஆண்டாள் கண்ணனை எழுப்புவதற்காக நந்தகோபனுடைய திருமாளிகைக்குச் சென்றவள் முதலில் கோயில் காப்பானை அணுகுகிறாள். எம்பெருமானுடைய அடியவர்களை முன்னிட்டுக் கொண்டே அவனைப் பற்ற வேண்டும் என்பதை ஆண்டாள் அனுஷ்டித்துக் காட்டுகிறாள் என்று விளக்குகின்ற உரையாசிரியர், எம்பெருமானிடத்தில் சரணாகதி செய்பவன் ஒரு ஆசார்யனை முன்னிட்டுக் கொண்டே சரணம் புக வேண்டும்; அநேகம் அபராதங்களைச் செய்துள்ள இவன் சரணாகதி செய்கிற போது இவனுடைய அபராதங்களைக் கருத்தில் கொண்டு எம்பெருமான் கோபிக்கக் கூடும்; ஆனால் ஒரு ஆசார்யனை முன்னிட்டுக் கொண்டு அவனைப் பற்றும் போது, அவ்வாசார்யனுக்காக இவன் செய்துள்ள அபராதங்களை மன்னித்து விடுவான் என்று விளக்குகின்றார். இத்தொடர்பில் பட்டர் நஞ்சீயருக்கு அருளிச் செய்த **வார்த்தை** *ஒன்று எடுத்துக்காட்டப்பெறுகிறது.*

விளக்கம்

"பெருமாளே உமக்குத் தஞ்சம் என்றிரும்: பெருமாளே தஞ்சம் என்று கூறும் ஆசார்யரும் (நானும்) உமக்குத் தஞ்சம்" என்று **நஞ்சீயருக்கு பட்டர்** *அருளிச் செய்தார்.*[1]

[96]

எம்பெருமானார் விசேஷித்து உகந்திருக்கும் பாட்டு இப்பாட்டு.

(திருப்பாவை 18 மூவாயிரப்படி, ஆறாயிரப்படி)

நிகழ்டம்

'உந்துமதகளிற்றன்' என்று தொடங்குகின்ற இப்பாசுரம் எம்பெருமானார் மிகவும் விரும்பியிருக்கும் பாட்டு என்பதற்கு ஓர் **ஐதிஹ்யம்** *காட்டப்படுகிறது.*

விளக்கம்

எம்பெருமானார் *தினமும் மாதுகரத்திற்கு (பிக்ஷைக்கு) எழுந்தருளும்போது திருப்பாவையை (மனத்திற்குள்) அனுஸந்தித்துக் கொண்டே எழுந்தருளுவார். ஒரு நாள் பிக்ஷைக்காக பெரியநம்பி திருமாளிகைக்கு எழுந்தருள, கதவு தாழிடப் பட்டிருந்தது. உள்ளேயிருந்து பெரிய நம்பியின் மகளான அத்துழாய் ஓடிவந்து கதவைத் திறக்க அப்போது எம்பெருமானார் 'உந்துமதகளிற்றன்' என்ற பாசுரத்தை அனுஸந்தித்துக் கொண்டிருந்தார். "செந்தாமரைக் கையால் சீரார் வளையொலிப்ப வந்து திறவாய்" என்ற வரிகளை எம்பெருமானார் அனுஸந்தித்த அதே கணத்தில் அத்துழாய் தன் வளைக்கரங்களால் கதவைத் திறக்கவே,*

1. ஆறாயிரப்படி, ஈராயிரப்படி உரைகளிலும் இவ்வார்த்தை குறிப்பிடப்பெற்றுள்ளது.

எம்பெருமானார் அவளை நப்பின்னைப் பிராட்டியாகவே நினைத்து, கீழே விழுந்து வணங்கிவிட்டார். உடனே அவள் தன் தகப்பனாரிடம் சென்று நடந்தவற்றைச் சொல்ல, பெரிய நம்பி எம்பெருமானாரைப் பார்த்து, "சீயா, 'உந்து மதகளிற்றன்' அனுஸந்தானமோ?" என்று கேட்டாராம். இதனால் இப்பாட்டு எம்பெருமானார் மிகவும் விரும்பியிருந்த பாட்டு என்று கூறுவர்.[1]

[97]

(திருவே) உதாரவாக்குகளாகிறார் திருமங்கையாழ்வாரும், ஆளவந்தாரும், ஆழ்வானும், பட்டரும்.

(திருப்பாவை 20 ஆறாயிரப்படி)

நிகழிடம்

நப்பின்னைப்பிராட்டியைத் துயிலெழுப்பும்போது, 'திருவே துயிலெழாய்' என்கின்றனர். எம்பெருமானுக்கும் திருவின் தொடர்பை இட்டே பெருமை கூறப்படுகிறது என்று விளக்கிய உரையாசிரியர், எம்பெருமானுக்குப் பெருமை கூறிய ஆசார்யர்களுடைய **ச்லோகங்களைக்** *காட்டுகிறார்.*

விளக்கம்

எம்பெருமானுக்குப் பெருமை கூறும்போது திருமங்கையாழ்வார் "திருவுக்கும் திருவாகிய செல்வா" (பெரியதிருமொழி 7-7-1) என்று அருளிச் செய்தார். **ஆளவந்தார்** *"க: ஸ்ரீ ச்ரிய:" (ஸ்தோத்ரரத்னம் 12) என்றும், "ச்ரிய: ச்ரியம்" (ஸ்தோத்ரரத்நம்-45) என்றும் அருளிச்செய்தார்.* **கூரத்தாழ்வான்** *"யஸ்யா: கடாக்ஷணம் ... ச்ரிய: ச்ரியம்" (ஸ்ரீவைகுண்டஸ்தவம்-22) என்று அருளிச்செய்தார்.* **பட்டர்** *"ச்ரிய: ஸ்ரீ: ஸ்ரீரங்கேச" (ஸ்ரீகுணரத்நகோசம்-9) என்று அருளிச்செய்தார். இவ்வாறு எம்பெருமானுக்குப் பெருமை கூறுகின்ற இடத்தில் திருமகளை இட்டே அவனுக்குப் பெருமை கூறிய திருமங்கையாழ்வார், ஆளவந்தார், கூரத்தாழ்வான் பட்டர் போன்றவர்களே உதார (வள்ளன்மை உடைய) வாக்குகளைக் கொண்டவர்களாவர்.*

[98]

(வள்ளல் பெரும்பசுக்கள்) இத்தை நினைத்திறே उदार: सन्दर्शयन् **(உதார: ஸந்தர்சயந்) என்று ஆளவந்தார்.**

(திருப்பாவை 21 ஆறாயிரப்படி)

1. இச்செய்திகள் திருப்பாவை மூவாயிரப்படி வியாக்கியான அரும்பத உரையில் உள்ளன. எம்பெருமானார் பிக்ஷைக்குச் சென்றது திருக்கோட்டியூர் நம்பி திருமாளிகைக்கு என்றும் அவருடைய பெண்ணான தேவகிப் பிராட்டி கதவைத் திறந்தபோது அவளை நப்பின்னையாகவே நினைத்து எம்பெருமானார் வணங்கினார் என்றும் வார்த்தாமாலையில் (206) குறிப்பிடப் பட்டுள்ளது.

நிகழிடம்

திருவாய்ப்பாடியில் உள்ள பசுக்களை வருணிக்கும்போது "வள்ளல் பெரும் பசுக்கள்" என்று கூறப்படுகின்றது. பாலைக் கொடுப்பது, பிறருக்கு ஒரு உபகாரம் செய்ததாக நினைத்திராமல், தன்பேறாக நினைத்துப் பாலைக் கொடுக்கும் பசுக்கள் என்று இதற்கு விளக்கம் அளித்த உரையாசிரியர், திருவாய்ப்பாடியில் உள்ள பசுக்களும் கண்ணனைப் போன்றே தன்பேறாகக் கொடுக்குமவை என்று அருளிச்செய்து, இத்தொடர்பில் ஆளவந்தாருடைய **ச்லோகம்** *ஒன்றை மேற்கோள் காட்டுகிறார்.*

விளக்கம்

பராசர மஹரிஷியைக் கொண்டாடுகின்ற **ஆளவந்தார்** *அவரை "உதார:" (ஸ்தோத்ரரத்னம்-4) என்று கொண்டாடியுள்ளார். (தத்துவங்களை பிறருக்குத் தன்பேறாக உபதேசித்த பராசரரைப் போன்றே திருவாய்ப்பாடியில் உள்ள பசுக்களும் தன்பேறாக உபகரிப்பவை என்பது கருத்து.)*

[99]

(அங்கண் மா ஞாலத்தரசர்)“வேத$_{3}$ாந்தங்களிலே ப்$_{3}$ரஹ்மாதி$_{3}$களுங்கூட ஏழு ஜன்மம் ஜநித்து அரிய ஸாத$_{3}$நாநுஷ்ட$_{2}$ானங்களைப் பண்ணி, பின்பு ப$_{4}$க$_{3}$வத்ப்ராப்திருப புருஷார்த்த$_{2}$ம் பெற்றார்களாகச் சொல்லாநின்றது. இவ்வருகே எத்தனையேனும் கீழாயிருப்பார் சிலர் ஶரீராவஸாந காலத்திலே மோக்ஷம் கிடைக்குமென்று பொதிசோறு கட்டிக் கொண்டிரா நின்றார்கள்; இவை இரண்டும் சேர விழுந்தபடி எங்ஙனே?” என்று ப$_{4}$ட்டரைக் கேட்க, “ஒரு குறையில்லை” என்றருளிச் செய்தார். “அவன் தன் விபூ$_{4}$தியளவும் செல்லப் பச்சையிட்டுப் பெறக்கடவனென்று கோலக் கடவன். ‘யதோபாஸநம் ப$_{2}$லம்’ ஆகையாலே தத்க்ரது ந்யாயத்தாலே அப்படியேயாயிருக்கும் அவனுக்கு. இவன் தன் பக்கலொன்றுமில்லாமையை அநுஸந்தித்து, ப்ரத$_{2}$மபரிஸ்பந்த$_{3}$மே பிடித்து நீயே எனக்குக் கடவையாக வேணுமென்று காலிலே விழும். அவனும் அப்படியே தன் தலையிலே ஏறிட்டுக் கொண்டு அவனைப் பார்த்திருக்க வேண்டாதபடி தலைக் கட்டிக் கொடுக்கும். அவனுக்குத் தான் கோலின பரப்படங்கலும் விடவேணும். இவனுக்கு இவ்வளவேயிறே விட வேண்டுவது. அவன் அனுஷ்டிக்கக் கடவையெல்லாம் அநுஷ்டித்து, பின்பு ப$_{2}$லம் தரப் பார்த்திருக்கும். ஈஶ்வரனையிறே இவன் முதலிலே பற்றிற்று.”

(திருப்பாவை 22 ஆறாயிரப்படி)

நிகழிடம்

"அங்கண்மாஞாலத்து அரசர் அபிமான பங்கமாய்" (அழகிய விசாலமான பெரிய ஞாலத்தில் உள்ள அரசர்கள் தங்கள் அகங்காரம் தொலையப் பெற்று) வந்ததுபோலத் தாங்களும் எம்பெருமானிடம் வந்ததாக கோபிகைகள் கூறுகின்றனர். இத்தொடர்பில், அகங்காரம் தொலையப் பெறுவது பற்றி பட்டரிடம் கேள்வி கேட்க அதற்கு பட்டர் விடையளித்த **ஸம்வாதம்** *காட்டப்பெறுகிறது.*

விளக்கம்

"வேதாந்தங்களில் ப்ரஹ்மா முதலானவர்களும் கூட செயற்கரிய காரியங்கள் (தவங்கள்) முதலியவற்றை நெடுங்காலம் செய்து, ஏழு பிறவிகள் பகவானை ஆராதித்துப் பிறகே பகவானை அடைவதாகிற பயனைப் பெற்றார்கள் என்று சொல்லப்படுகிறது. ஆனால் சிலர் (பிரபந்நர்கள்), எவ்வளவு தாழ்ந்த பிறவியில் பிறந்திருந்தாலும் கூட, இந்தப் பிறவியின் முடிவிலேயே நமக்கு நிச்சயம் மோக்ஷம் கிடைக்கும் என்று கட்டுச்சோறு கட்டிக்கொண்டு தைரியமாகத் திரிந்து கொண்டிருக்கின்றார்களே! ப்ரஹ்மாவுக்கும் பல பிறவிகள் கழித்தே கிடைக்கக்கூடிய பேறு இவர்களுக்கு மட்டும் எளிதாகக் கிடைத்துவிடும் என்று கூறினால் இரண்டும் பொருந்தவில்லையே?" என்று **(நஞ்சீயர்?)** *பட்டரைக் கேட்க,* **பட்டர்** *"அதில் ஒன்றும் தவறில்லை. ப்ரஹ்மாவானவன் பரமபதத்திற்கு கீழுள்ள அண்டங்கள் அனைத்திற்கும் தன்னைத் தலைவனாகக் கருதியுள்ளபடியால் அதற்குத் தகுந்தபடி எம்பெருமானுக்குக் காணிக்கைகள் சமர்ப்பித்து, தன்னுடைய விருப்பத்தைப் பெறுவதாக நினைத்திருப்பான். எப்படி உபாசனை செய்கிறானோ அப்படியே பலம் பெறுவான் என்பது சாத்திரமாகையாலே அவன் செய்கின்ற உபாசனைக்கு ஏற்ப தத்க்ரது நியாயப்படி[1] அவனுக்குப் பலனும் கிடைக்கும். ஆனால், செல்வம், பிறவி, அறிவு, ஆசாரம் முதலியவற்றால் மிகவும் தாழ்ந்தவனுக்கு உடைமையாக எதுவுமே இல்லாதபடியால் இவன் எம்பெருமானை வேண்டுகின்றபோது, தன்னிடத்தில் ஒன்றுமே இல்லையாகையால் தன்னிடமிருந்து எதையும் எதிர்பாராமலேயே எம்பெருமான் தனக்கு எல்லாவற்றையும் அருளவேண்டும் என்று அவனுடைய திருவடிகளிலே விழுந்துவேண்டுவான். எம்பெருமானும் அவன் வேண்டியபடியே எல்லாவற்றையும் தன்னுடைய பொறுப்பிலே ஏற்றுக் கொண்டு இவனுடைய செயல்களை எதிர்பார்க்காமல் இவனுக்கு வேண்டியவற்றைத் தலைக்கட்டி வைப்பான். அதேபோல் தான் பற்றியவைகளை விடும்போதும் ப்ரம்மாவுக்கு விட*

1. தத்க்ரது ந்யாயம்: "யாதாக்ரதுரஸ்மிந் லோகே புருஷோபவதி ததேத: ப்ரேத்ய பவதி" (சாந்தோக்யம் 3-1-14) (இந்த உலகத்தில் உபாஸகன் எப்படி உபாஸனை செய்கிறானோ அப்படியே மேலுலகத்திலும் பலனை அனுபவிக்கிறான்) என்பது தத்கரதுந்யாயம்.

வேண்டியவை அதிகமாகவுண்டு. அதாவது ப்ரம்மாவானவன் தான் ஆசைப்பட்டுப் பெற்ற உலகங்கள் அனைத்தையும் விடவேண்டும். ஆனால் இவனுக்கு விடவேண்டியவை மிகமிகக் குறைவு. ப்ரம்மா முதலானவர்களுக்கு அவர்கள் பதவிக்குத் தக்கவாறு அஹங்காரம் இருக்குமாகையாலே அது அழியப் பல பிறவிகள் அவர்களுக்கு வேண்டும். ஆனால் இவர்கள் இயற்கையிலேயே தாழ்ச்சியை உடையவர்களாய் எல்லாவற்றிற்கும் எம்பெருமான் கையையே எதிர்பார்த்திருப்பவர்கள். ஆதலால் இவர்களுக்கு ஒரு பிறவியே போதும்" என்றருளிச் செய்தார்.

[100]

(எங்கள் மேல்)..................... "ஸிம்ஹம் ஆனையோடே பொரா நின்றாலும், குட்டிக்கு முலை கொடுக்குமா போலே" என்று ப$_4$ட்டர்.

(திருப்பாவை 22 ஆறாயிரப்படி)

நிகழிடம்

ஆண்டாள், 'திங்களும் ஆதித்யனும் எழுந்தாற்போல் அங்கணிரண்டுங் கொண்டு எங்கள் மேல் நோக்குதியேல்' என்கிறாள். "எதிரிகளுக்கு அணுக முடியாதபடி வெப்பத்தைக் கொடுக்கும் சூரியனைப் போலவும், அடியவர்களுக்கு குளிர்ச்சியூட்டும் சந்திரனைப் போலவும் உள்ள உன்னுடைய திருக்கண்களைக் கொண்டு எங்களைக் கடாக்ஷிக்கவேணும்" என்கிறாள். ஒரே சமயத்தில் கண்களில் கோபம், அருள் என்ற இரண்டும் எப்படி உண்டாகும்? என்ற கேள்விக்கு விடையாக பட்டர் அருளிச்செய்த **வார்த்தை** *ஒன்று எடுத்துக் காட்டப்படுகிறது.*

விளக்கம்

"ஒரு சிங்கமானது யானையோடு சண்டையிட்டுக் கொண்டிருக்கின்ற அதேசமயத்தில் தன்னுடைய குட்டிக்கு முலைப்பால் கொடுத்துக் கொண்டிருக்கும். அதேபோல் எம்பெருமானும் விரோதிகள் மீது சீற்றத்தைக் காட்டுகின்ற அதே சமயத்தில் அடியவர்கள் மீது அருளைப் பொழிவான்" என்று பட்டர் அருளிச்செய்தார்!

[101]

அழகர் கிடாம்பியாச்சானை அருள்பாடிட்டு "ஒன்று சொல்லிக் காணாய்!" என்ன, "अपराधसहस्रभाजनं" (அபராத$_4$ ஸஹஸ்ரப$_4$ாஜநம்) என்று தொடங்கி, "अगतिं" (அக$_3$திம்) என்ன, "நம் இராமானுசனை உடையையாயிருந்துவைத்து அக$_3$திம் என்னப் பெறாய்!" என்றருளிச் செய்தார்.

(திருப்பாவை 23 மூவாயிரப்படி)

1. இவ்வார்த்தையை எம்பெருமானார் அருளிச் செய்ததாக எண் 524ல் உள்ளது காண்க.

நிகழிடம்

கண்ணனைக் காணவந்த கோபிகைகள் "நாங்கள் அகதிகளாக வந்தோம்" என்று கூற, கண்ணனுடைய அன்புக்கு உரியவர்கள் அகதிகள் அல்லர் என்று காட்டுவதற்கு ஓர் **ஐதிஹ்யம்** கூறப்படுகிறது.

விளக்கம்

ஸ்ரீராமானுஜருடைய சீடரான கிடாம்பியாச்சான் என்பவர் திருமாலிருஞ்சோலை அழகரை ஸேவிக்கச் சென்றபோது, அவ்வெம்பெருமான் "ஏதாவது ச்லோகம் சொல்லும்" என்று கூற, அவரும் ஆளவந்தார் அருளிச் செய்த ஸ்தோத்ர ரத்னத்தில் உள்ள (48) சுலோகமான "அபராதஸஹஸ்ர பாஜனம் பதிதம் பீமபவார்ணவோதரே அகதிம் (ஆயிரக்கணக்கான அபராதங்களுக்கு உறைவிடமானவனாய், பயங்கரமான ஸம்ஸாரப் பெருங்கடல் நடுவே விழுந்து கிடப்பவனாய், கதியற்ற என்னை. . . .) என்று சொல்ல, "நம் இராமானுசனுடைய அடியவனாயிருந்து வைத்து, கதியற்றவன் என்று சொல்லிக் கொள்ளாதே" என்று அருளிச் செய்தார்.[1] அதுபோலத் தங்களை அகதிகள் என்று கூறிக்கொண்டவாறே கண்ணன் திருவுள்ளம் மிகவும் புண்பட்டது என்று கருத்து.

[102]

அநந்தாழ்வான் அமர்யாத: (அமர்யாத:) என்கிற ச்லோகத்தை ஆளவந்தார் அருளிச் செய்தாரென்னக் கேட்டு , "எனக்கு அது சொல்ல வேண்டா" என்றான் அவர் ஸம்பந்தத்தாலே.

(திருப்பாவை 23 நாலாயிரப்படி)

நிகழிடம்

கண்ணனைக் காணவந்த கோபிகைகள் அகதிகளாக வந்தோம் என்று சொல்லி, அவன் முன்வந்து நிற்க, கண்ணனுடைய அன்புக்குரியவர்கள் அகதிகள் அல்லர் என்று காட்டுவதற்கு ஓர் **ஐதிஹ்யம்** கூறப்படுகிறது.

விளக்கம்

ஸ்தோத்ர ரத்னத்தில் (62) "அமர்யாத: க்ஷுத்ர: சலமதி : அஸூயாப்ரஸவபூ: க்ருதக்னோ துர்மாநீ ஸ்மரபரவசோ வஞ்சனபர: ந்ருஸம்ச: பாபிஷ்ட: கதமஹ மிதோ து:க்க ஜலதே: அபாராதுத்தீர்ணஸ்தவ பரிசரேயம் சரணயோ:" (கட்டுப்பாடற்றவனும், தாழ்ந்த விஷயங்களில் ஈடுபாடு கொள்பவனும், நிலையற்ற நெஞ்சுடையவனும் பொறாமையுள்ளவனும், நன்றி கொன்றவனும்,

1. ஆறாயிரப்படி, நாலாயிரப்படி உரைகளிலும் இவ்வைதிஹ்யம் குறிப்பிடப்பெற்றுள்ளது.

கர்வமுடையவனும், காம வசப்பட்டவனும், வஞ்சனையுடையவனும், கொடியவனும், பரமபாவியுமான நான், இந்தக் கரைகாண முடியாத துன்பக் கடலிலிருந்து கரையேறியவனாய் உன் திருவடிகளில் எப்படி அடிமை செய்யப் போகிறேன்?) என்று எம்பெருமானைக் கேட்டு, 'அடியேனுடைய துன்பங்களைப் போக்குகையும், என்னை அடிமை கொள்ளுகையும் உனது பொறுப்பே!' என்று ஆளவந்தார் எம்பெருமானை நோக்கி விண்ணப்பித்துள்ளார். இதுபற்றிக் கூறிய **அனந்தாழ்வான்,** *"இங்கு* **ஆளவந்தார்** *தம்முடைய குறைகளாக அருளிச் செய்துகொண்டுள்ளவற்றை அடியேனும் கூறிக்கொள்ள வேண்டியதில்லை. அடியேனுக்குப் பரமாசார்யரான ஆளவந்தாரோடு அடியேனுக்குள்ள தொடர்பு காரணமாகத் இத்தியகுணங்கள் என்னை அணுகா. அத்தியகுணங்கள் இருப்பதாக ஆளவந்தார் அருளிசெய்துள்ள இந்த ச்லோகத்தை அடியேன் சொன்னால், 'ஆளவந்தார் சம்பந்தம் இருந்தும் இப்படி அனந்தாழ்வான் சொல்வதே!' என்று எம்பெருமான் திருவுள்ளம் புண்படும். ஆகையால் அடியேன் இந்த சுலோகத்தை அநுஸந்திக்கமாட்டேன்" என்று கூறினாராம்.*[1]

[103]

(நின் கையில் வேல் போற்றி) "க₂தேஜலே ஸேது ப₂ந்த₄ம், தகப்பனாருக்கும் மகளுக்கும் பணி" என்று சீயர் அருளிச் செய்வர்.

(திருப்பாவை 24 மூவாயிரப்படி)

நிகழிடம்

கண்ணபிரான் அவதரித்திருந்தபோது அவனுக்கு வந்த ஆபத்துக்களையெல்லாம், பெரியாழ்வார் தாம் அவதரித்த காலத்தில் நினைத்துக் கொண்டு

1. "(அமர்யாத:) இது ஆளவந்தார் அருளிச் செய்ததே ஆகிலும், நான் என் வாயால் இப்பாசுரம் சொல்லமாட்டேன் என்னுமாம் அனந்தாழ்வான்" என்று எண் 505ல் காணப்படுகிறது. 'ஆளவந்தார் தம்மைக் குற்றங்கள் உடையவராகச் சொல்லிக் கொண்ட இந்த சுலோகத்தை நான் சொன்னால், இக்குற்றங்கள் ஆளவந்தாருக்கு உண்டு என்று நானும் இசைந்ததாக ஆகிவிடும். அது மிகவும் அபசாரம் . எனவே ஆளவந்தார், தம்மை அப்படி அருளிச்செய்து கொண்டாலும், நான் என் வாயால் இந்த சுலோகத்தைச் சொல்லமாட்டேன்' என்று அனந்தாழ்வான் கருதியதாக அங்கு அடையவளைந்தான் அரும்பதவுரையில் விளக்கம் கூறப்படுகிறது.

ஆனால் மேலே குறிப்பிட்டுள்ள திருப்பாவை நாலாயிரப்படியில் காணப்படும் ஐதிஹ்யத்திற்கு மேற்குறித்தவாறு பொருள் கொள்வதே சிறந்தது. இந்த ஐதிஹ்யத்திற்கு முன்னால் அழகர் கிடாம்பியாச்சானைப் பார்த்து "நம் இராமானுசனை உடையாயிருந்து வைத்து அகதியென்னப் பெறாய்" என்றருளிச் செய்த ஐதிஹ்யம் உள்ளது. ஆக, ராமானுஜ ஸம்பந்தத்தால் கிடாம்பி ஆச்சான் 'அகதிம்' என்று கூற வேண்டியதில்லை என்றும், ஆளவந்தார் ஸம்பந்தத்தால் அனந்தாழ்வான் 'அமர்யாத:' முதலியவற்றைக் கூற வேண்டியதில்லை என்றும் காட்டப்படுகிறது.

எம்பெருமானுக்கு ஒரு குறையும் வராமல் இருக்கவேண்டுமே! அவனுக்கும் அவனுடைய ஆயுதங்களுக்கும் உண்டான சேர்த்திக்கு ஒரு தீங்கும் வராமலிருக்க வேண்டுமே என்று மங்களாசாஸனம் செய்தார். கண்ணபிரான் அவதரித்த காலம் எங்கே! பெரியாழ்வார் அவதரித்த காலமெங்கே! ஆயினும் பரிவின் மிகுதியால் எப்போதோ கண்ணபிரானுக்கு வந்த ஆபத்தெல்லாம், அப்போதுதான் வந்துள்ளது என்று தோன்றுகிறது பெரியாழ்வாருக்கு. அதேபோல் பெரியாழ்வார் திருமகளான ஆண்டாளும் எம்பெருமானுடைய வெவ்வேறு அவதாரங்களையெல்லாம் நினைத்துக் கொண்டு 'அன்று இவ்வுலகமளந்தாய் அடி போற்றி, சென்றங்குத் தென்னிலங்கை செற்றாய் திறல் போற்றி, பொன்றச் சகடமுதைத்தாய் புகழ் போற்றி, கன்று குணிலா எறிந்தாய் கழல் போற்றி, குன்று குடையாவெடுத்தாய் குணம் போற்றி, வென்று பகை கெடுக்கும் நின் கையில் வேல் போற்றி'' என்று அந்தந்த காலத்தில் அவனுக்கு வந்த ஆபத்துக்களை நினைத்து அஞ்சி, பிற்காலத்தில் மங்களாசாஸனம் பண்ணுகிறாள். இத்தொடர்பில் நஞ்சீயர் அருளிச்செய்த **வார்த்தை** ஒன்று எடுத்துக் காட்டப்பெறுகிறது.

விளக்கம்

"வெள்ளம் கரை புரண்டு ஓடிய பின்னர் அணைகட்டுவது தகப்பனாருக்கும் மகளுக்கும் பணி'' என்று **நஞ்சீயர்** அருளிச்செய்வராம். அதாவது நீரைத் தேக்கி வைக்க வேண்டும் என்ற எண்ணமுடையவர்கள் வெள்ளம் வருவதற்கு முன்னமே அணைகட்டி வைப்பார்கள். அதேபோல ஆபத்து வருவதற்கு முன்னமே மங்களாசாஸனம் செய்ய வேண்டியிருக்க, அந்த ஆபத்துக்களிலிருந்து எம்பெருமான் தப்பி, அந்த அவதாரங்களையும் முடித்துக் கொண்ட பிறகு அவனுக்கு மங்களாசாஸனம் செய்வது, வெள்ளம் போன பின் அணை கட்டுவது போன்றதாகும். ஆனால் பரிவின் மிகுதியால் என்றைக்கோ நடந்த சரித்திரங்களுக்கும் பிற்காலத்தில் அஞ்சுவதும், எம்பெருமானுக்கு ஒரு குறையும் வாராமலிருக்க வேண்டும் என்று மங்களாசாஸனம் செய்வதும் பெரியாழ்வாருக்கும் ஆண்டாளுக்கும் இயல்பு என்பது நஞ்சீயர் கருத்தாகும்.

[104]

(ஒருத்தி மகனாய்....வளர) "அவளுக்கு முலைசுரவா நின்றதாகில், இவன் அழுது முலையுண்ணாநின்றானாகில் உமக்குச் சேதமென்?" என்று ப$_4$ட்டர்.

(திருப்பாவை 25 ஆறாயிரப்படி)

நிகழ்டம்

கண்ணபிரான் தேவகியின் மகனாகப் பிறந்து யசோதையின் மகனாக வளர்ந்தமை பற்றி ஆண்டாள் "ஒருத்திமகனாய்ப் பிறந்து ஒருத்தி மகனாய்

ஒளித்து வளர" என்று அருளிச்செய்துள்ளாள். இதுபற்றி நஞ்சீயருக்கும் பட்டருக்கும் இடையே நடைபெற்ற **ஸம்வாதம்** ஒன்று எடுத்துக்காட்டப் பெறுகிறது.

விளக்கம்

எண் 251ன் விளக்கம் காண்க.

[105]

(யாம் பெறு சம்மானம்)........ पति सम्मानिता सीता (பதிஸம்மாநிதா ஸீதா) என்று "பெருமாள் தோளில் மாலையை வாங்கியிட்டார்" என்று ஆழ்வான் பணிக்கும்; ப$_4$ட்டரும் பணிக்கும்.

(திருப்பாவை 27 மூவாயிரப்படி)

நிகழிடம்

கண்ணபிரானைக் குறித்து நோன்பு நோற்கின்ற ஆண்டாள் கண்ணனிடமிருந்து தாங்கள் பெற வேண்டிய பரிசைக் கூறும் போது "யாம் பெறு சம்மானம்" என்கிறாள், இராமபிரான் சீதைப்பிராட்டிக்கு அளித்த சம்மானம் போலே தாங்களும் பெற விரும்புகிறார்கள் என்று விளக்கும் உரையாசிரியர், சீதைப்பிராட்டிக்கு இராமபிரான் அளித்த பரிசு என்ன என்பதைப் பற்றி ஆசார்யர்கள் இருவருடைய **நிர்வாஹங்களை** *எடுத்துக் காட்டுகிறார்.*

விளக்கம்

தசரத சக்ரவர்த்தியால் அழைக்கப்பட்ட இராமபிரான் அந்தப்புரத்திலிருந்து புறப்பட்டபோது சீதைப்பிராட்டியும் அவனைப் பின் தொடர்ந்து வாசல்வரை வந்தாள். அப்போது அவள் இராமபிரானால் பரிசிடப் பெற்றாள் என்கிறார் வால்மீகி:

பதி ஸம்மாநிதா ஸீதா பர்த்தாரமஸிதேக்ஷணா
ஆத்வாரமநுவவ்ராஜ மங்களாந்யபிதத்யுஷீ (ரா.அ.16 -21)

(கரிய கண்களையுடையவளாய், மங்களங்களைக் கூறிக் கொண்டே வாயிற்படிகள் வரையிலும் ராமனைப் பின் தொடர்ந்த சீதைப்பிராட்டி தனது கணவனால் பரிசிடப்பெற்றாள்) என்பது அந்த சுலோகம்.

இங்கு 'பதி ஸம்மாநிதா ஸீதா' (ராமபிரானால் சீதை பரிசிடப் பெற்றாள்) என்றுள்ளது; 'இராமபிரான் தம்முடைய தோளில் இருந்த மாலையை எடுத்து சீதைப் பிராட்டியின் தோளில் இட்டார். இதுவே இராமபிரான் சீதைக்கு அளித்த பரிசு' என்று **கூரத்தாழ்வான்** *விளக்கினார். ஆனால் கூரத்தாழ்வானுடைய*

மகனான பட்டர் இதை மேலும் சிறப்பித்து, "இராமபிரானுடைய வடிவழகைக் கண்களால் பருகிக் கொண்டே பின் தொடர்ந்த சீதைப்பிராட்டி வாசல்வரை வந்து விடவே, அவள் தன்னை மறந்து வாசற்படியையும் தாண்டி வந்துவிடக் கூடும் என்றஞ்சி, இராமபிரான் தன் தோளில் மாலையை அவள் கழுத்திலிட்டு அவளது கால்களைத் தொட்டு 'நில்' என்று கூறினார்; இப்படி ராமபிரான் சீதாபிராட்டியின் காலை அன்பினால் தொட்டதுதான் அவளுக்கு ராமபிரான் அளித்த பரிசு" - என்று விளக்கினார்! (ராமபிரான் சீதைக்கு மாலையிட்டது போல் தனக்கும் கண்ணபிரான் மாலையிடவேண்டும் என்று ஆண்டாள் விரும்புகிறாள் என்பது ஆழ்வான் தரும் விளக்கத்தின் கருத்து. ராமபிரான் சீதையின்மீதுள்ள அன்பினால் அவள் காலைத் தொட்டதுபோல் கண்ணபிரான் தன்னுடைய காலைத் தொடவேண்டும் என்று ஆண்டாள் விரும்புகிறாள் என்பது பட்டர் தரும் சுவைமிகு விளக்கத்தின் கருத்து.)

[106]

(யாம் பெறு சம்மானம்) வெளித் திருமுற்றத்திலே ப்ரஸாத₃ம் வர, அவ்வளவிலே "யாம் பெறு சம்மானம் வந்தது" என்றார் ப₄ட்டர்.

(திருப்பாவை 27 ஆறாயிரப்படி.)

நிகழிடம்

பாவை நோன்பு நோற்கின்ற கோபிகைகள் கண்ணபிரானிடம் தாங்கள் பெற நினைத்திருக்கின்ற பரிசுகளை 'யாம்பெறு சம்மானம்' என்கின்றனர். எம்பெருமான் நமக்கு அளிக்கின்றவை அனைத்தும் சன்மானமே என்பதை விளக்க ஓர் **ஐதிஹ்யம்** கூறப்படுகிறது.

விளக்கம்

பட்டர் திருவரங்கத்தில் இப்பாசுரத்தை விளக்கிக் கொண்டிருந்தபோது, திருக்கோயிலின் வெளித்திருமுற்றத்தில் எம்பெருமான் அமுதுசெய்வதற்காகத் தளிகைகள் எடுத்துக் கொண்டு வர, இதைக் கண்ட பட்டர் "எம்பெருமான் நமக்களிக்கும் பரிசு வருகிறது" என்று கூறினாராம். (நமக்கு சன்மானமாக

1. இங்கு மூலத்தில் "ஆழ்வான் பணிக்கும்; பட்டரும் பணிக்கும்" என்றுள்ளது. அதன்படி ஆழ்வான் பட்டர் ஆகிய இருவருமே ஒரே கருத்தைத்தான் தெரிவித்தார்கள் என்றுதான் கொள்ள வேண்டியுள்ளது. ஆனால் இங்கே அச்சுப்பிழை இருக்கலாமென்று தோன்றுகிறது. ஏனெனில் எண் 343ல் இதே உரையாசிரியர் பட்டர் (மேற் கூறியவாறு) கருத்துக்களைக் கூறியதாக எடுத்துக் காட்டியுள்ளார். மேலும், இப்பாசுரத்தின் நாலாயிரப்படி வ்யாக்யானத்திலும் – "பதி ஸம்மாநிதா ஸீதா" என்று தோளில் மாலையை வாங்கியிட்டார் என்று ஆழ்வான் பணிக்கும், பட்டர் ப்ரணயித்வத்தாலே காலைப் பிடித்து நில் என்றார் என்பர்" – என்றுள்ளதும் காண்க.

அளிப்பதற்காகவே எம்பெருமான் தளிகைகள் அமுதுசெய்கிறான் என்பது பட்டருடைய திருவுள்ளம் போலும்!)[1]

[107]

(முழங்கை வழிவார) ... நம்பி திருவழுதிவளநாடுதாஸர் "நெய் வாயிலே தொங்காதோ?" என்ன, "க்ருஷ்ணஸங்கதி₄யாலே த்ருப்தைகளாயிருக்கிறவர் களுக்கு சோறு வாயில் தொங்கிலன்றோ நெய் வாயில் தொங்குவது" என்று ப₄ட்டர் அருளிச் செய்தார்.

(திருப்பாவை 27 மூவாயிரப்படி)

நிகழிடம்

பாவை நோன்பு நோற்ற கோபிகைகள் கண்ணபிரானோடு கூடியிருந்து அவனிடமிருந்து தாங்கள் பெற விருக்கும் சன்மானங்களைக் கூறும்போது "பால் சோறு மூட நெய் பெய்து முழங்கை வழிவாரக் கூடியிருந்து குளிர்ந்து" என்றருளிச்செய்கிறாள் ஆண்டாள். இவ்விடத்தில் **ஸம்வாதம்** *ஒன்று எடுத்துக்காட்டப்பெறுகிறது.*

விளக்கம்

பால் சோறு மூடும்படி நிறைய நெய் பெய்திருப்பதால், அந்த நெய்யானது கோபிகைகளின் முழங்கை வழியாக வழிந்தோடும் என்று **பட்டர்** *இதை விளக்கிய போது,* **நம்பி திருவழுதிவளநாடு தாஸர்** *என்பவர் "நெய் ஏன் முழங்கை வழியாக வழிய வேண்டும்? கோபிகைகளுடைய வாயில் நெய் தங்காதோ?" என்று கேட்டாராம். அதற்கு பட்டர், "கண்ணனோடு கூடியிருக்கப் பெற்றதனாலேயே ஆனந்தமடைந்த கோபிகைகள் கண்ணனையே பார்த்துக் கொண்டு பால் சோற்றை உண்ண மறந்து கைகளிலே வைத்துக் கொண்டிருந்து விட்டபடியினால் அவர்கள் பால்சோற்றை உண்ணவேயில்லை. பால் சோறு அவர்கள் வாயிலே தங்கினாலன்றோ நெய்யும் அவர்கள் வாயில் தங்குவது! எனவேதான் பால்சோற்றிலே உள்ள நெய் முழங்கை வழியாக வழிந்தது. (அவர்களுக்குப் பால் சோறு உண்பது பயன் அல்ல. கண்ணனோடு கூடியிருப்பதே அவர்கள் விரும்பும் பயன்)" என்று பதிலளித்தாராம்!*[2]

1. நாலாயிரப்படியில் "இவ்வளவிலே வெளித்திரு முற்றத்திலே நின்றும் ப்ரஸாதம் கொண்டு ஒருவன் வர, 'யாம்பெறு சம்மானம்' என்று பட்டர் அருளிச் செய்தார்" என்றுளது.

2. மேற்கூறிய பாசுரத்தில் 'பல்கலனும் யாம் அணிவோம்', 'ஆடை உடுப்போம்' என்றிருப்பது போல, 'பால் சோறு உண்போம்' என்று வினைச்சொல் ஒன்றில்லாமல் 'நெய் பெய்து முழங்கை வழி வாரக் கூடியிருந்து குளிர்ந்து' என்றே பாசுரம் அமைந்திருப்பதனால் பட்டர் இப்படி விளக்கம் அளித்தார் போலும்! நாலாயிரப்படியிலும் பட்டர் இவ்வாறு கூறியமை குறிப்பிடப்பட்டுள்ளது.

[108]

மாறநேர் நம்பி சரமத$_3$சையில் கலக்கங்கண்டு ப$_4$யப்பட்ட பெரியநம்பிக்கு எம்பெருமானார் ப$_4$யந்தீர அருளிச்செய்த ச்லோகங்களிவை. "स्थिते मनसि (ஸ்தி$_2$தே மநஸி) **இத்யாதி$_3$". "இவையெங்ஙனே?" என்ன, "ஸ்ரீவராஹவெம்பெருமான் ஸ்ரீபூ$_4$மிப் பிராட்டிக்கு அருளிச்செய்தார்" என்றார். "ஸ்ரீவராஹப்பெருமான் உம்மைப் போலே ஆச்ரிதபக்ஷபாதி. அவன் வார்த்தையொழிய என்போல்வார் மத்$_4$யஸ்தர் வார்த்தையுண்டாகில் சொல்லும்" என்ன,** "न मे भक्तः प्रणश्यति (ந மே ப$_4$க்த: ப்ரணச்யதி) **இத்யாதி$_3$களுடைய உம்மைப் போல்வார் வார்த்தையாய் இராநின்றது" என்ன, "இந்த ஜ்ஞானமுடையவனுக்குப் புனர்ஜன்மமில்லை என்னுமிடத்துக்கு ப்ரமாணம் உண்டோ?" என்ன,** "त्यक्त्वा देहं पुनर्जन्म नैति मामेति सोऽर्जुन **(த்யக்த்வா தே$_3$ஹம் புனர்ஜன்ம நைதி மாமேதி ஸோர்ஜுந) என்று உண்டு" என்று அருளிச் செய்தார். இவற்றைக் கொண்டு பெரியநம்பி ப்ரீதரானார்.**

(திருப்பாவை 29 நாலாயிரப்படி)

நிகழ்டம்

கோபிகை பாவனையில் நோன்பு நோற்கின்ற ஆண்டாள், ''சிற்றஞ்சிறுகாலே வந்து'' எம்பெருமானை அடிபணிந்ததாகக் கூறுகின்றாள். சிற்றஞ்சிறுகாலையின் சிறப்பை விளக்குகின்ற உரையாசிரியர், பகலெல்லாம் பிறரைத் துன்புறுத்தி, இரவெல்லாம் மறந்து கிடந்து உருகி, மீண்டும் விடிந்தால் பகலெல்லாம் பிறரைத் துன்புறுத்துவதிலேயே இழிகின்றவர்களுக்கும் ஸத்வகுணம் தலையெடுக்கும் காலம் சிற்றஞ்சிறுகாலையாகிய விடியற்காலை என்று கூறுகிறார். இந்தப் பொழுதில் எம்பெருமானைப் பற்றிவிட்டால், பிறகாலங்களில் நாம் செய்தவற்றையும் எம்பெருமான் பொறுத்தருள்வன் என்பதனை விளக்கும் வகையில் பெரியநம்பிக்கும் எம்பெருமானாருக்கும் இடையே நடைபெற்ற **ஸம்வாதம்** *ஒன்று எடுத்துக்காட்டப்பெறுகிறது.*

விளக்கம்

பெரியநம்பியும், மாறநேர் நம்பியும் ஆளவந்தாருடைய சீடர்களாவர். **மாறநேர் நம்பி** *கடைசிக் காலத்தில் நோய்வாய்ப்பட்டு மிகவும் துன்புற்றார். மரணத்தறுவாயில் எம்பெருமானை நினைப்பதற்கும் சக்தியற்றவராக இருந்ததால் கலக்கமுற்றார். இதைக் கண்டு* **பெரிய நம்பி** *பயப்பட்டபோது,* **எம்பெருமானார்** *வராஹப் பெருமான் அருளிய சரமச்லோகங்களை அவருக்கு நினைவுபடுத்தினார்.*

> *''ஸ்திதே மநஸி ஸுஸ்வஸ்தே சரீரேஸதி யோநர:*
> *தாதுஸாம்யே ஸ்திதே ஸ்மர்த்தா விச்வரூபஞ்ச மாமஜம்*

தஸ்தம்ரியமாணந்து காஷ்டபாஷாணஸந்நிபம்
அஹம்ஸ்மராமி மத்பக்தம் நயாமி பரமாம் கதிம்

(மனம் கலக்கமின்றி நிலைநிற்கையில், வாதம், பித்தம் கபம் என்னும் மூன்று தாதுக்களும் ஓரளவாக இருக்கையில், எந்த மனிதன் உலகை உடலாக உடையவனும், பிறப்பிலியுமான என்னை நினைக்கிறானோ, பிற்காலத்தில் கட்டையோடும் கல்லோடும் ஒத்தவனாய் மரணத்தறுவாயில் இருக்கும் அந்த என் பக்தனை நான் நினைக்கிறேன்; உயர்ந்த கதிக்கு அழைத்துச் செல்கிறேன்.) என்று வராஹப்பெருமானே அருளிச் செய்துள்ளான். எனவே நல்ல நிலையில் இருக்கும்போது ஒருவன் தன்னை நினைத்துவிட்டால், அவனுடைய மரணத்தறுவாயில் தான் அவனை நினைத்து நற்கதிக்கு அழைத்துச் செல்வதாக எம்பெருமானே கூறியுள்ளவற்றை மறந்தீரோ?" என்று எம்பெருமானார் கேட்டார். பெரியநம்பி, "இவை அருளிச்செய்தவன் யார்?" என்று பெரியநம்பி வினவினார். "ஸ்ரீவராஹப்பெருமான் பூமிப்பிராட்டிக்கு அருளிச்செய்த வார்த்தைகள் அன்றோ இவை!" என்றார் எம்பெருமானார். "வராஹப்பெருமான் உம்மைப்போல் அடியவர்களிடத்தில் பட்சபாதம் உடையவனாதலால் இப்படி அருளிச் செய்தான். அவன் கூறியதைத் தவிர, என்னைப் போல் பட்சபாதமில்லாத நடுநிலையாளர்கள் எவரேனும் கூறியிருக்கிறார்களா?" என்று கேட்டார்.

"ந மே பக்த: ப்ரணச்யதி" (பகவத்கீதை 9-31) (என்னுடைய பக்தன் நாசமடைவதில்லை) என்று கண்ணபிரான் அருளிச் செய்துள்ளஃது உம்மைப் போல்வார் வார்த்தைகளாக இருக்கின்றதே!" என்று எம்பெருமானார் கூற, பெரியநம்பி, "எம்பெருமானை உள்ளபடி அறிந்தவர்களுக்கு மறுபிறவி கிடையாது என்பதற்கு பிரமாணம் (ஆதாரம்) உண்டோ?" என்று கேட்டார். எம்பெருமானார் "ஜந்ம கர்ம ச மே திவ்யம் ஏவம் யோ வேத்தி தத்வத: த்யக்த்வா தேஹம் புநர் ஜந்ம நைதி மாமேதி ஸோர்ஜுந (பகவத்கீதை 4-9) ("என்னுடைய பிறவிகளும், செயல்களும் புனிதமானவையென்று உள்ளபடி எவன் அறிகிறானோ அவன் இந்த உடலைக் கைவிட்டு, மறுபடியும் பிறப்பை அடைவதில்லை. என்னையே வந்தடைகிறான்) என்று கண்ணபிரான் அருளிச் செய்திருக்கின்றானே! எனவே அவனுடைய அவதாரத்தை உள்ளபடி அறிந்தவர்களுக்கு மறுபிறப்பு கிடையாது என்பதனால் தேவரீரும் கவலைப்பட வேண்டிய அவசியமில்லையே" என்று கூற பெரியநம்பி மகிழ்ச்சி அடைந்தார்.

[109]

ஆளவந்தார் கோஷ்டியிலே "ஸம்ஸாரிக்கு எம்பெருமான் ஸன்னிதியில் விண்ணப்பம் செய்ய அடுப்பதென்?" என்ன, சில முதலிகள், "மூடோயம் இத்யாதி க்ஷத்ரபந்துவின் ச்லோகத்தை விண்ணப்பம் செய்கை அழகிது" என்ன,

ஆளவந்தார் "அதிலே பெருந்தேவை உண்டு, நமக்காவது 'ஸோஹம் தே' என்கிற காளியன் ஶ்லோகமே" என்று அருளிச் செய்தார்.

(திருப்பாவை 29 நாலாயிரப்படி.)

நிகழிடம்

*கோபிகை பாவனையில் நோன்பு நோற்கின்ற ஆண்டாள், ''சிற்றஞ்சிறுகாலே வந்து'' எம்பெருமானை அடிபணிந்ததாகக் கூறுகின்றாள். சிற்றஞ்சிறுகாலையின் சிறப்பை விளக்குகின்ற உரையாசிரியர், பகலெல்லாம் பிறரைத் துன்புறுத்தி, இரவெல்லாம் மறந்து கிடந்து உருகி, மீண்டும் விடிந்தால் பகலெல்லாம் பிறரைத் துன்புறுத்துவதிலேயே இழிகின்றவர்களுக்கும் ஸத்வகுணம் தலையெடுக்கும் காலம் சிற்றஞ்சிறுகாலையாகிய விடியற்காலை என்று கூறுகிறார். இந்தப் பொழுதில் எம்பெருமானைப் பற்றிவிட்டால், பிறகாலங்களில் நாம் செய்த பாவங்களைக் குறித்து எந்தக் கவலையும் படவேண்டாம் என்பதனை விளக்கும் வகையில் ஆளவந்தார் கோஷ்டியில் நடைபெற்ற **ஸம்வாதம்** ஒன்று எடுத்துக்காட்டப்பெறுகிறது.*

விளக்கம்

எண் 366ன் விளக்கம் காண்க.

[110]

(கோவிந்தா) "கெடுவாய்! நாங்கள் இற்றைப் பறை கொள்வானன்று காண்!" என்று பட்டர் அருளிச் செய்த வார்த்தை.

(திருப்பாவை 29 நாலாயிரப்படி)

நிகழிடம்

*பாவை நோன்பு நோற்ற கோபிகை (பாவனையுடைய ஆண்டாள்) திருப்பாவையில் பலவிடங்களிலும் தான் பறையொன்றை வேண்டி வந்ததாகவே கூறினாள். முடிவில் கண்ணபிரானைச் சென்றடைந்த போதும். 'இறைவா நீ தாராய் பறை' என்றே கூறினாள். இதைக் கேட்ட கண்ணபிரான் உண்மையாகவே பறை எனப்படும் வாத்யத்தை இவர்களுக்குக் கொடுக்க முயன்றபோது 'இற்றைப் பறை கொள்வான் அன்று காண் கோவிந்தா' என்றாள். இங்கு 'கோவிந்தா' என்றுள்ள சொல்லின் பொருளைச் சுவைபட விளக்கும் பட்டருடைய **வார்த்தை** எடுத்துக்காட்டப் பெறுகிறது.*

விளக்கம்

கோவிந்தன் என்ற சொல்லுக்குப் பசு மேய்ப்பவன் என்பது பொருள். பசுக்களை மேய்ப்பவனாகையாலே மேலெழப் பொருள் புரிந்து கொண்டானே

தவிர, தான் கூறியதன் உண்மைப் பொருளை அவன் அறியவில்லை என்பதனாலேயே அவனை 'கோவிந்தா' என்கிறாள். அவன் பறையைக் கொடுக்க முன் வந்த போது "கெடுவாய்![1] நாங்கள் இந்தப் பறையை வேண்டி வரவில்லை" என்று ஆண்டாள் கூறுகிறாள் என்று **பட்டர்** *அருளிச்செய்தார்.*

[111]

"கன்றிழந்த தலைநாகு, தோற்கன்றை மடுக்க, அதுக்கு இரங்குமாபோலே, ஸ்நேஹிகள் சொன்ன இப்பாசுரங் கொண்டு புகவே, அதில்லாத நமக்கும் ப$_2$லிக்கும்" என்று ப$_4$ட்டர்.

(திருப்பாவை 30 ஆறாயிரப்படி)

நிகழ்டம்

கோபிகளுடைய பாவனையில் பாவை நோன்பு நோற்ற ஆண்டாள் அருளிச் செய்த திருப்பாவை முப்பது பாசுரங்களையும் கற்பவர்கள் 'எங்கும் திருவருள் பெற்று இன்புறுவர்' (எம்பெருமானாலும் பிராட்டியாலும் அருளப் பெற்று இன்பத்தை அடைவர்) என்று ஆண்டாள் பயன் சொல்லுகிறாள். ஆண்டாளுக்கு உள்ள அளவு அன்பு நமக்குமிருந்தாலன்றோ பலன் கிட்டும் என்ற ஐயத்திற்கு விடையாக பட்டர் அருளிச் செய்த **வார்த்தை** *எடுத்துக் காட்டப்பெறுகிறது.*

விளக்கம்

கன்றை இழந்த தாய்ப் பசுவிற்கு முன்னால் ஒரு தோல் கன்றை வைத்தாலும், அதையே தன் கன்றாக நினைத்துக் கொண்டு, தாய்ப்பசு பாலைச் சுரந்துவிடுகிறது. வெளியே தெரியும் (தன் கன்றின்) தோலை அது பார்க்கிறதே தவிர, அத்தோலின் உள்ளே உயிர் இருக்கிறதா அல்லது வைக்கோல் இருக்கிறதா என்று அது பார்ப்பதில்லை. அதுபோல நாமும் திருப்பாவையைச் சொன்னோமானால், நம்முடைய நெஞ்சுக்குள்ளே ஆண்டாளுக்குள்ளது போன்று அன்பு இருக்கிறதா என்று பாராமல் திருப்பாவையை மேலெழக் கூறுவதற்கே எம்பெருமான் பலன் கொடுத்துவிடுவான். திருவாய்ப்பாடியில் இந்நோன்பைச் செய்த ஆய்ச்சியரைப் போலவும், அதை அனுகரித்த ஆண்டாளைப் போலவும் திருப்பாவை முப்பது பாசுரங்களையும் கற்பவர்களும் ஆனந்தம் அடைவர் - என்பது **பட்டர்** *அருளிச்செய்யும் விளக்கமாகும்.[2]*

1. தன் கருத்தையறியாத ஒருவனுக்கு அதைப் புரிய வைக்கும் போது "நாசமாய்ப் போனாய் போ! நான் கூறியது அது அல்ல; இதுவே!" என்று சொல்வது இன்றும் வழக்கிலுள்ளது. அதுவே "கெடுவாய்" என்று இங்குக் குறிப்பிடப்படுகிறது.

2. மூவாயிரப்படி, ஈராயிரப்படி, நாலாயிரப்படி உரைகளிலும் பட்டர் இவ்வாறு அருளிச் செய்தமை குறிப்பிடப்பெற்றுள்ளது.

[112]

(மாதவனைக் கேசவனை) "கண்ணுதல் நஞ்சுண்ணக் கண்டவனே, விண்ணவர் அமுதுண அமுதில் வரும் பெண்ணமுதுண்ட எம்பெருமானே!" என்கிறபடியே, தான் ஸாக்ஷாத் அம்ருதத்தையுண்டு ப்$_3$ரஹ்மாதி$_3$களுக்குக் கோதைக் கொடுத்தான்" என்று ப$_4$ட்டர். 'மாதவனை' என்று தன் வாயைக் காட்டி, 'கேசவனை' என்று கோதைப் போகட்டார்.

(திருப்பாவை 30 நாலாயிரப்படி)

நிகழிடம்

'வங்கக் கடல் கடைந்த மாதவனைக் கேசவனை' என்று ஆண்டாள் அருளிச்செய்துள்ளாள். இங்கு மாதவன், கேசவன் என்ற இரு திருநாமங்களுக்கும் பட்டர் சுவையாக விளக்கமளித்த **ஐதிஹ்யம்** *எடுத்துக்காட்டப் பெறுகிறது.*

விளக்கம்

எம்பெருமான் பாற்கடலைக் கடைந்து சாவா மருந்தாகிய அமுதத்தை எடுத்து தேவர்களுக்கு வழங்கினான். அப்படிக் கடலைக் கடைந்தபோது வெளிப்பட்ட பற்பல பொருள்களையும் பற்பல தேவதைகளுக்குக் கொடுத்து விட்டான். முதன்முதலில் கடலிலிருந்துவெளிப்பட்ட நஞ்சை சிவனுக்குக் கொடுத்தான். ஆனால் முடிவில் வெளிப்பட்ட ஸ்ரீமஹாலக்ஷ்மியைத் தானே கைப்பற்றிக் கொண்டான். இதை விளக்கியருளும் பட்டர் "விண்ணவர் அமுதுண அமுதில் வரும் பெண்ணமுதுண்ட எம்பெருமானே!" என்று திருமங்கையாழ்வார் (பெரிய திருமொழி 6-1-2) அருளிச் செய்தபடியே "கடலிருந்து வெளிப்பட்ட, உண்மையான அமுதமாகிய பிராட்டியைத் தான் வைத்துக் கொண்டு விட்டு, வெறும் சக்கையான (அஸாரமான) அமுதத்தை தேவர்களுக்கு கொடுத்து விட்டான்" என்று அருளிச் செய்வாராம்.[1]

'கேசவன்' என்ற திருநாமம் பிரமன் சிவன் முதலிய தேவர்களுக்குத் தலைவன் என்ற பொருளைத் தரும். 'மாதவன்' என்ற திருநாமம் பிராட்டிக்கு மணவாளன் என்ற பொருளைத் தரும். தேவர்களுக்குத் துன்பம் ஏற்பட்டபோது, கடலைக் கடைந்து அவர்களுக்கு அமுதம் முதலியவைகளைக் கொடுத்து, அவர்களுக்குத் தலைவனாகியமையை 'கடல் கடைந்த கேசவன்' என்பது குறிக்கும். தான் அனுபவிப்பதற்கு ஏற்ற பிராட்டியை அடைந்தமையை 'கடல் கடைந்த மாதவன்' என்பது குறிக்கும். தேவதைகளுக்கு விருப்பமான அமுதம், பிராட்டியை அனுபவிக்கும் எம்பெருமானுக்கு சக்கையல்லவா? எனவே மாதவன் என்று சொல்லிப் பராசர பட்டர் தம் வாயில் அண்ணித்து (=தித்தித்து)

1. "தான் ஸாக்ஷாத் அம்ருதத்தையுண்டு ப்ரஹ்மாதிகளுக்குக் கோதை கொடுத்தான் என்று பட்டர் அருளிச்செய்வர்" என்று மூவாயிரப்படி உரையில் உள்ளது.

அமுதூறுவதைத் தம் வாயைத் திறந்து காட்டினார். கேசவன் என்று சொல்லித் தம் வாயிலுள்ள சக்கையை உமிழ்வதுபோல் காட்டினார் பட்டர். மாதவன் என்றதனால், அமுதில் வரும் பெண்ணமுதான பிராட்டியை அடைந்தான் என்றும் கேசவன் என்பதனால் வெறும் சக்கையான அமுதத்தை தேவர்களுக்குக் கொடுத்தான் என்றும் பொருள்படும்படி பட்டர் இவ்வாறு அபிநயம் செய்து காட்டினார்.

[113]

(எங்கும் திருவருள் பெற்று இன்புறுவர்) "விடிவோரையெழுந்திருந்து முப்பது பாட்டையும் அநுஸந்தி₄த்தல், மாட்டிற்றிலனாகில் 'சிற்றஞ்சிறுகாலே' என்கிற பாட்டை யநுஸந்தி₄த்தல், அதுவும் மாட்டிற்றிலனாகில் நாமிருந்த விருப்பை நினைப்பது" என்று ப₄ட்டர் அருளிச் செய்வர்.

(திருப்பாவை 30 மூவாயிரப்படி)

நிகழிடம்

திருப்பாவை உரையின் முடிவில், திருப்பாவையின் சிறப்பை பட்டர் அருளிச்செய்த **வார்த்தை** *ஒன்று கொண்டு உரையாசிரியர் எடுத்துக் காட்டுகிறார்.*

விளக்கம்

"ஸ்ரீவைஷ்ணவர்கள் அனைவரும் விடியற்காலையில் எழுந்திருந்து திருப்பாவை முப்பது பாசுரங்களையும் அனுஸந்திக்க வேண்டும்; அது முடியவில்லையானால், எம்பெருமானுடைய மகிழ்ச்சிக்காக அவனுக்கு நாம் செய்யும் தொண்டே நாம் அடையவேண்டிய சிறந்த பேறு என்பதைத் தெரிவிக்கின்ற "சிற்றஞ்சிறு காலே" என்ற இருபத்தொன்பதாம் பாசுரத்தை மட்டுமாவது அனுஸந்திக்க வேண்டும்; அதுவும் முடியவில்லையானால் நாம் (பட்டர்) இப்பிரபந்தத்தை அனுஸந்தித்து ஈடுபட்டிருந்த இருப்பையாவது நெஞ்சினால் நினைக்க வேண்டும்" என்று பட்டர் *அருளிச் செய்வர்.*[1]

[114]

(தரை விளக்கி) திருக்கண்ணமங்கையாண்டானைப் போலே இதுதானே ப்ரயோஜனமாய்ச் சென்றபடி.

(நாச்சியார் திருமொழி 1-1)

நிகழிடம்

எம்பெருமானை அடைவதற்காகக் காமனைக் குறித்து நோன்பு நோற்கின்ற ஆண்டாள் "தையொரு திங்களும் தரை விளக்கி" என்றருளிச் செய்கிறாள். இங்கு

1. நாலாயிரப்படி உரையிலும் பட்டர் இவ்வாறு அருளிச்செய்தமை குறிப்பிடப்பெற்றுள்ளது.

'தரை விளக்கி' என்றுள்ளதை விளக்கும் உரையாசிரியர், திருக்கண்ணமங்கை ஆண்டான் எனும் ஆசார்யரின் செயலை **உதாரணம்** காட்டுகிறார்.

விளக்கம்

திருக்கண்ணமங்கையாண்டான் எனும் ஆசார்யர், எம்பெருமானே தம்மைக் காப்பான் என்ற உறுதி கொண்டு, தம்முடைய செயல்கள் அனைத்தையும் துறந்து திருக்கண்ணமங்கைப் பத்தராவிப் பெருமாள் திருக்கோயில் கோபுர வாசற்புடையில் சாய்ந்தருளினார்![1] எல்லாச் செயல்களையும் விட்டுவிட்ட அவரும் எம்பெருமானுடைய திருக்கோயிலில் திருவலகு (தரை விளக்குதல்) கைங்கர்யத்தை வேறு பயன் கருதாமல் தொண்டு செய்வதையே பயனாகக் கொண்டு செய்துவந்தார்.[2] அப்படித் திருக்கண்ணமங்கையாண்டான் ஸ்வயம் ப்ரயோஜனமாக எம்பெருமான் விஷயத்தில் செய்த செயலை, ஆண்டாள் எம்பெருமானை உடனே அடையப் பெறவேண்டும் என்ற துடிப்பினால், காமனைக் குறித்துச் செய்கிறாள் என்கிறார் உரையாசிரியர்.

[115]

(ஊனியிடையித்யாதி) "ராவணன் மாயாஶிரஸ்ஸைக் காட்டின போது "இதர ஸ்திரீகளோபாதி த$_4$ரித்திருந்ததற்குக் கருத்தென்?" என்று சீயரைக் கேட்க "இவளுடைய ஸத்தைக்கு ஹேது பெருமாள் ஸத்தையாய்த்து; அதுக்கு தை$_3$வமறிய ஒரு குறையில்லாமையாலே த$_4$ரித்திருந்தாள். இவள் ஸத்தைக்கு ஹேது ப்ரதிபத்தி அப்ரதிபத்திகளல்ல; அத்தலையில் ஸத்தையாய்த்து" என்றருளிச் செய்வர்.

(நாச்சியார் திருமொழி 1-6)

நிகழிடம்

''மானிடவர்க்கு என்று பேச்சுப்படில் வாழகில்லேன்'' என்று ஆண்டாள் அருளிச்செய்கிறாள். நானும் அறியாதிருக்க, அவனும்அறியாதிருக்க, 'இவள் ஒரு மானிடனுக்கு' என்ற பேச்சு நாட்டில் எழுந்தாலும், அப்படி ஒரு பேச்சு எழுந்தது எனக்குத் தெரியாவிட்டாலும் கூட நான் வாழமாட்டேன் என்கிறாள் என்று விளக்கிய உரையாசிரியர், இத்தொடர்பில் நஞ்சீயருக்கும் நம்பிள்ளைக்கும் இடையே நடைபெற்ற **ஸம்வாதம்** ஒன்றை எடுத்துக் காட்டுகிறார்.

விளக்கம்

சீதைப்பிராட்டியைக் கவர்ந்து வந்த இராவணன் எப்படியாவது அவளைத் தன் வழிக்குக் கொண்டுவர வேண்டும் என்று கருதிப் பல முயற்சிகள் செய்து

1. திருக்கண்ணமங்கயாண்டான் இவ்வாறு செய்தமை குறித்து எண் 179ல் விளக்கம் காண்க.
2. திருக்கண்ணமங்கையாண்டான் திருவலகிட்டது குறித்து எண் 765ல் விளக்கம் காண்க.

பார்த்தான். அதில் ஒரு முயற்சியாக, மாயையினால் இராமனுடைய தலை போலவே ஒன்றைச் செய்து கொண்டு வந்து சீதைப் பிராட்டி முன் காட்டி, "இதோ உன் கணவனுடைய தலையை அறுத்துக் கொன்று விட்டேன். எனவே இனியாவது என் விருப்பத்தை நிறைவேற்றுவாயாக" என்று கூறினான். இதைக் கண்ட சீதைப்பிராட்டி உண்மையிலேயே அது இராமபிரானுடைய தலை என்றே எண்ணி அழுது புலம்பினாள்.[1] *"தன் கணவன் இறந்து விட்டான் என்று நினைத்த போது ஸீதைப்பிராட்டியும் இக்காலத்துப் பெண்கள்போல் அழுது புலம்பினாளே? இராமபிரான் மீதுள்ள அளவற்ற அன்பினால் அவனுடைய தலையைக் கண்ட அடுத்த கணத்திலேயே சீதைப்பிராட்டிக்கு உயிர் பிரிந்திருக்க வேண்டாமா? அங்ஙனல்லாமல் அவள் உயிர் தரிந்திருந்து அழுதாள் என்று கூறினால், அவள் இராமபிரான்மீது கொண்டிருந்தது மெய்யான அன்பல்ல என்றாகி விடாதோ?" என்று* **(நம்பிள்ளை?)** *நஞ்சீயரிடம் கேட்க,*[2] *அதற்கு* **நஞ்சீயர்** *"பிராட்டி, உயிர் தரித்திருந்தது இராமபிரானிடம் அன்பு இல்லாமையால் அல்ல. இராமபிரான் உண்மையில் உயிருடன் இருந்தமையால்தான் பிராட்டிக்கும் உயிர் போகவில்லை. நாயகன் உயிரோடிருக்கிறான் என்று நினைத்துக் கொள்வதும், நாயகனுடைய உயிர் பிரிந்துவிட்டது என்று நினைத்துக் கொள்வதும் நாயகி தரித்திருப்பதற்கோ, உயிர் விடுவதற்கோ காரணமாகி விடாது. உண்மையில் நாயகன் உயிரோடு இருந்தானாகில், அது காரணமாகவே நாயகியும் உயிர் தரித்திருப்பாள்.*[3] *உண்மைக்கு மாறாக ஒருவர் இறந்துவிட்டதாகப் பொய் சொன்னால் அதனை நம்ப நேர்ந்தாலும் துயர் உண்டாகுமே தவிர உயிருக்கு ஆபத்து விளையாது. ராவணன் மாயத்தினால் செய்த தலையைக் காட்டி வஞ்சித்த போதும், பிராட்டியும் அதை உண்மையென்றே நம்பிய போதும், உண்மையில் இராமபிரானுடைய உயிருக்கு ஆபத்தொன்றும் ஏற்படாமல் அவன் உயிருடன் இருந்த காரணத்தாலேயே பிராட்டியும் தரித்திருந்தாள்" என்று விடை அளித்தார்.*

1. இராவணன் மாயாசிரஸ்ஸை சீதைக்குக் காட்டியது, அதைக் கண்டு சீதை அழுது புலம்பியது முதலியவை வான்மீகி ராமாயணம் யுத்தகாண்டம் 31, 32 ஸர்க்கங்களில் கூறப்படுகின்றன.
2. இவ்வுரையாடல் மற்றும் மூன்று இடங்களில் குறிப்பிடப்பெற்றுள்ளது. (எண் 122, 563, 599) இங்கும், எண் 563லும் ''சீயரைக் கேட்க'' என்று மட்டுமே உள்ளது. கேட்டவர் யார் என்று குறிப்பிடப் பெறவில்லை. எண் 122ல் ''சீயரை நான் கேட்க'' என்று உள்ளதால் இக்கேள்வியைக் கேட்டவர் நம்பிள்ளை என்று கொள்ளல் தகும். எண் 599ல் இக்கேள்வியை பட்டரிடம் கேட்டதாகவும் அவர் மேற்கண்டவாறு விடையளித்ததாகவும் குறிப்பிடப்பெறுகிறது. (அப்படியாயின் கேட்டவர் நஞ்சீயர் என்று கொள்ளலாம்.) ஆனால் அங்கும் கேட்டவர் பெயர் குறிப்பிடப்படவில்லை.
3. ''இன்றியமையாமை என்று தமிழரதொரு ப்ரவாதமுண்டு, அதாகிறது ஒரு தலையுண்டானால் ஒரு தலையின்றிக்கே இராது'' என்று எம்பெருமானார் அருளிச் செய்வர் என்று எண் 644ல் குறிப்பிடப் பெற்றுள்ளது இங்கு ஒப்பு நோக்கத் தக்கது.

[116]

(இந்தப் பக்கம் நின்றவர் என் சொல்லார்) "ஆண் பெண்ணாய் வார்த்தை சொல்லிற்றாகையன்றிக்கே பெண் தனக்கே அதுக்கு மேலே ஒரு மென்மை பிறந்து வார்த்தை சொல்லுகிறதென்னுமிடம் தோற்றியிருக்கிறபடி காணும்!" என்று பிள்ளை தாமும் வித்₃த₄ராய் அருளிச் செய்தருளின வார்த்தை.

(நாச்சியார் திருமொழி 2-9)

நிகழிடம்

கண்ணபிரானையே கணவனாக அடைய வேண்டுமென்று ஆசைப்பட்ட ஆண்டாள், கோபிகையின் பாவனையை அடைந்து திருப்பாவை நோன்பு நோற்றும், மன்மதன் காலில் விழுந்தும், கண்ணனைப் பெற முயன்றாள். அப்படியும் கண்ணனைப் பெறாத காரணத்தால் தன்னுடைய கவனத்தை வேறு பக்கம் திருப்பி ஆறுதலடைவதற்காக கோபிகைகள் சிற்றில் இழைத்தமை பற்றி ஒரு பதிகம் அருளிச்செய்கிறாள். கோபிகைகள் சிற்றில் இழைக்கத் தொடங்க, கண்ணபிரான் வந்து அச்சிற்றிலைக் காலாலே உதைத்து அழிக்கப் புக, அதை ஆய்ச்சியர்கள் வேண்டாம் என்று தடுக்க, இப்படி ஒரு பதிகம் அருளிச் செய்கிறாள் ஆண்டாள். அது நாச்சியார் திருமொழியில் "நாமமாயிரம்" என்ற இரண்டாவது திருமொழியாகும். அதில் கண்ணபிரானோடு ஊடல் கொண்டு பேசுகிற போது "எம்மைப் பற்றி மெய்ப்பிணக்கிட்டக்கால் இந்தப் பக்கம் நின்றவர் என் சொல்லார்?" (கண்ணா, எங்களை நீ பற்றி அணைத்துக் கொண்டால், அருகில் நிற்பவர்கள் என்னதான் சொல்ல மாட்டார்கள்!) என்கிறாள். "உன்னோடு அணையப் பெறுகை எங்களுக்கும் விருப்பம்தான். ஆனால் அருகில் நிற்பவர்கள் ஏதேனும் பொல்லாங்கு சொல்லப் போகிறார்களே! என்று தான் அஞ்சுகிறோம்" என்கிறாள் ஆண்டாள். இவ்விடத்தில் நம்பிள்ளை மிகவும் ஈடுபட்டு அருளிச்செய்த **வார்த்தை** ஒன்று எடுத்துக்காட்டப்பெறுகிறது.

விளக்கம்

"ஆண்களான ஆழ்வார்கள் நாயகீ பாவத்தை ஏறிட்டுக் கொண்டு பெண் தன்மையில் பல பாசுரங்கள் பாடியிருக்கின்றார்கள். அப்போது சிலர் எம்பெருமானுடன் ஊடல் கொண்டு வன்மையோடும், மென்மையோடும், செல்வமாகவும் பேசியிருக்கின்றனர். "ஒரு நான்று தடிபிணக்கே" (திருவாய்மொழி 6-2-7) என்று வன்மையாக நம்மாழ்வாரும், "என் சினம் தீர்வன் நானே" (பெருமாள் திருமொழி 6-8) என்று செல்வமாகக் குலசேகராழ்வாரும், "சொல்லாதொழியீர் சொன்ன போதினால் வாரீர் எல்லே இதுவென் இது வென் இதுவென்னோ" (பெரியதிருமொழி 10-8-7) என்று மிகவும் மென்மையாகத் திருமங்கையாழ்வாரும் பேசி எம்பெருமான்மீது தங்களுக்குள்ள கோபத்தை

வெளிப்படுத்தியுள்ளனர்! ஆனால் ஆண்டாளோ ஆழ்வார்களைப் போல் பெண் தன்மையை ஏறிட்டுக் கொள்ள வேண்டாமல் இயற்கையிலேயே பெண்ணாய், அதற்கும் மேலே மிக மென்மையும் அமையப் பெற்றவளாகையாலே மிகவும் மென்மையுடன் இவ்விடத்தில் வார்த்தைகள் சொல்லுகிறாள் என்பது தோற்றியிருக்கிறபடி கண்டீரே" என்று **நம்பிள்ளை** *மிகவும் வித்தராய் (=ஆச்சர்யப்பட்டு) அருளிச் செய்வராம்.*

[117]

(காரிருளெல்லில் பிழைத்து) பிள்ளையுறங்காவில்லிதாஸர் "இவன்தான் பருவம் நிரம்பாமையாலே தன்னை நோக்கிக் கொள்ள மாட்டிற்றிலன். புறம்புதானே பரிந்து நோக்குகைக்கு ஒருத்தரில்லை. கம்ஸாதிகள் தப்பாமல் அகப்படுத்தக் கோலிநின்றார்கள். அவ்வளவில் உதவித்தந்தது இருள். அத்தை ஸரணம் புகுமத்தனையிறே" என்று பணிப்பராம்.

(நாச்சியார் திருமொழி 3-9)

நிகழ்டம்

வசுதேவருக்கும் தேவகிக்கும் பிறக்கும் எட்டாம் குழந்தையால் தனக்கு மரணம் ஏற்படும் என்பதை அறிந்த கம்ஸன், அவர்களிருவரையும் சிறையில் அடைத்து, அவர்களுக்குப் பிறந்த குழந்தைகள் அறுவரையும் உடனுக்குடனே கொன்றும் விட்டான். கடைசியில் கண்ணபிரான் ஓர் இரவில் கம்ஸனுடைய சிறைக் கூடத்திலேயே பிறந்தான். அப்போது வசுதேவர் தேவகி இருவருடையவும் விலங்குகள் முறிந்து விழ, அக் குழந்தையையும் கம்ஸன் கொன்று விடக் கூடும் என்ற அச்சத்தினால் அந்த இரவிலேயே வசுதேவர் திருவாய்ப்பாடிக்கு கொண்டு சென்று நந்தகோபருடைய இல்லத்தில் விட்டுவிட்டார்.[2] இப்படிக் கம்ஸனால் ஏற்படவிருந்த ஆபத்திலிருந்து அந்த இருளை உடைய இரவிலே கண்ணன் தப்பிப் பிழைத்தமையை, "கஞ்சன் வலைவைத்த அன்று காரிருள் எல்லில் பிழைத்து" என்று ஆண்டாள் அருளிச் செய்கிறாள். இவ்விடத்தில் பிள்ளை உறங்காவில்லி தாஸர் அருளிச்செய்த **வார்த்தை** *ஒன்று எடுத்துக் காட்டப்பெறுகிறது.*

1. "நம்மாழ்வார் பகவத் விஷயத்தில் நின்ற ஊற்றமெல்லாம் தோற்ற வன்மை உடைத்தாயிருக்கும் மின்னிடை மடவார்; திருமங்கையாழ்வார்தம் மார்த்தவமெல்லாம் தோற்ற மென்மையுடைத்தாய் இருக்கும் காதில் கடிப்பு; இவர்தம்முடைய ராஜகுலமெல்லாம் தோற்றியிருக்கும் இத்திருமொழி" என்று பெருமாள் திருமொழி 6-1 வியாக்கியான அவதாரிகையில் பெரியவாச்சான்பிள்ளை அருளிச் செய்துள்ளது காண்க.

2. கண்ணபிரான் கம்ஸனுடைய சிறைக் கூடத்தில் பிறந்தமை, அதே இரவில் திருவாய்ப்பாடி சேர்ந்தமை முதலிய சரிதங்களை ஸ்ரீவிஷ்ணுபுராணம் 5-வது அம்சம் 3-வது அத்யாயத்திலும், ஸ்ரீபாகவதம் 10வது ஸ்கந்தம் 3-வது அத்யாயத்திலும் காணலாம்.

விளக்கம்

எம்பெருமானுக்கு என் வருகிறதோ என்று அஞ்சும் மனப்பாங்கு உடையவரான **பிள்ளை உறங்காவில்லி தாஸர்**[1] "கண்ணபிரான் அப்போதுதான் பிறந்த குழந்தையாகையால், கம்ஸனால் தனக்கு ஏற்படக்கூடிய ஆபத்தைப் போக்கிக் கொள்ளும் பருவம் அவனுக்கு இல்லை. அவனுடைய தாய் தந்தையரும் கூட சிறையிலடைக்கப் பட்டிருந்தமையால் அவனைக் காப்பாற்றுவதற்கு வேறு யாரும் அங்கில்லை. ஆனால் கம்ஸனோ எப்படியும் கண்ணனுக்குத் தீங்கு விளைத்துவிட வேண்டுமென்று நினைத்திருக்கிறான். அவனிடமிருந்து கண்ணன் தப்புவதற்குக் காரணமாக அமைந்தது அந்த இருள் கூடிய இரவு தானே! எனவே கண்ணனைக் காத்த அந்த இருளையே நாம் சரணம் புக வேண்டும்" என்பராம்.[2]

[118]

(பள்ளி கொள்ளுமிடத்து) "பள்ளி கொள்ளுமிடமாகிறது கோயில் என்று பட்டர் அருளிச் செய்ய நான் கேட்டேன்" என்று பிள்ளை அழகிய மணவாள அரையர் பணிப்பர்.

(நாச்சியார் திருமொழி 4-1)

நிகழிடம்

"மாலிருஞ்சோலை மணாளனார் பள்ளிகொள்ளுமிடத்து அடி கொட்டிட" (திருமாலிருஞ்சோலை எம்பெருமான் பள்ளிகொள்ளும் இடத்தில் அவனுடைய திருவடிகளைப் பற்றும் பாக்கியம் கிட்ட வேண்டும்) என்று ஆண்டாள் பாரிக்கிறாள். இங்கு, 'பள்ளிகொள்ளுமிடம்' என்றதன் சொல் நயத்தை பட்டர் விளக்கி அருளிச்செய்த **வார்த்தை** எடுத்துக் காட்டப்படுகிறது.

விளக்கம்

"திருமாலிருஞ்சோலை எம்பெருமானின் பள்ளி கொள்ளும் இடமாவது திருவரங்கம்" என்று **பட்டர்** கூறுவராம். அதாவது பற்பல திவ்ய தேசங்களிலும் எழுந்தருளியுள்ள எம்பெருமான்களும் ஆங்கே இரவு கதவு சாத்தப் பெற்ற பிறகு, பள்ளி கொள்வதற்கு திருவரங்கம் சென்று விடுவார்கள் போலும்! எனவே திருமாலிருஞ்சோலையழகர் பள்ளி கொள்ளுமிடமும் திருவரங்கமே. எனவே திருவரங்கத்தில் எம்பெருமானுடைய திருவடிகளை வருடும் பேறு தனக்குக் கிட்ட வேணுமென்றுதான் ஆண்டாள் பாரிக்கிறாள் என்று பட்டர் அருளிச் செய்யத் தாம் கேட்டதாகப் **பிள்ளை அழகிய மணவாள அரையர்** கூறுவராம்.

1. பிள்ளை உறங்காவில்லி தாஸர் எம்பெருமான் மீது அளவற்ற பரிவுடையர் என்பதற்குச் சான்றாக எண் 15, 218, 718 முதலியவை பார்க்க.
2. பிள்ளை உறங்காவில்லி தாஸர் இவ்வாறு கூறியமை மற்றோரிடத்திலும் உள்ளது. எண் 658 காண்க.

[119]

(அண்டமும் நிலனும் அடியொன்றினால்) "त्रीणि पदा विचक्रमे" (த்ரீணி பத$_3$ா விசக்ரமே) என்றும் 'மூன்றடி நிமிர்த்து' என்றும் உண்டாயிரா நின்றது. இதிருக்கிறபடி என்?" என்று ப$_4$ட்டரைக் கேட்க "परो मात्रया तनुवा वृधान । न ते महित्वमन्वश्नुवन्ति । उभे ते विद्म रजसी पृथिव्या विष्णो देवत्वम् । परमस्यवित्से । (பரோ மாத்ரயா தநுவா வ்ருத$_4$ாந! ந தே மஹித்வமந்வச்'நுவந்தி! உபே$_4$ தே பித்$_3$ம ரஜஸீ ப்ருதி$_2$வ்யா விஷ்ணோ தே$_3$வத்வம் பரமஸ்யவித்ஸே) என்று வேத$_3$ புருஷன்தானே இரண்டடியால் அளந்தவிடம் எல்லாருமறியும்; நீ மூன்றடியால் அளந்தவிடம் உனக்கே தெரியுமத்தனை என்று காணாமல் விட்டான். அவன் அளந்தமையுண்டு; அவனுக்கே தெரியுமத்தனை" என்றருளிச்செய்தார் என்று சீயர் அருளிச் செய்தார்.

(நாச்சியார் திருமொழி 4-9)

நிகழ்டம்

எம்பெருமான் வாமனனாக அவதரித்து மஹாபலியிடம் சென்று, தன் காலால் அளந்து கொள்ளும்படி மூன்றடி நிலம் வேண்டும் என்று யாசிக்க, அவனும் அப்படியே கொடுக்க, திரிவிக்ரமனாகத் தன் திருவடிகளால் உலகையெல்லாம் அளந்து கொண்டான். இதை ஆண்டாள் "அண்டமும் நிலனும் அடியென்றினால் முன் கொண்டவன்" (மேலுலகங்களையும் கீழுலகங்களையும் ஒவ்வோரடியாலே அளந்து கொண்டான்) என்று இரண்டு அடிகளாலே அளந்து கொண்டதாக அருளிச்செய்கிறாள். இத்தொடர்பில் பட்டருக்கும் நஞ்சீயருக்கும் இடையே நடந்த **ஸம்வாதம்** *எடுத்துக் காட்டப்படுகிறது.*

விளக்கம்

"த்ரீணி பதா விசக்ரமே" (யஜுர் அஷ்டகம் ப்ர. 4 பஞ். 51) (மூன்றடிகளாலே உலகை ஆக்ரமித்தான்) என்றும் "மூன்றடி நிமிர்த்து" (பெரியாழ்வார் திருமொழி 4-7-10) என்றும் எம்பெருமான் திரிவிக்கிரமனாகி மூன்று அடிகளாலே உலகளந்தான் என்று வேதத்திலும், ஆழ்வார்களாலும் கூறப்பட்டுள்ளது. ஆனால் ஆண்டாள் இரண்டடிகளால் உலகளந்ததாகக் கூறுவது எப்படிப் பொருந்தும் என்று நஞ்சீயர் பட்டரைக் கேட்டார். அதற்கு பட்டர்,

"பரோமாத்ரயா தநுவா வ்ருதாந
நதே மஹித்வ மந்வச் நுவந்தி
உபே தே வித்ம ரஜஸீ ப்ருதிவ்யா
விஷ்ணோ தேவத்வம் பரமஸ்ய வித்ஸே (யஜுர்வேதம் 2-8-16)

(விஷ்ணுவே! மேலானவனான நீ மிகப் பெரிய உருவுடன் வளர்ந்தாய். அப்போது உன் பெருமையை அளவிட்டவர் எவருமிலர், பூமியிலும் ஆகாயத்திலும் நீ அளந்த இரண்டடிகளை அறிவோம். இதற்கு மேற்பட்ட மூன்றாவது அடியை நீயே அறிவாய்) என்று வேத புருஷனும் கூட 'இரண்டடிகளையே அறிவோம்; மூன்றாவது அடியால் எதையளந்தாய் என்பதை நீயே அறிவாய்' என்று கூறியிருக்கிறான். ஆனால் மூன்றடிகளால் அளந்ததாகப் பிரமாணங்கள் கூறுவதால் அவன் மூன்றாவது அடியாலும் அளந்தமை உண்டு![1] எதை அளந்தான் என்பது அவனுக்கே தெரியும்" என்று கூறியருளினார் - என்று நஞ்சீயர் அருளிச் செய்வர்.

[120]

(நீடு நின்ற நிறை புகழாய்ச்சியர்) நிறைபுகழ் ஆய்ச்சியர் என்கிறதுக்கு எம்பார், "இவர்களுக்கு நிறை புகழாவது க்ருஷ்ணனை இன்னாள் நாலு பட்டினி கொண்டாள், இன்னாள் பத்து பட்டினி கொண்டாள் என்னும் புகழ் காணும்" என்றருளிச் செய்வர்.

(நாச்சியார் திருமொழி 4-11)

நிகழிடம்

கண்ணனோடு ஊடல் கொண்ட ஆய்ச்சிகளை 'நிறை புகழ் ஆய்ச்சியர்' என்கிறாள் ஆண்டாள். இதை விளக்கும்வகையில் எம்பார் அருளிச்செய்த சுவையான ***வார்த்தை*** *எடுத்துக்காட்டப்படுகிறது.*

விளக்கம்

கண்ணபிரான் கோபிகைகள் பலருக்கும் தனித்தனியே ஒரு நேரத்தைக் குறித்து, 'இந்த நேரத்தில் இன்னவிடத்தில் உன்னை வந்து சந்திக்கிறேன்' என்று கூறியிருப்பான். ஆனால் அப்படி ஓரிடத்திற்கும் செல்லாமல் எல்லோரையும் ஏமாற்றி விடுவான். இதனால் கோபம் கொண்ட கோபிகைகள் 'இனிக் கண்ணன் முகத்தில் விழிப்பதில்லை' என்று உறுதி கொண்டு இருப்பார்கள். கண்ணன் ஒன்றுமறியாதவன்போல் அவர்களுடைய இல்லத்திற்குச் சென்றால் அந்த கோபிகைகள் அவன் முகத்தில் விழிக்க மறுத்துவிடுவார்கள். கண்ணனோ, "உன் முகத்தைப் பார்த்தாலொழிய நான் உண்பதில்லை" என்று கூறி அவர்கள் வீட்டுத் திண்ணையிலேயே பலநாள்கள் பட்டினி கிடப்பான். இப்படி அவன் நான்கு நாள்கள் பட்டினி கிடந்தவாறே ஒருத்தி மனம் இளகி கண்ணனுக்கு முகம் கொடுத்து விடுவாள். மற்றொருத்தி அவ்வளவிலும் மனம் இளகாமல் எட்டு நாள்கள் வரை ரோஷத்துடன் இருப்பாள். இன்னொருத்தி பத்து நாள்கள்

1. மூன்றாம் அடிக்காக மஹாபலியின் தலைமீது எம்பெருமான் திருவடியை வைத்தான் என்பர்.

பொறுத்திருப்பாள். இவ்வாறாகக் கண்ணபிரானை நான்கு நாள்கள் பட்டினி கொண்டவள் இவள். எட்டு நாள்கள் பட்டினி கொண்டவள் இவள், பத்து நாள்கள் பட்டினி கொண்டவள் இவள் என்பதே அந்த ஆய்ப் பெண்களுக்கு நித்யமான நிறை புகழாகும் என்று எம்பார் *அருளிச்செய்வர்*[1]

[121]

(வில்லிபுத்தூருறைவான்தன் இத்யாதி) "வைகுந்தன் என்பதோர் தோணி பெறாது உழல்கின்றேன்" என்கை ப்ராப்தம் - அதிதூ₃ரஸ்த₂மாகையாலே; தனக்காக வந்து நிற்கிறவிடத்திலே காணப்பெறாதே நோவுபட்டுக் கண்ணுறங்காதே இருந்தாள் என்றால் இது சேரும்படி யெங்ஙனே?" என்று நான் சீயரைக் கேட்டேன். "உள்ளுப்புக்கால் குறியழியாமே நம்மைப் போலே போரவல்லளல்லள்; ஸ்ரீ ப₄ரதாழ்வானைப்போலே மோஹிப்பாளொருத்தியாய்த்து; உள்ளே கொடுபுகில் அந்த ஶீல கு₃ணத்தைக் கண்டவாறே இவள் மோஹித்துக் கிடக்கும். பின்னை இவளையிழக்கவொண்ணாதென்று கொண்டு புக்கார்களில்லை காணும்" என்றருளிச் செய்தார் - என்றருளிச் செய்வர்.

(நாச்சியார் திருமொழி 5-5)

நிகழிடம்

ஆண்டாள் இப்பாசுரத்தில் "வில்லிபுத்தூர் உறைவான்றன் பொன்னடி காண்பதோராசையினால் என்பொருகயற்கண்ணிணை துஞ்சா" (ஸ்ரீவில்லி புத்தூரில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமான் (வடபெருங்கோயிலுடையான்) திருவடிகளைக் காண வேணும் என்கின்ற ஆசையினால் எனது கண்கள் உறங்குகின்றனவில்லை) என்கிறாள். இத்தொடர்பில் நம்பிள்ளைக்கும் நஞ்சீயருக்கும் இடையே நடைபெற்ற **ஸம்வாதம்** *எடுத்துக்காட்டப் பெறுகிறது.*

விளக்கம்

"இப்பாசுரத்திற்கு முன் பாசுரத்தில் ஆண்டாள் 'வைகுந்தன் என்பதோர் தோணி பெறாது உழல்கின்றேன்' (ஸ்ரீவைகுண்ட நாதன் என்கிற ஒரு தோணியை அடைய முடியாமல் வருந்துகிறேன்) என்றாள். ஸ்ரீவைகுண்டம் என்பது மிகவும் எட்டாத இடத்தில் அமைந்துள்ளது. எனவே அதை அடைய முடியாமல் ஆண்டாள் வருந்தியதாகக் கூறியது பொருந்தும். ஆனால் ஸ்ரீவில்லிபுத்தூரிலேயே பிறந்து வளருபவளான இவள் அவ்வூரில் கோயில் கொண்டுள்ள எம்பெருமானது திருவடிகளைக் காண முடியாமல் வருத்தப்பட்டுக் கண்ணுறங்காமல் இருந்ததாகக் கூறுவது எப்படிப் பொருந்தும்?" என்று

1. துறவியும், மிகவும் விரக்தியுடையவர் என்று புகழ் பெற்றவருமான எம்பார், ஆய்ப் பெண்களுடைய ஊடல் முதலியவற்றை மிகவும் சுவைபட விளக்குபவர் என்பதற்குச் சான்றாக எண் 165, 649 முதலியவை காண்க.

நம்பிள்ளை கேட்டார். இதற்கு நஞ்சீயர் "வடபெருங்கோயிலுடையானைச் சேவிப்பதற்காக இவள் கோயிலுக்குள் புகுந்தாளானால், நம்மைப் போலே எந்த வித மாற்றமும் இல்லாமல் திரும்பி வரக் கூடியவளல்லள். ராமபிரானைக் கண்ட பரதனைப்போல,[1] ஆண்டாளும் வில்லிபுத்தூர் உறைவானைக் கண்டால் மோகித்து விழுந்துவிடுவாள். இவளை ஸந்நிதிக்குள்ளே அழைத்துச் சென்றால், 'நமக்காகவன்றோ எம்பெருமான் இங்கே வந்து பள்ளி கொண்டிருக்கின்றான்' என்று அவனுடைய எளிமைக் குணத்தை நினைத்து இவள் அப்படியே மயங்கி விழுந்து விடுவாள். இவளுடைய இத்தன்மையை உணர்ந்த எல்லோரும் 'கோயிலுக்கு அழைத்துச் சென்றால் இவளை இழக்க நேரிடுமோ' என்று அஞ்சி இவளை ஒருவருமே கோயிலுக்குள் அழைத்துச் செல்லமாட்டார்கள். எனவே ஆண்டாள் அப்படிக் கூறியது பொருத்தமே" என்று விடையளித்தாக நம்பிள்ளை அருளிச் செய்வர்.

[122]

(என் தத்துவனை) "ராவணன் மாயா ஶிரஸ்ஸைக் காட்டினபோது 'ஸார்வபௌமனாயிருப்பானொருவன் கைப்பிடிக்கக் கடவன் என்றாற் போலே ஜ்யோதிர்வித்துக்கள் சொன்னவையும் பலிக்கக் கண்டிலேன்' என்றிங்ஙனே சிலவற்றைச் சொல்லி, இக்காலத்தில் ஸ்த்ரீகள் பொய்யே கண்ணநீரை விழவிட்டிருக்குமா போலே, இவளும் த₄ரித்திருக்கைக்கு அடியென்?" என்று நான் சீயரைக் கேட்க, "ஜ்ஞானமன்று இவள் ஜீவநத்துக்கு ஹேது; பெருமாள் ஸத்தையாய்த்து, அவர் உளராகையாலே இருந்தாள் காணும்" என்றருளிச் செய்தார்.

(நாச்சியார் திருமொழி 5-6)

நிகழிடம்

குயிலை நோக்கி, எம்பெருமான் வரும்படி கூவவேண்டும் என்று வேண்டுகின்ற ஆண்டாள், ''என் தத்துவனை வரக் கூகிற்றியாகில்'' (என் ஸத்தைக்கு (=இருப்புக்கு)க் காரணமானவனை வரும்படி நீ கூவவல்லையாகில்) என்கிறாள். எம்பெருமானே பிராட்டியின் ஸத்தைக்குக் காரணம் என்பது பற்றி நஞ்சீயருக்கும் நம்பிள்ளைக்கும் இடையே நடைபெற்ற **ஸம்வாதம்** *எடுத்துக் காட்டப்பெறுகிறது.*

1. வனத்திற்கு எழுந்தருளிவிட்ட இராமபிரானைச் சித்ரகூடத்தில் முதன்முதலில் கண்ட போது "இத்யேவம் விலபந் தீந: ப்ரஸ்விந்ந முகபங்கஜ: பாதாவப்ராப்ய ராமஸ்ய பபாத பரதோ ருதந்" (முகக் கமலத்தில் வியர்வை வழிய, மனம் நொந்து கிடந்த பரதன் அழுது புலம்பிக் கொண்டு ஸ்ரீராமனது திருவடிகளை அணுகும் முன்னமே பூமியில் (மயங்கி) விழுந்து விட்டான்) என்று வால்மீகி ராமாயணம் அயோத்யா காண்டத்தில் (99-37) கூறப்படுகிறது.

விளக்கம்

எண் 115ன் விளக்கம் பார்க்க.

[123]

(தலையல்லாமல் கைம்மாறிலேனே) பெற்றி, "கிழக்குக்குப் போனவிடத்திலே 'இதுக்குப் பொருளென்?' என்று சிலர் என்னைக் கேட்டார்கள், 'நீ இவன் வரும்படி கூவ வல்லையாகில் உனக்கு ப்ரத்யுபகாரமாக என் தலையைத் தருமத்தனையிறே' என்று சொல்லுகிறாள் என்று சொன்னேன். இவ்வளவாக மாட்டாது இதுக்குப் பொருள் என்றிருந்தேன். இவ்விடத்துக்குச் சீயர் அருளிச் செய்யும்படியென்?" என்று கேட்டார். "நீ பண்ணின உபகாரத்துக்கு இத்தலையால் செய்வதொன்று உண்டோ? என்று என் தலையை உனக்காக்கி, காலமெல்லாம் உன் காலிலே வணங்கி வர்த்திக்குமத்தனை என்கிறாள் என்றருளிச் செய்வர்" என்றேன். போரக் கொண்டாடியருளி "நான் பதினோருரு திருவாய்மொழி கேட்டேன். திருமொழி கேட்கப் பெற்றிலேன். போனவிடங்களிலே என்னைச் சிலர் கேட்டால் அருளிச் செய்யுமதுவே எனக்குத் தோற்றி நானும் சொல்லும்படி ப்ராஸாதிக்க வேணும் என்று வேண்டிக் கொண்டேன். அவரும் அப்படி ப்ரஸாதித்தருளினார். ஒரு வரபலத்தாலே இவை அறியப் போகாது; ஶ்ரவணங் கொண்டேயறிய வேணும் என்றருளிச் செய்தார்" என்றருளிச் செய்வர்.

(நாச்சியார் திருமொழி 5-6)

நிகழிடம்

". . . . குயிலே என் தத்துவனை வரக் கூகிற்றியாகில் என் தலையல்லால் கைம்மாறிலேனே" (குயிலே! என்னுடைய நாயகன் இங்கு வரும்படி நீ கூவுவாயானால் என் தலையைத் தவிர வேறு கைம்மாறு உனக்கு நான் அறியேன்) என்கிறாள் ஆண்டாள். இவ்விடத்தில் பொருள் கூறுவது பற்றி நம்பிள்ளைக்கும் பெற்றி என்பவருக்கும் இடையே நடைபெற்ற **ஸம்வாதம்** *காட்டப்படுகிறது.*

விளக்கம்

நஞ்சீயருடைய சிஷ்யர்களில் ஒருவரான **பெற்றி** *என்பவர் ஸ்ரீரங்கத்திற்குக் கிழக்கே ஓரிடத்திற்குச் சென்றிருந்தபோது "தலையல்லால் கைமாறிலேனே" என்பதற்கு என்ன பொருள் என்று சிலர் கேட்டார்களாம். அதற்குப் பெற்றி "எம்பெருமான் வரும்படி கூவுவாயானால் அதற்குக் கைம்மாறாக என் தலையையே உனக்கு அறுத்துக் கொடுத்து விடுகிறேன் என்று குயிலை நோக்கி ஆண்டாள் கூறுகிறாள்" என்று பதிலளித்து விட்டாராம். எம்பெருமானை வரப்பண்ணியதற்குக் கைம்மாறாகத் தலையை அறுத்துக் கொடுத்து விட்டால், பிறகு அவனோடு கூடி மகிழ்வது எங்ஙனம்? எனவே இப்பொருள்*

பொருந்தவில்லையே என்ற ஐயம் அவருக்கே இருந்தது. எனவே ஊருக்கு வந்த பின்னர், நஞ்சீயருடைய பிரதான சிஷ்யரான நம்பிள்ளையிடம் "இவ்விடத்திற்கு **நஞ்சீயர்** *அருளிச் செய்யும் விளக்கம் என்ன?" என்று பெற்றி கேட்டார். "நீ செய்த உபகாரத்திற்கு கைம்மாறு செய்வது இயலாதாகையாலே, என் தலையை உனதாக்கி எல்லாக் காலமும் உன் காலிலே என் தலையை வைத்து வணங்கி வாழ்வேன் என்கிறாள் ஆண்டாள் என்று நஞ்சீயர் அருளிச் செய்வர்" என்று* **நம்பிள்ளை** *விடையிறுத்தார். இதைக் கேட்ட பெற்றி மிகவும் பாராட்டி விட்டு "நான் நஞ்சீயரிடம் பதினொருமுறை திருவாய்மொழிக்குப் பொருள் கேட்டேன். ஆனால் ஒருமுறை கூட நாச்சியார் திருமொழி கேட்டிலேன். எனவே நான் நஞ்சீயரிடம் ஒரு வரம் வேண்டினேன். அதாவது, 'நான் போகுமிடங்களில் யாரேனும் என்னை ஏதேனும் பாசுரங்களுக்குப் பொருள் கூறும்படி கேட்டால், தேவரீர் (நஞ்சீயர்) அருளிச் செய்யும் பொருள்களே எனக்கும் தோன்றி, நானும் சொல்லும்படி அருள்புரிய வேணும்' என்று வரம் வேண்டிக் கொண்டேன். (இவற்றைக் காலக்ஷேபம் கேட்டே அறியவேண்டும்; வரம் பெற்று அறிந்து கொள்ள முடியாது என்பதை நான் அனுபவத்தில் உணர்ந்துகொள்ளவேண்டும் என்று கருதி) நஞ்சீயரும் "அப்படியே ஆகட்டும்" என்று அருளிச்செய்தார். ஆனால் இப்போது இப்பாசுரத்திற்கு நஞ்சீயர் அருளிச் செய்த பொருள் எனக்குத் தோன்றாமல், தவறாகப் பொருள் கூறிவிட்டேன். ஆகையால், வரம் பெற்று இவ்வர்த்தங்களை அறிய முடியாது; ஆசார்யனிடம் முறையாகக் கேட்டே இப்பாசுரங்களின் பொருளை அறியமுடியும் என்று (அனுபவபூர்வமாக) உணர்ந்து கொண்டேன்" என்று பெற்றி கூறியதாக நம்பிள்ளை அருளிச் செய்வர்.*

[124]

(எங்கு மதிரப் புகுத) மஹாப$_3$லியஜ்ஞவாடத்திலே நடந்த போது பூ$_4$மி நெளிந்ததென்று ஒரு க்$_3$ரந்த$_2$த்திலே கிடந்தாய், 'இதுக்குப் பொருளென்?" என்று கேட்டவாறே "ஸர்வேஶ்வரனன்றோ! சொல்ல வேணுமோ?" என்றார்களாய் இத்தை சீயர் கேட்டருளி, ப$_4$ட்டரைக் கேட்க, "இரப்பில் புகற்றதாலே அடியிட்டபடி காணும்" என்றருளிச் செய்தாராம்.

(நாச்சியார் திருமொழி 6-5)

நிகழிடம்

எம்பெருமானைத் தான் மணந்துகொண்டதாகக் கண்ட கனவைத் தன் தோழிக்குக் கூறுகின்ற ஆண்டாள் எம்பெருமான் 'எங்கும் அதிரப் புகுதக் கனாக் கண்டேன் தோழீ நான்' என்றருளிச்செய்கிறாள். இத்தொடர்பில், வாமனனான எம்பெருமான் பூமி அதிரும்படியாக நடந்தமை பற்றி எழுந்த ஐயத்திற்கு பட்டர் விடையளித்த **ஸம்வாதம்** *ஒன்று எடுத்துக் காட்டப்பெறுகிறது.*

விளக்கம்

மஹாபலியின் யாகபூமிக்கு வாமனன் எழுந்தருளிய போது பூமி நெளிந்தது என்று ஒரு நூலில்[1] குறிப்பிடப்பட்டிருப்பதைக் கண்ட சிலர் 'இதற்குப் பொருள் என்ன?' என்று சில பண்டிதர்களைக் கேட்டார்கள். அதற்கு அப்பண்டிதர்கள் "அவன் ஸர்வேச்வரனாகையாலே அவன் நடந்தபோது பூமி பயத்தாலே நெளிந்தது" என்று கூறினார்களாம். 'இப்பொருள் சரியோ?" என்று **நஞ்சீயர்,** **பட்டரைக்** *கேட்க, "பிறருக்குக் கொடுத்தே பழகியவன் எம்பெருமான். அவன் தானம் வாங்க வந்தபோது, 'இதற்கு முன்னர் செய்யாத காரியத்தைச் முதன்முதலில் செய்கிறோமே' என்று மிகவும் பதற்றத்துடன் பூமி அதிரும்படி நடந்து வந்தான்" என்பதே இதற்குப் பொருள் என்று அருளிச் செய்தாராம்.*

[125]

(கைத்தலம் பற்ற) "न प्रमाणीकृत: पाणि: बाल्ये बालेन पीडित:" **(ந ப்ரமாணீ க்ருத: பாணி: பாால்யே பாாலேந பீடித:) ----- "பாணிக்ரஹணம் என்று ஒரு பதத்தால் சொல்லாதே பீடித: என்பானென்?" என்று எம்பாரைச் சிலர் கேட்டார்கள். "'அங்கண்ணனுண்ட என்னாருயிர்க் கோதிது' என்கிறபடியே பிடித்த பிடியிலே அங்யார்ஹையாம்படி பிடித்தது" என்றாராம்.**

(நாச்சியார் திருமொழி 6-6)

நிகழிடம்

ஆண்டாள் கண்ணபிரானைத் தான் மணம் புணர்ந்து கொண்டதாகக் கனாக் கண்டதைத் தன் தோழிக்கு உரைக்கும் போது "கைத்தலம் பற்றக் கனாக் கண்டேன்" என்கிறாள். இதற்குச் சேர சீதைப்பிராட்டி கூறிய வார்த்தையொன்று எடுத்துக் காட்டப்பட்டு, அங்கு ஒரு ஐயத்திற்கு எம்பார் விடையளித்த **ஸம்வாதம்** *எடுத்துக்காட்டப்பெறுகிறது.*

விளக்கம்

"ந ப்ரமாணீக்ருத: பாணி: பால்யே பாலேந பீடித:" (ரா.யு.119 - 16) (தாம் சிறுவராயிருந்த போது என்னைக் கைப்பிடித்ததையும் மறந்தாரோ) என்று அனுமனிடம், இராமபிரான் தன்னைக் கைத்தலம் பற்றியதைப் பற்றி நினைவூட்டினாள். இங்கு பாணிக்ரஹணம் (என் கை பிடிக்கப்பட்டது) என்று

1. யஸ்மிந் ப்ரயாதே ஸுரபூப்ருதோ த்வரம் நநாம கேதா தவநிஸ் ஸ ஸாகரா
ஸ வாமநஸ் ஸர்வ ஜகந்மயஸ் ஸதா மமாஸ்து மாங்கல்ய விவ்ருத்தயே ஹரி:

(எந்த பகவான் அசுரவரசனான மாவலியின் யாகத்திற்குச் செல்லும் போது கடலுடன் கூடிய பூமி நெளிந்ததோ அந்த வாமனன் எப்போதும் எனக்கு மங்களங்களைச் செய்யட்டும்) என்று ஸ்ரீ விஷ்ணு தர்மம் (43-31) என்ற நூலில் கூறப்படுகிறது.

சொல்லாமல் பீடித: (கை அழுந்தப்பற்றப்பட்டது) என்று கூறுவதற்குக் காரணம் என்ன என்று எம்பாரைச் சிலர் கேட்டார்களாம். அதற்கு எம்பார் "அங்கண்ணன் உண்ட என் ஆருயிர்க் கோதிது" (திருவாய்மொழி 9-6-6) (எம்பெருமானாலே அநுபவிக்கப்பட்டு இந்த ஆத்மாவானது கோதாகி விட்டது) என்கிறபடியே என்கையைப் பிடித்த பிடியில் தனக்கேயாம்படி அழுந்தப் பிடித்ததை இப்பதம் சொல்லுகிறது" என்று பதில் அருளிச் செய்தாராம்.

[126]

(கடலில் பிறந்து இத்யாதி₂) நஞ்சீயர் ஸந்யஸித்தருளின காலத்திலே அனந்தாழ்வான் கண்டு, முன்புத்தை ஐஶ்வர்யம் அறியுமவனாகையாலே "ஒரு பூவைச் சூடி வெற்றிலையைத் தின்று சந்தனத்தைப் பூசிப் போரா நிற்கச் செய்தே, எம்பெருமானே ரக்ஷகன் என்றிருந்தால் பரமபத₃த்தில் நின்றும் இழியத் தள்ளுவார்களோ? இங்ஙனே செய்ய தகாது" என்று போர வெறுக்கவாறே, கூட நின்றவர்களும் 'இங்ஙன் செய்வதே' என்று வெறுத்தார்களாய், 'இவர்தாம் செய்வதென்?' என்று விட்டு, "திருமந்திரத்திலே பிற" என்று முக்கால் சொல்லி, "திருமந்திரத்திலே பிறந்து த்₃வயத்திலே வளர்ந்து, த்₃வயைக நிஷ்ட₂னாம்படியாய்த் தலைக்கட்டுவது உன் கார்யம்" என்று ப்ரஸாதி₃த்தான். "திருமந்த்ரத்தில் சொல்லுகிறபடியே ஸ்வரூபஜ்ஞானம் உண்டாய் த்₃வயத்தில் சொல்லுகிறபடியே உபாய பரிக்₃ரஹமுண்டாக வேணும்" என்று ப்ரஸாதி₃த்தான்.

(நாச்சியார் திருமொழி 7-2)

நிகழ்டம்

எம்பெருமானுடைய பாஞ்சசன்னியம் என்ற சங்கைப்பற்றி வர்ணிக்கும் ஆண்டாள், "கடலில் பிறந்து கருதாது பஞ்சசனனுடலில் வளர்ந்துபோய் ஊழியான் கைத்தலத்திடரில் குடியேறித் தீய அசுரர் நடலைப்பட முழங்கும் தோற்றத்தாய் நற்சங்கே" (கடலில் பிறந்து, பஞ்சசனன் எனும் அரக்கன் உடலில் வளர்ந்து, பிறகு எம்பெருமான் திருக்கையில் குடியேறி அசுரர்கள் நடுங்கும்படி முழக்கம் செய்யும் நற்சங்கே) என்றருளிச்செய்கிறாள். இப்படி ஓரிடத்தில் பிறந்து, மற்றோரிடத்தில் வளர்ந்து, ஒரு காரியத்தைச் செய்வதற்குச் சான்றாக ஒரு **ஐதிஹ்யம்** *காட்டப்படுகிறது.*

விளக்கம்

நஞ்சீயர் முதலில் ஏராளமான செல்வங்களையுடையவராய், வேதாந்தி என்று புகழ் பெற்றவராய் மேல் நாட்டில் (கர்நாடகத்தில்) எழுந்தருளி யிருந்தவர். அத்வைதியான அவர் பட்டரால் வாதப் போரில் வெல்லப்பட்டு அவருக்குச் சீடரானார். சில காலத்திற்குப் பின்னர் அவர் தம் செல்வங்களை யெல்லாம்

உதறிவிட்டு, உறவினர்களையும் கைவிட்டுவிட்டு, துறவறம் மேற்கொண்டு ஸ்ரீரங்கத்தில் பட்டரிடம் வந்து சேர்ந்தார். எம்பெருமானாருடைய சிஷ்யரான **அனந்தாழ்வான்,** முன்பே இவருக்கிருந்த செல்வச் சிறப்பை அறிந்தவர் ஆகையாலே இவர் இப்படித் துறவறம் மேற்கொண்டதற்கு மிகவும் வருத்தப்பட்டார். "சீயரே! புஷ்பம், சந்தனம், வெற்றிலை முதலியவற்றை அனுபவித்துக் கொண்டு இல்லறத்திலேயே இருந்து கொண்டு 'எம்பெருமானே தஞ்சம்' என்றிருந்தால் உம்மைப் பரமபதத்தில் நுழைய விடாமல் தள்ளி விடுவார்களோ? எதற்காகத் துறவறம் மேற் கொண்டீர்?" என்று வருத்தப்பட்டார். அங்கு கூடியிருந்த மற்றவர்களும் 'இப்படி செய்து விட்டாரே!' என்று வருத்தப்பட்டனர். ஆனாலும் இனிமேல் என்ன செய்வது என்று அந்த வருத்தத்தை விட்டு 'இல்லறத்தைத் துறந்து துறவறம் மேற்கொள்வதைக் காட்டிலும் திருமந்திரத்தின் பொருளை உணர்வதன் மூலம் வைஷ்ணவனாகப் பிறக்கும் பிறப்பே உண்மையான பிறப்பு' என்பதை உணர்த்த விரும்பினார் அனந்தாழ்வான். திருமந்திரத்தின் மூன்று பதங்களின் பொருளையும் நன்கு உணர வேண்டும் என்பதற்காக திருமந்திரத்தை மூன்று முறை கூறினார். 'திருமந்திரத்திலே பிறந்து த்வயத்திலே வளர்ந்து, த்வயத்தின் பொருளிலேயே ஊன்றியிருக்க வேண்டும்' என்று அருளினார். 'திருமந்திரத்தில் கூறப்பட்ட மெய்யுணர்வு உண்டாகி[1] த்வயத்தில் சொல்லுகிறபடியே எம்பெருமானே தஞ்சம் என்ற உறுதிப்பாடு[2] உமக்கு உண்டாக வேணும்" என்றும் அனந்தாழ்வான் அருளினார்.[3]

[127]

நஞ்சீயர் சுந்தரபாண்டிய தேவரைக் கண்டிருக்கச் செய்தே "गुणैर्दशरथोपम:" (கு₃ணைர் தசரதோ₂பம:) என்ற இடத்துக்கு, "பிறந்து படைத்த கு₃ணங்களும்

1. திருமந்திரம் என்பது "ஓம் நம: நாராயணாய" என்ற மூன்று சொற்கள் அடங்கியதாகும். இதன் திரண்ட பொருள்: "எம்பெருமான் ஒருவனுக்கே உரியவனாகிய நான், 'எனக்கு உரியன்' என்ற நினைவு அகலப் பெற்று, அவன் ஒருவனுக்கே எல்லா அடிமைகளும் செய்யப் பெறுவேனாக வேணும்" - என்று வேண்டுவதாகும்.

2. த்வயம் என்பது "ஸ்ரீமந் நாராயண சரணௌ சரணம் ப்ரபத்யே, ஸ்ரீமதே நாராயணாய நம:" என்ற இரண்டு பகுதிகளை உடையதாகும். இதன் திரண்ட பொருளாவது "பிராட்டியை முன்னிட்டுக் கொண்டு எம்பெருமானுடைய திருவடிகளைச் சரணமாகப் பற்றுகிறேன்; அவனும் பிராட்டியுமான சேர்த்தியில் அவர்களுடைய மகிழ்ச்சிக்காகவே நான் அடிமை செய்யப் பெறுவேன் ஆகவேணும்" - என்று வேண்டுவதாகும்.

3. அஷ்டாதசரஹஸ்யத்தில் தனித்வய ரஹஸ்யத்திலும், வார்த்தாமாலையிலும் (104) இந்த ஐதிஹ்யம் இடம்பெற்றுள்ளது.

ஸ்வாப₄ாவிக கு₃ணங்களுமெல்லாம் கூடினாலும் அரைமட்டேயாய் சக்ரவர்த்தி திருமகன் என்னப் போருமித்தனை" என்றருளிச் செய்ய, "பரமபுருஷனுக்கு ஒருவன் வயிற்றிலே பிறந்து ஓரேற்றம் உண்டாக வேணுமோ? அவன் பிறக்கையாலே அக்குடிதனக்கும் ஏற்றமாம் இத்தனையன்றோ?" என்றானாம். 'நாம் போன ஸமாதி₄ இவன் அறிந்திலன்' என்று பார்த்து, "அதெல்லாம் கிடக்கச் செய்தே, 'பரமபுருஷன்' என்னும்படி என்தான்!" என்றாராம். ஸ்ரீவிபீஷணாழ்வானைப் ப்ரஸங்கி₃க்கவாறே "விபீஷணனோதான் அழகிதாகச் செய்தான்? ஆபத்ஸமயத்திலே ப்₄ராதாவைவிட்டுப் போந்தானே!" என்றானாம். எல்லாவற்றையும் விட்டுக் கொடுக்கவொண்ணாதென்று, "பிதாவும் ஜ்யேஷ்டனான ப்₄ராதாவும் சேரப்போனவன்று ப்₄ராதாவை அநுவர்த்திக்கக் கடவன்; பிதாவோடே விரோதி₄க்கவன்று ஜ்யேஷ்டப்₄ராதாவென்று பாராதே பிதாவை அநுவர்த்திக்க வேணும்" என்றருளிச் செய்தார்.

(நாச்சியார் திருமொழி 9-3)

நிகழ்டம்

எம்பெருமானைப் பிரிந்த ஆற்றாமையினாலே அவனைப் போலவே நிறமுடைய கருவிளைப் பூக்களைப் பார்த்து வருத்தமடைந்த ஆண்டாள் "நீங்களும் அவனையே நினைவூட்டி என்னைத் துன்புறுத்துகிறீர்களே! என்னை வருந்தச் செய்ய வேணும் என்ற அவன் கருத்தை நீங்களும் பின்பற்றுகிறீர்களோ?" என்று கேட்கிறாள். எல்லாருமே எம்பெருமானுடைய கருத்தையே பின்பற்ற வேண்டும் என்பதற்குச் சான்றாக ஓர் **ஐதிஹ்யம்** *எடுத்துக் காட்டப் படுகிறது.*

விளக்கம்

சுந்தரபாண்டியத் தேவர் *எனும் அரசன்* **நஞ்சீயரைக்** *காண வந்திருந்த போது வான்மீகி ராமாயணத்தில் ஒரு சுலோகம் பற்றி அவர் விளக்கிக் கொண்டிருந்தார்.. அந்த சுலோகமாவது:*

ஸஹி வீர்யோபபந்நச்ச ரூபவாநநஸூயக:
பூமாவநுபமஸ்ஸூநு: குணைர் தசரதோபம: *(ரா. அ.1.9)*

(ராமபிரான் வீர்யமுள்ளவன்; அழகுள்ளவன்; பொறாமையற்றவன்; உலகில் ஒப்பற்ற பிள்ளை; குணங்களிலே தசரதனுக்குச் சமமானவன்) என்பது. இங்கு "குணைர் தசரதோபம:" (குணங்களில் தசரதனுக்குச் சமமானவன்) என்பதை விவரித்த நஞ்சீயர், எம்பெருமான் ஸ்ரீராமனாகப் பிறந்து படைத்த குணங்களும் அவனுக்கு இயற்கையாகவே உள்ள குணங்களும் எல்லாம் கூடினாலும்கூட தசரதனுடைய குணங்களில் அவை பாதியேயாய், இராமபிரானையும் சக்ரவர்த்தியின் பிள்ளை என்று சொல்லப் போதுமானவையாயிருக்கும் என்று கூறினார். "ஆத்மாநம் மாநுஷம் மந்யே

ராமம் தசரதாத்மஜம்" (ரா.யு.120-11) (என்னை நான் மனிதனாகவும் தசரதனுடைய பிள்ளையாகவும் நினைப்பதிலேயே பெருமை கொள்கிறேன்) என்று இராமபிரானே கூறியுள்ளதைப் பின்பற்றி ராமபிரானைக் காட்டிலும் தசரதனை இப்படி உயர்ந்த குணங்கள் படைத்தவனாக நஞ்சீயர் கூறினார். இதைக் கேட்ட சுந்தரபாண்டியன், 'ஒருவனுக்குப் பிள்ளையாகப் பிறந்தமையால் பரமபுருஷனுக்கு ஒரு சிறப்பு உண்டாக வேணுமோ? அவன் அக்குடியிலே பிறந்தமையினால் அக்குடிக்குத்தானே சிறப்பு உண்டாகும்?" என்று கூறினான். 'இராமபிரானுடைய திருவுள்ளக் கருத்தைப் பின் சென்று நாம் கூறிய பொருளை இவன் புரிந்து கொள்ளவில்லை' என்றுணர்ந்த நஞ்சீயர் அவனை மறுத்து பதில் சொல்லாமல் "அதிருக்கட்டும், நீ பரமபுருஷன் என்று சொன்னது எவ்வளவு அழகான வார்த்தை!" என்று நயமாகப் பேசி நஞ்சீயர் அவ்விஷயத்தை முடித்து விட்டார்!

தொடர்ந்து ஸ்ரீவிபீஷணனைப் பற்றிய பேச்சு எழுந்தது. அதற்கும் சுந்தர பாண்டியன் "விபீஷணன் உயர்ந்த செயலைச் செய்து விட்டானோ! ஆபத்துக் காலத்தில் தமையனை விட்டுவிட்டு வந்தவனன்றோ அவன்!" என்று கூறினானாம். அவன் அரசனாயிற்றே என்று அவனிடம் விவாதத்தை வளர்த்த வேண்டாம் என்று முதலில் விட்டுக் கொடுத்தது போல் இந்த விஷயத்திலும் விட்டுக் கொடுப்பது சரியல்ல, அவனுக்குச் சரியான பதில் சொல்லியேயாக வேண்டும் என்று முடிவு செய்த நஞ்சீயர் "தந்தைக்கும் தமையனுக்கும் 'முரண்பாடு எதுவுமில்லாத காலத்தில் தமையனைப் பின்பற்ற வேண்டும்; தந்தையோடு தமையன் முரண்பட்டானாகில் தமையனை விட்டுத் தந்தையையே பின்பற்ற வேண்டும். ராமபிரான் உலகுக்கெல்லாம் தந்தையாகையால்[2] விபீஷணன் தன் தமையனான ராவணனைக் கைவிட்டுத் தந்தையான இராமனைச் சேர்ந்தது தவறல்ல" என்றருளிச் செய்தார்.

[128]

(நூறு தடா நிறைந்த) 'பெண்பிள்ளை ப்ரார்த்தித்து வைத்தாள். கொடுத்தாளாகச் சொல்லக் கேட்டிலோம். ப்ரார்த்தித்தவற்றை இறுக்கை அஸ்ஸங்காஜாதர்க்கு ப$_4$ரமிறே" என்று தாம் அமுது செய்வித்தருளினாராம்.

(நாச்சியார் திருமொழி 9-6)

1. சுந்தரபாண்டியத்தேவரிடம் நஞ்சீயர் இவ்வாறு கூறியமை மற்றோரிடத்திலும் குறிப்பிடப் பெற்றுள்ளது. எண் 285 பார்க்க.

2. "ஸர்வேஷா மேவ லோகாநாம் பிதா மாதாச மாதவ:" (எல்லாவுலகங்களுக்கும் தாயும் தந்தையும் மாதவனே) என்று மஹாபாரதம் ஆரண்யபர்வம் 192-56ல் கூறப்பட்டுள்ளது காண்க.

நிகழிடம்

நாச்சியார் திருமொழியில் (9-6) "நாறுநறும்பொழில் மாலிருஞ்சோலை நம்பிக்கு நான் நூறு தடாவில் வெண்ணெய் வாய் நேர்ந்து பராவி வைத்தேன் நூறு தடா நிறைந்த அக்கார வடிசில் சொன்னேன்" என்று திருமாலிருஞ் சோலை அழகருக்கு நூறுதடா நிறைந்த வெண்ணெயும், நூறு தடா நிறைந்த அக்கார வடிசிலும் ஸமர்ப்பிப்பதாக ஆண்டாள் அருளிச்செய்துள்ளாள். இத்தொடர்பில் ஓர் **ஐதிஹ்யம்** கூறப்பெறுகிறது.

விளக்கம்

'ஆண்டாள் வாயால் சொல்லிவைத்தாள். ஆனால் அப்படிச் செயலில் செய்ததாக ஒருவரும் சொல்லவில்லை. எனவே அவள் வேண்டிக் கொண்ட பிரார்த்தனையை நிறைவேற்றுவது அந்த ஸந்தானத்தில் (=அவளுடைய குடியில் அதாவது பிரபந்த குடியில்) பிறந்தவர்களுக்குக் கடமையன்றோ' என்று **எம்பெருமானார்**,[1] தாம் திருமாலிருஞ்சோலைக்குச் சென்று ஆண்டாள் பிரார்த்தித்துக் கொண்டபடியே அழகருக்கு நூறு தடா வெண்ணெயும் நூறு தடா அக்கார வடிசிலும் ஸமர்ப்பித்தருளினாராம்.

[129]

'अन्यत्पूर्णादपांकुम्भात् अन्यत्पादावने जनात् **(அந்யத் பூர்ணாத₃பாம் கும்ப₄ாத் அந்யத் பாத₃ாவநே ஜநாத்) என்கிற வஸ்துவுக்கு நூறுதடா நிறைந்த என்று இங்ஙனே போரச் சொல்லுவானென்?' என்று நான் சீயரைக் கேட்டேன். "திருவாய்ப்பாடியில் ஐஶ்வர்யத்துக்கு இதெல்லாம் கூடினாலும் ஒரு பூர்ணகும்ப₄ஸ்த₂ாநீயம்" என்றருளிச் செய்தார் என்றருளிச் செய்வர்.**

(நாச்சியார் திருமொழி 9-6)

நிகழிடம்

ஆண்டாள் "நாறுநறும் பொழில்" (9-6) என்கிற பாசுரத்தில் திருமாலிருஞ்சோலை அழகருக்கு நூறு தடா வெண்ணெயும், நூறுதடா அக்காரவடிசிலும் ஸமர்ப்பிப்பதாக அருளிச்செய்கிறாள். இத்தொடர்பில் நஞ்சீயருக்கும் நம்பிள்ளைக்கும் இடையே நடைபெற்ற **ஸம்வாதம்** கூறப்படுகிறது.

விளக்கம்

"கண்ணனைப் பற்றிச் சொல்லும்போது 'அந்யத் பூர்ணாதபாம் கும்பாத் அந்யத் பாதாவநே ஜநாத் அந்யத்குசலஸம்ப்ரச்நாத் நசேச்சதி ஜநார்த்தந:' (பார - உத்யோக பர்வம் 87-13) (நீர் நிரம்பிய குடத்தைக் காட்டிலும்

1. இங்கு ஐதிஹ்யத்தில் அப்படிச் செய்தவர் பெயர் குறிப்பிடப்படவில்லை என்றாலும், குருபரம்பரை முதலான நூல்களில் இப்படிச் செய்தவர் எம்பெருமானார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது காண்க.

வேறொன்றையோ, திருவடி விளக்குவதைக் காட்டிலும் வேறொன்றையோ, நலம் வினவுவதைக் காட்டிலும் வேறொன்றையோ கண்ணன் விரும்பமாட்டான்) என்று கூறப்பட்டிருப்பதால், மிகவும் குறைந்த பொருளை ஸமர்ப்பித்தாலும் திருப்தியடையும் கண்ணனுக்கு நூறு தடாவில் வெண்ணெயும், நூறு தடாவில் அக்கார வடிசிலும் ஸமர்ப்பிப்பதாக, இவ்வளவு மிகுதியாக ஆண்டாள் சொல்வதற்குக் காரணம் என்ன?'' என்று **நம்பிள்ளை** நஞ்சீயரைக் கேட்டார். அதற்கு **நஞ்சீயர்**, "இப்போது ஆண்டாள் தன்னை திருவாய்ப்பாடி கோபிகையாக நினைத்துக் கொண்டன்றோ பாசுரம் அருளிச்செய்கிறாள். எனவே திருவாய்ப்பாடியின் செல்வத்தைப் பார்க்கும்போது' நூறு தடா வெண்ணெய், நூறுதடா பால் சோறு என்பதெல்லாம் ஒரு பூர்ண கும்பத்திற்குச் சமம் என்று கூறலாம்படி மிகவும் அற்பமானவையே!'' என்று பதில் கூறினார்.

[130]

(ஏறு திருவுடையான்) வங்கிப்புரத்து நம்பி ஸ்ரீபாத₃த்திலேயாய்த்துச் சிறியாத்தான் ஆஶ்ரயித்தது. போசள ராஜ்யத்தில் நின்றும் வந்த நாளிலே ராஜகேஸரியிலே ஆச்சான் நடந்திருந்தானாய்க் காண வேணுமென்று அங்கே சென்று கண்டிருக்கிறவளவிலே நம்பி எனக்கு இங்ஙனே பணிக்கக் கேட்டேன். "பா₃ஹ்ய ஸமயங்களிலுள்ளாரும் ஒரு வஸ்துவைக் கொண்டு அது தனக்கு ஜ்ஞாநாதி₄க்₄யத்தையும் உண்டாக்கிக் கொள்ளா நின்றார்கள். அவர்களிற் காட்டில் வைதி₃க ஸமயமான நமக்கேற்றம் ஶ்ரிய:பதி ஆஶ்ரயணியன் என்று பற்றுகிற இதுகாண்" என்று பணித்தானாம்.

(நாச்சியார் திருமொழி (9-6)

நிகழிடம்

ஆண்டாள் எம்பெருமானை 'ஏறு திருவுடையான்' அதாவது - தன் திருமார்பில் ஏறியிருக்கும் திருவை உடையவன் - என்கிறாள். இத்தொடர்பில் வங்கிப்புரத்துநம்பி அருளிச்செய்த **வார்த்தை** *கூறப்படுகிறது.*

விளக்கம்

வங்கிப்புரத்து நம்பி *என்பவர் ஸ்ரீராமானுஜருடைய சீடர்களில் ஒருவராவார். அவருடைய சீடரான* **சிறியாத்தான்** *என்பவர் ஒரு சமயம் போசள*

1. 'தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைபற்றி வாங்கக்குடம் நிறைக்கும் வள்ளல் பெரும் பசுக்கள்' (திருப்பாவை 3) என்றும் 'ஏற்ற கலங்கள் எதிர் பொங்கி மீதளிப்ப மாற்றாதே பால் சொரியும் வள்ளல் பெரும் பசுக்கள்' (திருப்பாவை 21) என்றும் கூறப்பட்டபடியே திருவாய்ப்பாடியிலுள்ள பசுக்களும் எண்ணிறந்தவை; அவை கொடுக்கும் பாலும் அளவிட முடியாதது. எனவே நூறுதடா வெண்ணெய், நூறு தடா அக்கார வடிசில் என்பது ஒரு பூர்ண கும்பத்திற்குச் சமம் என்று கூறும்படி மிகவும் அற்பமானவையே என்பது நஞ்சீயர் தரும் விளக்கத்தின் கருத்தாகும்.

நாட்டிலிருந்து தமிழ் நாட்டிற்கு வந்திருந்தபோது, 'ராஜகேஸரி' என்னுமிடத்திற்கு வங்கிப் புரத்து நம்பி வந்திருந்தார். தம்முடைய ஆசார்யரான அவரைக் காண வேணுமென்று சிறியாத்தான் அங்கு சென்றபோது, "பிற மதங்களில் உள்ளவர்களும், ஒருவனைப் பரம்பொருளாகக் கொண்டு அவனுக்கு அளவற்ற ஞானம் உண்டு என்றும் கூறுகின்றனர். ஆனால் அவர்களைக் காட்டிலும் வைதிகமதத்திலுள்ள நமக்குச் சிறப்பு திருமகளுடன் கூடிய எம்பெருமானே பற்றத் தக்கவன் என்று இருவரையும் சேர்த்துப் பற்றுவதே" என்று வங்கிப்புரத்து நம்பி தம்மிடம் கூறியதாகச் சிறியாத்தான் கூறினாராம்.

[131]

(காலையெழுந்திருந்து) ஆச்சான் பணித்தாக சீயர் அருளிச் செய்யும்படி: "இவள் பிறந்தவூரில் திர்யக்குகளுக்குத்தான் வேறு போதுபோக்குண்டோ? கண்ணுறக்கந்தானுண்டோ?" என்று.

(நாச்சியார் திருமொழி 9-8)

நிகழ்டம்

கரிய குருவிக் கூட்டங்கள் விடியற்காலையில் எழுந்திருந்து திருமாலிருஞ்சோலையெம்பெருமானைப் பற்றிய வார்த்தைகளைச் சொல்லிக் கூவுகின்றன என்கிறாள் ஆண்டாள். இத்தொடர்பில் ஆச்சான் என்பவர் அருளிச்செய்த **வார்த்தை**யை நஞ்சீயர் கூறியது எடுத்துக்காட்டப்படுகிறது.

விளக்கம்

"ஆண்டாள் பிறந்த ஊரில் பறவைகளுக்கும் எம்பெருமானைப் பற்றிப் பேசுவதைத் தவிர வேறு போது போக்குக் கிடையாது; உறக்கமும் கிடையாது. எனவே தான் விடியற்காலத்திலேயே பறவைகள் எம்பெருமானைப் பற்றியே பேசிக் கூவுகின்றன" என்று சிறியாத்தான் கூறியதாக[1] நஞ்சீயர் அருளிச் செய்வர்.

[132]

ப$_4$ட்டர் வாணவதரையனைக் காண எழுந்தருளி ஸ்ரீதேவிமங்கலத்திலே இருக்கச் செய்தே அங்குத்தை ஸ்ரீவைஷ்ணவர்கள் ஸம்ப்$_4$ரமங் கண்டு அருளிச் செய்த வார்த்தை.

(நாச்சியார் திருமொழி 10-1 ப்ரவேசம்)

1. எண் 74 பார்க்க.

நிகழ்டம்

எம்பெருமானை அடைந்து வாழ்ச்சி பெற வேண்டும் என்ற பேரவாவினால் மேகங்களின் கால்களிலும், வண்டுகளின் கால்களிலும் விழுந்தாள் ஆண்டாள். ஆயினும் அதனால் பயனேதும் ஏற்படவில்லை. எம்பெருமான் வருவதாகக் கூறிச் சென்ற கார்காலம் வந்தும் அவன் வரவில்லை. அக்காலத்தில் தோன்றும் பூக்கள் எங்குபார்த்தாலும் தோன்றி, அவனுடைய திருமேனி, நிறம் முதலியவற்றை நினைப்பூட்டி வருத்தின. இவற்றிலிருந்து தப்பித்து எம்பெருமானை அடைவதற்கு இரு வழிகள் மட்டுமே உண்டு. 'அடியவர்களைக் கைவிடேன்' என்று அவன் அருளிச்செய்துள்ள சொற்களும், பெரியாழ்வார் வயிற்றில் தான் பிறந்த பிறப்புமே தனக்கு அவனைப் பெற்றுத்தரும் என்று எண்ணினாள். ''வில்லிபுதுவை விட்டுசித்தர் தங்கள் தேவரை வல்ல பரிசு வருவிப்பரேல் அது காண்டுமே'' என்று ஆண்டாள் அருளிச்செய்துள்ளதைக் கருத்தில் கொண்டு இவ்வாறு உரைத்த உரையாசிரியர், அடியவர்களுடன் உள்ள தொடர்பாலேயே பேறு கிட்டும் என்பதை விளக்க ஓர் **ஐதிஹ்யம்** *எடுத்துக் காட்டுகிறார்.*

விளக்கம்

எண் 78ன் விளக்கம் காண்க.

[133]

(மாற்றிக்யாதி) இதுக்குத் திருமலை நம்பி பணிக்கும்படி: "தான் பிரிவாலே நொந்தபடியாலே जरामरणमोक्षाय **(ஜராமரண மோக்ஷாய) என்று ஆம்ரயிக்கும் திரளின் நடுவே என்னைக் கொடுபோய் வைக்கவல்லையே என்கிறாள்" என்றருளிச் செய்வர். "கேவலர் தனித்தனியேயாய்த்து அநுப$_4$விப்பது; திரளாயிருக்கக் கூடாது" என்று எம்பார் அருளிச் செய்யும்படி; "மாற்றோலைப் பட்டவர் கூட்டமாகிறது அடியார்கள் குழாங்களாய், 'என்னை அத்திரளின் நடுவே கொடுபோய் வைக்கவல்லையே' என்கிறாள்" என்று. அங்ஙனன்றிக்கே ஆப்பான் பணிக்கும்படி, ஆழ்வான் பணிக்கக் கேட்டிருக்கவுமாமிறே; "அவன் கொடுவரச் சொன்னவர்களைத் தவிர்ந்து 'மாற்றோலைப் பட்டோம்' என்று அவர்கள் திரளிலே என்னை வைக்கவல்லையே என்கிறாள்" என்று.**

(நாச்சியார் திருமொழி 10-2)

நிகழ்டம்

எம்பெருமானைப் பிரிந்தமையால் உண்டான வருத்தத்தில் மூழ்கியிருக்கும் ஆண்டாளுக்கு மழைக் காலத்தில் மலர்கின்ற மலர்களைக் கண்டவுடன் விரகதாபம் ஏற்பட்டு வருத்தம் அதிகரிக்கின்றது. எனவே அம்மலர்களை நோக்கி, "என்னை மேலும் துன்புறுத்துவதற்காகத்தான் எம்பெருமான் உங்களை அனுப்பி

வைத்தானோ?" என்று கேட்கிறாள். இத் துன்பத்திலிருந்து தப்புவதற்காக, அம்மலர்களைப் பார்த்து "எம்மை மாற்றோலைப் பட்டவர் கூட்டத்து வைத்துக் கொள்கிற்றிரே!" என்கிறாள். இதற்குத் திருமலைநம்பி, எம்பார், கூரத்தாழ்வான் ஆகிய மூவரும் அளித்த **நிர்வாஹங்கள்** காட்டப்பெறுகின்றன.

விளக்கம்

திருமலை நம்பியின் விளக்கம்: பிரிவாலே மிகவும் துன்புறும் ஆண்டாள் எம்பெருமானிடம் மிகவும் அன்பு கொண்டமையாலன்றோ இப்படிப் படவேண்டியுள்ளது. எனவே பகவானை அனுபவிப்பதில் வெறுப்புற்று "ஜராமரண மோக்ஷாய" (கீதை 7-29) (மூப்பு மரணம் என்பவை நீங்கி அடையப்படும் கைவல்யம்) எனப்படும் ஆத்மானுபவத்தை மட்டும் விரும்புகிறவர்கள் கூட்டத்தின் மத்தியில் என்னைக் கொண்டு போய் வையுங்கள்' என்கிறாள். துன்பத்தை விளைவிக்கும் பகவதனுபவத்தைக் காட்டிலும் துன்பத்திலிருந்து நீங்குவதே இப்போது இவளுக்குத் தேவையாகையால் ஸம்ஸாரமாகிய துன்பத்திலிருந்து நீங்குதலை மட்டும் விரும்புகின்ற கைவல்யார்த்திகள் திரளில் சேர விரும்புகிறாள் ஆண்டாள் என்பது திருமலை நம்பியின் விளக்கம். (ஓலை என்பது பகவானுடைய ஆணையைக் குறிக்கின்றது. "ச்ருதிஸ்ம்ருதிர் மமைவாஜ்ஞா" (ச்ருதிகள், ஸ்ம்ருதிகள் ஆகியவை என்னுடைய ஆணைகளே) என்று எம்பெருமானே அருளிச்செய்துள்ளமையால் சாத்திரங்களே எம்பெருமானுடைய ஆணைகளாகும். சாத்திரங்கள் ஜீவாத்மாவை எம்பெருமானுக்கு அடிமைப்பட்டது என்று கூறுகிறது. ஆனால் கைவல்யத்தை விரும்புபவர்கள், பகவானுக்குத் தொண்டு செய்வதை விரும்பாமல் தங்கள் ஆத்மாவையே அனுபவிக்க விரும்புகிறார்கள் ஆதலின், அவர்கள் பகவானுடைய ஆணைக்கு மாற்றுப்பட்டவர்களாகின்றனர். எனவே கைவல்யத்தை விரும்புபவர்களே மாற்று ஓலைப் பட்டவர்கள் என்று திருமலை நம்பி விளக்கம் அளித்தார்.)

எம்பார் தரும் விளக்கம்: "கைவல்ய நிஷ்டர்கள் தங்கள் தங்கள் ஆத்மாவையே அனுபவிப்பவர்களாதலின், அவர்கள் கூட்டமாக இருக்க மாட்டார்கள். தனித்தனியே தான் இருப்பார்கள். அவர்கள் கூட்டத்தில் என்னை வையுங்கள் என்கிறாள் என்பது பொருந்தாது. எனவே ஸம்ஸாரத்திலிருந்து ஓலை மாற்றப்பட்டு, பரமபதத்தை அடைந்து பகவானை அனுபவிக்கும் முக்தர்களே, மாற்றோலைக் கூட்டத்தினர். (எம்பெருமானுடைய ஆஜ்ஞையின்படி புண்யபாபங்களை அனுபவிப்பதற்காக இவ்வுலகில் பிறந்து, அவனுடைய அருளாலேயே ஓலை மாற்றப்பட்டு பரமபதம் அடைபவர்கள் முக்தர்கள்.) அவர்கள் நடுவே கொண்டு போய் வையுங்கள் என்கிறாள் ஆண்டாள்" - என்பது எம்பார் தரும் விளக்கம்.

கூரத்தாழ்வானுடைய சிஷ்யரான ஆப்பான் என்பவர் தரும் விளக்கம் வேறு வகையானது. மேலும் கூரத்தாழ்வானே இந்த விளக்கத்தைக் கூற, அதை ஆப்பான் அவரிடத்தில் கேட்டிருக்கவும் கூடும்.

"எம்பெருமான் என்னைத் துன்புறுத்துவதற்காக உங்களை அனுப்பியிருக்கிறான். வேறு சிலரைத் தானே நேராக நலிய வேண்டும் என்று அவர்களைத் தன்னிடத்தில் அழைத்துவரச் சொல்லியும் உங்களை அனுப்பியிருப்பான். நீங்கள், உங்களால் நலியப்பட வேண்டியவர்கள் கூட்டத்திலிருந்து என்னை எடுத்து, எம்பெருமான் தானே நேரே நலிய வேண்டும் என்பதற்காக அழைத்துவரச் சொல்லப்பட்டவர்கள் கூட்டத்தில் சேர்த்து விடுங்கள். அவன் 'இவளை ஏன் இக்கூட்டத்தில் சேர்த்துக்கொண்டு வந்தீர்கள்?' என்று கேட்டால் 'ஓலை மாறிவிட்டது' என்று கூறிவிடுங்கள். அவனே என்னை நலிந்தானாகிலும் அவனை நேரில் பார்த்த திருப்தியாவது எனக்கு ஏற்படட்டும் என்கிறாள்" என்பது அவர் கூறிய விளக்கம். (இது 'மாற்றோலைப் பட்டு, அவர் கூட்டத்து என்று அந்வயித்து உரைத்த பொருளாகும்.)

[134]

(வந்தருள் செய்து கூடுவராயிடில்) "ஶிஶுபாலனும் எம்பெருமானைப் பெற்றானிறே!" என்றார்களாய் ஆளவந்தார் கோஷ்டியிலே, "அவன் பெற்றத்தைப் பேறாகச் சொல்ல வொண்ணாது. ருசி முன்னாகப் பெறும் பேறாய்த்துப் பேறாவது; இவன் இருக்கில் நாடு அழியும் என்று கொற்றவன் வாசலுக்குள்ளே சுழற்றி எறிந்தான் அத்தனைகாண்!" என்றாராம்.

(நாச்சியார் திருமொழி 10-5)

நிகழிடம்

எம்பெருமானோடு கூட வேண்டுமென்ற விருப்பமுடைய ஆண்டாள் "வந்து, அருள் செய்து, கூடுவராயிடில்' என்கிறாள். அவனே இவளிருக்கும் இடத்திற்கு வந்து கூட வேண்டுமே தவிர, இவளுடைய ஆற்றாமையால், இவள் அவனிடம் சென்று கூடுவது தகாது. அப்படி அவனே வந்து கூடும் போதும் அவன் தன் ஆற்றாமை வெளிப்படும்படி அருள் செய்து கூடுவதாக இருக்க வேண்டும். ('இவளோடு கூட வேண்டியிருக்கிறதே!' என்று வேறு வழியில்லாமல் கூடியதாக இருக்கக் கூடாது) என்றுரைத்த உரையாசிரியர் இத் தொடர்பில் ஓர் **ஐதிஹ்யம்** காட்டுகிறார்.

விளக்கம்

ஆளவந்தார் கோஷ்டியிலே சிலர் "எம்பெருமானைக் கடுஞ்சொற்களால் வைதவனான சிசுபாலனும் பரமபதத்தை அடைந்தான் அன்றோ"

என்றார்களாம். அதற்கு **ஆளவந்தார்**, "அவன் பெற்றது பேறாகாது. எம்பெருமானைப் பெற வேண்டும் என்று ஆசைப்பட்டு அவ்வெம்பெருமானுடைய அருளாலேயே அவனைப் பெறுவதே பேறாகும். சிசுபாலன் மோக்ஷத்தை அப்படிப் பெறவில்லை. 'சிசுபாலன் இன்னும் இவ்வுலகில் இருந்தால், மற்றவர்களையும் தன்னைப் போலவே ஆக்கிக் கெடுத்துவிடுவான்; இவ்வுலகத்திலுள்ளவர்கள் அவனைப் போலாகக் கூடாது' என்று கருதிய எம்பெருமான், வேறு வழியில்லாமல் அவனை பரமபதம் சென்று சேரும்படி சக்கரத்தால் சுழற்றி எறிந்தானே தவிர, சிசுபாலனுக்கு அருள் செய்து பரமபதத்தை எம்பெருமான் கொடுக்கவில்லை" என்றருளிச் செய்தாராம்![1]

[135]

'பெரிய தேவப் பிள்ளை' என்று ப$_4$ட்டர் ஸ்ரீபாத$_3$த்திலே வர்த்திப்பான் ஒருவனுண்டு. அவன் அகத்திலுள்ளார் எல்லாரையும் அடர்ந்து வார்த்தை சொல்லிக் கொண்டு போரும். அவன் கிழக்கே கார்யமுண்டாய்ப் போனவளவிலே நஞ்சீயர் "அவன் போனபடியாலே அகத்திலுள்ளவர்கள் சில நாளைக்குப் பிழைத்தார்களிறே" என்றாராம். அத்தைக் கேட்டருளி "நம்மோடேயொரு ஸம்ப$_3$ந்த$_4$த்தைச் சொல்லி நாட்டை ஹிம்ஸிக்குமதில், நம்மைத் தேய்த்துத் தின்றாகிலும் இங்கே கிடக்கை அழகியதன்றோ?" என்றருளிச் செய்தார்.

(நாச்சியார் திருமொழி 10-5)

நிகழ்டம்

சிசுபாலனால் உலகம் கெட்டுவிடக் கூடாது என்பதற்காக அவனைப் பரமபதத்தில் முடக்கி வைத்தது பற்றிக் கீழே (எண் 134) கூறப்பட்டது. அத் தொடர்பில் மற்றொரு **ஐதிஹ்யம்** கூறப்படுகிறது.

விளக்கம்

பட்டருடைய சீடர்களில் **பெரிய தேவப்பிள்ளை** என்பவர் ஒருவர். அவர் எப்போதும் வீட்டிலுள்ளவர்களைக் கடுமையான வார்த்தைகளால் வைது கொண்டிருப்பார். ஒரு நாள் அவர் ஏதோ காரியமாக கிழக்கேயுள்ள ஒரு ஊருக்குச் சென்றிருந்தார். அப்போது **நஞ்சீயர்** "அவன் வீட்டை விட்டு போயிருக்கின்றபடியாலே, அவன் வீட்டிலுள்ளவர்கள் அவனுடைய கடுஞ் சொற்களைக் கேட்காமல் சில நாள்களுக்கேனும் பிழைத்தார்கள்" என்று கூறினார். இதைக் கேட்ட **பட்டர்**, "கடும் சொற்களைப் பேசுவதே அவனுக்கு ஸ்வபாவமாகையால் எங்கு போனாலும் இப்படித்தான் இருப்பான். நம்முடைய

1. ஆளவந்தார் இவ்வாறு அருளிச்செய்தமை மற்றும் இரண்டு இடங்களில் குறிப்பிடப் பெற்றுள்ளது. எண் 292, 723 பார்க்க.

சிஷ்யன் என்று கூறிக் கொண்டு வெளியூரிலிருப்பவர்களையும் கடுஞ் சொல்லால் வைது துன்புறுத்துவதைக் காட்டிலும், நமக்குத் துன்பத்தை விளைத்துக் கொண்டாகிலும் நம்மிடத்திலேயே இருப்பது நல்லது' என்று கூறினாராம். (அதுபோல சிசுபாலனும் நம்மை வைதுகொண்டேயாகிலும் பரமபதத்திலே நம்முடனே இருக்கட்டும் என்று எம்பெருமான் கருதினன் போலும்!)

[136]

அம்மணியாழ்வான் ஒருவனுக்கு ஹிதத்தைச் சொல்லி அவன் காலிலே த₃ண்ட₃னாகக் கிடக்குமாம், 'நாம் ஒருவனை வைஷ்ணவன் என்றன்றோ ஆத₃ரிக்கிறது! நம் நெஞ்சறிந்த வைஷ்ணவன் அன்றோ இவன்!' என்று. அத்தைச் சீயர் கேட்டருளி "அது அவன் செய்தானேயாகிலும் ஶிஷ்யனுக்கு அனர்த்த₂ம்" என்றாராம். "இவன் த₃ண்ட₃னிடாதவன்று அவன் இன்னாதாகத் தொடங்குமிறே, அவிவேகியாகையாலே". "அதுவென்? இவன் விவேகியாயன்றோ தன்னை அவனுக்கு இஷ்ட விநியோகா₃ர்ஹமாக்குகிறது! 'அவனுடைய விநியோக ப்ரகாரங் கொண்டு கார்யமென் நமக்கு?' என்று தன்னை அங்கே நிவேதி₃த்தன்றோ வைப்பது!" என்றானாம் பிள்ளான்.

(நாச்சியார் திருமொழி 10-6)

நிகழிடம்

ஆண்டாள் கண்ணபிரானுடைய திருக்கோலம் போன்று நடனமாடுகின்ற மயில்களை வணங்கி விண்ணப்பிக்கின்றாள். இப்படித் தன்னுடைய மயில்களையே தான் வணங்குவதற்கு எடுத்துக்காட்டாக ஓர் **ஐதிஹ்யம்** *கூறப்படுகிறது.*

விளக்கம்

அம்மணியாழ்வான் *என்பவர் தம்முடைய நல்லுபதேசத்தால் திருத்தப்பட்ட தம்முடைய சீடனையே வணங்கி வருவாராம். "நாம் ஒருவனை ஆதரித்து வணங்குவது அவன் வைஷ்ணவன் என்ற காரணத்தினாலன்றோ! மற்றவர்களை வைஷ்ணவர்கள் என்று தெரிந்து கொண்டு, பிறகுதான் அவர்களை வணங்க முடியும். ஆனால் நம்முடைய சீடனோ நம் நெஞ்சறிந்த வைஷ்ணவனன்றோ!" என்பது அவர் கருத்து! இதைக் கேட்ட* **நஞ்சீயர்** *"அம்மணியாழ்வான் அப்படி செய்தாலும் அது சீடனுக்குக் கேடு விளைக்குமன்றோ!" என்றாராம். "சிஷ்யன் தன் அறியாமையினால், ஆசார்யன் தன்னை ஒருநாள் வணங்காவிட்டால், 'இன்று நம்மை ஆசார்யன் வணங்கவில்லையே' என்று வருந்தத் தொடங்குவானே! இப்படி அவன் நினைப்பது அவனுடைய ஸ்வரூபத்திற்குக்*

1. அம்மணியாழ்வான் தம் சிஷ்யனை வணங்கியிருப்பர் என்பது எண் 679லும் கூறப்படுகிறது.

கேடு விளைக்குமன்றோ?" என்பராம் நஞ்சீயர். (இவ்வுலகில் ஒருவன் உடலுடன் கூடியிருக்கும்வரையில், எவ்வளவுதான் ஆசார்யனுடைய உபதேசம் பெற்றாலும், தன்னை ஆசார்யனுக்கு அசேதனப்பொருளைப்போலப் பரதந்த்ரனாக நினைப்பது அரிது. ஆகையால், ஆசார்யன் தன்னைச் சேவித்தபடியால் தனக்கு மேன்மை ஏற்பட்டுவிட்டதாக அந்த சிஷ்யன் நினைத்துவிட்டால், அதனால் அந்த சிஷ்யனுக்கு ஸ்வரூபநாசம் ஏற்பட்டுவிடுமே என்று அஞ்சி நஞ்சீயர் இவ்வாறு அருளிச்செய்தார்.) இதைக் கேட்ட **திருக்குருகைப்பிரான் பிள்ளான்** "அப்படிக் கொள்ள வேண்டிய அவசியமில்லை. அறிவுள்ள சிஷ்யன் தன்னை ஆசார்யருக்குப் பரதந்த்ர்னாக (இட்டவழக்காக) ஆக்கி வைத்திருப்பான். எனவே ஆசார்யன் தன்னை வணங்கினாலும், 'ஆசார்யன் நம்மை எது வேண்டுமானாலும் செய்து கொள்ளட்டும்; அவருடைய செயலில் நமக்குத் தொடர்பில்லை' என்று ஆசார்யனுக்குத் தன்னை உடைமையாகவன்றோ ஆக்கி வைத்திருக்கிறான்" என்று அருளிச் செய்தார்.[1] (அம்மணியாழ்வானால் திருத்தப்பட்ட சிஷ்யனாகையாலே ஆசார்ய கடாக்ஷத்தாலே அந்த சிஷ்யனுக்கு அறியாமை ஏற்படாது. எனவே அவன் தவறாக நினைக்க வாய்ப்பு இல்லை என்ற கருத்தில் பிள்ளான் இவ்வாறு அருளிச்செய்தார். அவிவேகியான சிஷ்யனை ஆசார்யன் வணங்குவது சிஷ்யனுக்கு அனர்த்தம் என்பது நஞ்சீயருடைய கருத்து. விவேகியான சிஷ்யனை ஆசார்யன் வணங்குவது சிஷ்யனுக்கு அனர்த்தமல்ல என்பது பிள்ளானுடைய கருத்து.)

[137]

பிள்ளை திருநறையூரரையர், ப$_4$ட்டர் சில வார்த்தையருளிச் செய்யக் கேட்டு "இற்றைக்கு முன்பு ஓராசார்யன் பக்கலிலும் இவை கேட்டறியோம்" என்றாராய், "பிள்ளாய் முன்பும் இவ்வார்த்தை சொன்னாருண்டு காணும். ஒரு திர்யக்கைத் திருநாமத்தைக் கற்பித்துப் பின்னை அதின் காலிலே விழுந்தாருண்டு காணும்" என்றருளிச் செய்தாராம்.

(நாச்சியார் திருமொழி 10-6)

நிகழ்டம்

ஆண்டாள் கண்ணபிரானுடைய திருக்கோலம் போன்று நடனமாடுகின்ற மயில்களை வணங்கி விண்ணப்பிக்கின்றாள். இப்படித் தன்னுடைய மயில்களையே தான் வணங்குவதற்கு எடுத்துக்காட்டாக மற்றும் ஓர் **ஐதிஹ்யம்** கூறப்படுகிறது.

1. எம்பெருமானாரை அவருடைய ஆசார்யரான பெரிய நம்பிகள் தண்டனிட்டு வணங்கினார் என்று எண் 57, 300 ஆகிய இடங்களில் கூறப்பட்டுள்ளது காண்க.

விளக்கம்

பிள்ளை திருநறையூர் அரையர் தம்மைவிட வயதில் மிகவும் சிறியவரான **பட்டர்** கூறிய சில வார்த்தைகளைக் கேட்டு, "இவ்வளவு அழகான விளக்கங்களை இதற்குமுன் எவரிடமும் நான் கேட்டதில்லை" என்று கொண்டாடினாராம்! தம்முடைய சிஷ்யனுடைய நிலையில் உள்ள பட்டரை ஆசார்யரான தாம் கொண்டாடலாமோ என்ற ஐயத்திற்கும் பதிலளிக்கும் வகையில் பட்டரை நோக்கி, "பிள்ளாய்! இப்போது நான் உம்மைக் கொண்டாடியதுபோலவே தம்முடைய சிஷ்யர்களையே கொண்டாடியவர்களும் உண்டு. பரகால நாயகி, தானே தன்னுடைய கிளிக்குத் திருநாமங்களைக் கற்பித்துவைத்து, அந்தத் திருநாமத்தை அக்கிளி சொன்னதற்காக, "திருமாலைப் பாடக்கேட்டு, வளர்த்ததனால் பயன் பெற்றேன் என்று மடக் கிளியைக் கை கூப்பி வணங்கினாளே!" (திருநெடுந்தாண்டகம் - 14) என்று கூறியுள்ளபடி கிளியின் காலிலும் விழுந்து வணங்கினாளன்றோ! எனவே நான் உம்மைக் கொண்டாடியதில் தவறு ஏதுமில்லை" என்றாராம்.[2]

[138]

திருமலை நம்பி இவ்விரண்டு பாட்டையும் ஆத₃ரித்துப் போருவராய், அவ்வழியாலே நம்முடையவர்கள் எல்லாரும் ஆத₃ரித்துப் போருவர்கள். இப்பாட்டையும் மேலிற் பாட்டையும் அநுஸந்தி₄த்து, கண்ணும் கண்ணீருமாய் ஒரு வார்த்தையும் சொல்லாதே வித்₃த₄ராயிருப்பராம்.

(நாச்சியார் திருமொழி 10-8)

நிகழிடம்

எம்பெருமானைப் பிரிந்த வருத்தத்தினால் ஆண்டாளுக்கு, மழைக் காலத்தில் பூத்த பூக்களின் காட்சியும் துன்பத்தை உண்டாக்கின. இதைப் பற்றி ஆண்டாள் அருளிச் செய்த 'கார்க்கோடல் பூக்காள்! என்கிற பதிகத்தில் மேகத்தைப் பார்த்து ஒரு பாசுரமும், கடலைப் பார்த்து ஒரு பாசுரமும் அருளிச் செய்கிறாள். "ஓ மேகமே! திருவேங்கடமுடையானை நான் அணைக்கும்படி செய்து, என்னை அவரோடு நெருக்கி வைத்துப் பிறகு பொழிய வல்லையோ?" என்று மேகத்தைப் பார்த்தும், "கடலே! என்னுடைய உடலுள் புகுந்து என் உயிரை

1. இப்படி அரையர் அருளிச் செய்ததற்கு பட்டர் "நீர் எப்படி வேண்டுமானாலும் என்னைப் புகழ்ந்து கொள்ளும். உமக்குத் தொண்டு புரிவதே அடியேனுக்கு எப்போதும் வேண்டுவது" என்று பதிலருளிச் செய்ததாக எண் 364ல் காட்டப் படுகிறது.

2. இதேபோல் நஞ்சீயர் தம்முடைய சீடரான நம்பிள்ளையைக் கொண்டாடியதாக எண் 679ல் குறிப்பிடப்பெறுவது காண்க.

அறுக்கின்ற எம்பெருமானுக்கு என்னுடைய வேதனையெல்லாம் சென்று உரைக்க வல்லையோ" என்றும் கூறுகிறாள். இப்பாசுரங்களில் திருமலை நம்பி மிகவும் ஈடுபட்டிருப்பர் என்ற **ஐதிஹ்யம்** கூறப்படுகிறது.

விளக்கம்

இவ்விரண்டு பாசுரங்களிலும் ஆண்டாளுடைய பிரிவுத்துயரம் மிகுந்திருக்கின்றமை விளங்குவதனால், திருமலை நம்பி இவ்விரண்டு பாட்டுக்களையும் அநுஸந்தித்து, அவ்வழியாலே ஆண்டாளுடைய துயரின் மிகுதியை நினைத்து நினைத்து, கண்ணும் கண்ணீருமாயிருந்து துக்கப்பட்டு ஒரு வார்த்தையும் சொல்லாதே குமுறி நிற்பராம்.[1] இப்படித் திருமலை நம்பி ஈடுபட்ட பாசுரங்கள் என்று நம்முடையவர்கள் இப்பாசுரங்களில் மிகவும் ஈடுபட்டிருப்பர்.

[139]

த்ரிபுராதே₃வியார் வார்த்தையை நினைப்பது.

(நாச்சியார் திருமொழி 10-10)

நிகழ்டம்

ஆண்டாள் எம்பெருமானைப் பற்றிச் சொல்லும் போது "வில்லிபுதுவை விட்டுசித்தர் தங்கள் தேவரை" என்கிறாள். அதாவது எம்பெருமானைத் தன்னோடு உறவறுத்துப் பெரியாழ்வாரோடு சேர்த்துச் சொல்லுகிறாள். பெரியாழ்வார் உகந்த எம்பெருமான் என்பதால்தான் ஆண்டாளும் அவனிடம் ஈடுபடுகிறாள். இதை விளக்குவதற்குத் திரிபுராதேவியார் என்பவருடைய வார்த்தை உதாரணமாகக் காட்டப்படுகிறது.

விளக்கம்

எண் 189ன் விளக்கம் காண்க.

[140]

(நல்லார்கள்)...... ப₄ட்டரை, முதுகில் புண்ணாலே நொந்து கிடக்கச் செய்தே அருள் பாடிட்டு, "வாராய் அஞ்சினாயோ?" என்று கேட்டருள, "நாயந்தே! எனக்குச் செய்து தந்தருளாத தரமில்லை. இங்கே இருக்கச் செய்தேயும் பரமபத₃ம் என் சிறுமுறிப்படி செல்லும்படி பண்ணியருளிற்று. அதிலொரு குறையுமில்லை.

1. ஸ்ரீராமானுஜருடைய ஆசார்யரும் மாமாவுமான திருமலைநம்பி திருவேங்கடத்தில் நித்திய வாசமாக எழுந்தருளியிருந்தவர். எனவே திருவேங்கடமுடையானிடத்தில் ஈடுபட்டு ஆண்டாள் அருளிச் செய்த இவ்விரண்டு பாசுரங்களை விரும்பியிருந்தது கருத்தில் கொள்ளத்தக்கது.

இங்கே குளிர்ந்த முகத்தையும், திருநாமத் தழும்பையும், முறுவலையும் இழக்க என்றால் அடியேன் அஞ்சேனோ?" என்றார்.

(நாச்சியார் திருமொழி 11-5)

நிகழிடம்

"நல்லார்கள் வாழும் நளிர் அரங்கம்" என்று ஆண்டாள் திருவரங்கத்தைக் கொண்டாடுகின்றாள். பரமபதத்தைக் காட்டிலும் திருவரங்கம் உயர்ந்தது என்றும், திருவரங்கத்தில் வசிப்பவர்கள் பரமபதம் செல்லுவதற்கும் விரும்பமாட்டார்கள் என்றும் கூறுகின்ற உரையாசிரியர் அதற்கு எடுத்துக்காட்டாக ஓர் **ஐதிஹ்யம்** *காட்டுகிறார்.*

விளக்கம்

பட்டருக்கு *முதுகிலே புண் ஏற்பட்டு மிகவும் வருந்திக் கொண்டிருந்தாராம். (ஒரு நாள் நம்பெருமாள் திருமஞ்சனம் கண்டருள்வதாக எழுந்தருளியிருக்க, பட்டரும் சேவிக்கச் சென்றார். பெருமாள் பட்டரை பார்த்து "உமக்கு என்ன வேண்டும்" என்று கேட்க, பட்டர் "தேவரீர் அணிந்து கொண்டிருக்கின்ற ஆடையைச் சற்றே விலக்கி, தேவரீருடைய திருவரை, திருத்துடை முதலிய திருமேனியழகு முழுவதையும் நான் சேவிக்கும்படி காட்டியருள வேணும்" என்றாராம். பெருமாளும் அப்படியே காட்டியருள, பட்டரும் சேவித்தார். பெருமாளுடைய திருமேனியை இப்படி சேவிப்பவர்கள் விரைவிலேயே பரமபதம் எய்திவிடுவார்கள் என்பதுண்டு. எனவே)[1], பெருமாள் "பட்டரே! சீக்கிரம் பரமபதம் போக வேண்டுமே என்று பயப்படுகிறீரோ?" என்று வினவினாராம். அதற்கு பட்டர், "நாயந்தே! தேவரீர் எனக்குச் செய்து கொடுக்காத பெருமைகள் எதுவுமேயில்லை. இங்கேயிருந்து கொண்டே அடியேன் 'இவனுக்குப் பரமபதம் தந்தருளவேணும்' என்று ஒரு சிறிய ஓலையிலெழுதி அதை ஒருவனிடம் கொடுத்து தேவரீரிடம் அனுப்பினால் அவனுக்குத் தேவரீர் பரமபதம் தந்தருளும்படியன்றோ தேவரீர் அடியேனுக்கு அருள் புரிந்துள்ளது. அதில் எந்தக் குறையுமில்லை. ஆனால் இங்கே நம்பெருமாளாக எழுந்தருளியுள்ள தேவரீருடைய குளிர்ந்த முகத்தையும், திருநாமம் சாற்றியதாலுண்டான தழும்பையும், புன்முறுவலையும் இழந்து அங்கே செல்ல வேண்டும் என்றால் வருந்தாமல் இருக்க முடியுமோ?" என்றாராம்.*

1. அடைப்புக் குறிக்குள் இருக்கும் செய்திகள் இங்கே ஐதிஹ்யத்தில் குறிப்பிடப்படவில்லை யென்றாலும், எண் 359ல் இடம் பெற்றுள்ள இதே ஐதிஹ்யத்தில் இச்செய்திகள் காணப்படுகின்றன.

[141]

ஆளவந்தார் மகனார் சொட்டை நம்பி, ஓரளவிலே திருக்கோட்டியூர் நம்பியை நெகிழ வார்த்தை சொன்னாராய், "நீ கடக்க வர்த்தி" என்றருளிச் செய்ய அவரும் படை வீட்டிலே ராஜஸேவை பண்ணித் திரிந்தாராய், பின்பு சரமஸமயத்திலே இவருடைய அத்$_4$யவஸாயமறிய வேணுமென்று "நீ நினைத்துக் கிடக்கிறதென்?" என்று கேட்டார்களாய், "ஆளவந்தார் ஸ்ரீபாத$_3$த்தின் ஸம்ப$_3$ந்த$_4$ம் பரமபத$_3$ப்ராப்தி பண்ணித் தந்தல்லது விடாது; அங்கே போனால் ஸ்ரீ வைகுண்ட$_2$நாதன் முக$_2$ம் நம்பெருமாள் திருமுக$_2$மண்ட$_3$லம் போலே குளிர்ந்திருந்ததில்லையாகில், முறிச்சுக் கொண்டு வருவதாக நினைத்திருந்தேன்" என்றாராம். "न च पुनरावर्तते (ந ச புநராவர்த்ததே) என்கிற மர்யாதையை இடறிப் போர வேணுமே" என்றாராம்.

(நாச்சியார் திருமொழி 11-5)

நிகழிடம்

"நல்லார்கள் வாழும் நளிர் அரங்கம்" என்று ஆண்டாள் திருவரங்கத்தைக் கொண்டாடுகின்றாள். பரமபதத்தைக் காட்டிலும் திருவரங்கம் உயர்ந்தது என்றும், திருவரங்கத்தில் வசிப்பவர்கள் பரமபதம் செல்லுவதற்கும் விரும்பமாட்டார்கள் என்றும் கூறுகின்ற உரையாசிரியர் அதற்கு எடுத்துக்காட்டாக மற்றும் ஓர் **ஐதிஹ்யம்** *காட்டுகிறார்.*

விளக்கம்

ஆளவந்தாருக்கு, சொட்டை நம்பி என்றொரு புதல்வர் இருந்தார். *அவர் ஒரு சமயம் ஆளவந்தாருடைய சீடரான* திருக்கோட்டியூர் நம்பியைக் *கடுமையாகப் பேசிவிட்டார். இதனால் கோபமுற்ற திருக்கோட்டியூர் நம்பி சொட்டை நம்பியை, "நீ என் அருகில் இராதே, தூரப்போ" என்று கூறிவிட்டாராம். சொட்டை நம்பியும், தலைநகருக்குச் சென்று அரசாங்க உத்யோகம் பார்த்துக் கொண்டிருந்தார். அவருடைய கடைசிக் காலத்தில் 'இவருக்கு வைஷ்ணவத்தில் உறுதி உள்ளதா?' என்று சோதிக்க வேண்டும் என்று நினைத்த சிலர் "இப்போது நீர் நினைத்திருப்பது என்ன?" என்று கேட்க அவர் "ஆளவந்தார் திருவடிகளோடு எனக்குள்ள தொடர்பு எனக்குப் பரமபதத்தை நிச்சயம் கொடுத்தே தீரும். ஆனால் பரமபதத்திற்குப் போனால் ஸ்ரீ வைகுண்டநாதனுடைய திருமுகம் நம்பெருமாள் திருமுகமண்டலம் போலே குளிர்ந்து இருக்கவில்லையானால் அண்டச் சுவரை முறித்துக் கொண்டு பரமபதத்திலிருந்து இங்கே வந்து விடுவதாக நினைத்திருக்கிறேன். ஆனால் "நசபுநராவர்த்ததே" (மறுபடி இங்கு திரும்புவதில்லை) என்று வேதம் விதித்துள்ள வரம்பை மீறி வர வேண்டியிருக்கிறதே" என்றாராம்!*

1. இவ்வைதிஹ்யம் மற்றோரிடத்திலும் குறிப்பிடப் பெறுகிறது. எண் 358 பார்க்க.

[142]

ஒருநாள் பரத்வமே பிடித்து ஸௌலப்₄யத்தளவும் செல்ல உபபாதித்தருள, அத்தைக் கேட்டு எம்பார், கண்ணுங் கண்ணீருமாய் வித்₄த₄ராயிருக்க, அவரைப் பார்த்தருளி "அவனுடைய ஸௌலப்₄யத்தைச் சொன்னவாறே நாட்டார் "இத்தனை எளியவனோ" என்று கைவிட்டுப் போனார்கள் ப₄ாக்₃யஹாநியாலே. 'அறப்பெரியவன் இப்படித் தாழ நிற்பதே என்று நெருங்குகைக்கு உடலாயிற்று உமக்கு ஒருவர்க்கும்" என்றருளிச்செய்தருளினாராம்.

(நாச்சியார் திருமொழி 11-6)

நிகழிடம்

"எப்பொருட்கும் நின்று" என்று ஆண்டாள் அருளிச்செய்துள்ளதை விளக்கும் உரையாசிரியர், 'குரங்கு வேடுவச்சி இவர்களுக்கும் எளியவனாய் நின்றவன் எம்பெருமான்' என்று உரையிட்டு, அவனுடைய எளிமைக் குணத்தில் எம்பார் மிகவும் ஈடுபட்டிருப்பர் என்று ***ஐதிஹ்யம்*** *ஒன்றையும் கூறுகிறார்.*

விளக்கம்

ஒரு நாள் ***எம்பெருமானார்,*** *எம்பெருமானுடைய மேன்மை தொடங்கி, எளிமை வரை விளக்கி அருளினார். அதைக் கேட்ட* ***எம்பார்*** *கண்ணும் கண்ணீருமாக மிகவும் ஈடுபட்டிருந்தார். இதைக் கண்ட எம்பெருமானார் "அறப்பெரியவனான எம்பெருமான் மிகவும் தாழ நின்று, தன்னைக் குரங்கு, வேடுவச்சி முதலியவர்களும் அனுபவிக்கும்படி வந்தால் இவ்வளவு எளியவனோ அவன்!" என்று அவனை மதியாமல் போய்விடுகிறார்கள், அவர்களுக்கு பாக்யமில்லாமையாலே. ஆனால் "அறப்பெரியவனான எம்பெருமான் தன்னை இப்படித் தாழ விடாமல், தன் மேன்மையையே காட்டிக் கொண்டிருந்தால் ஸம்ஸாரிகள் அது காரணமாகவே தன்னை அடையாமல் அகன்று போய் விடுவார்கள் என்று அஞ்சி, அவர்கள் தன் மேன்மையைக் கண்டு அகலாமல் அடைவதற்கே தன்னைத் தாழ விட்டுக் கொள்கிறான். 'மிகவும் பெரியவனான எம்பெருமான், நமக்காக இப்படித் தன்னைத் தாழ விட்டுக் கொள்கிறானே! இது என்ன எளிமை!' என்று ஈடுபட்டு நெருங்குகைக்கு அந்த எளிமையே காரணமானது உமக்கு ஒருவர்க்கு மட்டுமே என்றருளிச் செய்தாராம்.*[1]

[143]

एतत् व्रतं मम (ஏதத் வ்ரதம் மம), नत्यजेयं कथञ्चन (நத்யஜேயம் கத₂ஞ்சந) என்றதுக்கு, "இருவரும் ஶரணாக₃தபரித்ராணம் பண்ணுகிறார்கள்" என்று ப₄ட்டர்.

(நாச்சியார் திருமொழி 11-6)

1. இப்படி அருளிச்செய்தவர் எம்பெருமானார் என்று எண் 428ல் குறிப்பிடப்பெறுவது காண்க.

நிகழிடம்

"எப்பொருட்கும் நின்று" என்று ஆண்டாள் அருளிச்செய்துள்ளதை விளக்கும் உரையாசிரியர், சுக்ரீவனுடைய உதவியை எதிர்பார்க்குமளவுக்கு எளியவனாய் நின்றவன் எம்பெருமான் என்ற உரையாசிரியர், இத்தொடர்பில் பட்டருக்கும் நஞ்சீயருக்கும் இடையே நடைபெற்ற **ஸம்வாதம்** *ஒன்றை எடுத்துக்காட்டுகிறார்.*

விளக்கம்

எண் 560ன் விளக்கம் காண்க.

[144]

(என்னித்யாதி) ... திருமாலையாண்டான் "ப்ரக்ருதிப்ராக்ருதங்களை த்யாஜ்யமென்று கேட்டுப்போராநிற்கச் செய்தேயும், இத்தைவிட வேண்டி யிருக்கிறதில்லை; ஆளவந்தார் ஸ்ரீபாதத்தை ஆஶ்ரயிக்கைக் குறுப்பாம் என்று ஆத₃ரியாநின்றேன்" என்றாராம்.

(நாச்சியார் திருமொழி 11-6)

நிகழிடம்

"என் மெய்ப்பொருளும் கொண்டார்" என்று, தன்னுடைய உடம்பையும் எம்பெருமான் கவர்ந்து கொண்டான் என்கிறாள் ஆண்டாள். இத் தொடர்பில், உடலும் விரும்பத்தக்கதே என்று திருமாலையாண்டான் அருளிச்செய்த **வார்த்தை** *ஒன்று எடுத்துக்காட்டப்படுகிறது.*

விளக்கம்

ஆளவந்தாருடைய சீடர்களில் ஒருவரான **திருமாலையாண்டான்**, *"மூலப்ரக்ருதியும், அதிலிருந்து தோன்றும் அசேதனப் பொருள்களும் (இவ்வுலக வாழ்க்கையில் ஈடுபடுத்தும் உடல் போன்றவைகளும்) கைவிடத்தக்கவை என்று சாத்திரங்களில் சொல்லப் பட்டுள்ளவற்றைக் கேட்டிருக்கச் செய்தேயும், இவ்வுடலை விட வேண்டுமென்று தோன்றவில்லை. ஆளவந்தார் திருவடிகளை அடைவதற்கு உதவுகிறது என்கிற காரணத்தாலே இவ்வுடலையும் விரும்புகிறேன்" என்று அருளிச் செய்தாராம்.*

[145]

(அறிந்தொழிந்தார்) இவள் தான் திருக்கோட்டியூர் நம்பியைப் போலே 'ப₄க₃வத்₃விஷயம் ஒருவரால் அறியலாகாது' என்று மறைத்துக்கொடு போருமவள் ஒருத்தி போலே காணும்! நம்பிதாம் ஒரு திண்ணையிலே ஒருவரும் அறியாதபடி

ப$_4$க$_3$வத்கு$_3$ணாநுஸந்த$_4$ானம் பண்ணியிருப்பர். எம்பெருமானார் எழுந்தருளி, 'நம்பி மடமேது?' என்று கொண்டு த$_3$ண்ட$_3$னிட்டவாறே, அங்குள்ளார், 'எம்பெருமானார் நம் திருக்குருகைப் பிரான் அகத்தை நோக்கித் த$_3$ண்ட$_3$னிடா நின்றார்' என்ற பின்பிறே நம்பியுடைய ப்ரப$_4$ாவம் அங்குள்ளாரறிந்தது. ஆழ்வானும் ஆண்டானும் ஓராறு மாஸம் ஸேவித்து இருந்த ஸங்கேயத்தைக் கண்டு போரும்போது ஒரு வார்த்தை கேட்டுப் போருவர்களே! ஆழ்வான் ஒருவிசை ஆறுமாஸம் ஸேவித்து நின்று போரப்புகா நிற்கச் செய்தே, ஆழ்வானை "நம்மாழ்வார் 'அடியேனுள்ளான்' என்றபடி கண்டாயே" என்று பணித்தாராம். "அடியேன் க்ருதார்த்த$_2$னானேன்" என்று போந்தானாம்.

(நாச்சியார் திருமொழி 12-2)

விளக்கம்

எம்பெருமானைப் பிரிந்த வருத்தத்தினால் தான் படும் பாட்டை 'நாலயலாரும் அறிந்தொழிந்தார்' என்கிறாள் ஆண்டாள். திருக்கோட்டியூர் நம்பி பகவத் விஷயத்தை, கண்டவரும் அறிந்து விடக்கூடாது என்று மறைத்துக் கொண்டிருந்ததுபோலே,[1] இவளும் தனது நிலையை ஒருவருமறியக் கூடாது என்று மறைத்துக் கொண்டிருந்தாள் போலும் என்றுரைத்த உரையாசிரியர், இத்தொடர்பில் திருக்கோட்டியூர் நம்பியைப்பற்றிய **ஐதிஹ்ய***த்தை எடுத்துக் காட்டுகிறார்.*

விளக்கம்

திருக்கோட்டியூர் நம்பி *தம் திருமாளிகைத் திண்ணையிலே அமர்ந்து கொண்டு ஒருவரும் அறியாதபடி எம்பெருமானுடைய குணங்களையே நினைத்துக் கொண்டிருப்பராம்.* **எம்பெருமானார்** *சரமச்லோகார்த்தத்தைக் கேட்பதற்காகத் திருக்கோட்டியூர் வந்து, "நம்பியின் மடம் எது?" என்று அங்குள்ளவர்களைக் கேட்டு, அவர்கள் காட்டின திசையை நோக்கி தண்டனிட்டு வணங்கினார். அங்கிருந்தவர்கள் 'எம்பெருமானார் நம்மூர் நம்பியாகிய திருக்குருகைபிரான் அகத்தை நோக்கி தண்டனிடுகிறாரே!" என்று ஆச்சரியப்பட்டு, அதற்குப் பின்புதான் நம்பியின் பெருமையை அறிந்து கொண்டார்கள்!*

1. எம்பெருமானார் திருக்கோட்டியூர் நம்பியிடமிருந்து சரமச்லோகார்த்தத்தைப் பெறுவதற்காகப் பதினெட்டு முறை நடந்தார் என்பது பிரசித்தம். கடைசியில் அவர் அவ்வர்த்தங்களை உபதேசிக்கும் போதும் "இவ்வர்த்தங்களை ஒருவர்க்கும் சொல்லக் கூடாது" என்ற உறுதியைப் பெற்ற பின்பே எம்பெருமானார்க்கு உபதேசித்தார். இவ்விவரங்களைப் பிள்ளைலோகாசார்யர் அருளிச் செய்த முமுக்ஷுப்படி சரமச்லோக ப்ரகரணத்திற்கு மணவாள மாமுனிகள் அருளிச் செய்துள்ள வ்யாக்யானத்தின் அவதாரிகையில் காணலாம். மேலும் ரஹஸ்யார்த்தங்களை திருக்கோட்டியூர் நம்பி மறைத்தே போருவர் என்பதற்குச் சான்றாக எண் 385 காண்க.

திருக்கோட்டியூர் நம்பி ரஹஸ்யார்த்தங்களை எப்போதும் மறைத்தே வைத்திருப்பர். **கூரத்தாழ்வான், முதலியாண்டான்** போல்வார் ஒவ்வொரு சமயங்களிலே ஆறாறு மாதங்கள் நம்பிக்குத் தொண்டு செய்து, விடை பெற்றுக்கொள்ளும் போது அவர்களுக்கு ஒவ்வொரு வார்த்தைதான் சொல்லுவர் நம்பி![1]

எம்பெருமானார் கோஷ்டியிலே ஒருமுறை ஜீவாத்மாவுக்கு அந்தரங்க நிரூபகம் (அடையாளம்) ஜ்ஞாத்ருத்வமா (அறிவுடைமையா) அல்லது சேஷத்வமா (அடிமைத் தன்மை உடைமையா) என்று விசாரம் எழுந்தது. இதை அறிந்து வர திருக்கோட்டியூர் நம்பியிடம் கூரத்தாழ்வானை அனுப்பினார் எம்பெருமானார். ஆழ்வான், நம்பிக்கு ஆறுமாதங்கள் தொண்டு செய்து வந்தார். முடிவில் ஆழ்வான் எம்பெருமானாரிடமே திரும்பிச் செல்ல நினைத்து நம்பியிடம் விடை பெறச் சென்ற போது, நம்பி ஆழ்வானைப் பார்த்து "நம்மாழ்வார் 'அடியேனுள்ளான்' என்றபடி கண்டாயே" என்று அருளிச் செய்தாராம்.[2] எம்பெருமானார் கேட்ட கேள்விக்குப் பதிலாக நம்பி இந்த பதிலை அருளிச் செய்ய, அதைக் கேட்ட ஆழ்வான் "அடியேன் தேவரீரிடம் இந்த அர்த்தத்தைப் பெறும் பாக்யசாலி ஆனேன்" என்று கூறி எம்பெருமானாரிடம் திரும்பினாராம்.

[146]

दृष्ट्वा स्थित्वा बहिर्गुरुम् (த்₃ருஷ்ட்வா ஸ்தி₂த்வா ப₃ஹிர்கு₃ரும்) என்கிற இடத்துக்கு ப₄ட்டர் அருளிச் செய்யும்படி - "திருவாய்ப்பாடியில் க்ருஷ்ண ஸம்ஸ்லேஷத்தில் இவளைப் போலே புதியாரில்லை" என்று.

(நாச்சியார் திருமொழி 12-3)

நிகழ்டம்

"தந்தையும் தாயும் உற்றாரும் நிற்கத் தனிவழி போயினாள் என்னும் சொல்லு வந்த பின்னைப் பழிகாப்பரிது மாயவன் வந்து உருக் காட்டுகின்றான்"

1. கூரத்தாழ்வானுக்கு ஆறுமாதம் கழித்துத் திருக்கோட்டியூர் நம்பி அருளிச்செய்த வார்த்தை இந்த ஐதிஹ்யத்திலேயே கூறப்பட்டுள்ளது. முதலியாண்டான் எம்பெருமானாருடைய ஆணையின்படி சரமச்லோகார்த்தம் கேட்பதற்காக திருக்கோட்டியூர் நம்பியிடம் வந்து ஆறுமாதம் தொண்டு செய்தார். ஆறு மாதங்கள் நம்பி ஒருவார்த்தையும் கூறவில்லை. முடிவில் முதலியாண்டான் விடைபெற்றுக் கொள்ளச் சென்ற போது "கல்விச் செருக்கு, குலச் செருக்கு, செல்வச் செருக்கு ஆகிய மூன்று செருக்குகளும் அற்றவர்களுக்கு எம்பெருமானாரே உபதேசிப்பார், போய் வாரும்" என்று கூறினார். இந்த வரலாறு ஆறாயிரப்படிகுருபரம்பரையில் காணத் தக்கது.

2. திருக்கோட்டியூர்நம்பி இவ்வாறு அருளிச்செய்தமை மற்றும் இரண்டு இடங்களில் (எண் 375, 753) குறிப்பிடப்பெற்றுள்ளது. நம்பி அருளிச்செய்த வார்த்தையின் விளக்கத்தை எண் 753ல் காண்க.

என்று, எம்பெருமான் தன்னுடைய திருமேனியழகைக் காட்டும்போது, தாய்தந்தையரைப் பார்த்து, அவர்களுக்கஞ்சியும் அத்திருமேனியழகில் ஈடுபடாமல் இருக்கமுடியவில்லை என்கிறாள். இதற்கு, சிந்தயந்தியைப் பற்றி பட்டர் அருளிச்செய்த **வார்த்தை** ஒன்று எடுத்துக் காட்டப்படுகின்றது.

விளக்கம்

எண் 76ன் விளக்கம் காண்க.

[147]

“நந்தகோபாலன் கடைத்தலை” என்றால் ப்ரஸித்₃த₄மிறே ப₄ட்டர் அருளிச் செய்வர் என்று. “இவனாலே புண்பட்ட பெண்களடையக் கட்டணங்களும் கையும் பசும் துவலுமாயாயிற்று அவர் வாசல், விஷம் தீர்ப்பார் வாசல் போலே”.

(நாச்சியார் திருமொழி 12-3)

நிகழிடம்

“நந்தகோபாலன் கடைத்தலைக்கே நள்ளிருட்கண் என்னை உய்த்திடுமின்” என்றருளிச்செய்கிறாள் ஆண்டாள். இங்கு ‘நந்தகோபாலன் கடைத்தலை’ என்பது பற்றி பட்டர் அருளிச்செய்த **வார்த்தை** *எடுத்துக் காட்டப்படுகிறது.*

விளக்கம்

எண் 52ன் விளக்கம் பார்க்க.

[148]

(போர்க்களமித்யாதி) இதுக்கு, “ப₄ட்டர் அருளிச் செய்ய நான் கேட்டேன்” என்று அருளிச்செய்வர். “காளியன் தலையிலே க்ருஷ்ணன் பாய்ந்தான் என்று கேட்டார் கேட்ட இடங்களிலே ஆழ விழுந்ததாயிற்று. பொய்கையளவும் கால் நடை தந்து போய்ப் புக வல்லாரில்லை யாயிற்றிறே.”

(நாச்சியார் திருமொழி 12-5)

நிகழிடம்

கண்ணபிரான் காளியன் எனும் பாம்பின் தலையில் பாய்ந்து நடனமாடியதை ஆண்டாள் ‘போர்க்களமாக நிருத்தம் செய்த’ என்றருளிச் செய்கிறாள். இங்கே ‘போர்க்களமாக’ ஆனது எது என்று பட்டர் அருளிச்செய்த **வார்த்தை** *எடுத்துக்காட்டப் பெறுகிறது.*

விளக்கம்

‘கண்ணபிரான் காளியன் தலை மீது பாய்ந்தான்’ என்பதைக் கேட்டவுடன் கேட்டவர்கள் திருவாய்ப்பாடியில் கேட்ட இடங்களிலேயே மயங்கி விழுந்து

விட்டனர். காளியன் இருந்த பொய்கையை அடையும் வரையில் தரித்து நின்று நடப்பதற்கும் சக்தியுள்ளவர்கள் ஒருவருமில்லாமல் அனைவரும் மயங்கி விழுந்து விட்டனர்.[1] எனவே கேட்டவர் அனைவரும் மயங்கி விழுந்த அவ்விடம் முழுவதும் பிணக்காடாக இருக்கும் போர்க்களம் போலக் காட்சி யளித்தது. ஆக அவர்களிருந்த இடம் போர்க்களம்போல ஆகும்படியாக (போர்க்களமாக) நிருத்தம் செய்தான் கண்ணன். அதைத்தான் ஆண்டாள் 'போர்க்களமாக நிருத்தம் செய்த' என்றருளிச் செய்கிறாள் என்று பட்டர் அருளிச்செய்ததைத் தாம் கேட்டிருந்ததாக நம்பிள்ளை அருளிச்செய்வராம். கண்ணன் நிருத்தம் செய்தவிடம் போர்க்களமல்ல; அதைக் கேட்டவர்கள் இருந்தவிடமே போர்க்களம் ஆயிற்று என்பது பட்டர் கருத்தாகும்.

[149]

அனந்தாழ்வான் எம்பெருமானாரைக் காண வேணுமென்று வாரா நிற்கச் செய்தே வடகரையளவிலே வந்தவாறே "திருநாட்டுக்கு எழுந்தருளினார்" என்று சில ஏகாங்கிகள் தலைகளையும் சிரைத்து ஏறினார்கள். அவர்களைக் கண்டு ஸ்ரீநம்பி குஹதாஸர் மரத்திலே ஏறி விழுவதாக ஏறினாராய், "தெளிந்து ஏறின நீ சாவ மாட்டாய் காண்! போந்திழி" என்றானாம்.

(நாச்சியார் திருமொழி 12-5)

நிகழிடம்

"காளியனுச்சியில் நட்டம் பாய்ந்து போர்க்களமாக நிருத்தம் செய்த பொய்கைக் கரை" என்றருளிச்செய்கிறாள் ஆண்டாள். இதை விளக்கும் உரையாசிரியர், கண்ணபிரான் காளியன் வாயில் விழுந்தான் என்று கேட்ட கோபிகைகள் அவரவர்கள் இருந்த இடத்திலேயே மயங்கி விழுந்து விட்டார்கள் என்பதைக் கூறி, இத்தொடர்பில், எம்பெருமானார் பரமபதித்தபோதும் ஸ்ரீநம்பி குஹதாஸர் என்பவர் மூர்ச்சித்து விழாமல் இருந்த ஓர் **ஐதிஹ்யத்தை** எடுத்துக் காட்டுகிறார்.

விளக்கம்

எம்பெருமானாருடைய கடைசிக் காலத்தில் அவரைக் காண வேண்டும் என்று அனந்தாழ்வான் திருமலையிலிருந்து ஸ்ரீரங்கம் வந்து கொண்டிருந்தார். ஸ்ரீரங்கத்தில் வட திருக்காவேரியின் வடக்குக் கரைக்கு அருகில் அவர் வந்த போது எம்பெருமானாருடைய சிஷ்யர்களான சில ஏகாங்கிகள் '**எம்பெருமானார்** திருநாட்டுக்கு எழுந்தருளி விட்டார்' என்று கூறிக் கொண்டு, மழித்த தலையினராய் காவேரியில் நீராடிவிட்டுக் கரை ஏறுவதைக் கண்டார்.

1. ஸ்ரீபாகவதம் 10-16- 19ல் இதன் விவரங்களைக் காணலாம்.

அனந்தாழ்வானுடன் கூட வந்த ஸ்ரீநம்பி குஹதாஸர் என்பவர் இச்செய்தியைக் கேட்டவுடன் எம்பெருமானாரைப் பிரிந்த வருத்தம் தாளாமல் தற்கொலை செய்து கொள்வதாக முடிவு செய்து அருகிலிருந்த ஒரு மரத்தின் மீது ஏறிக் கீழே குதிக்க முயன்றார். அதைக் கண்ட அனந்தாழ்வான் "எம்பெருமானார் பிரிந்தார் என்று கேட்டவுடன் தானாக உயிர்போகாமல் தெளிந்திருந்து மரம் ஏறும் நீ, மரத்திலிருந்து கீழே விழுந்தாலும் சாகமாட்டாய், கைகால்கள் தான் முறியும். ஆகையால் இறங்கி வா" என்று கூறினார்.

[150]

(கிடப்பேனை) கிடந்த கிடையில் பாடோடிக் கிடந்தாளாகாதே என்று அகளங்க நாட்டாழ்வான் வார்த்தை.

(நாச்சியார் திருமொழி 13-1)

நிகழிடம்

கண்ணபிரானை முன்பு தான் கண்டதையாவது நினைத்துக் கொண்டு கிடக்கலாம் என்றால் அதுவும் முடியாதபடி முன்பு கண்ட காட்சி நினைவுக்கு வராதபடி கிடக்கிறேன் என்கிறாள் ஆண்டாள். இங்கு "கிடப்பேனை" என்று ஆண்டாள் அருளிச் செய்ததற்கு அகளங்கநாட்டாழ்வான் என்பவர் அருளிச் செய்த **வார்த்தை** எடுத்துக் காட்டப்படுகிறது.

விளக்கம்

"ஆண்டாள் கிடந்த கிடையில் இடம் வலம் திரும்பக் கூட முடியாமல் ஒரு பக்கமாகவே தான் கிடப்பதைக் குறிப்பிடுகிறாள்" என்று அகளங்கநாட்டாழ்வான் பொருள் கூறினாராம். இதனால் ஆண்டாளுக்குக் கண்ணனிடம் உள்ள பிரேமம் அளவிடற்பாலதன்று என்பது பெறப்படுகிறது.

[151]

(பெண்ணின் வருத்தம் அறியாத பெருமான்) "முலையெழுந்தார்படி மோவாயெழுந்தார்க்குத் தெரியாதிறே' என்று ப$_4$ட்டர் அருளிச் செய்தாராக பிரஸித்$_3$த$_4$மிறே.

(நாச்சியார் திருமொழி 13-1)

நிகழிடம்

கண்ணபிரானைப் "பெண்ணின் வருத்தம் அறியாத பெருமான்" என்கிறாள் ஆண்டாள். கண்ணனைப் பிரிந்து ஒரு பெண்ணான தான் படும்பாட்டை அவன் அறிந்திலன் என்பது கருத்து. இதை விளக்கும் வகையில் பட்டர் அருளிச்செய்த **வார்த்தை** ஒன்று எடுத்துக் காட்டப்பெறுகிறது.

விளக்கம்

"முலையெழுந்த பெண்களுடைய வருத்தம் மோவாய் எழுந்த (தாடி மீசை முளைத்த) ஆண்களுக்குத் தெரியாது" என்று பட்டர் *அருளிச் செய்வர்!*

[152]

(அரையில் பீதக வண்ண ஆடை கொண்டு) "மேலிட்ட உத்தரியமானால் ஆகாதோ" என்று நஞ்சீயர் கேட்க "ஸ்வேத₃க₃ந்த₄ லுப்₃தை₄போலே காண்" என்றருளிச் செய்தாராம்.

(நாச்சியார் திருமொழி 13-1)

நிகழிடம்

கண்ணபிரானைப் பிரிந்த வருத்தத்தில் கிடக்கும் ஆண்டாள் "அரையில் பீதக வண்ண ஆடை கொண்டு என்னை வாட்டம் தணிய வீசீரே" என்று, 'கண்ணபிரான் தன்னுடைய அரையில் (இடுப்பில்) அணிந்து கொண்ட ஆடையைக் கொண்டு வந்து என் வருத்தம் தீரும்படியாக என்மேல் வீசுங்கள்' என்கிறாள். இதை விளக்கும்போது பட்டருக்கும் நஞ்சீயருக்கும் இடையே நடைபெற்ற சுவையான **ஸம்வாதம்** *ஒன்று எடுத்துக் காட்டப்பெறுகிறது.*

விளக்கம்

"கண்ணபிரான் அணிந்து கொண்ட ஆடை தானே ஆண்டாளுக்கு வேண்டும். அது அவன் மேலே அணிந்து கொண்ட உத்தரியமானால் ஆகாதோ? அரையில் (இடுப்பில்) அணிந்து கொண்ட ஆடை என்று ஆண்டாள் கூறுவதற்குக் காரணம் என்ன?" என்று **நஞ்சீயர்** *(பட்டரைக்) கேட்டாராம். (அதற்கு* **பட்டர்**) *"உத்தம நாயகியானவள் தன்னுடைய நாயகனுடைய வியர்வை மணத்தை மிகவும் விரும்புவாள். எனவே ஆண்டாளும் கண்ணனுடைய வியர்வை மணத்தை நுகரவே ஆசைப்படுகிறாள். அது மேலிட்ட உத்தரீயத்தில் அதிகமாகக் கிடைக்காது. அரையில் அணிந்து கொண்ட ஆடையில்தான் அது ஆசை தீரக் கிடைக்கும் என்பதால்தான் 'அரையில் பீதக வண்ணவாடை கொண்டு' என்கிறாள்" என்றருளிச் செய்தார்.*

[153]

(நந்தகோபன் மகனென்னும்) ஸ்ரீநந்த₃கோ₃பர்தாம் சிறியாத்தானைப் போலே பரமத₄ார்மிகராயிறே இருப்பது.

(நாச்சியார் திருமொழி 13-6)

1. இப்படி அருளிச்செய்தவர் எம்பெருமானார் என்று எண் 50லும், பட்டர் என்று எண் 80லும் குறிப்பிடப் பெற்றுள்ளது.

நிகழ்டம்

நந்தகோபனுடைய மகனான கண்ணபிரானாலே தான் துன்பப்பட்டுக் கிடப்பதாக ஆண்டாள் அருளிச்செய்கிறாள். இங்கு நந்தகோபருக்குச் சிறியாத்தான் என்பவரை **உதாரணம்** *கூறுகிறார் உரையாசிரியர்.*

விளக்கம்

எண் 60ன் விளக்கம் காண்க.

[154]

(கொடிய கடிய திருமாலால்) 'அருளாத திருமாலார்க்கு' என்றதுக்கு, 'புருஷகாரமாக அநுஸந்தி$_4$க்கிறார்' என்று முன்புள்ள முதலிகள் அருளிச் செய்யும்படி. ''பிள்ளானை 'இதுக்குக் கருத்தென்?' என்று நான் கேட்டேன். 'இப்படி நம்மை நலிகைக்கு கு$_3$ருகுலவாஸம் பண்ணிற்று அவளோடேயன்றோ?' என்று பணித்தார். இத்தை ப$_4$ட்டர்க்கு விண்ணப்பஞ் செய்தேன். 'பேற்றுக்கடி அவளென்றிருந்தால் இழவுக்கும் அடி அவளென்று வெறுத்து வார்த்தை சொல்லத் தட்டுண்டோ?' என்றார்" என்று நஞ்சீயர் அருளிச் செய்யும்படி.

(நாச்சியார் திருமொழி 13-6)

நிகழ்டம்

கண்ணபிரானோடு சேரப் பெறாத வருத்தத்தினால் அவனைக் 'கொடிய கடிய திருமால்" என்கிறாள் ஆண்டாள். இதே போல் நாயகி தசையில் நம்மாழ்வாரும் "அருளாத திருமாலார்க்கு" (திருவாய்மொழி 1-4-7) என்று அருளிச் செய்கிறார். இப்படி அவன் அருளாத இடத்திலும் அவனை 'திருமால்' என்று பிராட்டியோடு அவனுக்குள்ள தொடர்பைக் கூறுவதற்குக் காரணம் என்ன என்பது பற்றி ஒரு சில **நிர்வாஹங்கள்** *கூறப்படுகின்றன.*

விளக்கம்

"திருமால் என்று பெரிய பிராட்டியாரைப் புருஷகாராமாக (அதாவது தம்மை எம்பெருமானுடன் சேர்த்து வைப்பதற்குச் சிபாரிசு செய்பவளாக) அனுஸந்திக்கிறார் நம்மாழ்வார்" என்று முன்புள்ள ஆசார்யர்கள் அருளிச் செய்வார்களாம். "அவனுடைய அருளைப் பெறுவதற்கன்றோ பிராட்டியின் புருஷகாரம் வேண்டும். இப்போது அவன் அருளாமையைக் கூறும் போது பிராட்டியை புருஷகாரமாக அநுஸந்திப்பது பொருந்தவில்லையே! பின் ஆழ்வார் அப்படி அருளிச் செய்தமைக்குக் கருத்து என்ன?" என்று **நஞ்சீயர்** *பிள்ளானைக் கேட்டார். அதற்குப்* **பிள்ளான்** *"இப்படி நம்மை மிகவும் துன்புறுத்துவதற்குக் அவன் கற்றுக் கொண்டது அவளிடம் தானே! என்று அவளையும் சேர்த்து வெறுக்கிறார் ஆழ்வார்" என்று பதிலளித்தாராம்.*

பிள்ளான் கருத்து பொருந்துமா என்று அறியவெண்ணிய நஞ்சீயர் இதை பட்டரிடம் விண்ணப்பிக்க, "எம்பெருமானைப் பெறுவதற்குக் காரணம் பிராட்டியே என்றிருக்கும் ஆழ்வார், அவனைப் பெறாமைக்கும் அவளே காரணம் என்று வெறுத்து வார்த்தை சொல்வதில் தவறில்லையன்றோ!" ஆதலால் பிள்ளான் அருளியது பொருந்தும்" என்று பட்டர் கூறினார் என்று நஞ்சீயர் அருளிச் செய்வர்!

[155]

(பட்டி மேய்ந்து) "வானிளவரசு என்கிறபடியே திருவனந்தாழ்வான் மடியிலும் ஸ்ரீஸேநாபதியாழ்வான் பிரம்பின் கீழிலும், பெரிய திருவடி சிறகின் கீழிலுமாய்த்து இத்தத்த்வம் வளருவது" என்றாய்த்து ப$_4$ட்டர் அருளிச் செய்வது.

(நாச்சியார் திருமொழி 14-1)

நிகழ்டம்

'பட்டிமேய்ந்தோர் காரேறு' (கண்ணபிரானாகிய கறுத்த காளையானது காவல் இல்லாமல் இஷ்டப்படி திரிந்தது) என்று ஆண்டாள் அருளிச்செய்கிறாள். பரமபதத்திலே இருந்தபோதும் கட்டுண்ட காளைபோல் இருந்தவன் கண்ணனாக அவதரித்த பின்பே இஷ்டப்படி திரியும் காளையானான் என்று விளக்கிய உரையாசிரியர், பரமபதத்தில் காவலுக்குக் கட்டுப்பட்டே எம்பெருமான் இருப்பான் என்று பட்டர் அருளிச்செய்த **வார்த்தை** *ஒன்றை எடுத்துக் காட்டுகிறார்.*

விளக்கம்

எண் 18ன் விளக்கம் பார்க்க.

[156]

(இட்டீறிட்டு) ... "अवाकि अनादर: (அவாகி அநாத$_3$ர:) என்கிற தத்த்வம் இட்டீறிட்டு என்னும்படியிருப்பதே! என்று சிறியாத்தான் போர வித்$_3$த$_4$ராயிருக்கும்" என்று அருளிச் செய்வர்.

(நாச்சியார் திருமொழி 14-1)

நிகழ்டம்

கண்ணபிரான் திருவாய்ப்பாடியில் தன் விருப்பப்படி திரிந்து விளையாடியதை 'இட்டீறிட்டு விளையாடி' என்கிறாள் ஆண்டாள். தன்னுடைய மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் வகையில் குதித்தல், கூச்சலிடுதல் முதலியவற்றைச்

1. எண் 441 பார்க்க.

செய்து கொண்டு கண்ணன் விளையாடினான் என்று இதற்குப் பொருளுரைத்த உரையாசிரியர், கண்ணபிரானுடைய இச்செயலில் சிறியாத்தான் மிகவும் ஈடுபட்டு அருளிச்செய்த **வார்த்தை** ஒன்றை எடுத்துக் காட்டுகின்றார்.

விளக்கம்

எம்பெருமானை 'அவாகி அநாதர:' என்று சாந்தோக்ய உபநிஷத் (3-14-2) கூறுகிறது. அதாவது மிகவும் மதிப்புடையவனாகையால் ஒருவரிடமும் பேசாதவனாகவும் ஒரு பொருளிடத்தும் விருப்பம் அற்றவனாகவும் உள்ளவன் பரமாத்மா என்று அந்த உபநிஷத் கூறுகிறது. அப்படிப்பட்ட பரமாத்மா கண்ணபிரானாக அவதரித்து, 'இட்டீறிட்டு விளையாடி' என்று சொல்லும்படி ஆவதே! என்று மிகவும் ஈடுபட்டிருப்பர் **சிறியாத்தான்** என்று **நம்பிள்ளை** அருளிச் செய்வர். (இவ்வுலகிலிருந்து விடுபட்டுப் பரமபதம் அடைந்து எம்பெருமானை அனுபவிக்கும் முக்தன் அவ்வானந்தத்தால் 'ஹாவு ஹாவு' என்று ஸாமகானம் பண்ணிக் கூக்குரலிடுவதுபோல், எம்பெருமானும் அவ்வுலகிலிருந்து இங்கு வந்து கண்ணனாக அவதரித்து, தன் எளிமைக் குணங்களை வெளிப்படுத்த வாய்ப்புக் கிடைத்தபடியினால், மிகுந்த ஆனந்தமடைந்து கூப்பிடத் தொடங்கினான் என்பது கருத்தாகும்.)

[157]

(மேலால் இத்யாதி) "வினதை சிறுவன் என்றபடி என்தான் ஆண்டாள்!" என்றருளிச் செய்வர் விக்ஞரூராய்.

(நாச்சியார் திருமொழி 14–3)

நிகழ்டம்

மேலே பரவின வெய்யிலைக் கண்ணபிரானுடைய திருமேனிமேல் படாமல் தடுப்பதற்காக கருடன் தனது சிறகுகளை விரித்துக் கொள்ள, அந்த மேற்கட்டியின் கீழே எழுந்தருளுவன் கண்ணன் என்ற பொருளில் "மேலால் பரந்த வெயில் காப்பான் வினதை சிறுவன் சிறகென்னும் மேலாப்பின் கீழ் வருவானை" என்றருளிச் செய்கிறாள் ஆண்டாள். இங்கு, கருடனை 'வினதை சிறுவன்' என்று ஆண்டாள் குறிப்பிட்டதன் நயத்தை வியந்து நம்பிள்ளை அருளிச்செய்த **வார்த்தை** ஒன்று எடுத்துக் காட்டப்பெறுகிறது.

விளக்கம்

விநதை என்பவள் அவளுடைய சக்களத்தியான கத்ரு என்பவளிடம் ஒரு போட்டியில் தோற்றதனால் அடிமையாகிவிட, கத்ரு விநதையை வெய்யிலிலே நிற்க வைத்து வேலைகளைச் செய்யும்படி கூறினாள். அப்போது விநதையின் மகனான கருடன் தன் தாயின் மீது வெய்யில் படாதபடி தன் சிறகை விரித்துப்

பாதுகாத்தான் என்று மஹாபாரதத்தில் கூறப்படுகிறது.[1] அதேபோல் இங்கும் கண்ணபிரான் மீது வெய்யில் படாதபடி தன் சிறகை விரித்து அந்த நிழலின் கீழ் கண்ணபிரான் எழுந்தருளும்படி பரிவுடன் இருக்கும் கருடனை 'வினதை சிறுவன்' என்னும் சொல்லால் ஆண்டாள் குறிப்பிட்டது எவ்வளவு பொருத்தமானது! தன்னுடைய தாயான வினதையையே தன் சிறகினால் வெய்யில் படாமல் காத்த கருடன், உலகுக்கெல்லாம் தாயான கண்ணபிரானை வெயில்படாமல் தன் சிறகினால் காக்கச் சொல்ல வேணுமோ! என்று மிகவும் ஈடுபட்டு அருளிச் செய்வராம் **நம்பிள்ளை.**[2] *மேலும் எம்பெருமானுக்கு அடிமை செய்பவன், பிராட்டியான தனக்கும் அடியவன் என்பது தோன்றுமாறு 'வினதை சிறுவன்' என்று ஆண்டாள் கருடனைப் பேரிட்டு அழைத்தது பற்றியும் நம்பிள்ளை மிகவும் ஈடுபட்டிருப்பர் என்றும் கொள்ளலாம்.*

[158]

'அயன் தன்னைத் தந்த' என்று பாடமானபோது 'இவ்வருகுண்டான கார்யவர்கூத்தையடைய நீயுண்டாக்கு என்று சதுர்முகஉனைத் தந்த என்றாகப் பெறில் அழகிது' என்று போர விரும்பி அருளிச் செய்வர்.

(நாச்சியார் திருமொழி 14-9)

நிகழிடம்

உலகங்களைப் படைப்பாயாக என்று பிரமன் முதலானவர்களைப் படைத்த (எம்பெருமான்) என்ற பொருளில் - "நாட்டைப் படை என்று அயன் முதலாத் தந்த" என்றருளிச் செய்கிறாள் ஆண்டாள். இங்கு நம்பிள்ளை அருளிச்செய்த **வார்த்தை** *ஒன்று கூறப்படுகிறது.*

விளக்கம்

இங்கு 'அயன் முதலா (முதலானவர்களை)த் தந்த' என்பதற்கு ஏற்ப 'படையுங்கள்' என்று பன்மையாக அன்றோ இருக்க வேண்டும்; 'படை' என்று ஒருமையில் உள்ளதே எனின், பிரமனால் தூண்டப்பட்டே மற்ற பிரஜாபதிகள் படைக்கின்றனர்; நேரே எம்பெருமானால் கட்டளையிடப்பட்டவன் பிரமன் ஒருவனே என்ற கருத்தில் தான் 'படை' என்று ஒருமையில் கூறப்படுகிறது. ஆனால் இங்கு 'அயன் முதலாத் தந்த' என்பதற்குப் பதிலாக 'அயன் தன்னைத் தந்த' என்று பாடம் கொண்டால் 'அண்டத்திற்குள் இருக்கும் காரியப் பொருள்

1. இச் செய்திகள் மஹாபாரதம் ஆதிபர்வம் 24ம் அத்யாயத்தில் விரிவாகக் காணத் தக்கன.

2. இங்கு ஐதிஹ்யத்தில் இப்படி அருளிச் செய்தவர் பெயர் குறிப்பிடப்படவில்லை என்றாலும், பெரியவாச்சான் பிள்ளை வ்யாக்யானத்தில் பெரும்பாலும் நம்பிள்ளையைப் பெயர் குறிப்பிடாமல் பொதுவாக 'அருளிச்செய்வர்' என்றே குறிப்பிடுவது வழக்கம். (எண் 148,156,158 முதலியன பார்க்க)

முழுவதையும் நீ படை' என்று நான்முகனை படைத்த (எம்பெருமான்) என்று பொருள்படும். இது 'படை' என்றுள்ள ஒருமைக்கு மிகவும் பொருத்தமாக அமைந்திருப்பதால் இப்பாடம் மிகவும் அழகியது என்று நம்பிள்ளை மிகவும் விரும்பி அருளிச் செய்வராம்.

[159]

(மெய் தழும்பத் தொழுது) ப்ரணாமம் பண்ணினபடி தோற்ற உடம்பெல்லாம் தழும்பாக, சிறியாத்தானைப் போலே.

(பெருமாள் திருமொழி 2-4)

நிகழிடம்

அடியவர்கள் பெருமையைப் போற்றுகின்ற குலசேகராழ்வார், 'நாத் தழும்பெழ நாரணா என்று அழைத்து மெய்தழும்பத் தொழுது ஏத்தி இன்புறும் தொண்டர்' என்றருளிச்செய்கின்றார். இங்கு 'மெய் தழும்பத் தொழுது' என்றதற்குச் சிறியாத்தான் என்பவரை **உதாரணம்** கூறுகிறார் உரையாசிரியர்.

விளக்கம்

'மெய் தழும்பத் தொழுது' என்றதற்கு, வணங்கித் தொழுததனால் உடம்பெல்லாம் தழும்பாகும்படி தொழுது என்று பொருளுரைத்து, சிறியாத்தான் எனும் ஆசார்யரை உதாரணம் காட்டுகிறார். சிறியாத்தான் மிகவும் சிறந்த அனுஷ்டானங்கள் உடையவராதலின், அவர் உடம்பெல்லாம் தழும்பாகும்படி வணங்குபவர் ஆதலால், அவரைப் போன்றவரையே இங்கு குலசேகராழ்வார் கூறுகிறார் என்பது உரையாசிரியரின் கருத்தாகும்.

[160]

(ஏதேனுமாவேனே) அனந்தாழ்வான் இவ்விடத்துக்கு "திருவேங்கடமுடையான் தானாகவும் அமையும்" என்னும். அதுக்கு ஹ்ருதயமென்னென்னில் ஶேஷபூதர் திரளுக்குப் புறம்பான ஶேஷியாகிலும் அமையும் என்கை. அங்ஙனன்றிக்கே ப$_4$ட்டர் அருளிச் செய்யும்படி: "நாமுமறிய வேண்டா, கண்டாருமறிந்து ப்ரலாகி$_2$க்க வேண்டா, திருமலையிலுள்ளதொரு பத$_3$ார்த்த$_2$மாக அமையும்" என்று.

(பெருமாள் திருமொழி 4-10)

நிகழிடம்

குலசேகராழ்வார் அருளிச் செய்துள்ள பெருமாள் திருமொழியில் 'ஊனேறு செல்வத்து' எனும் பதிகத்தில் தமக்கு மானிடப் பிறவி வேண்டாமென்றும், திருவேங்கடமலையோடு தொடர்புடைய ஒரு பிறவியே வேண்டுமென்றும்

தமக்குள்ள ஆசையை வெளியிடுகிறார். திருவேங்கட மலையில் திருக்குளத்தில் ஒரு கொக்காகவோ, சுனைகளில் ஒரு மீனாகவோ, மலைமீது நிற்கும் ஒரு சண்பக மரமாகவோ, புதராகவோ, மலைச் சிகரமாகவோ, மலையில் பாயும் கானாறாகவோ, மலைக்கு வழியாகவோ, திருக்கோயிலில் கர்ப்பக்ருஹத்தின் முன்பு உள்ள ஒரு படியாகவோ தாம் ஆகவேண்டும் என்ற தம் உள்ளக் கிடக்கையைப் பலபாசுரங்களில் தெரிவித்த ஆழ்வார், முடிவில் ‘எம்பெருமான் பொன்மலை மேல் ஏதேனும் ஆவேனே’ என்கிறார். இது குறித்து அனந்தாழ்வான் அருளிச் செய்த **வார்த்தை** ஒன்று எடுத்துக்கூட்டப் பெறுகிறது.

விளக்கம்

“திருவேங்கடமலையில் நிரந்தரமாகத் தங்கியிருக்கும்படியான நிலையொன்றே ஆழ்வாருக்கு விருப்பமாகும். திருவேங்கடமுடையானாக மாறிவிட்டால் ஆழ்வாருக்கு அது கிடைக்குமென்றால் அப்படி மாறிவிடுவதற்கும் ஆழ்வாருக்கு விருப்பமே” என்று அனந்தாழ்வான் கூறினார். அதாவது ஜீவாத்மாக்கள் அனைவரும் எம்பெருமானுக்கு அடிமைப் பட்டவர்கள் என்பதுதான் அவர்களுடைய உண்மைத் தன்மை (ஸ்வரூபம்). அந்த நிலை மாறி, ஜீவாத்மாக்கள் திரளிலிருந்து மாறுபட்ட எம்பெருமானாகவே மாற விரும்புவது அந்த நிலைக்குக் கேடு விளைவிப்பதாகும் (ஸ்வரூப விருத்தமாகும்). அப்படி அது கேடு விளைவிப்பதாயினும் ஆயிடுக; திருமலையில் வாழ்ச்சி ஒன்றே வேண்டுவது என்று குலசேகராழ்வார் திருமலையில் வாழ்ச்சியையே விரும்புகிறார் என்பது அனந்தாழ்வான் அளிக்கும் விளக்கத்தின் கருத்தாகும்.[1]

‘ஏதேனும் ஆவேனே’ என்பதற்கு பட்டர் வேறுவகையாக விளக்கம் அளித்தார். அதாவது திருவேங்கடமலையில் இன்ன பொருளாக இருக்கிறோம் என்பதைத் தாமும் அறிந்து கொள்ள வேண்டாம்; அப்படித் தாம் இருப்பதைத் திருவேங்கடமுடையானும் கூட அறிய வேண்டாம். அப்படி இருப்பதைப் பார்ப்பவர்களும் ‘இவர் இப்படியாகிலும் திருவேங்கட மலையில் வசிக்க ஆசைப் படுவதே!’ என்று புகழவும் வேண்டாம். திருமலையில் எங்கோ ஒரு மூலையில் ஏதோவொன்றாக ஒருவரும் அறியாத வண்ணம் இருந்தாலும் போதும், திருமலையில் வசிக்கின்ற பேறு ஒன்றையே வேண்டுகிறார் ஆழ்வார்” என்பது பட்டருடைய விளக்கமாகும்.

1. ஸ்ரீ ராமானுஜருடைய கட்டளைப்படி அனந்தாழ்வான் திருவேங்கட மலைக்குச் சென்று அங்கு எழுந்தருளியிருக்கும் திருவேங்கடமுடையானுக்குத் தொண்டு செய்து வந்தவர் என்பது இங்கே நினைவு கூறத் தக்கது. அச் செய்திகளை குருபரம்பரை நூல்களில் காணலாம்.

[161]

(தருதுயரம் தடாயேல்) முதலிகள் எல்லோரும்கூடப் பெரிய திருமண்டபத்துக்குக் கீழாக இருந்து ரஹஸ்யார்த்$_3$ங்கள் விசாரித்து எழுந்தருளியிருப்பர்களாயிற்று. ஒரு நாள், "நித்ய ஸம்ஸாரியாய்ப் போந்தவனுக்கு ப$_4$க$_3$வத்$_3$ விஷயத்தில் ருசிபிறக்கைக்கு அடியென்?" என்று விசாரிக்கச் செய்தே, "யாத்$_3$ருச்சிக ஸுக்ருதம்" என்ன, "அஜ்ஞாத ஸுக்ருதம்" என்னப் பிறந்தது. அவ்வளவிலே, கிடாம்பிப் பெருமாளிருந்தவர், "நமக்கு ப$_4$க$_3$வத்ஸமாஶ்ரயணம் போலே ஸுக்ருததே$_3$வரென்று ஒருவர் உண்டோ ஆஶ்ரயணீயர்?" என்றார். பிள்ளை திருநறையூரரையர், "ஸுக்ருதம் என்று சொல்லுகிற நீர்தாம் நினைத்திருக்கிறது எத்தைக் காண்?" என்றார்.

(பெருமாள் திருமொழி 5-1)

நிகழிடம்

குலசேகர ஆழ்வார் 'தரு துயரம் தடாயேல் உன் சரணல்லால் சரணில்லை' (நீயே எனக்குத் தந்த இத்துன்பத்தை நீயே போக்காவிட்டாலும் உன் திருவடிகளைத் தவிர எனக்கு வேறு புகல் இல்லை) என்கிறார். அவரவர்கள் தாங்கள் செய்த நல்வினை தீவினைகளின் பயனாகவே இன்ப துன்பங்களை அடைகின்றனர் என்று சாத்திரங்கள் கூறுகையில், இவ்வாழ்வார் 'தரு துயரம்' என்று எம்பெருமானே தமக்குத் துன்பத்தை தந்ததாகக் கூறுவதற்குக் காரணம் என்ன என்ற கேள்வி எழுகிறது. ஒருவன் செய்த நல்வினை எம்பெருமானுடைய திருவுள்ளத்தில் மகிழ்ச்சியை ஏற்படுத்த, அது புண்ணியமாகக் கருதப்பட்டு அதனால் அவன் இன்பத்தை அனுபவிக்கிறான். அதேபோல் அவன் செய்கின்ற தீவினை எம்பெருமானுடைய திருவுள்ளத்தில் கோபத்தை ஏற்படுத்த, அது பாவமாகக் கருதப்பட்டு அதனால் அவ்வினையைச் செய்பவன் துன்பத்தை அனுபவிக்கிறான். எனவே ஒருவனுக்கு நேருகின்ற நன்மை தீமைகளுக்குக் காரணம் எம்பெருமானுடைய திருவுள்ளத்தில் ஏற்படும் மகிழ்ச்சியும் சீற்றமுமேயன்றி புண்ய பாவங்கள் என்பன தனிப்பட்டவையல்ல என்பது தான் இதற்கு விடை. இதை பூர்வாசார்யர்கள் கூறியுள்ளதாக ஓர் **ஐதிஹ்யம்** *கூறப்படுகிறது.*

விளக்கம்

முற்காலத்தில் ஆசார்யர்கள் பலரும் திருவரங்கம் பெரிய கோயிலில், பெரிய திருமண்டபத்திற்குக் கிழக்குப் பக்கத்தில் இருந்து, திருவரங்கன் புறப்பாடு சேவிப்பதற்காகக் காத்துக் கொண்டிருப்பார்கள். அப்படிக் கூடியிருக்கும்போது ஸம்ப்ரதாய விஷயங்கள் பலவற்றைப் பற்றியும் சர்ச்சை செய்வது வழக்கம். (ஒரு நாள் அப்படிக் கூடியிருந்த போது ஒருவர் 'இதற்கு முன்னர் நாம் யார் வீட்டு

வாசலிலே காத்துக் கொண்டிருந்தோமோ நமக்குத் தெரியாது. இன்று நாம் எம்பெருமானுடைய புறப்பாட்டை எதிர்பார்த்து அவனுடைய வாசலிலே அன்றோ காத்துக் கொண்டிருக்கிறோம்! இதற்கு நாம் என்ன புண்ணியம் செய்திருக்கிறோமோ?" என்றார். இதைத் தொடர்ந்து)[1] "வெகு காலமாகப் பிறவியாகிற சுழலில் சிக்கித் தவிப்பவனுக்கு பகவானிடத்திலே ஈடுபாடு உண்டாவதற்குக் காரணம் என்ன?" என்ற சர்ச்சை எழுந்தது. 'ஒருவன் தற்செயலாகச் செய்த புண்ணியம்தான் இதற்குக் காரணம்' என்றும், 'ஒருவன் தன்னையுமறியாமல் செய்கின்ற புண்ணியம் தான் இதற்குக் காரணம்' என்றும் சிலர் கூறினர். அப்போது **கிடாம்பிப் பெருமாள்** என்பவர் "நாம் பற்ற வேண்டிய எம்பெருமான் போலே புண்ணியம் என்றொரு தேவதையும் நமக்கு உண்டோ?" என்றார். உடனே **பிள்ளை திருநறையூர் அரையர்**, "நீர்தான் புண்ணியம் என்று வேறொருவரை நினைத்திருக்கிறீரோ? புண்ணியம் என்று கூறுவதும் அந்த எம்பெருமானையேயன்றோ! எனவே அந்த எம்பெருமானேதான் இவனுக்குத் தன்னிடத்தில் ஈடுபாட்டை விளைவித்து பிறகு ஏற்றுக் கொள்கிறான்" என்றருளிச் செய்தார்.

[162]

(தடாயேல்) பிள்ளை திருநறையூரரையர் "ஒரு குருவி பிணைத்த பிணையல் ஒருவரால் அவிழ்க்க வொண்கிறதில்லை. ஒரு ஸர்வஶக்தி பிணைத்த பிணையை எலியெலும்பனான இவன் அவிழ்க்க வென்று ஒரு கார்யமில்லையிறே. அவன்றன்னையே கால்கட்டிப் போக்குமித்தனையிறே" என்றார்.

(பெருமாள் திருமொழி 5-1)

நிகழ்டம்

இவ்வுலக வாழ்க்கையாகிற இன்னலிருந்து தம்மை எம்பெருமானே விடுவிக்க வேண்டும் என்கிறார் குலசேகர ஆழ்வார். இத்தொடர்பில் பிள்ளை திருநறையூர் அரையர் அருளிச்செய்த **வார்த்தை** ஒன்று எடுத்துக் காட்டப்பெறுகிறது.

விளக்கம்

"ஒரு குருவி பிணைத்துக் கட்டிய கூட்டை ஒருவரால் பிரித்து அவிழ்க்க முடிவதில்லை; உலக வாழ்க்கையாகிற சிக்கலை எப்படி விடுவித்துக் கொள்ள

1. பிள்ளைலோகாசார்யர் அருளிச் செய்துள்ள ஸ்ரீவசன பூஷணத்தில் (சூ.385)

> 'பாஷ்யகாரர் காலத்திலே ஒரு நாள் பெருமாள் புறப்பட்டருளுந்தனையும் பார்த்துப் பெரிய திருமண்டபத்துக்கு கீழாக முதலிகள் எல்லாரும் திரளவிருந்தவளவிலே இவ்வர்த்தம் ப்ரஸ்துதமாக, பின்பு பிறந்த வார்த்தைகளை ஸ்மரிப்பது'

என்றருளிச் செய்துள்ளதும், அதற்கு மணவாளமாமுனிகள் அருளிச் செய்துள்ள வ்யாக்யானமும் காண்க. (இங்கே அடைப்புக் குறிக்குள் உள்ள செய்திகள் அந்த வ்யாக்யானத்தில் உள்ளவையே.)

Released by Maaran's Dog ,Toronto , Canada

முடியும்? அளவற்ற சக்தி படைத்தவனான எம்பெருமான் ஏற்படுத்திய இந்தச் சிக்கலை, மிகவும் குறைந்த சக்தி படைத்தவனான இவன் (ஜீவாத்மா) அவிழ்த்துக் கொள்வது என்பது இல்லை. எனவே, எம்பெருமானுடைய திருவடிகளைச் சரணடைந்து, அவனைக் கொண்டே இச்சிக்கலை விடுவித்துக் கொள்ள வேண்டும்'' என்று பிள்ளை திருநறையூர் அரையர் அருளிச்செய்வர்.[1]

[163]

(மற்றவள் தன் அருள் நினைத்தேயழுங்குழவி) நம்பி திருவழுதிவளநாடு தாஸரை முதலியாண்டான் கோபித்து, கையாலும் காலாலும் துகைத்து இழுத்தவாறே திண்ணையிலே பட்டினியே யொருநாள் போகாதே கிடந்தார். ஆண்டான் மற்றை நாள் அமுது செய்யப் புகுகிறார், "அவன் செய்ததென்?" என்று கேட்டவாறே, "பட்டினியே வாசலிலே கிடந்தான்" என்று கேட்டு அழைத்து, "நீ போகாதே கிடந்ததென்?" என்ன, "ஒரு நாள் ஒரு பிடி சோறிட்டவன் எல்லாப்படியாலும் தண்டித்தாலும் வாசல் விட்டுப் போகிறதில்லை, நான் எங்கே போவது?" என்றார்.

(பெருமாள் திருமொழி 5-1)

நிகழிடம்

"பெற்ற தாயானவள் தனது குழந்தை மீது கோபம் கொண்டு விலக்கினாலும், அக்குழந்தை தாயின் கருணையையே நினைத்து அழுவது போல, எம்பெருமானே! என் துன்பங்களை நீ போக்காவிட்டாலும் உன்னைத் தவிர எனக்கு வேறு புகலில்லை'' என்கிறார் குலசேகராழ்வார். இதற்கு எடுத்துக் காட்டாக ஓர் **ஐதிஹ்யம்** கூறப்படுகிறது.

விளக்கம்

முதலியாண்டான் ஒரு நாள் ஏதோ கோபத்தினால் தம்முடைய சீடரான நம்பி திருவழுதி வளநாடு தாஸரைக் கையாலும் காலாலும் உதைத்துத் தள்ளி, வீட்டு வாசல் திண்ணையிலே இழுத்து விட்டுவிட்டார். தாஸரோ, வேறெங்கும் போகாமல் திண்ணையிலேயே பட்டினி கிடந்தார். மறுநாள், முதலியாண்டான் உணவருந்தச் சென்றபோது முதல் நாள் நடந்தது நினைவுக்கு வர, "தாஸர் என்ன செய்கிறார்?" என்று கேட்க, "நேற்று முதல் பட்டினியாக வாசல் திண்ணையிலேயே கிடக்கிறார்'' என்ற பதில் கிடைத்தது. உடனே வாசலுக்கு வந்த முதலியாண்டான், "நான் உம்மை அப்படி அடித்துத் துன்புறுத்தியும் நீர் போகாமல் இங்கேயே இருப்பதற்குக் காரணம் என்ன?'' என்று கேட்டார். அதற்கு

1. பிள்ளைதிருநறையூரரையர் இவ்வாறு அருளிச்செய்தமை மற்றும் மூன்று இடங்களில் குறிப்பிடப் பெற்றுள்ளது. எண் 289, 408, 582 பார்க்க.

தாஸர் "ஒரு நாள் ஒருபிடி சோறிட்டவன் தன்னை எவ்வளவு துன்புறுத்தினாலும் அவனை விட்டுச் செல்வதில்லை ஒரு நாய். அப்படியிருக்கையில் அடியேன் மட்டும் தேவரீரை விட்டு எங்கே போவேன்?" என்றாராம். (அழியக்கூடிய உடலுக்காகச் சோறிட்டவனை நாய் விட்டுப் போவதில்லை. அழியாத ஆத்மாவுக்கு அன்னமாகிய எம்பெருமானை அனுபவிக்கச் செய்கின்ற ஆசார்யனை சிஷ்யன் விட்டுப் போகக் கூடாது என்றுதான் தாஸர் முதலியாண்டான் திருமாளிகையை விட்டு அகலாமல் கிடந்தார். இத்தகைய ஞானமுள்ள நம்பிதிருவழுதி வளநாடு தாஸருடைய பெருமையையும், ஆசார்யன் கோபித்தாலும் மனம் கன்றாமல் இருக்க வேண்டிய சீடனுடைய இலக்கணத்தையும் உலகத்தினர் அறியவேண்டும் என்பதற்காகவே முதலியாண்டான் தாஸரிடம் இவ்வாறு நடந்து கொண்டார் என்பது நினைவில் கொள்ளத்தக்கது.)

[164]

பிள்ளை திருநறையூரரையரை, பிள்ளைகள் "புகை சூழ்ந்தபடி ஸஹிக்கப் போகிறதில்லை" என்ன, "சற்றுப் போதன்றோ வ்யஸநப்படுவது, ஸ்ரீவைகுண்டநாதன் திருவடிகளிலே ஸுகமாயிருக்கவன்றோ புகுகிறது" என்றாரிறே.

(பெருமாள் திருமொழி 5-3)

நிகழிடம்

"வைத்தியன் கத்தியைக் கொண்டு தன் உடம்பில் உள்ள புண்ணை அறுத்தாலும், அவனிடத்தில் கோபம் கொள்ளாமல், அன்புடனிருக்கும் நோயாளியைப் போல், எம்பெருமானே! எனக்கு நீ எவ்வளவு துன்பங்களைத் தந்தாலும், அவற்றை நான் நன்மையாகவே கருதி உன்னுடைய அருளையே நோக்கியிருப்பேன்" என்கிறார் குலசேகர ஆழ்வார். இப்படித் துன்பம் ஏற்பட்ட போதும் அவனிடத்திலேயே அன்பு கொண்டிருப்பதை விளக்குவதற்காக ஒரு **ஐதிஹ்யம்** *எடுத்துக் காட்டப்படுகிறது.*

விளக்கம்

பிள்ளை திருநறையூர் அரையர் *தம் குடும்பத்தினருடன் ஒருமுறை (திருச்சியிலுள்ள) தொட்டியம் திருநாராயணபுரத்தில் கோயில் கொண்டுள்ள வேதநாராயணப் பெருமாளை ஸேவித்துக் கொண்டிருந்தபோது வேற்று மதத்தினர் சிலர் கோயிலுக்கு நெருப்பு வைத்து விட்டனர். உடனே கோயிலில் இருந்தவர்கள் அனைவரும் வெளியே ஓடிப்போய் விட்டனர். அப்போது பெருமாள் திருமேனியை நெருப்பு பாதிக்காத வண்ணம் தடுப்பதற்காக பிள்ளை திருநறையூரரையர், தம் பிள்ளைகளோடு சேர்ந்து, பெருமாள் திருமேனியைக் கட்டிக் கொண்டார். அப்போது எங்கும் நெருப்புச் சூழ்ந்து கொண்டு புகை முட்ட,*

மூச்சுக்கூட விடமுடியாமல் திணறிய அரையருடைய பிள்ளைகள், "எங்களால் பொறுக்க முடியவில்லையே!" என்று கூற, அரையர் "இன்னும் சிறிது நேரம் தான் துன்பம், பிறகு (இவ்வுலக வாழ்க்கையிலிருந்து விடுபட்டு) பரமபதம் சென்று பரமபத நாதன் திருவடிகளில் சுகமாக இருக்கலாம். அதுவரை பொறுத்துக் கொள்ளுங்கள்" என்றாராம்.[1] (மருத்துவன் உடம்பிலுள்ள புண்ணைக் கத்தியால் அறுக்கின்றபோது வேதனை உண்டானாலும் அது பிற்காலத்தில் நன்மையை உண்டாக்குகிறது. அதுபோல, அப்போது நெருப்பின் புகையினால் மூச்சுவிட முடியாமல் துன்பம் உண்டானாலும், அதைப் பொறுத்துக் கொண்டால் பிறகு அந்தமில் பேரின்பமான வைகுந்தமாநகர் வாழ்ச்சி கிட்டும் என்பது அரையரின் கருத்தாகும்.)

[165]

(என் சினம் தீர்வன் நானே) உய்ந்தபிள்ளை பாடா நிற்க, எம்பார் பார்த்தெழுந்தருளியிருக்க இவ்விடத்துக்கு அபி$_4$நயிக்கிறார், காலாலே பாய்ந்து தள்ளுவதாகக் காட்ட, அது கண்டருளி, "கெடுவாய்! அங்ஙனே செய்தானாகில் அவனுக்குப் பொல்லாதோ? அவனுக்கு அதன்றோ தேட்டம்! அங்ஙனன்று காணும்!" என்று கையையிட்டு முகத்தை மறைத்துத் திரிய வைத்தருளிக் காட்டினார்.

(பெருமாள் திருமொழி 6-8)

நிகழிடம்

கண்ணபிரான் மீது ஊடல் கொண்ட கோபிகையின் பாவனையில் ஒரு பதிகம் அருளிச் செய்கிறார் குலசேகராழ்வார். அதில் ஒரு பாசுரத்தில் "கண்ணபிரானே! இன்று நீ என்னை ஏமாற்றி விட்டு ஓடி விட்டாலும், மறுபடியும் இன்னொரு நாள் நீ என்னிடம் வரும் போது என் கோபத்தைத் தீர்த்துக் கொள்வேன்" என்று கோபிகை கூறுகிறாள். இத்தொடர்பில் ஓர் **ஐதிஹ்யம்** கூறப்பெறுகிறது.

விளக்கம்

திருவரங்கம் பெரிய கோயிலில் இப்பாசுரத்திற்கு **உய்ந்தபிள்ளை** எனும் அரையர் அபிநயம் செய்து கொண்டிருந்தபோது, எம்பாரும் அங்கு எழுந்தருளியிருந்தார். அரையர் "என் சினம் தீர்வன் நானே" என்பதற்கு அபிநயம் பிடிக்கும் வகையில், கையால் அடிப்பதும், காலால் உதைப்பதுமாய் அபிநயித்தார். அதாவது 'மறுபடியும் நீ என்முன் வருவாயானால், உன்னை நான் கையாலடித்தும் காலாலுதைத்தும் என் கோபத்தைத் தீர்த்துக் கொள்வேன்' என்று கோபிகை

1. ஸ்ரீவசனபூஷணத்தில் (சூ.84) "பிள்ளை திருநறையூரரையர் உடம்பையுபேக்ஷித்தார்" என்றுள்ளதும் அதற்கு மாமுனிகள் உரையும் காண்க.

கண்ணனிடம் கூறுவதாக அபிநயம் செய்தார். இதைக் கண்ட எம்பார், "கெடுவாய்! இவ்வாறு கோபிகை காலால் உதைத்தாளாகில் அது கண்ணனுக்கு வருத்தத்தை உண்டாக்குமோ? அவளுடைய கால் தன் மீது படப் பெற்றதே என்று அவன் மகிழ்வானன்றோ! ஆகையால் கோபிகை அப்படிச் செய்ய மாட்டாள்" என்று கூறிவிட்டு தம் கையால் முகத்தை மறைத்துக் கொண்டு, முகத்தைத் திருப்பிக் கொண்டு காட்டினார். அதாவது கண்ணபிரான் மறுபடியும் வரும்போது கோபிகை அவனுக்கு முகம் கொடாமல், முகத்தைத் திருப்பிக் கொண்டாலே அவன் வருத்தப்படுவான். எனவே அதைச் செய்து கோபிகை தன் கோபத்தைத் தணித்துக் கொள்வாள் என்ற கருத்துத் தோன்ற இப்படி எம்பார் அபிநயித்துக் காட்டினார்![1]

[166]

(சுற்றமெல்லாம் பின் தொடரத் தொல்கானம் அடைந்தவனே) "எல்லோரும் போனார்களோ? சிறிதிடம் போய் மீண்டது என்றன்றோ சொல்லிற்று" என்ன, "अहं सर्वं करिष्यामि (அஹம் ஸர்வம் கரிஷ்யாமி) என்று சொன்ன எல்லா அடிமையும் செய்யும் இளையபெருமாள் போகையாலே எல்லா ப$_3$ந்து$_4$க்களும் கூடப் போனார்களாய்த்திறே!" என்று எம்பெருமானார் அருளிச் செய்தருளினார்.

(பெருமாள் திருமொழி 8-6)

நிகழிடம்

"சுற்றமெல்லாம் பின்தொடரத் தொல்கானம் அடைந்தவனே" என்று எல்லா உறவினர்களும் பின் தொடர்ந்து வர, ராமபிரான் காட்டுக்கு எழுந்தருளினதாகக் குலசேகர ஆழ்வார் அருளிச் செய்கிறார். இத்தொடர்பில் ஒரு **ஸம்வாதம்** *எடுத்துக்காட்டப்பெறுகிறது.*

விளக்கம்

"உறவினர்கள் எல்லாரும் இராமபிரானுடன் கூடப் போகவில்லையே! சிறிது தூரம் இராமனுடன் சென்று விட்டுப் பிறகு ஊர் திரும்பி விட்டதாகவன்றோ ஸ்ரீராமாயணம் கூறுகின்றது![2] அப்படியிருக்க இவ்வாழ்வார்

1. இப்படி எம்பார் திருத்தியருளியமை மற்றோரிடத்திலும் குறிப்பிடப்பெறுகிறது. எண் 648 பார்க்க. இதே போல் வேறொரு பாசுரத்திற்கு உய்ந்தபிள்ளை அபிநயம் பிடித்த போதும் எம்பார் திருத்தம் கூறியது குறித்து எண் 8ல் காண்க.

2. இராமபிரான் காட்டுக்குப் புறப்பட்ட போது பிரிவாற்ற மாட்டாத மக்களும் கூடவே புறப்பட்டு, தமஸாநதிக்கரையில் இரவு தங்கியிருந்தபோது உறங்குகையில் இராமன் அவர்களை ஏமாற்றிவிட்டு தேரை ஓட்டிக் கொண்டு சென்ற பிறகு அவர்கள் கண் விழித்து இராமனைக் காணாமல் வருந்தி, மீண்டும் அயோத்திக்கே திரும்பி விட்டனர் என்ற வரலாறு ஸ்ரீராமாயணம் அயோத்யா காண்டம் 41,46,47 முதலிய ஸர்க்கங்களில் கூறப்படுகின்றன.

எல்லா உறவினர்களும் பின்தொடர ராமபிரான் காட்டுக்கு எழுந்தருளினதாகக் கூறுவது எப்படி பொருந்தும்?" என்று சிலர் கேட்க, அதற்கு எம்பெருமானார் "லக்ஷ்மணன் 'அஹம் ஸர்வம் கரிஷ்யாமி' (ரா.அ. 31-25) (நான் எல்லாவிதமான அடிமைகளும் செய்வேன்) என்று கூறி இராமபிரானைப் பின்தொடர்ந்தான் அன்றோ! எல்லா உறவினர்களும் செய்ய வேண்டிய அடிமைகளைச் செய்யுமவனாக லக்ஷ்மணன் ஒருவனே பின்தொடர்ந்து போனபடியால், எல்லா உறவினர்களும் இராமனைப் பின் தொடர்ந்ததாகக் கூறுவதில் தவறு ஒன்றும் இல்லை" என்றார்.

[167]

(நின் நாமம் கற்ற ஆவலிப்பு) நஞ்சீயர் "அப்ரயதனாய்க் கொண்டு திருநாமம் சொல்லலாமோ! ஆகாதோ?" என்று ப$_4$ட்டரைக் கேட்க, "க$_3$ங்க$_3$ாஸ்நாநம் பண்ணப்போமவனுக்கு உவர்க் குழியிலே தோய்ந்துபோகவேணுமோ? மேலுள்ள நன்மைகளைப் பண்ணிக் கொடுக்க வற்றானது கீழுள்ள அஶுத்$_3$தி$_4$யைப் போக்க மாட்டாதோ?" என்றருளிச் செய்தார்.

(திருமாலை 1)

நிகழ்டம்

எம்பெருமானுடைய திருநாமத்தைக் கற்றதனால் தமக்கு உண்டான வலிமையை 'நின் நாமம் கற்ற ஆவலிப்பு' என்று தொண்டரடிப்பொடியாழ்வார் அருளிச்செய்கிறார். மந்த்ரம் என்று கூறாமல் நாமம் என்று ஆழ்வார் அருளிச் செய்துள்ளார். மந்திரத்தைக் குறிப்பிட்ட காலத்தில்தான் கூறவேண்டும்; குறிப்பிட்ட தகுதி உள்ளவர்கள்தான் கூறவேண்டும் என்று சில நியமங்கள் உண்டு. ஆனால் எம்பெருமானுடைய திருநாமத்தைக் கூறுவதற்கு எந்த நியமும் இல்லை என்று காட்டுவதற்காகவே ஆழ்வார் நாமம் என்று அருளிச்செய்தள்ளார் என்று விளக்கும் உரையாசிரியர், இதுபற்றி **பட்டருக்கும் நஞ்சீயருக்கும்** *இடையே நடைபெற்ற* **ஸம்வாதம்** *ஒன்றை எடுத்துக்காட்டுகிறார்.*

விளக்கம்

எண் 66ன் விளக்கம் பார்க்க.

[168]

(கமலச் செங்கண்) "விக்$_3$ரஹமில்லை விபூ$_4$தியில்லை என்கிற ஶூன்யவாதி$_3$கள் ஸஞ்சரிக்கிற ஸம்ஸாரத்திலே இப்படி விக்$_3$ரஹத்தை ஆத$_3$ரித்த இவர்கள் உத்$_3$தே$_3$ஶ்யராகப் பெற்றோமே" என்று சீயர் அருளிச்செய்தார்.

(திருமாலை 2)

நிகழிடம்

எம்பெருமானுடைய திருமேனியை வர்ணிக்கின்ற தொண்டரடிப்பொடி ஆழ்வார், "பச்சைமாமலைபோல் மேனி பவளவாய் கமலச் செங்கண்" என்று அருளிச்செய்துள்ளார். இத்தொடர்பில் நஞ்சீயர் அருளிச்செய்த **வார்த்தை** *ஒன்று எடுத்துக் காட்டப்பெறுகிறது.*

விளக்கம்

"பரப்ரஹ்மத்திற்குத் திருமேனியே கிடையாது, குணங்களும் கிடையாது, உடைமைகளும் கிடையாது என்று கூறுகின்ற அத்வைதிகளான சூன்யவாதிகள் உலாவுகின்ற இந்த உலகத்தில், இப்படி அழகிய திருமேனியை உடையவன் எம்பெருமான் என்று அருளிச்செய்கின்ற ஆழ்வார்களைப் பற்றப் பெற்றோமே! இதுவன்றோ நம்முடைய பேறு!" என்று **நஞ்சீயர்** *அருளிச்செய்வராம்.*[1]

[169]

(காண்பரோ கேட்பரோதாம்) ஆழ்வான் இஷ்டஸித்$_{3}$தி$_{4}$ வாசிக்கிறவர்களோடேயிருந்து தாழ்த்து வர, ஆழ்வார் ஆழ்வானுக்குச் சொன்ன வார்த்தையை அநுஸந்தி$_{4}$ப்பது.

(திருமாலை 7)

நிகழிடம்

"புலையறமாகி நின்ற புத்தொடு சமணம் எல்லாம் கலையறக் கற்ற மாந்தர் காண்பரோ கேட்பரோதாம்" (வேதங்களுக்குப் புறம்பாக உள்ளதாயிருக்கின்ற பௌத்தமதம், சமணமதம், முதலியவற்றை வேதங்களிலே கரை கண்டவர்கள் நெஞ்சாலும் நினைக்க மாட்டார்கள், காதலும் கேட்க மாட்டார்கள்) என்கிறார் தொண்டரடிப் பொடியாழ்வார். இதற்குச் சான்றாக ஓர் **ஐதிஹ்யம்** *எடுத்துக் காட்டப்படுகிறது.*

விளக்கம்

கூரத்தாழ்வான் *சிறு வயதினராயிருந்த பொழுது ஒரு முறை ஓரிடத்தில் யாரோவொருவர் 'இஷ்டஸித்தி' என்கிற ஸாங்கிய மதநூலை விளக்கிக் கொண்டிருந்ததைக் கேட்டுக் கொண்டு அங்கேயே சிறிது நேரம் நின்று விட்டார். பிறகு தாமதித்து இல்லம் திரும்பியதைக் கண்ட அவருடைய தகப்பனாரான* **கூரத்து ஆழ்வார்** *"இத்தனைபோது தாமதம் ஏன்?" என்று கேட்க, ஆழ்வான் காரணத்தைக் கூறினார். உடனே அவருடைய தகப்பனார் "புலையறமாகி நின்ற*

1. நஞ்சீயர் முதலில் வேதாந்தி என்ற பெயருடைய அத்வைதியாய்த் திகழ்ந்து, பிறகு பட்டரால் திருத்திப் பணி கொள்ளப்பட்டு பரம வைஷ்ணவராக ஆனவர். அவரே இப்படிக் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. நஞ்சீயர் இக் கருத்துகளைக் கூறியதாக எண் 475லும் குறிப்பிடப்பெறுகிறது.

புத்தொடு சமணமெல்லாம் கலையறக் கற்ற மாந்தர் காண்பரோ கேட்பரோதாம்' என்று கூறி ஆழ்வானை மறுபடியும் நீராடி விட்டு வரச் சொல்லி ஸ்ரீபாத தீர்த்தம் கொடுத்துப் பரிசுத்தராக்கிய பின்பே இல்லத்தினுள் அனுமதித்தாராம்.

[170]

(நின் பால் பொறுப்பரியனகள் பேசில்) "விரக்தனானவன் ராஜ்யத்தை ஒன்றாக நினைத்து இப்படி ஶபிப்பானென்?" என்று நஞ்சீயர் ப$_4$ட்டரைக் கேட்க, "நாயைத் த$_3$ண்டி$_3$க்கையாகிறது அது தின்கிற அமேத்$_3$யத்தை விலக்குகை அன்றோ!" என்று அருளிச் செய்தார்.

(திருமாலை 8)

நிகழ்டம்

பகவானை நிந்தனை செய்யும் வகையில் சிலர் பேசுவதைக் கேட்க நேருமாகில் உயிரை விட்டு விடுவது சாலச் சிறந்தது. முடியுமானால் அப்படி நிந்தித்தவர்களுடைய தலையை அறுத்து விடுவதும் செய்யத் தக்கதுதான் என்று தொண்டரடிப்பொடியாழ்வார் அருளிச் செய்கிறார். இதற்குச் சான்றாக ஒரு இதிஹாஸமும் அதுகுறித்து பட்டருக்கும் நஞ்சீயருக்கும் இடையே நடைபெற்ற **ஸம்வாதம்** *ஒன்றும் எடுத்துக் காட்டப்படுகின்றன.*

விளக்கம்

ப்ரஹ்லாதனுடைய பேரனான மஹாபலி பகவானை நிந்தித்துச் சில வார்த்தைகளைக் கூற, அது கேட்ட ப்ரஹ்லாதன் "என் முன்னே நீ பகவானை நிந்திப்பதைக் காட்டிலும் என் தலையை நீயே அறுத்து விட்டால் எனக்குப் பேருபகாரமாகும். நீ பகவானை நிந்தித்ததற்காக உன் ராஜ்யத்தை இழக்கக் கடவாய்" என்று சபித்து விட்டான். "யதா மே சிரசஸ் சேதாதிதம் குருதரம் வச: த்வயோக்தமச்யுதாக்ஷேபி ராஜ்யப்ரஷ்டஸ் ததா பத" (இப்படிக் கொடிய வார்த்தைகளைப் பேசுவதைக் காட்டிலும் என் தலையை அறுத்துவிடுவது நல்லது. அச்சுதனை நிந்தை செய்த நீ ராஜ்யத்தை இழந்து விடுவாய்) என்று ப்ரஹ்லாதன் கூறியதாக ஸ்ரீவிஷ்ணுதர்மத்தில் (66-99) கூறப்பட்டுள்ளது. இதை இப்படியே பட்டர் விரித்துரைக்கக் கேட்ட நஞ்சீயர், "செல்வம் என்பதைப் பற்றற்றவர்கள் ஒருபொருட்டாக மதிக்க மாட்டார்களே! அப்படியிருக்க, பற்றற்றவனான ப்ரஹ்லாதன், ராஜ்யத்தை ஒரு பொருட்டாக மதித்து அதை இழக்க வேண்டும் என்று மஹாபலியைச் சபித்தது ஏன்? அவன் நற்கதியை அடையமாட்டான் என்றல்லவோ சபித்திருக்க வேண்டும்?" என்று கேட்டார். அதற்கு பட்டர் "நாயை தண்டிக்க வேண்டும் என்றால் அது விரும்பித்தின்கிற மலத்தைத் தானே விலக்க வேண்டும்! (சந்தனத்தை விலக்குவது நாய்க்கு தண்டனையன்று அன்றோ!) அதுபோல மஹாபலியைத் தண்டிப்பதற்காக, அவன் விரும்பிய ராஜ்யத்தையே

இழக்க வேண்டுமென்று சபித்தான் ப்ரஹ்லாதன்" என்று பதில் அருளிச் செய்தார்!

[171]

(போவதே நோயதாகி) பிள்ளை திருநறையூரரையரைப்போலே ஸத்வப்ரசுரனாயிருந்தானாகில் அவன் நிந்தையே நோயாக முடிந்து போவது.

(திருமாலை 8)

நிகழிடம்

'நின்பால் பொறுப்பரியனகள் பேசில் போவதே நோயதாகி', (உன்விஷயத்தில் பொறுக்கமுடியாத வசவுகளைக் கூறுவார்களாயின் அதுவே நோயாகி முடிவது) என்கிறார் தொண்டரடிப்பொடி ஆழ்வார். அதாவது, எம்பெருமானைப் பற்றிப் பொறுக்கமுடியாத வசவுகளைப் பிறர் கூறக் கேட்கவேண்டிவந்தால், அதுவே காரணமாக உயிரைமாய்த்துக் கொள்வதே நலம் என்றபடி. எம்பெருமானுக்குப் பிறர் தீங்கு செய்தபோது, அதைப் பொறுக்க முடியாமல் தம்முடைய உயிரை மாய்த்துக் கொண்ட பிள்ளை திருநறையூர் அரையரை இங்கு ***உதாரணம்*** *காட்டுகிறார் உரையாசிரியர்.*

விளக்கம்

எண் 164ன் விளக்கம் காண்க.

[172]

(கழலிணை பணிமினீரே) யயாதி இந்த்₃ரனோடே ஏகாஸனத்திலே இருந்தவளவிலே "கர்மபூ₄மியிலே புண்ய க்ருத்துக்களாய்ப் போருவார் ஆரோ?" என்ன, அஸத்யம் சொல்லலாகாது என்னும் நினைவாலே "நான் வர்த்திக்கிற நாளிலே என்னைச் சொல்லுவார்கள்" என்ன, ஏகாஸனத்தில் இருந்தது பொறாமையாலே "ஆத்மப்ரஸம்ஸை பண்ணினாய்" என்று 'த்₄வம்ஸ' என்று தலை கீழ்ப்படத் தள்ளினான் என்று உண்டாயிருந்தது; "வேதோ₃பப்₃ருஹ்மணார்த்த₂மாக ப்ரவ்ருத்தமான மஹாபா₄ரதத்தில் இது என்ன வேதா₃ர்த்த₂ம் சொல்லுகிறது என்று குறைப்பட்டிருக்கும்" என்ன, "அவனே ஆஶ்ரயணீயன் என்னும் இவ்வர்த்த₂ம் சொல்லுகிறது" என்றருளிச் செய்தார்.

(திருமாலை - 9)

1. நஞ்சீயருக்கும் பட்டருக்குமிடையே நடைபெற்ற இந்த ஸம்வாதம் மற்றோரிடத்திலும் குறிப்பிடப்பெற்றுள்ளது. எண் 586 பார்க்க.

நிகழிடம்

''கற்றினம் மேய்த்த எந்தை கழலிணை பணிமின் நீரே'' என்று தொண்டரடிப்பொடியாழ்வார் அருளிச்செய்கிறார். எம்பெருமான் ஒருவனே தான் அவதரித்துத் தாழ நின்ற நிலையிலும் தன்னைப் பற்றினவர்களுக்குத் தனக்குச் சமமான நிலையினைக் கொடுப்பான் என்றும், மற்ற தெய்வங்களுக்கு இப்பெருமை இல்லை என்றும் விளக்கிய உரையாசிரியர், இதற்குச் சான்றாக ஒரு இதிஹாஸம், அது குறித்து எழுந்த **ஸம்வாதம்** ஆகியவற்றைக் காட்டுகிறார்.

விளக்கம்

யயாதி என்பவன் நூறு அச்வமேத யாகங்கள் செய்து, அதன் பயனாக இந்திரலோகம் அடைந்து இந்திரனுக்குச் சமமான ஆசனத்தில் அமரும் பேறு பெற்றான். இதைச் சகியாத இந்திரன் தந்திரமாக யயாதியைக் கீழே தள்ளிவிட வேண்டுமென்று எண்ணி, "பூமியில் மிகவும் புண்ணியம் செய்தவர் யார் என்று கூற முடியுமா?" என்று யயாதியைக் கேட்டான். யயாதி, பொய் சொல்லக் கூடாது என்று அஞ்சி, "நான் பூமண்டலத்தில் வசித்து வந்த போது என்னைத் தான் புண்ணியசாலி என்று எல்லோரும் கூறுவார்கள்" என்று கூறினான். உடனே இந்திரன் "நீ தற்புகழ்ச்சி செய்து கொண்டபடியால் என்னோடு சரிசமமாக உட்காருவதற்குத் தகுதியுடையவன் அல்லன்" என்று கூறி சுவர்க்கத்திலிருந்து தலை கீழாகத் தள்ளிவிட்டான் என்கிற வரலாறு மஹாபாரதத்தில் உள்ளது.[1] (இக்கதையை **பட்டர்** ஒருமுறை விளக்கிக் கொண்டிருந்தபோது, **பிள்ளை விழுப்பறையரும், ஆப்பான் திருவழுந்தூர் அரையரும்** பட்டரைக் நோக்கி)[2] "வேதத்திலுள்ள கருத்துகளை விளக்குவதற்காகவன்றோ மஹாபாரதம் தோன்றியது? வேதத்தின் எந்தக் கருத்தை இக்கதை விளக்குகின்றது?" என்று கேட்டார்கள். அதற்கு பட்டர், "தனக்குச் சமமாக யயாதி வந்து ஆஸனத்தில் அமர்ந்தது பொறுக்காமல், இந்திரன் அவனைத் தலைகீழாகத் தள்ளிவிட்டானல்லவா? எனவே, பிறரிடத்தில் ஒரு உயர்வு கண்டால் பிற தேவதைகள் பொறுக்க மாட்டார்கள். எம்பெருமான் ஒருவனே பிறருடைய வாழ்வு நம் வாழ்வு என்று நினைத்திருப்பவன். தனக்குச் சமமான நிலையை மற்றவர்களுக்குக் கொடுப்பவனும் அவனேயாவான். எனவே மற்ற தேவதைகள் வணங்கத் தக்கவர்களல்லர். ஸ்ரீமந் நாராயணன் ஒருவனே பற்றத் தக்கவன், என்கிற கருத்தை இக்கதை விளக்குகிறது" என்று அருளிச் செய்தார்.

1. யயாதி சுவர்க்கத்திலிருந்து இந்திரனால் சபிக்கப்பட்டு விழுந்த வரலாறு மஹாபாரதம், ஆதிபர்வம், 82வது அத்தியாயத்தில் காணத் தக்கது.

2. இந்த ஸம்வாதம் மற்றும் இரண்டு இடங்களில் (எண் 388, 587) இடம்பெற்றுள்ளது. எண் 587ல் பிள்ளை விழுப்பரையரும், ஆப்பான் திருவழுந்தூர் அரையரும் இக்கேள்வியைக் கேட்க, பட்டர் விடையளித்ததாகவுள்ளது.

[173]

(நம் சேவகனார்) நஞ்சீயர் இப்பாட்டைக் கேட்டவன்று, தம்மிலே அநுஸந்தி₄த்துப்போரா நிற்க, ஒரு ஸேவகனும் ஸ்த்ரீயும் விவாத₃ம் பண்ணினவளவிலே அவனுக்கு இவள் சொன்ன வார்த்தையைக் கேட்டு வித்₃த₄ரான வார்த்தையை அநுஸந்திப்பது - அதாகிறது, "பிணங்கினவளவிலே உன்னால் என்னை என் செய்யலாம்; ஏழைக்கும் பேதைக்குமன்றோ சாமந்தனார் பத்திரம் கட்டிற்று" என்றாள்.

(திருமாலை -11)

நிகழிடம்

நம்முடைய விரோதிகளையெல்லாம் போக்கி நம்மைக் காத்தருள்பவன் எம்பெருமான் என்ற கருத்தில் "நம் சேவகனார்" என்றருளிச் செய்கிறார் தொண்டரடிப் பொடியாழ்வார். இத்தொடர்பில் ஓர் ***ஐதிஹ்யம்*** *கூறப்படுகிறது.*

விளக்கம்

இப்பாசுரத்தை பட்டர் உபந்யஸிக்கக் கேட்ட நஞ்சியர், பிறகு 'நம்சேவகனார்' என்ற இந்த அர்த்தத்தையே நினைத்துக் கொண்டு சென்று கொண்டிருக்கையில், வழியில் ஒரு சேவகனும் அவனுடைய மனைவியும் சண்டையிட்டுக் கொண்டிருப்பதைக் கண்டார். அப்போது அந்தப் பெண், சேவகனைப் பார்த்து "உன்னால் என்னை என்ன செய்துவிட முடியும்? என் போன்ற ஏழைகளையும் பேதைகளையும் காப்பதற்காகவன்றோ அரசன் பட்டம் கட்டிக் கொண்டிருக்கின்றான்!" என்று கூறினாளாம். அதைக் கேட்ட நஞ்சீயர், 'நம் போன்ற எளியவர்களையும் காப்பவனன்றோ எம்பெருமான்' என்ற பொருளில் தொண்டரடிப்பொடி ஆழ்வார் 'நம் சேவகனார்' அருளிச் செய்துள்ள அதே கருத்தை இப்பெண்பிள்ளை அரசனைக் குறித்துக் கூறியதற்கு உள்ள ஒற்றுமையை நினைத்து வியந்தார்.[1]

[174]

ப₄ட்டரை ஆஶ்ரயித்த சோழசிகாமணிப் பல்லவராயர்க்கு रामलक्ष्मणगुप्ता सा **(ராமலக்ஷ்மணகு₃ப்தா ஸா) என்கிற ஶ்லோகத்தை அருளிச்செய்து**

1. விஷ்ணுவின் அம்சம் பெற்றவனே அரசனாவான். 'திருவுடை மன்னரைக் காணில் திருமாலைக் கண்டேனே என்னும் (திருவாய்மொழி 4-4-8) என்று பெரியாரும் பணிந்தார்' என்பர் பரிமேலழகர். (இறைமாட்சி-39). 'நாவிஷ்ணு: ப்ருதிவீபதி:' (விஷ்ணுவின் அம்சமல்லதவன் அரசனல்ல) என்றும் கூறப்பட்டுள்ளது. விஷ்ணுவின் அம்சமான அரசனே எளியவர்களைக் காப்பவன் என்றால், அம்சியான எம்பெருமான் எளியவர்களைக் காப்பவன் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ என்று நஞ்சீயர் வியந்தார்.

"கடற்கரையில் வெளியை நினைத்திரும்" என்றத்தை அநுஸந்தி$_4$ப்பது. அத்தைக் கூடக் கேட்டிருந்த நஞ்சீயரும் பிள்ளை விழுப்பரையரும் நம்பி ஸ்ரீ கோ$_3$வர்த்$_3$த$_4$ந தா$_3$ஸருமாக இதுக்குச் சேர்ந்திருந்ததென்று "இலை துணை மற்றென் நெஞ்சே" என்கிற பாட்டை அநுஸந்தி$_4$த்தார்கள்.

(திருமாலை – 11)

நிகழ்டம்

'நம்முடைய விரோதிகளைப் போக்கி நம்மைக் காத்தருள்பவன் ராமபிரானே' என்றருளிச் செய்கிறார் தொண்டரடிப் பொடியாழ்வார். இதை விளக்க ஓர் **ஐதிஹ்யம்** *எடுத்துக் காட்டப் படுகிறது.*

விளக்கம்

பராசர பட்டர், *தம்மை அடிபணிந்தவரான* **சோழ சிகாமணிப் பல்லவராயர்** *என்பவருக்குத் தஞ்சமாக "ராமலக்ஷ்மணகுப்தா ஸா" என்கிற ஸ்ரீராமாயண சுலோகத்தை விளக்கி உரைத்தாராம். அதாவது வானர சைன்யத்துடன் கடலைக் கடந்து இலங்கை சென்று சேர்ந்த இராமபிரான் கடற்கரையிலே ஓரிரவு தங்கினான்; அப்போது வானரர்கள் அனைவரும் இராமபிரானுக்கும் லக்ஷ்மணனுக்கும் ஒரு தீங்கும் வந்துவிடக் கூடாது என்பதற்காக அவர்களைச் சுற்றி இருந்து காவல் காத்து வந்தனர். ஆனால் அவர்களையுமறியாமல் உறக்கம் வந்து மேலிட, அவ்வானர வீரர்கள் அனைவரும் கண்ணயர்ந்து விட்டனர். அப்படி அவர்கள் உறங்கிவிட்ட போது, அந்த வானரர்களுக்கு அரக்கர்களால் யாதொரு தீங்கும் நேர்ந்து விடக் கூடாது என்பதற்காக இராமபிரானும் லக்ஷ்மணனும் கையும் வில்லுமாக அந்த வானரர்களைச் சுற்றி சுற்றி வந்து காவல் காத்தனர். இச் செய்தியை இராவணனால் அனுப்பப்பட்ட ஒற்றர்களான சுக சாரணர்கள் இராவணனுக்குத் தெரிவிக்கின்றனர்: "ராமலக்ஷ்மணகுப்தா ஸா ஸுக்ரீவேண ச வாஹிநீ, பபூவ துர்தர்ஷதரா ஸர்வைரபி ஸுராஸுரை:" (ரா. யு. 25-32) (ராமனாலும் லக்ஷ்மணனாலும் காக்கப்பட்ட, ஸுக்ரீவனோடு கூடிய அந்தச் சேனையானது இந்திரனுள்ளிட்ட தேவர்களாலும் அணுக முடியாததாய் விளங்குகிறது.) என்கிற இந்த சுலோகத்தை[1] விளக்கிக் கூறி இப்படிக் கடற்கரை வெளியில் வானரர்களைக் காத்தவனே நம்மையும் காப்பான் என்று நினைத்திரும் என்று சோழசிகாமணிப்பல்லவராயர்க்கு, பராசர பட்டர் உபதேசித்தார். அப்படி உபதேசித்த போது* **பிள்ளை விழுப்பரையரும், நம்பி ஸ்ரீ கோவர்த்தன தாஸரும்**

இலை துணை மற்றென் நெஞ்சே ஈசனை வென்ற
சிலை கொண்ட செங்கண்மால் சேரா - குலை கொண்ட
ஈரைந் தலையான் இலங்கையை யீடழித்த
கூரம்ப னல்லால் குறை. *(நான்முகன் திருவந்தாதி -8)*

1. நம்பிள்ளை ஈட்டில் (6-9-3) இந்த ச்லோகம் விரிவாக விளக்கப்பெறுவது காண்க.

(சிவனை வென்ற வில்லைப் பரசுராமனிடமிருந்து வாங்கிக் கொண்டவனும், தன்னை வணங்காத இராவணனை அழித்த கூரிய அம்புகளை உடையவனுமான இராமபிரானைத் தவிர்த்து நமக்கு வேறொரு துணையில்லை) என்று திருமழிசை ஆழ்வார் அருளிச்செய்த பாசுரத்தை அனுஸந்தித்து, அப்பாசுரமும் இதே கருத்தைத் தெரிவிக்கிறபடியால், இவ்வர்த்தத்திற்குச் சேர்ந்திருக்கும் என்று தெரிவித்தார்கள்.

[175]

(கண்ணனை) "யசோதைப் பிராட்டி, பிள்ளைமனம் கன்றாமல் தீம்பிலே கைவளரும்படி வளர்த்த மொசுமொசுப்பெல்லாம் தோற்றியிருக்கும் பெரிய பெருமாளைக் கண்டால் என்றும், வஸிஷ்டாதிகளாலே ஸுஶிக்ஷிதராய் வளர்ந்து வடிந்த விநயமெல்லாம் தோற்றும்படியான சக்ரவர்த்தி திருமகனை ஸ்மரிக்கலாம்படி இருக்கும் நம்பெருமாளைக் கண்டால்" என்றும் ப₄ட்டர் அருளிச் செய்வர்.

(திருமாலை 18)

நிகழிடம்

திருவரங்கத்தில் அரவணையில் பள்ளிக் கொண்டருளும் பெரியபெருமாளைத் "தனி கிடந்து அரசு செய்யும் - கண்ணன்" என்று கிருஷ்ணனாக அனுபவிக்கிறார் தொண்டரடிப்பொடியாழ்வார். இங்குப் பெரிய பெருமாளைக் கண்ணன் என்று ஆழ்வார் அருளியுள்ளது பற்றி பட்டர் அருளிச்செய்த **வார்த்தை** ஒன்று கூறப்படுகிறது.

விளக்கம்

திருவரங்கத்திலே எழுந்தருளியிருக்கும் மூலவருக்குப் 'பெரிய பெருமாள்' என்றும் உத்ஸவருக்கு 'நம் பெருமாள்' என்றும் திருநாமம் வழங்குவது ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தில் உள்ள மரபு. பள்ளி கொண்டு எழுந்தருளி யிருக்கும் மூலவரான பெரிய பெருமாளை க்ருஷ்ணன் என்றும், நின்ற திருக்கோலத்தில் எழுந்தருளியிருக்கும் உத்ஸவரான நம்பெருமாளை ராமன் என்றும் பராசரபட்டர் அருளிச் செய்வராம். அதாவது யசோதைப் பிராட்டி, கண்ணபிரான் மனம் வருந்தக் கூடாது என்பதற்காக அவன் தீம்புகளையெல்லாம் செய்யும்படி விட்டு விடுவாள்; கண்ணனும் தன் இஷ்டப்படி வெண்ணெயும், தயிரும், பாலும் நெய்யுமாக அமுது செய்வான். இதனால் அவனுடைய திருமேனியே மொசு மொசுப்பாக (தளதளவென்று) இருக்கும்; அப்படிப்பட்ட கண்ணபிரானுடைய திருமேனியை நினைவுறுத்தும் வகையில் பெரிய பெருமாளுடைய திருமேனியும் இருக்கும்; ஆனால் இராமபிரானோ வசிஷ்டர் முதலிய மகரிஷிகளாலே மிகவும் கண்டிப்புடன் வளர்க்கப்பட்டதால் வார்ந்து வடிந்து (வெட வெடவென்று) மிகவும் பணிவுடன் இருப்பான். அப்படிப்பட்ட

இராமனுடைய திருமேனியை நினைவுறுத்தும்படியிருக்கும் உத்ஸவரான நம்பெருமாளுடைய திருமேனி - என்பது பட்டருடைய விளக்கமாகும்.[1]

[176]

(குணதிசை பாதம் நீட்டி)'ஆளவந்தார் திருவடி தொழ எழுந்தருளினால் 'து₃ர்யோத₄ன ஸ்த₂ானம்' என்று திருமுடிப் பக்கத்தில் ஒரு ப்ரதே₃ஶத்தில் ஒரு நாளும் எழுந்தருளியிருந்தறியார். திருவாசலுக்குக் கிழக்கு எழுந்தருளியிராத ப்ரதே₃ஶமில்லை' என்று ப₄ட்டர் அருளிச் செய்வர்.

(*திருமாலை -19*)

நிகழிடம்

திருவரங்கத்தில் பள்ளிக் கொண்டிருக்கும் எம்பெருமானை வர்ணிக்கும் தொண்டரடிப்பொடி ஆழ்வார் 'குடதிசை முடியை வைத்து குணதிசை பாதம் நீட்டி' என்றருளிச் செய்கிறார். உலகெல்லாம் வணங்கும்படியான திருவடிகளைக் கிழக்குத் திசையில் நீட்டினபடியால் அத்திசைக்குப் பெருமை ஏற்பட்டது. இதை விளக்க, பட்டர் அருளிச் செய்ததாக ஓர் **ஐதிஹ்யம்** *கூறப்படுகிறது.*

விளக்கம்

ஆளவந்தார் *திருவரங்கம் பெரிய கோயிலுக்கு எழுந்தருளினால் (கோயிலில் புறப்பாடு சேவிப்பதற்கோ அல்லது வேறு காரணமாகவோ காத்திருக்க நேருமானால்) ஒரு நாளும் மேற்குப் புறத்தில் எந்த இடத்திலும் எழுந்தருளியிருக்க மாட்டாராம். எம்பெருமான் திருமுடியை அப்பக்கம் வைத்திருக்கின்றபடியால் அது துரியோதன ஸ்தானம்[2] என்று கருதி ஒரு நாளும் அப்பக்கத்தில் எழுந்தருளி யிருக்கமாட்டாராம். ஆனால் எம்பெருமான் திருவடிகளை நீட்டியுள்ள கிழக்குப் புறத்தில் ஆளவந்தார் எழுந்தருளி இராத இடமே இல்லை என்று* **பட்டர்** *அருளிச் செய்வர்.*

1. பட்டர் இவ்வாறு அருளிச்செய்தமை எண் 183லும் குறிப்பிடப்பெறுவது காண்க. எண் 44ம் காண்க.

2. மஹாபாரதப் போரில் தனக்குப் படையுதவி செய்ய வேண்டுமென்று வேண்டுவதற்காகக் கண்ணனிடம் துர்யோதனன் வந்தான். அப்போது கண்ணபிரான் சயனித்துக் கொண்டிருந்த படியால் அங்கேயே சற்று நேரம் அமர்ந்து கண்ணபிரான் எழும் வரை காத்திருக்க எண்ணினான். கண்ணனுடைய திருவடிகளின் கீழே அமர்வது தன் மதிப்புக்குக் குறைவு என்று எண்ணிக் கண்ணபிரானுடைய திருமுடிப் பக்கமிருந்த ஓர் ஆசனத்தில் அமர்ந்தான். அதேபோல் கண்ணனிடம் வந்த அர்ச்சுனனோ, கண்ணபிரானுடைய திருவடிப் பக்கமிருந்த ஆசனத்தில் அமர்ந்தான். (இச் செய்திகள் மஹாபாரதம், உத்யோக பர்வம் 7ம் அத்யாயத்தில் காணத்தக்கன.) துஷ்டனான துர்யோதனன் அமர்ந்தது திருமுடிப் பக்கமாதலால், பெரிய பெருமாள் திருமுடியை வைத்தருளியிருக்கின்ற மேற்கு திக்கை துர்யோதனஸ்தானம் என்று கருதி விலக்கினார் ஆளவந்தார்.

[177]

(ஒளியுளார் தாமேயன்றே தந்தையும் தாயுமாவார்) பின்பு சீராமப் பிள்ளையுடைய ஆபத்க₃ஶையிலே ப₄ட்டர் அருளிச் செய்ததாயிருக்கும்.

(திருமாலை 37)

நிகழ்டம்

திருவரங்கத்தில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானே நமக்கு எல்லா உறவும் என்றருளிச் செய்கிறார் தொண்டரடிப்பொடியாழ்வார். இதை விளக்க ஓர் **ஐதிஹ்யம்** கூறப்படுகிறது.

விளக்கம்

தர்மபுத்திரர் வனவாசத்தில் துன்பப்பட்டுக் கொண்டிருந்தபோது மார்க்கண்டேயர் எனும் மகரிஷி "ஸர்வேஷாமேவ லோகாநாம் பிதா மாதா ச மாதவ:" (பார. ஆர.192 - 56) (உலகுக்கெல்லாம் தந்தையும் தாயும் மாதவனே) என்று உபதேசித்தார். இதே சுலோகத்தை பட்டர், தம்முடைய தம்பியான சீராமப் பிள்ளைக்கு ஓர் துன்பம் வந்தபோது உபதேசித்தார்.

[178]

(அளியன் நம்பையல் என்னார்) ... மணக்கால் நம்பி, "நம் மாணி திருமகிழ்மாலைமார்வனுக்குத் திற" என்றாரிறே. பிள்ளைப் பிள்ளையாழ்வான் வாயாலே தம்பி அப்பிள்ளையாழ்வான் 'நம் மாணி' என்னப் பெற்றேன் என்றாரிறே.

(திருமாலை 37)

நிகழ்டம்

பெரிய பெருமாள் தம்முடைய திருவாயால் 'இவன் நம்முடைய பையன்' என்றருளிச் செய்ய வேணும் என்று ஆசைப்படுகிறார் தொண்டரடிப்பொடி ஆழ்வார். ஆசார்யர்கள் சிலர் சிஷ்யர்களை அப்படி அழைத்த **ஐதிஹ்யம்** காட்டப்படுகிறது.

விளக்கம்

மணக்கால் நம்பி ஒருமுறை "நம்முடைய மாணி (பிள்ளை) **திருமகிழ்மாலை மார்வனுக்குக்** கதவைத் திற" என்றருளிச் செய்தாராம். **தம்பி அப்பிள்ளை ஆழ்வான்** என்பவர், "**பிள்ளைப் பிள்ளையாழ்வான்** வாயாலே 'நம் மாணி' என்று அழைக்கப் பெற்றேன்" என்றாராம்.

[179]

(உன் கடைத் தலையிருந்து) திருக்கண்ணமங்கையாண்டான், ஒரு ஸம்ஸாரி தன் வாசலைப் பற்றிக் கிடந்ததொரு நாயை நலிந்தவனை வெட்டித் தானும் குத்திக் கொண்ட படியைக் கண்டு, 'ஒரு தே$_3$ஹாத்மாபி$_4$மானியளவு இதுவானால், பரமசேதநன் யமாதி$_3$கள் கையில் நம்மை விட்டுக் கொடான்' என்று திருவாசலைப் பற்றிக் கிடந்தானிறே.

(திருமாலை-38)

நிகழ்டம்

தன்னிடத்தில் எல்லாப் பொறுப்புகளையும் ஒப்படைத்து விட்டுத் தன்னுடைய திருவாசலைப் பற்றியிருப்பவர்களைக் குறித்து எம்பெருமான் மிகவும் மகிழ்ச்சி கொண்டிருப்பான் என்கிறார் தொண்டரடிப்பொடி ஆழ்வார். அப்படியிருந்த ஆசார்யர் ஒருவரைப் பற்றி ஓர் **ஐதிஹ்யம்** *கூறப்படுகிறது.*

விளக்கம்

ஒருவன் மிகவும் ஆசையுடன் ஒரு நாயை வளர்த்து வந்தான். யாரோ ஒருவன் அந்த நாயை அடித்துவிட்டான். இதைக்கண்ட நாயின் சொந்தக்காரன் மிகவும் கோபம் கொண்டு, தன்னுடைய நாயை அடித்தவனைக் கத்தியால் குத்திவிட, அவன் மரணம் அடைந்து விட்டான். நாயின் சொந்தக்காரன் இதைக் கண்டு பயந்து, தனக்கு ஏதாவது தண்டனை கிடைத்துவிடுமோ என்ற அச்சத்தால் தன்னைத்தானே குத்திக் கொண்டு மாண்டுவிட்டான். இதை, வீதியிலே எழுந்தருளிக் கொண்டிருந்த **திருக்கண்ணமங்கை ஆண்டான்** *பார்த்தார். 'தேஹாத்மாபிமானியான மனிதன் ஒருவன், தன் வாசலைப் பற்றிக் கிடந்த ஒரு நாய்க்குப் பரிந்து கொண்டு இப்படி உயிரை விடுவானாயின், நாம் பரமசேதனனான எம்பெருமானுடைய திருவாசலைப் பற்றிக் கிடந்தால் யமன் முதலானோரிடத்தில் நம்மை நிச்சயம் விட்டுக் கொடுக்கமாட்டான்' என்று திருவுள்ளம் பற்றினார். அப்போதே தம்மைத் தாம் காப்பாற்றிக் கொள்ளும் செயல்கள் அனைத்தையும் விட்டுவிட்டுத் திருக்கண்ணமங்கைப் பத்தராவிப் பெருமாள் திருக்கோயில் கோபுர வாசற்புடையில் சாய்ந்தருளினார்.*[1]

[180]

(ஏலும்) ஸர்ப்பாஸ்யத்திலேயகப்பட்ட மண்டூ$_3$கத்தினுடைய ஆர்த்தியைக் கேட்டு 'இது ஆர் அறிந்து விடுவிக்கக் கூப்பிடுகிறது?' என்று ஆழ்வான் மோஹித்தான்.

(திருமாலை - 41)

1. "திருக்கண்ணமங்கையாண்டான் ஸ்வவ்யாபாரத்தை விட்டான்" என்கிற ஸ்ரீவசனபூஷண ஸூத்ரமும் (82) அதன் வியாக்கியானமும் காண்க. எண் 765 காண்க.

நிகழிடம்

'தாங்கள் கொடிய செயல்களைச் செய்பவர்களாயும், பிறரைக் கொண்டு கொடிய செயல்களைச் செய்விப்பவர்களாயும் இருப்பவர்களாயினும் எம்பெருமானுடைய நாமங்களைச் சொல்பவர்களாயின் அவர்கள் மிகவும் உயர்ந்தவர்களே' என்கிறார் தொண்டரடிப்பொடியாழ்வார். இதை விளக்குகின்ற உரையாசிரியர் எம்பெருமானுடைய திருநாமத்தைச் சொல்பவர்கள், கொடிய செயல்களைச் செய்வது என்பது இல்லையாதலால் அவர்கள், மெய்யறிவு பிறப்பதற்கு முன்பிருந்த நிலையையே ஆழ்வார் குறிப்பிடுகிறார் என்று உரையிடுகின்றார். அப்படி மெய்யறிவு பிறந்து விட்டால் பிறருக்குத் துன்பத்தை அவர்கள் விளைக்கமாட்டார்கள் என்பது மட்டுமல்ல, மற்றவர்களுடைய துன்பத்தைக் கண்டு மோகித்து விடுவார்கள் என்றும் கூறுகிறார். அப்படி மோகித்து விழுந்த ஆசார்யர் ஒருவரைப் பற்றிய **ஐதிஹ்யம்** *ஒன்றையும் எடுத்துக் காட்டுகிறார்.*

விளக்கம்

ஒரு தவளையைப் பாம்பு விழுங்கிக் கொண்டிருந்தபோது அந்தத் தவளையானது கூக்குரலிட்டது. அவ்வழியாகச் சென்று கொண்டிருந்த **கூரத்தாழ்வான்** *மிகவும் மென்மையான இதயம் படைத்தவராதலின், "இத்தவளையைப் பாம்பின் வாயிலிருந்து யார் விடுவிக்கப் போகிறார்கள் என்று இத்தவளை கூக்குரலிடுகிறது" என்று கூறி மோகித்து விழுந்துவிட்டாராம்!*

[181]

(தருவரேல்) ஒரு நாள் ப$_4$ட்டர் ப்ரஸங்ஙராய் சீயர்க்கு இட்ட ப்ரஸாதத்தை நினைப்பது.

(திருமாலை-41).

நிகழிடம்

எம்பெருமானுடைய அடியவர்கள் தாங்கள் அமுது செய்து மிகுந்த பிரஸாதத்தைக் கொடுப்பர்களாகில் அந்தப் பிரஸாதத்தைப் பெற்றவர்கள் மிகவும் புனிதர்கள் ஆவர் என்கிறார் தொண்டரடிப்பொடியாழ்வார். 'தருவரேல்' என்று அவர் அருளிச் செய்துள்ளபடியால், அது கிட்டுவதற்கு மிகவும் அரிது என்கிற உரையாசிரியர், அதற்குச் சான்றாக **ஐதிஹ்யம்** *ஒன்றும் எடுத்துக் காட்டுகிறார்.*

1. இந்த ஐதிஹ்யம் மற்றோரிடத்திலும் கூறப்படுகிறது. எண் 579 பார்க்க.

விளக்கம்

ஒரு நாள் பராசரபட்டர் தம்முடைய சீடரான நஞ்சீயரிடத்தில் மிகவும் மகிழ்ச்சி கொண்டு, தாம் அமுது செய்து மிகுந்த பிரஸாதத்தை அவருக்குப் பரிசிலாக அளித்தாராம்![1]

[182]

(தாம் புலையர்) பிள்ளைப் பிள்ளையாழ்வானுக்கு ஆத்மஹிதம் சொன்ன ஸமநந்தரத்திலே ஆழ்வான் பணித்த வார்த்தையை ஸ்மரிப்பது.

(திருமாலை 43)

நிகழிடம்

உயர்ந்த அந்தண குலத்தில் பிறந்தவர்களாயினும் அவர்கள் பகவானிடத்தில் பக்தியுள்ள அடியவர் ஒருவரை அவர் தாழ்ந்த குலத்தில் பிறந்தவர் என்பதற்காக நிந்திப்பார்களேயானால், அவ்வந்தணர்களும் புலையர்களுக்குச் சமமானவர்களே என்கிறார் தொண்டரடிப் பொடி ஆழ்வார். இக்கருத்தையுட் கொண்டு கூரத்தாழ்வான் தம்முடைய சீடரான பிள்ளைப் பிள்ளை ஆழ்வானுக்கு உபதேசம் செய்த **வார்த்தை**கள் எடுத்துக்காட்டப்பெறுகின்றன.

விளக்கம்

கூரத்தாழ்வானுடைய சீடரான **பிள்ளைப் பிள்ளையாழ்வான்** என்பவர் உயர்ந்த குடியில் பிறந்தவர். அவர் பிறரிடம் பணிவின்றிக்கேயிருந்தார். இதனால் அடியார்கள் பலரிடம் அவர் அபசாரப்பட நேர்ந்தது. ஒரு புண்யகாலத்தன்று அனைவரும் காவிரியில் நீராடி தானம் வழங்கிக் கொண்டிருந்தபோது, “இனி பகவானுடைய அடியவர்களிடத்தில் மனம் மொழி மெய் ஆகிய முக்கரணங்களாலும் அபசாரப் படுவதில்லை” என்ற வாக்குறுதியை தானமாகக் கொடுக்கும்படி பிள்ளைப்பிள்ளை ஆழ்வானிடம் **கூரத்தாழ்வான்** கேட்க, அவரும் அப்படியே தண்ணீரைக் கையிலெடுத்து வார்த்துக் கொடுத்து தானம் அளித்தார். ஆயினும் ஒருநாள் பிள்ளைப்பிள்ளையாழ்வான் மனத்தால் பாகவதாபசாரப்பட நேர்ந்து விடவே மிகவும் வருந்தினார். அப்போது கூரத்தாழ்வான் பிள்ளைப் பிள்ளை ஆழ்வானிடம், “மனத்தால் பட்ட அபசாரத்திற்கு மனத்தால் வருத்தமடைவதே பரிகாரமாகும். ராஜ தண்டனை

1. ‘மைப்படிமேனியும்’ என்கிற திருவிருத்த (94) பாசுரத்தை பட்டர் விளக்கியபோது ‘நெஞ்சை மயக்கும்படியான திருமேனி’ என்று விளக்கியருள, அதற்குச் சேர, திருமங்கையாழ்வார் அருளிச் செய்த ‘இன்னாரென்றறியேன்’ என்கிற பாசுரத்தை நஞ்சீயர் எடுத்துக் கொடுக்க, பட்டர் மிகவும் மகிழ்ந்து நஞ்சீயரைக் கொண்டாடியருளினார். (பார்க்க: எண் 376). நஞ்சீயர்பால் தமக்குள்ள மகிழ்ச்சியை வெளிப்படுத்த, தாம் அமுதுசெய்த பிரசாதத்தை பட்டர் வழங்கினார் என்பர்.

கிடைக்கும் என்ற பயத்தால் உடலால் ஒருவரிடத்திலும் அபசாரப்படத் துணியமாட்டீர்.) எனவே வாக்கை மட்டும் கட்டுப் படுத்திக் கொள்ளும்" என்றருளிச் செய்தார்.[1]

[183]

(துடியிடையாரித்யாதி) "பெரிய பெருமாளாகிறார் கிருஷ்ணன், நம்பெருமாள் - சக்ரவர்த்தி திருமகன்" என்று அருளிச் செய்வர்.

(திருப்பள்ளியெழுச்சி - 10 நஞ்சீயர் வ்யாக்யானம்)

விளக்கம்

பெரிய பெருமாளைத் திருப்பள்ளியுணர்த்துவதற்காகப் பொழுது விடிந்ததற்கு அடையாளம் கூறும்போது 'துடி இடையார் சுரிகுழல் பிழிந்துதறித் துகிலுடுத்து ஏறினர்' (மெல்லிய இடைகளை உடைய பெண்கள் காவிரியில் நீராடி முடித்துத் தங்கள் குழல்களையும் பிழிந்து உதறித் தங்கள் துகில்களை உடுத்திக் கொண்டு கரையேறி விட்டனர்) என்று அருளிச் செய்கிறார் தொண்டரடிப்பொடியாழ்வார். 'பெரியபெருமாள் சடக்கென எழுந்திருப்பதற்காகப் பழைய யமுனை நீராட்டத்தை நினைவூட்டுகிறார்' என்று வியாக்யானம் அருளுகிறார் உரையாசிரியர். அதாவது பெண்களின் துகில்களை எடுத்துக் கொண்டு மரத்தில் ஏறி விளையாட நினைக்கும் கண்ணனிடம், பெண்கள் தங்கள் துகில்களை உடுத்திக்கொண்டு கரையேறிவிட்டனர் என்று கூறினால் அவன் சடக்கென எழுந்து வருவான் அல்லவா? எனவேதான் ஆழ்வார் அப்படி அருளிச்செய்கிறார். ஆனால், ஆழ்வார் எழுப்புவது பெரியபெருமாளைத்தானே கண்ணனை அல்லவே என்ற ஐயம் எழலாம். அதற்கு விடையாக, பெரியபெருமாளே கண்ணன் என்று பட்டர் அருளிச்செய்த **வார்த்தை***யை உரையாசிரியர் எடுத்துக் காட்டுகிறார்.*

விளக்கம்

பெரிய பெருமாளே கிருஷ்ணன் என்றும், நம்பெருமாளே இராமன் என்றும் (பட்டர்) அருளிச் செய்வர்.[2]

[184]

(விரையார் பொழில் வேங்கடவன்) பிள்ளை திருநறையூரரையரைச் சிலர் 'பெரிய பெருமாளை அனுபவிக்க இழிந்தவர் திருவேங்கடமுடையான்பாடே

1. "பிள்ளைப்பிள்ளையாழ்வானுக்கு ஆழ்வான் பணித்த வார்த்தையையும் ஸ்மரிப்பது" என்று ஸ்ரீவசனபூஷணத்தில் (சூ.203) அருளிச் செய்துள்ளதும், அதற்கு மாமுனிகள் உரையும் காண்க.

2. இதன் விளக்கத்தை எண் 175ல் பார்க்க.

போவானென்?" என்ன "ஆற்றிலே அமிழ்ந்துகிறவன் ஒரு காலைத் தரையிலேயூன்றினால் பிழைக்கலாமோவென்று கால் தாழ்க்குமாபோலே இவரும் பெரிய பெருமாளழகிலே அழுந்துகிறவராகையாலே, திருமலையிலே கால் தாழ்த்தார், அது மடுவாகிறது அறிகிறிலர்". வேறே சிலர் "பெரிய பெருமாளைப் பாடாநிற்கத் திருமலையிலே போவானென்" என்று அவரை (ப₄ட்டரை?)க் கேட்க, "ஒருவனைக் கவிபாடும்போது அவனுடைய வரத்துச் சொல்லியிறே கவிபாடுவது. பரமபதத்தில் நின்றும் ஸ்ரீமதுரையிலே தங்கித் திருவாய்ப்பாடிக்கு வந்தாப்போலே ஸ்ரீவைகுண்டத்தினின்றும் திருமலையிலே தங்கிக் காண் வந்தது" என்றருளிச் செய்தார்.

(அமலனாதிபிரான் 1 அழகியமணவாளப்பெருமாள்நாயனார் வ்யாக்யானம்)

நிகழிடம்

பெரிய பெருமாளாலே மயர்வற மதிநலம் அருளப் பெற்ற திருப்பாணாழ்வார் பெரிய பெருமாளைத் திருவடி தொடங்கித் திருமுடிவரை அனுபவித்துப் பத்துப் பாசுரங்களை அருளிச் செய்கிறார். முடிவில் 'அணியரங்கன் என் அமுதினைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே' என்று திருவரங்கனைத் தவிர வேறு எவரையும் காணத் தம்முடைய கண்கள் விரும்பாது என்றும் அருளிச் செய்கிறார். ஆனால் அவரே முதல் பாசுரத்திலேயே 'விரையார் பொழில் வேங்கடவன்' என்று திருவேங்கடமுடையானைக் கூறுவதற்குக் காரணம் என்ன என்ற கேள்விக்கு ஆசார்யர்கள் இருவர் விடை அளித்த **ஸம்வாதங்கள்** *காட்டப்பெறுகின்றன.*

விளக்கம்

''பெரிய பெருமாளை அனுபவிக்கத் தொடங்கிய திருப்பாணாழ்வார் திருவேங்கடமுடையானைப் பாடியது எதற்காக?'' என்று சிலர் **பிள்ளை திருநறையூர் அரையரைக்** *கேட்டார்களாம். அதற்கு அவர், "ஆற்றிலே அழுந்துகிறவன், ஒருகாலைத் தரையிலே ஊன்றினால் பிழைக்கலாமோ! என்கிற நினைவினாலே தரையிலேயும் ஒருகாலை ஊன்றிக் கொண்டு ஆற்றிலே இறங்குவதுபோல இவரும் பெரிய பெருமாளுடைய அழகிலே அழுந்துகிறவர் ஆகையாலே, திருவேங்கடமலையிலும் ஒரு காலை ஊன்றிக் கொள்கிறார். ஆனால் திருமலையும் ஒரு மடு என்பதை இவர் அறியவில்லை'' என்று அருளிச் செய்தாராம்.*

வேறே சிலர் "பெரிய பெருமாளைப் பாடுகின்ற திருப்பாணாழ்வார் திருமலையைப் பாடுவதற்குக் காரணம் என்ன?'' என்று அவரை (பட்டரை?)க் கேட்க, "ஒருவனைப் பற்றிக் கவி பாடும் போது அவனுடைய வரலாறு சொல்லி அன்றோ கவி பாட வேண்டும்? கண்ணபிரானாக அவதரித்த போது

பரமபதத்திலிருந்து மதுரையில் (கம்ஸனுடைய சிறைக் கூடத்தில் பிறந்து) தங்கிப் பிறகு திருவாய்ப்பாடிக்கு வந்தது போலே, ஸ்ரீ வைகுண்டத்திலிருந்து திருமலையில் தங்கித்தான் திருவரங்கத்திற்கு எழுந்தருளினான் எம்பெருமான். இதையே ஆழ்வாரும் 'விண்ணவர்கோன் விரையார் பொழில் வேங்கடவன் ... நீள்மதிள் அரங்கத்தம்மான்' என்றருளிச்செய்கிறார். எனவே திருவேங்கட மலையில் எழுந்தருளியிருப்பவனும் திருவரங்கனே" என்றருளிச் செய்தாராம்.[1]

[185]

பிள்ளை அழகிய மணவாளவரையர் பெருமாள் திருவடிகளிலே புக்கு "நாயன்தே! அடியேன் திருவேங்கடமுடையானைத் திருவடி தொழுது வர வேணுமென்று நினையா நின்றேன்" என்று விண்ணப்பஞ் செய்ய, "வாரீர்! அமலனாதிபிரானை ஒருகால் இசை சொல்லிக் காணீர்!" என்று திருவுள்ளமாக, பிள்ளையும் ஒருகால் இசையை விண்ணப்பஞ் செய்யக் கேட்டருளி, 'இனிப் போகிலும் போம், இருக்கிலும் இரும்' என்று திருவுள்ளமானார்.

(அமலனாதிபிரான் 3 அழகியமணவாளப்பெருமாள் நாயனார் வ்யாக்யானம்)

நிகழ்டம்

'வடவேங்கடமாமலை வானவர்கள் சந்தி செய்ய நின்றான் அரங்கத்து அரவினணையான்' என்று திருப்பாணாழ்வார் அருளிச்செய்கிறார். திருவரங்கனும் திருவேங்கடவனும் ஒருவனே என்று ஆழ்வார் அருளிச்செய்துள்ளதைக் கருத்தில் கொண்டு ஓர் ***ஐதிஹ்யம்*** *கூறப்படுகிறது.*

விளக்கம்

பிள்ளை அழகிய மணவாள அரையர் *ஒருமுறை பெரியபெருமாளிடம் வந்து "நாயன்தே! அடியேன் திருவேங்கடமுடையானை ஸேவிப்பதற்காகத் திருமலை*

1. அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் வ்யாக்யானத்தின்படி, இவ்விளக்கத்தையும் பிள்ளை திருநறையூர் அரையர் அருளிச் செய்ததாகவே கொள்ள நேருகிறது. (அவரைக் கேட்க என்றே அவ்வியாக்யானத்திலுள்ளது) ஆனால் பெரியவாச்சான் பிள்ளை அருளிச்செய்துள்ள உரையில்,

 "பெரியபெருமாளைப் பாடா நிற்கத் திருமலையிலே போவானென் என்னில் ஒருவனைக் கவிபாடும்போது அவனுடைய வரத்துச் சொல்லியிறே கவிபாடுவது. பரமபதத்தினின்றும் ஸ்ரீமதுரையிலே தங்கித் திருவாய்ப்பாடிக்கு வந்தாப்போலே ஸ்ரீவைகுண்டத்தி னின்றும் திருமலையிலே தங்கிக் காணும் கோயிலுக்கு வந்தது" என்று பட்டரருளிச் செய்யும்படி

என்றுள்ளதால், இப்படி அருளிச் செய்தவர் பட்டர் என்பது தெளிவாகிறது. மேலும் எண் 244ல் இதே கருத்தை மிகவும் விரிவாக பட்டர் அருளிச் செய்ததாகவும் அதை நம்பிள்ளை தாமே நேரில் கேட்டிருந்ததாகவும் குறிப்பிடப்படுவதும் காண்க. (எனவே நாயனார் வ்யாக்யானத்திலும் 'பட்டரைக் கேட்க' என்றிருந்தது, 'அவரைக் கேட்க' என்று தவறாகப் பிறழ்ந்திருக்கலாம்.)

யாத்திரை போக வேண்டுமென்று விரும்புகிறேன். அதற்கு தேவரீர் அனுமதி தந்தருள வேண்டும்" என்று பிரார்த்தித்தார். அரையர் திருவேங்கடத்திற்குச் சென்றால் பல நாள்கள் ஆழ்வார்களுடைய ஈரச்சொற்களை அவர் பாடக் கேட்க முடியாமல் போய்விடுமே என்று எண்ணிய பெரிய பெருமாள், அவரைத் திருவேங்கட யாத்திரையிலிருந்து மீட்பதற்காக, "ஒரு முறை அமலானாதிபிரானை இசையுடன் சொல்லும்" என்று நியமித்தான். அரையரும் அப்படியே அமலானாதிபிரானை இசையுடன், அரையர்களுக்கே உரித்தான முறையில் விண்ணப்பித்தார். இப்பாசுரத்தில் "மந்திபாய் வடவேங்கடமாமலை வானவர்கள் சந்தி செய்ய நின்றான், அரங்கத்து அரவினணையான்" என்ற வரிகளை இசைத்தவாறே பெரிய பெருமாள், "இனி நீர் இங்கே இருந்தாலும் சரி, போனாலும் சரி" என்று அருளிச் செய்தார். திருவரங்கத்தில் எழுந்தருளியுள்ள தானே திருவேங்கடத்திலும் எழுந்தருளியுள்ளமையால், தன்னை ஸேவித்தாலே திருவேங்கடவனை ஸேவித்ததாகும் என்ற கருத்தில் பெரியபெருமாள் இவ்வாறு கூறியதைப் புரிந்து கொண்ட அரையர் திருவேங்கட யாத்திரையைக் கைவிட்டார் போலும்!

[186]

(கையினார் சுரிசங்கு அனலாழியர்) பட்டர் திருக்கோட்டியூரிலே எழுந்தருளியிருக்கிற காலத்திலே ஒரு விஶேஷ தி₃வஸத்தினன்று கோளரியாழ்வானைப் பார்த்துத் தெற்காழ்வான் சொன்ன வார்த்தையை ஸ்மரிப்பது.

(அமலனாதிபிரான் 7 அழகிய மணவாளப்பெருமாள் நாயனார் வ்யாக்யானம்)

நிகழ்டம்

திருவரங்கன் திருக்கையிலுள்ள சக்கராயுதத்தை அனல் ஆழி என்கிறார் திருப்பாணாழ்வார். அடியவர்களுடைய பாவங்களைப் போக்குகின்ற சக்கரம் என்று உரையிடுகின்ற உரையாசிரியர், இதற்குச் சான்றாக பட்டருடைய *சீடரான* தெற்காழ்வான் *என்பவர்* கோளரியாழ்வான் *என்பவரிடம் கூறிய* **வார்த்தை** *ஒன்றை எடுத்துக் காட்டுகிறார்.*

விளக்கம்

எண் 435ன் விளக்கம் காண்க.

[187]

(கையினார் சுரிசங்கு அனலாழியர்) திருக்கோட்டியூரிலே எழுந்தருளியிருக்க, அனந்தாழ்வான் ப₄ட்டரை "ஸ்ரீவைகுண்ட₂நாத₂ன் த்₃விபு₄ஜனோ சதுர்பு₄ஜனோ?" என்று கேட்க, "இருபடியாயிருக்கவுமடுக்கும்" என்ன, "இரண்டிலும் அழகியது

ஏது?" என்ன, "த்₃விபு₄ஜனாகில் பெரியபெருமாளைப்போலேயிருக்கிறது; சதுர்பு₄ஜனாகில் நம்பெருமாளைப்போலேயிருக்கிறது" என்றார்.

(அமலனாதிபிரான் – 7 அழகியமணவாளப்பெருமாள்நாயனார் வ்யாக்யானம்)

நிகழிடம்

பெரிய பெருமாளை அனுபவிக்கின்ற திருப்பாணாழ்வார் 'கையினார் சுரிசங்கு அனல் ஆழியர்' என்றருளிச் செய்கிறார். இத்தொடர்பில் ஓர் **ஸம்வாதம்** காட்டப்படுகிறது.

விளக்கம்

ஒரு முறை பட்டர் திருக்கோட்டியூரில் எழுந்தருளியிருந்தபோது **அனந்தாழ்வான்** பட்டரை நோக்கி, 'பரமபதத்தில் எம்பெருமான் இரண்டு திருக்கைகளுடன் எழுந்தருளியிருப்பானோ? நான்கு திருக்கைகளுடன் எழுந்தருளியிருப்பானோ?" என்று கேட்டார். "இரண்டு வகையாகவுமே இருக்கலாம்" என்றார் பட்டர். "இரண்டிலும் எது அழகியது?" என்று கேட்டார் அனந்தாழ்வான். உடனே பட்டர் "இரண்டுமே அழகியதுதான். இரண்டு திருக்கரங்களுடன் எழுந்தருளியிருந்தால் பெரியபெருமாளைப் (மூலவரைப்) போலே இருக்கும். நான்கு திருக்கரங்களுடன் எழுந்தருளியிருந்தால் நம்பெருமாளைப் (உத்ஸவரைப்) போலே இருக்கும்" என்று விடையளித்தார்.[1] திருவரங்கத்தில் எழுந்தருளியுள்ள மூலவர் பெரியபெருமாள் என்று வழங்கப்படுவர். அவருக்கு இரண்டு திருக்கரங்களே உள்ளன. உத்ஸவர் நம்பெருமாள் என்று வழங்கப்படுவர். அவருக்கு நான்கு திருக்கரங்கள் உள்ளன. எனவே பரமபதத்தில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமான் இரண்டு கைகளுடன் எழுந்தருளியிருந்தாலும் சரி, நான்கு கைகளுடன் எழுந்தருளியிருந்தாலும் சரி, அவன் திருவரங்கனைப் போலத்தான் இருப்பான் என்பது பட்டர் கருத்தாகும்.

[188]

(நீண்ட) பெரியபெருமாளுடைய திருக்கண்களானவை திருச்செவி அளவும் நீண்டிருக்கிறபடிக்கு ஒரு நினைவு உண்டு என்கிறார் பட்டர்.

(அமலனாதிபிரான் 8 அழகியமணவாளப்பெருமாள் நாயனார் வ்யாக்யானம்)

நிகழிடம்

எம்பெருமானுடைய திருக்கண்களை வர்ணிக்கின்ற திருப்பாணாழ்வார் 'கரியவாகிப் புடைபரந்து மிளிர்ந்து செவ்வரியோடி நீண்ட அப் பெரியவாய

1. இப்பாசுரத்தின் பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியானத்தில் இந்த ஸம்வாதம் குறிப்பிடப் பெற்றுள்ளது. மற்றோரிடத்திலும் (எண் 534) உள்ளது.

கண்கள்' என்று அருளிச்செய்துள்ளார். இங்கு 'நீண்ட அப் பெரியவாய கண்கள்' என்றதன் சொல்நயத்தை, பட்டர் அருளிச்செய்துள்ள **ஸ்லோகம்** ஒன்றை மேற்கோள் காட்டி உரையாசிரியர் விளக்குகின்றார்.

விளக்கம்

பராசரபட்டர், தாம் அருளிச்செய்துள்ள ஸ்ரீரங்கராஜஸ்தவத்தில் எம்பெருமானுடைய திருக்கண்கள் அவனுடைய திருச்செவிகள்வரை நீண்டிருக்கும் என்று கூறி அதற்கு ஒரு காரணத்தையும் கற்பனை நயத்துடன் அருளிச்செய்கிறார். மீனுக்குத் தண்ணீர் வார்ப்பதைப் போல நித்யசூரிகளுக்கு முகம் கொடுத்துக் கொண்டிருக்கின்ற ஸ்ரீவைகுண்டநாதனுக்கும் கண்கள் இரண்டு; குகன், விதுரன் போன்ற சிலரை மட்டுமே கடாக்ஷித்த இராமன் கண்ணன் போன்ற அவதாரங்களுக்கும் கண்கள் இரண்டு; இவ்வுலகில் உள்ளவர்கள் அனைவரும் பரமபதம் போனாலல்லது எழுந்திரேன் என்று திருவரங்கம் பெரியகோயிலில் பள்ளிகொண்டிருக்கும் பெரியபெருமாளுக்கும் கண்கள் இரண்டு என்றால் அது தகுமோ? அனைவரையும் கடாக்ஷிப்பதற்கு இரண்டு கண்கள் போதா; எனவே திருமேனியெங்கும் கண்களாகவேண்டும் என்று திருக்கண்கள் பார்த்தனவாம். முதலில் தங்களுக்கு அருகிலுள்ள திருச்செவிகளை வென்று அதற்கு அப்பால் போகவேண்டும் என்று முற்பட்டு, திருச்செவிகள் வரை கண்கள் நீண்டிருக்கின்றன என்கிறார் பட்டர். இக் கருத்தைக் கொண்ட, ''க்ருபயா பரயாகரிஷ்யமாணே ஸகலாங்கங்கில ஸர்வதோக்ஷிநேத்ரே ப்ரதமம் ச்ரவஸீ ஸமாஸ்த்ருணாதே இதி தைர்க்யேண விதந்தி ரங்கநேது:' என்ற ஸ்ரீரங்கராஜஸ்தவ (1-98) ச்லோகத்தை உரையாசிரியர் மேற்கோள்காட்டி விளக்குகிறார்.

[189]

த்ரிபுராதே₃வியாரை "ப்ரமாணப்ராபல்யத்தாலேயோ எம்பெருமானே ஆஶ்ரயணீயன் என்று நீங்கள் பற்றிற்று?" என்ன, "அதுவொன்றுமன்று; எம்பெருமானார் காடிச்சால் மூலையில் தே₃வதையை ஆஶ்ரயித்தாராகில் அதுவே எங்களுக்கும் ஆஶ்ரயணீய வஸ்துவாகக் கடவது" என்றாள்.

(கண்ணிநுண்சிறுத்தாம்பு பெரியவாச்சான் பிள்ளை வ்யாக்யானஅவதாரிகை)

நிகழிடம்

நம்மாழ்வாரையே தெய்வமாகக் கொண்ட மதுரகவியாழ்வாரின் பெருமையை வருணிக்கின்ற உரையாசிரியர், ஆசார்யருடைய உகப்பிற்கு இலக்கான விஷயமே நமக்கும் கொள்ளத்தக்கது என்றருளிச்செய்து, இதற்குச் சான்றாக **ஸம்வாதம்** ஒன்றைக் காட்டுகின்றார்.

விளக்கம்

த்ரிபுரா தேவியார் என்பவர் எம்பெருமானாருடைய சிஷ்யைகளில் ஒருவர். அவரைப் பார்த்து ஒருவர், "ஸ்ரீவைஷ்ணவர்களாகிய நீங்கள் ஸ்ரீமந்நாராயணனே பரம்பொருள் என்று உறுதி கொண்டிருப்பதற்குக் காரணம் என்ன? எல்லாப் பிரமாணங்களும் அவனே பரம்பொருள் என்று கூறுவதால்தானோ?" என்று கேட்க, அதற்குத் திரிபுரா தேவியார் "அப்படியெல்லாம் இல்லை. எங்கள் எம்பெருமானார் யாரைப் பரம்பொருளாகக் கொண்டிருக்கின்றாரோ அந்தத் தேவதையே எங்களுக்கும் பரம்பொருள். எம்பெருமானார் காடிச்சால் மூலைத் திசைக்கு[1] அதிபதியான சிவனையே பரம்பொருள் என்று கொண்டிருப்பாரானால் எங்களுக்கும் அவனே பரம் பொருள்" என்று கூறினார்.[2]

[190]

ப$_4$ாஷ்யகாரர் "अनघः - नित्यशत्रुघ्नः" (அநக$_4$: - நித்யஶத்ருக்$_4$ந:) என்ற இதுக்கு ப்ரமேயமாக சொல்கட்டிலே "ஸ்ரீஶத்ருக்$_4$னாழ்வான் பெருமாளுக்கு நல்லனானபடி, அவனையல்லது அறியாத ஸ்ரீப$_4$ரதாழ்வானையல்லது அறியாதபடி ஆனான்' என்றருளிச் செய்வர்.

(கண்ணிநுண்சிறுத்தாம்பு நம்பிள்ளை வ்யாக்யான அவதாரிகை)

நிகழிடம்

நம்மாழ்வாரையே தெய்வமாகக் கொண்ட மதுரகவி ஆழ்வாரை, பரதனையே எல்லாமாகக் கொண்ட சத்ருக்னனோடு ஒப்பிடும் உரையாசிரியர் சத்ருக்னனுடைய பெருமைகளை விளக்குவதற்காக,

கச்சதா மாதுலகுலம் பரதேந ததா அநக:
சத்ருக்நோ நித்ய சத்ருக்ந: நீத: ப்ரீதி புரஸ்க்ருத:

(ஸ்ரீராமாயணம் அயோத்யா காண்டம் 1-1)

(தாய் மாமன் வீட்டிற்குச் செல்கின்ற பரதனாலே, குற்றமற்றவனும், சத்ருக்களை வென்றவனுமான சத்ருக்னன் அப்போது அன்பினால் உந்தப்பட்டவனாய் அழைத்துச் செல்லப் பட்டான்) என்ற சுலோகத்தை மேற்கோளாக எடுத்து அதற்கு விரிவுரையும் வழங்கி எம்பெருமானார் அருளிச் செய்த ***வார்த்தை*** *ஒன்றை எடுத்துக் காட்டுகிறார்.*

1. காடிச்சால் என்பது பழைய சோறு அல்லது கழுநீர் வைக்கும் பானைக்குப் பெயர். அப்பானையை வடகிழக்கு மூலையில் வைப்பது மரபு. அந்த ஈசான்ய திக்குக்கு அதிபதி சிவன். சிவன் என்று வாயால் சொல்லக்கூசி 'காடிச்சால் மூலைத் தேவதை' என்றாள்.

2. திரிபுராதேவியார் இவ்வாறு கூறியமை இப்பாசுரத்தின் பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியானத்திலும் உள்ளது. மற்றும் இரண்டு இடங்களிலும் (எண் 139, 193) இடம்பெற்றுள்ளது. எண் 584 பார்க்க.

விளக்கம்

"அநக:" என்கிற சொல்லுக்குப் பாவம் இல்லாதவன் என்று பொருளுரைத்து, பரதனிடத்தில் ஈடுபட்டுள்ள சத்ருக்னன் ராமபக்தி என்கிற பாவமில்லாதவன் என்று அதை விரித்துரைத்தனர். "நித்ய சத்ருக்ந:" என்ற சொல்லுக்கு நிரந்தரமான எதிரிகளை வென்றவன் என்று பொருளுரைத்து, இராமபிரானுடைய அழகானது பரதனிடத்தில் ஈடுபடுவதற்குத் தடையாதலின், அந்த விரோதியையும் வென்றவன் - அதாவது இராமபிரானுடைய அழகில் ஈடுபடாதவன் சத்ருக்னன் என்று விரித்துரைத்தனர். ஆக, 'அநக:' என்பதற்கு ராமபக்தியில்லாதவன் என்றும் 'நித்ய சத்ருக்ந:'என்பதற்கு இராமனுடைய அழகில் கண் வையாதவன் என்றும் கூறப்பட்டது.

இராமபிரானிடத்தில் சத்ருக்னன் துளியும் ஈடுபடாதவனோ எனில் - ராமபக்தியில்லாதவன் என்றால், சத்ருக்னன் தன் உகப்புக்காக இராமனிடத்தில் ஈடுபடமாட்டான் என்பது பொருள். இராமனுடைய அழகில் கண் வையாதவன் என்றால், தன்னுகப்புக்காக அவருடைய அழகில் மயங்கி ஈடுபட மாட்டான் என்பது பொருள். தனக்கு வேண்டியவனான பரதனுக்கு வேண்டியவன் என்பதால்தான் இராமபிரானிடத்தில் பக்தியும் அவனழகில் ஈடுபாடும் உடையவனாவான் சத்ருக்னன் என்றதாயிற்று.

இதேபோல் ராமபிரானும் சத்ருக்னனிடத்தில் அன்புடையவர்தானா என்ற கேள்விக்கு எம்பெருமானார் "பரதன் இராமனை அல்லது மற்றொருவரை அறியாதவன். அப்படிப்பட்ட பரதனையல்லது வேறொருவரை அறியாதவன் சத்ருக்னன் என்பதால் சத்ருக்னனிடத்தில் இராமபிரானுக்கு அன்பு உண்டு." என்றருளிச் செய்வராம்.

ஆக, இராமபிரான் சத்ருக்னன் இருவருமே ஒருவர்க்கொருவர் அன்புடையவர்கள்தான் என்றாலும் அது நேராகவல்ல, பரதனையிட்டுத்தான் என்பது கூறப்படுகிறது. தனக்குகந்த பரதனுக்கு உகந்தவர் இராமபிரான் என்பதால் இராமபிரான் மீது சத்ருக்னனுக்கு அன்பு உண்டு; அதே போல் தனக்குகந்த பரதனிடத்தில் பக்தியுடையவன் என்பதால் சத்ருக்னன் மீது இராமனுக்கு அன்பு உண்டு என்பது எம்பெருமானாருடைய விளக்கமாகும்.[1]

[191]

(தென் குருகூர் நம்பி) "ஆசார்யர்களை நம்பி என்னக் கற்பித்தவர் ஸ்ரீமது$_4$ரகவிகளிறே" என்று சீயர் அருளிச் செய்வர்.

(கண்ணிநுண்சிறுத்தாம்பு 1 பெரியவாச்சான் பிள்ளை வ்யாக்யானம்)

1. எம்பெருமானார் இவ்வாறு அருளிச்செய்தமை இப்பாசுரத்தின் பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியானத்திலும், மற்றும் ஓரிடத்திலும் (எண் 532) குறிப்பிடப்பெறுகின்றது.

நிகழிடம்

மதுரகவியாழ்வார் நம்மாழ்வாரைப் பற்றிக் கூறும்போது 'குருகூர்ச் சடகோபன்' என்று அருளிச் செய்யாமல் 'தென்குருகூர் நம்பி' என்று அருளிச் செய்கிறார். இத்தொடர்பில் நஞ்சீயர் அருளிச்செய்த **வார்த்தை** ஒன்று எடுத்துக் காட்டபெறுகிறது.

விளக்கம்

எல்லாவற்றாலும் நிறைந்தவர் - பூர்ணர் - என்ற பொருளில் ஆசார்யரை முதன் முதலில் நம்பி என்று அழைத்தவர் மதுரகவி ஆழ்வாரே ஆகையால், "ஆசார்யர்களை நம்பி என்று கூறும் வழக்கத்தை முதன்முதலில் உண்டாக்கியவர் மதுரகவிகளே" என்று **நஞ்சீயர்** அருளிச் செய்வராம்.[1]

[192]

(அவன் பொன்னடி மேவினேன்) ஒரு புருஷகாரபுரஸ்ஸரமாகவன்றிக்கே தந்த்ரபேக்ஷமாக ஆஶ்ரயித்தேன். இங்கே சீயர் வார்த்தையை அநுஸந்தி$_4$ப்பது.

(கண்ணிநுண்சிறுத்தாம்பு 2 அழகியமணவாளப்பெருமாள்நாயனார் வ்யாக்யானம்.)

நிகழிடம்

நம்மாழ்வாருடைய திருவடிகளைத் தாம் அடைந்தபடியை "அவன் பொன்னடி மேவினேன்" என்றருளிச் செய்கிறார் மதுரகவிகள். ஒருவருடைய புருஷகாரமும் இல்லாமல் தாமே ஆழ்வாரை அடைந்தது பற்றி மதுரகவிகள் அருளிச் செய்வதாக உரையருளிச் செய்யும் உரையாசிரியர் இதற்குச் சான்றாக நஞ்சீயருடைய **வார்த்தை** ஒன்றை எடுத்துக் காட்டுகின்றார்.

விளக்கம்

நஞ்சீயர் முதலில் வேதாந்தி என்ற பெயருடன் மேல்நாட்டிலே அத்வைதியாக எழுந்தருளியிருந்தார். அவரைத்திருத்திப் பணி கொண்டு, ஸ்ரீவைஷ்ணவராக்க வேண்டும் என்பதற்காக, பட்டர் தாமே மேல் நாட்டிற்கு

1. எம்பெருமானாருடைய ஆசார்யர்களான திருக்கோட்டியூர் நம்பி, பெரியதிருமலை நம்பி, பெரிய நம்பி, திருக்கச்சி நம்பி முதலிய ஆசார்யர்கள் அனைவரும் நம்பி என்ற திருநாமத்தாலாயே அழைக்கப்பட்டனர் என்பது இங்கே குறிப்பிடத்தக்கது. இப்படி ஆசார்யர்கள் அனைவரும் நம்பி என்றழைக்கப்படுவதற்குக் காரணம் மதுரகவிகள்தான் என்பது நஞ்சீயர் திருவுள்ளம். திருக்குறுங்குடி நம்பி என்றும் திருநறையூர் நம்பி என்றும் எம்பெருமானை நம்பி என்பது உண்டே தவிர, பழைய காலத்தில் ஆசார்யரை நம்பி என்பது இல்லை. முதன்முதலில் மதுரகவிகளே தம் ஆசார்யரை (ஆழ்வாரை) நம்பி என்று குறிப்பிட்டு - ஆசார்யர்களை நம்பி என்னலாமென்று நமக்குக் கற்பித்தார் என்க. எம்பெருமான் ஞான சக்திகளால் (நம்பி) பூர்ணன். ஆசாரியர் ஞான பக்திகளால் (நம்பி) பூர்ணர்.

எழுந்தருளி அவரைத் திருத்திப் பணி கொண்டார்.[1] "அடியேன் ஒருவரைப் புருஷகாரமாகக் கொண்டு தேவரீரை அடைய வேண்டியிருக்க, தேவரீர் ஒரு புருஷகாரமின்றிக்கே, காடும் மலையும் கடந்து வந்து அடியேனைக் கடாக்ஷிக்க மேல் விழுவதே!" என்று நஞ்சீயர் பட்டரிடத்தில் ஈடுபட்டு அருளிச் செய்தாராம்.

[193]

த்ரிபுராதேவியார் "வடகீழ்மூலைத் தத்த்வத்தையும் ஆஶ்ரயணீயம் என்று உடையவர் அருளிச்செய்தாராகில் எனக்கும் அதுவாம் அத்தனையன்றோ!" என்றாள்.

(கண்ணிநுண்சிறுத்தாம்பு - 3 பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்யான அவதாரிகை)

நிகழிடம்

'திரிதந்தாகிலும் தேவபிரானுடைக் கரியகோலத் திருவுருக் காண்பன் நான்' என்று அருளிச்செய்கிறார் மதுரகவிகள். ஆழ்வார் உகந்த விஷயம் ஆகையாலே எம்பெருமானையும் பற்றுவேன் என்கிறார் மதுரகவிகள் என்று விளக்கிய உரையாசிரியர், ஆசார்யன் உகந்த விஷயம் விரும்பத்தக்கது என்பதற்குச் சான்றாக, திரிபுராதேவியார் **வார்த்தை***யைக் காட்டுகிறார்.*

விளக்கம்

எண் 189ன் விளக்கம் பார்க்க.

[194]

குணமலைப்பாடியுடையார் காங்கேயன் தெற்கே எடுத்துவிட்டபோது பிள்ளையாத்தான் அங்கே குறைவறப் பச்சை சமைக்க, "அவர் உமக்கு வேண்டுவதென்?" என்று கேட்க, இவர் "உம்மைக் கொண்டு பண்டே உபகாரங் கொண்டோம் காணும்" என்ன, "ஆவதென்? என்னையறியாதே வருமதோர் உபகாரமுண்டோ?" என்ன, "எங்களாசார்யர் 'நான் கோயிலில் மண்பெற்றது அவ்வேளாளனாலே' என்றருளிச் செய்யக் கேட்டிருந்தோம். இதுக்கு மேற்பட்டதோர் உபகாரமுண்டோ நமக்கு?" என்றார்.

(கண்ணிநுண்சிறுத்தாம்பு 3 பெரியவாச்சான்பிள்ளை வியாக்யானம்)

நிகழிடம்

'திரிதந்தாகிலும் தேவபிரானுடைக் கரியகோலத் திருவுருக் காண்பன் நான்' என்று அருளிச்செய்கிறார் மதுரகவிகள். ஆழ்வார் உகந்த விஷயம் ஆகையாலே எம்பெருமானையும் பற்றுவேன் என்கிறார் மதுரகவிகள் என்று விளக்கிய

1. இவ்வரலாறுகள் குருபரம்பராப்பிரபாவம் முதலிய நூல்களில் காணத் தக்கன.

உரையாசிரியர், ஆசார்யனுடைய உகப்புக்கு இலக்கானவனே நமது உகப்புக்கு இலக்கானவன் என்பதற்கு ஓர் **ஐதிஹ்யம்** காட்டுகிறார்.

விளக்கம்

குணமலைப்பாடி எனும் சிற்றூருக்குத் தலைவனான காங்கேயன் எனும் வேளாளன் தெற்கில் படையெடுத்துச்சென்றபோது **பிள்ளையாத்தான்** என்பவர் அவனுக்கு அரிசி முதலியவற்றைக் கொடுத்து உதவி செய்தார். அதற்குப் பதிலாக ஏதாவது உதவி செய்ய வேணுமென்று நினைத்த **காங்கேயன்** "உமக்கு என்ன வேண்டும்" என்று ஆத்தானைப் பார்த்துக் கேட்க, ஆத்தான் "ஏற்கனவே தங்களிடத்திலிருந்து நான் உதவி பெற்றிருக்கிறேன்" என்று கூறினார். "அப்படியா? எனக்குத் தெரியாமல் என்னிடத்திலிருந்து நீர் என்ன உதவி பெற்றீர்?" என்று அவன் கேட்க, அதற்கு ஆத்தான் "எங்களுடைய ஆசார்யருக்குத் தாங்கள் உதவிகள் பல செய்துள்ளீர்கள். எங்கள் ஆசார்யர், 'நான் கோயிலிலே நிலம் பெற்றது அவ்வேளாளனாலே' என்று அடிக்கடி அருளிச் செய்வார். எங்களாசார்யருக்குத் தாங்கள் செய்துள்ள உதவிகளுக்கு மேற்பட எனக்கென்று தாங்கள் செய்ய வேண்டியது ஒன்றும் இல்லை" என்று கூறினாராம்.[1]

[195]

உடையவர் வெள்ளை சாத்தி எழுந்தருளின காலத்திலே திருவடிகளில் ஸம்ப$_3$ந்த$_4$முடையாரை 'பெருமாளைத் திருவடி தொழ விடவேண்டா' என்று விலக்க, ஆழ்வானை, "நீர் புக்குத் திருவடி தொழலாகாதோ" என்ன, "ஆத்மகு$_3$ணம் மோக்ஷஹேது என்றிருந்தோம். அது ப$_3$ந்த$_4$ஹேதுவான பின்பு எம்பெருமானார் திருவடிகளில் ஸம்ப$_3$ந்த$_4$த்தை அறுத்துக் கொள்ளவோ?" என்று மீண்டு போந்தார்.

(கண்ணிநுண்சிறுத்தாம்பு - 3 பெரியவாச்சான் பிள்ளை வ்யாக்யானம்)

நிகழிடம்

'திரிதந்தாகிலும் தேவபிரானுடைக் கரியகோலத் திருவுருக் காண்பன் நான்' என்று அருளிச்செய்கிறார் மதுரகவிகள். ஆழ்வார் உகந்த விஷயம் ஆகையாலே எம்பெருமானையும் பற்றுவேன் என்கிறார் மதுரகவிகள் என்று விளக்கிய உரையாசிரியர், ஆத்மகுணங்களைக் காட்டிலும் ஆசார்யஸம்பந்தமே உயர்ந்தது என்பதற்கு ஓர் **ஐதிஹ்யம்** காட்டுகிறார்.

1. இப்பாசுரத்தின் நம்பிள்ளை வ்யாக்யானத்திலும் இவ்வைதிஹ்யம் உள்ளது. அங்கு இவருடைய திருநாமம் கோயிலாச்சான் என்று குறிப்பிடப்பெறுகிறது.

விளக்கம்

எண் 92ன் விளக்கம் காண்க!

[196]

(நன்மையால் மிக்க நான்மறையாளர்கள்) கூரத்தாழ்வானும், ஆண்டாளும், பிராட்டியும் போல்வார்.

(கண்ணி நுண்சிறுத்தாம்பு 4 நஞ்சீயர் வ்யாக்யானம்)

நிகழ்டம்

'நன்மையால் மிக்க நான்மறையாளர்கள் (என்னைப்) புன்மையாகக் கருதுவர்' என்று மதுரகவியாழ்வார் அருளிச்செய்கிறார். தங்களுக்குத் தீங்கு செய்தவர்களுக்கும் நன்மையை விரும்புபவர்களே 'நன்மையால் மிக்க நான்மறையாளர்கள்' என்று விளக்கிய உரையாசிரியர், கூரத்தாழ்வான், ஆண்டாள், பிராட்டி ஆகியவர்களை இதற்கு **உதாரணம்** *கூறுகிறார்.*

விளக்கம்

கூரத்தாழ்வான் *தமது கண்களை இழப்பதற்குக் காரணமான நாலூரானும் நற்பேறு பெற வேண்டும் என்று தேவப்பெருமாளிடம் பிரார்த்தித்தார். கூரத்தாழ்வானுடைய தேவிகளான ஆண்டாள், தான் ஸ்ரீரங்கத்தை விட்டு வெளியேறுவதற்குக் காரணமாக அமைந்த அகளங்கநாட்டாழ்வான் மரணம் அடைந்தபோது, அவன் தன்னுடைய பாவங்களுக்குக் கழுவாய்தேடாமலே மரணம் அடைந்து விட்டானே என்று வருந்தினாள். சீதைப்பிராட்டி, தன்னை அசோகவனத்தில் துன்புறுத்திய அரக்கிகளையும் அனுமனிடமிருந்து காத்தாள். இப்படித் தங்களுக்குத் தீமை செய்தவர்களுக்கும் நன்மையை விரும்புபவர்களே நன்மையால் மிக்க நான்மறையாளர்கள் என்று உரையாசிரியர் கூறுகிறார்.*

[197]

(என்னையாண்டிடும்) 'பொலிந்து நின்ற பிரான் பக்கலிலும் ஒரு கால் போய் வாரீர்' என்று உபதேசித்தாரென்று பிள்ளை அருளிச் செய்வர்.

(கண்ணி நுண்சிறுத்தாம்பு 4 அழகியமணவாளப்பெருமாள் நாயனார் வ்யாக்யானம்)

நிகழ்டம்

மதுரகவிகள், தமக்கு அன்னையாகவும் அத்தனாகவுமிருந்து நம்மாழ்வார் தம்மைக் கட்டளையிட்டுக் காரியம் கொண்டபடியை 'அன்னையாய் அத்தனாய் என்னையாண்டிடும் தன்மையான்' என்றருளிச் செய்கிறார். இங்கு என்னை

1. இப்பாசுரத்தின் நம்பிள்ளை வியாக்கியானத்திலும் இவ்வைதிஹ்யம் குறிப்பிடப்பெற்றுள்ளது.

'ஆண்டிடும் தன்மையான்' - 'என்னைக் கட்டளையிட்டு ஆள்கின்றவர் நம்மாழ்வார்' என்று மதுரகவி ஆழ்வார் அருளிச் செய்ததை விளக்கும் வடக்குத் திருவீதிப்பிள்ளை அருளிச்செய்த **வார்த்தை** எடுத்துக் காட்டப்படுகிறது.

விளக்கம்

"நம்மாழ்வாரைத் தவிர தேவு மற்றறியாதவனான என்னை, 'பொலிந்துநின்றபிரானிடத்திலும்' ஒருமுறை போய் வாரும்' என்று உபதேசித்துக் கட்டளையிட்டார் நம்மாழ்வார் என்பதைத்தான் 'என்னை ஆண்டிடும் தன்மையான்' என்றருளிச் செய்கிறார் மதுரகவிகள்" என்று வடக்குத் திருவீதிப் பிள்ளை அருளிச்செய்தார். 'திரிதந்தாகிலும் தேவபிரானுடைக் கரிய கோலத்திருவுருக் காண்பன் நான்' என்று கீழ்ப்பாசுரத்தில் தாம் பொலிந்துநின்ற பிரானையும் ஸேவிப்பதாக மதுரகவிகள் அருளிச் செய்தார். அப்படி அடியேன் அப்பிரானை ஸேவிப்பதும் ஆழ்வாருடைய கட்டளையினாலன்றி என் விருப்பத்தாலன்று என்கிறார் என்பது 'என்னை யாண்டிடும் தன்மையான்' என்றதன் கருத்தாகும்.

[198]

(நம்புவார் பதி வைகுந்தம் காண்மினே) நம்பி திருவழுதிவளநாடு தா$_{3}$ஸர் "நம்புவார் பதி வைகுந்தம் என்று, அவர்களிருந்த தே$_{3}$ஶங்காண் பரமபத$_{3}$ம்" என்று சொல்லுவர். "கூரத்தாழ்வான் மகன் பிறந்தபின்பு ஸம்ஸாரமும் பரமபத$_{3}$மும் இடைச்சுவர் தள்ளி ஒரு போ$_{4}$கி$_{3}$யாய்த்துக்காண் என்று பெற்றி பணித்தார்" என்று பிள்ளை அருளிச் செய்வர்.

(கண்ணிநுண்சிறுத்தாம்பு 11 பெரிய வாச்சான் பிள்ளை வ்யாக்யானம்)

நிகழிடம்

மதுரகவிகள் தாம் அருளிச் செய்த திவ்யப்ரபந்தமான கண்ணிநுண் சிறுத்தாம்பைக் கற்பவர்களுக்குப் பயன் அருளிச் செய்யும்போது, "மதுரகவி சொன்ன சொல் நம்புவார்பதி வைகுந்தம் காண்மினே" என்கிறார். மதுரகவி ஆழ்வார் அருளிச்செய்த சொல்லை நம்புபவர்களுக்குப் பரமபதம் கிடைக்கும் என்று இதற்குப் பொருளுரைத்த உரையாசிரியர், நம்பி திருவழுதிவளநாடு தாஸர், பெற்றி ஆகியோர் அருளிச்செய்த **வார்த்தை**களை எடுத்துக் காட்டுகிறார்.

விளக்கம்

நம்பி திருவழுதிவளநாடு தாஸர் 'நம்புவார் பதியே வைகுந்தம்' என்று கொண்டு "கண்ணிநுண்சிறுத்தாம்பைக் கற்பவர்கள் எவ்வூரில் இருக்கிறார்களோ

1. நம்மாழ்வார் அவதரித்த தலமான திருக்குருகூரில் கோயில் கொண்டுள்ள எம்பெருமான் திருநாமம் பொலிந்து நின்ற பிரான் என்பது.

அவ்வூரே பரமபதமாகிவிடும்" என்று கூறுவராம். இவ்வுலகமே பரமபதமாக எப்படி ஆகமுடியும் என்ற கேள்விக்குப் பெற்றியின் வார்த்தையை விடையாகத் தருகிறார் உரையாசிரியர். "கூரத்தாழ்வான் மகனான பட்டர் பிறந்த பின்பு பரமபதத்தையும் இவ்வுலகையும் பிரிக்கும் சுவர் இடித்துத் தள்ளப்பட்டு இரண்டு உலகமும் ஒன்றாகி விட்டபடியால் பரமபதம் வேறு, பூவுலகம் வேறு என்பதேயில்லை" என்று பெற்றி கூறியதாக நம்பிள்ளை அருளிச் செய்வர்!

[199]

வேல்வெட்டிநம்பியார், பிள்ளை கிழக்கே முக்காதமாற்றிலே எழுந்தருளி யிருக்கச் செய்தே ஒரு திருக்கார்த்திகையிலே "புறம்பே சிலரைக் கேட்டால் எளியன் என்றிருப்பர்கள். இது பரிஹரிக்க வல்லாருமில்லை. இத்தை சொல்லிவரக் காட்டவேணும்" என்று ஓராள் கொடுத்து வரக் காட்டினார். அது என்னென்புது என்னில், "பெருமாள் கடலை ஶரணம் புகுகிறவிடத்தில் ப்ராங்முக$_2$வாதி$_3$ நியமோபேதராய்க் கொண்டு ஶரணம் புக்கார். இதர உபாயங்களோபாதி ப்ரபத்தியும் ஸஹாயாந்தர ஸாபேக்ஷமோ?" என்று வரக்காட்ட, "அந்த உபாயத்துக்கு உடன் வந்தியாயிருப்பதொன்றன்று. உபாய பரிக்ரஹம் பண்ணினவருடைய ஸ்வபா$_4$வத்தாலே வந்தது. ராக்ஷஸஜாதியராவார் தண்ணியராய் அநதி$_4$காரிகளாயிருக்க, அவர்களிலே ஒருவனான ஸ்ரீவிபீ$_4$ஷணாழ்வானிறே "समुद्रं राघवो राजा शरणं गन्तुमर्हति" (ஸமுத்$_3$ரம் ராக$_4$வோ ராஜா ஶரணம் க$_3$ந்துமர்ஹதி) என்று இவர்க்கு உபதே$_3$ஶித்தான். அவன் பக்கல் நியதி கண்டிலோம். இவர் பக்கலிலே நியதி கண்டோம். இத்தால் சொல்லிற்றாயிற்றென் என்றால், அநதி$_4$காரியானவனுக்கு அதி$_4$காரம் ஸம்பாதி$_3$க்க வேண்டா; அதி$_4$காரியானவனுக்கு அநதி$_4$காரம் ஸம்பாதி$_3$க்க வேண்டா. நின்றநிலையிலே அதி$_4$காரியாமித்தனை. ஸர்வாதி$_4$காரமாமென்றபடி."

(பெரியதிருமொழி 1-1-1)

1. பட்டரைப் பற்றிய இந்த வார்த்தைகளையும் நம்பிதிருவழுதிவளநாடுதாஸரே அருளியதாக இப்பாசுரத்தின் நஞ்சீயர் வ்யாக்யானத்திலும் நம்பிள்ளை வ்யாக்யானத்திலும் உள்ளது. பெற்றியின் திருநாமம் அவைகளில் குறிப்பிடப்படவில்லை.

 நம்பி திருவழுதிவள நாடு தாஸர் வார்த்தை 'கூரத்தாழ்வான் மகன் பிறந்த பின்பு இடைச்சுவர் தள்ளி ஒரு போகியாய்த்துக்காண்" என்று பணித்தான் -

 என்று நஞ்சீயர் வ்யாக்யானத்திலும்,

 நம்பி திருவழுதிவளநாடு தாஸர் 'அவர்களிருந்த தேசந்தான் பரமபதம்' என்று சொல்லுவர். கூரத்தாழ்வான் மகன் பிறந்த பின்பு இடைச்சுவர் தள்ளி இரண்டு விபூதியும் ஒன்றாய்த்துக் காண்' என்று பணித்தார் என்று பிள்ளை அருளிச் செய்வர் -

 என்று நம்பிள்ளை வ்யாக்யானத்திலும் உள்ளது.

நிகழ்டம்

வெகுகாலம் பகவானை அனுபவிக்கும் பாக்கியத்தை இழந்திருந்த தாம் அவனுடைய அருளாலே அவனை அடையப்பெற்றதாகத் திருமங்கையாழ்வார் அருளிச்செய்கிறார். பகவத்விஷயத்தை அனுபவிக்க இழிபவர்களுக்குத் தகுதிகள் எவையும் வேண்டா என்றும், ராவணனுடைய தம்பியான விபீஷணனும், ஒரு முழுக்கிடாமல் ராமபிரானைச் சரணடைந்தான் என்றும் விளக்குகின்ற உரையாசிரியர், இத்தொடர்பில் ஓர் **ஐதிஹ்யம்** காட்டுகிறார்.

விளக்கம்

வேல்வெட்டி நம்பியார் என்பவர் **நம்பிள்ளை** காலத்தில் வாழ்ந்து வந்தவர். ஒரு திருக்கார்த்திகைத் திருநாளன்று, ஸ்ரீராமாயணத்தில் அவருக்கு ஒரு ஸந்தேகம் எழுந்தது. உடனே அந்த ஸந்தேகத்தை நம்பிள்ளையிடம் கேட்டுத் தெளிவடையலாம் என்றால், நம்பிள்ளை அப்போது ஸ்ரீரங்கத்திற்குக் கிழக்கே மூன்று காத வழியில் ஏதோ காரியமாக எழுந்தருளியிருந்தார். உடனே தம் சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்ற ஆவலின் மிகுதியால் தம் சந்தேகத்தை ஓர் ஓலையில் எழுதி ஒருவரிடம் கொடுத்து நம்பிள்ளை இருக்குமிடத்திற்கு அனுப்பி வைத்தார். அதில் "என்னுடைய சந்தேகத்தை வேறு சிலரிடம் கேட்டால், 'இது கூடத் தெரியாதவனாக இருக்கின்றானே என்று என்னைப் பற்றித் தாழ்வாக நினைக்கக் கூடும். மேலும் இந்த ஐயத்தைப் போக்க வல்லார் தேவரீரைத் தவிர வேறு யாரும் இலர். எனவே தேவரீரே இந்த சந்தேகத்தைப் போக்கியருள வேணும்" என்று எழுதித் தம்முடைய ஐயத்தைத் தெரிவித்திருந்தார். அந்த ஐயம் யாதெனில்; "இராமபிரான் கடலரசனிடம் சரணாகதி செய்தபோது கிழக்கு நோக்கியிருத்தல் முதலிய விதிகளைக் கடைப்பிடித்துத் தஞ்சம் புகுந்தார். (தருப்பைப் புல்லைப் படுக்கையாக விரித்து, அதன் மீது கிழக்குமுகமாக ஸமுத்ரத்தை நோக்கிப் படுத்திருந்து மூன்று நாள்கள் பட்டினியிருந்து இராமபிரான் சரணாகதி செய்ததாக வான்மீகி ராமாயணத்தில் கூறப்பட்டுள்ளது.)[1] சரணாகதி என்பது எந்த வழி முறையுமில்லாமல் செய்யக் கூடியது என்று கூறப்பட்டிருக்கும்போது இராமபிரான் மட்டும் இவ்வளவு விதிமுறைகளோடு சரணாகதி செய்ததாகக் கூறப்படுகிறதே! எனவே சரணாகதியும், மற்ற நெறிகளைப் போலச் சில விதிமுறைகளோடு சேர்த்துத்தான் செய்யப்படவேண்டுமோ?" என்று வேல்வெட்டி நம்பியார் அந்த ஓலையில் வினவியிருந்தார். அதற்கு நம்பிள்ளை, "சரணாகதிக்கு விதிமுறைகள் எதுவும் இல்லை. இராமபிரான் சில விதிமுறைகளோடு சேர்த்துச் செய்தார் என்றால் அது அவருடைய இயல்பாலே வந்தது. விபீஷணன் இராமபிரானிடம் சரணாகதி

1. இராமபிரான் ஸமுத்ரராஜனைக் குறித்து சரணாகதி செய்தமை பற்றி வான்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில் 21ம் ஸர்க்கத்தில் காணத் தக்கன.

செய்தபோது கடலிலே ஒரு முழுக்கிட்டுக் குளித்து விட்டுப் பிறகு சரணாகதி செய்ததாகக் கூடக் கூறப்படவில்லை.[1] அந்த விபீஷணன்தான் "ஸமுத்ரம் ராகவோ ராஜா சரணம் கந்துமர்ஹதி" (ராயு.19-30) (இராமபிரான் ஸமுத்ரத்தைச் சரணமடையக் கடவர்) என்று கூறினான். ராமன் இக்ஷ்வாகு வம்சமான அரசர் குலத்திலே உதித்தபடியாலே ஆசாரத்தை மிகவும் நன்றாகக் பின்பற்றுபவர் ஆதலால், அதற்குத் தக்கபடி சில நியமங்களோடு சரணாகதி செய்தார். விபீஷணன் அரக்கர் குலத்திலுதித்தவனாதலால், அவன் பின்பற்ற வேண்டிய ஆசாரம் ஒன்றுமில்லாதபடியால் அதற்கு ஏற்ப எந்த நியமும் இல்லாமல், இருந்தபடியே சரணாகதி செய்தான். இதனால் சொல்லப்படுவது என்னவென்றால் சில நியமங்களைப் பின்பற்றத் தகுதியுள்ளவன், அவைகளைச் செய்யாமல் போனால் அதுவே அவனுக்குத் தகுதியின்மையை உண்டாக்கிவிடும். அதே போல் சில நியமங்களைப் பின்பற்ற வேண்டிய அவசியம் இல்லாதவன் அவற்றைப் பின்பற்றினால், அதுவும் அவனுக்குத் தகுதியின்மையை ஏற்படுத்திவிடும். எனவே தகுதியுள்ளவன் தகுதியின்மையைத் தேடிக் கொள்ள வேண்டாம்; தகுதி அற்றவன் தகுதியையும் தேடிக் கொள்ள வேண்டாம். தத்தம் நிலைக்குச் சேரவே அவரவர்கள் சரணாகதி செய்யும் அதிகாரத்தைப் பெற்றவராவர். சரணாகதி என்பது எல்லாருக்கும் உரியது" என்றருளிச் செய்தார்.[2]

[200]

"திருமந்த்ரம் சொல்லும் போது ப்ரயதராய்க் கொண்டு சொல்ல வேணுமோ வேண்டாமோ?" என்று சீயர் ப$_4$ட்டரைக் கேட்க, "வேண்டா" என்றருளிச் செய்தார். க$_3$ங்கை$_3$யாடப் போமவனுக்கு நடுவேயொரு உவர்க்குழியிலே முழுகிப் போக வேணுமோ? இங்ஙன்மையெல்லாமுண்டாக்கப் புகுகிறது, கீழ் அயோக்$_3$யதை யித்தனையும் போக்க மாட்டாதோ?" என்றருளிச் செய்தார்.

(பெரிய திருமொழி 1-1-1)

நிகழ்டம்

'நான் கண்டுகொண்டேன் நாராயணா என்னும் நாமம்' என்று திருமங்கையாழ்வார் அருளிச்செய்கிறார். 'மந்த்ரம்' என்று கூறாமல் 'நாமம்'

1. விபீஷணன் இராமபிரானிடம் சரணாகதி செய்தமை குறித்த செய்திகள் வான்மீகி ராமாயணம் யுத்தகாண்டத்தில் 17ம்ஸர்க்கத்தில் காணத்தக்கன.
2. இதே ஐதிஹ்யம் மற்றும் இரண்டிடங்களில் குறிப்பிடப்பெற்றுள்ளது. (எண் 247, 460) ஸ்ரீவசன பூஷணத்தில் (சூ.31) "இவ்விடத்திலே வேல்வெட்டிப்பிள்ளைக்குப் பிள்ளை அருளிச் செய்த வார்த்தையை ஸ்மரிப்பது' என்றுள்ளதும், அதற்கு மணவாளமாமுனிகள் அருளியுள்ள உரையும் இவ்வைதிஹ்யத்தையே எடுத்துக் கூறுகின்றது. (அங்கு அவருடைய திருநாமம் வேல்வெட்டிப் பிள்ளை என்று குறிப்பிடப்படுவது காண்க.)

என்று இங்கு ஆழ்வார் அருளிச் செய்துள்ளார். மந்திரத்தைக் குறிப்பிட்ட காலத்தில்தான் கூறவேண்டும்; குறிப்பிட்ட தகுதி உள்ளவர்கள்தான் கூறவேண்டும் என்று சில நியமங்கள் உண்டு. ஆனால் எம்பெருமானுடைய திருநாமத்தைக் கூறுவதற்கு எந்த நியமும் இல்லை என்று காட்டுவதற்காகவே ஆழ்வார் நாமம் என்று அருளிச்செய்தள்ளார் என்று விளக்கும் உரையாசிரியர், இதுபற்றி பட்டருக்கும் நஞ்சீயருக்கும் இடையே நடைபெற்ற **ஸம்வாதம்** ஒன்றை எடுத்துக்காட்டுகிறார்.

விளக்கம்

எண் 66ன் விளக்கம் பார்க்க.

[201]

(என நினைந்து) "இப்புடைகளில் நினைப்பது அனேகத்தையிறே" என்றாயிற்று சீயர் அருளிச் செய்வது. பிள்ளை, "இங்ஙன் நினைத்து வாய்விட மாட்டாதே, 'நினைதொறும் சொல்லுந்தொறும் நெஞ்சிடிந்துகும்' என்றிங்ஙனே சொல்லலாமோ?" என்று சீயர்க்கு விண்ணப்பம் செய்ய, "நீர் இவரிலும் ப$_4$க்தராயிருந்தீர்" என்றருளிச் செய்தார்.

(பெரிய திருமொழி 1-1-2)

நிகழிடம்

திருமங்கையாழ்வார் தாம் முன்பு பெண்களிடத்தில் வசப்பட்டுக் கிடந்ததாகப் பேசும் போது "ஆவியே! அமுதே! என நினைந்து உருகி அவரவர் பணை முலை துணையா, பாவியேன் உணராது எத்தனை பகலும் பழுது போய் ஒழிந்தன நாள்கள்" என்றருளிச் செய்கிறார். இத்தொடர்பில் ஓர் **ஐதிஹ்யம்** கூறப்பெறுகிறது.

விளக்கம்

"ஆவியே அமுதே என நினைந்து" என்பதற்கு, 'பெண்களிடத்தில் காமவசப்பட்டு, தான் உகந்த காதலிமார்களை ஆவியே என்றும், அமுதே என்றும், இன்னும் இப்படிப் பலவாறாகச் சொல்லியும் நினைத்தும் உருகி' என்று நஞ்சீயர் பொருளுரைத்தார். 'நினைந்து' என்பதற்கு 'இப்படிப் பலவாறாக நினைத்துக் கொண்டு' என்பது நஞ்சீயர் தந்த விளக்கம். இதைக் கேட்ட நம்பிள்ளை தமக்குத் தோன்றிய வேறொரு பொருளைக் கூறினார். அதாவது, "தான் உகந்த காதலிமார்களை ஆவியே என்றும் அமுதே என்றும் கூறவேண்டும் என்று நினைத்து, அப்பெண்களைப் பற்றிய நினைவு வந்தவுடனே அவர்களிடத்துள்ள ஈடுபாட்டால் "நினைதொறும் சொல்லுந்தொறும் நெஞ்சிடிந்துகும்" (திருவாய்மொழி 9-6-2) என்கிறபடியே அதையும் வாய் விட்டுச் சொல்ல

முடியாமல், உள்ளம் உருகி" என்று கூறலாமோ என்று நஞ்சீயரைக் கேட்டார். 'என நினைந்து உருகி' - என்பதற்கு 'என்று நினைத்து, அதையும் வாய்விட்டுச் சொல்ல முடியாமல் உருகி' என்பது நம்பிள்ளை அளித்த விளக்கம். இதைக் கேட்ட நஞ்சீயர் வேடிக்கையாக, "காமவசப்பட்டவர்களுக்குப் பெண்களிடம் உள்ள ஈடுபாட்டை அப்படியே கூறுகிறீரே! நம்மாழ்வார் பகவத்விஷயத்தில் சொன்ன சொற்களை, திருமங்கையாழ்வார் காதலிகளைப் பற்றிக் கூறுகிறார் என்று சொன்ன நீர் ஆழ்வாரைக் காட்டிலும் நல்ல ரஸிகர் (சுவைஞர்)" என்று கூறினார்.[1]

[202]

"ஒருவனுக்கு ப$_4$க$_3$வத்ஸம்ப$_3$ந்த$_4$முண்டு இல்லை என்று தனக்கே அறியலாம்" என்று பலகாலும் அருளிச் செய்வர் சீயர். "ஒருவன் நோவுபடக்கண்டால் 'ஐயோ' என்று இரக்கம் பிறந்திருக்கில் நமக்கு ப$_4$க$_3$வத்ஸம்ப$_3$ந்த$_4$முண்டு என்றறியலாம், 'அத்தனையும் வேணும்' என்றிருந்தானாகில் நமக்கு ப$_4$க$_3$வத்ஸம்ப$_3$ந்த$_4$ம் இல்லை என்றிருக்கலாம்."

(பெரிய திருமொழி 1-1-8)

நிகழிடம்

தம்முடைய தாழ்வைக் கூறிக்கொள்கின்ற திருமங்கையாழ்வார் 'செற்றமே வேண்டித் திரிதருவேன்' (பிறருக்குத் துன்பம் விளைப்பதையே நினைத்துக் கொண்டு திரிந்தேன்) என்று அருளிச்செய்கிறார். பிறருக்குத் துன்பம் விளைப்பவர்களுக்கு பகவானோடு தொடர்பு இல்லை என்பதற்குச் சான்றாக நஞ்சீயருடைய **வார்த்தையை** *எடுத்துக் காட்டுகிறார் உரையாசிரியர்.*

விளக்கம்

ஒருவன் தனக்கு எம்பெருமானோடு தொடர்பு உண்டா என்பதைத் தானே அறிந்துகொள்ளலாம் என்று **நஞ்சீயர்** *பலகாலும் அருளிச் செய்வராம்.*[2] *அதாவது, யாரேனும் ஒருவன் துன்பப்பட்டுக் கொண்டிருப்பதைக் காணும்போது, "ஐயோ! இவன் இப்படி துன்பப்படுகிறானே!' என்று அவன் மீது இரக்கம் கொள்வோமாகில் நமக்கு பகவானோடு தொடர்பு உண்டு; 'இத்தனை துன்பமும் இவன் பட வேண்டியவன்தான்' என்று நினைப்போமாகில் நமக்கு*

1. இதே போல் பலவிடங்களில் நஞ்சீயர் கூறிய கருத்துக்களை மேலும் விரித்து நம்பிள்ளை தமது கருத்துக்களைக் கூற, நஞ்சீயர் அதை மிகவும் கொண்டாடியது பற்றி எண் 205, 212, 284, 679, 783 முதலியவற்றில் காண்க.
2. நஞ்சீயர் இவ்வாறு அருளிச்செய்தமை மற்றும் இரண்டிடங்களில் குறிப்பிடப்பெற்றுள்ளது. எண் 421, 691 பார்க்க.

பகவானோடு தொடர்பு இல்லை என்பதை நாமே முடிவு செய்து கொள்ளலாம் என்கிறார் நஞ்சீயர். அனைத்துயிர்களிடத்தும் இரக்கம் கொள்ளுதலே இறைவனிடம் உள்ள தொடர்பிற்கு அறிகுறி என்றபடி.[1]

[203]

“திருவனந்தாழ்வான் மடியிலும் திருவடி சிறகின் கீழும், ஸ்ரீஸேநாபதி யாழ்வான் பிரம்பினுள்ளும் காண் இத்தத்வம் வளருவது” என்று ப$_4$ட்டர் அருளிச் செய்யும் வார்த்தை.

(பெரிய திருமொழி 1-2-6)

நிகழிடம்

‘பணங்கள் ஆயிரமுடைய நல் அரவணைப் பள்ளிகொள் பரமா’ என்று திருமங்கையாழ்வார் அருளிச்செய்கிறார். யசோதைப்பிராட்டி கண்ணனைத் தன் மடியிலே கொண்டு தாலாட்டுமாபோல, திருவனந்தாழ்வான் எம்பெருமானைத் தன் மடியிலே இருத்திக்கொள்வான் என்று விளக்கிய உரையாசிரியர், இத்தொடர்பில் பட்டர் அருளிச்செய்த **வார்த்தை** *ஒன்றை எடுத்துக் காட்டுகிறார்.*

விளக்கம்

எண் 18ன் விளக்கம் பார்க்க.

[204]

(பேதை வண்டுகள்) ... இதுக்கு த்$_3$ருஷ்டாந்தமாக திருவெள்ளறைத் திருமொழியிலே ஒரு பாட்டருளிச் செய்வர்............

(பெரிய திருமொழி 1-2-9)

நிகழிடம்

‘தாதுமல்கிய பிண்டி விண்டலர்கின்ற தழல்புரை எழில் நோக்கிப் பேதை வண்டுகள் எரியென வெருவரு பிரிதி சென்றடை நெஞ்சே’ (மகரந்த தாதுக்கள் மிக்கிருந்துள்ள அசோக மலர்கள் நெருப்புப் போலே அலருகின்ற அழகைப் பார்த்த அறிவில்லாத வண்டுகளானவை, அம்மலர்களை நெருப்பு என்றே நினைத்து பயப்படுகின்ற திருப்பிரிதி எனும் திவ்யதேசத்தைச் சென்று மனமே! கிட்டப்பார்) என்றருளிச் செய்கிறார் திருமங்கையாழ்வார். இத்தொடர்பில் ஒரு **வார்த்தை** *கூறப்படுகிறது.*

1. ‘அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகலான்’ என்ற திருக்குறளும் (30) ‘வைஷ்ணவஜனதோ’ என்ற நரஸிம்ம மேத்தாவின் பாடலும் இக்கருத்தை உட்கொண்டவையேயாகும்.

விளக்கம்

'ஓங்கு பிண்டியின் செம்மலரேறி வண்டுழிதர மாவேறித் தீங்குயில் மிழற்றும் படப்பைத் திருவெள்ளறை நின்றானே' (ஓங்கி வளர்ந்த அசோக மரத்தின் சிவந்த மலர்களின் மேல் வண்டுகள் ஏறி உலவுவதைக் கண்ட குயில்களானவை (சிவந்த அசோக மலர்களை நெருப்பு என்று எண்ணி, அந்த நெருப்பிலே வண்டுகள் அகப்பட்டுக் கொண்டதாக நினைத்து கொண்டு) பயத்துடன் மாமரங்கள் மீது ஏறி நின்று கூக்குரலிட்டன) என்ற திருவெள்ளறைப் பாசுரத்திலும் (பெரிய திருமொழி 5-3-9) இதே கருத்தைத் திருமங்கையாழ்வார் அருளிச்செய்துள்ளார் என்று நம்பிள்ளை எடுத்துக் காட்டுவார் என்கிறார் உரையாசிரியர்.

[205]

(வரையெனப் பெயர் தரு) அம்மலைப்பாம்புகளானவை அவற்றுக்கு அஞ்சி மலைபோலே பேர்ந்து போய்ப் புற்றிலே புகா நிற்குமென்று, "காருடைய மின்னென்று புற்றடையும்" என்றும் 'பரந்த தலையுடைய நாகம் வாரணத்தை அஞ்சி யொளிக்கும்' என்கிற ப்ரஸித்$_{3}$தி$_{4}$யாலும், இப்படிப் புற்றிலேயடையும் என்றருளிச் செய்வர் சீயர். "இதுவோ இதுக்கு அருளிச்செய்யும்படி?" என்று பிள்ளை கேட்டருள, "நீர் இப்படிக் கேட்கும் போது, ஒன்றை நினைத்தல்லது கேளீர், அத்தைச் சொல்லும்" என்ன, "பெயருகையாகிறதுதான் போக்கு, வரத்து இரண்டுக்கும் ஸாத$_{4}$ாரணமாயாயிற்று இருப்பது. இனித்தான் மலைக்குச் சிறப்புச் சொல்லுபவர்கள் 'மலைப்பாம்புகள் ஆனையை விழுங்கும்' என்னக் கடவர்கள்; ஆகையாலே கரியமாமுகில் படலங்கள் கிடந்து முழங்குகிறவற்றைப் பெரிய மாசுணமானது ஆனையாக பு$_{3}$த்$_{3}$தி$_{4}$ பண்ணி ஆமிஷார்த்த$_{2}$மாக மலை பேர்ந்தாற்போலே கால்வாங்கிவந்து கிட்டா நிற்குமாயிற்று என்றாமே" என்ன, "அதுவேயிறே பொருள்" என்று போரக் கொண்டாடியருளினார் என்றருளிச் செய்வர்.

(பெரிய திருமொழி 1-2-10)

நிகழிடம்

"கரியமாமுகில் படலங்கள் கிடந்தவை முழங்கிடக் களிறென்று பெரிய மாசுணம் வரையெனப் பெயர் தரு" (கறுத்துப் பெரியதாயுள்ள மேகங்கள் பேரொலியெழுப்ப, அம்மேகங்களை யானைகள் என்றெண்ணிய மலைப் பாம்புகள் மலைகள் பெயர்ந்தாற் போல் அசைந்து வந்தன) என்ற திருமங்கையாழ்வார் அருளிச்செய்துள்ளார். இத்தொடர்பில் ஓர் **ஐதிஹ்யம்** *கூறப்படுகிறது.*

விளக்கம்

"மலைப்பாம்புகள் யானைகளைக் கண்டால் அச்சம் கொள்ளும். ஆகையாலே மேகங்களை யானைகள் என்று நினைத்த மலைப்பாம்புகள் அவைகளுக்கு அஞ்சி, மலைகள் அசைந்தாற் போல் பெயர்ந்து வந்து புற்றிலே ஒளிந்து கொண்டன" என்று **நஞ்சீயர்** *பாசுரத்தை விளக்கினார். இதற்குச் சான்றாக "ஊரும் வரியரவம் ஒண்குரவர் மால்யானை பேரவெறிந்த பெருமணியைக் காருடைய மின் என்று புற்றடையும் வேங்கடம்" (காட்டிலே புனங்காக்கின்ற வேடர்கள் யானைகளை விரட்டுவதற்காக மாணிக்கக் கட்டிகளை அவற்றின் மீது எறிய, இதைக் கண்ட மலைப் பாம்புகளானவை யானைகளை மேகங்களாகவும், ஒளியுடைய மாணிக்கக் கற்களை மின்னலாகவும் நினைத்து அஞ்சி, தங்கள் புற்றுக்களை அடையும்படியான திருவேங்கடம்) என்ற பொய்கையாழ்வார் (முதல் திருவந்தாதி - 38) பாசுரத்தை மேற்கோளாகக் காட்டி, 'பரந்த தலையுடைய நாகம் யானைக்கு அஞ்சி ஒளிந்து கொள்ளும்' என்ற வழக்கையும்[1] எடுத்துக் கூறினார். இதைக் கேட்ட* **நம்பிள்ளை** *"இப்பாசுரத்திற்கு இதுவோ பொருள்?" என்று கேட்க, நஞ்சீயர் "இப்பாசுரத்திற்கு வேறொரு பொருள் உமது நெஞ்சில் இருந்தாலன்றி நீர் இப்படிக் கேட்க மாட்டீர். உமது நெஞ்சில் தோன்றிய பொருளைக் கூறும்" என்று கூறினார். உடனே நம்பிள்ளை "பெயருகை என்பது புற்றைவிட்டு வெளியே வருவது, வெளியிலிருந்து புற்றிற்குள்ளே போவது என்ற இரண்டு செயல்களையும் குறிக்கும் பொதுவான சொல்லாகும். மேலும் மலைக்குப் பெருமை கூறும் கவிகள் 'யானையை விழுங்கும்படியான பெரிய மலைப் பாம்புகளைக் கொண்ட மலைகள்' என்று சிறப்பித்துக் கூறியிருக்கின்றனர்.[2] எனவே கறுத்துப் பெரியதான மேகங்கள்*

1. திரையன் பாட்டு எனும் பழைய நூல் ஒன்றில் உள்ள,

> கடுங்கண் யானை நெடுங்கை சேர்த்தி
> இடங் கொண்டறைதல் திண்ணமென்றஞ்சி
> படங்கொள் பாம்பும் விடரகம்புகூஉம்
> தடங்கொள் உச்சித்தாழ்வரையடுக்கத்து

என்ற பாடல் 'பரந்த தலையுடைய நாகம் வாரணத்தை அஞ்சிப் புற்றை அடையும்' என்ற கருத்தை வெளிப்படுத்துகிறது.

2. கம்பராமாயணம் அயோத்யா காண்டம் சித்திர கூடப்படலத்தில் (34) உள்ள

> இடிகொள் வேழத்தை எயிற்றொடுமெடுத்துடன் விழுங்கும்
> பெரிய மாசுணம் கற்றறிந்தவரென வடங்கி
> சடைகொள் சென்னியர் தாழ்விலர் தாம் மிதித்தேறப்
> படிகள் தாமெனத் தாழ்வரை கிடப்பனபாராய்.

என்ற பாடலானது யானைகளையும் விழுங்கும்படியான மலைப் பாம்புகளானவை சித்திரக்கூட மலைக்குப் படிகளாக இருக்கின்றன என்ற கருத்தைக் கூறுகின்றது.

பேரொலியெழுப்ப, அம்மேகங்களை யானைகள் என்றெண்ணிய மலைப் பாம்புகள், அந்த யானைகளை விழுங்குவதற்காக மலைகள் பெயர்ந்தாற்போல புற்றிலிருந்து வெளியே வந்து நகர்ந்தன என்றும் கூறலாமே" என்று கூறினார். இதைக் கேட்ட நஞ்சீயர் மிகவும் மகிழ்ச்சியடைந்து "நீர் கூறிய இந்தப் பொருளே மிகவும் பொருத்தம் உடையது" என்று கூறி நம்பிள்ளையை மிகவும் கொண்டாடினார் என்று நம்பிள்ளை தாமே அருளிச் செய்வர் என்கிறார் உரையாசிரியர்.[1]

[206]

(அரிய இன்னிசை) "திருமங்கையாழ்வார் தம் திருவாயாலே அரிய இன்னிசை என்பதே!" என்றருளிச் செய்வர். ஆழ்வார் திருவரங்கப் பெருமாளரையர் சிலரோடே பிணங்கி, கையில் தாளத்தைப் பொகட்டு "வாலிமாவலத்தை என்னோடே இசை சொல்லிப் போ" என்றாராம்.

(பெரிய திருமொழி 1-2-10)

நிகழிடம்

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த பெரிய திருமொழியில் 'வாலிமாவலத்து' என்று தொடங்கும் பதிகமானது மிகவும் அழகான சந்தத்தில் அமைந்துள்ளது. இப்பதிகத்தின் கடைசிப் பாசுரத்தில் 'அரிய இன்னிசை பாடும் நல்லடியவர்க்கு அருவினை அடையாவே' (அரிய இன்னிசையோடு கூடிய இப்பதிகத்தைப் பாடுகின்ற அடியவர்களைப் பாவங்கள் அடையமாட்டா) என்று திருமங்கையாழ்வார் அருளிச் செய்கிறார். இத்தொடர்பில் ஓர் **ஐதிஹ்யம்** *கூறப்படுகிறது.*

விளக்கம்

"திருமங்கையாழ்வார், தாம் அருளிச் செய்த பாசுரங்களைத் தாமே 'அரிய இன்னிசை' என்று கூறிக் கொள்வதே" என்று மிகவும் ஈடுபட்டு அருளிச் செய்வராம் **நம்பிள்ளை.** *அதாவது, பாசுரங்களை இயற்றியவரே 'அரிய இன்னிசை' என்று கொண்டாடிக் கொள்ளுமளவுக்குப் பெருமை பெற்ற பாசுரங்கள் என்றபடி. இப்பதிகத்தின் இசை நயத்தை விளக்க மேலும் ஒரு நிகழ்ச்சியும் எடுத்துக் காட்டப்படுகிறது.* **ஆழ்வார் திருவரங்கப் பெருமாள் அரையருக்குச்** *சிலரோடு கருத்து வேற்றுமை எழுந்தபோது, தம் கையில் இருந்த தாளத்தைப்போட்டு "வாலிமாவலத்து" எனும் திருமொழியை என்னோடு பாட முடியுமானால் பாடுங்கள் பார்க்கலாம்!" என்று கூறினாராம். எனவே*

1. இதே போல் நஞ்சீயர் நம்பிள்ளையைக் கொண்டாடிய இடங்கள் பலவுண்டு என்பதற்கு எண் 201ன் அடிக்குறிப்பைக் காண்க.

'வாலிமாவலத்து' என்கிற பதிகம் இசை குறித்த வாது பாட்டாகப் பாடும் பதிகம் என்று புகழ் பெற்றது.

[207]

ப$_4$ட்டரை ஒரு வ்யாபாரி, "இது அல்பம் அஸ்த்தி$_2$ரம்' என்று இத்தை த்யாஜ்யமாக நினைத்திரா நின்றார்கள் சிலர். 'காண்கிற உடம்புக்கு அவ்வருகு இல்லை என்று அது தன்னிலே பே$_4$ாக்$_3$யதாபு$_3$க்$_3$தி$_4$ பண்ணியிரா நின்றார்கள் சிலர்; ஒன்றைப் பற்றி இவையிரண்டும் நடக்கிறபடியெங்ஙனே?" என்று கேட்க, "ப$_4$ாக்$_3$யாதி$_4$கர்க்கு இதினுடைய தே$_3$ாஷத$_3$ர்ஶனத்தைக் கொண்டு கைவிடுகைக்கும் உடலாய், ப$_4$ாக்$_3$யஹீனர்க்கு இதிலே பே$_4$ாக்$_3$யதாபு$_3$க்$_3$தி$_4$ பண்ணி அனர்த்த$_2$ப் படுகைக்கும் உடலாம்படி, அவ்வவருடைய புண்ய பாபங்களையிட்டு அதுக்கு அநுரூபமாகக் காணும் இத்தைப் பண்ணிற்று" என்றருளிச் செய்தார்.

(பெரிய திருமொழி 1-3 ப்ரவேசம்)

நிகழிடம்

மானிட உடலானது தாழ்ந்த விஷயங்களில் மூட்டித் துன்பத்தை விளைக்கக் கூடியதாக இருப்பதனால், உடல் நல்ல நிலையில் இருக்கும்போதே படரிகாச்ரமம் சென்று அவனை அடையுங்கள் என்று 'முற்றமூத்துக் கோல்துணையா' என்கிற திருமொழியில் திருமங்கையாழ்வார் அருளிச்செய்கிறார். இத்தொடர்பில் ஓர் **ஸம்வாதம்** *காட்டப்பெறுகிறது.*

விளக்கம்

எண் 800ன் விளக்கம் காண்க.

[208]

(கோல் துணையா) சீயர் ஸங்யஸித்தருளுகிறவன்று த$_3$ண்டத$_4$ாரணம் பண்ணுகிற மந்த்ரம் "நீயெனக்கு மித்ரமாய் எல்லா ரக்ஷணங்களும் பண்ண வேணும்" என்றாயிற்றிருப்பது. அத்தைக் கேட்டு "ஒரு ஸர்வஜ்ஞன் ஸர்வஶக்தி பரமசேதநனை ஓர் ஆசார்யன் முன்னாக இவ்வார்த்தை சொல்லி வைத்து, இத்தையும் இவ்வார்த்தை சொல்லும்படியான இவ்வாஶ்ரமப்ராப்திதான் என் என்றிருந்தேன் காண்" என்றருளிச் செய்வர்.

(பெரிய திருமொழி 1-3-1)

விளக்கம்

நஞ்சீயர் *பராசரபட்டாரால் திருத்திப் பணிகொள்ளப்படுவதற்கு முன்னர், 'வேதாந்தி' என்ற பெயருடன் மேல்நாட்டில் மிகவும் புகழ் பெற்ற வித்வானாகத்*

திகழ்ந்தவர். பராசரபட்டரால் திருத்திப் பணிகொள்ளப்பெற்ற பின்பு, அவர் இல்லறத்தைத் துறந்து துறவறம் மேற்கொண்டார். அப்படித் துறவறம் மேற்கொள்ளும் போது காவி உடையையும் முக்கோலையும் ஏற்றுக் கொள்வது மரபு. அப்படி முக்கோலை ஏற்றுக் கொள்ளும்போது, அந்த முக்கோலைப் பார்த்து "ஸகா மே கோபாய" ("எனக்கு நண்பனாய் இருந்து கொண்டு என்னைக் காப்பாயாக") என்ற மந்திரம் ஒன்றைக் கூற வேண்டும். இதைக் கேட்ட நஞ்சீயர், "எல்லாமறிந்தவனும், எல்லாம் வல்லவனுமான பகவானை நோக்கி 'நீ எனக்கு எல்லாவித உறவுமாக இருந்து என்னைக் காக்க வேண்டும்' என்று ஓர் ஆசார்யனை முன்னிட்டுக் கொண்டு கூறிவிட்டு, அறிவற்ற ஜடப் பொருளான இந்த முக்கோலைக் குறித்தும் அதே போன்ற வார்த்தைகளைக் கூற வேண்டியிருக்கிறதே! என்னே இந்த ஸந்யாஸ ஆச்ரமம்! என்று நான் நினைத்துக் கொண்டேன்" என்றருளிச் செய்தாராம்.

[209]

(ஊன்றி ஊன்றி) பிள்ளை அழகிய மணவாள அரையர் இதுக்கு ப₄ட்டர் அருளிச் செய்தாராகச் சொன்னபடி, "ஒருகால் ஶரீரம் ஸ்தி₂திக்க வேண்டுமளவும் ஊன்றமாட்டானே, தன் கையில் மிடுக்கில்லாமையாலே பலகால் இத்தை எடுத்தெடுத்து இடாநிற்கும்" என்று.

(பெரிய திருமொழி 1-3-5)

நிகழிடம்

'இவ்வுலக வாழ்க்கையின் நிலையாமையைக் கருத்தில் கொண்டு, முதுமை வருவதற்கு முன்னே வதரி எம்பெருமானை வணங்குங்கள்' என்று ஒரு பதிகத்தில் திருமங்கையாழ்வார் அருளிச்செய்கிறார். அப்பதிகத்தில் ஒரு பாசுரத்தில் "தண்டுகாலா ஊன்றி ஊன்றித் தள்ளி நடவா முன் வண்டு பாடும் தண் துழாயான் வதரி வணங்குதுமே" (தடியைக் காலாகக் கொண்டு ஊன்றி ஊன்றித் தள்ளிக் கொண்டு நடப்பதற்கு முன்னே வதரியை வணங்குங்கள்) என்கிறார். இத்தொடர்பில் பட்டர் அருளிச்செய்த **வார்த்தை** கூறப்படுகிறது.

விளக்கம்

இங்குப் பாசுரத்தில் "ஊன்றி ஊன்றி" என்ற இருமுறை அருளிச் செய்துள்ளதன் சொல் நயத்தை விளக்குகின்ற **பட்டர்** அருளிச் செய்த கருத்தைப் **பிள்ளை அழகிய மணவாள அரையர்** என்பவர் கூறுகிறார். அதாவது "மூப்படைந்து விட்டால் தன் உடலானது பூமியில் நிலைத்து நிற்குமளவுக்குக் கூடத் தடியை ஊன்றுவதற்குக் கையில் வலிமை இல்லாமையால், அந்தத் தடியைப் பலமுறை எடுத்தெடுத்து ஊன்றி ஊன்றி இடுவான்" என்று பட்டர் விளக்குவார் என்கிறார் அரையர்.

[210]

(தவமிதயாதி).......... இதுக்கு ஸ்ரீபராங்குசதாஸர் "சீயா! 'மாமுனிபுகன்ற' என்று பாடபேதத்தைப் பண்ணி, அதினுடைய ப்ரபாவத்தைப் பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடு போந்தானிறே, அத்தைச் சொல்லிற்றாகவுமாமே!" என்ன, "அதுக்கு நமக்கு பலம் போராது" என்றருளிச் செய்வர்.

(பெரிய திருமொழி 1-4-8)

நிகழிடம்

வதரிகாச்ரமத்தைப் பற்றிப் பாசுரமிடுகின்ற திருமங்கையாழ்வார் "தவம் புரிந்துயர்ந்த மாமுனி கொணர்ந்த கங்கையின் கரைமேல் வதரியாச்சிராமத்து உள்ளானே" (தவம் புரிந்து உயர்ந்தவனான மாமுனி கொண்டு வந்த கங்கையின் கரைமேல் வதரியாச்சிரமம் எனும் திவ்யதேசத்தில் எம்பெருமான் எழுந்தருளியிருக்கிறான்) என்றருளுகிறார். இத்தொடர்பில் ஓர் **ஐதிஹ்யம்** கூறப்படுகிறது.

விளக்கம்

கடுமையான தவங்கள் பல செய்து பகீரதன் என்பவன் கங்கை நதியை பூமிக்குக் கொண்டு வந்த வரலாறு மிகவும் பிரசித்தமானது.[1] பகீரதன் அரச குலத்தைச் சார்ந்தவனாகையால் அவனை 'மாமுனி' என்பது அவ்வளவு பொருத்தம் அன்று என்று கருதி, 'தவம் புரிந்து உயர்ந்த மாமுனி' என்று ஆழ்வார் அருளிச் செய்துள்ளதற்கு **நம்பிள்ளை** வேறொரு பொருளை அருளிச் செய்தார். அதாவது விச்வாமித்ரர் அரசகுலத்தில் உதித்தவராக இருந்த போதும், கடுந்தவம் புரிந்து ப்ரம்மரிஷியாக உயர்ந்தவராதலால் தவம் புரிந்து உயர்ந்த மாமுனி என்று அவரைக் கூறுகிறது; அவர் தன்னுடைய யாகத்தைக் காக்க வேண்டும் என்பதற்காக ராமலக்ஷ்மணர்களை கங்கை கரை வழியாக அழைத்து வந்தார். ஆதலின் தவம் புரிந்து உயர்ந்த மாமுனியான விச்வாமித்திரர் (இராமலக்ஷ்மணர்களைக்) கொணர்ந்த கங்கையின் கரை...... என்று பொருள் உரைத்தார் நம்பிள்ளை. இதைக் கேட்ட **ஸ்ரீபராங்குசதாஸர்** என்பவர், "அப்படி விச்வாமித்திர முனிவர் இராமலக்ஷ்மணர்களை அழைத்துக் கொண்டு வந்த போது கங்கையின் வரலாறுகளைக் கூறிக் கொண்டே வந்தாராதலால் 'மாமுனி புகன்ற (கூறிய) கங்கை' என்று பாடத்தை மாற்றிக் கொண்டால் மிகவும் எளிதாகி விடுமே" என்றார். நம்பிள்ளை "அதற்கு நமக்கு ஆற்றல் இல்லை. உள்ள பாடத்திற்குத் தான் நாம் பொருள் உரைக்கக் கடமைப்பட்டிருக்கிறோமேயல்லது இல்லாத பாடத்தை நாம் உண்டாக்க வல்லோமல்லோம்" என்றருளிச்செய்தார்.

1. பகீரதன் தவம் செய்து கங்கா நதியைக் கொண்டு வந்தது பற்றி விச்வாமித்ரர் ராம லக்ஷ்மணர்களுக்குக் கூறியது முதலிய விவரங்கள் வான்மீகி ராமாயணம் பாலகாண்டம் 38 முதல் 43 வரையுள்ள ஸர்க்கங்களில் காணத்தக்கன.

[211]

“அறிவுடையார் அபுருஷார்த்த$_2$மென்று காற்கடைக் கொண்ட ஐஶ்வர்யத்தை ‘வேண்டேன் மனைவாழ்க்கை’ என்றும், ‘போந்தேன்’ என்றும் வீதராக$_3$ரய்ப் போந்த இவர், இப்போது ஐஶ்வர்யத்தைப் பலமாகச் சொல்லுவானென்!” என்று சீயர் ப$_4$ட்டரைக்கேட்க, “திருமங்கையாழ்வார் அவதரித்தபின்பு த்யாஜ்யமான ஐஶ்வர்யமும் பரம புருஷார்த்த$_2$த்துக்குள்ளே புக்குப் போயிற்றுக் காணும். ஈஶ்வரனேயாகவுமாய், நித்யஸூரிகளேயாகவுமாய், ராஜாவாகவுமாய், பறித்து ப$_4$க$_3$வத ஶேஷம் ஆக்கலாமாகில் என்றாம் இவர் இருப்பது” என்றருளிச் செய்தாராம்.

(பெரிய திருமொழி 1-4-10)

நிகழிடம்

திருமங்கையாழ்வார், தாம் அருளிச் செய்த ‘ஏனமுனாகி’ என்று தொடங்கும் பதிகத்தின் பாசுரங்களைக் கற்பவர்கள், ‘கடல் சூழ்ந்த பூமியை ஆண்டு, பிறகு வானவர் உலகுசென்று இமையவர் ஆகுவர்’ என்று பயன் அருளிச் செய்கிறார். இத்தொடர்பில் ஒரு **ஸம்வாதம்** *காட்டப்பெறுகிறது.*

விளக்கம்

“மெய்யறிவுடையவர்கள் செல்வத்தைப் பயனற்றது என்றன்றோ எண்ணியிருப்பர்கள்? இவ்வாழ்வாரும் “வேண்டேன் மனை வாழ்க்கையை” (பெரிய திருமொழி 6-1-6) என்றும் “போந்தேன்” (6-3-4) என்றும், இவ்வுலக வாழ்க்கையை வெறுத்தன்றோ பேசியிருக்கிறார்! அப்படிப்பட்டவர் தம்முடைய பாசுரங்களைக் கற்பவர்களுக்கு மிக உயர்ந்த பயனைக் கூறாமல், கடல் சூழ்ந்த பூமியை ஆள்வதான செல்வத்தைப் பயனாகக் கூறுவது ஏன்?” என்று நஞ்சீயர் *கேட்டார். இதற்கு* பட்டர், *“வெறுக்கத்தக்கதான செல்வமுங் கூட திருமங்கை ஆழ்வார் அவதரித்த பின்பு மிகவும் விரும்பத் தக்கதாக ஆகிவிட்டது. எம்பெருமானுடைய செல்வமாக இருந்தாலும், நித்யசூரிகளுடைய செல்வமாக இருந்தாலும், அரசனுடைய செல்வமாக இருந்தாலும், அவற்றைப் பறித்து’*

1. திருமங்கையாழ்வார் குமுதவல்லி எனும் பெண்ணை மணந்து கொண்டபோது தினந்தோறும் ஆயிரம் ஸ்ரீவைஷ்ணவ அடியார்களுக்கு அன்னம் இடவேண்டும் என்று அவள் நிபந்தனை விதிக்க, அதை நிறைவேற்றுவதற்காக வழிப்பறி செய்து பொருள் சேர்த்து அக்கைங்கர்யத்தைச் செய்தார் என்ற வரலாறுகள் ஆறாயிரப்படி குருபரம்பராப்ரபாவம் முதலிய நூல்களில் காணத்தக்கன. அரசனுக்குக் கட்டவேண்டிய கப்பப்பணத்தையும் இதற்காகவே செலவழித்து விட்டார். திருவாலி எம்பெருமான் திருமணக்கோலத்தில் வந்தபோது அவனையும் இதற்காகவே வழிப்பறி செய்தார். “பெருஞ்செல்வம் நெருப்பாக” (திருவாய் மொழி 4-9-4) என்றருளிச் செய்த நம்மாழ்வார் தாமே “உலகிலேந்து பெருஞ்செல்வத்தராய்த் திருமாலடியார்களைப் பூசிக்க நோற்றார்களே” (திருவாய் மொழி 5-6-11) என்றருளிச் செய்வது இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.

ஸ்ரீவைஷ்ணவ அடியார்களுக்குக் கைங்கர்யம் செய்யலாம் எனில் அச்செல்வங்களும் பயனுள்ளவையே என்றுதான் திருமங்கையாழ்வார் கருதியிருப்பர்" - என்று விடையளித்தார்.[1]

[212]

ஸ்ரீராமாயணத்திலே கைகேயியை "நீ என்ன நரகத்திலே புகக் கடவை?" என்றுண்டு. அவ்விடத்தை வாசியாநிற்க, நம்பிள்ளை, "முன்பே ஸ்ருஷ்டமான நரகங்கள் போராதென்கிறதோ?' என்ன, "அழகியதாகச் சொல்லிற்று" என்று சீயர் அருளிச் செய்தார்.

(பெரிய திருமொழி 1-9-2)

நிகழிடம்

திருமங்கையாழ்வார் "நானே நானாவித நரகம் புகும் பாவம் செய்தேன்" என்று பலவித நரகங்களில் சென்று அனுபவிக்க வேண்டிய அளவிற்குத் தாம் பாவங்கள் செய்துள்ளதாகக் கூறிக் கொள்ளுகிறார். இத் தொடர்பில் ஓர் **ஐதிஹ்யம்** காட்டப்படுகிறது.

விளக்கம்

ஒரு முறை ஸ்ரீராமாயணம் வாசித்துக் கொண்டு வந்த போது, அதில் கைகேயியை நோக்கி "நீ எப்படிப்பட்ட நரகத்திலே புகப் போகிறாயோ" என்று தயரதன் கூறுகிற ஓரிடம் வந்தது.[2] இதைக் கேட்ட **நம்பிள்ளை**, "முன்பே உண்டாக்கிவைத்த நரகங்கள் போதாது; இவள் செய்துள்ள பாவங்களை அனுபவிப்பதற்கு இனிமேல் புதிதாக நரகங்களும், தண்டனைகளும் படைக்கப் பட்டால்தான் உண்டு என்று தயரதன் கூறுவதாகக் கொள்ளலாமோ?" என்று கேட்க, **நஞ்சீயர்** "மிக அழகாகக் கூறினீர்" என்று அவரைக் கொண்டாடினாராம்.

[213]

சிறியாத்தான், ப₄ட்டர் ராமாவதாரத்திலே பக்ஷபதித்திருப்பர் என்று, அருளிச் செய்யும் வார்த்தை கேட்கைக்காக, "பெருமாளுக்கு எல்லா ஏற்றமும்

1. பட்டர் இப்படி அருளிச்செய்தமை எண் 238, 266, 267 ஆகிய இடங்களிலும் குறிப்பிடப் பட்டுள்ளது.

2. நநு பர்யாப்தமேதத்தே பாபே ராம விவாஸநம்
கிமேபி: க்ருபணை: பூய: பாதகைரபிதே க்ருதை:

(ராமனைக் காட்டிற்கு அனுப்பியதொன்றே உன் ஆத்மா இருக்குமளவும் நரகத்தை அனுபவிக்கச் செய்யப் போதுமே! (இன்னம் சீதையையும் மரவுரி உடுத்தச் சொல்லி, அவளையும் வனத்திற்கு அனுப்பி) மேன்மேலும் பாதகங்களைச் செய்து கொண்டிருப்பதனால் நீ இன்னும் எந்த நரகத்திற்குப் போவாயோ) என்று தசரதன் புலம்புகிறான். (அயோத்யா காண்டம் 38-10)

உண்டாகிலும், ஆஶ்ரிதார்த்த₂மாகக் கழுத்திலே ஓலைக்கட்டித் தூது போன இவ்வேற்றம் இல்லையே!" என்ன, "அவர் போகாமையல்ல, பிறப்பில் குற்றங்காணும்!" என்றருளிச் செய்தார்.

(பெரிய திருமொழி 2-2-1)

நிகழிடம்

திருமங்கையாழ்வார் "காசையாடை" என்று தொடங்குகின்ற (2-2) பதிகத்தில் முதல் பாசுரத்தில் இராமபிரானை அனுபவித்தார், இரண்டாவது பாசுரத்திலும் இராமபிரானுடைய சரிதத்தையே அருளிச் செய்தார். எனவே திருமங்கையாழ்வார் பட்டரைப் போலவே ராமாவதாரத்தில் மிகுந்த பற்றுள்ளவர் என்ற உரையாசிரியர் பட்டர் ராமாவதாரத்தில் மிகவும் ஈடுபாடுள்ளவர் என்பதற்குச் சான்றாக ஓர் **ஐதிஹ்யம்** *எடுத்துக்காட்டுகிறார்.*

விளக்கம்

பட்டர் இராமாவதாரத்தில் மிகுந்த ஈடுபாடு உள்ளவராதலால் அவரிடம் ராமாவதாரத்தைக் குறை கூறினால் என்ன பதில் கூறுவார் என்பதைக் கேட்க வேண்டும் என்ற ஆவலினால் **சிறியாத்தான்** *என்பவர், "ராமபிரானுக்கு எல்லாப் பெருமைகளும் உண்டு எனினும், தன் அடியவர்களுக்காகத் தூது சென்ற பெருமை மட்டும் அவனுக்கு இல்லையே! கழுத்திலே ஓலையைக் கட்டித் தூதுபோ என்று கூறினாலும் பாண்டவர்களுக்காகத் தூது போன பெருமை (எளிமை) கண்ணனுக்குத் தானே உண்டு" என்று கூறினார். அதற்கு பட்டர், "ராமன் தூது போகாதவனல்லன்; அவன் இக்ஷ்வாகு வம்சத்தில், தசரத சக்ரவர்த்தியின் பிள்ளையாகப் பிறந்து விட்டபடியால், அவனைத் 'தூது போ' என்று கூறும் துணிவு எவருக்கும் இல்லை. எனவே அவன் போகக் கூடாது என்றிருந்தவன் அல்லன். அவன் பிறந்த குலத்தால் வந்த குற்றம் காணும்" என்றார்.[1]*

[214]

"ஆண்பிள்ளைகளான ப₄ர்த்தாக்கள் ஸங்கிஹிதராயிருக்க, தூ₃ரஸ்த₂னான க்ருஷ்ணன் பேரைச் சொல்லுவானென்?" என்று எம்பாரைக் கேட்க, "அறிந்தோமே முன்பே சில ஸுருஸுரு கேட்டு வைத்தாள்போலே காணும், महत्यापदि सम्प्राप्ते स्मर्तव्यो भगवान् हरिः (மஹத்₃யாபதி₃ ஸம்ப்ராப்தே ஸ்மர்தவ்யோ ப₄க₃வான் ஹரி:) என்று." இது தன்னை ப₄ட்டரைக் கேட்க, "ப₄ர்த்தாவின் கையைப் பிடித்துப் போகா நின்றாலும், இடறினால் அம்மே என்னக் கடவது காண்" என்றருளிச் செய்தார்.

(பெரிய திருமொழி 2-3-6)

1. இவ்வைதிஹ்யம் மற்றும் இரண்டிடங்களில் இடம்பெற்றுள்ளது. எண் 526, 721

நிகழிடம்

'அந்தகன் சிறுவன் அரசர்தம் அரசர்க்கு இளையவன் அணியிழையைச் சென்று எந்தமக்கு உரிமை செய் எனத் தரியாது எம்பெருமான் அருள் என்ன' என்று திருமங்கையாழ்வார் அருளிச்செய்துள்ளார். துரியோதனனுடைய தம்பியான துச்சாதனன் திரௌபதியை 'எங்களுக்கு அடிமை செய்' என்று கூற, திரௌபதி 'எம்பெருமானே அருள்புரிவாயாக' என்று வேண்டினாள் என்பது இதன் பொருள். இத்தொடர்பில் **ஸம்வாதங்கள்** எடுத்துக் காட்டப்பெறுகின்றன.

விளக்கம்

சூதாட்டத்தில் தோற்றவர்களான பாண்டவர்களுடைய மனைவியான த்ரௌபதியை துச்சாதனன் ராஜஸபைக்கு இழுத்து வந்து மானபங்கம் செய்ய முயன்றபோது அவள், தன்னைக் காக்க வேண்டும் என்று கண்ணபிரானையே அழைத்தாள்![1] "வீரமுள்ளவர்களும் ஆண்பிள்ளைகளுமான கணவன்மார்கள் ஐவரும் அருகிலேயே இருக்க, உதவிக்கு அவர்களை அழைக்காமல், கண்ணபிரானை ஏன் திரௌபதி அழைத்தாள்?" என்று சிலர் எம்பாரைக் கேட்டார்களாம். அதற்கு **எம்பார்** "அதுதான் நன்றாகத் தெரிந்து கொண்டிருக்கின்றோமே! முன்னமே அவளுக்குக் காதில் சிலர் சுரு சுருவென்று ரகசியம் சொல்லக் கேட்டிருந்தனள் போலும். "ஜ்ஞாதம் மயா வஸிஷ்டேந புரா கீதம் மஹாத்மநா, மஹத்யாபதி ஸம்ப்ராப்தே ஸ்மர்த்தவ்யோ பகவாந் ஹரி:" (பேராபத்து வந்த போது பகவானை நினைக்க வேண்டும் என்று வசிஷ்ட மகரிஷியிடமிருந்து என்னால் முன்பே அறியப்பட்டது) (மஹாபாரதம் ஸபாபர்வம் 90 - 42) என்று அவளே கூறியிருக்கின்றபடியால் வஸிஷ்டருடைய அந்த உபதேசத்தின்படியே கண்ணனை அழைத்தாள் த்ரௌபதி என்று விடைபகர்ந்தார் எம்பார்.[2] இதே கேள்வியை பட்டரிடம் கேட்டபோது, "ஒருத்தி கணவனுடைய கையைப் பிடித்துக் கொண்டு சென்று கொண்டிருக்கும்போது கால் இடறினாலும் 'அம்மா' என்றுதானே கூப்பிடுவாள்! அதுபோலக் கணவன்மார் எதிரிலிருந்தபோது துன்பம் ஏற்பட்டதும் த்ரௌபதி 'கண்ணா' என்று கூப்பிட்டாள்" என்று பதிலளித்தார். (ஒருவனுக்கு வலியோ துன்பமோ ஏற்படும்போது தன்னையும் அறியாமல் 'அம்மா' என்பதுபோலவே

1. சங்கசக்ர கதாபாணே த்வாரகாநியாச்யுத
கோவிந்த புண்டரீகாக்ஷ ரக்ஷமாம் சரணாகதாம்

(சங்கு சக்கரங்களை ஏந்தியவனே! துவாரகையில் எழுந்தருளியிருப்பவனே! அடியவர்களைக் கைவிடாதவனே! கோவிந்தா! தாமரைக் கண்ணனே! சரணமடைந்த என்னைக் காப்பாயாக) என்று கண்ணபிரானை திரௌபதி அழைத்தமை மஹாபாரதத்தில் (ஸபாபர்வம் 90-43) கூறப்பட்டுள்ளது.

2. இங்கு எம்பாரைச் சிலர் கேட்க அதற்கு அவர் பதிலளித்ததாகவுள்ள இதே கருத்துகளை ஆளவந்தார் அருளிச் செய்ததாக எண் 349ல் கூறப்பட்டுள்ளது காண்க.

திரௌபதியும் தனக்குத் துன்பம் ஏற்பட்டபோது (உலகிற்கெல்லாம் தாயான) பகவானை நினைத்தாள் என்பது பட்டருடைய கருத்தாகும்.

[215]

இவ்விடத்துக்குப் பொருள் அழகப் பெருமாளரையர் பலரையும் கேட்டுக் கொண்டு திரிந்தாராய், நம்முடையவர்களிலே சிலர் "ஸர்வேஶ்வரனைச் சொல்லுகிறது காணும்" என்று விட்டார்கள்.

(பெரிய திருமொழி 2-4-6)

நிகழ்டம்

திருமங்கையாழ்வார் "அலைநீர் உலகுக்கு அரசாகிய அப்பேரானை முனிந்த முனிக்கரையன்" என்றருளிச்செய்கிறார். இதுகுறித்து ஓர் **நிர்வாஹம்** *கூறப்படுகிறது.*

விளக்கம்

அப்பேரானை என்பது யாரை? முனிக்கரையன் என்பது யாரை என்று தெரிந்து கொள்ள வேண்டுமென்று **அழகப் பெருமாள் அரையர்** *என்பவர் பலரையும் கேட்டுக் கொண்டு திரிந்தார்.* **நம்முடையவர்களில் சிலர்** *"இது எம்பெருமானைத்தான் கூறுகிறது" என்று (எளிதாக) கூறிவிட்டார்களாம். தன் தந்தையான ஜமதக்னியை அரசகுலத்தில் பிறந்த கார்த்தவீர்யார்ஜுனன் கொன்று விட்டதால், அரச குலத்தையே பூண்டோடு அழித்து விடுவதாக உறுதி பூண்ட பரசுராமன் இங்கு கூறப்படுகிறான். 'அலைநீர் உலகுக்கு அரசாகிய அப்பேரானை' = கடல் சூழ்ந்த உலகுக்கு அரசர்கள் என்று பெயருடையவர்களை; 'முனிந்த' = அப்பெயரும் கூட நடையாட முடியாதபடி கோபித்த; 'முனிக்கு அரையன்' = முனிவர்கள் தலைவரான பரசுராமன் என்பது தான் சரியான பொருள். (அதாவது 'அரசாகிய அப்பேரானை முனிந்த' என்பதற்கு அரசன் என்று பேருள்ளவனையெல்லாம் கோபித்த என்பது பொருள். பேரானை என்பதனை ஜாத்யேகவசனம் என்று கொண்டால் அரசன் என்று பெயருள்ளவர்கள் அனைவரையும் குறிக்கும். அப்படி அரசர்கள் என்று பேருள்ளவர்கள் அனைவரையும் கோபித்த முனிக்கரையன் = முனிவர்களில் சிறந்தவனான பரசுராமன் என்பது பொருள்.)*

[216]

(வரையித்யாதி) இவ்விடத்துக்கு ப$_4$ட்டர் அருளிச் செய்தார் என்று ப்ரஸித்$_3$த$_4$மிறே. இவ்விடத்துக்குச் சீயர் அருளிச் செய்யாநிற்க, பிள்ளை அழகிய மணவாளப் பெருமாள் அரையர் ஸ்மரிப்பித்தருளின வார்த்தையாயிற்று: "மலைமேல்

காட்டிலேயுண்டான தடாகங்களிலே கன்றுகள் பின்னேபோய் இளைத்து வந்து தண்ணீர் குடிக்கப் புக்கால் இளங்கன்றுகளாகையாலே நீரிலே முன்னே இறங்கிக் குடிக்க பயப்படுமே, அத்தை நீரூட்டுகைக்குத் தான் பின்னே கையைக் கட்டிக் கவிழ்ந்து நின்று தண்ணீர் அமுது செய்யுமாயிற்று."

(பெரிய திருமொழி 2-5-3)

நிகழிடம்

திருமங்கையாழ்வார் "கன்று மேய்த்து விளையாட வல்லானை வரைமீகானில் தடம்பருகு கருமுகிலை" என்று பாசுரம் அருளிச்செய்துள்ளார். கன்றுகளை மேய்த்து விளையாட வல்லவனும், மலைமேல் உள்ள காடுகளிலுள்ள குளங்களிலே நீரைப் பருகுகின்ற காளமேகம் போன்றவனுமானவன் கண்ணன் என்பது இதன் பொருள். இது பற்றி ஓர் **ஐதிஹ்யம்** கூறப்படுகிறது.

விளக்கம்

'கன்று மேய்த்து விளையாடவல்லான், தடம்பருகு கருமுகில்' என்றுள்ள சொற்சேர்த்திக்கு **பட்டர்** மிக அழகாக ஒரு விளக்கம் தந்தார் என்பது பிரசித்தமானது. இவ்விடத்தை **நஞ்சீயர்** விளக்கிக் கொண்டிருந்தபோது **பிள்ளை அழகிய மணவாளப் பெருமாள் அரையர்** என்பவர் பட்டருடைய அவ்விளக்கத்தை நினைவூட்டினார். அவ்விளக்கம் வருமாறு: கண்ணபிரான் கன்றுகளை மேய்ப்பதிலே மிகவும் விருப்பம் உள்ளவன். மலைமேல் கன்றுகளை அவன் மேய்த்துவரும் போது, பசுக்களின் பின்னே அலைந்து இளைத்து வரும் கன்றுகள் மலை மீதுள்ள குளங்களில் தண்ணீர் குடிக்கச் செல்லும்; ஆனால் இளங்கன்றுகளாகையாலே நீரிலே முன்னே இறங்கித் தண்ணீர் குடிக்கத் தெரியாமல் பயப்படும். அவைகளுக்கு நீர் குடிக்கக் கற்று தருவதற்காகக் கண்ணன் தன்னுடைய கைகளைப் பின்னே கட்டிக் கொண்டு கவிழ்ந்து நின்று தண்ணீரைத் தன் வாயால் உறிஞ்சிப் பருகுவான்; அதைப் பார்த்த கன்றுகளும் பயம் தெளிந்து அவனைப் போலவே தண்ணீரை வாயால் உறிஞ்சிப் பருகும்.[1] அப்படிக் கண்ணபிரான் குனிந்து நின்று தண்ணீரைப் பருகுவது, நீர் நிலைகளில் மேகம் படிந்து நின்று நீரைப் பருகுவது போலிருக்கும். இதைத் தான் திருமங்கை ஆழ்வாரும் "கன்று மேய்த்து விளையாட வல்லானை வரைமீகானில் தடம் பருகு கருமுகிலை" என்றருளிச் செய்கிறார் என்பது பட்டர் தரும் விளக்கமாகும்.

1 "(நீரூட்டி) அவற்றுக்குத் தண்ணீர் பருகுகை அபேக்ஷிதமானால் தான் அரை மட்டு நீரிலே இழிந்து பின்னே கையைக் கட்டிக் குனிந்து நின்று தண்ணீர் பருகிக் காட்டுமாய்த்து இவன்; பின்னை அவையும் கூடக் குடிக்கும். தடம் பருகு கருமுகிலிறே. 'ஸ யத்ப்ரமாணம் குருதே லோகஸ் ததநுவர்த்ததே'. காரயித்ருத்வம் இருக்கிறபடி. 'கன்று மேய்த்து' இத்யாதி. தடாகத்திலே ஒரு மேகம் படிந்தாப் போலேயாய்த்து இருப்பது." - என்று நாச்சியார் திருமொழி (14-1) பாசுர உரையில் பெரியவாச்சான் பிள்ளை அருளிச் செய்வது காண்க.

[217]

“ஸர்வேஶ்வரனாகிறான் தன்னை ஆஶ்ரயித்தார்க்குத் தன்னோடொத்த வரிசையைக் கொடுப்பானொருவன் என்று கொண்டு அவனுடைய நீர்மையைச் சொல்லுகைக்காக, அல்லாதார்க்கு உத்கர்ஷத்தைச் சொல்லாநிற்கும் ப்ரமாணங்கள். அவர்கள் தாங்களும், புழுக் குறித்தது எழுத்தாமாபோலே சிலவற்றைத் தோற்றச் செய்யும். அவற்றைக் கண்டு, இவர்கள் பக்கலிலேயும் குவாலுண்டு என்று நாட்டார் ப்₃ரமிக்கைக்கு உடலாயிருக்கும். ஆக, ப்ரமாணக₃தி இருந்தபடியாலும், சேதநர் மந்த₃மதிகளாயிருந்தபடியாலும், இவற்றின் தாத்பர்யம் அறியாதே ‘ஸம்ஸாரஸாக₃ரம்’ என்று சொல்லுகிற கடலிலே புக்குப் போமித்தனையிறே, அவற்றையநுஸந்தி₄த்துச் சொன்ன இவ்வாழ்வார்கள் ஈரச் சொல்லின்றாகில்” என்று பட்டர் அருளிச் செய்தார்.

(பெரிய திருமொழி 2-5-8)

நிகழ்டம்

எம்பெருமானுடைய மேன்மையையே தொடர்ந்து அருளிச்செய்து கொண்டு வந்த திருமங்கையாழ்வார், ‘பெண்ணாகி இன்னமுதம் வஞ்சித்தானை’ என்று ஒரு பாசுரத்தில் அருளிச் செய்கிறார். (எம்பெருமான் திருப்பாற்கடலைக் கடைந்த போது முதலில் வெளிவந்த விஷத்தைச் சிவனுக்குக் கொடுத்து, பிறகு முடிவில் வந்த அமுதத்தை ஒரு பெண் வடிவு கொண்டு தேவர்களுக்கு வழங்கினான் என்று இதிஹாஸ புராணங்களில் கூறப்பட்டுள்ளன). இதனால் மற்ற தேவதைகளுக்கு ஒரு பெருமையும் எம்பெருமான் திருமாலுக்கு ஒரு தாழ்வும் ஏற்படுவதாக அறிவற்றவர்கள் நினைக்கக் கூடும். ஆனால் ஆழ்வார்களே அனைவருக்கும் தெளிவு உண்டாகும் வகையில் இதன் கருத்தை அருளியுள்ளனர் என்று பட்டர் அருளிச் செய்த **வார்த்தை**கள் குறிப்பிடப்பெறுகின்றன.

விளக்கம்

“இறைவன், தன்னை அடைந்தவர்களுக்குத் தனக்குச் சமமான பெருமைகளைக் கொடுக்கின்றான்; இதனைக் கருத்தில் கொண்டே பற்பல நூல்களும் எம்பெருமானுடைய நீர்மையை, (அதாவது - தன்னோடு சமமான பெருமையை மற்ற தேவர்களுக்கும் கொடுக்கும் எம்பெருமானுடைய தன்மையைத்) தெரிவிப்பதற்காக, மற்ற கடவுளர்க்கும் சில பெருமைகளைக் கூறுகின்றன. புழுக்குறித்தது எழுத்தாகுமா போலே’ அந்த தேவதைகளும்

1. மண்ணிலே புழு ஊரும் போது அதன் இயக்கத்தால் எதிர்பாராமல் சில எழுத்துங்கள் எழுதியது போல் மண்ணில் தெரியும். ஆனால் அவ்வெழுத்துக்களை எழுத வேண்டும் என்று நினைத்துப் புழுவானது அப்படி ஊரவில்லை. அதுபோல தேவதைகளும் சில செயல்களைச் செய்ய எதிர்பாராமல் எம்பெருமான் அருளினால் அதற்குப் பயனும் ஏற்பட்டுவிடும் என்பது கருத்து.

தங்களுக்கு ஆற்றல் இருப்பது போல் தோன்றுமாறு, தங்களையும் அறியாமல் சில செயல்களைச் செய்வர். அவற்றைக் கண்டு, இந்த தேவதைகளுக்கும் மிகுந்த சக்தி உண்டு என்று நாட்டார் மயங்கிவிடுவர். (எம்பெருமான் கடலைக் கடைந்தபோது முதன்முதலில் ஆலகால விஷம் வந்தது. அந்த விஷத்தின் கொடுமையிலிருந்து உலகைக் காப்பதற்காக, அதனைச் சிவனிடம் கொடுத்து உண்ணச் செய்தான் எம்பெருமான். சிவனும் அப்படியே அந்த விஷத்தை உண்டபோது, தான் உலகைக் காப்பாற்றுகிறோம் என்று தெரியாமலே உண்டான். எம்பெருமானுடைய கிருபையினால் அந்த விஷம் அவனுடைய கழுத்திலே தங்கி அவனுக்கு நீலகண்டன் என்ற பெயரையும் அளித்தது; உலகும் காப்பாற்றப்பட்டு, விஷத்தைக் கழுத்திலே தரித்தவன் என்ற பெருமையும் சிவனுக்கு உண்டாகி விட்டது. இதுகண்டு அவனே பெரியவன் என்று சிலர் மங்குகிறார்கள் என்பது இங்கே நினைவில் கொள்ளத்தக்கது.) ஆக, மற்ற தேவதைகளுக்கும் பெருமை கூறுகின்ற நூல்கள் இருக்கின்றபடியாலும், மக்கள் அறிவில் குறைந்தவர்களாக இருக்கின்றபடியாலும், அந்தப் பிரமாணங்களின் உட்கருத்தை அறியாமல் அத்தேவதைகளிடம் மயங்குகின்றனர். ஆனால் ஆழ்வார்கள் இப் பிரமாணங்களைக் குறித்துத் தெளிவாகப் பாசுரம் அருளியுள்ளனர். இவ்வாழ்வார்களுடைய ஈரச்சொல் இல்லையெனில் இப்பிரமாணங்களின் உண்மைப் பொருளையும் உட்கருத்தையும் அறியாமல், அத்தேவதைகளையே பற்றி, மக்கள் அற்ப பயன்களை அடைந்து ஸம்ஸார ஸாகரம் என்று கூறப்படுகின்ற பிறவிப் பெருங்கடலிலே விழுந்து அழிந்தே போவர்" என்று பட்டர் அருளிச்செய்தார்.

[218]

பிள்ளையுறங்காவில்லிதாஸர் பெருமாள் எழுந்தருளப் புக்கால் சொட்டை முட்டியிலே கையை வைத்துக்கொடு ஸேவிப்பாராம், ஒருவர் இடறுதல் போதல் செய்ததாகில் தம்மை முடித்துக் கொள்வாராக. அத்தை அநுஸந்தி$_4$த்து நம் முதலிகள் இவரை 'மஹாமதிகள்' என்றாம் அழைப்பது. கலங்குகைபோலே காணும் மஹாமதிகளாவது. அஸ்த$_2$ானே ப$_4$யஶங்கை பண்ணுவார்க்கெல்லாம் பேராய்க் கொள்ளீர் மஹாமதிகளென்று.

(பெரிய திருமொழி 2-6-1)

நிகழ்டம்

"நண்ணாத வாள் அவுணரிடைப் புக்கு வானவரைப் பெண்ணாகி அமுது ஊட்டும் பெருமானார்" (தன்னைக் கிட்டாதவர்களும், கையில் வாளை உடையவர்களுமான அசுரர்கள் நடுவே பெண்ணாகப் புகுந்து தேவர்களுக்கு அமுதம் ஊட்டினான் எம்பெருமான்) என்கிறார் திருமங்கை ஆழ்வார். எம்பெருமானுக்கு என்ன ஆபத்து நேருமோ என்று திருமங்கையாழ்வார்

அஞ்சுவதாக விளக்கும் உரையாசிரியர், அதேபோல் எம்பெருமான் மீது பரிவுடையவரான பிள்ளை உறங்காவில்லிதாசருடைய செயலை இங்கு **உதாரணம்** காட்டுகிறார்.

விளக்கம்

ஸ்ரீரங்கத்தில் நம்பெருமாள் (உற்சவர்) புறப்பாடு எழுந்தருளும்போது **பிள்ளை உறங்காவில்லிதாசர்** தம் மடியில் கத்தியைச் சொருகிக் கொண்டு, அதன் பிடியில் கையை வைத்துக் கொண்டே பெருமாளை சேவிப்பாராம். எதற்காகவெனில், யாரேனும் பெருமாளை எழுந்தருளச் செய்யும்போது இடறினாலோ அல்லது அசைந்தாலோ, அக்கணமே தம்முடைய உயிரை மாய்த்துக் கொள்வதற்காகவே எப்போதும் கத்தியின் பிடியிலேயே கையை வைத்துக் கொண்டிருப்பாராம். இதனால் இவரைப் 'பேரறிஞர்' என்றே நம் ஆசார்யர்கள் அழைப்பது வழக்கம்.[1] எம்பெருமானுக்கு எந்தச் சமயத்தில் என்ன ஆபத்து வந்து விடுமோ என்று கலங்குபவர்களே பேரறிஞர்கள் ஆவர். அச்சம் கொள்ள வேண்டாத இடத்தில் அச்சம் கொள்பவர்க்கெல்லாம் பேரறிஞர் என்றே பெயராகிவிட்டது.

[219]

"கிழக்கே ஐயாற்றிலே யாதவராயர் வந்திருக்க, சீயர் என்னை இறையிலிக் கார்யத்துக்காக அனேகம் ஸ்ரீவைஷ்ணவர்களோடே கூடப் போக விட்டார். நான் அவன் கூடத்திலே வந்து அவஸரம் பார்த்திருக்கச் செய்தே பலரும் வந்து என்னை அநுவர்த்திக்கக் கண்டவாறே, அங்கே மஹாமஹேஶ்வரனாயிருப்பான் ஒரு பையல் 'பிள்ளாய்! நீர் பொருளுக்குக் கடவீர் என்று கேட்டோம். எங்களுடையவற்றிலே 'அரியல்லால் தேவியில்லை' என்றுண்டாயிருந்தது. அதற்குப் பொருள் சொல்ல வேணும்' என்ன, 'நான் இதுக்கு அதி₄கரித்தேன் ஒருவன் அல்லேன்' என்ன, 'ஆகிலும் எல்லாம் தெரிந்திராதோ உமக்கு' என்ன, 'நீதான் தே₃வர்க்கு ஒரு உத்கர்ஷத்தையும், ஈஶ்வரனுக்கு ஒரு அபகர்ஷத்தையும் நினைத்துக் கேட்கிறாயாகில், புருஷோத்தமன் என்று புராணங்களில் சொல்லா நிற்க, ஆஶ்ரிதார்த்த₂மாக அவன், தன்னை அழிய மாறினானென்றால், இது அவனுக்கு கு₃ணாயவாம் இத்தனையல்லது தோ₃ஷாய ஆகாது. இனி, ஆண்பிள்ளைச் சொற்றாழ்வியை ஸ்த்ரீ என்று தொடர்ந்து திரிவாரைப்போலே தொடர்ந்து திரியா நின்றார் என்று தே₃வரை அஜ்ஞராக்குவதிற் காட்டில், இது சொன்னவன் அநாப்தன் அஜ்ஞன் என்றிருக்க அமையாதோ?' என்று சொன்னேன்" என்றருளிச் செய்வர்.

(பெரிய திருமொழி 2-6-1)

1. பிள்ளையுறங்காவில்லி தாஸரைப் பற்றிய இச்செய்திகள் எண் 718லும் உள்ளன.

நிகழிடம்

“வானவரைப் பெண்ணாகி அமுதூட்டும் பெருமானார்” என்று, எம்பெருமான் பெண் வடிவம் கொண்டு தேவர்களுக்கு அமுதமளித்த வரலாற்றைப் பேசுகிறார் திருமங்கையாழ்வார். இத்தொடர்பில் ஓர் **ஐதிஹ்யம்** காட்டப்பெறுகிறது.

விளக்கம்

ஒருமுறை ஸ்ரீரங்கத்திற்குக் கிழக்கே உள்ள திருவையாற்றிற்கு யாதவராயன் என்கிற அரசன் (அதிகாரி?) வருகை புரிந்தான். அக்காலத்தில் அரசர்கள் அந்தணர்களுக்கு வரியற்ற நிலங்களை மானியமாக வழங்கியிருப்பதுண்டு. (இது இறையிலி எனப்படும்). இது சம்பந்தமாக யாதவராயனுடன் பேசுவதற்காக **நஞ்சீயர்** தமது சீடரான **நம்பிள்ளை**யை ஸ்ரீவைஷ்ணவர்கள் பலருடன் திருவையாற்றிற்கு அனுப்பி வைத்தார். அங்கே யாதவராயனுடைய மாளிகைக் கூடத்திலே, நம்பிள்ளை அவனைச் சந்திப்பதற்குச் சமயம் பார்த்துக் காத்துக் கொண்டிருந்த போது பலரும் வந்து அவரை மதிப்புடனும் மரியாதையுடனும் வணங்கிச் சென்றனர். இதை அங்கே இருந்த சைவன் ஒருவன் கண்டான். சைவர்களுக்குள்ளே மிகவும் சிறந்தவன் என்று பெயர் பெற்ற அவன் (மஹாமஹேச்வரனாயிருப்பான் ஒரு பையல்) நம்பிள்ளையிடம் வந்து “நீர் பாசுரங்களுக்குப் பொருள் கூறுவதில் மிகவும் வல்லவரென்று கேள்விப்பட்டிருக்கிறேன். எங்களுடைய திருமுறைகளில் ‘அரியல்லால் தேவியில்லை’ என்று ஒரு பாடல் உண்டு. அதற்குப் பொருள் கூறமுடியுமா உம்மால்?” என்று கேட்டான். (பாற்கடலைக் கடைந்து அமுதம் எடுத்த எம்பெருமான் பெண் வடிவம் கொண்டு அதை தேவர்களுக்கு வழங்கினான் என்று இதிஹாஸ புராணங்கள் பகருகின்றன.[1] அப்பெண் வடிவத்தைக் கண்டு சிவன் காமம் கொண்டான் என்றும், அதனால் திருமால் சிவனுக்குத் தேவியாகிறான் என்றும் நாயன்மார்கள் பாடியுள்ளனர். ‘அரியல்லால் தேவியில்லை’ என்பது அப்பர் பாடிய பாடலில் உள்ள வரியாகும்.[2] இதனால்

1. திருமால் கடல் கடைந்து அமுதமளித்த வரலாறுகளை மஹாபாரதம் ஆதிபர்வம் 18வது அத்யாயத்திலும் ஸ்ரீவிஷ்ணு புராணத்தில் முதல் அம்சம் ஒன்பதாவது அத்யாயத்திலும் காணலாம். பெண் வடிவு கொண்ட திருமால்மேல் சிவன் மையலுற்றுப் பின்தொடர்ந்தமை ஸ்ரீபாகவதம் எட்டாம் ஸ்கந்தம் பன்னிரண்டாம் அத்யாயத்தில் மட்டுமே கூறப்பட்டுள்ளது.

2. எரியலாலுருவமில்லை ஏறலாலேறலில்லை
கரியலால்போர்வையில்லை காண்டகு சோதியார்க்குப்
பிரிவிலாவமரர் கூடிப் பெருந்தகை பிரானென்றேத்தும்
அரியலால் தேவியில்லை ஐயன் ஐயாறனார்க்கே.

என்பது திருவையாற்றுப்பதிகத்தில் அப்பர் பாடியுள்ள (4ம் திருமுறை 40ம் பதிகம் 5ம்) பாடல்.

சிவனே ஆண்பிள்ளை என்றும் திருமால் ஒரு பெண்ணே என்றும் ஏற்படுவதாக நினைத்துக்கொண்டு, அந்தச் சைவன் நம்பிள்ளையிடம் இக்கேள்வியை ஏளனமாகக் கேட்டிருக்கிறான்). அதற்கு நம்பிள்ளை, "சைவ சமய நூல்களை நான் கற்றவன் அல்லேன். எனவே இப்பாடலுக்கு நான் பொருள் கூற வல்லேன் அல்லேன்" என்று மிகவும் பெருந்தன்மையுடன் விடையளித்தார். ஆயினும் அந்தச் சைவன் விடாமல் "தமிழ் மொழியில் மிகவும் வல்லவரான நீர் எல்லாப் பாடல்களுக்கும் பொருளுரைக்க வல்லவர் அன்றோ?" என்று கேட்டான். உடனே நம்பிள்ளை "அப்பா! நீ கூறிய அப்பாடலினால் உன்னுடைய தேவதைக்கு ஒரு பெருமையும் எம்பெருமான் திருமாலுக்கு ஒரு தாழ்வும் ஏற்படுவதாக நினைத்துக் கேட்கிறாயோ? திருமாலைப் புருஷோத்தமன் என்று புராணங்கள் அனைத்தும் கூறுகின்றன. அப்படிப்பட்ட பெருமை படைத்தவன் தன் அடியவர்களுக்காகத் (தேவர்களுக்காகத்) தன் பெருமையை அழித்துக் கொண்டு (ஒரு பெண்ணாகத்) தன்னைத் தாழ விட்டான் என்றால், அது அவனுக்கு மேலும் பெருமையை உண்டாக்குமே தவிர தாழ்வை உண்டாக்காது. உருவத்தில் பெண்ணைப் போலிருக்கும் ஒரு ஆண்பிள்ளைச் சொற்றாழ்வியை[1] (அலியை) பெண் என்றே நினைத்துக் கொண்டு பின் தொடருபவனைப் போல, பெண் வடிவு கொண்ட புருஷோத்தமனைப் பெண் என்று நினைத்துச் சிவன் பின்தொடர்ந்தான் என்றால் இது சிவனுடைய மடமையையே காட்டுகிறது. இப்படி உங்களுடைய தேவதையை அறிவிலியாக ஆக்குவதைக் காட்டிலும், அத்தேவதை அறிவற்ற செயலைச் செய்ததாகக் கூறுபவனை (இப்படிப் பாடல் பாடியவனை) உற்றவனன்று என்றும் அறிவிலி என்றும் கூறிவிடுவதே நல்லது" என்று கூறிவிட்டாராம்.

1. ஆண்பிள்ளைச் சொற்றாழ்வி - தற்போது அச்சிலுள்ள புத்தகங்களில், இப்பாசுர உரையிலும், பெரிய திருமொழி 1-6-1 பாசுரவுரையிலும் "ஆண்பிள்ளைச் சோறாள்வியை ஸ்த்ரீ என்று பின் தொடருவாரைப் போலே" என்றே குறிப்பிடப்பட்டுள்ளன. இவ்விடங்களில் 'சோறு ஆள்வி- சோறு சமைப்பவன், சமையல் வேலை செய்யும் ஆண்' என்று அரும்பத உரையில் பொருள் உரைக்கப்படுகிறது. ஆனால் தனிச்லோக வியாக்யான உரையில் பெரியவாச்சான்பிள்ளை 'ஆண்பிள்ளைச் சொற்றாழ்வி' என்று குறிப்பிட்டு, அதற்கு அவரே விளக்கமும் அருளியுள்ளார்:

 அகவாய் ஸ்த்ரீயும் புறவாய் புருஷனுமான ஸ்த்ரீ புருஷக் கலப்பை த்ருதீயப்ரக்ருதி என்பர்கள் நாட்டார். த்ருதீயப்ரக்ருதியை நாடுசொல்லும் பேரை நான் சொல்ல அஞ்சினேன். நாடுதானும் சொல்லாதிறே. ஆண்பிள்ளைச் சொற்றாழ்வி என்னுமத்தனையிறே.

 என்பன அங்குள்ள வரிகள். ஆண்பிள்ளைச் சொற்றாழ்வி என்பதற்கு - ஆண்பிள்ளை என்ற சொல்லுக்கு, தாழ்வி - தாழ்ந்தவன் என்று திவ்யப்பிரபந்த அகராதியில் (பக்.127) பொருள் காட்டப்படுகிறது. எனவே 'ஆண்பிள்ளைச் சொற்றாழ்வி' என்பதே சரியான சொல்வடிவமாகும்.

[220]

"பெருமாள் न त्यजेयं कथञ्चन एतत् व्रतं मम (நத்யஜேயம் கத$_2$ஞ்சந ஏதத்$_3$வ்ரதம் மம) என்று நின்றார்; மஹாராஜர் वध्यतां (வத்$_4$யதாம்) என்றே நின்றார்" என்று இவ்விடத்துக்கு ப$_4$ட்டர் அருளிச் செய்யும்படி.

(பெரிய திருமொழி 2-6-4)

நிகழிடம்

'விண்டாரை வென்று' திருமங்கையாழ்வார் அருளிச்செய்துள்ளார். எம்பெருமான் விரோதிகளை வெல்பவன் என்பது கருத்து. விரோதிகளை மட்டுமே எம்பெருமான் வெல்பவன் என்றும், அனுகூலர்களைச் சரணம் புகுபவன் என்றும் விளக்கிய உரையாசிரியர், இத்தொடர்பில் நஞ்சீயருக்கும் பட்டருக்குமிடையே நடைபெற்ற **ஸம்வாதம்** *ஒன்றைக் காட்டுகிறார்.*

விளக்கம்

எண் 560ன் விளக்கம் பார்க்க.

[221]

(வலங்கொள் மனத்தாரவரை) "பிள்ளை திருநறையூரரையரும், ப$_4$ட்டருமாகப் ப்ரதக்ஷிணம் பண்ணும்போது நான் பின்னே போனேன். நம்மைப்போலே தேவைக்குப் பரகு பரகு என்று வருகை அன்றிக்கே, திருமாளிகைகளையும் திருக் கோபுரங்களையும் கண்ணாலே பருகுவாரைப் போலே பார்த்துக் கொடுபோம்படி காண்" என்று நஞ்சீயர் அருளிச் செய்வர்.

(பெரிய திருமொழி 2-6-6)

நிகழிடம்

'கடல்மல்லைத் தலசயனம் வலங்கொள் மனத்தாரவரை வலங்கொள் என் மடநெஞ்சே' (திருக்கடல்மல்லை எம்பெருமானை பிரதக்ஷிணம் செய்யும் மனமுடையவர்களை, என் மனமே! வலம் வருவாயாக) என்று அருளிச்செய்கிறார் திருமங்கையாழ்வார். இத்தொடர்பில் ஓர் **ஐதிஹ்யம்** *கூறப்பெறுகிறது.*

விளக்கம்

எண் 42ன் விளக்கம் காண்க.

[222]

"துளம் என்று பீலிக்காம்பைச் சொல்லுகிறது என்று ஒரு தமிழன் சொன்னானாக சீயர் அருளிச் செய்வர்" என்றருளிச் செய்வர்.

(பெரிய திருமொழி 2-7-2)

நிகழ்டம்

எம்பெருமானோடு உடனே சேரப் பெற வேண்டும் என்ற ஆசை நிறைவேறாமையினால் ஆற்றாமை மிக்கு, தன்னிலைபோய்ப் பெண் நிலை எய்துகிறார் திருமங்கையாழ்வார். அப்போது அவருடைய நிலையைத் தாய் வர்ணிக்கும் போது "துளம்படு முறுவல்" என்று கூறவதாக அமைகிறது பாசுரம். இங்கே துளம் என்ற சொல்லுக்கு ஒரு **நிர்வாஹம்** எடுத்துக்காட்டப்பெறுகிறது.

விளக்கம்

'துளம்' என்பது மயிற் பீலியினுடைய வெளுத்த காம்பைக் குறிக்கும் என்று ஒரு **தமிழன்** விளக்கம் தந்ததாக **நஞ்சீயர்** அருளிச் செய்வராம். துளம்-படு முறுவல் = வெண்மையான பீலிக்காம்பை நினைவூட்டக் கூடிய முறுவல்; அல்லது, பீலிக்காம்பின் வெண்மையையும் தோற்கச் செய்யும்படி அழகிய முறுவல் என்று தமிழன் கூறியதாக நஞ்சீயர் அருளிச் செய்வர் என்று **நம்பிள்ளை** அருளிச் செய்வர்.

[223]

(இளம் படியிவளுக்கு) ப$_4$ட்டர் அருளிச் செய்தாராக ப்ரஸித்$_3$த$_4$மிறே, "உண்ணவும் பொறாதே பட்டினிவிடவும் பொறாதே, ஸுகுமாரரைப் போலே அதி$_4$கமான ஸம்ஶ்லேஷவிஶ்லேஷம் பொறுக்கமாட்டாதபடியான திருமங்கை ஆழ்வார் மார்த்த$_3$வமிருக்கும்படி" என்று.

(பெரிய திருமொழி 2-7-2)

நிகழ்டம்

எம்பெருமானோடு கலந்து பரிமாற வேண்டும் என்று ஆழ்வார்கள் அனைவரும் விரும்புவர். உடனே அந்தப் பரிமாற்றம் கிட்டாதபோது, ஆற்றாமை அதிகமாகி அவ்வாழ்வார்கள் தங்கள் நிலை தவிர்ந்து ஒரு பெண்ணின் நிலையை அடைந்து விடுவர்கள். அதாவது நாயகனைப் பிரிந்து வருத்தமுறும் நாயகியின் நிலையை அடைந்து விடுவர். அப்படித் தாங்கள் அடைந்த நாயகி நிலையிலேயே ஆழ்வார்கள் பாசுரங்களும் அருளியுள்ளனர். மேலும் நாயகி நிலையை அடைந்த தங்களுடைய நிலைபற்றித் தாய்மார் கூறுவதாகவும், தோழிமார் கூறுவதாகவும் பாசுரங்கள் அருளியுள்ளனர். நம்மாழ்வார், குலசேகர ஆழ்வார், திருமங்கை ஆழ்வார் ஆகியோர் இத்தகைய பாசுரங்கள் பலவற்றை அருளியுள்ளனர். இம் மூவருள்ளும் திருமங்கை ஆழ்வாருடைய நிலை மிகவும் சிறப்புப் பெற்றது என்று பட்டர் அருளிச்செய்த **வார்த்தை** எடுத்துக்காட்டப் பெறுகிறது.

விளக்கம்

"உணவு உண்ணவும் முடியாமல், பட்டினி இருக்கவும் முடியாமல் தவிக்கும் மிகவும் மென்மையான இயல்புடையவர்களைப் போல, அதிகமான கலவி, பிரிவு இரண்டையும் தாங்க மாட்டாத மென்மையை உடையவர் திருமங்கையாழ்வார்" **பட்டர்** *அருளிச் செய்வர் என்பது மிகவும் பிரசித்தமானது.*[1]

[224]

நம்குடி என்னாதே 'தன்குடி' என்கிறாளாயிற்று, 'எம்பெருமானார் தர்ஶனம்' என்னுமா போலே. நம் ப்ரதிபத்தியாலே சொன்னோமாகையன்றிக்கே பெருமாள் 'இராமாநுசனுடையார்' என்றே அருளிச் செய்வர். "பெருவிலையனான ரத்னத்தை நடுவே இட்டுக் கோத்தால் முன்னும் பின்னும் ஒக்க விலை போமா போலே காண்" என்று பிள்ளான்.

(பெரிய திருமொழி 2-7-6)

நிகழிடம்

எம்பெருமானை அடைய வேண்டும் என்று பதறுகின்ற (திருமங்கை ஆழ்வாராகிற) நாயகியின் நிலையைத் தாய் கூறும் போது, 'தன்குடிக்கு ஏதும் தக்கவா நினையாள்' என்று கூறுகிறாள். தாயும் மகளும் ஒரே குடியாகையால் 'நம்குடி' என்று கூறவேண்டியிருக்க, 'தன்குடி' என்று மகளைப் பிரித்துச் சொன்னதற்குக் கருத்தை விளக்குகின்ற உரையாசிரியர் அம்மகளாலேயே அக்குடி பெருமை அடைகின்றது ஆதலால் அவளையிட்டே அக்குடியைக் கூற வேண்டும் என்று விளக்கி, பிள்ளான் அருளிச்செய்த **வார்த்தை***யை எடுத்துக் காட்டுகிறார்.*

1 "நம்மாழ்வார் பகவத் விஷயத்தில் நின்ற ஊற்றமெல்லாம் தோற்ற வன்மையுடைத்தாயிருக்கும் மின்னிடைமடவார். திருமங்கையாழ்வார் தம் மார்த்தவமெல்லாம் தோற்ற மென்மை யுடைத்தாயிருக்கும் காதில் கடிப்பு. குலசேகராழ்வாருடைய ராஜகுலமாஹாத்யம் தோற்றியிருக்கும் ஏர்மலர்ப்பூங்குழல்"

என்று பெருமாள் திருமொழி (6-1) அவதாரிகையிலும்,

"அல்லாத ஆழ்வார்களைப் போலன்றியே ஸுகுமாராயிறே திருமங்கையாழ்வார் இருப்பது. மலையாளர் ஒரு மாஸத்துக்கு ஒரு காலே உண்ணவும் வல்லர்களாய் ஒரு மாஸம் பட்டினி விடவும் வல்லவர்களாய் இருக்குமாபோலே ஸம்ச்லேஷ தசையில் நெடுநாள் தரித்திருந்து அனுபவிக்கவும் வல்லவர்களாய், விச்லேஷத்தில் நெடுநாள் தரிக்கவும் வல்லவர்களாயிறே மற்றையாழ்வார் இருப்பது. ஸம்ச்லேஷிக்கவும் மாட்டாதே, விச்லேஷிக்கவும் மாட்டாதபடியாயிற்று இவருடைய ஸௌகுமார்யம். இவர் உண்ணவும் மாட்டார், பட்டினிவிடவும் மாட்டார்."

என்று திருநெடுந்தாண்டகம் 13ம் பாசுர வியாக்யானத்திலும் பட்டருடைய கருத்தைப் பின்பற்றியே பெரியவாச்சான்பிள்ளை அருளிச் செய்வது காண்க.

விளக்கம்

ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ராதாயம் என்பது ஸ்ரீராமானுஜர் பெயராலேயே **'எம்பெருமானார் தரிசனம்'** *என்று வழங்கப்பெறுவதுபோல இவளும் தன்னுடைய மகளுடைய குடி என்கிறாள் என்று உரையாசிரியர் குறிப்பிடுகின்றார்.*[1] *அதுவும் நமக்கு ஸ்ரீராமானுஜர் மீதுள்ள பெருமதிப்பால் நாம் இப்படி வழங்குகிறோம் என்று ஆகாத வண்ணம், திருவரங்கத்து எம்பெருமானே தம்முடைய அடியார்களை "இராமானுசன் உடையார்" என்றே அழைப்பதையும் குறிப்பிடுகிறார். (தீர்த்தம் பெற்றுக் கொள்ள ஸ்ரீவைஷ்ணவ கோஷ்டியினரை அழைக்கும் போது 'இராமானுசனுடையார்' என்றே அருளப்பாடிட்டு அழைக்கும் மரபு இன்றைக்கும் ஸ்ரீரங்கத்தில் பின்பற்றப்பட்டு வருகிறது.) "மிகவும் விலைமதிப்புள்ள மாணிக்கக் கல்லை நடுவே இட்டுக் கோத்தால், முன்னும் பின்னும் உள்ள மற்ற கற்களும் மதிப்படைந்து ஒரு சேர மதிப்புடையதாக ஆவது போல, ராமானுஜர் நடுநாயகமாக அமைவதால்*[2] *அவருக்கு முன்பு உள்ளவர்களுக்கும் பின்புள்ளவர்களுக்கும் பெருமை ஏற்படுகிறது" என்பர்* **பிள்ளான்.**

[225]

ஒரு நாள் பட்டர் இனிதாக வாசித்தபடியைக் கேட்டருளி எம்பார் எழுந்திருந்து நின்று, கண்ணநீரை விழவிட்டு, ஹ்ரிதி₂லாங்த:கரணராய் ப₄ட்டரைக்காட்டி जनकानां कुले कीर्तिं आहरिष्यति मे सुता **(ஜனகாநாம் குலே கீர்த்திம் ஆஹரிஷ்யதி மே ஸுதா) என்றருளிச் செய்தாராம்.**

(பெரிய திருமொழி 2-7-6)

நிகழ்டம்

எம்பெருமானை அடைய வேண்டும் என்று பதறுகின்ற (திருமங்கை ஆழ்வாராகிற) நாயகியின் நிலையைத் தாய் கூறும் போது, 'தன்குடிக்கு ஏதும் தக்கவா நினையாள்' என்று கூறுகிறாள். தாயும் மகளும் ஒரே குடியாகையால்

1 எம்பெருமானார் தரிசனம் என்றேயிதற்கு
நம்பெருமாள் பேரிட்டு நாட்டிவைத்தார் - அம்புவியோர்
இந்தத் தரிசனத்தை எம்பெருமானார் வளர்த்த
அந்தச் செயலறிகைக்கா.

என்று மணவாள மாமுனிகள் உபதேச ரத்தினமாலையில் (38) அருளிச் செய்வது காண்க.

2 அமுநாதபநாதிசாயி பூம்நா யதிராஜேந நிபத்த நாயக ஸ்ரீ:
மஹதீ குருபங்க்தி ஹாரயஷ்டி: விபுதாம் ஹ்ருதயங்கமாவிபாதி

என்று வேதாந்த தேசிகன் யதிராஜ ஸப்ததியில் (15) அருளிச் செய்துள்ளது காண்க.

'நம்குடி' என்று கூறவேண்டியிருக்க, 'தன்குடி' என்று மகளைப் பிரித்துச் சொன்னதற்குக் கருத்தை விளக்குகின்ற உரையாசிரியர் அம்மகளாலேயே அக்குடி பெருமை அடைகின்றது என்று விளக்கி, ஓர் **ஐதிஹ்யம்** எடுத்துக் காட்டுகிறார்.

விளக்கம்

கூரத்தாழ்வானுடைய திருக்குமாரரான பட்டர் ஒருநாள் ஸ்ரீரங்கம் திருக்கோயிலில் மிகவும் இனிய முறையில் கைசிக புராணம் வாசிக்கக் கேட்ட எம்பார், உளம் நெகிழ்ந்தார். ஆனந்தக் கண்ணீர் பெருக எழுந்து நின்று, நெஞ்சம் உடைகுலைப்பட்ட நிலையினராய் பட்டரைக்காட்டி "ஜநகாநாம் குலே கீர்த்திம் ஆஹரிஷ்யதி மே ஸுதா" (ஜனககுலத்திற்கு என்பெண் புகழ் சேர்க்கப் போகிறாள்) (ஸ்ரீராமாயணம் பா. 64-7) என்று தன் மகளான சீதையை ஜனகன் கொண்டாடிய வார்த்தைகளைக் கூறினார். அதாவது அக்குலத்திற்குச் சீதை புகழ் சேர்த்தது போல பட்டரும் நம் குடிக்குப் பெருமை சேர்க்கப் போகிறார் என்பது எம்பார் கருத்தாகும்.[1]

[226]

பெருமாளுக்கு வல்லப₄னாயிருப்பானொரு திருவிளக்குப்பிச்சன் பலரையும் திரு முன்பே க்ஷேபிக்கிற ப்ரகரணத்திலே ஆழ்வார்களைத் திருவுள்ளமாய், "நம் ப₄க்தர்களுக்கு ஒரு குறை சொல்லிக் காணாய்" என்று திருவுள்ளமானாராய் இப்பாட்டை விண்ணப்பஞ் செய்து, "நாயன்தே! தேவரீரைக் கவிபாடவென்று தொடங்கி தம்மைக் கவிபாடிக் கொண்டார்" என்ன, "அதுவும் நம்மை அன்றோ சொல்லிற்று" என்று திருவுள்ளமானார்.

(பெரிய திருமொழி 3-4-10)

நிகழிடம்

"ஆலிநாடன் அருள்மாரி அரட்டமுக்கி அடையார் சீயம் கொங்குமலர்க் குழலியர்வேள் மங்கைவேந்தன் கொற்றவேல் பரகாலன்" என்று திருமங்கையாழ்வார் தம்முடைய பெருமைகள் பலவற்றைக் கூறிக்கொள்கிறார். இத்தொடர்பில் ஓர் **ஐதிஹ்யம்** கூறப்பெறுகிறது.

விளக்கம்

பெரிய பெருமாளாகிய திருவரங்கத்து எம்பெருமானுக்கு மிகவும் அந்தரங்கமான கைங்கர்யங்களைச் செய்து வந்தான் திருவிளக்குப் பிச்சன் ஒருவன். அவனோடு பெருமாளும் மிகவும் அந்தரங்கமாக உரையாடுவதுண்டு.

1 இதேபோல் பிள்ளை திருநறையூர் அரையரும் ஒருமுறை பட்டரைப் புகழ்ந்துள்ளார். எண் 137 பார்க்க.

அவன் எப்போதும் யாரைப் பற்றியாவது குறை சொல்லிக் கொண்டே இருப்பான். 'எல்லாரைப் பற்றியும் குறை சொல்லுகிற இவன் ஆழ்வார்களைப் பற்றி என்ன கூறுகிறான் என்று பார்ப்போம்' என்றெண்ணிய பெரிய பெருமாள் இவனைப் பார்த்து "நம்முடைய அடியவர்களுக்கு ஏதாவது குறை சொல் பார்ப்போம்!" என்று கேட்டார். திருவிளக்குப்பிச்சன் திருமங்கை ஆழ்வார் அருளிச்செய்த "செங்கமலத்தயனனைய மறையோர் காழிச்சீராம விண்ணகர் என் செங்கண்மாலை அங்கமலத்தடவயல்சூழ் ஆலிநாடன் அருள்மாரி அரட்டமுக்கி அடையார் சீயம் கொங்குமலர்க் குழலியர் வேள் மங்கைவேந்தன் கொற்றவேல் பரகாலன் கலியன் சொன்ன" என்ற பாசுரத்தை விண்ணப்பித்து "தேவரீரைப் புகழ்ந்து கவிபாட வந்ததாகக் கூறிக் கொண்டு, தம்முடைய பெருமைகளையே அன்றோ இப்பாசுரத்தில் திருமங்கையாழ்வார் கூறிக்கொண்டார்" என்று குறை சொல்ல, பெரிய பெருமாள் "இப்பெருமைகள் எல்லாம் அவருக்குண்டானதற்குக் காரணம் நாமேயன்றோ! நம்மை அனுபவிப்பதால் அவருக்கு உண்டான பெருமையை அவர் அருளிச் செய்கிறபடியால், அவர் தம்மைக் கொண்டாடிக் கொண்டதும், நம்மைக் கொண்டாடியது போலவே ஆகும்" என்று கூறியருளினார்.

[227]

நஞ்சீயருடைய நோவிலே பெற்றி அறியப் புகுந்து, "இங்குத்தைக்கு வேண்டியிருக்கிறதென்?" என்று கேட்க, "தூவிரிய மலருழக்கி பாட்டுக் கேட்கவும், பெருமாள் எழுந்தருளப் பின்னும் முன்னும் சுற்றும் வந்து திருவடி தொழவும் வேண்டியிரா நின்றேன்" என்றருளிச் செய்தருளினார். அப்போதே வரந்தரும் பெருமாள் அரையரை அழைத்து விட்டுப் பாட்டுக் கேட்டருளா நிற்க, "ஓர் மீனாய கொடிநெடுவேள் வலி செய்ய மெலிவேனோ" என்னுமளவிலே வந்தவாறே, "காமஶரங்களாலே ஏவுண்பதற்கு முன்னே வாராவிட்டால், பட்டபுண் பரிஹரிக்கவாகிலும் வந்தாலாகாதோ" என்று அருளிச் செய்தருளினார்.

(பெரிய திருமொழி 3-6-ப்ரவேசம்)

நிகழிடம்

'தூவிரிய மலருழக்கி' என்கின்ற திருமொழியில் நஞ்சீயர் மிகவும் ஈடுபட்டிருப்பர் என்பதற்கு ஓர் **ஐதிஹ்யம்** *எடுத்துக் காட்டப்பெறுகிறது.*

விளக்கம்

நஞ்சீயர் மிகவும் உடல் நலிவுற்றுக் கிடந்தபோது அவரைப் பார்க்க வந்த அவருடைய சீடரான பெற்றி என்பவர் "இப்போது தேவரீருக்கு என்ன வேண்டும்?" என்று கேட்க, அதற்கு நஞ்சீயர் "திருமங்கையாழ்வார் அருளிச்

செய்த 'தூவிரியமலருழக்கி' என்கிற பதிகத்தைக் காதாரக் கேட்க வேண்டும்; நம்பெருமாள் எழுந்தருளப் பின்னும் முன்னும் சுற்றும் வந்து சேவிக்க வேண்டும்" என்று தம் விருப்பத்தைத் தெரிவித்தார். உடனே **வரந்தரும் பெருமாள் அரையர்** என்பவரை அழைத்து வந்து "தூவிரியமலருழக்கி" என்கிற திருமொழியை ஸேவிக்கச் செய்ய, அதைக் கேட்டுக் கொண்டிருந்த நஞ்சீயர் "தானாக நினையானேல் தன்னினைந்து நைவேற்கு ஓர் மீனாய கொடி நெடுவேள் வலி செய்ய மெலிவேனோ" (எம்பெருமான் தானாகவே என்னை நினையாமல் போனாலும், அவனையே நினைத்துக் கொண்டு மனம் தளர்ந்திருக்கின்ற என்னை மன்மதன் துன்பப்படுத்த நான் இப்படி இளைத்துப் போவேனோ?) என்ற நான்காம் பாசுரத்தை அரையர் பாடிய போது, "உடல் நலிவுறுவதற்கு முன்பே எம்பெருமான் வந்து உதவாமல் போனாலும், அந்த நோயை நீக்கவாவது வந்தாலாகாதோ?" என்றருளிச் செய்து மிகவும் தளர்ந்து வருந்தினாராம்.[1]

[228]

(துணையோடும்) சிறியாத்தான் "துணையென்றால் த்₃விஸ்ஷ்டமன்றுகாண்; ஏகாஸ்ரயத்திலே கிடக்கும்" என்னுமாம்.

(பெரிய திருமொழி 3-6-1)

நிகழிடம்

நாயகி நிலையை அடைந்திருக்கின்ற திருமங்கையாழ்வார் எம்பெருமானிடம் ஒரு வண்டைத் தூதாக அனுப்பும் போது "துணையோடும் பிரியாதே இருக்கின்ற வண்டே" என்று பெண்வண்டை அழைக்கிறார். இத்தொடர்பில் சிறியாத்தான் அருளிச்செய்த **வார்த்தை** காட்டப்பெறுகிறது.

விளக்கம்

இங்குத் துணை யென்றது ஆண் வண்டையாகும். சாதாரணமாகத் துணையென்றால் ஆண்-பெண் இரண்டையுமே காட்டும். அதாவது ஆணுக்குத் துணை பெண்; பெண்ணுக்குத் துணை ஆண். ஆனால் **சிறியாத்தான்** என்பவர் "இங்குத் துணை என்பது இரண்டையும் குறிக்காது; துணை என்பது ஆண் வண்டு ஒன்றையே குறிக்கும்" என்பராம். தாம் தம்முடைய ஆண் துணையான எம்பெருமானைப் பிரிந்திருப்பதனால், எம்பெருமான் ஒருவனே துணை, மற்றெவரும் துணையன்று என்பதைக் கருத்தில் கொண்டு நாயகி நிலையிலுள்ள திருமங்கையாழ்வார் இப்படி அருளிச் செய்தார் என்பது சிறியாத்தான் கருத்து.[2]

1. எண் 230 காண்க.

2. சிறியாத்தான் இப்படி அருளிச் செய்தமை எண் 804லும் குறிப்பிடப்படுகிறது.

[229]

(சிறு வண்டே) கார்யவாய்ப்புப் பெருத்து, எம்பார் திருமேனிபோலே வடிவு சிறுத்துதிராநின்றனவாயிற்று.

(பெரிய திருமொழி 3-6-2)

நிகழிடம்

எம்பெருமானிடம் பறவைகளைத் தூது அனுப்புகின்ற பரகால நாயகி 'சிறு வண்டே' என்று வண்டை அழைக்கின்றாள். அவ்வண்டிற்கு எம்பாரை **உதாரணம்** *காட்டுகிறார் உரையாசிரியர்.*

விளக்கம்

பெருமையில் பெருத்திருந்தாலும் உருவில் சிறியவராக உள்ள எம்பாரைப் போல, வண்டும் காரியவாய்ப்பில் பெருத்திருந்தாலும் வடிவில் சிறுத்து உள்ளது என்பது உரையாசிரியர் கருத்தாகும்.

[230]

சீயர் வார்த்தையை நினைப்பது.

(பெரிய திருமொழி 3-6-4)

நிகழிடம்

எம்பெருமானை ஆசைப்படுகின்ற தன்னை, மன்மதன் துன்புறுத்துகின்ற படியை 'தன் நினைந்து நைவேற்கு ஓர் மீனாய கொடிநெடுவேள் வலிசெய்ய மெலிவேனோ' என்று பரகாலநாயகி வருத்தத்துடன் கூறுகிறாள். இத் தொடர்பில் நஞ்சீயர் அருளிச்செய்த **வார்த்தை** *எடுத்துக் காட்டப்பெறுகிறது.*

விளக்கம்

எண் 227ன் விளக்கம் பார்க்க.

[231]

அம்மங்கியம்மாளுடைய சரம த₃ஶையிலே நஞ்சீயர் அறிய எழுந்தருளினவர், அவர் படுகிற க்லேஶங்களைக் கண்டு "இங்குத்தை ஆசார்ய ஸேவைகளும், ப₄க₃வத்₃கு₃ணங்களைக் கொண்டு போதுபோக்கினபடிகளும் எல்லாம் கிடக்க, அல்லாதாரைப் போலே இப்படிப் பட வேண்டுவதே!" என்ன, "நீயாள வளையாள மாட்டோமே என்றன்றோ! ப₄க₃வத் பரிக்₃ரஹமானால் க்லேஶப்பட்டே போமித்தனை காணும்!" என்றார். புறப்பட்ட பின்பு, நஞ்சீயர் பிள்ளையைப் பார்த்து "முடிகிற

இவ்வளவிலேயும் இவ்வார்த்தை சொல்லுகிறது விஶ்வாஸத்தின் க$_4$னமான ப$_4$ாவபூ$_3$ந்த$_4$த்தில் ஊற்றமிறே" என்றருளிச் செய்தார்.

(பெரிய திருமொழி 3-6-9)

நிகழிடம்

எம்பெருமானைப் பிரிந்து வருந்துகின்ற நாயகியின் நிலையில் பாசுரம் அருளிச்செய்யும் திருமங்கையாழ்வார் 'நீ ஆள வளையாளமாட்டோமே' (எம்பெருமானே! நீ என்னைக் கைக்கொண்டபின் என்னுடைய வளைகளைக் காத்துக் கொள்ள சக்தி அற்றவளாகிவிடேன்) என்று அருளிச்செய்கிறார். எம்பெருமானைப் பற்றியவர்கள் துன்பமடைந்தே தீருவர்கள் என்று பரகால நாயகி கருதுவதாகப் பொருளுரைத்த உரையாசிரியர் இத்தொடர்பில் ஓர் **ஐதிஹ்யம்** *காட்டுகிறார்.*

விளக்கம்

அம்மங்கியம்மாள் *என்பவர் நோயுற்று மரணத்தறுவாயிலிருந்தபோது, அவரை உடல்நலம் விசாரிப்பதற்காக* **நஞ்சீயர்** *(நம்பிள்ளையுடன்) எழுந்தருளினார். நோயினால் அவர் படும் துன்பங்களைக் கண்ட நஞ்சீயர் "இங்கு நீர் ஆசாரியருக்குப் பணிவிடைகள் செய்தும், எம்பெருமானுடைய குணங்களைச் சிந்தித்துக் கொண்டும் போது போக்கியிருக்கிறீர். அப்படியிருந்தும் பிறரைப் போலே இப்படி நீரும் துன்பப்பட வேண்டியிருக்கிறதே!" என்று வருத்தத்துடன் கூறினார். அதற்கு அம்மங்கியம்மாள் "நீயாள வளையாள மாட்டோமே (எம்பெருமானே! நீ என்னைக் கைக்கொண்ட பின்பு கையில் வளை தங்காமல் துன்பப்பட வேண்டியதே எமக்கு கதி) என்றன்றோ திருமங்கையாழ்வார் பாசுரம் உள்ளது! எம்பெருமான் ஆட்கொள்வதாக ஏற்றுக் கொண்டால், பின்பு துன்பப்பட்டேதான் தீர வேண்டும்" என்றார். வெளியில் புறப்பட்ட பின்பு நஞ்சீயர்* **நம்பிள்ளையைப்** *பார்த்து "உயிர் பிரிகின்ற இந்தச் சமயத்திலும் கூட இவர் இப்படிக் கூறுவது எம்பெருமான் நமக்கு அவசியம் முக்தி யளிப்பான் என்று அவருக்குள்ள நம்பிக்கையின் உறைப்பையன்றோ காட்டுகிறது!" என்றார்.*

[232]

(கையிலங்கு) ப$_4$ட்டர் "ஸர்வேஶ்வரன் திருமங்கையாழ்வார்க்குப் பக்கக் குதிரையேறிப் போமாகாதே! அவன் கையில் திருவாழி அழகுக்கு உடலாக ஒப்பித்திருக்குமித்தனை."

(பெரிய திருமொழி 3-6-10)

நிகழிடம்

திருமங்கையாழ்வார் "நெய்யிலங்கு சுடராழிப்படையானை நெடுமாலைக் கையிலங்கு வேற்கலியன் கண்டுரைத்த தமிழ்மாலை" (நெய் பூசப்பட்டுப்

பிரகாசமாக விளங்குகின்ற சக்கராயுத்தை உடைய எம்பெருமானைக் குறித்து, கையில் விளங்குகின்ற வேலை உடைய திருமங்கையாழ்வார் அருளிச் செய்த பாசுரங்கள்) என்று அருளிச் செய்கிறார். இங்கு எம்பெருமானுடைய சக்கராயுதத்திற்கு 'நெய் இலங்கு சுடராழி' என்றும் திருமங்கையாழ்வார் கையிலுள்ள வேலுக்கு 'கையிலங்கு வேல்' என்றும் உள்ள அடைமொழிகளைக் கருத்தில் கொண்டு, பட்டர் அருளிச்செய்த **வார்த்தை** கூறப்பெறுகிறது.

விளக்கம்

"திருமங்கையாழ்வார் தம்முடைய கையில் வேல் இலங்க, ஆடல் மா எனும் குதிரையில் ஏறி, விரோதிகளை அழித்துக்கொண்டு செல்லா நிற்க, எம்பெருமான் வயலாலி மணவாளன் அவ்வாழ்வாரால் காப்பாற்றப் பட்டவனாய், அழகுக்கு உடலாக ஒப்பித்த திருவாழியும் தானுமாக அவருக்குப் பக்கத்தில் ஒரு குதிரையேறிப் போமவனன்றோ!" என்பராம் பட்டர். திருமங்கை ஆழ்வார் அவதரித்த பின்பு எம்பெருமானுடைய சக்கராயுதத்திற்கு வேலையே இல்லாமல் போய் விட்டது; எனவே எம்பெருமான் அந்தச் சக்கராயுதத்திற்கு நெய் பூசி (துருப்பிடிக்காமல் இருப்பதற்கு?) அழகுக்காகப் பிடித்துக் கொண்டிருக்கிறான் அவ்வளவே! திருமங்கையாழ்வார் கையிலுள்ள வேல் தான் விரோதிகளை வென்று கொண்டிருக்கிறது. எனவே ஆயுதமாக விளங்குகிறது வேல் தானே தவிர, திருவாழி அல்ல என்பது பட்டருடைய விளக்கமாகும்.[1]

[233]

ஆளவந்தார் ஸ்ரீபாதத்திலே வர்த்திக்க வைஷ்ணவன் அந்திம ஸமயத்திலே பட்ட க்லேஶத்தைக் கண்டு, பெரிய நம்பிக்கும் எம்பெருமானார்க்கும் நடந்த ஸம்வாதத்தை நினைப்பது.

(பெரிய திருமொழி 3-7 ப்ரவேசம்)

நிகழிடம்

'கள்வன் கொல்' என்று தொடங்கும் பதிகத்தில், பரகாலநாயகியாகிய திருமங்கையாழ்வாரை எம்பெருமானே வந்து அழைத்துச் சென்றது கூறப்பெறுகிறது. இங்கு 'அஹம் ஸ்மராமி மத் பக்தம் நயாமி பரமாம் கதிம்'

1. "உறைகொள் புகராழி சுரிசங்கம் அவை அங்கையுடையானை ஒளிசேர் கறைவளரும் வேல்வல்ல கலியனொலிமாலை" (பெரிய திருமொழி 5-10-10) என்றவிடத்தில்

"விரோதி நிரஸனத்துக்குத் திருமங்கையாழ்வார் கையில் வேலுண்டான பின்பு திருவாழி உறையிட்டிருக்குங் காண்.......... உறையில் கிடக்க அவஸரமில்லையாய்த்துத் திருமங்கையாழ்வார் வேலுக்கு. சத்ருநிரஸனம் பண்ணிக் கறை கழற்ற அவஸரம் இன்றிக்கே இருக்கும்."

என்று பெரியவாச்சான் பிள்ளை அருளிச் செய்துள்ளது ஒப்புநோக்கத்தக்கது.

(என்னுடைய பக்தனை அவனுடைய அந்திமகாலத்தில் நானே நினைத்து, அவனை உயர்ந்த கதிக்கு அழைத்துச் செல்கிறேன்) என்று எம்பெருமானே கூறியுள்ள (வராஹசரம) சுலோகத்தை எடுத்துக் காட்டும் உரையாசிரியர் இத்தொடர்பில் ஒரு **ஸம்வாதம்** *எடுத்துக் காட்டுகிறார்.*

விளக்கம்

எண் 263ன் விளக்கம் காண்க.

[234]

(கரியான் இத்யாதி) பிள்ளையமுதனார் "கூடுகிடக்க வாளையுருவிக் கொடு போவாரைப்போலே தாயார் அணைத்துக் கொண்டுகிடக்கக் கொண்டு போனான்" என்று நிர்வஹித்தார். அத்தை ப$_4$ட்டர் கேட்டருளி, "அத்தனை பணிப்பட வேண்டா காண்; சில கள்ளர் விளக்குகளையும் பிடித்து 'பிள்ளை, பிள்ளை' என்கிறவளவிலே கொண்டு போமாபோலே கொண்டு போனான் காண்" என்றருளிச் செய்தார்.

(பெரிய திருமொழி 3-7-1)

நிகழிடம்

நாயகி நிலையை அடைந்த ஆழ்வாரை எம்பெருமான் அழைத்துக் கொண்டு போய்விட, அந்த நாயகியின் தாயார் கதறுவதாக அமைந்த பாசுரம்: "கள்வன் கொல் யானறியேன் கரியான் ஒருகாளை வந்து" என்பது. இதுபற்றிய **நிர்வாஹங்கள்** *கூறப்பெறுகின்றன.*

விளக்கம்

தன் மகளை நாயகன் அபகரித்துச் சென்றதைப் பற்றித் தாய் கூறுவதை விளக்கிய **பிள்ளை அமுதனார்**, *"வாளின் உறை அப்படியே இருக்க, வாளை மட்டும் உருவிக் கொண்டு போய் விடுவது போல, என்மகளை அணைத்துக் கொண்டு நான் படுத்திருக்கையில், நானறியாத வண்ணம் என் மகளை அபகரித்துச் சென்று விட்டான்" என்று கூறுவதாக விளக்கினார். இதைக் கேட்ட* **பட்டர்** *"அவ்வளவு சிரமப்பட்டுப் பொருள் கூற வேண்டிய அவசியமில்லை. 'ஐயோ என் குழந்தை, என் குழந்தை!' என்று பெற்றவர்கள் கூக்குரலிட்டுக் கொண்டிருக்கையிலேயே கண்முன்னே, தீவட்டிக் கொள்ளைக்காரர்கள் குழந்தையை அபகரித்துச் செல்வது போல நான் பார்த்துக் கொண்டிருக்கும் போதே என்மகளை அழைத்துக் கொண்டு போய் விட்டான் என்கிறாள் தாய்" என்று அருளிச் செய்தார்.*[1]

1. இதேபோல் அமுதனாரும் பட்டரும் கூறியுள்ள வெவ்வேறு கருத்துகள் மேலும் சில இடங்களில் கூறப்பெற்றுள்ளன. எண் 262, 642 பார்க்க.

[235]

ப$_4$ட்டர் இப்பாட்டை அருளிச் செய்து "ஒரு ஸ்த்ரீயை விருபை ஆக்கினவனுடைய திறம் கேட்கில் அஞ்சுவன் என்கையால் இத்தலைக்கு கு$_3$ணஹாநியாய்த் தோற்றநின்றது; இது ஆழ்வார் அருளிச்செய்யக் கூடாதது. இது எங்ஙனே சேரும்படி?" என்று ஆச்சானைக் கேட்க, "துடுப்பிருக்கக் கை வேக வேணுமோ? எம்பெருமானார் தாமே அருளிச் செய்து வைத்தாரிறே" என்ன, "அருளிச்செய்தபடி எங்ஙனே?" என்று கேட்க, "முன்பொரு புணர்ந்து உடன்போக்கிலே பிறந்த ப்ரமாத$_3$த்தைக் கேட்டு அத்தை நினைத்து இப்போது ப$_4$யப்படுகிறாள்" என்றருளிச் செய்தார்.

(பெரிய திருமொழி 3-7-3)

நிகழ்டம்

பரகாலநாயகியை எம்பெருமான் அழைத்துக்கொண்டு போய்விட்டதை நினைத்துத் தாய் கதறுகின்ற இப்பதிகத்தில் "அஞ்சுவன் வெஞ்சொல் நங்காய், அரக்கர் குலப்பாவை தன்னை வெஞ்சின மூக்கரிந்த விறலோன் திறம் கேட்கில்" (அரக்கர் குலப்பாவையான சூர்பணகையின் காது மூக்குகளை அரிந்த எம்பெருமானுடைய திறலை நினைத்து பயப்படுகிறேன்) என்று தாய் கூறுவதாக ஒரு பாசுரம் அமைந்துள்ளது. இப்பாசுரத்திற்குப் பொருள் கொள்வதில் எழுந்த ஐயம் பற்றி ஓர் **ஐதிஹ்யம்** *கூறப்படுகிறது.*

விளக்கம்

இந்தப் பாசுரத்தை ஒரு முறை கூறிய **பட்டர்**, *'என் மகளை அழைத்துக் கொண்டு போன நாயகன் முன்பொரு முறை ஓர் அரக்கியின் காது மூக்குகளை அறுத்தவன் என்பது கேட்டு நான் பயப்படுகின்றேன்' என்று தாய் கூறுவதாகக் கொண்டால், 'அரக்கியின் மூக்கை அறுத்ததுபோல என் மகளுடைய மூக்கையும் அவன் அறுத்து விடுவானோ' என்று பயப்படுவதாக அல்லவா ஆகிவிடும்? அப்படிச் சொன்னால், நற்குணக்கடலான எம்பெருமானுக்கே குற்றம் சொல்வது போலல்லவா ஆகி விடும்! ஆழ்வார் இப்படி அருளிச் செய்ய மாட்டாரே! இது எப்படி பொருந்தும்? என்று* **ஆச்சானைக்** *கேட்க அவர் "துடுப்பு இருக்கக் கை வேக வேண்டுமோ? முன்பே எம்பெருமானார் இதற்குச் சமாதானம் அருளிச் செய்து வைத்திருக்க நாம் ஏன் சிரமப்பட வேண்டும்?" என்றார். உடனே பட்டர் "எம்பெருமானார் அருளிச் செய்த சமாதானம் யாது?" என்று கேட்க, "முன்பொருமுறை பெருமாளும் பிராட்டியுமாகச் சேர்ந்து சென்றபோது இடையில் குறுக்கிட்ட சூர்பணகையின் காது மூக்குகளை அறுக்கவேதான் இராவணன் சீதையைக் கவர்ந்து சென்றான். எனவே பிரிவிற்கு மூலகாரணம் சூர்பணகையின் காது மூக்குகளை அறுத்ததேயாகும். எனவே, 'அப்போது*

இருவருமாய்ச் சேர்ந்து சென்றபோது அரக்கியின் அங்கங்களை அறுத்து ஆபத்தைத் தேடிக் கொண்டது போல, இப்போதும் இருவராய்ச் சென்ற என் மகளும் நாயகனும் ஏதேனும் சூர்ப்பணகாபங்கம் போன்றதொரு ஆபத்தை விளைவித்துக் கொண்டு பிரிந்துவிடப் போகிறார்களே என்றஞ்சுகிறேன்' என்கிறாள் தாய்" என்று அருளிச் செய்தார்.

[236]

(நந்தா விளக்கே அளத்தற்கரியாய்)..... "सत्यं ज्ञानं अनन्तं ब्रह्म (ஸத்யம் ஜ்ஞானம் அநந்தம் ப்$_3$ரஹ்ம) என்கிறார் காண்!" என்று ஆழ்வான் பணிக்கும்.

(பெரிய திருமொழி 3-8-1)

நிகழ்டம்

திருமங்கையாழ்வார் 'நந்தா விளக்கே அளத்தற்கரியாய்' என்று எம்பெருமானைக் குறித்து அருளிச் செய்கிறார். இதுபற்றி ஆழ்வான் அருளிச்செய்த **நிர்வாஹம்** *கூறப்படுகிறது.*

விளக்கம்

நந்தா விளக்கே = ஒரு நாளும் அணையாத விளக்கே! (நந்துதல் - அணைதல்). ஒளியினாலே விளங்கும் பொருள் விளக்கு. அதே போல எம்பெருமானும் நித்யமாய் (எப்போதும் இருப்பவனாய்) ஸ்வயம் ப்ரகாசமான ஜ்ஞானத்தை குணமாகவும் தன்மையாகவும் உடையவன் ஆதலில் அவன் நந்தாவிளக்கு எனப்பட்டான். அளத்தற்கு அரியாய் = அளவிட முடியாதவனே என்றபடி. "ஸத்யம் ஜ்ஞானம் அநந்தம் ப்ரஹ்ம" என்ற உபநிஷத் வாக்யத்தையே ஆழ்வார் நந்தா விளக்கே அளத்தற்கரியாய் என்கிறார் என்பராம் **கூரத்தாழ்வான்.** *ஸத்யம் என்பது எப்போதும் இருப்பவன் என்பதைத் தெரிவிக்கிறது. அது இங்கு நந்தா(த) என்ற சொல்லால் கூறப்படுகிறது; ஜ்ஞானம் என்பது ஸ்வயம் ப்ரகாசமான ஜ்ஞானத்தை குணமாகவும் ஸ்வரூபமாகவும் உடையவன் என்பதை தெரிவிக்கிறது. அது இங்கு விளக்கு என்ற சொல்லால் கூறப்படுகிறது. அநந்தம் என்பது அவன் அளவிட முடியாதவன் என்பதைக் குறிக்கின்றது. இது இங்கு அளத்தற்கரியாய் என்ற சொல்லால் குறிப்பிடப்படுகின்றது.*

[237]

(வைகு நாங்கூர்) இவ்விடத்தைப் பிள்ளை விழுப்பரையரும் ஆப்பானுங் கூட அநுஸந்திக்கிறது "இரண்டிடத்திலே 'வைகி' என்றுண்டாயிருந்தது இது செய்யும்படியென்?" என்று ப$_4$ட்டரைக் கேட்க, "ஸௌகுமார்யத்தாலே இரண்டிடத்திலும் கிடந்தது" என்றருளிச் செய்தார்.

(பெரிய திருமொழி 3-8-6)

நிகழிடம்

திருநாங்கூர் மணிமாடக் கோயில் இயற்கை அழகை வர்ணிக்கும் திருமங்கை ஆழ்வார், "ஓங்கு பைந்தாள் கண்ணார் கரும்பின் கழைதின்று வைகிக் கழுநீரில் மூழ்கிச் செழு நீர்த்தடத்து மண்ணேந்திளமேதிகள் வைகு நாங்கூர் மணிமாடக்கோயில்......." (உயர்ந்து பசுமையான கால்களையும் கணுக்களையும் உடையனவான கரும்புகளைத் தின்று, அங்கேயே தங்கிச் செங்கழுநீர்ப் பூக்களுள்ள தடாகத்திலே மூழ்கிக் கொம்புகளில் மண்ணை ஏந்தி, இளம் எருமைகளானவை அங்கேயே தங்கி இருக்கப் பெற்ற திருநாங்கூர் மணிமாடக்கோயில்.........) என்று அருளிச் செய்கிறார். இத்தொடர்பில் ஓர் **ஐதிஹ்யம்** கூறப்படுகிறது.

விளக்கம்

"இங்குப் பாசுரத்தில் 'வைகி' என்றும் 'வைகும்' என்றும் இரண்டிடத்திலே வருகிறதே! இதற்குக் கருத்து என்ன?" என்று **பிள்ளை விழுப்பரையரும், ஆப்பான் திருவழுந்தூர் அரையரும்** பட்டரைக் கேட்டார்களாம். அதற்கு **பட்டர்** "இளம் எருமைகள் ஆகையால் அவை மிகவும் மென்மையானவை. முரட்டு எருமைகளானால் பதறிப் பதறி நடக்கும். இளம் எருமைகளாகையாலே வைகி வைகிக் கிடக்கிறபடி" என்றருளிச் செய்தாராம். (இயற்கையாகவே எருமைகள் மிகவும் மெல்லத்தான் செல்லும். அதிலும் மென்மையான இளம் எருமைகள் ஆகையால் மிகவும் மெல்ல மெல்லச் செல்கின்றன என்பதைக் கூறவே ஆழ்வார் இரண்டு இடத்தில் வைகி என்ற சொல்லைப் பயன்படுத்தியிருக்கிறார் என்பது பட்டர் அருளிய நயமான விளக்கமாகும்.)

[238]

"ஐஶ்வர்யத்தைப் புருஷார்த்த$_2$மாகச் சொல்லுவானென்?" என்று நஞ்சீயர் ப$_4$ட்டரைக் கேட்க, "ஈஶ்வரனேயாகிலும் ஒரு கால் பிறந்து அபி$_4$ஷேகம் பண்ண அமையும், ப$_4$ாக$_3$வதஶேஷமாக்கலாமாகில் என்று காணும் திருமங்கையாழ்வார் இருப்பது!" என்றருளிச் செய்தருளினார்.

(பெரிய திருமொழி 3-8-10)

நிகழிடம்

திருமங்கையாழ்வார், தாம் அருளிச்செய்த பதிகத்தைக் கற்பவர்க்கு 'கண்டார் வணங்கக் களியானை மீதே கடல்சூழ் உலகுக்கு ஒரு காவலராய், விண்தோய் நெடுவெண்குடை நீழலின் கீழ் விரிநீர் உலகாண்டு விரும்புவரே' என்று பயன் அருளிச்செய்கிறார். இத்தொடர்பில் நஞ்சீயருக்கும் பட்டருக்கும் இடையே நடைபெற்ற **ஸம்வாதம்** ஒன்று எடுத்துக்காட்டப்பெறுகிறது.

விளக்கம்

எண் 211ன் விளக்கம் காண்க.

[239]

(தான் போலும்) ஆப்பான் திருவழுந்தூரரையரும் மற்றுமுள்ள முதலிகளுமாக "இப்பாட்டிற் சொல்லுகிறதென்" என்று ப$_4$ட்டருக்கு விண்ணப்பம் செய்ய, ஒருகால் இயலைக் கேளா, "ராவணன் வார்த்தைகாண்" என்றருளிச் செய்தார்.

(பெரிய திருமொழி 4-4-6)

நிகழிடம்

திருமங்கையாழ்வார் "தான் போலும் என்றெழுந்தான் தரணியாளன் அது கண்டு தரித்திருப்பான் அரக்கர் தங்கள் கோன் போலும் என்றெழுந்தான் குன்றமன்ன இருபது தோள் உடன் துணித்தவொருவன்" என்றருளிச் செய்கிறார். இப்பாசுரத்தில் இரண்டு முறை 'என்றெழுந்தான்' என்றுள்ளது. இப் பாசுரத்திற்குப் பொருள் கொள்வதில் எழுந்த ஐயம் பற்றி ஓர் **ஐதிஹ்யம்** *கூறப்பெறுகிறது.*

விளக்கம்

இப்பாசுரத்திற்குச் சரியான பொருளைப் புரிந்து கொள்ள முடியாமல் **ஆப்பான் திருவழுந்தூர் அரையரும், மற்றுமுள்ள ஆசார்யர்களும்** *பட்டரிடம் சென்று "இப்பாட்டின் பொருள் என்ன?" என்று கேட்டார்களாம்.* **பட்டர்** *"ஒரு முறை பாசுரத்தைக் கூறுங்கள்" என்று கூறி ஒரு முறை பாசுரத்தை நன்கு கேட்டார்![1] பிறகு "இப்பாசுரத்தில் இராவணனுடைய வார்த்தை சொல்லப் படுகிறது" என்று கூறினாராம். அதாவது "தான் போலும் என்று எழுந்தான் தரணியாளன், அது கண்டு தரித்திருப்பான் அரக்கர் தங்கள் கோன் போலும்" என்று கூறி போருக்கு எழுந்தான் இராவணன். அவனுடைய குன்றமன்ன (மலை போன்ற) இருபது தோள் துணிந்த ஒருவன் இராமபிரான் என்பது பட்டர் அளித்த விளக்கமாகும். (இராவணன் மிகவும் செருக்குடன் வார்த்தை சொல்வதாகப் பாசுரம் அமைந்திருக்கிறது. 'தரணியாளன் = பூவுலகைச் சேர்ந்த ஒரு அற்ப மனிதன், தான் போலும் என்று எழுந்தான் = தான் மிகவும் பெரிய வீரன் போலப் போருக்கு எழுவதாம்; அது கண்டு தரித்திருப்பான் அரக்கர் தங்கள் கோன் போலும் = அதைக் கண்டு மூவுலகுக்கும் அதிபதியும் அரக்கர் தலைவனுமான நான் பொறுத்திருப்பதாம்!' என்று வெகு கர்வமாகச் சொல்லிக்*

1. இங்கு "ஒருகால் இயலைக் கேளா" (ஒரு முறை பாசுரத்தைக் கேட்டு) என்றுள்ளதால், பராசரபட்டர் பாசுரங்களைக் கற்கும் பருவத்தை அடைவதற்கு முன்னரே, மிகவும் இளம் பிராயத்திலேயே இப்பொருளைக் கூறியிருக்கிறார் என்று ஸ்ரீ உ.வே மஹாவித்வான் பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசார்ய ஸ்வாமி கூறுவார்.

கொண்டு போருக்கு எழுந்தான் இராவணன்; அவனுடைய தோள்களைத் துணித்தவன் இராமபிரான் என்பது பட்டர் தந்த விளக்கமாகும்.)

[240]

"வ்ருத்தவானாய்ப் போந்தவன் வ்ருத்தஹீநனானான்" என்னுமாபோலே தீத்தொழில் என்ற த்$_4$வனி விஶேஷத்தைப்பற்றச் சொன்ன வார்த்தை" என்றருளிச் செய்வர்.

(பெரிய திருமொழி 4-5-3)

நிகழிடம்

"நாத்தொழில் மறை வல்லர்கள் நயந்து அறம் பயந்த வண்கைத் தீத்தொழில் பயிலு நாங்கூர்த் திருமணிக் கூடத்தானே" என்பது திருமங்கை ஆழ்வார் அருளிச் செய்த பாசுரமாகும். நாத்தொழில் மறை வல்லவர்கள் (நாவினுடைய தொழிலாகிய வேதம் ஓதுவதில் வல்லவர்கள்) தீத்தொழில் செய்கின்றனர்; அதாவது தீயில் செய்யப்படும் யாகங்களைச் செய்கின்றனர் என்பது பாசுரத்தின் திரண்ட பொருள். இத்தொடர்பில் ஒரு **நிர்வாஹம்** *கூறப்பெறுகிறது.*

விளக்கம்

நாத்தொழில் மறை வல்லவர்கள் தீத்தொழில் செய்கின்றார்கள் என்று பாசுரத்தில் உள்ளது. தீத்தொழில் என்ற சொல்லின் நயத்தை விளக்கும் வகையில் நம்பிள்ளை இதற்கு ஒரு சுவைப் பொருள் உரைத்தார். தீத்தொழில் என்பதற்குத் தீய தொழில் என்றும் பொருள் உள்ளதைக் கருத்தில் கொண்டு, 'நன்னடத்தையுள்ளவன் நன்நடத்தையை விட்டான்' என்பதுபோல, (வேதம் வல்லவர்கள் தீயதொழில்களைச் செய்கின்றனர் என்பதுபோல) ஆழ்வார் பாசுரம் அருளிச்செய்கின்றார் என்று **நம்பிள்ளை** *கூறினார்!*

1. நாத்தொழில் மறைவல்லவர்கள் தீத்தொழில் பயில்கின்றனர் என்று பாசுரத்தில் உள்ளது. தீத்தொழில் என்பது தீயில் செய்யப்படும் (யாகம் முதலிய) தொழிலைக் குறிப்பதுபோல தீய தொழிலையும் குறிக்குமாகையால், அந்தச் சொற்சுவை நோக்கியே இச்சொல் பயன்படுத்தப்பட்டது என்பது நம்பிள்ளையின் கருத்து. இப்படிக் கூறுவதை வடமொழி நூலார் விரோதாபாஸ அலங்காரம் என்பர். தீத்தொழில் என்பது முதலில் தீயதொழில் என்கிற பொருளைத் தரும். வேதமோதியவர் தீய தொழிலைச் செய்கின்றனர் என்பது விரோதப் (தவறான) பொருள். தீத்தொழில் என்பது தீயில் யாகம் செய்யும் தொழிலையும் குறிக்குமாதலால் அவ்வந்தணர்கள் யாகம் முதலியவற்றைச் செய்கின்றனர் என்பது உண்மைப் பொருள். இப்படி 'தீத்தொழில்' என்ற சொல்லானது முதலில் தவறான (விரோதம்) பொருளைத் தந்து பிறகு 'தீயில் செய்யப்படும் தொழில்' என்ற சரியான பொருளைத் தருவதால், இச்சொற்சுவையை நோக்கியே இச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பது நம்பிள்ளை கூறிய விளக்கத்தின் கருத்து.

[241]

(சிந்தை தன்னுள் முந்தி நிற்றிர்) "அணைக்கைக்கு ஈடாகக் கைக்கு எட்டாதே இருக்கிற நீர் இத்தைப் போரவளர்க்கிறதென்?" என்று பிள்ளான்.

(பெரிய திருமொழி 4-9-9)

நிகழிடம்

"சிந்தை தன்னுள் முந்தி நிற்றிர், சிறிதும் திருமேனி இந்த வண்ணமென்று காட்டீர்" (என் மனத்துக்குள்ளே வெகு நாள்களாக இருக்கின்றீர்; ஆனால் உம்முடைய வடிவு இப்படிப்பட்டது என்று சிறிதும் காட்டீர்) என்று எம்பெருமானைக் குறித்து அருளிச் செய்கிறார் திருமங்கையாழ்வார். இதை விளக்கிப் பிள்ளான் அருளிச்செய்த **வார்த்தை** *கூறப்பெறுகிறது.*

விளக்கம்

"எம்பெருமானே! நான் உன்னை அணைத்துக் கொள்ள வேண்டும் என்று ஆசைப்படும்போது கைக்கு எட்டாத தொலைவில் இருக்கின்ற நீ, என் நெஞ்சுக்குள்ளே மட்டும் வெகு நாள்களாகக் குடியிருந்து, எனக்கு ஆசையை மிகவும் வளர்ப்பது எதற்காக? என்று கேட்கிறார் ஆழ்வார்" என்று **பிள்ளான்** *அருளிச்செய்வர். (உன்னுடைய வடிவு இப்படிப்பட்டது என்று எனக்குக் காட்ட விருப்பமில்லையாகில், என் நெஞ்சுக்குள் புகுந்திருப்பது மட்டும் எதற்காக? உன்மீது எனக்கு ஆசையை வளர்ப்பதற்காக மட்டுமேயோ? என்று ஆழ்வார் கேட்கிறார் என்பது பிள்ளான் தரும் விளக்கத்தின் கருத்தாகும்.)*

[242]

(மடியிடைவைத்து) "'தன்னுடைய தாள் மேல் கிடாத்தி' என்கிறவிடத்துக்கு ப₄ட்டர் அருளிச் செய்ய நான் கேட்டேன்" என்று பிள்ளை அருளிச் செய்வர். "ப்ரதிகூலனான ஹிரண்யனை விட்டு ஆசையுடைய என்னையன்றோ அம்மடியிலே ஏறிட்டுக்கொள்ள அடுப்பது!" என்று தம்மைப் பார்த்து அருளிச் செய்தாராக.

(பெரிய திருமொழி 4-10-8)

நிகழிடம்

திருவெள்ளியங்குடி எனும் திவ்யதேசத்து எம்பெருமானை அனுபவிக்கின்ற திருமங்கையாழ்வார் "முடியுடை அமரர்க்கு இடர் செய்யும் அசுரர் தம் பெருமானை அன்று அரியாய் மடியிடை வைத்து மார்வை முன் கீண்ட மாயனார்" என்றருளிச் செய்கிறார். இத்தொடர்பில் ஓர் **ஐதிஹ்யம்** *கூறப்பெறுகிறது.*

விளக்கம்

அரக்கர் தலைவனான இரணியனைத் தன்னுடைய மடியில் வைத்துக் கொண்டு அவனுடைய மார்பைப் பிளந்த எம்பெருமான் என்கிற இதே கருத்தைத் திருமங்கையாழ்வார் பெரிய திருமடலிலும் "தன்னுடைய தாள் மேல் கிடாத்தி, அவனுடைய பொன்னகலம் வள்ளுகிரால் போழ்ந்து" என்றருளிச் செய்கிறார். அவ்விடத்தை **பட்டர்** *விளக்கியருளின போது தாமே நேரில் கேட்டிருந்ததாக* **நம்பிள்ளை** *அருளிச் செய்கிறார். அதாவது, "எதிரியான அவ்விரணியனை விட்டு, ஆசையுடைய என்னையன்றோ எம்பெருமான் தன் மடியில் வைத்துக் கொள்ள வேண்டும் (என்று பரகாலநாயகியாகிய திருமங்கையாழ்வார் அருளிச் செய்கிறார்)" என்று பட்டர் அருளிச் செய்தாராம்.*

[243]

(புள்ளுப் பிள்ளைக்கிரை தேடும்) "ஆலவாயுடையான் கேட்க, ப$_4$ட்டர் அருளிச் செய்தார்" என்று நாம் பிரஸித்$_3$த$_4$மாகச் சொல்லிப் போருமதிறே; 'கயலுகள நின்றதாகில் புள்ளுக்குத் தேடிப் போக வேண்டுகிறதென்?' என்ன, 'பிள்ளை! அவ்விடம் அறிந்திலையோ? பிள்ளைக்கு அன்றோ தேடுகிறது; நிலமிதியாலே அவைதான் தாணும் துலாமும் போலே வளர்ந்திருக்கும். அதில் இதுக்கு ஸாத்மிக்குமவை தேடிப்போகா நிற்கும்."

(பெரிய திருமொழி 5-1-2)

நிகழ்டம்

புள்ளம் பூதங்குடி எனும் திவ்ய தேசத்தின் வயல் வளத்தை வர்ணிக்கும் திருமங்கையாழ்வார் "பள்ளச் செறுவில் கயலுகளப் பழனக் கழனியதனுள் போய் புள்ளுப் பிள்ளைக்கு இரை தேடும் புள்ளம் பூதங்குடிதானே (தாழ்ந்துள்ள கழனிகளில் மீன்கள் துள்ளி விளையாட, பறவைகள் அக்கழனிகளினுள்ளே போய்த் தம் குஞ்சுகளுக்கு உணவாக மீன்களை தேடப் பெற்ற புள்ளம் பூதங்குடி) என்றருளிச் செய்கின்றார். இத்தொடர்பில் ஓர் **ஸம்வாதம்** *காட்டப்பெறுகிறது.*

விளக்கம்

"ஆலவாயுடையான் *என்பவன் இவ்விடத்தில் ஒரு கேள்வியைக் கேட்க, அதற்கு* **பட்டர்** *விடை அருளிச் செய்தார் என்று நாம் மிகவும் பிரசித்தமாகச் சொல்லி வருகின்றோம்" என்று உரையாசிரியர் குறிப்பிடுகிறார். "பள்ளச் செறுவில் கயலுகள' என்ற போதே அவ்விடத்து வயல்களில் மீன்கள் அளவற்றுக் கிடக்கின்றன என்பது வெளிப்பட்டு விடுகிறது. அப்படியிருக்க புள்ளு பிள்ளைக்கு இரை தேடும் - என்று பறவைகள் இரையைத் தேடுகின்றன என்று*

1. இவ்வைதிஹ்யம் மற்றோரிடத்திலும் உள்ளது. எண் 406 பார்க்க

எப்படிக் கூறலாம்? அங்கே மீன்கள் அருமைபட்டிருந்தாலன்றோ இரையைத் தேட வேண்டும்! அளவற்றுக் கிடக்கும் இடத்தில் தேட வேண்டிய அவசியம் இல்லையே! எனவே இவ்வரிகள் ஒன்றுக்கொன்று பொருந்தவில்லையே!" என்று ஆலவாயன் கேட்டான். அதற்கு பட்டர், "பிள்ளாய்! நீ இப்பாசுரத்தில் உள்ள சொற்களின் நயத்தை அறிந்திலை. இங்கு, பிள்ளைக்கு இரை தேடும் என்றுள்ளது காண். அங்குள்ள நிலத்தின் பண்பாலே மீன்கள் தூணும் துலாமும் (உத்தரமும்) போலே மிகவும் பெருத்திருக்கும். அவை குஞ்சுகளின் வாய்க்குள் புகமாட்டா. ஆகையால் தம் குஞ்சுகளின் வாய்க்குள் புகக்கூடிய சிறிய மீன்களைத் தேடித் தானே பிடிக்க வேண்டும். அதைத்தான் இங்கு ஆழ்வார் 'புள்ளு பிள்ளைக்கு இரை தேடும்' என்றருளிச்செய்கிறார்" என்று விடையளித்தார்!

[244]

"திருப்பாணாழ்வார் 'அன்று நேர்ந்த நிசாசரரை' என்று ராவணவத$_4$மே தொடங்கிப் பெருமாளை அடியொற்றினார். அது தெற்குத் திருவாசலாலே புகுந்து கிடந்தது. 'மந்திபாய்' என்று பரமபத$_4$மே தொடங்கி அடியொற்றினார், திருமலையிலே புகுந்து கிடந்தது. அங்கே பார்த்தவாறே நின்றபடியைக் கண்டார். இன்னமும் போக்கிலே ஒருப்பாடு தோற்றியிருந்தது என்று அவ்விடமே தொடங்கி அடியொற்றினவாறே வடக்குத் திருவாசலாலே புகுந்து படுக்கை இங்கேயாயிருந்தது" என்று ப$_4$ட்டர் அமலனாதிபிரான் அருளிச் செய்யாநிற்க நான் கேட்டேன் - என்று பிள்ளை அருளிச் செய்தார்.

(பெரிய திருமொழி 5-5-1)

நிகழிடம்

பரகால நாயகியாகிற தன் மகள் திருவரங்கநாதனிடம் ஈடுபட்டுக் கிடக்கின்றமையைத் தாய் கூறுவதாக அமைந்தது "வெருவாதாள் வாய்வெருவி" என்று தொடங்குகின்ற பதிகம். ஆனால் முதல் பாசுரத்திலேயே தன் மகள் 'வெருவாதாள் வாய்வெருவி வேங்கடமே வேங்கடமே என்கின்றாளால்' என்று திருவேங்கடமுடையானையே வாய் புலத்துகின்றாள்! என்று தாயார் கூறுகின்றாள். இது தொடர்பாக ஓர் **ஐதிஹ்யம்** *கூறப்படுகிறது.*

விளக்கம்

திருவரங்கத்து எம்பெருமானையே அனுபவிக்க இழிகின்ற பரகால நாயகி, திருவேங்கடமுடையானை வாய்வெருவுவதற்குக் காரணம் என்ன என்பதற்கு விடையை, ஒருமுறை பட்டர் *அமலனாதிபிரான் எனும் திவ்யப்பிரபந்தத்திற்கு*

1. இதேபோல் பட்டர் தமிழறிஞர்கள் கேட்ட கேள்விகளுக்கு நயமாக விடை பகர்ந்த இடங்கள் பல உள்ளன. உதாரணமாக எண் 438 பார்க்க.

விரிவுரையாற்றிய போது கூற, அதைத் தாம் கேட்டிருந்ததாக **நம்பிள்ளை** அருளிச் செய்தார். (திருவரங்கனைக் குறித்தே அருளிச் செய்யப் பெற்ற அமலனாதி பிரானிலும் முதல் பாசுரத்தில் "விரையார் பொழில் வேங்கடவன்" என்று திருப்பாணாழ்வார் அருளிச் செய்துள்ளது நினைவு கூரத்தக்கது.)

திருப்பாணாழ்வார் எம்பெருமானைப் பாட முனைந்து அவனை அடியொற்றினார். அவன் இராமனாக அவதரித்து இராவணவதம் செய்து வெற்றி வீரனாகத் திருவரங்கம் பெரிய கோயிலின் தெற்குத் திருவாசலாலே நுழைந்து அரவணையில் பள்ளிக் கொண்டான். (ஸ்ரீரங்கத்திற்குத் தெற்கே இலங்கை உள்ளதனால் தெற்குத் திருவாசலாலே புகுந்தமை கூறப்பட்டது). அதனால்தான் 'அன்று நேர்ந்த நிசாசரரைக் கவர்ந்த வெங்கணைக் காகுத்தன்' என்றவுடன், 'கடியார்பொழில் அரங்கத்தம்மான்' (அமலனாதிபிரான் - 2) என்கிறார் திருப்பாணாழ்வார். அதேபோல் ஆழ்வார் எம்பெருமானை விண்ணவர் கோனான நிலையில் பாடத் தொடங்கினார். விண்ணவர்கோனும் விண்ணிலிருந்து இறங்கித் திருவேங்கடமலையிலே வந்து நின்றான். அங்கே அவனைப் பாடியவர், அவன் நிற்கிற நிலையைக் கண்டவாறே, அவன் இன்னும் எங்கோ புறப்பட்டுப் போகத்தான் அப்படி நிற்கிறான் என்றுணர்ந்து அவனுடைய அடிச்சுவட்டைப் பின் தொடர்ந்தார். அவன் திருமலையினின்றும் ஒரு பயணமெடுத்து, திருவரங்கம் பெரிய கோயிலின் வடக்குத் திருவாசலாலே புகுந்து அரவணையில் பள்ளிக் கொண்டான். (ஸ்ரீரங்கத்திற்கு வடக்கே திருவேங்கடமலை உள்ளதால் வடக்குத் திருவாசலாலே புகுந்தமை கூறப்பட்டது.) ஆழ்வாரும் 'விண்ணவர்கோன் விரையார் பொழில் வேங்கடவன் நீள்மதிள் அரங்கத்தம்மான்' (அமலனாதிபிரான்-1) என்றும், 'மந்திபாய் வடவேங்கட மாமலை வானவர்கள் சந்தி செய்ய நின்றான் அரங்கத்து அரவினணையான்' (அமலனாதிபிரான் - 3) என்றும் பாடியருளினார் - என்று பட்டர் மிக அழகாக விளக்கியருளியதை நான் கேட்டேன் என்றருளிச் செய்தார் நம்பிள்ளை. ஆக, பரமபதத்திலிருந்து திருவரங்கத்துக்கு வரும் வழியில் தங்கி நின்ற இடமே திருமலையாதலால் அங்கு எழுந்தருளியிருப்பவனும் திருவரங்கனே என்ற கருத்தில்தான் திருவேங்கடவனைப் பாடுகின்றார் என்பது பட்டர் கருததாகும்.[1]

[245]

(என்கின்றாளால்) "ப$_4$ட்டர் 'அழகியமணவாளப்பெருமாள்' என்னும்போதும், அனந்தாழ்வான் 'திருவேங்கடமுடையான்' என்னும்போதும் ப$_4$ாவப$_8$ந்த$_4$மடையத் தோற்றியிருக்கும்படிகாண்!" என்று சீயர்.

(பெரிய திருமொழி 5-5-1)

1. எண் 184 பார்க்க.

நிகழிடம்

திருமங்கையாழ்வார் நாயகிநிலையில் 'வேங்கடமே வேங்கடமே' என்று கூறும்போதே அவ்வெம்பெருமான்மீது அவருக்குள்ள ஈடுபாடு வெளிப்படும் என்றுரையிட்ட உரையாசிரியர், அதற்குச் சான்றாக ஆசார்யர்கள் சிலருடைய ஈடுபாடுகள் பற்றி நஞ்சீயர் அருளிச்செய்த **வார்த்தை***யை எடுத்துக் காட்டுகிறார்.*

விளக்கம்

பட்டருக்கு அழகிய மணவாளன் மீது பற்று மிகவும் அதிகம். அதே போல் அனந்தாழ்வானுக்குத் திருவேங்கடமுடையான் மீது பற்று மிகவும் அதிகம். எனவே **பட்டர்** *'அழகிய மணவாளப் பெருமாள்' என்று கூறும்போதும்,* **அனந்தாழ்வான்** *'திருவேங்கடமுடையான்' என்று கூறும்போதும் அவர்களுக்கு அவ்வெம்பெருமான்கள்மீதுள்ள ஈடுபாடு முழுவதும் அவர்கள் அந்தச் சொற்களைக் கூறும்போதே தெரியும் என்று* **நஞ்சீயர்** *அருளிச்செய்வராம்.*[1]

[246]

दृष्ट्वा स्थित्वा बहिर्गुरुम् (த்$_{3}$ருஷ்ட்வா ஸ்தி$_{2}$த்வா ப$_{3}$ஹிர்கு$_{3}$ரும்) இதுக்கு ப$_{4}$ட்டர் "இவள் க்ருஷ்ணவிஷய ப்ரேமத்தில் புதியது உண்டிலள் காண்" என்றருளிச் செய்தார், சிலரைக் கண்ணுக்குத் தோற்றிற்றிறே என்று.

(பெரிய திருமொழி 5-5-8).

நிகழிடம்

பரகால நாயகியின் தாயார் தன்மகளைப் பற்றிக் கூறும்போது 'உறவாதுமிலள்' என்கிறாள். எம்பெருமான்மீதுள்ள அபரிமிதமான காதலால், உறவினர்களையும் அவள் ஒரு பொருட்டாகக் கொள்வதில்லை என்பது கருத்து. இத்தொடர்பில் சிந்தயந்தியைப் பற்றி பட்டர் அருளிச்செய்த **வார்த்தை** *ஒன்று எடுத்துக் காட்டப்பெறுகிறது.*

விளக்கம்

எண் 76ன் விளக்கம் பார்க்க.

[247]

வேல்வெட்டி நம்பியார்க்குப் பிள்ளை அருளிச் செய்த வார்த்தை.

(பெரிய திருமொழி 5-8-6)

நிகழிடம்

திருவரங்கனிடம் சரணம் புகுகின்ற திருமங்கையாழ்வார், அடியவர்கள் பற்பலருக்கு அவன் அருள்புரிந்தமையைக் கூறி, அதுபோலவே தமக்கும்

1. இக்கருத்துக்கள் மற்றும் இரண்டிடங்களில் இடம்பெற்றுள்ளன.எண் 311, 666 பார்க்க.

அருள்புரிய வேண்டும் என்று வேண்டுகின்றார். அப்படிக் கூறும்போது குகனைப் பற்றி 'ஏழை ஏதலன் கீழ்மகன்' என்றும், அனுமனைப் பற்றிக் கூறும்போதும் 'வாதமாமகன் மற்கடம் விலங்கு மற்றோர் சாதி' என்றும், சுமுகனைப் பற்றிக் கூறும்போது 'நஞ்சு சோர்வதோர் வெஞ்சின அரவம்' என்றும் அவ்வவர்களுடைய தாழ்வைக் கூறுகின்றார். ஆனால் மார்க்கண்டேயனைப் பற்றிக் கூறும்போது 'மன்னுநான்மறை மாமுனி பெற்ற மைந்தன்' என்று அவனுடைய பெருமையைக் கூறுகின்றார். எம்பெருமானைச் சரணடைந்த சிலர்க்கு அவர்களுக்குள்ள தாழ்வைக் கூறிய ஆழ்வார், ஒருவனுக்கு மட்டும் அவனுடைய பெருமையைக் கூறியது பொருந்துமோ என்ற கேள்விக்கு விடையாக, சரணாகதி செய்வதற்கு மேன்மையோ, தாழ்வோ இரண்டுமே ஒரு பொருளல்ல என்றுரைத்த உரையாசிரியர் இதற்குச் சான்றாக ஓர் **ஐதிஹ்யம்** காட்டுகிறார்.

விளக்கம்

எண் 199ன் விளக்கம் காண்க.

[248]

(ஒருவன்) முற்பட த்வயத்தைக் கேட்டு, இதிஹாஸபுராணங்களையும் அதி$_4$கரித்து, பரபக்ஷப்ரதிக்ஷேபத்துக்கு உடலாக ந்யாயமீமாம்ஸைகளையும் அதி$_4$கரித்து, போதுபோக்கும் அருளிச்செயலிலேயாம்படி பிள்ளையைப் போலே அதி$_4$கரிப்பிக்க வல்லவனையிறே ஒருத்தன் என்பது.

(பெரிய திருமொழி 5-8-7)

நிகழ்டம்

கண்ணபிரானுக்குக் கல்வி கற்பித்த ஸாந்தீபிநி என்கின்ற முனிவனைப் பற்றிக் கூறுகின்ற திருமங்கையாழ்வார் 'ஓதுவாய்மையும் உவனியப்பிறப்பும் உனக்கு முன்தந்த அந்தணன் ஒருவன்' என்று அருளிச்செய்கின்றார். இங்கு 'ஒருவன்' என்பதற்கு ஒப்பற்றவன் என்ற பொருளுரைத்த உரையாசிரியர், தம்முடைய ஆசார்யரான நம்பிள்ளையை ஸாந்தீபிநியுடன் ஒப்பிட்டு ***உதாரணம்*** *காட்டுகின்றார்.*

விளக்கம்

முதலில் ஆசார்யனிடம் த்வய உபதேசம் பெற்று, இதிஹாஸங்கள் புராணங்கள் முதலியவற்றையும் கசடறக் கற்று, பிற சமயங்களை வாதங்களில் வெல்லும்பொருட்டு ந்யாயம், மீமாம்ஸை முதலிய சாத்திரங்களையும் கற்று, இவை அனைத்தும் கற்றிருந்தாலும், ஆழ்வார்கள் அருளிச்செய்த ஈரச் சொற்களான அருளிச்செயலிலேயே போதுபோக்கும் **நம்பிள்ளையைப்** *போலக்*

கற்பிக்க வல்ல ஆசார்யர் ஒருவரையே 'ஒருவன்' என்ற சொல் குறிக்கும் என்கிறார் உரையாசிரியர்.

[249]

(மற்றவற்கு அருளிச்செய்தவாறு) குறும்பறுத்த நம்பியோடே சேர்த்துவிட்டபடியைச் சொல்லுகிறது. "பதிவ்ரதையோடு உண்டான ஏகாந்தத்தில் அநுபவத்தைத் திரளிலே வெளியிடுவாரைப்போலே தானும் நானுமறிய அனுபவித்ததை இங்ஙனே வெளியிடுவதே! திருவேங்கடமுடையான் அலைவலை ஆகாதே!" என்றாரிறே.

(பெரியதிருமொழி 5-8-9)

நிகழிடம்

தொண்டைமான் சக்ரவர்த்திக்கு திருவேங்கடமுடையான் அருள் செய்தான் என்று திருமங்கையாழ்வார் அருளிச்செய்துள்ளார். அவனுக்குச் செய்த அருளாவது, குறும்பறுத்த நம்பியைப் பற்றி அவனுக்கு அறிவித்ததே என்கின்ற உரையாசிரியர், குறும்பறுத்த நம்பி கூறிய **வார்த்தை***யையும் எடுத்துக் காட்டுகிறார்.*

விளக்கம்

தொண்டைமான் சக்ரவர்த்தி தங்கத்தாலான பூக்களைத் திருவேங்கடத்து எம்பெருமானுக்கு ஸமர்ப்பித்தான். மறுநாள்காலை வந்து பார்த்தபோது அப்பூக்களைக் கீழே தள்ளி, மண்ணாலான பூக்களைத் திருவேங்கடமுடையான் தன் தலைமீது அணிந்து கொண்டிருந்ததைக் கண்டான். இதற்குக் காரணம் அறியாமல் அவ்வரசன் திகைத்தபோது, ***குறும்பறுத்த நம்பி*** *என்பவரைப் பார்த்து வருமாறு திருவேங்கடமுடையான் அவனுக்கு நியமித்தான். அரசனும் அவ்வாறே சென்று பார்த்தபோது குறும்பறுத்த நம்பி என்பவர் திருவேங்கடமுடையானுக்கு மண்பாண்டங்கள் செய்பவர் என்றும், தினமும் அவர் தாமிருந்த இடத்திலிருந்து கொண்டே மண்ணால் சில பூக்களைச் செய்து திருவேங்கடமுடையானுக்கு பக்தியுடன் ஸமர்ப்பித்துவந்தவர் என்றும், அவருடைய பக்தியை மெச்சியே எம்பெருமான் தங்கப்பூக்களைத் தள்ளி, அவர் ஸமர்ப்பித்த மண்பூக்களைத் தனது திருமுடிமீது ஏற்றுக் கொண்டான் என்றும் உணர்ந்து குறும்பறுத்த நம்பியின் கால்களில் விழுந்து வணங்கினான். இதைக் கண்ட குறும்பறுத்த நம்பி நடந்தவற்றை உணர்ந்து, "நான் ஏதோ ஏகாந்தமாக ஒருவரும் அறியாமல் திருவேங்கடமுடையானுக்கு ஸமர்ப்பித்தவற்றை, இப்படி அனைவரும் அறியும்படி செய்து விட்டானே! கணவனுக்கும் கற்புக்கரசியான மனைவிக்கும் இடையில் ஏகாந்தமாக நடப்பவற்றை வெளியிடுவது போலன்றோ*

திருவேங்கடமுடையான் செய்துவிட்டான். திருவேங்கடமுடையான் அலைவலை (=அதிகமாகப் பேசுபவன்; பஹுஜல்பன்; உளறுவாயன்.) அன்றோ!'' என்றார்.[1] (குறும்பறுத்த நம்பியின் இயற்பெயர் யாது என்பது தெரியவில்லை. குறும்பு என்பது கர்வத்தைக் குறிக்கும். எம்பெருமானுக்கு நான் இதைச் செய்தேன் என்ற கர்வம் இல்லாமல் அவர் மண்பூக்களை ஸமர்ப்பித்தபடியால் அவர் குறும்பறுத்த நம்பி எனப்பட்டார். ஆனால் தொண்டைமான் சக்ரவர்த்தியோ, தன்னுடைய செல்வச் செருக்கை வெளிப்படுத்தும்விதமாகப் பொற்பூக்களை ஸமர்ப்பித்தான். அதனாற்றான் எம்பெருமான் அவற்றைத் தள்ளி, கர்வமில்லாதவரான குறும்பறுத்த நம்பி ஸமர்ப்பித்த மண்பூக்களை ஏற்றுக் கொண்டான். அதை தொண்டைமானுக்குப் புரியவைக்கவே அவனை குறும்பறுத்த நம்பியிடம் அனுப்பினான். ஆனால், நம்பியோ, தாம் எம்பெருமானுக்குச் செய்வதை பிறர் அறியக் கூடாது என்றிருந்தவராகையால், அதை வெளியிட்டுவிட்ட திருவேங்கடமுடையானை அலைவலை (=எதையும் மறைக்கத் தெரியாத ஓட்டை வாயை உடையவன்) என்று கூறிவிட்டார்.

[250]

'மாட மாளிகை சூழ் திருமங்கை மன்னன்' என்றவாறே, 'அணிபொழில் திருவரங்கம்' எங்கே புக்கொளித்தது? என்றருளிச் செய்தார் ப$_4$ட்டர்.

(பெரிய திருமொழி 5-8-10)

நிகழ்டம்

திருவரங்கத்தைக் குறித்து அருளிச்செய்யப்பட்ட பதிகமான 'ஏழை ஏதலன்' என்று தொடங்கும் திருமொழியில் ஒவ்வொரு பாசுரத்தின் இறுதியிலும் 'அணிபொழில் திருவரங்கத்தம்மானே!' என்று திருமங்கை ஆழ்வார் அருளிச்செய்துள்ளார். அப்பதிகத்தின் இறுதிப் பாசுரத்தில் 'மாட மாளிகை சூழ் திருமங்கை மன்னன்' என்று தம்மைப் பற்றி அருளிச்செய்து கொண்டுள்ளார். இதைப்பற்றி பட்டர் அருளிச்செய்த சுவையான **வார்த்தை** ஒன்று எடுத்துக் காட்டப்பெறுகிறது.

விளக்கம்

கண்களை மூடிக் கொண்டு மனக்கண்ணால் அணிபொழில் திருவரங்கத்தைக் கண்டு - ஒருகாலுக்கு ஒன்பதின்கால் 'அணிபொழில் பொழில் திருவரங்கம்' என்று பாடிய திருமங்கையாழ்வாருக்குத் திடீரென்று தமது கண்கள் திறக்க எதிரில் தம்முடைய ஊரான திருமங்கை நகரமே காட்சி தந்தது. அணிபொழில்கள் சூழப்பெற்ற திருவரங்கத்தை ஒருகணம் ஆழ்வார் மறந்து,

1. எண் 9 பார்க்க.

'மாடமாளிகைசூழ் திருமங்கை' என்றருளிச் செய்கிறார். இதை நகைச்சுவையுடன் விளக்குகின்ற பட்டர், "மாடமாளிகை சூழ்ந்த திருமங்கையைக் கண்டவுடன், அணிபொழில்கள் சூழ்ந்த திருவரங்கம் எங்கே புகுந்து ஒளிந்து கொண்டது?" என்றார். (மாடங்களால் சூழப்பெற்ற திருமங்கைக்கு, பொழில்களால் சூழப்பெற்ற திருவரங்கம் நேர் நிற்க முடியாது என்பது கருத்து.)

[251]

(தந்தையித்யாதி) (நந்தன்மதலை) "பிறந்தது அங்கேயாகில், மீண்டும் போய் வளர்ந்தது அங்கேயாகில், கம்ஸப$_4$யத்தாலே நாலு நாள் வளர்ந்த இத்தனையுங்கொண்டு அறிவு குறைய நின்றார் சொல்லுகையன்றிக்கே அறிவில் தலை நின்ற நம் போல்வார் இங்ஙன் சொல்லுகிற இதுக்கு ஹேதுவென்?" என்று சீயர் ப$_4$ட்டரைக் கேட்க, "நாமேயன்று காணும், அவதாரகாலத்துக்கு முன்பே அறிவுடையராயிருப்பாரும் இப்படி சொன்னார்கள் காணும், अयं स कथ्यते प्राज्ञैः (அயம் ஸ கத்$_2$யதே ப்ராஜ்ஞை:) இத்யாதிகளாலே. அவர்களுக்கு முலை சுரவாநின்றதாகில் இவன் அஞ்சா நின்றானாகில் உமக்கு இவ்வாராய்ச்சி என்தான்?" என்றருளிச் செய்தார்.

(பெரிய திருமொழி 5-10-7)

நிகழ்டம்

நந்திபுர விண்ணகரத்தில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானை 'தந்தை மனம் உந்து துயர் நந்த இருள் வந்த விறல் நந்தன் மதலை' (தகப்பனான நந்தகோபனுக்கு இருந்த குழந்தை இல்லாத் துயரைப் போக்குவதற்காக இருளிலே வந்த நந்தகோபன் பிள்ளை) என்று திருமங்கையாழ்வார் அருளிச்செய்கிறார். இத்தொடர்பில் ஒரு **ஸம்வாதம்** *காட்டப்பெறுகிறது.*

விளக்கம்

"கண்ணபிரான், வசுதேவர்க்கும், தேவகிக்கும் மகனாக வடமதுரையில் பிறந்தான். சில வருடங்கள் ஆய்ப்பாடியில் வளர்ந்தானென்றாலும், கம்ஸனைக் கொல்வதற்காக மதுரை சென்றவன் மீண்டும் ஆய்ப்பாடிக்குத் திரும்பவே யில்லை; மதுரையிலேயே தங்கி விட்டான். இப்படி ஒரு சில நாள்கள் கம்ஸனிடத்தில் இருந்த அச்சம் காரணமாக ஆய்ப்பாடியில் தங்கியிருந்தது கொண்டு, அவனை இடைக்குலத்தவன் என்பதும், நந்தகோபன் மகன் என்பதும் யசோதையின் மகன் என்பதும், யசோதையிடம் அழுது முலைப்பால் குடித்தான் என்பதும் பொருந்தாதே! தான் பெறாத பிள்ளைக்கு யசோதை எப்படி முலைப்பால் கொடுக்கமுடியும்? கண்ணனும் தன் தாயல்லாத யசோதையின் முலைப்பால் குடித்தான் என்பது எங்ஙனம் பொருந்தும்? அதிலும், இப்படிப்

பட்ட வார்த்தைகளை அறிவில்லாத சாமானியர் சொல்லுகை அன்றிக்கே, அறிவில் சிறந்த நம்போல்வாரும் இப்படிக் கூறுவதற்குக் காரணம் என்ன?" என்று **நஞ்சீயர்** *பட்டரைக் கேட்டார். அதற்கு* **பட்டர்** *"இப்படிக் கூறுவது நாம் மட்டுமேயன்று, அறிவில் தலைசிறந்த ஞானிகளும் இப்படிக் கூறியிருக்கின்றனர்.*

அயம் ஸ கத்யதே ப்ராஜ்ஞை: புராணார்த்த விசாரதை:
கோபாலோ யாதவம் வம்சம் மக்நமப்யுத்தரிஷ்யதி

(ஸ்ரீவிஷ்ணு புராணம் 5-20-41)

(ஆயனாகிய கண்ணன் மூழ்கிக் கிடந்த யாதவ வம்சத்தை மேல் நிலைக்குக் கொண்டு வரப் போகிறான் என்று, புராணங்களின் பொருளை அறிந்த பெரியோர்களால் சொல்லப்படுகிறான்) என்று அவனுடைய அவதாரத்திற்கும் முன்னே அவன் இடைக்குலத்தில் அவதரிக்கப் போவதாக அறிவிற் தலைசிறந்த ஞானியான பராசர மகரிஷியும் கூறியுள்ளார். கண்ணனைக் கண்ட மாத்திரத்தில் யசோதைக்கு முலையும் சுரந்து, இவனும் அழுது, அவள் முலைப்பாலைக் குடித்தான் என்றால் உமக்கென்ன குறை வந்து விட்டது? கொடுத்தது அவள், குடித்தது இவன்; இதில் நீர் எதற்கு ஆராய்ச்சி செய்கிறீர்" என்று நயமாக விடையளித்தார்.[1]

[252]

மதுரையிலே நிர்வஹியா நிற்கச்செய்தே ஒப்பில்லாத பெருமாள் "ध्येयो नारायणस्सदा (த்₄யேயோ நாராயணஸ்ஸத₃ா) என்கிற விஷயத்தையாகாதே மறந்து போந்தது" என்றார்.

(பெரிய திருமொழி 6-2-2)

நிகழ்டம்

திருமங்கையாழ்வார், தாம் நெடுங்காலமாகப் பிறவிப் பெருங்கடலில் உழன்று கொண்டிருக்கிறபடியையும், ஐம்புலன்களாகிற பொறிகளில் அகப்பட்டுக்கிடக்கிறபடியையும் திருவிண்ணகர் எம்பெருமானுக்கு விண்ணப்பிக்கிறார் இத்திருமொழியில் (6-2). அதில் அவர் 'மறந்தேன் உன்னை முன்னம்' (எம்பெருமானே! உன்னை நான் முதலடியிலேயே மறந்து விட்டேன்) என்கிறார். இவ்விடத்தில் ஒப்பில்லாதபெருமாள் என்பவர் கூறிய **வார்த்தை** *ஒன்று எடுத்துக் காட்டப்பெறுகிறது.*

விளக்கம்

"த்யேயோ நாராயண: ஸதா" (நாராயணன் எப்பொழுதும் நினைக்கத் தக்கவன்) என்று சாத்திரங்களில் கூறப்பட்டுள்ள எம்பெருமானை அன்றோ இவர்

1. பட்டர் இவ்வாறு அருளிச்செய்தமை மற்றோரிடத்திலும் கூறப்பட்டுள்ளது. எண் 104 பார்க்க.

மறந்து விட்டதாகக் கூறுகிறார்" என்று ஒப்பில்லாத பெருமாள் என்பவர் இவ்விடத்தை ஒரு முறை நம்பிள்ளை மதுரையில் விளக்கியபோது கூறினாராம்.

[253]

(திருநறையூர்த்தேனே) ப$_4$ட்டர் "திருநறையூர்ப் பெருக்குக்குச் சினையாறு படுகிறது கிடாய்" என்று அருளிச் செய்வர்.

(பெரிய திருமொழி 6-3-3)

நிகழ்டம்

திருவிண்ணகரில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானைக் குறித்துத் திருமங்கையாழ்வார் அருளிச் செய்த இத்திருமொழி (6-3) முடிந்தவுடனே (ஆறாம்பத்து 4ம் திருமொழி தொடங்கி 7ம்பத்து 3ம் திருமொழி வரை) நூறு பாசுரங்களால் திருநறையூரில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானை அனுபவிக்கவிருக்கிறார். ஆனால் அதற்கு முன்பே, திருவிண்ணகரைக் குறித்த இத்திருமொழியிலேயே 'திருநறையூர்த் தேனே' என்று அத்தலத்தைப் பற்றி ஒரு பாசுரத்தில் அருளிச்செய்துள்ளார் திருமங்கையாழ்வார். இதுகுறித்து பட்டர் அருளிச்செய்த **வார்த்தை**யொன்று எடுத்துக்காட்டப் பெறுகிறது.

விளக்கம்

ஆறுகளில் பெருவெள்ளம் வருவதற்கு முன்னே ஆறு சிறிது பொசிந்து காட்டும். அதுபோல மேல் நூறு பாசுரங்களாலே திருநறையூர் அனுபவம் பெருவெள்ளமாக வரப் போவதற்கு முன்னடையாளமாக 'திருநறையூர்த்தேனே' என்று இப்பாசுரத்தில் பொசிந்து காட்டுகிறது என்று பட்டர் அருளிச் செய்தார்.

[254]

(சாங்தேங்தும் இத்யாதி$_3$) "விஷயங்களை விட்டு இவ்வருகே போந்த இவர் வீதராக$_3$ர்க்கும் ஸ்ப்ருஹை பிறக்கும்படி சொல்லுவானென்?" என்று ப$_4$ட்டர்க்கு விண்ணப்பஞ் செய்ய, "முரிக்குக் கிழக்கு என்னும் போதும் இங்ஙனல்லது இராது காண் திருமங்கையாழ்வார் நாவீறு" என்றருளிச் செய்தார். கிடாம்பியம்மாள் சிறியாண்டான்பெருமாள் பணித்தானாகப் பலகாலும் சொல்லும், "நான் சொல்லுகிற வாச்யவாசகங்களே அன்றோ ப$_4$ட்டரும் வ்யவஹரிக்கிறது என்றிருக்க ஒண்ணாது. அங்குத்தைக்கு ஏற்றமுண்டு. முன்னே நின்ற தூணை நான் தூண் என்றவாறே சிராயாய்த் தோற்றும். அவர் சொன்னவாறே தளிரும் முறியுமாய்த் தோற்றும்" என்று.

(பெரிய திருமொழி 6-3-4)

நிகழ்டம்

திருமங்கையாழ்வார், "சாந்தேந்து மென்முலையார் தடந்தோள் புணரின்ப வெள்ளத்து ஆழ்ந்தேன்......... போந்தேன் நின்னடைந்தேன்" (சந்தனத்தால் அலங்கரிக்கப் பெற்ற மெல்லிய முலைகளையுடைய பெண்களின் அகன்ற தோள்களோடு நெருங்கியிருப்பதனால் உண்டான இன்ப வெள்ளத்தில் இது நாள் வரை மூழ்கினேன். இப்போது அதை விட்டு உன்னை அடைந்தேன்) என்று அருளிச் செய்கிறார். இதுபற்றி ஒரு **ஸம்வாதம்** கூறப்படுகிறது.

விளக்கம்

"சிற்றின்பத்தில் ஆசையை விட்டு எம்பெருமானை அடைந்ததாகக் கூறும் இவ்வாழ்வார் முற்றும் துறந்தவர்க்கும் கூட ஆசை கிளரும்படியாகத் தாம் விட்டவற்றை வர்ணிக்கக் காரணம் என்ன?" என்று கேட்க, அதற்கு **பட்டர்** "முரிக்குக் கிழக்கு என்று கூற வேண்டுமானாலும் திருமங்கை ஆழ்வார் அதை சிறப்பித்துத்தான் அருளிச் செய்வார். அது அவருடைய நாவன்மையை அன்றோ காட்டுகிறது!" என்றருளிச் செய்தார். (முரி = அணை. அதற்கு கிழக்கு என்பது அணைக்குக் கீழ்ப்பட்ட நீர். பயனற்றாய், கழிவடைநீர் என்று கூறப்படும். அப்படிப் பயனற்றவைகளைத் திருமங்கையாழ்வார் தம் திருவாக்காலே கூறும் போதும் இப்படி வர்ணித்தல்லது கூறமாட்டார்; அது அவருடைய நாவன்மையைக் காட்டுகிறது என்பது பட்டர் தரும் விளக்கத்தின் கருத்து.) பட்டருடைய நாவன்மையைப் பற்றிச் சிறியாண்டான்பெருமாள் கூறியதாகக் **கிடாம்பி அம்மாள்** என்பவர் பலகாலும் கூறுவராம். அது என்னவெனில் "நாம் கூறுகிற சொற்களையே அன்றோ பட்டரும் பயன்படுத்துகிறார் என்றிருக்க முடியாது. அவர் கூறுகிற சொற்களுக்குச் சிறப்பு உண்டு. கண்முன்னே நிற்கின்ற தூணை நாம் தூண் என்று கூறினால் அது ஒரு பயனற்ற மரத்துண்டு (சிராய்) போலத் தோற்றம் அளிக்கும். ஆனால் அதே சொல்லை பட்டர் கூறினாரானால், அதே தூண் தளிரும் முறியுமாய்த் தோன்றும். அது பட்டருக்கு உள்ள நாவன்மை" என்று சிறியாண்டான் பெருமாள் கூறுவராம்.[1]

[255]

(ஆப்புண்டு) வங்கிப்புரத்து நம்பி, பலகாலும் திருவாராத₄னக்ரமம் அருளிச் செய்ய வேணும் என்று போருமாய், அவஸரஹானியாலே அருளிச் செய்யாதே போந்தாராய், திருமலையிலே எழுந்தருளியிருக்கச் செய்தே ஆழ்வானுக்கும், நம்பி ஸ்ரீஹநுமத்₃தா₃ஸர்க்கும் அது தன்னை அருளிச் செய்தாராய்ச் சமைகிறவளவிலே

1. எண் 386 பார்க்க.

நம்பி தோற்ற, திருவுள்ளம் துணுக்கென்றஞ்சி, அப்போதருளிச்செய்த வார்த்தை- "என்றுமுள்ள இஸ்ஸம்ஶயம் தீரப் பெற்றோமாகிறது. நியாமகன் நியாம்யங்களிலே சிலர்க்கு அஞ்சிக் கட்டுண்டு அடியுண்டு அழுது நின்றான் என்றிருந்தால் இது கூடுமோ என்றிருந்தோம். இரண்டு இழவுக்கும் நம்முடைய ஹ்ருதயம் அஞ்சி நொந்தபடியால் அதுவும் கூடும்" என்று.

(பெரிய திருமொழி 6-7-4)

நிகழ்டம்

கண்ணபிரான் வெண்ணெய் திருடி, அகப்பட்டுக் கொண்டு, உரலோடு கட்டப்பட்டு அழுது நின்ற நிலையை "ஒளியா வெண்ணெயுண்டானென்று உரலோடு ஆய்ச்சி ஒண் கயிற்றால் விளியா ஆர்க்க ஆப்புண்டு விம்மியழுதான்" என்று திருமங்கையாழ்வார் அருளிச்செய்கிறார். பரம்பொருளான எம்பெருமான் இப்படி அழுதிருப்பனோ என்று கேள்விக்கு விடையாக ஓர் **ஐதிஹ்யம்** காட்டப்பெறுகிறது.

விளக்கம்

எம்பெருமானாருடைய சீடரான **வங்கிப்புரத்துநம்பி** என்பவர் "திருவாராதனம் செய்யும் முறைபற்றி அடியேனுக்கு விளக்கிக் கூற வேண்டும்" என்று எம்பெருமானாரைப் பலமுறை கேட்டுக் கொண்டிருந்தார். ஆயினும் நேரம் வாய்க்காமையால், அவருடைய கோரிக்கை நிறைவேறாமலே இருந்தது. ஒரு சமயம் எம்பெருமானார் திருமலையில் எழுந்தருளியிருந்தபோது **கூரத்தாழ்வானுக்கும், ஹநுமத்தாஸருக்கும்** திருவாராதனம் செய்யும் முறை பற்றி விளக்கிக் கூற நேர்ந்து விட்டது. அது முடிகிற தறுவாயில் வங்கிப்புரத்து நம்பி அங்கே வந்தார். அவரைக் கண்டவுடனே எம்பெருமானாருடைய திருவுள்ளம் துணுக்கென்று அஞ்சியது. 'இவர் பலமுறை நம்மைக் கேட்டும் இவருக்கு நாம் கூறாமலே இருந்து விட்டோம். இன்று இவ்விருவர்க்கு உபதேசம் செய்தபோதாவது இவரையும் கூட்டிக் கொண்டிருக்கலாம்; அதுவும் செய்யப் பெற்றிலோம்; இப்படி இருவகைக் குற்றங்களுக்கு ஆளானோமே?' என்று வருந்தினார். உடனே வங்கிப்புரத்து நம்பியைப் பார்த்து "எனக்கு நெடுநாள்களாக இருந்த ஐயம் ஒன்று இன்று நீங்கியது. எம்பெருமானும் மற்றவர்களுக்கு அஞ்சி, கட்டுண்டு, அடியுண்டு அழுது ஏங்கினான் என்று கூறப்படுகிறதே! எல்லோரையும் ஆளுபவனான பரம்பொருள், தன்னாலே ஆளப்படும் சிலரிடத்திலே அஞ்சினான் என்றால் இது பொருந்துமோ என்ற ஐயம் இதுநாள்வரை எனக்கிருந்தது. இப்போது நான் உம்மிடத்திலே அஞ்சி வருந்தினேனாகையால், அது நடந்திருக்கக் கூடியதே! என்று என் ஐயம் தெளியப் பெற்றேன்" என்று எம்பெருமானார் அருளிச் செய்தார்.

[256]

(பள்ளிகமலம் இத்யாதி$_8$) "ப$_4$ட்டர் அருளிச் செய்யக் குறிப்பாகக் கேட்டிருப்பதொரு பாட்டு" என்றருளிச் செய்வர். "பகுவாய் அலவன் கமலத்திடைப் பள்ளிப்பட்டது. நள்ளியானது கர்ப்ப$_4$தாரணத்தாலே க்லேஶித்திருக்க, 'அதுக்கு இனியது இடவேணும்' என்று மது$_4$வுக்காகப் போந்த அலவனானது தாமரைப் பூவிலே வந்திழியக் கொள்ள, போது அஸ்தமிக்கையாலே உடம்பைக் கொண்டு அங்கே இங்கே புரண்டு ராத்ரி அதிலே தங்கி அதில் தாதும் சுண்ணமும் உடம்பிலே நிழலிட்டுத் தோற்ற, போது விடிந்தவாறே வந்தது. இது போனபோதே தொடங்கி கதவைத் திறந்து வரவு பார்த்துக் கொண்டு நின்ற நள்ளியானது, இத்தைக் கண்டு, ராத்ரி தங்கினபடியாலும், உடம்பில் சுவடிருந்தபடியாலும், 'இது வெறுமனல்ல' என்று முகம் மாறிக் கதவை அடைத்து உள்ளே போய்ப் புக்கது." இத்தை ப$_4$ட்டர் அருளிச் செய்த அநந்தரம் பிள்ளை திருநறையூரரையர் "ஆராய்ந்து குற்றம் நிரம்பினால் பின்னையன்றோ தண்டிப்பது" என்ன, "என் செய்வோம்! கேள்வியில்லாதபடி பெண்ணரசு நாடாய்த்து!" என்றருளிச் செய்தார்.

(பெரிய திருமொழி 6-7-6)

நிகழிடம்

திருநறையூர் என்னும் திருத்தலத்தில், மேதாவி முனிவரின் பெண்ணாகப் பிறந்திருந்த திருமகளைத் திருமணம் புணர்ந்து கொள்ளவேண்டும் என்று எம்பெருமான் வந்தபோது, மேதாவி முனிவர், "எம்பெருமானே! நான் என் பெண்ணுக்கு மிகவும் உரிமை கொடுத்து வளர்த்துவிட்டேன். எனவே அவளுடைய சுதந்திரத்தன்மைக்கு எந்தவித இடையூறும் நேராதவண்ணம் இருப்பதாக உறுதியளித்தால் அவளை உனக்கு மணமுடித்துத் தருகிறேன் என்றாராம். இதைக் கேட்ட எம்பெருமான், "முனிவரே! அவளுடைய சுதந்திரத் தன்மைக்கு எந்தக் குறையும் வராமல் நான் பார்த்துக் கொள்கிறேன். நானே அவள் சொற்படியே நடந்துகொள்கிறேன்" என்று உறுதி அளித்துத் திருமகளை மணந்து கொண்டானாம். அதனால் திருநறையூர் எனும் திருத்தலத்தில் இன்றைக்கும் எம்பெருமானைவிட நாச்சியாருக்கே முதன்மை (ப்ராதான்யம்) அதிகம். வீதிப்புறப்பாடுகளின் போதும், நாச்சியார் முன்னே எழுந்தருள, அவர்பின்னே தான் எம்பெருமான் எழுந்தருள்வார். இத் திருத்தலத்திற்கு 'நாச்சியார் கோவில்' என்றே சிறப்புப் பெயரும் உண்டு.

இத்திருத்தலத்தின் வயல் வளத்தை வர்ணிக்கும் திருமங்கையாழ்வார், "பள்ளி கமலத்திடைப்பட்ட பகுவாயலவன் முகம் நோக்கி நள்ளியூடும் வயல் சூழ்ந்த நறையூர்" (தாமரையிலே அகப்பட்ட ஆண் நண்டின் முகத்தை நோக்கி

பெண் நண்டானது ஊடல் கொண்ட வயல் சூழ்ந்த திருநறையூர்) என்றருளிச் செய்துள்ளார். இத்தொடர்பில் ஓர் **ஐதிஹ்யம்** கூறப்பெறுகிறது.

விளக்கம்

இப்பாசுரத்தின் பொருளை ஒரு கதை போல **பட்டர்** விளக்கியருளக் குறிப்பாகத் தாம் கேட்டிருந்ததாக **நம்பிள்ளை** அருளிச் செய்வர். அதாவது ஓர் ஆம்பல் மலரிலே ஒரு ஆண் நண்டும் பெண் நண்டும் வாழ்ந்து வந்தன. பெண் நண்டு கருவுற்றிருக்கவே அதற்கு இனிய உணவைக் கொண்டு வந்து தரவேண்டும் என்ற ஆவலினால் ஆண் நண்டானது ஒரு தாமரை மலரை அடைந்தது. அம்மலரிலிருந்து நல்ல தேனைத் திரட்டிக் கொண்டு தன் பேடையிடம் கொடுக்க வேண்டும் என்று கருதியிருந்தது. அப்போது சூரியன் அஸ்தமித்து விட்டபடியால், தாமரைமலர் மூடிக் கொள்ள, ஆண் நண்டு உள்ளே அகப்பட்டுக் கொண்டு விட்டது. தாமரையை மலர்த்திக் கொண்டு எப்படியாவது வெளிவந்து விட வேண்டுமென்று புரண்டு புரண்டு முயன்றது. இப்படியே இரவெல்லாம் கழிந்து விட்டது. பொழுது விடிந்தவாறே தாமரை மலர, நண்டும் வெளிப்பட்டது. உடலெல்லாம் தாதும் சுண்ணமும் பூசியிருக்க, ஆண் நண்டு, தன் மனையான ஆம்பல் மலருக்கு விரைந்தது. சூரியன் உதித்தவுடன் ஆம்பல் மலர் மூடிக் கொள்வது இயற்கையன்றோ! ஆண் நண்டு வந்து சேர்ந்த சமயமும், பெண் நண்டு இருந்த ஆம்பல்மலர் மூடிக் கொள்ளும் சமயமும் ஒன்றாக இருந்தது. இதனைப் பார்த்தால், இரவெல்லாம் ஆண்நண்டின் வரவை எதிர்பார்த்துக் கதவைத் திறந்துவைத்துக் கொண்டிருந்த பெண்நண்டு, ஆண் நண்டு இரவில் வேறிடத்தில் தங்கி வந்தபடியாலும், உடம்பெல்லாம் மகரந்தம் பூசிக் கிடந்தபடியாலும், (ஆண் நண்டின் நடத்தையில் சந்தேகங் கொண்டு) ஊடலினால் கதவைச் சாத்தியது என்று கூறலாம்படி இருந்தது. இப்படி பட்டர் விளக்கியருளியபோது, **பிள்ளை திருநறையூர் அரையர்** "ஆண் நண்டைப் பார்த்த உடனே பெண் நண்டு கதவையடைத்து விட்டதாகவன்றோ தெரிகிறது! தீர ஆராய்ந்து குற்றம் உறுதிப்பட்ட பின்பன்றோ தண்டனை வழங்கவேண்டும்? விசாரணை செய்யாமலே தண்டிக்கலாமோ?" என்று கேட்டார். அதற்கு பட்டர், "உண்மை தான், ஆனால் நாம் என்ன செய்ய முடியும்! இது நாச்சியார் கோயிலாகையால் கேள்வியில்லாதபடி பெண்ணரசு நாடாயிற்றே! பெண் வைத்ததே சட்டமன்றோ! எனவேதான் பெண்நண்டு விசாரிக்காமலே தண்டித்துவிட்டது" என்றார்.

[257]

(முதலை இத்யாதி₂) "ராஜபுத்ரர்களைப் பிணைத்தால் கைக்கூட்டனுக்கும் பாலும் சோறும் இடக்கடவது காண்" என்று அருளிச் செய்தார் ப₄ட்டர்.

(பெரிய திருமொழி 6-8-3)

நிகழ்டம்

"தூவாய புள்ளூர்ந்து வந்து துறைவேழம் மூவாமை நல்கி முதலை துணித்தானை" (தூயவனான கருடனை வாகனமாகக் கொண்டு, மடுவின் கரையில் சென்று கஜேந்திரன் துன்பப்படாதபடி அருளி, முதலையைத் துணித்தவனை) என்று திருநறையூர் எம்பெருமானைப் போற்றுகின்றார் திருமங்கையாழ்வார். எம்பெருமானுக்கு ஸமர்ப்பிக்க வேண்டும் என்பதற்காகத் தாமரை மலரைப் பறிக்க வந்த கஜேந்த்ராழ்வானுடைய காலை முதலை பிடித்துக் கொள்ள, 'ஆதிமூலமே' என்று கூக்குரலிட்டான் கஜேந்த்ரன். உடனே ஓடி வந்த எம்பெருமான் முதலை மீது தன் சக்கராயுதத்தை ஏவி, முதலையைத் துணித்து கஜேந்திரனைக் காத்தான். கஜேந்த்ரனும் முதலை வாயிலிருந்து மீண்டான். அதே சமயத்தில் எம்பெருமானாலே துணிக்கப்பட்ட அந்த முதலையும் சாப விமோசனம் பெற்றது. கஜேந்திரனுக்கு விருப்பமான கைங்கர்யத்தைக் கொடுத்தது போலவே, அவனுடைய விரோதியான முதலைக்கு விருப்பமான சாபவிமோசனத்தையும் எம்பெருமான் கொடுத்ததற்குக் காரணம் என்ன என்ற என்ற கேள்விக்கு விடையாக பட்டர் அருளிச்செய்த **வார்த்தை** *எடுத்துக்காட்டப் பெறுகிறது.*

விளக்கம்

அரச குமாரனைச் சிறையில் வைப்பவர்கள், அவனுடைய கைக்கூட்டனுக்கும் (=அரசகுமாரனின் கைகளைக் கூட்டி விலங்கிட்டுக் காவல் காப்பவனுக்கும்) அரச குமாரனுக்குக் கொடுப்பது போலே பாலும் சோறும் கொடுப்பார்கள். அரசகுமாரனின் விரோதியான காவற்காரனுக்கும் பாலும் சோறுமிடுவது போல், கஜேந்திரனின் விரோதியான முதலைக்கும் எம்பெருமான் சாபவிமோசனம் நல்கினான் என்று பட்டர் விளக்கியருளினார்.

[258]

(அம்பன்ன கண்ணாள் இத்யாதி[1]) பிள்ளையுறங்காவில்லி தாஸர் "பிள்ளைக்குத் தாய் வழியாகாதே கண்" என்றருளிச் செய்வர்.

(பெரிய திருமொழி 6-8-6)

நிகழ்டம்

"அம்பன்ன கண்ணாள் அசோதை" என்று கண்ணபிரானுடைய தாயான யசோதையின் கண்ணழகை வருணிக்கிறார் திருமங்கையாழ்வார். இத்தொடர்பில் பிள்ளை உறங்காவில்லிதாஸர் **வார்த்தை** *எடுத்துக் காட்டப்பெறுகிறது.*

விளக்கம்

எண் 58ன் விளக்கம் பார்க்க.

1. பட்டர் இவ்வாறு அருளிச்செய்தமை மற்றோரிடத்திலும் கூறப்படுகிறது. எண் 739 பார்க்க.

[259]

(வண்டுவரை நட்டானை) "தான் சொப்பனக் குடியேறுவதற்கு முன்னே, தன்னைக் குடியிருத்தினவன் தன் புழக்கடையிலே ஒரு குப்பைமேனியைப் பிடுங்கினான் என்று வஜ்ரத்தைக் கொண்டு தொடருவதே!" என்று பிள்ளையமுதனார் பணிக்கும்படி.

(பெரிய திருமொழி 6-8-7)

நிகழிடம்

கண்ணபிரான், இந்திரனுக்காக நரகாசுரனுடன் போர் புரிந்து, அவனைக் கொன்று மீண்டும் இந்திரனை சுவர்க்கத்தில் குடியேற்றுவதற்காக ஸத்யபாமைப் பிராட்டியுடன் சுவர்க்கத்திற்குச் சென்றான். அப்போது அங்கே கற்பகப் பூவைச் சிலர் கொண்டுவர, அந்தப் பூவின் வாசனையால் ஈர்க்கப்பட்ட ஸத்யபாமை, தனக்கும் சிறிது பூ வேண்டும் என்று கேட்க, இந்திரனுடைய மனைவியான இந்திராணி "இது தேவர்களுக்கே உரிய பூ. மனிதர்கள் இதைச் சூட்டிக்கொள்ளக் கூடாது" என்று கர்வமாகக் கூறினாள். சத்யபாமை கண்ணபிரானுடைய தோளைப் பற்றிக்கொண்டு 'இக் கற்பகமரத்தை என்னுடைய புழக்கடையிலே நடவேண்டும்' என்று வேண்டினாள். சத்யபாமையின் விருப்பத்தை நிறைவேற்றும் பொருட்டு, கண்ணபிரான் கருடனைக் கொண்டு, அக்கற்பகமரத்தை வேரோடு பிடுங்கி விட்டான். இந்திரன் கோபங்கொண்டு கண்ணபிரானோடு போர் தொடுக்க, போரில் அவனை முறியடித்துக் கற்பக மரத்தை த்வாரகையில் ஸத்யபாமைப் பிராட்டியின் புழக்கடைத் தோட்டத்தில் நாட்டியருளினான். இச்சரிதத்தைத் திருமங்கையாழ்வார், "மட்டேறு கற்பகத்தை மாதர்க்காய் வண் துவரை நட்டானை" என்றருளிச் செய்கிறார். இதுபற்றிப் பிள்ளையமுதனார் கூறிய **வார்த்தை** *எடுத்துக் காட்டப்பெறுகிறது.*

விளக்கம்

"சற்றுமுன் நரகாசுரனிடத்தில் தன்னுடைய செல்வங்கள் அனைத்தையும் பறிகொடுத்த இந்திரனுக்காக நரகாசுரனுடன் போர் செய்து அவனை வதம் செய்து, இந்திரன் இழந்த செல்வங்களையெல்லாம் மீட்டுக் கொண்டு வந்து இந்திரனிடமே கொடுத்தான் கண்ணபிரான். மறுபடியும் இந்திரனை சுவர்க்கத்தில் குடியேற்றியவனும் அவனே! நரகாசுரனால் ஆக்ரமிக்கப்பட்டிருந்த சுவர்க்கம் சீர்பட்டு எல்லா தேவர்களும் சுவர்க்கத்தில் சொப்பன (நன்றாக)க் குடியேறுவதற்குள், தன் புழக்கடைத் தோட்டத்தில் உள்ள ஒரு அற்பச் செடியை (குப்பைமேனியை)ப் பிடுங்கினான் என்று தன்னைக் குடியேற்றிய கண்ணபிரான் மீதே வஜ்ராயுதத்தைக் கொண்டு போர் செய்தானே! என்னே இந்திரனுடைய நன்றிக்கேடு" - என்று **பிள்ளை அமுதனார்** *அருளிச்செய்தார்.*

[260]

सकृदेव (ஸக்ருதே₃வ) வுக்கு सहसैव (ஸஹஸைவ) என்று ஆழ்வான் நிர்வஹிப்பதொரு பொருளுண்டிறே. "ஒரு ஜன்மமாகப் ப்ரபத்தி பண்ணுமது சாலவும் அஸக்ருத்தாயிருந்ததோ பெறுகிற பேற்றைப் பார்த்தால்?" என்றருளிச் செய்தார் எம்பார்.

(பெரிய திருமொழி 6-9 ப்ரவேசம்)

நிகழிடம்

"பெடையடர்த்த" என்று தொடங்கும் இத்திருமொழியில் திருமங்கை ஆழ்வார் தம்முடைய நெஞ்சைக் குறித்து 'எம்பெருமான் திருவடிகளையே சரணமாக அடைவாய்" என்று அருளிச்செய்கிறார். இதற்கு முன்னும், 'வாணிலா முறுவல்' (1-6), 'தாயே தந்தை' (1-9), 'ஏழை ஏதலன்' (5-8) என்று தொடங்கும் திருமொழிகளில் இவர் பலமுறை சரணாகதி செய்துள்ளபடியால் இப்போது மீண்டும் எதற்காக ஒரு முறை சரணாகதி செய்கிறார்? "ஸக்ருதேவ ப்ரபந்நாய தவாஸ்மீதி சயாசதே, அபயம் ஸர்வபூதேப்யோ ததாமி ஏதத் வ்ரதம் மம" (நான் உன்னுடைய அடியவனாகக் கடவேன் என்று யாசித்து **ஒரே ஒரு முறை** *சரணாகதி செய்பவனை, நான் எல்லா உயிர்களிடமிருந்தும் (அவனைக் காப்பதற்கு) அடைக்கலம் கொடுப்பேன்; இது என்னுடைய உறுதி) என்று எம்பெருமானே கூறியிருக்கும் போது ஒருமுறைக்கு மேல் பலமுறை சரணாகதி செய்யலாமோ? என்ற கேள்வி எழுகின்றது. இதற்கு பதிலாகக் கூரத்தாழ்வானுடையவும் எம்பாருடையவும்* **நிர்வாஹங்கள்** *எடுத்துக் காட்டப்படுகின்றன.*

விளக்கம்

'ஸக்ருதேவ' - என்பதற்கு ஒரு முறை என்று பொருள் கொள்வர். ஆனால் **கூரத்தாழ்வான்** *'ஸக்ருதேவ' என்பதற்கு 'ஸஹஸைவ' (உடனே) என்று ஒரு பொருள் கூறுவராம். அதாவது, எப்போது சரணாகதி செய்ய வேண்டும் என்று தோன்றுகிறதோ அப்போதே தாமதமில்லாமல் சரணாகதி செய்பவனை என்றும் பொருள் கொள்ளலாம் என்பது அவர் கருத்து. "சரணாகதி செய்தபிறகு இவன் அடையும் பேற்றின் பெருமையைப் பார்த்தால், ஒரு பிறவி முழுதும் சரணாகதி செய்தாலும் அது ஒரு முறை செய்ததற்குச் சமமே" என்பராம்* **எம்பார்.**

[261]

(நங்கள் வினைகள்) எண்ணாயிரத்துத் திருவாய்க்குலத்தாழ்வான் நஞ்சீயரை "ப்ரபத்தியாகிறது பு₃த்₃தி₄பூர்வம் பண்ணின பாபத்திற்கும் பரிஹாரமாகவற்றோ? ப்ராமாதி₃கத்துக்கேயோ?" என்ன, "அதினுடைய ப்ரப₄ாவத்தைப் பார்த்தால் பு₃த்₃தி₄

பூர்வத்துக்கும் பரிஹாரமாகவற்று. ஜ்ஞானம் நடையாடினவிடத்தில் அநுதாபமின்றிக்கே இராது. ஆகையாலே இவன் பக்கல் ப்ராமாதி$_3$கமல்லது கூடாது. பூர்வாக$_4$த்தைப் போக்குகிற இது பு$_3$த்$_3$தி$_4$ பூர்வத்துக்குப் பரிஹாரமாகாது என்னவொண்ணாதே - அதில் பு$_3$த்$_3$தி$_4$ பூர்வமொழிய இல்லாமையாலே”

(பெரிய திருமொழி 6-10-9)

நிகழ்ட்டம்

“நங்கள் வினைகள் தவிர உரைமின் நமோ நாராயணமே” (நம்முடைய பாவங்கள் தவிர்வதற்கு நமோ நாராயணாய என்று கூறுங்கள்) என்று உபதேசிக்கிறார் திருமங்கையாழ்வார். எம்பெருமானிடத்தில் செய்யப்படும் சரணாகதியானது எல்லாப் பாவங்களையும் போக்குமோ என்ற ஐயத்திற்கு விடையாக ஒரு **ஸம்வாதம்** *காட்டப்பெறுகிறது.*

விளக்கம்

எம்பெருமானுடைய திருவடிகளைச் சரணம் பற்றிவனர்களுடைய பாவங்களெல்லாம் அழிந்து போய் விடும்; இனிமேல் செய்யக் கூடிய பாவங்கள் ஒட்டாது என்கிறது சாத்திரம். இதுபற்றி எண்ணாயிரம் எனும் ஊரில் வாழ்ந்து வந்தவரான **திருவாய்க்குலத்தாழ்வான்** *என்பவர் நஞ்சீயரை கேட்டார்: “ஒருவன் எம்பெருமானிடத்தில் சரணாகதி செய்த பிறகு செய்யக் கூடிய பாவங்களில், தன் மனமறிந்து செய்யக் கூடிய (புத்தி பூர்வமான) பாவங்களையும் சரணாகதி போக்குமோ? அல்லது தன்னை அறியாமல் செய்யக் கூடிய (ப்ராமாதிகமான) பாவங்களை மட்டும் தான் போக்குமோ?” என்று. இதற்கு* **நஞ்சீயர்** *“சரணாகதியின் பெருமையைப் பார்த்தால், அது எல்லாப் பாவங்களையும் போக்கக் கூடியது தான். ஆனால் ஒருவன் மெய்யறிவு பிறந்து எம்பெருமானுடைய திருவடிகளில் சரணாகதி செய்தபின், அந்த மெய்யறிவினாலே, தன் மனமறிந்து பாவங்களைச் செய்ய மாட்டான். எனவே தன்னையறியாமல் செய்யக் கூடிய பாவங்களுக்கே இங்கு (உத்தராகத்தில்) இடமுண்டு. ஆனால், சரணாகதி செய்வதற்கு முன்னால் அவன் செய்த பாவங்கள் அனைத்தையும் சரணாகதி அழித்துவிடும் என்று கூறப்பட்டுள்ளதை நோக்க வேண்டும். அவன் மெய்யறிவு பிறப்பதற்கு முன்னே பல பாவங்களைத் தன் மனமறிந்துதானே செய்திருப்பான்! அவற்றை, சரணாகதி போக்கி விடுகின்றதன்றோ! எனவே முன்பு செய்த பாவங்களில் (பூர்வாகத்தில்) மனமறிந்து செய்த பாவங்களையும் சரணாகதியானது போக்குகின்றபடியாலே, சரணாகதிக்குப் பின்பு மனமறிந்து செய்த பாவங்களையும் சரணாகதி போக்கக் கூடியதுதான் என்று உணரலாம் (சரணாகதிக்கு இப்பெருமை இருந்தாலும், மெய்யறிவு பிறந்தவன் சரணாகதிக்குப் பிறகு மனமறிந்து பாவங்களைச் செய்ய மாட்டான்; செய்யவும் கூடாது.)” என்று விடையளித்தார். (சரணாகதி என்ற சொல்லினால் குறிக்கப்பெறுபவன்*

எம்பெருமானேயாவான். எனவே அடியவர்கள் தன்னை அடைவதற்கு முன்னர் செய்த பாவங்களை மறந்து விடுகிறான். அடைந்தபிறகு கவனக் குறைவினால் செய்தவற்றைக் காணாக்கண்ணிட்டிருப்பான் என்பது கருத்து.)

[262]

"கறவா மடநாகானது தன் கன்றை உள்ளினாப் போலே" என்று சொல்ல நினைத்து, அர்த்த$_2$த்துக்குச் சேராமையாலே மிடிபட்டார் பிள்ளையமுதனார். அதுதான் அபக்ஷக$_4$ர்மமாமிறே. ஆகையாலே ப$_4$ட்டர் அருளிச்செய்யும்படி: "கறவா மடநாகை தன் கன்று உள்ளினாப் போலே" என்று.

(பெரிய திருமொழி 7-1-7)

நிகழிடம்

"கறவா மடநாகு தன் கன்று உள்ளினாற் போல், மறவாது அடியேன் உன்னையே அழைக்கின்றேன்" என்று திருமங்கையாழ்வார் அருளிச் செய்கிறார். இப்பாசுரத்திற்குப் பொருத்தமான **நிர்வாஹம்** பட்டர் அருளிச்செய்தமை காட்டப்பெறுகிறது.

விளக்கம்

"கறவா மடநாகு = கறவாத இளம் பசுவானது, தன் கன்று உள்ளினாற் போல் = தன் கன்றை நினைப்பது போல் (எம்பெருமானே நானும் உன்னையே நினைக்கின்றேன் என்கிறார் ஆழ்வார்) என்று இதற்குப் பொருள் கூற நினைத்த **பிள்ளையமுதனார்**, தாம் கூறிய பொருள் பொருந்தவில்லை என்று புரிந்து கொண்டு சரியான பொருளைக் கூறமுடியாமல் வருந்தினார். ஏனெனில் நாகானது தன் கன்றை நினைப்பது போல என்றால் நாகு (தாய்ப்பசு) என்று ஆழ்வாரையும் அதன் கன்று என்று எம்பெருமானையும் கொள்ள வேண்டி வரும். உண்மையில் தாய்ப்பசுவின் தன்மை நறையூர் நம்பியான எம்பெருமானுக்கும், அவனால் காக்கப்படுகின்ற கன்றின் தன்மை ஆழ்வாருக்குமே உள்ளது. எனவே **பட்டர்** வேறு வகையாக விளக்கமளித்தார். இங்கு நாகு என்ற சொல் இரண்டாம் வேற்றுமைப் பொருளுடையது. 'கறவா மடநாகை, தன் கன்று உள்ளினாற் போல்' என்று பட்டர் விளக்கம் அளித்தார். அதாவது 'கறவாத தாய்ப்பசுவை அதன் கன்று நினைத்துக் கதறுவது போல்' என்று பட்டர் பொருள் கூறினார். பட்டருடைய விளக்கத்தில், பால் சுரவாத தாய்ப்பசுவின் ஸ்தானத்தில் அருள் புரியாத எம்பெருமானும், அத்தாய்ப் பசுவையே நினைத்துக் கதறுகிற கன்றின் நிலையில் ஆழ்வாரும் கொள்ளப்படுவதால் பொருள் நன்கு பொருந்திவிடுகிறது.

1 பிள்ளைலோகாசார்யர் அருளிச்செய்த பரந்தபடியிலும் (பக்.202) நஞ்சீயர் இவ்வாறு அருளிச்செய்தமை குறிப்பிடப்பெற்றுள்ளது.

[263]

பெரிய நம்பி ஜந்மவ்ருத்தாதிகளால் குறைய நின்றார் ஒருவர் திருநாட்டுக்கு நடந்தாராய், அவரை அநுகூமநம் பண்ணி, தீர்த்தமாடி வந்தெழுந்தருளியிருக்க, இத்தை எம்பெருமானார் கேட்டருளி, பெரியநம்பிபாடே வந்து "மர்யாதைகிடக்கக் கார்யம் செய்ய வேண்டாவோ?" என்ன, "பயிலுஞ்சுடரொளி, நெடுமாற்கடிமை கடலோசையோபாதியோ? சிறிது குறையவாகிலும் ஆசாரிக்க வேண்டாவோ?" என்று அருளிச் செய்தார்.

(பெரிய திருமொழி 7-4 ப்ரவேசம்)

நிகழ்டம்

"கண்சோர வெங்குருதி" என்று தொடங்கும் பதிகத்தில் திருமங்கை ஆழ்வார் எம்பெருமானுடைய அடியவர்களுடைய பெருமையை அருளிச் செய்கிறார். இத்தொடர்பில் ஓர் **ஐதிஹ்யம்** கூறப்பெறுகிறது.

விளக்கம்

ஆளவந்தாருடைய சீடரான **மாறநேர்நம்பி** என்பவர் தாழ்குலத்தில் பிறந்தவர். அவர் தம்முடைய மரணத்தறுவாயில், ஆளவந்தாருடைய மற்றொரு சீடரான பெரியநம்பிகளைப் பார்த்து "ஆளவந்தாராலே அபிமானிக்கப் பட்ட அடியேனுடைய உடலை, இவ்வுலக உறவினர்கள் தொடுவதை நான் விரும்பவில்லை. புனிதமான அக்நியில் மந்திரங்களை உச்சரித்து இடவேண்டிய புரோடாசம் என்கிற பொருளை நாய் தின்பதற்கு விட்டு விடுவது போலச் செய்து விடக்கூடாது" என்று வேண்டிக் கேட்டு கொண்டு இறைவனடி சேர்ந்து விட்டார். **பெரியநம்பி** அவருடைய விருப்பப்படியே அவருக்குச் செய்ய வேண்டிய ஈமக்கடன்களை (மிக உயர்ந்தவர்களுக்குச் செய்யும் முறையாகிய ப்ரம்மமேத ஸம்ஸ்காரத்தால்) தாமே செய்து முடித்து விட்டு நீராடி எழுந்தருளியிருந்தார். பெரியநம்பிகள் இப்படிச் செய்ததன் கருத்தை **எம்பெருமானார்** உணர்ந்திருந்தாலும், அது அனைவரும் அறியும்படி பெரிய நம்பிகள் திருவாக்காலேயே வரவேண்டும் என்பதற்காகப் பெரியநம்பியிடம் சென்று "கட்டுப்பாடு என்று ஒன்றிருக்க அதை மீறலாமோ? தாழ்குலத்தவருக்கும் தேவரீரே ஈமக்கடன்கள் செய்ய வேண்டுமோ?" என்று கேட்டார். அதற்குப் பெரிய நம்பி "நாமே செய்ய வேண்டிய செயலைப் பிறரை விட்டுச் செய்யச் சொல்லலாமோ? ஸந்த்யாவந்தனம் செய்வதற்கு ஆள் வைத்துக் கொள்ள முடியுமோ? உயர்ந்த பாகவதரான மாறநேர்நம்பியைத் தாழ்குலத்தவர் என்று கருதலாமோ? இராமபிரான் ஒரு பறவையான ஜடாயுவுக்கு ஈமக்கடன் செய்ததை மறந்தீரோ? நான் இராமனை விட உயர்ந்தவனோ! இவர் தான் ஜடாயுவை விடத் தாழ்ந்தவரோ? நம்மாழ்வார் அருளிச் செய்த "பயிலும் சுடரொளி",

"நெடுமாற்கடிமை" ஆகிய திருவாய்மொழிகளில் அடியவர்க்கு ஆட்பட்டிருத்தலை வற்புறுத்தியருளிச் செய்கின்றாரே! அவையெல்லாம் பொருளற்ற கடலோசை போன்றதோ? ஆழ்வார் அருளிச் செய்தவற்றை நாம் சிறிதேனும் பின்பற்ற வேண்டாமோ?" என்றருளிச் செய்தார்!

[264]

பிள்ளை அழகியமணவாள அரையர் கரையே போகாநிற்க, "உள்ளே மாமதலைப் பிரானைத் திருவடிதொழுது போனாலோ" என்ன, "ஆர்தான் திருமங்கையாழ்வாருடைய பசைந்த வளையத்திலே கால் வைக்க வல்லார்?" என்றருளிச் செய்தார்.

(பெரிய திருமொழி 7-4 ப்ரவேசம்)

நிகழ்டம்

"கண்சோர வெங்குருதி" என்று தொடங்கும் பதிகத்தில் திருமங்கை ஆழ்வார் எம்பெருமானுடைய அடியவர்களுடைய பெருமையை அருளிச் செய்கிறார். இத்தொடர்பில் ஓர் **ஐதிஹ்யம்** *கூறப்பெறுகிறது.*

விளக்கம்

பிள்ளை அழகிய மணவாள அரையர் *என்பவர் ஏதோவொரு காரியமாகத் திருச்சேறை எனும் திருத்தலத்தின் வழியாக எழுந்தருள நேர்ந்தது. அப்போது அவர், ஊரினுள் புகாமல், வயல் வழியே சென்று கொண்டிருந்தார். அங்கே அவரைக் கண்ட ஒருவர் "ஊருக்குள்ளே எழுந்தருளி அங்கு கோயில் கொண்டிருக்கும் ஸாரநாதப் பெருமாளைச் சேவித்து விட்டுச் செல்லலாமே!" என்றார். அதற்கு அரையர் 'தண் சேறை எம்பெருமான் தாள் தொழுவார் காண்மின் என் தலை மேலாரே' என்றன்றோ திருமங்கையாழ்வார் அருளிச் செய்துள்ளார்! அதன்படி அப்பெருமானைச் சேவிப்பவர் திருமங்கையாழ்வாரது திருமுடி மீது ஏற வேண்டியதாகுமே! அது நமக்குப் பெருத்த அபசாரமன்றோ! திருமங்கையாழ்வாருடைய திருமுடிமீது ஏறுகின்ற தைரியம் யாருக்கு உண்டு? எனவே தான் ஊரினுள் புகாமலே போய் விடுகிறேன்" என்று விடையளித்தார்.*

1. எண் 233ல் இவ்வைதிஹ்யம் மிகவும் சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளது. ஸ்ரீவசனபூஷணம் 234ம் சூத்திரத்தில் "மாறநேர் நம்பி விஷயமாகப் பெரியநம்பி உடையவர்க்கு அருளிச்செய்த வார்த்தையை ஸ்மரிப்பது" என்று அருளிச்செய்யப்பட்டுள்ளதையும், அதற்கு மணவாள மாமுனிகள் அருளிச்செய்துள்ள வியாக்கியானத்தையும் காண்க. "மூவரில் முற்பட்டவர் புரோடாசமாகச் செய்த புத்ரக்ருத்யம் என்று ஆசார்ய ஹ்ருதயத்தில் (சூ.84) அருளிச்செய்ப் பெற்றுள்ளதும் காண்க.

[265]

(தேரில் பாகனாயூர்ந்த) ஆழ்வானுக்கு மூலம் வாசித்துப் போந்தார் சிலரிலே ஒருவருக்கு க்ரந்தமும் பார்க்கவேண்டி, ஆழ்வானோடே திருமுடிக்குறையிலே யிருந்து பாராநிற்கச் செய்தே, அரையன் வந்தானாய், அவ்வளவிலே, அவர் கையில் க்ரந்தத்தை ஆழ்வான் தான் வாங்கிப் படித்துக் கொண்டிருந்தானாம்.

(பெரிய திருமொழி 7-5-2)

நிகழிடம்

"பாரித்து எழுந்த படைமன்னர் தம்மை மாளப் பாரதத்துத் தேரில் பாகனாய் ஊர்ந்த தேவதேவன்" (வெற்றிபெறவேண்டும் என்று நினைத்து வந்த அரசர்கள் மாளும்படியாக பாரதப் போரிலே பார்த்தனுக்கு சாரதியாய் இருந்து தேரோட்டின தேவதேவன்) என்று எம்பெருமானைப் பற்றி அருளிச் செய்கிறார் திருமங்கையாழ்வார். இப்படி எம்பெருமான் தன்னைத் தாழவிட்டுக் கொண்டு, அர்ஜுனுக்குக் கீழே சாரதியாக இருந்தமைக்கு உதாரணமாக ஓர் **ஐதிஹ்யம்** எடுத்துக் காட்டப்படுகிறது.

விளக்கம்

கூரத்தாழ்வான் காலக்ஷேபம் ஸாதிக்கும் ஸமயங்களில் மூல நூல் படித்து வந்த ஒருவருக்கு, ஒரு நூலுக்கு ஆழ்வானிடம் விளக்கம் கேட்க வேண்டும் என்ற எண்ணம் உண்டாயிற்று. ஆயினும் அவர் தம்மை மதிப்புடையவராக நினைத்துக் கொண்டிருந்தபடியால், தாம் ஆழ்வானிடம் படிப்பது யாருக்கும் தெரியக் கூடாது என்று நினைத்தார். இதை அறிந்த ஆழ்வான், அவருடைய விருப்பப்படியே, ஒருவருக்கும் தெரியாமல் அவருக்கு காலக்ஷேபம் ஸாதிக்க இசைந்தார். திருவரங்கம் பெரிய கோயிலில், எம்பெருமானுடைய திருமுடிப் பக்கத்தில் உள்ள ஓரிடத்தில் (உபயகாவேரீமத்ய ப்ரதேசத்தில்) ஒருவரும் நடையாடாத ஓர் ஏகாந்தமான இடத்தில் அமர்ந்து அவருக்குப் பாடம் நடத்திக்கொண்டிருந்தார். ஆனால் அப்போது தற்செயலாக அங்கு அரையன் வந்துவிடவே, கூரத்தாழ்வான், தம்மிடத்தில் பாடம் கேட்பவர் கையிலிருந்து புத்தகத்தைச் சடக்கெனத் தாம் வாங்கிக் கொண்டு படிக்கத் தொடங்கி, தாம் அவரிடத்தில் படிப்பது போன்ற ஒரு தோற்றத்தை உண்டாக்கிவிட்டார். அதாவது தம்மை மாணாக்கராகவும், அவரை ஆசிரியராகவும் மற்றவர்கள் நினைக்கும்படி செய்துவிட்டார். (ஆழ்வானிடம் தாம் கற்பது யாருக்கும் தெரியக் கூடாது என்று நினைத்தவருடைய எண்ணம் பழுது படாமைக்காக ஆழ்வான் தாம் அவரிடம் கற்பது போல் பிறர் நினைக்கும்படி செய்தார். கண்ணபிரான் பார்த்தனுக்குச் சாரதியாகத் தன்னைத் தாழவிட்டதுபோல ஆழ்வானும் தம்மைத் தாழவிட்டபடியால் அவருடைய ஆத்மகுணம் நன்கு வெளிப்படுகிறது.)

[266]

(மன்னி மன்னவராய்) இந்த்$_3$ரியவஶ்யதையை அநுஸந்தி$_4$த்து அஞ்சினவர், இத்தை ப$_2$லமாகச் சொல்லுவானென்? என்னில், "இவர்க்கு அந்த ஐஶ்வர்யம் ப$_4$ாக$_3$வதஶேஷமாக்குகைக்கு உடலாகையாலே, அதுவும் புருஷார்த்த$_2$த்திலே புக்குப் போயிற்றுக்காண்" என்று ப$_4$ட்டர் அருளிச் செய்வர்.

(பெரிய திருமொழி 7-7-10)

நிகழிடம்

தாம் அருளிச்செய்த பதிகத்தைக் கற்பவர்கள் 'மன்னி மன்னவராய் உலகாண்டு வானாடுமுன்னுவரே' என்று திருமங்கையாழ்வார் பயன் கூறுகிறார். இத்தொடர்பில் ஒரு **ஸம்வாதம்** *காட்டப்பெறுகிறது.*

விளக்கம்

எண் 211ன் விளக்கம் பார்க்க.

[267]

"திருமங்கையாழ்வார்தாம் ப$_4$ாக$_3$வதஶேஷமாக்குகைக்கு உடலாயிருக்கையாலே ஐஶ்வர்யத்தையும் ஆதரித்தருளினார்" என்றருளிச் செய்தார்.

(பெரிய திருமொழி 7-8-10)

நிகழிடம்

தாம் அருளிச்செய்த பதிகத்தைக் கற்பவர்கள் 'ஒலிகடல் சூழ் உலகாளும் உம்பர் தாமே' என்று திருமங்கையாழ்வார் பயன் கூறுகிறார். இத்தொடர்பில் ஒரு **ஸம்வாதம்** *காட்டப்பெறுகிறது.*

விளக்கம்

எண் 211ன் விளக்கம் பார்க்க.

[268]

ராஜேந்த்ரசோழனிலே ஒரு ப்$_3$ராஹ்மணன்மகன் பு$_3$த்$_3$த$_4$ரோடே ஸம்ப்ரத$_3$ாய முண்டாய், பூணூலையும் குடுமியையும் அறுத்துப் பொகட்டான். கூரத்தாழ்வான் அங்கே நடந்தவளவிலே ஶிக$_2$ாயஜ்ஞோபவீதங்களை த$_4$ரித்துக் கொண்டு வந்து புகுந்தான். பிதாவானவன் "கூரத்தாழ்வானை ஸந்தி$_4$த்தாயோ?" என்று கேட்டான், புறம்புள்ளார், "நீ இது அறிந்தபடி எங்ஙனே?" என்று கேட்க, "ஆழ்வான் ஸந்நிதி$_4$யில் தமோபி$_4$பூ$_4$தரும் ஸத்வஸ்த$_2$ராவர்கள் காண்" என்றான்.

(பெரிய திருமொழி 8-1 ப்ரவேசம்)

நிகழிடம்

எம்பெருமானோடு கலந்து பரிமாற வேண்டும் என்ற ஆசையானது அப்பொழுதே நிறைவேறாதபடியினால் திருமங்கையாழ்வார் ஆண்தன்மை நீங்கி, ஒரு பிராட்டி நிலையை அடைந்து அவனைப் பற்றியே வாய்வெருவுகின்றார். இதைக் கண்ட அப்பிராட்டியின் தாயார், "இவள் இப்படி வாய்வெருவுகின்றபடியால், இவள் திருக்கண்ணபுரத்து எம்பெருமானைத் தான் கண்டிருக்க வேண்டும்" என்று கூறுவதாக அமைகிறது "சிலையிலங்கு பொன்னாழி" என்று தொடங்கும் திருமொழி. இப்படித் தாயானவள் காரணத்தை ஊகித்து அறிந்ததற்கு உதாரணமாக ஓர் **ஐதிஹ்யம்** *எடுத்துக் காட்டப்படுகிறது.*

விளக்கம்

ராஜேந்த்ரசோழபுரத்தில் வாழ்ந்து வந்த அந்தணன் ஒருவனுடைய மகனுக்கு பௌத்தமதத்தைச் சேர்ந்தவர்களோடு தொடர்பு ஏற்பட்டது. அதனால் அவனும், பௌத்தர்களைப் போலவே தலையை மொட்டை அடித்துக் கொண்டு, பூணூலையும் அறுத்து விட்டான். ஒரு சமயம் **கூரத்தாழ்வான்** *அவ்வூருக்கு எழுந்தருளியபோது அவருடைய திருக்கண் அவன் மீதுபட, அவன் மனம் திருந்தி மீண்டும் பூணூலணிந்து, குடுமியும் வைத்துக் கொண்டு தன் இல்லம் திரும்பினான். திடீரென்று அவனை இந்த வேஷத்தில் கண்ட அவனுடைய தந்தை, "ஏனிந்த திடீர் மாற்றம்? ஒருவேளை கூரத்தாழ்வானை ஸேவித்தாயோ?" என்று கேட்டான். அருகிலிருந்தவர்கள் "உன் மகன் கூரத்தாழ்வானை ஸேவித்துத்தான் மனமாற்றம் பெற்றான் என்பதை நீ எப்படி அறிந்து கொண்டாய்?" என்று கேட்க, அதற்கு அவன் "எப்படிப்பட்ட தீயவர்களும், கூரத்தாழ்வானுடைய திருக்கண் நோக்கம் பட்டால் மனம் திருந்தி நல்லவர்கள் ஆகிவிடுவார்கள் கண்டீர்" என்று பதிலளித்தான்.*

[269]

நிலாத்துக்குறிப4க4வர், ப4ட்டரை, "ஸ்ரீவைகுண்ட2த்திலே சதுர்பு4ஜனாயிருக்கைக்கு ப்ரமாணம் என்?" என்று கேட்க, அவர் சொல்லி வாய் மாறுவதற்கு முன்பே, "तमस: परमो धाता शङ्खचक्रगदाधर: (தமஸ: பரமோதா4தா ஶங்க2சக்ர க3தா3த4ர:) என்னா நின்றதே!" என்ன, போக்கடி காணாமையாலே கோபத்தாலே கண் சிவக்க, "ப்ரமாண க3திகள் இவையாயிருந்து; பொறுக்குமத்தனையிறே" என்றருளிச் செய்தார்.

(பெரிய திருமொழி 8-1-1)

நிகழிடம்

"மலையிலங்கு தோள் நான்கே மற்றவனுக்கு" (எம்பெருமானுக்கு நான்கு தோள்களே) என்று தன் பெண்ணான பரகால நாயகி கூறுவதாக அவளது

திருத்தாயார் கூறுகிறாள். இத்தொடர்பில் ஓர் **ஐதிஹ்யம்** *எடுத்துக்காட்டப் பெறுகிறது.*

விளக்கம்

நிலாத்துக்குறிபகவர் என்பவர் ஒருமுறை "ஸ்ரீவைகுண்டத்தில் பகவான் நான்கு திருத்தோள்களுடன் எழுந்தருளியிருக்கிறான் என்பதற்கு ஆதாரம் என்ன?" என்று பட்டரைக் கேட்டார். அவர் கேள்வி கேட்டு வாய் மூடுவதற்கு முன்பே பட்டர் "தமஸ: பரமோதாதா சங்கசக்ர கதாதர:" (தமஸ்ஸுக்கு அப்பாற்பட்டதான ஸ்ரீவைகுண்டத்திலே எழுந்தருளியிருப்பவர், சங்கசக்ர கதைகளை தரித்தவர்) (ஸ்ரீராமாயணம் யுத்தகாண்டம் 114-15) என்று பிரமாணம் இருக்கிறதே என்று கூற, இதை ஒப்புக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லாமல் போகவே நிலாத்துக்குறி பகவருக்கு கோபத்தாலே கண் சிவந்து விட்டது.[1] (பட்டரைக் கேள்வி கேட்டு அவர் பதில் சொல்ல முடியாமல் திணறி நிற்பதைக் காணவேண்டும் என்று ஆசைப்பட்ட பகவருக்கு, அவர் கேள்வி கேட்டு வாய்மூடுவதற்கு முன்னே இப்படி பதில் கூறவே கண்சிவந்துவிட்டபோலும்!) உடனே பட்டர், "பிரமாணங்களின் போக்கு இப்படி இருக்கும்போது கோபிப்பதில் பயனில்லை; பொறுத்தருள வேணும்" என்றார்.[2]

[270]

பிள்ளை திருக்கண்ணபுரத்தரையர், விரோதி$_4$வர்க்க$_3$ம் கூடிக் கொண்டு அறமிகைத்தவாறே "செருவரை முன் ஆசறுத்த சிலையன்றோ கைத்தலத்தது" என்று விண்ணப்பம் செய்ய, "ஒரு க்ஷணத்திலே முடிக்கிறோம்" என்றருளிச் செய்தார்.

(பெரிய திருமொழி 8-1-2)

நிகழ்டம்

"செருவரை முன் ஆசறுத்த சிலையன்றோ கைத்தலத்தது என்கின்றாளால்" (போர் செய்ய வந்த எதிரிகளை முன்பு அழித்த வில்லன்றே உமது திருக்கரத்தில் உள்ளது) என்று பரகால நாயகி திருக்கண்ணபுரத்து எம்பெருமானைக் குறித்துக் கூறுகிறாள் என்று அவளுடைய தாயார் கூறுவதாகப் பாசுரம் அமைந்துள்ளது.

1 எண் 534ல் 'பரமபதத்தில் எம்பெருமான் இரண்டு திருக்கைகளோடு எழுந்தருளியிருப்பான் என்றே ஏகாயநர் கருதியிருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே நிலாத்துக்குறிபகவர் என்பவர் ஏகாயந மதத்தை (மாத்வமதத்தை?) சேர்ந்தவராக இருக்கலாம். (நிலாத்துக்குறி பகவர் என்ற அவருடைய பெயரும் இதை உறுதி செய்கிறது.) எனவே அவருடைய கருத்துக்கு எதிரான பிரமாணத்தை பட்டர் கூறவே, கோபத்தினால் அவருக்குக் கண் சிவந்தது.

2 இவ்வைதிஹ்யம் மற்றும் மூன்று இடங்களில் உள்ளது. எண் 315, 535, 712 பார்க்க.

விரோதிகளை அழிப்பதற்காகவன்றோ வில்லை ஏந்தியிருப்பது என்று பரகாலநாயகி கூறுவதாகப் பொருளுரைத்த உரையாசிரியர், திருக்கண்ணபுரத்து எம்பெருமான் விரோதிகளை அழித்தமை பற்றி ஓர் **ஐதிஹ்யம்** காட்டுகிறார்.

விளக்கம்

முன்னொரு காலத்தில் திருக்கண்ணபுரத்தில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானுடைய திருக்கோயிலைச் சுற்றி விரோதிகள் பலர் சூழ்ந்து கொண்டு விட, **பிள்ளை திருக்கண்ணபுரத்தரையர்** என்பவர், "செருவரை முன் ஆசறுத்த சிலையன்றோ கைத்தலத்தது!" (போர்புரிய வந்த எதிரிகளை முன்பு அழித்த வில் அன்றோ தேவரீர் திருக்கையில் உள்ளது!) என்ற திருமங்கையாழ்வார் பாசுரத்தை எம்பெருமான் திருமுன்பே இசைக்க, "இதோ ஒரு நொடியிலே அவ்வெதிரிகளை முடித்து விடுகிறோம்" என்று எம்பெருமான் அருளிச்செய்தானாம்.

[271]

"பிள்ளையமுதனார் இத்திருமொழிக்கு ப்ரவேஶம் சொல்லாநிற்க, 'ராஜாக்கள் அந்தப்புரக்கட்டிலே தெருவிலே பள்ளியந்துலாத்திலே ஏறி உலாவா நிற்பர்கள் காண்!' என்றாப்போலே அனேகம் வாக்ய ஶில்பங்களைப் பண்ணினார். அப்போது பா₃ல்யத்திலே அவ்வடைவுகள் பு₃த்₃தி₄பண்ணப் பெற்றிலோம். அவற்றுக்கு இதில் பற்றாசு ஏதென்று விசாரித்தோம். இதுவாகாதேயென்று தெளிந்தோங்காணும்" என்று இவ்வளவிலே பிள்ளையருளிச் செய்தார்.

(பெரிய திருமொழி 8-1-8)

நிகழ்டம்

'சிலையிலங்கு' என்று தொடங்கும் இப்பதிகத்தின் ப்ரவேசத்தைப் பிள்ளை அமுதனார் விளக்கியருளியபோது கூறிய விளக்கங்கள் சில, தாம் சிறுவயதினராக இருந்தமையால் அப்போது புரிந்து கொள்ள முடியவில்லை என்றும் வயது முதிர்ந்த பின்பே தெரிந்து கொண்டதாகவும் நம்பிள்ளை அருளிச் செய்த **வார்த்தை** எடுத்துக் காட்டப்பெறுகிறது.

விளக்கம்

"இத்திருமொழியின் பிரவேசத்தை விளக்கியபோது பிள்ளை அமுதனார், 'அரசர்கள் அந்தப்புரத்திலுள்ள மங்கையர்களின் உள்ளங்களைக் கவர்வதற்காகப் பல்லக்கில் ஏறி அந்தப்புரம் உள்ள தெருவின் வழியே போவதும் வருவதுமாய் இருப்பார்கள்' என்று கூறி மேலும் அவ்வரசர்களுடைய செயல்களைப் பற்பல வார்த்தை வர்ணனைகளால் விளக்கி அருளினார். அப்போது நான் சிறுவயதினன் ஆகையால் அவற்றை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. இத்திருமொழியில் எந்தப் பாசுரத்தைக் கருத்தில் கொண்டு அமுதனார் அங்ஙனம்

விளக்கியருளினார் என்பதை நான் விசாரித்துக் கொண்டிருந்தேன். ஆனால் அவர் கூறியவற்றின் கருத்தைப் பிறகுதான் தெரிந்துக் கொண்டேன். எம்பெருமானைப் பற்றியே வாய்வெருவுகின்ற பரகாலநாயகி (பெண் தன்மையிலுள்ள திருமங்கையாழ்வார்) இப்பாசுரத்தில் "கொற்றப்புள் ஒன்றேறி மன்றூடே வருகின்றான்" (வெற்றியுடைய, ஒப்பற்ற கருடன் மீது வீற்றிருந்து வீதி வழியாக வருகின்றான் எம்பெருமான்) என்கின்றாள். அவ்வரசர்களைப் போலவே எம்பெருமானும் கருடவாஹனனாய் பரகால நாயகியின் உள்ளத்தைக் கவர்வதற்காக அத்தெருவின் வழியே போகின்றான் என்று பிள்ளையமுதனார் கூறியிருக்கிறார். எனவே இப் பாசுரத்தைக் கருத்தில் கொண்டே அமுதனார் அவ்வார்த்தைகளை அருளினார் என்று அறிந்துகொண்டேன்" என்று **நம்பிள்ளை** அருளிச் செய்தார்.

[272]

(பண்டு இத்யாதி$_3$) முதல் நாள் கண்டால் ஸ்வாப$_4$ாவிகமான ஸ்வாமித்வத்தாலும் முகத்தில் தண்ணளியாலுமாக 'முன்பே கண்டறியும் முகமாயிருந்ததீ, எவ்வூரில் தான் கண்டது?' என்னும்படியிருக்கும்; சிரபரிசயம் பிறந்தால் பின்பு, 'முன் ஓரிடத்திலும் இவனைக் கண்டறியோம்' என்னும்படியா யிருக்கும்; நித்யாபூர்வமான விஷயமென்றபடி. "சொன்ன இரண்டு அர்த்த$_2$த்தையும் அது காட்டுமோ?" என்ன, "பயில்கின்றாளால் என்றது கண்டாயே! எற்றைக்கும் வார்த்தை இதுவேயன்றோ! இப்படியாக வேண்டாவோ?" என்று சீயர்.

(பெரிய திருமொழி 8-1-9)

நிகழ்டம்

பிராட்டி நிலையை அடைந்த திருமங்கையாழ்வார் "பண்டு இவரைக் கண்டறிவது எவ்வூரில் யாமென்றே பயில்கின்றாளால்" (இவரை நாம் பார்த்தது எவ்வூரில் என்றே பலகாலும் கூறுகின்றாள்) என்று திருத்தாயார் கூற்றாக அருளிச் செய்கிறார். இவ்விடத்தில் ஒரு **ஸம்வாதம்** காட்டப்பெறுகிறது.

விளக்கம்

இவ்விடத்தை விரித்துரைத்த **நஞ்சீயர்** 'பண்டு இவரைக் கண்டறிவது எவ்வூரில்' என்பதற்கு இருவகையான பொருள்களைக் கூறினார். 'முன்பு இவரை எங்கோ கண்டாற் போலிருக்கிறதே! எவ்வூரில் கண்டிருப்போம்?' என்று ஆராய்வதாக ஒரு பொருள்; 'இப்போதே முதன்முதலாகக் காண்கிறோம்; பண்டு இவரை எவ்வூரிலும் கண்டதில்லை' என்று முடிவு செய்வதாக மற்றொரு பொருள். (எம்பெருமானை முதல் முதலில் காணும்போது, அவனது திருமுகத்தில் குளிர்ச்சி முதலியவற்றால் 'முன்பே இவரை எங்கோ கண்டாற்

போலிருக்கிறதே!' என்று தோன்றும். நெருங்கிப்பழகி விட்டாலோ, தெவிட்டாமல், அப்பொழுதைக்கு அப்பொழுது ஆராவமுதமாய், புத்தம் புதியதாய்த் தோன்றுகையால் இப்போது தான் புதிதாகக் கண்டனுபவிப்பது போல் தோன்றும்.) எனவே 'பண்டிவரைக் கண்டறிவது எவ்வூரில்?' என்று தன்னைத் தானே கேட்டுக் கொண்டு 'பண்டிவரைக் கண்டறிவது எவ்வூரிலுமில்லை' என்று தலைவி தானே முடிவு செய்து கொள்வதாக ஒரே தொடருக்கு இரு பொருள்களை நிறுவினார் நஞ்சீயர். ஒரே தொடருக்கு எப்படி இவ்விரு பொருள்களையும் கூறமுடியும் என்று (நம்பிள்ளை) கேட்க நஞ்சீயர் "பயில்கின்றாளால் என்று பாசுரத்தில் உள்ளது கண்டீரே! எனவே பண்டிவரைக் கண்டறிவது எவ்வூரில் யாம்? என்று மீண்டும் மீண்டும் உருச் சொல்லுகிறாள் என்பதன்றோ பெறப்படுகிறது! முதன் முறை கூறும்போது முதல் பொருளும் இரண்டாம் முறை கூறும் போது இரண்டாவது பொருளும் தோன்றக் குறையில்லை" என்று விளக்கியருளினார்!

[273]

(காணுமோ) வடமதுரைப்பிறந்தான் மகன் கோயிலாழ்வார் ஸன்னிதி$_4$யிலே கண்ணைச் செம்பிளித்துக் கொண்டிருந்து ஜபித்தான்; ப$_4$ட்டர் திருவடி தொழ எழுந்தருளினவர், இத்தைக் கண்டு "கோயிலாழ்வார் கண்ணுக்கு விஷயமாயிருக்க, கண்ணைச் செம்பிளித்திருப்பதே; இவன் கண்ணால் ப்ரயோஜனம் கொள்ள மாட்டானாகாதே!" என்று வெறுத்து எழுந்தருளினார். அவனுக்கு ஒன்றிரண்டு மாஸத்துக்குள்ளே கண்கெட்டதிறே.

(பெரிய திருமொழி 8-2-2)

நிகழ்டம்

"காணுமோ கண்ணபுரம் என்று காட்டினாள்" (கண்பெற்ற பயன் பெறத் திருக்கண்ணபுரத்தைப் பாருங்கள் என்று காட்டினாள்) என்று தன் மகளைப் பற்றித் தாயார் கூறுகிறாள். கண்படைத்த பயன் எம்பெருமானுடன் தொடர்புடைவைகளைக் காண்பதே என்பதற்கு ஓர் **ஐதிஹ்யம்** *கூறப்பெறுகிறது.*

விளக்கம்

வடமதுரைப்பிறந்தான் மகன் *ஸ்ரீரங்கவிமானத்தின் முன்பு அமர்ந்து கொண்டு, கண்ணை மூடிக் கொண்டு, ஜபித்துக் கொண்டிருந்தான். திருவரங்கனைச் சேவிப்பதற்காக அவ்வழியே எழுந்தருளின* **பட்டர்** *இதைக் கண்டார். "கோயிலாழ்வாரான திருவரங்க விமானத்தைப் பார்க்க வேண்டிய*

1. இங்கு நம்பிள்ளை கேட்டதாகக் குறிப்பிடப்படவில்லை. நஞ்சீயர் இவ்வாறு அருளிச்செய்தமை மற்றும் இரு இடங்களில் (எண் 332, 533) குறிப்பிடப்பெற்றுள்ளது. அவ்விரு இடங்களிலும் நம்பிள்ளை கேட்க நஞ்சீயர் விடையளித்ததாகவே உள்ளது.

கண்களை மூடிக்கொண்டிருக்கிறானே, இவன் கண் படைத்த பயனையே கொள்ளமாட்டானன்றோ!" என்று கூறி வருத்தத்துடன் எழுந்தருளி விட்டார். ஒன்றிண்டு மாதங்களுக்குள்ளாக வடமதுரைப் பிறந்தான் மகனுக்குக் கண்பார்வை போய் விட்டது.

[274]

ஆப்பான் திருவழுந்தூரரையரும் ஆழ்வார் திருநறையூரரையரும் இப்பாட்டை அநுஸந்தி$_4$த்து, "இப்பாட்டுக்கு ஒரு சேர்த்தி கண்டிலோம்" என்று ப$_4$ட்டர் பாடே வந்து, "இப்பாட்டு இருக்கிறபடியென்?" என்று கேட்க, "மகள் அநுகாரத்தைத் தாய் அநுப$_4$ாஷிக்கிறாள்" என்றருளிச் செய்தார்.

(பெரிய திருமொழி 8-2-6)

நிகழிடம்

'தெள்ளியீர்' என்று தொடங்கும் பதிகம் தாய்ப்பாசுரமாகச் செல்கிறது. பரகால நாயகியின் நிலைகளைத் திருக்கண்ணபுரத்து எம்பெருமானுக்குத் தெரிவித்து அவனிடம் பல கேள்விகளைத் தாயார் கேட்பதாக அமைந்துள்ள இப்பதிகத்தில் "வடவரை நின்றும் வந்து இன்று கணபுரம் இடவகை கொள்வது யாமென்று பேசினாள்" என்பது ஒரு பாசுரம். வடக்குத் திருமலையில் நின்றும் புறப்பட்டு வந்து இப்போது திருக்கண்ணபுரத்தை இருப்பிடமாகக் கொண்டிருப்பது நானே என்கிறாள் என்பது பொருள். இதற்கு முன்னர் அமைந்துள்ள பாசுரங்களும், பின்னர் அமைந்துள்ள பாசுரங்களும் தாயார் பேசுவதாக அமைந்திருக்க, 'வடவரைநின்றும் வந்து யாமென்று' பேசியது யார்? எதற்காக? என்ற ஐயம் சிலருக்கு எழ, பட்டர் அதற்குப் பொருளுரைத்த **ஐதிஹ்யம்** *கூறப்பெறுகிறது.*

விளக்கம்

ஆப்பான் திருவழுந்தூர் அரையரும், ஆழ்வார் திருநறையூர் அரையரும் *பட்டரிடம் வந்து "இப்பாட்டிற்குப் பொருள் என்ன" என்று கேட்டார்கள். அதற்கு* **பட்டர்** *"மகளுடைய அநுகாரத்தைத் தாய் கூறும் பாசுரம் இது" என்று பதிலளித்தார்.*

எம்பெருமானைப் பிரிந்த வருத்தத்தினால் ஆற்றாமை அதிகமானவர்கள், தம்மை எம்பெருமானாகவே நினைத்துக் கொண்டு பேசுவது அநுகாரம் எனப்படும். கண்ணனைப் பிரிந்த கோபிகைகள் தங்களைக் கண்ணனாகவே பாவித்துப் பேசி உயிர் தரித்தது இங்கே குறிக் கொள்ளத் தக்கது. நம்மாழ்வாரும் 'கடல் ஞாலம் செய்தேனும்' என்கிற திருவாய்மொழியில் (5-6) தம்மை எம்பெருமானாகவே பாவித்துக் (அனுகரித்துக்) கொண்டு பேசியிருக்கிறார்.

ஆண்டாளும் தன்னை கோபிகையாகவே பாவித்துக் கொண்டு பாவை நோன்பு நோற்றிருக்கிறாள். அதே போலத் திருமங்கையாழ்வாரும் (பரகால நாயகியும்) தம்மை எம்பெருமானாகவே நினைத்துக் கொண்டு கூறிய வார்த்தைகளைத் தாயார் அப்படியே கூறுவதாகப் பாசுரம் அமைந்திருக்கிறது. "வடக்குத் திருமலையில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானாகிய நாம், இப்போது அவ்விடத்தை விட்டு, கீழை வீடாகிய திருக்கண்ணபுரத்தில் வசிப்பதற்காக இங்கு வந்து சேர்ந்திருக் கிறோம்" என்று தன்னை சௌரிராஜப் பெருமாளாகவே நினைத்துக் கொண்டு என் மகள் கூறுகிறாள் என்று தாய் கூறுவதாக, பட்டர் பொருளுரைத்தார்.

[275]

(நின்னடியே தொழுது) உடையவர் பெருமாளுக்கு நெடுநாள் திருமஞ்சனமெடுத்து அவரை ஆச்ரயமாகப் பற்றின பின்பிறே கோயிலிலே வந்தது.

(பெரிய திருமொழி 8-2-8)

நிகழ்டம்

'தெள்ளியீர்' என்று தொடங்கும் பதிகம் தாய்ப்பாசுரமாகச் செல்கிறது. பரகால நாயகியின் நிலைகளைத் திருக்கண்ணபுரத்து எம்பெருமானுக்குத் தெரிவித்து அவனிடம் பல கேள்விகளைத் தாயார் கேட்பதாக அமைந்துள்ள இப்பதிகத்தில் "தொண்டெல்லாம் நின்னடியே தொழுது உய்யுமா கண்டு தான் கணபுரம் தொழப் போயினாள்" (தொண்டர்கள் எல்லோரும் உன்னுடைய திவ்யதேசத்தையே தொழுது உய்வதைக் கண்ட இவளும் திருக்கண்ணபுரத்தைத் தொழுவதற்குப் போனாள்) என்று தன்மகளைப் பற்றித் தாய்கூறுவதாகப் பாசுரம் அமைந்துள்ளது. இதை விளக்குகின்ற உரையாசிரியர், "அரங்கமே என்பது இவள் தனக்கு ஆசையே" என்று இதற்கு முன் பாசுரத்தில் கூறியிருக்க, இப்பாசுரத்தில் இவள் திருக்கண்ணபுரத்தைத் தொழுவது எதற்காக என்று எம்பெருமான் தாயாரைக் கேட்க, அவரவர்கள் தங்கள் தங்கள் விருப்பத்தைப் பெறுவதற்காகத் திருக்கண்ணபுரத்தைத் தொழுவதைப் பார்த்தாள்; எனவே தானும் தன் விருப்பத்தை அடைவதற்காகத் திருக்கண்ணபுரத்தைத் தொழுகிறாள் என்று தாயார் விடை இறுத்தாக உரைத்தார். பரகால நாயகி திருக்கண்ண புரத்தைத் தொழுது திருவரங்கத்தை அடையப் பார்க்கிறாள் என்பது இதன் கருத்து. இதற்கு உடையவரை இங்கு **உதாரணம்** காட்டுகிறார் உரையாசிரியர்.

விளக்கம்

உடையவர் காஞ்சீபுரத்தில் நெடுநாள் தேவப்பெருமாளுக்கு சாலைக் கிணற்றிலிருந்து தீர்த்தம் கொணர்ந்து கைங்கர்யம் செய்தார். அதற்குப் பின்புதான் அவர் திருவரங்கத்திற்கு வந்து திருவரங்கனுக்குக் கைங்கர்யம் செய்தார்.

(உடையவர் காஞ்சி தேவப் பெருமாளுக்குக் கைங்கர்யம் செய்து திருவரங்கத்தில் நம்பெருமாள் கைங்கர்யத்தைப் பெற்றதுபோல, பரகால நாயகி திருக்கண்ண புரத்தைத் தொழுது திருவரங்கத்தை அடைய நினைக்கிறாள் என்பது கருத்து.)

[276]

(தீப்பட) நெருப்புக் கொளுந்தியெரிய; விக்ரமசோழதேவர் "இதென்ன வைக்கோல் போர் தான்" (என்றார்.)

(பெரிய திருமொழி 8-5-6)

நிகழிடம்

"முரியும் வெண்டிரை முதுகயம் தீப்பட முழங்கழல் எரியம்பின் வரிகொள் வெஞ்சிலை வளைவித்த மைந்தன் (கிளர்த்தியுடைய வெண்மையான அலைகளையுடைய பழங்கடலானது நெருப்புக் கொளுந்தி எரியும்படி, நெருப்பைக் கக்குகின்ற அருமையுடைய அழகியவில்லை வளைத்தவன்) என்றருளிச் செய்கிறார் (பரகாலநாயகி நிலையிலுள்ள) திருமங்கையாழ்வார். இதுபற்றி விக்ரமசோழதேவர் கூறிய ***வார்த்தை*** *காட்டப்பெறுகிறது.*

விளக்கம்

இராமபிரான் இலங்கைக்குச் செல்வதற்கு வழிவிடவேண்டிக் கடலரசனைச் சரணம் புகுந்து மூன்று நாள்கள் ஆகியும் அவன் முகம் காட்டாமையினாலே கோபம் கொண்டு சீறித் தன்னுடையவில்லை வளைத்து அதில் ஆக்னேயாஸ்த்ரத்தைத் (எரியம்பு) தொடுத்து நின்ற நிலையை இப்பாசுரத்தில் ஆழ்வார் வர்ணிக்கிறார். "கடலானது தீப்பற்றி எரியும்படியாக அம்பைத் தொடுத்தான்" என்ற ஆழ்வார் அருளிச் செயலைக் கேட்ட **விக்ரம சோழ தேவர்** *"கடல் என்ன வைக்கோல் போரா உடனே பற்றி எரிவதற்கு?" என்று வேடிக்கையாகக் கூறினார்.*

[277]

(நால்வேதங்கண்டானே) அன்றிக்கே, ப$_4$ட்டர் அருளிச் செய்தாராகச் சிறியாத்தான் பணிக்கும்படி: "இது கர்த்தரி அன்று கர்மணி கிடாய்" என்று.

(பெரிய திருமொழி 8-10-1)

நிகழிடம்

"நால் வேதம் கண்டானே" என்று எம்பெருமானைப்பற்றித் திருமங்கை ஆழ்வார் அருளிச்செய்கிறார். இதற்கு "நான்கு வேதங்களையும் கண்டவனே" என்று எம்பெருமானை ஆழ்வார் கூறுவதாக உரைத்த உரையாசிரியர், பட்டர் அருளிச்செய்த ***நிர்வாஹம்*** *ஒன்றையும் எடுத்துக் காட்டுகிறார்.*

விளக்கம்

இங்கு, 'கண்டானே' என்ற சொல் கர்த்தரி (செய்வினை) அன்று, கர்மணி (செயப்பாட்டு வினை) என்று **பட்டர்** அருளிச் செய்தார் என்று **சிறியாத்தான்** கூறுவராம். அதாவது 'நான்கு வேதங்களாலும் காணப்பட்டவனே!' என்று ஆழ்வார் எம்பெருமானை நோக்கிக் கூறுவதாகப் பொருளுரைத்தார் பட்டர். நான்கு வேதங்களாலும் பரம்பொருளாகக் காணப்பட்டவனே! என்றபடி

[278]

"உன்னளவில் நின்றவனல்லேன்" என்றபோது அவன் திருவுள்ளம் என்படுகிறதோ?" என்று நஞ்சீயர் அருளிச் செய்ய, பிள்ளை "அல்லிக் கமலக்கண்ணனாகிறான்" என்றருளிச் செய்தார்.

(பெரிய திருமொழி 8-10-3)

நிகழிடம்

"உற்றதும் உன் அடியார்க்கு அடிமை (உன் அடியவர்களுக்கு அடிமையாக இருக்க வேண்டும் என்பதை நான் அறிந்து கொண்டேன்) என்று எம்பெருமானை நோக்கி அருளிச் செய்கிறார் திருமங்கை ஆழ்வார். இத்தொடர்பில் ஒரு **ஸம்வாதம்** காட்டப்பெறுகிறது.

விளக்கம்

"எம்பெருமானே! நான் உனக்கு அடிமைப்பட்டவனல்லேன்; உன் அடியார்க்கு அடிமைப்பட்டவன்" என்று ஆழ்வார் கூறினால் எம்பெருமானுடைய திருவுள்ளம் எப்படிப் படுமோ?" என்று **நஞ்சீயர்** அருளிச் செய்தார். அதைக் கேட்ட **நம்பிள்ளை** "அல்லிக் கமலக் கண்ணனாக இருப்பான்" என்று அருளிச் செய்தார். அதாவது நம்மாழ்வார், எம்பெருமானுடைய அடியவர்களுக்குத் தாம் அடிமைப் பட்டவர் என்பதை 'நெடுமாற்கடிமை' என்கிற (8-10) திருவாய்மொழியில் அருளிச் செய்கிறார். அப்பதிகத்தின் கடைசிப் பாசுரத்தில் "அல்லிக் கமலக் கண்ணனை" என்று எம்பெருமானை அருளிச் செய்துள்ளார். (அல்லி = அகவிதழ். அல்லிக் கமலக் கண்ணன் = அகவிதழ்களும் நன்கு தெரியும்படி மலர்ந்த தாமரை போன்ற கண்களை உடையவன்.) இயற்கையாகத் தாமரைபோன்ற திருக்கண்களை உடைய எம்பெருமான், தன் அடியவர்களுக்கு ஆழ்வார் அடிமைப்பட்டவர் என்பதைக் கேட்டதும் மிக்க மகிழ்ச்சியினால், அகவிதழ்களும் நன்கு தெரியும்படி நன்றாக மலர்ந்த தாமரை போன்ற திருக்கண்களை உடையவனாக இருப்பான் என்பது நம்பிள்ளையின் கருத்தாகும். தன்னிடம் அடிமைப்பட்டிருப்பவர் களைக் குறித்து மகிழ்வதைக் காட்டிலும் தன் அடியார்களிடம் அடிமைப் பட்டவர்களைக் குறித்து எம்பெருமான் மிக்க மகிழ்ச்சி அடைவான் என்பது கருத்தாகும்.

[279]

"आर्येण करुणं कार्यम् (ஆர்யேண கருணம் கார்யம்) என்னக் கடவதிறே!" என்று சீயர் அருளிச் செய்த வார்த்தை.

(பெரிய திருமொழி 8-10-5)

நிகழிடம்

பெற்றாரும் சுற்றமும் என்றிவை பேணேன் நான்
மற்றாரும் பற்றிலேன் ஆதலால் நின்னடைந்தேன்
உற்றானென் றுள்ளத்து வைத்தருள் செய் கண்டாய்
கற்றார் சேர் கண்ணபுரத்துறை அம்மானே

என்பது திருமங்கையாழ்வார் அருளிச் செய்த பாசுரம். "கண்ணபுரத்தில் உறையும் எம்பெருமானே! உன்னையன்றி வேறு புகல் இல்லாத எனக்கு அருள் புரிய வேண்டும்" என்று இப்பாசுரத்தில் வேண்டுகிறார் திருமங்கையாழ்வார். இப்பாசுரத்தின் கடைசி அடியில் 'கற்றார்சேர் கண்ணபுரத்துரையம்மானே' என்றுள்ள சொல் நயத்தை விளக்கியருளும் உரையாசிரியர் "கற்றவர்கள் வாழும் இடமான திருகண்ணபுரத்தில் உறையும் நீ என்னைக் கைவிடலாமா! புகலற்று வந்தவனைக் கைவிடுவது தகுதியோ என்று அவர்களையே கேட்டாகிலும் நீ உணரலாமே!" என்று திருமங்கையாழ்வார் திருவுள்ளக் கருத்தாக விளக்கி, இதற்குச் சான்றாக நஞ்சீயர் அருளிச்செய்த **வார்த்தை***யை எடுத்துக் காட்டுகிறார்.*

விளக்கம்

ராவணன் மாண்டபிறகு அச்செய்தியைச் சொல்வதற்காகச் சீதைப் பிராட்டியிடம் அனுமன் வந்தான். இந்த நல்ல செய்தியைக் கூறிய அனுமனுக்கு என்ன பரிசளிப்பது என்று சீதைப்பிராட்டி கேட்டபோது அனுமன், இத்தனை நாள்களும் சீதைப்பிராட்டியை அசோகவனத்தில் துன்புறுத்திய அரக்கியர்களைக் கொல்வதற்கு அனுமதி வேண்டுகிறான். அப்போது சீதைப்பிராட்டி அதற்கு அனுமதியளிக்காததோடுமல்லாமல்

பாபாநாம் வா சுபாநாம் வா வதார்ஹாணாம் ப்லவங்கம
கார்யம் கருணமார்யேண ந கச்சிந்நாபராத்யதி

(அனுமனே! பாவிகளாயினும் நல்லவர்களாயினும் - கொல்லத் தகுந்தவர்களைக் குறித்து கருணை காட்டுதலே நல்லவனால் செய்யத் தக்கது. எவனும் குற்றமற்றவனல்லன்.) (ஸ்ரீராமாயணம் யுத்த காண்டம் 116-45) என்று கூறுகிறாள். கற்றறிந்த நல்லவர்களால் புகலற்றவர்கள் விஷயத்தில் கருணை காட்டுதல் ஒன்றே செய்யத் தக்கது என்று பிராட்டி கூறியதைத் திருக்கண்ணபுரத்து எம்பெருமானுக்கு நினைவுறுத்தி, கற்றறிந்தவர்கள் வாழும்படியான திருக்கண்ணபுரத்து எம்பெருமானும் புகலற்றவனான தம்

திறத்தில் அருள் புரிய வேண்டும் என்று வேண்டுகிறார் திருமங்கையாழ்வார் என்று நஞ்சீயர் விளக்கம் அருளிச்செய்தார்.

[280]

(பொன்னித்யாதி) 'பொன் இவர்' என்று நிர்வஹிப்பர் பிள்ளையமுதனார், 'எண்ணும் பொன்னுருவாய்' என்னுமாபோலே ஸ்வரூபபரமாக்கி.

(பெரிய திருமொழி 9-2-1)

நிகழ்டம்

"பொன்னிவர் மேனி மரகதத்தின் பொங்கிளஞ்சோதியகலத்தாரம் மின்" என்பது திருமங்கையாழ்வார் அருளிச்செய்துள்ள பாசுரமாகும். பொன் இவர் மேனி - இந்த எம்பெருமானுடைய திருமேனி பொன்னாக இருக்கிறது. பொங்கிளம் சோதி அகலத்து ஆரம் மின் - மரகதப்பச்சையின் புதிய ஒளியை உடைய திருமார்பில் உள்ள ஆரமானது மின்னலாக இருக்கின்றது - என்று இரண்டு வாக்கியமாகக் கொண்டு இதற்கு விளக்கமளித்த உரையாசிரியர், பிள்ளை அமுதனார் அருளிச்செய்த **நிர்வாஹ***த்தையும் காட்டுகிறார்.*

விளக்கம்

இவர் பொன் - எம்பெருமான் பொன் போன்றவன்; மேனி மரகதத்தின் பொங்கிளம் சோதி - அவனுடைய திருமேனி மரகதத்தின் ஒளியுடையது. அகலத்து ஆரம் மின் - அவன் மார்பில் அணிந்த ஆரம் மின்னல் போன்றது என்று மூன்று வாக்கியங்களாகக் கொண்டு விளக்குவார் **பிள்ளை அமுதனார்**. *'இங்கு 'இவர் பொன்' என்றது "எண்ணும் பொன்னுருவாய்" (திருநெடுந் தாண்டகம் 1) என்று திருமங்கையாழ்வார் அருளிச் செய்தது போல, ஸ்வரூப பரமாகச் சொன்னபடி. அதாவது பொன் போலே விரும்பத் தக்கவன் என்பது பொருள்.*

[281]

........... இதுக்கு சீயர் அருளிச் செய்யும்படி - இது தன்னை ஆழ்வார் பாடா நிற்க, எம்பெருமானார் "அங்கு ஆருயிர் பட்டது, இங்கு எனதுயிர் பட்டது" என்றருளிச் செய்தார். "ஆழ்வார்களுடைய அனுப$_4$வத்தையாகில் ப்ராப்யமாகச் சொல்லுகிறதும் ஆசைப்படுகிறதும்; அதுக்கவ்வருகே ஓரேற்றம் சொல்லுவாரைப் போலே சொல்லுவானென்?" என்று நான் சீயரைக் கேட்க, "நவோடை$_4$யான ஸ்த்ரீக்கு ப$_4$ர்த்தாவினுடைய கரஸ்பர்ஶமுண்டானால் வேர்ப்பது விடுவதாமாபோலே அனுபவத்தில் புதுமையாலே படுகிற அலமாப்புக் காணும்" என்றருளிச் செய்தாராகப் பிள்ளை அருளிச் செய்வர்.

(பெரிய திருமொழி 9-3-1)

நிகழிடம்

'எம்பெருமான் தானே வந்து கூடுகிறான் என்று இதுவரை ஆறியிருந்தது போதும்; அவன் இருக்குமிடத்திற்கே சென்று தொழுவோம் வா' என்று தன் நெஞ்சையும் தோழியையும் பரகாலநாயகி அழைப்பதாகச் செல்லுகிறது "தன்னை நைவிக்கிலேன்" என்று தொடங்குகின்ற திருமொழி. இத்திருமொழியின் முதல் பாசுரத்தின் உரையில் உரையாசிரியர் "பெருமான் வருமளவும் பொறுத்திருப்பது சீதைப்பிராட்டி போல்வார்க்கே முடியும்; எம்பெருமானோடு உள்ள தொடர்பில் மிகவும் பழையவர்களால் பொறுத்திருக்க முடிந்தது போலப் புதியவர்களான ஆழ்வார்களால் பொறுத்திருக்க முடியாது" என்றருளிச் செய்து, அதற்குச் சான்றாக நம்மாழ்வார் அருளிச் செய்த "ஆருயிர் பட்டது எனதுயிர் பட்டது" என்ற பாசுரத்தை மேற்கோளாகக் காட்டி, அப்பாசுரத்திற்கு எம்பெருமானார் அருளிச்செய்த **வார்த்தை** ஒன்றையும், அதுகுறித்து நஞ்சீயருக்கும் நம்பிள்ளைக்கும் இடையே நடந்த **ஸம்வாதம்** ஒன்றையும் காட்டுகிறார்.

விளக்கம்

"ஆருயிர் பட்டது எனதுயிர் பட்டது" என்ற திருவாய்மொழி (9-6-9) பாசுரத்தை **ஆழ்வார் திருவரங்கப்பெருமாள் அரையர்** பாடியபோது **எம்பெருமானார்** "இங்கே எனது உயிர் பட்டது, அங்கே பரமபதத்தில் யார் உயிர் பட்டது?" என்று நம்மாழ்வார் வினவுவதாக கூறினார். (அதாவது எம்பெருமானுடைய வடிவழகில் ஈடுபட்டு இங்கே ஆழ்வார் உள்ளமழிந்து அலைப்புண்டதுபோல் அங்கே பரமபதத்தில் எம்பெருமானையே நித்யமாக அனுபவித்துக்கொண்டிருக்கும் நித்யசூரிகளும் படவில்லை என்பது கருத்து.) இப்படி எம்பெருமானார் கூறியதாக **நஞ்சீயர்** கூறியவுடன் **நம்பிள்ளை** ஒரு கேள்வி கேட்டார். "ஆழ்வார்களும் கூட ஆசைப்படுவது, நித்யசூரிகளைப் போலே தாங்களும் எம்பெருமானை நித்தியமாக அனுபவிக்க வேண்டும் என்பது தானே! இப்போது ஆழ்வாருடைய அனுபவமானது நித்யசூரிகளுடைய அனுபவத்தைக் காட்டிலும் மேம்பட்டது என்று கூறுவதற்குக் கருத்து என்ன?" என்பது அக்கேள்வி. அதற்கு நஞ்சீயர் "மணாளனுடைய கை பட்டவாறே புதுமணப்பெண்ணுக்கு வேர்ப்பது விடுவது போன்ற புத்துணர்ச்சி பிறக்குமல்லவா? ஆனால் கணவனோடு பலகாலம் பழகிய பெண்களுக்கு அப்படிப்பட்ட புத்துணர்ச்சி ஏற்பட வாய்ப்பில்லையே! அதுபோல எம்பெருமானை அனுபவிப்பதில் பழையரான நித்யசூரிகள் படும் அலமாப்பை விட, புதுமணப்பெண் போன்ற ஆழ்வாருடைய அனுபவத்தில் புதுமையாலே படும் அலமாப்பு அதிகமாக இருக்கும்" என்று விடையளித்தார்!

1. இந்த ஸம்வாதம் மற்றோரிடத்திலும் இடம்பெற்றுள்ளது. எண் 784 பார்க்க.

[282]

(என்னலம் இத்யாதி)..........அன்றிக்கே "'என் நலனும் என் நிறைவும்' என்கிறத்தை" என்று அமுதனார்.

(பெரிய திருமொழி 9-5-1)

நிகழ்டம்

"என்னலமைந்தும் முன் கொண்டு போன குவளை மலர்நிற வண்ணர்" (என்னுடைய நலம் ஐந்தையும் கவர்ந்து சென்ற, குவளைமலர் போன்ற நிறமுடைய எம்பெருமான்) என்பது பரகால நாயகியின் பாசுரம். இதில் என் நலம் ஐந்தும் என்பதற்கு "செவி, வாய், கண், மூக்கு, உடல் எனும் ஐந்து உறுப்புகளின் அறிவையும் வேறொன்றிலும் புகாதபடி தனக்கே ஆக்கிக் கொண்டு போன" என்று விளக்கமளித்த உரையாசிரியர், அமுதனார் அளித்த மற்றொரு **நிர்வாஹ**த்தையும் காட்டுகிறார்.

விளக்கம்

திருநெடுந்தாண்டகத்தின் இருபத்தைந்தாவது பாசுரத்தில் பரகாலநாயகி "என் நலனும், என் நிறைவும், என் சிந்தையும், என்வளையும் கொண்டு, என்னையாளும் கொண்டு" (தன்னுடைய அழகு, அடக்கம், மனம், வளை இவற்றையும் கொண்டு என்னையும் அடிமை கொண்டு) என்று ஐந்தைக் கொண்டபடி கூறியுள்ளமையால், அவை ஐந்தை இங்கேயும் கொள்ளலாம் என்று **அமுதனார்** அருளிச்செய்தார்.

[283]

(தக்கமரத்தின்) "ஒரு முள்பற்றையன்றிக்கே ப₃ாலர்க்கும் தவழ்ந்தேறலாம் படியாயிருக்கும் அங்குத்தை வ்ருக்ஷங்களின் படி" என்று ப₄ட்டர் அருளிச் செய்தாராக ப்ரஸித்₃த₄மிறே. அன்றிக்கே மேலே "கொக்கின் பிள்ளை" என்கையாலே தன்னோடு நாமஸாம்யத்தையுடைத்தான மரத்திலே என்பாருமுண்டு.

(பெரிய திருமொழி 9-6-1)

நிகழ்டம்

திருக்குறுங்குடியின் இயற்கை அழகை வருணிக்கும் திருமங்கையாழ்வார். "தக்கமரத்தின் தாழ்சினையேறித் தாய் வாயில் கொக்கின் பிள்ளை வெள்ளிறவுண்ணும் குறுங்குடியே (கொக்கின் குட்டியானது தனக்கு ஏறத்தகுந்த மரத்தின் தாழ்ந்த கிளையில் ஏறித் தன் தாயின் வாயிலிருக்கிற மீனை உண்கின்ற திருக்குறுங்குடி) என்றருளிச் செய்கிறார். இங்கு தக்கமரம் என்றுள்ள சொல் நயத்திற்கு **நிர்வாஹங்கள்** காட்டப்பெறுகின்றன.

'தக்க மரம்' என்பதற்கு, "அவ்வூர் எம்பெருமானைப் போலவே மிகவும் ஸௌலப்ய (எளிமை) குணம் உடையவையாய், ஒரு சிறிது முள்ளும் இல்லாமல், மிகவும் தாழ்ந்து, சிறுவர்க்கும் தவழ்ந்து ஏறத்தக்கவையாக உள்ள மரங்கள்" என்று பட்டர் அருளிச் செய்தார் என்பது மிகவும் பிரசித்தமானது. கொக்கு என்ற சொல் பறவையைக் குறிப்பது போல, மாமரத்தையும் குறிக்கும்.[1] எனவே தக்கமரத்தில் கொக்கு ஏறியது என்றது, தன் பெயருக்குத் தக்க பெயருடைய (மா) மரத்தில் கொக்கு ஏறியது என்று கொள்ளலாம் என்றும் சிலர் கூறுவர்.

[284]

(அரக்கராடழைப்பாரில்லை) "ராக்ஷஸரில் இனி ஆடுபோலே கூப்பிடக் கடவாரில்லை" என்று ப$_4$ட்டர் அருளிச் செய்தாரென்று நஞ்சீயர் அருளிச் செய்வர். இது ஓர் அர்த்த$_2$மாயிராமையாலே, "இங்ஙனே இது சொன்னாலோ" என்று நான் கேட்டேன். "சொல்லலாகாதோ" என்ன, "ஆடு என்று வெற்றி; இந்த ராக்ஷஸ ஜாதியில் வெற்றி சொல்லக் கடவாரில்லை என்கிறது" என்ன, "இதுவேயிறே பொருள்" என்று அருளிச் செய்தார் என்று பிள்ளையருளிச் செய்வர்.

(பெரிய திருமொழி 10-2-1)

நிகழ்ச்சி

இராமபிரானிடம் தோல்வியுற்ற அரக்கர்களுடைய பாவனையில் இருபதிகங்கள் அருளிச் செய்கிறார் திருமங்கையாழ்வார். அதில் ஒரு பாசுரத்தில் "அரக்கர் ஆடழைப்பாரில்லை" என்றவிடத்திற்குப் பொருள் உரைக்கையில், ஓர் **ஐதிஹ்யம்** எடுத்துக் காட்டுகிறார் உரையாசிரியர்.

விளக்கம்

"அரக்கர் ஆடு அழைப்பாரில்லை" என்பதற்கு, "அரக்கர்களில் இனி ஆடு போலக் கூப்பிட வல்லவர் யாருமில்லை" என்று **பட்டர்** அருளிச் செய்ததாக **நஞ்சீயர்** அருளிச் செய்தார். (ஒரு நொண்டி ஆடு தன்னெரே வந்த சிங்கத்தைக் கண்டு - உள்ளே அச்சம் இருந்தாலும், மேலுக்கு தைரியத்தை வரவழைத்துக் கொண்டு உரக்கக் கனைத்து, "நான் தொண்ணூற்றொன்பது சிங்கங்களைக் கொன்று தின்றுவிட்டேன்; நீதான் நூறாவது சிங்கம்; உன்னையும் கொன்று தின்னப் போகிறேன்" என்று கூறி, சிங்கத்தின்மீது பாய்வதுபோல் நடிக்க, சிங்கம் அதை உண்மை என்று நம்பி ஓட்டம் பிடிக்க, ஆடு தப்பியது என்றொரு கதை கூறுவதுண்டு.) அரக்கர்களில் யாரும் ஆடுபோல், நெஞ்சுக்குள்ளே அச்சம்

1. "சூதஞ் சேதாரம் ஆம்பிரம் கொக்கு நேர் மாமரத்திவை தேமாவாகும்" - என்பது திவாகரதிகண்டு. "எங்கும் கொக்கின் பழம் வீழ் கூடலூரே" என்று திருமங்கையாழ்வாரும் (பெரிய திருமொழி 5-2-6) அருளிச் செய்துள்ளது காண்க.

இருந்தாலும் வெளியிலாவது தைரியத்தை வரவழைத்துக்கொண்டு போருக்கு அழைப்பாரில்லை என்பது பட்டர் கூறியபொருள் என்று நஞ்சீயர் கூறினார். இதைக் கேட்ட **நம்பிள்ளை**, *இது மட்டும் பொருளாக இருக்க முடியாதென்று கருதி, "வேறு வகையாகச் சொல்லலாமே!" என்றார். நஞ்சீயர், "உமக்குத் தோன்றின பொருளைச் சொல்லலாமே!" என்று கூற, "ஆடு என்ற சொல்லுக்கு வெற்றி என்று பொருளுண்டு! எனவே ஆடு அழைப்பாரில்லை என்பதற்கு அரக்கர்களில் வெற்றி என்று சொல்ல வல்லாரில்லை; (தோற்றோம் என்று சொல்ல வல்லவர் உளரே தவிர வென்றோம் என்று கூற வல்லவர் எவரும் இலர்) என்று பொருள் கூறலாமே" என்று நம்பிள்ளை கூற, நஞ்சீயர் "இதுவே சரியான பொருள்" என்றருளிச் செய்தார் (என்று நம்பிள்ளை அருளிச் செய்வர்).*

[285]

(நந்தனித்யாதி) गुणैर्दशरथोपम: (கு$_3$ணைர்த$_3$ஶரதோ$_2$பம:) "பரமபத$_3$த்திலுள்ள ஸ்வாப$_4$ாவிக கு$_3$ணங்களும், அவதரித்து ஆர்ஜித்த குணங்களும் கூடினால் சக்ரவர்த்தியோடு உபமாநம் மார்மட்டமாய் நிற்குமித்தனை" என்று இத்தை சீயர் அருளிச் செய்ய, "பரமபுருஷனுக்கு ஓரிடத்தே பிறந்து ஒரு கு$_3$ணம் தேட வேண்டுமோ?" என்றார் சுந்தரபாண்டியத்தேவர். 'நாமோடுகிற நரம்பு இவன் அறிந்திலன்' என்று அத்தை விட்டு, "பரமபுருஷன் என்ற போதை அழகிருந்தபடியென்!" என்றாராம். எம்பெருமானார் ஸ்ரீபாதத்தில் அந்வயம் இல்லாதார் ப$_4$க$_3$வத் விஷயத்தில் சொன்ன ஏற்றமெல்லாம் அர்த்த$_2$வாத$_3$ம் என்றிருப்பர்கள். அது உடையவர்கள் ப$_4$க$_3$வத்ப்ரப$_4$ாவத்துக்கு அவதி$_4$ இல்லாமையாலே சொன்னவை சில சொன்னவத்தனை; சொல்லாததுவே பெரிது என்றிருப்பார்கள்.

(பெரியதிருமொழி 10-4-1)

நிகழிடம்

யசோதை பாவனையில் கிருஷ்ணாவதாரத்தை அனுபவிக்கின்ற திருமங்கையாழ்வார் 'நந்தன் பெறப்பெற்ற நம்பீ' என்று அருளிச்செய்கிறார். நந்தன் பெறப்பெற்றதனாலே நம்பி (எல்லாகுணங்களாலும் நிறைந்தவன்) என்று பொருள் கொண்டு அதற்குச் சேர ஒரு **ஐதிஹ்யம்** *காட்டப்பெறுகிறது.*

விளக்கம்

நஞ்சீயர் *காலத்திலிருந்த* **சுந்தரபாண்டியத் தேவர்** *எனும் அரசர் நஞ்சீயரைக் காண வந்திருந்தபோது அவர் வான்மீகி ராமாயணத்தில் ஒரு சுலோகம் பற்றி*

1. "ஆடு புட்கொடி ஆதிமூர்த்தி – வெற்றிப் புட்கொடி; ஆடு – வெற்றி, வெற்றிப் புள்ளைக் கொடியாக உடையவன்" (ஈ.டு 4-10-7) என்றதும் காண்க.

விளக்கம் கூறிக்கொண்டிருந்தார். அந்த சுலோகமாவது:

ஸஹி வீர்யோபபந்நச்ச ரூபவாநநஸூயக:
பூமாவநுபமஸ்ஸூநு: குணைர் தசரதோபம: (ராமா. அயோ.19)

(ராமபிரான் வீர்யமுள்ளவன்; அழகுள்ளவன்; பொறாமையற்றவன்; உலகில் ஒப்பற்ற பிள்ளை; குணங்களிலே தசரதனுக்குச் சமமானவன்) என்பது. இங்கு "குணைர் தசரதோபம:" (குணங்களில் தசரதனுக்குச் சமமானவன்) என்பதை விளக்கிய நஞ்சீயர், எம்பெருமான் ஸ்ரீராமனாகப் பிறந்து படைத்த குணங்களும் அவனுக்கு இயற்கையாகவே உள்ள குணங்களும் எல்லாம் கூடினாலும்கூட தசரதனுடைய குணங்களில் அவை பாதியேயாய், இராமபிரானையும் சக்ரவர்த்தியின் பிள்ளை என்று சொல்லப் போதுமானவையாயிருக்கும் என்று கூறினார். 'ஆத்மாநம் மாநுஷம் மந்யே ராமம் தசராத்மஜம்' (ரா.யு.120-11) (என்னை நான் மனிதனாகவும் தசரதனுடைய பிள்ளையாகவும் நினைப்பதிலேயே பெருமை கொள்கிறேன்) என்று இராமபிரானே கூறியுள்ளதைப் பின்பற்றி ராமபிரானைக் காட்டிலும் தசரதனை இப்படி உயர்ந்த குணங்கள் படைத்தவனாக நஞ்சீயர் கூறினார். இதைக் கேட்ட சுந்தரபாண்டியன், "ஒருவனுக்கு பிள்ளையாகப் பிறந்தமையால் பரமபுருஷனுக்கு ஒரு சிறப்பு உண்டாக வேணுமோ? அவன் அக்குடியிலே பிறந்தமையினால் அக்குடிக்குத்தானே சிறப்பு உண்டாகும்?" என்றான். 'இராமபிரானுடைய திருவுள்ளக் கருத்தைப் பின் சென்று நாம் கூறிய பொருளை இவன் புரிந்து கொள்ளவில்லை' என்றுணர்ந்த நஞ்சீயர் அவனை மறுத்து பதில் சொல்லாமல் "அதிருக்கட்டும், நீ பரமபுருஷன் என்று சொன்னது எவ்வளவு அழகான வார்த்தை!" என்று நயமாகப் பேசி நஞ்சீயர் அவ்விஷயத்தை முடித்து விட்டார்.[1]

தொடர்ந்து உரையாசிரியர் இங்கே அருளிச் செய்வது: எம்பெருமானார் *திருவடிகளில் தொடர்பு இல்லாதவர்கள், எம்பெருமானுக்கு எவ்வளவு பெருமைகளைக் கூறினாலும், 'இது வெறும் புகழ்ச்சியே தவிர உண்மையல்ல' என்று தான் கருதுவார்கள். ஆனால் எம்பெருமானாரோடு தொடர்புடையவர்கள் "எம்பெருமானுடைய பெருமைக்கு எல்லை இல்லாமையினால் சொன்னவை ஏதோ சிலவே. இன்னும் சொல்லாத பெருமைகளே அதிகம் உள்ளன" என்றிருப்பர்கள்.*

[286]

(கோழிகூவென்னுமால்) இதுக்குப் பொருளாக சீயர் அருளிச் செய்தாராகப் பிள்ளையருளிச் செய்யும்படி: "க்ருஷ்ணன் கோழி கூவினவாறே வருமாய்,

1. மற்றோரிடத்திலும் இவ்வைதிஹ்யம் இடம்பெற்றுள்ளது. எண் 127 பார்க்க.

மீண்டும் கோழி கூவினவாறே போமாய், 'வரவை ஸூசிப்பிக்கின்ற கோழி கூவாநின்றது; பிரிவில் த$_4$ரிக்க வொண்ணாதபடி கடல் போலே ப்ரமஹரமான வடிவையுடையவர் வருங்காலமாயிற்று; மீண்டும் கோழி கூவப் போவர்; நடுவு ஸம்ப்லேஷத்துக்குக் காலமில்லை, நான் என் செய்வேன்?' என்கிறாள்" என்று. "க்ருஷ்ணன் கோழியை மடியிலேயிட்டுக் கொண்டு வரும் போலே காணும்" என்று ப$_4$ட்டர் அருளிச் செய்தாரென்று ப்ரஸித்$_4$த$_4$மிறே.

(பெரிய திருமொழி 10-10-6)

நிகழிடம்

பரகால நாயகியானவள் பற்பல பறவைகளையும் அழைத்து 'எம்பெருமான் இங்கே வந்து சேரும்படியாகக் கூவுங்கள்' என்று வேண்டிக் கொள்கிற இப் பதிகத்தில் ஒரு பாசுரம்; "கோழி கூவென்னுமால், தோழி நான் என் செய்கேன், ஆழி வண்ணர் வரும் பொழுதாயிற்று, கோழி கூவென்னுமால்" - என்பது. இப்பாசுரத்திற்குப் பொருள் உரைத்தல் பற்றி ஓர் **ஐதிஹ்யம்** *கூறப்பெறுகிறது.*

விளக்கம்

இப்பாசுரத்திற்குக் கீழ்க் கண்டவாறு **நஞ்சீயர்** *பொருள் உரைத்ததாக* **நம்பிள்ளை** *அருளிச் செய்வர்.*

கண்ணபிரான், முதலில் சாமக் கோழி கூவியதும் தான் வருவதாகவும் மறுபடியும் அடுத்த சாமத்தில் அக்கோழி கூவும் வரை அவளோடு சேர்ந்து தங்கி விட்டு, மீண்டும் அக்கோழி கூவினவாறே அவளை விட்டுப் பிரிந்து சென்று விடுவதாகவும் கூறியிருக்கிறான்.

எனவே பரகால நாயகி முதலில் "கோழி கூவென்னுமால், ஆழிவண்ணர் வரும் பொழுதாயிற்று" என்கிறாள். கண்ணபிரானுடைய வரவைத் தெரிவிக்கின்ற கோழியானது கூவுகின்றபடியால் கடல் வண்ணனான கண்ணபிரான் என்னோடு கலப்பதற்கு வரும் நேரம் இது" என்று மகிழ்ச்சியோடு கூறுகிறாள். உடனே "தோழி நான் என் செய்கேன்! கோழி கூவென்னுமால்" என்கிறாள். அதாவது கண்ணபிரானோடு கூடியிருக்கையில் ஒரு சாமம் ஒரு நிமிடமாகக் கழிந்து விடுகிறபடியால், "ஐயோ தோழி! நான் என் செய்வேன்! மறுபடியும் கோழி கூவப் போகிறதே! மறுபடியும் கோழி கூவினால் கண்ணன் ஓடிப் போய் விடுவானே!" என்று வருத்தத்துடன் கூறுகிறாள். இவ்வாறு (பாசுரத்திலுள்ள இரண்டாவது மூன்றாவது வரிகளை மாற்றி அந்வயித்து, முதலில் கண்ணபிரான் வரப்போகிறான் என்ற மகிழ்ச்சியுடன் கோழி கூவென்னுமால் என்றும், உடனே கண்ணன் போய்விடப்போகிறானே என்ற துன்பத்துடன் கோழி கூவென்னுமால் என்றும் பரகால நாயகி கூறுவதாக)

நஞ்சீயர் இப்பாசுரத்திற்குப் பொருள் உரைத்தார். "கண்ணன் தன் மடியிலேயே ஒரு கோழியைக் கட்டிக் கொண்டு வருவான் போலும்!" என்று பட்டர் அருளிச் செய்தார் என்பது மிகவும் பிரசித்தம். அதாவது கண்ணபிரானுடைய வரவைத் தெரிவிக்கின்ற கோழி கூவுதலும் பிரிவைத் தெரிவிக்கின்ற கோழி கூவுதலும் உடனுக்குடனே இப்பாசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளமையால், பட்டர் இப்படியருளிச் செய்தார். கண்ணபிரான், தன் மடியில் ஒரு கோழியைக் கட்டிக்கொண்டு வந்து அதை ஒரு முறை கிள்ளுவான்; உடனே அது கூவும்; (சாமக்கோழி கூவின உடனே வருகிறேன் என்று கூறியிருக்கிறானல்லவா! எனவே) நாயகியிடம் கண்ணன் வருவான். வந்த உடனே மறுபடியும் அக்கோழியைக் கிள்ளுவான்; அதுவும் உடனே கூவும். (மறுபடியும் கோழி கூவும்வரைதான் உன்னுடன் இருப்பேன் என்று கூறியிருக்கிறானல்லவா. எனவே) கண்ணன் கோழி கூவி விட்டது என்று கூறி ஓடிப் போய் விடுவான் என்பது பட்டருடைய சுவையான விளக்கமாகும்.

[287]

பூர்வாபரங்களுக்குச் சேர்த்தி போராதாகிலும், பிள்ளையுறங்காவில்லி தாஸர் "பின்னைமணாளர் திறத்தோமான பின்பன்றோ இவை இப்படியாயிற்று, ஸாமான்யனென்று இடுமீடெல்லாம் இடவமையும் என்பாரைப்போலே அவனோடே ஒரு ஸம்ப$_3$ந்த$_4$ம் சொல்லி நலிகிறவை நலிந்தாலென்?" என்பராம்.

(பெரியதிருமொழி 11-2-5)

நிகழிடம்

எம்பெருமானைப் பிரிந்த வருத்தத்தினால் அன்றில், தென்றல் முதலியவைகளும் பரகாலநாயகியைத் துன்புறுத்துவதாக இப்பதிகம் அமைந்துள்ளது. அதில் ஒரு பாசுரம்;

அன்னை முனிவதும் அன்றிலின் குரலீர்வதும்
மன்னுமறிகடலார்ப்பதும் வளை சோர்வதும்
பொன்னங்கலையல்குல் அன்ன மென்னடைப் பூங்குழல்
பின்னைமணாளர் திறந்தமாயின பின்னையே.

(பெற்றதாய் கோபிப்பதும், அன்றிற் பறவையின் குரல் துன்பத்தை விளைவிப்பதும், கடல் ஓசையெழுப்புவதும், கைவளைகள் கழல்வதுமாகிய இவையெல்லாம் நான் நப்பின்னைப் பிராட்டியின் நாயகனான கண்ணபிரானிடத்தில் ஈடுபட்ட பிறகே அன்றோ) என்று எம்பெருமானிடத்தில் ஈடுபாடு கொண்ட பிறகே தான் துன்பங்கள் படுவதாகவும், அவனிடத்தில் ஈடுபடுவதற்கு முன்பு தான் சுகமாக இருந்ததாகவும் தெரிவிக்கிறாள் பரகாலநாயகி. இப்படி வருத்தத்தோடு பேசுவதாகவே, இதற்கு முன்பு உள்ள

பாசுரங்களும், பின்புள்ள பாசுரங்களும் அமைந்திருக்கின்றன. இப்பாசுரத்திற்குப் பிள்ளை உறங்காவில்லிதாஸர் அருளிச்செய்த சுவையான **நிர்வாஹம்** *எடுத்துக் காட்டப்பெறுகிறது.*

விளக்கம்

இப்பாசுரத்திற்கு முன்பும் பின்பும் உள்ள பாசுரங்களின் பொருளுக்கும், **பிள்ளை உறங்காவில்லிதாசர்** *இப்பாட்டிற்குக் கூறிய பொருளுக்கும் தொடர்பு ஏதுமில்லாவிட்டாலும், சுவைமிகு விளக்கமாக அது கூறப்படுகிறது. அவர் கூறிய கருத்து யாதெனில்; "இப்போது தாய் என்னைக் கோபிப்பதும் அன்றிலின் குரல் வருத்துவதும், வளைசோர்வதும் நான் கண்ணபிரானிடத்தில் ஈடுபட்டிருக்கிறேன் என்ற காரணத்தினால்தானே! அந்தக் காரணத்தினால் எனக்கு எந்தத் துன்பம் வந்தாலும் அது எனக்கு விருப்பந்தான்; என்னைச் சாமானியன் என்று நீங்கள் நினைத்து எது செய்தாலும் - எவ்வளவு என்னைப் புடைத்தாலும் அதை ஏற்றுக் கொள்கிறேன் என்று கூறுவதுபோல,[1] எம்பெருமானோடு எனக்குள்ள தொடர்பு காரணமாக எத்தகைய துன்பம் ஏற்பட்டாலும், அதை மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொள்கிறேன்" என்று கூறுகிறாள் பரகாலநாயகி என்பது பிள்ளை உறங்காவில்லி தாசர் பணித்த பொருளாகும்.*

[288]

"இரண்டு பிராட்டிமார் த₃ஶை ஏககாலத்திலே கூடும் படியென்?" என்று சீயர் ப₄ட்டரைக் கேட்க, "தே₃ஶ விஶேஷத்திலே அனேக ஶரீர பரிக்₃ரஹம் ஏககாலத்திலே கூடும்படி எங்ஙனே? அப்படியே அவரையும் பார்த்தருளினால் கூடுமிறே" என்றருளிச் செய்தார்.

(பெரிய திருமொழி 11-5 ப்ரவேசம்)

நிகழிடம்

'மானமருமென்னோக்கி' என்று தொடங்கும் பதிகத்தில் திருமங்கை ஆழ்வார், பிராட்டிமார் இருவருடைய நிலைகளை அடைந்து, ஒருத்தி

1. கண்ணபிரான் வெண்ணெய் திருடி அகப்பட்டுக் கொண்ட போது அவனை உரலோடு சேர்த்துக் கட்டிவிட்டாள் அவனது தாயான யசோதை. அக்கட்டை அறுத்துக் கொண்டு போக சக்தி உள்ளவனாக இருந்த போதும் அவன் அதைச் செய்யவில்லை. "என்னுடைய எளிமைக் குணத்தை வெளிப்படுத்துவதற்காக நான் மேற்கொண்ட இந்த அவதாரத்தில் என்னைப் பரம்பொருள் என்று நினைக்காமல், சாமானியன் என்று நினைத்து நீங்கள் எது செய்தாலும் எனக்கு மகிழ்ச்சியே" என்று, உரலோடே கட்டுண்டு கிடந்தானாம் கண்ணபிரான். வெண்ணெயில் ஈடுபாடுள்ள கண்ணனுக்கு அவ்வெண்ணெயைக் காரணம் காட்டியே கட்டிப் போட்டது மகிழ்ச்சி அளித்தது போல, எம்பெருமான் மீதுள்ள ஈடுபாடு காரணமாகவே துன்பம் ஏற்பட்டதும் பரகால நாயகிக்கு மகிழ்ச்சியளிக்கும் என்பது கருத்து.

எம்பெருமானுடைய ஸௌலப்யத்தை (எளிமையை)க் கூறுவதாகவும் மற்றொருத்தி எம்பெருமானுடைய பரத்வத்தை (மேன்மையை)க் கூறுவதாகவும் பாசுரங்கள் அருளிச்செய்துள்ளார். இத்தொடர்பில் ஒரு **ஸம்வாதம்** *காட்டப் பெறுகிறது.*

விளக்கம்

எண் 24ன் விளக்கம் பார்க்க.

[289]

பிள்ளை திருநறையூர் அரையர் வார்த்தையை நினைப்பது.

(பெரிய திருமொழி 11-8-1)

நிகழ்டம்

இவ்வுலக விஷயங்களால் தாம் படும் துன்பத்தைத் தவிர்த்துத் தமக்கு உடனே மோக்ஷம் தரவேண்டும் என்று எம்பெருமானைத் திருமங்கை ஆழ்வார் வேண்டுகிறார். இவ்வுலகவாழ்க்கையாகிற மாயையை அவனே போக்க வல்லவன் என்பதற்குப் பிள்ளை திருநறையூர் அரையர் அருளிச்செய்த **வார்த்தை** *ஒன்று எடுத்துக்காட்டப்பெறுகிறது.*

விளக்கம்

எண் 162ன் விளக்கம் பார்க்க.

[290]

"இதில் அரைக்ஷணம் பொருந்தாதபடியாயிருக்கிற இவர் பாசுரத்துக்கும், இதொழியச் செல்லாதபடியாயிருக்கிற நம்பரசுரத்திற்கும் வாசியறியாதான் ஒருவன் ஶரண்யனாகப் பெறில் நமக்கு அப்பேறு பெறலாவது" என்றருளிச் செய்த தாமே, அநந்தரம் "मित्रभावेन सम्प्राप्तम् (மித்ரப$_4$ாவேந ஸம்ப்ராப்தம்) என்கிறபடியே இத்தலையில் உள்ளது போட்கனானாலும், நான் அவனை விடேன் என்றருளிச் செய்தபடியாலே நமக்குப் பெறுகைக்குத் தட்டில்லை" என்றருளிச் செய்தருளினார் நஞ்சீயர்.

(பெரிய திருமொழி 11-8-3)

நிகழ்டம்

பிறவித் துன்பத்தின் கொடுமையைப் பேசி, எம்பெருமானை அனுபவிப்பதற்குத் தடையாக உள்ள உடலை உடனே போக்கியருள வேண்டும் என்று திருமங்கையாழ்வார் எம்பெருமான் திருவடிகளில் விழுந்து வேண்டுகிறார் பெரிய திருமொழியின் கடைசிப் பதிகத்தில். அதில் ஒரு பாசுரத்தில் "பாம்போடு ஒரு கூரையிலே பயின்றாற்போல் தாங்காது என்னுள்ளம் தள்ளும்" (ஒரு

பாம்போடு ஒரு கூரை வீட்டிலே வசிப்பது போல என் மனமானது பயத்தால் தடுமாறுகின்றது) என்று அருளிச் செய்கிறார். இதைவிளக்கியருளும் நஞ்சீயர் அருளிச்செய்த **வார்த்தை** ஒன்று எடுத்துக்காட்டப்பெறுகிறது.

விளக்கம்

"இப்படி இந்த உலகியல் வாழ்வில் அரை நொடியும் பொருந்தியிருக்க முடியாமல் பேசுகிற திருமங்கையாழ்வாருடைய பேச்சுக்கும், இந்த உலகியல் வாழ்வையே பற்றித்திரிகிற நம்போல்வாருடைய பேச்சுக்கும் வேறுபாடே தெரியாதவன் ஒருவன் எம்பெருமானாக இருந்தால்தான் நமக்கு உய்வு கிடைக்கும்" என்று **நஞ்சீயர்** முதலில் கூறினார். (திருமங்கையாழ்வாருடைய பக்தி எங்கே! நம் போல்வார் பக்தியின்மை எங்கே! நமக்கும் அவருக்கும் வேறுபாடு தெரியாதவன் ஒருவன் இருந்தால் தான் நமக்கும் வீடு பேறு கிடைக்கும்; அதாவது - நமக்கு நிச்சயம் அந்தப் பேறு கிட்டாது என்று நஞ்சீயர் முதலில் கூறினார்.) இப்படிக் கூறிய அவரே மீண்டும் "மித்ரபாவேந ஸம்ப்ராப்தம் நத்யஜேயம் கதஞ்சன" (நண்பன் என்ற வெளிவேடத்தோடு வந்தவனையும் ஒருகாலும் நான் கைவிட மாட்டேன்) (ஸ்ரீராமாயணம் யுத்தகாண்டம் 10-3) என்று அந்த எம்பெருமானே அருளிச் செய்துள்ளான். நம்மிடத்தில் உள்ளது வெறும் நடிப்பேயானாலும் (பொய்யானாலும்) கைவிடுவதில்லை என்று அவன் அருளிச் செய்துள்ளபடியால் நாம் அந்தப் பேறு பெறுவதற்கு எந்தத் தடையுமில்லை" என்று அருளிச் செய்தார்.

[291]

(படைநின்ற) இப்பாட்டு இயல் அருளிச் செய்யும்போது இதுவேயமையும் என்னும்படி அருளிச் செய்தருள்வர்.

(பெரிய திருமொழி 11-8-6)

நிகழ்டம்

உலகியல் வாழ்க்கையின் கொடிய தன்மைகளைக் கூறி அதிலிருந்து தம்மை விடுவித்தருள வேண்டும் என்று வேண்டுகின்ற திருமங்கையாழ்வார், "இடையனெறிந்த மரமேயொத்திராமே அடைய அருளாய் எனக்குன்றனருளே" (இடையனால் வெட்டப்பட்ட மரம்போல் ஆகாமல், நான் உன்னையடையும்படி அருள வேண்டும்) என்று அருளிச் செய்கிறார். இத் தொடர்பில் நம்பிள்ளை அருளிச்செய்த **வார்த்தை** எடுத்துக்காட்டப்பெறுகிறது.

விளக்கம்

இடையன் எறிந்த மரம்: ஆடுமாடுகள் தழை மேய்வதற்காக இடையர்கள் சில மரங்களின் கிளைகளைக் கைக்கத்தி கொண்டு பாதியளவு வெட்டிச் சாய்ப்பர்.

அதனால் அம்மரத்தின் கிளைகள் பாதி மரத்தில் ஒட்டிக் கொண்டு தொங்கும். அதனால் அவற்றை மேய்கின்ற மாடுகளுக்கு அவை எட்டக்கூடிய உயரத்தில் இருக்கும். மேலும் அக்கிளைகள் மரத்திலிருந்து முழுவதும் வெட்டப் படாமையினால் அதிலுள்ள இலைகளை மாடுகள் தின்றுவிட்டாலும் மறுபடியும் இலைகள் துளிர்க்கவும் செய்யும். அப்பொழுதும் அவை மரத்தில் ஒட்டிக் கொண்டு தொங்கிக்கொண்டே இருக்கின்றபடியால், மாடுகள் மேய்வதற்கு எளிதாக இருக்கும். இப்படிக் கிளைகள் வெட்டப்பட்ட பின்பும் மரத்தில் ஒட்டிக் கொண்டு இருக்கின்ற மரமே இடையன் எறிந்த மரமாகும்.

இடையன் எறிந்த மரம் போல நானும் ஆகிவிடாதபடி முழுவதுமாக அருள் புரிய வேண்டும் என்கிறார் ஆழ்வார். அதாவது எம்பெருமானுடைய அருளைத் தாம் பெற்றிருந்தாலும் இன்னும் உலகிலேயே இருக்கின்றபடியால் மறுபடியும் தமக்கு ஸம்ஸாரம் தொடருமோ என்ற அச்சத்தில் இவ்வாறு அருளிச்செய்கிறார். வெட்டப்பட்ட பின்பும் மரத்தின் தொடர்பு தொடர்வதால் மீண்டும் துளிர்க்கின்றதுபோல் உலகின் தொடர்பு முற்றும் விடுபடாமல் இருக்கின்ற தமக்கும் உலக வாழ்க்கை தொடருமோ என்று அஞ்சித் தம் நிலைமையை ஆழ்வார் இடையன் எறிந்த மரத்தோடு ஒப்பிடுகின்றார். இப்படி அரைகுறையாக அருள் புரியாமல் அடைய (முழுவதுமாகத்) தமக்கு அருள் புரிய வேண்டும் என்று வேண்டுகிறார். 'மெய்யறிவு பிறந்து விட்டபடியால் ஏற்பட்ட மகிழ்ச்சியும், உடனே உலகியல் வாழ்வைத் துறந்து உன்னை அடையப் பெறாமையால் உண்டான வாட்டமுமாக நான் ஆகாதபடி என்னை ஆக்கியருள வேண்டும். உடனே நான் உன்னை அடையும்படியாக அருள் புரிய வேண்டும்' என்று எம்பெருமானை வேண்டுகிறார் திருமங்கையாழ்வார். இப்பாட்டை எம்பெருமான் திருமுன்பே இயல் ஸேவிக்கும்போது 'இடையன் எறிந்த மரமே ஒத்திராமே அடைய அருளாய் எனக்கு உன்றன் அருளே' என்பதுவே நமக்குப் போதும் என்னும்படி இப்பாட்டை (நம்பிள்ளை) அருளிச் செய்வர்.

[292]

ஆளவந்தார், "நாட்டை அழியாமைக்காக ஸ்ரீபாலனைக் கொற்றவன் வாசலுக்குள்ளே சுழற்றி எறிந்தானத்தனை. ருசி முன்னாகப் பெறுவதிறே பேறாவது!" என்றருளிச் செய்தார்.

(திருக்குறுந்தாண்டகம் 17)

நிகழிடம்

'பேருளான் பெருமை பேசி ஏசினார் உய்ந்துபோனார்' (எம்பெருமானுடைய பெருமைகளைக் குற்றங்களாகக் கூறி வைதவர்களும் உய்வு பெற்றார்கள்) என்று திருமங்கையாழ்வார் அருளிச்செய்கிறார். எம்பெருமானை

வைதபின்பு எம்பெருமானாலே வதம் செய்யப்பட்டு, சிசுபாலன் பரமபதம் அடைந்தான் என்று எடுத்துக்காட்டிய உரையாசிரியர், இத்தொடர்பில் ஆளவந்தார் அருளிச்செய்த **வார்த்தை**யை எடுத்துக்காட்டுகிறார்.

விளக்கம்

எண் 134ன் விளக்கம் காண்க.

[293]

(கடலமுதங் கொண்டகாலம்) पश्यतां सर्वदेवानां ययौ वक्षस्थलं हरेः **(பச்யதாம் ஸர்வதே₃வாநாம் யயௌ வக்ஷஸ்த₂லம் ஹரே:) இவ்விடத்திலே சீயர் ப₄ட்டரை, "தே₄வதைகளடங்க நிரம்பியிருக்கச் செய்தே, திருமார்பிலே ஏறுகை ஸ்த்ரீத்வத்துக்குப் போருமோ?" என்று கேட்க, "ப₄ர்த்ருஸம்ச்லேஷத்திலே இழியும்போது கலசப்பானையெடுப்பார்க்குக் கூச வேணுமோ?" என்றருளிச் செய்தார்.**

(திருநெடுந்தாண்டகம் -3)

நிகழிடம்

'பெருவடிவில் கடலமுதம் கொண்டகாலம்' என்று திருமங்கையாழ்வார் அருளிச்செய்துள்ளார். தேவர்களுக்கு அமுதம் எடுப்பதற்காகக் கடல்கடைந்தான் என்று பேராய், அமுதில் வரும் பெண்ணமுதாகிய பிராட்டியைப் பெறுவதற்காகவே கடல்கடைந்தான் என்று விளக்கிய உரையாசிரியர், "பச்யதாம் ஸர்வதேவாநாம் யயௌ வக்ஷஸ்தலம் ஹரே:" (எல்லா தேவதைகளும் பார்த்துக் கொண்டிருக்கும்போதே திருமகளானவள் ஹரியினுடைய திருமார்பில் ஏறினாள்) என்று ஸ்ரீவிஷ்ணுபுராணத்தில் (1-9-105) கூறப்பட்டிருப்பதையும் எடுத்துக் காட்டி, இதுபற்றிய **ஸம்வாதம்** *ஒன்றையும் கூறுகிறார்.*

விளக்கம்

"எல்லா தேவதைகளும் பார்த்துக் கொண்டிருக்கும் போதே திருமகள் எம்பெருமானுடைய திருமார்பில் ஏறியது, அவளுடைய பெண்மைக்குப் பொருந்துமோ?" என்று **நஞ்சீயர்** பட்டரைக் கேட்டார். அதற்கு **பட்டர்**, "அரண்மனை அந்தப்புரத்தில் அரசனோடு கலக்கும் அரசி, அந்தப்புரத்தில் தண்ணீர்ப் பாத்திரம் எடுத்துக் கொடுக்கும் அந்தரங்க கைங்கர்யபரர்களான கூனர், குறளர், பேடிகள், வயதான கிழவர்கள் முதலியவர்களுக்கு வெட்கப்பட மாட்டாளல்லவா? அது போன்றே பிராட்டியும் தேவதைகளுக்கு முன்னே எம்பெருமான் திருமார்பில் ஏறுவதற்கு வெட்கம் கொள்ளவில்லை" என்று பதிலளித்தார். (அந்தப்புரத்தில் பணிபுரியும் கூனர், குறளர் போன்றவர்களே

தேவர்கள்; ஆகையால் அவர்கள் முன்னே எம்பெருமான் திருமார்பில் ஏறுவதற்குப் பிராட்டி வெட்கப்படவேண்டியதில்லை என்பது கருத்து.)

[294]

எம்பார் இவ்விடத்திலே, "நடுவே மது₄வனம் ஒன்று இல்லையாகில் முதலிகளுடைய கிளர்த்தி ராஜ குமாரர்களுடைய முதுகோடே போமித்தனைக்காண்" என்றருளிச்செய்வர்.

(திருநெடுந்தாண்டகம்-6)

நிகழிடம்

திருக்கோவலூர் எனும் திவ்ய தேசத்தைப் பற்றிப் பாசுரம் அருளிச்செய்கின்ற திருமங்கையாழ்வார் அங்குள்ள பெண்ணையாற்றை வர்ணிக்கும்போது 'நிலம்பரந்து வரும் கலுழிப் பெண்ணை' என்றருளிச் செய்கின்றார். திருக்கோவலூர் எம்பெருமானைச் சேவிக்கப் போகின்ற பெருமகிழ்ச்சியால், பெருத்த ஆரவாரத்துடன் பூமியெங்கும் பரவி, கரை மீதுள்ள குடியிருப்புகளையெல்லாம் அழித்துக் கொண்டு வருகின்ற பெண்ணையாறு என்று இதற்கு உரையிட்ட உரையாசிரியர், இதற்கு உதாரணமாக சீதைப்பிராட்டியை அனுமன் கண்டு வந்த மகிழ்ச்சியான செய்தியை இராம பிரானிடம் தெரிவிக்க வந்த வானர வீரர்கள் வழியிடையே மதுவனத்தை அழித்து வந்தமையை இங்கு எடுத்துக் காட்டுகிறார். இவ்விடத்தில் எம்பார் கூறிய சுவையான **வார்த்தை** *ஒன்று கூறப்படுகிறது.*

விளக்கம்

சீதைப்பிராட்டியை அனுமன் கண்டு வந்த செய்தியை முதலில் கேட்ட வானரர்கள் மகிழ்ச்சியால் துள்ளிக் குதித்து, மதுவ்னத்தில் புகுந்து அதைச் சூறையாடி விட்டனரல்லவா?[1] "நடுவில் மதுவனம் என்று ஒன்று இல்லையென்றால், வானரர்களுடைய மகிழ்ச்சி ராமலக்ஷ்மணர்களுடைய முதுகில் அன்றோ வடிந்திருக்கும்" என்பாராம் எம்பார். அதாவது சீதைப்பிராட்டி இருக்குமிடத்தைத் தெரிந்து கொண்ட மகிழ்ச்சியோடு நேரே இராமனிருக்கும் இடத்திற்கு வந்திருந்தால், அந்த மகிழ்ச்சிக்குப் போக்குவீடாக வானரர்கள் அனைவரும் ராமலக்ஷ்மணர்களுடைய முதுகைத் தட்டி, தங்களுடைய மகிழ்ச்சியைக் காண்பித்திருப்பார்கள் அல்லவா? அத்தனை வானரர்களும் கைவைத்தால் ராமலக்ஷ்மணர்களுடைய முதுகு என்னாவது? ஏதோ வழியில் மதுவனம் ஒன்றிருக்கவே அங்கே தங்களுடைய மகிழ்ச்சியைக் காட்டி விட்டன. ராமலக்ஷ்மணர்களுடைய முதுகும் பிழைத்தது என்பராம் எம்பார். பெண்ணை

1. வானரர்கள் மதுவனமழித்த செய்திகளை வான்மீகி ராமாயணம் சுந்தர காண்டம் 61ம் ஸர்க்கத்தில் காண்க.

ஆறு வழியிலுள்ள குடியிருப்புகளை அழித்து வந்தமையால் திருக்கோவலூர் பிழைத்தது; மதுவனம் அழிக்கப் பட்டமையால் ராமபிரானுடைய முதுகு பிழைத்தது என்பது எம்பாருடைய சுவைமிகு வார்த்தையின் கருத்தாகும்.[1]

[295]

(காவல்பூண்ட) … "தம்பி வளைக்காரி அன்றோ" என்று நஞ்சீயர் அருளிச்செய்வர்.

(திருநெடுந்தாண்டகம் -7)

நிகழிடம்

திருக்கோவலூரைப் பற்றிப் பாசுரமிடும் திருமங்கையாழ்வார் "கற்புடைய மடக்கன்னி காவல்பூண்ட" (கற்பும் மடமும் உடைய கன்னியான துர்க்கை காவல் செய்யும் (திருக்கோவலூர்)) என்றருளிச் செய்கிறார். இத்தொடர்பில் நஞ்சீயர் அருளிச்செய்த **வார்த்தை** ஒன்று எடுத்துக்காட்டப்பெறுகிறது.

விளக்கம்

துர்க்கையைக் கண்ணனுக்கு முன்பிறந்த தமக்கை என்று கூறுவர். கம்ஸனுடைய சிறைக் கூடத்திலே கண்ணபிரான் அவதரித்த அன்றைக்கே வசுதேவர் திருவாய்பாடிக்கு எடுத்துச் சென்று, யசோதையிடம் விட்டுவிட்டு, யசோதைக்குப் பிறந்திருந்த பெண் குழந்தையை எடுத்துவந்துவிட்டார். அக்குழந்தையை தேவகிக்குப் பிறந்த எட்டாம் குழந்தையாக நினைத்துக் கம்ஸன் கொல்ல முயன்றபோது அக்குழந்தை ஆகாயத்தில் (அந்தரத்தில்) மறைந்து விட்டது.[2] எனவே அந்தரி என்று துர்க்கை என்றும் பெயர் பெற்றவளானாள்.[3] இப்படிக் கண்ணனுக்கு முன்பே யசோதையிடம் பிறந்தவளாகையாலும், கண்ணபிரானைக் காத்தமையாலும், தம்பியான கண்ணன் மீது துர்க்கை மிகவும் பரிவுடையவள் என்பதுண்டு. அவள் திருக்கோவலூரில் எழுந்தருளியுள்ள எம்பெருமானான ஆயனாருக்குக் காவலாக இருக்கின்றதாகத் திருமங்கை ஆழ்வார் அருளிச்செய்துள்ளபடியால் "தம்பி வளைக்காரியன்றோ?" என்று **நஞ்சீயர்** அருளிச்செய்வராம். வளை என்பது காப்பு எனும் அணிகலனைக்

1. எம்பார் அருளிச்செய்த இதே கருத்துக்கள் எண் 346, 685 ஆகிய இடங்களில் பட்டர் அருளிச்செய்ததாகக் குறிப்பிடப்பெற்றுள்ளது காண்க.
2. இவ்வரலாறுகளை ஸ்ரீ விஷ்ணு புராணம் ஐந்தாவது அம்சம் இரண்டாவது அத்யாயத்தில் விரிவாகக் காணலாம்.
3. 'மந்திரக் கோடியுடுத்தி மணமாலை அந்தரி சூட்டக் கனாக் கண்டேன் தோழி நான்' என்று ஆண்டாளும் (நாச்சியார் திருமொழி 6-3) தனக்கு அந்தரியான துர்க்கை நாத்தனார் (கணவனுடன் பிறந்தவள்) என்ற முறையில் கூறைப் புடவை உடுத்தியதாக அருளிச் செய்துள்ளது காண்க.

குறிக்கின்றது. காப்பு என்பது காத்தலையும் குறிக்குமாதலால், வளைக்காரி என்பது (காப்பை அணிந்தவள் என்பதைக் குறிப்பதோடு மட்டுமல்லாமல்) காப்பவள் என்பதையும் குறிக்கிறது. துர்க்கையானவள் (பிறந்தவன்றே தொடங்கி) தம்பியைக் காத்தவள் அன்றோ! என்பது நஞ்சீயர் கருத்தாகும்.

[296]

(பவளவண்ணா எங்குற்றாய்) साधु मा पाणिना स्पृश (ஸாது$_4$ மா பாணிநா ஸ்ப்ருஶ) "கண்ணானது அவன் பின்னே போயிற்று; த்வகி$_8$ந்த்$_8$ரியம் போயிற்றோ இல்லையோ என்று அறியும்படி உன் கையாலே தடவிப்பாராய் என்கிறான்" என்று அருளிச் செய்வர் ப$_4$ட்டர்.

(திருநெடுந்தாண்டகம் - 9)

நிகழிடம்

எம்பெருமானைப் பலவிதமாக அனுபவிக்க ஆசைப்பட்ட திருமங்கை ஆழ்வார் "பாற்கடலாய்! பாரின் மேலாய்! பனிவரையினுச்சியாய்! பவளவண்ணா! எங்குற்றாய்?" என்று கூக்குரலிடுகிறார். இராமபிரானை வனத்திற்கு அனுப்பிய பிறகு தயரதன் இருந்த நிலைக்கு திருங்கையாழ்வாருடைய நிலையை ஒப்பிடுகின்ற உரையாசிரியர் அங்கு தயரதன் கூறிய சொற்களை மேற்கோளாக எடுத்து விளக்குகிறார். "ராமம் மே அநுகதா த்ருஷ்டி: அத்யாபி ந நிவர்த்ததே, நத்வா பச்யாமி கௌஸல்யே ஸாது மா பாணிநா ஸ்ப்ருச" (என்னுடைய கண்கள் இராமனைப் பின்தொடர்ந்தன. இதுவரை திரும்பவில்லை. கௌஸல்யே! உன்னை என்னால் பார்க்க முடியவில்லை. உன் கைகளால் என்னை நன்றாகத் தொடுவாயாக) (ரா. அ. 42-34) என்பன தயரதன் கூறிய சொற்களாகும். இந்த சுலோகத்தில் "ஸாது மா பாணிநா ஸ்ப்ருச" (என்னை நன்றாகத் தொடுவாயாக) என்று தயரதன் கூறியதற்கு பட்டர் அருளிச்செய்த சுவைமிகு **வார்த்தை** *எடுத்துக்காட்டப்பெறுகிறது.*

விளக்கம்

"என்னுடைய கண்ணானது இராமபிரானைப் பின் தொடர்ந்து சென்று விட்டது. என்னுடைய தொடுவுணர்ச்சியாவது இருக்கிறதா, இல்லையா என்று தெரியவில்லை. எனவே உன்கையால் நன்றாக என்னைத் தடவிப் பார். தொடுவுணர்ச்சி இருக்கிறதா என்று நான் தெரிந்து கொள்கிறேன்" என்று தயரதன் கௌசல்யையை நோக்கிக் கூறியதாக பட்டர் விளக்கமளித்தார்.

[297]

(சொல்லென்னச் சொன்னாள்) எம்பெருமானாரைப் போலேயும் கீ$_8$தோபநிஷத் ஆசார்யனைப் போலேயும் காணும் இக்கட்டுவிச்சி வைப$_8$வம்

இருப்பது. செவி தாழ்த்தார்க்கெல்லாம் வார்த்தை சொல்லிப்போந்தார் உடையவர். ருசியைப் பிறப்பித்து வார்த்தை சொன்னான் கீ₂தோபநிஷத₃ாசார்யன்.

(திருநெடுந்தாண்டகம் 11)

நிகழ்டம்

எம்பெருமானோடு சேரப்பெறாமையினால் துன்பத்தை அடைந்த நாயகியின் நிலையினை அவளுடைய திருத்தாயார் வர்ணிப்பதாகப் பாசுரம் அமைந்துள்ளது. நாயகியின் இந்த நிலைக்குக் காரணம் என்ன என்று கட்டுவிச்சியைக் கேட்க, 'சொல் என்னச் சொன்னாள்' என்று பாசுரத்தில் அருளிச்செய்யப்பட்டுள்ளது. சொல் என்று கேட்டவுடனே சொன்ன கட்டுவிச்சிக்கு எம்பெருமானாரை **உதாரணம்** *காட்டுகிறார் உரையாசிரியர்.*

விளக்கம்

சரமச்லோகத்தினுடைய அர்த்தத்தைக் கேட்பதற்காகத் திருக்கோட்டியூர் நம்பியிடம் பதினெட்டுமுறை நடந்தார் எம்பெருமானார். ஸ்ரீவைஷ்ணவர்கள் சிலர் எம்பெருமானாரிடம் வந்து, "தேவரீருக்கு ஏதேனும் அர்த்தங்கள் கிடைக்குமானால் அதை எங்களுக்கும் உபதேசிக்க வேண்டும்" என்று வேண்டிக் கொண்டனர். ஆனால், திருக்கோட்டியூர் நம்பி எம்பெருமானாருக்கு அர்த்தங்களை உபதேசித்தபோது 'இவற்றை ஒருவருக்கும் சொல்லக்கூடாது' என்று கட்டளையிட்டு, அர்த்தங்களை உபதேசித்தார். ஆனால் எம்பெருமானாரோ திருக்கோட்டியூர் நம்பியினுடைய ஆணையையும் மீறி, 'அர்த்தங்களை எங்களுக்கு உபதேசிக்க வேண்டும்' என்று ஆசையுடன் கேட்டவர்களுக்கு உபதேசித்துவிட்டார். திருக்கோட்டியூர் நம்பி, தம்மிடம் எம்பெருமானார் பதினெட்டுமுறை எழுந்தருளிய பிறகே அர்த்தங்களை உபதேசித்தார். ஆனால் எம்பெருமானாரோ, 'அர்த்தங்களைச் சொல்ல வேணும்' என்று ஸ்ரீவைஷ்ணவர்கள் ஆசையுடன் கேட்டவுடனே அர்த்தங்களை உபதேசித்தார். அர்ஜுனன் கேட்டவுடனே கீதையை உபதேசித்த கண்ணனைப் போலவும், ஸ்ரீவைஷ்ணவர்கள் கேட்டவுடனே ரகசியார்த்தங்களை உபதேசித்த எம்பெருமானாரைப் போலவும், 'சொல்' என்ற உடனே சொன்னாள் கட்டுவிச்சி என்கிறார் உரையாசிரியர்.

[298]

(குணபால மதயானாய்) பெரியமுதலியார் பக்கல் தமக்குண்டான ஆதரத்தாலே மன்னனுடைய வடிவழகையும், செருக்கையும், நிலையழகையும் பற்ற உடையவர் 'குணபால மதயானாய்' என்று மன்னனாரை அருளிச் செய்வர்.

(திருநெடுந்தாண்டகம்-11)

நிகழ்டம்

"உலகமேத்தும் தென்னானாய், வடவானாய், குடபாலானாய், குணபாலமதயானாய் (தெற்குத் திக்கிலுள்ள யானையே! வடக்குத் திக்கிலுள்ள யானையே! மேற்கிலுள்ள யானையே! கிழக்கிலுள்ள யானையே!) என்று நான்கு திக்கிலுள்ள யானைகள் போன்றவனாக எம்பெருமானை அனுபவிக்கிறார் திருமங்கையாழ்வார். இதற்குப் பொருள் உரைக்கின்ற உரையாசிரியர் திருமங்கையாழ்வார் அவதரித்த தலமான திருவாலி திருநகரியை மையமாக வைத்து, அதற்கு நான்கு திக்கிலும் உள்ள நான்கு திவ்ய தேசங்களில் கோயில் கொண்டிருக்கும் எம்பெருமான்களை அவ் யானைகளாகக் குறிப்பிடுகின்றார். தெற்கேயுள்ள திருமாலிருஞ்சோலையில் எழுந்தருளியிருக்கும் அழகரே தென்னானை; வடக்கேயுள்ள திருவேங்கடமலையில் எழுந்தருளியிருக்கும் வேங்கடவனே வடவானை, மேற்கேயுள்ள திருவரங்கத்தில் பள்ளிக் கொண்டிருக்கும் ஸ்ரீரங்கநாதனே குடபாலானை; கிழக்கேயுள்ள திருக்கண்ணபுரத்து எம்பெருமானே குணபாலமதயானை என்று விளக்கிய உரையாசிரியர். 'குணபால மதயானாய்' என்பதற்கு **உடையவர்** அருளிய **நிர்வாஹ**த்தையும் எடுத்துக் காட்டுகிறார்.

விளக்கம்

பெரிய முதலியார் என்று புகழ் பெற்றவரான ஆளவந்தாரிடம்[1] தமக்குள்ள பரமபக்தியாலே அவர் அவதரித்த திருத்தலமான காட்டுமன்னார்கோயிலில்[2] 'மன்னனார்' என்ற திருநாமத்துடன் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானை குணபால மதயானை என்பராம். மிகமிக அழகிய திருமேனியுடனும், செருக்குடனும், யானையானது தன் முன்னிரண்டு கால்களில் ஒன்றை முன்னும் மற்றொன்றைப் பின்னும் வைத்திருப்பதுபோல் நின்ற நிலையழகுடனும் மிக அழகாக எழுந்தருளியுள்ளமை காரணமாக மன்னனாரைக் கிழக்குதிக்கிலுள்ள யானை - குணபாலமதயானை என்று உடையவர் அருளிச்செய்வர்.

1. காட்டுமன்னார் கோயிலிலேயே அவதரித்தவரும், ஆளவந்தாரின் திருப்பாட்டனாருமான நாதமுனிகளையும் பெரிய முதலியார் என்று வழங்குவர். (எண் 94 பார்க்க.)

2. முதல் மூன்று திக்கிலுள்ள யானைகளாகக் கூறப்பட்ட எம்பெருமான்கள் ஆழ்வார்களால் பாடப்பட்ட திவ்ய தேசத்து எம்பெருமான்கள். ஆனால் காட்டுமன்னார்கோயில் என்ற திருத்தலம் நாதமுனிகள், ஆளவந்தார் இவ்விருவருடைய அவதாரத்தலமாகத் திகழ்ந்தாலும், ஆழ்வார்களால் பாடப்பெற்ற திவ்யதேசம் அல்ல. எனினும் தம்முடைய ஆசார்யரான ஆளவந்தாருடைய திருத்தலத்து எம்பெருமானுக்கும் ஆழ்வார் பாடல் பெற்ற பெருமை சேர்க்க வேண்டும் என்பதற்காகவே குணபாலமதயானாய் என்பதற்கு மன்னனாரைப் பொருளாக உடையவர் உரைத்தார் எனலாம்.

[299]

“கல் மாரியாகையாலே கல்லை எடுத்து ரக்ஷித்தான்; நீர் மாரியாகில் கடலை எடுத்து ரக்ஷிக்கும் காணும்!” என்று ப₄ட்டர் அருளிச் செய்வர்.

(திருநெடுந்தாண்டகம் - 13)

நிகழிடம்

*இந்திரனுக்கு என்று படைக்கப்பட்ட உணவையெல்லாம், கோவர்த்தன மலைக்குப் படைத்து விடுமாறு கண்ணபிரான் கூற, அவ்வாறே திருவாய்ப் பாடியிலுள்ள ஆயர்கள் செய்துவிட்டனர். கண்ணபிரான் தானே கோவர்த்தன மலையின் ஸ்தானத்திலிருந்து எல்லாவற்றையும் உண்டுவிட்டான். இதனால் கோபமுற்ற இந்திரன், ஆயர்களைத் துன்புறுத்துவதற்காகக் கல்மழை பொழிந்தான். கண்ணபிரான் அந்த கோவர்த்தன மலையையே பெயர்த்துக் குடையாகப் பிடித்து ஆயர்களைக் காத்தான் என்பது புராணவரலாறு. இதைத் திருமங்கையாழ்வார் “கல்லெடுத்துக் கல்மாரி காத்தாய்” என்றருளிச் செய்கிறார். இதுபற்றி பட்டர் அருளிச்செய்த **வரர்த்தை** ஒன்று எடுத்துக்காட்டப்பெறுகிறது.*

விளக்கம்

எண் 12ன் விளக்கம் பார்க்க.

[300]

(வணங்கினாளே) உடையவர் முதலிகளும் தாமுமாக நீராட எழுந்தருளுகிற போதை ஸமூஹத்தைக் கண்ட ப்ரீதியாலே பெரியநம்பி த₃ண்ட₃னிட, “விநயம் ப₄ாவிப்போமாகில் த₃ண்ட₃னை ஸ்வீகரித்தோமாவுதோம்” என்று பேசாதே எழுந்தருளினாரிறே.

(திருநெடுந்தாண்டகம் - 14)

நிகழிடம்

*பரகால நாயகி, தான் கற்பித்த திருநாமங்களைக் கிளியானது கூறக் கேட்டு, ‘வளர்த்ததனால் பயன் பெற்றேன்’ கூறி அக்கிளியைக் கைகூப்பி வணங்கினாள் என்று பாசுரத்தில் அருளிச்செய்யப்பெறுகிறது. தான் வளர்த்த கிளியைத் தானே வணங்கியது அக்கிளியின்பால் உள்ள வாத்ஸல்யத்தாலே (அன்பினாலே) என்று உரைத்த உரையாசிரியர், இத் தொடர்பில், பெரிய நம்பி தம்முடைய சீடரான எம்பெருமானாரை வணங்கிய **ஐதிஹ்யம்** ஒன்றை எடுத்துக் காட்டுகிறார்.*

விளக்கம்

__உடையவர்__ தம்முடைய சிஷ்யர்களுடன் நீராடுவதற்காகப் பெருந்திரளுடன் காவிரிக்கு எழுந்தருளிக் கொண்டிருந்தபோது, உடையவருடைய ஆசார்யரான

பெரியநம்பி அப்பெருந்திரளைக்[1] கண்ட மகிழ்ச்சியால் விழுந்து வணங்கினார். 'நம்முடைய ஆசார்யர் நம்மை வணங்குகின்றாரே என்று நாம் பணிவைக் காண்பித்தோமானால் அவருடைய வணக்கத்தை ஏற்றுக் கொண்டதாகிவிடும்' என்று கருதி, உடையவர் ஒன்றும் பேசாமலே எழுந்தருளி விட்டார்.[2]

[301]

(கடிபொழிலித்யாதி) அவ்வவ காலத்தில் பிற்பட்டாரையும் ரக்ஷிக்கவன்றோ திருக்கண்ணபுரத்திலே வந்து போ₄க்யபூ₄தனாய் நின்றருளிற்று - இது பூர்வர்கள் நிர்வாஹம். "பசுக்கள் கைகழியப் போகையாலே அவற்றை மறிக்கப் போன இடத்திலே ஶ்ரமஹரமாயிருப்பதொரு பொழிலைக் கண்டு திருவாய்ப்பாடியாக நினைத்துப் புக்கான். அப்பொழில் மயல்மிகு பொழிலாகையாலே கால்வாங்க மாட்டுகிறிலன்" என்றருளிச் செய்வர் ப₄ட்டர்.

(திருநெடுந்தாண்டகம் - 16)

நிகழிடம்

"கன்று மேய்த்து இனிது உகந்த காளாய் என்றும் கடிபொழில் சூழ் கணபுரத்து என் கனியே என்றும்" என்றும் பரகாலநாயகி கூறுவதாகப் பாசுரம் அமைந்துள்ளது. இவ்விரண்டு தொடர்களுக்கும் உள்ள பொருட்சேர்த்திக்கு **நிர்வாஹங்கள்** கூறப்பெறுகின்றன.

விளக்கம்

கண்ணபிரானாக அவதரித்த காலத்தில் கன்றுகளையெல்லாம் ரக்ஷித்து (காத்து) மகிழ்ந்தான்; அந்த அவதாரகாலத்தில் இல்லாதவர்களையும் அதாவது பிற்காலத்தவர்களையும் காக்க வேண்டும் என்பதற்காகத் திருக்கண்ணபுரத்தில் நிலையாக எழுந்தருளியிருக்கிறான் - இது **பூர்வர்கள்** (முந்தைய ஆசார்யர்கள்) அளித்த விளக்கம். ஆனால் **பட்டர்** 'கடிபொழில் சூழ்கணபுரம்' என்றுள்ள சொற்களின் நயத்தை உட்கொண்டு இவ்விரு தொடர்களுக்கும் வேறு வகையாக விளக்கமளித்தார். கன்றுகளை மேய்த்துக் கொண்டே சென்ற கண்ணபிரான், அவை தன்னுடைய கைகழியப் (தன்னை விட்டு வெகுதூரம்) போகின்றது கண்டு, அவற்றை மடக்குவதற்காக வேறு வழியில் போனபோது அங்கு மிகவும்

1. எம்பெருமானாருடைய சீடரான வடுகநம்பி அருளிச்செய்த 'யதிராஜ வைபவம்' எனும் நூலில் "ஏகாந்திநாம் த்வாசதபிஸ் ஸஹஸ்ரை: ஸம்ஸேவித: ஸம்யமி ஸப்தசத்யா" (பன்னிரண்டாயிரம் ஸ்ரீவைஷ்ணவர்களாலும், எழுநூறு ஸந்யாஸிகளாலும் எம்பெருமானார் ஸேவிக்கப்பட்டு எழுந்தருளியிருந்தார்) என்று கூறப்பட்டுள்ளது காண்க.

2. எண் 57ல் பெரியநம்பி எம்பெருமானாரைத் தம்முடைய ஆசார்யரான ஆளவந்தாராக நினைத்து வணங்கியதாகக் குறிப்பிடப்படுவது காண்க.

அழகியதாய், இளைப்பினை நீக்கும்படியான ஒரு பொழிலைக் கண்டான். அதைத் திருவாய்ப்பாடி என்று நினைத்து உள்ளே புகுந்தான். (அதுவே திருக்கண்ணபுரம்). அது மனதை மயக்குகின்ற பொழிலாகையாலே அதிலிருந்து மீளுவதற்கு மனமில்லாமல் அங்கேயே நிலையாகத் தங்கி விட்டான். இதுவே பட்டர் அளித்த சுவைமிகு விளக்கமாகும்.

[302]

(மன்றமரக் கூத்தாடி) "பெருமாள் எழுந்தருளிப் புக்க திருவீதி போலே காண் திருவாய்ப்பாடியில் அம்பலமிருப்பது" என்றருளிச் செய்வர் ப$_4$ட்டர்.

(திருநெடுந்தாண்டகம் - 16)

நிகழ்டம்

"மன்று அமரக் கூத்தாடி மகிழ்ந்தாய்" என்று பரகாலநாயகி கூறுவதாகப் பாசுரம் அமைந்துள்ளது. மன்று - நாற்சந்தி. அதில் கண்ணன் அமர (பொருந்தி) ஆடினான். இதற்கு பட்டர் அருளிச்செய்த **வார்த்தை** எடுத்துக்காட்டப் பெறுகிறது.

விளக்கம்

நம்பெருமாள் (திருவரங்கத்தில் எழுந்தருளியுள்ள உற்சவர்) திருவீதியில் எழுந்தருளி, திருக்கோயிலின் உள்ளே எழுந்தருளிய பின்பும் அவ்வீதிகளில் நம்பெருமாள் எழுந்தருளிக் கொண்டிருப்பதுபோலவே இருக்குமாம். அது போலவேதான் திருவாய்ப்பாடியிலும் கண்ணன் ஆடிய அம்பலம் இருப்பது என்கின்றார் பட்டர். அவன் ஆடிமுடித்தபின்பும் அவன் ஆடிக்கொண்டிருக்கின்றாற்போல் ஒரு தோற்றம் ஏற்படும்படி ஆடினான் என்பது கருத்து. (சில இன்னிசைகள் பாடி முடிக்கப்பட்ட பின்னரும் இசை காதில் ஒலித்துக் கொண்டிருப்பதுபோலவே தோன்றுவதுண்டு. அது அவ்விசையின் சிறப்பாகும். அதைப்போல இங்கும் கொள்ளவேண்டும்.)

[303]

(நங்காய்) 'முகரி' என்று பூர்வர்கள் நிர்வாஹம். அதாகிறது அவன்றான் மேல் விழுகிறதொழிய, நீ வித$_4$க்$_3$தை$_4$யாய் இப்படி மேல் விழக்கடவையோ வென்கை. அத$_2$வா, "பூர்ணையானவளே" என்று ப$_4$ட்டர் அருளிச் செய்வர்.

(திருநெடுந்தாண்டகம் 17)

நிகழ்டம்

பரகாலநாயகி எம்பெருமானுடைய திருநாமங்களைப் பாடுகிறபடியைக் கேட்டும், ஆடுகிறபடியைக் கண்டும் அவளுடைய தாயானவள் "நங்காய் நம்

குடிக்கு இதுவோ நன்மை?" என்கிறாள். இங்குள்ள 'நங்காய்' என்ற சொல்லுக்கு இரண்டு விதமான **நிர்வாஹங்கள்** கூறப்படுகின்றன.

விளக்கம்

பூர்வர்கள் (முன்புள்ள ஆசார்யர்கள்) நங்காய் என்பதற்கு 'முகரி' என்று பொருள் உரைத்தார்கள். அதாவது மிகவும் முக்யமானவள் என்று பொருள். "அவன் தானே உன்னைத் தேடி வந்து உன்னையடைய இப்பாடுகளெல்லாம் படவேண்டியபடி, நீ முக்யமானவளாக இருக்கையில், நீ அவனையடைய இப்பாடுகளையெல்லாம் படலாமோ!" என்று தாயார் கேட்பதை 'நங்காய்!' என்ற சொல் குறிப்பதாகப் பூருவர்கள் உரைத்தார்கள். **பட்டர்** "நங்காய்" என்ற சொல்லுக்கு "பூர்ணையானவளே!" என்று பொருளுரைத்தார். அவனுடைய அடிமையான நம்மை அவன் தன் விருப்பப்படி செய்து கொள்ளட்டும் என்கிற நிறைவு (பூர்த்தி) உடையவளன்றோ நீ! அப்படிப்பட்ட நீ உன் பூர்த்தியை இழந்து, அவன் வரவுக்காகப் பாடுவதும் ஆடுவதும் தகுமோ? என்கிறாள் தாயார் என்று பட்டர் பொருளுரைத்தார்.

[304]

"இப்பெண்பிள்ளை ஆற்றிலே கெடுத்துக் குளத்திலே தேடுகிறாள்; இதுவன்றோ நிறைவழிந்தார் நிற்குமாறு" என்று பிள்ளை அருளிச்செய்வர்.

(திருநெடுந்தாண்டகம் 18)

நிகழ்டம்

எம்பெருமானுடைய வடிவழகில் ஈடுபட்ட பரகாலநாயகி வாய் பிதற்றுபவற்றை அவளுடைய திருத்தாயார் கூறும்போது, "எம்பெருமான் திருவரங்கம் எங்கே என்னும்; நீர்வண்ணன் நீர்மலைக்கே போவேன் என்னும்; இதுவன்றோ நிறைவழிந்தார் நிற்குமாறே" என்கிறாள். "என்னை அபகரித்த எம்பெருமானுடைய ஊரான திருவரங்கத்திற்கு வழி எது? என்கிறாள்; நீர்வண்ணன் எழுந்தருளியுள்ள நீர்மலைக்கே செல்வேன் என்கிறாள்; இதுவன்றோ நிறைவழிந்தவர்கள் இருக்கும் நிலை" என்கிறாள் தாயார். இங்கு திருவரங்கத்திற்கு போகும் வழி எது என்று கேட்ட பரகாலநாயகி, உடனே, திருநீர்மலைக்கே போவேன் என்று கூறியது பற்றி நம்பிள்ளை அருளிச்செய்த **வார்த்தை** எடுத்துக்காட்டப்பெறுகிறது.

விளக்கம்

"ஆற்றிலே கெடுத்த பொருளைக் குளத்திலே தேடுவது போலக் காவிரியாற்றங்கரையில் உள்ள திருவரங்கனிடத்தில் ஈடுபட்ட பரகாலநாயகி (பம்மல் குளமென்கிற) திருநீர்மலைக்குப் போவதாகக் கூறுகின்றாள். இதுதான்

நிறைவு அழிந்தவர்கள் நிற்கும் நிலை" என்று சுவைபட நம்பிள்ளை அருளிச்செய்தார்.

[305]

मच्चित्ता: मद्गतप्राणा: बोधयन्त: परस्परम् (மச்சித்தா: மத்கதப்ராணா: போதயந்த: பரஸ்பரம்) என்கிற இத்தை ஸங்க்ரஹமாக மூன்று பத்துக்கும் வாக்யார்த்தமாக அருளிச் செய்வர் பட்டர்.

(திருநெடுந்தாண்டகம் 21)

நிகழிடம்

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த திருநெடுந்தாண்டகம் என்கிற திவ்யப்பிரபந்தம் முப்பது பாசுரங்கள் கொண்டது. அதில் முதல் பத்துப் பாசுரங்கள் திருமங்கையாழ்வார் தாமான தன்மையிலேயே அருளிச் செய்வன. இரண்டாவது பத்துப்பாசுரங்கள், நாயகி நிலையை அடைந்த தம்முடைய நிலையைத் தம் தாயார் எடுத்துக் கூறுவதாக அமைந்துள்ளன. மூன்றாவது பத்துப் பாசுரங்கள் நாயகி நிலையிலுள்ள தாமே தோழிமாருடன் பேசுவதாக அமைந்துள்ளன. இதை பகவத் கீதையில் உள்ள ஒரு சுலோகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவர்களுடன் ஒப்பிட்டு பட்டர் அருளிச்செய்த **நிர்வாஹம்** *காட்டப்படுகிறது.*

விளக்கம்

பகவத்கீதையில் (10-9) "மச்சித்தா: மத்கதப்ராணா: போதயந்த: பரஸ்பரம் கதயந்தச்ச மாம் நித்யம் துஷ்யந்தி ச ரமந்தி ச (மச்சித்தா:- என்னிடத்தில் வைத்த சிந்தையராய், மத்கதப்ராணா: -என்னைப் பிரிந்தால் தரிக்க முடியாதபடி என்னிடத்தில் உயிரானவர்களாய், போதயந்த: பரஸ்பரம் தாங்கள் என்னை அனுபவித்தது பற்றி ஒருவர்க்கொருவர் தெரிவித்துக் கொண்டவர்களாய், என்னுடைய சேஷ்டிதங்களைப் பேசியும் கேட்டும் மகிழ்கிறார்கள்) என்று தன் பக்தர்களைப் பற்றிக் கண்ணபிரான் கூறுகிறான். எம்பெருமானிடத்தில் வைத்த சிந்தையை உடையவர்களான ரிஷிகளைப் போலே திருமங்கையாழ்வாரும் திருநெடுந்தாண்டகத்தின் முதல் பத்துப் பாசுரங்களில் பேசுகையால் 'மச்சித்தா:' என்றபடியாகிறது. எம்பெருமான் மீதுள்ள அளவற்ற அன்பினால், தான் மூச்சடங்கித் தன் நிலையைத் தானே பேச முடியாமல் தன் தாயார் பேசுவதாக இரண்டாவது பத்துப் பாசுரம் அமைந்துள்ளபடியால் அது 'மத்கதப்ராணா:' என்றபடி ஆகிறது. தனக்கும் எம்பெருமானுக்கும் உள்ள தொடர்பைத் தன் தோழிமார்களுக்கு அறிவித்தும் அவர்கள் வார்த்தைகளைக் கேட்டுத் தான் தரித்தும் பேசுவதாக மூன்றாவது பத்துப் பாசுரம் அமைந்திருப்பதால் அது 'போதயந்த: பரஸ்பரம்' என்றபடியாகிறது. இவ்வாறு கீதையில் கண்ணபிரான்

குறிப்பிட்டுள்ள அடியவர்களின் மூன்று நிலைகளும், திருநெடுந்தாண்டகத்தின் மூன்று பத்துப் பாசுரங்களால் கூறப்படுகின்றன என்று பட்டர் விளக்கியருளினார்.

[306]

(ஆட) "அபி$_4$மதவிஷயத்தைக் கண்டால் முகத்திலே சில அசைவுகள் உண்டாகக் கடவது" என்று ப$_4$ட்டர் அருளிச் செய்வர். அங்ஙனன்றியே "முன்பைக் காட்டுவது, பின்பைக் காட்டுவது, எத்தனை செய்தான் இவள் ஸ்த்ரீத்வத்தையழிக்க" என்று நஞ்சீயர் அருளிச் செய்வர்.

(திருநெடுந்தாண்டகம் 21)

நிகழிடம்

"மகரம் சேர் குழை இருபாடிலங்கி ஆட" எம்பெருமான் வந்தபடியைப் பேசுகின்றாள் பரகாலநாயகி. இங்கு 'ஆட' என்றுள்ள சொல்லுக்கு, பட்டரும் நஞ்சீயரும் அளித்த **நிர்வாஹங்கள்** எடுத்துக் காட்டப்படுகின்றன.

விளக்கம்

"மனத்திற்கு இனியவளைக் கண்டால் முகத்தில் சில அசைவுகள் உண்டாகுமல்லவா! 'ஆட' என்கிற சொல்லால் அதைத்தான் பரகால நாயகி தெரிவிக்கின்றாள்" என்பராம் **பட்டர்**. "எம்பெருமான், தன்னுடைய முன்னழகைக் காட்டுவதும், பின்னழகைக் காட்டுவதுமாக எத்தனை ஆடல்களைச் செய்தான் இவளுடைய பெண்மையை அழிப்பதற்காக! அதைத் தான் 'ஆட' என்கிற சொல்லால் குறிப்பிடுகின்றாள் பரகாலநாயகி" என்பராம் **நஞ்சீயர்**.

[307]

"(நாம் அஞ்சினோம்) என்று ஸ்ரீ ஜனகராஜன் திருமகள் வார்த்தையாய் இருந்தபடி கண்டாயே!" என்று நஞ்சீயர் அருளிச் செய்வர்.

(திருநெடுந்தாண்டகம் 21)

நிகழிடம்

"அவரை நாம் தேவரென்று அஞ்சினோமே" (அவரை எம்பெருமான் என்று நினைத்து நாம் அச்சம் கொண்டோமே) என்கிறாள் பரகால நாயகி. அப்பரகாலநாயகியைச் சீதைப்பிராட்டியாகக் கூறிய உரையாசிரியர், நஞ்சீயர் அருளிச்செய்த **வார்த்தை** ஒன்றையும் எடுத்துக் காட்டுகிறார்.

விளக்கம்

"எதற்கும் அஞ்சாத சீதைப் பிராட்டியும் 'அஞ்சினோமே' என்கிறாளே" என்று **நஞ்சீயர்**, அருளிச்செய்வர். "கஜம் வா வீக்ஷ்ய ஸிம்ஹம் வா வ்யாக்ரம் வாபி

வராங்கநா, நாஹாரயதி ஸந்த்ராஸம் பாஹூ ராமஸ்ய ஸம்ச்ரிதா" (உயர்ந்த பெண்ணான சீதை இராமபிரானுடைய தோள்களை அண்டை கொண்டவளாய்க் கொண்டு காட்டில் யானையையோ, சிங்கத்தையோ, புலியையோ பார்த்து அச்சப்படுவதில்லை) (ராமாயணம் அயோத்யாகாண்டம் 60-20) என்று கூறப்பட்டுள்ளபடி, எம்பெருமானை அண்டை கொண்ட பலத்தால் எதையும் கண்டு பயப்படாத சீதையும் (-பரகாலநாயகியும்) அந்த எம்பெருமானையே கண்டு அஞ்சுகின்றாளே! என்று நஞ்சீயர் அருளிச்செய்வர்.

[308]

(பொன்னித்யாதி) பொன்போலே அலர்ந்து பரிமளிதமாயிருந்துள்ள பூவையுடைத்தான செருந்திப் பொழிலினூடே ஸ்ரமஹரமான கோயில் நம்மூரென்று போயினார். திருநகரியில் நின்றும் கோயிலளவுஞ் செல்லப் பொழிலாய்க் கிடந்ததோவென்னில் "ஒரு காளமேகம் வர்ஷித்துக் கொண்டு போகா நின்றால் கண்ட விடமெங்கும் தளிரும் முறியுமாகாதோ?" என்று ப$_4$ட்டர் அருளிச்செய்வர்.

(திருநெடுந்தாண்டகம் - 25)

நிகழிடம்

எம்பெருமான் தன்னுடைய வடிவழகைக் காட்டி என்னைக் கொள்ளை கொண்டபின்பு, "செருந்திப் பொழிலினூடே புனலரங்கம் நம்மூர் என்று போயினாரே" என்கிறாள் பரகால நாயகி. இத்தொடர்பில் பட்டர் அருளிச்செய்த **வார்த்தை** *ஒன்று காட்டப்பெறுகிறது.*

விளக்கம்

'செருந்திப் பொழிலின் ஊடே திருவரங்கம் நம்மூர் என்று சொல்லிக்கொண்டே போய்விட்டார் என்று பரகால நாயகி கூறுகிறாளே! பரகாலநாயகியின் இருப்பிடமான திருவாலியிலிருந்து திருவரங்கம் வரை பொழிலாகவே இருக்குமோ?' என்னில், "காளமேகம் போன்ற எம்பெருமான் தன் அருள் என்னும் நீரைப் பொழிந்து கொண்டே போனால் அவன் போகும் வழியெல்லாம் - திருநகரியிலிருந்து திருவரங்கம் வரை - பொழிலாகவே ஆகிவிடாதோ?" என்று பட்டர் *அருளிச்செய்தார். இதற்கு முன்பாசுரத்தில் எம்பெருமானை "பெருவயிற்ற கருமுகிலேயொப்பர் வண்ணம்" என்று பரகால நாயகியே கூறியிருக்கிறாள் அன்றோ!*

[309]

விக்ரமசோழதேவன் "உங்கள் தலைமகள் பிரிந்தவிடத்தில் சொன்ன கவியென்?" என்ன "அவள் 'எலும்பும் சாம்பலுமுடையவன்' என்றாள். இவள்

'மின்னிலங்கு திருவுருவும்' என்றாள்" என்ன, "தன் காலிலே துகையுண்டவனைத் தோழிக்குச் சொல்லா நிற்க, 'திருவுரு' என்பதே! இவள் தலைமை உடையவள்; அவள் பிணந்தின்னி" என்றான்.

(திருநெடுந்தாண்டகம் 25)

நிகழிடம்

தன்னைவிட்டுப்பிரிந்து சென்ற எம்பெருமானாகிய நாயகனைப் பற்றிக் கூறுகின்ற பரகால நாயகி, 'மின்னிலங்கு திருவுருவும், பெரியதோளும், கரிமுனிந்த கைத்தலமும் கண்ணும் வாயும்" என்று வருணிக்கின்றாள். இத்தொடர்பில் ஓர் ***ஐதிஹ்யம்*** *கூறப்பெறுகிறது.*

விளக்கம்

விக்ரமசோழதேவன் என்ற அரசன் தமிழலக்கியங்களில் மிகவும் ஈடுபாடு உடையவன். சைவ வைணவப் புலவர்கள் பலர் அவனது சபையில் இருந்தனர். அவ்வப்போது அவரவர்களுடைய இலக்கியங்களைப் பற்றிக் கூறச் சொல்லிக் கேட்பதுண்டு. ஒரு சமயம் அவ்வரசன் "தலைமகனைப் பிரிந்த வருத்தத்தோடு இருக்கின்ற தலைமகள் தலைமகனைப் பற்றிக் கூறுகிற பாசுரங்களைப் பற்றிச் சொல்லுங்கள்" என்று கேட்டான். "தலைமகனான சிவனைப் பிரிந்த தலைமகள் அவனை 'எலும்பும் சாம்பலும் உடையவன்' என்று கூறினாள்" (என்று சைவப்புலவர் கூறினார்.) "தலைமகனான எம்பெருமானைப் பிரிந்த பரகாலநாயகி 'மின்னிலங்கு திருவுருவும் பெரிய தோளும்' என்றாள்" (என்று வைணவப் புலவர் கூறினார்.) "தன்னைப் பிரிந்து வருத்திய தலைமகனைக் கூறும் போதும் 'திருவுரு' என்று கூறுகின்றாளே! நெஞ்சில் வருத்தத்தோடிருந்த போதும் தலைமகனை இப்படிக் கூறியவளே தலைமகள். நாயகனை எலும்பும் சாம்பலும் உடையவன் என்று கூறியவள் பிணந்தின்னி" என்று விக்ரமசோழதேவன் கூறினானாம்.

[310]

(அறுகால சிறுவண்டே) "த்$_{3}$விபாத்தாயிருத்தல் சதுஷ்பாத்தாயிருத்தல் செய்கையன்றிக்கே க$_{4}$மநஸாத$_{4}$நமான கால்கள் ஆறுண்டாகப் பெற்றேன் என்கிறாள்" என்று பூர்வர்கள் நிர்வாஹம். "வண்டுக்கு க$_{3}$மநஸாத$_{4}$நம் சிறகாகையாலும், மேலே 'தொழுதேன்' என்கையாலும், 'என் தலையிலே வைக்கைக்கு ஆறு காலுண்டாகப் பெற்றேன்' என்கிறாள்" என்று ப$_{4}$ட்டர் அருளிச் செய்வர்.

(திருநெடுந்தாண்டகம் 26)

நிகழிடம்

எம்பெருமானிடம் வண்டைத் தூதனுப்புகின்ற பரகால நாயகி 'அறுகால சிறுவண்டே தொழுதேன் உன்னை' (ஆறுகால்களை உடைய வண்டே உன்னைத் தொழுகிறேன்) என்கிறாள். இங்கு, 'ஆறு கால்களையுடைய' என்றுள்ள அடைமொழியின் கருத்தைவிளக்கும் வகையில் நிர்வாஹங்கள் கூறப் பெறுகின்றன.

விளக்கம்

பூர்வர்கள் *(முந்தைய ஆசார்யர்கள்) "இரண்டு கால்களாகவோ, நான்கு கால்களாகவோ, இல்லாமல் எம்பெருமானிடம் விரைந்து செல்கைக்கு உறுப்பாக ஆறுகால்கள் அமையப் பெற்றதே!" என்று பரகாலநாயகி மகிழ்ந்து கூறுவதாக விளக்கினார்களாம். ஆனால்,* **பட்டர்** *"வண்டு விரைந்து செல்வதற்கு ஸாதனம் அதன் சிறகே தவிர கால்களல்ல; மேலே 'தொழுதேன் உன்னை' என்றுளதால் தூது செல்கின்ற வண்டின் கால்களைத் தன் தலை நிறைய வைப்பதற்கு ஆறு கால்கள் அமையப் பெற்றதே! என்ற மகிழ்ச்சியினால் கூறுகின்றாள்" என்று விளக்கம் தந்தருளினாராம்.*

[311]

(திருக்கண்ணபுரம் புக்கு) அனந்தாழ்வான் 'திருவேங்கடமுடையான்' என்னுமாபோலேயும், ப$_4$ட்டர் 'அழகியமணவாளப் பெருமாள்' என்னுமாபோலேயும், சோமாசியாண்டான் 'எம்பெருமானாரே ஶரணம்' என்னுமாபோலேயும் இராதிறே நாம் திருநாமங்களைச் சொல்லும் போது.

(திருநெடுந்தாண்டகம் 27)

நிகழிடம்

நாரையைத் தூதுவிடுகின்ற பரகால நாயகி "திருக்கண்ணபுரம்புக்கு என் செங்கண்மாலுக்கு எங்காதல் என் துணைவர்க்கு உரைத்தியாகில் ..." என்கிறாள். திருமங்கையாழ்வார் திருக்கண்ணபுரத்து எம்பெருமானிடம் மிகவும் ஈடுபாடு உடையவராதலின், ரிஷிகளும் மற்ற ஆழ்வார்களும் திருக்கண்ணபுரம் என்று கூறுவதற்கும் திருமங்கையாழ்வார் திருக்கண்ணபுரம் என்று கூறுவதற்கும் நிறைய வேறுபாடு உண்டு; அவர் அப்படிக் கூறும்போது அவருடைய ஈடுபாடெல்லாம் அந்தச் சொல்லிலிருந்து வெளிப்படும் என்று கூறிய உரையாசிரியர், அதற்குச் சான்றாக ஆசார்யர்கள் சிலருடைய ஈடுபாடுகள் பற்றி **உதாரணம்** *காட்டுகிறார்.*

விளக்கம்

அனந்தாழ்வானுக்குத் திருவேங்கடமுடையான் மீதும் பட்டருக்கு அழகிய மணவாளன் மீதும், சோமாசியாண்டானுக்கு எம்பெருமானார் மீதும் பற்று

மிகமிக அதிகம். எனவே அனந்தாழ்வான் 'திருவேங்கடமுடையான்' என்று கூறும் போதும், பட்டர் 'அழகிய மணவாளப் பெருமாள்' என்று கூறும் போதும், சோமாசியாண்டான் 'எம்பெருமானாரே சரணம்' என்று கூறும் போதும் அவர்களுக்குள்ள ஈடுபாடு முழுவதும் அந்தச் சொற்களைக் கூறும் போதே தெரியும். ஆனால் அதே திருநாமங்களை நாம் உச்சரிக்கும்போது அப்படி இராது என்கிறார் உரையாசிரியர்.[1]

[312]

(அலைகடலித்யாதி) அவனுடைய திருவுள்ளத்தை அடியொற்றின ஆளவந்தார், यदर्थमम्भोधिरमन्थ्यबन्धि च (யத$_3$ர்த்த$_2$மம்போ$_4$தி$_4$ரமந்த்$_2$யப$_3$ந்தி$_4$ ச) என்றாரிறே.

(திருநெடுந்தாண்டகம் 29)

நிகழிடம்

'அலைகடலைக் கடைந்து அடைத்த அம்மானை' என்று அருளிச் செய்கிறார் திருமங்கையாழ்வார். கடலைக் கடைந்தது, கடலை அடைத்து அணை கட்டியது இரண்டுமே திருமகளுக்காகச் செய்த செயல் என்று உரையிடுகின்ற உரையாசிரியர், இதற்குச் சான்றாக ஆளவந்தார் அருளிச்செய்த ஸ்தோத்ர ரத்னத்திலிருந்து ஒரு **ச்லோகம்** *ஒன்றை எடுத்து மேற்கோள் காட்டுகிறார்.*

விளக்கம்

திருமகளைப் பெறுவதற்காகவே கடலைக் கடைந்தான். திருமகளின் அவதாரமான சீதைப்பிராட்டி இலங்கையில் தனிமைச் சிறையில் அடைபட்டுக் கிடக்க, அவளை மீட்பதற்காகவே கடலை அடைத்தான். இதை ஆளவந்தாரும் 'யதர்த்தம் அம்போதி: அமந்த்ய பந்தி ச' (அவளுக்காகக் கடலைக் கடைந்தான் அவளுக்காகக் கடலை அடைத்தான்) (ஸ்தோத்ரரத்னம் - 37) என்று அருளிச்செய்துள்ளார் என்று எடுத்துக் காட்டுகிறார் உரையாசிரியர்.

[313]

மாறனேர்நம்பி, "எம்பெருமானை மறக்க விரகில்லையோ' என்றாராம்.

(முதல் திருவந்தாதி -1)

நிகழிடம்

பொய்கையாழ்வார் "வையம் தகளியா வார்கடலே நெய்யாக வெய்ய கதிரோன் விளக்காக" (பூமியை அகலாக, கடலை நெய்யாக, சூரியனைச் சுடராக)

1. இக்கருத்துக்கள் மற்றும் இரண்டிடங்களில் கூறப்பெற்றுள்ளன. எண் 245, 666 பார்க்க.

வைத்து விளக்கேற்றியதாகத் தமது முதல் பாசுரத்தில் அருளிச் செய்கிறார். இச்சொற்களை ஊன்றி நோக்கும்போது இறைவன் என்று ஒருவன் நிச்சயம் இருத்தல் வேண்டும் என்று பொய்கையாழ்வார் வலியுறுத்தித் தெரிவிப்பதாகப் புலப்படுகிறது. மிகப்பெரிய கடலிலே ஒரு கழற்காய் மிதப்பது போல் இப்பூமி மிதக்கிறது; கடலானது தன்னிடத்தில் பற்பல ஆறுகள் வந்து விழுதலால் நிறைந்து வழிதலாவது, அவை வந்து விழாத காலத்தில் வடிந்து குறைதலாவது இல்லாமல் எப்போதும் ஒரே நிலையில் இருப்பதோடு மட்டுமல்லாமல், தன்னுடைய எல்லையை (கரையை) மீறாமலும் இருக்கின்றது; சூரியனோ அவனுக்கென்று குறித்த காலத்தில் உதிப்பதும் மறைவதும் நீடூழி நடந்து வருகிறது; இவற்றையெல்லாம் பார்க்கும்போது இவற்றை இப்படி இயக்குகின்ற சக்தி படைத்த ஒருவன் இருந்தாக வேண்டும் என்ற உறுதி ஏற்படுகிறது என்று பொய்கை ஆழ்வார் அறிவுறுத்துகிறார். இத்தொடர்பில் மாறநேர்நம்பி அருளிச்செய்த **வார்த்தை** எடுத்துக் காட்டப்பெறுகிறது.

விளக்கம்

எதைப் பார்த்தாலும் இறைவனையே நமக்கு நினைவூட்டுகின்றபடியால் "எம்பெருமானை மறப்பதற்கே வழி ஏதும் இல்லையோ" என்று **மாறநேர்நம்பி** அருளிச் செய்வராம்.[1]

[314]

சீராமப் பிள்ளைக்கு பட்டர், "இதுவே $த_4$ாரகமாக இருக்கிற ஸாது$_4$வை நலியாதே" என்றருளிச் செய்தார்.

(முதல் திருவந்தாதி - 4)

நிகழ்ச்சி

"நெறிவாசல் தானேயாய் நின்றானை - ஆலமரநீழல் அறம் நால்வர்க்கு அன்று உரைத்த அரன் அறிவானாம்" (அடையப்பட வேண்டியவனும், அப்படி அடைவதற்கு வழியாகவும் தானேயாயிருக்கின்ற எம்பெருமானைப் பற்றி ஆலமரத்தின் அடியில் அமர்ந்து தக்ஷர் முதலிய நால்வர்க்கு உபதேசம் செய்த சிவன் அறிந்து விடுவானோ?) என்று பொய்கை ஆழ்வார் அருளிச் செய்கிறார். இத்தொடர்பில் பட்டர் அருளிச்செய்த **வார்த்தை** எடுத்துக்காட்டப்பெறுகிறது.

விளக்கம்

"சிவன் பகவானைத் தான் நன்கு அறிந்தவன் போலப் பிறருக்கு உபதேசிக்கத் தொடங்கிவிட்டானே!" என்று சீராமப் பிள்ளை சிவனைப் பற்றி ஏளனமாகப்

1. எண் 353, 512 பார்க்க.

பேசினாராம். இதைக் கேட்ட பட்டர், "சிவன் பகவானைப் பற்றி உள்ளபடி அறிந்தால் அறியட்டும்; அல்லது அறியாமல் போகட்டும். பகவானையே நினைப்பதும், நால்வர்க்கு உபதேசிப்பதுமாக இவற்றையே தனக்கு தாரகமான (வாழ்முதலாகக்) கொண்ட ஸாதுவான சிவனை நீ நிந்தியாதே" என்றார்!

[315]

நிலாத்துக்குறிபகவன் பட்டரை "பரமபத₃த்திலும் ஈஶ்வரன் சதுர்பு₄ஜனா யிருக்கும் என்னுமிடத்துக்கு ப்ரமாணம் உண்டோ?" என்று கேட்க, तमस: परमो धाता शङ्खचक्रगदाधर: **(தமஸ:பரமோ த₄ாதா ஶங்க₂சக்ரக₃த₃ாத₄ர:) என்று பேசாநின்றதிறே" என்று அருளிச்செய்ய, அவன் கோபிக்க, "ப்ரமாணக₃தி இது, ப்ரஸங்கமாமித்தனையிறே" என்றருளிச் செய்தார்.**

(*முதல் திருவந்தாதி - 5*)

நிகழ்டம்

எம்பெருமானுடைய திருக்கையில் உள்ள ஆயுதம் சக்கரம் (கையது ...நேமி) என்று பொய்கையாழ்வார் அருளிச்செய்கின்றார். இத்தொடர்பில் ஒரு **ஸம்வாதம்** *காட்டப்பெறுகின்றது.*

விளக்கம்

எண் 269ன் விளக்கம் பார்க்க.

[316]

(விரலித்யாதி) "'வெண்ணெய் விழுங்கி வெறுங் கலத்தை வெற்பிடை இட்டு' என்றும் சொல்லா நின்றது; 'விரலோடு வாய் தோய்ந்த' என்றும் சொல்லா நின்றது; இவை எங்ஙனே சேரும்படி?" என்று பிள்ளை திருநறையூரரையர் ப₄ட்டரைக் கேட்க, "இவனுக்கு என்றும் திருப்பணி இதுவன்றோ! ஒரு நாள் அங்ஙனுமாகிறது; ஒருநாள் இங்ஙனுமாகிறது" என்றருளிச் செய்தார்.

(*முதல் திருவந்தாதி - 24*)

நிகழ்டம்

கண்ணபிரான் வெண்ணெயைக் களவு செய்து, அதை உண்ண வேண்டும் என்று வாயருகே கொண்டு சென்றவளவிலே யசோதை அவனைப் பார்த்து விட்டாள்; உடனே அவனை உரலோடு கட்டி விட்டாள். இதைப்

1. சிவன் எம்பெருமானைக் குறித்து தியானம் செய்தமையையும், தான் எம்பெருமானை வணங்கியவாற்றை நால்வர்க்கு உபதேசித்தமையையும் திருமழிசை ஆழ்வார் தமது நான்முகன் திருவந்தாதியில் முறையே 78, 17 பாசுரங்களில் அருளிச்செய்வது காண்க.

பொய்கையாழ்வார் "விரலொடு வாய் தோய்ந்த வெண்ணெய் கண்டு ஆய்ச்சி உரலோடு உறப்பிணித்த நான்று" என்றருளிச்செய்கிறார். இத்தொடர்பில் ஒரு **ஸம்வாதம்** காட்டப்பெறுகிறது.

விளக்கம்

"வெண்ணெய் விழுங்கி வெறுங்கலத்தை வெற்பிடையிட்டு" என்ற பெரியாழ்வார் திருமொழி (2-9-1) பாசுரத்தில் கண்ணபிரான் பாத்திரத்திலிருந்த வெண்ணெய் முழுவதையும் விழுங்கிவிட்டு வெறும் பாத்திரத்தையன்றோ கல்லில் இட்டு உடைத்ததாகக் கூறப்படுகிறது? ஆனால் பொய்கையாழ்வார், கண்ணபிரான் வெண்ணெய் உண்பதற்காக வாயருகே விரலைக் கொண்டு சென்றபோதே பிடிபட்டு விட்டதாக அருளிச் செய்கிறாரே! இவ்விரண்டில் எது சரி?" என்று **பிள்ளை திருநறையூர் அரையர்** கேட்டார். அதற்கு **பட்டர்** "கண்ணபிரான் வெண்ணெய் களவுசெய்தது ஒரு நாள் மட்டுமோ? தினந்தோறும் அவனுக்கு வெண்ணெய் களவு செய்வதுதானே காரியம்! ஒரு நாள் எல்லாம் விழுங்கிய பின் பிடிபட்டான்; ஒருநாள் விழுங்கத் தொடங்குவதற்கு முன்பே பிடிபட்டான்" என்று சுவையாக பதிலளித்தார்.

[317]

(திருமகளிக்யாதி) அனந்தாழ்வான் "திருமகட்கே தீர்ந்தவாறென்கொல், மண்மகட்கே தீர்ந்தவாறென்கொல், ஆய்மகட்கே தீர்ந்தவாறென் கொல்" என்று பணிக்கும். "திருப்பாற்கடலின் குறுந்திவலை திருமுகத்திலே படும்படிக் கீடாகத் திருவனந்தாழ்வான் மேலே கிடந்த மாலோத வண்ணருடைய திருமகள் மேல் வைத்த திருவுள்ளம், திருமகளும் மண்மகளும் ஆய்மகளும் சேர்ந்தால் திருமகட்கே தீர்ந்தவாறென் கொல்" என்று அருளிச் செய்வர் பட்டர்.

(*முதல் திருவந்தாதி* - 42)

நிகழ்டம்

"திருமகளும் மண்மகளும் ஆய்மகளும் சேர்ந்தால் திருமகட்கே தீர்ந்தவாறு என்கொல்" என்பது பொய்கை ஆழ்வார் பாசுரம். இதற்கு இரண்டு வகையான **நிர்வாஹ**ங்கள் எடுத்துக் காட்டப்படுகின்றன.

விளக்கம்

'தீர்ந்தவாறென்கொல்' என்பதைப் பிராட்டிமார் மூவரிடத்திலும் கூட்டி 'திருமகட்கே தீர்ந்தவாறென்கொல், மண்மகட்கே தீர்ந்தவாறென்கொல், ஆய்மகட்கே தீர்ந்தவாறென்கொல்' என்று **அனந்தாழ்வான்** விளக்கினார். எம்பெருமான் திருமகளிடத்தும் மண்மகளிடத்தும், ஆய்மகளிடத்தும் கலந்து பரிமாறும்போது 'நம்மையொழிய மண்மகளைக் கண்ணெடுத்தும்

பார்ப்பதில்லை' என்று திருமகள் நினைக்கும்படியாகவும், 'நம்மையொழியத் திருமகளைக் கண்ணெடுத்தும் பார்ப்பதில்லை' என்று மண்மகள் நினைக்கும் படியாகவும், இப்படியே ஆய்மகளும் நினைக்கும்படியாகவும், ஒவ்வொரு பிராட்டிக்கும் அற்றுத் தீர்ந்து பரிமாறுகிறபடியைக் கூறுவதாக அனந்தாழ்வான் விளக்கமளித்தார்!

இங்ஙனன்றிக்கே, பட்டர் வேறுவகையாக விளக்கமளித்தார். 'திருமகளும், மண்மகளும் ஆய்மகளும் சேர்ந்தால் திருமகட்கே தீர்ந்தவாறு என்கொல்? - திருமகளோடும், மண்மகளோடும் ஆய்மகளோடும் சேர்ந்தால், திருமகள் ஒருத்திக்கே அற்றுத் தீர்ந்திருப்பது எங்ஙனம்?' - என்று பட்டர் பொருள் உரைத்தார். அதாவது திருமகளுக்கு மண்மகளும் ஆய்மகளும் கை, கால் முதலிய உறுப்புக்கள் போன்றவர்கள்; எனவே மற்ற பிராட்டிமாரோடு எம்பெருமான் கலந்து பரிமாறுவதைத் திருமகள், தன்னுடைய முலையோடும் தோளோடும் கலந்து பரிமாறுவது போலவே நினைத்திருப்பாள்; எனவே மூவரோடும் கலந்து பரிமாறும்போது மற்ற இருவரையும் அவயவங்களாக (உறுப்புக்களாக) கொண்டு, திருமகளிடத்திலேயே முக்கியமாக அற்றுத் தீர்வது என்னோ? என்று பட்டர் விளக்கமளித்தார்.[2]

[318]

(தமருகந்தித்யாதி) எம்பெருமானார் மாதுகரத்துக்கு எழுந்தருளாநிற்க, சில பிள்ளைகள் காலாலே கீறி, "உம்முடைய எம்பெருமான் திருமேனி" என்று காட்ட, பாத்ரத்தை வைத்து தண்டனிட்டருளினார். இவ்வர்த்தத்திலே "கோயிலிலே சில பிள்ளைகள் விளையாடுகிறவர்கள் திருவீதியிலேயிருந்து பெருமாளும் நாய்ச்சிமாரும் பெரிய திருமண்டபமும் கற்பித்துப் பெரும் திருப்பாவாடையும் அமுது செய்வித்து, "எம்பெருமானார்! ப்ரஸாதப்படும்" என்று மணலைக்

1. ஸௌபரி என்ற முனிவன் மாந்தாதா என்ற அரசனுடைய பெண்கள் ஐம்பதின்மரை மணந்து கொண்டு, தானும் ஐம்பது உருக்கொண்டு தனித்தனியே அவர்களுடன் இருந்தபோது, மனைவி ஒவ்வொருத்தியும் "நம்முடைய கணவன் மற்றவர்களை மறந்து விட்டு எப்போதும் நம்முடனே இருக்கின்றாரே!" என்று நினைத்திருந்த வரலாறு இங்கே நினைவு கூறத்தக்கது.

2. பராசரபட்டர் ஸ்ரீகுணரத்னகோசத்தில் (26) 'போக்யாவாமபி நாந்தரீயகதயா புஷ்பாங்க ராகைஸ்ஸமம், நிர்வ்ருத்தப்ரணயாதி வாஹநவிதௌ நீதா பரீவாஹதாம், தேவீத்வாமநுநீலயாஸஹ மஹீதேவ்யஸ்ஸஹஸ்ரம் ததா யாபித்வம் ஸ்தநபாஹுத்ருஷ்டிபிரிவ ஸ்வாபி: ப்ரியம் ச்லாகஸே' (பெரிய பிராட்டியாரே! தேவரீரும் பெருமாளும் கலந்து பரிமாறும்போது மண்மகளும் ஆய்மகளும் மற்றுமுள்ள தேவிமார்களும் புஷ்பம் சந்தனம் போன்ற பொருள்களாய் நிற்பார்கள். அத்தேவிகளை நீர் உம்முடைய திருமுலை திருத்தோள் முதலிய உறுப்புகளாகக் கொண்டு பெருமாளுக்கு இன்ப மூட்டுகின்றீர்.) என்றருளிச் செய்துள்ளது ஒப்பு நோக்கத்தக்கது.

கையாலே முகங்கெடுக்க தத்காலத்திலே மாதுகரத்துக்கு எழுந்தருளுகிற உடையவர் அவ்விடத்திலே அது கேட்டருளி தண்டனிட்டு அவர்களெடுத்த ப்ரஸாதத்தைப் பாத்ரத்திலே ஏற்றார்" என்று சீயர் அருளிச் செய்தார்.

(முதல் திருவந்தாதி -44)

நிகழிடம்

"தமருகந்தது எவ்வுருவம் அவ்வுருவம் தானே" (தன் அடியவர்கள் எந்த உருவத்தை விரும்புகிறார்களோ அந்த உருவத்தைத் தானே அடைவான் எம்பெருமான்) என்கிறார் பொய்கையாழ்வார். அடியவர்கள் ஒரு கல்லையோ, மண்ணையோ, உலோகங்களையோ, எதை எம்பெருமானுக்குத் திருமேனியாக ஆக்கினாலும், அதையே எம்பெருமானும் தனக்குத் திருமேனியாகக் கொண்டு அதில் உறைவான் என்று இதை விளக்கிய உரையாசிரியர் இத்தொடர்பில் ஓர் **ஐதிஹ்யத்தை** எடுத்துக்காட்டுகிறார்.

விளக்கம்

எம்பெருமானார் ஒரு முறை பிக்ஷைக்காகத் திருவீதியில் எழுந்தருளிக் கொண்டிருந்தபோது தெருவில் மணலிலே விளையாடிக் கொண்டிருந்த சில சிறுவர்கள் மணலிலே எம்பெருமானுடைய வடிவத்தைப் போலக் கீறி "உடையவரே! உம்முடைய பெருமாள் பார்த்தீரா?" என்றழைத்துக் காட்ட, எம்பெருமான் மீது அன்புடையவர்களான அச்சிறுவர்கள் மணலால் அமைந்த வடிவத்தையே எம்பெருமானாகக் கொண்டால், உண்மையிலேயே எம்பெருமானும் அதையே தனக்குத் திருமேனியாகக் கொள்வான் என்ற உறுதி கொண்டு, எம்பெருமானார் பிக்ஷைப்பாத்திரத்தைக் கீழே வைத்துவிட்டு அந்த எம்பெருமானை வணங்கினார்.

இந்த நிகழ்ச்சியையே **நஞ்சீயர்** விளக்கமாக அருளிச் செய்தபடியையும் எடுத்துக் காட்டுகிறார் உரையாசிரியர். "ஸ்ரீரங்கத்தில் மணலிலே விளையாடுகின்ற சிறு பிள்ளைகள் சிலர், கோயிலில் நடக்கின்ற நிகழ்ச்சியை அப்படியே பின்பற்றி விளையாடிக் கொண்டிருந்தனர். மணலிலேயே பெருமாள், நாச்சிமார், மண்டபம் இவைகளைச் சமைத்து, பிறகு சிறிது மணலையே எடுத்துப் பெருமாளுக்கு அமுது செய்யும் பிரசாதமாகவும் வைத்தனர். பிறகு கோயிலில் அழைப்பது போலவே "எம்பெருமானார்! பிரசாதத்தைப் பெற்றுக் கொள்ளும்" என்று கூறி அச்சிறுவர்கள் மணலை முகந்து எடுக்க, தற்செயலாக அப்போது பிக்ஷைக்காக எழுந்தருளிக் கொண்டிருந்த எம்பெருமானார் அதைக் கேட்டு, உண்மையாகவே அங்கே பெருமாள் எழுந்தருளியிருப்பதாகவும், அந்த மணலை உண்மையாகவே பிரசாதமாகவும் கொண்டு, கீழே விழுந்து வணங்கி, அந்தப் பிரசாதத்தை (மணலை)த் தம்முடைய பிக்ஷைப் பாத்திரத்தில் ஏற்றுக் கொண்டருளினார்" என்று நஞ்சீயர் அருளிச் செய்தார்.

[319]

(எப்பேர் மற்றப்பேர்) எங்களாழ்வார் பாடே ஆயர் தேவு சென்று நாவற்பழம் வேண்ட "நீ யார்?" என்று அவர் கேட்க, "சீயர் மகனான ஆயர்தேவு" என்ன, சீயரைக் கண்டு "உம்முடைய பிள்ளை எங்களைக் குடியிருக்கவொட்டுகிறிலன்" என்றார்.

(முதல் திருவந்தாதி -44)

நிகழிடம்

'தமர் உகந்தது எப்பேர் மற்றப்பேர்' (அடியவர்கள் எந்தப் பெயரை விரும்புகின்றார்களோ அப்பெயரை எம்பெருமான் உகந்து ஏற்றுக்கொள்கிறான்) என்கிறார். பொய்கை ஆழ்வார். இதை விளக்க ஓர் **ஐதிஹ்யம்** *கூறப்படுகிறது.*

விளக்கம்

நஞ்சீயர் தம்முடைய திருவாராதன எம்பெருமானுக்கு 'ஆயர்தேவு' என்று திருநாமம் சூட்டியிருந்தார். அந்த எம்பெருமான் ஒருநாள் எங்களாழ்வான் என்பவருடைய கனவில் வந்து நாவற்பழம் தருமாறு வேண்டினான். எங்களாழ்வான் "நீ யார்" என்று கேட்க, "நான் நஞ்சீயருடைய மகனான ஆயர் தேவு" என்று (நஞ்சீயர் விரும்பிச் சூட்டிய பெயரையே தனக்குப் பெயராகக் கூறி) எம்பெருமான் விடையளித்தான். மறுநாள் நஞ்சீயரைச் சந்தித்த எங்களாழ்வான் "உம்முடைய பிள்ளையான ஆயர்தேவு நாவற்பழம் வேண்டும் என்று உயிரை வாங்கி எங்களைக் குடியிருக்க விடமாட்டேன் என்கிறானே!" என்று வேடிக்கையாக அருளிச் செய்தாராம்.

[320]

(மன்னுயிர்) ஆப்பான் சீயருக்கு "சீயரே! இவ்வுலகு எம்பெருமானை அல்லது அறியாது இருந்ததோ!" என்ன, "அதுக்குப் பொருளென்?" என்ன, "உயர்ந்தோர் எம்பெருமானை அல்லது அறியார்" என்ன, இத்தை பட்டரைக் கேட்க, "அதுக்கொரு குற்றமுண்டு, 'ஓராழி சூழ்ந்த' என்று விஶேஷிக்க வொண்ணாது" என்ன, "இதுக்குப் பொருளோ?" என்ன, "சீயரே! நான் சொல்லும் பொருளென்?" என்ன, "உலகு அறியாது" என்ன, "அதுவே பொருள்" என்றார். இத்தைப் பிள்ளையும் சீயருக்கு உரைக்க, "திருக்கலிகன்றிதாஸர் மறந்ததை உணர்த்தினார்" என்றருளிச் செய்தார்.

(முதல் திருவந்தாதி - 60)

1. எண் 16 பார்க்க.

நிகழிடம்

"மன்னுயிர்கட்கெல்லாம் அரணாய பேராழி கொண்ட பிரானன்றி மற்றறியாது ஓராழி சூழ்ந்த உலகு" என்பது பொய்கை ஆழ்வார் பாசுரம். இதற்குப் பொருள் கூறுவது பற்றி, ஆப்பான், நஞ்சீயர், பட்டர் ஆகிய மூவருக்கிடையே நடைபெற்ற **ஸம்வாதம்** கூறப்பெறுகின்றது.

விளக்கம்

ஆப்பான்: நஞ்சீயரே! மன் உயிர்கட்கு எல்லாம் அரணாக இருக்கின்ற, பேராழி கொண்ட பிரானைத் தவிர கடல் சூழ்ந்த உலகமானது வேறொன்றையும் அறியாது என்று இதற்குப் பொருள் கூறலாமோ?

நஞ்சீயர்: உலகமானது எம்பெருமானை மறந்து விட்டு மற்றவற்றையே அன்றோ அறிந்திருக்கின்றது! எனவே உலகமானது பிரானைத் தவிர வேறொன்றையும் அறியாது என்பது சரியான பொருளல்ல. (உலகம் என்பது ஆகுபெயராகி உலகத்திலுள்ளவர்கள் அனைவரையும் குறிக்கின்றது.)

ஆப்பான்: அப்படியானால், சரியான பொருள்தான் என்ன?

நஞ்சீயர்: உலகம் என்பது இவ்விடத்தில் பொதுவாக உலகத்தில் உள்ளவர்கள் எல்லோரையும் குறிப்பதாகக் கொள்ள வேண்டாம். 'உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே' என்பது (திவாகர) நிகண்டு. எனவே உலகு என்பதற்குச் 'சிறந்த ஞானிகள்' என்று பொருள் கொண்டால் 'சிறந்த ஞானிகள் பிரானையல்லது மற்றறியார்கள்' என்று பொருள் கூறலாம். அதுவே சரியாக இருக்கும்.

(இதைப் பற்றி பட்டரிடம் கேட்டபோது)

பட்டர்: உலகு என்பதற்கு ஞானிகள் என்று இங்கு பொருள் கொள்ள முடியாது. இங்கு 'ஓராழி சூழ்ந்த உலகு' என்றிருப்பதை நோக்க வேண்டும். 'ஓராழி சூழ்ந்த உலகு' என்பதற்கு 'கடலால் சூழப்பட்ட உலகத்தில் உள்ளவர்கள்' என்று பொருள் கொண்டால், அது உலகில் உள்ள தாழ்ந்தவர்கள் உயர்ந்தவர்கள் அனைவரையுமேதான் காட்டும். உயர்ந்தவர்களை மட்டும் காட்டாது. எனவே ஞானிகள் பிரானை அல்லது மற்று அறியார்கள் என்று இங்குப் பொருள் கூறமுடியாது.

நஞ்சீயர்: பின் இதற்குப் பொருள்தான் என்ன?

பட்டர்: நான் கருதியிருக்கும் பொருள் என்ன என்று நீரே கூறும்.

நஞ்சீயர்: மன்னுயிர்கட்கெல்லாம் அரணானவற்றை, பேராழி கொண்ட பிரானே அறிவான். கடல் சூழ்ந்த இவ்வுலகம் அறியாது என்பதுதான் தேவரீர் கூறும் பொருளோ?

பட்டர்: ஆம், அதுவே பொருள்.

'அராணாய' என்பதை, பிரானுக்கு அடைமொழியாக்கி அரணாக இருக்கின்ற பிரானைத் தவிர வேறொன்றை இவ்வுலகத்தில் உள்ளவர்கள் (அனைவரும்) அறியமாட்டார்கள் என்று ஆப்பான் பொருளுரைத்தார்.. உலகத்திலுள்ளவர்கள் எல்லோரும் எம்பெருமானைத் தவிர வேறொன்றை அறியார்கள் என்பது தவறு; உயர்ந்த ஞானிகளைத் தவிர மற்றவர்கள் எம்பெருமானை அறியமாட்டாதவர்களாகவே இருக்கின்றனர்; எனவே உலகு என்பதற்கு உயர்ந்தவர்கள் என்று பொருள் கொண்டு ஞானிகள் எம்பெருமானைத் தவிர வேறொன்றை அறியார்கள் என்று நஞ்சீயர் பொருளுரைத்தார். கடல் சூழ்ந்த உலகு என்று பாசுரம் உள்ளதால் இப்பொருளும் பொருந்தாது என்று கருதிய பட்டர் 'அரணாய' என்பதை பிரானுக்கு அடைமொழியாகக் கொள்ளாமல், 'உயிர்களுக்கு அரணானவற்றை' என்று (பயனிலையாகக்) கொண்டு 'உயிர்களுக்கு அரணானவற்றை எம்பெருமானே அறிவான்; உலகு அறியாது' என்று பொருளுரைத்தார். (உலகோர்கள் அனைவரும் எம்பெருமானைத் தவிர வேறு அறியார்கள் என்பது ஆப்பான் கூறிய பொருள். உலகில் உள்ள உயர்ந்த ஞானிகள் (மட்டும்) எம்பெருமானை தவிர வேறு அறியார்கள் என்பது நஞ்சீயர் கூறிய பொருள். உயிர்களுக்கு அரணானவற்றை எம்பெருமானே அறிவான், உலகோர்கள் அறியார்கள் என்பது பட்டர் உரைத்த பொருள்.)

இவ்வாறு பட்டர் நஞ்சீயருக்கு அருளிச் செய்ததை, **நம்பிள்ளை** ஒருமுறை நஞ்சீயருக்கு நினைவுறுத்த, "நாம் மறந்திருந்ததை திருக்கலிகன்றிதாஸர் (நம்பிள்ளை) நினைவுறுத்தினார்" என்றருளிச் செய்தார்.

[321]

எம்பார் விடிவோரை அனுஸந்தி₄க்கும் பாட்டு.

(முதல் திருவந்தாதி - 76)

நிகழிடம்

"எம்பெருமானே! உன்னோடு தொடர்புடைய திருவேங்கடமலையே, தன்னைப் பற்றினவர்களுக்கு நற்கதியைத் தரும் வல்லமையுடைத்தாக இருக்கையில் உன்னைத் தொழுபவர்கள் நற்கதி பெறுவார்கள் என்பதைக் கூறவும் வேண்டுமோ?" என்று பொய்கையாழ்வார் "வழிநின்று நின்னைத் தொழுவார்" என்கிற இப்பாசுரத்தில் அருளிச்செய்கிறார். இத்தொடர்பில் ஓர் **ஐதிஹ்யம்** கூறப்பெறுகிறது.

விளக்கம்

திருவேங்கடமலையே அடியவர்களுக்கு நற்கதி அளிக்கும் வல்லமை உடையது என்ற இக்கருத்தை மிக உகந்து எம்பார் நாடோறும் விடியற்காலையில் இப்பாசுரத்தை அனுஸந்திப்பராம்!

[322]

(உராய் இத்யாதி) 'உராய்' என்று பட்டர் "அநாயாஸேந அளந்தவன்று" என்று அருளிச் செய்தார்.

(முதல் திருவந்தாதி -84)

நிகழ்டம்

எம்பெருமான் உலகளந்ததைப் பற்றிக் கூறும் பொய்கையாழ்வார் 'உராய் உலகளந்த நான்று' என்றருளிச் செய்கிறார். இங்கு 'உராய்' என்ற சொல்லுக்கு பட்டர் அளித்த ***நிர்வாஹம்*** *கூறப்பெறுகிறது.*

விளக்கம்

'உராய்' என்பதற்கு 'மிகவும் எளிதாக' என்று பொருளுரைத்தார் பட்டர். உராய் - உலாய் (உலாவி). 'ர' கரமானது 'ல' கரத்துக்குப் போலியாக வருவதுண்டு என்பது இலக்கண மரபு. எனவே உலாய் - உலாவி, சிறிதும் சிரமமின்றி உலகளந்தான் என்பது பட்டர் உரைத்த பொருளாகும்.

[323]

(நாடோறும்) சீயர் திருவடிகளை ஆச்ரயித்திருப்பான் ஒரு வைஷ்ணவன் வர, "நீ பலநாள் வரத் தவிர்ந்தாயே!" என்று அருளிச்செய்ய, "நீர் ஒருகால் அருளிச்செய்தபடியை நினைத்திருக்க அமையாதோ?" என்ன, "நம்பிக்கை நிலையிலே வர்த்திக்கிறதும் மாண்டு, 'நாடோறும் ஏனத்துருவாய் உலகிடந்த ஊழியான் பாதம் மருவாதார்க்கு உண்டாமோ வான்' என்கிற இப்பாட்டும், கெடுவாய்! கேட்டறியாயோ?" என்றார்.

(முதல் திருவந்தாதி - 91)

1. எம்பார் தம்முடைய மாதுலரான (மாமனான) பெரிய திருமலை நம்பியால் திருத்தப்பட்டு அவருடனே திருமலையிலேயே நித்தியவாசமாகப் பலவருடங்கள் எழுந்தருளியிருந்ததாக குருபரம்பரை வரலாறுகள் தெரிவிக்கின்றன. எனவே திருவேங்கடமலையைப் பற்றிய இப்பாசுரத்தில் எம்பார் மிகவும் ஈடுபாடுள்ளவர் என்பது பொருத்தமே. இதே போல் திருமலை நம்பியும் திருவேங்கடமலையைப் பற்றிய நாச்சியார் திருமொழிப் பாசுரங்கள் இரண்டில் மிக ஈடுபட்டிருந்ததாகத் தெரிவிக்கும் எண் 138 காண்க.

நிகழிடம்

'நாடோறும் மருவாதார்க்கு உண்டாமோ வான்' (எம்பெருமானுடைய திருவடிகளை தினந்தோறும் வணங்காதவர்களுக்குப் பரமபதம் கிடைக்குமோ?) என்கிறார் பொய்கையாழ்வார். இதை விளக்க ஓர் **ஐதிஹ்யம்** *கூறப்படுகிறது.*

விளக்கம்

நஞ்சீயருடைய *சீடரான ஒருவர் பலநாள் நஞ்சீயரை வந்து ஸேவிக்காமலே இருந்துவிட்டார். திடீரென்று ஒரு நாள் வந்த அவரைக் கண்ட நஞ்சீயர் "பல நாள்களாக வராமலே இருந்து விட்டாயே?" என்று கேட்க, அவர் "தேவரீர் ஒருநாள் அருளிச் செய்ததையே நெஞ்சில் எப்போதும் நினைத்துக் கொண்டிருந்தால் போதாதோ! தினந்தோறும் தேவரீடம்வந்து கேட்க வேண்டுமோ?" என்றார். அதற்கு நஞ்சீயர், "கெடுவாய்! தினந்தோறும் ஆசார்யனிடத்திலே நல்வார்த்தைகள் கேட்க வேண்டும் என்ற நம்பிக்கையைத் தான் இழந்து விட்டாய்! 'நாடோறும் ஏனத்துருவாய் உலகிடந்த ஊழியான் பாதம் மருவாதார்க்கு உண்டாமோ வான்' (வராக வடிவு கொண்டு நீரிலிருந்து பூமியை எடுத்த எம்பெருமானுடைய திருவடிகளை தினந்தோறும் வணங்காதவர்களுக்கும் பரமபதம் கிடைக்குமோ) என்கின்ற இப்பாசுரத்தையும் நீ கேட்டதில்லையோ?" என்றார். (ஆசார்யனை தினந்தோறும் ஸேவித்து நல்வார்த்தைகள் கேட்க வேண்டுமோ? ஒரு நாள் ஸேவித்து அன்று ஆசார்யன் கூறியதையே நினைவில் கொண்டால் போதாதோ? எனில் போதாது. உலகியல் வாழ்க்கையில் கிடந்து உழலும் மனிதனைப் பிற விஷயங்கள் இழுத்துச் சென்றுவிடும்; எனவே தினந்தோறும் ஆசார்ய உபதேசமும், எம்பெருமானுடைய வழிபாடும் கட்டாயம் வேண்டும் என்பது நஞ்சீயர் கூறியதன் கருத்து.)*

[324]

..... அன்றிக்கே, "திருவனந்தாழ்வானையும், என்னுடைய நெஞ்சையும் தம்மதாக அபி₄மானித்திருப்பது; அல்லாதவற்றில் உறைந்த மாத்ரமே!" என்றும் அருளிச் செய்வர்.

(மூன்றாம் திருவந்தாதி - 26)

நிகழிடம்

சிறந்தவென் சிந்தையும் செங்கணரவும்
நிறைந்த சீர் நீள்கச்சியுள்ளும் - உறைந்ததுவும்
வேங்கடமும் வெஃகாவும் வேளுக்கைப் பாடியுமே
தாம்கடவார் தண்டுழாயார்.

*என்பது பேயாழ்வார் அருளிச் செய்த பாசுரம். இதற்கு (***நம்பிள்ளை** *அருளிச் செய்த) மூன்று வகையான* **நிர்வாஹங்கள்** *கூறப்படுகின்றன.*

விளக்கம்

(1) மிகவும் சிறந்ததான என்னுடைய சிந்தையிலும், திருவனந்தாழ்வான் மேலும், கச்சித் திருப்பதியிலும் எம்பெருமான் அன்போடு உறைந்திருக்கிறான்; திருமலையிலும், திருவெஃகாவிலும் வேளுக்கைப்பாடியிலும் 'இத்தலங்களை நாம் விட முடியாதே' என்று அவற்றை விட்டு நீங்காமலிருக்கிறான் அவ்வளவே! -என்பது முதல் பொருள்.

(2) நிறைந்த சீர் நீள்கச்சியிலும், வேங்கடத்திலும், வெஃகாவிலும், வேளுக்கைப்பாடியிலும் தவிர்க்க முடியாதபடி உறைந்தவித்தனையே. தான் உகந்த படுக்கையான திருவனந்தாழ்வானைப் போலே என்னுடைய சிறந்த நெஞ்சையும் கடக்கமாட்டாதவனாய் எம்பெருமான் இருக்கின்றான் என்பது இரண்டாவது பொருள்.

(3) திருவனந்தாழ்வானையும் என்னுடைய நெஞ்சையும் மட்டுமே எம்பெருமான் தன்னுடையதாக விரும்பியிருக்கின்றான்; மற்றவற்றில் உறைந்தது மட்டுமே என்றும் அருளிச்செய்வர். இது மூன்றாவது பொருள்.

[325]

'இப்ரகரணத்தில் கீழும் மேலும் அந்யாபதேஶமின்றிக்கேயிருக்க இப்பாட்டு ஒன்றும் இப்படிக் கொள்ளுகிறதென்?' என்று நிர்வஹிப்பர்கள்.

(மூன்றாம் திருவந்தாதி - 69)

நிகழிடம்

வெற்பென்று வேங்கடம்பாடும், வியந்துழாய்
கற்பென்று சூடும் கருங்குழல் மேல் - மற்பொன்ற
நீண்ட தோள் மால் கிடந்த நீட்கடல் நீராடுவான்
பூண்டநாள் எல்லாம் புகும்

என்பது பேயாழ்வார் பாசுரம். இதற்குப் பொருளுரைத்த உரையாசிரியர் - பேயாழ்வாருக்கு, ஆழ்வாரான தன்மை நீங்கி ஒரு பிராட்டியின் தன்மை உண்டாக, அப்பிராட்டியின் நிலையைத் தாயார் கூறுவதாக இப்பாசுரம் அமைகிறது: "என்மகள் ஏதேனும் ஒரு மலையைக் கூறும்போதும் திருவேங்கடமலையையே கூறுகின்றாள்; திருத்துழாயைச் சூடுவதே தனது கற்புக்கு உரியதென்று, தன் குழல் மேல் அதனைச் சூட்டிக் கொள்கின்றாள். மல்லர்களை வதம் செய்த பெருமான் பள்ளிக் கொண்டருளும் திருப்பாற்கடலில் நீராடுவதே தகுதி என்று அங்கே புகுகிறாள்" - என்று தாயார் கூறுவதாக இப்பாசுரத்திற்குப் பொருளுரைத்து மற்றொரு ***நிர்வாஹ****த்தையும் காட்டுகிறார்.*

விளக்கம்

இப்பிரபந்தத்தில் இந்தவொரு பாசுரம் தவிர, கீழ்ப் பாசுரங்களும் மேல் பாசுரங்களும் இப்படி ஆழ்வார் பிராட்டி நிலையை அடைந்ததாகக் கூறாமலிருக்க இவ்வொரு பாசுரத்தில் மட்டும் அப்படிப் பொருள் கூற வேண்டிய அவசியம் இல்லை என்று கருதிய ஆசாரியர்கள் வேறுவகையான விளக்கமும் கூறியுள்ளனர் என்று அதையும் எடுத்துக் காட்டுகிறார் உரையாசிரியர். பாடும் சூடும், புகும், என்ற வினை முற்றுகளை முன்னிலையாகக்[1] கொண்டு, "ஓ உலகத்தவர்களே! திருவேங்கடமலையைப் பாடுங்கள்! திருத்துழாயைச் சூடுங்கள்! திருப்பாற்கடலிலே நீராடச் சென்று புகுங்கள்!" என்று ஆழ்வார் உபதேசிப்பதாக மற்றொருவகை விளக்கமும் உண்டு என்று உரையாசிரியர் எடுத்துக்காட்டுகிறார்.

(முதற் கூறிய பொருளுக்கேற்ப - நான்முகன் திருவந்தாதியில் 'அழைப்பன்' (39) என்ற பாட்டில் 'இழைப்பன் திருக்கூடல் கூட' என்று திருமழிசைப்பிரான் கூடலிழைத்தலென்னும் நாயகியின் செயலை இவ்வொரு பாசுரத்தில் மட்டும் அருளிச் செய்ததை நினைத்தல் தகும்.)

[326]

(வயிற்றினோடாற்றா மகன்) இதுக்குப் பிள்ளை உறங்காவில்லிதாஸர் "வயிற்றை வண்ணானுக்கு இட்டாலோ" என்று பணித்தார்.

(மூன்றாம் திருவந்தாதி - 91)

நிகழிடம்

கண்ணபிரான் வெண்ணெய் களவு கண்டு உண்ட சரிதத்தை அனுபவிக்கின்ற பேயாழ்வார் அவனை 'வயிற்றினோடாற்றா மகன்' (வயிற்றைக் கொண்டு பாடாற்ற முடியாதவன்) என்றருளிச் செய்கிறார். இத்தொடர்பில் பிள்ளை உறங்காவில்லி தாஸர் அருளிச்செய்த **வார்த்தை** *ஒன்று கூறப்பெறுகிறது.*

விளக்கம்

எத்தனையுண்டாலும் திருப்தியடையாத வயிற்றைக் கொண்டு பாடாற்ற (பாடு=பசித்துன்பம்) முடியாதவனான கண்ணபிரான், அதற்காக, மேலும் மேலும் களவு செய்து தன் வயிற்றுக்கு இட்டுக் கொண்டேயிருந்தான். இதற்குப் **பிள்ளை**

1. 'பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மை செல்லாதாகும் செய்யுமென் முற்றே' என்ற நன்னூல் சூத்திரப்படி - பாடும், சூடும் புகும் என்பவை முன்னிலையில் வராதென்று கூறியபடியால், இம்முன்னிலையில் செய்யுமென்றும் முற்றுவருதல் 'புதியன புகுதல்' என்பர் ஸ்ரீ காஞ்சி மஹாவித்வான் அண்ணங்கராசார்ய ஸ்வாமி. 'இருள் தருமாஞாலத்தே இன்பமுற்று வாழும்' (உபதேசரத்தினமாலை 72) என்பதில் வாழுமென்பதும் முன்னிலையில் வருதல் புதியன புகுதல் ஆகும்.

உறங்காவில்லி தாஸர், "கண்ணபிரானுடைய வயிற்றை வண்ணானுக்குப் பயன்படும் சாலாகக் கொடுத்து விடலாமே" என்று வேடிக்கையாகக் கூறினாராம். அதாவது, ஊரிலுள்ளவர்களுடைய துணிகளையெல்லாம் தோய்க்கும் வண்ணான் எத்தனை துணிகளையிட்டாலும் கொள்ளும்படியான மிகப் பெரிய சாலன்றோ வைத்திருப்பான்! எத்தனையிட்டாலும் நிரம்பாத கண்ணனுடைய வயிறு வண்ணான் சால் போன்றது என்ற கருத்தில் அவர் இவ்வாறு அருளிச்செய்தார். (அதனாற்றான் இன்றைக்கும் மிக அதிகமாக உண்பவனைப் பார்த்து 'உனக்கிருப்பது வயிறா? வண்ணான்சாலா?" என்று கேட்கும் வழக்கு ஏற்பட்டுள்ளது போலும்!)

[327]

இப்பாட்டையும் பட்டர் அருளிச் செய்தார்.

(நான்முகன் திருவந்தாதி - 73)

நிகழிடம்

திருமழிசை ஆழ்வார் அருளிச்செய்த "இல்லறமில்லேல்" என்கிற (72) பாசுரமும், "ஆரேயறிவார்" என்கிற (73) பாசுரமும் பொருள் உணர்வதற்கு மிகவும் அரிது. இப்பாசுரங்களுக்கு பட்டர் அருளிச்செய்த **நிர்வாஹம்** கூறப்படுகிறது.

விளக்கம்

இல்லறம் என்னும் சொல்லும் சொல்லல்ல = இல்லறத்தில் இருந்து கொண்டு செய்கின்ற கர்ம யோகமும் (எம்பெருமானை அடைவதற்கு) உபாயம் அல்ல; இல்லேல் துறவறம் என்னும் சொல்லும் சொல்லல்ல = அன்றியே, துறவறத்தில் இருந்து கொண்டு பின்பற்றுகின்ற ஞானயோகமும் உபாயமல்ல. அல்லன அறம் என்னும் சொல்லும் சொல் அல்ல = மற்ற உபாயங்களான பக்தியோகம் முதலியவைகளும் வழியல்ல; பின் எது உபாயம் என்னில், நாரணனே ஆவது = எம்பெருமானே உபாயம் என்கிற எண்ணத்தோடு செய்யப்படுகின்ற பிரபத்தியே தஞ்சம் - என்பது 72ம் பாசுரத்தின் விளக்கம். "எல்லாவுலகங்களையும் உண்டு உமிழ்ந்தவனுடைய பெருமையை ஒருவரும் அறியார். அப்பெருமான் முன்பே அருளிச் செய்து வைத்த - பரமபதத்தை அடையும் வழியான சரமச்லோகத்தை (அவன்வைத்த பண்டைத்தானத்தின் பதி) சிவனும் நான்முகனும் கூட அறியமாட்டார்கள்" என்பது 73ம் பாசுரத்தின் பொருள். இவ்விரு பாசுரங்களின் பொருளை இவ்வாறாக பட்டர் அருளிச் செய்தார்.

[328]

ஆழ்வாரை முக்தர் என்பர் சிலர். அருளாளப்பெருமாளெம்பெருமானார் ஸ்ரீபாதத்தை ஆச்ரயித்தாரொருத்தர் முக்தப்ராயர் என்பர். அங்குள்ளாரிலே

ஒருவரை நீர் போய்ப் பிறவும் என்னப் பிறந்தார் என்பர்கள் சிலர். வங்கிப்புரத்து நம்பி எம்பெருமான்தானே வந்து அவதரித்தான் என்பர். இப்படிச் சொல்லுகைக்கடி ஆழ்வாருடைய ப்ரப₄ாவமிருக்கும்படி..... இவர் ஸம்ஸாரத்திலே ஒருவராமித்தனை.

(திருவிருத்தம் நம்பிள்ளை வ்யாக்யானம் ப்ரவேசம்)

நிகழிடம்

திருவிருத்தம் எனும் திவ்யப்பிரபந்தத்தை அருளிச் செய்த நம்மாழ்வாருடைய பெருமையைத் தம்முடைய வியாக்யான ப்ரவேசத்தில் முதற்கண் அருளிச் செய்கிறார் நம்பிள்ளை. இத்தொடர்பில் ஆசார்யர்கள் சிலர் கூறிய ***வார்த்தை****களை எடுத்துக்காட்டுகிறார்.*

விளக்கம்

நம்மாழ்வாரை முக்தர் என்று சிலர் கூறுவர். (இவ்வுலகத் துன்பங்களிலிருந்து விடுபட்டு வீடுபேறு அடைந்து விட்டவர் முக்தராவர்.) **அருளாளப் பெருமாள் எம்பெருமானார்** *எனும் ஆசார்யருடைய சீடர் ஒருவர், முக்தப்ராயர் (இவ்வுலகத் துன்பங்களேதும் கலசாமல் இருக்கக் கூடிய சுவேதத்தீவில் வசிப்பவர்), நம்மைத் திருத்துவதற்காக இங்கே வந்து ஆழ்வாராகப் பிறந்திருக்கிறார் என்று கூறுவர். பரமபதத்திலுள்ள நித்திய சூரிகளிலே ஒருவரை 'நீர் போய்ப் பூவுலகில் பிறந்து அங்குள்ளவர்களைத் திருத்திவாரும்' என்று எம்பெருமான் கட்டளையிட, அதன்படி இவ்வுலகில் ஒரு நித்தியசூரியே ஆழ்வாராகப் பிறந்தார் என்றும் சிலர் கூறுவர்.*[1] **வங்கிப்புரத்து நம்பி**, *இவ்வுலகில் உள்ளவர்களைத் திருத்துவதற்காக எம்பெருமானே ஆழ்வாராக வந்து பிறந்தான் என்று கூறுவர். இப்படிப் பலரும் பலவிதமாகச் சொல்லுவதற்குக் காரணம் ஆழ்வாருடைய பெருமைகளேயாகும். உண்மையில் ஆழ்வாரும் ஸம்ஸாரிகளிலே ஒருவரே ஆவார்.*[2]

[329]

(இங்ஙின்ற நீர்மை) 'உதிரக் கூறை காட்டுகிறார்' என்று அம்மாள். 'एहि पश्य शरीराणि (ஏஹி பஶ்ய ஶரீராணி) என்று த₃ண்ட₃காரண்யத்தில் ரிஷிகள் பெருமாளுக்கு ராக்ஷஸர் தின்ற உடம்பைக் காட்டினாற்போலே ப்ரக்ருதி தின்ற ஆத்மாவைக் காட்டுகிறார்' என்று ஆளவந்தார்.

(திருவிருத்தம் 1 பெரியவாச்சான் பிள்ளை வ்யாக்யானம்)

1. நம்பிள்ளையினுடைய சீடரான பின்பழகியபெருமாள் சீயர் அருளிச்செய்த ஆறாயிரப்படி குருபரம்பராப்ரபாவம் எனும் நூலில் எம்பெருமானால் கட்டளையிடப்பட்ட நித்யசூரிகளே ஆழ்வார்களாக அவதரித்தார்கள் என்று கூறப்பட்டுள்ளது காண்க.

2. ஆசார்ய ஹ்ருதயத்தில் 92,93,94 ஆகிய சூர்ணைகள் இக்கருத்தையே கூறுகின்றன. (திருவிருத்தம் பெரியவாச்சான் பிள்ளை வியாக்யானத்திலும் இவ்வார்த்தைகள் உள்ளன.)

நிகழிடம்

ஆழ்வார் எம்பெருமானை நோக்கி, "பொய் நின்ற ஞானமும் பொல்லாவொழுக்கும் அழுக்குடம்பும் இந்நின்ற நீர்மை இனியாமுறாமை" (பொய்ம்மை நிலைபெற்ற அறிவும், தீய நடத்தையும், அசுத்தங்களோடு கூடிய உடலும் ஆகிய இவற்றோடு கூடியிருக்கும் இவ்வியல்வை இனிமேல் நாங்கள் அடையாதபடி அருள் புரிய வேண்டும்) என்று வேண்டுகிறார். பொய் நின்ற ஞானம், பொல்லா ஒழுக்கு, அழுக்குடம்பு என்று கூறிய பிறகு மறுபடியும் இந்நின்ற நீர்மை (இப்படிப்பட்ட இயல்பு) என்று ஆழ்வார் அருளிச் செய்ததற்கு விளக்கமாக **நிர்வாஹங்கள்** *கூறப்படுகின்றன.*

விளக்கம்

உடலில் அடிபட்டவன், தன்னுடைய ரத்தக்கறை படிந்த ஆடைகளை அருவருப்புடன் காட்டுவது போல ப்ரக்ருதி ஸம்பந்தத்தால் (அழுக்குடலின் தொடர்பால்) எம்பெருமானைப் பிரிந்து துன்பப்படுவதற்குக் காரணமான உடலை "இந்நின்ற நீர்மை" என்று காட்டுகிறார் - என்பது **அம்மங்கியம்மாள்** *பணித்த விளக்கமாகும்.*[1]

தண்டகாரண்யத்திற்கு இராமபிரான் எழுந்தருளியபோது அங்கு வசித்துவந்த முனிவர்கள் இராமபிரானிடம் வந்து, அரக்கர்கள் தங்களுக்குச் செய்த துன்பங்களையெல்லாம் எடுத்துக் கூறி "ஏஹி பச்ய சரீராணி" (அரக்கர்களால் துன்புறுத்தப்பட்ட எங்களுடைய உடல்களைப் பாரும்) (ஸ்ரீரா. ஆ.6-16) என்று தங்கள் உடல்களைக் காட்டியது போல ஆழ்வாரும் இவ்வுடலின் தொடர்பால் துன்பப்படுகின்ற தம்முடைய ஆத்மாவை எம்பெருமானுக்குக் காட்டுகிறார் என்பது **ஆளவந்தார்** *பணித்த விளக்கமாகும்.*[2]

[330]

(பிறந்தாய்) "இதுக்கு முன்பு பிறந்த பிறவிகள் கார்யகரமாகாதே உடுத்த ஒலியலோடே போன அத்தனையன்றோ! அது உனக்கு இன்று தலைக்கட்டவன்றோ புகுகிறது!" என்று பட்டர் அருளிச் செய்தாரென்று, ஸ்ரீவத்ஸாங்கதாஸர் சொன்னாரென்று அருளிச் செய்தார்.

(திருவிருத்தம் 1 நம்பிள்ளை வியாக்யானம்)

நிகழிடம்

எம்பெருமானை நோக்கி நம்மாழ்வார் "உயிரளிப்பான் எந்நின்ற யோனியுமாய்ப் பிறந்தாய்" (எல்லா உயிர்களையும் காப்பதற்காக பலவகைப்

1. அம்மங்கியம்மாள் அருளிச்செய்தமை நம்பிள்ளை வியாக்யானத்திலும் காணப்படுகிறது. ஆனால் அங்கு மற்றொரு விளக்கம் ஆளவந்தார் அருளிச் செய்ததாகக் கூறப்படவில்லை.

பிறப்புகளிலும் அவதரித்தவனே!) என்றருளிச் செய்கிறார். இத்தொடர்பில் பட்டர் அருளிச்செய்த **வார்த்தை** *எடுத்துக்காட்டப்பெறுகிறது.*

விளக்கம்

"இதற்கு முன் எம்பெருமான் அனேகம் பிறவிகளில் அவதரித்திருந்தாலும், அவனால் உலகோர்கள் அனைவரையும் திருத்தி, பரமபதத்திற்கு அழைத்துக் கொண்டு செல்ல முடியவில்லை; தான் உடுத்திருந்த துணியோடு பரமபதம் போய்ச் சேர்ந்தான் அத்தனையே. (அதையும் பறித்துக் கொள்ளாமல் அவனை விட்டார்களே அதுவே பெரிய விஷயம்!) ஆனால் இப்போது ஆழ்வார் அவதரித்த பின்பு எம்பெருமானுடைய நினைவு நிறைவேறப் போகிறதன்றோ! (எனவே இனிமேல் அவன் பிறக்க வேண்டிய அவசியமில்லை)" என்று பட்டர் அருளிச் செய்ததாக ஸ்ரீவத்ஸாங்க தாஸர் *கூறினார் என்று* நஞ்சீயர் *அருளிச் செய்தார்.*

[331]

"கீழ் தாம் ப$_4$க$_3$வத் விஶ்லேஷத்தாலே கண்ணுங் கண்ணநீருமாயிருக்கிற இருப்பு வைஷ்ணவர்களுக்கு இனிதாயிருக்கிறபடியைக் கண்டு அவ்வழியாலே தம் த$_3$ஶையைத் தாமே அனுபவித்தார் என்றதே! இப்படி ப$_4$க$_3$வத்விஷயத்திலே அவக$_3$ாஹித்திருக்கிற நமக்குக் கேவலம் மாநஸானுஸந்த$_4$ானமாத்ரமேயாய் விடுகிறதோ? ப$_3$ாஹ்யஸம்ஶ்லேஷமும் பெற்று விடுகிறதோ?" என்று திருமலை நம்பி பணிப்பரென்று பிள்ளை திருநறையூரரையர் அருளிச் செய்வர். அங்ஙனன்றிக்கே, "ப்ரத$_2$மத$_3$ர்ஶனத்திலே, அநாதி$_3$காலம் வாஸனை பண்ணிப் போந்த ப்ரக்ருதி ப்ராக்ருதங்களை விடுவிக்க வேணுமென்று கால்கட்டப் பண்ணின விஷயம் ஸாக்ஷாத்கரித்தவன்று ஸாத்மிக்குமோ ஸாத்மியாதோ?" என்று பட்டருளிச் செய்வரென்று சீயர். கீழிரண்டு பாட்டாலும் ப$_4$க$_3$வத் ஶேஷத்வத்தின் எல்லை நிலமான ப$_4$ாக$_3$வத ஶேஷத்வானுஸந்த$_4$ானத்தாலே இனியராகிறாரென்று பிள்ளையருளிச் செய்யும்படி.

(திருவிருத்தம் 3 நம்பிள்ளை ஈடு)

நிகழிடம்

திருவிருத்தம் முதற் பாசுரத்தில் 'இமையோர் தலைவா' என்று எம்பெருமானுடைய மேன்மையை அனுபவித்த ஆழ்வார் அப்பொழுதே அவனைக் கிட்ட வேண்டும் என்ற ஆசை கொண்டார். அங்ஙனம் கிட்டப் பெறாமையாலே ஆற்றாமை மீதூர்ந்து, தாமான தன்மை அழிந்து ஒரு பிராட்டி நிலையை அடைந்து கண்ணும் கண்ணீருமாக ஆனார்; தமக்குண்டான அன்பு நிலையைத் தம் வாயால் கூற முடியாமல் தம்முடைய நிலையைத் தோழி வியந்து உரைப்பதாக இரண்டாம் பாசுரம் அமைந்தது. இப்படித் தோழியின் பேச்சாக

அப்பாசுரம் அமைந்தாலும், எம்பெருமான் மீது ஆழ்வார்க்கு உண்டான அன்பின் மிகுதியைக் கண்ட ஸ்ரீ வைஷ்ணவர்கள் "இப்படியும் ஒருவர்க்கு பகவத் விஷயத்தில் ஈடுபாடு உண்டாவதே!" என்று வியந்து போற்றுவதாகக் கொள்ளத் தக்கது. மூன்றாவது பாசுரத்தில் 'எம்பெருமானிடம் போன என்நெஞ்சு மீண்டு வருமோ? வராதோ?' என்று பிராட்டி நிலையிலுள்ள ஆழ்வாா தோழியை நோக்கிக் கேட்கிறார். எம்பெருமான் கருடன் மேலேறி வந்து ஆழ்வார்க்கு ஸேவை ஸாதித்து விட்டுத் திரும்பி விட்டனன். எப்போதும் எம்பெருமானைப் பிரியாதிருக்கின்ற கருடனுடைய பாக்யத்தை நினைத்த ஆழ்வாருடைய நெஞ்சு அவனைப் பின் தொடர்ந்து பரமபதத்தளவும் சென்றது. அங்கே பெரிய பிராட்டியார், பூமிப்பிராட்டியார், நப்பின்னைப் பிராட்டியார் எனும் தேவியாருடன் எம்பெருமான் எழுந்தருளியிருக்கும் சேர்த்தியழகைக் கண்டால், அவ்வழகிலேயே லயித்து நம்நெஞ்சு அங்கேயே நின்று விடுமோ அல்லது மீண்டும் நம்மிடத்திலே வந்து சேருமோ! சேராதோ? என்று தோழியிடம் கேட்கிறார் ஆழ்வார். இதுபற்றிய **நிர்வாஹங்கள்** கூறப்பெறுகின்றன.

விளக்கம்

'எம்பெருமானிடத்தில் தமக்குள்ள ஈடுபாடு வெறும் மனத்தில் அனுபவிக்கும் அனுபவத்தோடு நின்றுவிடுகிறதோ? அல்லது உண்மையிலேயே எம்பெருமானை அனுபவிக்கும் பாக்கியம் கிட்டுகிறதோ? என்று ஆழ்வார் கேட்கிறார்' என்று இதன் உட்பொருளைத் **திருமலை நம்பி** விளக்கியதாகப் **பிள்ளை திருநறையூரரையர்** அருளிச் செய்தார்.

'வெகுகாலமாக இவ்வுலகியல் வாழ்க்கையோடு உள்ள தொடர்பை நீக்க வேண்டும்' என்று ஆழ்வார் வேண்டிக் கொள்ளும்படி வடிவழகு படைத்த எம்பெருமானை முதன் முதலிலே கண்ட போது அந்த மகிழ்ச்சியைத் தாங்கும் சக்தி தமது நெஞ்சுக்கு இருக்குமோ? இராதோ? என்று ஐயுறுகிறார் ஆழ்வார்' - என்று **பட்டர்** விளக்கியருளியதாக **நஞ்சீயர்** அருளிச் செய்தார்.

முதல் இரண்டு பாசுரங்களால் தாம் எம்பெருமானுக்கு அடிமைப்பட்ட படியை அருளிச்செய்த ஆழ்வார் இம்மூன்றாவது பாசுரத்தில் தம் நெஞ்சு கருடனைப் பின் தொடர்ந்ததாகக் கூறிய படியால், அடிமையின் எல்லை நிலமான அடியார்க்கு ஆட்பட்டிருத்தலைக் கூறி மகிழ்கிறார் என்று **நம்பிள்ளை** அருளிச் செய்வர்.

[332]

'பண்டிவரைக் கண்டறிவது எவ்வூரில்' என்னக் கடவதிறே. ஸ்வாப₄ாவிக ஸௌஷத்வத்தாலும் முகத்தில் தண்ணளியாலும் ப்ரத₂ம த₃ர்ஶனத்திலே 'முன்பே இவரைக் கண்டோம்போலே இராநின்றதே' என்னப் பண்ணும். நெடுநாள்

ஸம்ஶ்லேஷம் ப்ரவ்ருத்தமானால் பின்னையொரு நாள் கண்டால் 'அப்படி அவரைக் கண்டறியோமீ' என்னும்படியாயிருக்கும், "இரண்டு இடத்திலும் ஶப்த₃ம் ஒன்றாயிருக்க, இது எங்ஙனே விளங்கும்படி?" என்று நான் சீயரைக் கேட்க, "'என்றே பயில்கின்றாளால்' என்னாநின்றது கண்டீரே" என்று அருளிச்செய்தார் என்று பிள்ளை அருளிச்செய்வர்.

(திருவிருத்தம் 8 நம்பிள்ளை ஈடு)

நிகழிடம்

தன்னுடன் கலக்கின்ற நாயகன் பொருளீட்டுவதற்காகப் பிரிந்து செல்ல நினைத்திருக்கிறான் என்று நாயகி கூறுவதாகப் பாசுரம் அமைந்துள்ளது. நாயகன் நாயகியை விட்டுப் பிரிந்து செல்ல நினைக்கும்போது அந்த நினைவை வாய்விட்டுச் சொல்லாமல், அவளிடத்தில் பணிவான செய்கைகள் சிலவற்றைச் செய்கிறான். இதற்கு முன்பில்லாமல் இப்போது புதிதாக இச் செய்கைகளை செய்கின்றபடியால், இவனுக்கு நெஞ்சில் ஏதோ ஒரு எண்ணம் இருக்கின்றது என்று நாயகி நினைக்கின்றாள் என்றுரைத்த உரையாசிரியர், இத்தொடர்பில் 'பண்டிவரைக் கண்டறிவது எவ்வூரில்' என்ற திருமங்கை ஆழ்வார் பாசுரத்தையும் மேற்கோளாகக் காட்டி, அது குறித்த **ஸம்வாதம்** *ஒன்றையும் எடுத்துக் காட்டுகிறார்.*

விளக்கம்

எண் 272ன் விளக்கம் பார்க்க.

[333]

ஒரு நாள் எம்பெருமானார் முதலிகள் எல்லோரும் கூட எழுந்தருளியிருக்கச் செய்தே "திருக்கச்சி நம்பி செய்கிறதென் என்று ஆராய்ந்து வருவாரில்லையோ?" என்ன, கடுக ஒருவரும் 'நான் போகிறேன்' என்று எழுந்தாரில்லை. பிற்றை நாள் விடிவோரை பெரியநம்பி வந்து தாம் அழைக்கிறபடியே எம்பெருமானாரை அழைத்து "நான் பெருமாள்கோயிலிலே பெருமாளைத் திருவடி தொழுது வாராநின்றேன்" என்ன, "நிஷேதி₄க்கலாம்படி அன்றிறே ப்ரப₄ாவம் இருப்பது; எழுந்தருளலாகாதோ" என்ன, அங்கே போய் அவர் இருக்கிறபடி அறிந்து போரா, "திருநாள் அணித்தாய் இருந்தது; போகிறதென்?" என்ன, "நான் வந்த கார்யம் தலைக்கட்டிற்று; இனித் திருநாளுக்கு இருக்கவொண்ணாது" என்ன, "இப்படியே போய் வரவல்லார் இல்லையோ என்றவிடத்தில் நான் என்று எழுந்தாரில்லை; அத்தாலே இவர்க்கு இதுவோ கருத்து என்று போந்தேன்; அது தலைக்கட்டிற்று; இனிப் போக அமையும்" என்றாராம்.

(திருவிருத்தம் 8 நம்பிள்ளை ஈடு)

நிகழிடம்

தன்னுடன் கலக்கின்ற நாயகன் பொருளீட்டுவதற்காப் பிரிந்து செல்ல நினைத்திருக்கிறான் என்று நாயகி கூறுவதாகப் பாசுரம் அமைந்துள்ளது. பாகவதர்கள் எம்பெருமானை விட்டுப் பிரிவர்களோ என்று, அச்சப்பட வேண்டாத இடத்தில் ஆழ்வார் அச்சம் கொள்வதாக இதற்கு உட்பொருள் உரைத்த உரையாசிரியர், திருக்கச்சி நம்பி தேவப்பெருமாளைப் பிரியாமல் கைங்கர்யம் செய்து வருகிறாரோ என்ற அச்சம் (அஸ்தானே பயசங்கை) உண்டானது பற்றி ஒரு **ஐதிஹ்யம்** கூறுகிறார்.

விளக்கம்

எம்பெருமானாருடைய ஆசார்யர்களும் சீடர்களும் குழுமியிருந்த போது ஒருநாள், எம்பெருமானார் "காஞ்சீபுரத்திற்குச் சென்று திருக்கச்சி நம்பி எப்படி எழுந்தருளியிருக்கிறார் என்று விசாரித்துக் கொண்டு வருவார் யாரேனும் உண்டோ?" என்று கேட்டார். ஆனால் உடனே ஒருவரும் 'நான் போகிறேன்' என்று கூறவில்லை. மறுநாள் விடியற்காலையில் எம்பெருமானாரிடம் பெரிய நம்பி சென்று தாம் வழக்கமாக அவரைக் கூப்பிடுகின்றபடியே அழைத்து, "நான் பெருமாள் கோயிலுக்கு (காஞ்சீபுரத்திற்கு)ச் சென்று பெருமாளை சேவித்துவிட்டு வரலாம் என்றிருக்கிறேன்" என்று கூறினார். எம்பெருமானார் "அடியேனுடைய ஆசார்யரான தேவரீரை அடியேன் தடை செய்ய முடியுமோ? எழுந்தருளலாமே!" என்றார். பெரியநம்பியும் காஞ்சீபுரத்திற்குச் சென்று திருக்கச்சிநம்பியின் நலத்தை அறிந்து கொண்டார். பிறகு ஸ்ரீரங்கம் திரும்புவதாகப் புறப்பட்ட போது (திருக்கச்சி நம்பி) "இன்னும் சில நாள்களில் இங்கு உத்ஸவம் (திருநாள்) தொடங்கப் போகிறதே! இருந்து சேவித்து விட்டுப் போகலாமே' என்று கூற, பெரியநம்பி, "நான் வந்த காரியம் முடிந்து விட்டது: எனவே இனியும் உத்ஸவத்திற்காகக் காத்துக் கொண்டிருக்க முடியாது; உடனே திரும்ப வேண்டும்" என்றார். ("தேவரீர் வந்த காரியம் என்ன?" என்று கேட்க) "எம்பெருமானார் 'காஞ்சீபுரத்திற்குச் சென்று திருக்கச்சி நம்பி எப்படி எழுந்தருளியிருக்கிறார் என்று விசாரித்துக் கொண்டு வருவார் ஒருவருமில்லையோ?" என்று கேட்ட போது ஒருவருமே அதற்கு முன் வரவில்லை. எனவே எம்பெருமானாருடைய திருவுள்ளத்தை நிறைவேற்றுவதற்காக இங்கே வந்தேன் வந்த காரியம் முடிந்து விட்டது. எனவே உடனே போகத்தான் வேண்டும்" என்றார் பெரியநம்பி.

[334]

பண்டு எழுந்தருளியிருக்கிற நாளிலே எம்பெருமானார் இங்கே சில வெறுப்புண்டாய்த் திருமலைக்கு எழுந்தருளுவதாக நினைத்தருளி, ஒரு ஸ்ரீவைஷ்ணவனுக்குச் சில நெல்லு கொடுக்கைக்குப் பிள்ளை உறங்காவில்லி

தாஸர் பாடேறத் திருக்கையில் சாத்தின திருப்பவித்திரத்தை வாங்கிக் கொடுத்தருள, ஸ்ரீவைஷ்ணவனும் அங்கே செல்ல, பிள்ளை 'காண்கின்றனகளும் கேட்கின்றனகளும்' என்கிற பாட்டையநுஸந்தித்துக் கண்ணுங் கண்ணநீருமாய் இருக்க, பிள்ளைக்கு வந்த கார்யம் அறிவிக்க வல்லார் இல்லாமையாலே ஸ்ரீபாதத்தேறவர, "என்தான் கடுக வந்தாய்? நெல் பெற்றிலையோ?" என்ன, "அறிவிக்கவளவாயிராதே 'காண்கின்றனகளும் கேட்கின்றனகளும்' என்ற இத்தைச் சொல்லி மூடிக் கொண்டு கிடந்தார்" என்ன, "வண்பூமணிவல்லி யாரே பிரிபவர்தாம் என்ன மாட்டிற்றிலையோ" என்றருளிச் செய்தாராம்.

(திருவிருத்தம் 9 ஸ்வாபதேசம்)

நிகழிடம்

பொருளீட்டுவதற்காக நாயகன் தேசாந்தரம் செல்லத் தொடங்கியதை அறிந்த நாயகி வருந்திப் பேசும் நிலை இப்பாசுரத்தில் அருளிச்செய்யப் பெறுகிறது. பிரிய நினைத்த பாகவதர்களைப் பிரியமாட்டாமல் வருந்திய ஆழ்வாரது தன்மையையும், ஞானமிகுதியையும் கண்டு பிரியமாட்டாமல் அப்பாகவதர் கூறுகின்றனர் என்பது இப்பாசுரத்தின் உட்பொருளாகும். ஒருமுறை எம்பெருமானாரை விட்டுப் பிரிய நேர்ந்தபோது, பிரியமாட்டாமல் பிள்ளை உறங்காவில்லி தாஸர் இப்பாசுரத்தை அனுஸந்தித்த ஒரு **ஐதிஹ்யம்** *இங்கு கூறப்படுகிறது.*

விளக்கம்

எம்பெருமானார் *ஸ்ரீரங்கத்தில் எழுந்தருளியிருந்தபோது ஒரு சமயம் ஸ்ரீரங்கத்தில் ஏதோ மனக்கசப்பு உண்டாகி, திருமலைக்கு எழுந்தருள்வதாக நினைத்திருந்தார். அப்போது ஸ்ரீவைஷ்ணவர் ஒருவருக்குத் தமது மடத்திலிருந்து நெல் கொடுக்க விரும்பிய எம்பெருமானார், களஞ்சியத்தின் காவலரான* **பிள்ளை உறங்காவில்லி தாஸரிடம்** *அந்த ஸ்ரீவைஷ்ணவரை அனுப்பினார். தமது திருக்கையில் அணிந்திருந்த பவித்திரத்தை (மோதிரத்தை ?)க் கழற்றி அந்த ஸ்ரீவைஷ்ணவரிடம் கொடுத்து, அதை பிள்ளை உறங்காவில்லி தாஸரிடம் காட்டி நெல்லைப் பெற்றுக் கொள்ளும்படி கூறினார். அந்த ஸ்ரீவைஷ்ணவரும் அப்படியே பிள்ளை உறங்காவில்லி தாஸரிடம் சென்றார். எம்பெருமானார் திருமலை செல்லப் போவதை அறிந்த தாஸர், எம்பெருமானாரைப் பிரியவேண்டுமே என்ற வருத்தத்தினால் கதவைச் சாத்திக் கொண்டு, 'காண்கின்றனகளும் கேட்கின்றனகளும்' என்கிற இப்பாசுரத்தை அநுஸந்தித்துக் கொண்டு கண்ணும் கண்ணநீருமாக (அழுது கொண்டு) இருந்தார். இந்நிலையில் ஸ்ரீவைஷ்ணவருடைய வரவை, தாஸருக்குத் தெரிவிக்க வல்லவர் ஒருவரும் இல்லாமையாலே, ஸ்ரீவைஷ்ணவர் மீண்டும் எம்பெருமானாரிடமே திரும்பி விட்டார். மிக விரைவாகவே ஸ்ரீவைஷ்ணவர் வந்து விட்டதைக் கண்ட*

எம்பெருமானார் "ஏன் இவ்வளவு சீக்கிரம் திரும்பி விட்டீர்? நெல் பெற்றுக் கொள்ளவில்லையோ?" என்று கேட்க, ஸ்ரீவைஷ்ணவர் "நான் சென்ற காரணத்தைப் பிள்ளை உறங்காவில்லி தாஸரிடம் தெரிவிக்க முடியவில்லை; அவர் 'காண்கின்றனகளும் கேட்கின்றனகளும்' என்ற இப்பாசுரத்தையே சொல்லிக் கொண்டு கதவை மூடிக் கொண்டு அழுது கொண்டிருக்கிறார்" என்று கூறினார். அதைக் கேட்ட எம்பெருமானார் "வண்பூமணிவல்லி யாரே பிரிபவர் தாம்" என்ற (அடுத்த) பாசுரத்தைக் கூறியிருக்கலாமே" என்றருளிச் செய்தாராம். (ஆழ்வாரைப் பிரியமனமில்லாத பாகவதர்கள் "உம்மைவிட்டு யாரால் பிரிந்திருக்க முடியும்?" என்று கூறுவது இப்பாசுரத்தின் உட்பொருளாகும். இதை எம்பெருமானார் சொல்லச் சொன்னதன் உட்கருத்து பிள்ளை உறங்காவில்லி தாஸரைப் பிரிந்து தம்மாலும் இருக்க முடியாது என்று தெரிவிப்பதற்கேயாகும்.)

திருவேங்கட யாத்திரை செல்ல விருக்கின்ற பாகவதர்களைப் பிரிந்திருக்க முடியாது என்ற கருத்தில் ஆழ்வார் அருளிச் செய்த 8ம் பாசுரத்தை, திருவேங்கட யாத்திரை செல்ல விருக்கின்ற எம்பெருமானாரைப் பிரிந்திருக்க முடியாத பிள்ளையுறங்காவில்லி தாஸர் அனுஸந்தித்தார். பாகவதர்களைப் பிரிய மனமில்லாத ஆழ்வாரது தன்மையைக் கண்ட பாகவதர்கள் ஆழ்வாரைப் பிரிய முடியாது என்று கூறுவதாக அமைந்த 9ம் பாசுரத்தை, தம்மைப் பிரிய மனமில்லாத பிள்ளை உறங்காவில்லி தாஸரைக் குறித்துக் கூறும்படி எம்பெருமானார் அருளிச் செய்தார்![1]

[335]

திருக்கோட்டியூர் நம்பி கோயிலுக்கு நடந்து மீண்டெழுந்தருளும் விசைதோறும் மாராச்சிப்புரத்தளவும் வழிவிட்டுப் பின்னையும் மீளுவது. அதிலொருவிசை போகாநிற்க, ஜலகார்யத்திற்கெழுந்தருளி நிற்கச் செய்தே "எனக்குத் தஞ்சமாக நினைத்திருக்கலாவது ஒன்று அருளிச் செய்ய வேணும்" என்ன, "ஆளவந்தார் ஸ்நாநார்த்த₂மாக இழிந்து அக₄மர்ஷணம் பண்ணிக்கிடக்கும்போது ஆமை மணையைக் கவிழ்த்தாப் போலேயிருக்கிற முதுகுப் புறத்தை அவருடைய உக்தியும் நோக்கும் மாறின பின்பு எனக்குத் தஞ்சமாக நினைத்திருப்பன்; நீரும் அத்தையே தஞ்சமாக நினைத்திரும்" என்றருளிச் செய்தாராம்.

(திருவிருத்தம் 10 ஸ்வாபதேசம்)

நிகழிடம்

நாயகியைப் பிரியமாட்டாத நாயகன் அவளது உருவ அழகிலும், வாய்மொழிகளிலும் ஈடுபட்டுப் பேசுவதாக இப்பாசுரம் அமைந்துள்ளது.

1. இவ்வைதிஹ்யம் இப்பாசுரத்தின் பெரியவாச்சான் பிள்ளை வ்யாக்யானத்தில் சுருக்கமாக உள்ளது.

ஆழ்வாருடைய அவயவ விளக்கத்திலும் திருவாக்கிலும் ஈடுபட்ட பாகவதர்கள் அவரைப் பிரியமாட்டாமல் சொல்லும் வார்த்தை இது என்பது பாசுரத்தின் உட்பொருளாகும். பகவானிடத்தில் மிகவும் ஈடுபட்டவர்களுடைய தேஹகுணங்களும் ஆத்மகுணங்களைப் போலவே மிகவும் விரும்பத்தக்கன என்பதற்கு ஓர் **ஐதிஹ்யம்** காட்டப்பெறுகிறது.

விளக்கம்

திருக்கோட்டியூர் நம்பி ஸ்ரீரங்கத்திற்கு எழுந்தருளிவிட்டு, மீண்டும் திருக்கோட்டியூருக்குத் திரும்பி எழுந்தருளுகின்ற போதெல்லாம், **எம்பெருமானார்** அவருடன் கூடவே மாராச்சிப்புரம் எனும் ஊர்வரை அவரைப் பின்தொடர்ந்து சென்று வழியனுப்பி வைப்பார். அப்படிச் சென்ற போது ஒரு முறை திருக்கோட்டியூர் நம்பி ஓரிடத்தில் ஜலகார்யத்திற்கு (நீராட்டத்திற்குச்) சென்ற சமயத்தில் எம்பெருமானார் "அடியேனுக்குத் தஞ்சமாக (உய்வு பெறுவதற்காக எப்போதும் நினைத்திருக்கும்படியாக) ஏதேனும் ஒன்றை அருளிச் செய்ய வேண்டும் என்று திருக்கோட்டியூர் நம்பியைக் கேட்டார். "**ஆளவந்தார்** நீராடுவதற்காக ஆற்றில் இறங்கி முழுகும் போது, ஆமைமணையை (கூர்மாஸனம்) கவிழ்த்தது போலே தெரிகின்ற அவருடைய முதுகுப் புறத்தை அவருடைய சொல்லும், நோக்கும் மாறியபின் (அவர் திருநாட்டுக்கு எழுந்தருளிய பின்) எனக்குத் தஞ்சமாக நினைத்திருப்பேன்; நீரும் அதையே தஞ்சமாக நினைத்திரும்" என்று திருக்கோட்டியூர் நம்பி அருளிச் செய்தார்![1]

[336]

"இப்பெரிய திருநாளிலே இதொரு திருவேகாதசி எங்கே தேடி எடுத்திகோள்!" என்று பட்டர் அருளிச் செய்தார்.

(திருவிருத்தம் 11 நம்பிள்ளை ஈடு)

நிகழிடம்

நாயகியுடன் கலந்திருக்கின்ற நாயகன் ''உலகத்தில் பொருள் தேடுவதற்காகப் பிரிவது என்று ஒன்று உண்டு'' என்று பொதுவாகச் சொல்ல, அதைக் கேட்ட நாயகி, நாயகன் தன்னை விட்டுப் பிரிவதற்காகவே இவ்வார்த்தையைக் கூறுகிறான் என்று கருதி, அவன் தன்னை விட்டுப் பிரிந்து விட்டதாகவே கருதி

1. 'ஆசார்யன் சிச்சன் ஆருயிரைப் பேணுமவன், தேசாரும் சிச்சன் அவன் சீர்வடிவை ஆசையுடன் நோக்குமவன்' என்பது மணவாள மாமுனிகள் திருவாக்கு (உபதேசரத்தினமாலை-65.) இதன்படி ஆசார்யனுடைய திருமேனியை ஆசையுடன் நோக்குவதே சிஷ்யனுக்கு முக்கியம் என்பது பெறப்படுகிறது. திருக்கோட்டியூர் நம்பியும் தம்முடைய ஆசார்யரான ஆளவந்தாருடைய திருமுதுகையே தஞ்சமாக நினைத்திருந்ததாகத் தெரிவிக்கும் இவ்வைதிஹ்யம் அதை உறுதி செய்கிறது.

வருந்தத் தொடங்கினாள். இதைக் கண்ட நாயகன் 'அரியன யாம் இன்று காண்கின்றன' என்கிறான். கூடியிருக்கும் காலத்தில் பிரிவை நினைப்பது மிகவும் அரியதான ஒன்று என்றும் அது கலவிக்கு இடையூறாகும் என்று உரைத்த உரையாசிரியர், இத்தொடர்பில் பட்டர் அருளிச்செய்த **வார்த்தை** *ஒன்றையும் எடுத்துக் காட்டுகிறார்.*

விளக்கம்

எண் 88ன் விளக்கம் பார்க்க.

[337]

(விசும்பூர் தேர்வன) இதுக்கு இரண்டுபடியாக அருளிச் செய்வர். லீலா விபூ$_4$தியாகக் கொண்டு ஆவது அழிவதாகிற விபூ$_4$திபோலன்றிக்கே, என்றுமொக்க பே$_4$ாக விபூ$_4$தியாயிருக்கிற நித்ய விபூ$_4$தியிலுள்ளாராலே தேடப்படுவனவாய் உள்ளன. ப$_4$க$_3$வதனுப$_4$வமொழிய வேறொன்று நெஞ்சிற் படாதபடி இருக்கக் கூடவ அவர்களும் வந்து ஆத$_4$ரியா நிற்பர்களாயிற்று, இவரை. அன்றிக்கே, பரமபத$_3$மென்று ஒரு விபூ$_4$தியில் காமன் ஆஜ்ஞை நடையாடாதே கிடக்கிறதென்? என்று அத்தை இ(அ)ங்கே நடத்தப் பார்ப்பனவாயுள்ளன.

(திருவிருத்தம் 14 நம்பிள்ளை ஈடு)

...... இதுக்கு ஸ்வாபதே$_3$சம் கண்ணென்கிற இடமெங்கும் ஞானமாக நிர்வஹிப்பர் பிள்ளை திருநறையூரரையர்.

(திருவிருத்தம் 14 ஸ்வாபதேசம்)

நிகழ்டம்

நாயகியின் கண்ணழகில் ஈடுபட்ட நாயகன், நாயகியின் கண்களை 'விசும்பூர் தேர்வன' என்று கூறுவதாகப் பாசுரம் அமைந்துள்ளது. விசும்பூர் என்பது பரமபதத்தைக் குறிக்கும். விசும்பூர் தேர்வன என்பதற்கு இரண்டு வகை **நிர்வாஹங்கள்** *காட்டப்பெறுகின்றன.*

விளக்கம்

*நாயகியின் கண்கள் பரமபதத்தில் உள்ள நித்ய சூரிகளாலும் தேடப்படுமவை என்றும், லீலா விபூதியை வசப்படுத்தினது போதாமல் அப்பரமபதத்தையும் வசப்படுத்தத் தேடுமவை என்றும் இரண்டு வகையாகப் பொருள் கொள்ளலாம் என்பர் (***நம்பிள்ளை***). அதாவது, எப்போதும் ஆனந்தமே அனுபவிக்கப் படுவதாகவுள்ள பரமபதத்தில் உள்ளவர்களும், பகவானை அனுபவிப்பது தவிர வேறொன்றும் அறியாதவர்களுமான நித்யசூரிகளும் கூட திருக்குருகூருக்கு வந்து ஆதரிக்கும்படியான கண்கள் என்பது முதற் பொருள். பரமபதத்தில் காதற்*

கடவுளாகிய மன்மதனுடைய ஆணை செல்லாது ஆகையால், அந்தக் காமனுடைய ஆணையைப் பரமபதத்திலும் நடைபெறும்படி செய்யத் தேடும் கண்கள்; அதாவது இவ்வுலகத்தவர்களை யெல்லாம் தன்வசப்படுத்தியது போதாதென்று பரமபதத்தையும் கூட தன் வசப்படுத்தத் தேடும் கண்கள் - என்பது இரண்டாவது பொருள்.

இங்கு, கண் என்பதன் உட்பொருள் ஞானத்தைக் குறிக்கின்றது என்பராம் **பிள்ளை திருநறையூர் அரையர்**. ஆழ்வாராகிற நாயகியின் கண்ணழகானது நித்யசூரிகளையும் வசப்படுத்துகிறது என்று கூறுவதானது, ஆழ்வாருடைய ஞானத்தைக் கண்டு நித்யசூரிகளும் அவரிடத்தில் ஈடுபடுகிறார்கள் என்ற பொருளைத் தரும்.

[338]

तद्भक्तै र्वा समागमम् (தத் ப₄க்தைர் வா ஸமாக₃ம்) மேல் நாட்டிலே கேஶவ தீ₃க்ஷிதருடைய அகத்திலே எழுந்தருளியிருந்து அருளிச்செய்ததாகப் பிள்ளை அருளிச்செய்யும்படி: "அந்த உத்₃தே₃ஶ்யமானதுதானே ஸித்₃தி₄க்கிலும் ஸித்₃தி₄க்குங்காண்!" என்று.

(திருவிருத்தம் 15 ஸ்வாபதேசம்)

நிகழ்டம்

நாயகியைத் தேடிவந்த நாயகன், தோழியர்களுடன் நாயகி நின்ற இடத்திற்கு வந்து, சிலவார்த்தைகளைக் கூற, பொருந்தாத சொற்களை எதற்காகக் கூறுகிறீர் என்று தோழியர் கூறுவதாகப் பாசுரம் அமைந்துள்ளது. ஆழ்வாருடைய இருப்பைக் கண்ட அடியவரல்லாதவர்கள் பொருந்தாத சொற்களைக் கூற; அதனால் ஆழ்வாருக்குப் பிறந்த வேறுபாடு இப்பாசுரத்தில் கூறப்படுகிறது என்று உட்பொருள் உரைத்த உரையாசிரியர், எம்பெருமானோடு ஏற்படுகின்ற ஸம்பந்தத்தை (தொடர்பை)க் காட்டிலும் அவனடியார்களுடன் ஏற்படுகின்ற தொடர்பு உயர்ந்தது என்பதை விளக்க ஒரு வடமொழி சுலோகத்தை எடுத்துக் காட்டி, அத்தொடர்பில் ஓர் **ஐதிஹ்யம்** எடுத்துக்காட்டுகிறார்.

விளக்கம்

ஸம்ஸார விஷவ்ருக்ஷஸ்ய த்வே பலே ஹி அம்ருதோபமே
கதாசித் கேசவே பக்தி: தத்பக்தைர் வா ஸமாகமம்

(ஸம்ஸாரமாகிய நச்சு மரத்தில் இரண்டு அமுதம் போன்ற பழங்கள் உள்ளன; ஏதோ ஒரு சமயத்தில் பகவானான கேசவனிடத்தில் ஏற்படும் பக்தி ஒன்று; அவனடியார்களோடு கூடப்பெறுதல் மற்றொன்று) என்பது ஒரு வடமொழிச்லோகம்.

மேல் நாட்டில் (திருநாராயணபுரத்தில்) கேசவ தீக்ஷிதர் என்பவருடைய அகத்தில் எழுந்தருளியிருந்த போது (எம்பெருமானார்)[1] இந்த சுலோகத்திற்கு விளக்கமாக ஒரு அரிய கருத்தை அருளிச் செய்ததாக நம்பிள்ளை அருளிச் செய்வர்.

"இந்தக் கொடிய ஸம்ஸாரத்திலும் பகவத் பக்தி ஏதோவொரு காலத்தில் உண்டாகி விடும்; அதற்கும் மேலே, அவனுடைய அடியார்களிடத்திலேயே கூட தொடர்பு உண்டாகிவிடும். இவன் எதை அடைய வேண்டுமோ அதுவே கிடைத்தாலும் கிடைத்து விடும்" என்றருளிச் செய்தார்.

'கதாசித் கேசவே பக்தி: தத்பக்தைர் வா ஸமாகம:' என்பது சுலோகம். இதில் உள்ள 'வா' என்கிற பதத்திற்கு, 'அல்லது' என்றே பெரும்பாலும் பொருள் கொள்வர். அதன்படி கேசவனிடத்தில் பக்தியோ அல்லது அவனுடைய அடியார்களிடத்தில் பக்தியோதான் ஸம்ஸாரமாகிற நச்சு மரத்தில் கிடைக்கும் அமுதம் போன்ற பழம் என்று பொருள் கொள்ள நேரிடும். இப்பொருளில் இரு குறைகள் உள்ளன. 'இதுவோ அல்லது அதுவோ' என்றால், ஏதோ ஒன்று தான் என்று ஏற்படும். ஆனால் இங்கு த்வே பலே = இரண்டு பலங்கள் என்று கூறியிருப்பதனால் அப்பொருள் பொருந்தாது. மேலும் பகவத் பக்தியை விட பாகவத பக்தி சிறந்தது என்ற பொருளும் கிடைக்காது. எனவே 'வா' என்ற சொல்லிற்கு 'ஏவ' என்று பொருள் கொண்டு, "ஒரு வேளை பகவத் பக்தி உண்டாகும். அதற்கும்மேலே அதைவிட உயர்ந்ததான பாகவத பக்தியே கூட உண்டாகிவிடலாம். இந்த உத்தேச்யமே (அடைய வேண்டியதே) கிடைத்து விடும்" என்று அருளிச் செய்தார். (அந்த உத்தேச்யமானது தானே = எந்த உத்தேச்யமானது கிடைப்பது அரிதோ அதுவே கிடைத்துவிடும் என்றபடி)

[339]

"ஸ்ரீகு₃ஹப்பெருமாளோடு நின்றானாகில் இவனுக்குக் காலம் நெடுகுவானென்?" என்று பிள்ளை கேட்டருள, "ஸ்ம்ருதிக்கு உத்₃பே₃த₄கர் உண்டானால் காலம் நெடுகுமத்தனையிறே!" என்று சீயர் அருளிச் செய்தார்.

(திருவிருத்தம் 16 ஸ்வாபதேசம்)

நிகழ்டம்

நாயகனோடு கூடியிருந்து பிரிந்த நாயகி, அப்பிரிவின் ஆற்றாமையைத் தோழிக்குக் கூறுவதாகப் பாசுரம் அமைந்துள்ளது. 'பல பல ஊழிகள் ஆயிடும், அன்றி ஓர் நாழிகையைப் பலபல கூறிட்ட கூறாயிடும்' (நாயகனைப் பிரிந்திருக்கும்

1. இங்கு இப்படி அருளிச் செய்தவர் எம்பெருமானார் என்று குறிப்பிடப்படவில்லை. ஆனால் எண் 530ல் இப்படி அருளிச் செய்தவர் எம்பெருமானார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

காலமானது பல கற்பகாலங்களாகத் தோற்றும்; நாயகனோடு கூடியிருக்கும் காலமானது, ஒரு நாழிகையைப் பல பல பகுப்புக்களாக்கிய கூறுகளில் ஒரு கூறாக இருக்கும்) என்று நாயகி கூறுகின்றாள். எம்பெருமானைப் பிரிந்திருக்கின்ற காலம் ஆழ்வாருக்கு நெடுகிச் செல்கின்றது என்றும், கூடியிருக்கும் காலம் மிக விரைவாக ஓடிவிடுகின்றது என்றும் ஸ்வாபதேசம் கூறும் உரையாசிரியர், இராமாயணத்திலிருந்து ஒரு சுலோகத்தை மேற்கோள்காட்டி, அது தொடர்பாக **ஸம்வாதம்** *ஒன்றைக் கூறுகிறார்.*

விளக்கம்

இராமபிரானை வனத்திற்கு அழைத்துச் சென்ற தேரோட்டியான சுமந்திரன் "குஹேந ஸார்த்தம் தத்ரைவ ஸ்திதோஸ்மி திவஸாந் பஹூந்" (குஹனோடு கூட அங்கேயே வெகு நாட்கள் இருந்தேன்) (ராமா. அயோ. 59-2) என்று கூறுகிறான். வனத்திற்கு எழுந்தருளிய இராமபிரான் திரும்பிவந்து விடுவான் என்கிற நைப்பாசையால் கங்கைக் கரையிலேயே இரண்டு மூன்று நாள்கள் குகனுடன் காத்துக் கொண்டிருந்தமை பற்றி சுமந்த்ரன் இவ்வாறு கூறுகிறான்.

"குஹனோடு கூட காத்துக் கொண்டிருந்தது இரண்டு மூன்று நாள்கள் தானே! 'திவஸாந் பஹூந்' (நாள்கள் பல) என்று கூறுவது ஏன்? (தனியாக இருந்தால் காலம் நீண்டதாகத் தோன்றியிருக்கலாம்.) குஹனோடு கூட இருந்த போதும் காலம் நீண்டதாகத் தோன்றியதற்குக் காரணம் என்ன?" என்று **நம்பிள்ளை** *கேட்க,*

"ஒன்றைப் பிரிந்திருக்கிற காலத்திலே, அதை நினைவூட்டுகின்றவர் முன்னிலையில் வருத்தம் இரட்டிக்கும் அல்லவா? ராமனைப் பிரிந்திருக்கிற காலத்தில் அவனைப் பற்றியே நினைவூட்டி குகன் பேசிக் கொண்டிருந்தபடியால் இராமனைப் பிரிந்த துன்பம் மேலும் மேலும் வளர்ந்து பெருகியது. அதனால் இரண்டு மூன்று தினங்களே அங்கு தங்கியிருந்தாலும் அது பல தினங்களாக சுமந்திரனுக்குத் தோன்றியது" என்று **நஞ்சீயர்** *அருளிச் செய்தார்.*[1]

[340]

(சூட்டு) பிள்ளை உறங்காவில்லி தாஸர் பொன்னாச்சியாருக்கு அருளிச் செய்த வார்த்தை, "அஸ்நாமி என்னுமாபோலே."

(திருவிருத்தம் 21 பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியானம்)

நிகழிடம்

பரமபதத்திலுள்ள நித்யசூரிகள் எம்பெருமானுக்குத் திருவாராதனம் செய்ய முற்பட்டு அவனுக்குச் சூட்டுவதற்காக மாலைகளையும் ஏந்தி நின்றதை

1. எண் 539ல் இவ்வாறு அருளிச் செய்தவர் மிளகாழ்வான் என்று குறிப்பிடப்படுகிறது.

நம்மாழ்வார், 'சூட்டு நன்மாலைகள் தூயன ஏந்தி' என்றருளிச் செய்கிறார். 'தன் அடியவன் காலால் இட்டதையும் தலையாலே ஏற்கக் கூடியவன் எம்பெருமான்' என்று இதற்கு உரையருளிய உரையாசிரியர் இதற்கு ஆதாரமாகப் பிள்ளை உறங்காவில்லி தாஸர் கூறிய **வார்த்தை**யை எடுத்துக் காட்டுகிறார்.

விளக்கம்

"கண்ணபிரான் ஸ்ரீமத்பகவத் கீதையில் (9-26) 'பத்ரம் புஷ்பம் பலம் தோயம் யோ மே பக்த்யா ப்ரயச்சதி ததஹம் பக்த்யுபஹ்ருதம் அச்நாமி ப்ரயதாத்மந:' (எவனொருவன் எனக்கு இலையையோ, பூவையோ, பழத்தையோ, நீரையோ அன்போடு ஸமர்ப்பிக்கிறானோ, பரிசுத்தமான நெஞ்சுடைய அவனுடைய அன்பாலிடப்பட்ட அப்பொருளை நான் உண்கிறேன்) என்று கூறியிருக்கிறான். (இங்கு 'அச்நாமி' என்பதற்கு உண்கிறேன் என்பது பொருள்.) பழத்தை உண்கிறேன் என்றால் அது பொருந்தும். இலை, பூ, நீர் முதலியவற்றை உண்கிறேன் என்பது பொருந்தாது. அப்படியிருக்கும்போது இலை, பூ, பழம், நீர் ஆகிய எல்லாவற்றையும் உண்கிறேன் என்றே கூறியிருப்பதால், அவன் கொடுக்கப்பட்ட பொருள்களின் தரத்தைப் பார்ப்பதில்லை; கொடுப்பவனின் பக்தியையே பார்க்கிறான் என்பது பெறப்படுகிறது. அதையே இந்த ச்லோகத்தில் 'பக்த்யா ப்ரயச்சதி' (பக்தியினால் கொடுக்கிறான்) என்றும், 'பக்த்யுபஹ்ருதம்' (பக்தியோடு கொடுக்கப்பட்ட) என்றும் இருமுறை கூறியிருக்கிறான். அப்படிப்பட்டவன் அடியவன் இட்ட பொருளைத் தலையாலே ஏற்றுக் கொள்வான் என்பதைக் கூற வேண்டுமோ?" என்று பிள்ளை உறங்காவில்லி தாஸர் தமது மனைவியான பொன்னாச்சியாரிடம் கூறினார்.

[341]

(சிறுநாணெறிவிலம்) இப்போது கையில் வில் இல்லாமையே; அன்றிக்கே முன்பு விற்பிடித்த தழும்பு கூடக் கண்டிலோமீ! இவர்கள்தான் வீரபத்நிகள் ஆகையாலே கையைக் கண்ட போதே அறிவர்களாயிற்று. அன்றியே சிறுநாண் எய்யப் படுவான் வில்லை உடையீரல்லீர் என்றும் நிர்வஹிப்பர்கள்.

(திருவிருத்தம் 22 நம்பிள்ளை ஈடு)

நிகழிடம்

புனங்காக்கின்ற நாயகியைக் காண வந்த நாயகன் கையில் தழையோடு வந்து நின்று, "நான் அம்பு எய்த யானையானது இவ்வழியே போகக் கண்டீர்களோ?" என்று கேட்கிறான். அந்த நாயகனது தன்மையைப் பரிகசித்து தோழி நாயகியோடு கூறும் போது 'சிறுநாணெறிவிலம்' என்பதாகப் பாசுரமுள்ளது. இதற்கு இரண்டு **நிர்வாஹங்கள்** கூறப்பெறுகின்றன.

விளக்கம்

நாயகியும் தோழியும் வீரப்பெண் ஆனபடியால் ஒருவன் கையைக் கண்டவுடனே 'இது வில் பிடித்த கையா அன்றா என்று அறிந்து கொள்வாள் ஆதலின், 'கையில் தழையோடு வந்து நிற்கும் இவரைக் கண்டால், இப்போது இவர் கையில் வில் இல்லாமையே அன்றி, இதற்கு முன்பு வில்பிடித்த தழும்பு கூட இவர் கையில் கண்டிலோம்' என்கிறாள் என்பது ஒரு பொருள். இது தவிர மற்றொரு பொருளும் கூறப்படுகிறது. 'சிறிய நாண் எய்யப்படுவதற்கான வில்லை உமது கையில் கண்டிலோமே! வெறும் தழையையன்றோ பார்க்கிறோம்' என்று நாயகனை நோக்கி அவள் கூறுவதாகவும் பொருளுரைப்பர்கள்.[1]

[342]

(புனத்தயலே வழிபோகும் அருவினையேன்) ஆப்பான் திருவழுந்தூர் அரையர் மச்சிலே பிள்ளை திருநறையூர் அரையர் இப்பாட்டை அருளிச் செய்யா நிற்க, "ஸ்ரீலப்ரசுரமாய் உகந்தருளின நிலங்கள் எங்கும் உண்டாயிருக்கத் திருப்புளிக் கீழிட்ட வழிபோய்க் கெட்டேன் என்கிறான்" என்று.

(திருவிருத்தம் 23 நம்பிள்ளை ஈடு)

நிகழ்டம்

கொல்லையைக் காத்துக் கொண்டிருக்கின்ற நாயகியையும் தோழியையும் கண்டு நாயகன் "புனமோ, புனத்தயலே வழிபோகும் அருவினையேன் மனமோ, மகளிர்! நுங்காவல் சொல்லீர்!" (பெண்களே! உங்கள் காவலுக்கு உரிய பொருள் இத்தினைப் புனமோ? அல்லது இப்புனத்தினருகே செல்லுகின்ற பாவியேனான என் நெஞ்சமோ? சொல்லுங்கள்) என்று கேட்பதாகப் பாசுரம் அமைந்துள்ளது. (இப்பாசுரத்தில் நாயகியாகக் குறிப்பிடப்படுபவர் ஆழ்வார். நாயகனாகக் குறிப்பிடுவது ஸ்ரீவைஷ்ணவர்கள் என்பது உட்பொருளாகும். அதன்படி ஸ்ரீவைஷ்ணவர்கள் ஆழ்வாரிடம் நெஞ்சு பறிகொடுத்தமை இப் பாசுரத்தில் கூறப்படுகிறது.) இத்தொடர்பில் ஒரு **வார்த்தை** *எடுத்துக் காட்டப் பெறுகிறது.*

விளக்கம்

இப்பாசுரத்தைப் **ஆப்பான் திருவழுந்தூர் அரையர்** *அகத்து மச்சிலே இருந்து கொண்டு* **பிள்ளை திருநறையூர் அரையர்** *அருளிச் செய்த போது 'புனத்தயலே வழிபோகும் அருவினையேன்' என்ற சொல் நயத்தை விளக்கியருளத் திருவுள்ளம் பற்றி, "எம்பெருமான் எழுந்தருளியுள்ள திவ்ய தேசங்கள் எல்லாம் கிடக்க, அவற்றைவிட்டு ஆழ்வார் (நாயகி) அவதரித்த தலமான திருநகரியிலே*

1. இரண்டாவது பொருளில் – சிறு நாணெறிவு என்பது வில்லுக்குத் தொழிலாகு பெயர் என்பர் ஸ்ரீ உ.வே காஞ்சீ ஸ்வாமி.

திருப்புளியாழ்வார் வழியாகச் செல்லும்படியான பாபத்தைப் பண்ணினேனே என்கிறான் நாயகன்" என்றருளிச் செய்தாராம்.[1] அதாவது பகவத் விஷயத்தை விரும்பியடைந்து சுகமாகத் திரியாதே, மீள முடியாத பாகவத (ஆழ்வார்) விஷயத்தில் இழியும் படியாவதே! என்பது பொருள்.

[343]

पतिसम्मानिता सीता (பதிஸம்மாநிதா ஸீதா) **பெருமாள் சக்ரவர்த்திபாடு ஸுமந்த்ரன் அழைக்க எழுந்தருளுகிறபோது தொடர்ந்து பின்னே புறப்பட்ட பிராட்டிக்குத் திருத்தோளில் மாலையை வாங்கியிட்டு "நாம் வருமளவும் வ்ருத்த கீர்த்தனம் பண்ணியிரு" என்றதாகப் பழையவர்கள் நிர்வாஹம். "மாலையையிட்டுத் திருவடிகளைப் பிடித்துக் கொண்டு எழுந்தருளினார்" என்று பட்டர்.**

(திருவிருத்தம் 24 பெரியவாச்சான் பிள்ளை வ்யாக்யானம்)

நிகழிடம்

நாயகனிடத்தில் மகளுக்குள்ள மிக அதிகமான ஈடுபாட்டைப் பேசுகின்ற திருத்தாயார், 'புள்ளூர்தி கள்ளூரும் துழாய்க் கொயல்வாய் மலர்மேல் மனத்தொடு' (கருடவாஹனனான எம்பெருமானுடைய தேன்பெருகுகின்ற திருத்துழாய் மாலையின் மேல் வைத்த மனத்தோடு) கூடியவளாக இருப்பதாகப் பேசுகின்றாள். இப்படி ஆசைப்பட்டவர்களுக்குத் தன்னுடைய மாலையை அவன் கொடுப்பனே என்ற கேள்விக்கு விடையாக உரையாசிரியர் ஸ்ரீராமாயணத்திலிருந்து ஒரு சுலோகத்தை மேற்கோள்காட்டி, அதில் கூறப்பட்ட விஷயத்திற்கு இரண்டு **நிர்வாஹங்களை***க் காட்டுகிறார்.*

விளக்கம்

எண் 105ன் விளக்கம் பார்க்க.

[344]

ஒரு ஸ்த்ரீ குற்றம் செய்தாள் என்று பட்டருக்கு விண்ணப்பஞ் செய்து, 'இவளை ஹிம்ஸிக்க வேணும்' என்ன, "புறம்புள்ள எல்லாவற்றையும் விட்டு இவ்வூரில் இருப்பே உத்தேஶ்யமாயிருக்கிற இவளை எத்தைச் சொல்லி நாம் நலிவது?" என்று அருளிச் செய்தார்.

(திருவிருத்தம் 28 பெரியவாச்சான் பிள்ளை வ்யாக்யானம்)

1. இவ்வாறு அருளிச்செய்தமை பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்யானத்திலுமுள்ளது.

நிகழிடம்

"வள்வாயலகால் புள்நந்து உழாமேபொரு நீர்த் திருவரங்கா அருளாய்" (கூர்மையான அலகு போன்ற வாயினால் பறவைகள் தன்னிடத்துள்ள சங்கைக் கொத்தாதபடி அலைமோதுகின்ற காவிரி சூழ்ந்த திருவரங்கத்தில் எழுந்தருளியிருப்பவனே! அருளவேணும்) என்று பராங்குச நாயகியின் திருத்தாயார் கூறுவதாகப் பாசுரம் அமைந்துள்ளது. 'எம்பெருமானே! உன் ஊரில் ஓடும் காவிரி ஆறு கூட தன்னை அடைக்கலமாகப் பற்றின சங்குகளைப் பறவைகள் கொத்தாதபடி தன் அலைகளாகிற கைகளால் வெருட்டி ஓட்டிக் காக்கின்றது. இப்படி அறிவற்ற (அசேதநமான) ஆறு கூடத் தன்னைச் சரணடைந்த சங்குகளைக் காக்கும்போது, பரமசேதநனான நீ என்மகளைக் காக்க வேண்டாவோ!' என்று தாயார் கூறுவதாகக் கருத்துரைத்த உரையாசிரியர், அடைக்கலம் அடைந்தவர்களைத் துன்பமடையாமல் காத்தே தீரவேண்டும் என்பதற்கு ஓர் **ஐதிஹ்யம்** காட்டுகின்றார்.

விளக்கம்

ஒரு பெண் தவறு செய்துவிட்டாள் என்று பட்டரிடம் விண்ணப்பித்த சிலர், அவளைத் தண்டிக்க வேண்டும் என்று பட்டரிடம் அனுமதி வேண்ட பட்டர், "எல்லாவற்றையும் விட்டுவிட்டு, இத்திருவரங்கத்தில் வாழ்வதையே பேறாகக் கருதியிருக்கின்றாள் இவள். அப்படித் திருவரங்கத்தில் இருப்பதையே விரும்பி இருக்கின்றவளை நாம் எப்படித் தண்டிக்க முடியும்?" என்றாராம்.

[345]

வீரஸுந்த₃ரனோடே எம்பார் விரோதி₄த்திருக்க, அவ்வூரிலுள்ளான் ஒருவன், அவனோடே எதிரியாய் அவனுக்கு அஞ்சி எம்பார் திருவடிகளிலே வந்து ஶரணம்புக, ஸ்ரீபாத₃த்திலே வர்த்திக்கிறவர்கள் "அவனோடே பண்டே விரோத₄ம் உண்டாயிருக்கச் செய்தே, இவனையும் கொள்ளக் கடவதோ?" என்ன, "நம்மை ஶரணம் என்று புகுந்தவனை நாம் கைக் கொண்டால் ஶரணாகதி தர்மமே எல்லாரையும் ரக்ஷிக்கவற்றுக்காண்" என்றருளிச் செய்தார்.

(திருவிருத்தம் 28 பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்யானம்)

நிகழிடம்

எண் 344ன் நிகழிடம் காண்க.

விளக்கம்

வீரசுந்தரன் என்ற அரசனுடன் எம்பாருக்குக் கருத்து வேற்றுமை ஏற்பட, அதனால் விரோதம் ஏற்பட்டு விட்டது. அந்நிலையில் வீரசுந்தரனுடைய விரோதி ஒருவன் அவனுக்கு அஞ்சி எம்பாரிடம் வந்து சரணடைந்தான். அப்போது

அருகிலிருந்தவர்கள் "ஏற்கனவே வீரசுந்தரனுக்கு தேவரீடம் விரோதம் ஏற்பட்டிருக்கிறபோது, இவனையும் அங்கீகரிக்க வேண்டுமோ?" என்றனர். அதற்கு எம்பார் "நம்மைச் சரணடைந்தவனை நாம் காப்பாற்றினால், அந்த சரணாகதி தர்மமே நம் எல்லாரையும் காப்பாற்றும்" என்றார்.

[346]

"அம்மது₄வனமன்றாகில் ராஜபுத்ரர்கள் முதுகோடே போம்" என்று பட்டர்.

(திருவிருத்தம் 30 பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்யானம்)

நிகழ்டம்

'அன்னம் செல்வீரும் வண்டானம் செல்வீரும் தொழுதிரந்தேன்' என்று பராங்குச நாயகி கண்ணால் கண்ட பறவைகளையெல்லாம் எம்பெருமானிடம் தூது விடுகிறாள். கண்ணால் கண்டவற்றையெல்லாம் தூதுவிட்டால், அவை இவர்கள் இருவரையும் சேர்ப்பதற்கு மகிழ்ச்சியுடன் காரியம் செய்யுமோ என்ற ஐயத்திற்கு விடையளிக்கும் வகையில், ஸ்ரீராமாயணத்தில், சீதையைத் தேடுவதற்காக அனுப்பப்பட்ட வானரவீரர்கள் அனைவரும் அனுமன் சீதையைக் கண்டதனால் மிக்க மகிழ்ச்சி கொண்டனர் என்றும், அவர்கள் அம்மகிழ்ச்சியை மதுவனத்தை அழித்தமையால் தங்களுடைய மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர் என்றும் உரைத்த உரையாசிரியர் இத்தொடர்பில் **பட்டர்** அருளிச்செய்த **வார்த்தை** ஒன்றையும் எடுத்துக் காட்டுகிறார்.

விளக்கம்

எண் 294ன் விளக்கம் பார்க்க.

[347]

கிடாம்பியாச்சானோடே நம்பிதிருவழுதிவளநாடு தாஸரும் மற்றும் முதலிகளுமிருந்து 'அங்யத் பூர்ணாத்' என்கிற ஶ்லோகத்தைக் கேளாநிற்க, 'அங்யத்' என்கிறது "ஒருக்கால் அமையும் என்கிறதோ?" என்ன, "அரைக்கால் அமையும்"என்று கிடாம்பியாச்சான் நியமித்தான்.

(திருவிருத்தம் 30 பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்யானம்.)

நிகழ்டம்

நாயகனைக் காண்பதற்காகச் சென்ற தம் நெஞ்சு திரும்பி வாராமையினால், அந்நெஞ்சுக்குப் பறவைகளைத் தூதாக அனுப்ப நினைத்து, அப்பறவைகளை வேண்டும்போது 'தொழுது இரந்தேன்' என்கிறாள் பராங்குச நாயகி. தொழக் கடவோம் என்கிற எண்ணமே போதுமாயிருக்க தொழுகையும் செய்து இரப்பதும் செய்தாள் என்கின்ற உரையாசிரியர், (எம்பெருமான் விஷயத்தில்)

தொழவேண்டும் என்ற எண்ணமே மிகை என்பதற்குச் சான்றாக ஓர் **ஐதிஹ்யம்** *அருளிச்செய்கிறர்.*

விளக்கம்

ஒருமுறை **நம்பி திருவழுதி வளநாடு தாஸரும்** *மற்றும் சிலரும் கிடாம்பியாச்சானிடம்* **'அந்யத் பூர்ணாம்'** *என்ற சுலோகத்திற்கு விளக்கம் கேட்டுக் கொண்டிருந்தனர்.*

அந்யத் பூர்ணாதபாம் கும்பாத் அந்யத் பாதவநேஜநாத்
அந்யத் குசலஸம்ப்ரச்நாத் நசேச்சதி ஜநார்ந்தந:

(ஒரு பூர்ண கும்பத்தைக் காட்டிலும் வேறொன்றையோ, திருவடி விளக்குவதைக் காட்டிலும் வேறொன்றையோ, நலம் வினவுவதைக் காட்டிலும் வேறொன்றையோ கண்ணன் எதிர்பார்க்க மாட்டான்) என்று கண்ணபிரானைப் பற்றி விதுரர் திருதராஷ்ரானிடம் கூறுகிறார். (மஹாபாரதம் உத்யோகபர்வம் 87-13). "அந்யத் நசேச்சதி = மிகவும் எளியவையான இவை தவிர வேறொன்றையும் கண்ணன் எதிர்பார்க்கமாட்டான் என்று கூறப்பட்டிருக்கிறதே! இவையும் கூட ஒருக்கால் (ஒரே ஒருமுறை) செய்தாலும் போதும் என்று கூட (அவனது எளிமைக்கு உடலாகக்) கொள்ளலாமோ? என்று அவர்கள் கேட்க, **கிடாம்பியாச்சான்** *"ஒருக்கால் என்ன, அரைக்கால் போதும்" என்றாராம். அதாவது இவற்றை ஒரு முறை செய்ய வேண்டும் என்பதும் இல்லை, செய்ய வேண்டும் என்று மனத்தில் எண்ணினாலே போதும், செய்ததாகவே நினைத்துக் கண்ணபிரான் திருப்தியடைந்து விடுவான். இது அவனுடைய எளிமையின் எல்லை என்பது கிடாம்பியாச்சான் தரும் விளக்கமாகும்.[1]*

[348]

பட்டர் விவாஹப்ராப்தரான ஸமயத்திலே ஆண்டாள் ஆழ்வானுக்குப் "பிள்ளைகள் விவாஹ ப்ராப்தராயிருக்க, இதுக்கு ஒன்று விசாரியாதே இருக்கிறதென்?" என்ன, "ப$_4$க$_8$வத் குடும்பத்துக்கு என்னைக் கரையச் சொல்லுகிறாயோ? வேணுமாகில் கோயிலிலே பெருமாள் பாடே வரக்காட்டுகிறாய்" என்ன, பிற்றைநாள் ஆழ்வான் வாசியா நிற்கச் செய்தே, இவர்களைப் போகவிட்டாள்; பெருமாள் ஆழ்வானைப் பார்த்து "ஒன்று சொல்லுவாய்போலே இருந்தாயீ" என்ன, "இவர்கள் விவாஹப்ராப்தர் என்னா நின்றார்கள்" என்ன, பின்பு இரண்டு மூன்று நாளைக்குள்ளே மன்னியைக் கொண்டு நீர் வார்த்தார்கள்.

(திருவிருத்தம் 33 நம்பிள்ளை ஈடு)

1. எண் 129 பார்க்க.

நிகழிடம்

எல்லாவுலகங்களையும் காக்கும் பொறுப்பு உடையவனான நாயகன் (எம்பெருமான்) நாயகியை (ஆழ்வாரை) மட்டும் காக்கத் தவறியது ஏனோ? என்று தோழி கேட்பதாக 'அருளார் திருச்சக்கரத்தால்' எனும் இப்பாசுரம் அமைந்துள்ளது. எல்லோரையும் காக்கும் பொறுப்பு எம்பெருமானுடையதே என்பதற்குச் சான்றாக ஒரு **ஐதிஹ்யம்** எடுத்துக் காட்டப்பெறுகிறது.

விளக்கம்

கூரத்தாழ்வான் திருக்குமாரரான **பராசர பட்டர்** திருமணம் செய்யத் தக்க வயதை அடைந்து விட்டார். ஆனால் இதுபற்றிக் கவலையேதும் கொள்ளாதிருந்த ஆழ்வானை நோக்கி, பட்டருடைய திருத்தாயாரான **ஆண்டாள்** "பிள்ளைகள் திருமண வயதடைந்த பின்பும் அதுபற்றி யோசிக்காமல் இருப்பது ஏன்?" என்று கேட்டாள். அதற்கு ஆழ்வான் "எம்பெருமானுடைய குடும்பத்திற்கு என்னைக் கவலைப்படச் சொல்லுகிறாயோ? வேண்டுமானால் நாளை நான் எம்பெருமான் முன்பு புராணம் வாசிக்கும் போது பிள்ளைகளை அங்கு அனுப்பு" என்றார். அப்படியே மறுநாள் ஆழ்வான் புராணம் வாசித்த போது பட்டரையும் (அவருடைய தம்பியான சீராமப்பிள்ளையையும்) ஆண்டாள் அனுப்பி வைத்தாள். புராணம் வாசித்து முடித்த ஆழ்வான் தயங்கி நிற்கின்ற படியைக் கண்ட பெருமாள், "என்ன ஆழ்வான்? ஏதோ கூறவிரும்புவது போல் தெரிகிறதே?" என்று கேட்க, ஆழ்வான், "பிள்ளைகள் திருமணவயது அடைந்து விட்டதாகக் கூறுகின்றார்கள்....." என்று கூற, (பெருமாள் "நாமே நல்ல இடமாகப் பார்த்துத் திருமணத்தை முடித்து வைக்கிறோம்; கவலை கொள்ள வேண்டாம்" என்றார்.) பிறகு இரண்டு மூன்று நாட்களுக்குள் மன்னியை (கன்னியை?) கொண்டு வந்து பட்டருக்கு நீர்வார்த்துக் கொடுத்து மணம் புணர்வித்தார்கள்.[1]

[349]

"தனித்தனியே நூற்றுவரையும் சுழற்றியெறிய வல்ல ப₄ர்த்தாக்களுமிருக்க, தூ₃ரஸ்த₂னான க்ருஷ்ணனை ஸ்மரிப்பான் என்?" என்று ஆளவந்தாரைக் கேட்க, "அறிந்தோமே, பண்டேயொரு சுருசுருப்பு உண்டு போலே காணும் கேட்டுவைப்பது" என்று அருளிச் செய்தாராம். அதாவதென் என்னில், "ஸ்மர்த்தவ்யோ ப₄க₃வான் ஹரி:" என்று ஆரேனும் சொல்லி வந்தாருண்டுபோலே காணும்.

(திருவிருத்தம் 33 நம்பிள்ளை ஈடு)

நிகழிடம்

எல்லாவுலகங்களையும் காக்கும் பொறுப்பு உடையவனான நாயகன் (எம்பெருமான்) நாயகியை (ஆழ்வாரை) மட்டும் காக்கத் தவறியது ஏனோ? என்று

1. இவ்வைதிஹ்யம் மற்றும் இரண்டு இடங்களில் உள்ளது. எண் 609, 698

தோழி கேட்பதாக 'அருளார் திருச்சக்கரத்தால்' எனும் இப்பாசுரம் அமைந்துள்ளது. எல்லோரையும் காக்கும் பொறுப்பு எம்பெருமானுடையதே என்பதற்குச் சான்றாக ஒரு **ஸம்வாதம்** எடுத்துக் காட்டப்பெறுகிறது.

விளக்கம்

எண் 214ன் விளக்கம் பார்க்க.

[350]

(சிதைக்கின்றதித்யாதி) முன்புள்ளார், 'கூடலிழைக்கப் புக்கவாறே அது சிதறி வருகிறபடியைக் கண்டு அத்தோடே சீறி அழியா நின்றாள்' என்பார்கள். பட்டர் "இது கூடுகைக்கு ஏகாந்தமன்றியே பிரிகைக்கும் ஒருபுடையுண்டா யிருக்கையாலே சீறி உதையா நின்றாள்" என்று.

(திருவிருத்தம் 34 பெரியவாச்சான் பிள்ளை வ்யாக்யானம்)

நிகழிடம்

நாயகன் வருமளவும் பொறுத்திருக்க முடியாத நாயகியானவள் கூடலிழைக்கத் தொடங்கினாள். கூடலிழைத்தலாவது, முதலில் மணலிலே வட்டமான கோட்டைக் கீறி, அதனுள் சுழிசுழியாகச் சுற்றும் சுழித்து, பிறகு அச்சுழிகளை எண்ணிப் பார்த்தால், முடிவில் இரட்டையாக வந்தால் நாயகனோடு கூடுவோம் என்றும், ஒற்றையாக வந்தால், கூடமாட்டோம் தனியாகவே நின்று விடுவோம் என்றும் எண்ணிக் கொள்வது, இப்படிக் கூடலிழைக்கத் தொடங்கிய நாயகி, கோபம் கொண்டு அதை உதைத்து அழித்தாள். ஆழி (கூடல்) மேல் கோபம் கொண்டதற்கு இரண்டு **நிர்வாஹங்கள்** கூறப்பெறுகின்றன.

விளக்கம்

'கூடலிழைக்கத் தொடங்கியவுடன், அது காரியத்தைச் சிதைக்கின்ற வகையில் அதாவது, நாயகனுடன் கூடாமையைத் தெரிவிக்கின்ற வகையில், ஒற்றையாய் வந்தபடியால் கோபம் கொண்டு உதைத்தாள்' என்று **முன்புள்ள ஆசார்யர்கள்** கூறுவர்.

'கூடலிழைக்கத் தொடங்கியவள் இக்கூடலானது நாயகனுடன் சேருவதைத் தெரிவிப்பது போல, சேராமையையும் தெரிவிக்கும் என்ற காரணத்தால் கோபம் கொண்டு (கூடலிழைத்தலை முடிக்காமலே) சீறி உதைக்கின்றாள்' என்று **பட்டர்** விளக்குவர்.

[351]

(தன்சீரடியால் உதைக்கின்ற) பட்டர் இவ்விடம் அருளிச் செய்யாநிற்க, விழுப்பரையர் "இவள் இம்மணலை உதைக்கின்றது அவனறிந்தானாகில் அவன் இதினுள்ளே புகுந்து வ்யாபித்து நில்லானோ?" என்ன, "அவன் புகுந்து வ்யாபிக்க வேணுமோ? இவள் கால் பட்ட மணல் பரதத்வமாகாதோ?" என்றருளிச் செய்தாராம்.

(திருவிருத்தம் 34. நம்பிள்ளை ஈடு)

நிகழிடம்

மணலில் கூடலிழைக்கத் தொடங்கிய நாயகி கோபம் கொண்டு தன் காலால் அதை உதைத்து அழித்தாள் - ஆழியைச் சீறி தன் சீரடியால் உதைக்கின்ற என்று பாசுரம் அமைந்துள்ளது. இத்தொடர்பில் ஒரு **ஸம்வாதம்** *கூறப்படுகிறது.*

விளக்கம்

பட்டர் இவ்விடத்தை விளக்கி அருளிய போது **(பிள்ளை) விழுப்பரையர்,** *"இவள் தன் காலாலே இம்மணலை உதைப்பது அறிந்தால் எம்பெருமான், இவளுடைய கால் தன் மீது படவேண்டும் என்ற எண்ணத்தினால் இம்மணலினுள் புகுந்து நிற்கமாட்டானோ?" என்றார். அதற்கு பட்டர் "அவன் உட்புகுந்து நிற்க வேண்டுமோ? இவள் கால்பட்ட மணலே பரதத்வம்' (எம்பெருமான்) அன்றோ! என்று பகர்ந்தார். அதாவது இதற்கு முன்பு இவள் கால்பட்ட ஒரு மணலன்றோ இப்போது நாம் பரதத்வமென்று சொல்லுவது என்று கருத்து.*

[352]

(இலங்கையித்யாதி, இடிக்தபிரானார் கொடுமைகளே) "ஒருத்திக்காகக் கடலை அடைத்து லங்கையை ராமன் என்றும் லக்ஷ்மணன் என்றும் எழுத்து வெட்டின அம்புகளைப் புகவிட்டுக் குட்டிச் சுவரும் மட்டைத் தெங்குமாக்கி மூலையடியே போம்படி பண்ணின இந்த உபகாரகனுடைய இந்த நீர்மையெல்லாம் எங்கே குடிபோயிற்றதோ?" என்று எம்பார் அருளிச் செய்வர். "இதுவுமழகியதொன்று உண்டாயிருக்கலாகாது என்று அஸூயையாலே அழித்தானத்தனை காண், ஒருத்திக்காக உதவினவன் அல்லகாண்" என்று திருமலை நம்பி.

(திருவிருத்தம் 36 பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்யானம்)

1. பிராட்டியின் திருவடிகளுடைய செம்பஞ்சுக் குழம்பினால் அடையாளம் செய்யப்பட்ட திருமார்பை உடையவனே பரதத்வம் என்று பட்டர் ஸ்ரீரங்கராஜ ஸ்தவத்திலும் (1-9) ஸ்ரீகுணரத்னகோசத்திலும் (4) அருளிச்செய்துள்ளது காண்க. அதுபோல பராங்குச நாயகியின் திருவடி உதைத்த மணலே பரதத்வம் என்பது இங்கே கூறப்படுகிறது.

நிகழிடம்

நாயகியினது தன்மையை அறிந்து வைத்தும் இரக்கம் கொண்டு வந்து உதவாத நாயகன் மிகவும் கொடியவன் - இலங்கைக் குழாநெடுமாடம் இடித்த பிரானார் கொடுமைகளே(இலங்கையிலுள்ள பெரிய மாடங்களையெல்லாம் இடித்த பிரானாருடைய கொடும் தன்மைகளே!) என்று தோழி கூறுவதாகப் பாசுரம் அமைந்துள்ளது. இங்கு இராமபிரானைக் கூறி அவருடைய கொடுமைகளே! என்றதன் சொல் நயத்திற்கு ஆசார்யர்கள் இருவர் உரைத்த **நிர்வாஹங்கள்** *கூறப்பெறுகின்றன.*

விளக்கம்

“சீதைப்பிராட்டியாகிற ஒரு பெண்ணுக்காக, கடலில் அணைகட்டி, ராமன் என்றும் லக்ஷ்மணன் என்றும் பெயர் வெட்டின அம்புகளைச் செலுத்தி, இலங்கையை நாசம் செய்து, அவ்வூரானது குட்டிச் சுவரும், மொட்டை மரமுமாக அழியும்படி செய்து, அப்பிராட்டி மீது தனக்குள்ள அன்பை வெளிப்படுத்தினான். சீதைப்பிராட்டிக்கு அவ்வளவு உபகாரம் செய்தவர், அப்படிப்பட்ட அன்பெல்லாம் இப்போது இந்த நாயகியின் திறத்தில் பொழியாமல் இவள் துன்புறுவதைக் கண்டும் காணாதவர் போல் இருப்பது கொடுமை” என்பதாக **எம்பார்** *அருளிச் செய்தார்.*

“எம்பெருமானுக்கு அழகிய பொருள்களையெல்லாம் அழிப்பதொன்றே காரியம். மிகவும் அழகான மாளிகைகளைக் கொண்ட இலங்கையைக் கண்டவுடன், இப்படி அழகியதாக ஒன்று இருக்கக் கூடாது என்ற காரணத்தினால்தான் அவற்றை அழித்தான்; சீதைப்பிராட்டிக்கு உதவுவதற்காக அல்ல. அதே போல் இப்போதும் அழகு நிரம்பியவளான இந்த நாயகியையும் அழிக்க முற்படுகிறான்; அங்கு ஒருவராலும் அழிக்க முடியாத அரணை அழித்துத் தனக்குப் பெருமை தேடிக் கொண்டது போல் இங்கும் நாயகியின் பெண்மையாகிய அரணை அழிக்க முற்படுகிறான்” என்பது **திருமலைநம்பி** *அருளிச் செய்த விளக்கம்!*

[353]

குருகைகாவலப்பனை “ஜக$_3$தீ$_3$ஶ்வரர்களுக்கு ஸம்ப$_3$ந்த$_4$மிருக்கும்படியென்?” என்று கேட்க, “எஜ்ஜகத்துக்கும் எவ்வீஶ்வரனுக்கும் நீ கேட்பது?” என்றான். இத்தால் “ஶரீரம் யத$_3$வாப்நோதி யஶ்சாப்$_3$யுத்க்ராமதீஶ்வர: என்று இந்த்$_3$ரியாதி$_3$களோடேகூடி உபசயாத்மகமாயிருந்துள்ள இஶ்ஶரீரத்துக்கும் ஈஶ்வரனான ஆத்மாவுக்கும் உண்டான ஸம்ப$_3$ந்த$_4$ம் யாதொன்று, அப்படி இஶ்

1. இவ்வைதிஹ்யம் இப்பாசுரத்திற்கு நம்பிள்ளை அருளிச் செய்த வ்யாக்யானத்திலும் உள்ளது.

ஶரீப$_4$ாவம் ஜக$_3$தீ$_3$ஶ்வரர்களுடைய ஸம்ப$_3$ந்த$_4$ம்" என்று உத்தரம் சொன்னான். அவன்தானே "எனக்கு எம்பெருமானை ஸ்மரிக்கைக்கு விரகு சொல்லவேணும்" என்ன, "நான் உனக்கு அது சொல்லுகிறேன், நீ எனக்கு மறக்கைக்கு விரகு சொல்" என்றான்.

(திருவிருத்தம் 38 நம்பிள்ளை ஈடு)

நிகழிடம்

நாயகனைப்பிரிந்த நாயகி (ஆழ்வார்) தன் ஆற்றாமையைப் போக்கிக் கொள்வதற்காகத் தன் கவனத்தைத் திருப்பி உலகியல் பொருள்களைக் காண முற்பட, அப்பொருள்களும் எம்பெருமானையே நினைவூட்டி நலியத் தொடங்கின. இத்தொடர்பில் ஒரு ***ஸம்வாதம்*** *காட்டப்பெறுகிறது.*

விளக்கம்

குருகைகாவலப்பனை நோக்கி ஒருவர் "உலகுக்கும் இறைவனுக்கும் இடையே உள்ள தொடர்பு யாது?" என்று கேட்டார். "எவ்வுலகிற்கும் எந்த இறைவனுக்கும் இடையேயுள்ள தொடர்பை நீ கேட்கிறாய்?" என்றார் அப்பன். 'சரீரம் யதவாப்நோதி யச்சாப்யுத்க்ராமதி ஈச்வர: க்ருஹீத்வைதாநி ஸம்யாதி வாயுர்கந்தாநிவாசயாத்' (சரீரம் இந்த்ரியம் முதலியவற்றை நியமிக்கும் அதிகாரம் பெற்றிருக்கும் ஜீவன் எந்தச் சரீரத்தை அடைந்தாலும், எந்தச் சரீரத்திலிருந்து புறப்பட்டாலும், மணமுள்ளவற்றிலிருந்து மணங்களைக் காற்று எடுத்துச் செல்வது போல் இந்த்ரியங்களை நுண்ணிய பூதங்களுடன் எடுத்துச் செல்கிறான்) (ஸ்ரீமத் பகவத் கீதை 15-8) என்று கூறப்பட்டிருப்பதால் இந்தச் சரீரமாகிற ஜகத்திற்கு ஜீவாத்மா ஈச்வரனாகக் கூறப்படுகிறான். அப்படி இந்தச் சரீரத்திற்கும் ஜீவாத்மாவுக்கும் யாதொரு தொடர்பு உண்டோ அதே தொடர்பு தான் (அதே சரீர சரீரிபாவம் தான்) இந்த ஜீவாத்மாவுக்கும் (ஜகத்திற்கும்) எம்பெருமானுக்கும் உள்ளது. (உடலுக்குள்ளே உயிர் இருப்பது போல உயிருக்குள் எம்பெருமான் உறைகிறான்)" என்று பதில் கூறினார் குருகைகாவலப்பன். கேள்வி கேட்டவர் தொடர்ந்து, "எனக்கு எம்பெருமானை நினைப்பதற்கு ஒரு வழி சொல்ல வேண்டும்" என்று கேட்க, குருகைகாவலப்பன், "நான் உனக்கு அதைச் சொல்லுகிறேன்; முதலில் நீ எனக்கு எம்பெருமானை மறப்பதற்கு ஒரு வழி சொல் பார்க்கலாம்" என்றார். அதாவது எல்லாப் பொருள்களிலும் எம்பெருமான் உறைகின்றபடியால், ஒரு பொருளுக்கு அந்தப் பொருளாக இருக்கும் நன்மையோ, ஒரு பெயரோ, எம்பெருமான் அந்தராத்மாவாக அதில் உறையாவிட்டால் கிடையாது. எனவே எந்தப் பொருளைக் கண்டாலும், அப்பொருளில் எம்பெருமான் உறைகின்றான் என்ற நினைவே ஏற்பட வேண்டியிருக்க, அவனை நினைப்பதற்கு ஒரு வழி கேட்க வேண்டுமோ? என்பது கருத்து.[1]

1. இக் கருத்துகள் மற்றோரிடத்திலும் குறிப்பிடப்பெற்றுள்ளன. எண் 512 பார்க்க.

[354]

"நம்மை லோகயாத்ரையினின்றும் வேத₃யாத்ரையில் மூட்டுந்தனை அருமைபோரும் ஆழ்வார்களை வேத₃யாத்ரையிலே நின்றும் லோகயாத்ரையிலே மூட்டுகை. நம்மை ஸம்ஸாரத்திலுண்டான ருசிவாஸநையைத் தவிர்த்து ப₄க₃வத் விஷயத்திலே உண்டாக்குகைக்கு உள்ள அருமைபோரும் ஆழ்வார்கள் ப₄க₃வத் விஷயத்தில் ருசிவாஸநையைத் தவிர்த்து ஸம்ஸாரத்திலே அதை உண்டாக்குகைக்கு." இரண்டும் எம்பார் அருளிச் செய்தார்.

(திருவிருத்தம் 38 பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்யானம்)

நிகழ்டம்

நாயகனைப் பிரிந்த நாயகி (ஆழ்வார்) தன் ஆற்றாமையைப் போக்கிக் கொள்வதற்காகத் தன் கவனத்தைத் திருப்பி, உலகியல் பொருள்களைக் காண முற்பட, அப்பொருள்களும் எம்பெருமானையே நினைவூட்டி நலியத் தொடங்கின. இத்தொடர்பில் எம்பார் கூறிய **வார்த்தைகள்** *எடுத்துக் காட்டப்படுகின்றன.*

விளக்கம்

"நம்மை உலகியல் வாழ்க்கையினின்றும் மீட்டு வேதநெறியில் அழைத்துச் செல்வது எவ்வளவு கடினமோ, அவ்வளவு கடினம் ஆழ்வாரையும் வேதநெறியிலிருந்து மீட்டு உலகியல் நெறிக்கு அழைத்து வருவது; நமக்கு இவ்வுலக இன்பங்களில் உண்டான ஆசையைத் தவிர்த்து, எம்பெருமானிடம் ஈடுபடச் செய்வது எவ்வளவு கடினமோ அவ்வளவு கடினம் ஆழ்வாருக்கு எம்பெருமான் மீதுள்ள ஈடுபாட்டைத் தவிர்த்து, அவரை இவ்வுலக இன்பங்களிலே மூட்டுகை" என்று எம்பார் அருளிச் செய்தார்.

[355]

(வண்ணமித்யாதி) ப்ரஜை முலையிலே வாய்வைத்துத் தாய் முகத்தைப் பார்க்குமா போலே என்று பிள்ளைப் பிள்ளையாழ்வான்.

(திருவிருத்தம் 43 பெரியவாச்சான் பிள்ளை வ்யாக்யானம்)

நிகழ்டம்

"கண்ணும் செந்தாமரை கையும் அவை அடியோ அவையே வண்ணம் கரியதோர் மால்வரை போன்று எம்பிரானது எழில் நிறமே" என்று எம்பெருமானுடைய உருவழகைப் பராங்குச நாயகி வருணிக்கிறாள். கண்ணழகை அனுபவித்தவர், அணைக்கின்ற திருக்கை அழகை அனுபவித்தார்; அணைத்த போது உண்டான இன்பத்தால் துவண்டு விழுந்த எல்லையான திருவடிகளை அடுத்தபடி அனுபவித்தார்; அதற்குப் பிறகு எம்பெருமானுடைய திருமேனியை

அனுபவிக்கிறார் என்று விளக்கிய உரையாசிரியர், எல்லையான திருவடியை அனுபவித்தபின் திருமேனியை அனுபவிப்பது ஏன் என்ற ஐயத்திற்கு விடையாகப் பிள்ளைப்பிள்ளை ஆழ்வானுடைய **வார்த்தை** *ஒன்றை எடுத்துக் காட்டுகிறார்.*

விளக்கம்

குழந்தைக்குத் தாயின் முலை போலே அடியவர்களுக்குத் எம்பெருமானுடைய திருவடியாகும். குழந்தை, தாயின் முலையில் வாய் வைத்துப் பின்பு தாயின் முகத்தை நோக்கும். அதுபோல ஆழ்வார் எம்பெருமானுடைய திருவடியை அனுபவித்த பின்பு அவனுடைய வண்ணத்தில் = திருமேனியில் கண் வைக்கிறார் என்று பிள்ளைப் பிள்ளையாழ்வான் அருளிச் செய்வராம்.

[356]

(பெரும்) திருமலை நம்பி அந்திம தஶையிலே கணியனூர் சிறியாத்தானை "பிள்ளை தமக்குத் தஞ்சமாக நினைத்திருக்கும் திருநாமமென்? அத்தைச் சொல்லவேணும்?" என்ன, 'இவர் முன்னே நாமெத்தைச் சொல்லுவது?' என்று கூசியிராநிற்க, "தாஶரதீ! பேசாதிருக்கும் அவஸ்தைஅன்று காணிது" என்ன, "நாராயணாதி நாமங்களும் சொல்லிப் போருவர்: ஆகிலும் விரும்பியிருப்பது அழகிய மணவாளப் பெருமாள் எனும் திருநாமத்தை" என்ன, "ப$_4$ர்த்ரு நாமத்தோபாதியாய் இராநின்றது; ஆகிலும் பிள்ளை நினைத்திருந்தது போக்கித் தஞ்சமில்லை" என்று, 'அழகிய மணவாளப் பெருமாளே ஶரணம்' என்று திருநாட்டுக்கு நடந்தார். கூரத்தாழ்வானோபாதி ஆகையாலே பட்டரைப் பிள்ளையென்பர்.

(திருவிருத்தம் 44 பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்யானம்.)

நிகழிடம்

எம்பெருமானுடைய (நாயகனுடைய) நிறம், உயர்கோலம், பேர், உருவம் இவற்றை எவரும் முடியக் காணப் பெற்றவர்கள் இலர் என்று நாயகி கூறுவதாகப் பாசுரம் அமைந்துள்ளது. இங்கு 'பேர்' என்றது தொடர்பாக ஓர் **ஐதிஹ்யம்** *கூறப்படுகிறது.*

விளக்கம்

திருமலை நம்பி *தமது மரணத்தறுவாயில்* **கணியனூர் சிறியாத்தான்** *என்பவரை அழைத்து "பிள்ளை (பட்டர்) தமக்குத் தஞ்சமாக நினைத்திருக்கும் திருநாமம் எது?" என்று கேட்டார். தாசரதி என்ற இயற்பெயருடையவரான சிறியாத்தான், 'திருமலைநம்பியின் முன்னே நாம் எதைச் சொல்வது' என்று தயங்கி நின்றார். அப்போது திருமலைநம்பி "தாசரதி! பதில் பேசாதிருக்கக் கூடிய நிலை இதுவன்று" என்று கூற, சிறியாத்தான், "நாராயணன் முதலிய*

திருநாமங்களையும் பட்டர் சொல்லுவார் என்றாலும் அவர் மிகவும் விரும்பியிருப்பது அழகிய மணவாளப் பெருமாள் என்ற திருநாமமே" என்று கூற, ஆசார்ய பக்திமிக்க திருமலைநம்பி, 'ஆசார்யன் திருநாமத்தைச் சொல்ல வேண்டிய நாவால் எம்பெருமான் திருநாமத்தைக் கூறுவது கணவன் பெயரை மனைவி கூறுவது போலாகிவிடும். ஆயினும் பட்டர் திருவுள்ளத்திற்கு உகந்த திருநாமமே நமக்குத் தஞ்சம்" என்று கூறி 'அழகிய மணவாளப் பெருமாளே சரணம்' என்று கூறிக் கொண்டே திருநாடு அடைந்து விட்டார்! திருமலைநம்பி, பட்டருக்குத் திருத்தகப்பனாரான கூரத்தாழ்வான் போன்றவர் ஆதலால், பட்டரைப் பிள்ளை என்றே கூறுவர்.[2]

[357]

(பேரும்) ஆச்சிமகன் அந்திமதசையிலே தன்னையறியாதே கிடக்க, பட்டர் எழுந்தருளி, செவியிலே ஊதினாற்போலே "அழகிய மணவாளப் பெருமாளே ஶரணம்" என்ன, பூர்வவாஸனையாலே அறிவு குடிபுகுந்து அத்திருநாமத்தைச் சொல்லித் திருநாட்டுக்கு நடந்தார்.

(திருவிருத்தம் 44 பெரியவாச்சான் பிள்ளை வ்யாக்யானம்)

நிகழிடம்

எண் 356ன் நிகழிடம் பார்க்க.

விளக்கம்

*ஆச்சிமகன் என்பவர் மரணத்தறுவாயில் தன்னையறியாமல் நினைவிழந்து கிடக்க, அவருடைய நலம் விசாரிக்க எழுந்தருளிய **பட்டர்** அவருக்கு அழகிய மணவாளன் மீதுள்ள ஈடுபாட்டைக் கருத்தில் கொண்டு அவருடைய செவியில் ஊதினாற் போலே மெள்ள 'அழகிய மணவாளப் பெருமாளே சரணம்' என்று கூற, முற்பழக்கத்தாலே அறிவு குடிபுகுந்து நெடுநேரம் அத்திருநாமத்தையே சொல்லிக் கொண்டு ஆச்சிமகன். திருநாடலங்கரித்து விட்டார்.*[3]

1. எண் 31 பார்க்க. அங்கு இப்படி அருளிச் செய்தவர் திருமலைநம்பி என்பதற்கு பதிலாக அனந்தாழ்வான் என்று குறிப்பிடப்படுகிறது.
2. இங்கு குறிப்பிடப்படுகின்ற திருமலைநம்பி, இராமானுசருடைய மாதுலரும் (தாய்மாமன்) ஆசார்யருமான பெரிய திருமலைநம்பியின் குமாரான சிறிய திருமலை நம்பியே ஆவார் என்று அரும்பத உரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. கூரத்தாழ்வான், சிறிய திருமலை நம்பி ஆகிய இருவருமே இராமானுசருடைய சீடர்களாவர். இராமானுசர் தமக்குப் பிறகு பட்டரைத் தம்மை போலவே நினைக்கும்படி தம்முடைய சீடர்களுக்குக் கட்டளையிட்டிருந்ததாக எண் 811ல் கூறப்படுகிறது. எனவே ஆசார்ய ஸ்தானத்திலுள்ள பட்டர் உகந்த திருநாமமே தமக்குச் சொல்லத் தகுந்தது என்று திருமலை நம்பி கருதியிருக்கலாம்.
3. இவ்வைதிஹ்யம் மற்றோரிடத்திலும் எண் 566 பார்க்க.

[358]

ஆளவந்தார் மகனார் சொட்டை நம்பி அந்திமதசையிலே முதலிகளடையப் புக்கிருந்து "நீர் நினைத்துக் கிடக்கிறதென்?" என்ன, "ஸ்ரீவைகுண்டத்திலே சென்றால், நம்பெருமாளுடைய குளிர்ந்த முகம் போலே ஸ்ரீவைகுண்டநாதன் முகம் குளிர்ந்திருந்ததில்லையாகில் முறித்துக் கொண்டு இங்கேற ஓடிப் போருமித்தனையென்று கிடக்கிறேன்" என்றார்.

(திருவிருத்தம் 44 பெரியவாச்சான் பிள்ளை வ்யாக்யானம்)

நிகழிடம்

எம்பெருமானுடைய (நாயகனுடைய) நிறம், உயர்கோலம், பேர், உருவம் இவற்றை எவரும் முடியக் காணப் பெற்றவர்கள் இலர் என்று நாயகி கூறுவதாகப் பாசுரம் அமைந்துள்ளது. இங்கு 'உரு(வம்)' என்றது தொடர்பாக ஓர் **ஐதிஹ்யம்** *கூறப்படுகிறது.*

விளக்கம்

எண் 141 பார்க்க.

[359]

பட்டர் பெருமாள் பாடே புக்கிருக்க, பெருமாள் திருமஞ்சனத்துக்கு ஏறியருளுகிறவர் பட்டரைக் கண்டு, "உனக்கு வேண்டுவதென்?" என்று கேட்டருள "சேலையைக் கடுக்கித் திருவரையையும் துடைப்பற்றையும் ஒருகால் காட்டியருள வேணும்" என்றார். பெருமாள் "அஞ்சினாயோ?" என்று கேட்டருள, "நாயன்றே! பரமபதம் என் சிறுமுறிப்படியழியும்; உம்முடைய குளிர்ந்த திருமுகமும் திருநாமத்தழும்பும் இழக்கிறேனாகக் கருதி அஞ்சாநின்றேன்" என்றார்.

(திருவிருத்தம் 44 பெரியவாச்சான் பிள்ளை வ்யாக்யானம்)

நிகழிடம்

எண் 358ன் நிகழிடம் காண்க.

விளக்கம்

எண் 140 பார்க்க.

[360]

शनैर्जगाम सापेक्षः (சனைர் ஜகாம ஸாபேக்ஷ;) என்கிறத்தை सावेक्षः (ஸாவேக்ஷ:) என்று திருத்தி, 'கீழ்விழியாலே பார்த்துப் போனார்' என்று பொருள் சொன்னபடியை பட்டர் கேட்டருளி, "அது வேண்டா காண், கிடந்த பாடந்தனக்கே பொருள் சொல்லலாங் காண்" என்று, 'இவ்வுபகரணங்களைக் கொண்டு நாம்

பிள்ளையை முடிசூட்டிக் காணப்பெற்றிலோம்' என்னும் அபேக்ஷையோடே போனார் என்கிறது காண்" என்றருளிச் செய்தார்.

(திருவிருத்தம் 51 பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்யானம்)

நிகழிடம்

நாயகனைப் பிரிந்திருக்கின்ற காலத்தில், அவன் வந்துகொண்டிருக்கச் செய்தேயும் கடலோசை தன்னை வருத்துகின்றபடியை 'மலை கொண்டு' என்ற இப்பாட்டில் நாயகி கூறுகிறாள். பதினான்கு ஆண்டுகள் வனவாசம் சென்ற இராமபிரான், தான் வந்து கொண்டிருப்பதாக பரதனுக்கு பரத்வாஜ ஆச்ரமத்திலிருந்து அனுமன்மூலமாகச் செய்தி அனுப்பினான். அதுபோல இங்கும் நாயகனுடைய வரவைத் தெரிவிப்பதற்கு ஒருவரும் இல்லாமையால் நாயகி வருந்துகிறாள் என்றுரைத்த உரையாசிரியர், இத்தொடர்பில், அனுமன் மூலம் பரதனுக்குக் கூறிய செய்தியை விளக்குகிறார். 'நாம் அயோத்தி திரும்பிய பிறகு இளவரசு பட்டாபிஷேகம் செய்தால் அதை பரதன் ஏற்றுக் கொள்வானோ அல்லது மறுத்து விடுவானோ' என்று அறிந்து வரும்படி அனுமனை அனுப்பினான்; ஏனெனில், வனவாசம் செல்வதற்கு முன்பும்கூட பரதனுக்கு அரசை அளிப்பதிலேயே விருப்பமுடையவனாக இராமபிரான் இருந்தான் என்று விளக்கிய உரையாசிரியர், இதற்குச் சான்றாக, பட்டர் அருளிச்செய்த **நிர்வாஹம்** *ஒன்றைக் காட்டுகிறார்.*

விளக்கம்

இராமபிரானுக்கு முடிசூட்டுவதாக எல்லா ஏற்பாடுகளும் செய்திருந்த போது, கைகேயி தசரதனிடம் இரண்டு வரங்களைக் கேட்டு, ஒன்றால் இராமபிரான் பதினான்கு ஆண்டுகள் வனம் போகவும், மற்றொன்றால் பரதனுக்குப் பட்டாபிஷேகம் செய்யவும் வேண்டுகின்றாள். வேறு வழியில்லாமல் அவ்வரங்களை தசரதனும் அளித்துவிட கைகேயி இராமபிரானை அழைத்து வரச் செய்து, இவ்விரு வரங்களைப் பற்றிக் கூற, இராமபிரான் துளியும் வருத்தமற்றவராய் அவற்றை அப்படியே ஏற்றுக் கொள்வதாகக் கைகேயிடம் உறுதியளித்து விட்டுத் திரும்புகிறார். அப்படி, வனத்திற்குச் செல்வதாக முடிவு செய்து இராமபிரான் திரும்பிய போது - "அபிஷேசநிகம் பாண்டம் க்ருத்வா ராம: ப்ரதக்ஷிணம் சனைர் ஜகாம ஸாபேக்ஷ: த்ருஷ்டிம் தத்ராவிசாலயந் (பட்டாபிஷேகத்திற்காக வைத்திருந்த பொருள்களை வலம் வந்து, அவற்றை ஆசையோடு பார்த்துக் கொண்டு, சிதறாத எண்ணத்துடன் மெதுவாகச் சென்றார்) என்று (வான்மீகி ராமாயணம், அயோத்யா காண்டம் 19-31) கூறப்பட்டுள்ளது.

இராமபிரானுக்குப் பட்டாபிஷேகம் நடைபெறாமல் போனபோதும் கூடச் சிறிதும் வருத்தமில்லாதவராக வனவாஸம் புறப்படுவதற்குச் சித்தமாக இருந்தார்

என்று கூறப்பட்டிருக்கும்போது "சனைர் ஜகாம ஸாபேக்ஷ:" (பட்டாபிஷேகத்திற்காக வைத்திருந்த பொருள்களை ஆவலோடு பார்த்துக் கொண்டு மெதுவாகச் சென்றார்) என்று கூறினால் அது பொருத்தமுடையது அன்று என்று கருதிய சிலர் 'ஸாபேக்ஷ:' (விருப்பத்தோடு பார்த்தார்) என்ற சொல்லை 'ஸாவேக்ஷ:' (கீழ்விழியாலே அலட்சியமாகப் பார்த்தார்) என்பதாகத் திருத்திப் பொருள் உரைத்தார்கள். அதாவது பட்டாபிஷேகத்திற்காக வைத்திருந்த பொருள்களில் எந்த விருப்பும் இல்லாமல் அலட்சியமாகப் பார்த்துக் கொண்டே சென்றார் என்று பொருள் கூறினார்கள். இதைக் கேட்ட **பட்டர்,** *"அப்படிப் பாடத்தை மாற்ற வேண்டிய அவசியமில்லை; உள்ள பாடத்திற்கே பொருத்தமான பொருள் சொல்லலாமே! 'பட்டாபிஷேகத்திற்காக வைத்துள்ள இந்தப் பொருள்களைக் கொண்டு பரதனுக்குப் பட்டாபிஷேகம் செய்வதைக் காண முடியாமல் வனம் போகிறோமே' என்னும் ஆசையுடன் அப்பொருள்களைப் பார்த்துக் கொண்டே போனார் என்பது ஸாபேக்ஷ: என்கிற சொல்லாலே தெரிவிக்கப்படுகிறது" என்றருளிச் செய்தார்!*

[361]

(அலைகண்டுகொண்ட) स्वभावे सौम्य तिष्ठन्ति (ஸ்வப$_4$ாவே ஸௌம்ய திஷ்ட$_2$ந்தி) பெருமாள் மார்பை நிரப்ப வில்லை வலித்துக் கொண்டு நிற்கச் செய்தே கடல் சிவந்த மாலைகளும் ரத்னாப$_4$ரணங்களுமாய் வந்ததென்று இவ்விடத்தை ப$_4$ட்டர் வாசியா நிற்க, "புலி சீறினாற்போலே சக்ரவர்த்தி திருமகன் வந்து சீறி நிற்க, இதுக்கு இப்போது இத்த$_4$ரிப்பென்?" என்ன, "கிணற்றில் நீர் கொதித்து அத்தைச் சுடப்புகா நின்றதோ? நம்மை அச்சமுறுத்திக் கார்யம் கொள்ளுமித்தனை; நம்மை முடிய நலியப் புகுகிறாரோ என்று ராமப்ரக்ருதியை அறிவான் ஒருவனாகையாலே காண்" என்றருளிச் செய்தார்.

(திருவிருத்தம் 51 நம்பிள்ளை ஈடு)

நிகழிடம்

'மாயப்பிரான் அலை கண்டு கொண்ட அமுதம்' (ஆச்சர்யபூதனான எம்பெருமான், கடலை அலையும்படி கடைந்து, எடுத்த அமுதம்) என்று பாசுரம் அமைந்துள்ளது. ஒருவரும் அளவிட்டு அறியமுடியாத கடலை எம்பெருமான் கலங்கும்படி செய்தான் என்றுரைத்த உரையாசிரியர், இத்தொடர்பில், ராமபிரான் தனக்கு வழிவிடவேண்டும் என்று கடலரசனை வெருட்டி, அம்பைத் தொடுத்தபோது அவன் அலறியடித்துக் கொண்டு இராமபிரானிடம் ஓடி வந்தமையை விளக்கி, அதுபற்றிய **ஸம்வாதம்** *ஒன்றையும் எடுத்துக்காட்டுகிறார்.*

1. இப்பாசுரத்தின் நம்பிள்ளை வியாக்கியானத்திலும் இவ்வைதிஹ்யம் உள்ளது.

விளக்கம்

இராமபிரான் இலங்கைக்குச் செல்வதற்கு வழி விடவேண்டிக் கடலரசனை நோக்கிச் சரணாகதி செய்தான். மூன்று நாள்கள் சென்ற பின்பும் கடலரசன் முகம் காட்டாமையால் கோபம் கொண்ட இராமபிரான் தனது வில்லை வளைத்து அம்பைத் தொடுத்துக் கடலையே வற்ற அடித்து விடுவதாகக் கூறியபோது, கடலரசன் அலறியடித்துக் கொண்டு ஓடி வந்தான் அப்படி வந்த போது அக்கடலரசன்,

ரக்தமால்யாம்பரதர: பத்மபத்ர நிபேக்ஷண:
ஸர்வபுஷ்பமயீம் திவ்யாம் சிரஸா தாரயந் ஸ்ரஜம்

ஜாதரூபமயைச்சைவ தபநீய விபூஷிதை:
ஆத்மஜாநாம் ச ரத்நாநாம் பூஷிதோ பூஷணோத்தமை:

(சிவந்தமாலைகளையும், ஆடைகளையும் அணிந்தவனாகவும் தாமரை இதழ் போன்ற கண்களையுடையவனாகவும் எல்லாப் புஷ்பங்களும் சேர்ந்த மாலையைத் தலையிலணிந்தவனாகவும், தன்னிடத்தில் உண்டான ரத்தினங்கள் இழைக்கப் பெற்ற பொன்னாலாகிய, சிறந்த ஆபரணங்களை அணிந்தவனாகவும் இருந்தான்) என்று (வான்மீகி ராமாயணம் யுத்தகாண்டம் 22-19, 20) கூறப்படுகிறது.

இராமபிரான் தன் மார்புவரை வில்லை வளைத்துக் கொண்டு கோபத்துடன் நின்ற போது, பயத்துடன் ஓடிவந்த கடலரசன் இப்படிச் சிவந்த மாலைகளுடன், அழகிய ஆபரணங்களுடனும் வந்தான் என்ற இவ்விடத்தை வாசித்த போது, சிலர் "புலி சீறுவது போல், இராமபிரான் சீற்றத்துடன் நிற்கின்ற போது, இவ்வளவு அலங்காரத்துடன் கடலரசன் அவன் முன்னே வந்து நின்றது எந்த தைரியத்தில்?" என்று பட்டரைக் கேட்டார்கள். அதற்கு பட்டர், "கிணற்றிலுள்ள நீர் கொதித்து கிணற்றைச் சுட்டுவிடுமோ? குளிர்ந்திருத்தலே அன்றோ கிணற்று நீரின் தன்மை. அது போல 'இராமன் நம்மை அச்சமுறுத்திக் காரியம் கொள்வதற்காக வில்லை வளைத்திருக்கிறானே யல்லது, நம்மை முடியும்படி அழிப்பதற்காக அல்ல' என்று, இராமபிரானுடைய உண்மையான தன்மையைக் கடலரசன் உணர்ந்திருந்த படியால்தான் இவ்வளவு அலங்காரத்துடன் தைரியமாக அவன் முன் வந்தான்" என்று விடை பகர்ந்தார்.

[362]

(என்று வார்கின்றதே) "அவளோடே அவன் கலந்தபோது அவயவியோடே கலந்தாற் போலே இவர்களிருக்கவும், இவர்களோடே கலந்தபோது தன்னுடைய ஸ்தனபா₂ஹு₃த்₃ருஷ்டிகளோடே கலந்தாப்போலே அவள் நினைத்திருக்கவும்,

இப்படி இவர்களுடைய ஸ்வரூபமாய், அபரிச்சி2ந்ந விஷயமாகையாலே எல்லாருங் கூடியனுப4விக்க வேண்டியிருக்க, இருவர்க்குப் பாத்தம் போராத க்ஷுத்3ர விஷயங்களிலுண்டாம் ஸாபத்ந்யம் இவ்விஷயத்திலே உண்டாகச் சொல்லுவது உபபந்நமாம்படி எங்ஙனே?" என்ன, இச்சோ2த்யத்துக்கு முன்புள்ள முதலிகள், "தானும் அவளுமான போ4க3த்துக்கு நாம் ஸ்ரக்3சந்த3நாதி3களோபாதி வரவிருக்க, என்னை அநாத3ரித்துப் போவதே என்று இன்னாதாய் அழுகிறாள்" என்று பரிஹரித்தார்கள். இத்தை ஆளவந்தார் கேட்டருளி, "வடிவிணையில்லா மலர்மகளை இங்ஙீர் நடுக்க நடுங்கும் கடலிலே கொடுபோவதே, படுக்கையாக நான் கிடக்கச் செய்தே! என்று ஸ்ரீபூ4மிப் பிராட்டி அழுகிறாள் காண்" என்றருளிச் செய்தார். இத்தை பட்டர் கேட்டருளி "இதெல்லாம் வேண்டா காண், அநுபபந்நமாய் இருப்பதொரு அர்த்த2த்தைச் சொல்லவே, 'இது எங்ஙனே கூடும்படி?' என்று தலைமகள் நெஞ்சிலே படும்; அவள் விசாரித்து நிர்ணயிக்குங்காட்டில் அவன் வந்துகொடு நிற்கும் என்னும் விஸ்ரம்ப4த்தாலே சொன்னாளாக அமையுங்காண்" என்றருளிச் செய்தார்.

(திருவிருத்தம் 52 பெரியவாச்சான் பிள்ளை வ்யாக்யானம்)

நிகழிடம்

திரைகடலோடிப் பொருளீட்டுவதற்காகச் சென்ற நாயகன் மழைக் காலத்தில் மீண்டுவருவதாகச் சொல்லிச் சென்றும், அக்காலத்தில் திரும்பி வராமல் போனமையால் நாயகி கலக்கமடைய, 'இது உண்மையில் மழைக்காலமன்று' என்று தோழி காலத்தை மயக்கி உரைத்து நாயகியின் கலக்கத்தைத் தீர்க்கிறாள். எம்பெருமானது தேவிகளுள் ஒருத்தியான திருமகள், எம்பெருமானோடு கலப்பதற்காகப் பாற்கடலில் ஆதிசேஷனாகிய சயனத்தின் மீது ஏற, அது கண்டு பூமிப்பிராட்டி அழுகிறாள்; அதனால் பெருகுகின்ற கண்ணீரே மழை நீர்போல் பெருகுகின்றதே தவிர, உண்மையில் இது மழைக்காலமல்ல' என்று தோழி கூறுவதாகப் பாசுரம் அமைந்துள்ளது. இங்கு பூமிப்பிராட்டி அழுததாகக் கூறியதற்குக் காரணம் என்ன என்பது பற்றி மூன்று **நிர்வாஹங்கள்** *கூறப்படுகின்றன.*

விளக்கம்

எம்பெருமானுடைய தேவிகள் அனைவரும் திருமகளுக்கு கைகால் முதலிய உறுப்புக்கள் போன்றவர்கள். எனவே திருமகளோடு எம்பெருமான் கலக்கின்ற போது அவயவியோடு கலந்தது போலவே மற்ற தேவிமார் நினைத்திருப்பர்; அதே போல் மற்ற தேவிமார்களுடன் எம்பெருமான் கலக்கின்ற போது, தன்னுடைய அவயங்களோடு (உறுப்புகளோடு) எம்பெருமான் கலக்கின்றதாகவே திருமகள் நினைத்திருப்பாள். இதுவே இப்பிராட்டிகளின் பரிமாற்றம். எம்பெருமான் என்பவன் அளவிடமுடியாதவனாகையாலே எல்லோரும் கூடியனுபவிக்க

வேண்டியவன். அப்படியிருக்கும்போது, திருமகளோடு எம்பெருமான் பாற்கடல் நடுவே கலக்கப்புகுவதைக் கண்டு பூமிப்பிராட்டி அழுகிறாள் என்று கூறுவது பொருந்துமோ? இருவர் கூடி அனுபவிப்பதற்குக் கூட சக்தியற்ற புன்மையான விஷயங்களில் உண்டாகும் சக்களத்தி சண்டைகள் திருமகளுக்கும் பூமிப்பிராட்டிக்கும் இடையில் கூட உண்டாகுமோ? எனவே தோழி இப்படிக் கூறுவது எப்படிப் பொருந்தும்? என்று ஐயம் எழுகிறது.

முன்புள்ள முதலிகள் *(பூர்வாசார்யர்கள்) சிலர் "திருமகளோடு கலக்கின்றானே என்கின்ற பொறாமையால் பூமிப்பிராட்டி அழவில்லை. 'அவனும் அவளுமான சேர்த்திக்கு நான் மாலை, சந்தனம் போல இன்பத்தை அதிகரிக்கும் பொருளாகவன்றோ இருப்பேன்; அப்படியிருக்க, என்னை விட்டுப் போகின்றார்களே!' என்றுதான் பூமிப்பிராட்டி அழுகிறாள்" என்று கூறினார்கள்.*

ஆளவந்தார் *"'வடிவிணையில்லா மலர்மகள்' என்று அருளிச் செய்துள்ளபடி (திருவாய்மொழி 9-2-10) 'மிகவும் மென்மை படைத்தவளான திருமகளை, நீர் நடுக்க நடுங்கும் கடல் நடுவே அழைத்துச் செல்கிறானே அவளோடு கலப்பதற்கு! படுக்கையாக நான் இருக்கும்போது, இங்கேயே கலக்காமல் இப்படிச் செய்யலாமா?' என்று அழுகிறாள் பூமிப்பிராட்டி" என்றருளிச் செய்தார்.*

இவற்றைக் கேட்ட பட்டர், "இவை ஒன்றுமே வேண்டாம்; 'இது மழைக்காலமன்று' என்பதற்குத் தோழி ஏதோவொரு காரணம் சொன்னாள். இப்படிப் பொருந்தாத ஒன்றைத் தோழி சொல்ல, '(திருமகளோடு கலப்பதற்கு எம்பெருமான் செல்ல, பூமிப்பிராட்டி இது கண்டு அழுகிறாள் என்று தோழி கூறுகிறாளே!) இவள் கூறுவது எப்படிப் பொருந்தும்?' என்று யோசிக்கத் தொடங்குவாள் நாயகி. யோசித்து முடிப்பதற்குள் காலம் கடந்து விடும், நாயகனும் வந்து விடுவான் என்பதற்காகத் தோழி பொருந்தாத ஒன்றையே கூறினாள்" என்று (காலமயக்கு என்கிற துறைக்குப் பொருத்தமாக) அருளிச் செய்தார்!

[363]

(மூவாமைக் காப்பதோர் மன்னுமருந்தறிவீரில்லையே) இதுக்குப் பட்டர் "நாட்டிலோர் ஆந்தராளிகர் இல்லையோ என்கிறார் காண்" என்றருளிச் செய்தார். "இவ்வார்த்தை கேட்டபோது பிள்ளை திருநறையூரரையர் உள்ளிட்டாரடைய நாலைந்து நாழிகைப் போது வேறொரு வார்த்தைக்கு இடங்கொடாதே கொண்டாடி அவர்கள் பட்டது காணும்" என்று சீயர் அருளிச் செய்வர்.

(திருவிருத்தம் 53 பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்யானம்)

1. இப்பாசுரத்தின் நம்பிள்ளை வ்யாக்யானத்திலும் இந்நிர்வாஹங்கள் கூறப்பெறுகின்றன.

நிகழிடம்

'வாராயின முலையாள் இவள்' (கச்சுப் பொருந்திய முலைகளையுடையவள்) என்று நாயகியைப் பற்றிக் கூறுகின்ற பாசுரத்திற்கு மேற்கோளாக பெரிய திருமடலில் திருமங்கையாழ்வார் "என்னிவைதான் வாளா எனக்கே பொறையாகி, முன்னிருந்து மூக்கின்று மூவாமைக் காப்பதோர் மன்னு மருந்தறிவீர் இல்லையே" என்று அருளிச் செய்துள்ள வரிகள் எடுத்து விளக்கப்படுகின்றன. நாயகியினுடைய முலைகள் விம்மி வீங்குகின்றனவென்றும் அதற்குத் தகுந்த மருந்து அறிவார் ஒருவருமில்லை என்றும் நாயகி கூறுவதாகப் பாசுரம் அருளிச் செய்கிறார் திருமங்கையாழ்வார். அத் தொடர்பில் ஓர் **ஐதிஹ்யம்** கூறப்பெறுகிறது.

விளக்கம்

"நாட்டில் ஆந்தராளிகர் எவரும் இல்லையோ என்று கேட்கிறார் திருமங்கை ஆழ்வார்" என்று பட்டர் அருளிச் செய்தார்.[1] ஆந்தராளிகர் என்பதற்கு இருவரையும் சேர்த்து வைப்பவர், தூதர் என்பது பொருள். நாயகனையும் நாயகியையும் சேர்த்து வைப்பவர் எவரும் இல்லையோ என்பதாக மேலெழப் பொருள்படும். ஆனால் எம்பெருமானையும் நம்மையும் சேர்த்து வைக்கும் ஆசாரியர்களையும் இதன் உட்பொருள் குறிக்கின்றது. இப்படி இரண்டு பொருள்களைத் தரும் ஒரே சொல்லை இவ்விடத்தில் விளக்கமாக பட்டர் கூறிய போது, பிள்ளை திருநறையூர் அரையர் உட்படப் பலரும் வியப்பினால் நான்கைந்து நாழிகைகள் வேறெதையும் பற்றிப் பேசாமல் பட்டருடைய நாவன்மையை அப்போது அவர்கள் கொண்டாடி அடைந்த மகிழ்ச்சி இருக்கிறதே அது சொல்லத்தரமன்று என்று **நஞ்சீயர்** அருளிச் செய்வர்.[2]

[364]

"வளர்த்ததனால் பயன் பெற்றேன்" என்கிற பாட்டை பட்டர் அருளிச் செய்யா நிற்கச் செய்தே, பிள்ளை திருநறையூரரையர், அதிலேயருளிச் செய்த சில வார்த்தைகளைக் கேட்டு "இதுக்கு முன்பு ஓராசார்யர் பக்கலிலும் இவ்வார்த்தை கேட்டறியோம்" என்று கொண்டாடி, "பிள்ளாய்! பண்டுமிப்படி ஶ்லாகித்தாருண்டு காணும். ஒரு திர்யக்கை வளர்த்துத் திருநாமங்களைக் கற்பித்துப் பின்னை அதுசொல்லக் கேட்டு, அதன் காலிலே விழுந்தாருமுண்டு காணும்" என்றருளிச்

1. பெரிய திருமடல் வியாக்யானங்களிலும், இவ்வரிகளின் உரைகளில் பட்டர் இவ்வாறு அருளிச் செய்தமை குறிப்பிடப்பட்டுள்ளது.

1. இப்பாசுரத்தின் நம்பிள்ளை வ்யாக்யானத்திலும் இவ்வைதிஹ்யம் உள்ளது. ஆனால் அங்கு 'சீயர் அருளிச் செய்வர்' என்பதற்கு பதிலாக, 'பிள்ளை அருளிச் செய்வர்' என்றுள்ளது.

செய்தார். "நீர் உமக்கு வேண்டின நிலையிலே ஹேதுக்களை வையும், உம்மை அனுப₄விக்கிறவிது இழவாதொழியும் அத்தனையே வேண்டுவது என்றாராம்.

(திருவிருத்தம் 53 பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்யானம்.)

நிகழிடம்

எண் 363ல் பிள்ளை திருநறையூர் அரையர் பட்டரைக் கொண்டாடியது பற்றிக் கூறப்பட்டது. பட்டருடைய ஆசாரியருக்குச் சமமானவரான அரையர் பட்டரைக் கொண்டாடலாமோ என்பதற்கு விடையாக மற்றோர் **ஐதிஹ்யம்** *கூறப்பெறுகிறது.*

விளக்கம்

"வளர்த்ததனால் பயன் பெற்றேன் வருக என்று மடக்கிளியைக் கை கூப்பி வணங்கினாளே" என்கின்ற திருநெடுந்தாண்டகப் பாசுரத்தைப் (14) பராசர பட்டர் *விளக்கியருளியபோது கூறிய சில வார்த்தைகளைக் கேட்டுப்* **பிள்ளை திருநறையூரரையர்** *தம்மைவிட வயதில் மிகவும் சிறியவரான பட்டரை நோக்கி, "இவ்வளவு அழகான விளக்கங்களை இதற்குமுன் எவரிடமும் நான் கேட்டிலேன்" என்று கொண்டாடினாராம். தம்முடைய சிஷ்யனுடைய நிலையில் உள்ள பட்டரை ஆசார்யரான தாம் கொண்டாடலாமோ என்று சிலர் ஐயம் கொள்வார்கள் என்று கருதிய அரையர் அந்த ஐயத்திற்கும் பதிலளிக்கும் வகையில் பட்டரை நோக்கி, "பிள்ளாய்! இப்போது நான் உம்மைக் கொண்டாடியதுபோலவே தம்முடைய சிஷ்யர்களையே கொண்டாடியவர்களும் உண்டு. பரகால நாயகி, தானே தன்னுடை கிளிக்குத் திருநாமங்களைக் கற்பித்துவைத்து, அந்தத் திருநாமத்தை அக்கிளி சென்னதற்காக, "திருமாலைப் பாடக்கேட்டு, வளர்த்ததனால் பயன் பெற்றேன் என்று மடக் கிளியைக் கை கூப்பி வணங்கினாளே!" (திருநெடுந்தாண்டகம் - 14) என்று கூறியுள்ளபடி கிளியின் காலிலும் விழுந்து வணங்கினாளன்றோ! எனவே நான் உம்மைக் கொண்டாடியதில் தவறு ஏதுமில்லை" என்று பட்டர் விளக்கியருளிய பாசுரத்தையே எடுத்துக் கூறினார். இப்படி அரையர் கூறியதைக் கேட்ட பட்டர், "நீர் எந்த நிலையில் வேண்டுமானாலும் அடியேனை வைத்துப் புகழ்ந்து கொள்ளும். உம்மை நாங்கள் அனுபவிக்கும் அனுபவத்தை நாங்கள் இழக்காமல் இருப்பது மட்டுமே அடியேன் வேண்டுவது" என்று கூறினார்!*

[365]

உடையார் ஸுப்₃ரமண்யபட்டர் எம்பெருமானார் எழுந்தருளியிருக்கிற காலத்திலே இங்கே வந்து திருப்புன்னைக் கீழே பெருமாளை ஸேவித்திருக்க,

1. எண் 137 பார்க்க. இப்பாசுரத்தின் நம்பிள்ளை வியாக்கியானத்திலும் இவ்வைதிஹ்யம் உள்ளது.

எம்பெருமானாரைச் சிலர் வந்து அநுவர்த்திக்கிறபடியைக் கண்டு "சீயரே! நான் கேட்க வேண்டியிருக்கிறதொரு வார்த்தையுண்டு" என்ன, "அதேது?" என்ன, "ஸர்வேஶ்வரன் திருமுன்பே நம்மைச் சிலர் தண்டனிடா நின்றார்கள்; அவர்களும் விவக்ஷிதராயிரா நின்றார்கள்; நாமும் அதுவேண்டா என்கிறிலோம், இதுக்கடி என்?" என்ன "இதுதான் கேட்க வேண்டியதொரு வார்த்தையாகிலும் நீர் கேட்குமது என்?" என்றருளிச் செய்தார். "எனக்கு வாசியென்?" என்ன, "நீர் ராஜஸேவை பண்ணித் திரிந்தவரன்றோ? ராஜாவின் பக்கலிலே ஒருவன் கார்யம் கொள்ள வந்தால் அவனுடைய பாதுகைகளையெடுத்துத் தலையிலே வைத்துக் கொள்ளா நின்றால், அவை தன்னைத் தலையிலே வைக்க வேண்டா என்னுமோ? அவன் தான் அவற்றைக் கொண்டாடுகிறானோ? அவற்றைக் கொண்டாடுகிறானாகில், அவை தான் கார்யஞ் செய்ய வேணுமிறே. ஆனபின்பு இத்தால் ப்ரீதனாவான் ராஜாவே அன்றோ?" என்றருளிச் செய்தார்.

(திருவிருத்தம் 53 பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்யானம்)

நிகழிடம்

'வாராயின முலையாள் இவள்' (கச்சுப் பொருந்திய முலைகளையுடையவள்) என்று நாயகியைப் பற்றிக் கூறுகின்ற பாசுரத்திற்கு மேற்கோளாக பெரிய திருமடலில் திருமங்கையாழ்வார் "என்னிவைதான் வாளா எனக்கே பொறையாகி, முன்னிருந்து மூக்கின்று மூவாமைக் காப்பதோர் மன்னு மருந்தறிவீர் இல்லையே" என்று அருளிச் செய்துள்ள வரிகள் எடுத்து விளக்கப்படுகின்றன. நாயகியினுடைய முலைகள் விம்மி வீங்குகின்றனவென்றும் அதற்குத் தகுந்த மருந்து அறிவார் ஒருவருமில்லை என்றும் நாயகி கூறுவதாகப் பாசுரம் அருளிச் செய்கிறார் திருமங்கையாழ்வார். அது பற்றி பட்டர் கூறிய வார்த்தைகளைக் கேட்டு பிள்ளை திருநறையூர் அரையர் பட்டரைக் கொண்டாடியது பற்றி முன் (எண் 363) ஐதிஹ்யத்திலும், பட்டருக்கு ஆசாரியருக்குச் சமமானவரான அரையர் பட்டரைக் கொண்டியது சரியே என்று அடுத்த (எண் 364) ஐதிஹ்யத்திலும் கூறப்பெற்றது. இப்படி அடியவர்களைக் கொண்டாடுவது எம்பெருமானுடைய திருவுள்ளத்திற்கு மிகவும் மகிழ்ச்சியை அளிக்கும் என்பதற்கு மற்றோர் **ஐதிஹ்யம்** *கூறப்பெறுகிறது.*

விளக்கம்

எம்பெருமானார் ஸ்ரீரங்கத்தில் எழுந்தருளியிருந்தபோது நடந்த ஒரு நிகழ்ச்சி கூறப்படுகிறது. நம்பெருமாள் (உத்ஸவர்) திருப்புன்னை மரத்தடியில் எழுந்தருளியிருக்க, சற்று தூரத்தில் எம்பெருமானாரும் எழுந்தருளியிருந்தார். அங்கே பெருமாளை ஸேவிக்க வந்த ஸ்ரீவைஷ்ணவர்கள் எம்பெருமானாரையும் தண்டம் ஸமர்ப்பித்தார்கள். (கீழே விழுந்து வணங்கினார்கள்.) அங்கே வந்திருந்த

உடையார் ஸுப்ரமண்யபட்டர் என்கிற அரசாங்க அதிகாரி ஒருவர் இதைக் கண்டார். எம்பெருமானாரிடம் "சீயரே! உம்மை நான் ஒரு கேள்வி கேட்க விரும்புகிறேன்" என்றார். எம்பெருமானார் "அது என்ன கேள்வி?" என்றார். சுப்ரமண்யபட்டர், "எம்பெருமான் திருமுன்பே சிலர் உம்மைக் கீழே விழுந்து வணங்குகிறார்கள். அவர்களும் வித்வான்களாயிருக்கிறார்கள். 'பெருமாள் திருமுன்பே என்னை வணங்க வேண்டாம்' என்று நீரும் அவர்களைத் தடுக்கவில்லை. இதற்குக் காரணம் என்ன?" என்று கேட்டார். எம்பெருமானார் "இது அவசியம் கேட்கப்பட வேண்டிய கேள்விதான் என்றாலும் நீர் கேட்க வேண்டிய கேள்வியல்ல இது" என்றார். "நான் ஏன் கேட்கக் கூடாது; எனக்கு என்ன வேற்றுமை?" என்று சுப்ரமண்யபட்டர் கேட்க, எம்பெருமானார் "நீர் அரசனிடம் வேலை செய்பவரன்றோ? அரசனிடம் ஒரு காரியத்திற்காக வருபவன், அரசனுடைய காலணிகளை எடுத்துத் தன் தலையிலே வைத்துக் கொள்வதை நீர் கண்டிருப்பீரே! அப்படி அவன் தன் தலையில் வைத்துக் கொள்ளும்போது அக்காலணிகள் 'எங்களைத் தலையில் வைத்துக் கொள்ள வேண்டாம்' என்று கூறுமோ? அவன்தான் உண்மையில் அக்காலணிகளையா கொண்டாடுகிறான்? அவன் அவைகளைக் கொண்டாடுவதாக இருந்தால், அப்பாதுகைகள் அன்றோ அவன் வந்த காரியத்தைச் செய்து கொடுக்க வேண்டும். அவனுக்கு வேண்டியவைகளைச் செய்து கொடுப்பவன் அரசனன்றோ? அவ்வரசனுடைய பாதுகைகளைத் தலையில் ஒருவன் வைத்துக் கொள்வதால் மகிழ்ச்சி அடைபவன் அரசனே தவிர, பாதுகைகள் அல்லவே.' (அதே போலவன்றோ எம்பெருமானுடைய பாதுகைகள் நிலையிலுள்ள நம்மையும் இவர்கள் வணங்குவது)" என்றருளிச் செய்தார்.[1]

[366]

எம்பெருமானார் எழுந்தருளியிருக்கச் செய்தே ஸ்ரீபாத$_3$த்திலே ஸேவித்திருக்கிறவர்கள் "நமக்குத் தஞ்சமாக நினைத்திருக்கவடுப்பதென்?" என்ன, "மூடே$_4$ாயமல்பமதி: என்கிற க்ஷத்ரபந்துவின் வாக்யமன்றோ!" என்ன, "அதொண்ணாது காண். 'ப்ரணதே' என்று ஒன்று உண்டு; அதிலேயொரு ஸர்வஜ்ஞனறிய நிர்மமனாய் விழவேணுமிறே. நம் தலையிலே ஏதேனுமொரு அங்வயம் ஒதுங்கில், அது செய்து தலைக்கட்டுகையிலுள்ள அருமையாலே அது இழவோடே தலைக்கட்டும்படி யிருக்குங்காண். இத்தலையாலே ஏதேனும் ஓரம்ஶம் வருவது உண்டாகில் அது அப்ரதிஷேத$_4$த்திலே புகுமித்தனையல்லது, உபாயஸஹகாரமாகாது. 'நீ உபாயமாக வேணும்' என்கிற ஸ்வீகாரம் அவஶ்யாபேக்ஷிதமாயிருக்கச் செய்தேயும் அத்தலையிலே உபாய

1. இவ்வைதிஹ்யம் இப்பாசுரத்தின் நம்பிள்ளை வ்யாக்யானத்திலும் உள்ளது.

ப₄ாவமாம்படியிறே இருப்பது. இவன் பக்கல் பரமப₄க்தி பர்யந்தமாக விளைந்தாலும் அது ஸ்வரூபப்ரயுக்தமான ருசியிலே அந்வயிக்குமித்தனை போக்கி ஸ்வதந்த்ரமாக நின்று ப₂லப்ரத₂மாக மாட்டாதேயிறே இருப்பது". "ஆனால் பின்னை நினைத்திருக்க அடுப்பதென்?" என்ன, "காளியனுடைய வார்த்தையை நினைத்திருக்க அடுக்கும்" என்றருளிச் செய்தருளினார்.

(திருவிருத்தம் 56 பெரிய வாச்சான்பிள்ளை வ்யாக்யானம்)

நிகழிடம்

'வியலிடம் உண்ட பிரானார்' (விசாலமான பூமியை உண்ட உபகாரகன்) என்று எம்பெருமானைப் பற்றிக் கூறுகிறாள் பராங்குசநாயகி. பிரளயத்தில் அகப்பட்ட பூமிக்குக் கைம்முதல் ஏதுமிராதிருக்கச் செய்தேயும் தானே வந்து உபகரித்தான் எம்பெருமான் என்கின்ற உரையாசிரியர், இத்தொடர்பில் **ஸம்வாதம்** *ஒன்றை எடுத்துக் காட்டுகிறார்.*

விளக்கம்

எம்பெருமானார் *எழுந்தருளியிருந்தபோது அங்கே எம்பெருமானாரை ஸேவிக்க வந்தவர்களிடையே ஒரு விசாரம் எழுந்தது. "நாம் உய்வு பெறுவதற்குத் தஞ்சமாக நினைத்திருக்கத் தக்கது எது?" என்று கேள்வி பிறக்க, அதற்கு* **வங்கிப்புரத்து நம்பி** *என்பவர், "க்ஷத்ரபந்து கூறிய வார்த்தைகளே நாம் எப்போதும் நினைத்திருக்கத் தக்கவை" என்றார்.*

மூடோயமல்பமதி: அல்பவிசேஷ்டிதோயம் க்லிஷ்டம்
மநோஸ்ய விநயைர் நமயி ப்ரஸங்கி
இத்தம் க்ருபாம் குரு மயி ப்ரணதே (அ)கிலேச த்வாம்
ஸ்தோதும் அம்புஜபவோபி ஹி தேவ நேச: (விஷ்ணுதர்மம் 98-33)

(எல்லாவற்றிற்கும் நாயகனே! இவன் சிற்றறிவினன். சிறிய செயல்களைச் செய்பவன்; இந்த மனமானது கெட்டவைகளில் ஈடுபடுகிறது. என்னிடம் கட்டுப்படுவதில்லை; உன்னை வணங்குகின்ற என்னிடத்தில் அருள்புரிய வேணும். பிரமனும் உன்னைத் துதிக்க வல்லவன் அல்லன்) என்று கூறிய க்ஷத்ரபந்துவின் வார்த்தைகளையே நாமும் எப்போதும் நினைத்திருக்க வேண்டும் என்று வங்கிப் புரத்து நம்பி கூறினார். இதைக் கேட்ட எம்பெருமானார் "அது போதாது; தன்னுடையது என்று ஏதும் இல்லாதவனாக, எல்லாமறிந்த எம்பெருமான் திருவடிகளில் இவன் விழ வேண்டும். க்ஷத்ரபந்துவின் வார்த்தைகளில் "இத்தம் க்ருபாம் குரு மயி ப்ரணதே" (இப்படி உன்னை வணங்குகின்ற எனக்கு அருள் புரிய வேண்டும்) என்றுள்ளதே! (ஆக, எம்பெருமானுடைய அருளைப் பெறுவதற்குத் தான் வணங்கியதைக் காரணமாகக் கூறுகின்ற க்ஷத்ரபந்துவின் வார்த்தைகள் தஞ்சமல்ல.) நாம் ஏதோ ஒன்றைச் செய்து, அதனால் பயன் பெறுகிறோம் என்ற

எண்ணம் ஏற்பட்டுவிட்டால், பிறகு அதைச் செய்வது வருத்தத்தை உண்டாக்கி, அந்தப் பயனையும் கிடைக்கவொட்டாமல் செய்துவிடும். நம்மிடத்தில் ஏதேனும் ஒரு தகுதி என்று ஒன்று இருக்குமாயின், அது அவன் எக்காரணமும் இன்றி நமக்குப் புரிகின்ற அருளை நாம் தடுக்காமை என்ற கணக்கில் சேருமேயல்லது, அவன் அருளைப் பெறுகைக்கு அத்தகுதி உபாயத்திற்கு உதவுவதாக ஆகாது. நீ உபாயமாக வேண்டும் என்ற எண்ணம் இன்றியமையாதது ஆயினும், அவ்வெண்ணமும் அவனாலே வந்தது என்றிருக்க வேண்டும். இவனிடத்தில் பரமபக்திவரை இருந்தாலும், அது, இவனுக்கு எம்பெருமானை அனுபவிப்பதற்கு உறுப்பான ருசியிலே செருகி நிற்குமே தவிர, தானே தனியாக நின்று இவன் விரும்புகின்ற பலனைக் கொடுப்பதற்கு அந்தப் பரமபக்தி முதலியவை சக்தியுடையவையல்ல. எம்பெருமானே அச்சக்தி படைத்தவன். எனவே க்ஷத்ரபந்துவின் வார்த்தைகள் தஞ்சமன்று" என்றார். "ஆனால், பின் எதைத்தான் தஞ்சமாக நினைத்திருப்பது?" என்று கேட்க, "காளியன் கூறிய வார்த்தைகளே தஞ்சமாக நினைத்திருக்கத் தகும்" என்றார்.

ஸோஹம் தே தேவதேவேச நார்ச்சநாதௌ ஸ்துதௌ ந ச
ஸாமர்த்யவாந் க்ருபாமாத்ர மநோவ்ருத்தி: ப்ரஸீத மே

(ஸ்ரீவிஷ்ணுபுராணம் 5-7-10)

(தேவதேவனே! தேவரீரை அர்ச்சனை செய்வதிலும், துதிப்பதிலும் நான் ஸாமர்த்யம் இல்லாதவன். அப்படிப்பட்ட எனக்கு தேவரீரே க்ருபை செய்து திருவுள்ளமுகந்து அருள்புரிய வேணும்) என்று கூறிய காளியனுடைய வார்த்தைகளே நமக்குத் தஞ்சம் என்று எம்பெருமானார் கூறினார்.

(எம்பெருமானுடைய அருளைப் பெறுவதற்கு தான் வணங்கியதைக் காரணமாக (ஸாதனமாக) க்ஷத்ரபந்து கூறியிருப்பதால், அவ்வார்த்தைகள் நமக்குத் தஞ்சமாகாது. ஆனால் காளியனோ, கண்ணனுடைய திருமேனியிலே தன்னுடலையிட்டு சுற்றி இறுக்கிய அந்த விரோதச் செயலில் இருந்து மீளுவதற்கும் முன்பே 'நீயே திருவுள்ளமுகந்து எனக்கு அருள் புரிய வேண்டும்' என்று கூறியதன் மூலம், அவ்விரோதச் செய்கையில் நின்றும் மீளும் எண்ணத்தையும் அவனே தனக்கு அருள வேண்டும் என்று வேண்டியிருக்கிறான். எனவே தன்முயற்சியை ஸாதனமாகக் கூறிய க்ஷத்ரபந்துவின் சொற்களைக் காட்டிலும், எம்பெருமானையே ஸாதனமாகக் கொண்டு அவனுடைய நிர்ஹேதுக க்ருபையை (காரணமற்ற அருளை) வேண்டிய காளியனுடைய வார்த்தைகளே நாம் நினைக்கத் தகுந்தவை என்பது எம்பெருமானார் திருவுள்ளக் கருத்தாகும்.)[1]

1. இப்பாசுரத்தின் நம்பிள்ளை வியாக்கியானத்திலும் இந்த ஸம்வாதம் உள்ளது. எண் 109 பார்க்க. அங்கு, இவ்வார்த்தைகளை ஆளவந்தார் அருளிச்செய்தார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

[367]

(கடலித்யாதி) இவ்விடத்தை பட்டர் அருளிச் செய்யாநிற்க, "அல்லாத அவயவங்களினுடைய நிரம்பாமையைச் சொல்லிவைத்து, இதினுடைய பெருமையைச் சொன்னால் விருத்$_3$த$_4$மாகாதோ?" என்று சீயர் கேட்க, "இதிலும் சிறுமையே காணும் சொல்லுகிறது; இங்ஙனே சொல்லலாவதுதானும் இன்று, நாளை இதுதானுஞ் சொல்லப் போகாது" என்றருளிச் செய்தார்.

(திருவிருத்தம் 60 பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்யானம்.)

நிகழிடம்

நாயகியின் இளமையை வர்ணிக்கும் தாயார், நாயகிக்கு 'முலையோ முழுமுற்றும் போந்தில மொய்பூங்குழல் குறிய கலையோ அரையில்லை நாவோ குழறும் கடல்மண்ணெல்லலாம் விலையோ என மிளிருங்கண்' (இன்னும் முலைகள் முழுவதும் தோன்றவில்லை. தலைமுடி கூடாமல் குட்டையாக உள்ளன. ஆடையும் இடையில் பொருந்துமாறு உடுக்கப்படவில்லை. வாயோ மழலைச் சொல் பேசுகின்றது. கண்களோவென்னில் கடல் சூழ்ந்த உலகம் முழுவதும் விலையாகச் சொல்லும்படி மிளிருகின்றன) என்று கூறுவதாகப் பாசுரம் அமைந்துள்ளது. இத்தொடர்பில் ஒரு **ஸம்வாதம்**[1] *காட்டப்பெறுகிறது.*

விளக்கம்

இப்பாசுரத்தை **பட்டர்** *விளக்கியபோது* **நஞ்சீயர்**, *"மற்ற அவயவங்களின் நிரம்பாமையைச் சொல்லிவிட்டு, கண்கள் மட்டும் கடல்சூழ்ந்த உலகம் முழுவதும் விலை சொல்லும்படி மிளிருகின்றன என்று இவ்வளவு பெருமையைச் சொன்னால் அது பொருத்தமற்றதாக இராதோ?" என்று கேட்டார். அதற்கு பட்டர் "இதிலும் கண்களின் நிரம்பாமையே சொல்லப்படுகிறது. இப்படி மலர்ந்த விழிகளாக உள்ள தன்மையும் இப்போதுதான் சொல்ல முடியும்: யௌவனம் குடிபுகுந்து விட்டால் கடைக்கண்களால் பார்ப்பதொழிய இப்படி மலர்ந்த விழிகளால் பார்ப்பது இராதே! அதனால் தான் இப்படிச் சொல்லப்பட்டது" என்று அருளிச்செய்தார்!*

[368]

(முகில் வண்ணனே) இத்தை எம்பார் அருளிச் செய்கிற போது இயலைச் சொல்லுகிறவரைப் பார்த்து, "இவ்வளவில் முகம் காட்டாதே செங்கற் சீரை கட்டவிருக்கிறவர் முதலிகளாயிருப்பர். தலையிலே பிரம்புகள் விழிலும் 'முகில்

1. இப்பாசுரத்தின் நம்பிள்ளை வ்யாக்யானத்திலும் இந்த ஸம்வாதம் உள்ளது.

வண்ணரே' என்னீர்" என்றருளிச் செய்தார். இருவருமானவன்று சேரநிற்கவும் பிரிந்தவன்று தாய்க் கூற்றிலே நிற்குமவரிறே இவர்.

(திருவிருத்தம் 62 பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்யானம்)

விளக்கம்

நாயகியின் ஆற்றாமையை நாயகனிடம் தோழி தெரிவிக்கும் போது, "இவளுடைய நிறையை உன் அருளாலன்றி வேறொன்றாலும் காக்க முடியாது. சேஷசயனத்தின் மீது சயனிக்கின்ற முகில் வண்ணனே! இப்படி நீ இவளைச் செய்வது முறையோ?" என்று கூறுவதாகப் பாசுரம் அமைந்துள்ளது. இத்தொடர்பில் எம்பார் அருளிச்செய்த **வார்த்தை** *ஒன்று கூறப்படுகிறது.*

விளக்கம்

இப்பாசுரத்தை எம்பார் விளக்கியருளும்போது இயல் (பாசுரம்) சேவிக்கின்றவரைப் பார்த்து "இவளுடைய இந்த நிலையிலும் இவளுக்கு முகம் காட்டி அருளாமல் இவளுக்கு காவியுடை கட்டவிருக்கிறவர் தம் மேன்மை தோற்ற வீற்றிருக்கின்ற பிரபு எனத்தக்கவர். எனவே தலையில் பிரம்படி விழுந்தாலும் பரவாயில்லை, 'முகில் வண்ணனே' என்று ஒருமையில் கூறாமல் 'முகில் வண்ணரே' என்று பன்மையில் கூறுங்கள்" என்றாராம். (முகில் வண்ணரே என்ற பன்மை இங்கு மேலெழப்பார்க்கும்போது மதிப்புடன் கூறுவதாகத் தோன்றினாலும் முடிவில் அது நிந்தையாகவே இருக்கிறது என்பது எம்பாரின் கருத்து.) பெருமானும் பிராட்டியுமான சேர்த்தியில் இருவருக்கும் அடிமை செய்யப் பாரிக்கும் எம்பார், அவர்கள் பிரிந்தவன்று தாயான பிராட்டியின் பக்கல் நிற்குமவரன்றோ!

[369]

இவ்விடத்தே பிள்ளையமுதனார் ஒரு கதை சொல்லுவர். 'ஒரு ஸாது$_4$ ப்₃ராஹ்மணன் தனியே வழிபோனானாய், ஒரு பசு தொடர்ந்து வந்ததாய், 'இத்தால் வந்த நலிவைப் போக்கி நம்மை ரக்ஷிப்பார் ஆர்?' என்றிருக்கிற ஸமயத்திலே ஒரு புலி வந்து தோன்றி அப்பசுவையுங் கொன்று அதினுடைய ரக்தபானத்தைப் பண்ணி, இவன் முன்னே வந்து தண்டையை முறுக்கிவிட்டு இருந்ததாய் "அந்தப் பசுவேயாகில் ஒருபடி ப்ராணரக்ஷணம் பண்ணிப் போகலாயிற்று. இனி இத்தைத் தப்பி நம் ஸத்தையை நோக்குகையென்றொரு பொருளில்லையாகாதே" என்று.

(திருவிருத்தம் 72 பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்யானம்)

நிகழிடம்

நாயகனைப் பிரிந்து நாயகி வருந்துகிற சமயத்திலே இருள் வந்தது. அது நாயகியை மேலும் வருந்தத்துக்குள்ளாக்கியது. இவ்வருத்தத்தைப் போக்கி

இவளைக் காப்பவர் யார் என்று நினைத்திருக்கிற போது இருளைப் போக்கும் சந்திரன் தோன்றினான். இருள் விலகியதால் வருத்தம் தீராமல் சந்திரன் உதித்ததால் நாயகியின் வேதனை இன்னும் அதிகமாகியது. இத்தொடர்பில் பிள்ளை அமுதனார் அருளிச்செய்த **வார்த்தை** *கூறப்படுகிறது.*

விளக்கம்

இவ்விடத்தில் **பிள்ளையமுதனார்** *ஒரு கதை அருளிச் செய்வர். ஒரு சாது பிராமணன் காட்டின் வழியே போய்க் கொண்டிருந்த போது அவனைப் பசுமாடு ஒன்று துரத்தியது. இப்பசுமாட்டிடமிருந்து நம்மைக் காப்பாற்றுபவர் யார் என்று அவன் நினைத்திருந்த போது அங்கே வந்த புலியொன்று அப்பசுவைக் கொன்று, அதனுடைய ரத்தத்தையும் குடித்து விட்டு, பிராமணன் முன்னே வந்து வாலை முறுக்கிக் கொண்டு நின்றது. அப்போது அவன், 'நம்மைக் கொல்ல வந்த பசு ஒழிந்தது' என்று மகிழ முடியுமோ? 'அந்தப் பசுவிடமிருந்தாவது உயிரை எப்படியோ காப்பாற்றிக் கொண்டிருக்கலாம். ஆனால் இந்தப் புலியிடமிருந்து இனித் தப்புவது என்பது நடவாத காரியம்' என்றன்றோ நினைப்பான். அதுபோலவே இருளிலிருந்து காப்பவனாக சந்திரன் தோன்றினாலும், அந்தச் சந்திரன் தரும் வேதனையைத் தப்புவது என்பது முடியாத காரியம் என்பது அமுதனாருடைய விளக்கமாகும்.*[1]

[370]

பிள்ளை திருநறையூரரையர் "அடியார் நிலாகின்ற வைகுந்தமோ, அன்றி அவனதான வையமோ' என்று பணிப்பராம்.

(திருவிருத்தம் 75 பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்யானம்)

நிகழ்டம்

நாயகியின் ஒப்பில்லாத பெருமையைக் கண்டு, 'இவள் எவ்வூரைச் சேர்ந்தவள்?' என்று தோழியை நோக்கி நாயகன் கேட்கும் போது, "அடியார் நிலாகின்ற வைகுந்தமோ, வையமோ நும் நிலையிடமே?" (அடியவர்கள் வசிக்கின்ற வைகுந்தமோ அல்லது இப்பூவுலகமோ உங்களுடைய இருப்பிடம்) என்று கேட்பதாகப் பாசுரம் அமைந்துள்ளது. இத்தொடர்பில் பிள்ளை திருநறையூர் அரையர் அருளிச்செய்த **வார்த்தை** *ஒன்று கூறப்பெறுகிறது.*

விளக்கம்

இங்கு வைகுந்தத்திற்கு 'அடியார் நிலாகின்ற' என்ற அடைமொழி இருப்பதைக் குறித்து **பிள்ளை திருநறையூர் அரையர்**, *'அடியவர்களின் (=நித்யஸூரிகளின்) ஆணைக்கு உட்பட்டதான பரமபதமோ அல்லது அவனுடையதான வையமோ உங்கள் இருப்பிடம்?' என்று கேட்பதாக*

1. இப்பாசுரத்தின் நம்பிள்ளை வ்யாக்யானத்திலும் அமுதனார் அருளிச்செய்தமை இடம்பெற்றுள்ளது.

விளக்கினார். அதாவது எல்லா உலகங்களுக்குமே எம்பெருமான்தான் நாயகன் என்றாலும் பரமபதம், எம்பெருமானுடைய அடியார்களும் நன்றாக ஞானம் மலரப் பெற்றவர்களுமான நித்ய சூரிகளின் ஆணைக்கு உட்பட்டிருக்கும்; ஆனால் இவ்வுலகத்தில் உள்ளவர்கள் அகங்காரம் மமகாரம் முதலியவை மலியப் பெற்றவர்களாக இருப்பதனால் அவர்களிடம் இவ்வுலகைக் காட்டிக் கொடாமல் எம்பெருமான் தானே ஆள்வன்; எனவே பரமபதம் அவனுடைய அடியார்களுடையது, இவ்வுலகம் அவனுடையது என்பது அரையர் கருத்து![1]

[371]

(எம்மை நீத்து வஞ்சித்த ஓரரசே) "உப$_4$யவிபூதிக்கும் தனித்தனியே கடவனானவோபாதி, என்னையகற்றி முடிக்கைக்கும் தனிமுடி சூடியிருக்கிறவனே" என்று பிள்ளான். "என்னையகற்றி அது செய்கிறபோது, 'பிரியேன்' என்று வைத்துப் பிரிந்து 'இஸ்வப$_4$ாவத்துக்குப் புறம்பு என்னோடு ஒப்பாரார்?' என்றிருக்கிறவனாயிற்று. என்னாலல்லது செல்லாதாரைப் பொகடவல்லாதார் ஆர்? என்னோபாதியில்லை' என்று இதுக்கும் தனிமுடி சூடியிருக்கிறவனாயிற்று" என்று பட்டர்.

(திருவிருத்தம் 80 பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்யானம்)

நிகழ்டம்

நாயகனைப் பிரிந்து வருந்துகின்ற நாயகி, நாயகனைக் குறித்து 'எம்மை நீத்து வஞ்சித்த ஓரரசே' (எம்மைத் தனியே பிரித்து வஞ்சனை செய்த ஒப்பற்ற நாதனே!) என்று கூறுகிறாள். தன்னைப் பிரிந்தவனை ஒப்பற்ற நாதன் என்று நாயகி குறிப்பிட்டுள்ளதற்கு இரண்டு **நிர்வாஹங்கள்** கூறப்படுகின்றன.

விளக்கம்

"எல்லாவுலகங்களுக்கும் ஒப்பற்ற நாதனாக விளங்குவது போலவே, என்னைத் தன்னிடமிருந்து பிரித்து, என்னை முடிப்பதற்கும் தனிமுடி சூடிய ஒப்பற்ற நாதனே!" என்கிறாள் - என்பது **பிள்ளான்** கூறும் விளக்கமாகும்.

"என்னோடு கலக்கிறபோது 'ஒருபோதும் பிரியேன்' என்று கூறிவிட்டு என்னோடு கலந்தான். தன்னாலல்லது உயிர்தரிக்க முடியாத நிலையை எனக்கு உண்டாக்கிய பிறகு என்னைப் பிரிந்து விட்டான். 'இப்படிப்பட்ட தன்மை என்னைத் தவிர வேறு யாருக்கு வரும்! என்னாலல்லது தரித்திருக்க முடியாதவர்களைக் கைவிடுவதற்கு என்னைத் தவிர வேறு எவரும் இலர்' என்று தனிமுடி சூடியிருக்கிற ஒப்பற்ற நாதன்" என்கிறாள் என்பது **பட்டர்** கூறும் விளக்கமாகும்.[2]

1. இப்பாசுரத்தின் நம்பிள்ளை வ்யாக்யானத்திலும் அரையர் அருளிச்செய்தமை இடம்பெற்றுள்ளது.
2. இப்பாசுரத்தின் நம்பிள்ளை வ்யாக்யானத்திலும் இந்நிர்வாஹங்கள் குறிப்பிடப்பெற்றுள்ளன.

[372]

சீயர் "எனக்கு இப்பாட்டுச் சொல்ல அநபி₄மதமாயிருக்கும்" என்றருளிச் செய்வர். "உருவெளிப்பாட்டிலே ஸர்வேஸ்வரனுடைய திருக்கண்கள் பா₃த₄கமாகிறபடியைச் சொல்லுகிறதிறே. இவருடைய ஆற்றாமை உண்டாகிலிறே இப்பாசுரம் சொன்னால் நமக்கு ஸாத்மிப்பது."

(திருவிருத்தம் 82 பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்யானம்)

நிகழ்டம்

பிரிந்து சென்ற நாயகனிடத்தில் இடைவிடாது கருத்தை ஊன்ற வைத்த மனத்தின் நினைப்பு மிகுதியால் அவனுடைய வடிவம் உருவெளிப்பாடாய்க் கண்ணுக்கு எதிரே காணப்பட, அவ்வடிவத்தின் கண்ணழகிலே ஈடுபட்ட நாயகி, அக்கண்ணழகு தன் காதல் நோயை மேலும் வளர்த்து, தன்னை மிக வருந்துகின்றமையைக் கூறும் நாயகி இரண்டு சூரியர்கள் ஒரே சமயத்தின் உதித்து தகிப்பது போல் எம்பெருமானுடைய இரண்டு திருக்கண்களும் தன்னை தகிப்பதாக 'எரிகொள் செந்நாயிறு' என்று தொடங்கும் இப்பாட்டில் கூறுகிறாள். இத்தொடர்பில் நஞ்சீயர் அருளிச்செய்த **வார்த்தை** *கூறப்படுகிறது.*

விளக்கம்

நஞ்சீயர் *"இப்பாசுரத்தைச் சொல்வதற்கு என் மனம் ஒப்பவில்லை. எம்பெருமானுடைய திருக்கண்கள் தகிப்பதாகவும் துன்புறுத்துவதாகவு மன்றோ இப்பாசுரத்தில் சொல்லப்படுகிறது. உலகுக்கெல்லாம் தாயாய் அளிக்கின்ற எம்பெருமானுடைய குளிர்ந்த தாமரைக் கண்களை நாம் இப்படிச் சொல்லுதல் தகுமோ? ஆழ்வாருக்குண்டான ஆற்றாமை நமக்கும் இருந்தால்தான் இப்பாசுரத்தை நாம் சொன்னால் பொருந்தும்" என்று அருளிச் செய்தார்.*[1]

[373]

பட்டர் இவ்விடத்தையருளிச் செய்யாநிற்க நஞ்சீயர் "ஸ்ரீராமாயணத்தில் இவ்விடத்துக்குப் போலியாகச் சொல்லலாம் இடம் உண்டோ?" என்று கேட்க, "இளையபெருமாள் காட்டிலே கொண்டு போய்ப் பிராட்டியை விட்டுப் போந்த அநந்தரம் அவளுடைய ஆர்த்தத்₄வனி கேட்ட ஸ்ரீவால்மீகிப₄க₃வானுக்கு இத்திருத்தாயார்படி உண்டாகச் சொல்லலாம்" என்றருளிச் செய்தார்.

(திருவிருத்தம் 83 பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்யானம்)

1. இப்பாசுரத்தின் நம்பிள்ளை வ்யாக்யானத்திலும் நஞ்சீயர் இவ்வாறு உரைத்தமை கூறப்பெறுகிறது.

நிகழிடம்

அன்றில் பறவைகளின் கூக்குரலைக் கேட்டு நாயகி மோகித்து விழ, "இவள் தன் விருப்பம் நிறைவேறி மகிழ்ச்சியுடன் காணப்படமாட்டாளோ!" என்று திருத்தாயார் கூறுவதாக 'விளரிக்குரல் அன்றில்' என்று தொடங்கும் பாசுரம் அமைந்துள்ளது. இத்தொடர்பில் ஒரு **ஸம்வாதம்** *காட்டப்பெறுகிறது.*

விளக்கம்

"இதற்குச் சமமாகக் கூறக் கூடிய நிகழ்ச்சி ஏதேனும் ஸ்ரீராமாயணத்தில் உண்டோ?" என்று **நஞ்சீயர்** *கேட்க,* **பட்டர்** *"இராமபிரானுடைய கட்டளையினால் லக்ஷ்மணன் சீதைப்பிராட்டியைக் காட்டில் கொண்டு போய் விட, அங்கு தனியே விடப்பட்ட சீதைப்பிராட்டி அழுது மோகித்தபடியைக் கண்ட வால்மீகி முனிவருக்கு[1] இப்பாசுரத்தில் கூறப்படுகின்ற திருத்தாயாருடைய நிலை உண்டு என்று சொல்லலாம்" என்று பதிலளித்தார்.[2]*

[374]

முன்றிலென்று முற்றத்துக்கும் வாசலுக்கும் பேர். முற்றத்தில் பனை நடலாமோவென்றிவ்விடம் நிர்வஹியா நிற்கச் செய்தே, வங்கிப்புரத்து நம்பியைச் சிலர் "முற்றத்தில் பனை நடலாமோ?" என்று கேட்க, அவர் "அதுவோ! இவள் கார்யம் தளிரும் முறியுமாய் செல்கிறது" என்று பணித்தாராம்.

(திருவிருத்தம் 83 பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியானம்)

நிகழிடம்

நாயகியின் இல்லத்தில் முற்றத்தில் உள்ளதொரு பனை மரத்தில் வசிக்கும் அன்றிலானது கூக்குரலிட, அது பிரிவால் வருந்தும் நாயகியை மேலும் துன்பத்திற்கு உள்ளாக்குகிறது. இங்குப் பாசுரத்தில் உள்ள 'முன்றில் பெண்ணை' (முற்றத்தில் உள்ள பனைமரம்) என்ற சொற்றொடர் பற்றி ஒரு **ஸம்வாதம்** *கூறப்பெறுகிறது.*

விளக்கம்

"முற்றத்தில் பனைமரம் நடலாமோ?" என்று சிலர் **வங்கிப்புரத்து நம்பியைக்** *கேட்டனர். அதற்கு அவர், "அதுவோ! இவள் கார்யம் தளிரும் முறியுமாய்ச் செல்லுகிறது" என்று பதிலளித்தாராம்.[3] தளிரும் முறியுமாய் என்று வங்கிப்புரத்து*

1. காட்டில் விடப்பட்ட சீதையை வான்மீகி முனிவர் கண்டது பற்றிய விவரங்கள் வான்மீகி ராமாயணம், உத்தரகாண்டம், 49வது ஸர்க்கத்தில் காணத்தக்கன.
2. இப்பாசுரத்தின் நம்பிள்ளை வ்யாக்யானத்திலும் இந்த ஸம்வாதம் உள்ளது.
3. இப்பாசுரத்தின் நம்பிள்ளை வ்யாக்யானத்திலும் இந்த ஸம்வாதம் உள்ளது.

நம்பி குறிப்பால் கூறுகிறார். நாயகன் அடிக்கடி வருகையும், முற்றத்திலே படுக்கையுமாய்ச் செல்கிறதோ? இரவும் பகலும் நாயகி பிரிவுத் துயரால் வருந்த, உறவினர்களும் இது கண்டு துன்பமுற்றிருக்க, முற்றத்தில் நடப்பெறாது தானே வளர்ந்துள்ள பனை மரத்தை வெட்டிப் பேணுவார் இல்லாமையால் முற்றத்தில் பனைமரம் வளர்ந்துள்ளது என்பது வங்கிப்புரத்து நம்பி அளித்த விளக்கமாகும். (முன்றில் தனி நின்ற பெண்ணை மேல் கிடந்தீர்கின்ற அன்றிலின் கூட்டைப் பிரிக்ககிற்பவர் ஆர்கொலோ என்கிற திருமங்கையாழ்வார் பாசுரமும் (பெரிய திருமொழி 11-2-1) இதே கருத்தையே கொண்டதாகும்.)

[375]

ஆழ்வான் திருக்கோட்டியூர் நம்பிபாடு நின்றும் வந்த அனந்தரத்திலே, "பிள்ளைப் பிள்ளாய்! 'என்னுள்ளான்' என்ன வேண்டும் ஸ்த்தலேனே, ஆழ்வார் 'அடியேனுள்ளான்' என்றபடி கண்டாயே!" என்று பணித்தான்.

(திருவிருத்தம் 85 பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்யானம்)

நிகழ்டம்

'அடியேன் அடியாவி அடைக்கலமே' என்று ஆழ்வார் இப்பாசுரத்தில் ஆத்மஸமர்ப்பணம் செய்கிறார். இங்கு 'ஆவி' என்று கூறாமல் 'அடியாவி' என்று அருளிச்செய்துள்ளமையால், ஆத்மாவானது எம்பெருமானுக்கு அடிமைப் பட்டது என்பது கூறப்படுகிறது. ஆத்மா எம்பெருமானுக்கு அடிமைப் பட்டது என்று திருக்கோட்டியூர் நம்பி அருளிச்செய்த ***ஐதிஹ்யம்*** *இங்கே கூறப்படுகிறது.*

விளக்கம்

ஆத்மாவுக்கு அந்தரங்க நிரூபகம் (தனிப்பட்ட அடையாளம்) ஜ்ஞாத்ருத்வமா? (அறிவுடைமையா?) அல்லது சேஷத்வமா? (அடிமைத் தன்மையா) என்பதை அறிந்து வர, எம்பெருமானார் கூரத்தாழ்வானைத் திருக்கோட்டியூர் நம்பியிடம் அனுப்பினார். அவரிடம் ஆறுமாதம் காத்திருந்த ***கூரத்தாழ்வான்*** *புறப்படும்போது* ***திருக்கோட்டியூர் நம்பி*** *அவரை அழைத்து "பிள்ளைப் பிள்ளாய்! (ஆழ்வான்!) ஆழ்வார் 'என்னுள்ளான்' என்றருளிச் செய்ய வேண்டிய இடத்தில் 'அடியேனுள்ளான்' என்றருளிச் செய்துள்ளார். எனவே ஆத்மாவுக்கு சேஷத்வமே நிரூபகம்" என்று அருளிச் செய்தார்.[1] (இங்கு ஐதிஹ்யத்தில் 'பிள்ளைப்பிள்ளாய்!' என்ற விளி உள்ளதையும், 'திருக்கோட்டியூர் நம்பிபாடு நின்றும் வந்த அனந்தரத்திலே' என்றுள்ளதையும் நோக்கும்போது,*

1. இவ்வைதிஹ்யம் இப்பாசுரத்தின் நம்பிள்ளை வ்யாக்யானத்திலும் உள்ளது (அங்கு பிள்ளைப் பிள்ளாய்! என்பதற்கு பதிலாக பிள்ளாய்! என்று மட்டுமேயுள்ளது) இவ்வைதிஹ்யம் மற்றும் இரண்டு இடங்களில் குறிப்பிடப்பெறுகிறது. (எண் 145, 753) 'அடியேனுள்ளான்' என்பதன் விளக்கத்தை எண் 753ல் காண்க.

கூரத்தாழ்வான் திருக்கோட்டியூர் நம்பியிடமிருந்து திரும்பிய பிறகு தம்முடைய சீடரான **பிள்ளைப்பிள்ளையாழ்வானிடம்** *திருக்கோட்டியூர் நம்பி அருளிச்செய்ததைக் கூறியதாகக் கொள்ளலாம்.)*

[376]

(மைப்படிமேனியும்) பட்டர் ஒரு நாள் இவ்விடத்தை அருளிச் செய்யா நிற்க, பிள்ளை விழுப்பரையரும் ஆப்பான் திருவழுந்தூரரையரும் இருந்தார்களாய், "அநுஸந்தி₄த்தார் நெஞ்சிலே இருள் படியும்படியான திருமேனியும்" என்றருளிச் செய்ய, நஞ்சீயர் "இன்னாரென்றறியேன் என்னப் பண்ணுகையாகாதே" என்றருளிச் செய்தருள, "இவ்வார்த்தை சொன்னார் ஆர்?" என்ன, "சீயர்" என்று அவர்கள் சொல்ல, "நூற்றுப்பதின்காதத்து அவ்வருகே பிறந்து, இவ்வளவும் வந்து நமக்கு இத்தை உபகரிப்பதே!" என்று கொண்டாடியருளினாராம்.

(திருவிருத்தம் 94 பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்யானம்)

நிகழிடம்

எம்பெருமானுடைய திருமேனியை வருணிக்கின்ற ஆழ்வார் 'மைப்படிமேனி' என்றருளிச்செய்கிறார். இத்தொடர்பில் ஓர் **ஐதிஹ்யம்** *கூறப் பெறுகிறது.*

விளக்கம்

பட்டர் *ஒருநாள் 'மைப்படிமேனியும்' என்கிற இப்பாசுரத்தை விளக்கியருளிய போது* **பிள்ளை விழுப்பரையரும், ஆப்பான் திருவழுந்தூரரையரும்** *அங்கு இருந்தார்கள். மைப்படிமேனியும் என்பதற்கு பட்டர், 'கண்டவர்கள் நெஞ்சிலே இருள்படியும்படியான திருமேனி' (கண்டவர்கள் நெஞ்சை பித்தேறச் செய்யும்படியான திருமேனி) என்பதாகப் பொருளுரைத்தார். அப்போது அங்கிருந்த* **நஞ்சீயர்** *"நெஞ்சை இருளப் பண்ணுகையாவது 'இன்னாரென்றறியேன்' என்னும்படி பண்ணுகை அன்றோ!" என்றருளிச் செய்தாராம். அதாவது, ஆழியொடும் பொன்னார் சார்ங்கமுடையவனாக எம்பெருமானைக் கண்டபோதும், அவனை இன்னார் என்று தெரிந்து கொள்ள முடியாத அளவுக்கு அவ்வடிவு பித்தேற்றும்படி இருந்ததால் திருமங்கையாழ்வார், "ஆழியொடும் பொன்னார் சார்ங்கமுடைய அடிகளை இன்னார் என்றறியேன்" என்றருளிச் செய்கிறார். (பெரிய திருமொழி 10-10-9). நெஞ்சைப் பித்தேற்றவல்ல திருமேனி என்று பட்டர் அருளிய விளக்கத்திற்கு மிகச் சரியான மேற்கோளாக இப்பாசுரத்தை நஞ்சீயர் எடுத்துக் கூறியவுடன், பட்டர் "இப்பாசுரத்தை எடுத்துக் கூறியவர் யார்?" என்று கேட்டார். அரையர்கள் இருவரும் "நஞ்சீயர்" என்று கூறினார்கள். அதைக் கேட்ட பட்டர்,*

"நூற்றுக்கணக்கான காதங்களுக்கு அப்பால் (தமிழ்மொழி நடையாடாத கர்நாடக தேசத்தில்) பிறந்திருந்தும், இவ்வளவு தூரம் திருவரங்கத்திற்கு வந்து நமக்கு இப்பாசுரத்தை எடுத்துக் கொடுப்பதே!" என்று நஞ்சீயரை மிகவும் கொண்டாடினாராம்.[1]

[377]

இவ்விடத்தில் சீயர் குறியாக அருளிச் செய்வதொரு வார்த்தையுண்டு. "திருக்கோட்டியூரிலே பட்டர் எழுந்தருளியிருக்கச் செய்தே, அங்கே ராமானுஜ தாஸர் என்றொரு ஸ்ரீவைஷ்ணவர் "அடியேனுக்குத் திருவிருத்தம் அருளிச் செய்ய வேணும்" என்ன, "பெருமாளைப் பிரிந்த சோகத்தாலே நானொன்றுக்கும் க்ஷமனல்லேன்; சீயரே! நீர் அருளிச் செய்யும்" என்ன, சீயரும் அருளிச் செய்து கொடு போகா நிற்கச் செய்தே வளவன் பல்லவதரையரென்று திருக்கோட்டியூர் நம்பி ஸ்ரீபாத₃த்தை உடையாரொருவர் அநுஸந்தி₄த்துக் கொண்டு போந்தாராய், அவர் இப்பாட்டளவிலே வந்தவாறே, கண்ணுங்கண்ணீருமாய் புளகிதகா₃த்ரராய் இருக்க, இத்தைக் கண்டு "பாட்டில் வார்த்தைகள் சொல்லுவது இனி, ப்ரஸங்கி₃த்த மாத்ரத்தில் வித்₃த₄ரானீர்!" என்ன, "நம்பி எனக்கு ஹிதமருளிச் செய்த அநந்தரத்திலே "எம்பெருமான் திருமுன்பே நாள்தோறும் இப்பாட்டை விண்ணப்பஞ் செய்!' என்றருளிச் செய்தார். அத்தையிப்போது ஸ்மரித்தேன்" என்ன, "அவர் இதில் ஏதேனும் அருளிச் செய்யும் வார்த்தை நினைத்திருப்பதுண்டோ?" என்ன, "அது எனக்குப் போகாது, இப்பாசுரமாத்ரத்தை நினைத்திருப்பேன்" என்றாராம். நம்பி ஆத₃ரித்த பாட்டாகாதேயென்று, ஐந்தாறு நாழிகை போது இத்தையே கொண்டாடியருளிச் செய்தார்.

(திருவிருத்தம் 95 பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்யானம்)

நிகழிடம்

'ஒன்றன்பின் ஒன்றாக நெடுங்காலமாகத் தொடர்ந்து வருகின்ற இந்த உடல் தொடர்பு காரணமாக என்னைக் கைவிடாமல் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று அடியேன் எம்பெருமானைச் சரணடைந்திருப்பேன்' என்கிறார் ஆழ்வார் 'யாதானும் ஓராக்கையில் புக்கு' என்று தொடங்கும் இப்பாசுரத்தில். இதுபற்றி ஓர் ***ஐதிஹ்யம்*** *கூறப்பெறுகிறது.*

விளக்கம்

இவ்விடத்தில் **நஞ்சீயர்** *குறிப்பாகச் சொல்லுவதொன்றுண்டு. ஒருமுறை* **பட்டர்** *திருக்கோட்டியூரில் எழுந்தருளியிருந்தபோது* **ராமானுஜதாஸர்** *என்கிற*

1. இவ்வைதிஹ்யம் இப்பாசுரத்தின் நம்பிள்ளை வியாக்கியானத்திலும் உள்ளது.

ஸ்ரீவைஷ்ணவர் ஒருவர் பட்டரிடம் வந்து "அடியேனுக்குத் திருவிருத்தம் (விளக்கவுரை) அருளிச் செய்ய வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார். பட்டர் "நம்பெருமாளைப் பிரிந்திருக்கின்ற வருந்தத்தினால் இப்போது என்னால் எதுவும் சொல்ல முடியாது. எனவே நஞ்சீயரே! நீர் திருவிருத்தம் அருளிச் செய்யும்" என்று கூறினார். நஞ்சீயரும் அப்படியே அருளிச் செய்து கொண்டு வந்தார். திருக்கோட்டியூர் நம்பியின் திருவடியில் ஆச்ரயித்தவரான வளவன் பல்லவதரையன் என்பவரும், ராமானுஜதாஸரோடு சேர்ந்து, நஞ்சீயரிடம் திருவிருத்தம் கேட்டுக் கொண்டு வந்தார். இப்பாசுரத்தை நஞ்சீயர் விளக்க முற்பட்ட போது, வளவன் பல்லவதரையன் கண்ணும் கண்ணீருமாய், புல்லரித்தவராய் இருந்ததைக் கண்டு நஞ்சீயர் "பாட்டின் பொருளை இனிமேல்தானே சொல்லப் போகிறேன்! அதற்குள் நீர் இவ்வளவு ஈடுபாடு கொள்ளக் காரணம் என்ன?" என்று கேட்டார். அதற்கு அவர் "திருக்கோட்டியூர் நம்பி எனக்கு நல்லுபதேசங்கள் அருளிச் செய்தபிறகு, 'எம்பெருமான் திருமுன்பே தினந்தோறும் இப்பாட்டைவிண்ணப்பம் செய்' என்று எனக்கு நியமித்தார். அதை இப்போது நினைத்துக் கொண்டேன்" என்றார். நஞ்சீயர் "திருக்கோட்டியூர் நம்பி இப்பாசுரத்தில் விசேஷமாக அருளிச்செய்த அர்த்தம் ஏதேனும் நினைவில் உள்ளதோ?" என்று கேட்க, பல்லவதரையன் "அவை எனக்குத் தெரியாது. நம்பி எனக்கு அருளிச் செய்தபடியே இப்பாட்டை மட்டும் நினைத்திருப்பேன்" என்றாராம். இவ்விஷயத்தைக் குறிப்பாக எடுத்துக் கூறிய நஞ்சீயர் "திருக்கோட்டியூர் நம்பி விரும்பியிருந்த பாசுரமல்லவோ இது!" என்று இப்பாசுரத்தையே நான்கைந்து நாழிகைக் கொண்டாடினார். (எம்பெருமான் தமக்குச் செய்தருளின உபகாரத்தை நினைத்து அவன் திருவடிகளில் ஆழ்வார் விழுவதாக இப்பாசுரத்தில் கூறப்பட்டுள்ளதால், இப்பாசுரத்தை எம்பெருமான் திருமுன்பே நாள்தோறும் விண்ணப்பம் செய்யுமாறு திருக்கோட்டியூர் நம்பி கூறியிருக்கலாம்.)[1]

[378]

அரையனுக்குப் போகிற பாலை ஓர் இடையன் களவு கண்டான் என்று கட்டி அடியா நிற்கப் பிள்ளை உறங்காவில்லி தாஸர் கண்டு பரவஸராயிருந்து 'இத்தால் வந்ததுக்கெல்லாம் நான் கடவன்' என்று விடுவித்துக் கொண்டாராம்.

(திருவிருத்தம் 98 பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்யானம்)

நிகழிடம்

'நெஞ்சால் நினைப்பரிதால் வெண்ணெயூணென்னும் ஈனச்சொல்லே' (ஸர்வேச்வரனான எம்பெருமான் வெண்ணெயைக் களவு கண்டு அமுது

1. இப்பாசுரத்தின் நம்பிள்ளை வியாக்கியானத்திலும் இவ்வைதிஹ்யம் உள்ளது.

*செய்தான் என்பது நெஞ்சால் நினைக்கவும் அரிதாயிருக்கும்) என்கிறார் ஆழ்வார். இத்தொடர்பில் ஓர் **ஐதிஹ்யம்** கூறப்பெறுகிறது.*

விளக்கம்

அரசனுக்கு எடுத்துச் செல்லுகின்ற பாலை ஓர் இடையன் திருடிவிட, அதற்காக அவனை ஓரிடத்தில் கட்டி வைத்து அடித்துக் கொண்டிருந்தார்கள். தற்செயலாக அங்கே வந்த **பிள்ளை உறங்காவில்லி தாஸர்,** *இடையன் கட்டுண்டு அடியுண்டு கிடப்பதைக் கண்டவாறே, கண்ணபிரான் வெண்ணெய் திருடியகப்பட்டுக்கொண்டு கட்டுண்டு அடியுண்டமை நினைவுக்கு வர, அதனால் மெய்மறந்து, (அவ்விடையனைக் கண்ணனாகவே நினைத்து) "இவ்விடையன் செய்த தவறுகளுக்கெல்லாம் நான் பொறுப்பேற்றுக் கொள்கிறேன், என்னைத் தண்டியுங்கள்" என்று கூறி அவ்விடையனை விடுவித்தாராம்.*

[379]

ஆழ்வான் திருவாய்மொழி நிர்வஹிக்கப்புக்கால் பிள்ளையுறங்காவில்லி தாஸர் கண்ணுங் கண்ணீருமாய் அத்தை இத்தை ப்ரஸங்கித்துச் சிதிலராய்க் கிடப்பர். அத்தைக் கூரத்தாழ்வான் கண்டு "மஹாபாஷ்யம் கற்று சதுரஸ்ரமாக ஒன்றை நிர்வஹிக்கிற எங்களைப் போலன்றிக்கே, பகவத்குண ப்ரஸங்கத்திலே ஶிதிலராம்படி பிறந்த உம்முடைய ஜன்மமும் ஒரு ஜன்மமே!" என்று கொண்டாடினான். ஆழ்வான் வீராணத்தில் ஒரு பெண்பிள்ளையைக் குடங்காலிட்டு 'கள்வன்கொல் யானறியேன்' என்று சங்கையிட்டு, மேலடி தோற்றாமல் மோஹித்தாராம். இப்படியிருக்கிறவரிறே தன்னை வன்னெஞ்சராகச் சொல்லுகிறார்!

(திருவிருத்தம் 99 நம்பிள்ளை ஈடு)

நிகழிடம்

'நெஞ்சால் நினைப்பரிதால் வெண்ணெயூணென்னும் ஈனச் சொல்லே' என்று ஆழ்வார் இதற்கு முன் பாசுரத்தில் அருளிச்செய்தார். கண்ணபிரான் வெண்ணெய்க் களவு கண்ட சரித்திரத்தை நினைத்தமாத்திரத்திலேயே ஆழ்வார் மோகித்து விடுவர் என்று கருதி அருகிலிருந்த மதுரகவிபோல்வார், சடக்கென 'எங்களுக்குத் தஞ்சமான ஒன்றை அருளிச்செய்ய வேண்டும்' என்று பிரார்த்திக்க, 'ஞானப்பிரானை அல்லாலில்லை நான்கண்ட நல்லதுவே' என்று ஆழ்வார் அருளிச் செய்கிறார் என்ற உரையாசிரியர், எம்பெருமானுடைய சரிதங்களை நினைத்த மாத்திரத்திலேயே மோகித்து விழுபவர் உளர் என்பதைக் காட்ட **ஐதிஹ்யங்கள்** *எடுத்துக்காட்டுகிறார்.*

விளக்கம்

கூரத்தாழ்வான் திருவாய்மொழிப் பாசுரங்களுக்கு விளக்கம் அருளிச் செய்ய முற்படும் போது **பிள்ளை உறங்காவில்லி தாஸர்** *அப்பாசுரங்களில் மிகவும் ஈடுபட்டு எம்பெருமானுடைய பரத்வத்தையும் ஸௌலப்யத்தையும் பற்றிப் பலவற்றைப் பேசி, கண்ணீர்பெருக்கி உடைகுலைப்படுவர். இதைக் கண்டு* **கூரத்தாழ்வான்,** *"மஹாபாஷ்யம் முதலிய சாத்திர நூல்களைக் கற்று மிகவும் திறமையாக விளக்குவதற்கு உறுப்பாக நெஞ்சை தரித்து நிற்கச் செய்யவல்ல எங்களைப் போல் அல்லாமல் எம்பெருமானுடைய குணங்களைக் கூறியவுடனேயே நெஞ்சம் உடைகுலைப்படும்படி பிறந்திருக்கின்ற உம்முடைய பிறவியும் ஒரு பிறவியே!" என்று கொண்டாடினாராம். இப்படிப்பட்ட கூரத்தாழ்வான் வீராணத்தில் (வீரநாராயணபுரம் காட்டுமன்னார்கோவில்) எழுந்தருளியிருந்த போது மடியிலே ஒரு பெண் பிள்ளையை வைத்துக் கொண்டு[1] சிலருக்கு சந்தை சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தார். (சந்தை சொல்லுகையாவது, ஆசிரியர் பாசுரத்தின் வரிகளை ஒருமுறை சொல்ல, மாணாக்கர் அவ்வரிகளை மும்மூன்று முறை திருப்பிச் சொல்லுதல்; வேதம் பயிற்றுவிப்பதைப் போலவே திவ்யப் பிரபந்தமும் பயிற்றுவிக்கப்படும். இப்படிப் பயிற்றுவித்தல் சந்தை சொல்லிக் கொடுத்தல் எனப்படும்.) கூரத்தாழ்வான் "கள்வன் கொல் யானறியேன் கரியான் ஒரு காளைவந்து" என்ற திருமங்கையாழ்வார் பாசுரத்தைச் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தார். (ஆழ்வாராகிற நாயகியை எம்பெருமான் அழைத்துச் சென்று விட்டதறிந்த திருத்தாயார் புலம்புவதாகப் பாசுரம் அமைந்துள்ளது.) இப்பாசுரத்தை ஆழ்வான் சொல்லிக் கொண்டிருந்த போது, ஆழ்வான் மடியிலிருந்த பெண்பிள்ளையை அவளுடைய கணவன் அங்கேவந்து அழைத்துச் சென்று விட்டான். அப்போது ஆழ்வானுக்குப் பாசுரத்தின் பொருளே நெஞ்சிலே ஓடிக் கொண்டிருந்தமையால், பரகால நாயகியை எம்பெருமான் அழைத்துச் செல்வதாகவே நினைத்து, மோகித்து) மேலே சந்தை சொல்ல முடியாமல் மயங்கி விழுந்துவிட்டார். இப்படிப் பாசுரத்தில் ஈடுபடும் ஆழ்வானன்றோ தம்மை வலிய நெஞ்சு படைத்தவராகக் கூறிக் கொண்டு, பிள்ளை உறங்காவில்லிதாஸரை மென்மையான நெஞ்சுபடைத்தவராகக் கொண்டாடினார்!*

1. இப்பாசுரத்தின் பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்யானத்திலும் இவ்வைதிஹ்யங்கள் உள்ளன. ஆனால் அங்கு 'ஆழ்வான் வீராணத்தில் ஒரு பெண்பிள்ளையைக் <u>குடங்காலிட்டு</u>' என்பதற்கு பதிலாக, 'ஆழ்வான்தான் வீராணத்திலே ஒரு பெண்பிள்ளை <u>புக்காளாய்</u> <u>மடியிலே</u> <u>வைத்துக்</u> கொண்டிருந்து' என்றுள்ளது. இங்கு, 'பெண்பிள்ளை புக்காளாய்' என்று உள்ளபடியால் கூரத்தாழ்வானுக்கு ஒரு பெண்பிறந்திருந்ததாகவும் அவளை வீராணத்தில் ஒருவருக்கு மணமுடித்து வைத்திருந்ததாகவும், அப்பெண்பிள்ளையை மடியிலே வைத்துக் கொண்டு சந்தை சொல்லியதாகவும் அரும்பதத்தில் கூறப்படுகிறது. (ஆனால் ஆழ்வானுக்கு ஒரு பெண் பிறந்திருந்ததாக வேறு நூல்கள் எதிலும் கூறப்படவில்லை.)

[380]

ஸ்வாமிகள் திருமழிசைத$_3$ாஸராய், நஞ்சீயரை ப$_4$ட்டர் ஸ்ரீபாத$_3$த்தில் ஆஶ்ரயிப்பித்தாராய், அர்த்த$_3$ாத் அவரும் தாமுமாகத் திருவாய்மொழி ஓதா நிற்க, ஆண்டான் பின்னிட்டுச் சென்றானாய், அவனைக் கண்டு நஞ்சீயர் எழுந்திருக்கப்புக, "வேண்டா" என்று கைகவித்துக் கொடுவந்து, "நீங்கள் கோயில் கூழைத்தனமடிக்கிறபடி இதுவோ தான்?" என்ன, "திருவாய்மொழி ஓதிற்று ஸ்ரீபாத$_3$த்திலேயாயிற்று" என்றாராம்.

(திருவிருத்தம் 99 பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்யானம்)

நிகழிடம்

எண் 379ன் நிகழிடம் பார்க்க.

விளக்கம்

நஞ்சீயர் மேல் நாட்டில் வேதாந்தி என்ற பெயருடன் அத்வைதியாய்த் திகழ்ந்த காலத்தில் பட்டருடைய பெருமைகளை அவருக்குத் தெரிவித்தும், அவருடைய பெருமைகளை பட்டருக்கு அறிவித்தும், பட்டரிடம் நஞ்சீயர் சீடராக வந்து சேர்வதற்குக் காரணமாக இருந்தவர் திருமழிசைதாஸர் என்பவர் ஆவார்.[1] ஒரு சமயம், நஞ்சீயரும் திருமழிசைதாஸரும் மிகவும் ஏகாந்தமானதொரு இடத்திற்குச் சென்று இருவருமாகத் திருவாய்மொழி ஓதிக் கொண்டிருந்தனர். அப்போது அவ்வழியாக வந்த ஆண்டான்[2] இருவரும் திருவாய்மொழியின் வாயிலாக பகவத் குணங்களில் ஈடுபட்டிருக்கின்ற நிலையைக் குலைக்கக் கூடாது என்பதற்காகப் பின்னால் மெதுவாக எழுந்தருளினார். ஆனால் இதைக் கண்டுவிட்ட நஞ்சீயர் ஆண்டானிடம் உள்ள மரியாதை காரணமாக எழுந்திருக்க முயல, அதை வேண்டாமென்று சைகையால் தடுத்த ஆண்டான் "நீங்கள் கோயில் கூழைத்தனம் அடிக்கிறபடி (ரகசியமாகச் செய்யும் க்ருத்ரிமம்) இதுதானோ?" என்று கேட்டார். ('நீங்கள் ஒருவரும் அறியாமல் ஏகாந்தமான இடத்திற்குச் சென்றது இப்படித் திருவாய்மொழியின் மூலம் பகவத் குணங்களை அனுபவிப்பதற்குத் தானோ?' என்ற கருத்தில் ஆண்டான் இவ்வாறு கேட்டார்.)

1. சிறிய திருமடலில் ஒரு வரிக்கு பட்டர் அருளிச் செய்த விளக்கத்தைக் கேட்டு, நஞ்சீயர் பட்டரிடம் மிகவும் ஈடுபாடு கொண்டார் என்றுள்ள ஐதிஹ்யம் (எண் 401) காண்க. அதே போல் பட்டரிடம் நஞ்சீயரின் (வேதாந்தியின்) புலமைபற்றி ஒரு தீர்த்தவாஸி ப்ராம்மணன் எடுத்துரைத்தாக குருபரம்பரை நூல் கூறுகின்றது. அந்த தீர்த்தவாஸி பிராமணனே இத் திருமழிசை தாஸராக இருக்கலாம். எல்லா மதங்களிலும் புகுந்து திரிந்த திருமழிசை ஆழ்வாரைப் போல, இந்த தீர்த்தவாஸி ப்ராமணரும் இருந்து, முடிவில் பட்டரிடம் ஆச்ரயித்தபடியால் இவருக்கு திருமழிசை தாஸர் என்று திருநாமம் சூட்டியிருக்கலாம்.
2. ஆண்டான் என்பது எம்பெருமானாருடைய சீடரான முதலியாண்டானையே குறிக்கும். அல்லது முதலியாண்டானது மகனான கந்தாடை ஆண்டானைக் குறிப்பதாகவும் கொள்ளலாம்.

அதற்கு நஞ்சீயர் "திருவாய்மொழி கற்றுக் கொண்டது (பட்டர்?) திருவடிவாரத்திலன்றோ! அதனாலன்றோ திருவாய்மொழியில் அடியோங் களுக்கு இந்த ஈடுபாடு உண்டாயிற்று" என்று கூறினாராம்!

[381]

பகலெல்லாம் ப$_4$ாஷ்யத்திலே அங்யபரராயிருப்பர். இரவு அமுது செய்து பள்ளிக் கட்டிலிலே ஏறி அருளினால் 'சந்தை சொல்ல வாராயோ' என்றழைப்பர். முந்துற சந்தை சொன்னால் புளகிதகா$_3$த்ரராவர். இரண்டாம் சந்தைக்கு ஶிதி$_2$லர் ஆவர். எங்கேனும் ஒருகால் புக்காராகில் நாலிரண்டு ஒலியல் கொண்டு பரிமாற வேண்டும்படியாயிற்றுக் கண்ணநீர் வெள்ளமிடும்படி.

(திருவிருத்தம் 99 பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்யானம்.)

நிகழிடம்

எண் 379ன் நிகழிடம் பார்க்க.

விளக்கம்

எம்பெருமானார், *பகலெல்லாம் ஸ்ரீபாஷ்யத்திலேயே ஈடுபட்டவராக இருப்பர். இரவு பாலமுது செய்த பிறகு பள்ளிக் கட்டிலிலே ஏறியருளினால் (வடுகநம்பியை?) "சந்தை சொல்லிக் கொள்ள வாராயோ" என்று அழைப்பராம். முதல் சந்தை சொல்லிக் கொடுக்கும்போதே பாசுரத்தில் மிகவும் ஈடுபட்டுப் புளகிதராக ஆவர். இரண்டாவது முறை சொல்லும் போது நெஞ்சு உடைகுலைப்பட்டு சிதிலராக ஆகிவிடுவர். ஏதேனும் பாசுரத்தின் பொருளை நினைத்து ஈடுபட்டுவிட்டாரானால் நாலிரண்டு (பல) உத்தரீயங்கள் (மேலாடைகள்) கொண்டு துடைக்குமளவுக்கு எம்பெருமானாருக்குக் கண்ணீர் வெள்ளம் பெருகும்.*[2]

[382]

பெருமாள் அமுது செய்யும்போது இன்னதனை கறியமுதும், நெய்யமுதும் என்று கணக்கிட்டு, "அவைதன்னை அமுது செய்வதற்கு முன்னேயும் எனக்குக் காட்டி, அமுதுச் செய்தாலும் எனக்குக் காட்டிக் கொடு போங்கோள்" என்றாராய், அவர்களும் திருவுள்ளத்தில் ஓடுகிறது அறியாதே அப்படிச் செய்து கொடு போந்தார்களாய், இப்படி ஆறுமாஸம் சென்றபின் ஒருநாள் பார்த்து, "இத்தை ஒருநாள் குறியழித்திட்டு வைத்தாலாகாதோ?" என்றருளிச் செய்தாராம்.

(திருவிருத்தம் 99 பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்யானம்)

1. இவ்வைதிஹ்யம் இப்பாசுரத்தின் நம்பிள்ளை வ்யாக்யானத்திலும் உள்ளது.

2. இவ்வைதிஹ்யம் இப்பாசுரத்தின் நம்பிள்ளை வியாக்கியானத்திலும் உள்ளது.

நிகழிடம்

எண் 379ன் நிகழிடம் காண்க.

விளக்கம்

திருவரங்கத்தில் ஸ்ரீரங்கநாதன் அமுது செய்வதற்கான பிரசாதங்களை 'இவ்வளவு கறியமுது, இவ்வளவு நெய்யமுது' என்று இவை முதலானவைகளுக்கு அளவையும் நிர்ணயித்து அனுப்புவராம் எம்பெருமானார். அப்பிரசாதங்களை எம்பெருமான் அமுதுசெய்வதற்காக எடுத்துச் செல்லும் போது, "எம்பெருமான் அமுது செய்வதற்கு முன்பும் அவைகளை எனக்கு ஒருமுறை காண்பியுங்கள்; அமுது செய்த பின்பும் எனக்கு ஒருமுறை காண்பியுங்கள்" என்று திருக்கோயில் பணியாளர்களிடம் கூறியிருந்தார். அவர்களும், எம்பெருமானாருடைய திருவுள்ளக்கருத்து இன்னதென்று தெரிந்து கொள்ளாமலே நாடோறும் அப்படியே செய்து கொண்டு வந்தார்கள். இப்படியாக ஆறுமாதம் சென்றபிறகு ஒருநாள் அமுது செய்த பிறகு வந்த பிரசாதத்தைப் பார்த்த எம்பெருமானார், "எம்பெருமானே! ஒரே ஒரு நாளாவது இந்தப் பிரசாதத்தை அமுது செய்ததற்கான அடையாளம் இதில் தெரியும்படி அமுது செய்யக் கூடாதோ?" என்றருளிச் செய்தாராம்!

[383]

கிடாம்பியாச்சான் ஆழ்வானோடே திருவாய்மொழி கேட்கிற நாளிலே, ஒருநாள் ஸ்ரீபாத$_4$த்திலே புகும்போதிலே தாழ்த்துப்புக, "ஏன் நீ வைகினாயீ" என்ன, "ஆழ்வான்பாடே திருவாய்மொழி கேளாநின்றேன்" என்றானாய், "இன்று என்ன திருவாய்மொழி நிர்வஹித்தான்?" என்று கேட்டருள "பிறந்தவாறு" என்றானாய், "அதிற் சொன்ன வார்த்தைகளென்?" என்ன, "நிர்வஹிப்பதாக ஆரம்பி$_4$த்து, இயல் சொல்லி, அநந்தரம், ஆழ்வாருடைய பாரவஶ்யதையை அநுஸந்தி$_4$த்து நெடும்போது கண்ணுங்கண்ணீருமாயிருந்து 'இவ்வாழ்வாரும் ஒருவரே! இவர்க்கு ஓடுகிற ப$_4$ாவவ்ருத்திக்கு நாமிருந்து பாசுரமிடுகையாவதென்?' என்று, 'இற்றைக்கு விடலாகாதோ?' என்று விட்டான்" என்ன, "என்ன பரமசேதநனோ!" என்றருளிச் செய்தாராம்.

(திருவிருத்தம் 99 பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்யானம்)

நிகழிடம்

எண் 379ன் நிகழிடம் பார்க்க.

1. இவ்வைதிஹ்யம் இப்பாசுரத்தின் நம்பிள்ளை வியாக்கியானத்திலும் உள்ளது.

விளக்கம்

கிடாம்பியாச்சான் கூரத்தாழ்வானிடம் *திருவாய்மொழி காலக்ஷேபம் கேட்டு வருகின்ற நாளிலே ஒரு நாள் மிகவும் தாமதித்துத் திரும்ப, எம்பெருமானார் "ஏன் இன்று இவ்வளவு தாமதம்?" என்று கேட்டார். அதற்குக் கிடாம்பியாச்சான் "ஆழ்வானிடத்தில் திருவாய்மொழி கேட்டுக் கொண்டிருந்ததனால் தாமதமாகிவிட்டது" என்றார். "இன்று ஆழ்வான் எந்தத் திருவாய்மொழியை விளக்கினார்?" என்று எம்பெருமானார் கேட்டார். "பிறந்தவாறும் என்கிற திருவாய்மொழி (5-10)" என்று பதில் சொன்னார் ஆச்சான். "இதில் ஆழ்வான் கூறியது என்ன?" எம்பெருமானார் கேட்டார். "ஒரு வார்த்தையும் சொல்லவில்லை" என்றார் ஆச்சான். "பின், ஆழ்வான் கூறியது என்ன? நீ கேட்டது என்ன?" எம்பெருமானார் கேட்டார். "அத்திருவாய்மொழியை விளக்குவதாக ஆரம்பித்த ஆழ்வான் முதலில் ஒரு முறை பாசுரத்தை அநுஸந்தித்தார். உடனே அதன் பொருள் நெஞ்சிலே ஓடி, உள்ளம் உருகி, ஆழ்வாருடைய ஈடுபாட்டை நினைத்துக்கொண்டு நெடுநேரம் கண்ணீர் பெருக்கினார். 'இவ்வாழ்வாரும் ஒருவரே! இவருக்கு இருக்கின்ற ஈடுபாட்டை, ஈடுபாடில்லாத நாம் விளக்குவதாவது என்?' என்று கூறி, 'இன்றைக்கு என்னால் சொல்ல முடியாது, விட்டுவிடுங்கள்' என்று முடித்து விட்டார்" என்றார் கிடாம்பியாச்சான். இதைக் கேட்ட எம்பெருமானார் "ஆழ்வானுடைய ஈடுபாடு தான் என்னே!" என்றருளிச் செய்தார்.*[1]

[384]

'தத்து ஸமந்வயாத்' என்கிற ஸூத்ரத்திலே ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளுக்கு அநுபயுக்தங்களான வேதா₂ந்த வாக்யங்கள் புருஷார்த்த₂பர்யவஸாயி அல்லாமையாலே ப்₃ரஹ்மணி ப்ரமாணமாக மாட்டாதே என்ன, அவை நிரதிஶயாநந்த₃ரூப ப்₃ரஹ்மத்தை ப்ரதிபாதி₃க்கையாலே அவற்றுக்கு ப்₃ரஹ்மணி ப்ராமாண்யம் கூடுமென்று பா₄ஷ்யகாரர் அருளிச் செய்தார்.

(திருவிருத்தம் 99 நம்பிள்ளை வ்யாக்யானம்)

நிகழிடம்

"ஈனச் சொல் ஆயினுமாக" என்று ஆழ்வார் அருளிச்செய்கிறார். 'நான் சொல்லும் சொல் உலகோர்கள் ஏற்றுக் கொள்ளாத பயனற்ற சொற்களே ஆயினும் ஆயிடுக! பகவானைப் பற்றிய சொற்களைச் சொல்லுகை தவிரேன்' என்கிறார் ஆழ்வார் என்று உரையிட்ட உரையாசிரியர், எந்தச் சொல்லும் எம்பெருமானையே குறிக்கும் என்பதற்கு எம்பெருமானார் ஸ்ரீபாஷ்யத்தில் அருளிச்செய்துள்ள **வார்த்தை***களை எடுத்துக் காட்டுகிறார்.*

1. இப்பாசுரத்தின் நம்பிள்ளை வ்யாக்யானத்திலும் இவ்வைதிஹ்யம் உள்ளது.

விளக்கம்

ஒரு பயனில் முடிவு பெறுகிற செயல் அல்லது செயல்மாட்சியைத் தெரிவிக்கிற வாக்கியமே பிரமாணமாகும். 'யஜேத' (=யாகம் செய்யக் கடவன்) என்கிற -(யாகத்தில் மூளுதலை விதிக்கிற) வாக்கியமானது,-யாகத்தைச் செய்பவனுக்கு சுவர்க்கமாகிற பயனில், அதாவது சுகம் அடையும் பயனில் முடிவடையும் வாக்கியமாகையாலே ப்ரமாணமாகும். 'ந களஞ்சம் பக்ஷயேத்' (=உள்ளிப் பூண்டை உண்ணக் கடவனல்லன்) என்கிற (உள்ளிப் பூண்டு உண்ணுதலிலிருந்து மீளுதலை விதிக்கிற) வாக்கியமானது - உள்ளிப் பூண்டு உண்ணுதலிலிருந்து மீளுமவனுக்கு நரகமாகிற பயனில், அதாவது துன்பம் அடையும் பயனில் முடிவடையும் வாக்கியமாகை ப்ரமாணமாகும்.

'ஸத்யம் ஜ்ஞானம் அநந்தம் பரஹ்ம' (= ப்ரஹ்மம் விகாரமற்றது, ஜ்ஞானஸ்வரூபமானது, அளவற்றது) என்கிற தைத்திரீய உபநிஷத் வாக்யமானது - சுகத்திலோ துன்பமின்மையிலோ முடிவடையாத - அது காரணமாக ப்ரவ்ருத்தியையோ நிவ்ருத்தியையோ (=ஒரு காரியத்தில் மூளுவதையோ ஒரு காரியத்திலிருந்து மீளுதலையோ) தெரிவிக்காத வாக்கியமாகையாலே பிரமாணமாகமாட்டாது என்ற கேள்வி எழுகின்றது.

இக்கேள்விக்கு விடையை 'தத் து ஸமந்வயாத்' என்கிற ப்ரஹ்மஸூத்ரத்தின் பாஷ்யத்தில் நம்முடைய **பாஷ்யகாரரான எம்பெருமானார்** அருளிச் செய்தார். ப்ரவ்ருத்தியையோ நிவ்ருத்தியையோ விதித்து அவற்றின் வாயிலாக ஸுகத்திலோ துக்கமின்மையிலோ முடிவடைகின்ற 'யஜேத', 'ந களஞ்ஜம் பக்ஷயேத்' என்னும் வாக்கியங்களே ப்ரமாணங்கள் என்று சொல்லுகிற பூர்வபக்ஷிகள் ஸாக்ஷாத்ததாகவே (=ஒன்றின் வாயிலாக வல்லாமல் நேராகவே) ஸுகத்தைச்சொல்லுகிற 'ஸத்யம் ஜ்ஞானம் அநந்தம் ப்ரஹ்ம' என்கிற வாக்யம் ப்ரமாணமென்று இசைந்தே தீர வேண்டும். ஏனெனில் ஆனந்தோ ப்ரஹ்ம (=ஆனந்தஸ்வரூபமானது ப்ரஹ்மம்) என்று தைத்திரீயத்தில் ப்ரஹ்மத்தை ஆனந்த (ஸுக) ஸ்வரூபமாகச் சொல்லுவதனால் எல்லையில்லாத ஸுக ஸ்வரூபமான ப்ரஹ்மத்தைத் தெரிவிக்கிறபடியினால் என்க. ஆகையால் 'ஸத்யம் ஜ்ஞானம் அநந்தம் ப்ரஹ்ம' என்றிது முதலான ஸித்தமான ஒரு பொருளைத் தெரிவிக்கிற வாக்யமும் ப்ரமாணமே என்று எம்பெருமானார் அருளிச் செய்தபடியாகும்.

ஆக இப்பாட்டில் - 'ஞானப் பிரானையல்லாவில்லை நான்கண்டநல்லது' என்கிற - ஞானப் பிரானாகிற ப்ரஹ்மம் நிரதிசய (எல்லையற்ற) ஆனந்த ஸ்வரூபமாகையால் அதைத் தெரிவிக்கும் வாக்யம் உண்மையில் ப்ரமாணமே ஆகும். அதாவது பிறர் பின்பற்றத் தக்க நம்பிக்கையை உண்டு பண்ணுகிற வாக்யமேயாகும். ஒரு வேளை நான் சொன்ன இவ்வாக்யமானது நம்பிக்கையை

உண்டு பண்ணாமல் ஈனச் சொல்லேயாகிலும், ப்ரயோஜனத்தை உண்டு பண்ணாத பொய்ச் சொல்லேயாகிலும் நான் சொல்லுவது தவிரேன் என்று ஆழ்வார் கருதினர் என்பது கருத்தாகும்.

[385]

(அல்லாலில்லை) ஒரு விசை திருக்கோட்டியூர்நம்பி திருநாளுக்கு நடந்தவிடத்து இவ்வர்த்தத்தை அருளிச் செய்வதாக ஒரு ஏகாந்தஸ்தலத்தே எம்பெருமானாரையும் கொண்டு புக்காராய், திருப்பணி செய்வான் ஒருத்தன் அங்கே உறங்கிக் குறட்டை விடாநிற்க, அவனைக் கண்டு 'அநர்த்தப் பட்டோம்' என்று அவ்விசைக்குத் தவிர்ந்து, பிற்றை விசையிலே இத்தை நம்பி அருளிச் செய்யக் கேட்டருளி, ஆழ்வான் அகத்திலே அமுது செய்திருக்கிறவளவிலே உச்சி வெயிலிலே வந்து புகுந்து "நம்பி இவ்வர்த்தத்தை ஒருவருக்கும் சொல்லாதேகொள் என்றருளிச் செய்தார். உனக்கு இது சொல்லாதிருக்க மாட்டேனிறே" என்று ஸஹகாரி நைரபேக்ஷ்யத்தை அருளிச் செய்தாரிறே.

(திருவிருத்தம் 99 பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்யானம்)

நிகழிடம்

'ஞானப்பிரானை அல்லாலில்லை நான் கண்ட நல்லதுவே' என்று நம்மாழ்வார் அருளிச்செய்கிறார். எம்பெருமானே உபாயம் மற்றெதுவும் உபாயம் அன்று என்று ஆழ்வார் அருளிச்செய்த இக்கருத்தைத் திருக்கோட்டியூர் நம்பி எம்பெருமானாருக்கு அருளிய **ஐதிஹ்யம்** *ஒன்றை உரையாசிரியர் காட்டுகிறார்.*

விளக்கம்

ஒருமுறை திருக்கோட்டியூர் நம்பி *திருவரங்கத்தில் திருநாள் (உற்சவம்) சேவிப்பதற்காக எழுந்தருளியபோது "எம்பெருமானைத் தவிர வேறு எதுவும் தஞ்சமல்ல" என்கிற அர்த்தத்தை விளக்கமாக* எம்பெருமானாருக்கு *அருளிச் செய்ய வேண்டும் என்று நினைத்தார். அது மிகவும் ரகசியமாக உபதேசிக்கப்பட வேண்டிய உயர்ந்த பொருள் ஆகையால், ஒருவரும் இல்லாத ஒரு ஏகாந்தமான இடத்திற்கு எம்பெருமானாரை அழைத்துக் கொண்டு போய், சுற்றுமுற்றும் பார்த்தார். அங்கே கோயிலில் திருப்பணி செய்பவன் ஒருவன் குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டிருப்பதைக் கண்டார். 'நாம் ரகசியமாக உபதேசிப்பது இவன் காதிலும் விழுந்து விட்டால் குற்றமாகி விடுமே!' என்றெண்ணி, அம்முறை எம்பெருமானாருக்கு உபதேசிக்காமலே திருக்கோட்டியூருக்கு எழுந்தருளி விட்டார். மற்றுமொரு முறை திருவரங்கத்திற்கு எழுந்தருளியபோது எம்பெருமானாருக்கு மிகவும் ரகசியமாக அவ்வர்த்தத்தை உபதேசம் செய்தார். உபதேசத்தைக் கேட்டுக் கொண்ட* எம்பெருமானார் *உடனே, கொளுத்துகின்ற உச்சி வெயிலையும் பொருட்படுத்தாது* கூரத்தாழ்வான் *திருமாளிகைக்கு*

எழுந்தருளினார். அப்போது அமுது செய்து கொண்டிருந்த ஆழ்வானை அழைத்து "திருக்கோட்டியூர் நம்பி, ஒருவர்க்கும் சொல்லக் கூடாது என்று கூறி எனக்கு இவ்வர்த்தத்தை அருளிச் செய்தார். ஆனால் உமக்கு மட்டும் சொல்லாமல் இருக்க என்னால் முடியாது" என்று கூறி, எம்பெருமானைத் தவிர வேறெதுவுமே தஞ்சமல்ல என்ற அர்த்தத்தை (ஸஹகாரிநைரபேக்ஷ்யத்தை) கூரத்தாழ்வானுக்கு அருளிச் செய்தார்![1]

(ஸஹகாரி நைநரபேக்ஷ்யம் = கர்மயோகமோ, ஞானயோகமோ, பக்தியோகமோ, பிரபத்தியோகமோ உபாயங்கள் அல்ல; இவை ஒன்றையும் எதிர்பாராமல் தானே உபாயமாக நின்று மோக்ஷமளிப்பவன் எம்பெருமானே ஆவான். கர்ம, ஞான, பக்திகள் உபாயங்களல்ல என்பது சரமச்லோகத்தில் 'ஸர்வ தர்மாந் பரித்யஜ்ய' என்பதனாலும், பிரபத்தி உபாயம் அல்ல என்பது 'ஏகம்' என்பதனாலும் கூறப்பட்டது.)

[386]

திருமலைநம்பி எம்பெருமானாருக்கு ஒருவரை அடையாளம் சொல்லுகிற இடத்திலே, "பொன்னாலே தோடு பண்ணினால் இடவொண்ணாத காதை உடையராயிருக்குமவரை அறிந்தருளுகையுண்டோ?" என்றாராம்.

(திருவாசிரியம் -1)

நிகழிடம்

மரகதப்பச்சை மயமான ஒரு மலையானது கடலிலே பள்ளி கொண்டது போலே எம்பெருமான் திருப்பாற்கடலிலே கண்வளர்த்தருளுகிறான் என்று நம்மாழ்வார் அருளிச்செய்கிறார். இங்கு 'மரகதக் குன்றம் கடலோன் கைமிசைச் சாய்வது போல்' என்பதே போதுமாயிருக்க, 'மரகதக் குன்றம் கடலோன் கைமிசைக் கண்வளர்வது போல்' என்று உயர்ந்த சொல்லையிட்டு ஆழ்வார் அருளிச்செய்துள்ளார். இதனை விளக்குகின்ற உரையாசிரியர், குன்றம் எம்பெருமானுக்கு உவமானமாகையால் அதையும் எளிய சொல்லாலே குறிப்பதற்குக் கூசி, 'மரதகக் குன்றம் கண்வளர்வது போல்' என்று ஆழ்வார் உயர்ந்த சொல்லையிட்டு அருளிச்செய்கிறார் என்று உரையிட்டார். எதைச் சொன்னாலும் உயர்ந்த சொல்லாலே கூறவேண்டும் என்றிருந்த திருமலைநம்பி, அருளிச் செய்த **வார்த்தை**யொன்றை இதற்கு உதாரணமாக எடுத்துக் காட்டுகிறார் உரையாசிரியர்.

விளக்கம்

"பொன்னால் தோடு பண்ணினால் இடவொண்ணாத காதை உடையவராக இருப்பவரை அறிவீரோ?" என்று திருமலை நம்பி கேட்டாராம். பொன்னாலே

1. இப்பாசுரத்தின் நம்பிள்ளை வ்யாக்யானத்திலும் இவ்வைதிஹ்யம் உள்ளது.

தோடு பண்ணினால் இடவொண்ணாத காதையுடையவர் - தோடு இட முடியாத காதுடையவர் என்று பொருள். இதற்கு இருவகையாகப் பொருள் கூறலாம்.

1. காது குத்திக் கொள்ளும் பழக்கமில்லாத மிலேச்சன். 2. பெரியோர் உபதேசங்களைக் காது கொடுத்துக் கேட்காத ஒழுக்கங்கெட்டவன்; இவனைக் காதறையன் (அறுந்த காது படைத்தவன்; அதாவது காதின் பயனை வீணாக்கியவன் ஆதலால் காதறையன் என்பர். அவனுக்குக் காது இருந்தும், இல்லாததற்குச் சமமே.) எனவே, திருமலை நம்பி எம்பெருமானாருக்கு ஒரு மிலேச்சனையோ அல்லது காதறையனையோ (ஒழுக்கம் கெட்டவனேயோ) பற்றிக் குறிப்பிடும் போது அவ்வச்சொற்களாலே குறிப்பிடக்கூசி, "பொன்னால் தோடு பண்ணினாலும் இடமுடியாத காது படைத்தவனை (காதில்லாதவனை) தேவரீருக்குத் தெரியுமோ?" என்று உயர்ந்த சொற்களாலே குறிப்பிட்டார். மிகவும் அற்பமானவைகளையும் உயர்ந்த சொற்களாலே குறிப்பிடுவது பெரியோர் மரபு என்றபடி. 'நாய்' என்று சொல்வதற்கு பதிலாக 'திறந்து கிடந்த வாசல் தோறும் நுழைந்து திரியும் பதார்த்தம்' என்று ஆசாரியர்கள் அருளிச் செய்வதும் காண்க.

திருமலை நம்பி அருளிச்செய்த வார்த்தைக்கு மற்றொரு வகையாகவும் பொருள் கூறுவதுண்டு. திருமலை எம்பெருமானாருக்கு அடையாளமாக ஒருவரைச் சொல்லும்போது, 'பொன்னாலே தோடு பண்ணினால் இட ஒண்ணாத காதை உடையவராயிருப்பவர்' என்று கூறினார். எம்பெருமானார் ஆதிசேஷனுடைய அவதாரம் என்பதைக் குறிப்பால் காட்டியபடி. பாம்புக்குச் செவியில்லை ஆகையால், பொன்னால் தோடு பண்ணினாலும், இடவொண்ணாத காதை உடையவர் (காதற்றவர்), அதாவது ஆதிசேஷனுடைய அவதாரம் என்று திருமலை நம்பி கூறினார். (எம்பெருமானுக்கு உபமானமாகச் சொல்லப்பட்ட மலையை உயர்ந்த சொல்லால் ஆழ்வார் அருளிச்செய்தது போலவே, எம்பெருமானாருக்கு அம்சியான ஆதிசேஷனைச் சொல்லும்போது மிக உயர்ந்த சொல்லால் திருமலை நம்பி அருளிச்செய்தார்.)

[387]

(கவர்தலை)...... அனந்தாழ்வான் திருக்கோட்டியூருக்கு நடந்தவிடத்திலே பட்டரைக் கண்டு அவர் திருமேனியிலே இப்படிச்செய்தானாம். ஆண்டாளுக்கு முந்துற ஒரு பிள்ளையுண்டாய், அவனையிழக்க, அங்ஙனே செய்ய வொண்ணாது இவன் ஜீவிக்கவேணும் என்று எம்பெருமானார் பெரியபிராட்டியாருக்கு நீராட்டி மஞ்சள் நீர் குடித்த பிள்ளையாக வளர்க்க வேணும் என்று காட்டிக் கொடுத்தருளினாராயிற்று. அந்த வாஸனையாலே 'பெரிய பிராட்டியார்மகன்' என்று தான் பட்டரை அனந்தாழ்வான் சொல்லுவது.

(திருவாசிரியம் 1)

நிகழிடம்

ஆதிசேஷன் மடியின் மீது எம்பெருமான் எழுந்தருளியிருக்கின்றமையை வருணிக்கின்ற நம்மாழ்வார் "கவர்தலை அரவின் அமளி ஏறி" என்றருளிச் செய்கிறார். இங்கு 'குழந்தையைத் தன் மடிமீது வைத்திருக்கும் தாயைப் போலே ஆதிசேஷன் தன் மடிமீது எம்பெருமானை வைத்திருக்கிறான்' என்பதாக உரையிட்ட உரையாசிரியர், இத்தொடர்பில் ஓர் **ஐதிஹ்யம்** காட்டுகிறார்.

விளக்கம்

ஒரு முறை **பட்டர்** திருக்கோட்டியூரில் எழுந்தருளியிருந்த போது அங்கு வந்த **அனந்தாழ்வான்** பட்டரை அணைத்துக் கொண்டு தம் மடிமீது வைத்துக் கொண்டாராம். கூரத்தாழ்வானுடைய தேவியாரான **ஆண்டாளுக்கு** முதலில் ஒரு பிள்ளை பிறந்து, இறந்து விட்டது.[1] எனவே, ஆண்டாளுக்குப் பிள்ளையாக பட்டர் பிறந்தவுடன் இவரையும் இழந்து விடக்கூடாது, இவர் நெடுநாள் வாழ வேண்டும் என்பதற்காக **எம்பெருமானார்** பெரிய பிராட்டியாருக்கு நீராட்டி அவருடைய மஞ்சள்நீர் குடித்த பிள்ளையாக[2] வளர்க்க வேண்டும் என்று பட்டரைப் பெரியபிராட்டியாருக்கு தத்துப் பிள்ளையாக தாரை வார்த்துக் கொடுக்கும்படி ஏற்பாடு செய்து விட்டார்.[3] அதனால் பட்டரை அனந்தாழ்வான் 'பெரியபிராட்டியார் மகன்' என்றே கூறுவாராம்.[4]

[388]

ஆத்மப்ரஶம்ஸை பண்ணினதால் த்₄வம்ஸ என்று பூமியிலே விழும்படி ஶபித்தானென்று, இவ்விடத்தை ப₄ட்டர் வாசித்துப்போந்த காலத்திலே, "இந்த்₃ரன்

1. ஸ்ரீரங்கநாதப்பெருமானுடைய அரவணைப் பிரசாதத்தின் மகிமையினால் கூரத்தாழ்வானுக்கு இரண்டு குழந்தைகள் (பராசரபட்டரும், வேதவியாசபட்டரும்) பிறந்தமை மட்டுமே ஆறாயிரப்படி குருபரம்பராப்ரபாவம் முதலிய நூல்களில் கூறப்பட்டுள்ளது. முதலில் ஒரு பிள்ளை பிறந்து இறந்துவிட்டது கூறப்படவிலை.

2. மஞ்சள்நீர் குடித்த பிள்ளை = தத்துப்பிள்ளை. 'மஞ்சள்பால் கொடுத்தல் - சுவீகாரம் செய்தல்' என்ற தமிழகராதி காணத்தக்கது

3. குழந்தைகள் சிறுவயதிலேயே இறந்துவிட்டால் அது பெற்றோர்களுடைய தோஷம் என்றும், அதனால் அடுத்த குழந்தை பிறக்கும் போது அக்குழந்தையை வேறொருவர்க்கு சுவீகாரம் கொடுத்து விட்டால், பெற்றவர்களுடைய தோஷம் அக்குழந்தையை பாதிக்காது என்றும், அதனால் அக்குழந்தை நீண்ட ஆயுளைப் பெறும் என்றும் கூறுவர். இந்த மரபுப்படிதான் எம்பெருமானார் பட்டரை பெரிய பிராட்டியாருக்கு (ஸ்ரீரங்கநாச்சியாருக்கு) சுவீகாரமாகக் கொடுத்துவிட்டார்.

4. பட்டரும் தம்மை 'ஸ்ரீரங்கராஜ கமலாபதலாலிதத்வம்' (ஸ்ரீரங்கநாதனுடைய தேவியினால் வளர்க்கப்பட்டவர்) என்று தம்மைப் பற்றி ஸ்ரீரங்கராஜஸ்தவத்தில் (1-17) அருளிச் செய்து கொள்வது காண்க.

தன்னையாஶ்ரயித்துப் பெற்ற உத்கர்ஷமாயிருக்க அர்த்த$_4$ாஸநத்திலே இருந்தது பொறுக்கமாட்டாமை ஆத்மப்ரஶம்ஸையை பண்ணினாய் என்றொரு வ்யாஜத்தை யிட்டுத் தள்ளினானாயிருந்தது. இதுதான் வேதோ$_3$பப்$_3$ரும்ஹணார்த்த$_2$மாக ப்ரவ்ருத்தமான மஹாபா$_4$ரதத்திலே எவ்வர்த்த$_2$த்தினுடைய விஶத$_3$மாக ருஷி எழுதினான்?" என்று கேட்க, "தான் தன்னோடொக்க உத்கர்ஷத்தைக் கொடுக்கவல்லதுவும், அத்தைப் பொறுக்கவல்லதுவும் பரதே$_3$வதை. ஆனபின்பு ஆஶ்ரயிக்கப்படுமதும் பரதே$_3$வதை; அல்லாதார் ஆஶ்ரயணீயரல்லர் என்னுமிடம் ப்ரகாஶிக்கைக்காக" என்றருளிச் செய்தார்.

(திருவாசிரியம் - 6)

நிகழிடம்

'ஓ ஓ உலகினதியல்வே' என்ற இப்பாசுரத்தில், ஸ்ரீமந்நாராயணன் இவ்வுலகத்தினருக்குச் செய்யும் பல நன்மைகளைக் கூறி, அவனை விட்டு மற்ற தெய்வங்களைப் பற்றுதல் தகாது என்று நம்மாழ்வார் உபதேசிக்கிறார். அவன் ஒருவனே தன்னைப் பற்றினவர்களுக்குப் பெருமையைக் கொடுப்பவன், மற்ற தேவதைகள் அனைத்தும் மற்றொருவனுடைய பெருமையைச் சகித்துக் கொள்ள மாட்டா என்பதை விளக்குவதற்கு ஓர் ***ஐதிஹ்யம்*** *கூறப்பெறுகிறது.*

விளக்கம்

எண் 172ன் விளக்கம் பார்க்க.

[389]

"அவன் பின்னை இவர்களுக்குச் சொன்ன உத்தரமேது?" என்று பட்டரைக் கேட்க, "அவன்றானும் ஆழ்வார் வந்தால் கேட்கக் கடவோம் என்று நினைத்திருந்தான் காணும்" என்ன, பின்னையும் "நீ ஸர்வாத$_4$ாரபூ$_4$தனாமித்தனை போக்கி, உன்னையொழியப் புறம்பே ஒன்றுக்கொன்று ஆத$_4$ாரமாக வல்லதொன்று உண்டோ? என்று அவன் ஸர்வாத$_4$ாரபூ$_4$தனாயிருக்கிறபடியைக் கண்டு இதே$_3$ராஶ்சர்யமே! என்று விஸ்மிதராகிறார்" என்றருளிச் செய்தார்.

(திருவாசிரியம் – 7)

நிகழிடம்

'ஓர் ஆலிலைச் சேர்ந்த எம்பெருமாமாயன்' என்று எம்பெருமான் அனைத்துலகையும் விழுங்கி ஓர் ஆலந்தளிரில் கண்வளர்ந்த ஆச்சர்யத்தை இப்பாசுரத்தில் நம்மாழ்வார் அருளிச் செய்கிறார். இத்தொடர்பில் பொய்கையாழ்வார் அருளிச் செய்த ஒரு பாசுரத்தை (முதல் திருவந்தாதி 76) மேற்கோளாக எடுத்து உரையாசிரியர் விளக்குகிறார். அப்பாசுரத்தில் பொய்கையாழ்வார் 'ஆல் அன்று வேலை நீர் உள்ளதோ விண்ணதோ

மண்ணதோ (அந்த ஆலந்தளிர் எந்த ஆதாரத்தின் மீதிருந்தது? கடல் நீரிலா? விண்ணிலா? மண்ணிலா?) என்று எம்பெருமானைக் கேட்கிறார். (அனைத்துலகங்களும், அனைத்துப் பொருள்களும் எம்பெருமானுடைய திருவயிற்றுக்குள்ளே அடங்கி விட்டபிறகு ஆலந்தளிர் வெளியே இருப்பதற்கு இடம் உண்டோ? என்ற கருத்தில் இக்கேள்வி கேட்கப் படுகிறது.) இத்தொடர்பில் ஒரு **ஸம்வாதம்** எடுத்துக் காட்டப்பெறுகிறது.

விளக்கம்

பொய்கையாழ்வாருடைய இப்பாசுரத்தை **பட்டர்** *விளக்கியருளிச் செய்தபோது அவரிடம் "பொய்கை ஆழ்வார் கேட்ட கேள்விக்கு எம்பெருமான் கூறிய பதில் என்ன?" என்று* (**நஞ்சீயர்?**) *கேட்க, பட்டர் மிகவும் வேடிக்கையாக, "இதற்கு அவனால் என்ன பதில் கூறமுடியும்? இப்படிப்பட்ட செயற்கரிய செயல்களைச் செய்வதுதான் அவனுக்குத் தெரியுமே தவிர அவற்றைப் பொருந்த விடுவது ஆழ்வார்கள்தானே! எனவே ஆழ்வார் மறுபடியும் வந்தால் அவரிடமே இந்தக் கேள்வியைக் கேட்போம் என்றிருந்தான் காணும்!" என்றார். பிறகு பட்டரே தொடர்ந்து "எம்பெருமானே! எல்லாவற்றுக்கும் நீயே ஆதாரம். உன்னைத் தவிர ஒரு பொருள் மற்றொரு பொருளுக்கு ஆதாரமாக முடியுமோ? அந்த ஆலிலைக்கும் நீயே ஆதாரமாக இருந்து அவ்வாலிலையையும் தாங்கினாய்! என்று, அவன் எல்லாப் பொருட்கும் ஆதாரமாக இருக்கின்ற ஆச்சர்யச் செயலை நினைத்து ஆழ்வார் ஆச்சர்யப்படுகிறார்" என்று விடையும் அளித்தார். (பொய்கையாழ்வார் பாசுரத்தில் 'சோலைசூழ் குன்றெடுத்தாய் சொல்லு' என்று கோவர்த்தன மலையைக் குடையாக எடுத்து எம்பெருமானை பதில் சொல்லும்படி கேட்பதாக உள்ளது கருத்தாழம் மிக்கது. கோவர்த்தன மலையே இடையர்களைக் காக்கின்றது ஆதாலால் அதற்கே உணவிடவேண்டும் என்று சற்று முன்னர் கூறிய கண்ணபிரான், இந்திரன் கல்மழை பொழிந்தபோது, அந்த கோவர்த்தன மலையையே எடுத்துக் குடையாகப் பிடித்து அம்மழையிலிருந்து இடையர்களைக் காத்தான். கோவர்த்தன மலைதான் இடையர்களைக் காத்தது என்றாலும், அதற்கும் ஆதாரமாக இருந்து அதைக் குடையாகப் பிடித்துக் காத்தவன் கண்ணபிரானே அன்றோ! அதுபோல ஆலந்தளிருக்கும் ஆதாரமாக இருந்தவன் எம்பெருமானே என்பது பெறப்படுகிறது.)*

[390]

(நும்மை - அருகும் சுவடும் தெரிவுணரோம் நுமக்கு அன்பே பெருகும் மிக இதுவென் பேசீர்) இது சீயர், பிள்ளைதிருநறையூரரையர் பக்கல் கேட்டதாகப் பிள்ளை அருளிச் செய்தார்.

(பெரிய திருவந்தாதி -8)

நிகழிடம்

அருகும் சுவடும் தெரிவுணரோம் அன்பே
பெருகும்மிக இதுவென்பேசீர் - பருகலாம்
பண்புடையீர் பாரளந்தீர் பாவியேம்கண் காண்பரிய
நுண்புடையீர் நும்மை நுமக்கு

என்பது நம்மாழ்வார் அருளிச்செய்துள்ள பாசுரமாகும். இப்பாசுரத்திற்குப் பொருள் கொள்வது பற்றி எழுந்த ஐயத்திற்கு விடையாக ஒரு **நிர்வாஹம்** *காட்டப் பெறுகிறது.*

விளக்கம்

"எம்பெருமானே! உம்மை அணுகுவதற்கும், அதற்கான வழியும் அறிந்தோமில்லை. ஆயினும் உம்மிடத்தில் ஆசை பெருகுகின்றது. இதற்குக் காரணம் என்ன?" என்பது இப்பாசுரத்தின் பொருள். பாட்டின் முடிவில் நும்மை நுமக்கு என்றுதை எங்கே அந்வயிப்பது என்று ஐயத்திற்கு விடையாகப் **பிள்ளை திருநறையூர் அரையர்,** *"நும்மை அருகும் சுவடும் தெரிவுணரோம் - நுமக்கு அன்பே பெருகும் மிக" என்று அந்வயித்துப் பொருள் உரைக்க,* **நஞ்சீயர்** *கேட்டதாக* **நம்பிள்ளை** *அருளிச் செய்தார்.*

[391]

இதுக்கு மூன்றுபடியருளிச் செய்வர். விலக்ஷணாதி$_4$காரங்காண்; மதிப்பர்க்கே கிடைக்கும் அத்தனையல்லது எளியர்க்குக் கிடையாது காண். தன்னையே ப்ரயோஜனம் என்றிருப்பார்க்குக் கிடையாது காண்; உபாயந்தர பரிக்$_3$ரஹம் பண்ணினார்க்கத்தனை காண்; தன்னையே உபாயமாகப் பற்றினார்க்குக் கிடையாது காண் என்றுமாம்.

(பெரிய திருவந்தாதி - 10)

நிகழிடம்

இருநால்வர் ஈரைந்தின்மேலொருவர் எட்டோடு
ஒரு நால்வர் ஓரிருவர் அல்லால் - திருமாற்கு
யாமார் வணக்கமார் ஏபாவம் நன்னெஞ்சே
நாமாமிகவுடையோம் நாழ்

என்று நம்மாழ்வார் அருளிச்செய்துள்ளார். எம்பெருமானைச் சிந்திப்பதற்கும் துதிப்பதற்கும் தகுதியுடையவர்கள் முப்பத்து முக்கோடி தேவர்களே தவிர நாம் அல்லோம் என்று இப்பாசுரத்தில் ஆழ்வார் அருளிச்செய்கிறார். இதற்கு மூன்று வகையான **நிர்வாஹங்கள்** *காட்டப்பெறுகிறன்றன.*

விளக்கம்

1. பிறப்பாலும் நடத்தையாலும் தூயவர்களான முப்பத்து முக்கோடி தேவர்களுக்கு அப்பேறு கிட்டுமேயல்லது நம்மைப் போன்ற பாவிகளுக்குக் கிட்டாது நெஞ்சே! என்கிறார். (இது ஆழ்வார் தம்முடைய தாழ்வைக் கூறிக் கொண்டபடியாகும்.)

2. எம்பெருமானுடைய வடிவழகில் ஈடுபாடு சிறிதும் இன்றி 'எங்களுக்கு அமுதம் கொடு, வாலியைக் கொல், இரணியனைக் கொல், இராவணனைக் கொல்' என்று வேறு பயன்களை வேண்டுகின்ற தேவர்களுக்கு அப்பேறு கிடைக்குமேயொழிய, உன்னையடைவதையே பேறாகக் கருதியிருக்கிற எமக்கா அப்பேறு கிடைக்கும்?

3. வேறொன்றை உபாயமாகப் பற்றினவர்களுக்கு அப்பேறு கிட்டுமேயல்லது உன்னையே உபாயமாகக் கிட்டின எமக்கு அப்பேறு கிடைக்குமோ? (இவ்விரண்டு பொருள்களும், எம்பெருமானைச் சிந்திக்கும் பேறு தமக்குக் கிட்டாத வெறுப்பினால் அருளிச்செய்தபடியாகும்.)

*இம்மூன்று நிர்வாஹங்களையும் **நம்பிள்ளை** அருளிச்செய்தார்.*

[392]

இதுக்கு பட்டர் ஒருபடியும் பிள்ளைதிருநறையூர் அரையர் ஒருபடியும் அருளிச் செய்வர்.

(பெரிய திருவந்தாதி 44)

நிகழ்டம்

வகை சேர்ந்த நன்னெஞ்சம் நாவுடைய வாயும்
மிகவாய்ந்து வீழாவெனினும் - மிக வாய்ந்து
மாலைத்தாம் வாழ்த்தாதிருப்பரிதுவன்றே
மேலைத்தாம் செய்யும் வினை.

*என்பது நம்மாழ்வார் அருளிய பாசுரமாகும். இப்பாசுரத்திற்கு பட்டர், பிள்ளைதிருநறையூர் அரையர் ஆகிய இருவரும் அருளிச்செய்த **நிர்வாஹங்கள்** காட்டப்பெறுகின்றன.*

விளக்கம்

ஆத்மாவின் ஞானம் வெளிப்படுவதற்காக அமைந்திருக்கின்ற நெஞ்சும், எம்பெருமானைப் பேசுவதற்குத் தகுதியான நாவோடு கூடிய வாயும தானாகவே பகவத் விஷயத்தில் படிந்தனவில்லையேயாகிலும், 'நம்மை எம்பெருமான் படைத்தது எதற்கு?' என்று ஆராய்ந்து அவனைத் துதிக்க வேண்டியிருக்க,

அங்ஙனம் செய்யாதொழிவது - மேலுள்ள காலமும் கெட்டுப் போவதற்குச் செய்த பாவம் அன்றோ இது! - என்பது **பட்டர்** கூறிய பொருளாகும்.

எம்பெருமானுடைய ஏதோவொரு குணத்தில் பொருந்துகின்ற நல்ல நெஞ்சும், அந்த ஒரு குணத்தையே பேசிப் புகழ்கின்ற நாவோடு கூடிய வாயும், அப்பெருமானுடைய எல்லாக் குணங்களிலும் எல்லாச் சரித்திரங்களிலும் பொருந்தி அனுபவிக்க மாட்டாது இருந்தனவாகிலும், இப்படி இல்லையே என்று ஆராய்ந்து அவனுடைய எல்லாக் குணங்களையும் சரித்திரங்களையும் வாழ்த்த வேண்டியிருக்க, அங்ஙனம் அவர்கள் செய்யாதொழிவது முற்காலத்தில் செய்த பாவத்தின் பயனே என்பது **பிள்ளைதிருநறையூரரையர்** அளித்த விளக்கமாகும்.

எம்பெருமானுடைய ஒருகுணத்தையும் நினையாமலும் பேசாமலும் இருப்பது பாவத்தின் பயனே என்பது பட்டர் அளித்த விளக்கத்தின் கருத்து. எம்பெருமானுடைய எல்லாக் கல்யாண குணைங்களையும் நினைத்தும் பேசவும் வேண்டியிருக்க, அங்ஙனம் செய்யாமல் ஏதோ சிலவற்றை மட்டும் நினைப்பது பாவத்தின் பயனே என்பது அரையர் கூறிய விளக்கத்தின் கருத்து.

[393]

லோகயாத்ரையை அநுஸந்தி₄க்கப் புக்காலும் அவனை முன்னாக அல்லது காண மாட்டாமை சொல்லுகிறது. சிறியாச்சான் "ஶப்த₃ாதி₃ விஷயங்களில் நின்றும் நாம் மீளமாட்டாதாற் போலே ஆழ்வார்கள் ப₄க₃வத்₃விஷயத்தில் நின்றும் மீளமாட்டார்கள்" என்று பிள்ளைக்குப் பணித்தான்.

(பெரிய திருவந்தாதி 61)

நிகழ்டம்

'இறைமுறையான் சேவடிமேல்' என்கிற இப்பாசுரத்தில் ஆழ்வார், ஆகாயத்தில் உள்ள நட்சத்திரங்கள், எம்பெருமான் முன்பு உலகளந்தருளின காலத்தில் மேலுலகத்தில் உள்ளவர்கள் அனைவரும் கூடி அப்பெருமானது திருவடிகளின் மேல் தூவின பூக்களைப்போல் உள்ளன என்கிறார். இத்தொடர்பில் சிறியாத்தான் அருளிச்செய்த **வார்த்தை** கூறப்படுகிறது.

விளக்கம்

உலகியல் பொருள்களைக் காணும் போதும் எம்பெருமானோடு தொடர்பு உள்ளவைகளாகவே அவற்றைக் காண்பது ஆழ்வார்களுடைய தன்மையாகும். "உலகியல் நிகழ்ச்சிகளிலிருந்து நாம் மீளமுடியாமல் அழுந்திக் கிடப்பது போல ஆழ்வார்களும் எம்பெருமான் திறத்தில் ஈடுபட்டு அழுந்திக் கிடப்பர்கள்" என்று **சிறியாத்தான், நம்பிள்ளைக்கு** அருளிச் செய்தார்!

1. இதேபோன்ற கருத்துகளை எம்பார் அருளிச்செய்ததாக எண் 354ல் கூறப்படுவது காண்க.

[394]

வாய்மைத்து என்றத்தை வாய்மையன் என்று வசனத்தை மாறாடிக் கொள்ளவுமாம். பருச்செவியும் ஈர்ந்த பரன்படி என்று அத்யாஹரிக்க வேணும். "இரண்டு மிறுக்குமொழிய உபமாந உபமேயங்களை மாறாடாதே நேரே யோஜிக்கப்போம்" என்று சீயருக்கு விண்ணப்பம் செய்தபடி.

(பெரிய திருவந்தாதி 63)

நிகழ்டம்

பின்துரக்கும் காற்றிழந்த சூல்கொண்டல் பேர்ந்தும்போய்
வன்திரைக்கண் வந்தணைந்த வாய்மைத்தே - அன்று
திருச்செய்ய நேமியான் தீயரக்கி மூக்கும்
பருச்செவியுமீர்ந்த பரன்.

என்பது நம்மாழ்வார் அருளியுள்ள பாசுரமாகும். இப்பாட்டிற்கு மூன்று வகையான **நிர்வாஹங்கள்** *காட்டப்படுகின்றன.*

விளக்கம்

தீயரக்கி மூக்கும் பருச்செவியும் ஈர்ந்த திருச்செய்ய நேமியான் பரன், பின்துரக்கும் காற்று இழந்த சூல்கொண்டல் பேர்ந்தும் போய் வன்திரைக் கண் வந்தணைந்த வாய்மைத்து - (சூர்பணகையின் காது மூக்குகளை அறுத்த ஆழியங்கையனான பெருமான் (எப்படிப்பட்டவன் எனில்) கடலினின்றும் நீரை முகந்து கொண்ட காளமேகமானது தன்னை உந்தித் தள்ளுகிற காற்று ஓய்ந்ததும் மீண்டும் கடலிலே வந்து விழுவது போன்றது) என்பது ஒரு அந்வயம். இப்படிக் கொள்வதற்கேற்பப் பாசுரங்களில் சொற்கள் உள்ளதா என்று பார்க்கும் போது பாட்டின் முடிவில் உள்ள பரன் என்பதை உவமேயமாகக் கொண்டால், இரண்டாமடியிலுள்ள வாய்மைத்து என்ற குறிப்பு வினைமுற்றை வாய்மையன் என்று மாற்றிக் கொள்ள வேண்டும். (வாய்மைத்து என்றிருப்பது பரன் என்ற உயர்திணைக்குச் சேராது.) அப்போது பரன் மேகத்தைப் போன்றவன் என்ற பொருள் கிடைக்கும்.

அல்லது, பாட்டின் முடிவிலுள்ள பரன் என்ற சொல்லோடுபடி என்ற ஒரு சொல்லைக் கூட்டினால் 'பரன்படி வாய்மைத்து' என்றாகி திணைமாறாட்டம் செய்ய வேண்டிய அவசியம் இராது. அப்போது பரனுடைய தன்மை மேகத்தைப் போன்றது என்ற பொருள் கிடைக்கும். இவ்விரண்டு அந்வயங்களிலுமே ஒரு குறை உண்டு. முதலாவதில் திணைமாறாட்டம் செய்ய வேண்டிவருதலும் இரண்டாவதில் 'படி' என்றொரு பதத்தை வருவித்துக் கொள்ளவேண்டி வருதலும் குறையாகும். எனவே, இவ்விரு குறைகளுக்கும் இடமில்லாத ஒரு விளக்கத்தை **நஞ்சீயரிடம் நம்பிள்ளை** *விண்ணப்பித்தார்.*

பின்துரக்கும் காற்றிழந்த சூல் கொண்டல், அன்று திருச்செய்ய நேமியான் தீயரக்கி மூக்கும் பருச்செவியுமீர்ந்தபரன் பேர்ந்தும் போய் வன்திரைக்கண் வந்தணைந்த வாய்மைத்து (தன்னை உந்தித் தள்ளுகிற காற்றையிழந்து மீண்டும் கடலிலே சேர்ந்த மேகமானது, சூர்பணகையின் காது மூக்குகளை அரிந்த பெருமான் அவதாரத்தை முடித்தபின் மறுபடியும் சென்று திருப்பாற் கடலிலே சென்று சேர்ந்ததை ஒத்திருக்கின்றது) என்பது நம்பிள்ளை காட்டிய அந்வயம்.

திருப்பாற் கடலிலிருந்து அவதரித்து சூர்பணகையின் காது மூக்குகளை அறுத்து, தன் அவதாரம் முடிந்ததும் மீண்டும் திருப்பாற்கடலிலே அவன் சென்று சேர்ந்ததானது, கடலிலிருந்து புறப்பட்ட மேகமானது மீண்டும் கடலை அடைவது போன்றது என்பது முதல் இருவகை விளக்கங்களில் கிடைக்கும் பொருள். (இங்கு உவமானம் காளமேகம், உவமேயம் எம்பெருமான்) இப்படிக் கூறுவதற்குப் பாசுரத்தில் இல்லாத ஒரு சொல்லைப் புதிதாக வருவித்துக் கொள்ள வேண்டும். எனவே நம்பிள்ளை பாசுரத்தில் உள்ள சொற்களை உள்ளபடியே அந்வயித்து வேறு விளக்கம் அருளுகிறார்.

கடலிலிருந்து புறப்பட்ட மேகமானது மீண்டும் கடலிலேயே போய்ச் சேருவதானது, திருப்பாற்கடலிருந்து அவதரித்த பெருமான் தன் காரியங்களை முடித்துக் கொண்டு மீண்டும் திருப்பாற்கடலுக்கே போய்ச் சேர்வது போல் உள்ளது என்பது நம்பிள்ளை கூறும் விளக்கம். (இங்கு உவமானம் எம்பெருமான், உவமேயம் காளமேகம்) ஆழ்வாருக்கு உலகில் எந்தப் பொருளைப் பார்த்தாலும் எம்பெருமானுடைய நினைவே எழுகிறது என்று முன் ஐதிஹ்யத்தில் (எண் 393) கூறப்பட்டதற்கு மிகவும் பொருத்தமான விளக்கம் இதுவேயாகும்.

[395]

'பெருமாள் மாயமானை எய்து மீண்டெழுந்தருளுகிறபோது அடிக்கொதித்து நடக்கமாட்டாமை தளிர்களை முறித்திட்டு அதன் மேலே எழுந்தருளினார்' என்று ஒருவன் கவிபாட, எம்பெருமானார் கேட்டருளி, "மாறியிடுகிற திருவடிகளிலே என் தலையை வைக்கப் பெற்றிலேன்" என்றருளிச் செய்தார்.

(பெரிய திருவந்தாதி 82)

நிகழிடம்

தெரிந்துணர்வு ஒன்றின்மையால் தீவினையேன் வாளா
இருந்தொழிந்தேன் கீழ் நாள்களெல்லாம் - கரந்துருவின்
அம்மானை அந்நான்று பின் தொடர்ந்த ஆழியங்கை
அம்மானை ஏத்தாதயர்த்து.

(மெய்யறிவு சிறிதும் இல்லாமையினால் கொடிய பாவத்தை உடைய நான், மறைத்த உருவத்துடன் வந்த மாயமானைப் பின்தொடர்ந்த எம்பெருமானைத்

துதிக்காமல், அறிவு கெட்டு, கீழ்க்கழிந்த நாள்களையெல்லாம் வீணே கழித்தேன்) என்று ஆழ்வார் இப்பாசுரத்தில் வருந்துகிறார். இதேபோல் எம்பெருமானார் அருளிச்செய்த **வார்த்தை** *ஒன்று எடுத்துக் காட்டப்பெறுகிறது.*

விளக்கம்

ராமபிரான் மாயமானாக வந்த மாரீசனைக் கொன்று விட்டுத் திரும்புகின்ற போது வெயில் சுட்டெரித்தபடியால், அடி கொதித்து நடக்க முடியாமல் மரத்தின் தளிர்களை முறித்துக் கீழே போட்டு, அதன் மீது நடந்து வந்தார் என்று ஒரு கவி பாடினான். அதைக் கேட்ட எம்பெருமானார் "அப்படி மாறி மாறி இடுகின்ற திருவடிகளின் கீழே அத்தளிர்களுக்கு பதிலாக என் தலையை வைக்கப் பெற்றிலேனே!" என்று அருளிச் செய்தாராம்.

[396]

(நாற்றிசையித்யாதி) "ராஜபுத்ரனோடு வினையுண்ட கைக்கூட்டனுக்கும் பால் திரளையிடக் கடவதுகாண்" என்று பட்டர் அருளிச் செய்யும்படி.

(திருவெழுகூற்றிருக்கை இரண்டாம் வ்யாக்யானம்.)

நிகழிடம்

'ஒரு தனி வேழத்தரந்தையை ஒருநாள் இருநீர் மடுவுள் தீர்த்தனை' (கஜேந்திரனுடைய துன்பத்தைப் போக்கினை) என்று எம்பெருமானைக் குறித்துத் திருமங்கையாழ்வார் அருளிச்செய்கிறார். இத்தொடர்பில் பட்டர் அருளிச்செய்த **வார்த்தை** *ஒன்று எடுத்துக் காட்டப்பெறுகிறது.*

விளக்கம்

எண் 257ன் விளக்கம் பார்க்க.

[397]

(அது கேட்டுக்காரார்) முன்புத்தை ஆசார்யர்கள் ப$_4$க$_3$வத்$_3$விஷயம் சொல்லும் போது நாலிரண்டு பேருக்காயிற்றுச் சொல்லுவது; அதுதானும் அவர்கள் படியறிந்தால் சொல்லுவது. அங்ஙனன்றி ருசியுடையார் என்று தோற்றின அளவிலே சொல்லுவர் எம்பெருமானார்.

(சிறியதிருமடல்)

நிகழிடம்

பரகால நாயகிக்கு ஏற்பட்டுள்ள நோய்க்குக் காரணம் என்ன என்று கேட்ட உடனே, கட்டுவிச்சியானவள் சொல்லத் தொடங்கினாள். இவ்விடத்தில் எம்பெருமானாரை **உதாரணம்** *காட்டி உரையாசிரியர் விளக்கம் அளிக்கின்றார்.*

விளக்கம்

எம்பெருமானாருக்கு முற்பட்ட ஆசார்யர்கள் பகவத் விஷயத்தை உபதேசிக்கும் போது மிகவும் ரகசியமாக நாலிரண்டு பேருக்குத் தான் கூறுவார்கள்; அதுவும் அவர்களுடைய தகுதியை நன்கறிந்த பின்னரே கூறுவர். ஆனால் எம்பெருமானார் அப்படியல்லாமல் 'அர்த்தத்தைச் சொல்ல வேண்டும்' ஆசையுடன் கேட்பவர்களுக்கு, கேட்ட உடனே கூறுவார்! (எம்பெருமானாரைப் போலவே இக்கட்டுவிச்சியும் சொல் என்ற உடனே சொல்லத் தொடங்கினாள் என்கிறார் உரையாசிரியர்.)

[398]

(சீரார்கலையல்குல்) முற்காலத்திலே பெரிய திருநாள் ஸேவித்த முதலிகள் திருநாள் ஸேவித்த இரட்டை என்று மேலைத் திருநாள் வருமளவும் அவ்விரட்டையை மடித்துக் கொடியிலேயிட்டுவைத்துப் பார்த்துப் பார்த்துக் கொண்டிருப்பார்கள்.

(சிறிய திருமடல்)

நிகழிடம்

தயிர் கடைகின்ற யசோதைப் பிராட்டி அணிந்துள்ள ஆடையை வருணிக்கின்ற திருமங்கையாழ்வார் "சீரார் கலை" என்று வருணிக்கின்றார். இத்தொடர்பில் ஆசார்யர்கள் அணியும் ஆடைகளைப் பற்றிய **ஐதிஹ்யம்** *ஒன்றை உரையாசிரியர் எடுத்துக் கூறுகின்றார்.*

விளக்கம்

முற்காலத்தில் **முதலிகள்** *(ஆசார்யர்கள்) மிக அழகான திருப்பரிவட்டங்களை (ஆடைகளை) அணிந்து கொண்டு நம்பெருமாளுடைய திருநாளில் கலந்து கொள்வார்கள். அத்திருநாள் முடிந்தவுடன் அவ்வாடைகளை அழகாக மடித்து, (துணிகளை உலர்ந்தும்) கொடிகளிலே தொங்கவிட்டு வைத்து, 'இந்த ஆடை இன்ன திருநாள் ஸேவித்தது, இந்த ஆடை இன்ன திருநாள் ஸேவித்தது' என்று அடுத்த உற்சவம் வரும் வரையில் அவற்றையே பார்த்துப் பார்த்துக் கொண்டிருப்பார்களாம்.[2] (இரட்டை என்பது அரையில் அணியும் வேஷ்டி,*

1. சொல் என்றவுடனே சொன்ன கட்டுவிச்சிக்கு எம்பெருமானாரை உதாரணம் காட்டியுள்ளமையை எண் 297லும் காண்க. "ஓராண்வழியாய் உபதேசித்தார் முன்னோர் ஏரார் எதிராசர் இன்னருளால் பாருலகில் ஆசையுடையோர்க்கெல்லாம் ஆரியர்காள் கூறும் என்று பேசி வரம்பறுத்தார் பின்" என்று மணவாளமாமுனிகள் உபதேசரத்தின மாலையில் (37) அருளிச் செய்துள்ளார்.

2. "பெரிய திருநாள் ஸேவித்தார் இரட்டைகளை அழுக்கானாலும் மடி கலையாமை வைக்குமா போலே" என்று ஈடு 5.9.3 ல் குறிப்பிடப்படுவதுங் காண்க.

மேலே அணியும் உத்தரீயம் ஆகிய இரண்டைக் குறிக்கும். அறிவற்றவைகளான அவற்றிலும் ஓர் ஆத்மா உண்டு என்று சாத்திரங்களில் கூறப்பட்டுள்ளதை அடியொற்றி இவ்வாறு கூறப்படுகிறது. பெரியாழ்வார் திருமொழி 4-4-4 பாசுரத்திற்கு மணவாளமாமுனிகள் அருளிச்செய்துள்ள வியாக்கியானம் காண்க.)

[399]

(உள்ளளவுங் கைநீட்டி) "தாரார்தடந் தோள்கள் உள்ளளவும் கை நீட்டினான் என்று இவள் அறிந்தபடி எங்ஙனே?" என்று சீயர் பட்டரைக் கேட்க, "கோயிற்சாந்தைக் குடத்தின் விளிம்பிலே கண்டாள் போலே காணும்" என்றார்.

(சிறிய திருமடல்)

நிகழிடம்

கண்ணபிரான் களவு செய்வதற்காக வெண்ணெய்க் குடத்திற்குள் கைவிட்டான். எவ்வளவுக்கெவ்வளவு கை அதிகம் ஆழமாகக் குடத்தில் புகுகிறதோ அவ்வளவுக்கவ்வளவு வெண்ணெயும் அதிகமாகக் கிடைக்கும் என்ற எண்ணத்தினால் கண்ணன் தன் தோள்கள் வரை குடத்தில் கையை நுழைத்தான். இதைத் திருமங்கையாழ்வார் "தாரார் தடம் தோள்கள் உள்ளளவும் கை நீட்டி" என்றருளிச்செய்கிறார். இத்தொடர்பில் ஒரு **ஸம்வாதம்** கூறப்பெறுகிறது.

விளக்கம்

"கண்ணன் வெண்ணெயைக் களவு செய்தபோது யசோதை அங்கு இருக்கவில்லையே! பின் கண்ணன் தன்னுடைய தோள்கள் உள்ளவரை குடத்தில் கையை இட்டான் என்பது அவளுக்கு எப்படித் தெரிந்தது?" என்று நஞ்சீயர் பட்டரைக் கேட்டார். அதற்கு பட்டர், "கண்ணபிரான் மார்பில் பூசியிருந்த சந்தனத்தைக் குடத்தின் விளிம்பில் அவள் கண்டாள் போலும்!" என்று பதிலளித்தார். (கண்ணன் தன் தோள்வரை கைவிட்டு எட்டி வெண்ணெயை எடுக்க முயன்றபோது, அவன் மார்பில் பூசியிருந்த சந்தனம் குடத்தின் விளிம்பில் ஒட்டிக் கொண்டிருக்கும்; அதைக் கொண்டு, கண்ணன் தன் தோள்வரை கையை இட்டான் என்று யசோதை தெரிந்து கொண்டிருப்பாள் என்பது பட்டர் கருத்தாகும்.)

[400]

(அருகிருந்த மோரார் குடமுருட்டி) ... ப$_4$ட்டர், ஆழ்வார்கள் திருமண்டபத்திலே யிருந்து திருமடல் அருளிச் செய்யா நிற்கச் செய்தே, இவ்விடத்தை "ப்$_3$ராஹ்மணர் த$_4$னத்தையெல்லாம் பாழே போக்கினான்" என்றருளிச்செய்தார்.

(சிறிய திருமடல்)

நிகழிடம்

வெண்ணெயைக் களவு செய்து உண்ட கண்ணபிரான் அருகேயிருந்ததொரு மோர்க்குடத்தை உருட்டிவிட்டமையை 'ஆராத வெண்ணெய் விழுங்கி, அருகிருந்த மோரார் குடமுருட்டி' என்று திருமங்கையாழ்வார் அருளிச்செய்துள்ளார். (தயிரிலிருந்து ஸாரமான வெண்ணெயைக் கடைந்து எடுத்தபின் அஸாரமன்றோ மிகுந்திருக்கும்; அஸாரமான மோர் எதற்கு என்று கண்ணன் மோர்க்குடத்தை உருட்டிவிட்டான் போலும்.) இத்தொடர்பில் பட்டர் அருளிச்செய்த **வார்த்தை** *ஒன்று கூறப்பெறுகிறது.*

விளக்கம்

கோயிலில் ஆழ்வார்கள் திருமண்டபத்தில் இருந்து இத்திருமடலை அருளிச் செய்த போது பட்டர் இவ்விடத்தில் "ப்ராம்மணர்களுடைய செல்வத்தையெல்லாம் வீணாக்கிவிட்டான்" என்றருளிச் செய்தாராம். "ப்ராஹ்மணாநாம் தநம் வேத:" என்கிறபடியே ப்ராம்மணர்களுக்கு வேதமே செல்வமாகும். மூன்று வேதங்களாகிற தயிரைக் கடைந்து அதிலிருந்து மூன்று எழுத்துக்களைக் கொண்ட ப்ரணவம் (ஓம்) வெண்ணெய் திரட்டுவது போல எடுக்கப்பட்டது என்று கூறுவதுண்டு.[1] ஆகையாலே அந்த ப்ரணவம் (வெண்ணெய்) எடுக்கப்பட்ட பின் மிகுந்துள்ள வேதமானது மோராகத்தானே இருக்கும்! எனவே தான் கண்ணன் மோர்க்குடத்தை உருட்டியதை பிராம்மணர்களது செல்வத்தை (வேதங்களை) வீணாக்கிவிட்டான் என்று பட்டர் கூறினார்.

[401]

(வெங்நரகம் சேராவகையே சிலை குனித்தான்) வளைந்தவில்லும் கையுமாய் முஷ்டி$_2$யிலே நின்ற பெருமாளைக் கண்ட கூ$_2$ரன், மேலே போய் ஒரு நரகானுப$_4$வம் பண்ண வேண்டா என்னும்படி வயிறெரித்தலோடே எல்லா அநுப$_4$வமும் இங்கே அநுப$_4$விக்கும்படி பண்ணினான். பூர்வாஶ்ரமத்திலே நஞ்சீயர் எழுந்தருளியிருக்கச் செய்தே பட்டர் திருமடலருளிச் செய்கிறபோது இவ்விடத்துக்கு இவ்வார்த்தை அருளிச் செய்தாரென்று சொல்ல, இவ்வார்த்தை அருளிச் செய்தவரைக் காணவேணும் என்று காணும் பட்டர் ஸ்ரீபாத$_3$த்தில் நஞ்சீயர் ஆஶ்ரயித்தது.

(சிறிய திருமடல்)

1. "மூன்று தாழியிலே தயிரை நிறைத்துக் கடைந்து வெண்ணெய் திரட்டினாற் போலே மூன்று வேதத்திலும் மூன்று அக்ஷரத்தையுமெடுத்தது; ஆகையால் இது ஸகலவேதஸாரம்" என்று பிள்ளைலோகாசார்யர் முமுக்ஷுப்படியில் (33) அருளுவது காண்க.

நிகழிடம்

"தன்சீதைக்கு நேராவன் என்றோர் நிசாசரிதான் வந்தாளைக் கூரார்ந்த வாளால் கொடிமூக்கும் காதிரண்டும் ஈராவிடுத்து, அவட்கு மூத்தோனை வெந்நரகம் சேரா வகையே சிலை குனித்தான்" (சீதைப் பிராட்டிக்குச் சமமாகத் தன்னைக் கூறிக்கொண்டு வந்த சூர்ப்பணகையின் காது மூக்குகளை அறுத்து, அவளுக்கு மூத்தவனான கரன் எனும் அரக்கன் நரகம் போகவேண்டாதபடி வில்லை வளைத்தான்) என்று திருமங்கையாழ்வார் அருளிச்செய்துள்ளார். இதற்கு பட்டர் அருளிச்செய்த நயமான விளக்கம் கூறப்பெற்று அத்தொடர்பில் **ஐதிஹ்யம்** ஒன்று கூறப்பெறுகிறது.

விளக்கம்

"வெந்நரகம் சேராவகையே சிலை குனித்தான்" - (கரன் நரகத்தை அடையவேண்டாதபடிக்கு வில்லை வளைத்தான்) என்பதற்கு சாதாரணமாகப் பொருள் கூறுபவர்கள் இராமபிரானால் கொல்லப்பட்டு வீரமரணம் அடையப் போகிற கரன் வீர சுவர்க்கத்தை அடைவான் ஆதலின் அவன் நரகம் செல்லாதபடி வில்லை வளைத்தான் என்று பொருள் கூறுவர். ஆனால் **பட்டர்** இதற்கு மிகவும் சுவையாக வேறொரு பொருள் அருளிச்செய்தார். இராமபிரான் வளைந்த வில்லும் கையுமாய் நின்ற நிலையைக் கண்ட மாத்திரத்திலேயே கரன், இதற்கு மேல் வேறொரு நரகவேதனை கிடையாது என்று கூறலாம்படி, எல்லா நரகவேதனைகளையும் அப்போதே அனுபவிக்கும்படி செய்து விட்டான் என்று பட்டர் பொருளுரைத்தார். பட்டர் திருமடலுக்கு விளக்கம் அருளிச் செய்த போது இப்படி ஒரு பொருள் கூறினார் என்பதை பூர்வாச்ரமத்தில் (துறவறம் பூண்டு நஞ்சீயராக ஆவதற்குமுன்) கேட்ட **நஞ்சீயர்** 'இப்படியொரு நயமான பொருள் கூறியவரைப் பார்க்க வேண்டும்" என்றுதான் பட்டர் திருவடிகளை அடைந்தார்.

[402]

ஸங்யாஸ த₄ர்மத்தை மடல் என்று ஆளவந்தார் அருளிச் செய்தார்.

(பெரிய திருமடல் பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியான ப்ரவேசம்)

நிகழிடம்

மடலூருகை என்பது காமத்தின் மிகுதியினால் செய்யப்படுவதல்லவோ என்ற கேள்விக்கு, பகவானைப் பற்றிய காமமானால் அது தவறல்ல என்கிறார் உரையாசிரியர். தொடர்ந்து உலகியல்வுகளில் வெறுப்பும் பகவானிடத்தில் பக்தியும் தான் காமம் என்றும் கூறும் உரையாசிரியர், ஆளவந்தாருடைய **வார்த்தை**யை எடுத்துக் காட்டுகிறார்.

விளக்கம்

பகவானிடம் உள்ள பக்தியின் மிகுதியினால் எல்லாவற்றையும் துறந்து விட்டு மேற்கொள்ளப்படும் துறவறத்தை (ஸந்யாஸதர்மத்தை) மடல் என்று **ஆளவந்தார்** *அருளிச்செய்வராம். எம்பெருமானை உடனே அடையவேண்டும் என்ற பதற்றத்தினால், நாணம், நிறைவு முதலியவற்றைத் துறந்து, வழியல்லா வழியிலே மடலூர்ந்தாகிலும் அவனைப் பெற நினைப்பதுபோல், எல்லாவற்றையும் துறந்து மேற்கொள்ளப்படும் ஸந்யாஸதர்முமாகும் என்பது ஆளவந்தாருடைய கருத்தாகும்.*

[403]

(மன்னிய சேவடியை) (கொடியார் மாடம் இத்யாதி$_8$) "இப்பாட்டுக்கு ப$_4$ட்டர் அருளிச்செய்யக் கேட்டேன்" என்று பிள்ளை அருளிச் செய்தார். "நித்யஸூரிகள் பரிந்து கொண்டாட, பரமபத$_3$த்திலேயிருக்கும் ஸர்வேஶ்வரன் ஸம்ஸாரிகளுடைய ரக்ஷண நிமித்தமாக இங்கே ஸந்நிதி$_4$ பண்ண வேண்டினால், திருவாய்ப்பாடியிலே மற்றொன்றிலே மறைய வளர்ந்தாற்போலே உகவாதார் அறியாதபடி மறையச் சாய்ந்தருளினாலாகாதோ?"

(பெரியதிருமடல் நம்பிள்ளை/நாயனார் வியாக்கியானம்)

நிகழ்டம்

"நிலமங்கை தன்னை முனநாள் அளவிட்ட தாமரைபோல் மன்னிய சேவடியை..........." என்று திருமங்கை ஆழ்வார் அருளிச்செய்துள்ளார். மிகவும் மென்மையான திருவடிகளைக் கொண்டு எம்பெருமான் காடும் மேடுமான பூமியை அளந்து கொண்டான் என்று விளக்கிய உரையாசிரியர், "கொடியார் மாடக் கோளூரகத்தும் புளிங்குடியும் மடியாதின்னே நீ துயில்மேவி மகிழ்ந்ததுதான்" என்று நம்மாழ்வார் (திருவாய்மொழி 8-3-5) அருளிச்செய்துள்ள பாசுரத்தை மேற்கோள் காட்டி, இத்தொடர்பில் பட்டர் அருளிய விளக்கத்தைத் தாம் கேட்டிருந்ததாக நம்பிள்ளை கூறிய **ஐதிஹ்ய***த்தை எடுத்துக்காட்டுகிறார்.*

விளக்கம்

எம்பெருமான், தான் எழுந்தருளியுள்ளமை நன்கு தெரியும்படி கொடி கட்டிக் கொண்டு திருக்கோளூரிலும், திருப்புளிங்குடியிலும் எழுந்தருளி யுள்ளான் என்று நம்மாழ்வார் அருளிச்செய்துள்ளதைக் கருத்தில் கொண்டு **பட்டர்**, *"நித்யஸூரிகள் பரிவுடன் கொண்டாடும்படியாகப் பரமபதத்தில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமான் உலகோர்களைக் காப்பதற்காக பற்பல திருத்தலங்களில் அர்ச்சாவதாரமாக எழுந்தருளியிருக்கிறான் என்பது உண்மையே! ஆனாலும், விரோதிகள் அறியாதபடி (கிருஷ்ணாவதாரத்தில்)*

திருவாய்ப்பாடியில் மறைந்து வளர்ந்ததுபோல் அத்தலங்களில் விரோதிகள் அறியாதபடி சயனித்திருக்கக் கூடாதோ! இப்படி அனைவரும் அறியும்படி கொடி கட்டிக்கொண்டு கிடக்க வேண்டுமோ!" என்று அருளிச்செய்தாராம். இப்படி பட்டர் அருளிச்செய்ததைத் தாமே கேட்டிருந்ததாக **நம்பிள்ளை** *அருளிச்செய்கிறார்.*

[404]

(பொன்னனையார் பின்னும் திருவுறுக) ………… இவ்விடத்தை - நஞ்சீயர் ப$_4$ட்டர் ஸ்ரீபாத$_3$த்தை ஆச்ரயித்த அநந்தரம் "ப்ரபந்நனுக்கு இவை அநுஷ்டே$_2$யமோ, அன்றோ?" என்ன, "அநுஷ்டி$_2$க்கவுமாம், தவிரவுமாம்" என்ன, "இவன் செய்யுமாகில் தவிரவொண்ணாது, தவிருமாகில் செய்யப்படாது. இருந்தபடி என்?" என்ன, "நம்முடைய க்ரியாப$_4$ாக$_3$த்திலேயாதல், நம்முடைய நினைவாலேயாதல் வரக்கடவதன்றே; அவன் நினைவேயிறே எல்லாவற்றுக்கும் காரணம்" என்றருளிச்செய்தார்.

(பெரிய திருமடல் நம்பிள்ளை/நாயனார் வியாக்கியானம்)

நிகழ்டம்

மடலெடுக்க ஒருப்பட்ட பரகால நாயகி, தனக்கு முன்பு மடலூர்ந்தவர்களைப் பற்றி அருளிச்செய்யும்போது முதன்முதலில் சீதைப் பிராட்டியைக் குறிப்பிடுகிறாள். சீதைப் பிராட்டியானவள் கர்மயோக நிஷ்டரான ஜனக சக்கரவர்த்தியின் மகள் என்பதை எடுத்துரைத்த உரையாசிரியர், கருமங்களை அனுஷ்டிப்பது பிரபந்நனுக்கு அவசியமோ, அன்றோ என்று நஞ்சீயர் கேட்ட கேள்விக்கு பட்டர் விடை அளித்த **ஸம்வாதத்தை** *எடுத்துக் கூறுகிறார்.*

விளக்கம்

பட்டர் *திருவடிகளில் சீடராகச் சரணடைந்த பிறகு* **நஞ்சீயர்** *"பிரபந்நனும் கர்மங்களை அனுஷ்டிக்க வேண்டுமோ?" என்று கேட்டார். அதற்கு பட்டர், "பிரபந்நன் கர்மங்களை அனுஷ்டித்தாலும் தவறில்லை. விட்டாலும் தவறில்லை" என்று விடையளித்தார். அதற்கு நஞ்சீயர், "அது எப்படி? பிரபந்நன் கர்மங்களை அனுஷ்டிக்கத்தான் வேண்டும் என்றால், அவற்றை விடுவது தவறல்லவோ? அதேபோல் பிரபந்நன் கர்மங்களை அனுஷ்டிக்கக் கூடாது என்றால் அவற்றைச் செய்வதும் தவறல்லவோ? எனவே கர்மங்களைச் செய்தாலும் தவறில்லை, விட்டாலும் தவறில்லை என்று எப்படிக் கூறலாம்?" என்று மீண்டும் கேள்வி எழுப்பினார். அதற்கு பட்டர், "நாம் செய்யும் கர்மங்களோ, அல்லது நம்முடைய நினைவோ பலன்களை அளிப்பதில்லை. எம்பெருமானுடைய நினைவே அன்றோ*

பலன்களை அளிக்கின்றன" என்று பட்டர் அருளிச்செய்தார். (எந்த ஒரு பலனுக்காகவும் கர்மங்களைச் செய்யக்கூடாதாகையால், பலனுக்காகச் செய்யும் கர்மங்களை விட்டுவிடுதல் தவறல்ல. ஆனால் அதேசமயத்தில், சாத்திரங்களில் விதிக்கப்பட்ட கருமங்கள் அனைத்தும் எம்பெருமானுடைய ஆணைகள் ஆகையால், அவனுடைய திருவுள்ள உகப்பிற்காக எக்கருமங்களைச் செய்வதும் தவறல்ல. ஆக, வேறு பயன் எதையும் எதிர்பாராமல் எம்பெருமானுடைய திருவுள்ள உகப்பிற்காகக் கைங்கர்யமாகவே கருமங்ளைச் செய்ய வேண்டும்.) என்று பட்டர் கூறினார்![1]

[405]

(மன்னு மருந்தறிவீர் இல்லையே) "இது பட்டர் அருளிச்செய்ய நான் கேட்டேன்" என்று பிள்ளை அருளிச்செய்வர் - "ஜகத்திலே ஓர் ஆந்தராளிகனைக் கிடையாதோ?" என்று.

(பெரிய திருமடல் நம்பிள்ளை/நாயனார் வியாக்கியானம்)

நிகழ்ச்சி

"என்னிவைதான் வாளா எனக்கே பொறையாகி, முன்னிருந்து மூக்கின்று மூவாமைக் காப்பதோர் மன்னு மருந்தறிவீர் இல்லையே" என்று தன்னுடைய முலைகள் விம்மி வீங்குகின்றனவென்றும் அதற்குத் தகுந்த மருந்து அறிவார் ஒருவருமில்லை என்றும் பரகாலநாயகி கூறுவதாகப் பாசுரம் அமைந்துள்ளது. இது பற்றி பட்டர் அருளிச்செய்த **வார்த்தை***யைத் தாம் கேட்டிருந்ததாக நம்பிள்ளை அருளிச்செய்கிறார்.*

விளக்கம்

எண் 363ன் விளக்கம் பார்க்க.[2]

[406]

(தன்னுடைய தான்மேல் கிடாத்தி) "இது பட்டர் அருளிச்செய்ய நான் கேட்டேன்" என்று பிள்ளை அருளிச்செய்தார் - "என்போல்வாரையிறே மடியிலே

1. "இவன்தான் இவைதன்னை நேராக விட்டிலன். கர்மம் கைங்கர்யத்திலே புகும்" என்று பிள்ளைலோகாசார்யர் முமுக்ஷுப்படியில் (சூ. 270, 271) அருளிச்செய்துள்ளதும், அதற்கு மணவாள மாமுனிகள் வியாக்கியானமும் காண்க.
2. பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியானத்திலும் இது குறிப்பிடப்பட்டுள்ளது.

எடுத்துக் கொள்ள அடுப்பது! ஆப்ரிதருக்குப் பரமப்ராப்யமான திருவடிகளிலே ஆஸுரப்ரக்ருதியானவனை ஏறிட்டுக் கொள்ளுவதே! என்கிறாள்" - என்று.

(பெரிய திருமடல் நம்பிள்ளை/நாயனார் வியாக்கியானம்)

நிகழிடம்

"வல்லாளன் மன்னுமணிக்குஞ்சி பற்றி வரவீர்த்து, தன்னுடைய தாள்மேல் கிடாத்தி, அவனுடைய பொன்னகலம் வள்ளுகிரால் போழ்ந்து. . . ." (இரணியனுடைய தலைமுடியைப் பிடித்திழுத்து, அவனைத் தன்னுடைய மடிமீது கிடத்தி, அவனுடைய மார்பைப் பிளந்து . . .) என்று திருமங்கையாழ்வார் அருளிச்செய்துள்ளார். இதுபற்றி பட்டர் அருளிச்செய்த **வார்த்தை***யைத் தாம் கேட்டிருந்ததாக நம்பிள்ளை அருளிச்செய்கிறார்.*

விளக்கம்

எண் 242ன் விளக்கம் பார்க்க.

[407]

(தன்னிகரொன்றில்லாத தாடகையை) "நீ ஸ்த்ரீவத$_4$ம் பண்ணிற்று?" என்று மடியைக் கோத்துப் பிடித்துக் கேட்டால், "ஒரு பார்ப்பான் சொல்லச் செய்தேன்" என்றாயிற்றுச் சொல்லுவது. "இது ப$_4$ட்டர் அருளிச்செய்யக் கேட்டேன்" என்று பிள்ளை அருளிச்செய்வர்.

(பெரிய திருமடல் அழகியமணவாளப்பெருமாள் நாயனார் வியாக்கியானம்)

நிகழிடம்

எம்பெருமான்மீது மடலூருகின்ற பரகால நாயகி எம்பெருமான் செய்த தகாத செயல்களாகச் சிலவற்றைக் கூறிவரும்போது, "........தாடகையை மாமுனிக்காத் தென்னுலகம் ஏற்றுவித்த திண்திறலும்" என்றருளிச்செய்கிறாள். இதுபற்றி பட்டர் அருளிச்செய்த **வார்த்தை***யைத் தாம் கேட்டிருந்ததாக நம்பிள்ளை அருளிச்செய்கிறார்.*

விளக்கம்

இவ்விடத்தை விளக்கியபோது, "இராமபிரானிடம் சென்று, 'சுத்த வீரனான நீ ஒரு பெண்ணை (தாடகையை)க் கொன்றாயே?' என்று அவனுடைய மடியைப் பிடித்துக் கேட்டால், 'நான் என்ன செய்வது? சாத்திர ஞானமுடை பார்ப்பானான விச்வாமித்திரர் சொன்னபடியாலன்றோ நான் தாடகையைக் கொன்றேன்' என்று விச்வாமித்ரர்மேல் பழிவிளையும்படியாக அன்றோ இக் கொடுமையைச் செய்தான்!" என்று (பரகாலநாயகி கூறுவதாக) **பட்டர்** *அருளிச்செய்தாராம். இப்படி பட்டர் அருளிச்செய்ததைத் தாம் கேட்டிருந்ததாக* **நம்பிள்ளை** *அருளிச்செய்வராம்.*

[408]

“ஒரு குருவி பிணைத்தபிணை ஒருவரால் அவிழ்க்கப் போகிறதில்லை. ஸர்வஶக்தி கர்மானுகூ₂ணமாகப் பிணைத்த பிணையை அவனையே கால்கட்டி அவிழ்த்துக் கொள்ளுமித்தனைகாண்” என்று பிள்ளை திருநறையூரரையர் வார்த்தை.

(திருவாய்மொழி ஈடு முதல் ச்ரிய:பதி)

நிகழிடம்

திருவாய்மொழிக்கு மிக விரிவாக முன்னுரை அருளிச்செய்யும் உரையாசிரியர், விசிஷ்டாத்வைத சித்தாந்தத்தின்படி, சித், அசித், ஈச்வரன் என்று தத்துவங்கள் மூன்று என்றும், அவற்றில் அசித் என்பது மிகவும் தாழ்ந்தது என்றும், இதைக் கழித்துக் கொள்ள நினைப்பவன் எம்பெருமானைச் சரணம் அடைந்தே அதிலிருந்து விடுபடவேண்டும் என்றும் உரைத்து, இத்தொடர்பில் பிள்ளைதிருநறையூர் அரையர் அருளிச்செய்த **வார்த்தை** *ஒன்றை எடுத்துக் காட்டுகிறார்.*

விளக்கம்

எண் 162 பார்க்க.

[409]

“இவர்க்கு ப்ரியாப்ரியங்கள் ஒருகாலும் முடியாதே பர்யாயேண உண்டாயிருக்கையாலே, இவர்க்குச் சிந்தயந்திப்படி நித்யமாய்ச் செல்லுகையாலே இவரை ‘தீர்க்க₂ சிந்தயந்தீ’” என்றாயிற்று நம்முதலிகள் அருளிச் செய்வது.

(திருவாய்மொழி ஈடு முதல் ச்ரிய:பதி)

நிகழிடம்

நம்மாழ்வார் அருளிச்செய்த திருவாய்மொழிக்கு மிக விரிவாக முன்னுரை அருளிச்செய்யும் உரையாசிரியர், நம்மாழ்வாரைப் பற்றி ஆசார்யர்கள் அருளிச்செய்த **வார்த்தை** *ஒன்றை எடுத்துக் கூறுகிறார்.*

விளக்கம்

திருவாய்ப்பாடியில் வாழ்ந்த கோபிகையான சிந்தயந்தீ என்பவள் கண்ணபிரான் குழலோசை கேட்டதும் அவனிருக்கும் இடத்திற்குச் செல்லப் புறப்பட்டாள். வீட்டு வாசலில் பெரியவர்கள் அமர்ந்திருப்பதைக் கண்டு, அவனிருக்குமிடத்திற்குச் செல்ல முடியாமல் தயங்கினாள். ஒரே கணத்தில் கண்ணபிரான் குழலோசை கேட்ட மகிழ்ச்சியையும், அவனோடு கூடப் பெறாமையால் வந்த துன்பத்தையும் அனுபவித்து உடனே மூச்சடங்கினாள்!

1. சிந்தயந்தியைப் பற்றிய செய்திகளை எண் 76ல் காண்க.

ஆனால் ஆழ்வாருக்கோ எம்பெருமானை மனத்தினால் அனுபவிக்கும் மகிழ்ச்சியும், அவனோடு கூடப் பெறாமையால் உண்டாகிற வருத்தமும் ஒரு போதும் முடியாமல் மாறி மாறி இறுதி வரையில் நடந்து கொண்டிருக்கிறபடியால், இவரை 'தீர்க்க சிந்தயந்தி' என்று ஆசார்யர்கள் அருளிச் செய்வார்கள்!

[410]

...... ஸகல வேத₃ தாத்பர்யம் இவ்வர்த்த₂பஞ்சகம் என்னுமிடத்தைப் பெரிய வங்கிப்புரத்து நம்பி திருவாய்மொழிக்கு வாக்யார்த்த₂மாக அருளிச் செய்தார்.

(திருவாய்மொழி ஈடு முதல் ச்ரியபதி)

நிகழிடம்

திருவாய்மொழியின் பெருமையைத் தமது விரிவான முன்னுரையில் விளக்கியருளும் உரையாசிரியர், பெரிய வங்கிப்புரத்து நம்பி அருளிச்செய்த **வார்த்தை** ஒன்றை எடுத்துக் காட்டுகிறார்.

விளக்கம்

இறை நிலை, உயிர்நிலை, நெறி, ஊழ்வினை, வாழ்வு என்ற இவை ஐந்தும் அர்த்த பஞ்சகம் எனப்படும். எல்லா வேதங்களினுடைய முக்கியமான கருத்து இவ்வைம்பொருள்களுமே என்றும், நம்மாழ்வார் அருளிய திருவாய்மொழி இவற்றையே விவரிக்கிறது என்றும் பெரிய வங்கிப்புரத்து நம்பி அருளிச்செய்தார். (கூரத்தாழ்வான் திருக்குமாரரான பட்டர் திருவாய்மொழிக்கு அருளிச்செய்த, 'மிக்க இறைநிலையும் மெய்யாம் உயிர் நிலையும் தக்க நெறியும் தடையாகித் தொக்கியலும் ஊழ்வினையும் வாழ்வினையும் ஓதும் குருகையர்கோன் யாழினிசை வேதத்தியல்' என்ற தனியனும் இக்கருத்தையே கூறுகின்றது.)

[411]

(உடையவன்) ஆழ்வான் பிள்ளைப் பிள்ளையைப் பார்த்து "நிர்க்கு₃ணமென்பார் மிடற்றைப் பிடித்தாற்போலே ஆழ்வார் 'நலமுடையவன்' என்றபடி கண்டாயே!" என்று பணித்தான்.

(திருவாய்மொழி 1-1-1 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

நம்மாழ்வார் திருவாய்மொழியைத் தொடங்கும்போது 'உயர்வற உயர்நலம் உடையவன்' (இதற்கு மேல் உயர்வில்லை எனும்படியாக உயர்ந்த ஆனந்தமாகிய

1. ஒன்பதினாயிரப்படி, இருபத்து நாலாயிரப்படி உரைகளிலும் இக்கருத்து இடம்பெற்றுள்ளது.

குணத்தை உடையவன்) என்று அருளிச்செய்கிறார். இதுகுறித்து கூரத்தாழ்வான் அருளிச்செய்த **வார்த்தை** ஒன்று எடுத்துக்காட்டப்பெறுகிறது.

விளக்கம்

கூரத்தாழ்வான் தம்முடைய சீடரான **பிள்ளைப் பிள்ளை ஆழ்வானை** நோக்கி, "எம்பெருமானுக்கு குணங்களே கிடையாது என்று கூறுபவர்களுடைய[1] கழுத்தை நெறிப்பது போல, ஆழ்வார் தொடங்கும் போதே 'நலமுடையவன்' என்று அருளிச் செய்வதைப் பார்த்தீரல்லவா!" என்று வியந்து கூறினாராம்.[2]

[412]

இத்தைப் பற்றவிறே ஆளவந்தார் அருளிச் செய்த சந்தை.

(திருவாய்மொழி 1-1-1 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

நம்மாழ்வார் திருவாய்மொழியைத் தொடங்கும்போது 'உயர்வற உயர்நலம் உடையவன்' (உயர்வு (=வருத்தம்) அற உயர்ந்த ஆனந்தமாகிய குணத்தை உடையவன்) என்று அருளிச்செய்கிறார். எல்லோருக்கும் உயர்த்தி உண்டாகும்போது மிகவும் வருத்தப்பட்டே அந்த உயர்த்தியை அடைய வேண்டியிருக்கும். ஆனால் எம்பெருமானுக்கு உயர்த்தியானது வருத்தம் ஏதும் இல்லாமல் இயற்கையாகவே அமைந்துள்ளது என்று விளக்கிய உரையாசிரியர் இத்தொடர்பில் ஆளவந்தார் அருளிச்செய்துள்ள **சுலோகம்** மேற்கோளாக எடுத்துக் காட்டுகிறார்.

விளக்கம்

'உயர்வற உயர்நலம் உடையவன்' நம்மாழ்வார் அருளிச்செய்துள்ளதை அடியொற்றியே **ஆளவந்தார்** 'ஸ்வாபாவிக அநவதிக அதிசய' (இயற்கையாக அமைந்த, எல்லையில்லாத, அதிசயமான ஐச்வர்யம்) என்று எம்பெருமானுடைய மேன்மை இயற்கையானது என்று (ஸ்தோத்ரரத்னத்தில் 11) அருளிச் செய்துள்ளார் என்பது எடுத்துக் காட்டப்பெறுகிறது.

[413]

(மயர்வற) ஜ்ஞாநாநுதயம், அந்யதாஜ்ஞாநம், விபரீதஜ்ஞாநம் என்கிற இவை வாஸநையோடே போம்படியாக. "ஜ்ஞாநாநுதயமாவது- தேஹாத்மாபிமாநம். அந்யதாஜ்ஞாநமாவது- தேவதாந்தர சேஷமென்றிருக்கை.

1. பரப்பிரம்மத்திற்கு குணங்கள் கிடையாது என்று அத்வைதிகள் கூறுகின்றனர்.

2. இவ்வாறு ஆழ்வான் கூறியமை இருபத்து நாலாயிரப்படி உரையிலும் குறிப்பிடப்படுகிறது.

விபரீத ஜ்ஞாநமாவது - ஸ்வதந்த்ரமாகவும் ஸ்வபோ₄க்₃யமாகவும் நினைத்திருக்கிற கேவலனுடைய ஜ்ஞாநம்" என்று நம்பிள்ளை அருளிச் செய்வர்.

(திருவாய்மொழி 1-1-1 ஈடு வியாக்கியானம்)

நிகழ்டம்

எம்பெருமான், தமக்கு 'மயர்வு அற மதிநலம் அருளினன்' என்று நம்மாழ்வார் அருளிச்செய்கிறார். மயர்வு என்பது ஜ்ஞாந அநுதயம், அந்யதா ஜ்ஞாநம், விபரீத ஜ்ஞாநம் ஆகிய மூன்றையும் குறிக்கும் என்றும் அவை தமக்கு அறவே இல்லாதபடி எம்பெருமான் அருளினான் என்று ஆழ்வார் கூறுவதாகவும் பொருளுரைத்து, இம்மூன்றுக்கும் நம்பிள்ளை அருளிச்செய்யும் **நிர்வாஹம்** *(விளக்கம்) கூறப்பெறுகிறது.*

விளக்கம்

ஜ்ஞாந அநுதயம் (அறிவே உதிக்காமல் இருப்பது), அந்யதாஜ்ஞாநம் (ஒன்றை மற்றொன்றாக அறிவது) விபரீத ஜ்ஞாநம் (தவறாகவே அறிவது). இவற்றை விளக்கியருளும் **நம்பிள்ளை** *'ஜ்ஞாந அநுதயம் என்பது உடலே ஆத்மா என்று நினைப்பதைக் குறிக்கும்; அந்யதாஜ்ஞாநம் என்பது நாராயணனைத் தவிர மற்றவர்களுக்கு ஆத்மா அடிமைப்பட்டதாக நினைப்பதைக் குறிக்கும்; விபரீதஜ்ஞாநம் என்பது ஆத்மாவை சுதந்திரன் என்றும், தானே அநுபவிப்பவன் என்றும் கருதுகின்ற கேவலனுடைய நினைவைக் குறிக்கும்' என்றருளிச் செய்தார்.*

ஜ்ஞாந அநுதயமாவது - ஞானம் உண்டாகாமல் இருத்தல். ஒரு பொருளின் இன்மையாவது, மற்றொரு பொருளின் உண்மையாகும். அதன்படி, உடலைக் காட்டிலும் வேறுபட்டவன் ஆத்மா எனும் உண்மை ஞானம் உண்டாகாமல் இருத்தல் என்பது, உடலே ஆத்மா எனும் (தவறான) ஞானம் உண்டாதல் ஆகும். எனவே ஞான அநுதயம் என்பது தேஹாத்மாபிமானம் (உடலே ஆத்மா என்ற அறிவு) எனப்பட்டது.

அந்யதா ஜ்ஞாநமாவது ஒரு பொருளின் தன்மையை (தர்மத்தை) மற்றொன்றாக அறிதல். (வடமொழியில் இது தர்ம விபர்யாஸம் எனப்படும்.) ஆத்மாவின் தன்மையாவது (தர்மமாவது) பகவானுக்கே அடிமைப்பட்டிருத்தல். அதை வேறொன்றாக அறிதலாவது, ஆத்மாவைப் பிறதேவதைகளுக்கு அடிமைப்பட்டதாக நினைத்தல். எனவே பகவானுக்கே அடிமைப்பட்ட தன்மையுடைய ஆத்மாவை, பகவானுக்குத் தவிர மற்ற தேவதைகளுக்கு அடிமைப்பட்ட தன்மை உடையதாக (தவறாக) அறிதல் அந்யதா ஜ்ஞாநம் எனப்பட்டது.

விபரீத ஜ்ஞாநமாவது ஒரு பொருளின் இயல்வை (ஸ்வரூபத்தை) வேறாக அறிதல். (வடமொழியில் இது தர்மி விபர்யாஸம் எனப்படும்.) ஆத்மாவின்

இயல்வாவது (ஸ்வரூபமாவது) பகவானுக்கு ஆட்பட்டதாகவும், பகவானாலே அனுபவிக்கத் தக்கதாகவும் இருத்தல். இதை வேறாக அறிதலாவது, ஆத்மா தனக்கே பரதந்திரமாகவும் (சுதந்திரத் தன்மை உடையதாகவும்) தனக்கே அனுபவிக்கத் தக்கதாகவும் அறிதல். இவ்வாறு நினைப்பவன் கைவல்யார்த்தியாவான். இவ்வாறு ஆத்மாவின் இயல்வை வேறாக அறிதல் விபரீத ஜ்ஞாநம் எனப்பட்டது. (இம்மூன்றையும் தமக்கு அறவே போக்கினான் எம்பெருமான் என்கிறார் ஆழ்வார் என்று நம்பிள்ளை விளக்கமுரைத்தார்.)

[414]

(மதி நலம்) ஜ்ஞாநப$_4$க்திகள் இரண்டையும் தந்தான் என்று நிர்வஹிப்பாரும் உண்டு. அன்றிக்கே, 'நலமான மதியைத் தந்தான் என்றாய், முளைக்கும் போதே வயிரம் பற்றி முளைக்கும் பதா$_2$ர்த்த$_2$ம் போலே ப$_4$க்திரூபாபந்ந ஜ்ஞாநத்தைத் தந்தான் என்கிறார்' என்று பட்டர் அருளிச் செய்யும்படி.

(திருவாய்மொழி 1-1-1 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

எம்பெருமான் தமக்கு 'மதிநலம் அருளினன்' என்கிறார் நம்மாழ்வார். இதுபற்றி **நிர்வாஹங்கள்** *காண்பிக்கப்பெறுகின்றன.*

விளக்கம்

மதி என்பது ஞானம்; நலம் என்பது பக்தி என்று பொருள் கொண்டு, ஜ்ஞாநம் பக்தி இரண்டையும் தந்தான் என்று சிலர் விளக்கம் தந்தனர். பட்டர், நலமான மதியைத் தந்தான் என்று பொருள் கொண்டு, முளைக்கும் போதே மென்மையாக முளைக்காமல் கடினமாக முளைக்கும் மரம்போல, கொடுக்கும் போதே பக்தியாகப் பரிணமித்த ஞானத்தை (பக்திரூபாபந்ந ஜ்ஞாநத்தைக்) கொடுத்தான் என்று அருளிச் செய்தார். ஜ்ஞாநம் கனிந்தால் - பக்குவமானால் - நலமாக - பக்தியாக மாறும். அத்தகைய ஜ்ஞாநம் - வெகு நாள்கள் கழித்து பக்தியாக மாறுகிற வரையில் காலதாமதம் செய்யாமல், எம்பெருமான் ஞானம் அருளும்போதே பக்தியாகக் கனிந்த ஞானத்தையே அருளினான் என்பது பட்டர் கருத்தாகும். (மதியும் நலமும் என்று உம்மைத் தொகையாகக் கொண்டு சிலர் பொருளுரைத்தனர். நலமாகிய மதி என்று பண்புத் தொகையாக் கொண்டு பட்டர் பொருளுரைத்தார்.)

[415]

"ஆழ்வார் ப்ரபந்நரோ? ப$_4$க்தி நிஷ்ட$_2$ரோ:" என்று எம்பாரைச் சிலர் கேட்க, "ஆழ்வார் ப்ரபந்நர்: ப$_4$க்தி இவர்க்கு தே$_3$ஹயாத்ராஸேஷம்" என்றருளிச் செய்தார்.

(திருவாய்மொழி 1-1-1 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

'மயர்வற மதிநலம் அருளினன்' என்கிறார் ஆழ்வார். 'பக்திரூபாபந்ந ஜ்ஞானத்தை (பக்தியாக முதிர்ந்த ஞானத்தைத்) தந்தான் என்கிறார்' என்று இதற்கு (பட்டர் உரைத்த) பொருளைக் காட்டிய உரையாசியர், இத்தொடர்பில் ஒரு **ஸம்வாதம்** காட்டுகிறார்.

விளக்கம்

'எம்பெருமான் ஆழ்வார்க்கு அருளியது பக்தி என்றால் ஆழ்வார் பக்தி நிஷ்டரா? (அல்லது பிரபந்நர் குலத்துக்குத் தலைவர் - ப்ரபந்நஜந கூடஸ்தர் என்று வழங்குகிறபடியால்) இவர் பிரபந்நரா?'' என்று எம்பாரைச் சிலர் கேட்க அதற்கு எம்பார், "ஆழ்வார் பிரபந்நர்தான். ஆனால் அவருடைய உயிர் உடலோடு கூடியிருக்கும்வரை அவருக்கு பக்தியும் இன்றியமையாததே! (பக்தியாவது பகவானை இடைவிடாமல் சிந்திப்பது.)'' என்று அருளிச் செய்தார்.

(தேஹயாத்ராசேஷம்) நமக்கு தேஹயாத்ரையாவது உடல் தரித்திருப்பதற்குக் காரணமான உணவு. அதுக்கு சேஷம் - பசியென்னும் ஊணாசை; ஆழ்வாருக்கு தேஹயாத்ரை பகவானுக்குச் செய்யும் தொண்டுகள். அவையின்றி ஆழ்வார் தரித்திருக்க மாட்டார். அவ்வநுபவ கைங்கரியங்களாகிற தேஹயாத்ரைக்கு சேஷம் அங்கம் பகவானையனுபவிக்க வேணுமென்றும், கைங்கர்யம் செய்ய வேணுமென்றும் உண்டாகுமாசை; அதுவே பக்தி. பசியெடுத்தாலொழிய உணவு சுவைக்காதது போலே ஆசையுண்டானாலொழிய அநுபவ கைங்கரியங்கள் சுவைக்காது. ஆகையால் ஆழ்வாருக்கு பக்தி தேஹயாத்ராசேஷம் என்றார். எல்லோர்க்கும் கைங்கர்யத்துக்கு உறுப்பான பக்தி வேண்டியது தான் 'பகவந் பக்திமபி ப்ரயச்சமே' என்று ஆளவந்தார் போல்வார் எம்பெருமானை வேண்டிப் பெற்றார்கள். ஆழ்வார் வேண்டாமலேயே எம்பெருமான், அவருக்கு நிர்ஹேதுமாக பக்தியை அருளினான் என்பது குறிப்பிடத்தக்கது.

[416]

(துயரறு) "துயர் அறுக்கும்" என்று முன்புள்ள முதலிகள் அருளிச் செய்யும் படி......... "துயர் அறும் சுடரடி" என்று எம்பெருமானார் அருளிச் செய்யும்படி.

(திருவாய்மொழி 1-1-1 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

நம்மாழ்வார் எம்பெருமானுடைய திருவடிகளை 'துயரறு சுடரடி' என்று அருளிச்செய்கிறார். இதற்கு **நிர்வாஹங்கள்** கூறப்பெறுகின்றன.

விளக்கம்

எம்பெருமானுடைய திருவடிகளை "துயரறு சுடரடி" என்றருளிச் செய்கிறார் நம்மாழ்வார். அடியவர்களுடைய துயரங்களை அறுக்கும் சுடரடி என்று இதற்குப் பூர்வாசார்யர்கள் விளக்கம் அளித்தனர். "அடியவர்களுடைய துயரைப் போக்குவதனால், தான் துயர் அறும் திருவடி" என்று எம்பெருமானார் விளக்கி அருளினார். ஆழ்வாருடைய துன்பங்களுக்குக் காரணமான மயர்வைத் தீர்த்து, எம்பெருமான் தன் துயரறப் பெறுகிறான் என்பது கருத்து.

[417]

(எதிர் நிகழ் கழிவினும் இனனிலன்) "திரள ஒப்பில்லையாகில் ஒரு வகையாலே தான் ஒப்புண்டோ என்னில், அதுவுமில்லை என்கிறது" என்று நிர்வஹிப்பாருமுண்டு; அங்ஙனன்றிக்கே பட்டர் "ஸாத$_4$ர்ம்ய த்$_3$ருஷ்டாந்தமில்லை என்றது முன்பு. வைத$_4$ர்ம்ய த்$_3$ருஷ்டாந்தமில்லை என்கிறது இங்கு" என்று.

(திருவாய்மொழி 1-1-2 ஈடு வியாக்கியானம்)

நிகழ்விடம்

*விசிஷ்டாத்வைதமதப்படி சித், அசித், ஈச்வரன் என மூன்று தத்துவங்களே உள்ளன. ஈச்வரன் மற்ற இரண்டைக்காட்டிலும் வேறுபட்டவன் (விலக்ஷணன்) என்பதை 'மனனகமலமற' என்று தொடங்கும் இப்பாசுரத்தின் முதல் அடிகளால் 'மனனுணர் வளவிலன், பொறியுணர்வவையிலன்' என்று நம்மாழ்வார் தெரிவித்தார். மீண்டும் 'எதிர் நிகழ் கழிவினும் இனனிலன்' (முக்காலங்களிலும் ஒப்பில்லாதவன்) என்றருளிச் செய்கிறார். சித், அசித் இரண்டும் ஈச்வரனுக்கு ஒப்பாகா என்று ஏற்கனவே அருளிய ஆழ்வார், மீண்டும் ஒப்பில்லாதவன் என்று கூறுவதற்குக் காரணம் என்ன என்பதற்கு **நிர்வாஹங்கள்** கூறப்பெறுகின்றன.*

விளக்கம்

"அவை முழுமையாக இறைவனுக்கு ஒப்பாகா என்றாலும், ஏதாவது ஒரு வகையிலாவது அவனுக்கு ஒப்பாகுமா என்றால் அதுவுமில்லை என்கிறது" என்று பூர்வாசார்யர்கள் அருளிச் செய்தனர். ஆனால் பராசரபட்டர் "ஸாதர்ம்யத்ருஷ்டாந்தம் இல்லை என்றது முன்பு; வைதர்ம்யத்ருஷ்டாந்தம் இல்லை என்றது இங்கு" என்று அருளிச் செய்தார்.

ஸாதர்ம்யம் - ஒத்த தருமம் உடைமை; வைதர்ம்யம் - மாறுபட்ட தருமம் உடைமை. 'இராமன் தசரதன் போன்றவன்' என்றால் தசரதன் இராமனுக்கு ஸாதர்ம்யத்தில் (-கருணையுடைமை, தருமநெறியில் ஆட்சி புரிகை முதலிய - இராமனோடு ஒத்த தருமங்கள் உடைமையில்) த்ருஷ்டாந்தமாகிறான். த்ருஷ்டாந்தம் = எடுத்துக்காட்டு.

'இராமன் இராவணன் போன்றவன் அல்லன்' என்றால் இராவணன் இராமனுக்கு - வைதர்ம்யத்தில் (= மனைவிகள் பலரை உடைமை, நல்லோர்களான தேவர் முனிவர் முதலியவர்களை நலிகை முதலிய இராமனோடு மாறுபட்ட தருமங்கள் உடைமையில்) த்ருஷ்டாந்தம். இங்கு இராமனோடு இராவணனுக்கு - (அதிக பராக்ரமமுடைமை அரசனாயிருக்கை முதலியவற்றால்) ஸாதர்ம்யமும் (ஒப்புமையும்) இருக்கையால் இராமனுக்கு இராவணனை வைதர்ம்ய த்ருஷ்டாந்தமாகச் சொல்லலாம். இதிலிருந்து, ஒன்றுக்கு மற்றொன்றினைச் சில தன்மைகளால் வைதர்ம்யத்ருஷ்டாந்தமாகச் சொல்லும் போது, சில தன்மைகளால் ஸாதர்ம்யமும் (ஒப்புமையும்) இருந்தே தீரவேண்டுமென்பது தெரிகிறது.

'வசிஷ்டன் சண்டாளன் போன்றவன் அல்லன்' என்று வசிஷ்டனுக்கு சண்டாளனை வைதர்ம்யத்ருஷ்டாந்தமாகச் சொல்லக் கூடாது. வசிஷ்டனோடு சண்டாளனுக்கு எந்த வகையிலும் ஸாதர்ம்யம் சொல்ல முடியாமையாலே; ஜாதி, அறிவு, ஆசாரம், சாபாநுக்ரஹசக்தி, போன்ற எவ்வகையாலும் வைதர்ம்யமே (மாறுபாடே) உள்ளமையாலே என்க.

எம்பெருமானுக்கு வைதர்ம்யத்ருஷ்டாந்தமாக எதையும் சொல்ல முடியாது. சித்திலோ அசித்திலோ சேர்ந்த எல்லாப் பொருளுமே எம்பெருமானோடு மாறுபட்ட தன்மைகளையே உடைவை ஆகையாலே, ஒப்புமை சொல்லும்படி எவ்வித தன்மையுமில்லாமையால் என்க.

எம்பெருமான் (சித்திலோ அசித்திலோ) இன்னபொருளைப் போன்றவன் என்று சொல்ல சில (ஸாதர்ம்யம்) தன்மைகளிருந்தால் 'எம்பெருமான் இன்ன பொருளைப் போன்றவன்' என்று எடுத்து, பிறகு மாறுபட்ட தன்மைகளைக் கொண்டு - எம்பெருமான் இன்ன பொருளைப் போன்றவன் அல்லன் என்று கழிக்கலாம். எனவே எம்பெருமான் - எடுத்துக் கழிக்கவும் கூட ஒரு பொருளை வைதர்ம்ய த்துஷ்டாந்தமாக உடையவன் அல்லன் என்பது திடமாயிற்று.

'அவனைப் போன்றவன் இவன்' என்று கூறுவது ஸாதர்ம்ய த்ருஷ்டாந்தம் (உடன்பாட்டு உதாரணம்). அவன் எப்படித் தீயவனோ அப்படி இவன் தீயவன் அல்லன் என்பது வைதர்ம்ய த்ருஷ்டாந்தம் (எதிர்மறை உதாரணம்). மணனுணர்வளவிலன், பொறியுணர் வளவிலன் என்றதால், சித், அசித்துக்களைப்போல் இந்த்ரியங்களால் அறிய முடியாதவன். எம்பெருமான் என்பது கூறப்பட்டது; இனனிலன் என்றதால் அவனோடு ஒப்பாகாது என்று சொல்லுகைக்கும் (எடுத்துக் கழிக்கவும்) ஈடான ஒன்று இல்லாதவன் என்பது கூறப்படுகிறது. என்பது பட்டர் தரும் விளக்கமாகும்.[1]

1. இவ்விளக்கமும் ஒன்பதினாயிரப்படி, இருபத்துநாலாயிரப்படி உரைகளிலும் குறிப்பிடப் பெற்றிருந்தாலும், அது பட்டர் அருளிச்செய்தது என்று ஆங்கு குறிப்பிடப்பெறவில்லை.

[418]

"ப்ரவ்ருத்தி அவனதீ₄னையாகிறது வேணுமாகில்; நிவ்ருத்திக்கு அவன் வேணுமோ?" என்று எம்பாரைக் கேட்க, "ஸ்வர்க்க₃த்தில் நின்றும் விழுகிற த்ரிஸங்குவை ஶக்திமான் நிற்கச் சொல்ல நிற்கவேண்டிற்றுக் கண்டாயே! அப்படியே, நிவ்ருத்திக்கும் அவன் வேணும் காண்!" என்றருளிச் செய்தார்.

(திருவாய்மொழி 1-1-6 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

'நின்றனரிருந்தனர்' என்கிற இப்பாசுரத்தில் உலகத்தின் ப்ரவ்ருத்தி (செயல்), நிவ்ருத்தி (செயல் மாட்சி) இரண்டுமே இறைவனைப் பற்றியே நிற்பன என்று ஆழ்வார் அருளுகிறார். இத்தொடர்பில் ஒரு **ஸம்வாதம்** *காட்டப் பெறுகிறது.*

விளக்கம்

"ஒரு செயலைச் செய்வதற்கு எம்பெருமான் துணை வேண்டும் என்பது சரி. செயல் செய்யாமல் வாளாவிருப்பதற்கும் அவன் வேண்டுமோ?" என்று எம்பாரைச் சிலர் கேட்டனர். அதற்கு எம்பார் "சுவர்க்கத்திலிருந்து விழுவதாகிற செயலைச் செய்த திருசங்குவை,[1] அச்செயலினின்றும் மீண்டு, விழாமல் நிற்கும்படி சொல்வதற்கு, சக்திமானான விச்வாமித்ரர் தேவைப்பட்டாரன்றோ! (கீழே விழுதலாகிய செயலுக்கு விழாமலிருத்தல் செயல் மாட்சி: கீழே விழாமலிருத்தல் திரிசங்குவிற்கு விருப்பமாயினும் அதனை அவனால் செய்து கொள்ள முடியவில்லை. அதற்கு முனிவர் திருவருள் வேண்டியிருந்தது). அதுபோல, ஒரு செயலைச் செய்வதற்கு மட்டுமல்ல அச்செயலைச் செய்யாமல் இருப்பதற்கும் இறைவன் திருவருள் வேண்டும்" என்றார்.[2]

[419]

இப்பாட்டு ஆழ்வான் யோஜித்தபடி.

(திருவாய்மொழி 1-1-9 ஒன்பதினாயிரப்படி வியாக்கியானம்)

நிகழிடம்

உளனெனில் உளன் அவனுருவம் இவ்வுருவுகள்,
உளனலனெனில் அவனருவம் இவ்வருவுகள்
உளனென இலனென இவைகுணமுடைமையின்
உளனிருதகைமையோடு ஒழிவிலன் பரந்தே

1. திரிசங்குவின் வரலாறு பற்றிய செய்திகளை வால்மீகி ராமாயணம் பாலகாண்டம் 59, 60 ஸர்க்கங்களில் காண்க.

2. இக்கருத்து இருபத்து நாலாயிரப்படி உரையிலும் குறிப்பிடப்பெறுகிறது. ஆனால் அது எம்பார் அருளிச்செய்தது என்று அங்கு குறிப்பிடப்படவில்லை.

என்று ஆழ்வார் அருளிச் செய்துள்ளார். எம்பெருமான் உளன் என்றால் உளன்; உளன் அலன் என்றாலும் உளன் என்று ஆழ்வார் அருளிச்செய்துள்ள இப்பாசுரத்திற்கு கூரத்தாழ்வானுடைய **நிர்வாஹம்** (விளக்கம்) காட்டப் பெறுகிறது.

விளக்கம்

"இறைவன் என்று ஒருவன் இலன் என்று கூறவிரும்பும் நீ அதை எப்படிக் கூறுகிறாய்? உளன் என்ற சொல்லால் இறைவன் இலன் என்று கூறுகிறாயா? அல்லது இலன் என்ற சொல்லால் இறைவன் இலன் என்று கூறுகிறாயா? உளன் என்ற சொல்லால் எப்படி இறைவனுடைய உண்மை தேறுமோ அப்படியே இலன் என்ற சொல்லாலும் அவன் உளன் என்பதே தேறும். உலகத்தில் ஒருவன் 'குடம் இல்லை' என்று சொன்னால் குடம் இங்கு இல்லை, இப்போது இல்லை என்ற பொருள் கிடைக்குமே தவிர, குடம் என்ற பொருளே உலகில் இல்லை என்ற பொருள் கிடைக்காது. ஏனெனில் குடம் என்ற பொருளே உலகில் இல்லை என்றால் குடம் என்ற சொல்லை நாம் கூறவே முடியாது. உலகில் இல்லாத பொருளை நாம் அறிய முடியாது ஆகையால் அப்படி ஒரு பொருளை நம் வாயால் கூறமுடியாது. எப்போது ஒரு பொருள் ஒரு சொல்லால் கூறப்பட்டுவிட்டதோ, அப்போது அப்பொருள் உலகில் இருந்தே ஆக வேண்டும். இறைவன் இல்லை என்று கூறுகின்ற நீயும் இறைவன் என்ற சொல்லைக் கூறித்தானே அவன் இலன் என்று சொல்ல வேண்டும்! எனவே நீ 'இறைவன் இலன்' என்ற சொல்லாலும் அவனுடைய உண்மையையே நிலை நாட்டுகிறாய்" என்று நம்மாழ்வார் சர்வசூன்யவாதியிடம் இப்பாட்டில் கூறுகிறார் என்று இப்பாசுரத்திற்குக் கூரத்தாழ்வான் விளக்கமளித்தார்!

[420]

இத்திருவாய்மொழிதன்னை ஆளவந்தார் அருளிச்செய்தாராகத் திருமாலையாண்டான் ப்ரபத்தி விஷயமாக்கி நிர்வஹித்துக் கொண்டு போந்து, எம்பெருமானாரும் அப்படியே அருளிச்செய்து கொண்டு போந்து, ப₄ாஷ்யம்

1. திருவாய்மொழிக்கு அருளிச் செய்யப்பட்டுள்ள ஐந்து வ்யாக்யானங்களிலும் இப்பாசுரத்திற்கு இவ்வாறேதான் விளக்கமளிக்கப்படுகிறது. ஆனால் நஞ்சீயர் அருளிச் செய்த ஒன்பதினாயிரப்படியில் மட்டுமே இவ்விளக்கம் கூரத்தாழ்வான் அருளிச் செய்தது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (கூரத்தாழ்வானுடைய உசாத்துணையுடன் ஸ்ரீராமானுஜர் அருளிச் செய்த ஸ்ரீபாஷ்யத்தில் 'ஸர்வதாநுபபத்தேச்ச' (ப்ரம்மஸூத்ரம் 2-2) என்கிற சூத்திரத்தின் உரையில், இப்பாசுரத்தைப் பின்பற்றியே ஸர்வசூன்யவாதியை ஸ்ரீராமானுஜர் கண்டித்திருக்கிறார் என்பது குறிப்படத்தக்கது.)

தலைக்கட்டின பின்பு ப$_4$க்தி விஷயமாக அருளிச் செய்து கொண்டு போருவர். பின்பு எம்பாரும் அப்படியே அருளிச் செய்தார்.

(திருவாய்மொழி 1-2 ஈடு வியாக்கியான ப்ரவேசம்)

நிகழிடம்

"வீடுமின் முற்றவும்" என்று தொடங்கும் திருவாய்மொழியில் ஆழ்வார் எக்கருத்தை உபதேசிக்கிறார் என்பது பற்றி **நிர்வாஹங்கள்** கூறப்பெறுகின்றன.

விளக்கம்

"வீடுமின் முற்றவும்" என்று தொடங்குகின்ற திருவாய்மொழியில் ஆழ்வார் பிரபத்தியோகத்தைப் பற்றியே அருளிச்செய்கிறார் என்று **ஆளவந்தார்** அருளிச் செய்தார் என்று, அவருடைய சீடரான **திருமாலையாண்டான்** எம்பெருமானாருக்கு விளக்கினார். **எம்பெருமானாரும்** அப்படியே அருளிச்செய்து கொண்டிருந்தார். எம்பெருமானார் ப்ரம்மசூத்திரங்களுக்கு விளக்கமாக ஸ்ரீபாஷ்யம் எனும் நூலை இயற்றிய பிறகு, இத்திருவாய்மொழி பக்தியோகத்தைக் கூறுகிறது என்று விளக்கினார்.[1] அதுமுதல் **எம்பாரும்** அப்படியே விளக்கியருளினார்.

[421]

"ஒருவனுக்கு வைஷ்ணவத்வம் உண்டு இல்லை என்னுமிடம் தனக்கே தெரியும் காண்" என்று சீயர் பலகாலும் அருளிச் செய்வர். "பிறர் அநர்த்த$_2$ம் கண்டால் 'ஐயோ' என்றிருந்தானாகில் 'நமக்கு ப$_4$க$_3$வத்ஸம்ப$_3$ந்த$_4$ம் உண்டு" என்றிருக்க அடுக்கும். 'இத்தனையும் பட்டிடுவானுக்கு' என்றிருந்தானாகில் நமக்கு ப$_4$க$_3$வத் ஸம்ப$_3$ந்த$_4$மில்லை" என்றிருக்க அடுக்கும்' என்று.

(திருவாய்மொழி 1-2 ஈடு வியாக்கியான ப்ரவேசம்)

நிகழிடம்

இவ்வுலகோர்கள் படும் துன்பத்தைக் கண்டு பொறுக்கமுடியாத ஆழ்வார் அவர்களுக்கு நன்மையைத் தெரிவிக்கும்பொருட்டு, 'வீடுமின் முற்றவும்' என்று தொடங்கும் திருவாய்மொழியில் உபதேசம் செய்யத் தொடங்கினார். இப்படி அவர் உபதேசிக்கத் தொடங்கியது ஏன் எனில், பிறர் துன்பம் கண்டால் ஐயோ என்று இரக்கம் கொள்வது ஆழ்வாருடைய இயல்வு என்றுரைத்த உரையாசிரியர், இத்தொடர்பில் நஞ்சீயர் அருளிச்செய்த **வார்த்தை** ஒன்றை எடுத்துக் கூறுகிறார்.

விளக்கம்

எண் 202ன் விளக்கம் பார்க்க.

1. இந்நிர்வாஹங்கள் மற்றோரிடத்திலும் குறிப்பிடப்பெறுகின்றன. எண் 808 பார்க்க.

[422]

(உம்முயிர் வீடுடையானிடை) இதுக்குப் பலபடியாக அருளிச் செய்வர். यस्यात्मा शरीरं यस्य पृथिवी शरीरं (யஸ்யாத்மா ஶரீரம் யஸ்ய ப்ருதி₂வீ ஶரீரம்) என்கிறபடியே உம் உயிரையும் அதினுடைய வீட்டையும் உடையவன் என்னுதல்; உம்முடைய உயிரை வீடாக உடையவன் என்னுதல் உம்முயிரை விடுமிடத்தில் - ஸமர்ப்பிக்கும் இடத்தில் உடையான் பக்கலிலே என்னுதல். (வீடுடையான்) பரமபத₃ நிலையன் பக்கலிலே என்னுதல்.

(திருவாய்மொழி 1-2-1 ஈடு வியாக்கியானம்)

நிகழ்டம்

"உம் உயிர் வீடு உடையானிடை வீடு செய்மினே" என்று ஆழ்வார் அருளிச் செய்துள்ளார். இதற்கு நான்கு ***நிர்வாஹங்கள்*** *காட்டப் பெறுகின்றன.*

விளக்கம்

"யஸ்ய ஆத்மா சரீரம், யஸ்ய ப்ருதிவீ சரீரம்' (எவனுக்கு உயிர்களெல்லாம் உடலோ, எவனுக்கு பூமி உடலோ) (ப்ருஹதாரண்யக உபநிஷத்) என்று கூறப்பட்டபடி (1) உம் உயிரையும், அதற்கு வீடான உடலையும் உடையவன்; அல்லது, (2) உம்முடைய உயிரைத் தனக்கு வீடாக உடையவன்; அல்லது (3) உம்முயிரை விடும் போது (சமர்ப்பிக்கும் போது), அதற்கு உடையவனிடத்தில்; அல்லது (4) வீட்டினை (மோக்ஷத்தை) உடையவனிடத்தில் - என்று இப்படிப் பல பொருள்களை **நம்பிள்ளை** *அருளிச் செய்வர்!*

(மூன்றாம் பொருளில் 'வீடு' என்பது விடும் காலத்தில் = ஸமர்ப்பிக்கும் ஸமயத்தில் என்று பொருள் படும். வீடு = விடும் காலம் (இலக்கணை). இல் என்ற ஏழாம் வேற்று தொக்கு நிற்கிறது. இது செய்யுள் விகாரம்.)

[423]

அத₂வா பட்டர் அருளிச் செய்யும்படி........

(திருவாய்மொழி 1-2-6 ஈடு வியாக்கியானம்)

நிகழ்டம்

பற்றிலன் ஈசனும் முற்றவும் நின்றனன்
பற்றிலையாய் அவன் முற்றிலடங்கே

என்பது நம்மாழ்வார் அருளிச் செய்த பாசுரம். இப்பாசுரத்திற்கு இரண்டு வகையான ***நிர்வாஹங்கள்*** *கூறப்படுகின்றன.*

1. இருபத்துநாலாயிரப்படி உரையிலும் இந் நிர்வாஹங்கள் இடம்பெற்றுள்ளன.

விளக்கம்

1. பற்றிலன் ஈசனும் - எம்பெருமானும் அடியவர்களோடு கூடியிருப்பதையே இயல்வாக உடையவனாய், முற்றவும் நின்றனன் - எல்லோர்க்கும் ஒரே விதமாக அடையும்படி இருக்கின்றனன். பற்றிலையாய் நீயும் அவனிடத்தில் பற்று உடையையாய், அவன் முற்றில் அடங்கு அவனுடைய எல்லாக் கைங்கர்யங்களிலும் ஊன்றியிரு! - என்று ஆழ்வார் அருளிச் செய்வதாக ஒரு வகை விளக்கம். (இவ்விளக்கத்தில் பற்றிலன் என்பதற்கு, பற்றை இல்லாக - இருப்பிடமாக உடையவன் எம்பெருமான் என்று பொருள் கொள்ளப்படுகிறது. பற்றிலான் என்பதன் குறுக்கம் பற்றிலன் என்பது)

2. பற்றிலன் ஈசனும் - நித்யசூரிகளை உடையவனாய் பரமபதத்தில் எழுந்தருளியிருக்கின்ற எம்பெருமானும், அந்நித்யசூரிகள் பக்கல் பற்று உடையவன் அல்லன். முற்றவும் நின்றனன் - இன்று வந்து அடிபணிகிற அடியவனையே தனக்கு எல்லாமாகக் கொண்டு இருக்கின்றான். பற்றிலையாய் - நீயும் தாழ்ந்த விஷயங்களில் வைத்திருக்கின்ற பற்றைவிட்டு அவன் முற்றில் அடங்கு. அவனையே எல்லாமாகப் பற்றுவாயாக! - என்று ஆழ்வார் அருளிச் செய்வதாக மற்றொருவகை விளக்கம். (இவ்விளக்கத்தில் பற்றிலன் என்பதற்கு, பற்று இல்லாதவன் என்று பொருள் கொள்ளப் படுகிறது.) இவ்விளக்கத்தை பட்டர் அருளிச் செய்தார்.[1]

[424]

இங்கே பட்டர் பிதா புத்ரர்கள் இருவரும் படகோடின கதையை அருளிச் செய்வர்.

(திருவாய்மொழி 1-2-7 இருபத்து நாலாயிரப்படி வ்யாக்யானம்)

நிகழ்டம்

அடியார் பக்கல் பற்றையே இயல்வாக உடைய எம்பெருமானையே நீயும் பற்றுவாயாக என்றார் ஆழ்வார். அளப்பரிய செல்வம் படைத்தவனான அவ்வெம்பெருமானை, மிகப்புல்லியரான நாம் சென்று அடைய முடியுமோ என்ற கேள்விக்கு ஆழ்வார்,

அடங்கெழில் சம்பத்து அடங்கக் கண்டு ஈசன்
அடங்கெழில் அஃதென்று அடங்குக உள்ளே

(உலகில் உள்ள செல்வங்கள் அனைத்தையும் கண்டு, இது எம்பெருமானுடைய செல்வம் என்று கொண்டு அதிலே அடங்குவாயாக) என்று இப்பாசுரத்தில் விடை அளிக்கிறார். எம்பெருமான் அளப்பரிய செல்வம் படைத்தவன் என்பது உண்மையே. அப்படிப்பட்ட செல்வமெல்லாம் நமக்கு நாதனும்

1. இருபத்து நாலாயிரப்படி உரையிலும் பட்டர் இவ்வாறு அருளிச்செய்தமை குறிப்பிடப்பெறுகிறது.

தந்தையுமானவனுடைய செல்வமன்றோ என்று உணர்ந்து நாமும் அந்தச் செல்வத்தினுள் புகுந்து விட்டால், பிறகு தடை ஒன்றுமிராது; ஆக, எம்பெருமானுக்கும் நமக்கும் உள்ள தொடர்பு பற்றிய அறிவே வேண்டுவது என்கிறார் ஆழ்வார். இதை விளக்குவதற்காக, பட்டர் ஒரு கதை அருளிச்செய்வர் என்பது எடுத்துக்காட்டப்பெறுகிறது.

விளக்கம்

ஒரு வணிகன் தன் மனைவி கருவுற்றிருக்கும் காலத்தில், பொருள் தேடும் விருப்பினால் கப்பலேறி வெளிநாடு சென்றான். யாது காரணத்தாலோ அவன் பல ஆண்டுகள் ஊர் திரும்பவேயில்லை. மனைவி ஒரு ஆண்மகனைப் பெற, அவனும் தக்க வயதடைந்து தகப்பனாரது வாணிபமே தொழிலாக, பொருளீட்டக் கப்பலேறி வெளிநாடு சென்றான். பல வருடங்கள் கழித்துத் தகப்பன் ஊர் திரும்பிய தினத்திலேயே மகனும் ஊர் திரும்பினான். இருவரும் தத்தம் சரக்குகளைக் கப்பலிலிருந்து இறக்கி ஒரு பந்தலில் தங்கினார்கள். ஆனால் இருவருடைய சரக்குகளுக்கும் அப்பந்தலில் இடம் போராமையால் இருவருக்கும் இடையே சண்டை எழுந்தது. இவ்விருவரும் தத்தமக்குள்ள உறவு முறை அறியாதவர்கள் ஆதலால் அம்பறுத்து எய்ய வேண்டிய அளவுக்கு அவர்களுக்குள்ளே விவாதம் முற்றியது. அந்தச் சமயத்தில், இருவரையும் நன்கு அறிந்த ஒருவன் வந்து "நீங்கள் இருவரும் ஏன் சண்டையிடுகிறீர்கள்! நீ வெளியூர் சென்றிருக்கும் காலத்தில் உனக்குப் பிறந்த பிள்ளையல்லவா இவன்! நெடுநாள்கள் வெளிநாடு சென்றிருந்த உன் தகப்பனல்லவா இவன்!" என்று அவ்விருவருக்கும் உள்ள உறவு முறையைத் தெரிவித்தான். உடனே இருவரும் தத்தம் விரோதங்களை மறந்து, இருவர் சரக்கும் ஒன்றாய்க் கலந்து, தகப்பன் காப்பாற்றுகின்றவனாய், மகன் காப்பாற்றப்படுபவனாய்க் கலந்து விட்டார்கள்! (அவ்விருவருக்கும் இடையே உறவு இருந்தபோதிலும் அதை அறியாமையினால் அவர்களுக்குள்ளே விவாதம் எழுந்தது. ஆனால் உறவை அறிந்தவுடனே அந்த விவாதம் மறைந்தது.) அதுபோல் இறைவனுக்கும் நமக்குமுள்ள உறவை நாம் அறிந்தோமானால் பிறகு அவனோடு கலப்பதில் கூச்சம் ஒன்றும் இராது என்று பட்டர் அருளிச் செய்தார்!

[425]

ஓர் அயனத்தினன்று குன்றத்து சீயர் எம்பெருமானார் ஸ்ரீபாதத்திலே புக, அவருடைய சிறு பெயரைச் சொல்லி, "சிங்கப்பிரான்! இன்று அயனம் கிடாய்!" என்ன, திருவுள்ளத்தில் ஓடுகிறது இன்னது என்று அறியாமையாலே அவர்

1. பட்டர் அருளிச் செய்த இக்கதை இருபத்து நாலாயிரப்படியில் விளக்கப்படவில்லை. ஆனால் ஈடு முப்பத்தாறாயிரப்படியில் இக்கதை விரிவாகக் கூறப்பட்டிருந்தாலும், இக்கதை பட்டர் அருளிச்செய்தது என்று குறிப்பிடப்படவில்லை.

பேசாதிருக்க, "இத்தே₂ஹஸமநந்தரத்திலே ப்ராப்தி கண்ணழிவற்ற பின்பு, நடுவு விரோதி₄யாகச் செல்லுகிற நாளிலே ஓராண்டு கழியப் பெற்ற இது, உனக்கு ஒன்றாய் இருந்ததில்லையோ!" என்றருளிச் செய்தார்.

(திருவாய்மொழி 1-2-9 ஈடு வியாக்கியானம்)

நிகழ்டம்

ஒடுங்க அவன்கண் ஒடுங்கலுமெல்லாம்
விடும் பின்னும் ஆக்கை விடும்பொழுது எண்ணே

என்று ஆழ்வார் அருளிச்செய்துள்ளார். "எம்பெருமான் பக்கல் ஊன்றவே, ஆத்மாவை ஒடுங்கப் பண்ணுபவையெல்லாம் நீங்கும். பிறகு உடலை விட்டு நீங்கும் நாளையே எதிர்பார்த்திருக்க வேண்டுவது" என்று இப்பாசுரத்திற்குப் பொருள் உரைத்த உரையாசிரியர், இத்தொடர்பில் ஓர் **ஐதிஹ்யம்** *காட்டுகிறார்.*

விளக்கம்

ஒரு அயன புண்ய காலம் பிறந்தவன்று[1] **குன்றத்து சீயர்** *என்பவர் எம்பெருமானார் திருவடிகளில் தண்டம் ஸமர்ப்பிக்க, அவருடைய சிறு பெயரைக் (அன்புப் பெயரைக்) கூறி "சிங்கப்பிரான், இன்று அயனம் காண்" என்று கூறினார்* **எம்பெருமானார்.** *எக்கருத்தைத் திருவுள்ளத்திலே கொண்டு எம்பெருமானார் இப்படி அருளிச் செய்தார் என்பதை அறியாமையால் திகைத்த குன்றத்து சீயர் பேசாமல் இருந்தார். இதையுணர்ந்த எம்பெருமானார் "இவ்வுடலை விட்டு உயிர் நீங்கியவுடன் நமக்குப் பேறு கிட்டுவது நிச்சயம் என்றானவுடன், அப்படிப் பேற்றை அடைவதற்கு இடையூறாக உள்ள காலத்திலே ஒரு ஆண்டு கழியப் பெற்றது உனக்கு ஒரு பேறாகத் தோன்றவில்லையோ!" என்றருளிச் செய்தார்.*[2]

[426]

எம்பார் ஒருருவிலே, 'பின்னுமாக்கை விடும் பொழுது எண்ணே' என்று, "இங்ஙனே காரணமானது கழிந்தபோதே கார்யமும் தன்னடையே கழிந்ததே அன்றோ! ப்ராப்தியும் இனிக் கைப்புகுந்ததே அன்றோ! இனி சிந்தாவிஷயம் உண்டோ?" என்று அருளிச் செய்தார்.

(திருவாய்மொழி 1-2-9 ஈடு வியாக்கியானம்)

1. ஆடி மாதம் முதல் மார்கழி மாதம் முடியும் வரை தக்ஷிணாயநம்; தைமாதம் முதல் ஆனிமாதம் முடியும் வரை உத்தராயணம் என்று ஒரு வருடமானது இரண்டு அயநங்களை (இரண்டு ஆறுமாதங்களைக்) கொண்டது. ஆடி மாதம் பிறக்கும் தினத்தை தக்ஷிணாயந புண்யகாலம் என்றும் தைமாதம் பிறக்கும் தினத்தை உத்தராயண புண்யகாலம் என்றும் கூறுவர்.

2. இருபத்து நாலாயிரப்படி உரையிலும் இவ்வைதிஹ்யம் இடம்பெற்றுள்ளது.

நிகழிடம்

ஒடுங்க அவன்கண், ஒடுங்கலுமெல்லாம்
விடும், பின்னும் ஆக்கை விடும் பொழுது எண்ணே

என்பது ஆழ்வார் அருளிச் செய்த பாசுரம். "எம்பெருமான் பக்கல் ஊன்றவே, ஆத்மாவை ஒடுங்கப் பண்ணுபவையெல்லாம் நீங்கும். பிறகு உடலை விட்டு நீங்கும் நாளையே எதிர்பார்த்திருப்பது" என்று இப்பாசுரத்திற்குப் பொருள் உரைத்த உரையாசிரியர் எம்பார் அருளிச் செய்த **நிர்வாஹம்** ஒன்றையும் எடுத்துக் காட்டுகிறார்.

விளக்கம்

எம்பார் ஒருமுறை, 'ஆக்கை விடும் பொழுது எண்ணே' என்பதற்கு, "எம்பெருமானைப் பற்றிய பின், இந்த உடல் தொடர்வதற்குக் காரணமானவை கழிந்து விடுமாதலால், காரியமான உடலும் தன்னடையே கழிந்து பேறும் கிட்டிவிடுமன்றோ! எனவே இனி இந்த உடலை விட்டு நீங்கும் நாளைப் பற்றி எண்ணவும் வேண்டுமோ? அதைப் பற்றிய கவலை தேவையில்லை" என்றருளிச் செய்தார்!

('எண்ணே' என்பதற்கு மற்றவர்கள் தேற்றேகாரமாகக் கொண்டு, 'எண்ண வேண்டும்' என்று பொருளுரைத்தனர். ஆனால் எம்பார் அதைப் பிரிநிலை ஏகாரமாகக் கொண்டு, 'எண்ண வேண்டா' என்று பொருளுரைத்தார்.)

[427]

ஆழ்வான் இப்பாட்டளவும் வரப் பணித்து, இப்பாட்டளவிலே வந்தவாறே "இத்தை உந்தம் ஆசார்யர்கள் பக்கலிலே கேட்டுக் கொள்ளுங்கோள்" என்ன, பட்டரும் சீராமப்பிள்ளையும் எழுந்திருந்து போரப்புக்கவாறே அவர்களை அழைத்து "இன்னபோது இன்னார் இருப்பார், இன்னார் போவார் என்று தெரியாது; இருந்து கேளுங்கோள்" என்று திருமந்திரத்தை உபதேஶித்து, இப்பாட்டை நிர்வஹித்து 'இப்பாட்டை இதுக்கு அர்த்தமாக நினைத்திருங்கோள்" என்று பணித்தான்.

(திருவாய்மொழி 1-2-10 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

நம்மாழ்வார் 'எண்பெருக்கந்நலத்து ஒண்பொருள் ஈறில வண்புகழ் நாரணன் திண்கழல் சேரே' என்ற இப்பாசுரத்தில் திருமந்திரத்தின் பொருளை அருளிச் செய்கிறார். இத்தொடர்பில் ஓர் **ஐதிஹ்யம்** கூறப்பெறுகிறது.

1. எம்பார் இப்படி அருளிச்செய்தமை இருபத்துநாலாயிரப்படி உரையிலும் குறிப்பிடப்பெற்றுள்ளது.

விளக்கம்

கூரத்தாழ்வான், திருவாய்மொழிப் பாசுரங்களின் பெருளைத் தமது பிள்ளைகளான பட்டருக்கும் சீராமப்பிள்ளைக்கும் விளக்கிக் கூறிவந்தார். திருமந்திரத்தையும் அதன் பொருளையும் தத்தமது ஆசார்யர்களிடத்திலேயே கேட்க வேண்டுமாதலால், இப்பாட்டளவும் விளக்கி வந்த கூரத்தாழ்வான், இப்பாட்டு வந்தவாறே தம்முடைய பிள்ளைகளான பட்டரையும் சீராமப் பிள்ளையையும் நோக்கி "இப்பாசுரத்தின் பொருளை உங்களுடைய ஆசார்யரிடம் போய்க் கேட்டுக்கொள்ளுங்கள்" என்று கூறினார். உடனே பட்டரும் சீராமப்பிள்ளையும் எழுந்து, (தங்கள் ஆசார்யரான எம்பாரிடம்) செல்லத் தொடங்க, கூரத்தாழ்வான் அவர்களை அழைத்து "இன்னபோது இன்னார் உயிருடன் இருப்பார், இன்னார் (இறந்து) போவார் என்பது தெரியாது.[1] (நீங்கள் உங்கள் ஆசார்யரிடம் சென்று சேரும்வரை உயிர் தரித்திருக்க வேண்டுமே! அப்படியல்லாமல் ஒருவேளை உயிர் பிரிந்து விட்டால், திருமந்திரத்தின் பொருளை அறிந்து கொள்ளாமலே உயிர் விட நேர்ந்து விடுமே!) எனவே நானே உங்களுக்குத் திருமந்திரத்தின் பொருளைக் கூறிவிடுகிறேன்; இருந்து கேளுங்கள்" என்று கூறித் திருமந்திரத்தை உபதேசித்து, இப்பாட்டின் பொருளையும் விவரித்து, இப்பாசுரத்தைத் திருமந்திரத்தின் பொருளாக நினைத்திருக்குமாறு கூறினார்.

[428]

"ஸர்வேஶ்வரன் அரியன் என்றால் ஸம்ஸாரத்தில் ஆள் பற்றாது என்று அவன் எளிமையை உபபாதித்துக் கொண்டு போந்தோம். அதுதானே அவர்களுக்கு 'இத்தனை எளியனோ?' என்று விடுகைக்கு உடலாயிற்று. அவ்வெளிமைதானே ஆத₂ரிகைக்கு உடலாயிற்று, உமக்கு ஒருவர்க்குமேயிறே" என்று எம்பாரைப் பார்த்து உடையவர் அருளிச் செய்தருளினாராம்.

(*திருவாய்மொழி 1-3 ஈடு வியாக்கியான ப்ரவேசம்*)

நிகழிடம்

நம்மாழ்வார் 'பத்துடை அடியவர்க்கு எளியவன்' என்று தொடங்கும் மூன்றாம் திருவாய்மொழியில் எம்பெருமான் மிக்க ஸௌலப்யத்தை (எளிமையை) உடையவன் என்று அருளிச் செய்கிறார். இத்தொடர்பில் ஓர் **ஐதிஹ்யம்** கூறப்பெறுகிறது.

விளக்கம்

எண் 142ன் விளக்கம் பார்க்க.

1. "மின்னின் நிலையில மன்னுயிராக்கைகள்" (மின்னலளவுக்குக் கூட இவ்வுடல்கள் நிலையில்லாதவை) என்ற ஆழ்வார் பாசுரம் (திருவாய்மொழி 1-2-2) இங்கு நினைவு கூரத்தக்கது.

[429]

(மத்துறு கடை வெண்ணெய்) "கடையா நிற்கச் செய்தே, பசியராயிருக்குமவர்கள் சோறு சமையப் பற்றாமல் வெந்தது கொத்தையாக வாயிலிடுமாபோலே, கடையப்பற்றாமல் நடுவே அள்ளி அமுது செய்யும்படியைச் சொல்லுகிறது" என்று பிள்ளான் பணிக்கும்படி.

(திருவாய்மொழி 1-3-1 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

கண்ணபிரான், வெண்ணெயைக் களவு செய்கையில் யசோதையிடம் அகப்பட்டுக் கொண்ட சரித்திரத்தை அனுபவிக்கின்ற நம்மாழ்வார் "மத்துறு கடைவெண்ணெய் களவினில் உரவிடை ஆப்புண்டு" என்றருளிச் செய்கிறார். இதுபற்றிப் பிள்ளான் அருளிச்செய்த **வார்த்தை** *எடுத்துக்காட்டப்பெறுகிறது.*

விளக்கம்

இங்கு "கடை வெண்ணெய் களவு" என்று நிகழ்காலத்தில் அமைந்துள்ள சொல் நயத்தை நோக்கிய **திருக்குருகைப்பிரான் பிள்ளான்** *"மிகவும் பசியோடிருப்பவர்கள் சோறு சமையும் வரைகூடப் பொறுத்திருக்க முடியாமல் வெந்ததும் வேகாததுமாக இருக்கின்ற நிலையிலேயே எடுத்து வாயிலிட்டுக் கொள்வது போல, கண்ணனும், தயிரைக் கடைந்து முடியும் வரை பொறுக்க மாட்டாமல், கடைந்து கொண்டிருக்கும் போதே, நடுவிலே வெண்ணெயை அள்ளி அமுது செய்தபடியைச் சொல்லுகிறது" என்று அருளிச் செய்வர்!*

[430]

(நிலை வரம்பில) "இன்ன அவதாரம், இன்ன சேஷ்டிதம் என்றில்லை" என்று பூர்வாசார்யர்கள் நிர்வாஹம். பட்டர் இவ்விரண்டையும் நிலையில்லாமையிலே கொண்டு, "இனி வரம்பில்லாமையாவது அவதரித்து எளியனாய் நின்ற நிலைதன்னிலே பரத்வம் தோற்ற நிற்கிலும் நிற்கும்" என்று.

(திருவாய்மொழி 1-3-2 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

"நிலை வரம்பில பலபிறப்பாய் ஒளிவரு முழுநலம்" என்றருளிச் செய்கிறார் நம்மாழ்வார். நிலையில்லாதனவும் வரம்பில்லாதனவுமான பலவகைப்பட்ட அவதாரங்கள் செய்பவன் பகவான் என்பது இதற்குப் பொருள். இதற்கு இரண்டு **நிர்வாஹங்கள்** *காட்டப் பெறுகின்றன.*

1. "கடைகிற பராக்கிலே ஒதுங்கி சாபலாதிசயத்தாலே அள்ளி அமுது செய்யும் போலே காண்" என்று பிள்ளான் - என்பது இருபத்து நாலாயிரப்படி உரை.

விளக்கம்

'இன்ன பிறவியிலேதான் பிறப்பது என்று கொள்ளாமையாலே நிலையில என்றது; இன்ன செயல் தான் செய்வது என்று கொள்ளாமையாலே வரம்பில என்றது' என்று **பூர்வாசார்யர்கள்** *இதற்கு விளக்கமளித்தனர். இவ்விளக்கத்தில் வரம்பில்லாமையாவது 'உயர்ந்த செயல்களைத்தான் செய்ய வேண்டும், தாழ்ந்த செயல்களைச் செய்யக் கூடாது' என்ற வரம்பு இல்லாமையாகும். தீயவர்களை அழிப்பது, நல்லவர்களைக் காப்பது போன்ற உயர்ந்த செயல்களோடு, வெண்ணெய் களவு செய்வது, பெண்களை மூலையடியே போக்குவது, ஒரு பெண்ணின் கைவளையைக் கழற்றி அதை ஒருத்திக்குக் கொடுத்து நாவற்பழம் வாங்கியுண்பது, கேட்டால் நானல்லேனென்று சிரிப்பது முதலான தாழ்ந்த செயல்களையும் செய்துள்ளமையைக் கருத்தில் கொண்டு இவ்வாறு அருளிச் செய்யப்பட்டது.*

பட்டர் *'நிலையில' என்பதற்கே அவ்விரண்டு பொருள்களையும் கொண்டு, இனி 'வரம்பில' என்பதற்கு வேறு பொருள் அருளிச் செய்தார். அதாவது - அவதரித்து எளியவனாக நிற்கிற நிலையிலேயே தன்னுடைய பரத்வம் வெளிப்படும் படியாகவும் நிற்பன்; இதற்கு ஒரு வரம்பு கிடையாது - என்று. இவ்விளக்கத்தில் வரம்பில்லாமையாவது எளிமையைக் காட்ட வந்த மநுஷ்யாவதாரத்தில் மனிதனால் இயன்ற காரியத்தையே செய்ய வேண்டுமென்ற வரையறையில்லாமையாகும். மனிதனால் செய்ய முடியாத - கோவர்த்தன மலையை எடுத்தல், விச்வரூபம் காட்டுதல், கண்டாகர்ணனுக்கு மோக்ஷம் கொடுத்தல், ஆழியால் சூரியனை மறைத்தல் முதலிய பரத்வத்துக்குச் சேர்ந்த செயல்களைச் செய்துள்ளமையைக் கருத்தில் கொண்டு இவ்வாறு அருளிச்செய்யப்பட்டது.*[1]

[431]

(நம் திருவுடையடிகள் தம்) "ஸர்வேஶ்வரனை ஆஶ்ரயித்தானாகில் அவன் ப₂லப்ர₃த₃னாகிறான்; பிராட்டியைப் புருஷகாரமாகப் பற்ற வேண்டுகிறதென்?" என்று நஞ்சீயர் பட்டரைக் கேட்க, "'நாளும் நம் திருவுடையடிகள் தம் நலங்கழல் வணங்கி' என்று அவள் முன்னாக ஆஶ்ரயிக்க வேணும் என்னாநின்றது கண்டீரே!" என்றருளிச் செய்து, "அவனை ஆஶ்ரயிக்குமிடத்தில் இவன் குற்றம் பாராதே, தன் நிழலிலே இவனை வைத்து, அவன் பக்கல் முகம் பெற்றவாறே குற்றத்தைப் பொறுப்பிக்கும் அவள் முன்னாகப் பற்ற வேணும்."

(திருவாய்மொழி 1-3-8 ஈடு வியாக்கியானம்)

1. இருவகை விளக்கங்களும் ஒன்பதினாயிரப்படி இருபத்துநாலாயிரப்படி உரைகளில் குறிப்பிடப் பெற்றுள்ளன. ஆனால் அவற்றை அருளிச்செய்தவர்கள் யார் என்பது குறிப்பிடப்பெறவில்லை.

நிகழிடம்

'நாளும் நம் திருவுடை அடிகள்தம் நலங்கழல் வணங்கி' என்று நம்மாழ்வார் அருளிச்செய்துள்ளார். 'திருவுடை அடிகள்' என்று ஆழ்வார் அருளிச்செய்துள்ள படியால், பிராட்டியைப் புருஷகாரமாக முன்னிட்டுக் கொண்டே எம்பெருமானைப் பற்றவேண்டும் என்றுரைத்த உரையாசிரியர், இத்தொடர்பில் ஒரு **ஸம்வாதம்** *காட்டுகிறார்.*

விளக்கம்

"ஒரு சேதனன் எம்பெருமானைச் சரணம் புகுந்தால், எம்பெருமானன்றோ பலனைக் கொடுக்கிறான்! இதனிடையில் பிராட்டியைப் புருஷகாரமாகப் பற்ற வேண்டும் என்று கூறுவது எதற்காக? என்று **நஞ்சீயர்** *பட்டரைக் கேட்க, "'நாளும் நம் திருவுடையடிகள் தம் நலங்கழல் வணங்கி' என்று ஆழ்வார் அருளிச் செய்வது கண்டீரே! இவன் போய் அவனைச் சரணடையும் போது, இவனுடைய குற்றத்தைப் பார்த்து எம்பெருமான் சீற்றம் கொண்டாலும் கொள்வான். இவனுடைய குற்றத்தைப் பாராமல், இவனைத் த்ன் நிழலிலே வைத்து, தகுந்த சமயத்தில் அவன் பக்கல் முகம் பெற்றவாறே, இவனுடைய குற்றத்தைப் பொறுப்பிக்கும்படிசெய்து சேர்ப்பிப்பவள் பிராட்டியேயன்றோ! எனவேதான் அவள் முன்னாகவே பற்ற வேண்டும்" என்று* **பட்டர்** *அருளிச் செய்தார்.*[1]

[432-433]

(பெருநிலம் இத்யாதி) "மநோவாக்காயங்களாலே அனுப₄விக்கப் பெற்றேன் என்கிறார்" என்று பிள்ளான் பணிக்கும்படி. "இவற்றாலே அனுப₄விக்கப் பாரிக்கிறார்" என்று சீயர் அருளிச் செய்யும்படி.

(திருவாய்மொழி 1-3-10 ஈடு வியாக்கியானம்)

'அயர்ப்பிலன் அலற்றுவன் தழுவுவன் வணங்குவன்' என்ற இது அனுப₄விக்கிறார் என்று பிள்ளான் பணிக்கும் என்ற இது, இவருக்கு 'முனியே நான்முகன்' அளவும் உள்ளது மாநஸாநுப₄வமாகையாலே அத்தோடே சேர விழுமிறே. அனுப₄விக்கப் பாரிக்கிறார் என்கிறவிடம் இத்தோடே போரச் சேர்ந்திருக்கும்.

(திருவாய்மொழி 1-4 ஈடு வியாக்கியான ப்ரவேசம்)

நிகழிடம்

"பெரு நிலம் கடந்த நல்லடிப்போது அயர்ப்பிலன் அலற்றுவன் தழுவுவன் வணங்குவன் அமர்ந்தே" என்று நம்மாழ்வார் அருளிச் செய்துள்ளார். இதற்கு இரண்டு வகையான **நிர்வாஹங்கள்** *காட்டப்படுகின்றன.*

1. எண் 694 பார்க்க.

விளக்கம்

'உலகம் தாவியளந்த எம்பெருமானுடைய திருவடித் தாமரைகளை வாயாலே சொல்லி அலற்றினேன்; உடலாலே தழுவிக் கொண்டேன்; மனதாலே வணங்கினேன்' என்று தம்முடைய மனம் மொழி மெய்களால் இப்போது அனுபவிக்கப் பெற்றதாக ஆழ்வார் அருளிச் செய்கிறார் - என்று **திருக்குருகைப் பிரான் பிள்ளான்** *விளக்கினார்.*[1] *இவ்விளக்கத்தில் 'அயர்ப்பிலன், அலற்றுவன், தழுவுவன், வணங்குவன்' என்ற நான்கும் நிகழ்கால வினைமுற்றுக்கள். இப்போது அயர்ப்பில்லாதவனாய்க் கொண்டு தழுவுகிறேன், வணங்குகிறேன் என்பது பொருளாகும்.*

'உலகம் தாவியளந்த எம்பெருமானுடைய திருவடிகளை என் வாயாலே சொல்லி அலற்றுவேன்! உடலாலே தழுவுவேன்! மனதாலே வணங்குவேன் என்று தம்முடைய மனம் மொழி மெய்களாலே அனுபவிக்க வேண்டும் என்று பாரிக்கிறார் ஆழ்வார் - என்று **நஞ்சீயர்** *விளக்கினார்.*[2] *இவ்விளக்கத்தில் 'அயர்ப்பிலன், அலற்றுவன், தழுவுவன், வணங்குவன்' என்ற நான்கும் எதிர்கால வினைமுற்றுக்கள். இனிமேல் அயர்ப்பில்லாதவனாய்க் கொண்டு தழுவக்கடவேன், வணங்கக் கடவேன் என்பது பொருள்.*

பிள்ளான் *அருளிய விளக்கத்தில் அயர்ப்பில்லாமல் இப்போது அரற்றுவதாகவும் தழுவுவதாகவும் வணங்குவதாகவும் ஆழ்வார் அருளிச் செய்வது ஆழ்வார் மனத்தினால் அனுபவிக்கும் (மாநஸ அனுபவம்) ஆகும். திருவாய்மொழி முழுவதும் ஆழ்வார்க்கு மாநஸ அநுபவமேயாகையாலே இது திருவாய்மொழி முழுமைக்கும் சேரும்.*

நஞ்சீயர் *அருளிய விளக்கத்தில், இப்படி 1-3-9ல் மாநஸமாக அநுபவித்த பகவானிடத்தில் பாஹ்யமாக அநுபவிக்க நினைத்து அது கிடையாமையாலே பெண்ணின் நிலையை அடைந்து அனுபவிக்கப் பாரிக்கிறார் என்பது கருத்தாகும்.*

பிள்ளான் விளக்கம் திருவாய்மொழி முழுமைக்கும் சேரும். நஞ்சீயர் விளக்கம் இத்திருவாய்மொழியோடு (1-4) மிகவும் சேரும்.

[434]

"சக்ரவர்த்தி திருமகன் திருவவதரித்தபின்பு வானர ஜாதி வீறு பெற்றாப் போலே காணும், ஆழ்வார்கள் திருவவதரித்து திர்யக்ஜாதி வீறு பெற்றபடி" என்று பட்டர் அருளிச் செய்வர்.

(திருவாய்மொழி 1-4 ஈடு வியாக்கியான ப்ரவேசம்)

1. இவ்விளக்கம் மட்டுமே பிள்ளான் அருளிய ஆறாயிரப்படி உரையில் இடம்பெற்றுள்ளது.
2. இவ்விளக்கம் மட்டுமே நஞ்சியர் அருளிய ஒன்பதினாயிரப்படி உரையில் இடம்பெற்றுள்ளது.

நிகழிடம்

'அஞ்சிறைய மடநாராய்' என்று தொடங்கும் பதிகத்தில் நம்மாழ்வார் பறவைகளை எம்பெருமானிடத்தில் தூதாக அனுப்புகிறார். இத்தொடர்பில் பட்டர் அருளிச்செய்த **வார்த்தை** *ஒன்று எடுத்துக்காட்டப்பெறுகிறது.*

விளக்கம்

"இராமபிரான் திருவவதரித்து அனுமனைத் தூதாக அனுப்பியதால் குரங்கு இனம் பெருமை பெற்றது போல, ஆழ்வார்கள் பறவைகளை எம்பெருமானிடம் தூதாக அனுப்பியதால் ஆழ்வார்கள் அவதரித்த பின்பு பறவை இனங்கள் பெருமை அடைந்தன" என்று பட்டர் அருளிச் செய்தார்.[1]

[435]

(முன் செய்த முழுவினையால்) பட்டர் திருக்கோட்டியூரிலே எழுந்தருளியிருக்கச் செய்தே, தெற்காழ்வானும் கோளரியாழ்வானும் என்று இரண்டு திருப்பதியாருண்டு. கோளரியாழ்வான் ஸதா$_3$சாரபரனாயிருக்கும். தெற்காழ்வான் மேலெழத் திரியும். ஒரு விஶேஷ தி$_3$வஸத்திலே இருவரும் சேர்ந்தவளவில் கோளரியாழ்வான் தெற்காழ்வானை "இன்றாகிலும் ஒரு முழுக்கிட மாட்டாயோ?" என்ன "என்னுடைய பாபம் தெற்காழ்வார் கையில் திருவாழியாலே போக்கப் போமதொழிய ஓரிரண்டு முழுக்கால் போமதன்றுகாண்' என்ன, அத்தைக் கேட்டு "இவனை மேலெழ விசாரித்தோமே' என்று வித்$_3$த$_4$ராயருளினார் பட்டர்.

(திருவாய்மொழி 1-4-2 இருபத்து நாலாயிரபடி வியாக்கியானம்)

நிகழிடம்

"முன்செய்த முழுவினையால்" (முன்பு செய்த மிகுந்த பாவத்தினால்) தாம் எம்பெருமானைக் கிட்ட முடியாமல் வருந்துவதாக ஆழ்வார் அருளிச்செய்கிறார். நம்முடைய பாவங்களை எம்பெருமானே போக்க வேண்டும் என்பதற்கு ஓர் **ஐதிஹ்யம்** *காட்டப்பெறுகிறது.*

விளக்கம்

பட்டர் திருக்கோட்டியூரில் எழுந்தருளியிருந்தபோது **தெற்காழ்வான், கோளரியாழ்வான்** *என்று சீடர்கள் இருவர் இருந்தனர். இவர்களில் கோளரியாழ்வான் மிகவும் ஆசாரம் உடையவராக இருந்தார். ஆனால் தெற்காழ்வான் அவ்வளவு ஆசாரம் உடையவரல்லர். ஒரு புண்ணிய தினத்தன்று, கோளரியாழ்வான் தெற்காழ்வானை நோக்கி, "புண்ணிய தினத்தில் தீர்த்தமாடினால் நம்முடைய பாவங்கள் தொலையுமே! புண்ணிய தினமான*

1. பட்டர் இப்படி அருளிச்செய்தமை இருபத்துநாலாயிரப்படி உரையிலும் குறிப்பிடப்பெறுகிறது.

இன்றாவது நீர் ஒரு முழுக்கிடக்கூடாதோ?" என்று கேட்டார். அதற்குத் தெற்காழ்வான், "நாம் செய்துள்ள பாவங்கள் ஒன்றிரண்டு முழுக்கால் போய்விடுமோ? (திருக்கோட்டியூரில் எழுந்தருளியிருக்கும் நரசிங்கப் பிரானான) தெற்காழ்வார் திருக்கையில் உள்ள சக்கராயுதத்தால் போக்கினால் அன்றி, இம்முழுக்குகளால் அவை போகாது" என்றார். இவர்கள் பேசிக் கொண்டிருப்பதைக் கேட்ட பட்டர், "இத் தெற்காழ்வானைப் பற்றி உட்புகுந்து ஆராயாமல் மேலெழுந்தவாரியாகப் பார்த்து ஆசாரம் இல்லாதவன் என்று நினைத்துவிட்டோமே! என்னே இவனுடைய அறிவு!" என்று வியப்பு அடைந்தாராம்.[1]

[436]

(விதியினமே)......... 'இனம்' என்ற இத்தை இன்னம் என்றாக்கி "எங்கள் அபி$_4$மதம் பெறுகைக்கு எங்கள் பக்கல் ஒரு நன்மை இல்லாத பின்பும் தாழ்க்குமித்தனையோ என்கிறாள்" என்று பிள்ளை திருநறையூரரையர் பணிக்கும்படி.

(திருவாய்மொழி 1-4-2 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

முன் செய்த முழுவினையால் திருவடிக்கீழ் குற்றேவல்
முன் செய்ய முயலாதேன் அகல்வதுவோ விதியினமே

(முற்பிறப்பில் செய்த பெரும் பாவத்தினால் திருவடிகளில் தொண்டு செய்வதற்கு முயலாத நான் அகன்று போவது தான் விதியோ?) என்று அருளிச் செய்கிறார் ஆழ்வார். இதற்குப் பிள்ளை திருநறையூரரையர் அருளிச்செய்த **நிர்வாஹம்** *காட்டப்பெறுகிறது.*

விளக்கம்

இங்கு விதியினம் என்றதில் உள்ள இனம் என்ற சொல்லை இன்னம் என்று ஆக்கி 'இன்னம் அகல்வதுவோ விதி? (உன்திருவடிக் கீழ் குற்றேவல் செய்ய நான் முயற்சி ஏதும் செய்யாமல் இருந்த) பின்னும், நான் விலகியே போக வேண்டுமோ?' என்று ஆழ்வார் கேட்பதாகப் **பிள்ளை திருநறையூர் அரையர்** *பொருளுரைத்தார். (எம்பெருமானுக்கு அடிமை செய்வதற்கு உறுப்பாக ஒரு ஸாதநாநுஷ்டானம் பண்ணாமல் இருக்கச் செய்தேயும், இழக்க வேண்டுமோ என்று கருத்து. ஸாதநாநுஷ்டானம் - ப்ரபந்நன் பலம் பெறுதற்குத் தடையாயிருக்கும். எல்லா தர்மங்களையும் விட்டு என்னொருவனையே பற்று என்று கண்ணபிரான் பக்தி*

1. இப்பாசுரத்தின் ஈடு வியாக்கியானத்தில் தெற்காழ்வான் இவ்வார்த்தைகள் கூறியமை மட்டும் குறிப்பிடப்பெற்றுள்ளது. எண் 186 பார்க்க.

முதலிய ஸாதநங்களை விடச் சொன்னான். எனவே - ஸாதநாநுஷ்டானமேதும் இல்லாமலிருந்தும் நான் பலம் பெறுவதற்குத் தடையுண்டாவது தகுமோ என்றபடி.)

[437]

(கள்வர்க்கு) "வஞ்சகர்க்கு" என்று திருமாலையாண்டான் நிர்வஹிக்கும்படி. எம்பெருமானார் "ஒன்றை நினைத்து ஒன்றைச் செய்தவர்க்கு' என்று அருளிச் செய்வர்.

(திருவாய்மொழி 1-4-3 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

ஆற்றாமையால் நாயகி நிலையடைந்த நம்மாழ்வார் எம்பெருமானிடம் பறவைகளைத் தூது அனுப்பும் போது "மதியினால் குறள்மாணாய் உலகிரந்த கள்வர்க்கு (என் நிலைமையை உரையுங்கள்)" என்று கூறுகிறார். இங்கு 'கள்வர்க்கு' என்று ஆழ்வார் அருளிச்செய்தமைக்கு இரண்டு **நிர்வாஹங்கள்** காட்டப்பெறுகின்றன.

விளக்கம்

'உலகு இரந்த கள்வர்க்கு' என்பதற்குத் திருமாலை ஆண்டான் 'வஞ்சகர்க்கு' என்று (ஆளவந்தார் அருளிச்செய்ததாகப்) பொருளுரைத்தார். அதாவது இனிய பேச்சுக்களைப் பேசி மாவலியை மயக்கியது, சிறிய வடிவைக் கொண்டு மூவடி பெற்றுப் பெரிய திருவுருக் கொண்டு உலகளந்தது முதலிய வஞ்சனைகளைக் கருத்தில் கொண்டு இப்படியருளிச் செய்தார். ஆனால் எம்பெருமானார், 'ஒன்றை நினைத்து ஒன்றைச் செய்தவர்க்கு' என்று மிகவும் சுவைபடப் பொருளுரைத்தார். அதாவது, 'ஓர் அடியவனான இந்திரனுக்கு உதவியது போல நமக்கும் உதவுவான் என்று நினைத்து அவனைப் பற்றினேன். ஆனால் அவன் என்னை ஏமாற்றி விட்டான். அன்று இந்திரனுக்கு உதவியதும் அவனைக் காப்பாற்றுவதற்காக அல்ல; இதைக் கண்டு நான் ஏமாந்து போகவேண்டும் என்று நினைத்து என்னை வஞ்சிப்பதற்காகவே அப்படிச் செய்தான்' என்று ஆழ்வார் அருளிச்செய்வதாக எம்பெருமானார் அருளிச்செய்தார். ஆக, கள்வர் என்றதற்கு (ஆளவந்தார் அருளிச்செய்ததாகத்) திருமாலையாண்டான் கூறிய கருத்துப்படி மாவலியை வஞ்சித்தவன் என்பது பொருள். எம்பெருமானார் கூறிய கருத்துப்படி அச்செயலைச் செய்து ஆழ்வாரை வஞ்சித்தவன் என்பது பொருள்.[1]

1. "அப்படிப்பட்ட வஞ்சகருக்கு என்பர் ஆளவந்தார். அன்று அச்செயல் செய்ததும் அக்குண சேஷ்டிதங்களாலே என் நெஞ்சை அபஹரித்து ஈடுபடுத்துகைக்காகவிறே என்பர் எம்பெருமானார்" என்று இருபத்து நாலாயிரப்படி உரையிலும் இவ்விளக்கங்கள் கூறப்பெற்றுள்ளன.

[438]

(என் நீர்மை கண்டிரங்கி) பட்டரை ஒரு தமிழன் "கேட்டிரங்கி என்னாதே 'கண்டிரங்கி' என்னப் பெறுமோ?" என்ன, "அணைத்த கை நெகிழ்த்த அளவிலே வெளுத்தபடி கண்டால் பிரியத் தகாது என்றிருக்க வேண்டாவோ! இப்படிக் கூடுமோ என்னில், 'புல்லி' இத்யாதி; 'காதலர் தொடுவுழி' இத்யாதி. உனக்கு இத்தமிழ் போகாதோ?" என்றார்.

(திருவாய்மொழி 1-4-4 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

என் நீர்மை கண்டிரங்கி இது தகாதென்னாத
என் நீலமுகில்வண்ணர்க்கு என் சொல்லியான் சொல்லுகேனோ

(அவனைப்பிரிந்தால்) நான் அடையும் நிலைமையைக் கண்டிருந்தும், 'இப்படி நாம் பிரிந்திருப்பது தகாது' என்று இரங்காத எம்பெருமானுக்கு என்ன செய்தி சொல்லுவது) என்று பராங்குச நாயகி வருத்தத்தோடு கூறுவதாகப் பாசுரம் அமைந்துள்ளது. பிரிவில் தரிக்கமாட்டாத என்னுடைய நிலையை நன்றாகக் கண்டிருந்தும் 'ஐயோ! இப்படிப்பட்டவளையோ நாம் விட்டுப்பிரிவது! ஒரு காலும் பிரியத் தகா' என்றிராதவன் எம்பெருமான் என்கிறார் ஆழ்வார். இதுபற்றி ஓர் **ஸம்வாதம்** *கூறப்படுகிறது.*

விளக்கம்

இவ்விடத்தை பட்டர் விளக்கி அருளிய போது தமிழன் ஒருவன் பட்டரிடத்தில் ஒரு கேள்வி கேட்டான். அதாவது இது நாயகனைப் பிரிந்திருக்கின்ற நிலையில் நாயகி சொல்லுகிற பாசுரம். பிரிந்திருக்கும் காலத்தில் நாயகி அடையும் துன்பங்களை நாயகன் பிறர் சொல்லக் காதால் கேட்க முடியுமே தவிர கண்ணால் காண முடியாதே! (அவன் அருகிலேயே இருந்து விட்டால் நாயகிக்குப் பிரிவுத் துயரே உண்டாகாதல்லவா?) ஆகவே இங்குப் பாசுரம் 'என் நீர்மை கேட்டிரங்கி' என்றிருக்க வேண்டுமே தவிர, 'என் நீர்மை கண்டிரங்கி' என்றிருக்கக் கூடாது என்று அத்தமிழன் கூறினான். அதற்கு பட்டர் "நாயகியை அணைத்துக் கொண்டிருக்கிற நாயகன், சற்றே கையைத் தளர்த்தினாலும் நாயகிக்குப் பிரிவுத் துயர் ஏற்பட்டு உடம்பு வெளுப்பதைக் கண்டால், அவளை விட்டுப் பிரியக் கூடாது என்றிருக்க வேண்டாமா? இப்படியும் உண்டோ என்று கேட்கிறாயோ? 'புல்லிக் கிடந்தேன் புடைபெயர்ந்தேன் அவ்வளவில் அள்ளிக் கொள்வற்றே பசப்பு' (அணைத்துக் கொண்டிருந்தேன்; மீண்டும் இறுகத் தழுவுவதற்காகச் சிறிது கையைத் தளர்த்தினேன். இவ்வளவுக்குள் பசலைநிறம் உடம்பெல்லாம் பரவிவிட்டது) (திருக்குறள் 1187), 'ஊருண்கேணி உண்டுறைத் தொக்க பாசியற்றே பசலை, காதலர் தொடுவுழித் தொடுவுழி நீங்கி

விடுவுழிவிடுவுழிப் பரத்தலானே' (ஊரிலுள்ள மக்களாலே நீர் பருகப் பெறுகிற கேணியினுள்ளே படர்ந்திருக்கும் பாசி போன்றது பசலை நிறம். (தண்ணீரில் கைபட்ட விடங்களில் பாசி நீங்கும்; கையை எடுத்து விட்டால் மீண்டும் அவ்விடத்தில் பாசி மூடிக்கொள்ளும். அது போல) காதலியின் உடலில் காதலன் கை படும் இடங்களிலெல்லாம் பசலை நீங்கும்; அவன் கைபடாத இடங்களிலெல்லாம் பசலை நிறம் படரும்) (குறுந்தொகை 399) என்று தமிழிலக்கியங்களில் கூறப்பட்டிருக்கின்றதே! இத்தமிழ் இலக்கியங்கள் உனக்குத் தெரியாதோ? எனவே நாயகியோடு கூடியிருக்கும் காலத்திலும் தன்னைப் பிரிந்தால் நாயகி படக் கூடிய பாட்டை நாயகன் தானே கண்டிருக்கக் கூடுமாதலால், இங்குப் பாசுரத்தில் 'என் நீர்மை கண்டிரங்கி' என்று ஆழ்வார் அருளிச் செய்துள்ளது சரியே!" என்று அத்தமிழனுக்கு விடைபகர்ந்தார்.

[439]

(அருளாயே) "நம்பி ஏறுதிருவுடையான் தாஸர் திருநாட்டுக்கு நடந்தார்" என்று பட்டருக்கு விண்ணப்பஞ்செய்ய, துணுக்கென்று எழுந்து "அவர் ஸ்ரீவைஷ்ணவர்களுடன் பரிமாறும்படிக்கு 'திருநாட்டுக்கு எழுந்தருளினார்' என்ன வேணுங்காண்" என்றருளிச் செய்தார்.

(திருவாய்மொழி 1-4-5 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

எம்பெருமானிடம் பறவைகளைத் தூது அனுப்புகின்ற பராங்குச நாயகி 'ஓர் வாசகம் கொண்டு அருளாயே' என்கிறாள். அவைகள் பறவைகளானாலும், அவை தனக்கு எம்பெருமானைப் பெற்றுத் தருபவை ஆதலால் 'அருளாயே' என்று கௌரவம் தோற்றவே சொற்களைக் கூறவேண்டும் என்றுரைத்த உரையாசிரியர், இத்தொடர்பில் ஓர் ***ஐதிஹ்யம்*** *காட்டுகிறார்.*

விளக்கம்

எண் 34, மற்றும் 83ன் விளக்கங்கள் பார்க்க.

[440]

(அருளாத நீர்) "மயர்வற மதிநலம் அருளினன் என்று ஓரடி போகமாட்டாதே நெஞ்சு உருகின இவர் 'அருளாத நீர்' என்னும்போதைக்கு என்ன அபஸ்மார விசேஷம்? அறிகிறிலோம்" என்று பிள்ளான். "அருளாத நீர்" என்று திருநாமம் சாத்துகிறாள்" என்று சீயர்.

(திருவாய்மொழி 1-4-6 இருபத்து நாலாயிரப்படி வியாக்கியானம்)

நிகழிடம்

எம்பெருமானோடு கலக்க வேண்டுமென்று ஆசைப்பட்ட ஆழ்வார் அவ்வாசை நிறைவேறாமையினாலே நாயகி நிலை அடைந்து ஒரு வண்டை எம்பெருமானிடத்தில் தூது அனுப்புகிறார். வண்டு சொல்ல வேண்டிய வார்த்தையாக 'அருளாத நீர் அருளி அவராவி துவரா முன் அருளாழிப்புட் கடவீர் அவர் வீதி ஒருநாள்' என்று அருளிச் செய்கிறார். இங்கு எம்பெருமானைக் குறித்து ஆழ்வார் 'அருளாத நீர்' என்று அருளிச் செய்ததைக் குறித்துப் பிள்ளான், நஞ்சீயர் ஆகிய இருவருடைய **நிர்வாஹங்கள்** காட்டப்படுகின்றன.

விளக்கம்

"திருவாய்மொழியைத் தொடங்கும் போதே 'மயர்வற மதிநலம் அருளினன்' என்று அவனுடைய அருளைக் கொண்டாடியஆழ்வார் இப்போது 'அருளாத நீர்' என்றருளிச் செய்வது என்ன அபஸ்மாரவிசேஷமோ! (ஆற்றாமையின் மிகுதியோ!)" என்று **பிள்ளான்** அருளிச்செய்வராம்.

(அபஸ்மாரம் என்பது காக்கைவலியைக் குறிக்கும். காக்கை வலிப்பு வந்தவனுக்கு பழையபடியே தெளிவோடு இருக்கவும் முடியாது; சாகவும் முடியாது. இங்கு ஆழ்வார் நிலைமை அப்படிப்பட்டது. மயர்வற மதிநல மருளப் பெறுவதற்கு முன்பு ஸம்ஸாரிகளோடு கூடி ஊணும் உறக்கமுகமாகவே சுகமாக இருந்தார். பின்பு பகவத்விஷயஜ்ஞானமும் (பகவானே சேஷி உபாயம் போக்யன் என்ற ஜ்ஞானமும்) அவனையனுபவிக்கைக்கு உறுப்பான பக்தியும் அவனருளால் பெற்ற பின்பு, உடனே பகவானைப் பெற்று அனுபவிக்க விரும்பினார். உடனே அது கிடையாமையால், தம்மை வருத்துவதற்காகவே எம்பெருமான் மயர்வற மதிநலம் அருளினானோ என்று நினைக்கிறார். இப்படி நினைத்து வருந்தும் ஆழ்வாருடைய துக்கம் அபஸ்மாரம் போன்றது. ஸம்ஸாரம் மிகவும் தாழ்ந்தது என்றும் விடத்தக்கது என்றும் புத்தி ஏற்பட்டுவிட்டபடியால், முன்பு போல் ஸம்ஸாரியாகி சுகப்படவும் முடியாது. என்றேனும் ஒரு நாள் பகவதநுபவம் கிடைக்காதா என்ற ஆசையினால் சாகவும் முடியாது. ஆக ஆழ்வாருடைய துன்பம் வாய் கொண்டு வருணிக்க முடியாது. இதையே பிள்ளான் "என்ன அபஸ்மார விசேஷம், அறிகிறிலோம்" என்றருளினார்.)

"முன்பு மயர்வற மதிநலம் அருளினதற்கு 'அருளினன்' என்று எம்பெருமானுக்குத் திருநாமம் சாத்தினவர், இப்போது அவன் தனது அநுபவத்தைத் தந்தருளாமையாலே 'அருளாதவன்' என்ற திருநாமம் சாத்துகிறார்" என்று **நஞ்சீயர்** அருளிச்செய்தார்![1]

1. ஈடு உரையிலும் இவ்விளக்கங்கள் கூறப்பெற்றிருந்தாலும், அவை பிள்ளானும் நஞ்சீயரும் அருளிச்செய்தவை என்று குறிப்பிடப்பெறவில்லை.

[441]

(அருளாத திருமாலார்க்கு) "न कश्चिन्नापराध्यति (ந கஶ்சிந்நாபராத்₄யதி) என்பாரும் அருகே இருக்க எங்கள் குற்றம் பார்த்து அவள் பக்கல் முகம் பெற இருக்கிறாரே!" என்று நஞ்சீயர் அருளிச் செய்யும்படி. "நானிப்படி நோவுபட வேண்டுகிறது அவனுக்கு அவள் முகங் கொடுத்து அங்கே துவக்குகையிறே என்று இன்னாதாகிறார்" என்று பிள்ளான் பணிக்கும்படி.

(திருவாய்மொழி 1-4-7 ஈடு வியாக்கியானம்)

நிகழ்டம்

"என் பிழையே நினைந்தருளி அருளாத திருமாலார்" (என்னுடைய குற்றங்களையே நினைத்து அருள்புரியாத திருமால்) என்று நாயகி நிலையில் உள்ள ஆழ்வார் அருளிச் செய்கிறார். இப்படி அவன் அருளாத இடத்திலும் அவனைத் 'திருமால்' என்று பிராட்டியோடு அவனுக்குள்ள தொடர்பைக் கூறுவதற்குக் காரணம் என்ன என்பதைப் பற்றி இரண்டு **நிர்வாஹங்கள்** காட்டப்படுகின்றன.

விளக்கம்

"ந கச்சித் ந அபராத்யதி (பிழை செய்யாதவன் எவனும் இலன்) (ஸ்ரீரா. யு.கா.116-44) என்று கூறுகின்ற பிராட்டியோடு தொடர்பு பெற்றிருக்கின்ற எம்பெருமான், இங்ஙனே என்னிடத்தில் பிழைகண்டு எனக்கு அருளாதிருத்தல் தகுதியோ? இப்படி இவர் என்னிடத்தில் பிழை கண்டால் பிறகு பிராட்டி இவர் முகத்தில் விழிப்பாளோ? என்ற கருத்துத் தோன்ற 'அருளாத திருமால்' என்கிறார் ஆழ்வார்" என்று **நஞ்சீயர்** அருளிச் செய்வர்.

"பிராட்டியின் அழகைக் கண்டு எம்பெருமான் மயங்கி அவளுடைய போகமயக்குகளில் மூழ்கிக் கிடக்கின்றமையாலன்றோ இப்போது எம்பெருமான் என்னை நோக்கவும் மாட்டாது அருளாதிருக்கின்றார் எனும் வெறுப்புத் தோன்ற ஆழ்வார் 'அருளாத திருமாலார்' என்றருளிச்செய்கிறார்" என்று **பிள்ளான்** அருளிச் செய்வர்.[1]

[442]

(திருவடியின் தகவினுக்கு என் பிழைத்தாள்) "தேவரீர் க்ருபைக்குத் தண்ணீர்த் துரும்பாக ஏதேனும் ப்ரத₃க்ஷிண நமஸ்காராதி₃கள் பண்ணிற்றுண்டோ?" என்று நம்பிள்ளை அருளிச் செய்யும் படி.

(திருவாய்மொழி 1-4-7 ஈடு வியாக்கியானம்)

1. எண் 154 பார்க்க.

நிகழிடம்

"திருவடியின் தகவினுக்கு என் பிழைத்தாள்" (எம்பெருமானுடைய அருளுக்கு (தடையாக) என்ன பிழை செய்து விட்டாள்) என்று எம்பெருமானைக் கேட்கும்படி கூறுகிறாள் பராங்குச நாயகி. இங்குள்ள சொல் தொடைக்கு மிகவும் சுவையாக நம்பிள்ளை அருளிச் செய்யும் **நிர்வாஹம்** எடுத்துக் காட்டப்படுகிறது.

விளக்கம்

"தேவரீருடைய கருணை பெருகுவதற்கு இடையூறாக என்ன பிழை செய்து விட்டாள்?" என்று எம்பெருமானைக் கேட்பதாகப் பொளுரைத்தார் **நம்பிள்ளை.** "தேவரீருடைய க்ருபையைப் பெறுவதற்கு என்னுடைய முயற்சியாக ஏதேனும் செய்திருப்பேனாகில், 'தன் முயற்சியாலே தன்னைக் காத்துக் கொள்ளப் பார்த்தாள்; அப்படியே பார்த்துக் கொள்ளட்டும், நமக்கென்ன" என்று தேவரீர் உதாஸீனராக இருக்கலாம். நான் அப்படி ஒன்றும் செய்யவில்லையே! தேவரீருடைய கருணை தாராளமாகப் பெருகலாம்படி நான் வாளா இருக்கிறேனேயொழிய, அக்கருணை தடைபடும்படி, என் முயற்சிகளாக நமஸ்காரம், பிரதக்ஷிணம் போன்றவற்றை ஏதேனும் நான் செய்துவிட்டேனோ, ஒன்றும் இல்லையே!" என்கிறாள் என்பது நம்பிள்ளை அருளிச் செய்த விளக்கம்.. வேறு உபாயம் ஏதும் இல்லாதவரான பிரபந்நர்களுக்குத்தான் எம்பெருமான் அருள்புரிவான். அப்படியிருக்க, தமக்கு (ஆழ்வாருக்கு) அவன் அருள் புரியாமைக்குக் காரணம் என்ன? தம் முயற்சியால் ஏதேனும் செய்திருப்பதாக எம்பெருமான் நினைத்திருக்கக் கூடும் என்று கருதி "தேவரீருடைய தகவுக்குத் தடையாக நான் ஏதேனும் நமஸ்காரம், பிரதக்ஷிணம் முதலியவற்றைச் செய்தது உண்டோ, ஒன்றும் இல்லையே!" என்கிறார் ஆழ்வார் என்பது நம்பிள்ளை தரும் விளக்கம். (பிரதக்ஷிணம் நமஸ்காரம் முதலியவைகளையும், ஸாதனபுத்தியோடு அநுஷ்டித்தால், எம்பெருமானுடைய கிருபை பெருகுவதற்கு அவை தடையாக அமைந்து விடும் என்பது கருத்து.)

[443]

பெரிய திருமலை நம்பி, தம்முடைய அந்திம தசையிலே, தமக்கொரு வெண்ணெய்க்காடும் பிள்ளை ஆயிற்றுத் திருவாராதனம். அவர் திருமுன்பில் திருத்திரையை வாங்கச் சொல்லி, "சாயலொடு மணிமாமை தளர்ந்தேன் நான், இனி உனது வாயலகில் இன்னடிசில் வைப்பாரை நாடாயே" என்றாராம்.

(திருவாய்மொழி 1-4-8 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

எம்பெருமானிடம் பறவையைத் தூது அனுப்புகின்ற பராங்குசநாயகி "சாயலொடு மணிமாமை தளர்ந்தேன் நான், இனி உனது வாயலகில் இன்னடிசில்

வைப்பாரை நாடாயே" (நான் ஒளியோடு கூடிய அழகிய நிறத்தை இழந்து தளர்ந்தேன். இனி உனது வாய் அலகில் இனிய உணவை இட வல்லவர்களைத் தேடிக் கொள்) என்று அப்பறவையை நோக்கிக் கூறுகிறாள். இவ்விடத்தில் ஒரு **ஐதிஹ்யம்** *காட்டப்படுகிறது.*

விளக்கம்

எம்பெருமானாருடைய ஆசார்யர்களில் ஒருவரான பெரிய திருமலை நம்பி எனும் ஆசார்யர் 'வெண்ணெய்க்காடும் பிள்ளை' என்று தாம் திருநாமம் சாத்திய கிருஷ்ணவிக்ரகத்தை ஆராதித்து வந்தார். தமது இறுதித் தறுவாயில், பெருமாளுக்குத் திருவாராதனம் செய்ய இயலாமல் போனபோது, பெருமாள் ஸன்னிதி திரையை நீக்கச் செய்து 'அடியேன் ஆசார்யன் திருவடி அடையா நின்றேன், இனி தேவரீர்க்குத் திருவாராதனம் செய்வாரைத் தேடிக் கொள்ளீர்' என்ற கருத்தில் பெருமாளை நோக்கி "சாயலொடு மணிமாமை தளர்ந்தேன் நான் இனியுனது வாயலகில் இன்னடிசில் வைப்பாரை நாடாயே" என்று அருளிச் செய்தாராம்.[1]

[444]

(நாடாத மலர் நாடி) "ஆத்ம புஷ்பத்தைச் சொல்லுகிறது" என்பாருமுண்டு. அங்ஙனன்றிக்கே சீயர் "'எண் திசையும் உள்ள பூக்கொண்டு' என்கிறபடியே, தேடவரிய புஷ்பங்களெல்லாந்தேடி" என்றருளிச் செய்வர்.

(திருவாய்மொழி 1-4-9 ஈடு வியாக்கியானம்)

நிகழ்டம்

'நாடாத மலர்' நாடி எம்பெருமானுக்கு இடவேண்டுமென்று நம்மாழ்வார் அருளிச் செய்கிறார். இங்கு 'நாடாதமலர்' என்பதற்கு இரண்டு **நிர்வாஹங்கள்** *கூறப்படுகின்றன.*

விளக்கம்

நாடாதமலர் என்பது ஒப்பற்றதான ஆத்மாவாகிற புஷ்பத்தைச் சொல்லுகிறது என்பர் சிலர். ஜீவாத்மாவானது புஷ்பம் போல் எம்பெருமானுக்கு மிகவும் இனியது என்ற காரணத்தால் இப்படி அருளிச்செய்யப்பட்டது. அங்ஙன் அல்லாமல் **நஞ்சீயர்** *"எண்டிசையும் உள்ளபூக் கொண்டு" (திருவாய்மொழி 4-7-8) என்று ஆழ்வார் தாமே அருளிச் செய்துள்ளபடி எட்டுத் திசைகளிலும் உள்ள அரிய பூக்களையெல்லாம் தேடி என்று பொருள் அருளிச் செய்தார்.*[2]

1. இருபத்துநாலாயிரப்படி உரையிலும் இவ்வைதிஹ்யம் உள்ளது.
2. நஞ்சீயர் அருளிய ஒன்பதினாயிரப்படி உரையில் இக்கருத்து மட்டுமே கூறப்பட்டுள்ளது.

[445]

(நினைந்த எல்லாப் பொருள்கட்கும் வித்தாய்) "நினைத்தல் - கலத்தலும் கூடலுமாய், ஸத்₃வஸ்த்₂மாய்த் தன்னுடனே கூடிக்கிடக்கிற ஸகல பத₃ார்த்த₂ங்களுக்கும் காரணமாய்" என்று பிள்ளையமுதனார் நிர்வஹிப்பர். அன்றியே, இப்படித் தன் திருவுள்ளத்தாலே விஷயீகரிக்கப்பட்ட ஸகல பத₃ார்த்த₂ங்களுக்கும் காரணமாய்.

(திருவாய்மொழி 1-5-2 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

"நினைந்த எல்லாப் பொருள்கட்கும் வித்தாய்" எம்பெருமான் இருப்பதாக ஆழ்வார் அருளிச் செய்கிறார். இங்கு 'நினைந்த' என்பதற்கு இருவேறு **நிர்வாஹங்கள்** *காட்டப்படுகின்றன.*

விளக்கம்

நினைத்தல் என்ற சொல்லுக்குக் கலத்தல், கூடல் என்ற பொருளும் உண்டாகையால், பிரளய காலத்தில் தன்னுடனே கூடிக்கிடக்கின்ற எல்லாப் பொருள்களுக்கும் காரணமானவன் எம்பெருமான் என்பது **பிள்ளை அமுதனார்** *கூறிய பொருளாகும்.*[1] *எம்பெருமானாலே படைக்கப்பட்ட பொருள்கள் அனைத்தும் ப்ரளய காலத்தில் அழிந்து "ஸதேவ" (ஸத் எனப்படும் ப்ரம்மமாகவே இருந்தது) என்று கூறும்படி இருந்தவன்று, 'இந்தச் சேதநாசேதநங்கள் இறகொடிந்த பறவைகள் போல, கரணகளேபரங்களை (உடலையும் இந்திரியங்களையும்) இழந்திருக்கின்றனவே!' என்று எம்பெருமானுடைய திருவுள்ளத்தில் இரக்கத்தோடு கூடிய நினைவு உண்டாகும். அப்படிப்பட்ட நினைவுக்கு இலக்கான எல்லாப் பொருள்களுக்கும் வித்தாக இருப்பவன் எம்பெருமான் என்பது உரையாசிரியர் காட்டும் மற்றொரு பொருளாகும்.*

[446]

(பாலேய் தமிழர்) ஆழ்வான் ஒருருவிலே 'ஸ்ரீபராங்குசநம்பியைப் பாலேய் தமிழர் என்கிறது; இசைகாரர் என்கிறது ஆழ்வார் திருவரங்கப் பெருமாள் அரையரை; பத்தர் என்கிறது பிள்ளை உறங்காவில்லி த₃ாஸரை" என்று பணித்தானாம். "பாலேய் தமிழர் என்கிறது முதலாழ்வார்களை; இசைகாரர் என்கிறது திருப்பாணாழ்வாரை; பத்தரென்கிறது பெரியாழ்வாரை" என்று ஆளவந்தார் அருளிச் செய்வர்.

(திருவாய்மொழி 1-5-11 ஈடு வியாக்கியானம்)

1. ஈடு வியாக்கியானம் தவிர மற்ற வியாக்கியானங்களில் அமுதனார் கூறிய விளக்கம் இடம்பெறவில்லை; மற்றொரு விளக்கம் மட்டுமே இடம் பெற்றுள்ளது.

நிகழ்டம்

நம்மாழ்வார் தமது திருவாய்மொழியை, "பாலேய் தமிழர் இசைகாரர் பத்தர் பரவும் ஆயிரம்" என்றருளிச் செய்கிறார். இதற்கு **நிர்வாஹங்கள்** *காட்டப்பெறுகின்றன.*

விளக்கம்

ஆழ்வான் ஒருமுறை *"தமிழில் மிகவும் வல்லவரான* **ஸ்ரீ பராங்குசநம்பி** *போல்வாரை 'பாலேய் தமிழர்' என்கிறது. எம்பெருமான் திருமுன்பே ஆழ்வார் அருளிச் செய்த பாசுரங்களை இனிய இசையோடு பாடும்* **ஆழ்வார் திருவரங்கப் பெருமாள் அரையர்** *போல்வாரை 'இசைகாரர்' என்கிறது. எம்பெருமானுக்கு ஒரு தீங்கும் ஏற்பட்டுவிடக் கூடாதே! என்று மிகவும் பரிவோடு இருப்பவரான* **பிள்ளை உறங்காவில்லி தாஸர்** *போல்வாரை 'பத்தர்' என்கிறது" என்று அருளிச் செய்தாராம்.*[1]

"முதன் முதலிலே அழகிய தமிழ்ப் பாசுரங்களை அருளிச் செய்தவர்களான பொய்கையார், பூதத்தார், பேயார் ஆகிய முதலாழ்வார்கள் மூவரை 'பாலேய் தமிழர்' என்கிறது. தமது குடிப்பிறப்புக்குச் சேர வீணையை மீட்டிக் கொண்டு இனிய இசையாலே எம்பெருமானைப் பாடிய திருப்பாணாழ்வாரை 'இசைகாரர்' என்கிறது; எம்பெருமானுக்கு யாராலே என்ன தீங்கு நேருமோ என்று பொங்கும் பரிவுடன் பல்லாண்டு பாடிய பெரியாழ்வாரை 'பத்தர்' என்கிறது" என்று **ஆளவந்தார்** *அருளிச் செய்வர்.*[2]

[447]

(புகை பூவே) "செதுகையிட்டுப் புகைக்க அமையும்; கண்டகாலியிடவும் அமையும்" என்று பட்டர் அருளிச் செய்யும்படி. இத்தை பட்டர் அருளிச் செய்தவாறே "न कण्टकालिका पुष्पं देवाय विनिवेदयेत् (ந கண்டகாலிகா புஷ்பம் தே₃வாய விநிவேத₃யேத்) என்னாநின்றதே!" என்று நஞ்சீயர் கேட்க, "அவனுக்கு ஆகாது என்கிறதல்ல; பறிக்கிற ஆஶ்ரிதன் கையிலே முள் பாயும் என்று அதுக்காகத் தவிர்த்தது காணும்" என்றருளிச் செய்தார்.

(திருவாய்மொழி 1-6-1 ஈடு வியாக்கியானம்)

1. ஆழ்வான் இவ்வாறு அருளிச்செய்தமை இருபத்துநாலாயிரப்படி உரையிலும் குறிப்பிடப் பெற்றுள்ளது.

2. இக்கருத்துகள் இருபத்துநாலாயிரப்படி உரையிலும் கூறப்பட்டிருந்தாலும் இவற்றை அருளிச்செய்தவர் ஆளவந்தார் என்பது குறிப்பிடப்படவில்லை. மேலும் 'இசைகாரர் என்பது மதுரகவியாழ்வாரை' என்று அங்கே குறிப்பிடப்பட்டுள்ளது. ('குருகூர் நம்பி பாவின் இன்னிசை பாடித்திரிவனே' என்று மதுரகவியாழ்வார் அருளிச்செய்தமையால் அவரை இசைகாரர் என்றபடி.)

நிகழிடம்

எம்பெருமான், ஆராதனைக்கு எளியன் என்பதைத் தெரிவிக்கின்ற ஆழ்வார் "புரிவதுவும் புகை பூவே (எம்பெருமானுக்கு ஸமர்ப்பிப்பதும் ஏதேனும் ஒரு புகையும்(தூபமும்) ஏதேனும் ஒரு பூவும்) என்று அருளிச் செய்கிறார். இது குறித்து ஒரு **ஸம்வாதம்** காட்டப்பெறுகிறது.

விளக்கம்

இங்கு இன்ன புகை என்றோ இன்ன பூ என்றோ சிறப்பித்துக் கூறாமல் 'புகை, பூ' என்று ஆழ்வார் அருளிச் செய்துள்ளமையைக் கருத்தில் கொண்டு பட்டர், "ஏதேனும் ஒரு புகையும், ஏதேனும் ஒரு பூவும் போதும்; செதுகை (மரத்தில் செதுக்கிய சராய் முதலியவற்றை) இட்டுக் கொளுத்தி அதனால் உண்டாகும் புகையை ஸமர்ப்பித்தாலும் அவன் ஏற்றுக் கொள்வான்; கண்டகாலிப்பூவை இட்டாலும் அணிந்து கொள்வான்" என்று கூறினார். இதைக் கேட்ட நஞ்சீயர் "ந கண்டகாலிகா புஷ்பம் தேவாய விநிவேதயேத் (கண்டகாலிப்பூவை எம்பெருமானுக்கு ஸமர்ப்பிக்கக் கூடாது) என்று சாத்திரத்தில் கூறப்பட்டுள்ளதே!" என்று கேட்க, அதற்கு பட்டர் "கண்டகாலிப்பூவை எம்பெருமானுக்கு சாத்தக் கூடாது என்று சாத்திரம் கூறியுள்ளது உண்மைதான். ஆனால் அது எம்பெருமானுக்கு ஆகாது என்ற காரணத்தால் அல்ல; கண்டகாலிப்பூவில் நிறைய முள் இருக்குமாதலால், எம்பெருமானுக்காக அடியார்கள் அப்பூவைப் பறிக்கும்போது அவர்கள் கையில் முள் தைக்குமே என்ற காரணத்தால் அது தவிர்க்கப்பட்டதே தவிர, எம்பெருமானுக்கு ஆகாதது எதுவுமே இல்லை" என்று விடை அளித்தார்.[1]

[448]

வராஹ கல்பம் பாராநிற்கச் செய்தே 'ஸ்ரீவராஹநாயனார்க்கு முத்தக் காசை அமுது செய்விப்பது' என்று கிடந்ததாய், "இதென்ன மெய்ப்பாடுதான்!" என்று நஞ்சீயர் போர வித்₄ஹராய் அருளினார்.

(*திருவாய்மொழி 1-6-1 ஈடு வியாக்கியானம்*)

நிகழிடம்

எம்பெருமான், ஆராதனைக்கு எளியன் என்பதைத் தெரிவிக்கின்ற ஆழ்வார் "புரிவதுவும் புகை பூவே (எம்பெருமானுக்கு ஸமர்ப்பிப்பதும் ஏதேனும் ஒரு புகையும்(தூபமும்) ஏதேனும் ஒரு பூவும்) என்று அருளிச் செய்கிறார். இதேபோல் திருமங்கையாழ்வார் "கள்ளார் துழாயும் கணவலரும் கூவிளையும், முள்ளார் முளரியும் ஆம்பலும் முன் கண்டக்கால், புள்ளாய் ஓர் ஏனமாய் புக்கிடந்தாற்கு"

1. பட்டர் இவ்வாறு அருளிச்செய்தமை இருபத்துநாலாயிரப்படி உரையிலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

என்று திருமங்கையாழ்வார் அருளியுள்ள பாசுரத்தை மேற்கோளாக எடுத்து இங்கே விளக்குகின்ற உரையாசிரியர், மிக உயர்ந்த பொருள்களே வேண்டும் என்றால், எம்பெருமான் பரமபதத்திலேயே இருந்திருக்கமாட்டானோ? (வராகமாக அவதரித்தது தன்னுடைய எளிமையை வெளிப்படுத்துவதற்காக அன்றோ!) என்று கூறி, இத்தொடர்பில் நஞ்சீயர் அருளிச்செய்த **வார்த்தை** ஒன்றையும் எடுத்துக் காட்டுகிறார்.

விளக்கம்

எண் 41ன் விளக்கம் பார்க்க.

[449]

(அமுதிலும் ஆற்ற இனியன்) நம்பி திருவழுதிநாடு தாஸர் "இத்தேவ ஜாதி வெறும் மரையோ? உப்புச்சாறு கிளறுவது எப்போதோ என்று கவிழ்ந்து பார்த்துக் கிடப்பதே, இவன் அழகையும் போக்யதையையும் விட்டு" என்பராம்.

(திருவாய்மொழி 1-6-6 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

துர்வாச முனிவருடைய சாபத்தால் அனைத்துச் செல்வங்களையும் இழந்த இந்திரன் எம்பெருமானை வேண்ட, அவர்களுக்கு இழந்த செல்வங்களை மீட்டுத் தருவதற்காகவும் சாவாமருந்தாகிய அமுதத்தைக் கொடுப்பதற்காகவும் பாற்கடலைக் கடைந்த அவ்வெம்பெருமானை நம்மாழ்வார் "அமுதிலும் ஆற்ற இனியன்" (அமுதத்தைக் காட்டிலும் மிகவும் இனியவன்) என்கிறார். இதுகுறித்து நம்பிதிருவழுதிவளநாடு தாஸர் அருளிச்செய்த **வார்த்தை** *எடுத்துக்காட்டப் பெறுகிறது.*

விளக்கம்

நம்பி திருவழுதி நாடுதாஸர் *"அமுதத்தைக் காட்டிலும் மிக இனியவனான இவனுடைய அழகையும் இனிமையையும் அனுபவிப்பதை விட்டு, இத்தேவர்கள் தலையைக் கவிழ்த்துக் கொண்டு உப்புச்சாறு எப்போது வரும் என்று கடலையே பார்த்துக் கொண்டிருக்கிறார்களே! இவர்கள் வெறும் மரையோ?" என்றருளிச் செய்வராம்! (மரை = எப்போதும் தலையை கவிழ்த்துக் கொண்டே இருக்கும் (பசுமாடு போன்ற) மிருகம். மரை = கவயம். காட்டுப்பசு என்பர்.)*

[450]

(மாதவன் இத்யாதி) தீதும் அவமும் ஏதமும் என்று மூன்றாய், இம்மூன்றையும் ப்ரதிபாத்யனுக்கும் வக்தாவுக்கும், ப்ரபந்தத்துக்குமாக்கி இவை

1. "பிள்ளை திருவழுதிநாடுதாஸர் வார்த்தை" என்று மட்டும் இருபத்து நாலாயிரப்படியில் உள்ளது.

இல்லாமையைச் சொல்லுகிறது என்று நிர்வஹிப்பாருமுண்டு. பட்டர் அங்ஙனன்றிக்கே, "ஏதமிலாயிரம் என்று ப்ரப$_3$ந்த$_4$லக்ஷணம் சொன்னபோதே த்ரிவித$_4$ தோ$_3$ஷராஹித்யமும் சொல்லிற்றாம். இனி, தீதும் அவமுமாவது செய்வதென் என்னில் 'சடகோபன் மாதவன் பால் தீது அவமின்றி உரைத்த' என்றாகக் கடவது" - என்றருளிச் செய்தார். அதாவது - தீதாவது - 'நான் ஶ்ரிய:பதி அல்லேனோ' என்று தன் மேன்மையைப் பார்த்துக் கடக்க இருக்குமது; அவமாவது 'ஆஶ்ரயிக்கிறவன் நித்ய ஸம்ஸாரியன்றோ' என்று இவன் சிறுமையைப் பார்த்துக் கைவிடுமது; இவையில்லாமையைச் சொன்ன இப்பத்து என்றபடி.

(திருவாய்மொழி 1-6-11 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

எம்பெருமான் ஆராதனைக்கு எளியன் என்பது பற்றி ஒரு பதிகம் அருளிச் செய்த நம்மாழ்வார் கடைசிப் பாசுரத்தில்,

> *மாதவன்பால் சடகோபன் தீதவமின்றியுரைத்த*
> *ஏதமிலாயிரத்திப்பத்து ஓதவல்லார் பிறவாரே*

என்றருளிச் செய்கிறார். தீது அவம் இன்றி உரைத்த ஏதமில் ஆயிரத்திப்பத்து என்ற சொற்றொடைகளுக்கு இரு **நிர்வாஹங்கள்** *காட்டப்படுகின்றன.*

விளக்கம்

இங்கு தீது, அவம், ஏதம் என்று மூன்று சொற்கள் உள்ளன. மூன்றுக்கும் குற்றம் என்பதே பொருள். இதனால் மூன்று குற்றங்கள் இல்லாமை சொல்லப்படுகிறது. கவி பாடுகிற தமக்கும், பாடப்பெறுகிற எம்பெருமானுக்கும் பாடப்பட்ட கவிகளுக்கும் ஒரு தீங்கும் இல்லாத ஆயிரம் (திருவாய்மொழி) என்று சிலர் பொருளுரைத்தனர்![1] இதற்கு 'தீது இன்றியிருக்கிற மாதவன்பால், அவம் இன்றியிருக்கிற சடகோபன் உரைத்த, ஏதம் இல்லாத ஆயிரம்' என்று அந்வயமாகும். அங்ஙனம் அல்லாமல் பட்டர் "ஏதமில் ஆயிரம் என்று இப்பிரபந்தத்தைக் குற்றமற்றதாகச் சொன்னபோதே கவிபாடுகிறவர், பாடப்பெறுபவர் ஆகிய இருவர்க்கும் குற்றமில்லை என்பது தானே பெறப்பட்டுவிடும். எனவே அவற்றைத் தனியாகச் சொல்ல வேண்டா. ஆனால் தீது அவம் இன்றி என்பதற்கு என்ன பொருள் என்னில் "மாதவன் பால் தீது அவம் இன்றி உரைத்த' = எம்பெருமானுக்கு இரண்டு வகையான குற்றம் ஏற்படலாம். 'நான் ச்ரியப்பதி அல்லேனோ!' என்று தன்னுடைய மேன்மையைப் பார்த்து அடியவர்களைக் கைவிடலாம். 'நீங்கள் நித்யஸம்ஸாரிகள் அல்லவா!' என்று அடியவர்களுடைய தாழ்வைப் பார்த்துக் கைவிடலாம். ஆனால் மாதவன்

1. பிள்ளான் அருளிச் செய்த ஆறாயிரப்படி வியாக்யானத்தில் இவ்விளக்கம் மட்டுமே காணப்படுகிறது.

பால் இவ்விரண்டு குற்றங்களும் இல்லை. (அவன் மிகவும் எளியன்) என்று சொன்ன இப்பத்து" என்று பொருளுரைத்தார்.[1] இதற்கு, 'சடகோபன், மாதவன்பால் தீதும் அவமும் இன்றி உரைத்த' என்று அந்வயமாகும்.

[451]

(அவரால் புடையுண்ணும்) - "ம(ர)த்தாலே ஓரடி அடிப்பர்கள் போலே காணும்!" என்று பட்டர் அருளிச் செய்யும்படி.

(திருவாய்மொழி 1-7-3 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

கண்ணபிரான் வெண்ணெய்க் களவு செய்து அகப்பட்டுக் கட்டுண்டு அடியுண்டதை அனுபவிக்கும் நம்மாழ்வார் "ஆயர் கொழுந்தாய் அவரால் புடையுண்ணும் மாயப்பிரான்" என்றருளிச் செய்கிறார். இதுகுறித்து பட்டர் அருளிச்செய்த **வார்த்தை** *ஒன்று எடுத்துக்காட்டப்பெறுகிறது.*

விளக்கம்

இங்கு அவனால் என்றோ அவளால் என்றோ ஒருமையில் கூறாமல் 'அவரால் புடையுண்ணும்' என்று பன்மையில் கூறியுள்ளமையால் திருவாய்ப்பாடியில் உள்ள ஆண்களும் பெண்களுமான அனைவருமே (இவ்வளவு வெண்ணெய் தின்றால் இவன் உடம்புக்கு ஆகுமோ என்ற பரிவினால்) கண்ணனை அடிப்பார்கள் என்று விளக்கிய உரையாசிரியர் பட்டர் கூறிய சுவைமிகு வார்த்தை ஒன்றையும் எடுத்துக் காட்டுகிறார். "திருவாய்ப்பாடியில் உள்ளவர்கள் எல்லோரும் கண்ணனை மத்தாலே ஓரடி அடிப்பார்கள் போலும்!" என்பராம் பட்டர்.

[452]

(பின்னை யான் ஒட்டுவேனோ) என் இசைவின்றிக்கே இருக்க அவனாலே போகப்போமோ! அன்றியே 'நான் தொங்குவேனோ" என்று பிள்ளான் பணிக்கும்படி.

(திருவாய்மொழி 1-7-6 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

"என்னுள் இரான் எனில் யான் ஒட்டுவேனோ" என்றருளிச் செய்கிறார் ஆழ்வார். இதுபற்றி இரண்டு **நிர்வாஹங்கள்** *காட்டப்பெறுகின்றன.*

1. ஒன்பதினாயிரப்படி, பன்னீராயிரப்படி, இருபத்துநாலாயிரப்படி ஆகிய உரைகளில் இவ்விரண்டு நிர்வாஹங்களும் காட்டப்பெறுகின்றன.

விளக்கம்

'தன்னுடைய அழகால் என்னைத் தோற்பித்து என்னை அடிமை கொண்ட எம்பெருமான் என்னுள் இரான் எனில் நான் அவனை விட ஒட்டுவேனோ (இசைவேனோ)' என்கிறார் ஆழ்வார் என்று விளக்கம் அளித்த உரையாசிரியர், "அழகைக் காட்டி என்னை அடிமை கொண்டு, பிறகு என்னுள் இரான் எனில் பிறகு நான் தரித்து (உயிருடன்) இருப்பேனோ? என்கிறார் ஆழ்வார்"[1] என்று **பிள்ளான்** *அருளிச்செய்த விளக்கத்தையும் எடுத்துக் காட்டுகிறார்.*

[453]

(ஊன் ஒட்டி நின்று என் உயிரில் கலந்து) "ஶரீரத்தைப் பற்றி நிற்கிற என் உயிரிலே கலந்து என்கிறார்" என்பாரும் உண்டு. அன்றிக்கே "அபி$_4$மத விஷயத்தில் அழுக்கு உகப்பாரைப் போல என்னுடைய ஶரீரத்தைப் பற்றி நின்று, பின்னை என் பக்கலிலே விலக்காமை பெற்றவாறே என் ஆத்மாவோடே வந்து கலந்தான்" என்று சீயர் அருளிச் செய்யும்படி.

(திருவாய்மொழி 1-7-7 ஈடு வியாக்கியானம்)

நிகழ்டம்

"ஊன் ஒட்டி நின்று என் உயிரில் கலந்து" என்ற ஆழ்வார் அருளிச் செயலுக்கு இரண்டு **நிர்வாஹங்கள்** *காட்டப்பெறுகின்றன.*

விளக்கம்

(இங்கு, 'நின்று' என்றுள்ள சொல்லை 'நின்ற' என்று கொண்டு) **ஊன்** *ஒட்டி நிற்கின்ற உயிரிலே கலந்தான் எம்பெருமான் என்கிறார் ஆழ்வார் என்று (ஊன் ஒட்டி நின்ற என்பதை உயிருக்கு அடைமொழியாகக் கொண்டு) சிலர் பொருள் கூறுவர்.*[2] *அங்ஙன் அல்லாமல்* **நஞ்சீயர்** *"தன் மனதிற்கு இனியவளுடைய உடலில் இருக்கும் அழுக்கையும் ஒருவன் விரும்புவது போல, என்னுடைய உடலைப்பற்றி நின்றான்; நான் அதை விலக்காமல் இருப்பதைக் கண்டவாறே, பின்பு என் உயிரோடு வந்து கலந்தான் என்கிறார் ஆழ்வார்" என்று பொருளுரைத்தார். (ஊன் ஒட்டி நின்று, உயிரில் கலந்து என்ற இரண்டுமே எம்பெருமான் செய்த செயலைக் குறிக்கும் என்பது நஞ்சீயர் கருத்தாகும்.)*[3]

1. இக்கருத்தை ஆச்சான் என்பவர் அருளிச் செய்ததாக இருபத்து நாலாயிரப்படியில் குறிப்பிடப் பட்டுள்ளது. மேலும் பிள்ளான் அருளிய ஆறாயிரப்படியில் "......என்னை விடுவேன் என்றால் நான் அவனை விடவொட்டுவேனோ என்கிறார்" என்று முதல் நிர்வாஹமே காணப்படுகிறது. பிள்ளான் அருளிச்செய்ததாக ஈட்டில் காட்டப்பட்ட நிர்வாஹம் பிள்ளான் உரையில் இடம்பெறவில்லை.

2. இக்கருத்தையே பிள்ளான் தமது ஆறாயிரப்படியில் அருளிச் செய்கிறார்..

3. நஞ்சீயர் கூறியதாக எடுத்துக் காட்டப்படும் இக்கருத்து நஞ்சீயர் அருளிச் செய்த ஒன்பதினாயிரப் படியிலும் உள்ளது. இருபத்துநாலாயிரப்படியிலும் இக்கருத்தே உரைக்கப்படுகிறது.

[454]

இத்திருவாய்மொழிதான் ஸர்வேப்ர்வரனுடைய ஐப்ர்வர்யத்தைச் சொல்லுகிறது என்பாரும் உண்டு; அன்றிக்கே ஈப்ர்வரத்வலக்ஷணம் சொல்லுகிறது என்பாரும் உண்டு; அன்றிக்கே கீழே "பாடி இளைப்பிலம்" என்றார்; அப்படியே பாடி அனுப$_4$விக்கிறார் என்பரும் உண்டு. ஆர்ஜவகு$_3$ணம் சொல்லுகிறது என்று பட்டர் அருளிச் செய்யும்படி.

(திருவாய்மொழி 1-8 ஈடு வியாக்கியான ப்ரவேசம்)

நிகழிடம்

*"ஓடும்புள்ளேறி" என்று தொடங்கும் திருவாய்மொழியில் கூறப்படும் கருத்து பற்றிச் சில **நிர்வாஹங்கள்** கூறப்பெறுகின்றன.*

விளக்கம்

"ஓடும் புள்ளேறி" என்று தொடங்கும் இத்திருவாய்மொழியில் (இடம்பெற்றுள்ள 'கண்ணாவான் என்று மண்ணோர் விண்ணோர்க்கு" என்பது முதலான பாசுரங்களை நோக்கி), எம்பெருமானுடைய ஸர்வேச்வரத்வமாகிற பரத்வத்தைக் கூறுகிறது என்பர் சிலர்.[1] 'ஓடும் புள்ளேறி' 'சங்கு சக்கரம் அங்கையில் கொண்டான்' முதலான பாசுரங்களை நோக்கி, எம்பெருமானுடைய இலக்கணம் சொல்கிறது என்பர் சிலர். கீழே 'பாடி இளைப்பிலம்' என்ற ஆழ்வார் 'அம்மான் சீர் கற்பன் வைகலே' என்று இத்திருவாய்மொழியில் அருளிச் செய்துள்ளமையால், பாடி அனுபவிக்கிறார் என்பர் சிலர். 'புள்ளேறி ஓடும்' 'தண்டுழாய் சூடும்', 'நீர்புரை வண்ணன்' முதலானவற்றை நோக்கி, எம்பெருமானுடைய ஆர்ஜவகுணம் (செப்பம்) இத் திருவாய்மொழியில் கூறப்படுகிறது என்று பட்டர் அருளிச் செய்வர். (நீர் ஏறாத மேடுகளில் விரகாலே நீர் ஏற்றுவது போல, தன்னை அனுபவிப்பவர்களுக்கு ஈடாகத் தன்னை அமைத்துக் கொண்டு அவர்களோடு கலந்து பரிமாறும் குணம் இப்பதிகத்தில் சொல்லப்படுகிறது என்பது பட்டர் கருத்தாகும்.)[2]

[455]

(கைகலந்துண்டான்) கள்ளன் என்று சிலுகிட்டவாறே அவர்கள் தங்களோடே கலந்து அமுது செய்தானென்னுதல். "ஓரிளம்பனும் சதிரனும் களவு கண்டார்கள்" என்ற பட்டர் கதையை ஸ்மரிப்பது.

(திருவாய்மொழி 1-8-5 இருபத்து நாலாயிரப்படி வியாக்கியானம்)

1. இக்கருத்தைப் பிள்ளான் தமது ஆறாயிரப்படியில் அருளிச் செய்துள்ளார்.
2. இக்கருத்து மட்டுமே ஒன்பதினாயிரப்படியிலும், இருபத்து நாலாயிரப்படியிலும் காட்டப்படுகிறது.

நிகழ்டம்

“வைகலும் வெண்ணெய் கை கலந்துண்டான்” என்று ஆழ்வார் அருளிச் செய்துள்ளார். இங்கு ‘கைகலந்து உண்டான்’ என்றுள்ளதைக் கருத்தில் கொண்டு பட்டர் அருளிச்செய்த ஒரு **கதை** கூறப்பெறுகிறது.

விளக்கம்

கண்ணன் வெண்ணெய் களவாடுவதைக் கண்டு விட்ட அவனுடைய தோழர்கள் ‘கள்ளன் கள்ளன்’ என்று கூக்குரலிட்டவாறே அவர்களையும் தன்னுடன் சேர்த்துக் கொண்டு அவர்களுக்கும் தான் களவு செய்த வெண்ணெயில் பங்கு கொடுத்து அவர்களோடு கைகலந்து உண்டான் என்று இதை விளக்கிய உரையாசிரியர், ஓர் இளிம்பனும் சதிரனும் களவுகண்டார்கள் என்ற கதையை இங்கு பட்டர் அருளிச் செய்வர் என்றும் நினைவு கூறுகிறார். அதாவது இளிம்பனும் (இளிச்சவாயன் - சாமர்த்தியமில்லாதவன்) சதிரனும் (=சதுரன்; சாமர்த்யம் உடையவன்) சேர்ந்து களவு கண்ட கதை என்றபடி. களவுகண்டவன் மிகவும் சாமர்த்தியமாக இளிச்ச வாயன் தலையில் பழியைப் போட்டுவிட்டுத் தப்பித்தான் என்று ஒருகதையை பட்டர் அருளிச்செய்திருப்பார் என்று தோன்றுகிறது. களவு செய்த வெண்ணெயைக் கண்ணன் தன் தோழர்களுடன் உண்டு கொண்டிருக்கையில், வெண்ணெய்க்கு சொந்தக்காரர்கள் வந்து விடவே, தன் தோழர்களுக்குத் தெரியாமல் கண்ணன் ஓடிவிட, ஏமாந்தவர்களான தோழர்கள் கையும் வெண்ணெயுமாக அகப்பட்டுக் கொண்டார்கள் என்பது பட்டர் கூறிய கதை போலும்.[1]

[456]

(ஆளும் உலகமும் மூன்றே)………கீழோடே சேர, “படுக்கைப்பற்று” என்பர் பட்டர்.

(திருவாய்மொழி 1-9-4 இருபத்து நாலாயிரப்படி வியாக்கியானம்)

நிகழ்டம்

உடனமர் காதல் மகளிர் திருமகள் மண்மகள் ஆயர்
மடமகள் என்றிவர் மூவர்; ஆளும் உலகமும் மூன்றே

என்றருளிச் செய்கிறார் நம்மாழ்வார். எம்பெருமானோடு எப்போதும் கூடியிருக்கின்ற தேவிமார்கள் ஸ்ரீமஹாலக்ஷ்மி, பூமிப்பிராட்டி, நப்பின்னைப்பிராட்டி என்று மூவர்; அவனால் ஆளப்படுகின்ற உலகங்களும்

1. பட்டர் இங்கு ஒரு கதை அருளிச் செய்தார் என்பது இருபத்து நாலாயிரப்படி உரையில் மட்டுமே உள்ளது. ஈடு முப்பத்தாறாயிரப்படியில் இக்கதையின் பிரஸ்தாபமே இல்லை. இருபத்து நாலாயிரப்படியிலும் பட்டர் அருளிச் செய்த கதை என்ன என்பது விளக்கப்படவில்லை.

மூன்றே என்பது பொருள். இது குறித்து பட்டர் அருளிச்செய்த **வார்த்தை** எடுத்துக் காட்டப்பெறுகிறது.

விளக்கம்

எம்பெருமானுடைய தேவிமார்களைக் கூறி, உடனே அவனால் ஆளப்படுகின்ற உலகங்களைக் கூறியபடியால் அவ்வுலகங்களைப் "படுக்கைப் பற்று" என்பர் பட்டர். (படுக்கைப்பற்று என்பது ஸ்த்ரீதனத்தைக் குறிக்கும். அதாவது ஒரு பெண்ணுக்குத் திருமணம் செய்விக்கும்போது அவளது பெற்றோரால் அவளுக்குச் சீதனமாகக் கொடுக்கப்படும் செல்வத்தை ஸ்த்ரீதனம் என்பர். கல்யாணத்தின் போது மணமகளது பெற்றோரால் அவளுக்கு வழங்கப்படுகிற நிலம், மஞ்சள் காணி என்று வழங்கப்படும். இதுவே படுக்கைப்பற்று எனப்படும்.)[1]

[457]

(தாளிணைமேலும் புனைந்த தண்ணந்துழாயுடை அம்மான்) தோளிணை இத்யாதி$_{8}$களுக்கு பட்டர், "வீரராயிருப்பார் முற்பட ஆயுத$_{4}$த்துக்கு இடுவர்கள்; அப்படியே திருத்தோள்களுக்கு இட்டான். ப்ரணயிகளாயிருப்பார் அங்கரம் அபி$_{4}$மத விஷயத்துக்கு இடுவர்கள். அப்படியே பெரிய பிராட்டியார் எழுந்தருளியிருக்கிற கோயில் கட்டணத்துக்குக் கொடுத்தான். ஆயுத$_{4}$த்துக்கும் அபி$_{4}$மத விஷயத்துக்கும் கொடுத்தால் பின்னைத் தாந்தாம் விநியோகம் கொள்ளும் இத்தனையிறே. ஆகையாலே தான் சூடினான். ஶேஷம் பின்னை அடியாரிறே கைக் கொள்ளுவார். ஆகையாலே திருவடிகளுக்குச் சாத்தினான். ஆபத்துக்கு உதவுவார் அடியாரிறே. தளர்ந்தும் முறிந்தும் சகடவசுரர் உடல் வேறாய் பிளந்து வீயப் பொருவார் அடியாரிறே. நம்முடைய ஆபத்துக்களுக்குத் திருவடிகளே துணையானாற்போலே காணும் அவனுடைய ஆபத்துக்களுக்கும் திருவடிகளே துணையானபடி" என்று அருளிச் செய்வர்.

(திருவாய்மொழி 1-9-7 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

தோளிணை மேலும் நன்மார்வின் மேலும் சுடர்முடி மேலும்
தாளிணை மேலும் புனைந்த தண்ணந்துழாயுடையம்மான்

(திருத்தோள்களிலும், திருமார்பிலும், திருமுடியிலும் திருவடிகளிலும் அணிந்த திருத்துழாயை உடைய எம்பெருமான்) என்றருளிச் செய்கிறார் ஆழ்வார். இங்கு தோளிணை, மார்வு, சுடர்முடி, தாளிணை என்று கூறப்பட்டுள்ள வரிசைக் கிரமத்தைக் கருத்தில் கொண்டு பட்டர் அருளிச்செய்த **நிர்வாஹம்** கூறப்படுகிறது.

1. இப்படி பட்டர் அருளிச்செய்தமை இருபத்துநாலாயிரப்படியில் மட்டுமே குறிப்பிடப்பெற்றுளது.

விளக்கம்

"(தோளிணை மேலும்) வீரர்களாக இருப்பவர்கள் முதலில் தங்கள் ஆயுதத்திற்கு அலங்காரம் செய்வர்கள். எம்பெருமானும் அதனால் முதலில் சங்கு சக்ராயுதங்களைத் தாங்குகின்ற திருத்தோள்களுக்குத் திருத்துழாய் மாலையை அணிவித்தான். (நன் மார்வின் மேலும்) காதலுடையவர்கள் பிறகு தமது காதலிக்கு இடுவர்கள். எனவே எம்பெருமானும் பிறகு தனது பிராட்டி எழுந்தருளியிருக்கும் கோயில் கட்டணமான (அந்தப்புரமான) திருமார்விற்குத் திருத்துழாய் மாலையை அணிவித்தான்; (சுடர் முடி மேலும்) ஆயுதத்திற்கும், காதலிக்கும் கொடுத்த பின்னர் தாங்கள் அணிந்து கொள்வார்கள் அன்றோ! ஆகையாலே தன் திருமுடி மேலே சூடினான். (தாளிணைமேலும்) மிகுந்திருப்பதை அடியார்களன்றோ கைக் கொள்ளுவார். எனவே மிகுந்த திருத்துழாயைத் திருவடிகளுக்கு அணிவித்தான். திருவடிகள் அடியாரோ என்னில், ஆபத்துக்கு உதவுபவர்கள் அடியவர்கள் அன்றோ! எம்பெருமானுக்கு ஆபத்து வந்தபோது அவனுக்கு உதவிய திருவடிகளை அடியார்கள் என்றே சொல்லலாம். கண்ணபிரானாக அவதரித்திருந்த போது அவனைக் கொல்வதற்காக வண்டியில் ஆவேசித்திருந்த சகடாசுரனைத் தளர்ந்தும் முறிந்தும் உடல் வேறாகப் பிளந்து வீயும்படி செய்தது திருவடிகளே அன்றோ! நம்முடைய ஆபத்துக்களுக்கு எம்பெருமானுடைய திருவடிகளே துணையாவது போல, அவனுடைய ஆபத்துக்களுக்கும் திருவடிகளே துணை" - என்று பட்டர் அருளிச் செய்வர்.

[458]

(கேள் இணை ஒன்றும் இலாதான்) "'கேள்' என்றத்தைக் கேழாக்கி அத்தாலும் ஒப்பாய், 'இணை' என்றும் ஒப்பைச் சொல்லுகிறதாய், திரளவும் ஒப்பில்லை; ஒரு வகையாலும் ஒப்பைச் சொல்லப் போகாது" என்பர்கள். "'கேள்' என்று உறவாய், 'இணை' என்று சேர்த்தியாய், ஸர்வதா ஸாத்ருஶ்யம் சொல்லலாவது ஒன்றில்லை" என்பர் பட்டர்.

(திருவாய்மொழி 1-9-7 இருபத்து நாலாயிரப்படி வியாக்கியானம்)

நிகழிடம்

"கேள் இணை ஒன்றும் இலாதான்" என்ற ஆழ்வார் அருளிச் செயலுக்கு இருவகை **நிர்வாஹங்கள்** *காட்டப் படுகின்றன.*

விளக்கம்

'கேள்' என்பதைக் கேழ் என்று கொண்டு ஒப்பு (உவமை) என்று பொருள் கொள்ளலாம். 'இணை' என்றாலும் உவமை. ஆக, இரண்டு வகையால் எம்பெருமான் உவமை இல்லாதவன். அதாவது மொத்தமாகவும் ஒரு

உவமையில்லாதவன். தனித்தனியே ஒவ்வொரு அம்சத்திற்கும் உவமை இல்லாதவன்; (எம்பெருமானுடைய திருமேனிக்குப் பச்சைமாமலை, திருக்கண்களுக்கு தாமரை என்று தனித்தனியே உவமை கூறினாலும் அவை எம்பெருமானுடைய அவ்வவயவங்களுக்கும் தனித்தனியே கூட உவமானம் ஆகமாட்டா. ஆழ்வாரும் 'கட்டுரைக்கில் தாமரை நின் கண் பாதம் கை ஒவ்வா சுட்டுரைத்த நன் பொன் உன் திருமேனி ஒளி ஒவ்வாது' (திருவாய்மொழி 3-1-2) என்றருளிச் செய்வது காண்க. இப்படித் தனித்தனியே உவமை இல்லாதது மட்டுமல்ல, முழுமையாகவும் எம்பெருமானுக்கு உவமையாகச் சொல்லக் கூடியது எதுவும் இல்லை.) இது சிலர் கூறிய பொருள்.

இங்கு 'கேள்' என்ற சொல்லைக் 'கேழ்' என்று ஆக்கியன்றோ இப்பொருள் கொள்ள வேண்டியிருக்கிறது! அப்படிச் சொல்லைச் சிதைக்காமலே பொருள் கொள்ளலாம் என்று பட்டர் *வேறு பொருள் உரைத்தார். கேள் - என்றால் உறவு; அதாவது பொருத்தம்; இணையென்று - ஒப்பு. ஆக, கேள் இணை (கேளான இணை) ஒன்றிலாதான்; தனக்குப் பொருத்தமான (தகுந்த) உவமை இல்லாதவன் - என்பது பட்டர் உரைத்த பொருள்.*[1]

[459]

"கீழில் திருவாய்மொழியில் பிறந்த ஸர்வாங்க$_3$ஸம்ஶ்லேஷத்தை அநுஸந்தி$_4$த்து நிர்வ்ருதராகிறார்" என்று முன்புள்ள முதலிகள் நிர்வஹிக்கும்படி. அதாவது நிர்வ்ருதி என்று ஸுக$_2$மாய், ஸுகி$_2$க்கிறார் என்றபடி. கீழ்ப்பிறந்த ஸர்வாங்க$_3$ஸம்ஶ்லேஷத்தை அநுஸந்தி$_4$த்து, பட்டர் அருளிச் செய்வதோர் ஏற்றம் உண்டு. அதாவது - ..,.............. "'நித்யஸூரிகள் பேற்றை, அநாதி$_4$காலம் ஸம்ஸரித்துப் போந்த நமக்குத் தந்தான். ஒரு விஷயீகாரம் இருக்கும்படியென்!' என்று கீழில் திருவாய்மொழியில் உந்மஸ்தகமாகப் பிறந்த ஸம்ஶ்லேஷ ரஸத்தை அநுஸந்தி$_4$த்து நிர்வ்ருதராகிறார்" - என்று.

(திருவாய்மொழி 1-10 ஈடு வியாக்கியான ப்ரவேசம்)

நிகழ்டம்

இதற்கு முன்னர் அருளிச்செய்த 'இவையுமவையும்' என்ற திருவாய்மொழியில் எம்பெருமான் தம்முடைய அவயவங்கள் தோறும் கலந்த கலவியை ஆழ்வார் அருளிச் செய்தார். இத்திருவாய்மொழியில் நமக்குள்ள அளவில்லாத ஆனந்தத்தை அருளிச் செய்கிறார் ஆழ்வார். இந்த ஆனந்தத்திற்கு காரணம் என்ன என்பது பற்றி இரண்டு **நிர்வாஹங்கள்** *காட்டப்பெறுகின்றன.*

1. பட்டர் அருளிச்செய்த விளக்கமும் ஈடு வியாக்கியானத்தில் குறிப்பிடப் பெற்றிருந்தாலும் அவ்விளக்கத்தை பட்டர் அருளிச்செய்தார் என்று குறிப்பிடப்படவில்லை.

விளக்கம்

'இவையுமவையும்' என்ற கீழ்த் திருவாய்மொழியில் எம்பெருமான் தம்மோடு கலந்த கலவியால் பிறந்த அளவில்லாத ஆனந்தத்தை அருளிச் செய்கிறார் ஆழ்வார் என்று முன்புள்ள முதலிகள் அருளிச் செய்வர்.

ஆனால், பட்டர் ஒரு சிறப்பான விளக்கத்தை அருளிச் செய்கிறார். "ஆழ்வார் கீழ்த் திருவாய்மொழியில் தமக்குக் கிடைத்த பேற்றை ஆராய்ந்து பார்த்தார்; 'இப்போது நமக்குக் கிடைத்த பேறோ மிகவும் உயர்ந்தது. நித்யஸூரிகளுக்குக் கிடைக்கக் கூடிய இப்பேற்றை (எம்பெருமானோடு கலவியை) நெடுங்காலம் இவ்வுலக வாழ்க்கையிலேயே உழன்று திரிகிற நமக்குக் கொடுத்திருக்கிறானே! இப்படி நம்மிடத்தில் அருள் புரிவதற்கு நம்மிடம் ஒரு தகுதியும் இல்லையே! இப்பேற்றிற்குத் தகுதியாக இருப்பதொரு நன்மையும் நம்மிடத்தில் இல்லாமல் இருக்கச் செய்தேயும் நமக்கு இப்படி அருள் புரிந்தது அவனுடைய நிர்ஹேதுக கிருபையினால் (ஒரு காரணமும் பற்றாத திருவருளினால்) அன்றோ! என்று கீழ்த் திருவாய்மொழியில் பிறந்த கலவியால் உண்டான சுவையை நினைத்து இன்புறுகிறார் - என்பது பட்டர் தரும் விளக்கம்!

(கீழ்த் திருவாய்மொழியில் பிறந்த கலவியின்பத்தை நினைத்து மகிழ்கிறார் என்பது மற்ற ஆசார்யர்கள் கூறிய விளக்கத்திற்கும் பட்டர் கூறியவிளக்கத்திற்கும் பொதுவாக இருந்தாலும், 'ஒரு காரணமும் பற்றாத திருவருளாலேயே இக்கலவியைத் தந்தான்' என்று அதையும் கூட்டிச் சுவைப்பது பட்டர் விளக்கத்தின் சிறப்பு ஆகும். கீழ்ப்பிறந்த கலவிக்கு காரணமாக யாதொன்றையும் இத்திருவாய்மொழியில் ஆழ்வார் கூறாததை நோக்கி பட்டர் இங்ஙனம் அருளிச் செய்தார்.)

[460]

(என்னினி வேண்டுவம்) வேல் வெட்டி நம்பியார் நம்பிள்ளையை, "பெருமாள் கடலை ஶரணம் புகுகிறவிடத்தில் ப்ராங்முகத்வாதி₂ நியமங்களோடே ஶரணம் புக்காராயிருந்தது. இவ்வுபாயம் இதர ஸாத₄னங்கள் போலே சில நியமங்கள்(ளை) வேண்டியிருக்கிறதோ?" என்று கேட்க, - "பெருமாள்தமக்கு 'समुद्रं राघवो राजा शरणं गन्तुमर्हति' (ஸமுத்₃ரம் ராக₄வோ ராஜா ஶரணம் க₃ந்தும் அர்ஹதி) என்று உபதே₃ஶித்தான் ஸ்ரீவிபீ₄ஷணாழ்வான். அவன்தான் பெருமாளை ஶரணம் புகுகிற இடத்தில் கடலிலே ஒரு முழுக்கிட்டு வந்தான் என்றில்லை; ஆக, இத்தால் சொல்லிற்றாயிற்று என்னென்னில், பெருமாள் இக்ஷ்வாகு வம்ஶ்யராய், ஆசாரப்ரத₄ானராகையாலே சில நியமங்களோடே ஶரணம்புக்கார்; ராக்ஷஸ

1. பட்டர் அருளிசெய்தமை இருபத்துநாலாயிரப்படியிலும் குறிப்பிடப்பெறுகிறது.

ஜாதீயனாகையாலே அவன், நின்ற நிலையிலே ஶரணம் புக்கான். ஆகையாலே யோக்₃யனுக்கு அயோக்₃யதை ஸம்பாதி₃க்க வேண்டா; அயோக்₃யனுக்கு யோக்₃யதை ஸம்பாதி₃க்க வேண்டா; ஆகையாலே ஸர்வாதி₄காரம் இவ்வுபாயம்" என்று அருளிச் செய்தார்.

(திருவாய்மொழி 1-10-2 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

"எண்ணிலும் வரும் என்னினி வேண்டுவம்" என்று ஆழ்வார் அருளிச் செய்கிறார். எண்ணினாலும் போதும், எம்பெருமான் வந்து நிற்பானானபின்பு இனி நமக்கு என்ன வேண்டும் என்கிறார் ஆழ்வார் என்று இதற்குப் பொருளுரைத்த உரையாசிரியர், அவன் நம்மிடம் விலக்காமை ஒன்றையே எதிர்பார்க்கிறான் என்றும் அதைத்தவிர வேறு தகுதிகள் எவையும் தேவையில்லை என்றும் விளக்கி, இத்தொடர்பில் ஓர் **ஐதிஹ்யம்** காட்டுகிறார்.

விளக்கம்

எண் 199ன் விளக்கம் பார்க்க.[1]

[461]

(நெஞ்சமே சொன்னேன்) திருக்கோட்டியூர் நம்பியைப் போலே பிறர் அறியலாகாது பகவத்விஷயம் என்றுபோலே காணும் இவர் இருப்பது.

(திருவாய்மொழி 1-10-6 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

"நீயும் நானும் இந்நேர் நிற்கில், மேல் மற்றோர் நோயும் சார்கொடான் நெஞ்சமே சொன்னேன்" (நெஞ்சமே! நீயும் நானுமாக இந்நிலையில் நின்றால் எம்பெருமான் வேறொரு துன்பமும் அணுக வொட்டான்) என்று ஆழ்வார் அருளிச்செய்கிறார். இங்கு ஆழ்வார் தம் நெஞ்சிடம் கூறியதற்குத் திருக்கோட்டியூர் நம்பியை **உதாரணம்** காட்டுகிறார் உரையாசிரியர்.

விளக்கம்

பகவத்விஷயம் மிக உயர்ந்தது ஆகையால் **திருக்கோட்டியூர் நம்பி**, ஒருவரும் அறியாதவண்ணம் தம் நெஞ்சுக்குள் அனுஸந்தித்துக்கொண்டிருப்பார்.[2] அதுபோல ஆழ்வாரும் பிறர் அறியாதவண்ணம் இப்போது தம் நெஞ்சுக்கு மட்டும் கூறுகிறார் என்று உரையாசிரியர் கூறுகின்றார்.

1. இருபத்து நாலாயிரப்படியில் "வேல்வெட்டிப் பிள்ளை இதிஹாஸம்" என்றிவ்வளவே யுள்ளது.
2. திருக்கோட்டியூர் நம்பியைப் பற்றி எண் 145ல் குறிப்பிடப்பெற்றுள்ளது காண்க.

[462]

ஆழ்வான் 'நம்பியே' என்று ஸ்வரத:, "இவனையே பூர்ணன் என்பது?" என்பர்.

(திருவாய்மொழி 1-10-8 இருபத்து நாலாயிரப்படி)

நிகழிடம்

"நல்கி என்னை விடான் நம்பி நம்பியே" என்கிறார் ஆழ்வார். "நான் அவனை விட்டொழிய வேண்டுமென்று நினைத்தாலும், என்னை அவன் நம்பி, என்னை விடாமலிருக்கிறான்" என்றருளிச் செய்கிறார் ஆழ்வார். இங்கு, 'நம்பியே' என்ற சொல்லால் எம்பெருமானைக் குறிக்கின்றார் ஆழ்வார். நம்பி என்ற சொல்லுக்கு எல்லாவிதத்தாலும் பூர்த்தி (முழுமை) பெற்றவன் - பூர்ணன் - என்பது பொருள். என்னை விடான் நம்பியே - ஒருவிதத்தாலும் பூர்த்தியில்லாத என்னைப் பூர்ணனான தான் விடாமல் இருக்கிறானே என்று (தேற்றத்து ஏகாரமாகக் கொண்டு) பொருள் அருளிச் செய்த உரையாசிரியர், கூரத்தாழ்வான் அருளிச்செய்த **நிர்வாஹம்** *ஒன்றையும் காட்டுகிறார்.*

விளக்கம்

'நம்பியே' என்று ஸ்வரத்தின் வேறுபாட்டினால் (ஒலி வேறுபாட்டினால்), "ஒரு விதத்தாலும் பூர்த்தியில்லாத என்னைப் பெற்றதால் மகிழ்கிற இவனையோ நம்பி என்பது!" என்கிறார் ஆழ்வார் என்று (பிரிநிலை ஏகாரமாகக் கொண்டு) **கூரத்தாழ்வான்** *பொருளுரைப்பாராம். (நம்பியே?= நம்பியோ? நம்பி அல்லன் என்று பொருள் கொள்ளப்பட்டது.)[1]*

[463]

(தோற்றோம் இத்யாதி) கீழும் மேலும் போருகிறபடியொழிய, ஶப்₃த₃ ஸ்வாரஸ்யத்தைப் பற்ற எம்பெருமானார் அருளிச்செய்து போருவது ஒன்று உண்டு. அம்மங்கியம்மாளும் அத்தையே நிர்ப்ப₃ந்தி₄த்துப் போரும். அதாகிறது - தான் பிரிவாற்றாதார் அனேகர் கூடக் கட்டிக் கொண்டு கூப்பிடாநிற்க, இருள் வந்து முகத்தை மறைக்க, அத்தைப் பார்த்து 'ஆற்றாமைக்குப் போக்குவிட்டு த₄ரிக்க வொட்டாதே நீ வந்து, நலியக் கடவையோ?' என்கிறாள்.

(திருவாய்மொழி 2-1-7 ஈடு வியாக்கியானம்)

1. கூரத்தாழ்வான் அருளிச்செய்த பொருளும் ஈடுவியாக்கியானத்தில் குறிப்பிடப்பெற்றிருந்தாலும் அப்பொருளை அருளிச்செய்தவர் கூரத்தாழ்வான் என்பது அங்கு குறிப்பிடப்படவில்லை.

நிகழிடம்

எம்பெருமானோடு கூடி அவனை அனுபவிக்க வேண்டும் என்று ஆசைப்பட்ட நம்மாழ்வார், அது கிட்டாமையினால் வருந்துகிறார். தம் கண் முன்னே காண்கின்ற பொருள்களுக்குண்டான சில தன்மைகளை அவற்றின் இயற்கையான தன்மைகளாகக் கருதாது. அவையும் தம்மைப்போலவே எம்பெருமானைப் பிரிந்த வருத்தத்தினாலேயே நோவு படுகின்றனவாகக் கருதி நாயகி பாவத்தில் பாசுரம் அருளிச் செய்கிறார். கண்முன்னே ஒரு நாரை புலப்பட, அதன் உடலில் இயற்கையாக உள்ள வெண்மையைக் கண்டு அதுவும் தம்மைப் போல் பிரிவாற்றாமையினாலேயே, உடல் வெளுத்திருப்பதாக நினைத்து 'நாராய்! ஐயோ! நீயும் பகவானை அனுபவிக்க ஆசைப்பட்டு இப்படியானாயோ?' என்று கேட்கிறார். இது போலவே தழதழத்த குரலையுடைய அன்றில், இரவுபகல் உறங்காத கடல், இருந்தவிடத்தில் இருக்க மாட்டாத வாடைக்காற்று, நீர் சொரிகின்ற மேகம், ஒரு கலையேயாய்த் தேய்ந்த சந்திரன் இவைகளைக் கண்டும் இப்படியே அருளிச் செய்கிறார். அடுத்ததாக இப்பாசுரத்தில் ஒளிமழுங்கிக் கிடக்கும் இருளைப் பார்த்து அருளிச் செய்கிறார். முன் பாசுரங்களில் போலவே இப்பாசுரத்திலும் இருளுக்கு இயற்கையான தன்மையான ஒளி மழுங்கி இருத்தலைக் கண்டு, எம்பெருமானைப் பிரிந்த வருத்தத்தினாலேயே அது அப்படியிருக்கிறது என்று ஆழ்வார் கருதுகிறார் என்று பொருள் கொள்ளலாம். ஆனால் முன்பின் பாசுரங்களில் கூறப்பட்ட பொருளுக்குப் பொருந்தாதாயினும் இப்பாசுரத்தில் உள்ள சில சொற்களின் சுவையைக் கருதி எம்பெருமானார் அருளிச்செய்த வேறொரு **நிர்வாஹம்** காட்டப்பெறுகிறது.

விளக்கம்

'நீ நடுவே வேற்றோர் வகையில் கொடிதாய் மாற்றாண்மை நிற்றியோ' (நீ நடுவில் நுழைந்து பகைவர்களைக் காட்டிலும் கொடிதாய்) என்று இருளைக் குறித்து இப்பாசுரத்தில் உள்ள சொற்களைக் கருத்தில் கொண்டு **எம்பெருமானார்** அருளிச்செய்த விளக்கமாவது: எம்பெருமானைப் பிரிந்த வருத்தத்தினால் துன்புறுகின்ற பலர் ஒருவரை ஒருவர் கட்டிக் கொண்டு கதறிக் கொண்டிருக்கையில் திண்ணிய இருளானது வந்து அவர்களது முகத்தை மறைக்க, அவ்விருளைப் பார்த்து "இருளே! ஒருவரை ஒருவர் கட்டிக் கொண்டு கதறி எங்கள் துன்பத்தை ஒருவாறு ஆற்றிக் கொள்ளலாம் என்று பார்த்தால் அதையும் கெடுப்பது போல நீ நடுவில் வந்து ஒருவரை ஒருவர் பார்க்கவொட்டாமல் எங்கள் முகத்தை மறைக்கின்றாயே! பகைவர்களைக் காட்டிலும் கொடிதாய், எங்களுக்குப் பகைவனாய் நின்று எங்களைத் துன்புறுத்துகிறாயே! இப்படியும் ஒரு கொடுமை உண்டோ!" என்கிறாள் - என்று.

எம்பெருமானார் அருளிச் செய்த இந்த விளக்கத்தையே, அவருடைய சீடரான **அம்மங்கியம்மாள்** வற்புறுத்திக் கூறுவராம்.

[464]

"கீழே 'மூவா முதல்வா' என்று காரணத்வம் ப்ரஸ்துதமாகையாலே அந்தக் காரணத்வத்தை உபபாதிக்கிறார்" என்று பணிக்கும் பிள்ளான்.

(திருவாய்மொழி 2-2 ஈடு வியாக்கியான ப்ரவேசம்)

நிகழ்டம்

'திண்ணன் வீடு' என்று தொடங்கும் இத்திருவாய்மொழியில் ஆழ்வார் எம்பெருமானுடைய பரத்வத்தை நிலைநாட்டுகிறார் என்று அருளிச் செய்த உரையாசிரியர், பிள்ளான் அருளிச் செய்த **நிர்வாஹம்** *ஒன்றையும் காட்டுகிறார்.*

விளக்கம்

இதற்கு முன்னர் அருளிச்செய்த திருவாய்மொழியில் 'மூவாமுதல்வா' (2-1-10) என்று ஆழ்வார் எம்பெருமானுடைய காரணத்வத்தை (எல்லாவற்றிற்கும் காரணமாக இருக்கும் தன்மையை) அருளிச்செய்துள்ளபடியால், இத்திருவாய்மொழியில் அக்காரணத்வத்தையே நிலைநாட்டுகிறார் என்று **பிள்ளான்** *விளக்கியருளினார்.*

[465]

"ப்ரஹ்மாதிகள் எப்போதும் திருமேனியைப் பற்றியிருப்பர்களோ?" என்று நஞ்சியர் பட்டரைக் கேட்க, "ஓரோ ஆபத்துக்களிலே திருமேனியிலே இடங் கொடுக்கிறான். அந்நீர்மையை விடமாட்டாமையாலே ஆழ்வார்கள் அத்தையே வாய்புலற்றுகிறார்கள் அத்தனையிறே" என்றருளிச் செய்தார்.

(திருவாய்மொழி 2-2-3 ஈடு வியாக்கியானம்)

நிகழ்டம்

"ஏறனைப் பூவனைப் பூமகள் தன்னை வேறின்றி விண் தொழத் தன்னுள் வைத்து" (சிவனையும், பிரமனையும், ஸ்ரீமஹாலக்ஷ்மியையும் வேற்றுமை இல்லாமல் தனது திருமேனியில் விண்ணவர் தொழும்படியாக இடங்கொடுத்து வைக்கிறான் எம்பெருமான்) என்கிறார் நம்மாழ்வார். இத் தொடர்பில் ஒரு **ஸம்வாதம்** *காட்டப்பெறுகிறது.*

விளக்கம்

"பிரம்மா முதலானவர்கள் எப்பொழுதும் எம்பெருமானுடைய திருமேனியிலேயே இருப்பார்களோ?" என்று **நஞ்சீயர்** *பட்டரைக் கேட்டார். அதற்கு* **பட்டர்** *"அவர்களுக்கு பிரளயம் முதலானவற்றால் ஆபத்துக்கள் ஏற்படும் காலத்தில் அவர்களைக் காப்பதற்காகத் தன்னுடைய திருமேனியிலே*

எம்பெருமான் இடம் கொடுக்கிறான். பிராட்டிக்குத் தன் திருமேனியில் இடம் கொடுத்த எம்பெருமான், அவளைப்போல் உயர்ந்தவர்களன்றிக்கே, மிகவும் தாழ்ந்தவர்களான பிரமனுக்கும் சிவனுக்கும் தன் திருமேனியில் ஒக்க இடம் கொடுத்த இந்த எளிமையிலே மிகவும் ஈடுபட்ட ஆழ்வார்கள் அதையே அடிக்கடி கூறுகிறார்கள்" என்றருளிச் செய்தார்.[1]

[466]

(தேனும் பாலும் இத்யாதி) இதுக்கு ஆளவந்தார் அருளிச் செய்தாராகத் திருமாலையாண்டான் பணிக்கும்படி - "ஏகஜாதீயத்₂ரவ்யங்கள் தன்னிலே கலந்தாற் போலே" என்று. அதாவது தேனும் தேனும் கலந்தாற் போலவும், பாலும் பாலும் கலந்தாற் போலவும், நெய்யும் நெய்யும் கலந்தாற் போலவும், கன்னலும் கன்னலும் கலந்தாற் போலவும் என்று. அங்ஙனன்றியே எம்பெருமானார் அருளிச் செய்யும்படி - இவற்றை ரஸவத் பதா₃ர்த்த₂ங்களுக்கு எல்லாம் உபலக்ஷணமாக்கி, 'தானும் நானும் கலந்த கலவிக்குள்ளே எல்லா ரஸங்களும் பிறக்கும்படி ஸம்ஶ்லேஷித்தோம்' என்கிறார் - என்று.

(திருவாய்மொழி 2-3-1 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

தானும் யானு மெல்லாம் தன்னுள்ளே கலந்தொழிந்தோம்
தேனும் பாலும் நெய்யும் கன்னலும் அமுதுமொத்தே

(எம்பெருமானாகிய அவனும் நானும் தனக்குள்ளே எல்லா இனிமையுமாம்படி தேனும், பாலும், நெய்யும் கன்னலும், அமுதும் ஒன்று சேர்ந்தாற் போல் கலந்து விட்டோம்) என்றருளிச் செய்கிறார் ஆழ்வார். இதற்கு ஆளவந்தார், எம்பெருமானார் ஆகிய இருவரும் கூறிய **நிர்வாஹங்கள்** *எடுத்துக் காட்டப்பெறுகின்றன.*

1. "........ இப்படிப் பின்னை ஸர்வகாலமும் இவர்கள் இருப்பார்களோ என்னில் - ஆபத்துக்களிலே திருமேனியிலே இடங்கொடுக்கும். அது மஹாகுணமாகையாலே ஆழ்வார்கள் எப்போதுமொக்க அருளிச் செய்து கொண்டு போருவர்கள். ஸாமந்தர்க்குப் புறம்பே நாடுகள் கனக்க உண்டாகிலும் மாளிகைக்குள்ளே செம்பாலே நாழியரிசியைத் தங்களுக்கு வரிசையாக நினைத்திருப்பர்களிறே. அப்படியே இவர்களும் திருமேனியில் பண்ணி வைக்கும் ப்ராப்தி விடார்களிறே. ஓரோ கலகங்களிலே அடையவளைந்தானுக்குள்ளே குடிவாங்கியிருந்து, காலம் தெளிந்தவாறே புறம்பே புறப்பட்டாலும், 'இவ்விடம் இன்னார் பற்று, இவ்விடம் இன்னார் பற்று' என்று பின்னும் ப்ராப்தி சொல்லி வைக்குமாபோலே" என்று 1-3-10 பாசுரத்தின் ஈடு உரையில் அருளிச் செய்யப்பட்டுள்ளது இங்கு ஒப்பு நோக்கத் தக்கது.

விளக்கம்

ஆளவந்தார் *அருளிச் செய்த பொருளாகத்* **திருமாலையாண்டான்** *கூறிய விளக்கமாவது: "ஒரே சுவையுடைய பொருள்கள் ஒன்றோடொன்று கலப்பது போல நாங்கள் இருவரும் கலந்தோம் என்கிறார் ஆழ்வார். அதாவது தேனும் தேனும் கலந்தது போலவும், பாலும் பாலும் கலந்தது போலவும், நெய்யும் நெய்யும் கலந்தது போலவும், கன்னலும் கன்னலும் கலந்தது போலவும், அமுதும் அமுதும் கலந்தது போலவும் நானும் எம்பெருமானும் கலந்தோம் என்கிறார் ஆழ்வார்" - என்று.* **எம்பெருமானார்**, *"இங்கு தேன், பால், நெய், கன்னல், அமுது என்றுள்ள சொற்கள், சுவையுள்ள மற்றெல்லாப் பொருள்களையும் (உபலக்ஷணத்தால்) குறிப்பதாகக் கொண்டு, 'அவனும் நானும் கலந்த கலவிக்குள்ளே எல்லாச் சுவைகளும் பிறக்கும்படி கலந்தோம்' என்கிறார் ஆழ்வார்" விளக்கம் உரைத்தார்!*

[467]

இப்பாட்டு ப்ரஸ்துதமான வளவிலே, எம்பார் கோஷ்டியிலே "இவ்வாத்மாவுக்கு ப்ரத₂மகு₃ரு ஆர்?" என்று பிறந்ததாய், இருந்த முதலிகளிற் சிலர் "ஆசார்யன் அன்றோ!" என்றார்கள். சிலர் "'ஆசார்யன் ஶ்ரீபாத₃த்திலே ஆஶ்ரயிக்கப் போரு' என்று அழைத்துக் கொண்டு போய்ச் சேர விட்ட ஶ்ரீவைஷ்ணவன் ப்ரதமகுரு" என்றார்கள். "அங்ஙனன்று காண்; அவன் இவனை அழைத்தாலும் இவன் அல்லேன் என்னாதபடி 'இசைவித்து என்னை' என்கிறபடியே அகவாயிலே இருந்து இசைவித்த ஸர்வேஶ்வரன் காண் ப்ரத₂மகு₃ரு" என்று அருளிச் செய்தார்.

(திருவாய்மொழி 2-3-2 ஈடு வியாக்கியானம்)

நிகழ்டம்

'ஊனில் வாழ் உயிரே நல்லை போ' என்று கீழ்ப் பாசுரத்தில், எம்பெருமானைப் பற்றுவதற்கு இசைந்த தம் நெஞ்சைக் கொண்டாடினார் ஆழ்வார். சிறிது ஆராய்ந்து பார்த்தவாறே அந்த நெஞ்சை அப்படி இசைவித்ததும் எம்பெருமானே ஆகையால், அந்த எம்பெருமானை அன்றோ கொண்டாடவேண்டும் என்று இப்பாசுரத்தில் 'ஒத்தார் மிக்காரை இலையாய மாமாயா' என்று ஆழ்வார் எம்பெருமானைக் கொண்டாடுகிறார். இத் தொடர்பில் ஒரு **ஸம்வாதம்** *எடுத்துக் காட்டப்படுகிறது.*

விளக்கம்

இப்பாட்டு வந்தவளவில் **எம்பார்** *கோஷ்டியில் "இவ்வாத்மாவுக்கு முதல் குரு யார்?" என்ற கேள்வி பிறந்தது. சிலர் "ஆசார்யனே முதல் குரு" என்றனர். வேறு சிலர் "இல்லை, இல்லை; 'ஆசார்யன் திருவடிகளைப் பற்று' என்று கூறி அவரிடம்*

1. இந்நிர்வாஹங்கள் இருபத்துநாலாயிரப்படியிலும் குறிப்பிடப்பெறுகின்றன.

அழைத்துக் கொண்டு போய்ச் சேரவிட்ட அடியார்களே முதல் குரு" என்றார்கள். 'அதுவும் சரியன்று. அவ்வடியவன் இவனை அழைத்தாலும் இவன் அதற்கு இசையாமல் 'நான் வர மாட்டேன்' என்று கூறி விடலாமல்லவா? அப்படி இவன் மறுக்காமல், "இசைவித்தென்னை உன் தாளிணைக் கீழ் இருத்தும் அம்மானே!" (திருவாய்மொழி 5-8-9) என்று ஆழ்வாரே அருளிச் செய்துள்ளபடி இவனை இசைவித்தது எம்பெருமானுடைய செயலே அல்லவா? எனவே எம்பெருமானே முதல் குரு" என்று எம்பார் அருளிச் செய்தார்!

[468]

ஆளவந்தார் அருளிச் செய்ததாகத் திருமாலையாண்டான் பணிக்கும்படி - "அறிவு நடையாடாத த₃ஶையிலே ஸம்ப₃ந்த₄ஜ்ஞானத்தை அழிக்கக் கடவதான தே₃ஹஸம்ப₃ந்த₄த்தோடே பின்னையும் வைத்தாய் என்கிற இழவாலே சொல்லுகிறார்" என்றாம். இத்தை எம்பெருமானார் கேட்டருளி, "முன்னிற் பாட்டுக்களும் பின்னிற் பாட்டுக்களும் ப்ரீதியோடே நடவாநிற்க நடுவே அப்ரீதி தோற்றச் சொல்லுமது சேராது. ஆனபின்பு இங்ஙனேயாமித்தனை, 'அறியாமாமாயத்து அடியேனை அறியாக்காலத்துள்ளே அடிமைக்கண் அன்பு செய்வித்து வைத்தாயால்' என்கிறார்" என்று இத்தையும் ஒரு உபகாரமாக்கி அருளிச் செய்தார்.

(திருவாய்மொழி 2-3-3 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

"அறியாக் காலத்துள்ளே அடிமைக் கண் அன்பு செய்வித்து, அறியா மாமாயத்து அடியேனை வைத்தாயால்" என்று ஆழ்வார் அருளிச்செய்துள்ளார். இதற்கு ஆளவந்தார், எம்பெருமானார் ஆகிய இருவரும் அருளிச்செய்த **நிர்வாஹங்கள்** *கூறப்பெறுகின்றன.*

விளக்கம்

ஆளவந்தார் அருளிச் செய்த பொருளாகத் திருமாலையாண்டான் கூறியதாவது: "அறிவு நடையாடாத சிறு பிராயத்திலேயே அடியேனுக்கு மெய்யறிவைத் தந்து உனக்குத் தொண்டு செய்வதில் விருப்பத்தை உண்டாக்கி, பின்னர் அந்த மெய்யறிவை அழிக்கக் கடவதான இந்த உடலோடு என்னைச் சேர்த்து வைத்தாயே!" என்று வருத்தத்தோடு ஆழ்வார் அருளிச் செய்கிறார் - என்று. பாசுரத்தில் உள்ள சொற்களை உள்ளபடியே அந்வயித்து (சொற்களைக் கூட்டி) திருமாலை ஆண்டான் அருளிச் செய்த இப்பொருளைக் கேட்ட எம்பெருமானார், "இத்திருவாய்மொழியில் (இப்பதிகத்தில்) ஆழ்வார்

1. "எம்பார் கோஷ்டியில் இதிஹாஸம்" என்று மட்டும் இருபத்துநாலாயிரப்படியில் உள்ளது.

இப்பாசுரத்திற்கு முன் அருளிச் செய்த பாசுரங்களிலும், இப்பாசுரத்திற்குப் பின் அருளிச்செய்த பாசுரங்களிலும் தம்முடைய மகிழ்ச்சியையே வெளியிட்டிருக் கிறார். (இதற்கு முன் பாசுரத்தில் 'அறியாதன அறிவித்த அத்தா' என்றும், இதற்கடுத்த பாசுரத்தில் 'எனதாவியுள் கலந்த பெருநல்லுதவி' என்றும் எம்பெருமான் தமக்குச் செய்துள்ள உபகாரங்களை மகிழ்ச்சியுடன் கொண்டாடி யுள்ளார் ஆழ்வார்.) எனவே நடுவேயுள்ள இப்பாசுரத்தில் மட்டும் ஆழ்வார் வருத்தத்தோடு அருளிச் செய்கிறார் என்று கூறுவது பொருந்தாது. (எனவே பாசுரத்தில் உள்ள சொற்களை மாற்றி அன்வயித்து) "அறியா மாமாயத்து அடியேனை (அறிவு கேட்டை விளைக்கும் ஸம்ஸாரத்திலே உழல்கின்ற என்னை) அறியாக் காலத்துள்ளே அடிமைக்கண் அன்பு செய்வித்தாய்! (அறிவு நடையாடாத இளம் பருவத்திலேயே அடிமை செய்வதில் அன்புடையவனாக ஆகும்படி செய்தாயே!)" என்று இதையும் எம்பெருமான் செய்த உபகாரமாக ஆழ்வார் மகிழ்ச்சியுடன் கூறுகிறார்" என்று பொருள் கூறினார். ('ஆல்' என்ற அசைநிலையை வருத்தப்பொருளில் ஆளவந்தார் அருளிச்செய்தார். எம்பெருமானார் அதையே மகிழ்ச்சிப்பொருளில் அருளிச்செய்தார்.)

[469]

(மல்கி) மிக்கு. किमर्थं तव नेत्राभ्यां वारि स्रवति शोकजम् (கிமர்த்த₂ம் தவ நேத்ராப்₄யாம் வாரி ஸ்ரவதி ஶோகஜம்) "ஆநந்த₃ாஶ்ருவுக்கு யோக்₃யமான கண்களாலே சோகாஶ்ரு ப்ரவஹிக்கிறது ஆர்குடி வேர?" என்று பட்டர் அருளிச் செய்யும்படி. அன்றிக்கே பிள்ளான் "ஆரைச் சேதநராகக் கொண்டு?" என்று பணிக்கும்.

(திருவாய்மொழி 2-4-1 ஈடு வியாக்கியானம்)

நிகழ்டம்

ஆழ்வார் தாமான தன்மையை இழந்து ஒரு நாயகியின் நிலையை அடைந்து எம்பெருமானையே நினைத்துப்படுகின்ற வேதனையை அந்த நாயகியின் தாயார் வர்ணிப்பதாகவுள்ள பாசுரம் "ஆடியாடி அகம் கரைந்து இசை பாடிப்பாடிக் கண்ணீர்மல்கி" - என்பது. இங்கு நம்மாழ்வாராகிற நாயகி கண்ணீர் மல்கி நிற்கின்ற நிலையை, இராவணனுடைய அசோகவனத்தில் சீதைப்பிராட்டி கண்ணீர் மல்கி நின்ற நிலையோடு ஒப்பிட்டு, அங்கு சீதைப்பிராட்டியைக் கண்ட அனுமன் கூறிய வார்த்தைகள் இங்கு எடுத்துக் காட்டி விளக்கப்படுகின்றன.

கிமர்த்தம் தவ நேத்ராப்யாம் வாரிஸ்ரவதி சோகஜம்
புண்டரீக பலாசாப்யாம் விப்ரகீர்ணமிவோதகம். (ஸ்ரீரா.ஸு. 33-4)

(வெண் தாமரை இதழ்களில் படிந்த தண்ணீர் உருண்டோடுவது போல, ஆனந்தக் கண்ணீருக்குத் தகுந்த உம்முடைய கண்களிலிருந்து சோகக் கண்ணீர் பெருகுவது

எதற்காக?) என்று சீதையைப் பார்த்துக் கேட்கிறான் அனுமன். இதற்கு இரண்டுவிதமான **நிர்வாஹங்கள்** எடுத்துக் காட்டப்பெறுகின்றன.

விளக்கம்

"ஆனந்தக் கண்ணீர் பெருகுவதற்குத் தகுதியான கண்களிலே சோகக் கண்ணீரைப் பெருக்குவது யாருடைய குடியை வேரோடு அழிப்பதற்கு? (ராவணனுடைய குடியை அழிப்பதற்கா அல்லது அரக்கர்கள் எல்லோர் குடியையுமே அழிப்பதற்கா?)" என்று அனுமன் கேட்பதாக **பட்டர்** உரைத்தார். ஒரு பதிவ்ரதை சிந்தும் கண்ணீர் அந்நாட்டையே அழிக்க வல்லதாதலின், சீதைப் பிராட்டி சிந்தும் கண்ணீர் யாரை அழிப்பதற்குச் சிந்தப்படுகிறது என்ற கருத்தில் பட்டர் இவ்வாறு உரைத்தார். (அதுபோலப் பராங்குசநாயகியும் பகவத்விபூதி அழியும்படியாகக் கண்ணீர் பெருக்குகின்றாளே என்று தாயார் துடிப்பதாகக் கருத்து.)

ஆனால் **பிள்ளான்**, இந்த சுலோகத்தின் பின்பகுதியில் உள்ள வரிகளை அதாவது 'வெண் தாமரை இதழ்களில் படிந்த தண்ணீர் பெருகுவது போல' என்றுள்ளதைக் - கருத்தில் கொண்டு, "இப்படிக் கண்ணீர் பெருக்குகின்ற நிலையிலும் வெளிப்படுகின்ற இவ்வழகை யார் அனுபவிப்பதற்காகக் கண்ணீர் பெருக்குகிறது? (இந்த அழகை அனுபவிக்க வேண்டிய இராமபிரான் கூட இங்கில்லையே!)" என்கிறான் அனுமன் என்று பொருளுரைத்தார்.

[470]

(எங்கும் நாடி நாடி) "தன் கொய்சகம் உட்படப் பாரா நின்றாள்" என்று பட்டர் அருளிச்செய்யும்படி. அதுக்குக் கருத்து, 'கண்ணன் என் ஒக்கலையானே' என்று அவன் இருந்த ப்ரதே₃ஶமாகையாலே.

(திருவாய்மொழி 2-4-1 ஈடு வியாக்கியானம்)

நிகழ்டம்

நாயகி நிலையை அடைந்த ஆழ்வார் எம்பெருமானையே எங்கும் தேடுகிறார். "எங்கும் நாடி நாடி" என்றுள்ள சொற்களை விளக்கிய பட்டர் அருளிச்செய்த **வார்த்தை** எடுத்துக் காட்டப்பெறுகிறது.

விளக்கம்

"பராங்குச நாயகி எம்பெருமானை எல்லாவிடத்திலும் தேடினாள். தன்னுடைய கொய்சகம் (முந்தானையின் முடிச்சு) உட்படத் தேடினாள்" என்று **பட்டர்** அருளிச் செய்தாராம். எம்பெருமான் இவளுடைய முந்தானையில் இருப்பனோ எனில், முன்பே ஆழ்வார், 'கண்ணன் என் ஒக்கலையானே' (கண்ணபிரான் என் இடுப்பில் உள்ளான்) என்று (1-9-4)ல் கூறியிருப்பதால்

இப்போது அங்கே தேடினார் போலும்! பெண்களின் இடுப்பிலன்றோ முந்தானையின் முடிச்சு சொருகப்பட்டிருக்கும்!

[471]

'அரக்கும் மெழுகும்' என்கிற இரண்டையும் நெஞ்சுக்கு ஒன்றும், இவள் தனக்கு ஒன்றும் ஆக்கி நிர்வஹிப்பர் பிள்ளை திருநறையூர் அரையர். நெஞ்சும் இவள் தனக்குக் கையடைப்பாகையாலே இவள் தனக்கே இரண்டையுமாக்கி அருளிச் செய்வர் பட்டர்.

(திருவாய்மொழி 2-4-3 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

நாயகி நிலையையடைந்த ஆழ்வாருடைய தன்மையைக் கூறுகின்ற திருத்தாயார், "இரக்கம் மனத்தோடு எரியணை அரக்கும் மெழுகும் ஒக்கும் இவள்" (நெகிழ்ந்த நெஞ்சோடு கூடிய இவள் நெருப்போடு சேர்ந்த அரக்கையும் மெழுகையும் போன்றிருக்கிறாள்) என்கிறாள். இதற்கு இரண்டு **நிர்வாஹங்கள்** *கூறப்பெறுகின்றன.*

விளக்கம்

'பராங்குசநாயகியின் நெஞ்சு அரக்கு போன்றிருக்கிறது; பராங்குச நாயகி மெழுகைப் போல் இருக்கிறாள்' என்று **பிள்ளை திருநறையூர் அரையர்** *பொருளுரைத்தார். ஆனால்* **பட்டர்**, *'இவளுடைய நெஞ்சு இவளுக்குள்ளே அடங்கியதாதலால் அதைத் தனியாகச் சொல்ல வேண்டியதில்லை; இவள் ஒருவகையில் அரக்கைப் போலிருக்கிறாள், மற்றொரு வகையில் மெழுகைப் போலிருக்கிறாள்' என்று இரண்டையும் அவளுக்கே ஆக்கி அருளிச் செய்தார். அரக்கு உருகுவதை விட மெழுகு அதிகமாக உருகும். எனவே சில சமயங்களில் அரக்கு போலவும் மற்றுஞ் சில சமயங்களில் மெழுகு போலவும் உருகுவது என்பது பட்டர் கருத்தாகும்.*

[472]

(தவள வண்ணர் தகவுகளே) "ஶுத்₄த₄ஸ்வபாவரான உம்முடைய தகவுகள் எங்கே போயிற்றின?" என்று எம்பார் அருளிச் செய்யும்படி. அன்றிக்கே பட்டர் "உம்மைப் போலே நாலு ஶிஷ்டர்கள் அமையுமிறே அபலைகள் குடி கெட" என்றார்.

(திருவாய்மொழி 2-4-5 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

தாமான தன்மையை இழந்து நாயகி நிலையை அடைந்த ஆழ்வார் எம்பெருமானுடைய திருநாமத்தையே இரவும் பகலும் வாய் வெருவிக் கண்ணீர் பெருக்குவதைக் கண்ட தாயார் 'இப்படி இவள் வருத்தமுற்றிருக்கும்போதும் இவளைத் தேற்றும் வகையில் நீர் திருத்துழாயைக் கொடுத்திலீர். என தவள வண்ணர் தகவுகளே!' என்று எம்பெருமானைக் குறித்துக் கூறுகிறாள். இதுகுறித்து இரண்டு **நிர்வாஹங்கள்** காட்டப் பெறுகின்றன.

விளக்கம்

இங்குள்ள என என்ற சொல்லை விளக்கிய **எம்பார்**, 'என்னென்பின, எங்கே போய்விட்டன?' என்று தாயார் கேட்பதாக விளக்கமளித்தார். அதாவது, முன்பு பரிசுத்தமான தன்மையுடையவருமாய், கருணை உள்ளவருமாய் இருந்தநீர், இப்போது பரிசுத்தத் தன்மையையும் இழந்து கருணையற்றவருமாகி விட்டீரே! உம்முடைய கருணை முதலிய குணங்கள் என - எங்கே போய் விட்டன? என்று தாயார் எம்பெருமானைக் கேட்பதாக எம்பார் பொருள் உரைத்தார்![1]

பட்டர் இதையே சுவையாக வேறுவகையில் விளக்கினார். அதாவது 'என' என்ற சொல்லை என்ன என்று கொண்டு 'என்ன தவள வண்ணர்! என்ன தகவுகள்!' என்று கொண்டு விளக்கமளித்தார். அதாவது "உம்மை நினைத்து வருந்துகிற இவளைத் தேற்றாத உமக்கு என்ன பரிசுத்தத்தன்மை! என்ன கருணை! உம்மைப் போல நான்கு நல்லவர்கள் இருந்தால் போதும் இப்படிப்பட்ட பெண்கள் அழிவதற்கு!" என்று தாயார் வெறுப்புடன் கூறுவதாக, பட்டர் பொருளுரைத்தார்.[2]

[473]

(சுடர் இத்யாதி) "உகப்பாரை அவ்வழகைக் காட்டி, அவ்வழகைக் கொண்டு அகல நின்று முடிக்கும்; உகவாதாரைக் கிட்டிநின்று அத்திருவாழியாலே அழியச் செய்து முடிக்கும்' என்பர் சீயர்.

(திருவாய்மொழி 2-4-9 இருபத்து நாலாயிரப்படி வியாக்கியானம்)

நிகழிடம்

எம்பெருமானோடு கூடப் பெறாத ஆற்றாமையினால் தளர்ந்த ஆழ்வார், தாமான தன்மையை இழந்து ஒரு நாயகியின் தன்மையை அடைந்தார். அதிலும் தம்முடைய நிலையைத் தாமே கூறவும் சக்தியற்றவராய், தாய் வாயிலாக

1. இங்கு எம்பார் கூறியதாகவுள்ள கருத்து, இருபத்துநாலாயிரப்படியில் பிள்ளான் கூறியதாக உள்ளது.

2. "நாட்டிலே இப்படி ருஜுக்களுமாய், பரது:க்க அஸஹிஷ்ணுக்களுமாய் இருப்பார் சில தார்மிகர் நடையாட, அபலைகளுக்கு அழகிதாக ஜீவிக்கலாம் என்பர் பட்டர்" என்பது இருபத்து நாலாயிரப்படி உரை

வெளியிடுவதாக அமைந்துள்ளது 'ஆடி ஆடி' என்று தொடங்கும் இப்பதிகம். பராங்குசநாயகியின் தாயார் எம்பெருமானை நோக்கி 'எல்லோருடைய துன்பத்தையும் போக்கும் இயல்வினரான நீர் இப்பெண்பிள்ளை துன்புறுவதைப் பார்த்திருப்பது தகுதியோ? இவள் திறத்தில் நீர் செய்ய நினைத்திருப்பது என்ன?" என்று கேட்பதாக அமைந்துள்ள இப்பாசுரத்தில் "சுடர் வட்டவாய்நுதிநேமியீர்" என்று தாயார் எம்பெருமானை விளித்ததன் சொல் நயத்திற்கு நஞ்சீயர் அருளிச்செய்த **நிர்வாஹம்** *காட்டப்பெறுகிறது.*

விளக்கம்

தன்னிடம் மிகவும் ஈடுபட்டவர்களுக்குக் கையும் திருவாழியுமான அழகைக் காட்டுவன் எம்பெருமான். அவ்வழகிலே மயங்கி அவனை அனுபவிக்க வேணும் என்று ஆசைப்படும்போது, அவர்களுக்குக் கிட்ட அரியவனாய் அகன்று போய் விடுவான். அந்த வருத்தத்தினால் அவர்கள் முடிவதற்கு அதுவே காரணமாகிவிடும். ஆனால் தன்னை உகவாத விரோதிகள் இருக்குமிடத்திற்குச் சென்று அதே திருவாழியை ஆயுதமாகப் பிரயோகித்து, அவ்விரோதிகளை அழித்து விடுவான். ஆக, திருவாழியானது அழகாலே அடியவர்களை முடிக்கின்றது; ஆயுதமாக நின்று விரோதிகளையும் முடிக்கின்றது என்று நஞ்சீயர் அருளிச்செய்வர்![1]

[474]

"அடியார்கள் குழாங்களை - உடன்கூடுவது என்று கொலோ" என்று இவர் ஆசைப்பட்டபடியே நித்யஸூரிகளோடே வந்து கலந்தான்" என்று ஆளவந்தார் அருளிச் செய்தாராகத் திருமாலையாண்டான் பணிக்கும்படி அங்ஙனன்றிக்கே எம்பெருமானார் அருளிச் செய்யும்படி "இவரோடு ஸம்ஶ்லேஷிப்பதற்கு முன்பு அவனோடு ஒக்க இவையும் அநுஜ்ஜ்வலமாய் அஸத்ஸமமாய், இவரோடு கலந்தபின்பு உஜ்ஜ்வலமாய் ஸத்தை பெற்றபடி சொல்லுகிறது" என்று.

(திருவாய்மொழி 2-5-1 ஈடு வியாக்கியானம்)

நிகழ்டம்

அந்தாமத்து அன்பு செய்து என் ஆவிசேர் அம்மானுக்கு
அந்தாம வாள் முடி சங்கு ஆழி நூலாரமுள

(பரமபதத்தில் பண்ணும் விருப்பத்தை என்னிடத்திலே பண்ணி என் ஆத்மாவில் வந்து பொருந்திய எம்பெருமானுக்கு, அழகிய மாலை, ஒளியுள்ள திருமுடி, சங்கு சக்கரங்கள், பூணூல், ஆரம் ஆகியவை உள்ளன) என்கிறார்

1. ஈடு முப்பத்தாறாயிரப்படியில் இக்கருத்து சுருக்கமாகக் கூறப்பட்டிருந்தாலும், இக்கருத்தை நஞ்சீயர் அருளிச்செய்தார் என்பது குறிப்பிடப்படவில்லை

ஆழ்வார். தன்னோடு கலந்த எம்பெருமான் ஆபரணங்களோடும் ஆயுதங்களோடும் கூடியவனாய் வந்து கலந்தான் என்று ஆழ்வார் அருளிச் செய்ததற்குக் காரணம் என்ன என்பது பற்றி ஆசார்யர்கள் இருவருடைய **நிர்வாஹங்கள்** எடுத்துக் காட்டப்படுகின்றன.

விளக்கம்

ஆளவந்தார் அருளிச் செய்த விளக்கமாகத் **திருமாலையாண்டான்** கூறியதாவது: "கீழ்த்திருவாய்மொழியில் ஆழ்வார் "அடியார்கள் குழாங்களை - உடன் கூடுவது என்றுகொலோ." (2-3-10) என்று அடியவர்களோடு கூடப்பெற வேண்டும் என்ற தன் ஆசையை வெளியிட்டார். எனவேதான் எம்பெருமானும் நித்யசூரிகளான அடியவர்களோடு (திருவாழி, திருச்சங்கு முதலிய திவ்ய ஆயுதங்களோடு) கூடினவனாய் வந்து ஆழ்வாரோடு கலந்தான்" என்பது.

இதைக் கேட்ட **எம்பெருமானார்** இப்பாசுரத்தில் உள்ள <u>அம்</u>தாமம், <u>வாள்</u>முடி...... ஆரம் <u>உள</u> என்ற சொற்களைக் கருத்தில் கொண்டு, "ஆழ்வாரோடு கலப்பதற்கு முன்பு அவனைப் போலவே அவனுடைய ஆபரணங்களும், ஆயுதங்களும் ஒளியிழந்து, வாட்ட முற்றிருந்தன. இவரோடு கலந்த பின்பே அவை ஒளி பெற்று, இருப்புப் பெற்றனவாக ஆயின. அதையே ஆழ்வார் (அழகிய மாலை, ஒளியுள்ள திருமுடி, ஆழி நூல் ஆரம்; உள-இருப்புப் பெற்றன என்று) அருளிச் செய்கிறார்" என்று விளக்கியருளினார்.

[475]

(திருவுடம்பு வான்சுடர்)....... "ஈச்வரனுக்கு விக்₂ரஹமில்லை, விபூ₄தியில்லை, என்கிறவர்கள் முன்பே ஆப்ததமரான இவர் 'திருவுடம்பு வான்சுடர்' என்னப் பெறுவதே! 'ஈச்வரனுக்கு விக்₂ரஹமில்லை, கு₃ணமில்லை' என்கிறவர்கள் பண்ணிவைக்கமாட்டாத பாபமில்லை. அவர்களை அநுவர்த்தித்து அது கேட்க இராதபடி பெருமாள் நமக்குப் பண்ணின உபகாரமென்!" என்றருளிச் செய்வர் சீயர்.

(திருவாய்மொழி 2-5-2 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

"திருவுடம்பு வான்சுடர் செந்தாமரை கண் கை கமலம்" என்று எம்பெருமானுடைய திருமேனியழகை ஆழ்வார் வருணிக்கின்றார். இத்தொடர்பில் நஞ்சீயர் அருளிச்செய்த **வார்த்தை** எடுத்துக் காட்டப்படுகிறது.

விளக்கம்

"பரம்பொருளுக்கு உருவமும் கிடையாது, உடைமைகளும் கிடையாது என்பவர்கள் முன்பு, பரம ஆப்தரான ஆழ்வார் 'திருவுடம்பு வான்சுடர்' (ஒளி

பொருந்திய திருமேனி உடையவன்) என்று அருளிச் செய்வதே!' பரம்பொருளுக்கு உருவம் கிடையாது, குணங்களும் கிடையாது என்று கூறுபவர்கள் செய்யாத பாவம் உலகில் இல்லை. அவர்களைப் பின்பற்றி, அவர்கள் கூறுவதையெல்லாம் கேட்க வேண்டாதபடி செய்து, (ஆழ்வார் திருவாக்கை அனுபவிக்கும்படியும் செய்த) எம்பெருமான் நமக்குச் செய்துள்ள உபகாரம்தான் என்னே!" என்று மிகவும் ஈடுபட்டு நஞ்சீயர் அருளிச் செய்வர்.[2]

[476]

(ஆணல்லன் இத்யாதி) நாட்டில் காண்கிற ஆண்களின் படியல்லன், அப்படியே ஸ்த்ரீகளின் படியுமல்லன், உபயோக யோக்யமல்லாத நபும்ஸக பதார்த்தத்தின் படியுமல்லன்.... இப்படி பட்டர் அருளிச் செய்தவாறே, ஒரு தமிழன் "சீயா! நாட்டில் காண்கிற மூன்றின்படியும் அல்லனாகில் சொல்லிற்றாகிறது வஸ்துஶூன்யமோ பின்னை?" என்று கேட்க, பட்டரும் "பிள்ளை! இயலறிவுக்குப் போந்திருந்ததில்லையீ! ஆணல்ல, பெண்ணல்ல, அல்லா அலியுமல்ல என்றதில்லையே! 'அல்லன்! அல்லன்! அல்லன்!' என்கையாலே புருஷோத்தமன் என்று ஶப்தந்தானே தோற்றுவிக்கிறது இல்லையோ?" என்றருளிச் செய்தார்.

(திருவாய்மொழி 2-5-10 ஈடு வியாக்கியானம்)

நிகழ்டம்

"ஆணல்லன், பெண்ணல்லன், அல்லா அலியும் அல்லன்" என்று எம்பெருமானைப் பற்றி ஆழ்வார் அருளிச் செய்கிறார். இத்தொடர்பில் ஓர் சுவையான **ஸம்வாதம்** *காட்டப்பெறுகிறது.*

விளக்கம்

இதை விளக்கியருளிய **பட்டர்**, *'எம்பெருமான், உலகில் காண்கிற ஆண்களைப் போன்றவன் அல்லன், அப்படியே பெண்களின் படியும் அல்லன், பயனற்ற அலிகளின் படியுமல்லன் என்கிறார் ஆழ்வார்' என்று கூறினார். இதைக் கேட்ட ஒரு தமிழ்ப் புலவர் "ஸ்வாமீ! உலகிலுள்ள பொருள்கள் ஆண்பாலிலோ, பெண் பாலிலோ அல்லது அஃறிணையிலோ ஏதாவதொன்றில் சேர்ந்ததாகத் தானே இருக்க வேண்டும்! இம்மூன்றின்படியுமல்லன் என்றால் பரம்பொருள் சூன்யம் (இல்லாதது) என்று சொன்னதாக அன்றோ ஆகிவிடும்?" என்று கேட்க, அதற்கு பட்டர் "புலவரே! ஆழ்வாருடைய சொல் நயத்தை நீர் அறியவில்லையே! 'அல்லன், அல்லன், அல்லன்' என்று ஆண்பாலுக்குரிய 'அன்' விகுதியை*

1. நஞ்சீயர் இப்படி அருளிச்செய்தமை இருபத்துநாலாயிரப்படியிலும் குறிப்பிடப்பெற்றுள்ளது.

2. எண் 168 பார்க்க.

இட்டன்றோ அருளிச் செய்திருக்கிறார். அப்படி ஆண்பால் விகுதியையிட்டு ஆணல்லன் என்றுமருளிச் செய்துள்ளமையால் எம்பெருமான் நாட்டில் காண்கிற ஆண்களின்படியை உடையவனல்லன், புருஷோத்தமன் என்பதை அச்சொல்லே தெரிவிக்கிறதன்றோ?" என்று விடையளித்தார்!

('குற்றியோ (தூணோ) மகனோ அவ்வுருவம்?' என்று வினாவிற்கு, 'குற்றி அல்லன்' என்று விடை கூறப்பட்டால், அந்த 'அன்' விகுதியே அவ்வுருவம் மகன் என்பதை நிச்சயிக்கும் என்று தொல்காப்பியத்தில் சொல்லதிகாரத்தில் கூறப்படுகிறது. ஆழ்வார் அருளிச்செயலை 'அலி அல்லன், பெண் அல்லன், ஆணும் அல்லன்' என்று அந்வயப்படுத்தி உம்மையைப் பிரித்துக் கூட்ட வேண்டும். 'அலி அல்லன், பெண் அல்லன்' என்றபோதே அவன் ஆண் என்பது பெறப்படுகிறது. 'ஆணும் அல்லன்' என்று ஆழ்வார் அருளிச்செய்துள்ள படியால், அவன் உலகிலுள்ள ஆண்போன்றவன் அல்லன், புருஷோத்தமன் என்பது பெறப்படுகிறது.)

[477]

"ப்ரணயிப்ரீத்யநுஸந்த₄ாநங்காண் இது" என்று ஆளவந்தார் அருளிச் செய்யும்படி.

(திருவாய்மொழி 2-6 ஈடு வியாக்கியான ப்ரவேசம்)

நிகழிடம்

'வைகுந்தா மணிவண்ணனே' என்று தொடங்கும் இத்திருவாய்மொழியின் கருத்தைப் பற்றி ஆளவந்தார் **நிர்வாஹம்** கூறப்பெறுகிறது.

விளக்கம்

"ஆடியாடி" என்று தொடங்கும் திருவாய்மொழியில் (2-4) எம்பெருமானோடு கலக்கப்பெற வேண்டும் என்று ஆழ்வார் ஆசைப்பட்டார். "அந்தாமத்தன்பு" என்று தொடங்கும் அடுத்த திருவாய்மொழியில் இவர் ஆசைப்பட்டபடியே அவன் வந்து கலந்ததைக் கூறினார். அதற்கடுத்த 'வைகுந்தா மணிவண்ணனே' என்ற இத்திருவாய்மொழியில், அப்படி அவன் தம்மோடு கலந்ததால் உண்டான மகிழ்ச்சி எம்பெருமானுடையது என்கிறார் ஆழ்வார். இதை "ப்ரணயி ப்ரீத்யனுஸந்தானம்" என்றருளிச் செய்வர் **ஆளவந்தார்.** அதாவது ஆழ்வாரிடத்தில் ப்ரணயியான (அன்புடையவனான) எம்பெருமானுடைய மகிழ்ச்சியைச் சொல்வது இத்திருவாய்மொழி என்றபடி. (சேதனனை அடைவதால் மகிழ்ச்சி எம்பெருமானுக்கே என்ற கருத்தை உட்கொண்டு ஆளவந்தார் இங்ஙனம் அருளிச்செய்தார்.)

1. இவ்வைதிஹ்யம் இருபத்துநாலாயிரப்படியிலும் சுருக்கமாகக் கூறப்பெற்றுள்ளது.

[478]

(எங்கும் பக்கநோக்கறியான்) இங்கே ஆளவந்தாருக்குக் குருகை காவலப்பன் அருளிச் செய்ததாக அருளிச்செய்யும் வார்த்தை: 'அப்பன் ஸ்ரீபாத₃த்திலே ஒரு ரஹஸ்ய விஶேஷமுண்டு' என்று மணக்கால் நம்பி அருளிச் செய்ய, அது கேட்க வேணுமென்று ஆளவந்தாரும் கங்கை கொண்ட சோழபுரத்தேற எழுந்தருள, அப்பனும் அங்கே ஒரு குட்டிச் சுவரிலே யோக₃த்திலே எழுந்தருளியிருக்க 'இவரை ஸமாதி₄ப₄ங்க₃ம் பண்ண வொண்ணாது' என்று சுவருக்குப் புறம்பே பின்னே நிற்க, அப்பனும் யோக₃த்திலே எழுந்தருளி யிருக்கிறவர் திரும்பிப் பார்த்து "இங்கு சொட்டைக் குலத்தில் ஆரேனும் வந்தாருண்டோ?" என்று கேட்டருள, "அடியேன்" என்று ஆளவந்தாரும் எழுந்தருளி வந்து கண்டு, "நாங்கள் பின்னே தெரியாதபடி நிற்க, இங்ஙன் அருளிச் செய்கைக்கு ஹேதுவென்!" என்ன, "நானும் தானுமாக அனுப₄வியா நின்றால் பெரியபிராட்டியார் திருமுலைத்தடத்தாலே நெருக்கி அணைத்தாலும் அவள் முகங்கூடப் பாராத ஸர்வேஶ்வரன் என் கழுத்தை அமுக்கி நாலு மூன்று தரம் அங்கே எட்டிப் பார்த்தான். இப்படி அவன் பார்க்கும்போது சொட்டைக்குடியிலே சிலர் வந்தாருண்டாக வேணும் என்றிருந்தேன் காணும்" என்றருளிச்செய்தார்.

(திருவாய்மொழி 2-6-2 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

தம்மோடு கலந்த எம்பெருமானை "எங்கும் பக்க நோக்கு அறியான்" (எங்கும் திரும்பிப் பார்ப்பதும் இன்றி இருக்கின்றான்) என்று ஆழ்வார் அருளிச்செய்துள்ளார். ஆழ்வாரோடு கலந்து அனுபவித்துக் கொண்டிருக்கும் போது பிராட்டியே வந்து திருமுலைத் தடத்தினால் நெருக்கி அணைத்தாலும் அவள் முகத்தை ஏறிட்டுப் பாரான் என்று விளக்கிய உரையாசிரியர், அதை விளக்க ஓர் **ஐதிஹ்யம்** *எடுத்துக் காட்டுகிறார்.*

விளக்கம்

ஆளவந்தாருக்குத் தத்துவப் பொருள்களை உபதேசித்த மணக்கால் நம்பி, *"குருகைகாவலப்பன் எனும் ஆசார்யரிடத்தில் நீர் தெரிந்து கொள்ள வேண்டிய யோக ரஹஸ்யம் உண்டு. அவரிடத்தில் சென்று கேளும்" என்று கூறினார். ஆளவந்தாரும் குருகைகாவல் அப்பனைக் காண்பதற்காக கங்கை கொண்ட சோழபுரத்திற்கு எழுந்தருளினார். மனிதநடமாட்டம் அற்றதாய், பகவானும் தானுமாய் ஏகாந்தமாய் இருந்து அனுபவிப்பதற்குத் தகுதியான இடமான ஒரு குட்டிச் சுவரின் அருகிலே குருகை காவலப்பன் யோகத்தில் அமர்ந்திருப்பதைக் கண்டார். அவருடைய யோகத்திற்கு இடையூறு செய்யக் கூடாது என்று கருதி ஆளவந்தார் அவருக்குப் பின்னே வெளியில் நின்று கொண்டிருந்தார்.*

திடீரென்று யோகம் கலைந்தவராகக் குருகைகாவலப்பன் வெளியே நோக்கி "இங்கே சொட்டைக் குலத்தைச் சேர்ந்தவர்கள் யாரேனும் வந்திருக்கின்றீர்களோ?" என்று கேட்டார். (சொட்டைக்குலம் = ச்ரேஷ்டகுலம்) உடனே ஆளவந்தாரும் "அடியேன் வந்திருக்கிறேன்; தேவரீருடைய யோகத்திற்கு இடையூறு செய்யக் கூடாது என்பதற்காக அடியேன் வெளியே தெரியாதபடி நின்று கொண்டிருந்தும், அடியேன் வந்ததை தேவரீர் அறிந்து கொண்டது எப்படி? (அதுவும் அடியேன் சொட்டைக் குலத்தைச் சேர்ந்தவன் என்பது எப்படித் தெரிந்தது?)" என்று கேட்டார். அதற்குக் குருகைகாவலப்பன் "யோகத்தில் அடியேன் எம்பெருமானை அனுபவித்துக் கொண்டிருக்கும்போது பெரியபிராட்டியார் திருமுலைத் தடத்தாலே நெருக்கி அணைத்தாலும் அவள் முகத்தைக் கூடத் திரும்பிப் பார்க்காத எம்பெருமான் இன்று என் கழுத்தை மூன்று நான்கு முறை அழுத்தி எட்டி எட்டிப் பார்த்தான். இப்படி அவன் எட்டிப் பார்க்கும் போது, அங்கு (அடியேனுடைய ஆசார்யரான நாதமுனிகளுடைய குலமாகிய) சொட்டைக் குலத்தைச் சேர்ந்தவர்கள் யாரோ வந்திருக்க வேணும் என்று நினைத்தேன்" என்று அருளிச் செய்தார்!

[479]

எம்பார் இத்திருவாய்மொழி அருளிச் செய்யப்புக்கால் "ஸ்ரீவைஷ்ணவன் ஆனேன் என்கிறார்" என்பராம். வைஷ்ணவத்வ சிஹ்நமிறே திருத்₃வாத₃ஶ நாமம்.

(திருவாய்மொழி 2-7 ஈடு வியாக்கியான ப்ரவேசம்)

நிகழிடம்

எம்பெருமான் தம்மிடத்துப் பொழிந்த, அருள், தம்மளவில் நில்லாமல், தம்முடன் தொடர்பு உடைய அனைவரின் மீதும் வெள்ளமிடுகிறபடியை நினைத்து அத்திருக்குணத்தை 'கேசவன்தமர்' என்று தொடங்கும் இத்திருவாய்மொழியில் ஆழ்வார் கொண்டாடுகிறார். இங்கு எம்பார் அருளிச்செய்த **வார்த்தை** ஒன்று எடுத்துக்காட்டப்பெறுகிறது.

விளக்கம்

'கேசவன்தமர்' என்று தொடங்கும் இத்திருவாய்மொழியில் கேசவன், நாரணன், மாதவன், கோவிந்தன், விஷ்ணு, மதுசூதனன், திரிவிக்ரமன், வாமனன், சிரீதரன், இருடீகேசன், பத்மநாபன், தாமோதரன் என்ற பன்னிரண்டு திருநாமங்களையும் பாட்டுத் தோறும் வரிசைக்கிரமமாக வைத்து ஆழ்வார் அருளிச் செய்கிறார். இந்தப் பன்னிரண்டு திருநாமங்களும் ஸ்ரீவைஷ்ணவ

1. "இங்கே ஆளவந்தாருக்குக் குருகைகாவலப்பன் அருளிச் செய்த வார்த்தை" என்று மட்டும் இருபத்து நாலாயிரப்படியிலுள்ளது

ஸம்ப்ரதாயத்தில் 'திருத்வாதச நாமங்கள்' என்று மிகவும் உயர்வாகப் போற்றப்படுவன ஆகும்.[1] எனவே **எம்பார்** இத்திருவாய்மொழியை அருளிச்செய்யும்போது "ஸ்ரீவைஷ்ணவ சின்னமான திருத்வாதச நாமங்களை இத்திருவாய்மொழியில் அருளிச் செய்துள்ளமையால், இத்திருவாய்மொழியில் ஆழ்வார் 'நான் ஸ்ரீவைஷ்ணவன் ஆனேன்' என்கிறார்" என்று கூறுவராம்.[2]

[480]

"जामाता दयितस्तवेति भवतीसम्बन्धदृष्ट्या हरिं पश्येम" (ஜமாதா த₃யிதஸ் தவேதி பவதீஸம்ப₃ந்த₄ த்₃ருஷ்ட்யா ஹரிம் பஶ்யேம) என்றாரிறே பட்டர்.

(2-7-3 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

"மாதவன் என்றதே கொண்டு தீதவம் கெடுக்கும்" (பிராட்டிக்கு மணவாளன் என்று அடியேன் கூறியதையே கொண்டு என்னுடைய பாவங்களைப் போக்கியருளினான்) என்று ஆழ்வார் அருளிச்செய்துள்ளார். பிராட்டியின் தொடர்பையிட்டே எம்பெருமானைப் பற்றுவதும் செய்யப் பெறுகிறது என்பதற்கு பட்டர் அருளிச்செய்த **சுலோகம்** *ஒன்று மேற்கோள் காட்டப்பெறுகிறது.*

விளக்கம்

"ஜமாதா தயிதஸ்தவேதி பவதீஸம்பந்தத்ருஷ்ட்யா ஹரிம் பச்யேம" (பிராட்டியே! தேவரீருக்கு மணவாளன் என்று, தேவரீருடைய தொடர்புடன் கூடியவராகவே ரங்கநாதனை எப்பொழுதும் தரிசனம் செய்கிறோம்) என்று ஸ்ரீகுணரத்னகோசத்தில் (51) **பட்டர்** *அருளிச்செய்துள்ளார். "மாதவன் என்றதே கொண்டு. . . ." என்று ஆழ்வார் அருளிச்செய்ததை அடியொற்றியதே இது என்றபடி.*

[481]

(தேவும்) 'தேவும்' என்கிறது ஐஶ்வர்யத்தை; 'தன்னை' என்கிறது ஆஶ்ரித பாரதந்த்ர்யத்தை. அதிறே தானான தன்மை. आत्मानं नातिवर्तेताः **(ஆத்மாநம் நாதிவர்த்தேதா:) என்றானிறே.** आत्मभूतं भरतं नातिवर्तेताः **(ஆத்மபூ₄தம் ப₄ரதம்**

1. ஸ்ரீவைஷ்ணவர்கள் தங்கள் உடலில் பன்னிரு திருமண்காப்புகள் அணிவதும், ஒவ்வொரு திருமண்காப்புக்கும் கேசவன் முதலிய பன்னிரண்டு திருநாமங்களைக் குறிப்பதும் இங்கு நினைவில் கொள்ளத் தக்கது.
2. "திருநாமமாகிறது வைஷ்ணவ சிஹ்நமாகையாலே 'நான் வைஷ்ணவனானேன் என்கிறார்' என்பர் எம்பார்" என்பது இருபத்துநாலாயிரப்படியுரை.

நாதிவர்த்தேதா:) என்கிறான் என்று சிலர் சொல்லுவர்கள். பட்டர் "'நீரான தன்மையாகிறது ஆஶ்ரிதபரதந்த்ரராகை; உம்முடைய தம்பி சொன்ன வார்த்தையை மறுத்து நீரான தன்மையை இழவாதே கொள்ளும்' என்கிறான்" என்று.

(திருவாய்மொழி 2-7-4 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

"தேவும் தன்னையும் பாடி ஆடத் திருத்தி" (தன்னுடைய மேன்மையையும் தன்னையும் புகழ்ந்து பாடி ஆடும்படி திருத்தி) எம்பெருமான் தம்மை ஆட்கொண்டான் என்கிறார் ஆழ்வார். இங்கு 'தேவும்' என்பது அவனுடைய மேன்மையையும், 'தன்னையும்' என்பது அவனுடைய எளிமையையும் குறிக்கும் என்றுரைத்த உரையாசிரியர், எளிமையாவது தன் அடியவர்களுக்கு வசப்பட்டிருத்தல் (ஆச்ரித பாரதந்த்ர்யம்) என்றும் இதுவே எம்பெருமானுக்கு இயற்கையான (தானான) தன்மை என்றும் விளக்கி, பட்டர் அருளிச்செய்த **நிர்வாஹம்** *ஒன்றையும் எடுத்துக்காட்டுகிறார்.*

விளக்கம்

காட்டிற்குச் சென்று விட்ட இராமபிரானைத் திரும்பி அயோத்யைக்கு அழைத்துக் கொண்டு வந்துவிட வேண்டும் என்று சித்திர கூடத்திற்கு வருகிற பரதன் இராமபிரானை நாட்டிற்கு வரும்படி அழைக்கிறான். அதற்கு இசையாத இராமபிரானை நோக்கி வசிஷ்டமகரிஷி "ஆத்மாநம் நாதி வர்த்தேதா:" (தன்னை (உன்னை) மீறாதே) (ஸ்ரீரா. அயோ.கா.111-7) என்கிறார். இதற்குப் பொருள் கூறிய சிலர் "பரதன் இராமனுக்கு உயிர் போன்றவன் ஆகையால் 'ஆத்மபூதம் பரதம் நாதிவர்த்தேதா:' (உன் உயிரான பரதனை மீறாதே) என்று வசிஷ்டர் கூறுகிறார்" என்று கூறினர். ஆனால் பட்டர் இதற்கு வேறு பொருள் கூறினார். ஆத்மாநம் - உன்னை - அதாவது நீயாகிற தன்மையை மீறாதே என்கிறார் வசிஷ்டர். (இராமனுக்கு அவனாகிற தன்மையாவது அடியவர்க்கு வசப்பட்டிருத்தல்.) எனவே "உனது அடியவனான பரதனுடைய வார்த்தையை மறுத்து உன் தன்மையாகிய - அடியவனுக்கு வசப்பட்டிருத்தல் என்கிற தன்மையை - தன்னை இழந்து விடாதே" என்கிறார் வசிஷ்டர் - என்பது பட்டர் அளித்த விளக்கம். (ஆத்மா என்பதற்குப் பத்துப் பொருள்கள் கூறுவதுண்டு. அதில் ஸ்வபாவம் - தன்மை என்பதும் ஒரு பொருள். அப்பொருளைக் கருத்தில்கொண்டே பட்டர் ஆத்மாநம் என்பதற்கு 'உன்னுடைய தன்மையை' என்று பொருளுரைத்தார்.)

[482]

திருமாலையாண்டானோடே எம்பெருமானார் திருவாய்மொழி கேட்டருளுகிற நாளில், பாட்டுக்கள் தோறும் சில வார்த்தைகளை அருளிச் செய்து "இது அர்த்தஸ்வமானாலோ?" என்றால், "இது விஶ்வாமித்ரஸ்ருஷ்டி; ஆளவந்தார்

அருளிச் செய்யக் கேட்டறியேன்' என்று பணிக்குமாம் ஆண்டான். ஆண்டான், "இப்பாட்டுக்கு விஶ்வாமித்ரஸ்ருஷ்டி வேண்டாவாயிருந்ததீ!" என்ன, "இப்பாட்டால் தன் அவயவ ஸௌந்த₃ர்யத்தாலே என்னைத் தனக்காக்கினான் என்கிறார்" என்று அருளிச் செய்தருளினாராம். அதுவுங்கிடக்க, பட்டர் அருளிச் செய்வது ஒன்று உண்டு. "ஆழ்வாரையும் ஆழ்வார் பரிகரத்தையும் விஷயீகரித்து அத்தாலே திருமேனியில் பிறந்த ஔஜ்ஜ்வல்யத்தைச் சொல்லுகிறது" என்று.

(திருவாய்மொழி 2-7-5 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

"விட்டிலங்கு செஞ்சோதி" என்கிற இப்பாசுரத்தில் ஆழ்வார் எம்பெருமானுடைய திருமேனியையும், ஆபரணங்களையும், ஆயுதங்களையும் வர்ணிக்கிறார். இங்ஙனம் ஆழ்வார் வர்ணிப்பதற்குக் காரணம் என்ன என்பது பற்றி **நிர்வாஹங்கள்** *காட்டப்பெறுகின்றன.*

விளக்கம்

ஆளவந்தார் *சீடரான திருமாலையாண்டானிடம் எம்பெருமானார் திருவாய்மொழி காலக்ஷேபம் கேட்டு வந்தார். அப்போது திருமாலை ஆண்டான், ஆளவந்தார் அருளிச் செய்ததாக ஒரு பொருளைக் கூறும் போது, எம்பெருமானார் வேறொரு பொருளைக் கூறி "இப்படிப் பொருள் கொள்ளலாமா?" என்று கேட்பார்.* **திருமாலையாண்டான்** *"இது விச்வாமித்ர ஸ்ருஷ்டி. (அதாவது திரிசங்கு என்பவனுக்காக விச்வாமித்ரர் தம் தவ வலிமையினால் புதிதாக ஒரு சுவர்க்கத்தை உண்டாக்கியது போல, புதிதாகக் கூறும் பொருள்.) இப் பொருளை ஆளவந்தார் அருளிச் செய்ய நான் கேட்டிலேன்" என்று கூறிவிடுவாராம்.*

"விட்டிலங்கு செஞ்சோதி" என்கிற இப்பாசுரத்தில் ஆழ்வார் எம்பெருமானுடைய திருமேனியையும், ஆபரணங்களையும், ஆயுதங்களையும் வர்ணிக்கிறார். (கீழ்ப்பாசுரத்தில் தம்மையும் தம்மோடு தொடர்பு உடையவர்களையும் எம்பெருமான் ஆட்கொண்டதை அருளிச் செய்த ஆழ்வார் இப்பாசுரத்தில் அப்படி ஆட்கொண்ட குணத்திற்குத் தோற்று, அவ்வெம்பெருமானைத் தோத்திரம் செய்கிறார் என்று ஆளவந்தார் இப்பாசுரத்திற்கு பொருள் அருளிச் செய்தார் என்று கூறி)[1] "இப்பாட்டுக்கு விச்வாமித்ர ஸ்ருஷ்டி (புதியபொருள்) ஒன்றும் கூற இடமில்லாதபடி இருக்கிறது"

1 இப்பாசுர வியாக்யானத்தில் (ஆளவந்தார் அருளிச் செய்ததாகத்) திருமாலையாண்டான் கூறிய பொருள் இன்னதென்று குறிப்பிடவில்லை. (அடையவளைந்தான் அரும்பதவுரையில் மேற்கூறிய கருத்தை ஆளவந்தார் அருளிச்செய்ததாகக் குறிப்பிடப்பெற்றுள்ளது) மற்ற வியாக்யானங்களிலும் எம்பெருமானார் கூறிய பொருளும், பட்டர் கூறிய பொருளும் மட்டுமே காட்டப்பட்டுள்ளது

என்று திருமாலையாண்டான் கூறினார். இதைக் கேட்ட எம்பெருமானார், "இதற்கு முன்னர் அருளிச்செய்த பாசுரத்தில் எம்பெருமான் தம்மை ஆட்கொண்டமையை ஆழ்வார் கூறினார். இப்பாசுரத்தில் 'அப்படி எம்பெருமான் தம்மை ஆட்கொண்டது தன்னுடைய வடிவழகைக் காட்டி' என்று அந்தத் திருமேனியழகை வர்ணிக்கிறார்" என்று மற்றொரு பொருள் கூறினார். இதுவும் தவிர **பட்டர்** அருளிச் செய்யும் பொருள் ஒன்றும் உண்டு. "கீழ்ப் பாசுரத்தில் தம்மையும் தம்மோடு தொடர்பு உடையவர்களையும் எம்பெருமான் ஆட்கொண்டான் என்றார் ஆழ்வார். இப்பாசுரத்தில் அவன் அப்படித் தம்மையும் தம்முடையவர்களையும் ஆட்கொண்டதனால் அவனுடைய திருமேனியில் ஏற்பட்ட ஒளியை வர்ணிக்கிறார்" என்று பட்டர் அருளிச் செய்வர்.

[483]

(இராப்பகல் இத்யாதி) "இவர் ப₄க்தி பரவஶராகையாலே ,இவருடைய தே₃ஹயாத்ரையிருக்கும் படி" என்று முன்புள்ள முதலிகள் நிர்வஹிக்கும்படி. அன்றிக்கே பட்டர் "'மரீஇய தீவினைமாள' என்கிற இடத்தளவும் 'ஆடியாடி'யில் இவர்க்கு ஓடின த₃ஶையாய் 'இன்பம் வளர' என்கிற இது 'அங்காமத்தன்பு' தொடங்கி, 'கேசவன் தமர்' அளவும்வர உண்டான ப்ரீதியைச் சொல்லுகிறது" என்று.

(திருவாய்மொழி 2-7-9 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

சிரீஇதரன் செய்ய தாமரைக் கண்ணன் என்றென்றிராப்பகல்வாய்
வெரீஇ அலமந்து கண்கள் நீர்மல்கி வெவ்வுயிர்த்துயிர்த்து
மரீஇய தீவினைமாளவின்பம் வளர வைகல்வைகல்
இரீஇ உன்னையென்னுள் வைத்தனை என்னிருடீகேசனே!

(என் இருடீகேசனே! ஸ்ரீதரனே என்றும், செந்தாமரைக் கண்ணனே என்றும் இரவும் பகலும் வாய்பிதற்றி, சுழன்று, கண்களில் நீர் ததும்பப் பெற்று வெப்பமாக நெடுமூச்செறிந்து, சேர்ந்திருக்கிற பாவங்கள் தொலைய, இன்பம் பெருக, ஒவ்வொரு கணத்திலும் உன்னை என் நெஞ்சினுள்ளே இருத்தி வைத்தாய்!) என்றருளிச் செய்கிறார் ஆழ்வார். இப்பாசுரத்திற்கு இரண்டு வகையான **நிர்வாஹங்கள்** காட்டப்படுகின்றன.

விளக்கம்

'மரீஇய தீவினைமாள' என்று மூன்றாம் அடியில் இருப்பதை முன்னிரண்டடிகளோடு தொடர்பு கொண்டதாக அல்லாமல் முன்னோர்கள்

பொருள் உரைத்தனர். அதாவது - என்னிடத்தில் மருவியிருந்த தீவினைகள் மாளும்படி நீ அருள் செய்தமையால் சிரீதரன், செய்யதாமரைக் கண்ணன் என்றென்று இரவும் பகலும் வாய்வெருவிக் கொண்டு கண்ணீர் சொரிவதும், பெருமூச்சு விடுவதுமாக இருந்து கொண்டு இப்படிப் பட்ட பக்திப் பேரின்பம் ஒவ்வொரு கணத்திலும் வளர்ந்து செல்லும்படி உன்னை என்னுள் வைத்தனையே! என்று ஆழ்வார் எம்பெருமானைக் கொண்டாடுகிறார் என்பது பட்டருக்கு முன்பிருந்த ஆசார்யர்கள் அளித்த விளக்கமாகும். ஆக, வாய் வெருவுவது, அலமருவது, கண்ணீர் மல்குவது ஆகிய இவை ஆழ்வார்க்கு இந்தப் பாசுரம் பேசும் பொழுது இருப்பதாக முன்னோர்கள் கருதுவது விளங்கும். வாய் வெருவுவது, அலமருவது, கண்ணீர் மல்குவது, நெடுமூச்செறிவது ஆகிய இவை இன்பமாகக் கூடுமோ எனில் "ஆழ்வார் பக்தியில் திளைத்தவர் ஆகையாலே உடலோடு கூடியிருக்கும் வரையில் இந்நிலை அவருக்குத் தொடர்ந்து இருக்கும் (தேஹயாத்ராசேஷம்). எனவே இவை இன்பமாகக் குறையில்லை" என்பது முன்னோர்கள் கருத்து.

ஆனால் பட்டருடைய விளக்கம் வேறு விதமானது. கண்ணீர் மல்குதல், நெடுமூச்செறிதல் முதலியன பிரிவுத்துயரால் ஏற்படக் கூடியவை ஆகையால், அவற்றை 'இன்பம் வளர' என்று ஆழ்வார் அருளிச் செய்ததோடு சேர்த்துக் கொள்ள முடியாது. எனவே இதற்கு முன்னால் ஆழ்வார் எம்பெருமானை அடைய முடியாமல் வருந்திக் கிடந்த போது - அதாவது 'ஆடியாடி' என்கிற திருவாய்மொழி அருளிச் செய்தபோது இருந்த நிலையை முன்னிரண்டு அடிகளில் விவரிக்கிறார் ஆழ்வார்; அப்படிப் பிரிவுத் துயரால் வருந்தியிருந்த போது எம்பெருமான் திருநாமங்களை வாய்வெருவியும், கண்ணீர் பெருக்கியும் நெடுமூச்செறிந்து இருந்த நிலையை நீக்கி, இப்படிப்பட்ட நிலைக்குக் காரணமாக இருந்த தீவினைகளைப் போக்கி, இப்போது - 'அந்தாமத்தன்பு', 'கேசவன் தமர்' என்கிற திருவாய்மொழிகளில், தன்னோடு ஆழ்வாரைச் சேரும்படி செய்து இன்பம் வளர அருள்புரிந்தான் எம்பெருமான் என்கிறார் ஆழ்வார் - என்பது **பட்டர்** தரும் விளக்கம்.[1]

[484]

"இத்திருவாய்மொழி பரத்வோபதேஶம்" என்று பூர்வர்கள் நிர்வஹிப்பர்கள். "பலவிடத்திலும் பரத்வம் சொல்லா நின்றது. மோக்ஷப்ரதத்வம் தனியே சொல்ல வேண்டுவதொன்று. அத்தைச் சொல்லுகிறது" என்று ப$_4$ட்டர் அருளிச் செய்வர்.

(திருவாய்மொழி 2-8 இருபத்து நாலாயிரப்படி வியாக்கியான ப்ரவேசம்)

1. இருபத்து நாலாயிரப்படி உரையிலும் இவ்விளக்கங்கள் குறிப்பிடப்பெற்றுள்ளன.

நிகழிடம்

'அணைவதரவணைமேல்' என்று தொடங்கும் இத்திருவாய்மொழியின் மையக்கருத்து யாது என்பது பற்றி ***நிர்வாஹங்கள்*** *கூறப்பெறுகின்றன.*

விளக்கம்

'அணைவதரவணைமேல்' என்று தொடங்கும் இத்திருவாய்மொழியில் எம்பெருமானுடைய பரத்வத்தை ஆழ்வார் கூறுகிறார் என்று முன்புள்ள ஆசார்யர்கள் கூறுவர். 'உயர்வற' (1-1) 'திண்ணன் வீடு' (2-2) என்று தொடங்கும் திருவாய்மொழிகளில் ஏற்கனவே எம்பெருமானுடைய பரத்வம் சொல்லப் பெற்றுள்ளது. எம்பெருமானுடைய மோக்ஷமளிக்கும் தன்மை தனியே கூறப்படவேண்டிய ஒன்று ஆகையால் அதை இத்திருவாய்மொழியில் அருளிச் செய்கிறார் ஆழ்வார் என்று பட்டர் அருளிச்செய்வர்.[1]

(இத்திருவாய்மொழியில் 'புணைவன் பிறவிக்கடல் நீந்துவார்க்கே' (2-8-1), 'வீடு முதலாம்' (2-8-2) 'நலமந்தமில்லதோர் நாடு புகுவீர்' (2-8-4) என்று ஆழ்வார் அருளிச் செய்துள்ள ஸ்ரீஸூக்திகளைக் கருத்தில் கொண்டு பட்டர் இப்படி அருளிச் செய்திருக்கலாம்.)

[485]

(நீந்தும் துயர்ப் பிறவியுட்பட மற்றெவ்வெவையும் நீந்தும்) து₃ஸ்தரமான து₃:க்க₂த்தையுடைய ஜன்மம் முதலான ஸர்வ விகாரங்களையும் கடத்தும். நீந்தும் என்றது நீத்தும் என்றபடி. நீந்தும் என்கிற வர்த்தமான நிர்தே₃ஶத்தாலே து₃ஸ்தரமென்கை. (துயரில்லா வீடு முதலாம்) து₃:க்க₂க₃ந்த₄ரஹிதமான மோக்ஷத்துக்கு ஹேதுவாம். இது பிள்ளை திருநறையூர் அரையர் நிர்வாஹம்.

(திருவாய்மொழி 2-8-2 இருபத்து நாலாயிரப்படி வியாக்கியானம்)

நிகழிடம்

எம்பெருமானுடன் உள்ள தொடர்பே நமக்கு மோக்ஷத்தைத் தரும் என்ற கருத்தில் ஆழ்வார்

நீந்தும் துயர்ப் பிறவியுட்பட மற்றெவ்வெவையும்
நீந்தும் துயரில்லா வீடு முதலாம்

என்றருளிச் செய்கிறார். இதற்கு இரண்டு விதமாகப் பொருளுரைத்து, அவற்றில் ஒரு பொருள் பிள்ளை திருநறையூர் அரையர் அளித்த ***நிர்வாஹம்*** *என்று குறிப்பிடப்படுகிறது.*

1. ஈடு முப்பத்தாறாயிரப்படி உரையிலும் இந்த நிர்வாஹங்கள் கூறப்பட்டுள்ளன.

விளக்கம்

*நீந்தும் துயர்ப்பிறவி உட்பட மற்றெவ்வெவையும் நீந்தும் - போக்கிக் கொள்ள முடியாத துயரை விளைக்கின்ற பிறப்பு, மூப்பு, பிணி, இறப்பு இவையெல்லாவற்றையும் (எம்பெருமானோடுள்ள தொடர்பு) போக்கும்; துயரில்லா வீடு முதலாம் - துயர் சிறிதுமில்லாத மோக்ஷத்திற்குக் காரணமாகும் - இது **பிள்ளை திருநறையூரரையர்** அருளிச்செய்த விளக்கமாகும்.[1] (இப்படி இரண்டு வாக்கியமாகக் கொள்ளாமல் முதல்வரி முழுவதையும் வீட்டிற்கு (மோக்ஷத்திற்கு) அடைமொழியாக்கி - போக்கிக் கொள்ள முடியாததான துயரங்களை விளைப்பதான பிறவி முதலான எவ்வகைத்துன்பமும் கலக்காத மோக்ஷத்திற்கு (எம்பெருமானோடுள்ள தொடர்பு) காரணமாகும் - என்பது மற்றொரு விளக்கமாகும்.)[2]*

[486]

எம்பார் இத்திருவாய்மொழி அருளிச் செய்யப்புக்கால், இருந்தவர்களை யார்? என்று கேட்டுக் கதவுகளையும் அடைப்பித்து, குஹ்யமாகவாம் அருளிச் செய்வது.

(திருவாய்மொழி 2-9 ஈடு வியாக்கியான ப்ரவேசம்)

நிகழ்டம்

*'எம்மா வீடு' என்று தொடங்கும் இத்திருவாய்மொழியில் ஆழ்வார் மிக உயர்ந்ததொரு அர்த்தத்தை அருளிச் செய்கிறார். அதாவது எம்பெருமானுக்கு அடிமைப்பட்டிருக்கும் நாம் அவனுடைய மகிழ்ச்சிக்காகவே தொண்டு செய்ய வேண்டும். 'தனக்கேயாக எனைக் கொள்ளும் ஈதே' (2-9-4) என்று ஆழ்வார் இக்கருத்தை இத்திருவாய்மொழியில் அருளிசெய்துள்ளார். மேலும் 'பரமபதம் அடைந்து நாம் சுகப்பட்டாலும் சரி, நரகத்தை அடைந்து துக்கப்பட்டாலும் சரி, அவனுடைய திருவுள்ளவுகப்பு ஒன்றே முக்கியம். நாம் அவனுக்கேயாக இருக்கும் இருப்பே வேண்டுவது' என்கிறார் ஆழ்வார். இது மிக உயர்ந்த அர்த்தம் என்பதற்கு ஓர் **ஐதிஹ்யம்** காட்டப்பெறுகிறது.*

விளக்கம்

*இப்படிப்பட்ட உயர்ந்த பொருள் பொதிந்த இத்திருவாய்மொழியைத் தகுதி இல்லாதவர் எவருக்கும் உபதேசித்துவிடக்கூடாது என்பதற்காக, 'எம்மாவீடு' என்று தொடங்கும் இத் திருவாய்மொழியை உபதேசிப்பதற்கு முன்னர், **எம்பார்**, தம் முன்னே குழுமியிருப்பவர்களை யார் என்று விசாரித்து அவர்கள் தகுதியை*

1. இவ்விளக்கம் ஈட்டிலும் காட்டப்பட்டிருந்தாலும், அது பிள்ளை திருநறையூரரையர் அருளிச் செய்தது என்று அங்கு குறிப்பிடப்படவில்லை.
2. ஆறாயிரப்படி, ஒன்பதினாயிரப்படி, பன்னீராயிரப்படி உரைகளில் இவ்விளக்கம் மட்டுமே உள்ளது. பிள்ளை திருநறையூரரையர் அருளிச்செய்த விளக்கம் குறிப்பிடப்படவில்லை.

அறிந்து கொண்டு பிறகு வேறு யாரும் உள்ளே புகாத வண்ணம் கதவுகளையும் சாத்தித் தாளிடச் செய்து, மிகவும் ரகசியமாக இத்திருவாய்மொழியின் பொருளை உபதேசிப்பராம்.

[487]

(ஞானக் கை தா) ……….. இங்கே எம்பார்க்கு ஆண்டான் அருளிச் செய்த வார்த்தையை ஸ்மரிப்பது. அதாவது "ஒரு கிணற்றிலே விழுந்தவனுக்கு இரண்டு பேர் கைகொடுத்தால், எடுக்குமவர்களுக்கும் எளிதாய் ஏறுமவனுக்கும் எளிதாயிருக்குமிறே; அப்படியேயாகிறது" என்று.

(திருவாய்மொழி 2-9-2 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

ஆழ்வார் எம்பெருமானை நோக்கி "ஞானக் கை தா" என்று அருளிச்செய்கிறார். இத்தொடர்பில் ஓர் ***ஐதிஹ்யம்*** *கூறப்படுகிறது.*

விளக்கம்

முதலியாண்டானிடம் பஞ்சஸம்ஸ்காரம் பெற்றிருந்த ஸ்ரீவைஷ்ணவர் ஒருவர் முதலியாண்டான் வெளியூர் எழுந்தருளியிருந்த காலத்தில் எம்பாரிடம் வந்தாராம். அவரை முதலியாண்டானுடைய சீடர் என்று அறியாத எம்பாரும் அவருக்கு பஞ்ச ஸம்ஸ்காரங்களைப் பண்ணி, அவரைக் கொண்டு கைங்கர்யங்களும் கொண்டார். முதலியாண்டான் வெளியூரிலிருந்து திரும்பியவுடன் அந்த ஸ்ரீவைஷ்ணவர் மீண்டும் அவரிடத்தில் சென்று விட்டார். அப்போதுதான், அந்த ஸ்ரீவைஷ்ணவர் ஏற்கெனவே முதலியாண்டானுடைய சிஷ்யராக இருந்தவர் என்று எம்பார் அறிந்து கொண்டார். உடனே எம்பார், முதலியாண்டானிடம் வந்து "தேவரீருடைய சிஷ்யருக்கு அடியேன் பஞ்ச ஸம்ஸ்காரம் செய்து அபசாரப்பட்டு விட்டேனே!" என்று கூற, அதைக் கேட்ட முதலியாண்டான் "ஒரு கிணற்றில் விழுந்தவனை எடுப்பதற்கு இருவர் கை கொடுத்தால் எடுப்பவர்களுக்கும் எளிது, ஏறுபவனுக்கும் எளிது. அதுபோல இவ்வுலக வாழ்க்கையாகிற பாழுங்கிணற்றில் விழுந்த இவரை எடுக்க நாம் இருவருமே கைகொடுத்ததில் தவறில்லை" என்றாராம்.[1]

[488]

இவ்விடத்திலே எம்பார் அருளிச்செய்யும்படி - "ஸர்வேஶ்வரன் த்ரிவித$_4$ சேதநரையும் ஸ்வரூபாநுரூபமாக அடிமை கொள்ளா நின்றான். நாமும் இப்படிப் பெறுவோமே" என்று. முக்தரும் நித்யரும் தாங்களும் ஆநந்திஷத்து அவனையும்

1. "எம்பாருக்கு முதலியாண்டான் அருளிச் செய்த வார்த்தை ஒருவன் கிணற்றில் விழுந்தால் இருவராக எடுக்கும்" என்று இருபத்துநாலாயிரப்படியில் உள்ளது.

ஆநந்தி₃ப்பிப்பர்கள். ப₃த்₃த₄ர் தாங்கள் ஆநந்தி₃யாதே அவனை ஆநந்தி₃ப்பிப்பர்கள்; இன்புறும் இவ்விளையாட்டுடையானிறே.

(திருவாய்மொழி 2-9-4 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

"தனக்கேயாக எனக்கொள்ளும் ஈதே" (எம்பெருமான் தன்னுடைய மகிழ்ச்சிக்காகவே என்னை ஏற்றுக் கொள்ள வேண்டும்) என்று தம்முடைய அடிமைத் திறத்தின் எல்லையை (பாரதந்த்ர்யத்தை) இப்பாசுரத்தில் வெளியிடுகிறார் ஆழ்வார். இங்கு எம்பார் அருளிச் செய்யும் **வார்த்தை** *ஒன்று எடுத்துக் காட்டப்படுகிறது.*

விளக்கம்

"நித்யர், முக்தர், பத்தர் என்கிற மூன்று வகைப்பட்ட சேதனர்களையும் அவரவர்களுடைய தன்மைகளுக்கு ஏற்ப எம்பெருமான் அடிமை கொள்கிறான். எப்போதுமே பரமபதத்திலிருக்கின்ற நித்யர்களும், அவனருளால் இவ்வுலக வாழ்க்கையிலிருந்து விடுபட்டுப் பரமபதமடைகின்ற முக்தர்களும் 'அஹமந்நம்' (நான் உனக்கு உணவாகின்றேன்) என்று கூறி அவனை மகிழ்வித்து, அவனுடைய அந்த மகிழ்ச்சியைக் கண்டு தாங்களும் மகிழ்வார்கள். இவ்வுலக வாழ்க்கையிலேயே கட்டுப்பட்டிருக்கின்ற பத்தர்களோ, தாங்கள் மகிழாமல் அவனை மட்டும் மகிழ்விப்பார்கள். அதாவது-இவ்வுலகம் படைக்கப்பட்டதே அவனுடைய மகிழ்ச்சிக்காகவே என்று சாத்திரங்கள் கூறுவதாலும், 'இன்புறும் இவ்விளையாட்டுடையான்' (திருவாய்மொழி 3-10-7) என்று ஆழ்வார் அருளிச் செய்துள்ளமையாலும் பத்தர்களான சேதனர்களுடைய செயல்களைக் கண்டு எம்பெருமான் விளையாட்டின்பம் எய்துகிறான். எனவே பத்தர்கள் அவனை மகிழ்விக்கிறார்களேயொழிய, தாங்கள் மகிழ்ச்சியடைவதில்லை. நாமும் அப்படியே அவனை மகிழ்விப்போம்" என்று (ஆழ்வார் அருளிச் செய்வதாக) எம்பார் அருளிச் செய்வர்.

[489]

"மயர்வற மதிநலமருளப் பெற்றவர் 'தனக்கேயாக எனைக் கொள்ளுமீதே' என்று பிரார்த்தி₂ப்பானென்? 'திருவுள்ளமானபடி செய்கிறான்' என்றிராதே!" என்று பிள்ளை திருநறையூர் அரையர் எம்பாரைக் கேட்க, "அது கேளீர், முன்பு பிரிந்தன்று, பின்பு பிரிவுக்கு ப்ரஸங்க₃ம் உண்டாயன்று, இரண்டும் இன்றியிருக்கத் திருமார்விலேயிருக்கச் செய்தே 'அகலகில்லேன், அகலகில்லேன்' என்னப் பண்ணுகிறது விஷயஸ்வப₄ாவமிறே! அப்படியே ப்ராப்யருசி பிரார்த்தி₂க்கப் பண்ணுகிறது" என்றருளிச் செய்தார்.

(திருவாய்மொழி 2-9-4 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

தனக்கே யாக எனக்கொள்ளுமீதே
எனக்கே கண்ணனை யான் கொள்சிறப்பே

(தனக்கே உரியவனாக என்னை ஏற்றுக் கொள்ளுமதுவே என் தன்மைக்குத் தகுதியாக நான் எம்பெருமானிடத்தில் பெறவிரும்புகிற சிறந்த பயன்) என்கிறார் ஆழ்வார். ஆக, எம்பெருமானிடத்தில் தமக்குள்ள அடிமைத் திறத்தின் எல்லையை வெளியிடுகிறார் இப்பாசுரத்தில். இத்தொடர்பில் ஒரு **ஸம்வாதம்** *காட்டப் பெறுகிறது.*

விளக்கம்

"எம்பெருமானிடத்தில் தமக்குள்ள அத்யந்த பாரதந்த்ர்யத்தை உணர்ந்திருக்கிற ஆழ்வார் 'தனக்கேயாக எனைக் கொள்ளும் ஈதே' என்று, தன்னை அவன் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று வேண்டுவது எதற்காக? அவன் தன் திருவுள்ளப்படி செய்து கொள்ளட்டும் என்றன்றோ ஆழ்வார் இருக்க வேண்டும்?" என்று **பிள்ளை திருநறையூர் அரையர்** *எம்பாரைக் கேட்டார். அதற்கு எம்பார், "பற்றப்படுகிற விஷயத்தின் இனிமை அவரை அப்படி வேண்டும்படி தூண்டுகிறது. எம்பெருமானுடைய திருமார்பிலேயே எப்போதும் எழுந்தருளியிருக்கும் பிராட்டி 'அகலகில்லேன் இறையும்' (ஒரு நொடிப் பொழுதும் திருமார்வை விட்டு அகலமாட்டேன்) (திருவாய்மொழி 6-10-10) என்று கூறுவது எதனால்? இதற்கு முன்பு திருமார்வை விட்டுப் பிரிய நேரிட்டதனாலா? அல்லது இனிமேல் பிரிவு நேருமோ என்ற ஐயத்தினாலா? இரண்டுமே இல்லாமல் இருக்கச் செய்தேயும் இருக்குமிடத்தின் இனிமையைப் பார்க்கும் போது 'ஐயோ! அகல நேர்ந்து விடுமோ!' என்று ஐயப்படும்படியாக அன்றோ உள்ளது. அது போலவே இங்கும் பற்றப்படுகிற எம்பெருமானுடைய இனிய தன்மையை நினைக்கும் போது 'தனக்கேயாக எனைக் கொள்' என்று ஆழ்வாருக்கு வேண்டத் தூண்டுகிறது" என்று பதிலளித்தார்.*

[490]

(எக்காலமித்யாதி) இதுக்கு ஆளவந்தார் அருளிச் செய்யும்படி. "இனிக் கூறிடவொண்ணாதபடி சிறுகூறான அத்யல்ப காலத்திலும் நீ ஸ்வாமியான முறை தப்பாதபடி என் ஹ்ருதயத்திலே வந்து புகுரப்பெறில், (மற்றெக்காலத்திலும்) இதொழிந்த எல்லாக் காலத்திலும், (யாதொன்றும் வேண்டேன்) பின்னை இதுதானும் வேண்டேன்"...... . இத்தை எம்பெருமானார் கேட்டருளி "இது பொருள் அழகியது; இவ்வாழ்வாருடைய ப்ரக்ருதிக்குச் சேராது; பெறிலும் பெறாதொழியிலும் சிறுக்கக் கோலமாட்டார். இங்ஙனேயாக வேணும்" என்று அருளிச்

செய்வர்: "(எக்காலத்து இத்யாதி) எல்லாக் காலத்திலும் எனக்கு ஶேஷியான நீ, நான் ஶேஷமான முறை தப்பாமே வந்து என் ஹ்ருதயத்திலே புகுரப்பெறில் (எக்காலத்திலும்) இக்காலமெல்லாவற்றிலும் (மற்று யாதொன்றும் வேண்டேன்) பின்னை இதொழிந்த மற்றொன்றையும் நான் வேண்டேன்"

(திருவாய்மொழி 2-9-8 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

எக்காலத்தெந்தையாய் என்னுள் மன்னில் மற்று
எக்காலத்திலும் யாதொன்றும் வேண்டேன்

என்று எம்பெருமானைக் குறித்து ஆழ்வார் அருளிச்செய்கிறார். இதற்கு இரண்டு வகையான **நிர்வாஹங்கள்** *காட்டப்படுகின்றன.*

விளக்கம்

ஆளவந்தார் *அருளிய விளக்கமாவது: (எக்காலத்து) இதற்கு மேல் சிறியது இல்லை எனும்படியான மிகச் சிறிய காலத்திலும், (எந்தையாய் என்னுள் மன்னில்) எனக்குத் தலைவனாக என் நெஞ்சில் வந்து புகுந்தாயானால், (மற்று எக்காலத்திலும்) இந்தச் சிறியகாலம் தவிர மற்றெல்லாக் காலத்திலும் (யாதொன்றும் வேண்டேன்) இதையும் கூட வேண்டமாட்டேன். (மிகச் சிறிய காலமாகிலும் என் நெஞ்சுக்குள்ளே நீ இருந்தாயானால் அதுவே போதும்; அப்படி நீ இருந்ததையே நினைத்துக் கொண்டு, மற்ற காலங்களில் அதையும் நான் வேண்டமாட்டேன் என்கிறார் ஆழ்வார்; மிகுந்த தாகமுள்ளவன் ஒரு துளி தண்ணீர் கிடைத்தாலும் போதும் என்று கூறுவது போல ஆழ்வாரும் அற்பகாலமாகிலும் எம்பெருமான் தன் நெஞ்சுக்குள் இருந்தாலும் போதும் என்கிறார் - என்பது ஆளவந்தார் தரும் விளக்கமாகும்.)*

இவ்விளக்கத்தை (ஆளவந்தார் அருளிச்செய்தார் என்று திருமாலை ஆண்டான் கூறக்) கேட்ட **எம்பெருமானார்** *"இது மிகவும் அழகிய விளக்கம் தான்; ஆயினும் ஆழ்வாருடைய தன்மைக்கு இது பொருந்தாது. பெற்றாலும் பெறாவிட்டாலும் ஆழ்வார் குறைவாகக் கேட்கமாட்டார். (எம்பெருமான் ஒரு நொடிப்பொழுது மட்டுமே தன்னுடன் கலந்தால் போதும் என்று எண்ண மாட்டார்.) எனவே இப்படிப் பொருள் கொள்வதே சிறந்தது என்று வேறு வகையான விளக்கத்தை அருளிச் செய்தார்: (எக்காலத்து) எல்லாக் காலத்திலும் (எந்தையாய் என்னுள் மன்னில்) எனக்குத் தலைவனான நீ என் நெஞ்சில் வந்து புகுந்தாயாகில் (எக்காலத்திலும்) இக்காலமெல்லாவற்றிலும் (மற்று - யாதொன்றும் வேண்டேன்) இதைத் தவிர வேறு எதையும் வேண்ட மாட்டேன். (எல்லாக் காலத்திலும் நீ என்னோடு கலந்திருக்குமதுவே நான் வேண்டுவது. இதை நீ செய்துவிட்டால் இதைத் தவிர நான் வேறு எதையும் வேண்டேன் என்கிறார் ஆழ்வார் என்பது எம்பெருமானார் தரும் விளக்கமாகும்.)*

ஆக, எக்காலம் என்ற சொல்லுக்கு ஆளவந்தார் கூறு இட முடியாத மிகச் சிறியகாலம் என்று பொருள் கொண்டார். எம்பெருமானார் எல்லா காலத்திலும் என்று பொருள் கொண்டார்.[1]

[491]

“கீழ் எம்மாவீட்டில் நிஷ்கர்ஷித்த ப்ராப்யம் பெறுகைக்குத் திருமலையை ஆஶ்ரயிக்கிறார்” என்று ஆளவந்தார் அருளிச் செய்தாராகத் திருமாலையாண்டான் பணிக்கும்படி. எம்பெருமானார் “அங்ஙனல்ல; இவர் பாட்டுத் தோறும் ‘ஒல்லை ஒல்லை’ என்றும், ‘காலக்கழிவு செய்யேல்’ என்றும் த்வரிக்கப்புக்கவாறே, ‘நமக்கும் அறிவித்து நாமும் இவர் காரியம் செய்யக் கடவதாக அறுதியிட்டால் ஶரீரஸமநந்தரம் பேறு தப்பாது என்று அறுதியிட்டிருக்கலாயிருக்க, இவர் இப்படி த்வரிக்கிறது இப்ஶரீரத்தோடே அடிமை கொள்ள வேணுமென்று போலேயிருந்தது. இனி இவர்க்கு நாம் நினைத்தபடி பரிமாறுகைக்கு ஏகாந்தமான தேஶம் ஏதோ’ என்று ஞாலத்தூடே நடந்துழக்கிப் பார்த்துவரச்செய்தே ‘இவ்விடம் சால ஏகாந்த ஸ்தலமாயிருந்தது’ என்று திருமலையிலே ஸங்கல்பம் பண்ணியருளி, ‘நாம் உமக்கு முகம் தருகைக்காக வந்து நிற்கிறோம்; நீர் இங்கே வந்து நினைத்த வகைகள் எல்லாம் பரிமாறி அநுபவியும்’ என்று தெற்குத் திருமலையிலே நிற்கிற நிலையைக் காட்டிக் கொடுக்க இவரும் அத்தை அநுஸந்தித்து, பகவான் ப்ராப்யனானால் அவன் வர்த்திக்கும் தேஶமும் ப்ராப்யமாகக் கடவதிறே! அத்தாலே திருமலையோடு, அத்தோடு சேர்ந்த அயன்மலையோடு, புறமலையோடு, திருப்பதியோடு, போம் வழியோடு, போகக் கடவோம் என்று துணியும் துணிவோடு வாசியற ப்ராப்யாந்தர்க்கதமாய் அநுபவித்து இனியராகிறார்” என்று.

(*திருவாய்மொழி 2-10 ஈடு வியாக்கியான ப்ரவேசம்*)

நிகழிடம்

‘எம்மாவீடு’ என்று தொடங்கும் கீழ்ப் பதிகத்தில் ‘எம்பெருமான் தனக்கேயாக எனைக் கொள்ளும் ஈதே யான் வேண்டுவது’ என்றார் ஆழ்வார். ‘கிளரொளி இளமை’ என்று தொடங்கும் இப்பதிகத்தில் திருமாலிருஞ்சோலை மலையில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானை அனுபவிக்கிறார் ஆழ்வார். இவ்விரண்டு பதிகங்களுக்கும் உள்ள தொடர்பு பற்றி இருவேறு **நிர்வாஹங்கள்** *எடுத்துக் காட்டப்படுகின்றன.*

விளக்கம்

“கீழ்ப்பதிகத்தில் தாம் வேண்டிய பேற்றைப் பெறுவதற்காகத் திருமாலிருஞ்சோலையை அடைகிறார் ஆழ்வார்” என்று **ஆளவந்தார்** *அருளிச்*

1. இருபத்து நாலாயிரப்படி உரையிலும் இந்நிர்வாஹங்கள் குறிப்பிடப்பெறுகின்றன.

செய்ததாகத் திருமாலையாண்டான் கூறினாராம். இதைக் கேட்ட **எம்பெருமானார்**, "அப்படியல்ல: கீழ்ப்பதிகத்தில் ஆழ்வார் பாட்டுத் தோறும் 'ஒல்லை, ஒல்லை' என்றும் 'காலக்கழியு செய்யேல்' என்றும் பேற்றைப் பெறுவதில் தமக்குள்ள துடிப்பையும் பதற்றத்தையும் வெளியிட்டார். அதுகண்ட எம்பெருமான், 'நாம் இவர் விருப்பத்தை நிறைவேற்றுவதாக உறுதி கொண்டாலும், அது இவருடைய உடல் பிரிந்த பின்னர் அவர் பெறக் கூடிய பேறன்றோ! நிச்சயம் தமக்குப் பேறு கிடைக்கும் என்று உணர்ந்த பின்னரும் ஆழ்வார் இப்படிப் பதறுவது, இப்போதே இந்த உடலோடே தாம் அடிமை செய்ய வேண்டும் என்ற ஆசையினாலன்றோ! இனி, நம்முடைய நினைவுக்குத் தக்கபடி இவருடன் கலந்து பரிமாறுகைக்கு தகுதியான இடம் எது?' என்று இந்நிலவுலகில் நடந்துழக்கித் தேடிப் பார்த்தான். திருமாலிருஞ்சோலை மலையைக் கண்டு, 'இது மிகவும் தனிமையான இடமாக இருக்கிறது,' என்று அங்கே எழுந்தருளியிருந்து, 'நாம் உமக்கு முகம் தருவதற்காக இங்கே இருக்கிறோம்! நீர் இங்கே வந்து நினைத்தபடி கலந்து பரிமாறும்' என்று ஆழ்வாருக்குக் காட்டிக் கொடுத்தான். ஆழ்வாரும் அதை நினைத்து 'எம்பெருமான் அடையத் தக்கவனானால் அவன் எழுந்தருளியிருக்கும் இடமும் அடையத்தக்கதே! எனவே திருமாலிருஞ்சோலை மலையும், அதோடு சேர்ந்த அயன்மலை, புறமலைகளும், ஊரும், போகும் வழியும், போக வேண்டும் என்ற எண்ணமும் எல்லாமுமே நமக்கு அடையத் தகுந்தன' என்று கொண்டு இனியராகிறார்" என்று அருளிச்செய்தார்.

ஆக, (கீழ்ப்பதிகத்தில் எம்பெருமானிடத்தில் தாம் வேண்டிய) பேற்றைப் பெறுவதற்கு (ப்ராபகமாகத்) திருமாலிருஞ்சோலையை அடைகிறார் ஆழ்வார் என்பது ஆளவந்தார் கருத்து. திருமாலிருஞ்சோலையை அடைவதையே ஆழ்வார் பேறாக (ப்ராப்யமாக)க் கருதுகிறார் என்பது எம்பெருமானார் கருத்து ஆகும்.[1]

[492]

"இது நம்மாற் செய்து தலைக்கட்டப்போமோ? திருமலையை ஆச்ரயிக்கும் அதொழிய" என்று இங்ஙனே ஆழ்வான் ஒருருவிலே பணித்தானாம். அங்ஙனும் நிர்வஹிக்கக் கடவது. அன்றிக்கே, "கருமவன் பாசம் கழிக்கைக்காகவும் உழன்று உய்கைக்காகவும்" என்று இங்ஙனே எம்பெருமானார் அருளிச் செய்யும் படி.

(திருவாய்மொழி 2-10-4 ஈடு வியாக்கியானம்)

நிகழ்டம்

கரும வன்பாசம் கழித்துழன்று உய்யவே
.... திருமலை அதுவே அடைவது திறமே

1. இருபத்து நாலாயிரப்படி உரையிலும் இந்நிர்வாஹங்கள் குறிப்பிடப்பெறுகின்றன.

என்றருளிச் செய்கிறார் ஆழ்வார். 'உய்யவே' என்ற சொல்லில் உள்ள ஏகாரத்திற்கு இரண்டு **நிர்வாஹங்கள்** காட்டப்படுகின்றன.

விளக்கம்

கூரத்தாழ்வான் ஒருமுறை விளக்கம் அருளிச்செய்யும்போது (இந்த ஏகாரத்தைப் பிரிநிலையாகக் கொண்டு) கரும வன்பாசங்களைக் கழித்து உழன்று உய்யவும் முடியுமோ? இது நம்மால் செய்ய முடியுமோ? (முடியாது) திருமாலிருஞ்சோலை மலையை அடைவதொன்றே நம்மாற் செய்யலாவது' என்றருளிச் செய்தாராம்.

எம்பெருமானார் (இந்த ஏகாரத்தைத் தேற்றமாகக் கொண்டு) "கருமவன் பாசங்களைக் கழித்துக் கொள்ளவும், உழன்று உய்யவுமே திருமாலிருஞ்சோலை மலையை அடைவது தகுதி" என்றருளிச் செய்தார்.

நம்மால் எல்லாக் கருமங்களின் பயன்களையும் அனுபவித்துத் தீர்த்துக் கொண்டு இம்மலையை அடைவது ஒருக்காலும் முடியாது; அது கடலில் அலை ஓய்ந்து நீராடுவதைப் போன்றது என்பது ஆழ்வான் கருத்தாகும். திருமாலிருஞ் சோலை மலையை அடையவே, வினைப்பயன்கள் தன்னடையே கழிந்துபோய், எம்பெருமானுக்குத் தொண்டுசெய்யும் பேறு கிட்டும் என்பது எம்பெருமானார் கருத்தாகும்.

[493]

(மலமறு) அன்றிக்கே "திருமலையாழ்வார்தாம் ஜ்ஞான லாபத்தை உண்டாக்குவர்' என்று பிள்ளான் வார்த்தை.

(திருவாய்மொழி 2-10-7 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

'மலமறு மதி சேர் மாலிருஞ்சோலை' என்ற ஆழ்வார் அருளிச் செயலுக்குப் பிள்ளான் அருளிச்செய்த **நிர்வாஹம்** காட்டப்பெறுகிறது.

விளக்கம்

திருமாலிருஞ்சோலை மலை சந்திரன் போகும் பாதையைக் காட்டிலும் உயர்ந்து நிற்பதால், சந்திரன் போகும் போது மலையின் சிகரங்களில் தேய்ப்புண்டு, சாணை பிடிக்கப்பட்டது போலக் களங்கமற்று இருப்பான்; இதையே ஆழ்வார் 'மலமறு மதிசேர் மாலிருஞ்சோலை' என்கிறார் (மதி - சந்திரன்) என்று விளக்கிய உரையாசிரியர், **பிள்ளான்** உரைத்த மற்றொரு பொருளையும் காட்டுகிறார். "திருமாலிருஞ்சோலையானது களங்கமற்ற அறிவை (ஆத்மாவின் உண்மைத் தன்மை பற்றிய அறிவை) உண்டாக்கும் தன்மை பெற்றது; மலமற்ற மதியை (மதி-

அறிவு) சேர்க்கும்படியான மாலிருஞ்சோலை" என்று பிள்ளான் அருளிச் செய்தார்!

[494]

"பிள்ளை திருநறையூர் அரையரும் ப$_4$ட்டரும் பிரத$_3$க்ஷிணம் பண்ணா நிற்க, பின்னே ஸேவித்துக் கொண்டு போனேன்; அல்லாதார் கடுங்குதிரை போலே வாராநிற்க, இவர்கள் திருக்கோபுரங்களையும் திருமாளிகைகளையும் கண்ணாலே பருகுவாரைப் போலே பார்த்துக் கொண்டு வந்தார்கள்" என்று நஞ்சீயர் அருளிச் செய்வர்.

(திருவாய்மொழி 2-10-8 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

"மாலிருஞ்சோலை வலம் செய்து நாளும் மருவுதல் வழக்கே" (திருமாலிருஞ் சோலையை நாடோறும் வலம் வருதலே செய்யத்தக்கது) என்று ஆழ்வார் அருளிச்செய்துள்ளார். இத்தொடர்பில் வலம் வருதல் பற்றிய **ஐதிஹ்யம்** *ஒன்று கூறப்பெறுகிறது.*

விளக்கம்

எண் 42ன் விளக்கம் பார்க்க.

[495]

(முடிச்சோதி இத்யாதி)........... "ஸமாநத$_4$ர்மாத் ஸம்ஶயமாகையாலே உப$_4$ய கோடியிலும் அநுவர்த்திக்கிறது" என்பர் ப$_4$ட்டர்.

(திருவாய்மொழி 3-1-1 இருபத்து நாலாயிரப்படி வியாக்கியானம்)

நிகழிடம்

திருமாலிருஞ்சோலை அழகருடைய திவ்ய அவயவங்களுக்கும் திவ்ய ஆபரணங்களுக்கும் உள்ள பொருத்தத்தைப் அருளிச்செய்கின்ற ஆழ்வார்,

முடிச்சோதியாய் உனது முகச் சோதி மலர்ந்ததுவோ
அடிச்சோதி நீ நின்ற தாமரையாய் அலர்ந்ததுவோ
படிச்சோதி ஆடையொடும் பல்கலனாய் நின் பைம்பொன்
கடிச்சோதி கலந்ததுவோ திருமாலே கட்டுரையே

(எம்பெருமானே! உன் திருமுகத்தின் ஒளியானது கிரீடமாகப் பரந்ததோ? திருவடிகளின் ஒளியானது ஆஸனபத்மமாக (தாமரையாக) மலர்ந்ததோ? திருவரையின் ஒளியானது பீதாம்பரமாகவும், ஆபரணங்களாகவும்

1. இவ்விரு விளக்கங்களும் இருபத்துநாலாயிரப்படியிலும் இடம்பெற்றிருந்தாலும், இரண்டாம் விளக்கத்தை அருளிச்செய்தவர் பிள்ளான் என்பது அங்கு குறிப்பிடப்படவில்லை.

பரந்தனவோ?) என்று ஐயத்தோடு ஆழ்வார் அருளிச்செய்துள்ளார். இதுபற்றி பட்டர் அருளிச்செய்த **நிர்வாஹம்** *ஒன்று காட்டப்பெறுகிறது.*

விளக்கம்

இப்பாசுரத்தின் கருத்தை விளக்கியருளிய பட்டர், "இரண்டிற்கும் பொதுவான தன்மைகளைக் குறித்த ஐயமாகையால் இரண்டு கோடியிலும் (பக்கலிலும்) கொள்ள வேண்டும்" என்று அருளிச் செய்தாராம். அதாவது திருமுகத்தின் ஒளி திருமுடியாக ஆகியதோ அல்லது திருமுடியின் ஒளி திருமுகமாக ஆகியதோ: திருவடிகளின் ஒளி ஆஸனத்தாமரையாக ஆகியதோ அல்லது ஆஸனத்தாமரையின் ஒளி திருவடியாக ஆகியதோ? திருவரையின் ஒளி திருப்பீதாம்பரமாக ஆகியதோ, அல்லது திருப்பீதாம்பரத்தின் ஒளி திருவரையாக ஆகியதோ?" என்று ஆழ்வார் ஐயுற்றுக் கேட்பதாக பட்டர் விளக்கியருளினார்.[1]

[496]

(வாழ்த்துவார் பலராக) "ஆனால் தான் வந்ததென்? வேத₃ங்களில் அவர்கள் செய்த ஏற்றம் என்?" என்றாம் ப₄ட்டர் அருளிச் செய்வது.

(திருவாய்மொழி 3-1-7 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

வாழ்த்துவார் பலராக நின்னுள்ளே நான்முகனை
மூழ்த்த நீர் உலகெல்லாம் படையென்று முதல் படைத்தாய்

என்றருளிச் செய்கிறார் நம்மாழ்வார். இதற்கு இரண்டு **நிர்வாஹங்கள்** *காட்டப் பெறுகின்றன.*

விளக்கம்

"எம்பெருமானே! உன்னை வாழ்த்துபவர்கள் பலர் உண்டாவதற்காக 'உலகங்களை உண்டாக்குவாயாக!' என்று பிரமனை முதலில் படைத்தாய்" என்று சிலர் பொருளுரைத்தனர்.[2] *ஆனால் பட்டர் அங்ஙனல்லாமல் 'வாழ்த்துவார் பலராக' என்பதற்கு (ஆக என்பதனை வியங்கோள் வினை*

1. இக்கருத்துக்கள் ஈட்டிலும் விவரிக்கப்பட்டிருந்தாலும் அங்கு இவை பட்டர் அருளியவை என்று குறிப்பிடப்படவில்லை.

2. இப்பொருளே ஆறாயிரப்படியிலும், பன்னீராயிரப்படியிலும் காட்டப்பெறுகிறது. ஈடு முப்பத்தாறாயிரப்படியில் 'அன்றிக்கே, வாழ்த்துவார் பலருண்டாகைக்காக என்னுதல்' என்று இப்பொருள் இரண்டாவதாக (பட்டர் விளக்கத்திற்கு அடுத்தப்படியாகக்) காட்டப்படுகிறது. ஆனால் இருபத்து நாலாயிரப்படியில், "அன்றிக்கே வாழ்த்துவார் பலருண்டாகைக்காக என்னுதல்; இந்த நிர்வாஹம் ஸங்கதமேயாகிலும் சொல்லிப் போருவதொன்றன்று" என்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

முற்றாகக் கொண்டு "வாழ்த்துபவர்கள் பலர் உண்டாயிடுக! எத்தனை பேர் தான் சேர்த்து வாழ்த்தினால் தான் என்ன? வேதங்களைக் காட்டிலும் சிறப்பாகத் துதிக்கவல்லவர்கள் யாவரும் இலரே!" என்பராம். (உலகில் உள்ளவர்கள் தன்னை வாழ்த்தவேண்டும் என்பதற்காகவே எம்பெருமான் உலகோர்களைப் படைத்தான் என்று சிலர் பொருள் உரைத்தனர். உலகோர்கள் உய்யவேண்டும் என்பதற்காகவே எம்பெருமான் அவர்களைப் படைத்தான் ஆதலின், எத்தனைபேர் எம்பெருமானை வாழ்த்தினாலும், வேதங்களைக் காட்டிலும் அவர்களால் சிறப்பாகத் துதிக்க முடியுமோ? என்று பட்டர் விளக்கம் உரைத்தார்.

[497]

கீழ்ப்பாட்டில் ருத்₃ரன் தொடக்கமானார் ஏத்தமாட்டார்கள் என்றதாய், இப்பாட்டில் அவன் தனக்கும் ஜநகனான ப்₃ரஹ்மா ஸ்தோத்ரம் பண்ணினால் அதுவும் உனக்கு அவத்₃யமாம் என்பாருமுண்டு. "அவனையும் கீழ்ப்பாட்டிலே சொல்லிற்றாய், இதில் உப₄யப₄ாவனையுமுடைய இவனைப் போலன்றியே கேவலம் ப்₃ரஹ்மப₄ாவனையேயாய் இருப்பான் ஒரு ப்₃ரஹ்மாவை உத்ப்ரேக்ஷித்து, அவன் ஏத்தினாலும் தேவர்க்கு அவத்₃யமாமித்தனையன்றோ? என்கிறார்" என்று ப₄ட்டர் அருளிச் செய்யும்படி.

(திருவாய்மொழி 3-1-8 ஈடு வியக்கியானம்)

நிகழிடம்

மாசூணா வான்கோலத்து அமரர்கோன் வழிப்பட்டால்
மாசூணா உனபாத மலர்ச்சோதி மழுங்காதே

(குற்றமற்ற ஞானம் முதலியவற்றை ஆபரணங்களாக உடையவனும் தேவர்களுக்குக் கோமானுமான பிரமன் உன்னைத் துதித்தால் குற்றமற்ற உன் திருவடிகளின் ஒளியானது குறை உற்றதாகாதோ?) என்று ஆழ்வார் எம்பெருமானைக் கேட்கிறார். இப்பாசுரத்தில் 'மாசூணா வான்கோலத்து அமரர் கோன்' என்றுள்ளதற்கு இருவகை **நிர்வாஹங்கள்** *காட்டப்படுகின்றன.*

விளக்கம்

கீழ்ப்பாசுரத்தில் 'கேழ்த்தசீர் அரன் முதலா' என்று 'சிவன் முதலானவர்கள் உன்னைத் துதித்தாலும் உன் புகழுக்கு அவை குறையையே விளைவிக்கும்' என்று ஆழ்வார் அருளிச்செய்துள்ளபடியால், இப்பாசுரத்தில் அச்சிவனுக்கும் தந்தையான பிரமன் உன்னைத் துதித்தாலும் அதுவும் உனக்குக் குறையையே விளைவிக்கும் என்று ஆழ்வார் அருளிச்செய்வதாகச் சிலர் பொருளுரைத்தனர்.

ஆனால் பட்டர் வேறுவிதமாக விளக்கி அருளினார். கீழ்ப்பாசுரத்தில் 'நின்னுள்ளே நான்முகனை...... படைத்தாய்' என்றும் 'அரன்முதலா' என்றும்

ஆழ்வார் அருளிச் செய்துள்ளமையால் பிரமனையும், சிவனையும் அப்பாசுரத்திலேயே சொல்லியாகி விட்டது. எனவே இப்பாசுரத்தில் மீண்டும் அந்தப் பிரமனை ஆழ்வார் கூறவில்லை. அந்தப்பிரமன் கர்ம பாவனை (கர்மாநுஷ்டானம் = உலகைப்படைத்தல் முதலியன), ப்ரஹ்மபாவனை (உபாஸனம்= பகவானைச் சிந்தை செய்தல்) ஆகிய இரண்டு பாவனைகளையும் உடையவனாக இருப்பான். அப்படியல்லாமல் ப்ரஹ்ம பாவனை மட்டுமே உடைய ஒரு பிரமன் இருப்பதாக வைத்துக் கொள்வோம்; அவன் எம்பெருமானைத் துதித்தாலும் அதுவும் எம்பெருமானுக்குக் குறையையே விளைவிக்கும் என்று இப்பாசுரத்தில் ஆழ்வார் அருளிச்செய்கிறார் என்பது பட்டர் அருளிச்செய்யும் விளக்கமாகும்.

[498]

'மறையாதே' என்ற இதுக்கு 'மறையும், மறையும்' என்று சிற்றாட் கொண்டான் வார்த்தை.

(திருவாய்மொழி 3-1-9 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

மழுங்காத வைந்நுதிய சக்கரநல் வலத்தையாய்
தொழுங்காதல் களிறளிப்பான் புள்ளூர்ந்து தோன்றினையே!
மழுங்காத ஞானமே படையாக மலருலகில்
தொழும் பாயார்க்களித்தால் உன் சுடர் சோதி மறையாதே?

(ஒருபோதும் மழுங்காத முனையை உடைய சக்கராயுதத்தை வலது திருக்கரத்தில் ஏந்தியவனே! உன்னைத் தொழவேண்டும் என்று ஆசை கொண்டிருந்த கஜேந்திரனைக் காப்பதற்காக, கருடன் மீது எழுந்தருளி வந்து தோன்றினாய்! பொய்யாகாத ஸங்கல்பமாகிய ஞானத்தைக் கொண்டு உலகில் அடியவர்களுக்கு உதவினால் உன்னுடைய ஒளி குன்றிவிடாதோ?) என்று ஆழ்வார் எம்பெருமானைக் கேட்கிறார். இத்தொடர்பில் சிற்றாட்கொண்டான் என்பவர் அருளிச்செய்த **வார்த்தை** *எடுத்துக் காட்டப்பெறுகிறது.*

விளக்கம்

எம்பெருமான், மூன்று காரணங்களுக்காகத் தான் அவதாரங்களைச் செய்வதாக பகவத்கீதையில் அருளிச்செய்துள்ளான். "பரித்ராணாய ஸாதூநாம் விநாசாய ச துஷ்க்ருதாம் தர்மஸம்ஸ்த்தாபநார்த்தாய ஸம்பவாமி யுகே யுகே" (நல்லோர்களைக் காப்பதற்கும், தீயவர்களை அழிப்பதற்கும், தர்மத்தை நிலைநாட்டுவதற்கும் நான் ஒவ்வொரு யுகத்திலும் பிறக்கிறேன்) என்பது அவன் அருளிச்செய்துள்ள திருவாக்கு ஆகும். ஆனால், இவற்றையெல்லாம் செய்வதற்கு அவன் அவதரித்தாக வேண்டுமோ? நினைத்தமாத்திரத்திலேயே எல்லாச்

செயல்களையும் செய்வதற்கு வல்லமை படைத்த எம்பெருமான் மேற்கூறியவற்றையும் தன் நினைவினாலேயே (ஸங்கல்பத்தினாலேயே) முடிக்க முடியாதோ என்ற கேள்வி எழலாம். தீயவர்களை அழிக்கும் செயலை வேண்டுமானால் தன் நினைவினாலேயே எம்பெருமான் முடித்துவிடலாம். ஆனால் நல்லவர்களைக் காப்பது என்கின்ற செயலை மட்டும் அவன் தன் நினைவினால் மட்டும் முடித்துவிடமுடியாது. ஏனெனில், நல்லோர்களைக் காப்பது என்பது அவர்களுக்கு வேண்டாதனவற்றைத் தவிர்த்து வேண்டியவற்றைக் கொடுப்பதே ஆகும். வேண்டாதவற்றைத் தவிர்ப்பதைத் தன் நினைவினால் எம்பெருமான் முடித்தாலும், வேண்டியவற்றைத் தருவது என்பதை எம்பெருமான் தன்னுடைய ஸங்கல்பத்தினால் முடிக்க முடியாது. உதாரணமாக கஜேந்திராழ்வானுடைய சரித்திரத்தை எடுத்துக் கொள்வோம். கஜேந்திரனுக்கு வேண்டாதவற்றைத் தவிர்ப்பது என்பது, அவனைப் பிடித்துக் கொண்டிருக்கின்ற முதலையை அழிப்பதுதான். அதை எம்பெருமான் தன்னுடைய ஸங்கல்பத்தினாலேயே நிறைவேற்றிவிடலாம். அல்லது தான் இருந்த இடத்திலிருந்துகொண்டே சக்கராயுதத்தை ஏவி, அம்முதலையைத் துணித்திருக்கலாம். அதற்காக அவன் கஜேந்திரன் முதலையின் வாயில் அகப்பட்டுக் கொண்டு கிடந்த மடுவின் கரைக்கு ஓடிவரவேண்டும் என்ற அவசியம் இல்லை. ஆனால், கஜேந்திரன் எம்பெருமானை நேரில் சேவிக்க வேண்டும் என்றும், தான் பறித்த தாமரைப்பூவைத் தன்னுடைய கையால், எம்பெருமானுக்குத் தானே நேரில் ஸமர்ப்பிக்க வேண்டும் என்றும்தான் ஆசை கொள்கிறான். (இதையே ஆழ்வார் 'தொழும் காதல் களிறு' என்று பாசுரத்தில் அருளிச்செய்துள்ளார்.) இதை நிறைவேற்றவேண்டும் என்றால் எம்பெருமான் கஜேந்திரன் இருக்கும் இடத்திற்கு நேரில் வந்துதானே ஆகவேண்டும்! அப்படி அவன் வராமல் போனால், அடியவர்கள் வேண்டுபவற்றை அவர்களுக்குச் செய்து தருபவன் எம்பெருமான் என்கின்ற அவனது பெருமை குன்றிவிடாதோ! இதைத்தான் நம்மாழ்வார் இப்பாசுரத்தில் "உன்னை நேரில் கண்டு தொழ வேண்டும் என்று ஆவலுடன் இருக்கின்ற அடியவர்களை உன் ஸங்கல்பத்தினாலேயே (நினைவினாலேயே) நீ காப்பாற்றிவிட்டாயானால், உன்னுடைய பெருமை குன்றிவிடாதோ? (எனவே நீ நேரில் எழுந்தருளியே அவ்வடியவர்களைக் காக்க வேண்டும்)" என்று அருளிச்செய்துள்ளார்.

திருவரங்கத்தில், திருவத்யயன உத்ஸவத்தில் இப்பாட்டை அரையர் ஸேவிக்கும் போது, 'உன் சுடர்ச் சோதி மறையாதே' என்று அரையர் அனுஸந்தித்தவளவிலே, அங்கு கோஷ்டியில் இருந்த **சிற்றாட்கொண்டான்** என்பவர் 'மறையும் மறையும்' என்றாராம்.[1]

1. இருபத்து நாலாயிரப்படி உரையிலும் இவ்வைதிஹ்யம் இடம்பெற்றுள்ளது. எண் 11 பார்க்க.

[499]

ப$_4$ட்டர் திருக்கோட்டியூரில் எழுந்தருளியிருக்கச் செய்தே, சீராமப்பிள்ளை 'இவர் பரத்வானுப$_4$வத்தை ஆசைப்பட்டு, அது ஒரு தே$_3$ஶ விஶேஷத்திலே போனால் அனுப$_4$விக்குமதாய் நோவுபடுகிறாரல்லர்; அவதாரங்களில் அனுப$_4$விக்க ஆசைப்பட்டு 'பிற்பாடரானோம்' என்று நோவுபடுகிறார் அல்லர்; உகந்தருளின நிலங்களிலேயாய், அதுதன்னிலும் திருமலையிலேயாகில் அனுப$_4$விக்க இழிந்தது! பின்னை மேன்மேலென அனுப$_4$விக்குமதொழிய, இவர் இழந்து நோவுபடுகைக்குக் காரணமென்?" என்று கேட்க, "பரவ்யூஹ விப$_4$வங்களோடு, அர்ச்சாவதாரத்தோடு வாசியற த$_4$ர்ம்யைக்யத்தாலே விஷயம் எங்குமொக்கப் பரிபூர்ணமாயிருக்கும்; குறைந்து தோற்றுகிறவிடம் ப்ரதிபத்தாக்களுடைய ப்ரதிபத்தி தோ$_3$ஷத்தாலே; கடலருகே போகா நின்றால், தன் கண்ணாலே முகக்கலாம் அளவிறே காண்பது; அப்படியே அழகருடைய ஸௌந்த$_3$ர்யாதி$_3$களை அனுப$_4$விக்கப் புக்கவிடத்தில் விளாக்குலை கொண்டு அனுப$_4$விக்கலாய் இருந்ததில்லை.......

(திருவாய்மொழி 3-2 ஈடு வியாக்கியான ப்ரவேசம்)

நிகழ்டம்

மூன்றாம்பத்தின் முதல்பதிகமான 'முடிச்சோதியாய்' என்று தொடங்கும் திருவாய்மொழியில் திருமாலிருஞ்சோலையில் எழுந்தருளியிருக்கும் அழகருடைய எழிலில் ஆழ்வார் மூழ்கினார். அவ்வெம்பெருமானை முழுவதுமாக அனுபவிக்க ஆசைப்பட்டு அந்த ஆசை நிறைவேறாமையினாலே மிகவும் தளர்ந்து அடுத்த திருவாய்மொழியில் பாசுரங்கள் அருளிச் செய்கிறார். இது குறித்து ஒரு **ஸம்வாதம்** *காட்டப்பெறுகிறது.*

விளக்கம்

பட்டர் திருக்கோட்டியூரில் எழுந்தருளியிருக்கின்ற காலத்தில் அவருடைய தம்பியான சீராமபிள்ளை ஒரு ஐயம் எழுப்பினார்: "ஆழ்வார் இப்போது பரமபத அனுபவத்தை ஆசைப்பட்டிருந்தாராகில், அது வேறொரு தேசத்திலே சென்று அனுபவிக்க வேண்டியதாகையாலே, அது இப்போதே இங்கு கிடைக்க வில்லையே! என்று துடிக்கலாம். இராமாவதாரம், கிருஷ்ணாவதாரம் முதலிய அவதாரங்களை அனுபவிக்க ஆசை கொண்டிருந்தாலும், அவை ஏதோவொரு காலத்தில் முன்பே கழிந்து விட்டனவே! என்று துடிக்கலாம். இப்படி தேசத்தாலும் காலத்தாலும் பிற்பட்டவராய் ஆழ்வார் இப்போது துடிக்கவில்லையே! கீழே 'முடிச்சோதியாய்' என்கிற (3-1) திருவாய்மொழியில் திருமாலிருஞ்சோலை எனும் திவ்ய தேசத்தில் எழுந்தருளியிருக்கும் அழகரை அனுபவிக்க ஆசை கொண்டார் என்பது தெளிவாகின்றது. அவ்வனுபவத்தை ஆழ்வார் பெறமுடியாமல்

துடிக்கிறார் என்பது பொருந்தவில்லையே! அவ்வனுபவத்தைப் பெறுவதற்குத் தடை என்ன? அர்ச்சாவதாரத்தை அனுபவிக்க இழிந்தவர் மேலும் மேலும் அவ்வனுபவத்தைப் பெறுவதற்கு பதிலாக, இப்படி இழந்து துடிப்பதற்குக் காரணம் என்ன?" என்பது அவருடைய ஐயம். அதற்கு பட்டர் "ஆழ்வார் அனுபவிக்க ஆசைப்பட்ட இடம் பரமபதமானால் என்ன? விபவாவதாரமானால் என்ன? அர்ச்சாவதாரமானால் என்ன? எல்லா இடத்திலும் ஒரே எம்பெருமானன்றோ எழுந்தருளியிருக்கிறான். எல்லாவிடத்திலும் அவன் பூர்ணமாகவே எழுந்தருளியிருக்கிறான். அவன் ஓரிடத்தில் பூர்ணமாக எழுந்தருளியிருக்கிறான் என்றும் மற்றோரிடத்தில் குறைவாக எழுந்தருளி இருக்கிறான் என்றும் தோன்றுவது அவரவர்களுடைய நம்பிக்கை இன்மையையே காட்டுகிறது. எனவே எம்பெருமான் பூர்ணமாக எழுந்தருளியுள்ள அர்ச்சாவதாரத்தை ஆழ்வார் பூர்ணமாக அனுபவிக்க ஆசை கொண்டார். ஆனால் எம்பெருமானைப் பூர்ணமாக அனுபவிப்பது என்பது முடியாத செயல். கடலை முழுவதுமாகக் காண வேண்டும் என்ற நினைவுடன் கடலருகே சென்றாலும், ஒருவன் தன் கண்ணாலே எவ்வளவு காணமுடியுமோ அவ்வளவு தானே கடலைக் காணமுடியும்? எனவே எம்பெருமானைப் பூர்ணமாக அனுபவிக்க முடியவில்லையே என்று ஆழ்வார் துடிக்கிறார்" என்றார்.

[500]

(ஆக்கையின் வழியுழல்வேன்) "நீ ஒன்றை நினைத்துத் தந்தாய்; நான் அதின் வழியே போந்தேன். தெப்பத்தை நூக்கிப் போய்ப் பெருமாளை அனுபவிக்கலாயிருக்க 'ஶரீரம் பாங்கன்று' என்று நீர்வாக்காலே போய்க் கடலிலே புகுவாரைப் போலே இதர விஷயப்ராவண்யத்துக்கு உடலாக்கி அநர்த்தத்தை விளைத்துக் கொண்டேன்" என்றார் எம்பார்.

(திருவாய்மொழி 3-2-1 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

"அந்நாள் நீ தந்த ஆக்கையின் வழி உழல்வேன்" (படைக்கின்ற அக்காலத்தில் நீ கொடுத்த உடலின் வழியிலேயே நடந்து திரிகின்றேன்) என்கிறார் ஆழ்வார். "எம்பெருமானே! இவ்வுடலைக் கொண்டு பிறவியாகிற பெருங்கடலை இவன் கடக்கட்டும் என்று நீ இவ்வுடலைக் கொடுத்தாய். ஆனால் நான் அவ்வுடலின் வழியிலேயே போய்க் கெட்டுத்திரிகிறேன்" என்று ஆழ்வார் கூறுகிறார். இதை விளக்கி எம்பார் அருளிச்செய்த **வார்த்தை** கூறப்படுகிறது.

விளக்கம்

"எம்பெருமானே! நீ ஒன்றை நினைத்து எனக்கு இவ்வுடலைக் கொடுத்தாய். ஆனால் நான் வேறுவிதமாகச் செய்தேன். காவிரியாற்றைக் கடந்து சென்று

பெருமாளை சேவிக்க எண்ணியவனுக்கு ஒரு தெப்பத்தை (படகைக்) கொடுக்க, அவன் துடுப்புக்களைத் துழாவி அக்கரை சேர்ந்து பெருமாளை அனுபவிக்கலாமாயிருக்க, 'உடம்பு சரியில்லை' என்று துடுப்புக்களை துழாவாமலே இருந்து விட, தண்ணீர் இழுத்த இழுப்புக்குப் படகு சென்று கடலிலே விழுவதைப் போலே, உன்னை வந்தடைவதற்காக இவ்வுடலை நீ கொடுக்க, அது இழுத்த இழுப்பிற்கு வசப்பட்டு ஸம்ஸாரமாகிற பெருங்கடலிலே விழுந்தேன் (என்கிறார் ஆழ்வார்)" என்று எம்பார் அருளிச்செய்தார்.

[501]

(இனிவந்து கூடுவனே) "இனிவந்து கிட்டுகை என்று ஒரு பொருளுண்டோ என்று நிராஶராகிறார்" என்று முன்புள்ள முதலிகள். எம்பெருமானார் "நிராஶரானால் பின்னை முடிவார் ஒருவர்; ஒன்பதாம் பாட்டில் நிராஶராக, பத்தாம் பாட்டில் அவன் வந்து ஸமாத₄ானம் பண்ணினானாக அமையும்" என்று அருளிச் செய்வர்.

(திருவாய்மொழி 3-2-1 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

"எந்நாள் யானுன்னை இனிவந்து கூடுவனே" (எம்பெருமானே! இனி உன்னை நான் என்றைக்கு அடையப் போகிறேன்!) என்கிறார் ஆழ்வார். இதுபற்றி **நிர்வாஹங்கள்** *கூறப்பெறுகின்றன.*

விளக்கம்

"'இனி நான் உன்னை வந்து அடைவது என்பது இல்லை' என்று ஆழ்வார் மனம் தளர்ந்துவிட்டார்" என்று எம்பெருமானாருக்கு முற்பட்ட ஆசாரியர்கள் - பொருளுரைத்தார்கள். இதைக் கேட்ட எம்பெருமானார், "ஆழ்வார் இனி எம்பெருமானை அடைய முடியாது என்று மனம் தளர்ந்துவிட்டாரானால், பிறகு அவர் முடிந்து விடுவர். பிறகு பாசுரங்களை அருளிச் செய்திருக்க முடியாது. ஆனால் இப்பாசுரத்தில் போலவே மேலும் ஒன்பது பாசுரங்களை அருளிச் செய்கிறார் ஆழ்வார். எனவே அப்படிக் கூறக்கூடாது. 'இன்றைக்கே உனது திருவடிகளில் சேரவேணும் என்றிருக்கிற நான் உன்னை என்று வந்து கூடப் போகிறேன்?' என்று இப்பாசுரம் முதல் ஒன்பதாம் பாசுரம் வரை ஆழ்வார் கேட்கிறார். ஒன்பதாம் பாசுரத்தில் ஆழ்வார் மனம் தளர உடனே பத்தாம் பாசுரத்தில் எம்பெருமான வந்து அவரைச் சமாதானப் படுத்தினான். ("கண்ணனைக் கண்டு கொண்டு நிலைப்பெற்றது என்னெஞ்சம்" என்று பத்தாம் பாசுரத்தில் ஆழ்வாரே அருளிச் செய்துள்ளார்.) எனவே ஆழ்வாருடைய தன்மையைக் கருத்தில் கொண்டால் இப்படிப் பொருள் கொள்வதே பொருத்தமானது" என்று அருளிச் செய்தார்.

[502]

"ஓவுதலின்றி மேவு துன்ப வினைகளை விடுத்துமிலேன்; ஓவுதலின்றி உன் கழல் வணங்கிற்றிலேன்" என்று எம்பார் அருளிச் செய்யும்படி.

(திருவாய்மொழி 3-2-8 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

மேவு துன்ப வினைகளை விடுத்துமிலேன்
ஓவுதலின்றி உன் கழல் வணங்கிற்றிலேன்.

என்றருளிச் செய்கிறார் நம்மாழ்வார். 'பிரிக்க முடியாதபடி பொருந்தியிருக்கின்றனவும் பலபல துன்பங்களை விளைப்பனவுமான பாவங்களைப் போக்கிக் கொண்டேன் அல்லேன்: ஓவுதலின்றி (நிரந்தரமாக) உன் திருவடிகளை வணங்குவதும் செய்திலேன்' என்று இங்கு ஆழ்வார் அருளிச் செய்வதாகப் பொருளுரைத்த உரையாசிரியர், இங்கு எம்பார் அருளிச்செய்த **நிர்வாஹம்** *ஒன்றையும் எடுத்துக் காட்டுகிறார்.*

விளக்கம்

'ஓவுதலின்றி' என்ற சொல்லை இரண்டு அடிகளோடும் கூட்டி எம்பார் பொருளுரைப்பராம். அதன்படி ஓவுதலின்றி என்பதற்கு ஓய்வு இல்லாமையாலே என்பது பொருள். எனக்குள்ள அவகாசம் எல்லாம் தீவினைகளைச் செய்வதற்கே சரிப்பட்டுப் போயின. 'ஓவுதலின்றி மேவு துன்ப வினைகளை விடுத்துமிலேன்' - ஓய்வில்லாமல் தீவினைகளை விடாமல் செய்தேன்; 'ஓவுதலின்றி உன் கழல் வணங்கிற்றிலேன்' - எனவே உன் திருவடிகளை வணங்குவதற்கு ஓய்வு இல்லாதவனாக ஆகி விட்டேன். (உன் திருவடிகளை வணங்குவதற்கு அவகாசமும் இல்லாதவனாகி விட்டேன்) என்கிறார் ஆழ்வார் என்பது எம்பார் தரும் விளக்கம்.

[503]

(அலைப்பூணுண்ணும்) "அத்தோடு ஸஜாதீயமான அல்லல்" என்று எம்பார் அருளிச் செய்வது. அவ்வோபாதி க்லேஶம் போருமாயிற்று ப$_4$க$_3$வத் விஶ்லேஷத்தால் வருமது இவர்க்கு. அன்றிக்கே, "ப$_4$க$_3$வத்க$_3$லாப$_4$மேயான பின்பு யமவஶ்யதையும் வந்ததேயன்றோ! அந்த யமவஶ்யதை போம்படியாக!" என்று ஆண்டான் நிர்வஹிக்கும்படி.

(திருவாய்மொழி 3-2-10 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

தலைப்பெய் காலம் நமன்றமர் பாசம் விட்டால்
அலைப்பூணுண்ணும் அவ்வல்லல் எல்லாம் அகல

(யமதூதர்கள் வந்து கிட்டும் போது பாசக்கயிற்றை வீசினால் அப்போது அலைச்சல் படுகையாகிற அந்தத் துன்பமெல்லாம் நீங்கும்படியாகக் கண்ணனைக் கண்டேன்) என்கிறார் ஆழ்வார். இங்கு 'அவ்வல்லல்' என்பதற்கு எம்பார், ஆண்டான் ஆகிய இருவருடைய **நிர்வாஹ**ங்களும் எடுத்துக்காட்டப்படுகின்றன.

விளக்கம்

இங்கு யமதூதர்களால் நேரும் துன்பத்தைச் சொன்னது, அத்துன்பத்தோடு ஒத்ததான, பகவானைப் பிரிந்திருக்கையாகிற துன்பத்தைச் சொன்னபடி என்பது **எம்பார்** கருத்து. அதாவது எம்பெருமானைப் பிரிந்து படும் துன்பமானது யமதூதர்களால் நேரும் துன்பத்திற்குச் சமமானது. அவ்வல்லல் தொலையும்படியாக எம்பெருமானை ஸேவிக்கப் பெற்றேன் என்கிறார் ஆழ்வார் என்பது எம்பார் தரும் விளக்கம்.[1]

எம்பெருமானை அடைய முடியாதவர்கள் யமனுடைய தண்டனையிலிருந்து தப்ப முடியாது அன்றோ! எனவே யமதூதர்கள் வந்து கிட்டிப் பாசக்கயிற்றை வீசினால் ஏற்படக் கூடிய துயரம் பொறுக்கமுடியாததாக இருக்கும். அவ்வல்லல் எனக்கு நேரவொண்ணாதபடி எம்பெருமானை ஸேவிக்கப் பெற்றேன் என்று ஆழ்வார் அருளிச் செய்கிறார் என்பது **முதலியாண்டான்** தரும் விளக்கமாகும்.[2]

[504]

ஆழ்வார் திருவரங்கப்பெருமாளரையர் இத்திருவாய்மொழி பாடப்புக்கால் 'ஒழிவில் காலமெல்லாம், காலமெல்லாம், காலமெல்லாம்' என்று இங்ஙனே நெடும் போதெல்லாம் பாடி, மேல் போக மாட்டாதே அவ்வளவிலே தலைக்கட்டிப் போவாராம்.

(திருவாய்மொழி 3-3-1 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

'ஒழிவில் காலம் எல்லாம் உடனாய் மன்னி,
வழுவிலா அடிமை செய்ய வேண்டும் நாம்
தெழிகுரல் அருவித் திருவேங்கடத்து
எழில்கொள் சோதி எந்தை தந்தை தந்தைக்கே

(கம்பீரமான ஒலியை உடைய அருவிகள் பொருந்திய திருவேங்கட மலையில் எழுந்தருளியுள்ள எமது குலநாதனான பெருமானுக்கு ஓய்வில்லாத காலம்

1. இக்கருத்து இருபத்துநாலாயிரப்படியிலும் இடம்பெற்றுள்ளது. ஆனால் இதை அருளிச்செய்தவர் எம்பார் என்பது அங்கு குறிப்பிடப்பெறவில்லை.

2. இவ்வாறு ஆண்டான் அருளிச்செய்தமை இருபத்துநாலாயிரப்படியில் குறிப்பிடப்பெற்றுள்ளது.

முழுவதும் கூடவே இருந்து, குற்றமற்ற கைங்கர்யங்களை அடியேன் செய்ய வேண்டும்) என்று ஆழ்வார் அருளிச்செய்துள்ளார். இத்தொடர்பில் ஓர் **ஐதிஹ்யம்** எடுத்துக் காட்டப்பெறுகிறது.

விளக்கம்

எண் 53ன் விளக்கம் காண்க.

[505]

"இது ஆளவந்தார் அருளிச் செய்ததேயாகிலும் நான் என்வாயால் இப்பாசுரம் சொல்லமாட்டேன்" என்னுமாம் அனந்தாழ்வான்.

(திருவாய்மொழி 3-3-4 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

"நீசனேன் நிறைவு ஒன்றுமிலேன்" (கடைகெட்டவன், குணங்கள் எதுவும் இல்லாதவன்) என்று ஆழ்வார் தம்மைப்பற்றி அருளிச்செய்து கொள்கிறார். இத்தொடர்பில், ஆளவந்தார் ஸ்தோத்ரரத்னத்தில் அருளிச்செய்த "அமர்யாத: க்ஷுத்ர:" என்ற சுலோகத்தை மேற்கோளாக எடுத்து விளக்கும் உரையாசிரியர், இதுபற்றி அனந்தாழ்வான் அருளிச்செய்த **வார்த்தை** ஒன்றினையும் எடுத்துக் காட்டுகிறார்.

விளக்கம்

எண் 102ன் விளக்கம் பார்க்க.

[506]

"'என் தண்மையும் நிறைவில்லாமையுமிறே நான் இவ்வார்த்தை சொல்லிற்று' என்கிறார்" என்பராம் பிள்ளை திருநறையூரரையர்.

(திருவாய்மொழி 3-3-4 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

"ஈசன் வானவர்க்கு என்பன் நீசனேன் நிறைவொன்றுமிலேன்" என்றருளிச் செய்கிறார் ஆழ்வார். இவ்விரண்டு சொற்றொடர்களுக்கிடையே உள்ள சேர்த்தியை விளக்கிப் பிள்ளை திருநறையூர் அரையர் அருளிச்செய்த **நிர்வாஹம்** காட்டப்பெறுகிறது.

விளக்கம்

"நான் நீசனாகவும் நிறைவு ஒன்றும் இல்லாதவனாகவும் இருப்பதால் அன்றோ திருவேங்கடமுடையானுக்கு ஒரு பெருமை சொல்வதாக நினைத்து 'வானவர்க்கு ஈசன்' என்றேன் என்கிறார் ஆழ்வார்" என்று கூறுவராம். அதாவது

திருவேங்கடமுடையானுக்குப் பெருமை கூறுவதாக நினைத்து, 'ஈசன் வானவர்க்கு என்பன்' (= நித்யசூரிகளுக்குத் தலைவன்) என்று அவனுடைய மேன்மையைக் கூறிவிட்டேன். அது தேசமோ? (=அதுவோ அவனுக்குப் பெருமை?) அல்ல, அல்ல. 'நீசனேன் நிறைவு ஒன்றுமிலேன் என்கண் பாசம் வைத்த பரஞ்சுடர்ச் சோதிக்கு' (நீசனாகவும் நிறைவு ஒன்றும் இல்லாதவனாகவும் இருக்கின்ற என்னிடத்தில் பாசம் வைத்து அதானால் ஒளிபெற்றிருக்கின்ற எம்பெருமானுக்கு!) அவனுக்குப் பெருமை சேர்ப்பது கடைகெட்டவனான என்னிடத்திலும் பாசம் வைத்திருக்கின்ற அவனுடைய எளிமையே (ஸௌலப்யமே) தவிர மேன்மை (பரத்வம்) அல்ல என்பதை உணராமல் 'ஈசன் வானவர்க்கு' என்று அவனுடைய மேன்மையைக் கூறினேனே! நான் நீசனாகவும் நிறைவு ஒன்றும் இல்லாதவனாகவும் இருப்பதால் அன்றோ இப்படி அவனுக்குப் பெருமை கூறுவதாக நினைத்து, அவனுடைய எளிமையைக் கூறாமல் மேன்மையைக் கூறினேன் என்கிறார் ஆழ்வார் - என்பது **பிள்ளை திருநறையூர் அரையர்** *தரும் விளக்கம்.*

[507]

(என்கண் பாசம் வைத்த) அன்றியே, "'எனக்குத் தன்பக்கலிலே ஸங்க$_4$ம் உண்டாம்படி பண்ணினான் என்கிறார்' என்று நிர்வஹிப்பாருமுண்டு" என்று அருளிச் செய்வர்.

(திருவாய்மொழி 3-3-4 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

வானவர்க்கு ஈசனானவன் என்கண் பாசம் வைத்தான் என்றருளிச் செய்கிறார் ஆழ்வார். இதை விளக்குகின்ற உரையாசிரியர் "வானவர்க்கு ஈசனாக மட்டும் இருக்கின்ற எம்பெருமான், தன் பாசத்தையெல்லாம் வைத்தது என்னிடம் தான் என்கிறார் ஆழ்வார்" என்றுரைத்து, மற்றொரு **நிர்வாஹ***த்தையும் எடுத்துக் காட்டுகிறார்.*

விளக்கம்

என்கண்பாசம் வைத்த - எனக்கு அவனிடத்தில் பாசம் உண்டாகும்படியாகப் பண்ணினான் என்று ஆழ்வார் அருளிச் செய்கிறார் என்று கூறுவாரும் உண்டு என்று **(நஞ்சீயர்)** *அருளிச் செய்வர்.*

[508]

(மெய்ம்மேல் வினை முற்றவும்) 'கடன்கள் மெய்ம்மேல் வினை முற்றவும் வேம் - ஃபலிக்கும்' என்று இங்ஙனே ஆளவந்தார் அருளிச் செய்யும்படி.

இத்தை எம்பெருமானார் கேட்டருளி, 'இதுக்கு வேதாந்தத்திற் சொல்லுகிற கட்டளையிலே பொருளாக அமையாதோ?' என்றிங்ஙனே அருளிச் செய்வர்; அதாவது - उत्तरपूर्वाघयोरश्लेषविनाशौ (உத்தரபூர்வாக$_4$யோரஶ்லேஷவிநாஶௌ) என்றும், एवं हास्य सर्वेपाप्मानः प्रधूयन्ते (ஏவம் ஹாஸ்ய ஸர்வேபாப்மாநः ப்ரதூ$_4$யந்தே) என்றும் சொல்லுகிறபடியே.

(திருவாய்மொழி 3-3-6 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

'வேங்கடத்துறைவார்க்கு நம:' என்பவர்களுக்கு 'வேம் கடங்கள் மெய் மேல் வினை முற்றவும்' என்று நம்மாழ்வார் அருளிச் செய்கிறார். இங்கு, 'கடங்கள்' என்ற சொல்லும் 'மேல் வினை' என்ற சொல்லும் பாவங்களைக் குறிக்கின்றன. இப்படி இரண்டு சொற்களாலே பாவங்களைக் குறிப்பிடுவதன் கருத்தை விளக்கிய ஆளவந்தார், எம்பெருமானார் ஆகியோரது **நிர்வாஹங்கள்** *எடுத்துக் காட்டப் பெறுகின்றன.*

விளக்கம்

கடங்கள் = கடன்கள். ஒரு மனிதன் பிறக்கும் போதே மூன்று கடன்களுடன் பிறக்கிறான். பிரம்மசரியம் அனுட்டித்து ரிஷிகளுக்குப்பட்ட கடனையும், யாகங்களைச் செய்து தேவர்களுக்குப்பட்ட கடனையும், பிள்ளைகளைப் பெற்று பித்ருக்களுக்குப்பட்ட கடனையும் தீர்க்கிறான் என்று சாத்திரங்கள் கூறுகின்றன. ஆனால் 'வேங்கடத்துறைவார்க்கு நம:' என்று சொல்லி விட்டால் அம்மூன்று கடன்களுமே தீர்க்கப்பட்டனவாக ஆகிவிடும். - கடன்கள் வேம் (=வெந்து போய் விடும்). இதைத் தவிர மெய் என்று கூறப்படும் உடலோடு கூடியிருத்தலால் இவன் சில வினைகளைச் (பாவங்களைச்) செய்ய நேருகிறது. அந்த மெய் மேல் வினைகளும் 'வேங்கடத்துறைவார்க்கு நம:' என்று கூறுவதனால் வேம்-வெந்து போய் விடும். ஆக, பிறப்பினால் ஏற்படும் முக்கடன்களும், உடலோடு கூடியிருத்தலால் ஏற்படக் கூடிய பாபங்களும் இங்கு முறையே கடங்கள் என்ற சொல்லாலும், மெய் மேல்வினை என்ற சொல்லாலும் குறிப்பிடப்படுகின்றன - இது **ஆளவந்தார்** *அருளிய விளக்கம்.*

இதை எம்பெருமானார் கேட்டருளி, "இதற்கு வேதாந்தத்தில் - உபநிஷதங்களில் கூறப்பட்டுள்ள கருத்தைப் பின்பற்றியும் பொருள் கூறலாமே" என்று கூறினாராம்.

எம்பெருமானைச் சரணம் பற்றுபவனுக்கு, அவனுடைய பாபங்கள் அனைத்தும் நசித்து விடுகின்றன என்று சாந்தோக்ய உபநிஷத்தில் கூறப்படுகிறது.

தத்யதா இஷீகதூலம் அக்நௌப்ரோதம் ப்ரதூயேத
ஏவம் ஹாஸ்ய ஸர்வேபாப்மாந: ப்ரதூயந்தே.

(எப்படி நெருப்பிலிட்ட பஞ்சு போன்ற பொருள்கள் உருமாய்ந்து போகின்றனவோ அப்படியே (எம்பெருமானைச் சரணம் பற்றுவதற்கு முன்னர் அவன் செய்த) பாவங்கள் அனைத்தும் உருமாய்ந்து போகின்றன)

தத்யதா புஷ்கரபலாசே ஆபோ ந ச்லிஷ்யந்தே
ஏவம்விதி பாபம்கர்ம ந ச்லிஷ்யதே

(எப்படித் தாமரை இலையில் தண்ணீர் ஒட்டுவதில்லையோ அப்படியே, (எம்பெருமானைச் சரணம் பற்றிய பிறகும் உடலோடு கூடியிருப்பதால், தன்னை அறியாமல் செய்யும்) பாவங்கள் இவனிடத்தில் ஒட்டுவதில்லை.)

ஆக, சாந்தோக்ய உபநிஷத்தில் பூர்வாகங்கள் (பகவானைச் சரணம் பற்றுவதற்கு முன்பு செய்த பாவங்கள்) உத்தராகங்கள் (பகவானைச் சரணம் பற்றிய பின்பு செய்யும் பாவங்கள்) என்று இரண்டு விதமான பாவங்கள் கூறப்பட்டுள்ளன. ப்ரஹ்ம ஸூத்ரத்திலும் "தததிகம உத்தர பூர்வாகயோ: அச்லேஷவிநாசௌ தத்வ்யபதேசாத்" (4-1-13) என்று இது பற்றிக் கூறப்பட்டுள்ளது. இவ்விரு பாவங்களையே இப்பாசுரத்தில் கடங்கள் என்ற சொல்லாலும் மேல்வினை என்ற சொல்லாலும் ஆழ்வார் குறிப்பிடுகிறார். கடங்கள் - முன்பு செய்த பாவங்கள் வேம் - நெருப்பிலிட்ட பஞ்சு போலே வெந்து போகும். மேல் வினை - பின்பு செய்யும் பாவங்கள் (சாரா) - ஒட்டாது. மெய் - இது உண்மை. - இது எம்பெருமானார் அருளிய விளக்கமாகும். (இவ்விளக்கத்தில் 'சாரா' என்ற சொல்லை வருவித்துக் கொள்ள வேண்டும்.)[1]

[509]

இவ்விடத்தில் பட்டர் - மொட்டைத் தலையன் விஷயமான இதிஹாஸம்.

(திருவாய்மொழி 3-3-6 இருபத்து நாலாயிரப்படி வியாக்கியானம்)

நிகழ்டம்

வேங்கடத்துறைவார்க்கு நம: என்று கூறிவிட்டால் பலபல பிறவிகளில் செய்த பாவங்களும் தொலைந்து விடும் என்கிறார் ஆழ்வார். இச்சிறிய செயலால் அவ்வளவு பாவங்களும் எப்படித் தொலையும் என்ற கேள்விக்கு விடையாக முதலில் ஸ்ரீராமாயணத்திலிருந்து ஒரு நிகழ்ச்சியை எடுத்துக் காட்டுகிறார் உரையாசிரியர். இராமபிரான் இலங்கை செல்வதற்கு வழிவேண்டிக் கடலரசனை நோக்கி மூன்று நாள் தரையிலே சயனித்து, சரணாகதி செய்தார். மூன்று நாள்களாகியும் கடலரசன் வராமல் போகவே கோபம் கொண்டு, அக்கடலையே வற்ற அடித்து விடுவதாக அம்பு தொடுத்து நின்றார். அதுகண்டுக் கடலரசன் அஞ்சி நடுங்கி வந்து இராமபிரான் முன் பணிவுடன் நின்றதைக் கண்டபின்,

1. இருபத்துநாலாயிரப்படியிலும் இவ்விரு விளக்கங்களும் கூறப்படுகின்றன.

'உன்மீது எய்வதற்காகவே இந்த அம்பைத் தொடுத்தேன்' என்று கூற வெட்கப்பட்டு, "உன் எதிரிகள் யாராவது இருந்தால் சொல்; அவர்கள் மீது இந்த அம்பை எய்து அவர்களை அழித்து விடுகிறேன்" என்றார். இவ்விடத்தில் பட்டர் அருளிச்செய்த **கதை** ஒன்று எடுத்துக்காட்டப்பெறுகிறது.

விளக்கம்

முன்னொருகால், தலையில் மயிர் முடியில்லாதவன் (மொட்டைத் தலையன்) ஒருவன் வயல் வெளியில் நின்று கொண்டு நெல்லை அளந்து கொண்டிருந்தான். அவ்வழியே வந்த மற்றொருவன் அவனைப் பார்த்து "இப்படி வேகாத வெய்யிலிலே தலையிலுள்ள மயிர்முடி வாடுவதையும் பொருட்படுத்தாமல் எதற்காகத் தனியே நின்று கொண்டிருக்கிறீர்?" என்று கேட்டான். (இல்லாத ஒன்றை இருப்பதாக ஏற்றிச் சொன்னால் எவருக்குமே மகிழ்ச்சி உண்டாவது இயற்கை அல்லவா?) இதைக் கேட்டு மகிழ்ந்த மொட்டைத் தலையன் அவனுக்கு ஒரு கோட்டை நெல்லை தானமாகக் கொடுத்தான். அவனும் அந்த நெல்லை எடுத்துக் கொண்டு சற்று தூரம் சென்றபோது எதிரே வந்த வழிப்போக்கன் ஒருவன் "இவ்வளவு நெல் எங்கே கிடைத்தது?" என்று கேட்க இவனும், "உன்னைப் போல் ஏமாந்த மொட்டைத் தலையன் கொடுத்தான்" என்று கூறினான். அந்த வழிப்போக்கன் நேராக அந்த மொட்டைத் தலையனிடம் சென்று "உம்மை மொட்டைத் தலையன் என்று இழித்துக் கூறுகிற அவனுக்குப் போய் ஒரு கோட்டை நெல்லைக் கொடுத்தீரே!" என்று கேட்டான். உடனே அந்த மொட்டைத் தலையன் "என் நெல்லையும் பெற்றுக் கொண்டு என்னையும் மொட்டைத் தலையன் என்றா கூறுகிறான்?" என்று கோபத்துடன் அவனைப் பின்தொடர்ந்து வந்தான். தூரத்திலிருந்தே திரும்பிப் பார்த்து இதை உணர்ந்து கொண்ட அவன் (நெல்லைப் பெற்றுக் கொண்டவன்) மிகவும் சாமர்த்தியமாக அந்த மொட்டைத் தலையனைப் பார்த்து "எதற்காக நீங்கள் இந்த வெய்யிலில் உமது குழல்கள் (மயிர் முடிகள்) அசைய அசைய ஓடிவருகின்றீர்? கூப்பிட்டால் நானே வந்திருப்பேனே!" என்று கூறினானாம். இப்படி மறுபடியும் புகழ்ச்சியைக் கேட்டவுடனே, மொட்டைத் தலையன் தன் கோபத்தையெல்லாம் மறந்து "ஒன்றுமில்லை, இன்னும் ஒரு கோட்டை நெல் தரலாமென்று வந்தேன்" என்று கூறினானாம். அதேபோலத்தான் இராமபிரானும் கோபத்துடன் அம்பைத் தொடுத்தபோது, பணிவுடன் வந்த கடலரசனை நோக்கி 'உன்மீது தொடுக்கப்பட்ட அம்பு' என்று கூறுவதற்கு வெள்கி 'உன் விரோதிகளைச் சொல் அவர்கள்மீது எய்கிறேன்' என்று கூறிவிட்டான் என்று **பட்டர்** அருளிச்செய்வர்!

1. ஈடு உரையிலும், "இவ்விடத்திலே பட்டர் ஒரு இதிஹாஸம் அருளிச் செய்வர்" என்று குறிப்பிடப் பெற்று, கதையும் விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

[510]

(தாங்கள் இத்யாதி) அதிகாரி வைலக்ஷண்யமும், வ்ருத்தி வைலக்ஷண்யமும் தோற்றும்படி, 'தாங்கள் தங்கட்கு' என்று இங்ஙனை ஊன்றிச் சொல்லுமாம் அனந்தாழ்வான்.

(திருவாய்மொழி 3-3-6 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

வேங்கடங்கள் மெய்மேல் வினை முற்றவும்
தாங்கள் தங்கட்கு நல்லனவே செய்வார்

(முன் செய்த பாவங்களும், இனி விளையும் பாவங்களும் அழிந்துவிடும்; அடியவர்களான தாங்கள் தங்கள் ஸ்வரூபத்திற்கு (தன்மைக்கு) தகுதியான தொண்டைச் செய்யப்பெறுவர்) என்கிறார் ஆழ்வார். இத்தொடர்பில் ஓர் **ஐதிஹ்யம்** *கூறப்பெறுகிறது.*

விளக்கம்

அடியவர்கள் தங்கள் பாவங்களைத் தொலைத்துக் கொள்வதற்கு மிகப்பெரிய காரியங்களைச் செய்யத் தேவையில்லை. தாங்கள், தங்களுக்கு நன்றான கைங்கர்யத்தைப் பண்ணவே, பாவங்கள் தன்னடையே தொலைந்து விடும். மற்ற விஷயங்களில் பற்றில்லாதவர்களும், கைங்கர்யம் செய்வதில் ஆசையுடையவர்களுமானவர்கள், தங்கள் ஸ்வரூபத்திற்குத் தகுதியான கைங்கர்யத்தையே செய்வார்கள் எனும் பொருள் தொனிக்கும்படி - தாங்கள் - தங்கட்கு என்ற சொற்களை **அனந்தாழ்வான்** *ஊன்றிச் சொல்லுவராம்.*

[511]

(புகழு நல்லொருவன் என்கோ) பிள்ளான் "ஸர்வைஸ்ஸம்ஸ்தூயமாநன் என்பேனோ" என்னும்.

(திருவாய்மொழி 3-4-1 இருபத்துநாலாயிரப்படி வியாக்கியானம்)

நிகழிடம்

'புகழு நல்லொருவன் என்கோ' என்று ஆழ்வார் அருளிச் செய்கிறார். இதற்குப் பிள்ளான் அருளிய **நிர்வாஹம்** *ஒன்று எடுத்துக் காட்டப்படுகிறது.*

விளக்கம்

'வேதம் முதலிய நூல்களாலே புகழப் பெற்ற நன்மையையுடைய ஒப்பற்றவன் என்பேனோ' என்று இதற்குப் பொருள் கொள்ளலாம். **பிள்ளான்** *'ஸர்வை: ஸம்ஸ்தூயமாநன் என்பேனோ' (எல்லோராலும் புகழப்படுபவன் என்பேனோ)*

என்று இதற்குப் பொருளுரைத்தார். அதாவது புகழும் - எல்லோராலும் புகழப்படுபவன் என்பேனோ; நல் - ஆனந்தம் முதலிய எல்லா குணங்களையும் உடையவன் என்பேனோ, ஒருவன் - ஒப்பற்றவன் என்பேனோ (என்கிறார் ஆழ்வார்) என்பது பிள்ளான் அருளிய விளக்கமாகும்.[1]

[512]

நம் முதலிகளிலே ஒருவரை, ஒருவன் "எனக்கு எம்பெருமானை நினைக்க விரகு சொல்ல வேணும்" என்ன, "நான் உனக்கு அது சொல்லுகிறேன்; நீ எனக்கு அவனை மறக்க ஒரு விரகு சொல்லவல்லையே!" என்றாராம்.

(திருவாய்மொழி 3-4-4 ஈடு அவதாரிகை)

நிகழிடம்

"சாதி மாணிக்கம் என்கோ சவிகொள் பொன் முத்தம் என்கோ சாதிநல் வயிரமென்கோ தவிவில்சீர் விளக்கமென்கோ" (எம்பெருமானைச் சாதி மாணிக்கம் என்பேனா? நீரோட்டமுள்ள முத்து என்பேனா? நற்சாதி வயிரம் என்பேனா? அழிவில்லாத ஒளியுடைய விளக்கு என்பேனா?) என்று அருளிச் செய்கிறார் ஆழ்வார். எப்பொருளைப் பார்த்தாலும் எம்பெருமானை முன்னிட்டுக் கொண்டே அப்பொருள்கள் ஆழ்வாருக்குத் தோன்றுகின்றன என்றுரைத்த உரையாசிரியர், இத்தொடர்பில் **ஸம்வாதம்** *ஒன்றை எடுத்துக் காட்டுகிறார்.*

விளக்கம்

எண் 353ன் விளக்கம் பார்க்க.

[513]

(ஆதுமில் இத்யாதி) "நாம ரூபங்களை உடையனவாய் வஸ்துவாகச் சொல்லலாம்படி பிரிய நின்ற போதும் இவற்றோடே கலந்து இவற்றின் தோஷம் தன் பக்கல் தட்டாதபடி நிற்கும்; இவை 'தான்' என்ற சொல்லுக்குள்ளேயாம்படி கலந்து நின்ற போதும் தத்கததோஷைரஸம்ஸ்ப்ருஷ்டனாயிருக்கும் என்றதாகிறது" என்றருளிச் செய்வர்.

(திருவாய்மொழி 3-4-4 ஈடு வியாக்கியானம்)

1. பிள்ளான் அருளிச் செய்துள்ள ஆறாயிரப்படியிலும் 'ஸர்வைஸ்ஸம்ஸ்தூயமாநனாய், ஸகல கல்யாண குண விசிஷ்டனாய், நிருபமனாயிருந்தவனென்று சொல்லுவேனோ!' என்றுள்ளது நோக்கத்தக்கது. ஈடு முப்பத்தாறாயிரப்படியிலும் 'ஸர்வைஸ்ஸம்ஸ்தூயமாநனென்பேனோ' என்று குறிப்பிடப்பெற்றிருந்தாலும் இது பிள்ளான் அருளிச் செய்தது என்று அங்கு குறிப்பிடப் பெறவில்லை.

நிகழிடம்

"ஆதுமில் காலத்தெந்தை அச்சுதன் அமலனையே" என்கிறார் நம்மாழ்வார். இங்குள்ள அமலன் (குற்றம் அற்றவன்) என்ற சொல்லுக்கு இவ்விடத்திற்குத் தக்க **நிர்வாஹம்** *காட்டப்படுகிறது.*

விளக்கம்

ஆதுமில் காலத்து - பெயரும் உருவமும் உடையனவாய் சேதந அசேதநங்கள் தனியே நின்றபோதும் - எந்தை அச்சுதன் எம்பெருமான் இவற்றை விடாமல் இவற்றுடன் கலந்து நிற்கிறான். அமலன் - 'தான்' என்ற சொல்லில் இப்பொருள்களும் அடங்கும் என்றபடி கலந்து நின்ற போதும் அவைகளுக்கு உள்ள தோஷங்கள் (குற்றங்கள்) தன்மீது ஒட்டாதபடி இருப்பவன் ஆதலால் அமலன் என்று (நம்பிள்ளை) அருளிச் செய்வர். சேதனன் ஒரு கர்மத்தின் காரணமாக ஒரு உடலில் நுழைவதால் அந்த உடலுக்குண்டான தோஷங்கள் அவனிடம் ஒட்டுகிறது. ஆனால் எம்பெருமான் தன் அருளின் காரணமாக சேதநாசேதனங்களுள் நுழைவதால், அவற்றுக்குண்டான தோஷங்கள் அவனிடம் ஒட்டுவதில்லை.

[514]

"इदं तु ते गुह्यतमं प्रवक्ष्यामि (இத$_{3}$ம் து தே கு$_{2}$ஹ்யதமம் ப்ரவக்ஷ்யாமி) என்றவோபாதி इदं ते नातपस्काय (இத$_{3}$ம் தே நாதபஸ்காய) என்றதுவும் முன்னே சொல்லிக் கொள்ளவிறே அடுப்பது. அங்ஙனன்றிக்கே, முந்துறச் சொல்லி பின்னை इदं ते नातपस्काय (இத$_{2}$ம் தே நாதபஸ்காய) என்றானிறே. இது தனக்கு அடியென்?" என்று சீயர் ப$_{4}$ட்டரைக் கேட்க, "த்$_{3}$ரௌபதி குழலை விரித்துக் கிடக்கையாலே அது முடிக்கைக்காகச் செய்வது அறியாமையாலே மூலையில் கிடந்தாரை முற்றத்தேயிட்டான். பின்னை அர்த்த$_{2}$த்தின் சீர்மையை அநுஸந்தி$_{4}$யா, 'ஆர் அதி$_{4}$காரிகளாகச் சொன்னோம்? கைப்பட்ட மாணிக்கத்தைக் கடலிலே இட்டோம்!' என்று 'புதண் புதண்' என்றான் காணும்" என்றருளிச் செய்தார்.

(திருவாய்மொழி 3-4-6 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

"கண்ணன் என்கோ மால் என்கோ" என்று ஆழ்வார் அருளிச்செய்துள்ளார். அடியவர்கள் விஷயத்தில் மிக்க அன்புடையன் என்பேனா என்கிறார் ஆழ்வார் என்று இதற்கு உரையிட்ட உரையாசிரியர், இத்தொடர்பில் ஒரு **ஸம்வாதம்** *காட்டுகிறார்.*

விளக்கம்

எண் 43ன் விளக்கம் பார்க்க.

[515]

(ஆவிசேர் இத்யாதி) ஆவியுண்டு ப்ராணாஶ்ரயமான ஶரீரம்: அத்தோடு சேர்ந்திருந்துள்ள உயிருண்டு ஆத்மா. அதன் பக்கல் அந்த ஶரீரக₃தமான பா₃ல்யயௌவநாதி₃கள் ஒன்றாலும் ஒரு ஸம்ப₃ந்த₄மும் இல்லையாம்படியாக அநுஸந்தி₄க்கிற அநுஸந்த₄ானமானது அந்த ஆத்மாவுக்குக் கூடா நின்ற பின்பு அப்பொருள் அவனையும் கூடத் தட்டில்லை. இங்ஙனன்றிக்கே, "இதுக்கு வேறேயும் இரண்டு பொருள் சொல்லுவர்கள்" என்றருளிச்செய்வர். அவன் பக்கலிலே பக்தியுண்டாகில் அவனைக் கிட்டலாமென்றும், புறம்புண்டான உபாயாந்தரங்களிலுண்டான பற்றடையவிட்டு அவனையே பற்றில் அவனைக் கிட்டலாமென்றும். அன்றியே அந்திமப்ரத்யயமுண்டாமாகில் அவனைக் கிட்டலாம் என்றுமாம். இத்தை எம்பெருமானார் கேட்டருளி "கீழ் வ்யாப்தியைச் சொல்லி நின்றபின்பு இனி வ்யாப்யவஸ்துக₃தமான தோ₃ஷங்கள் வ்யாபகனானவனுக்குத் தட்டாதென்னுமிடம் அவஶ்யம் சொல்ல வேணும். ஆனபின்பு இத்தையே சொல்லிற்றாக அமையும்" என்றருளிச் செய்வர்.

(திருவாய்மொழி 3-4-10 ஈடு வியாக்கியானம்)

நிகழ்டம்

ஆவிசேர் உயிரினுள்ளால் ஆதுமோர் பற்றிலாத
பாவனை அதனைக் கூடில் அவனையும் கூடலாமே.

என்று நம்மாழ்வார் அருளிச்செய்துள்ளார். இதற்குப் பல **நிர்வாஹங்கள்** *காட்டப்படுகின்றன.*

விளக்கம்

சேதந அசேதநங்களோடு எம்பெருமான் எப்போதும் கூடியிருந்தாலும் அவற்றின் குற்றங்கள் தன்னிடத்தில் தட்டாதபடி இருப்பான். எவ்வாறெனில், ஆவிசேர் உயிரினுள்ளால் ஆதுமோர் பற்றிலாத பாவனை அதனைக் கூடில் அவனையும் கூடலாமே. ஆவி என்பது உயிர் தங்கியிருக்கும்படியான உடல்; ஆவி சேர் உயிர் என்பது அவ்வுடலில் உள்ள ஆத்மா. ஆதுமோர் பற்றிலாத பாவனை அதனைக் கூடில் = உடலுக்கு உண்டான குழந்தைப்பருவம், வாலிபப்பருவம் முதலியன, அவ்வுடலில் தங்கியிருக்கும் ஆத்மாவுக்கு வருவதில்லை என்பது ஆத்மாவுக்குப் பொருந்துகின்றபோது, ஆத்மாவுக்கு உண்டான குற்றங்கள் (வினைப்பயன் முதலியன) எம்பெருமானைக் கூடுவதில்லை என்பது அவனுக்கும் பொருந்தும். இப் பொருள் தவிர வேறு பொருள்களும் கூறுவதுண்டு.

ஆவி சேர் உயிரினுள்ளால் - ஆத்மாவிற்கு உள்ளே உறையும் பரமாத்மாவினிடம், ஆதுமோர் பற்றிலாத பாவனை அதனைக் கூடில் -

வேறொன்றிலும் செல்லாத பக்தி உண்டானால்; அல்லது, வேறு உபாயங்களில் உண்டான பற்று முழுவதையும் விட்டு அவனையே உபாயமாகப் பற்றினால்; அல்லது, வேறு எதிலும் பற்றில்லாத பாவனையாகிற அந்திம ஸ்ம்ருதி (=மரணத்தறுவாயில் அவனைப் பற்றி நினைவு) உண்டாகுமானால், அவனையும் கூடலாம். அப்பரமாத்மாவை அடையலாம் என்றும் பொருள் அருளிச்செய்வர்.

இம்மூன்று பொருள்களையும் கேட்ட **எம்பெருமானார்** - "இத்திருவாய்மொழியில், எம்பெருமான் ஸகல சேதந அசேதனங்களிலும் அந்தராத்மாவாய் உறைகிறான் என்பதே கூறப்படுகிறது. எனவே அதற்கு ஏற்ப, அவன் வியாபித்து இருக்கின்ற சேதனாசேதனங்களிடம் உள்ள குற்றங்கள் அவனிடம் ஒட்டாது என்பது அவசியம் சொல்ல வேண்டியது. எனவே முதல் வகை விளக்கமே இங்கு கொள்ளத்தக்கது" என்றருளிச்செய்தார்.

[516]

பட்டர் இவ்விடத்தை அருளிச் செய்யாநிற்கச் செய்தே மேலேயும் இயலைச் சொல்லப்பண்ணி, "அவன் நூறாயிரஞ் செய்தாலும் விக்ருதராகாதிருக்கும் போதும் நாமே வேணும்; நமக்கு ஒரு ஆபத்து உண்டானால் இருந்த இடத்திலே இருக்கமாட்டாதே விக்ருதனாம்போதும் அவனே வேணும்" என்றருளிச் செய்தார்.

(திருவாய்மொழி ஈடு 3-5-1 வியாக்கியானம்)

நிகழிடம்

மொய்ம்மாம்பூம்பொழில் பொய்கை முதலைச் சிறைப்பட்டு நின்ற
கைம்மாவுக்கருள் செய்த கார்முகில் போல் வண்ணன் கண்ணன்
எம்மானைச் சொல்லிப்பாடி எழுந்தும் பறந்தும் துள்ளதார்
தம்மால் கருமமென் சொல்லீர் தண்கடல் வட்டத்துள்ளீரே.

(பொய்கையிலே முதலையாலே சிறைப்பட்ட யானைக்கு அருள் செய்த எம்பெருமானை (எம்பெருமானுடைய திருநாமத்தை) வாயால் சொல்லியும், பாடியும், எழுந்து ஆடியும் துள்ளாதவர்களால் என்ன பயன்?) என்றருளிச் செய்கிறார் நம்மாழ்வார். முதலையின் வாயிலே அகப்பட்ட கஜேந்திரனைக் காக்க வேண்டுமென்று பதறி அடித்துக் கொண்டு ஓடிவந்த எம்பெருமானுடைய குணத்தை அனுபவித்துப் பாடியாடி மகிழாதவர்களால் ஒரு பயனுமில்லை என்பது ஆழ்வார் திருவுள்ளக் கருத்தாகும். இத்தொடர்பில் ஒரு **வார்த்தை** *எடுத்துக் காட்டப்பெறுகிறது.*

விளக்கம்

'கைம்மாவுக்கு அருள் செய்த கார்முகில் போல் வண்ணன் கண்ணன் எம்மான்' என்றவிடத்தை விளக்கிக் கொண்டு வந்த **பட்டர்** மேலேயும் உள்ள

சொற்களை - அதாவது 'சொல்லிப்பாடி எழுந்தும் பறந்தும் துள்ளாதார்' என்பது வரையில் சொல்லச்செய்து, "எம்பெருமான் நமக்காக நூறாயிரம் செயல்களைச் செய்தாலும், அதனால் நெஞ்சுருகுதல், கண்ணீர் துளித்தல், புல்லலித்தல் முதலிய ஒரு மாற்றமும் இன்றி (ஒரு கல்போல) இருப்பதற்கு நம்மால் தான் முடியும்; நமக்கு ஒரு ஆபத்து ஏற்பட்டு விட்டால் இருந்த இடத்தில் இருக்கமாட்டாமல் பதறி அடித்துக் கொண்டு ஓடிவர அவனால்தான் முடியும்" என்று அருளிச் செய்தார்.[1]

[517]

(தண்கடல் இத்யாதி) ப்₃ரஹ்மமதே₃ஶத்தில் அப்பன் பிள்ளையோடே திருவாய்மொழி கேட்டபோதை வார்த்தை(யை) நினைப்பது.

(திருவாய்மொழி 3-5-1 இருபத்து நாலாயிரப்படி வியாக்கியானம்)

நிகழிடம்

எண் 516ன் நிகழிடம் பார்க்க.

விளக்கம்

அவ்வார்த்தை இன்னதென்று இங்கு வியாக்கியானத்தில் குறிப்பிடப் பெறவில்லை. எனவே விளக்கம் தெரியவில்லை.

[518]

(தம்பிறப்பால் இத்யாதி) "திருப்புன்னைக் கீழே ஒருவர் இருக்குமிடத்திலே நம் முதலிகள் பத்துப்பேர் கூட நெருக்கிக் கொண்டிருக்கச் செய்தே, க்₃ராமணிகள், மயிரெழுந்த பிசல்களும், பெரிய வடிவுகளும், மேலே சுற்றின இரட்டைகளுமாய் இடையிலே புகுந்து நெருக்குமா போலே காண்" என்று பிள்ளைப் பிள்ளை.

(திருவாய்மொழி 3-5-4 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

"சிரீதரன் தொல்புகழ் பாடிக் கும்பிடு நட்டமிட்டாடிக் கோகுகட்டுண்டு உழலாதார் தம்பிறப்பால் பயன் என்னே சாது சனங்களிடையே" (எம்பெருமானுடைய குணத்தைப்பாடி, தலைகீழாகக் கூத்தாடி ஆரவாரம் செய்து திரியாதார் சாதுக்களிடையே பிறந்தமையால் என்ன பயன்?) என்கிறார் நம்மாழ்வார். பகவானுடைய கல்யாணகுணங்களிலே ஈடுபடுகின்ற ஸ்ரீவைஷ்ணவர்கள் நடுவே, அதில் துளியும் ஈடுபாடு இல்லாதவர்கள் இருப்பதால் ஒரு பயனும் இல்லை என்று இதற்குக் கருத்துரைத்த உரையாசிரியர் பிள்ளைப் பிள்ளையாழ்வானுடைய **வார்த்தை** *ஒன்றை எடுத்துக் காட்டுகிறார்.*

1. பட்டர் இவ்வாறு அருளிச்செய்தமை இருபத்துநாலாயிரப்படியிலும் குறிப்பிடப்பெற்றுள்ளது.

விளக்கம்

திருவரங்கத்தில் சந்த்ரபுஷ்கரிணிக்கரையில் புன்னைமரத்தடியில் நம்முடைய ஆசார்யர்கள் கூடி பகவத் விஷயங்களைப் பற்றிக் கலந்துரையாடிக் கொண்டிருக்கும் போது, அதிலே ஈடுபாடுள்ள ஸ்ரீவைஷ்ணவர்கள், மிகக் குறுகிய இடத்தில் நெருக்கியடித்துக் கொண்டு இருந்து அதைக் கேட்டுக் கொண்டிருப்பர்களாம். அப்போது கிராம அதிகாரிகள் சிலர் அவ்விடத்திற்கு வந்து, தாங்களும் இவ்விஷயங்களைக் கேட்பதில் ஆர்வமுள்ளவர்கள் போல் மயிர்முடிகளெழுந்த தோள்களையும், பெரிய உருவங்களையும், பெரிய உத்தரீயங்களையும் உடையவர்களாய் கொண்டு அந்த ஸ்ரீவைஷ்ணவர் களிடையே புகுந்து நெருக்குவார்களாம். உண்மையில் பகவத் விஷயங்களில் துளியும் ஈடுபாடில்லாத கிராம அதிகாரிகள் ஏதோ பெருமைக்காக ஸ்ரீவைஷ்ணவர்களிடையே தாங்களும் புகுந்து நெருக்கி, அவர்களுக்கும் துன்பத்தை உண்டாக்குவது போல, பகவானுடைய கல்யாண குணங்களில் ஈடுபாடு உடைய ஸ்ரீவைஷ்ணவர்கள் நடுவே அதில் துளியும் ஈடுபாடு இல்லாதவர்கள் இருப்பதால் ஒரு பயனும் இல்லை என்று **பிள்ளைப் பிள்ளை ஆழ்வான்** *அருளிச்செய்வார்.*[1]

[519]

(வீதிகள் தோறும் துள்ளாதார்) மிளகாழ்வான் வார்த்தையை நினைப்பது.

(திருவாய்மொழி 3-5-5 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

"வேதமுதல்வனைப் பாடி வீதிகள்தோறும் துள்ளாதார் மனிசரே" (வேதமுதல்வனான எம்பெருமானைப் பாடி எல்லாவீதிகளிலும் களித்துத் திரியாதவர்கள் மனிதர்களோ?) என்றருளிச்செய்கிறார் ஆழ்வார். இப்படி வீதிகளில் களித்து குதித்துத் திரிந்தால் உலகோர்கள் நிந்திக்கமாட்டார்களோ எனில், அப்படி நிந்தித்தாலும் அது உற்றதேயாகும் என்பதற்கு ஓர் **ஐதிஹ்யம்** *காட்டப்பெறுகிறது.*

விளக்கம்

எண் 523ன் விளக்கம் பார்க்க.

[520]

"இவர் தாம் எல்லார்படிகளும் உடையராயிறே இருப்பது. 'முக்தர்படியை உடையர்' என்னுமிடம் சொல்லிற்றுக் கீழ்த்திருவாய்மொழியாலே. 'முமுக்ஷுக்கள்

1. "பிள்ளைப்பிள்ளையாழ்வான் வார்த்தை" என்று மட்டுமே இருபத்துநாலாயிரப்படியில் குறிப்பிடப் பெற்றுள்ளது. (அவ்வார்த்தை என்ன என்பது அங்கு விளக்கப்படவில்லை.)

படியை உடையர்' என்னுமிடம் சொல்லிற்று இத்திருவாய்மொழியாலே" என்று அருளிச்செய்வர்.

(திருவாய்மொழி ஈடு 3-5-5 வியாக்கியானம்)

நிகழ்டம்

'புகழு நல்லொருவன் என்கோ' என்கிற கீழ்த்திருவாய்மொழியில் எல்லாப் பொருள்களுமே பகவானுடைய உடைமைகள் என்று அருளிச் செய்தார் ஆழ்வார். ஆனால் இத்திருவாய்மொழியில் எம்பெருமானைப் பற்றிப் பாடி ஆடி மகிழ்பவர்களைக் கூட்டிக் கொண்டு அப்படி இராதவர்களைக் கழிக்கிறார் ஆழ்வார். எல்லாம் பகவானுடைய உடைமைகளாக இருக்க ஒருசிலர் கூட்டிக் கொள்ளத் தக்கவர்களாகவும் ஒருசிலர் தவிர்க்கத் தக்கவர்களாகவும் கருதலாமோ என்ற கேள்விக்கு விடையாக ஒரு **வார்த்தை** *காட்டப்பெறுகிறது.*

விளக்கம்

"ஆழ்வாருக்கு எல்லாருடைய தன்மைகளும் உண்டு. எல்லாம் பகவானுடைய உடைமைகள் என்றிருக்கிற முக்தருடைய (முக்தர் = இவ்வுலக வாழ்க்கையிலிருந்து விடுபட்டு மோக்ஷம் அடைந்தவர்) தன்மையில் கீழ்த் திருவாய்மொழியை அருளிச் செய்தார். எம்பெருமானைப் பற்றிப் பாடியாடுகின்றவர்களே கொள்ளத் தக்கவர்கள், மற்றவர்கள் தள்ளத் தக்கவர்கள் என்ற முமுக்ஷுக்களின் (முமுக்ஷு - மோக்ஷம் அடைய விரும்புபவர்) தன்மையில் இத்திருவாய்மொழி அருளிச் செய்கிறார் என்று **(நம்பிள்ளை)** *அருளிச் செய்வர்.*

[521]

(முனிவின்றி ஏத்திக் குனிப்பார்) முனிவின்றி - பகவத் குணங்களைக் கேட்டால் அஸூயை பண்ணாதே ஏத்துமவர்கள் அன்றிக்கே, "முனிவாகிறது முநித்வமாய் - அதின்றிக்கேயொழிகையாவது - கலங்குகையாய், அடைவுகெட்டு ஏத்திக் குனிப்பார் என்னவுமாம்" என்றருளிச் செய்வர்.

(திருவாய்மொழி 3-5-6 ஈடு வியாக்கியானம்)

நிகழ்டம்

(எம்பெருமானுடைய அவதாரங்களை) "முனிவின்றி ஏத்திக்குனிப்பார்" என்றருளிச் செய்கிறார் ஆழ்வார். இதுகுறித்து **நிர்வாஹங்கள்** *காட்டப் பெறுகின்றன.*

விளக்கம்

முனிவு என்பதற்குக் கோபம் அல்லது பொறாமை என்று பொருள் கொண்டு 'எம்பெருமானுடைய குணங்களைக் கேட்டால் முனிவின்றி - பொறாமையின்றித்

துதிப்பவர்கள்" என்று பொருளுரைத்த உரையாசிரியர் மற்றொரு பொருளும் காட்டுகிறார். முனிவு என்பது முனிவர்களுடைய தன்மையைக் குறித்து, அது இன்றிக்கே இருப்பவர்கள்; முனிவர்களுடைய தன்மையாவது பகவானுடைய குணங்களை நினைத்துத் தெளிவுடன் இருப்பது. அது இல்லாமல் இருப்பதாவது கலங்குகை, ஆக முனிவின்றி - கலக்கத்துடன் பகவானை அடைவு கெட்டு முறை தவறித் தோத்திரம் செய்பவர்கள் (ஆழ்வார்களைப் போலே) என்றும் (நம்பிள்ளை) அருளிச் செய்வர்.

[522]

(உத்தமர்கட்கு என்செய்வாரே) ஆயிரத்தளியிலே ராஜா இருக்கச் செய்தே பெரிய நம்பியையும் ஆழ்வானையும் நலிந்தானாய், ஆழ்வான் மடியிலே சாய்ந்து கிடக்கச் செய்தே பெரியநம்பி திருநாட்டுக்கு எழுந்தருளினார் அவ்வளவிலே 'ஒருவருமில்லாதாரை ப்ரதிபத்தி பண்ணக்கடவோம்' என்று திரிகிறார் சிலர் அங்கே வந்து ஆழ்வானைக் கண்டு 'ஒருவனுண்டிறே' என்று போகப்புக, ஒருவரையும் ஒரு குறை சொல்லியறியாதவன், "வாரீகோள் மாணிகாள்! வைஷ்ணவனுமாய் ஒருவனுமில்லாதான் ஒருவனைத் தேடி ப்ரதிபத்தி பண்ண இருக்கிறிகளோ நீங்கள்? ஈஸ்வரனும் ஈஸ்வர விபூதியும் வைஷ்ணவனுக்குக் கிஞ்சித்கரிக்க இருக்க, வைஷ்ணவனுமாய், அறவையுமாயிருப்பான் ஒருவனை நீங்கள் எங்கே தேடுவிகோள்?" என்றானாம்.

(திருவாய்மொழி 3-5-7 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

எம்பெருமானைப் பாடியாடி நெஞ்சம் குழைந்து நையாமல் உடலைப் பெருக்கித் திரிகின்றவர்களால் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு ஒரு பயனுமில்லை என்றருளிச் செய்கிறார் ஆழ்வார். ஸ்ரீவைஷ்ணவர்களுக்குப் பயன் படத் தக்க பிறவியே பிறவியாகும். மற்றது வீண்; எம்பெருமானும் தன்னையும் தன் உடைமைகளையும் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு ஆட்பட்டிருக்கும்படி வைத்திருக்கிறான் என்று இதற்குக் கருத்துரைத்த உரையாசிரியர் சான்றாக ஓர் **ஐதிஹ்யம்** *காட்டுகிறார்.*

விளக்கம்

ஆயிரத்தளி என்றவிடத்தில் இருந்த சோழ அரசன் கூரத்தாழ்வானையும் பெரிய நம்பியையும் துன்புறுத்திய போது அந்தத் துன்பம் தாளாமல் பெரிய நம்பி அவ்விடத்திலேயே ஆழ்வான் மடிமீது தமது திருமுடியை வைத்துக் கொண்டிருந்து திருநாட்டுக்கு எழுந்தருளி விட்டார். அப்போது "உற்றார் உறவினர் ஒருவரும் இல்லாமல் மரணமடையும் வைஷ்ணவனை ஸம்ஸ்காரம்

(ஈமக்ரியை) செய்வது என்ற நோக்கமுடைய சிலர் அங்கு வந்தனர். பெரிய நம்பிக்கும் அவ்வாறு செய்யவெண்ணி, அருகில் வந்தவர்கள், அங்கு கூரத்தாழ்வான் இருப்பதைப் பார்த்தவுடன், இவருக்கு ஒருவர் இருக்கிறார் என்று அவ்விடத்தை விட்டுப் போக முயன்றனர். ஒருவரையும் ஒரு குறை சொல்லாதவரான கூரத்தாழ்வான் அவர்களைப் பார்த்து "வாருங்கள் அந்தணர்களே! உற்றார் உறவினர் ஒருவருமில்லாத ஸ்ரீவைஷ்ணவன் ஒருவனைத் தேடுகிறீர்களே? எம்பெருமானும் அவனுடைமைகளும் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு ஆட்செய்யக் காத்திருக்க, ஸ்ரீவைஷ்ணவனுமாய், உற்றார் உறவினர் ஒருவரும் இல்லாதவனுமாய் இருப்பவன் ஒருவனை நீங்கள் எங்கே தேடிக் கண்டுபிடிக்கப் போகிறீர்கள்?" என்று கேட்டாராம்!

[523]

(பிறர் கூற) மிளகாழ்வான் வார்த்தை - ராஜா அகரம் வைக்கிறார், அங்கே செல்ல "உமக்குப் பங்கில்லை" என்ன, "அதுவென்? வேதபரீக்ஷை வேணுமாகில் அத்தைச் செய்வது; ஶாஸ்த்ரபரீக்ஷை வேணுமாகில் அத்தைப் பரீக்ஷிப்பது" என்ன, "உமக்கு அவையெல்லாம் போரும். அதுக்கு உம்மைச் சொல்லாவொண்ணாது" என்ன, "ஆனால் குறையென்?" என்ன "நீர் வைஷ்ணவரன்றோ! ஆகையாலே காண்!" என்ன, புடவையை முடிந்து ஏறிட்டுக் கூத்தாடினானாயிற்று, தன்னை அவர்கள் கைவிட்டதுக்கு.

(திருவாய்மொழி 3-5-8 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

மற்றவர்கள் 'இவன் பித்தன்' என்று கூறும்படியாக எம்பெருமானுடைய திருநாமங்களைச் சொல்லிப் பாடியாட வேண்டுமென்கிறார் ஆழ்வார். வைஷ்ணவர்கள் போற்றுவதைக் காட்டிலும் வைஷ்ணவரல்லாதார் தூற்றுவதே சிறந்தது என்று இதற்குக் கருத்து உரைத்த உரையாசிரியர், சான்றாக ஒரு **ஐதிஹ்யம்** *எடுத்துக் காட்டுகிறார்.*

விளக்கம்

ஒரு அரசன் அகரம் (அக்ரஹாரம்) ஏற்படுத்துகிறான் என்று கேள்விப்பட்டு, **மிளகாழ்வான்** *என்பவரும் அவ்வரசனிடம் செல்ல முயன்ற போது அங்கிருந்த*

1. எம்பெருமானாருக்கு பதிலாக கூரத்தாழ்வான் சோழ ராஜஸபைக்குச் சென்று, அங்கு, சிவனைக் காட்டிலும் மேம்பட்ட தெய்வமில்லை என்று ஒப்புக் கொள்ள மறுக்க, அதனால் கோபம் கொண்ட அரசன் அவர் கண்களைப் பிடுங்க உத்தரவிட, ஆழ்வான் தாமே தம் கண்களைப் பிடுங்கிக் கொள்ள, ஆழ்வானுடன் வந்த பெரிய நம்பியின் கண்களை சேவகர்கள் பிடுங்கியமையால், பெரியநம்பி துன்பம் தாளாமல் அங்கேயே திருநாடலங்கரித்துவிட்டார் என்பது முதலிய வரலாறுகளை ஆறாயிரப்படி குருபரம்பராப்பிரபாவத்தில் காண்க.

ஒருவன் "இங்கே உமக்கு அனுமதி இல்லை" என்று கூறி அவரைத் தடுத்தான். "ஏன்? நான் வித்வானல்லேனோ? வேண்டுமானால் என்னை வேதத்திலோ, சாஸ்த்ரங்களிலோ பரீக்ஷை செய்து பார்" என்றார் மிளகாழ்வான். அதற்கு அவன் "உமக்கு அவையெல்லாம் தெரியும் என்பதை நன்கு அறிவேன்; உமக்குப் பாண்டித்யம் இல்லையென்று கூறமுடியாது" என்றான். "பின் என்ன குறை கண்டு என்னை உள்ளே விட மறுக்கிறாய்?" என்று மிளகாழ்வான் கேட்டார். அதற்கு அவன் "நீர் வைஷ்ணவரல்லவா! அதனால்தான் உம்மைத் தடுத்தேன். (இங்கே வைஷ்ணவர்கள் அல்லாதவர்களுக்கு மட்டுமே அனுமதி உண்டு) என்றான். இதைக் கேட்ட மிளகாழ்வான் அங்குத் தன்னை அனுமதிக்கவில்லையே என்று வருத்தமடையவில்லை. மாறாக, வைஷ்ணவரல்லாதவர்கள், தன்னை ஒரு வைஷ்ணவன் என்று கூறிக் கைவிட்டதற்கு மிக்க மகிழ்ச்சியடைந்து தன்னுடைய உத்தரீயத்தை மேலே எறிந்து கூத்தாடினாராம்![1]

[524]

(அடிக் கீழ்ப்புக நின்ற செங்கண்மால்) "ஹிரண்யன் பக்கல் சீற்றமும் செல்லா நிற்க, ஸ்ரீப்ரஹ்லாதாழ்வானுக்குக் கிட்டலாயிருந்தபடி எங்ஙனே" என்று எம்பெருமானாரைச் சிலர் கேட்க, "ஸிம்ஹம் ஆனைமேலே சீறினாலும், குட்டிக்கு முலையுண்ணலாம்படி யிருக்குமிறே" என்று அருளிச்செய்தார். "ஆஸ்ரித வாத்ஸல்யத்தாலே அவர்கள் விரோதிகள் மேலே சீறின சீற்றமானால் பின்னை அவர்களுக்கு அணைய வொண்ணாதபடியிருக்குமோ?" என்று அருளிச்செய்தார்.

(திருவாய்மொழி 3-6-6 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

"சீற்றத்தோடு அருள்பெற்றவன் அடிக்கீழ்ப்புக நின்ற செங்கண்மால்" (சீற்றத்தோடு இருக்கும்போது திருவருளைப் பெற்ற பிரகலாதனானவன் திருவடிகளிலே வந்து அணையும்படியாக நின்ற செங்கண்மால்) என்று ஆழ்வார் அருளிச்செய்துள்ளார். இத்தொடர்பில் ஒரு **ஸம்வாதம்** காட்டப்பெறுகிறது.

விளக்கம்

"இரணியனிடத்தில் சீற்றம் கொண்டிருந்த அதே சமயத்தில் பிரகலாதனுக்குக் கிட்டும்படியாக இருந்தது எங்ஙனம்?" என்று சிலர் எம்பெருமானாரைக் கேட்க, "சிங்கம் யானையின்மீது சீறுகின்ற அதே சமயத்தில் தன் குட்டிக்கு முலை கொடுத்துக் கொண்டிருக்குமன்றோ![2] அடியவனான ப்ரஹ்லாதனிடத்திலிருந்த

1. "மிளகாழ்வான் அகரம் பெறப் போன இடத்தில் வார்த்தை" என்று மட்டும் இருபத்து நாலாயிரப்படி உரையில் குறிப்பிடப்பெற்றுள்ளது. எண் 519 பார்க்க.

2. இவ்வார்த்தைகளை பட்டர் அருளிச்செய்தார் என்று எண் 100ல் குறிப்பிடப்பட்டுள்ளது காண்க.

அன்பாலன்றோ இரணியன்மீது சீற்றம் கொண்டான். அப்படியிருக்கும்போது, பிரகலாதனுக்கு நெருங்க ஒண்ணாதபடி இருப்பனோ!" என்று அருளிச்செய்தார்.

[525]

(அன்றி மற்றிலேன் தஞ்சமாகவே) இவ்விடத்தை பட்டர் அருளிச் செய்யாநிற்க, சீயர், "இவர் புக்கவிடமெங்கும் இப்படியே சொல்லுவர்; இவர்க்கு இது பணியிறே!" என்ன, "இவர் மற்றோரிடத்தில் தலை நீட்டுவது பாவனத்வத்தைப் பற்ற; இவர் தஞ்சமாக நினைத்திருப்பது சக்ரவர்த்தி திருமகனையே" என்று அருளிச் செய்தார்.

(திருவாய்மொழி 3-6-8 ஈடு வியாக்கியானம்)

நிகழ்டம்

"தயரதற்கு மகன்தன்னையன்றி மற்றிலேன் தஞ்சமாகவே" (சக்ரவர்த்தி திருமகனான இராமபிரானையன்றி வேறொருவரையும் தஞ்சமாக (ஆபத்துக்கு உறுதுணையாக) உடையேனல்லேன்) என்றருளிச் செய்கிறார் நம்மாழ்வார். இவ்விடத்தில் ஒரு **ஸம்வாதம்** *காட்டப்பெறுகிறது.*

விளக்கம்

இவ்விடத்தை பட்டர் விளக்கிக் கொண்டிருக்கையில் அவருடைய சீடரான **நஞ்சீயர்** *"நம்மாழ்வார் எம்பெருமானுடைய ஒவ்வொரு அவதாரத்தைப் பற்றியும் இப்படியே அருளிச் செய்கிறார். (ஞானப்பிரானை அல்லால் இல்லை, (திருவிருத்தம் 100), வானவரேற்றையே அன்றி (3-1-6) கண்ணனல்லால் இல்லை (9-1-10) என்று மற்ற அவதாரங்களைப் பற்றியும் இதேபோல் பலவிடங்களிலும் அருளிச் செய்துள்ளார்.) எனவே இவர் புகுந்த விடங்களிலெல்லாம் அந்த எம்பெருமானைத் தவிர வேறில்லை என்று கூறிக் கொண்டிருப்பார்; இவருக்கு இதுவே பணி" என்றார். உடனே பட்டர், "மற்ற இடங்களில் இவர் தலை நீட்டுவது அவ்வெம்பெருமான்களின் பாவனத்வத்தை (புனிதத்தன்மையைக்) கருத்தில் கொண்டு) ஆனால் ஆழ்வார் தம்முடைய நெஞ்சால் இனிமையானவனாகவும் தஞ்சமாகவும் நினைத்திருப்பது சக்ரவர்த்தி திருமகனைத்தான்" என்று விடையளித்தார்.*

[526]

பட்டர் ராமாவதாரத்தில் பக்ஷபாதத்தாலே அருளிச் செய்யுமது கேட்கைக்காக, சிறியாத்தான், "பெருமாளுக்கு எல்லா ஏற்றங்களும் அருளிச் செய்ததேயாகிலும், பாண்டவர்களுக்காகக் கழுத்திலே ஓலை கட்டித் தூது போன க்ருஷ்ணனுடைய நீர்மையில்லையே சக்ரவர்த்தி திருமகனுக்கு!" என்ன, "அதுவோ, பெருமாள் தூது

போகாமையன்று காண்: இக்ஷ்வாகு வம்ஶ்யரைத் தூது போக விடுவாரில்லாமை காண்!" என்றருளிச் செய்தார்.

(திருவாய்மொழி 3-6-8 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

"தயரதற்கு மகன்தன்னையன்றி மற்றிலேன் தஞ்சமாகவே" (சக்ரவர்த்தி திருமகனான இராமபிரானையன்றி வேறொருவரையும் தஞ்சமாக (ஆபத்துக்கு உறுதுணையாக) உடையேனல்லேன்) என்றருளிச் செய்கிறார் நம்மாழ்வார். இவ்விடத்தில் ஒரு **ஸம்வாதம்** காட்டப்பெறுகிறது.

விளக்கம்

எண் 213ன் விளக்கம் பார்க்க.

[527]

(அன்றி மற்றிலேன் தஞ்சமாகவே) எம்பெருமானார் திருவாராதனம் பண்ணிப் போருவது ஒரு பிள்ளையிறே. இங்ஙனேயிருக்கச் செய்தே ஓருநாள் ஒரு ஸ்ரீவைஷ்ணவர் சக்ரவர்த்தி திருமகனை எழுந்தருளப் பண்ணிக் கொண்டு வந்து கொடுத்தாராய் அவரைப்பார்த்து "இந்த 'மாமேகம் ஶரணம் வ்ரஜ' என்று தேவையிடாதார் எழுந்தருளினார்" என்றாராம்.

(திருவாய்மொழி 3-6-8 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

"தயரதற்கு மகன்தன்னையன்றி மற்றிலேன் தஞ்சமாகவே" (சக்ரவர்த்தி திருமகனான இராமபிரானையன்றி வேறொருவரையும் தஞ்சமாக (ஆபத்துக்கு உறுதுணையாக) உடையேனல்லேன்) என்றருளிச் செய்கிறார் நம்மாழ்வார். இவ்விடத்தில் ஒரு **ஐதிஹ்யம்** காட்டப்பெறுகிறது.

விளக்கம்

எம்பெருமானார் வெண்ணெய்க்காடும்பிள்ளை என்ற திருநாமமுடைய கிருஷ்ணனைத் திருவாராதனப் பெருமாளாகக் கொண்டிருந்தார். இப்படி இருக்கையில் ஒரு நாள் ஒரு ஸ்ரீவைஷ்ணவர் சக்ரவர்த்தி திருமகனான ராமபிரானை எழுந்தருளப் பண்ணிக் கொண்டு வந்து எம்பெருமானாரிடம் கொடுத்தார். அப்போது எம்பெருமானார் "ஸர்வதர்மாந் பரித்யஜ்ய மாமேகம் சரணம் வ்ரஜ (எல்லா தர்மங்களையும் விட்டு, என் ஒருவனையே சரணமாகப் பற்றுவாயாக) என்று, நாம் செய்ய வேண்டியவற்றை வலியுறுத்தி, ஒரு தேவை யிட்டான் கண்ணன். ஆனால் இராமபிரானோ அப்படி ஒரு தேவையிடாமல் 'மித்ரபாவேந ஸம்ப்ராப்தம் ந த்யஜேயம் கதஞ்சந' (நண்பன் என்ற பாவனையுடன்

வருபவனையும் ஒருபோதும் கைவிடேன்) என்று கூறினான். எனவே ஒரு தேவை இடாதார் (இராமபிரான்) எழுந்தருளினார்" என்று அருளிச்செய்தாராம்.

[528]

(அன்றி மற்றிலேன் தஞ்சமாகவே) "ஒரு சிறாயை விஸ்வஸித்து ஆறு மாஸத்துக்கு வேண்டும் சோறும் தண்ணீரும் ஏற்றிக் கொண்டு கடலிலே இழியா நின்றான். அவ்வோபாதி விஸ்வாஸமாகிலும் வேண்டாவோ ப$_4$க$_3$வத் விஷயத்தைப் பற்றுவார்களுக்கு" என்று அருளிச் செய்வர்.

(திருவாய்மொழி 3-6-8 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

"தயரதற்கு மகன்தன்னையன்றி மற்றிலேன் தஞ்சமாகவே" (சக்ரவர்த்தி திருமகனான இராமபிரானையன்றி வேறொருவரையும் தஞ்சமாக (ஆபத்துக்கு உறுதுணையாக) உடையேனல்லேன்) என்றருளிச் செய்கிறார் நம்மாழ்வார். எம்பெருமானைத் தஞ்சமாகப் பற்றுபவர்களுக்கு அவனே காப்பவன் என்கிற மஹாவிச்வாஸம் (உறுதியான நம்பிக்கை) இருக்க வேண்டுமென்பதற்கு ஒரு உதாரணம் காட்டி நம்பிள்ளை அருளிச்செய்த **வார்த்தை** *ஒன்று காட்டப்பெறுகிறது.*

விளக்கம்

*"ஒரு ஓடத்தில் (கப்பலில்) ஏறி வெளிநாடு செல்பவன் இந்த ஓடமானது நிச்சயம் நம்மை அக்கரையில் சேர்த்துவிடும் என்ற நம்பிக்கையில் ஆறுமாதத்திற்கு வேண்டிய உணவும் தண்ணீரும் சேர்த்துக் கொண்டு கடலிலே செல்கின்றான். இந்த ஓடத்தின் மீதிருக்கின்ற நம்பிக்கையையாவது பகவானைப் பற்றுபவர்கள் அவன்மீது வைக்க வேண்டாமா?" என்று (***நம்பிள்ளை***) அருளிச் செய்வர். (வைகுந்தன் என்பதோர் தோணி என்று ஆண்டாள் அருளிச்செய்துள்ளதும் கருத்தில் கொள்ளத்தக்கது.)*

[529]

(அவனாகும் நீள்கடல் வண்ணனே) "அங்குத்தைக்கு உகந்தருளின இடத்தை விபூ$_4$தியாக நினையாதே, இங்குத்தைக்கு அவ்விடத்தை விபூ$_4$தியாக நினையுங்கோள்" என்று பணிக்கும் ஆண்டான்.

(திருவாய்மொழி 3-6-9 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

"நெஞ்சினால் நினைப்பான் யவன் அவனாகும் நீள்கடல் வண்ணனே" (ஓர் அடியவன் மனத்தாலே யாதொன்றை எம்பெருமானுக்குத் திருமேனியாகக்

கோலினானோ, அதையே நீள்கடல் வண்ணனான எம்பெருமான் தனக்குத் திருமேனியாகக் கொள்கிறான்) என்றருளிச் செய்கிறார் நம்மாழ்வார். இதுபற்றி முதலியாண்டான் அருளிச்செய்த **நிர்வாஹம்** காட்டப்பெறுகிறது.

விளக்கம்

'நெஞ்சினால் நினைப்பான் யவன் நீள்கடல் வண்ணன் அவனாகும்' - பரமபதத்தில் பரவாஸுதேவனாக எழுந்தருளியிருக்கும் எம்பெருமானை இவ்விடத்தில் அடியவன் ஒருவன் ஏதோ ஒரு பொருளாலே செய்யப்பட்ட திருமேனியில் பிரதிஷ்டை செய்து வைத்தானாகில், பரமபதத்தில் எழுந்தருளியிருப்பது போலவே, அந்தப் பொருளிலும் விரும்பி உறைகிறான் எம்பெருமான் என்பது கருத்தாகும். பரமபதத்திற்கு முக்கியத்வம் அளித்து, இவ்வுலகில் பிரதிஷ்டை பண்ணப்படுகிற அர்ச்சாவதாரத்திற்கும் அதே பெருமையுண்டு என்று காட்டுகின்ற இவ்விளக்கத்தைக் காட்டிலும் சுவையானதொரு விளக்கத்தை **முதலியாண்டான்** அருளிச் செய்தார்.

'நெஞ்சினால் நினைப்பான் யவன் - அவனே நீள் கடல் வண்ணனாகும்' - "இவ்விடத்தில் அடியவன் ஏதோ ஒரு பொருளில் உகந்து பிரதிஷ்டை செய்தால் அப்பொருளில் மகிழ்ச்சியுடன் எழுந்தருளியிருக்கின்ற எம்பெருமான்தான் பரமபதத்திலும் உறைகிறான் என்று கொள்ளுங்கள்" என்பது ஆண்டான் அளித்த விளக்கம். அதாவது அங்கு (பரமபதத்தில்) எழுந்தருளியுள்ளவன் தான் இங்கு (அர்ச்சாவதாரத்தில்) எழுந்தருளியுள்ளான் என்று கொள்ளாமல், இங்கு (அர்ச்சையில்) எழுந்தருளியுள்ள எம்பெருமான்தான் அங்கும் (பரமபதத்திலும்) எழுந்தருளியுள்ளான் என்று கொள்ளவேண்டும் என்பது கருத்து. அர்ச்சாவதாரத்திற்கு முக்கியத்வமளித்து, பரமபதத்தில் உள்ள நிலைக்கும் இப்பெருமையுண்டு என்ற கருத்தில் அருளிச் செய்யப்பட்ட விளக்கம் இதுவாகும்![1]

[530]

तद्भक्तैर्वा समागमः (தத்₃ப₄க்தைர் வா ஸமாக₃ம:) என்கிறவிடத்தில் 'வா' என்றத்தை அவத₄ாரணத்திலேயாக்கி, 'உத்₃தே₃ஶ்யந்தானே இங்கே ஸித்₃தி₄க்குங்காண்' என்று எம்பெருமானார் அருளிச் செய்த வார்த்தை.

(திருவாய்மொழி 3-7 ஈடு வியாக்கியான ப்ரவேசம்)

நிகழிடம்

"பயிலும் சுடரொளி" என்று தொடங்கும் திருவாய்மொழியில், அடியவர்கள் பெருமையை ஆழ்வார் அருளிச்செய்துள்ளார். இத்தொடர்பில் எம்பெருமானார் அருளிச்செய்துள்ள **வார்த்தை** ஒன்றுகூறப் பெறுகிறது.

1. முதலியாண்டான் இவ்வாறு அருளிச்செய்தமை இருபத்துநாலாயிரப்படியிலும் குறிப்பிடப் பெற்றுள்ளது.

விளக்கம்

எண் 338ன் விளக்கம் பார்க்க.

[531]

........ गच्छता (க₃ச்ச₂தா) இதுக்கு எம்பெருமானார் "பயிலுஞ்சுடரொளியிலும் நெடுமாற்கடிமையிலும் சொல்லுகிற அர்த்த₂த்தை ஸ்ரீஶத்ருக்₄நாழ்வான் அநுஷ்டி₂த்துக் காட்டினான்" என்று அருளிச் செய்வர்.

(திருவாய்மொழி 3-7 ஈடு வியாக்கியான ப்ரவேசம்)

நிகழிடம்

"பயிலும் சுடரொளி" என்று தொடங்கும் திருவாய்மொழியில், அடியவர்கள் பெருமையை ஆழ்வார் அருளிச்செய்துள்ளார். இத்தொடர்பில் எம்பெருமானார் அருளிச்செய்துள்ள ***வார்த்தை*** *ஒன்று கூறப் பெறுகிறது.*

விளக்கம்

'பயிலும் சுடரொளி' என்று தொடங்கும் (3-7) திருவாய்மொழியிலும், 'நெடுமாற்கடிமை' என்று தொடங்கும் (8-10) திருவாய்மொழியிலும் நம்மாழ்வார் எம்பெருமானுடைய அடியவர்களே பற்றத் தகுந்தவர்கள் என்று அருளிச் செய்கிறார். "இப்படி நம்மாழ்வார் சொன்னவற்றை ஸ்ரீராமாயணத்தில் சத்ருக்னன் பின்பற்றிக் காட்டினான்" என்று எம்பெருமானார் அருளிச் செய்வர். (ஸ்ரீராமாயணத்திற்கு வெகுகாலம் பின்னரே திருவாய்மொழி தோன்றியது என்றாலும், அடியவர்கள் பற்றத் தகுந்தவர்கள் என்பது ஏற்கனவே திருமந்திரத்தில் சொல்லப்பட்டிருப்பதால், அதை சக்ருக்னாழ்வானும் பின்பற்றினான், நம்மாழ்வாரும் அதையே அருளிச் செய்தார் என்று உரையாசிரியர் விளக்குகிறார்.)

[532]

எம்பெருமானார் இப்லோகத்துக்கு வாக்யார்த்த₂மாக, "ஸ்ரீஶத்ருக்₄நாழ்வான் பெருமாளுக்கு நல்லனான ஸ்ரீப₄ரதாழ்வானையல்லது அறியாதபடியானான்" என்றருளிச் செய்தார்.

(திருவாய்மொழி 3-7 ஈடு வியாக்கியான ப்ரவேசம்)

நிகழிடம்

"பயிலும் சுடரொளி" என்று தொடங்கும் திருவாய்மொழியில், அடியவர்கள் பெருமையை ஆழ்வார் அருளிச்செய்துள்ளார். இத்தொடர்பில் எம்பெருமானார் அருளிச்செய்துள்ள ***வார்த்தை*** *ஒன்று கூறப் பெறுகிறது.*

விளக்கம்

எண் 190ன் விளக்கம் பார்க்க.

[533]

(பயில இனிய) 'பண்டிவரை' இத்யாதி. முதல் நாள் கண்டால் ஸ்வாப$_4$ாவிக ஶேஷித்வத்தாலும், முகத்தில் தண்ணளியாலுமாக, காணாது கண்டவனுக்கும் 'பண்டு கண்டுவிட்ட முகமோ?' என்று தோற்றியிருக்கும்; "இரண்டுக்கும் ஶப்$_3$த$_3$ம் ஒத்திருக்க, இவ்வர்த்த$_2$த்தைக் காட்டும்படி எங்ஙனே?" என்று நான் கேட்டேன். "பயில்கின்றாளால்" என்று ப்ரத$_2$மத$_3$ஶையோடு சரமத$_3$ஶையோடு வாசியற வார்த்தை இதுவேயாயிருந்தது கண்டீரே!" என்றருளிச் செய்தார்.

(திருவாய்மொழி 3-7-1 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

"பயில இனிய பரமனை" (பழகப்பழக மிகவும் இனியவனான எம்பெருமானை) என்று ஆழ்வார் அருளிச்செய்துள்ளார். இத்தொடர்பில் 'பண்டு இவரைக் கண்டறிவது எவ்வூரில்' என்ற திருமங்கையாழ்வார் பாசுரத்தை மேற்கோளாகக் காட்டி விளக்குகின்ற உரையாசிரியர், அப்பாசுரத்தைப் பற்றிய **ஸம்வாதம்** *ஒன்றையும் காட்டுகிறார்.*

விளக்கம்

எண் 272ன் விளக்கம் பார்க்க.

[534]

(நான்கு) ப$_4$ட்டர் திருக்கோட்டியூரிலே எழுந்தருளியிருக்கச் செய்தே அனந்தாழ்வான் கண்டு "பரமபத$_3$த்தில் ஸர்வேஶ்வரன் சதுர்பு$_4$ஜனாயோ த்$_3$விபு$_4$ஜனாயோ எழுந்தருளியிருப்பது?" என்ன, "ஏகாயனர் த்$_3$விபு$_4$ஜன் என்னா நின்றார்கள்; நம்முடையவர்கள் சதுர்பு$_4$ஜன் என்னா நின்றார்கள்" என்ன, "இரண்டிலும் வழியேது?" என்ன, "த்$_3$விபு$_4$ஜனாயிருந்தானாகில் பெரிய பெருமாளைப்போலே இருக்கிறது. சதுர்பு$_4$ஜன் என்று தோற்றிற்றாகில் பெருமாளைப்போலேயிருக்கிறது" என்றருளிச் செய்தார்.

(திருவாய்மொழி 3-7-2 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

"தோளும் ஓர் நான்குடைத் தூமணிவண்ணன்" (நான்கு திருத்தோள்களை உடைய நீலமணிபோன்றவன்) என்று ஆழ்வார் அருளிச்செய்துள்ளார். இத்தொடர்பில் ஒரு **ஸம்வாதம்** *காட்டப்பெறுகிறது.*

விளக்கம்

எண் 186ன் விளக்கம் பார்க்க.

[535]

நிலாத்துக்குறிபகவர் ப$_4$ட்டரை "ஸ்ரீவைகுண்ட$_2$த்திலே சதுர்ப்பு$_4$ஜனாயிருக்கும் என்னுமிடத்துக்குப் பிரமாணமுண்டோ?" என்ன तमस: परमो धाता शङ्खचक्रगदाधर: **(தமஸ: பரமோத$_4$ாதா ஶங்க$_2$சக்ர க$_3$த$_3$ாத$_4$ர:) என்று உண்டாயிருந்ததே" என்ன, உத்தரமில்லாமையாலே விக்ருதராக, "ப்ரமாணக$_3$தி இதுவாயிருந்தது; பொறுக்கலாகாதோ!" என்று அருளிச் செய்தார்.**

(திருவாய்மொழி 3-7-2 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

"தோளும் ஓர் நான்குடைத் தூமணிவண்ணன்" (நான்கு திருத்தோள்களை உடைய நீலமணிபோன்றவன்) என்று ஆழ்வார் அருளிச்செய்துள்ளார். இத் தொடர்பில் ஒரு **ஸம்வாதம்** *காட்டப்பெறுகிறது.*

விளக்கம்

எண் 269ன் விளக்கம் பார்க்க.

[536]

(வல்லாரைப் பணியுமவர் கண்டீர்) "பிள்ளையாத்தான் என்று போர நல்லனாயிருப்பான் ஒருவன் சீயர் ஸ்ரீபாத$_3$த்திலே வந்து 'எனக்கு ஓர் உரு திருவாய்மொழி அருளிச் செய்ய வேணும்' என்ன, 'உனக்கு விஶத$_3$மாவன பிள்ளையோடே கேட்டாலாயிற்று; அங்கே கேள்' என்ன, 'அவரை த$_3$ண்ட$_3$னிட வேணுமே' என்ன, 'அது ஒன்று உண்டோ? வேணுமாகில் செய்கிறாய்' என்று, என்னை அழைத்து, 'இவனுக்குப் பாங்கானபடி ஓர் உரு திருவாய்மொழி சொல்லும்' என்ன, இவ்வளவும் வரக் கேட்டவாறே என்னை மிகவும் அநுவர்த்திக்கப்புக, நான் ஒட்டாதொழிய, சீயர் பாடே சென்று 'இவ்வர்த்த$_2$த்தினுடைய சீர்மை அறியாமையாலே முன்பு அப்படிச் சொன்னேன்; இனி நான் அநுவர்த்திக்கதுக்கு இசையும்படி அருளிச் செய்ய வேணும்' என்று சீயரையிட்டு நிர்ப்ப$_3$ந்தி$_4$த்து அநுவர்த்தித்தான்" என்றருளிச் செய்வர்.

(திருவாய்மொழி 3-7-3 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

எம்பெருமானைப் பணியும் அடியவர்களைப் பணியுமவர்களே எம்மை அடிமை கொள்ளுமவர்கள் என்று நம்மாழ்வார் அருளிச் செய்கிறார்.

அப்படிப்பட்ட எண்ணம் ஒருவருக்கு ஏற்படுவது மிகவும் அரிது என்பதை விளக்க, ஒரு **ஐதிஹ்யம்** கூறப்பெறுகிறது.

விளக்கம்

"**பிள்ளையாத்தான்** என்பவன் மிகவும் நல்லவன். அவன் நஞ்சீயரிடம் வந்து 'எனக்கு ஒரு முறை திருவாய்மொழிக்குப் பொருள் விளக்கம் அருளிச் செய்ய வேணும்' என்று வேண்டினான். அதற்கு **நஞ்சீயர்**, "உனக்கு விளக்கமாகக் கேட்க வேண்டுமென்றால் நீ **நம்பிள்ளை**யிடம்தான் கேட்க வேண்டும்; அவரிடம் கேள்" என்றார். அதற்குப் பிள்ளையாத்தான் "நம்பிள்ளையிடம் கேட்பது என்றால் அவரை வணங்க வேண்டுமே! (அவரை நான் வணங்கிவிட்டால் என் கௌரவம் குறைந்து போய் விடுமே!)" என்றான். 'அப்படி ஒன்று இருக்கிறதோ! உனக்கு விருப்பமிருந்தால் வணங்கு; (விருப்பமில்லாவிட்டால் வணங்க வேண்டாம்)" என்று கூறிய நஞ்சீயர், என்னை (நம்பிள்ளையை) அழைத்து, 'இவனுக்குத் தகுதியானபடி (இவனிடத்தில் வணக்கத்தை எதிர்பாராமல்) ஒரு முறை திருவாய்மொழி சொல்லும்' என்று நியமித்தருளினார். (பிள்ளையாத்தானும் என்னை தண்டனிட்டு வணங்காமலே) இப்பாசுரம் வரை காலட்சேபம் கேட்டுக் கொண்டு வந்தான். 'பாதம் பணியவல்லாரைப் பணியுமவர் கண்டீர்' என்கிற இவ்விடம் வந்தவாறே தன் தவற்றை உணர்ந்து என்னை மிகவும் பணிவுடன் வணங்க முயன்றான். ('உன் வணக்கத்தை எதிர்பாராமலன்றோ உனக்குத் திருவாய்மொழி சொல்ல வேண்டும் என்று நஞ்சீயர் எனக்கு நியமித்தருளினார்' என்று) நான் அதற்கு இசையாமல் போகவே அவன் நஞ்சீயரிடம் சென்று 'அடியவர்களுக்கு ஆட்பட்டிருத்தல் என்னும் இவ்வர்த்தத்தின் பெருமையை இது நாள் வரை நான் அறியாமையால் முன்பு நான் அப்படி (வணங்க மாட்டேன் என்று) சொன்னேன். இப்போது நான் உணர்ந்து கொண்டுவிட்டபடியால், என் வணக்கத்தை அவர் (நம்பிள்ளை) ஏற்றுக் கொள்ளும்படி கூறவேண்டும்' என்று கூறி, நஞ்சீயர் மூலமாக வற்புறுத்தி என்னை வணங்கினான்" என்று (நம்பிள்ளை) அருளிச் செய்வர்.[1]

1. பிள்ளையாத்தான் நஞ்சீயரிடம் திருவாய்மொழி விளக்கம் கேட்க ஆசைப்பட்டார். ஆனால் நஞ்சீயர் அவரை நம்பிள்ளையிடம் கேட்கச் சொன்னபோது தயங்கினார். அதற்குக் காரணம் நம்பிளைளையை வணங்கவேண்டுமே என்பது. நஞ்சீயர் துறவி ஆகையால் அவரை வணங்குவதில் பிள்ளையாத்தானுக்குத் தயக்கம் ஏற்படவில்லை போலும்! ஆனால் தம்மைப்போலவே க்ருஹஸ்தரான நம்பிள்ளையை வணங்குவதில் தயக்கம் காட்டினர். மேலும் பிள்ளையாத்தான் நஞ்சீயரைவிட வயதில் சிறியவராயும் நம்பிள்ளையைவிட வயதில் மூத்தவராயும் இருந்திருக்கலாம். அதனாலும் நம்பிள்ளையை வணங்கத் தயங்கி இருக்கலாம். ஆனால், 'பயிலும் சுடரொளி' திருவாய்மொழியைக் கேட்டபிறகு, ஸ்ரீவைஷ்ணவனுடைய வயது ஆச்ரமம் இவைகளைப் பார்த்து வணங்காமல் இருப்பது தவறு என்றும், ஞானபக்திகளைக் கொண்டே ஒருவரை உயர்ந்தவர் என்று மதித்து வணங்க வேண்டும் என்றும் அவர் உணர்ந்து கொண்டார்.

[537]

(வல்லாரைப் பணியுமவர் கண்டீர்) வீரப்பிள்ளையும் பாலிகை வாளிப்பிள்ளையும் என்று இருவர் சீயர் ஸ்ரீபாத₃த்துக்கு ஏகாந்தராய், தங்களிலே செறிந்து போந்தார்களாய், தே₃ஶாந்தரம் போனவிடத்தே வெறுப்புண்டாய்த் தங்களில் வார்த்தை சொல்லாதேயிருக்க, இவர்களைப் பார்த்து, "பிள்ளைகாள்! அர்த்தகாமங்கள் த்யாஜ்யம் அல்லாமையோ, ப₄க₃வத்₃விஷயம் அராட்டுப் பிராட்டாயோ, ஒரு ஸ்ரீவைஷ்ணவனும் ஸ்ரீவைஷ்ணவனும் தங்களிலே வார்த்தை சொல்லாதே வெறுத்திருக்கிறது?" என்ன, இருவரும் எழுந்திருந்து த₃ண்ட₃னிட்டு ஸங்க₃தராய்ப் போனார்கள்.

(திருவாய்மொழி 3-7-3 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

எம்பெருமானைப் பணியும் அடியவர்களைப் பணியுமவர்களே எம்மை அடிமை கொள்ளுமவர்கள் என்று நம்மாழ்வார் அருளிச் செய்கிறார். அப்படிப்பட்ட எண்ணம் ஒருவருக்கு ஏற்படுவது மிகவும் அரிது என்பதை விளக்க, ஒரு ***ஐதிஹ்யம்*** *கூறப்பெறுகிறது.*

விளக்கம்

வீரப்பிள்ளை, பாலிகை வாளிப்பிள்ளை *என்ற இருவர் நஞ்சீயருக்கு மிகவும் நெருங்கிய சீடர்களாவர். இவர்கள் இருவரும் ஒருவருக்கொருவர் மிகுந்த நட்புடன் பழகி வந்தார்கள். இருவரும் ஒருமுறை வெளியூர் சென்றிருந்த போது, ஏதோ (பணவிஷயத்தில்?) சச்சரவு ஏற்பட்டு அதனால் ஒருவர் மேல் மற்றொருவர் வெறுப்புக் கொண்டு ஒருவரோடொருவர் பேசாமலிருந்து விட்டார்கள். இதையறிந்த* **நஞ்சீயர்** *"பிள்ளைகாள்! செல்வத்தில் ஆசை, காமம் இவை மிகவும் தாழ்ந்தவை அன்று எண்ணியும் பகவத் விஷயம் மிகவும் உயர்ந்தது அன்று என்று எண்ணியுமோ ஸ்ரீவைஷ்ணவர்களாகிய நீங்கள் இருவரும் ஒருவருக்கொருவர் பேசிக் கொள்ளாமல் வெறுப்புடன் இருக்கிறீர்கள்?" என்று கூற, இருவரும் எழுந்திருந்து நஞ்சீயரை வணங்கிவிட்டு, மீண்டும் பழையபடி நண்பர்களானார்கள்.*

[538]

(அடியார் இத்யாதி) "இப்படி வைஷ்ணவர்களை விரும்பினால் இது லௌகிகரோடு சேராதிருந்ததாகில், ஆழ்வார் விரும்பினத்தை விஶ்வஸித்தோம் ஆகிறோம்" என்று சீயர் அருளிச் செய்யும்படி.

(திருவாய்மொழி 3-7-10 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

அடியார் அடியார்தம் அடியார் அடியார்தமக்கு
அடியார் அடியார்தம் அடியார் அடியோங்களே

(எம்பெருமானுடைய அடியவர்க்கு அடியவருடைய அடியவர்களுக்கு அடியாருடைய அடியோங்கள் நாங்கள்) என்று நம்மாழ்வார் அருளிச் செய்கிறார். இதுபற்றி நஞ்சீயர் அருளிச்செய்த **வார்த்தை** கூறப்பெறுகிறது.

விளக்கம்

உலகோர்கள் எல்லாரும் தாங்கள் மற்றவர்கள் அனைவருக்கும் மேலே மேலே இருக்க வேண்டுமென்று ஆசைப்படுகையில் ஆழ்வார் எல்லா அடியவர்களுக்கும் கீழே தாம் அடியவராக இருக்க ஆசைப்படுகிறாரே! என்னில், "இப்படி வைஷ்ணவர்களுக்கு அடியவர்களாக இருப்பது உலக வழக்குக்குச் சேராதது என்றால், ஆழ்வார் விரும்பியதை நாமும் விரும்பி அதன்படி இருந்தோம் ஆகிறோம்" என்று **நஞ்சீயர்** அருளிச்செய்தார். ஆழ்வார் விரும்பியதை நாம் பின்பற்ற முடியவில்லையென்றாலும், 'ஆழ்வார் இப்படி விரும்பியிருந்தார்!' என்று நம்பிக்கையுடன் அனுஸந்தித்தாலும் போதும் என்பது இதன் கருத்து.

[539]

"ஸ்ரீகு₃ஹப்பெருமாளோடே நிற்கக் காலம் நெடுகுவானென்?" என்று மிளகாழ்வானைக் கேட்க, "ஸ்மாரக ஸந்நிதி₄யில் ஆற்றாமை இரட்டிக்குமிறே" என்றருளிச் செய்தாராம்.

(திருவாய்மொழி 3-8 ஈடு வியாக்கியான ப்ரவேசம்)

நிகழிடம்

"அன்று தேர்கடவியபெருமான் கனைகழல் காண்பது என்றுகொல் கண்களே" என்று எம்பெருமான் விஷயத்தில் தமக்குள்ள துடிப்பை வெளியிட்ட ஆழ்வாருக்கு, எம்பெருமான், 'பயிலும் சுடரொளி' என்று தொடங்கும் அடுத்த திருவாய்மொழியில் தன்னுடைய அடியவர்களைக் காட்டிக் கொடுத்து ஒருவாறு தேற்றினான். அவ்வடியவர்களை அனுபவித்தது ஆழ்வாருக்குத் துன்பத்தை ஆற்றுவதற்கு பதிலாக, எம்பெருமானுடைய கல்யாணகுணங்களை மேலும் நினைப்பூட்டி, துன்பத்தை மேலும் வளர்த்தது என்கின்ற உரையாசிரியர், இத் தொடர்பில் ஒரு **ஸம்வாதம்** காட்டுகிறார்.

விளக்கம்

எண் 339ன் விளக்கம் பார்க்க.

[540]

(உன்னை எஞ்ஞான்று பொருந்துவனே) "ஈஶ்வரனில் பிராட்டிமார்க்கு பேத₄ம் சொல்லுகிற ப்ரமாணங்களெல்லாம், அல்லாதாரோபாதி பிரிவு உண்டென்னுமிடம் சொல்லுகின்றன; ஐக்யம் சொல்லுகிற இடமெல்லாம் பாரதந்த்ர்யகாஷ்டை₂யைப் பற்றச் சொல்லுகின்றன" என்று ப்ராஸங்கி₃கமாக ஓர் உருவிலே அருளிச் செய்தார்.

(திருவாய்மொழி 3-8-9 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

'எம்பெருமானே, எப்போது உன்னைச் சேரப் போகிறேன்?' என்றருளிச் செய்கிறார் ஆழ்வார். இதை விளக்குகின்ற உரையாசிரியர் - எல்லா ஆத்மாக்களும் ஒரே தன்மையுடையவை ஆகையாலே, பிராட்டியைப் போலே எம்பெருமானை விட்டு எப்போதும் பிரியாதவையே; (எனவே பிரிந்தவர் கூடுவதை ஆசைப்படுவது போலவே ஆழ்வார் அருளிச் செய்கிறார்) - என்று விளக்கி, பிராட்டியைப் பற்றி நஞ்சீயர் கூறிய ஒரு **வார்த்தையை** *எடுத்துக் காட்டுகிறார்.*

விளக்கம்

"பிராட்டிமார்கள் எம்பெருமானைக் காட்டிலும் வேறுபட்டவர்கள் (எம்பெருமானை விட்டுப்பிரியக் கூடியவர்கள்) என்று கூறுகின்ற பிரமாணங்கள் அனைத்தும் - பிராட்டிக்கும் மற்றவர்களைப் போலே பிரிவு (அவதாரகாலத்தில்) உண்டு என்பதைச் சொல்லுகிறது; பிராட்டிக்கும் எம்பெருமானுக்கும் வேறுபாடு கிடையாது என்று கூறும் பிரமாணங்கள் எம்பெருமானுக்குப் பிராட்டி இட்ட வழக்காக இருக்கும் தன்மையை (பாரதந்த்ரியத்தைக்) கூறுகின்றன" என்று நஞ்சீயர் ஒரு முறை அருளிச் செய்தார்.

[541]

(மதிக்கும்) கல் ப்₃ரஹ்மதே₃ஶத்திலே கரிகால் சோழ ப்₃ரஹ்மராயன் திருவாய்மொழிக்கு வ்யாக்₂யானஞ் செய்தேன் என்று சீயர்க்குக் காட்ட, அவன் பக்கல் உபஜீவநங்களை நினைத்து, பிள்ளையை "நீர் இத்தைக் கேட்டு, ஸம்ப₄ாவியும்" என்று அருளிச்செய்ய, அவரும் கேட்டு, "ஆழ்வார் திருவுள்ளத்தை அடியொற்றி அவர் போனவழியே போம்படியே!" என்ன, "ஆ! ஆ! பிள்ளை! ஆழ்வார்க்கும் எனக்கும் வாசி புத்₃தி₄ பண்ணிற்றில்லையோ! க்₃ராம கார்யம் செய்து இடையிலே இதுவும் செய்ய வேண்டிற்றே எனக்கு" என்றான்.

(திருவாய்மொழி 3-9-2 ஈடு வியாக்கியானம்)

நிகழ்டம்

"தன்னையொன்றாகத் தன் செல்வத்தை வளனா மதிக்கும் இம்மானிடம் (தன்னை ஒரு பொருளாக நினைத்துத் தன்னுடைய செல்வத்தைத் தானே உயர்ந்ததாக மதிக்கும் மனிதன்) என்று ஆழ்வார் இகழ்கிறார். தன்னுடைய செல்வத்தை மற்றவர்கள் போற்றாமலிருக்க, தானே அதைப் பெருமையாக நினைத்துக் கொள்வான் என்று இதற்குக் கருத்துரைத்த உரையாசிரியர் சான்றாக ஒரு **ஐதிஹ்யம்** எடுத்துக் காட்டுகிறார்.

விளக்கம்

கல்பிரம்ம தேசத்தில் கரிகால் சோழப் பிரம்மராயன் என்ற (அரசாங்க அதிகாரி?) ஒருவன் திருவாய்மொழிக்கு ஒரு உரையெழுதி அதை நஞ்சீயரிடம் கொண்டு வந்து கொடுத்து, அவருடைய மதிப்புரையைக் கேட்டான். பற்பல கைங்கர்யங்களுக்கு அவன் செய்து வருகிற உதவிகளைக் கருத்தில் கொண்டு, (அவன் எழுதியது நன்றாக இல்லாமல் போனாலும் நன்றாகவே இருக்கிறது என்றே சொல்லியாக வேண்டும்; துறவியான நாம் இதில் அகப்பட்டுக் கொள்வானேன் என்று எண்ணி) தமது சீடரான நம்பிள்ளையை அழைத்து, "நீர் இவ்வுரையைக் கேட்டுப் பாராட்டி வையும்" என்று நஞ்சீயர் கூறினார். தம் ஆசார்யருடைய கருத்தை உணர்ந்த நம்பிள்ளையும், அவ்வுரையை வாசிக்கக் கேட்டு, "இவ்வுரை ஆழ்வாருடைய திருவுள்ளக் கருத்திற்குப் பொருத்தமாக அமைந்திருக்கிறது" என்று அவன் மகிழ்வதற்காகக் கொண்டாடிச் சொன்னார். அதைக் கேட்ட கரிகால்சோழப்ரம்மராயன், "ஆகா! பிள்ளை! எனக்கும் ஆழ்வாருக்குமுள்ள வேறுபாட்டைப் பார்க்காமல் என்னையும் ஆழ்வாரையும் சமமாகக் கூறிவிட்டீரே! ஆழ்வார் ஒரு காரியமும் இல்லாதவராகையாலே எளிதாகப் பிரபந்தம் அருளிச் செய்து விட்டார். ஆனால் நான் நாட்டு நிர்வாகத்தையும் நடத்திக் கொண்டு இடையிடையே அல்லவா இவ்வுரையும் எழுதியுள்ளேன்! எனவே ஆழ்வாருடைய பிரபந்தத்தை விட இவ்வுரை அழகாக இருக்கிறது என்று கூறவேண்டாமா?" என்றானாம். தன்னை ஒரு பொருளாக நினைத்துத் தன்னுடைய உரையை ஆழ்வாருடைய அருளிச் செயலுக்கும் மேற்பட்டதாக, தானே நினைத்துவிட்ட அவனை இங்கு நம்பிள்ளை இகழ்கிறார்.

[542]

(நும் மெய் வருத்திக் கை செய்து உய்ம்மினோ) இதுக்கு எம்பார் அருளிச் செய்யும்படி "கோட்டை சுமத்தல், புல் சிரைத்தல் செய்ய மாட்டீர்களோ" என்று.

(திருவாய்மொழி 3-9-6 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

'வம்மின் புலவீர் நும் மெய்வருத்திக் கைசெய்து உய்ம்மினோ (புலவர்களே வாருங்கள்! உங்களுடைய உடலை வருத்தியும் கைத்தொழில் செய்தும் வாழ்க்கை நடத்தப் பாருங்கள்) என்கிறார் நம்மாழ்வார். நீசர்களான மனிதர்களைக் கவிபாடி உயிர்வாழ்வதைக் காட்டிலும் உடம்பு நோவத் தொழில் செய்து வாழ்தல் சிறந்தது என்பது ஆழ்வார் திருவுள்ளக் கருத்து. இங்கு எம்பார் அருளிச்செய்த **வார்த்தை** *எடுத்துக்காட்டப்பெறுகிறது.*

விளக்கம்

இங்குப் பாசுரத்திலுள்ள "மெய் வருத்தி, கைசெய்து' என்றுள்ள சொற்களின் நயத்தை விளக்கியருளும் **எம்பார்** *"மூட்டை சுமத்தல், புல் செதுக்குதல்" செய்ய மாட்டீர்களோ!" என்பராம். அதாவது நீசர்களைப் பாடுவதைக் காட்டிலும் உடலை வருத்தி மூட்டை சுமந்தாவது, புல் செதுக்குகின்ற கைத்தொழில் செய்தாவது பிழைக்கலாமே என்பது எம்பார் கருத்தாகும்.*[1]

[543]

(வீடும் தரும் நின்று நின்றே) "இப்படி முழுக்கக் கொடுத்தாலும், இவனுக்கு நாம் ஒன்றும் செய்ய பெற்றிலோம்" என்று, ऋणं प्रवृद्धमिव मे (ருணம் ப்ரவ்ருத்$_4$த மிவ மே) என்று திருவுள்ளத்திலே மிறுக்குப்பட்டிருக்கும்" என்று நம் ஆசார்யர்கள் நிர்வஹிக்கும்படி. ஒரு தமிழன் 'அடைவடைவே தரும் சொன்னவற்றை' என்றான்.

(திருவாய்மொழி 3-9-9 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

'வீடும் தரும் நின்று நின்றே' என்றருளிச் செய்கிறார் ஆழ்வார். இதற்கு இருவிதமான **நிர்வாஹங்கள்** *காட்டப்படுகின்றன.*

விளக்கம்

அடியவனுக்கு நவீடுபேறு உட்பட எல்லாவற்றையும் கொடுத்தாலும், 'இவனுக்கு நாம் ஒன்றும் கொடுத்திலோமே' என்று திருவுள்ளத்தில் குறையோடே இருப்பான் எம்பெருமான். திரௌபதிக்கு ஏற்பட்ட துன்பத்தையெல்லாம் போக்கிய பின்பும், "கோவிந்தேதி யாதாக்ரந்தத் க்ருஷ்ணா மாம் தூரவாஸிநம், ருணம் ப்ரவ்ருத்தமிவ மே ஹ்ருத்யாத் நாபஸர்பதி" (வெகு தூரத்திலிருந்த என்னைக் குறித்து திரௌபதியானவள் கோவிந்தா என்று கதறியது யாதொன்று உண்டோ, அது கடன் தொகைக்கு உண்டான

1. "சுமைசுமந்தும் புல் சிதைத்தும் ஜீவிக்கப் பாருங்கோள்" என்பர் எம்பார் - என்பது இருபத்து நாலாயிரப்படியுரை.

வட்டியின்மேல் ஏறின வட்டிபோலே என்னுடைய மனத்தினின்றும் நீங்கவேயில்லை) (பாரதம் உத்யோக பர்வம் 58-22) என்று அவனே கூறியுள்ளான் அன்றோ! எனவே, தான் எவ்வளவு செய்தாலும் ஒன்றும் செய்யப் பெற்றிலோமே என்று திருவுள்ளத்தில் குறையோடே நின்று நின்று அருள் செய்பவன் என்று நம் **ஆசார்யர்கள்** விளக்கம் உரைத்தனர்.

'இவ்வுலகத்தில் மகிழ்ச்சியை அளித்துப் பிறகு பரமபதத்திற்கு அழைத்துக் கொண்டு போய், அங்கே நிலையான சுகத்தைத் தரும் - ஒன்றன் பின் ஒன்றாக நின்று நின்று கிரமமாகக் கொடுக்கும் என்று' ஒரு **தமிழன்** உரைத்தான். அதாவது ஒன்றன் பின் ஒன்றாக முறையே எல்லாவற்றையும் தரும் என்று கருத்து.

[544]

(உடலொடும் இத்யாதி) பூசின மஞ்சளும் உடுத்தின பட்டும், இட்ட சாவடிப் பூணூலும், இட்ட காது பணிகளுமான ஒப்பனையில் ஒன்றுங் குறையாதபடி கொண்டு வந்து கொடுத்தவனை என்றுமாம். "பிறக்கப் பிறக்கக் கொண்டு போனார்களாகில் இப்போது இவையெல்லாமுண்டோ?" என்று பட்டரைக் கேட்க, "ரிஷிபுத்ரர்களாகையாலே பிறக்கிற போதே அவற்றோடே பிறப்பர் காணும்" என்று அருளிச் செய்தார்.

(திருவாய்மொழி 3-10-5 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

'வைதிகன் பிள்ளைகளை உடலொடுங் கொண்டு கொடுத்தவன்' என்று என்று அருளிச் செய்கிறார். வைதிகன் ஒருவனுடைய பிள்ளைகள் நால்வரும் பிறந்த அடுத்த கணத்திலேயே காணாமல் போய்விட அவ்வைதிகன் கண்ணனிடம் வந்து முறையிட, கண்ணபிரான் அக்குழந்தைகளை மீட்டுக் கொடுத்தான் என்பது புராண வரலாறு. இதுபற்றி ஒரு **ஸம்வாதம்** காட்டப்பெறுகிறது.

விளக்கம்

இவ்விடத்தை **பட்டர்** விளக்கியபோது "அக்குழந்தைகள் காணாமல் போனபோது பூசியிருந்த மஞ்சளும், உடுத்தின பட்டும், இட்ட சாவடிப் பூணூலும், இட்ட காதணிகளும் முதலிய ஒப்பனைகளில் ஒன்று கூடக்குறையாதபடி அப்படியே கொண்டு வந்து கொடுத்தான்" என்று அருளிச் செய்தாராம். "குழந்தைகள் பிறந்த அடுத்த கணத்திலேயே காணாமல் போய்விட்டதாகச் சொல்லப்பட்டிருக்கிறதே! அப்போது இவ்வொப்பனைகள் உண்டோ?" என்று பட்டரைக் கேட்டதற்கு "அக்குழந்தைகள் ரிஷியின் புத்திரர்களாகையால் பிறக்கிற போதே அவற்றுடன் பிறப்பர்கள்" என்று நயமாக விடையளித்தார்.

1. இருபத்துநாலாயிரப்படியிலும் இவ்வாறு விளங்கங்கள் அருளிச்செய்தமை குறிப்பிடப்பட்டுள்ளன.

[545]

‘பணிமின் திருவருள் என்னும் அஞ்சீதப் பைம்பூம்பள்ளி அணி மென் குழலார்’ என்று ஸ்த்ரீகளோடே சேர்த்து நிர்வஹிப்பர்கள் முன்புள்ள முதலிகள். பட்டர் அங்ஙனன்றிக்கே, ‘பணிமின் திருவருள் என்னும்’ என்கிற இத்தை ‘இன்பக் கலவி அமுதுண்டார்’ என்கிறவர்களோடே சேர்த்து அருளிச் செய்வர்.

(திருவாய்மொழி 4-1-5 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

செல்வச் செழிப்புடன் இன்பங்களை அனுபவித்த அரசர்களும் செல்வத்தை இழந்து பிச்சையெடுக்கக் காண்கிறோம். எனவே நிலையற்ற செல்வத்தை வெறுத்து நிலையான பகவத்கைங்கர்யத்தையே அனைவரும் விரும்ப வேண்டும் என்று ஆழ்வார் இப்பதிகத்தில் அருளிச் செய்கிறார். இப்பாசுரத்தில், செல்வச் செழிப்புடனிருந்த காலத்தில் அரசர்கள் பெண்களுடன் கூடி இன்பம் துய்த்திருந்ததை அருளி செய்யும் போது ‘பணிமின் திருவருளென்னும் அஞ்சீதப் பைம்பூம்பள்ளி அணிமென் குழலார் இன்பக் கலவியமுதுண்டார்’ என்றருளிச் செய்கிறார். இதற்கு இரண்டு வகையான **நிர்வாஹங்கள்** *காட்டப்படுகின்றன.*

விளக்கம்

‘அருள்புரிய வேண்டும்’ என்று தங்களை வேண்டுகின்ற, அழகிய கூந்தலை உடைய பெண்களின் இன்பக்கலவியை அழகிய குளிர்ந்த படுக்கையிலே சயனித்துக் கொண்டு அனுபவித்தவர்கள் அரசர்கள் - என்று பட்டருக்கு **முன்பிருந்த ஆசாரியர்கள்** *விளக்கம் அருளிச் செய்தார்கள். ‘பணிமின் திருவருள்’ என்று அரசனைவேண்டுபவர்கள் பெண்கள் என்பது அவ்வாசாரியர்கள் கருத்து.*

ஆனால் பட்டர் மிகவும் சுவையாக வேறொரு பொருள் காட்டினார். அழகிய பூம்படுக்கையிலே படுத்துக் கொண்டிருக்கின்ற அழகிய பெண்களை நோக்கி ‘அருள் புரிய வேண்டும்’ என்று கெஞ்சி வேண்டிக் கொண்டு அவர்களுடைய இன்பக் கலவியாகிற அமுதத்தை அனுபவித்த அரசர் என்று பட்டர் விளக்கமளித்தார். ‘பணியின் திருவருள்’ என்று பெண்களை அரசன் வேண்டுவதாகப் பட்டர் உரைத்தது இன்பச் சுவை மிகுந்தது.

ஆக ‘பணிமின் திருவருள்’ என்று வேண்டியது அணிமென்குழலாரான பெண்கள் என்பது முன்புள்ள ஆசார்யர்கள் கருத்து; அப்படி வேண்டியது அப்பெண்களல்ல, அவர்களிடத்தில் காமங் கொண்டு இன்பக்கலவி அமுதுண்டவர்களான அரசர் தான் அப்பெண்களிடத்தில் அப்படி மிகவும் பணிவாகக் கூறினர் என்பது பட்டர் கருத்தாகும்.[1] ‘அடிசேர் முடியினராகி’ என்ற

1. இருபத்துநாலாயிரப்படியிலும் இவ்விளக்கங்கள் அருளிச்செய்தமை குறிப்பிடப்பெற்றுள்ளன.

மூன்றாம் பாசுரத்தில், சிற்றரசர்கள் தங்கள் காலில் விழுந்ததை அலட்சியம் செய்து இவ்வரசர்கள் இன்னிசை கேட்டிருந்தமை கூறப்பெற்றுள்ளது. ஆனால் இரவிலே இவ்வரசர்களும் அந்தப்புரத்திலே பெண்கள் முன்னால் கை கட்டி வாய்தைத்து, 'பணிமின் திருவருள்' என்று வேண்ட, அப்போது அணிமென் குழலாரான பெண்கள் அவ்வரசர்களை அலட்சியம் செய்து தங்கள் குழலைப் பேணிக்கொண்டிருப்பர்கள் என்பது பட்டர் அளிக்கும் விளக்கத்தின் கருத்தாகும்.

[546]

(குடி மன்னும் இன்சுவர்க்கம் எய்தியும்) "இதுக்கும் ஆள்பற்றுவதே" என்று பட்டர்.

(திருவாய்மொழி 4-1-9 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

'குடிமன்னும் இன்சுவர்க்கம் எய்தியும் மீள்வர்கள்' (உடம்பை வருத்தித் தவம் செய்து சுவர்க்கத்தை அடைபவர்களும் தங்கள் புண்ணிய பலம் கழிந்து விட்டால் சுவர்க்கத்திலிருந்து திரும்பி விடுவர்கள்) என்கிறார் ஆழ்வார். இத் தொடர்பில் பட்டர் அருளிச்செய்த **வார்த்தை** *கூறப்பெறுகிறது.*

விளக்கம்

"இப்படிச் சிலநாளில் கழிந்து விடக் கூடிய சுவர்க்க இன்பத்திற்கும் சிலர் ஆசைப்படுகிறார்களே! இது என்ன ஆச்சரியம்!" என்பராம் பட்டர்.

[547]

"இவ் ஒருநாயகம் அருளிச் செய்தவரே கிடிகோள், சூழ்விசும்பணிமுகிலும் அருளிச் செய்தார். இத்தை ஸ்ரீவைஷ்ணவர்கள் திருவுள்ளம் பற்றுங்கோள்" என்று பிள்ளை அருளிச் செய்வர். அதாவது - "இதுப்ரத்யக்ஷிக்கிறாற்போலே இப்பரீர ஸமநந்தரம் அதுவும் காணவன்றோ நாம் புகுகிறது" - என்று.

(திருவாய்மொழி 4-2 ஈடு வியாக்கியான ப்ரவேசம்)

நிகழிடம்

'ஒரு நாயகமாய்' என்ற திருவாய்மொழியில் ஆழ்வார், செல்வமானது நிலையில்லாதது என்று அருளிச் செய்து, அதற்கு ஒவ்வொருவரும் இவ்வுலகில் தங்கள் கண்ணால் காணக்கூடிய பல உதாரணங்களையும் எடுத்துக் காட்டினார். இத்தொடர்பில் நம்பிள்ளை அருளிச்செய்த **வார்த்தை** *கூறப்பெறுகிறது.*

விளக்கம்

செல்வம் நிலையில்லாதது என்பதைப் பல உதாரணங்களுடன் அருளிச் செய்த நம்மாழ்வாரே, "சூழ்விசும்பணிமுகில்' என்கிற (10-9) திருவாய்மொழியில்

எம்பெருமானுடைய அடியவர்களுக்குப் பரமபதத்தில் கிடைக்கின்ற சிறப்புகளையெல்லாம் அருளிச் செய்துள்ளார். நம்மாழ்வார், ஆழ்வார் திருநகரியில் திருப்புளிய மரத்தின் அடியில் எழுந்தருளியிருந்தாரே தவிர, உலகில் எங்கும் அடியெடுத்து வைத்தவர் அல்லர். ஆயினும் செல்வத்தின் நிலையாமையை (எம்பெருமான் காட்டக் கண்டு) அருளிச்செய்துள்ளார். அதேபோல்தான் பரமபதத்தில் அடியவர்கள் பெறும் சிறப்புகளையும் ஆழ்வார் (எம்பெருமான் காட்டக் கண்டு) அருளிச்செய்துள்ளார். செல்வம் நிலையில்லாதது என்று ஆழ்வார் அருளிச் செய்ததை நாம் எப்படிக் கண்கூடாகக் காண்கிறோமோ அப்படியே பரமபதத்தில் எம்பெருமானுடைய அடியவர்களுக்குக் கிடைக்கக் கூடிய பெருமைகளை நாம் இவ்வுடலை நீத்தபின் காணத்தான் போகிறோம்" என்று **நம்பிள்ளை** *அருளிச் செய்தார்.*

[548]

........இது தனக்கு மூன்று படியாக நிர்வஹிப்பர்கள் நம்முதலிகள். எம்பார் "அம்புலியம்மானைப் பிடித்துத் தரவேணும்" என்று அழுத ப்ரஜைக்குத் தேங்காயைக் கொடுத்து அழுகையை ஆற்றுவாரைப் போலே வேறொரு கு$_3$ணாவிஷ்காரத்தைப் பண்ணி அனுப$_4$விப்பிக்க அனுப$_4$விக்கிறார்" என்றருளிச் செய்வர். திருமலைநம்பி "ஒருவன் ஒன்றை அபேக்ஷித்தால் அவனும் அது செய்வானாகத் தலை துலுக்கினால், பெற்றானாய்ப் பின்னில் இழவு தோன்றும்படியன்றிருப்பது. ஆகையாலே அவனும் 'அப்படிச் செய்கிறோம்' என்னக் கீழில் இழவை மறந்து எல்லாம் பெற்றாராய் அனுப$_4$விக்கிறார்" என்று. ப$_4$ட்டர், "காலத்ரயத்தில் உள்ளதையும் இப்போதே அனுப$_4$விக்கலாம்படி, காலசக்கரத்தானாகையாலே காலோபாதி$_4$யைக் கழித்து வர்த்தமான காலத்திற் போலே அனுப$_4$வ யோக்$_3$யமாம்படி காலத்தை ஒரு பே$_4$ாகி$_3$யாக்கிக் கொடுக்க அனுப$_4$விக்கிறார்" என்றருளிச் செய்வர்.

(திருவாய்மொழி 4-3 ஈடு வியாக்கியான ப்ரவேசம்)

நிகழ்டம்

என்றைக்கோ கழிந்துபோன எம்பெருமானுடையபடிகளை (செயல்களை) அக்காலத்திற் போலவே இப்போது அனுபவிக்க வேண்டும் என்ற ஆசையை ஆழ்வார் 'பாலனாய்' என்ற கீழ்த் திருவாய்மொழியில் (4-2) வெளியிட்டார். ஆழ்வார் வேண்டியபடியே எம்பெருமான் ஆழ்வாரோடு கலந்து, அவர் மீது தனக்குள்ள அன்பைக் காட்ட, அந்த அன்பை 'கோவைவாயாள்' என்கிற இத்திருவாய்மொழியில் (4-3) ஆழ்வார் கொண்டாடுகிறார். இதற்கு மூன்று வகை **நிர்வாஹங்கள்** *காட்டப்படுகின்றன.*

விளக்கம்

1. 'சந்திரனைப் பிடித்துத் தர வேண்டும்' என்று அழுகிற குழந்தையின் கையில் தேங்காயைக் கொடுத்து அழுகையை மாற்றுவது போல, என்றைக்கோ நடந்த எம்பெருமானுடைய செயல்களை அனுபவிக்க வேண்டுமென்று ஆசைப்பட்ட ஆழ்வாருக்கு எம்பெருமான் தன்னுடைய (அன்பு என்கிற) ஒரு குணத்தைக் காட்ட, ஆழ்வாரும், தாம் கீழே விரும்பியதை மறந்து அந்த குணத்தையே அனுபவிக்கிறார் என்று எம்பார் *அருளிச் செய்தார்.*

2. ஒருவன் ஒன்றைக் கேட்க, மற்றவனும் அதைத் தருகிறேன் என்று சொல்லி விட்டானாகில், கேட்டவன் அதைப் பெற்று விட்டதாகவே நினைத்து விடுவான். எனவே ஆழ்வார் ஆசைப்பட்டபடியே கொடுத்து விடுகிறேன் என்று எம்பெருமான் தலையசைக்க, ஆழ்வாரும் தாம் ஆசைப்பட்டபடியே பெற்றுவிட்டதாகவே நினைத்து, பாசுரம் அருளிச் செய்கிறார் என்று திருமலைநம்பி *அருளிச் செய்தார்.*

3. முக்காலத்திலும் உள்ள எம்பெருமானுடையபடிகளை இப்போதே அனுபவிக்க வேண்டும் என்று ஆழ்வார் ஆசைப்பட்டார். எம்பெருமானும் காலசக்கரத்திற்கு அதிபதியாகையாலே காலமாகிற தடையைக் கழித்து கீழ்க்கழிந்த காலத்தில் இருந்தவைகளையும் நிகழ்காலத்திற் போலவே ஆழ்வாருக்குக் காட்டிக் கொடுக்க அவற்றை அனுபவித்து மகிழ்கிறார் இத்திருவாய் மொழியில் என்று பட்டர் *அருளிச் செய்தார்.*

ஆழ்வார் விரும்பிய அனுபவத்தைக் கொடுக்காமல் ஏதோவொரு குணத்தைக் காட்ட அதனால் களித்துப் பேசுகிறார் என்பது எம்பார் தரும் விளக்கம்.

ஆழ்வார் விரும்பியதைத் தராவிட்டாலும், தருகிறேன் என்று எம்பெருமான் சொன்ன ஒரு சொல் கொண்டே ஆழ்வார் மகிழ்ச்சி அடைந்து பேசுகிறார் என்பது திருமலைநம்பி தரும் விளக்கம்.

ஆழ்வார் விரும்பியபடியே அனுபவத்தைத் தர, அதனால் களித்துப் பேசுகிறார் என்பது பட்டர் தரும் விளக்கம்.

[549]

(ஏலும் ஆடையும் அஃதே) ஒருநாள் ஒரு ஸ்ரீவைஷ்ணவ வண்ணாத்தான் திருப்பரியட்டங்களை அழகிதாக வாட்டிக்கொண்டுவந்து எம்பெருமானாருக்குக் காட்ட, போர த்ருப்தராய், அவனைப் பெருமாள் திருவடிகளிலே கைப்பிடித்துக்கொண்டு புக்கு, "நாயந்தே! இவன் திருவரைக்கு ஈடாம்படி வாட்டினபடி திருக்கண் சாத்தியருளவேணும்" என்று இவற்றைக்

காட்டியருள, கண்டு உகந்தருளி, உடையவரை அருள்பாடிட்டு, "இவனுக்காக ரஜகன் நம்திறத்தில் செய்த குற்றம் பொறுத்தோம்" என்று திருவுள்ளமாயருளினார்.

(திருவாய்மொழி 4-3-5 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

"ஏலும் ஆடையும் அஃதே" (எம்பெருமானுக்குத் தகுதியான ஆடையும் எனது அன்பே) என்று ஆழ்வார் அருளிச்செய்கிறார். இத்தொடர்பில் ஓர் **ஐதிஹ்யம்** *காட்டப்பெறுகிறது.*

விளக்கம்

ஒருநாள் ஸ்ரீவைஷ்ணவ வண்ணான் ஒருவன் திருவரங்கம் பெரிய கோயிலில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானான அழகிய மணவாளனுடைய திருப்பரிவட்டங்களை (ஆடைகளை) மிகவும் நன்றாகத் துவைத்து வெளுத்து அவற்றை எம்பெருமானாரிடம் கொண்டு காட்டினான். மிகவும் நன்றாக வெளுக்கப்பட்டிருந்த அவைகளைக் கண்ட எம்பெருமானார் மிகவும் மகிழ்ச்சியடைந்தார். அவ்வண்ணானின் கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு, பெருமாள் ஸன்னிதிக்கு எழுந்தருளி, பெருமாளிடம், "நாயந்தே! இவன் தேவரீருடைய திருவரைக்குத் தகுதியாக ஆடைகளை மிக அழகாகத் துவைத்துக் கொண்டு வந்திருப்பதைக் கண்டு அருள வேண்டும்" என்று விண்ணப்பித்து, அவ்வாடைகளை அழகிய மணவாளனுக்குக் காட்ட, மிகவும் மகிழ்ச்சி அடைந்த அழகியமணவாளனும் உடையவருக்கு அருள்பாடு செய்தருளி, "இவ் வண்ணானுக்காக கம்ஸனுடைய வண்ணான் முன்பு நம்மிடத்தில் பட்ட குற்றத்தை[1] மன்னித்தேன்" என்று அருளிச் செய்தான்.[2]

[550]

(உன்னதென்னதாவியும் என்னதுன்னதாவியும்) இவ்விடத்தை ஆளவந்தார் அருளிச் செய்யா நிற்கச் செய்தே, இருந்த முதலிகளிலே சிலர் "இவ்வாத்மாவின் ஸ்வரூபம் அவனிட்ட வழக்கென்றால் கூடுமே. அவன் ஸ்வரூபம் இவனிட்ட வழக்காகையாவது என்?" என்று கேட்க, "இவன் தன்னை அவனுக்கு ஆக்குவன்' என்றவன்று கர்மம் தகையவுங் கூடும். ஸர்வேஶ்வரன் தன்னை

1. கண்ணபிரானும் பலராமனும் கம்ஸனால் அழைக்கப்பட்டு மதுரைக்கு வந்தபோது அவ்வூர் ராஜவீதியில் கம்ஸனுடைய வண்ணான் துணி மூட்டைகளைச் சுமந்து கொண்டு வர, கண்ணனும், பலராமனும் அவனிடம் துணிகளைக் கேட்க அவன் கொடுக்க மறுத்து விட்டான். இதுவே கம்ஸனுடைய வண்ணான் செய்த குற்றம். இது ஸ்ரீவிஷ்ணுபுராணத்தில் (5-19) காணத்தக்கது.

2. "திருப்பரிவட்டம் வெளுப்பித்த ஸ்ரீவைஷ்ணவ வண்ணாத்தான் வார்த்தை" என்று மட்டுமே இருபத்துநாலாயிரப்படியில் உள்ளது. இவ்வைதிஹ்யம் மற்றோரிடத்திலும் உள்ளது. எண் 611

இவனிட்ட வழக்காக்குமன்று நிவாரகரில்லை. ஆனபின்பு அதுவே நிலை நிற்பது. இன்னம், 'இவன் ஸ்வரூபம் அவனிட்ட வழக்காகக் கூடுமோ?' என்று இதிலே காணும் ஸங்தேஹிக்க வேண்டுவது!" என்றருளிச் செய்தார்.

(திருவாய்மொழி 4-3-8 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

"என்னதுன்னதாவியும் உன்னதென்னதாவியும்" (என்னுடைய ஆவி உன்னது (எம்பெருமானுடையது); உன்னுடைய ஆவி என்னுடையது) அதாவது என்னுடைய (ஜீவாத்மாவின்) ஸ்வரூபம் எம்பெருமான் இட்ட வழக்கு; அவனுடைய ஸ்வரூபம் நான் இட்ட வழக்கு என்கிறார் ஆழ்வார். இத்தொடர்பில் ஒரு ***ஸம்வாதம்*** *காட்டப்பெறுகிறது.*

விளக்கம்

இவ்விடத்தைதை **ஆளவந்தார்** *விளக்கியபோது அவருடைய சீடர்களில் சிலர் ஆளவந்தாரிடம் "இவ்வாத்மா அவனிட்ட வழக்கு என்றால் பொருந்தும். ஆனால் யாவர்க்கும் தலைவனான எம்பெருமான் இவனிட்ட வழக்காக இருக்கிறான் என்பது பொருந்தாதே!" என்றார்களாம். அதற்கு ஆளவந்தார், "ஜீவாத்மாவான இவன் தன்னை எம்பெருமானுக்கு அடிமைப்பட்டவனாக ஆக்க நினைக்கும்போது இவனுடைய வினைகள் அதற்குத் தடையாகவும் இருக்கும். ஆனால் எம்பெருமான், ஜீவாத்மா ஒருவனுக்குத் தன்னை இட்ட வழக்காக்கி வைத்தால், அவனைத் தட்டிக் கேட்பவர்கள் எவரும் இலர். எனவே அதுவே நிலைநின்று விடும். எனவே எம்பெருமான், ஜீவாத்மாவின் இட்ட வழக்காக இருப்பான் என்பதில் சந்தேகம் எதுவும் இல்லை. ஆனால் ஜீவாத்மா தன்னை எம்பெருமானுக்கு அடிமைப்பட்டவனாக உணர்வதைத் தடுக்கக் கூடிய வினைப்பயன்களினின்றும் மீண்டு, எம்பெருமான் இட்ட வழக்காக ஆகமுடியுமா என்பதொன்றே சந்தேகிக்க வேண்டுவது" என்று விடையளித்தார்.*

[551]

'வையம் மன்னி வீற்றிருந்து' என்கிற இடத்தே "நம்மைப் போலே வாய்புகுசோறாகப் பறிகொடாதே நெடுங்காலம் பூ$_4$மியிலே ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீயோடே 'நாட்டாரோடியல்வொழிந்து' என்கிறபடியே தங்கள் வ்யாவ்ருத்தி தோற்ற இருக்கப் பெறுவர்கள்" என்று சீயர் உருக்தோறும் அருளிச்செய்வர். பாால்யத்திலே ப$_4$ட்டரைப் பறிகொடுத்தாரிறே அவர்.

(திருவாய்மொழி 4-3-11 ஈடு வியாக்கியானம்)

நிகழ்டம்

'கோவை வாயாள்' என்கின்ற பதிகத்தைக் கற்பவர்களுக்குப் பயன் உரைக்கின்றபோது 'வையம் மன்னி வீற்றிருந்து விண்ணுமாள்வர் மண்ணூடே' (இப்பூமியிலே நெடுங்காலம் வாழ்ந்திருக்கப் பெற்று, இங்கிருந்து கொண்டே பரமபதத்தையும் ஆளக் கூடிய பேறு பெறுவர்) என்று ஆழ்வார் அருளிச்செய்துள்ளார். இத்தொடர்பில் நஞ்சீயர் அருளிச்செய்த **வார்த்தை** *எடுத்துக்காட்டப்பெறுகிறது.*

விளக்கம்

இப்பாசுரத்தை விளக்கியருளும்போது நஞ்சீயர் ஒவ்வொரு முறையும் "நம்மைப் போல் வாயில் புகுந்த சோற்றைப் பறி கொடாமல் நெடுங்காலம் ஸ்ரீவைஷ்ணவச் செல்வத்துடன், மற்றவர்களைக் காட்டிலும் தங்கள் வேறுபாடு தோன்றுபடியாக இருக்கப் பெறுவர்" என்று அருளிச் செய்வராம். இப்படி நஞ்சீயர் அருளிச் செய்ததற்குக் காரணம், அவர் பட்டரை இளமையிலேயே இழந்து விட்டதேயாகும்.[1]

[552]

(நெடுமாலே வாவென்று கூவும்) "வடிவில் பெருமையைக் கண்டவாறே ஜகத்தையடையத் தன் திருவடிகளின் கீழே இட்டுக் கொள்ளும்படி பெரிய வடிவுடைய திருவுலகளந்தருளின ஸர்வேஶ்வரன் என்று நினைத்து, 'இங்ஙனே

1. "பூமியிலே எம்பெருமானார் எழுந்தருளியிருந்த காலம் குறைவற்ற ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீயோடே இருந்தது. நம்மைப் போலே வாய்புகு சோற்றைப் பறிகொடாதே" என்று சீயர் உறுத்தோறும் அருளிச் செய்வர்" – என்பது இருபத்துநாலாயிரப்படி உரை.

இந்த ஐதிஹ்யத்தை ஆதாரமாகக் கொண்டு சிலர் பட்டர் இருபத்தெட்டு அல்லது முப்பத்திரண்டு வயதிற்குள் திருநாடெழுந்தருளி விட்டார் என்று கூறுவதுண்டு. ஆனால் அது சரியல்ல. பட்டர் ஐம்பது வயதிற்குக் குறையாமல் எழுந்தருளியிருந்தார் என்பதற்குச் சான்றுகள் உள்ளன. ஆயின், 'பட்டரை பால்யத்திலே பறி கொடுத்தார்' என்று ஈட்டில் கூறப்படுவதற்குக் காரணம் என்ன எனில், இருபத்து நாலாயிரப்படியுரையில் கூறியிருப்பதைப் போல் எம்பெருமானார் நூற்றிருபது திருநக்ஷத்ரம் (வயது) எழுந்தருளியிருக்க, பட்டர் நடுவயதிலேயே பரமபதித்தது காரணமாக அப்படிக் குறிப்பிடப்பட்டிருக்கலாம். நஞ்சீயர் பட்டரை வந்தடைந்த பிறகு சில வருடங்களுக்குள்ளாகவே பட்டர் பரமபதித்து விட்டது காரணமாகவும் அப்படிக் கூறியிருக்கலாம். எனவேதான் நஞ்சீயரும் "நம்மைப் போலே வாய்புகு சோற்றைப் பறி கொடாதே" என்று கூறியிருக்கலாம். நஞ்சீயர் நூறுமுறை திருவாய்மொழி காலக்ஷேபம் சாதித்து சதாபிஷேகம் கண்டருளினார் என்று ஆறாயிரப்படி குருபரம்பராப்ரபாவத்தில் கூறப்பெற்றுள்ளது. எனவே 'உருத்தோறும்' (ஒவ்வொரு முறையும்) தம்முடைய ஆசார்யரான பட்டரின் பிரிவை நினைத்து வருந்தி இவ்வாறு அருளிச் செய்தார் என்பது குறிக்கொள்ளத்தக்கது.

வாராயோ' என்று அழைக்கும்" என்று பிள்ளான் பணிக்கும். அங்ஙனன்றிக்கே, சீயர் "மலை பேரமாட்டாதே பலகால் வர்ஷிக்கையாலே அழுக்கற்றுப் பசுகு பசுகு என்றிருக்குமே! அத்தைக் கண்டு 'அவன் ஸாபராத$_4$னாகையாலே, பச்சைப் படாத்தையிட்டு முட்டாக்கிட்டு நிற்கிறான்' என்று, 'ஆனைக் கூட்டத்துக்குக் கதவிடிலன்றோ உமக்கு லஜ்ஜிக்க வேண்டுவது? இங்ஙனே போரீர்' என்னாநின்றாள்" என்று.

(திருவாய்மொழி 4-4-4 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

எம்பெருமானைப் பெறாத ஆற்றாமையாலே தளர்ந்த நம்மாழ்வார் (நாயகி நிலையில்) எம்பெருமானைப் போன்ற பொருள்களையும், அவனோடு தொடர்புள்ள பொருள்களையும் அவன் என்றே நினைத்து பிரமித்துக் கிட்டிக் கதறுகிறார் இத்திருவாய்மொழியில். ஒரு உயர்ந்த மலையைப் பார்த்து எம்பெருமான் என்றே நினைத்து அவனை வாவென்று ஆழ்வார் கூப்பிடுகிறார் - 'நின்ற குன்றத்தினை நோக்கி நெடுமாலே வாவென்று கூவும்' - என்று பாசுரம் அமைந்துள்ளது. இதற்கு இரண்டு **நிர்வாஹங்கள்** *காட்டப்படுகின்றன.*

விளக்கம்

"நீண்ட நெடிய குன்றமொன்று ஆழ்வார் கண்ணிலே பட்டது. உலகத்தையெல்லாம் தன் திருவடிகளின் கீழே இட்டுக் கொள்ளும்படி பெரிய வடிவை உடையவனான திரிவிக்ரமன் என்று எண்ணி, (அந்த மலையை) 'எழுந்தருளாய்' என்று அழைக்கிறாள்" என்று **பிள்ளான்** *விளக்கமளித்தார்.*

பெயராமல் ஒரே இடத்தில் நிற்பதால் அடிக்கடி மழை பொழிந்து அழுக்கு நீங்கிப் புல்முளைத்து பச்சைப்பசேல் என்று இருக்கின்ற மலையைக் கண்ட ஆழ்வார் அந்த மலையை எம்பெருமானாகவே நினைத்து விட்டார். அதுமட்டுமல்ல, அவன் நெடுநாட்கள் தன்னை ஒதுக்கிவிட்ட குற்றவாளியாகையாலே, உள்ளபடியே வந்து நிற்பதற்கு வெட்கப்பட்டுக் கொண்டு, பச்சைப் போர்வையால் முட்டாக்கிட்டுக் கொண்டு வந்து நிற்கிறான் என்றும் நினைத்து விட்டார். "வெட்கமில்லாதவனே! யானைகள் செய்யும் கலவிக்கு மறைவு தேடிக் கதவிட்டாலன்றோ நீயும் வெட்கப்பட்டு, பச்சைப் படாத்தை (ஆடையை) முட்டாக்கிட்டுக் கொண்டு உன்னை மூடிக் கொள்ள வேண்டியது! வெட்கப்படாமல் இங்கே வா!" என்கிறாள் என்று **நஞ்சீயர்** *விளக்கமளித்தார்.*

'மால்' எனும் சொல்லுக்குக் கருமை, பெருமை, மையல் (அன்பு) எனும் பொருள்கள் உண்டு. பெருமை எனும் பொருளைக் கருத்தில் கொண்டு பிள்ளான் விளக்கமளித்தார். மையல் எனும் பொருளைக் கருத்தில் கொண்டு நஞ்சீயர்

விளக்கம் அளித்தார்!

[553]

(திருவுடை மன்னரைக் காணில்) நாதமுனிகள், ராஜா ஸாமந்தன் தலையிலே அடியையிட்டு ஆனைக் கழுத்திலே புக்கபடியைக் கண்டு 'ஸர்வேஶ்வரன் ப்₃ரஹ்மாதி₃கள் தலையிலே அடியிட்டுப் பெரிய திருவடியை மேற்கொள்ளும்படி இதுவாகாதே!' என்னா மோஹித்தாரென்று ப்ரஸித்₃த₄மிறே. ராஜா ஸபரிகரமாக கங்கைகொண்ட சோழபுரத்தேறப் போகச் செய்தே, பெரிய முதலியார், மன்னனார் திருவடிகளிலே ஸேவித்திருக்கச் செய்தே, பெண்பிள்ளை வந்து, "நம் அகத்திலே ஒரு குரங்கும், இரண்டு வில்லிகளும் ஒரு பெண்ணுமாக வந்து புகுந்தார்கள்" என்றவாறே 'பெருமாளும் இளைய பெருமாளும் ஜங்க்₃ரவ்யாகரண பண்டி₃தனும்' என்று புத்₃தி₄ பண்ணிப் பின் தொடர்ந்து போய் 'போகிறார்கள், போகிறார்கள்' என்னக் கேட்டுக் கீழை வாசலிலே சென்றவாறே, "இப்படிப் போகிறவர்களைக் கண்டிகோளோ?" என்று வாசலிலவர்களைக் கேட்க, அவர்கள் "கண்டிலோம்" என்ன, அதுவே காரணமாகத் திருநாட்டுக்கு எழுந்தருளினாரிறே.

(திருவாய்மொழி 4-4-8 ஈடு வியாக்கியானம்)

நிகழ்டம்

எப்பொருளைக் கண்டாலும் ஏதோ ஒருவகையில் அவை எம்பெருமானுடன் தொடர்புடையவை என்று ப்ரமிக்கின்ற ஆழ்வார் 'திருவுடை மன்னரைக் காணில் திருமாலைக் கண்டேனே' (குறையற்ற செல்வங்களையுடைய அரசர்களைக் கண்டால் திருமாலைக் கண்டேன்) என்றருளிச் செய்கிறார். ஆழ்வாரைப் போலவே, நாதமுனிகள் எனும் ஆசாரியரும் அரசனை எம்பெருமானாகவே நினைத்துவிட்ட **ஐதிஹ்யம்** *எடுத்துக் காட்டப்படுகின்றது.*

விளக்கம்

ஒரு பேரரசன், சிற்றரசன் ஒருவனுடைய தலைமீது அடியையிட்டு, யானையின் மீது ஏறுவதைக்கண்ட நாதமுனிகள், 'எம்பெருமான் பிரம்மா முதலானவர்கள் தலைமீது அடியையிட்டு, பெரிய திருவடியான கருடன் மீது ஏறியருளுவதும் இப்படித் தானே!" என்று மோகித்து விழுந்தாராம்.

அரசன் ஒருவன் தன் பரிவாரங்களுடன் கங்கை கொண்ட சோழபுரத்துக்குச் சென்று கொண்டிருக்கையில் நாதமுனிகள் (தமது பிறந்த ஊரான காட்டு

1. இருபத்துநாலாயிரப்படியிலும் இவ்விளக்கங்கள் அருளிச்செய்தமை குறிப்பிடப்பட்டுள்ளன.

மன்னார் கோயில் எனப்படும் வீரநாராயணபுரத்தில் எழுந்தருளியிருக்கும்) மன்னனாரை சேவித்துக் கொண்டிருந்தார். அப்போது பெண்பிள்ளை ஒருத்தி வந்து "நம் அகத்தில் ஒரு குரங்கும், இரண்டு வில்லிகளும், ஒரு பெண்ணுமாய் வந்து புகுந்தார்கள்" என்று கூறினாள். அதைக் கேட்ட நாதமுனிகள், 'அவர்கள் இராமபிரானும், லக்ஷ்மணனும், சீதைப்பிராட்டியும், அனுமனுமே' என்று நினைத்து, அவர்களை ஸேவிக்க வேண்டுமென்ற ஆவலால், அவர்களைப் பின் தொடர்ந்து சென்றார். "அப்படி யாரேனும் செல்கின்றார்களா?" என்று வழியிலுள்ளவர்களைக் கேட்டபோது அவர்களும் "முன்னே செல்கிறார்கள், முன்னே செல்கிறார்கள்" என்று கூற நாதமுனிகளும் அவ்வழியிலேயே நெடுந்தூரம் சென்றார். கீழைவாசல் வந்தவுடன் அங்கிருந்தவர்களைப் பார்த்து "இவ்வழியாக அந்த நால்வர் வந்தார்களா?" என்று கேட்க, அவர்கள் "அப்படி ஒருவரும் வந்ததாகத் தெரியவில்லையே! நாங்கள் ஒருவரையும் பார்க்க வில்லையே!" என்று கூற அதுவே காரணமாக அவ்விடத்திலேயே மோகித்து விழுந்த நாதமுனிகள் திருநாட்டுக்கு எழுந்தருளினார்.[1]

[554]

(கரும்பெரும் மேகம் இத்யாதி) ராஜேந்திரசோழனிலே திருவாய்க்குலத்தாழ்வாரென்று ஒருத்தருண்டு. அவர் வர்ஷாவிலே பயிர்பார்க்க என்று புறப்பட்டு மேகதர்ஶனத்திலே மோஹித்து விழுந்தார். இவர் விழுந்ததைக் கண்டு நின்ற குடிமகன் ஓடி வந்து அவரையெடுத்துக் கொண்டு வந்து க்ருஹத்திலே விட்டு "இவர் ப்ரக்ருதி அறிந்திருந்தும் இந்நாளிலே இவரை வயல் பார்க்கப் புறப்பட விடுவாருண்டோ?" என்றான்.

(திருவாய்மொழி 4-4-9 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

எம்பெருமானுடைய தன்மைகளைக் கொண்டவற்றைக் கண்டு எம்பெருமானாகவே ஆழ்வார் நினைக்கின்றார். "கரும் பெரும் மேகங்கள் காணில் கண்ணனென்று ஏறப்பறக்கும்" - கரிய மேகங்களைக் கண்டவாறே கண்ணனையே கண்டது போல் நினைத்தார். இத்தொடர்பில் ஓர் **ஐதிஹ்யம்** *கூறப்பெறுகிறது.*

1. "பெரிய முதலியார் ஒரு ராஜாவைக் கண்டுஅவன் பின்னே தொடர்ந்து போனார் என்னவும்,ஒரு ஸாமந்தன் தலையிலே அடியிட்டு ஆனையிலே ஏறுகிற போது அத்தைக் கண்டு மோஹித்தார் என்னவும் கடவதிறே" என்பது இருபத்துநாலாயிரப்படியுரை.

விளக்கம்

ராஜேந்த்ரசோழன் எனும் ஊரில் திருவாய்க்குலத்தாழ்வார் என்பவர், ஒருமுறை மழைக்காலத்தில், பயிர்களைப் பார்வையிடுவதற்காக வயல் வெளிக்குச் சென்றார். ஆகாயத்திலே மேகங்களைக் கண்டு, (அவற்றை எம்பெருமானாகவே நினைத்து) மயங்கி விழுந்து விட்டார். இதைக் கண்ட குடியானவன் ஒருவன் ஓடிவந்து அவரைத் தூக்கியெடுத்து, அவருடைய இல்லத்தில் கொண்டு விட்டு, "இவருடைய தன்மையை நன்கு அறிந்திருந்தும், இம்மழைக்காலத்தில் இவரை வயல் பார்க்க விடலாமோ?" என்றான்!

[555]

(வல்வினையேன்) ஆழ்வான் திருநயனங்கள் நோவுபட்ட பின்பு எம்பெருமானார் திருவுள்ளம் நோவுபட்டாற்போலே காணும் திருத்தாயார் திருவுள்ளமும் படுகிறது.

(திருவாய்மொழி 4-4-10 ஈடு வியாக்கியானம்)

நிகழ்டம்

எம்பெருமானுடைய சில தன்மைகளை ஒத்த பொருள்களைக் கண்டு எம்பெருமானாகவே நினைத்து மோகித்து விழுகின்ற (நாயகி நிலையை அடைந்த) ஆழ்வாரைக் கண்ட அவருடைய திருத்தாயார் "என் செய்கேன் வல்வினையேனே" - (இப்படி இவளைக் காணும்படியாக நான் என்ன பாவம் செய்தேனோ!) என்கிறாள். இதற்கு எடுத்துக் காட்டாக - இதே போல் எம்பெருமானார் வருந்திய **ஐதிஹ்யம்** *ஒன்று காட்டப்படுகிறது.*

விளக்கம்

சோழவரசசபையில், 'சிவனைக் காட்டிலும் மேம்பட்ட தெய்வமில்லை' என்று எழுதிக் கையெழுத்திடும்படி அரசன் கூரத்தாழ்வானை வற்புறுத்த, அவர் அதற்கு இசையாமல் மறுத்து விட்டார். கோபம் கொண்ட அரசன் அவர் கண்களைப் பிடுங்கி விடும்படி உத்தரவிட்டான். 'பாவியான உன்னைப் பார்த்த கண்கள் எனக்குத் தேவையில்லை" என்று கூரத்தாழ்வான் தாமே தமது நகங்களால் கண்களைப் பிடுங்கிக் கொண்டு விட்டார். இப்படி ஆழ்வானுடைய திருக்கண்களுக்கு நேர்ந்த அபாயத்தை பின்னர் கேட்டு, தம்முடைய வலிய பாபத்தின் காரணமாகவே கூரத்தாழ்வான் திருக்கண்களை இழந்தார் என்று எம்பெருமானார் வருந்தியது போலவே, இங்கும் பராங்குச நாயகியின் திருத்தாயார் தன்னுடைய பாபத்தினாலேயே தன் மகள் மோகத்தை அடைந்து

1. "ராஜேந்த்ரசோழனில் திருவாய்க்குலத்தாழ்வார் வயல் பார்த்த வார்த்தை" என்று மட்டுமே இருபத்துநாலாயிரப்படியிலுள்ளது.

துன்பப்படுவதாக நினைத்துத் தன்னை 'வல்வினையேன்' என்று கூறிக்கொள்கிறாள். (தன்னிடத்தில் தவறு இல்லாவிட்டாலும் 'நானேதான் ஆயிடுக' என்றிருப்பது உயர்ந்த ஸ்ரீவைஷ்ணவலக்ஷணமாகக் காட்டப் பெற்றுள்ளது. அதன்படியே எம்பெருமானாரும், இப்பாசுரத்தில் திருத்தாயாரும் தங்களுடைய பாவத்தினால் வந்ததாகக் கூறி ஸ்ரீவைஷ்ணவலக்ஷணத்தை அநுஷ்டித்துக் காட்டியமை கருத்தில் கொள்ளத் தக்கது.)

[556]

"சூழ்விசும்பணிமுகிலுக்கு அநந்தரம் இத்திருவாய்மொழி ஆகப் பெற்றதில்லையே" என்று அருளிச் செய்வர் சீயர்.

(திருவாய்மொழி 4-5 ஈடு வியாக்கியான ப்ரவேசம்)

நிகழிடம்

இதற்கு முன்னர் அருளிச்செய்த நான்காம் திருவாய்மொழியில் ஆழ்வார் வருத்தத்தோடு இருந்த நிலையெல்லாம் நீங்கி இவ்வைந்தாம் திருவாய்மொழியில் மிகவும் மகிழ்ச்சியுடன் பாசுரம் அருளிச் செய்கிறார். இது குறித்து நஞ்சீயர் அருளிச்செய்த **வார்த்தை** *எடுத்துக் காட்டப் பெறுகிறது.*

விளக்கம்

இத்திருவாய்மொழியின் அமைப்பை நோக்கும் போது, இதற்கு மேற்பட்ட மகிழ்ச்சி இல்லை என்று சொல்லும்படியாகப் பேரானந்தத்துடன் ஆழ்வார் அருளிச் செய்கிறார். இதைக் கருத்தில் கொண்ட **நஞ்சீயர்** *"இத்திருவாய்மொழி 'சூழ்விசும்பணிமுகில்' என்ற திருவாய்மொழிக்கு அடுத்த திருவாய்மொழியாக - அதாவது இதுவே கடைசித் திருவாய்மொழியாக - இருந்திருக்கலாம்" என்று அருளிச் செய்வராம்.*

[557]

(வெம்மா பிளந்தான் தன்னை) "ஆற்றல்மிக்கு ஆளும்படி சொல்லுகிறது" என்று பட்டர் அருளிச் செய்யும்படி. "ஆற்றல் மிக்கு ஆளும் அம்மான் ஆரென்றால் இன்னார் என்கிறது" என்று அம்மங்கியம்மாள் நிர்வஹிக்கும்படி.

(திருவாய்மொழி 4-5-1 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

'ஆற்றல் மிக்கு ஆளும் அம்மானை வெம்மா பிளந்தான் தன்னை' என்று ஆழ்வார் அருளிச் செய்கிறார். இச்சொற்றொடர்களுக்கு **நிர்வாஹங்கள்** *கூறப்பெறுகின்றன.*

விளக்கம்

'ஆற்றல் மிக்கு ஆளும் அம்மானை வெம்மா பிளந்தான் தன்னை' என்கின்ற இவ்விரண்டு சொற்றொடர்களின் சேர்த்தியைக் கருத்தில் கொண்டு சொல் நயத்தை விளக்கும்போது **பட்டர்**, *"எம்பெருமான் ஆற்றல் மிக்கு ஆண்டது எங்கே எனில், வெம்மா பிளந்தவிடத்திலே (குதிரைவடிவில் வந்த கேசி என்னும் அசுரனைக் கொன்றவிடத்தில், தான் ஆற்றல் மிக்கவன் என்பதைக் காட்டியுள்ளான்)" என்று விளக்கமளித்தார்.*

அம்மங்கியம்மாள் *"ஆற்றல் மிக்கவன் என்ற ஆழ்வார் அப்படிப்பட்டவன் யார் என்பதை, 'வெம்மா பிளந்தான்' என்ற சொல்லினால் தெரிவிக்கிறார்" என்று அருளிச்செய்தார். அதாவது ஆற்றல் மிக்கவன் கண்ணபிரானே என்று ஆழ்வார் காட்டுகிறார் என்பது அம்மங்கியம்மாள் தரும் விளக்கமாகும்.*[1]

[558]

(வியன்ஞாலத்து வீயவே) அங்ஙனுமன்றிக்கே, 'வியன் ஞாலம்' என்று வேறொரு தேஶம்போலே யிருக்கச் சொல்லுகையாலே, தாம் 'வீற்றிருந்தேழுலகு' அருளிச்செய்கிறது பரமபதத்திலேயிருந்துபோலேகாணும் என்று அருளிச்செய்வர்.

(திருவாய்மொழி 4-5-2 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

'வீற்றிருந்து ஏழுலகும்' என்று தொடங்கும் திருவாய்மொழியில், 'எம்பெருமானைக் கவி பாடப்பெற்ற எனக்கு என்ன குறை?' என்று அருளிச் செய்கிறார் நம்மாழ்வார். அதில் இப்பாசுரத்தில் 'விண்ணோர் பெருமான்தன்னை மொய்ய சொல்லால் இசைமாலைகள் ஏத்தி உள்ளப் பெற்றேன் வெய்ய நோய்கள் முழுதும் வியன்ஞாலத்து வீயவே' (கொடிய நோய்கள் முழுவதும் பூமியிலே அழியும்படியாக, விண்ணோர் பெருமானான எம்பெருமானை அழகிய சொற்களால் இசைமாலைகளைக் கொண்டு துதித்து நினைக்கப் பெற்றேன்) என்று அருளிச்செய்துள்ளார். இங்கு நஞ்சீயர் அருளிச்செய்த **நிர்வாஹம்** *காட்டப் பெறுகிறது.*

விளக்கம்

'வெய்ய நோய்கள் முழுதும் வியன் ஞாலத்து வீயவே' என்ற சொற்றொடருக்கு, 'பூமியிலேயே இருக்கச் செய்தேயும் வினைகள் அனைத்தும்

1. இவ்விளக்கங்கள் இருபத்துநாலாயிரப்படியிலும் குறிப்பிடப்பெற்றுள்ளன. ஆனால் இரண்டாம் விளக்கம் எம்பார் அருளிச் செய்தது என்று குறிப்பிடப்பெற்றுள்ளது. "ஆற்றல்மிக்கு ஆளுகிறபடியைச் சொல்லுகிறது என்று பட்டர். ஆற்றல் மிக்கு ஆளுமவன் இன்னான் என்கிறது என்பர் எம்பார். (பிள்ளான் என்றும் சில ஸ்ரீகோசங்களில் உள்ளது.)" என்று அங்குள்ளது.

நசிக்கும்படியாக' என்றும், 'பூவுலகம் முழுவதிலும் உள்ள வினைகள் நசிக்கும் படியாக' என்றும் பொருள்கள் காட்டிய உரையாசிரியர், **நஞ்சீயர்** *அருளிச் செய்த சுவைமிகு பொருள் ஒன்றையும் காட்டுகிறார். "பூவுலகில் இருந்து கொண்டே பாசுரம் அருளிச்செய்யும் ஆழ்வார், 'வியன்ஞாலம்' என்று வேறொரு உலகம் போலே (பூவுலகைச்) சொல்லுகையால் ஆழ்வார் 'வீற்றிருந்தேழுலகு' எனும் திருவாய்மொழியை அருளிச்செய்வது பூவுலகிலிருந்து அல்ல போலும். பரமபதத்திலிருந்து கொண்டு இத்திருவாய்மொழியை அருளிச்செய்கிறார் போலும்! (எம்பெருமானைத் துதித்துப் பாடிய களிப்பினால் ஏற்பட்ட நினைவின் முதிர்ச்சியினால் (பாவநாப்ரகர்ஷத்தால்) தாம் பரமபதத்திலே இருப்பதாக நினைத்துவிட்டார் போலும்!)" என்று நஞ்சீயர் அருளிச்செய்தார்.*[1]

[559]

(தன் தனக்கு இன்றி நின்றானை) எம்பெருமானார் தெற்கே எழுந்தருளின நாளிலே ஆளவந்தார் மகனார் சொட்டை நம்பி ப்ரஸாதித்த வார்த்தை: "'தன் தனக்கு' என்றது 'தானான தனக்கு' என்றபடி. ஒரு வகைக்கு ஒப்பின்றிக்கே இருக்கிறது பரத்வத்தில் அல்ல; आत्मानं मानुषं मन्ये (ஆத்மாநம் மாநுஷம் மந்யே) என்கிறபடியே அவதரித்து மனிச்சு ஏறிட்டுக் கொண்டு நிற்கிற நிலையிலே" என்றாராம்.

(திருவாய்மொழி 4-5-7 ஈடு வியாக்கியானம்)

நிகழ்டம்

"தன் தனக்கு இன்றி நின்றானை" என்பது ஆழ்வார் திருவாக்கு. தனக்கு (ஒப்பு) இன்றி நின்றான் என்றாலே போதும். 'தன் தனக்கு' என்று ஆழ்வார் அருளிச் செய்ததன் சொல் நயத்திற்கு, சொட்டை நம்பி அருளிச்செய்த **நிர்வாஹம்** *கூறப்பெறுகிறது.*

விளக்கம்

எம்பெருமானார் *ஒரு முறை தென்தேச யாத்திரையாக எழுந்தருளியிருந்த போது* ஆளவந்தாருடைய திருக்குமாரர் சொட்டை நம்பி, *"தன் தனக்கு என்பதற்குத் தானான தனக்கு என்று பொருள். அதாவது எம்பெருமானுக்கு ஒரு வகையாலும் ஒப்பு இல்லை என்பது அவனுடைய பரத்வத்தில் அல்ல. 'ஆத்மாநம் மாநுஷம் மந்யே' (நான் மனிதன் என்பதையே பெருமையாகக்*

1. இவ்விளக்கத்தை அருளிச்செய்தவர் நஞ்சீயர் என்று ஈட்டில் குறிப்பிடப்படவில்லை எனினும், இருபத்து நாலாயிரப்படி உரையில் குறிப்பிடப்பெற்றுள்ளது. "பாவநாப்ரகர்ஷத்தாலே தாம் பரமபதத்திலே இருக்கிறாராய்ப் பூமியிலுள்ள து:கங்களும் போம்படி என்னுதல்; 'க$_2$ஸ்த$_2$ா: பச்யந்தி பூ$_4$க$_3$தாந்' என்று சீயர் அருளிச்செய்தார்" என்பது இருபத்து நாலாயிரப்படி உரை.

கொண்டிருக்கிறேன்) (ஸ்ரீராமாயணம் யுத்த காண்டம் 120-12) என்று அவனே அருளிச் செய்துள்ளபடி, இம்மண்ணுலகில் அவதரித்து மநுஷ்யத்வம் (மனிதத் தன்மை) ஏறிட்டுக் கொண்டு இருக்கிற நிலையிலும் அவனுக்கு ஒப்பு கிடையாது" என்று சொட்டை நம்பி விளக்கம் கூறினார்.

[560]

"ஸ்ரீவிபீ$_4$ஷணாழ்வானைப் புகுரவொட்டேன் என்றார் மஹாராஜர். இவன் புகுராவிடில் நாம் உளோமாகோம் என்கிறார் பெருமாள். இப்படி இருவரும் விப்ரதிபத்தி பண்ணின இதுக்குக் கருத்தென்?" என்று சீயர் கேட்க, "இருவரும் ஶரணாக$_3$தரானவர்களை விடோம் என்று விப்ரதிபத்தி பண்ணுகிறார்கள் காணும்" என்று ப$_4$ட்டர் அருளிச் செய்த வார்த்தை.

(திருவாய்மொழி 4-5-8 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

"நமக்கும் பூவின்மிசை நங்கைக்கும் இன்பனை" என்று ஆழ்வார் அருளிச்செய்துள்ளார். இன்று தன்னை வந்து அடைகின்ற நமக்கும், தன்னை விட்டுப் பிரியாமல் என்றைக்கும் கூடியே இருக்கின்ற பெரிய பிராட்டியாருக்கும் வேறுபாடு வைக்காமல் இன்பனாக இருக்கின்றவன் எம்பெருமான் என்று விளக்கிய உரையாசிரியர், இத்தொடர்பில் ஒரு **ஸம்வாதம்** *காட்டுகிறார்.*

விளக்கம்

இராமபிரானைச் சரணமடைந்த விபீஷணனைச் சேர்த்துக் கொள்ளக் கூடாது என்று கடுமையாக ஆட்சேபித்த சுக்ரீவ மகாராஜர், 'அவனை ஒருக்காலும் நம் கோஷ்டிக்குள் புக அனுமதிக்க மாட்டேன்' என்றார். ஆனால் ராமபிரானோ 'விபீஷணனை ஏற்றுக் கொள்ளாவிட்டால் நான் உளனாகவே ஆகமாட்டேன், என்னால் அவனைக் கைவிட்டு தரித்திருக்க முடியாது' என்றார். இவ்விருவரும் இப்படி முரண்பட்ட கருத்துகளைக் கொண்டிருந்ததற்குக் காரணம் என்ன என்று **நஞ்சீயர்** *கேட்டார். அதற்கு* **பட்டர்** *மிகவும் நயமாக - "இருவருமே தங்களைச் சரணமடைந்தவர்களைக் காப்பாற்றுவதிலேயே உறுதியுடையவர்களாக இருக்கின்றபடியால்தான் அப்படிக் கூறுகிறார்கள்" என்று விடையளித்தார். அதாவது, சுக்ரீவன், தன்னைச் சரணமடைந்த இராமபிரானுக்கு யாதொரு ஆபத்தும் நேர்ந்துவிடக் கூடாது என்ற எண்ணத்தினால் இராவணனுடைய தம்பியான விபீஷணனைச் சேர்த்துக் கொள்ள அஞ்சினான். இராமபிரானோ, தன்னைச் சரணமடைந்த விபீஷணனைக் கைவிட முடியாது என்ற காரணத்தினால் அப்படிக் கூறினார் - என்பது பட்டர் தரும் விளக்கமாகும்.*[1]

1. மற்றும் இரண்டு இடங்களில் (எண் 143, 220) இவ்வைதிஹ்யம் சுருக்கமாக உள்ளது.

[561]

(சொல்மாலைகள்) "ஸர்வேச்வரன் 'ஆழ்வீர்! நம்மையொரு கவிசொல்லும்' என்றால் அப்போதே கவி சொல்லிச் சமையும்படியாக வல்ல எனக்கு" என்று முன்புள்ள முதலிகள் நிர்வஹிக்கும்படி. அங்ஙனன்றிக்கே பட்டர் "'என்னாகியே தப்புதலின்றி தனைக் கவி தான் சொல்லி' என்கிறபடியே ஸர்வேச்வரன் கவி பாடினானாகையாலே கவிபாடத் தட்டில்லை. அவன் அங்கீகரித்துத் திருக் கண்களாலே குளிரக் கடாக்ஷித்து, 'நீர் ஒரு கவி சொல்லும்' என்றால் ப்ரீதியாலே உடைகுலைப்படாதே த$_4$ரித்து நின்று சொல்ல வல்லேனான எனக்கு" என்றருளிச் செய்வர்.

(திருவாய்மொழி 4-5-8 ஈடு வியாக்கியானம்)

நிகழ்டம்

"பெருமானைச் சொல் மாலைகள் சொல்லுமாறு அமைக்கவல்லேற்கு" என்று அருளிச் செய்கிறார் ஆழ்வார். இதற்கு இருவித **நிர்வாஹங்கள்** *காட்டப்படுகின்றன.*

விளக்கம்

எம்பெருமான் ஆழ்வாரை நோக்கி, 'ஆழ்வீர்! நம்மைப் பற்றி ஒரு கவி சொல்லும்' என்று கூறினால், உடனே பாசுரம் இயற்றவல்ல எனக்கு என்கிறார் ஆழ்வார் - என்பது **முன்புள்ள முதலிகள்** *அருளிச் செய்யும் விளக்கம்.*

"என்னாகியே தப்புதலின்றி தனைக் கவி தான் சொல்லி' (திருவாய்மொழி 7-9-4) என்று ஆழ்வாரே அருளிச் செய்துள்ளபடியே ஆழ்வார் திருவாக்கின் மூலமாகக் கவிபாடியவன் எம்பெருமானே ஆகையால், ஆழ்வார் கவிபாடத் தடை ஏதும் இல்லை. ஆனால், அவன் ஆழ்வாருக்கு அருள் புரிந்து, தன் திருக்கண்களால் குளிரக் கடாக்ஷம் செய்து 'ஆழ்வீர் நீர் ஒரு கவி சொல்லும்' என்று கூறினால், அவனுடைய திருமேனி அழகிலும், கல்யாண குணங்களிலும் ஈடுபட்ட ஆழ்வார் உள்ளம் உருகிக் குரல் தழுத்துப் பாசுரம் அருளிச் செய்ய முடியாமல் போகலாம் அல்லவா! அப்படி நிலைகுலைந்துபோகாமல் தரித்து நின்று பாசுரம் பாடவல்லராகத் தாம் இருந்தமையைத்தான் இங்கு "சொல் மாலைகள் சொல்லுமாறு அமைக்க வல்லேற்கு" என்று ஆழ்வார் குறிப்பிடுகிறார் - என்பது **பட்டர்** *தரும் விளக்கமாகும்.*[1]

[562]

எம்பார் கீழில் திருவாய்மொழியையும் இத்திருவாய்மொழியையும் அநுஸந்தி$_4$த்து, "மோருள்ளதனையும் சோறேயோ? அதிலே அப்படி நிரவதி$_4$க ப்ரீதியாய்ச் சென்றது. இதில் இப்படி மோஹத்தோடே தலைக்கட்டிற்று. இதுக்கு

1. இவ்விரு விளக்கங்களும் அருளிச்செய்துதமை இருபத்துநாலாயிரப்படியில் குறிப்பிடப்பெற்றுளது.

இருந்து அடைவு சொல்லுவேனோ? இதுக்கு அஸங்கதிரேவ ஸங்கதி:" என்று அருளிச்செய்வராம்.

(திருவாய்மொழி 4–6 ஈடு வியாக்கியான ப்ரவேசம்)

நிகழிடம்

'வீற்றிருந்து ஏழுலகு' என்று தொடங்கும் (4-5) திருவாய்மொழியில் ஆழ்வார் அளவற்ற மகிழ்ச்சி கொண்டவராகப் பாசுரம் அருளினார். அடுத்ததான, 'தீர்ப்பாரை யாமினி' என்ற இத்திருவாய்மொழியில் ஆழ்வார், தரித்திருக்கவும் சக்தியற்றவராக மயங்கி விழுந்ததாகப் பாசுரம் செல்லுகிறது. இவ்விரண்டு திருவாய்மொழிக்கும் எப்படித் தொடர்பு (ஸங்கதி) சொல்லுவது? அளவற்ற மகிழ்ச்சியுடன் இருந்த ஆழ்வார் அளவற்ற துன்பத்தால் மயங்கி விழுந்தது ஏன்! என்ற கேள்விக்கு எம்பார் அருளிச் செய்த **நிர்வாஹம்** *எடுத்துக் காட்டப்படுகிறது.*

விளக்கம்

"மோர் உள்ளவரையில் சோறு இடமுடியுமோ?[1] (அதுபோல முடிந்த வரையில் தான் கீழ்த் திருவாய்மொழிகளுக்கும், அடுத்த திருவாய்மொழிகளுக்கும் தொடர்பு சொல்ல முடியும்.) கீழே ஆழ்வார் அளவற்ற மகிழ்ச்சியுடனிருந்தவர் இத்திருவாய்மொழியில் அளவற்ற துன்பத்தை அடைந்து மோகித்து விழுந்தார் என்று அறியப்படுகிறது. இதற்குத் தொடர்பு என்னால் எப்படிச் சொல்ல முடியும்? 'அஸங்கதிரேவ ஸங்கதி:' (தொடர்பில்லாமை என்பதுதான் தொடர்பு)" என்று எம்பார் அருளிச் செய்வராம்.[2]

1. மோருள்ளதனையும் சோறேயோ - ஒருவன் ஒரு பெண்ணிடம் சிறிதளவு அரிசியைக் கொடுத்து, "அம்மா, என்னிடம் சிறிதளவு மோர் இருக்கிறது. அதற்குச் சரியாக இவ்வரிசியைச் சோறாகச் சமைத்துக் கொடுங்கள்" என்று வேண்ட அவளும் அவ்வாறே செய்தாள். அவனும் மோரை விட்டுச் சிறிதளவு சோற்றை உண்டு, 'அம்மா, மோர் கொஞ்சம் மிகுந்திருக்கிறது; இன்னும் கொஞ்சம் சோறு இடுங்கள்" என்றான். அவளும் மேலும் சிறிது சோறு கொண்டு வந்து கொடுத்தாள். மறுபடியும் அவன் "அம்மா, மோர் இன்னும் மிகுந்திருக்கிறது; இன்னும் கொஞ்சம் சோறு இடுங்கள்" என்றான். அவளும் மறுபடியும் சோறு கொடுத்தாள். இப்படி அவன் மேலும் மேலும் கேட்கவே, அந்தப் பெண்மணி "அப்பா உன்னிடம் மோர் உள்ளவரை என்னால் சோறிட முடியுமோ? சோறு உள்ளவரைதானே இடமுடியும்!" என்றாளாம். "மோர் உள்ளதனையும் சோறேயோ" என்ற இவ்வார்த்தையை எம்பெருமானார் அருளிச்செய்ததாக எண் 791ல் குறிப்பிடப்பெறுவது காண்க.

2. "அஸங்கதிரேவ ஸங்கதி:" என்பதற்கு ஸ்ரீ உ.வே. காஞ்சீ ப்ரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசார்ய ஸ்வாமி மிகவும் சுவையான விளக்கம் அளித்துள்ளார். எம்பெருமானுடைய பெருமைகளை நினைத்து, அவனைக் கவிபாடப் பெற்ற எனக்கு ஒரு குறையுமில்லை என்று அளவற்ற மகிழ்ச்சியுடன் கீழ்த் திருவாய்மொழியில் ஆழ்வார் அருளிச் செய்தார். அவ்வெம்பெருமானோடு கூடப் பெற வேண்டும் என்று ஆசைப்பட்டவர், உடனே கூடப்பெறாமையால் தளர்ந்து மயக்கமுற்று விட்டார். எனவே ஆழ்வார் எம்பெருமானோடு கூடப்பெறாமையே (அஸங்கதி:) இத்திருவாய்மொழி அருளிச் செய்தமைக்கு ஸங்கதி (தொடர்பு) என்பது அவர் தரும் விளக்கம்.

[563]

"ராவணன் மாயாஶிரஸ்ஸைக் காட்டினபோது பிராட்டியும் அல்லாத ஸ்த்ரீகளோபாதி ஶோகித்துக் கண்ணநீர் விழவிட்டிருந்தாளாயிருந்தது. இதுக்கு அடியென்? இது கேட்டபோதே முடியவன்றோ ப்ராப்தம்!" என்று சீயரைக் கேட்க, "அவதாரத்தில் மெய்ப்பாட்டாலே மெய்யென்றே ஶோகித்தாள். ஜ்ஞானமின்றியிலே ஜீவிக்கைக்கு ஹேது அவருடைய ஸத்தையாகையாலே உளளாயிருந்தாள். இவ்வர்த்தம் மெய்யாகில் ஸத்தையுமில்லையாம்" என்றருளிச் செய்தார்.

(திருவாய்மொழி 4-6 ஈடு வியாக்கியான ப்ரவேசம்)

நிகழிடம்

ஆழ்வார் மோகித்திருக்கிற நிலையிலும், பிறதேவதைகளினுடையவும், அவர்களைச் சேர்ந்தவர்களுடையவும் தொடர்பு ஏற்பட்டால் அது அவருடைய உயிருக்கே பாதகமாக அமையும் என்றும், அந்த நிலையிலும் எம்பெருமானுடையவும் அவனுடைய அடியார்களுடையவும் தொடர்பு ஏற்பட்டால் அது அவருடைய உயிரை மீட்டுத் தரும்படியாக இருக்கும் என்பதே "தீர்ப்பாரையாமினி" என்கின்ற திருவாய்மொழியில் தெரிவிக்கப்படும் கருத்தாகும் என்றுரைத்த உரையாசிரியர், இத்தொடர்பில் ஓர் **ஸம்வாதம்** *காட்டுகிறார்.*

விளக்கம்

எண் 115ன் விளக்கம் பார்க்க.

[564]

(தீர்ப்பாரை யாம் இனி எங்ஙனம் நாடுதும்) இதுக்கு மூன்றுபடியாக அருளிச் செய்தருளுவர். 'தீர்ப்பாரை எங்ஙனம் நாடுதும்' என்கையாலே 'நீங்கள் செய்கிறவை பரிஹாரமல்ல' என்று அவற்றை நிஷேதிக்கையிலே தாத்பர்யம். இவர்கள் பரிஹரியா நிற்க, 'எங்கே தேடுவோம்?' என்கை 'இது பரிஹாரமல்ல' என்றதாய் வருமிறே. அங்ஙனன்றிக்கே, 'இவளோடொக்க மோஹிப்பாரைக் கிடைக்குமத்தனை போக்கிப் பரிஹாரம் பண்ணுவாரை எங்கே தேடுவோம்! ஊரும் நாடும் உலகமும் தன்னைப் போல ஆக்கிக் கொண்டிறே இருப்பது'. அன்றிக்கே, 'தானும் இப்போது பரிஹரிப்பாரை ஆராயாநிற்கிறாள்' என்று தோற்றியிருந்தது.

(திருவாய்மொழி 4-6-1 ஈடு வியாக்கியான ப்ரவேசம்)

நிகழிடம்

எம்பெருமானோடு கலந்து பிரிந்து, பிரிவின் ஆற்றாமையாலே மோகித்துக் கிடக்கின்ற பிராட்டி நிலையை அடைந்த ஆழ்வாருக்கு மோகத்தைத்

தெளிவிப்பதற்காக, துர்த்தேவதைகளோடு தொடர்பு உடையவர்களைக் கொண்டு தாய்மார் பரிகாரம் செய்ய விழைகின்றனர். ஆனால் இது செய்யத்தகாத செயல் என்று அறிந்த தோழி "தீர்ப்பாரை யாம் இனி எங்ஙனம் நாடுதும்" (இந்த நோயைத் தீர்ப்பதற்குரியவர்களை இனி நாம் எங்ஙனம் தேடுவோம்) என்கிறாள். இதற்கு மூன்று விதமான **நிர்வாஹங்கள்** *காட்டப்பெறுகின்றன.*

விளக்கம்

"தீர்ப்பாரை யாம் இனி எங்ஙனம் நாடுதும்" என்பதற்கு மூன்றுவிதமாக **நம்பிள்ளை** *அருளிச்செய்வர்.*

1. "தீர்ப்பவர்களை எங்ஙனம் நாடுதும்" என்பதற்கு "நீங்கள் செய்யும் பரிகாரம் சரியானது அல்ல" என்று அவற்றை விலக்குவதிலே கருத்து. எப்படியெனில், தாய்மார் அவளுடைய நோயினை போக்குவதற்காகப் பரிகாரங்களைச் செய்து கொண்டிருக்கையில், 'நோயினைத் தீர்ப்பாரை எங்கே தேடுவோம்' என்று தோழி கூறினால், 'இப்போது நீங்கள் செய்கிறவை பரிகாரமே அல்ல' என்றுதானே பொருள்படும்!

2. அல்லது, 'இங்கு எல்லாருமே மோகித்துக் கிடக்கிறபடியால் நோயைத் தீர்ப்பவர்களை எங்கு தேடுவோம்?' என்கிறாள் தோழி. நாயகியானவள், ஊரும் நாடும் உலகமும் தன்னைப் போல் ஆக்கி வைத்துள்ளபடியால், இவளைப்போலே மோகித்துள்ளவர்கள் கிடைப்பார்களேயன்றி, மோகத்தைத் தெளிவிப்பவர்கள் கிடைக்க மாட்டார்கள் என்ற கருத்தில் தோழி அப்படிக் கூறுகிறாள்.

3. அல்லது தோழியானவள் இப்போது நோய் தீர்ப்பவர்களைத் தேடுவதாகவும் கொள்ளலாம். தாய்மார், வேறு தெய்வங்களுடன் தொடர்புடையவர்களைக் கொண்டு நாயகியின் மயக்கத்தைத் தெளிவிக்க முயல்வது சரியான பரிகாரமன்று என்றுணர்ந்த தோழியானவள், 'சரியான பரிகாரம் செய்யக் கூடியவர்களை எப்படிக் கண்டுபிடிப்பது?' என்ற கருத்தில் 'தீர்ப்பாரை - எங்ஙனம் நாடுவதும்?' என்கிறாள் என்றும் கொள்ளலாம்.

[565]

(இசைப்பின்றி இத்யாதி) இங்கேயருளிச் செய்யும் வார்த்தை. பிள்ளை உறங்காவில்லி தாஸர் குடிமகனொருவனுக்கு ஐயனார் ஏறி வலித்து நலிந்தவாறே "உனக்கு வேண்டுவதென்?" என்று கேட்க, "எனக்குப் பாலும் பழமுமாக உண்ண வேணும்; சாந்தும் புழுகும் பூச வேணும்; நல்ல புடவை உடுக்க வேணும்; நல்ல ஆபரணம் பூண வேணும்; தண்டேற வேணும்; அணுக்கனிட வேணும்" என்ன, அவர்களும் அப்படியே செய்கிறோம் என்று பிள்ளை திருமாளிகையிலே வந்து சாந்து, புழுகு ஆபரணாதிகளை வாங்கிக் கொண்டு போய்

அவற்றை அலங்கரித்து ஶாந்தியும் பண்ணிவிட்டு வந்த அவ்விரா, பண்டையிலும் இரட்டியாக அவனை வலிக்க, "இது என்?" என்று கேட்க, "பிள்ளை சாத்துகிறவற்றையெல்லாம் கொண்டு வந்திகோள்; அவர்க்குச் சாத்துகிற அனுக்கனை இட்டிக்கோள்; நான் அதின் கீழ் போவேனோ? என்னை வெயிலிலே கொண்டு போனிகோள்! என் உடம்பிலே நெருப்பை வழியட்டினாற் போலே அவர் சாத்துகிறவற்றைப் பூசினிகோள்; அரி கண்டமிட்டாற் போலே, அவர் சாத்துகிற ஆபரணத்தைப் பூட்டினிகோள்; நீங்கள் செய்த செயலுக்கு இவனைக் கொண்டல்லது போகேன்" என்று வலித்ததாம்.

(திருவாய்மொழி 4-6-2 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

எம்பெருமானோடு கலந்து பிரிந்து, பிரிவின் ஆற்றாமையாலே தளர்ந்து மோகித்துக் கிடக்கின்ற நாயகியின் நிலையை அடைந்த ஆழ்வார்க்கு மோஹத்தைத் தெளிவிப்பதற்காக துர்தேவதைகளோடு தொடர்பு உடையவர்களைக் கொண்டு தாய்மார் பரிகாரம் செய்ய முயல்கின்றனர். ஆனால் இது செய்யத் தகாத செயல் என்று அறிந்த தோழி "இசைப்பின்றி நீர் அணங்காடும் இளம் தெய்வம் அன்றிது" (ஒரு தொடர்பும் இல்லாத அற்ப தேவதைகளால் வந்த நோயல்ல இது) என்கிறாள். இதர தேவதைகள் ஶ்ரீவைஷ்ணவ அடியார்களில்லத்தில் வந்து புகுராது என்று உரையிடுகின்ற உரையாசிரியர், இதற்குச் சான்றாக ஒரு **ஐதிஹ்யம்** எடுத்துக் காட்டுகிறார்.

விளக்கம்

பிள்ளை உறங்காவில்லி தாஸரின் குடிமகன் (வேலையாள்) ஒருவனுக்கு ஐயனார் (ஆவேசம்) ஏறி வலித்துத் துன்புறுத்தியது. 'உனக்கு என்ன வேண்டும்?' என்று கேட்க, "எனக்குப் பாலும் பழமுமாக உண்ண வேண்டும்; சந்தனமும் புனுகும் பூசிக் கொள்ள வேண்டும்; நல்ல ஆடைகளை உடுக்க வேண்டும்; நல்ல ஆபரணம் அணிய வேண்டும்; பல்லக்கில் ஏற வேண்டும்; எனக்குக் குடைபிடிக்க வேண்டும்" என்று அச்சிறு தெய்வமும் கூறிற்று. உடனே அவர்கள் பிள்ளை உறங்காவில்லி தாஸரிடம் சென்று, (நடந்தவைகளைக் கூறி) சந்தனம், புனுகு, ஆடை, ஆபரணம், குடை முதலியவற்றை வாங்கிக் கொண்டு வந்து அக்குடிமகனை அலங்கரித்து, ஐயனாருக்குச் சாந்தியும் செய்தனர். ஆனால் அன்றிரவு, முன்பைக் காட்டிலும் இருமடங்கு அக்குடியானவனை வலிக்கத் தொடங்கியது. "இதற்குக் காரணம் என்ன?" என்று கேட்க, அதற்கு ஐயனாராகிய சிறு தெய்வம் "பிள்ளை சாத்திக் கொள்ளுகிறவற்றை யெல்லாம் கொண்டு வந்து எனக்குச் சாத்தி விட்டீர்களே! அவர்க்குப் பிடிக்கிற குடையை எனக்கு இட்டீர்களே! அதன் கீழே நான் போவேனோ! அதன் கீழே போனாலும், வெயிலிலே போகிறது போல அன்றோ எனக்கு உடல் எரிகிறது! என் உடம்பிலே

நெருப்பை வழிய விட்டாற் போல அவர் சாத்திக் கொள்கின்ற புனுகு சந்தனம் முதலியவற்றை எனக்குப் பூசினீர்களே! அரிகண்டம்[1] இட்டாற்போல் அவர் சாத்திக்கொள்கிற ஆபரணத்தை எனக்குப் பூட்டினீர்களே! (பரம வைஷ்ணவரான பிள்ளையுறங்காவில்லி தாசருடைய பொருள்களை நான் தாங்குவேனோ!) நீங்கள் செய்த செயலுக்கு, இவனுடைய உயிரைக் கொள்ளாமல் போகமாட்டேன்" என்று வலித்ததாம்.

[566]

ஆச்சிமகனுடைய அந்திம ஸமயத்திலே பட்டர் அறிய என்று எழுந்தருளியிருந்தாராய், தம்மையறியாதே கலங்கிக் கிடக்கிறபடியைக் கண்டு, பெருமாளுக்கு இவர் ஸ்நேஹித்திருக்கும்படியை அறிந்திருக்கையாலே, மெள்ளச் செவியிலே ஊதினாற் போலே 'அழகிய மணவாளப் பெருமாளே ஶரணம்' என்றாராம். அநந்தரம் அதிலே உணர்த்தியுண்டாய் நெடும்போதெல்லாம், 'அழகிய மணவாளப் பெருமாளே ஶரணம்' என்று திருநாட்டுக்கு நடந்தாராம்.

(திருவாய்மொழி 4-6-2 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

எம்பெருமானோடு கலந்து பிரிந்து, பிரிவின் ஆற்றாமையாலே, தளர்ந்து மோகித்துக் கிடக்கின்ற நாயகியின் நிலையை அடைந்த ஆழ்வார்க்கு மோஹத்தைத் தெளிவிப்பதற்காக துர்தேவதைகளோடு தொடர்பு உடையவர்களைக் கொண்டு தாய்மார் பரிகாரம் செய்ய முயல்கின்றனர். ஆனால் இது செய்யத் தகாத செயல் என்று அறிந்த தோழி "சங்கு சக்கரம் என்று இவள் கேட்க நீர் இசைக்கிற்றிராகில் நன்றே இல் பெறும் இது காண்மினே" (இவள் கேட்கும்படியாக நீங்கள் 'சங்கு சக்கரம்' என்று கூறுவீர்களானால் இவளைப் பெறுவீர்கள்) என்கிறாள். இத்தொடர்பில் ஓர் **ஐதிஹ்யம்** *கூறப்பெறுகிறது.*

விளக்கம்

எண் 357ன் விளக்கம் பார்க்க.

[567]

(மிக்கசீர் இத்யாதி) அநந்யப்ரயோஜநரான ஸ்ரீவைஷ்ணவர்களிட்ட திருத்துழாயில் பரிமளத்தை வண்டு கொண்டு வந்து ஊதுமாகில்; இப்படிச் சீயர் அருளிச் செய்தவாறே, "துளவின் வாசமே அமையாதோ? மிக்கசீர்த் தொண்டர் என்கிற இவ்விஶேஷணத்துக்குக் கருத்தென்?" என்று நான் கேட்டேன். இவள் தான்

1. துர்தேவதையைத் திருப்திப்படுத்தும்பொருட்டு, ஒரு பக்தன் தன்னை வருத்திக் கொண்டு கழுத்தில் மாட்டிக் கொள்ளும் ஓர் இரும்பு வட்டம் அரிகண்டம் எனப்படும்.

நோவுபடுகிறது அத்தலைக்குப் பரிவரில்லை என்றாயிற்று. 'அங்கே அநந்ய ப்ரயோஜநர் பரிமாறா நின்றார்கள் என்றவாறே உறங்காத கண்ணும் உறங்கும்; பழைய நிறமும் வருங்காண்" என்று அருளிச் செய்தார்.

(திருவாய்மொழி 4-6-3 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

எம்பெருமானைப் பிரிந்த ஆற்றாமையினாலே தளர்ந்து வருந்துகின்ற நாயகி நிலையை நம்மாழ்வார் அடைந்தார். அவருடைய நோயைத் தீர்ப்பதற்கு வழிசொல்லும் தோழியானவள் "மதுவார்துழாய் முடி மாயப்பிரான் கழல் வாழ்த்தினால் அதுவே இவளுற்ற நோய்க்கும் அருமருந்தாகுமே" (திருத்துழாயால் அலங்கரிக்கப்பட்ட முடியையுடைய எம்பெருமானுடைய திருவடிகளை வாழ்த்தினால், அதுவே இவளுடைய நோய்க்கு மருந்தாகும்) என்கிறாள். இவ்விடத்தில் திருமங்கையாழ்வார் அருளிச்செய்த 'கெண்டை ஒண் கணும் துயிலும்' என்ற பாசுரம் மேற்கோளாகக் காட்டப்பட்டு, அதுகுறித்த **ஸம்வாதம்** *ஒன்றும் காட்டப்பெறுகிறது.*

விளக்கம்

"கெண்டையொண்கணும் துயிலும் என் நிறம் பண்டு பண்டு போலொக்கும் மிக்க சீர்த்தொண்டரிட்ட பூந்துளவின் வாசமே வண்டு கொண்டு வந்து ஊதுமாகிலே" (மிக்கசீர்த் தொண்டர்கள் அவன் திருவடிகளில் இட்ட திருத்துழாயின் மணத்தை வண்டு கொண்டு வந்து என் மீது ஊதுமாகில், என் கண்ணும் துயிலும்; என் நிறமும் முன்பு போலாகும்) என்பது திருமங்கை ஆழ்வார் அருளிச் செய்த (பெரிய திருமொழி 11-1-9) பாசுரமாகும்.

*"இங்கு 'திருத்துழாயின் மணத்தை வண்டு கொண்டு வந்து ஊதுமாகில்' என்று கூறினால் போதாதோ? 'மிக்க சீர்த்தொண்டரிட்ட' என்ற அடைமொழிக்குக் கருத்து என்ன?" என்று நான் (***நம்பிள்ளை***) கேட்டேன். அதற்கு* **நஞ்சீயர்** *"இப்பொழுது இவள் நோயால் வருந்துவது எம்பெருமானுக்குப் பரிவுடன் மங்களாசாஸனம் செய்பவர்கள் இல்லையே எனும் நினைவால்தானே!. எனவே, அங்கு வேறுபயன் எதையும் கருதாமல் எம்பெருமானுக்கு மங்களாசாஸனம் செய்யக் கூடிய மிக்க சீர்த்தொண்டர் அடிமை செய்கிறார்கள் என்றறிந்தால் அவளுக்கு உறங்காத கண்ணும் உறங்கும்; பழைய நிறமும் திரும்பும்" என்று அருளிச் செய்தார் - என்று நம்பிள்ளை அருளிச்செய்வர்.*

[568]

(மாயன் தமரடி நீறு கொண்டு) வண்டரும் சொண்டரும் என்கிறவர்களுக்கு அரையன் சொன்ன வார்த்தைக்குப் பிள்ளையுறங்காவில்லி தாஸர் பரிஹாரம்

பண்ணினபடியை நினைப்பது. அதாவது, அகளங்க நாட்டாழ்வான் இவர்களுக்கு அமணன் பாழியில் ஸிம்மத்தைக் காட்டி, "திருமுற்றம், திருவடி தொழுங்கோள்" என்ன; அவர்களும் மெய்யென்று திருவடி தொழுது, அது அமணன்பாழி என்று அறிந்தவாறே மோஹித்து விழ, பிள்ளை உறங்காவில்லி தாஸர் தம் ஸ்ரீபாததூளியை அவர்களுக்கு இட உணர்ந்து எழுந்திருந்தார்கள்.

(*திருவாய்மொழி 4-6-6 ஈடு வியாக்கியானம்*)

நிகழிடம்

எம்பெருமானைப் பிரிந்த ஆற்றாமையாலே மோஹித்து விழுந்த (நாயகியின் நிலையை அடைந்த) நம்மாழ்வாருடைய மோஹத்தைத் தெளிவிப்பதற்கு வழி சொல்லும் தோழியானவள் "மாயன் தமரடி நீறு கொண்டு அணிய முயலில் மற்றில்லை கண்டீர் இவ்வணங்குக்கே" (எம்பெருமானுடைய அடியவர்களின் பாததூளியை இவளுக்கு அணிவிக்க முயற்சி செய்தால், அதைக் காட்டிலும் இவளுடைய நோய்க்கு வேறு பரிகாரம் இல்லை) என்று கூறுவதாகப் பாசுரம் அமைந்துள்ளது. அப்படி பாகவதர்களுடைய பாததூளியால் மோஹம் தெளிவிக்கப்பட்ட **ஐதிஹ்யம்** *ஒன்று எடுத்துக்காட்டப் படுகிறது.*

விளக்கம்

அகளங்க நாட்டாழ்வான் *எனும் அரசன்*[1]*, (பிள்ளை உறங்காவில்லி தாஸரின் மருமகன்களும், மறந்தும் புறம்தொழாத வைணவர்களுமான)* **வண்டர், சொண்டர்** *என்ற இருவருடன் சென்று கொண்டிருந்தபோது வழியில் ஓர் அமணன் பாழியை (ஜைன ஆலயத்தை)யும் அதன் மீது அடையாளமாக வைக்கப்பட்டிருந்த சிங்கத்தின் சிலையையும் கண்டான். பெருமாள் திருக்கோயில்களிலும் அப்படி சிங்கத்தின் சின்னம் வைப்பதுண்டாகையால், ஒரு வேடிக்கை செய்ய எண்ணிய அரசன், வண்டரையும் சொண்டரையும் பார்த்து "இது பெருமாள் கோயில், வணங்குங்கள்" என்று கூறிவிட்டான். பரம வைஷ்ணவர்களான வண்டரும் சொண்டரும் அது உண்மை என்று நம்பி, அவ்வாலயத்தை வணங்கி விட்டார்கள். ஆனால் அது ஜைன ஆலயம் என்று பிறகு தான் அவர்களுக்குத் தெரிந்தது. வணங்கக் கூடாத தேவதையை வணங்கி விட்டதை அறிந்ததும் அதிர்ச்சி தாளாமல் மோகித்து விழுந்து விட்டனர். இதை அறிந்த* **பிள்ளையுறங்காவில்லி தாசர்** *விரைந்து வந்து தமது ஸ்ரீபாததூளியை அவர்கள் மீது இட, அவர்கள் உணர்வு பெற்றார்கள்.*

1. சோழவரசனான முதலாம் குலோத்துங்கன் மகனே அகளங்கன் என்பர். அரசனுடைய மெய்காப்பாளராகப் பணியாற்றியவர்கள் வண்டர், சொண்டர் என்ற இருவர் என்றும், இவர்கள் பிள்ளை உறங்காவில்லிதாசரின் மருமக்கள் என்றும் ஆறாயிரப்படி குருபரம்பரை கூறுகிறது.

[569]

திருக்கொட்டாரத்தினருகே கைங்கிரை கட்டிக் கொண்டிருக்கிற நாளிலே சீயர் இத்திருவாய்மொழி அருளிச் செய்கிறாராய், இவ்வளவிலே வங்தவாறே "'தேர்ப்பாகனார்க்கு' என்று நோவுக்கு நித₄ானம் சொன்னாளாகில், அவனையிட்டுப் பரிஹரியாதே, 'மாயன் தமரடி நீறு கொண்டு அணிய முயலில்' என்று இத்தைப் பரிஹாரமாகச் சொல்லுவானென்? நோவுக்கு நித₄ானம் ஒன்றும், பரிஹாரம் ஒன்றுமாயோ இருப்பது?" என்று நான் கேட்டேன். "மோர்க்குழம்பு இழியாதே மோஹித்துக் கிடந்த ஸமயத்தில் சுக்கிட்டு ஊதிப் பின்பு மோர்க் குழம்பு கொடுத்துப் பரிஹரிப்பாரைப் போலே 'தேர்ப்பாகனார்க்கு' என்றபோதே அவரைக் கொடு வந்து காட்டப் பெறாமையாலே, முற்பட இவ்வழியாலே ஆஶ்வஸித்துப் பின்னை அவனைக் கொடு வந்து காட்டுவதாகக் காணும்" என்றருளிச் செய்தார்.

(திருவாய்மொழி 4-6-6 ஈடு வியாக்கியானம்)

நிகழ்டம்

எம்பெருமானோடு கூடப்பெறாத வருத்தத்தினால் மோகித்துக் கிடக்கிற நாயகி (யின் நிலையில் உள்ள ஆழ்வார்) விழித்தெழுவதற்குப் பரிகாரம் கூறுகின்ற தோழி "மாயன் தமரடி நீறு கொண்டு அணியமுயலில் இவளைப் பெறுதிரே" (எம்பெருமானுடைய அடியவர்களின் பாததூளியை இவளுக்கு அணிவித்தால் இவளைப் பெறுவீர்கள்) என்று தாய்மாரிடம் கூறுகிறாள். இதுபற்றி ஒரு **ஸம்வாதம்** *கூறப்பெறுகிறது.*

விளக்கம்

திருவரங்கம் பெரிய கோயிலுக்குள்ளே திருக்கொட்டாரத்தின் (தானியங்கள் வைக்கும் அறை) அருகே கைந்நிரை கட்டிக் கொண்டிருக்கின்ற சமயத்தில்[1] **நஞ்சீயர்** *இத்திருவாய்மொழிக்கு விளக்கம் அளித்து வந்தார். "எம்பெருமானோடு கூடப் பெறாத வருத்தத்தினால் தளர்ந்து மயங்கி விழுந்த (நாயகியின்) நிலையில் ஆழ்வார் உள்ளார். 'மாயப்போர்த் தேர்ப்பாகனார்க்கு இவள் சிந்தை துழாய் திசைக்கின்றதே' என்று கண்ணபிரானிடத்திலே இவளுடைய நெஞ்சு மயங்கிக் கிடந்ததாக இப்பதிகத்தின் முதல் பாசுரத்திலேயே அருளிச் செய்யப் பெற்றிருக்கிறது. ஆனால், இப்பாசுரத்தில் இவளுடைய மயக்கத்தைத்*

1. திருவரங்கம் பெரிய கோயிலில் ஸ்ரீவைஷ்ணவர்கள் அனைவரும் அடையவளைந்தான் மதிளுக்கு வெளியிலேயே குடி இருந்தனர். வெள்ளம் அல்லது அன்னியர் படையெடுப்பு போன்ற ஆபத்துக்கள் வந்தால் கோயிலுக்குள் கைநிரை (கைகளால் வேய்ந்த ஓலைக் குடிசை) கட்டிக் கொண்டு வசிப்பர்; ஆபத்து நீங்கிய பிறகு தம் இல்லங்களுக்குத் திரும்பி விடுவர். "ஒரோ கலகங்களுக்குள்ளே அடையவளைந்தானுக்குள்ளே குடிவாங்கியிருந்து காலம் தெளிந்தவாறே புறம்பே புறப்பட்டாலும்....." என்று 1-3-9 ஈடு உரையில் அருளிச்செய்வது காண்க. (எண் 719 பார்க்க.)

*தெளிவிக்கும் பரிகாரம் கூறும் போது 'மாயன் தமரடி நீறு கொண்டு அணிய முயலில்' என்று எம்பெருமானுடைய அடியவர்களின் பாததூளியை இவள் மீது இட்டால் இவள் மோகம் தீரும் என்று கூறப்படுகிறதே! எம்பெருமானால் ஏற்பட்ட மயக்கத்தை எம்பெருமானையிட்டுப் பரிகாரம் செய்யாமல் வேறொன்றால் பரிகாரம் செய்வது சரியோ? நோய்க்குக் காரணம் ஒன்றும், பரிகாரம் வேறொன்றுமாகவன்றோ கூறப்படுகிறது!" என்று நான் (***நம்பிள்ளை***) கேட்டேன். அதற்கு **நஞ்சீயர்**, "மோர் குடிக்க முடியாமல் மயங்கி விழுந்தவர்களுக்கு, முதலில் சுக்கிட்டு ஊதி மயக்கத்தைத் தெளிவித்துப் பிறகுதானே அவர்கள் விரும்பிய மோர்க் குழம்பு தருவார்கள்![1] அதுபோல எம்பெருமானைப் பெறாத வருத்தத்தாலே தவித்து மயங்கிய (நாயகி) நிலையிலிருக்கிற ஆழ்வார்க்கு முதலில் அடியவர்களுடைய பாததூளியால் மயக்கத்தைத் தெளிவித்துப் பின்னர் அவனைக் கொண்டுவந்து காட்டுவதாக இருக்கின்றனர்" என்று விடை அருளிச்செய்தார் - என்று நம்பிள்ளை அருளிச்செய்வர்.*

[570]

அன்றிக்கே, ஐயன் திருக்குருகைப்பெருமாள் அரையர் நிர்வஹிக்கும்படி- "உணங்கல் கெட - இவளுடைய உணங்குதல் கெட, இவள் இளைப்புத் தீர; கழுது என்று பேய்; கழுதை - பேயை; உதடாட்டம் கண்டு என் பயன்? நீங்கள் ஆடும் கள்ளும் ப்ரார்த்தித்துக் கொடுக்க அத்தை அது விநியோகம் கொள்ளும்போது அதினுடைய உதடு ஆடுகிறத்தைக் கண்டிருக்கிறத்தால் என்ன ப்ரயோஜனமுண்டு?" என்று.

(திருவாய்மொழி 4-6-7 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

எம்பெருமானைப் பிரிந்த ஆற்றாமையாலே தளர்ந்து மயங்கிய நாயகி நிலையை ஆழ்வார் அடைந்தார். இவருடைய மயக்கத்தைத் தெளிவிப்பதற்காக முயல்கின்ற உற்றார், இது ஏதோ சிறு தெய்வங்களால் ஏற்பட்ட நோய் என்று கருதி, மற்ற தெய்வங்களுடைய அடியவர்களான கட்டுவிச்சிகளைக் கொண்டு இவள் நோய்க்குப் பரிகாரம் செய்ய முற்பட்டனர். அத்தேவதைகளின் மகிழ்ச்சிக்காக ஆட்டிறைச்சி, கள் முதலியவைகளையும் அக்கட்டுவிச்சியிடம்

1. பண்டைக் காலத்தில் மோகித்து விழுந்தவர்களை தெளிவு பெறுவிப்பதற்காக ஒருவர் சுக்கை வாயிலிட்டு மென்று, மோகித்து விழுந்தவர்கள் மூக்கிலும் காதிலும் ஊதுவார்கள். இந்த சுக்குக் காற்று மோகித்தவர்களுக்கு உணர்வு ஏற்படும்படி செய்யும். அப்படி உணர்வு பெற்றவுடன் கெட்டியான மோரை அவர்களுக்குக் கொடுப்பார்கள். இதுவே இங்கு 'சுக்கிட்டு ஊதிப் பின்பு மோர்க்குழம்பு கொடுத்துப் பரிஹரிப்பாரைப்போலே' என்று குறிப்பிடப்பெறுகிறது.

கொடுத்தனர். இதைக் கண்ட தோழியானவள் "உணங்கல் கெடக் கழுதை உதடாட்டம் கண்டு என் பயன்?" என்று கூறுவதாகப் பாசுரம் அமைந்துள்ளது.

"நீங்கள் செய்கின்ற செயலால், நாயகியின் நிலை மேலும் மோசமடைகிறது. ஆனால் நீங்களோ அதையுணராமல் கட்டுவிச்சி ஆவேசமாக ஆடுவதைக் கண்டு கொண்டிருக்கிறீர்களே! தெருவிலே நெல்லை (உணங்கலை) ஒரு கழுதை வந்து தின்று விட, 'நெல் போகிறதே' என்று வருந்தாமல், நெல்லைத் தின்னும் போது கழுதையின் உதடு எவ்வளவு அழகாக அசைகிறது என்று அதைப் பார்த்துக் கொண்டிருப்பதால் என்ன பயன்? அது போல, இவளைக் கொண்டு உயிர் வாழவிருக்கிற நீங்கள், இவள் நிலை மேலும் மோசமடையும்படியாகக் கட்டுவிச்சி ஆடுவதைக் கண்டுகொண்டிருக்கலாமா?" என்று தோழி கேட்பதாக இதற்கு விளக்கமளித்த உரையாசிரியர் இச்சொற்களுக்கு ஐயன் திருக்குருகைப் பெருமாள் அரையர் என்பவர் அளித்த மற்றொரு **நிர்வாஹ**த்தையும் கூறுகிறார்.

விளக்கம்

"உணங்கல் என்பது உணங்குதல் அதாவது இளைப்பு என்ற பொருளைத் தரும். உணங்கல் கெட - இவளுடைய (பராங்குச நாயகியின்) இளைப்புத் தீர (வேண்டுமானால்) கழுதை (பேயை) உதடாட்டம் காணுவதால் என்ன பயன்? (கழுது - பேய்; கழுதை பேயை) நீங்கள் ஆடும் கள்ளுமாய்க் கொடுக்கக் கொடுக்க, அவைகளை உண்கின்ற அந்தப் பேயின் உதட்டசைவுகளை நீங்கள் பார்த்துக் கொண்டிருந்தால், இவளுடைய இளைப்பு தீர்ந்துவிடுமா? அப்படிச் செய்வதால் ஒரு பயனுமில்லை" என்பது **ஐயன் திருக்குருகைப் பெருமாளரையர்** அளித்த விளக்கமாகும்.

[571]

(தொழுதாடித் தூமணி வண்ணனுக்கு ஆட்செய்து நோய் தீர்ந்த) என்றதுக்கு அம்மங்கியம்மாள் பணிக்கும் படி. "மோஹித்தவள் அல்பம் ஆய்வஸித்தவாறே, மோர்க்குழம்பு குடித்தாள், தரித்தாள், கண் விழித்தாள், வார்த்தை சொன்னாள் என்பர்களிறே! அதுபோலே காணும்!" என்று.

(திருவாய்மொழி 4-6-11 ஈடு வியாக்கியானம்)

நிகழ்டம்

எம்பெருமானைப் பிரிந்த ஆற்றாமையாலே தளர்ந்து மயங்கிய (நாயகி) நிலையை அடைந்த ஆழ்வாருடைய மோகத்தைத் தெளிவிப்பதற்கு பகவானுடைய திருநாமங்களைச் சொல்ல வேண்டும் என்று தோழி வழி சொன்னாள். 'வண் துவராபதி மன்னன்' என்று திருநாமத்தைச் சொன்னாலே உணர்வு பெறுவாள் என்று தோழி சொன்ன வார்த்தையில், 'வன் துவராபதி

மன்னன்' என்ற திருநாம உச்சாரணத்தைக் கேட்டே உணர்வு பெற்றார் ஆழ்வார். உடனே அடுத்த பாசுரம் 'தொழுது ஆடித் தூமணி வண்ணனுக்கு ஆட்செய்து நோய் தீர்ந்த' என்றுள்ளது. இப்போது தான் மயங்கிக் கிடந்தவர் சிறிது உணர்வு பெற்றவாறே, தொழுதார், ஆடினார் என்று அருளிச்செய்யப்பெற்றுள்ளதற்கு அம்மங்கியம்மாள் எனும் ஆசார்யர் அளித்த **நிர்வாஹம்** கூறப்பெறுகிறது.

விளக்கம்

"நன்றாக மயங்கிக் கிடந்தவர்கள் சிறிது உணர்வு பெற்றாலும், அதையே பெரிதாக நினைத்து, 'உயிர் தரித்தாள், கண் விழித்தாள், வார்த்தை சொன்னாள், மோர்க்குழம்பு குடித்தாள்' என்று உற்சாக மிகுதியினால் கூறுவது போல இங்கும் ஆழ்வார் சிறிது உணர்வு பெற்றவுடனே தொழுதார், ஆடினார் என்று கூறப்படுகிறது" என்று அம்மங்கியம்மாள் அருளிச் செய்தார்.

[572]

(ஏழையேன்)... ஆழ்வான் பணித்த வரதராஜஸ்தவத்திலே ஒரு ப்லோகத்தைக் கேட்டு எம்பெருமானார் "இப்பாசுரம் கேட்டால் பெருமாள் இரங்காமை இல்லை. ஆழ்வான்! உன் முகத்தைக் காட்டிக் காணாய்" என்று பார்த்தருளினார்.

(திருவாய்மொழி 4-7-5 ஈடு வியாக்கியானம்)

நிகழ்டம்

"இப்பொழுதே வந்திடாய் என்று ஏழையேன் நோக்குவனே" (இப்பொழுதே நீ வர வேண்டும் என்று ஆசையுடையவனாய் நோக்குகின்றேன்) என்று ஆழ்வார் எம்பெருமானை எதிர்பார்த்துச் சுற்றிலும் நோக்குகிறார். கனிந்த சொற்களுக்கு வசப்பட்டு எம்பெருமான் அடியவர்கள் வேண்டுவதை நிறைவேற்றியே தீருவன் என்று அடியவர்கள் நம்புவது குறித்து ஓர் **ஐதிஹ்யம்** கூறப்படுகிறது.

விளக்கம்

சோழ அரசனாலே கண்களை இழந்த கூரத்தாழ்வானைக் கண்டு வருந்திய எம்பெருமானார்[1] "ஆழ்வான்! கண்கள் இல்லாதவராக உம்மைக் காண என்னால் முடியவில்லை. ஸ்வரூபவிருத்தமாயினும் ஆயிடுக! காஞ்சீ வரதராஜனைக் குறித்துக் கண்களைக் கொடுக்குமாறு வேண்டி ஒரு தோத்திரம் விண்ணப்பம் செய்யும். வரந்தரும் பெருமாள் ஆகையால் அவன் நிச்சயம் திருக்கண் தந்தருள்வன்" என்று கூரத்தாழ்வானிடம் கூறினார். ஆழ்வானும் அப்படியே வரதராஜஸ்தவம் என்றொரு துதி நூலை இயற்றினார். அந்த தோத்திரத்தில் "நீலமேகநிபம் அஞ்சனபுஞ்ஜ ச்யாமகுந்தலம் அநந்தசயம் த்வாம், அப்ஜபாணிபதம் அம்புஜ நேத்ரம் நேத்ரஸாத்குரு கரீச ஸதாமே"

1. எண் 555 பார்க்க.

(அத்திகிரிநாதனே! கருமுகில் போன்றவனாய், மைவண்ண நறுங்குழலை உடையவனாய், திருவனந்தாழ்வான்மீது பள்ளி கொள்பவனாய், தாமரை போன்ற திருக்கைகளையும் திருவடிகளையும் உடையவனாய், தாமரை போன்ற திருக்கண்களையும் உடையவனான உன்னை எப்போதும் அடியேன் கண்ணால் காணும்படி அருள் செய்) என்ற சுலோகத்தைக் (23)[1] கேட்ட எம்பெருமானார் "ஆழ்வான்! இந்த சுலோகத்தைக் கேட்டால் நிச்சயம் பெருமாள் இரங்காமல் இருக்க மாட்டார். உம்முடைய முகத்தைக் காட்டும்! (உமக்குக் கண் வந்துவிட்டதா என்று பார்க்கிறேன்)" என்று பார்த்தருளினார்.

[573]

(நின் திருப்பாதங்கள் மேல்) त्वत्पादपङ्कजपरिग्रहधन्यजन्माभूयासं (த்வத்பாத$_3$ பங்கஜபரிக்$_3$ரஹ த$_4$ந்யஜந்மா பூ$_4$யாஸம்" என்கிறதுக்கு ஆளவந்தார், "வார்த்தை அழகிது, வகுத்த விஷயத்திலேயாகப் பெற்றிலோம்" என்று அருளிச் செய்தார்.

(திருவாய்மொழி 4-7-8 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

"கண்டு கொண்டு, என் கைகளார நின் திருப்பாதங்கள் மேல்......." (என் கண்களால் விடாய்தீரக்கண்டு, கைகள் பூரிக்கும்படி உன் திருவடிகளில் அடிமை செய்ய வேண்டும்) என்று எம்பெருமானை வேண்டுகிறார் ஆழ்வார். இத்தொடர்பில் ஆளவந்தார் அருளிச்செய்த **வார்த்தை** ஒன்று எடுத்துக் காட்டப் பெறுகிறது.

விளக்கம்

பவபூதி என்ற கவி எழுதிய 'மாலதீமாதவம்' வடமொழி (நாடக) நூலில் "த்வத் பாதபங்கஜ பரிக்ரஹ தந்ய ஜந்மா பூயாஸம்" (உன்னுடைய தாமரை போன்ற பாதங்களை வருடுவதனால் பிறவியின் பயனை அடைந்தவனாகக் கடவேன்) என்று மாலதி என்பவளைக் குறித்து மாதவன் என்பவன் கூறுவதாக (5ம் அங்கம் 5ம் ச்லோகம்) உள்ளது. இதைக் கேட்ட **ஆளவந்தார்**, இங்கே கூறப்பட்டுள்ள சொற்கள் அழகானவைதான். ஆனால், சாமான்யமான ஒரு பெண்ணைக் குறித்தன்றோ இவை கூறப்பட்டுள்ளன! பற்றத் தகுந்தவனான எம்பெருமானைக் குறித்து இவை கூறப்படவில்லயே!" என்று வருந்தி அருளிச் செய்தார்.

1. அடையவளைந்தான் அரும்பத உரையில் 'த்வாமுதாரபுஜம்' என்ற (24) ச்லோகத்தைக் கேட்டு என்று குறிப்பிடப்பெற்றுள்ளது. வரதராஜஸ்தவம் 88, 89 சுலோகங்களும் பார்க்க.

[574]

(அணிமானத் தடவரைத் தோள்)............ "ஆபரணத்துக்கு ஆபரணமான தோள்" என்று சீயர் அருளிச் செய்வர். "அணியென்று அழகாய், மானமென்று பெருமையாய் அணிபெருகிய தோள்" என்று ஒரு தமிழன்.

(திருவாய்மொழி 4-8-2 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

'அணிமானத்தடவரைத் தோள்' என்று எம்பெருமானுடைய தோளைப் பற்றி ஆழ்வார் அருளிச் செய்கிறார். இதுகுறித்து **நிர்வாஹங்கள்** *காட்டப் பெறுகின்றன.*

விளக்கம்

அணி என்பது ஆபரணம். "ஆபரணத்துக்கு ஆபரணமான தோள் - அதாவது ஆபரணங்களுக்கும் அழகு கொடுக்கும் தோள்" என்று **நஞ்சீயர்** *இதற்கு விளக்கம் அளித்தார். (நாம் ஆபரணங்களை அணிவது அழகுக்காகவே ஆகும். ஆனால் எம்பெருமானைப் பொறுத்தவரையில் அவ்வாபரணங்களும் அவன் அணிவதால்தான் அழகுபெறுகின்றன என்பது கருத்து. திருவரங்கம் பெரிய கோயிலில் அரையர்கள் "ஆபரணத்துக்கு அழகு கொடுக்கும் பெருமாள்" என்று கொண்டாட்டம் சேவிப்பது இங்கே நினைவு கூரத்தக்கது.)*

இது தவிர, மற்றொரு வகை விளக்கமும் உண்டு. அணி என்று அழகு; மானம் என்று பெருமை; அணிபெருகிய தோள் அதாவது அழகுமிக்க தோள் என்று **தமிழன்** *ஒருவன் விளக்கமளித்தான்.*[1]

[575]

(அடியேனை) இங்கே அருளிச் செய்யும் வார்த்தை: எழுந்தருளியிருக்கிற மடத்திலே ஸ்ரீவைஷ்ணவர்கள் அமுது செய்யா நிற்க, ஆச்சான் தண்ணீரமுது பரிமாறுகிறவர் ஓரருகு சாய நின்று பரிமாறினார். அத்தை உடையவர் கண்டு ஓரடி வந்து முதுகிலே மோதி "நேரே நின்றன்றோவுடோ பரிமாறுவது" என்றார்; என்ன, ஆச்சான் "பணிமானம் பிழையாமே அடியேனைப் பணி கொண்ட" என்று பணித்தான்.

(திருவாய்மொழி 4-8-2 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

"பணிமானம் பிழையாமே அடியேனைப் பணிகொண்ட மணிமாயன்" (கைங்கர்யம் (அடிமை) செய்வதில் ஒரு சிறிதும் குறை ஏற்படாமல் அடியேனைத்

1. இவ்விரு விளக்கங்களும் இருபத்துநாலாயிரப்படியிலும் குறிப்பிடப்பெற்றுள்ளன.

திருத்திப் பணிகொண்ட மணிமாயன்) என்று எம்பெருமானைக் குறித்து தம் நன்றி அறிதலைத் தெரிவிக்கிறார் ஆழ்வார். இத் தொடர்பில் ஓர் **ஐதிஹ்யம்** *எடுத்துக் காட்டப்படுகிறது.*

விளக்கம்

எம்பெருமானார் எழுந்தருளியிருக்கிற மடத்தில் ஸ்ரீவைஷ்ணவர்களுக்குத் ததீயாராதனம் நடை பெற்று கொண்டிருந்த போது கிடாம்பியாச்சான் தண்ணீர் பரிமாறிக் கொண்டிருந்தார். (ததீயாராதனங்களில் தண்ணீர் குடிக்க விரும்புபவர்களுக்காக ஒருவர் தண்ணீரை ஒரு பாத்திரத்தில் எடுத்துக் கொண்டு வந்து அவரவர் வாயில் சிறிது சிறிதாக ஊற்றுவது வழக்கம்.) கிடாம்பியாச்சான், தண்ணீர் வேண்டுமென்று கேட்ட ஒருவருக்கு நேரே நின்று தண்ணீர் பரிமாறாமல், ஒரு பக்கமாக இருந்து தண்ணீர் பரிமாற, தண்ணீர் கேட்டவரும் கழுத்தை சாய்த்துத் தண்ணீர் குடித்துக் கொண்டிருந்தார். இதைக் கண்ட எம்பெருமானார் ஓடிவந்து கிடாம்பியாச்சான் முதுகில் அறைந்து "நேரே நின்றன்றோ தண்ணீர் பரிமாற வேண்டும்! (இப்படித் தண்ணீர் பரிமாறினால், குடிப்பவருக்குப் புரைக்கேறுமே!)" என்று கடிந்து கொண்டார். இதைக் கேட்ட கிடாம்பியாச்சான் "பணிமானம் பிழையாமே அடியேனைப் பணிகொண்ட" என்று ஆழ்வார் பாசுரத்தையே கூறினாராம். 'இந்தச் சிறு விஷயத்தைக் கூட கவனித்து தேவரீர் அடியேனைத் திருத்திப் பணிகொள்வதே!' என்பது அவருடைய கருத்தாகும்.

[576]

(கவராத) சீயர் இவ்விடத்திலே அருளிச் செய்வதொரு வார்த்தையுண்டு:- "பூசும் சாந்து என்னெஞ்சமே என்கிறபடியே அன்று அப்படியே இத்தை விரும்பினவன் இன்று இப்படியே உபேக்ஷிக்கையாலே 'நாயகன் வரவு தாழ்த்தான்' என்று அவன் முன்னே சாந்தைப் பரணியோடே உடைப்பாரைப் போலே 'என் நெஞ்சு எனக்கு வேண்டா' என்கிறாள்" என்று.

(திருவாய்மொழி 4-8-2 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

"மணிமாயன் கவராத மடநெஞ்சால் குறைவிலமே" (எம்பெருமான் விரும்பாத (என்) நெஞ்சால் ஒரு பயனும் இல்லை)' என்கிறார் ஆழ்வார். இவ்விடத்தில் நஞ்சீயர் அருளிச்செய்த **வார்த்தை** ஒன்று காட்டப்பெறுகிறது.

விளக்கம்

கீழே 'கோவைவாயாள்' என்கிற திருவாய்மொழியில் ஆழ்வார் 'பூசும் சாந்து என் நெஞ்சமே' (4-3-1) என்று தம் நெஞ்சில் உண்டான காதலையே

எம்பெருமானுக்குப் பூசும் சந்தனமாக அருளிச் செய்தார். இப்போது எம்பெருமான் விரும்பாத அந்த நெஞ்சினாலும் ஒரு பயனுமில்லை என்று அந்த நெஞ்சு தன்னையே கழிக்கிறார். நாயகன் தாமதித்து வந்ததால் கோபம் (ஊடல்) கொண்ட நாயகியானவள் தன் கோபத்தை வெளிப்படுத்துவதற்காக, சந்தனத்தைப் பேழையோடு கீழே போட்டு உடைப்பது போல, இப்போது ஆழ்வாரும் எம்பெருமான் வரவு தாழ்த்தபடியால், பூசும் சாந்தான தமது நெஞ்சையும் அதில் உள்ள காதலாகிற சந்தனத்தையும் போட்டு உடைக்கிறார் (வேண்டாம்) என்கிறார் - என்று நஞ்சீயர் அருளிச் செய்வர்.[1]

[577]

(இருநிலமுன் துயர்தவிர்த்த) (பூங்கொள் இத்யாதி) "ஸ்ரீஜநகராஜன் திருமகளுக்கும் ருக்மிணிப் பிராட்டிக்கும் உண்டான விடாய் தனக்கொருத்திக்கும் உண்டாகையாலே அவர்கள் இருவரும் பெற்றபேற்றை நானொருத்தியும் பெற வேணுமென்கிறாள்" - இது பட்டர் அருளிச் செய்ய நான் கேட்டேன் என்று பிள்ளையருளிச் செய்வர்.

(*திருவாய்மொழி 4-8-8 ஈடு வியாக்கியானம்*)

நிகழிடம்

'வரிவளையால் குறைவில்லாப் பெருமுழக்கால் அடங்காரை எரியழலம் புக ஊதி இருநிலம் முன் துயர் தவிர்த்த.........விரிபுகழான்" (வளைவையுடைய பாஞ்ச ஜன்யத்தின் பெருமுழக்கத்தினால் எதிரிகளுடைய நெஞ்சில் அச்சமாகிற நெருப்பு குடிபுகும்படியாக ஊதி இவ்வுலகத்தின் துயர் தீர்த்த புகழை உடையவன்) என்று எம்பெருமானைப் பற்றி ஆழ்வார் அருளிச் செய்கிறார். நாயகி நிலையில் இருக்கின்ற ஆழ்வார் இங்கு எம்பெருமானுடைய திருச்சங்கொலியை மிகவும் விரும்பியருளிச் செய்துள்ளமையை விரித்துரைத்த உரையாசிரியர் ஆண்டாளும் இதே போல் சங்கொலியை விரும்பியருளிச் செய்த பாசுரமொன்றை எடுத்துக்காட்டி, அதுபற்றி பட்டர் அருளிச்செய்த **வார்த்தை**யைத் தாம் கேட்டிருந்ததாகக் கூறுகிறார்.

விளக்கம்

"பூங்கொள் திருமுகத்து மடுத்து ஊதிய சங்கொலியும் சார்ங்கவில் நாணொலியும் தலைப்பெய்வது எஞ்ஞான்றுகொலோ" என்கிற (நாச்சியார் திருமொழி 9-9) பாசுரத்தில் ஆண்டாள் எம்பெருமானுடைய திருச் சங்கொலியையும், திருச்சார்ங்கவில் நாணொலியையும் கேட்க விரும்புவதாகத் தெரிவிக்கிறாள். இதற்கு பட்டர் "சீதைப்பிராட்டிக்கும் ருக்மிணிப் பிராட்டிக்கும்

1. நஞ்சீயர் இவ்வாறு அருளிச்செய்தமை இருபத்துநாலாயிரப்படியிலும் குறிப்பிடப்பெறுகிறது.

உள்ள ஆசையெல்லாம் ஆண்டாள் ஒருத்திக்கே உண்டாகையால், அவர்கள் இருவரும் வெவ்வேறு சமயங்களில் பெற்ற பேற்றைத் தான் ஒரே சமயத்தில் பெறவேண்டும் என்று ஆசைப்படுகிறாள்'' என்றருளிச்செய்வராம். (ராவணன் மாயத்தால் உருவாக்கிய ராம லக்ஷ்மணர்களின் தலைகளைக் கொண்டு வந்து சீதையிடம் காட்டியபோது முதலில் அவ்விருவரும் இறந்து விட்டதாகவே எண்ணி, சீதை அழுதாள். அப்போது இலங்கைக் கடற்கரையில் இராமபிரான் எழுப்பிய வில்லின் நாணொலி கேட்டவாறே வருத்தம் தீர்ந்து மகிழ்ச்சியடைந்தாள். சிசுபாலன் ருக்மிணிப் பிராட்டியை மணம்புணர்ந்து கொள்ள முற்படுகையில், இன்னும் கண்ணபிரான் வந்து தன்னைக் கைப்பற்றவில்லையே என்ற கவலையுடன் இருந்தாள் ருக்மிணிப்பிராட்டி அப்போது புறச்சோலையில் கண்ணபிரான் தன் சங்கை எடுத்து முழங்க, அதைக் கேட்டு வருத்தம்தீர்ந்து மகிழ்ச்சியடைந்தாள். இவ்வாறு இருவரும் தனித்தனியே அடைந்த மகிழ்ச்சியைத் தான் ஒருத்தியே அடையவேண்டும் என்று ஆண்டாள் விரும்புகிறாள்.) இப்படி பட்டர் அருளிச் செய்ய நான் கேட்டேன் என்று **நம்பிள்ளை** *அருளிச் செய்வர்.*

[578]

(மேகலையால் குறைவில்லா) "உஷைக்குக் கூறையுடை அழகியதாய் இருக்கும் போலே காண்!" என்னுமாம் வங்கிப்புரத்து நம்பி.

(திருவாய்மொழி 4-8-9 ஈடு வியாக்கியானம்)

நிகழ்டம்

"மேகலையால் குறைவில்லா.......... போகமகள் (உடையழகால் குறைவில்லாதவள்) என்று உஷையைப் பற்றி ஆழ்வார் அருளிச் செய்கிறார். இதுபற்றி வங்கிப்புரத்து நம்பி அருளிச்செய்த **வார்த்தை** *கூறப்பெறுகிறது.*

விளக்கம்

உடை என்பது எல்லோர்க்கும் உண்டாயிருக்க, இவளைப்பற்றி மட்டும் இப்படி அடைமொழியிட்டதற்குக் கருத்தை **வங்கிப்புரத்து நம்பி,** *"கூறை உடையானது உஷைக்கு (மற்றவர்களைக் காட்டிலும் மிகப் பொருத்தமாக) அழகாக இருக்கும் போலும்!'' என்பராம்.*

[579]

எம்பார் "உன்னைப் பிரிந்து படுகிற க்லேசத்தின் அளவல்ல, உன்னையொழியப் புறம்பே பேறும் இழவுமாயிருக்கிற ஸம்ஸாரிகள் நடுவே இருக்கிற இருப்பால் படுகிற க்லேசம்; இத்தைத் தவிர்த்தருள வேணும் என்கிறார் என்றருளிச் செய்வர். ஆழ்வான் அங்கன்றிக்கே "ஏறாளுமிறையோனில்

தம்முடைய ஆற்றாமைக்குக் கூட்டாவார் உண்டோ என்று லோகவ்ருத்தாந்தத்தை அந்வேஷித்து ஸம்ஸாரிகளைப் பார்த்தார். அவர்கள், தாம் இவ்விஷயத்தில் ப்ரவணராய் இருக்கிறாப்போலே ஶப்$_3$தா$_3$தி$_3$ விஷயங்களிலே ப்ரவணராய், அவற்றினுடைய பேறு இழவுகளே லாபா$_4$லாப$_3$மாம்படி இருந்தார்கள்; வாளேறு காணத் தேளேறு மாய்ந்து அத்தைக் கண்டவாறே தம் இழவை மறந்தார். இவர்களுடைய இழவே நெஞ்சில் பட்டது. ஸர்வேஶ்வரனைப் பார்த்தார். அவன் ஸர்வஜ்ஞனாய், ஸர்வஶசக்தியாய்ப் பரமோதா$_3$ரனாய் எல்லாருடைய ரக்ஷணத்திலே தீ$_3$க்ஷித்திருக்குமவனாய் ஸர்வாபராத$_4$ஸஹனாய், ஸர்வ நியந்தாவாயிருந்தான். அவன்படி இதுவாயிருக்க, இவை இப்படி நோவு படுகைக்கு இவ்விடம் தன்னரசு நாடோ என்று பார்த்து, 'நீ ஸர்வேஶ்வரனாய், பரமக்ருபாவானாய் ப்ராப்தனுமாய், இவற்றின் க்லேஶம் அறிந்து பரிஹரிக்கைக்கு ஈடான ஜ்ஞான ஶக்தியை உடையையுமாயிருக்க, இவை இங்ஙனே கிடந்து நோவு படுகை போருமோ? இவற்றைக் கரைமரம் சேர்க்க வேணும்' என்று அவன் திருவடிகளைப் பிடிக்க, 'நம்மால் செய்யலாவதுண்டோ, இவை சேதனரான பின்பு, இவை தனக்கே ருசி உண்டாகவேணுமே; நாம் கொடுக்கிற இது புருஷார்த்த$_2$மாக வேணுமே. புருஷன் அர்த்தி$_2$க்கக் கொடுக்குமதிறே புருஷார்த்த$_2$மாவது. அசித்தாய் நாம் நினைத்தபடி காரியம் கொள்ளுகிறோம் அல்லோமே! இவற்றுக்கு நம் பக்கலிலே ருசி பிறக்கைக்கு நாம் பார்த்து வைத்த வழிகளையடையத் தப்பினபின்பு நம்மாற் செய்யலாவதில்லை காணும்; நீர் இத்தை விடும்' என்று ஸமாதா$_4$னம் பண்ண, 'நீ பண்ணின இது பரிஹாரமாய், நான் ஸமாஹிதனாவது இவை தம் கார்யத்துக்குத் தாம் கடவவாய் நோவு படுகின்றன என்று உன்னால் சொல்லலாமன்றோ!' என்ன, 'இவை சேதனராகையாலே இவற்றின் வாசி அறியவேணுமென்று நம்மை ஒரு தட்டும் ஶப்$_3$தா$_3$தி$_3$களை ஒரு தட்டுமாக வைத்து உங்களுக்கு வேண்டிற்றொன்றைக் கொள்ளுங்கோள் என்ன, ஶப்$_3$தா$_3$தி$_3$கள் இருந்த தட்டு தாழ்ந்திருக்கையாலே அத்தட்டை அமையும் என்று பற்றின. நாமும் ஆந்தனையும் பார்த்து முடியாமை காணும் கை வாங்கிற்று. இனி நம்மாற் செய்யலாவதில்லை. இனி நீரும் இத்தை விடும்' என்ன, 'ஆகில் உன்னை யொழியப் புறம்பே பேறும் இழவுமாயிருக்கிற இவர்கள் நடுவில் நின்றும் என்னை முன்னம் வாங்க வேணும்' என்ன, 'முன்பே உம்மை வாங்கினோமே! ஸம்ஸாரி களோடு பொருந்தாதபடி பண்ணினோமாகில், ஸம்ஸாராநுஸந்தா$_4$னத்தாலே வந்த க்லேஶமெல்லாம் போம்படி உம்முடைய இருப்பு இது காணும்! என்று பரமபதத்தில் அயர்வறுமமரர்கள் அடிமை செய்யப் பெரியபிராட்டியாரும் நாமுமாக வ்யாவ்ருத்தமாக இருக்கிற இருப்பைக் காட்டித் தந்து அங்கே உம்முடைய நெஞ்சு ப்ரவணமாம்படி பண்ணினோமாகில் இனி உமக்குப் பேற்றுக்குக் குவாலுண்டோ!

நாம் செய்ய வேண்டுவதென்?' என்ன, இவையிரண்டையும் அநுஸந்தி$_4$த்து த$_4$ரித்துக் க்ருதார்த்த$_2$ராய்த் தலைக்கட்டுகிறார்" என்று பணிக்கும். ஆழ்வான்தான், ஓரிடத்தே வழிபோகாநிற்க, ஒரு ஸர்ப்பம் தவளையைப் பிடித்துக் கூப்பிடா நிற்க, 'இது ஆர் அறியக் கூப்பிடுகிறது' என்று மோஹித்தானாம். இவ்வாழ்வான் ப்ரக்ருதிக்குச் சேருமே இவர் நிர்வாஹமும்.

(திருவாய்மொழி 4-9 ஈடு வியாக்கியான ப்ரவேசம்)

நிகழிடம்

"ஏறாளும் இறையோனும்" என்ற (4-8) திருவாய்மொழியில், எம்பெருமானுக்கு உறுப்பாகாத உடம்பு வேண்டா, உயிர் வேண்டா என்று எல்லாவற்றையும் ஆழ்வார் உதறித் தள்ளப் பார்த்தார். ஆனால் முடிவதற்கும் அவன் கைபார்த்திருக்க வேண்டும் ஆதலால் "எம்பெருமானே! என்னை நீயே முடித்திடாய்" என்கிறார் இத் (4-9) திருவாய்மொழியில். இத்திருவாய்மொழிக்கு எம்பார், கூரத்தாழ்வான் ஆகியோர் அருளிச்செய்த **நிர்வாஹங்கள்** *காட்டப் பெறுகின்றன.*

விளக்கம்

"உன்னைப் பிரிந்து படுகின்ற துன்பத்தைக் காட்டிலும், உன்னை ஒரு போதும் எண்ணாத மகாபாவிகளான இவ்வுலகோர்கள் நடுவே இருப்பது பெருந்துன்பத்தை விளைக்கிறது. உன் பிரிவையாவது ஒருவாறு ஆற்றிக் கொள்ளலாம். ஆனால் உன்னைத் தவிர மற்றவற்றையே விரும்புகின்ற இக்கொடிய உலகோர்களின் நடுவிலிருப்பது ஆற்றமுடியாதது. ஆகையால் இந்நிலவுலகில் இருப்பைத் தவிர்த்தருள வேணும்" என்று ஆழ்வார் வேண்டுவதாக **எம்பார்** *விளக்கமளித்தார். ஆனால்* **கூரத்தாழ்வான்** *வேறு வகையாக நீண்ட விளக்கமொன்று அருளிச் செய்கிறார்.*

'ஏறாளும் இறையோன்' என்ற கீழ்த் திருவாய்மொழியில் எம்பெருமானுக்கு உறுப்பாகாத தம் உடல், உயிர் முதலியவை வேண்டா என்று கூறி தன் ஆற்றாமையை வெளியிட்டார் ஆழ்வார். இதே போல் ஆற்றாமை உடையவர் எவரேனும் நமக்கு துணையாக உளரோ என்று உலகோர்களைப் பார்த்தார். அவர்களோவெனில், (ஆழ்வார் எந்த அளவுக்கு எம்பெருமானிடத்தில் ஈடுபட்டிருக்கிறாரோ அதே அளவு) இவ்வுலக இன்பங்களிலேயே ஈடுபட்டுக்கிடந்தார்கள். வாளேறு காணத் தேளேறு மாய்வது போல (அதாவது, ஒருவன் தேள் கொட்டியதனால் உண்டான வலியுடன் துடித்துக் கொண்டிருக்கையில் எதிரே ஒருவன் வாளால் வெட்டப்பட்டுத் துடித்து நொந்து வந்தால், அந்தப் பெரும் துன்பத்தைக் கண்டவாறே தன் சிறிய துன்பம் மறப்பது போல) ஆழ்வாரும் தம்முடைய துன்பத்தைச் சிறிது மறந்து, இவ்வுலகோர்களின் பெரும் துன்பமே நெஞ்சில் பட்டவராய் எம்பெருமானைப் பார்த்தார். அவனோ

எல்லாமறிந்தவனாய், அளவற்ற ஆற்றலையுடையவனாய், மிகவும் வள்ளன்மையுடையவனாய், எல்லோரையும் காப்பதில் உறுதிபூண்டவனாய் எல்லாக் குற்றங்களையும் பொறுக்குமவனாய், எல்லோரையும் நியமித்து நடத்துபவனாய் இருக்க, இவ்வுலகோர்கள் துன்பப்படுவதற்குக் காரணம் என்ன? ஆளுபவன் இல்லாத (அராஜகமான) நாடோ இவ்வுலகம்? என்று நினைத்த ஆழ்வார், "எம்பெருமானே! நீ எல்லோர்க்கும் தலைவனாய், பேரருட்கடலாய், உற்ற உறவினனாய், இவற்றின் துன்பமறிந்து அவற்றை நீக்குவதற்குரிய ஞானம், சக்தி இவற்றை உடையவனாய் இருக்கின்றபோதும் இவ்வுலகோர்கள் துன்பத்திலே உழல்வது தகுதியோ? இவற்றை நீயே கரை சேர்க்க வேண்டும்" என்று அவன் திருவடிகளைப் பிடித்து வேண்டினார். எம்பெருமானோ "ஆழ்வீர்! நான் என்ன செய்வது? இவர்கள் அறிவுடைய மக்களாகையால் இவர்களுக்கே முதலில் ருசி (ஆசை) உண்டாக வேண்டாமா? நாம் இவர்களுக்குக் கொடுக்கின்ற பேறு, புருஷார்த்தம் என்றன்றோ கூறப்படுகிறது. புருஷன் அர்த்திப்பது (விரும்பி வேண்டுவது) அன்றோ புருஷார்த்தம் எனப்படுகிறது. நான் நினைத்தபடி இவற்றைக் காரியம் கொள்ளுவதற்கு இவை அறிவற்ற ஜடப்பொருள்கள் அல்லவே! இவர்களுக்கு என் மீது விருப்பமுண்டாவதற்காக, படைத்தல், அவதாரங்கள் செய்தல் முதலிய பற்பல காரியங்களை நான் செய்திருந்தும், அவற்றிலெல்லாம் தப்பிச் செல்கின்ற இவர்களைக் குறித்து நான் ஒன்றும் செய்ய முடியாது. நீர் இவர்களை விடும்" என்று சமாதானம் செய்தான்.

இதனைக் கேட்ட ஆழ்வார் "நீ கூறிய இந்த பதிலைக் கேட்டு நான் சமாதானம் அடைய முடியாது. 'இவர்கள் தத்தம் காரியங்களுக்குத் தாங்களே கடவர்கள் ஆதலால் இப்படித் துன்பமடைகிறார்கள் என்று உன்னால் கூற முடியுமோ? (அவர்களை நியமித்து நடத்துபவனும் நீயேயன்றோ!)" என்று கூறினார். எம்பெருமான், "ஆழ்வீர்! இவர்கள் அறிவுடையவர்களாகையாலே இவர்களே எது நல்லது எது தீயது என்று தெரிந்து கொள்ளட்டும் என்று நம்மை ஒரு தட்டிலும் இவ்வுலக இன்பங்களை மற்றொரு தட்டிலும் வைத்து, 'உங்களுக்கு வேண்டியதைக் கொள்ளுங்கள்' என்று கூற, இவ்வுலக இன்பங்கள் தாழ்ந்திருக்கையாலே அந்தத் தட்டே வேண்டும் என்று பற்றினார்கள். நாமும் நம்மால் முடிந்தவரை பார்த்து, முடியாமல்தான் கைவிட்டோம்; இனி என்னால் ஒன்றும் செய்ய முடியாது. இனி நீரும் இதனை விடும்" என்றான்.

"அப்படியாகில், உன்னைத் தவிர மற்ற விஷயங்களே போதுபோக்காக இருக்கின்ற இவர்கள் நடுவினின்றும் என்னை முன்னம் அழைத்துச் செல்ல வேண்டும்" என்று வேண்டினார் ஆழ்வார். "உம்மைத்தான் முன்பே வாங்கினோமே! இவ்வுலகத்தவர்களோடு பொருந்தாதபடி உம்மைச் செய்துவைத்தபோதே, அது செய்யப்பட்டதாகவில்லையோ? இவ்வுலக வாழ்வைச் சிந்தித்ததால் உண்டான துன்பமெல்லாம் தீரும்படி ஒன்று

காட்டுகிறேன் காணும்!" என்று சொல்லி, அயர்வறும் அமரர்கள் அடிமை செய்ய, பிராட்டியும் தானுமாகப் பரமபதத்தில் தானிருக்கும் இருப்பைக் காட்டிக் கொடுத்து, "இவ்விருப்பில் உமது மனம் ஈடுபடும்படி செய்தபிறகு உம்முடைய பேற்றுக்கு இன்னும் செய்ய வேண்டியதுண்டோ?" என்று எம்பெருமான் கேட்க, இவ்வுலகத்தோடு பொருந்தாதபடி செய்தமை, பிராட்டியும் தானுமாக இருக்கின்ற இருப்பைக் காட்டித் தந்தமை ஆகிய இரண்டினையும் நினைத்து தரித்த ஆழ்வார், 'ஒண்டொடியாள் திருமகளும் நீயுமே நிலா நிற்பக் கண்ட சதிர் கண்டொழிந்தேன் அடைந்தேன் உன் திருவடியே' என்று அநுஸந்தித்துக் களிக்கின்றார்" - இது கூரத்தாழ்வான் அளித்த விளக்கமாகும். (இவ்வுலகோர்கள் படும் துன்பத்தைக் கண்டு ஆற்றமாட்டாத கருணையால் ஆழ்வாருக்கு ஏற்பட்ட துன்பத்தை விளக்கும் வகையாக அமைந்துள்ளது ஆழ்வானுடைய இந்த விளக்கம். ஆழ்வான் இப்படி ஒரு விளக்கத்தை அளித்மைக்கும் காரணம் அவருடைய கருணை நிறைந்த உள்ளமேயாகும்.) இதை விளக்கும் வகையில் ஒரு நிகழ்ச்சியொன்றும் எடுத்துக் காட்டப்படுகிறது.

கூரத்தாழ்வான் ஓரிடத்திற்குச் சென்று கொண்டிருந்த போது, ஒரு பாம்பு ஒரு தவளையைப் பிடித்து விழுங்க, அந்தத் தவளை கத்தத் தொடங்கியது. "யார் இந்தத் தவளையின் நிலைமையைத் தெரிந்து கொண்டு விடுவிக்கப் போகிறார்கள் என்று இத்தவளை கத்துகிறது?" என்று அவர் மோகித்து விழுந்து விட்டாராம்! (இப்படி ஒரு தவளையின் துன்பத்தையே கண்டு மயங்கி விழுந்த) ஆழ்வானுடைய தன்மைக்கு, அவர் அளித்த விளக்கமும் மிகவும் பொருத்தமானது அன்றோ!

[580]

(ஏமாறிக் கிடங்தலற்றும்) "ஏவென்று தெளிவு; ஏமாறுகை தெளிவழிகை" என்று பிள்ளையமுதனார் பணிப்பர்.

(திருவாய்மொழி 4-9-2 ஈடு வியாக்கியானம்)

நிகழ்டம்

"சாமாறும் கெடுமாறும் தமருற்றார் தலைத்தலைப் பெய்து ஏமாறிக் கிடந்தலற்றும் இவையென்ன உலகியற்கை" (மரணமடைவதும், துன்பங்களை அடைவதும், இது காரணமாக உற்றாரும் உறவினரும் ஒருவர் மேல் ஒருவர் விழுந்து ஏமாறிக் கிடந்து கதறும்படியான இவ்வுலக இயற்கைதான் என்னே!) என்கிறார் ஆழ்வார். இங்கு 'ஏமாறிக் கிடந்து' என்பதற்கு ஏ- என்று ஏக்கம்; மாறுகை தவிர்கை; 'ஏக்கம் தவிர்ந்து கதறி' என்று ஒரு பொருளும், 'ஏமாற்றம் என்பது துக்கம், எனவே துன்பத்துடன் கதறி' என்று மற்றொரு பொருளும் கூறிய உரையாசிரியர், பிள்ளை அமுதனார் அருளிய **நிர்வாஹ**த்தையும் கூறுகிறார்.

1. எண் 180லும் இந்நிகழ்ச்சி கூறப்பெறுகிறது.

விளக்கம்

ஏ என்பது தெளிவு, மாறுகை என்பது அழிகை. அதாவது தெளிவு அழிந்து கதறுகை என்று **பிள்ளை அமுதனார்** *பணிப்பர். அதாவது பிறந்தவன் இறந்தே தீருவான் என்பது தெளிந்த அறிவு; அது கலங்கிக் கதறுகிறார்கள் என்றோ அல்லது உடல் அழியுமே தவிர ஆத்மா அழியாது என்ற தெளிந்த அறிவு கலங்கிக் கதறுகிறார்கள் என்றோ பொருள் கொள்ளவேண்டும் என்பது கருத்தாகும்.*

[581]

(அடியேனைப் பண்டே போல் கருதாது) சிற்றாட்கொண்டார் "இவர்க்காகில் இது சேர்க்கைப் பல்லிபோலே பணியன்றோ என்றிருக்க வொண்ணாது" என்றாராம்.

(திருவாய்மொழி 4-9-3 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

'அடியேனைப் பண்டேபோல் கருதாது உன் அடிக்கே கூய்ப்பணிகொள்" (அடியேனை இத்தனை நாளும் போல் நினைத்திராமல் உன் திருவடிகளில் அழைத்து அடிமை கொள்ள வேணும்) என்கிறார் ஆழ்வார். இங்கு சிற்றாட் கொண்டான் என்பவர் அருளிச்செய்த **வார்த்தை** *எடுத்துக் காட்டப்பெறுகிறது.*

விளக்கம்

'இத்தனை நாளும் போல் நினைத்திராமல்' என்பதற்கு சிற்றாட் கொண்டான் சுவையாக ஒரு உதாரணம் கூறினார். 'சேர்க்கைப்பல்லி (நிலைப்பல்லி) எப்போதும் ஒரே இடத்திலிருந்து கொண்டு ஏதாவது ஓசையெழுப்பிக் கொண்டே இருக்கும். அதேபோல் இவரும் (ஆழ்வாரும்) ஏதோ (எம்பெருமானை அடையவேண்டும் என்று எப்போதும்) கூறிக்கொண்டே இருப்பர்; இவருக்கு இதுவே காரியம்' என்று இருந்து விடக் கூடாது; உன் திருவடிகளில் கைங்கர்யத்தைத் தந்தருளியே ஆகவேண்டும் என்கிறார் ஆழ்வார் - என்பது சிற்றாட் கொண்டான் கூறிய கருத்து.[1]

[582]

பிள்ளை திருநறையூரரையர், "ஒரு குருவி பிணைத்த பிணை ஒருவரால் அவிழ்க்க வொண்கிறதில்லை. ஒரு ஸர்வஶக்தி கர்மாநுகூலமாகப் பிணைத்த பிணையை அவனைக் காற்கட்டாதே இவ்வெலியெலும்பனான ஸம்ஸாரியால் அவிழ்த்துக் கொள்ளப் போமோ?" என்று பணிப்பர்.

(திருவாய்மொழி 4-9-8 ஈடு வியாக்கியானம்)

1. இருபத்துநாலாயிரப்படியிலும் இவ்வாறு அருளிச்செய்தமை குறிப்பிடப்பெறுகிறது.

நிகழிடம்

"கூட்டரிய திருவடிக்கள் எஞ்ஞான்று கூட்டுதியே" (அடைவதற்கரிய உன் திருவடிகளை என்றைக்கு நான் அடையும்படி செய்யப்போகிறாய்?) என்று எம்பெருமானை ஆழ்வார் கேட்கிறார். தன்முயற்சியால் இவ்வுலக வாழ்க்கையைத் தவிர்த்துக் கொண்டு எம்பெருமானை அடையமுடியாது, எம்பெருமானையே உபாயமாகப் பற்றியே அவனை அடையவேண்டும் என்பதற்குப் பிள்ளை திருநறையூர் அரையர் அருளிச்செய்த **வார்த்தை** *இங்கு கூறப்பெறுகிறது.*

விளக்கம்

எண் 162ன் விளக்கம் பார்க்க.

[583]

(திருவடிமேல்) இவ்விஶேஷணங்களை ஆயிரத்திலும் இட்டு நிர்வஹிப்பர்கள் பூர்வாசார்யர்கள். ப$_4$ட்டர் அவ்வோ திருவாய்மொழியிலே இட்டு நிர்வஹிப்பர்.

(திருவாய்மொழி 4-9-11 இருபத்து நாலாயிரம் வியாக்கியானம்)

நிகழிடம்

"திருவடி மேல் உரைத்த தமிழ் ஆயிரத்துள் இப்பத்தும்" என்றருளிச் செய்கிறார் ஆழ்வார். இதுகுறித்து **நிர்வாஹங்கள்** *காட்டப்பெறுகின்றன.*

விளக்கம்

இங்கு 'திருவடிமேல் உரைத்த' என்ற அடைமொழியை (ஒவ்வொரு திருவாய்மொழியின் முடிவில் உள்ள பாசுரங்களிலும் இது போன்று உள்ள அடைமொழிகளை) திருவாய்மொழி ஆயிரம் பாசுரங்களுக்கும் அடைமொழியாக்கி, **பூர்வாசாரியர்கள்** *உரைப்பர். அதாவது 'திருவடிமேல் உரைத்த ஆயிரம் - அதனுள் இப்பத்து' என்று அருளிச்செய்வர்.*

ஆனால், **பட்டர்** *ஒவ்வொரு பதிகத்தின் கடைசிப் பாசுரங்களில் உள்ள அடைமொழிகளை அந்தந்த திருவாய்மொழிக்கு மட்டும் உள்ள அடைமொழியாக்கி உரைப்பர். அதாவது 'ஆயிரத்தில் - திருவடி மேலுரைத்த இப்பத்தும்' என்று பட்டர் அருளிச்செய்வர்.*[1]

[584]

எம்பார், "ஸகல வேத$_3$ ஶாஸ்த்ரங்களையும் அதி$_4$கரித்து வைத்து, பரதத்வம் இன்னது என்று அறுதியிட மாட்டாதே 'சேம்புக்குக் கூராச் சிற்றறிவாள் உண்டோ?

1. ஈடு முப்பத்தாறாயிரப்படியில் இவை கூறப்படவில்லை. மேலும் பூர்வாசார்யர்கள் உரைத்த முறையிலேயே உரை அருளிச்செய்யப்பட்டுள்ளது. பட்டருடைய விளக்கம் கூறப்படவில்லை.

நமக்கு உபாஸ்யர் அல்லாதாருண்டோ?' என்று கண்டவிடமெங்கும் புக்குத் தலைசாய்த்துத் தடுமாறித் திரியா நிற்க, எம்பெருமானார் தர்ஶனஸ்தரில் எத்தனையேனும் கல்வியறிவில்லாத ஸ்த்ரீப்ராயரும் தேவதாந்தரங்களை அடுப்பிடு கல்லோபாதியாக நினைத்திருக்கிறது இவ் 'ஒன்றும் தேவும்' இப்பக்ஷத்திலே உண்டாகையிறே" என்று அருளிச் செய்வர்.

(திருவாய்மொழி 4-10 ஈடு வியாக்கியான ப்ரவேசம்)

நிகழிடம்

'ஒன்றும் தேவும்' என்று தொடங்கும் திருவாய்மொழியில் நம்மாழ்வார் ஸ்ரீமந் நாராயணனே முழுமுதற் கடவுள் என்பதை நன்கு வலியுறுத்தி அருளிச்செய்கிறார். இத்திருவாய்மொழியின் சிறப்பு பற்றி எம்பார் அருளிச்செய்த ***வார்த்தை*** *எடுத்துக்காட்டப்பெறுகிறது.*

விளக்கம்

"சிலர் எல்லா வேதங்களையும் சாத்திரங்களையும் கற்றிருந்தும், பரதத்வம் இன்னது (முழு முதற் கடவுள் எவன்) என்று அறிந்து கொள்வதில்லை. 'சேப்பங்கிழங்குச் செடியை அறுக்காத கத்தியும் உண்டோ? நாம் வேண்டுகின்ற அற்ப பயன்களைத் தரமுடியாத தெய்வங்களும் உண்டோ? எனவே எல்லா தேவதைகளுமே வணங்கத்தக்கவர்கள்தான்' என்று கருதி, கண்டவிடத்திலும் புகுந்து தடுமாறி நிற்கிறார்கள். ஆனால் எம்பெருமானார் தரிசனத்தைச் சேர்ந்தவர்களில் சிறிதும் கல்வியறிவில்லாத பெண்களும்கூட[1] பிற தெய்வங்களை அடுப்பிற்கு வைக்கும் கல்லைப் போல[2] நினைத்திருப்பார்கள். இதற்குக் காரணம் 'ஒன்றும் தேவும்' என்ற திருவாய்மொழி இங்கே (எம்பெருமானார் தரிசனத்தில்) ஏற்பட்டிருப்பதுதான்" என்று எம்பார் அருளிச் செய்வர்.

[585]

(அவன் மேவியுறை கோயில்) "பரமபதத்திலும் ஸம்ஸாரிகள் படும் க்லேஶத்தை அநுஸந்தித்துத் திருவுள்ளத்தில் வெதுப்போடேயாயிற்று எழுந்தருளியிருப்பது" என்று பட்டர் அருளிச் செய்ய, "ஆச்சானும் பிள்ளையாழ்வானும் இத்தைக் கேட்டு, 'பரமபதத்திலே ஆனந்த நிர்ப்பரனாய் இருக்கிற இருப்பிலே திருவுள்ளத்தில் ஒரு வ்யஸநத்தோடே இருந்தான் என்கை உசிதமோ?' என்கிறார்கள்" என்று பண்டிதர் என்கிறவர் வந்து விண்ணப்பம்

1. த்ரிபுராதேவியார் போன்றவர்களை உதாரணமாகக் கூறலாம். (எண் 189 பார்க்க.)

2. கிராமங்களில் சிறு கற்களை நட்டு வைத்து அவற்றை தெய்வங்களாகக் கருதி வழிபடுவதுண்டு. ஆனால் வழிப்போக்கர்கள் சமையல் செய்து கொள்வதற்கு அடுப்பாக வைத்த கல்லைப் போல அவற்றைக் கருதி அலட்சியம் செய்வர் என்பது கருத்து.

செய்ய, "व्यसनेषु मनुष्याणां भृशं भवति दुःखित: (வ்யஸநேஷு மநுஷ்யாணாம் ப்$_4$ருஶம் ப$_4$வதி து$_3$:க்கி$_2$த:) என்றது கு$_3$ணப்ரகரணத்திலேயோ? தோ$_3$ஷப்ரகரணத்திலேயோ! என்று கேட்க மாட்டிற்றிலீரோ! இது கு$_3$ணமாகில் கு$_3$ணம் என்று பேர் பெற்றவற்றில் அங்கில்லாததுண்டோ?" என்றருளிச் செய்தார்.

(திருவாய்மொழி 4-10-2 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

"அவன் மேவி உறைகோயில் திருக்குருகூர்" (எம்பெருமான் மிகவும் மகிழ்ச்சியுடன் விரும்பி எழுந்தருளியிருக்குமிடம் திருக்குருகூர்) என்று ஆழ்வார் அருளிச்செய்துள்ளார். பரமபதத்தில் எழுந்தருளியிருக்கும்போதும், நிலவுலகில் சேதனர்கள் படும் துன்பங்களை நினைத்து மிகவும் வருத்தத்துடனே எழுந்தருளியிருப்பான் என்றுரைத்த உரையாசிரியர், இத்தொடர்பில் ஒரு **ஸம்வாதம்** *காட்டுகிறார்.*

விளக்கம்

எண் 63ன் விளக்கம் பார்க்க.

[586]

(ஓர் அவம் பறைதல்) மஹாப$_3$லி ஸ்ரீப்ரஹ்லாத$_3$ாழ்வான் பக்கலிலே வந்து "ராஜ்யமடைய ஒளிமழுங்கி வாராநின்றது; என் ப$_2$லமும் குறைந்து வாரா நின்றது; இதுக்கடியென்?" என்ன, "நீ ஸர்வேஶ்வரன் பக்கலிலே பண்ணின அபராத$_4$த்தாலே காண்!" என்ன, "कोऽयं विष्णु:" (கோயம் விஷ்ணு:) என்றாற் போலே சில அநாத$_3$ரோக்திகளைப் பண்ண, "என் தலையை அறுத்து என் கையிலே தந்தாயாகில் 'என் பேரன் பண்ணின உபகாரம்' என்று இருக்கலாயிற்று. என்முன்பே ப$_4$க$_3$வந்நிந்தை$_3$யைப் பண்ணினாய், நீ ராஜ்ப்$_4$ரஷ்டனாவாய்" என்று ஶபித்து விட்டான். இத்தை இப்படியே ப$_4$ட்டர் அருளிச் செய்தவாறே, "ப்ரக்ருதி புருஷவிவேகம் பண்ணியிருக்கிற இவன், ஆத்மாவுக்கு ஸங்கோசம் வருவதொன்றை ஶபியாதே राज्यभ्रष्टस्तथा पत (ராஜ்யப்$_4$ரஷ்டஸ் தத$_2$ா பத) என்பான் என்?" என்று கேட்க, "நாயைத் த$_3$ண்டி$_3$க்கையாகிறது அமேத்$_4$யத்தை விலக்குகையன்றோ! சாங்கை விலக்குகை அதுக்கு அபி$_4$மதமன்றே! இவனுக்கு அநிஷ்ட$_2$ம் செய்கையாவது இதிறே!" என்றருளிச் செய்தார்.

(திருவாய்மொழி 4-10-4 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

"ஈசன்பால் ஓர் அவம் பறைதல் என்னாவது இலிங்கியர்க்கே" (எம்பெருமானைப் பற்றிக் குறைகூறுவதால் இலிங்கியர்க்கு என்ன பயன்?)

என்றருளிச்செய்கிறார் ஆழ்வார். இலிங்கியர் (சைவர்கள்) எம்பெருமானுக்குச் சொல்லும் குறைகளைத் தம்வாயால் கூறுவதற்கும் விருப்பப்படாத ஆழ்வார், 'அவம் பறைதல்' என்றருளிச்செய்கிறார் என்றுரைத்த உரையாசிரியர், இத் தொடர்பில் மஹாபலி எம்பெருமானை நிந்தித்தபோது பிரஹ்லாதன் கூறிய வார்த்தைகளையும், அதுகுறித்து எழுந்த **ஸம்வாதம்** *ஒன்றையும் காட்டுகிறார்.*

விளக்கம்

எண் 170ன் விளக்கம் பார்க்க.

[587]

(அடிமை புகுவதுவே) யயாதி சரிதத்தை ப$_4$ட்டர் வாசித்துப் போந்திருக்கச் செய்தே, பிள்ளை விழுப்பரையரும் ஆப்பான் திருவழுந்தூர் அரையரும் கூட, "வேதோ$_3$பப்$_3$ரும்ஹணார்த்த$_2$மாகப் ப்ரவ்ருத்தமான ப்ரப$_3$ந்த$_4$ங்களில் இது எவ்வர்த்த$_2$த்தை விஶதீ$_3$கரிக்கிறது?" என்று கேட்க, "க்ஷுத்$_3$ர தே$_3$வதைகள் தந்தாமை ஆஶ்ரயித்துப் பெற்றாலும், பிறர்பக்கலிலே ஓர் உத்கர்ஷம் கண்டால் அது பொறுக்கமாட்டார்களென்றும், ஸர்வேஶ்வரனே 'பிறர் வாழ்வு நம் வாழ்வு' என்று நினைத்திருப்பானென்றும் சொல்லி ஆனபின்பு, இதர தே$_3$வதைகள் ஆஶ்ரயணீயரன்று; இவன் ஒருவனுமே ஆஶ்ரயணீயன் என்னும் அர்த்த$_2$த்தைச் சொல்லுகிறது" என்றருளிச் செய்தார்.

(திருவாய்மொழி 4-10-7 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

எம்பெருமானுக்கு அடிமை புகுவதே செய்யத்தக்கது; எம்பெருமானைத் தவிர மற்றைத் தேவர்களை அடைவதனால் அழிவதைத் தவிர வேறு பயனெதுவும் இல்லை என்று இப்பாசுரத்தில் ஆழ்வார் அருளிச் செய்கிறார். இத் தொடர்பில் யயாதி சரித்திரம் காட்டப்பெற்று, அதுகுறித்த **ஸம்வாதம்** *ஒன்றும் காட்டப்பெறுகிறது.*

விளக்கம்

எண் 172ன் விளக்கம் பார்க்க.

[588]

(அடிமை புகுவதுவே) 'யாத$_3$வர்கள் முடிவிலே வந்தவாறே வாட்கோரையை யிட்டு ஒருவரையொருவர் எறிந்து முடிந்து போனார்கள்' என்று கேட்டவாறே, "க்ருஷ்ணன் இவர்கள் விஷயமாக ஶங்க$_2$நிதி$_4$ பத்மநிதி$_4$ தொடக்கமானவற்றைக் கொடுவந்து கொடுத்துச் செய்யாதனவில்லை.

பின்னையும் முடிவிலே வந்தவாறே இப்படியேயாயிருந்தது. நம்முடைய ப$_4$க$_3$வத் ஸமாஶ்ரயணத்துக்கும் ப$_2$லம் அங்ஙனேயாகிறதோ? என்று அஞ்சியிருந்தோம்" என்ன, "அங்ஙனாகாது, அஞ்சவேண்டா; அவர்கள் 'இவன் என் தோழன், மைத்துனன்' என்று தே$_3$ஹஸம்ப$_3$ந்த$_4$த்தைக் கொண்டு விரும்புகையாலே அவர்களுக்கு தே$_3$ஹாவதி$_4$யாய் விட்டது. நாம் ஸ்வரூப ஜ்ஞானத்தாலே நித்யனான ஆத்மாவுக்கு வகுத்த பேறு பெற வேணும் என்று பற்றுகையாலே, பேறும் யாவதா$_3$த்மபா$_4$வியாயிருக்கும்" என்றருளிச் செய்தார்.

(திருவாய்மொழி 4-10-7 ஈடு வியாக்கியானம்)

நிகழ்டம்

எம்பெருமானுக்கு அடிமை புகுவதே செய்யத்தக்கது; எம்பெருமானைத் தவிர மற்றைத் தேவர்களை அடைவதனால் அழிவதைத் தவிர வேறு பயனெதுவும் இல்லை என்று இப்பாசுரத்தில் ஆழ்வார் அருளிச் செய்கிறார். இத்தொடர்பில் ஒரு **ஸம்வாதம்** *காட்டப்பெறுகிறது.*

விளக்கம்

"கண்ணபிரானுடைய உற்றாரும் உறவினருமான யாதவர்கள் எல்லோரும் ஒருவரை ஒருவர் வாட் கோரையால் அடித்துக் கொண்டு அனைவருமே மாண்டு போனார்கள் என்று புராணம் கூறுகிறது.[1] கண்ணன் இவர்களுக்குச் செய்யாத உதவியில்லை. சங்கநிதி, பத்மநிதி முதலிய செல்வங்களையெல்லாம் கொண்டு வந்து கொடுத்து, அவர்கள் இருந்த இடத்தையே சொர்க்க பூமியாக்கினான். ஆயினும் அவர்கள் முடிவிலே இப்படி அழிந்தார்கள். கண்ணனுடைய உறவினர்களே இப்படியழிந்தார்கள் என்றால், அவனை வணங்குகின்ற நமக்கு என்ன ஆகப் போகிறதோ என்று அச்சமாக இருக்கிறது" என்று கூற, "அப்படி ஆகாது, அச்சப்பட வேண்டாம். யாதவர்கள் கண்ணனை 'இவன் என் தோழன், என் உறவினன், என் மைத்துனன்" என்று உடல் தொடர்பைக் கொண்டு பற்றினார்களே தவிர, அவனை பகவான் என்று அறியவில்லை. (அவனும் அவர்கள் உடல் வாழ்வுக்குத் தேவையானவைகளையே கொடுத்தான்.) உடல் தொடர்பு காரணமாகப் பற்றியதால் அவர்கள் வாழ்வும் அவர்கள் உடலோடு முடிந்து விட்டது. ஆனால் நாம் அப்படியல்லாமல் உண்மை அறிவுடன் நம் ஆத்மாவுக்கு வகுத்த பேறு பெற வேண்டும் என்று அவனைப் பற்றியுள்ளபடியால் நாம் பெறும் பேறும் ஆத்மா உள்ளவரையில் (அதாவது ஆத்மா அழியாததாகையால் பேறும் நித்யமாகவே) இருக்கும்" என்று **(நம்பிள்ளை?)** *அருளிச் செய்தார்.*

1. இவ்வரலாறுகளை ஸ்ரீவிஷ்ணுபுராணம் 5ம் அம்சம் 37ம் அத்யாயத்திலும், ஸ்ரீபாகவதபுராணம் பதினோராம் ஸ்கந்தம் 30ம் அத்யாயத்திலும் காணலாம்.

[589]

(காப்பாரார்) …….. मित्रभावेन (மித்ரப$_4$ாவேந) என்கிற ஶ்லோகத்திலே எம்பார், "ஸர்வஜ்ஞனுக்கு ஓர் அஜ்ஞானமும், விஸ்ம்ருதியும், ஸர்வஶக்திக்கு ஓர் அஶக்தியுமுண்டு" என்றருளிச் செய்வர். ஒருவன், தன்னை ஆஶ்ரயித்தால், முன்பு பு$_3$த்$_3$தி$_4$பூர்வம் பண்ணின குற்றத்திலே விஸ்ம்ருதி பண்ணி, ஜ்ஞானம் பிறந்தால் ப்ராமாதி$_4$கமாய் வருமவற்றில் அஜ்ஞாநம்; அவனை விடவேண்டி வருமளவிலே அஶக்தி.

(திருவாய்மொழி 5-1-1 ஈடு வியாக்கியானம்)

நிகழ்டம்

கையார் சக்கரத்து என் கருமாணிக்கமே என்றென்று
பொய்யே கைம்மை சொல்லிப் புறமே புறமேயாடி
மெய்யே பெற்றொழிந்தேன் விதிவாய்க் கின்று காப்பாரார்

என்பது ஆழ்வார் அருளிச் செயல். 'கையில் திருவாழியை உடையவனும் கருமாணிக்கம் போன்றவனுமான பெருமானே என்று பலமுறை பொய்யாகவே வாயால் சொன்னேன். ஆயினும் மெய்யன்பர் பெறும் பேற்றையே பெற்றுவிட்டேன். எம்பெருமானுடைய அருள் வெள்ளத்தைத் தடுக்க வல்லார் யார்?' என்பது இதன் கருத்து. இங்கு எம்பெருமானுடைய அருள் வெள்ளம் கரைபுரண்டு பெருகினால், அதை எம்பெருமானாலும் கூடத் தடுக்க முடியாது என்று விளக்கிய உரையாசிரியர், ஸ்ரீராமாயணச்லோகம் ஒன்றுக்கு எம்பார் அருளிச்செய்த **வார்த்தை***யை எடுத்துக் காட்டுகிறார்.*

விளக்கம்

விபீஷணன் ராமபிரானிடத்தில் சரணம் புக வந்து நின்றபோது அவனை ஏற்றுக் கொள்ளக் கூடாது என்று சுக்ரீவன் முதலானோர் கூறுகின்றனர். அப்போது ராமபிரான்,

மித்ரபாவேந ஸம்ப்ராப்தம் நத்யஜேயம் கதஞ்சந
தோஷோ யத்யபி தஸ்ய ஸ்யாத் ஸதாமேததகர்ஹிதம்

(நண்பன் என்ற பாவனையோடு ஒருவன் வந்தாலும், அவன் தோஷங்கள் (குற்றங்கள்) உடையவனாக இருந்தாலும் அவனை நான் கைவிட மாட்டேன்) என்கிறான். இந்த ச்லோகத்திற்குக் கருத்துரைத்த **எம்பார்** *"எல்லாம் அறிந்தவனான எம்பெருமானுக்கும் ஒரு அறியாமையும் மறப்பும் உண்டு. எல்லாம் வல்லவனுக்கும் செய்ய முடியாததும் ஒன்று உண்டு" என்பராம். அதாவது ஒருவன் எம்பெருமாளைச் சரணமடைந்து விட்டால், அப்படிச் சரணமடைவதற்கு முன் அவன் தன் மனமறிந்து செய்த குற்றங்களை எம்பெருமான் மறந்து விடுகிறான். சரணமடைந்த பின்பு அவன் தன்னை*

அறியாமல் செய்யும் குற்றங்களை அறியாதவனாக (கண்டு கொள்ளாதவனாக) எம்பெருமான் இருந்து விடுகிறான். இதுவே அவனுடைய மறப்பும் அறியாமையும். எல்லாம் வல்லவனாக இருந்தும், தன்னைச் சரணமடைந்த ஒருவனைக் கைவிடுவது என்பதை மட்டும் எம்பெருமான் செய்ய முடியாதவனாகி விடுகிறான். இதுவே இங்கு எம்பார் கூறியதன் கருத்து ஆகும்.[1]

[590]

"........இந்த ப்ரக்ருதி ஸம்ப$_3$ந்த$_4$த்தாலே இதர விஷயங்களிலே ப்ரவணமான மனஸ்ஸை அவற்றில் நின்றும் மீட்டு உன்பக்கலிலே ப்ரவணமாம்படி பண்ணி, தே$_3$ஹத்திற் காட்டில் ஆத்மாவைப் பிரிய அநுஸந்தி$_4$க்கைக்கு க்ஷமனாகிறிலேன்; நீயே என் விரோதி$_4$யைப் போக்கி உன் திருவடிகளிலே அழைத்துக் கொண்டருள வேணுமென்கிறார்" என்று ப$_4$ட்டர் அருளிச் செய்யும்படி.

(திருவாய்மொழி 5-1-4 ஈடு வியாக்கியானம்)

நிகழ்ச்சி

"என்கண் மலினமறுத்து என்னைக் கூவி அருளாய் கண்ணனே" என்று ஆழ்வார் அருளிச்செய்துள்ளார். இதற்கு பட்டர் அருளிச்செய்த **நிர்வாஹம்** காட்டப்பெறுகிறது.

விளக்கம்

'பொய்யே கைம்மை சொல்லி' என்று கீழே (5-1-1) பகவத் விஷயத்திலும் தாம் பொய்யே சொல்லி வந்ததாக ஆழ்வார் அருளிச் செய்துள்ளார். இப்படித் தாம் பொய்யனாக ஆனதற்குக் காரணம் என்ன என்று ஆராய்ந்தார். ப்ரக்ருதியோடு (உடம்போடு) தொடர்பு உள்ளது காரணமாகவே தாம் அப்படி இருப்பதாக உணர்ந்தார். எனவே தான் இப்பாசுரத்தில் 'என் கண் மலினம் அறுத்து என்னைக் கூவியருளாய் கண்ணனே' என்கிறார் ஆழ்வார். (மலினம் என்பது அழுக்கைக் குறிக்கும்.) 'என்னுடைய அழுக்குடம்பைப் போக்கிக் கொள்வதற்கு நான் வல்லமை உடையேன் அல்லேன். மற்ற விஷயங்களிலே ஈடுபடுகின்ற என் மனத்தை அவற்றினின்றும் மீட்டு உன்னிடத்தில் ஈடுபடும்படி நீயே செய்ய வேண்டும். நீயே என் விரோதியான இந்த உடலைப் போக்கி உன் திருவடிகளில் சேர்த்துக் கொள்ள வேண்டும்' என்று ஆழ்வார் இப்பாசுரத்தில் எம்பெருமானை வேண்டுகிறார் - என்பது **பட்டர்** அருளிச் செய்த விளக்கமாகும்.

1. இத்திருவாய்மொழியின் இருபத்து நாலாயிரப்படி வியாக்கியான ப்ரவேசத்திலும் எம்பார் இவ்வாறு அருளிச்செய்தமை கூறப்பெறுகிறது. பெரியவாச்சான்பிள்ளை அருளிச்செய்துள்ள தனிச்லோக வியாக்கியானத்திலும் எம்பார் இவ்வாறு அருளிச்செய்தமை குறிப்பிடப்படுகிறது.

[591]

பிள்ளையமுதனார், 'அம்மானாழிப்பிரான்' என்று மேலே காட்டி, 'யானார்' என்று குறையச் சொல்லிக் காட்டுவர்.

(திருவாய்மொழி 5-1-7 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

தம்முடைய சிறுமையையும் எம்பெருமானுடைய ஒப்புயர்வற்ற மேன்மையையும் நோக்கும்போது அவனுக்கும் தமக்கும் ஒருவிதத்திலும் சேர்த்தி இல்லாமையைக் கூறுகின்ற ஆழ்வார் "அம்மான் ஆழிப்பிரான் அவன் எவ்விடத்தான் யானார்" என்று அருளிச் செய்கிறார். இதுபற்றி ஓர் **ஐதிஹ்யம்** *கூறப்பெறுகிறது.*

விளக்கம்

இப்பாசுரத்தைச் சொல்லும்போது **பிள்ளையமுதனார்** *ஆழ்வாருடைய திருவுள்ளக் கருத்துத் தோன்ற 'அம்மானாழிப்பிரான்' என்று, (எம்பெருமான் மிக மிக உயர்ந்தவன் என்பதைத் தெரிவிக்கும் வகையில்) மேலே காட்டி, 'யானார்' என்று (தாம் மிக மிகத் தாழ்ந்தவர் என்பதைத் தெரிவிக்கும் வகையில்) மிகவும் குரலைத் தாழ்த்திக் கூறுவராம்.*

[592]

ஆளவந்தார் அருளிச் செய்தாராகத் திருமாலையாண்டான் பணிக்கும்படி - "'திருச்சக்கரம் சங்கினொடும் அடியேனொடும் ஆனான்' என்று, கையில் ஆழ்வார்களோடு பொருந்தினாற்போலே என்னோடே வந்து கலந்தான் என்கிறார்" என்று. அத்தை எம்பெருமானார் கேட்டருளி, "இங்ஙனேயாக அடுக்கும். 'சூராராழி வெண்சங்கேந்தி வாராய்' என்றாயிற்று இவர் ஆசைப்பட்டிருப்பது; ஆசைப்பட்ட படியே திவ்யாயுதங்களோடே வந்து கலந்தான் என்கிறார்" என்று அருளிச் செய்தருளும்படி.

(திருவாய்மொழி 5-1-9 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

தேவார் கோலத்தொடும் திருச்சக்கரம் சங்கினொடும்
ஆவாவென்று அருள் செய்து அடியேனொடும் ஆனானே

என்றருளிச் செய்கிறார் நம்மாழ்வார். இதுகுறித்த **நிர்வாஹங்கள்** *காட்டப் பெறுகின்றன.*

விளக்கம்

திருவாய்மொழியின் பொருளை எம்பெருமானாருக்கு அருளிச்செய்து கொண்டிருந்த **திருமாலையாண்டான்** *"'திருச்சக்கரம் சங்கு இவற்றோடு எம்பெருமான் பொருந்தியிருப்பது போலவே தம்மோடும் பொருந்தினான் என்கிறார் ஆழ்வார்' என்று இங்கு* **ஆளவந்தார்** *பொருள் கூறுவர்" என்று கூறினார். இதைக் கேட்ட* **எம்பெருமானார்** *"இங்கு இப்படிப் பொருள் கொள்வது சிறந்தது. 'கூராராழி வெண்செங்கேந்திக் கொடியேன்பால் வாராய்' (6-9-1) என்று ஆழ்வார் பிரார்த்தித்தபடியே திருவாழி, திருச்சங்கு முதலிய திவ்யாயுதங்களை ஏந்தியவனாக வந்து கலந்தான் என்கிறார் ஆழ்வார்" என்று அருளிச்செய்தார்.*[1]

[593]

இத்திருவாய்மொழியை ஆளவந்தார் அருளிச் செய்தாராகத் திருமாலையாண்டான் பணிக்கும்படி - "ஆழ்வாருடைய ஸ்ரீவைஷ்ணவஸ்ரீயைக் காண்கைக்காக நித்யஸூரிகள் இங்கே வர, அவர்களைக் கண்டு மங்க$_3$ளாஶாஸநம் பண்ணுகிறார்" என்று. "நண்ணாதார் முறுவலிப்பவிலே - ஸம்ஸாரிகள் படுகிற க்லேஶத்தை அநுஸந்தி$_4$த்து, அதுக்குப் பரிஹாரமாக ஒன்றுந்தேவிலே ப$_4$க$_3$வத் பரத்வத்தை உபபாதி$_3$த்துத் திருத்த அத்தாலே திருந்தி, ஸம்ஸார பரமபத$_3$ விப$_4$าக$_3$ம் அற்று அங்குள்ளாரும் இங்கே வரலாம்படியிருக்கிற இருக்கிற இருப்பைக் கண்டு மங்க$_3$ளாஶாஸநம் பண்ணுகிறார்" என்று, இங்குள்ளார் பக்கலிலே ப்ராத$_4$ாந்யம் தோற்ற எம்பெருமானார் அருளிச் செய்யும்படி.

(திருவாய்மொழி 5-2 ஈடு வியாக்கியான ப்ரவேசம்)

நிகழிடம்

"பொலிக பொலிக" என்று தொடங்குகின்ற (4-10) இத்திருவாய்மொழியில் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு நம்மாழ்வார் மங்களாசாஸனம் செய்கிறார். இதற்கு இரண்டு விதமான **நிர்வாஹங்கள்** *கூறப்படுகின்றன.*

விளக்கம்

"நம்மாழ்வார் கீழே 'ஒன்றும் தேவும்' என்ற திருவாய்மொழியில் எம்பெருமான் ஸ்ரீமந் நாராயணனே பரம்பொருள் என்று உபதேசித்தார். அதைக் கேட்டுத் திருந்திய ஸ்ரீவைஷ்ணவர்களுடைய திரளைக் காண்பதற்காக, பரமபதத்திலிருந்து நித்ய ஸூரிகள் இவ்வுலகத்திற்கு எழுந்தருளினார்கள். அந்த நித்யஸூரிகளுடைய திரளுக்கு ஆழ்வார் 'பொலிக பொலிக' என்று இப் பதிகத்தில் மங்களாசாஸனம் செய்கிறார் என்று **ஆளவந்தார்** *அருளிச் செய்தார்" என்று* **திருமாலையாண்டான்** *(எம்பெருமானாருக்கு) அருளிச் செய்தார்.*

1. இவ்வாறு இருவரும் அருளிச்செய்தமை இருபத்துநாலாயிரப்படியிலும் குறிப்பிடப்பெறுகின்றது.

இதைக் கேட்ட எம்பெருமானார், வேறு வகையான கருத்தொன்றை அருளிச் செய்தார். "ஆழ்வார் கீழே 'நண்ணாதார் முறுவலிப்ப' என்கிற (4-9) திருவாய்மொழியில், இவ்வுலகிலுள்ள ஸம்ஸாரிகள் படுகின்ற துன்பங்களை நினைத்தார். அதற்குக் காரணம் மற்ற தேவதைகள் பக்கல் இவர்களுக்குள்ள ஈடுபாடும், ஸ்ரீமந்நாராயணனே முழுமுதற்கடவுள் என்பதை அறியாமையுமே என்று எண்ணி, இவர்களைத் திருத்திப் பணி கொள்ள வேண்டும் என்கிற கருத்தினால் 'ஒன்றும் தேவும்' என்கிற (4-10) திருவாய்மொழியில் 'ஸ்ரீமந்நாராயணனே பரம் பொருள்; அவனைச் சரணம் அடையுங்கள்' என்று உபதேசித்தார். அவருடைய உபதேசத்தைக் கேட்டு உலகமடையத் திருந்தியது. அதனால் இவ்வுலகம் - பரமபதம் என்கிற வேற்றுமை நீங்கி, பரமபதத்தில் உள்ளவர்களும் இங்கே வரும்படியாக ஆகிவிட்டது. இதைக் கண்ட ஆழ்வார் (தம்முடைய உபதேசத்தால் திருந்தி நித்யசூரிகளுக்குச் சமமானவர்களாக ஆகிவிட்ட ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு) மங்களாசாஸனம் பண்ணுகிறார்" - என்று இங்குள்ள ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு முதன்மை தோன்றும்படி எம்பெருமானார் அருளிச் செய்தார்![1]

[594]

(பொலிக பொலிக பொலிக) "முற்பட ப$_4$க$_3$வத் ஸம்ருத்$_3$தி$_4$க்கு மங்க$_3$ளாஶாஸனம் பண்ணி, பின்னை பா$_4$க$_3$வத ஸம்ருத்$_3$தி$_4$க்கு மங்க$_3$ளாஶாஸனம் பண்ண வேண்டாவோ, பெரியாழ்வாரைப் போலே?" என்ன, "அப்படியே அன்றோ செய்தது! வீற்றிருந்தேழுலகிலே ப$_4$க$_3$வத் ஸம்ருத்$_3$தி$_4$க்கு மங்க$_3$ளாஶாஸனம் பண்ணினார் கண்டீரே! பின்னை இதிலே பா$_4$க$_3$வத ஸம்ருத்$_3$தி$_4$க்கு மங்க$_3$ளாஶாஸனம் பண்ணுகிறார்" என்று சீயர் அருளிச் செய்தார்.

(திருவாய்மொழி 5-2-1 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

"பொலிக! பொலிக! பொலிக!" என்று ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு நம்மாழ்வார் இத்திருவாய்மொழியில் மங்களாசாஸனம் பண்ணுகிறார். இத்தொடர்பில் ஒரு **ஸம்வாதம்** காட்டப்பெறுகிறது.

விளக்கம்

"முதலில் பகவானுடைய நிறைவுகளுக்காக மங்களாசாஸனம் செய்து விட்டன்றோ, பாகவதர்களுடைய நிறைவுகளுக்கு மங்களாசாஸனம் செய்ய வேண்டும். மங்களாசாஸனம் செய்வதில் புகழ் பெற்றவரான பெரியாழ்வாரும் அப்படியன்றோ செய்திருக்கிறார்? (முதலில் 'மல்லாண்ட திண்டோள்

1. இவ்வாறு இருவரும் அருளிச்செய்தமை இருபத்துநாலாயிரப்படியிலும் குறிப்பிடப்பெற்றுள்ளன.

மணிவண்ணா - பல்லாண்டு என்று பகவானுக்கு மங்களாசாஸனம் செய்து விட்டுப் பிறகு அன்றோ 'அடியோமோடும் பல்லாண்டு; சுடராழியும் பல்லாண்டு; பாஞ்சசன்னியமும் பல்லாண்டு' என்று அவனுடைய அடியவர்களுக்கு மங்களாசாஸனம் செய்தார் பெரியாழ்வார்)" என்று (நம்பிள்ளை) கேட்க, அதற்கு **நஞ்சீயர்**, *"நம்மாழ்வாரும் பகவானுக்கு மங்களாசாஸனம் செய்த பிறகு தான் பாகவதர்களுக்கு மங்களாசாஸனம் செய்துள்ளார். கீழே 'வீற்றிருந்தேழுலகும் செல்ல வீவில்சீர் ஆற்றல் மிக்காளும் அம்மானை வெம்மா பிளந்தான் தன்னைப் போற்றி' (4-5-1) என்று முதலிலேயே பகவானுக்கு மங்களாசாஸனம் செய்துவிட்டார். இங்கே பாகவதர்களுக்கு மங்களாசாஸனம் செய்கிறார். (நம்மாழ்வாரைப் பின்பற்றியே பெரியாழ்வாரும் அப்படிச் செய்துள்ளார்)" என்றார்.*

[595]

(பெரிய கிதயுகம் பற்றி) அன்றிக்கே ஆப்பான் "ஆதிஸ்ருஷ்டியில் க்ருதயுகத்தைச் சொல்லுகிறது" என்பராம்.

(திருவாய்மொழி 5-2-3 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

ஆழ்வாருடைய உபதேசத்தால் திருந்தின ஸ்ரீவைஷ்ணவர்களைக் காண நித்யஸூரிகளும் பரமபதத்திலிருந்து வந்து விட்டனர். அதனால் 'திரியும் கலியுகம் நீங்கி - பெரிய கிதயுகம் பற்றி' (தருமங்கள் தலைகீழாக ஆகும் கலிகாலம் நீங்கி பெரிய க்ருதயுகம் வந்து விட்டது) என்றருளிச் செய்கிறார் ஆழ்வார். இதை விளக்குகின்ற உரையாசிரியர், க்ருதயுகம், திரேதாயுகம், த்வாபரயுகம், கலியுகம் என்று பகுத்துக் கூற வேண்டாதபடி முழுவதும் ஒரே க்ருதயுகமாக ஆகிவிட்டது. அதையே பெரியகிதயுகம் என்கிறார் ஆழ்வார் என்று பொருளுரைத்து, இதுபற்றி மற்றொரு **நிர்வாஹ***த்தையும் எடுத்துக் காட்டுகிறார்.*

விளக்கம்

"எம்பெருமான் முதன் முதலில் உலகங்களைப் படைத்த போது, முதன் முதலில் ஏற்பட்ட யுகமான ஆதி க்ருதயுகத்தையே இங்கு ஆழ்வார் பெரிய கிதயுகம் என்கிறார்" என்று ஆப்பான் (திருவழுந்தூர் அரையர்?) *அருளிச்செய்தார்.*

[596]

(நாடகம் செய்கின்றனவே) "எம்பெருமானாருடைய ஸ்திதி கமந ஶயநாதிகளை நாம் கொண்டாடுமா போலேயும், ஆளவந்தார் நடையை ராஜா கொண்டாடினாற் போலேயும் இவர் கொண்டாடுகிறபடி' என்று அருளிச் செய்வர்.

(திருவாய்மொழி 5-2-4 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

கிடந்தும் இருந்தும் எழுந்தும் கீதம் பலபலபாடி
நடந்தும் பறந்தும் குனித்தும் நாடகம் செய்கின்றனவே

(எம்பெருமானுடைய அடியவர்கள், படுத்தும், வீற்றிருந்தும், நின்றும், பல பாசுரங்களைப் பாடிக் கொண்டிருந்தும், நடந்தும், தரையில் கால் பாவாதபடி கூத்தாடியும் களித்துத் திரிகிறார்கள்) என்று அருளிச் செய்கின்ற ஆழ்வார் 'நாடகம் செய்கின்றனவே' என்று அருளிச்செய்துள்ளதன் சொல் நயத்தை விளக்குகின்ற உரையாசிரியர், ஸ்ரீவைஷ்ணவ அடியார்களுடைய ஒவ்வொரு செயலும் ஆழ்வாரை ஈர்க்கின்றது என்று கூறி அதை மேலும் விளக்கும் வகையில் ஒரு **வார்த்தை***யை எடுத்துக் காட்டுகின்றார்.*

விளக்கம்

"எம்பெருமானாருடைய இருப்பு, *நடை, சயனம் ஆகியவற்றை நாம் கொண்டாடுவது போலவும்,*[1] *வாதம் செய்வதற்காக ராஜஸபைக்கு எழுந்தருளிய* **ஆளவந்தாருடைய** *நடையை ராஜா கொண்டாடினாற் போலவும்,*[2] *ஆழ்வார் இங்கு ஸ்ரீவைஷ்ணவர்களுடைய செயல்களைக் கொண்டாடுகிறார்" என்று* **(நஞ்சீயர்)** *அருளிச் செய்வர்.*

[597]

(சென்று இத்யாதி) "சென்று அவர்களைத் தொழுது உஜ்ஜீவியுங்கோள்" என்று திருமாலையாண்டான்பணிக்கும். "அவர்களோடேசென்று ஸர்வேச்வரனைத் தொழுது உஜ்ஜீவியுங்கோள்" என்று அருளிச்செய்வர் எம்பெருமானார்.

(திருவாய்மொழி 5-2-6 இருபத்து நாலாயிரப்படி வியாக்கியானம்)

நிகழிடம்

இவ்வுலகத்திற்குரிய எல்லாத் துன்பங்களும் தீரும்படியாக எம்பெருமானுடைய அடியார்கள் உலகெங்கும் பரந்தார்கள் - 'சென்று தொழுது உய்மின் தொண்டீர்' என்றருளிச் செய்கிறார் ஆழ்வார். இதுபற்றி **நிர்வாஹங்கள்** *கூறப்பெறுகின்றன.*

விளக்கம்

"சென்று அவ்வடியவர்களைத் தொழுது உய்வு பெறுங்கள் என்கிறார் ஆழ்வார்" என்று (ஆளவந்தார் அருளிச்செய்தார் என்று) **திருமாலை**

1. எம்பெருமானாருடைய நடையழகை அவருடைய சீடர்கள் காண விரும்பியிருந்தது குறித்து எண் 816ல் காண்க.
2. ஆளவந்தார் ராஜஸபைக்கு எழுந்தருளிய சரித்திரங்கள் குருபரம்பராப்ரபாவம் நூலில் காணத்தக்கன.

ஆண்டான்விளக்கமளித்தார். "அவ்வடியவர்களோடு சென்று எம்பெருமானைத் தொழுது உய்வு பெறுங்கள் என்கிறார் ஆழ்வார்" என்று எம்பெருமானார் விளக்கமளித்தார்!

[598]

ஆக, (மடலெடுக்கை) வீதராக$_{3}$ராயிருப்பார் செய்வதும் ஒன்றல்ல. இவர் தம் ஸ்வரூபத்தோடும் சேராது. ஜ்ஞாநாதி$_{4}$கராயிருப்பார் செய்வதுமொன்றல்ல. ஆனால் இது இருந்தபடியென்? என்னில் இவற்றுக்கெல்லாம் பரிஹாரம் ப$_{4}$ட்டர் திருமடலருளிச் செய்கிறபோது அருளிச் செய்தருளினார்.

(திருவாய்மொழி 5-3 ஈடு வியாக்கியான ப்ரவேசம்)

நிகழிடம்

'மாசறு சோதி' என்று தொடங்கும் திருவாய் மொழியில் ஆழ்வார் எம்பெருமான் மீது மடலெடுக்கத் தலைப்படுகிறார். (மடலெடுத்தாவது, தன் மனத்திற்கினியவன் தன்னைச் சேர்த்துக் கொள்ளாமலிருக்க அதனால் மிகவும் துன்பப் பட்ட ஒருத்தி, தன் நாயகனுடைய படத்தை வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்து ஊணும் உறக்கமும் இன்றி, பனை மடலைக் கையிலே ஏந்திக் கொண்டு, அதனால் உடம்பை மோதிக் கொண்டு, தலைமயிரை விரித்துக் கொண்டு, 'இன்னபாவி என்னைக் கைவிட்டான்: அவன் கண்ணற்றவன்; கொடியவன்' என்று தெருவேறக் கதறிக் கொண்டே கேட்போரெல்லாம் நடுங்கும்படியும், இரங்கும்படியும் திரிந்துழல்வது.) ஆழ்வார் எம்பெருமான்மீது மடலூரத் தலைப்பட்டது முறையாகுமோ என்பதற்கு விடையாக பட்டர் அருளிச்செய்த **வார்த்தை**கள் கூறப்பெறுகின்றன.

விளக்கம்

காமத்தை அறவே விலக்கி முற்றும் துறந்தவராக இருக்கின்ற ஆழ்வார் போன்றவர்கள் இச்செயலைச் செய்யலாமா? 'எம்பெருமான் தனக்குத் திருவுள்ளமானபோது நம்மை நோக்கியருள்வன்; நாம் பதறவொண்ணாது' என்று அனுஸந்தித்து ஆறியிருக்க வேண்டியதன்றோ ஆழ்வாருக்குத் தகுதியானது. மடலெடுத்தல் என்பது ஆழ்வாருடைய ஸ்வரூபத்திற்கும் (தன்மைக்கும்) பொருந்தாது. அறிவிற் சிறந்தவரான ஆழ்வார் செய்யக் கூடியதுமல்ல. அப்படியிருக்க ஆழ்வார் மடலெடுக்கத் தலைப்பட்டதற்குக் காரணம் என்ன? எனில் இக்கேள்விகளுக்கெல்லாம் விடைகளை பட்டர், (திருமங்கையாழ்வார் அருளிச் செய்த) திருமடலை விளக்குகின்றபோது விடையருளிச் செய்துள்ளார்.

1. ஈடு வியாக்கியானத்தில் இவ்விரு விளக்கங்களும் காணப்பட்டாலும் இவற்றை அருளிச் செய்தவர்கள் திருமாலையாண்டான், எம்பெருமானார் ஆகியோர் என்பது குறிப்பிடப்படவில்லை.

அதாவது, காமத்தை அறவே வெறுத்து மிகவும் விரக்தராக இருத்தல் என்பது உலகியல் இன்பங்களைப் பற்றிய காமத்தை மட்டுமே குறிப்பதாகும். வேதாந்தங்களில் கூறப்பட்டுள்ளபடி எம்பெருமான் விஷயத்தில் ஆழ்ந்த பக்தியாகிற காமம் விலக்கப்பட்டதொன்றல்ல. எனவே எம்பெருமான் திறத்தில் ஆழ்வார் மடலெடுக்கத் தலைப்பட்டதில் தவறொன்றுமில்லை. மேலும் எம்பெருமானை உடனே அடைந்து விடவேண்டும் என்ற பேரவாவினால் கலங்கிய இவர் தமது தன்மைக்குச் சேராதாயினும், மடலெடுக்கத் தலைப்பட்டால், 'நம்மையாசைப்பட்டு இவர் இங்ஙனம் துடிப்பதே!' என்று அவன் திருமுகம் மலருகைக்கும் இது உறுப்பாகும். எனவே இது ஸ்வரூபவிருத்தமும் (தன்மைக்குச் சேராததும்) அன்று. தவிர, அறிவில் தலைசிறந்தவளான பிராட்டியே கூட இராமபிரான் வனமெழுந்தருளியபோது அவன் பின்னே புறப்பட்டுப் போகவில்லையா? (அந்தப்புரத்தை விட்டு வெளியே வரக்கூடாதவளான பிராட்டி பலரும் காணும்படியாக வனத்திற்கு எழுந்தருளியது மடலெடுத்ததற்குச் சமமாகும்.) அப்படிப் பிராட்டியே அநுஷ்டித்திருக்கும் போது இது சிஷ்டாசாரஸித்தம் (நல்லோர்களால் ஏற்கனவே கடைப்பிடிக்கப்பட்டது) என்றாகிறது. மேலும் ஆழ்வாரே சிஷ்டர்களில் தலைவராகையாலே, அவர் அனுஷ்டித்ததுவே சிறந்த பிரமாணமாகவும் கொள்ளலாம். ஆக ஆழ்வார் மடலெடுக்கத் தலைப்பட்டதில் தவறொன்றும் இல்லை (என்பது பட்டர் அருளிய விடையாகும்.)[1]

[599]

"ராவணன் மாயா ஶிரஸைக் காட்டின போது இதரஸ்த்ரீகள் அஹ்ருதயமாக அழுமாபோலே தன்னாற்றாமையாலே கூப்பிட்டு, இவ்வார்த்தை கேட்டபோதே முடியா திருப்பானென்?" என்று ப$_4$ட்டரைச் சிலர் கேட்க, "ஜ்ஞாநாஜ்ஞாநங்களன்று ஜீவந நிமித்தம்; அத்தலையில் ஸத்தையாயிற்று; அதுக்கு அழிவில்லாமையாலே இருந்தாள்" என்றருளிச் செய்தார்.

(திருவாய்மொழி 5-3 ஈடு வியாக்கியான ப்ரவேசம்)

நிகழிடம்

"மாசறு சோதி" என்று தொடங்கும் இத்திருவாய்மொழியில் ஆழ்வார் எம்பெருமானைக் குறித்து மடலெடுக்கத் தலைப்படுகிறார். 'ஏறாளும் இறையோன்' என்று தொடங்கும் (4-8) திருவாய்மொழியில் ஆழ்வார், எம்பெருமானுக்கு உறுப்பல்லாத தாமும் தம்முடைய உடைமைகளும் வேண்டா

1. திருமடல் வியாக்யானங்களில் பட்டர் இப்படி அருளிச் செய்ததாக எதுவும் கூறப்படவில்லை. இங்கு ஈடு வ்யாக்யானத்தில் உள்ள கருத்துகள் கொண்டு இவை பட்டர் அருளிச் செய்ததாகக் கொள்ளவடுக்கும்.

என்று தம்மை முடித்துக் கொள்ளப் பார்த்தார்; ஆனால், எம்பெருமான் உளனாகையால், தம்மால் தம்மை முடித்துக் கொள்ள முடியவில்லை; எனவே இத்திருவாய்மொழியில் மடலெடுத்து அவனை அழிக்கப் பார்க்கிறார்; அவன் இருந்தால் தம்முடைய உயிரும் நிலைத்திருக்கும்; அவனை முடித்தாலன்றித் தம்மை முடித்துக் கொள்ள முடியாது என்பதனால் இவ்வாறு மடலெடுக்கிறார் என்று விளக்கிய உரையாசிரியர், இத்தொடர்பில் ஒரு **ஸம்வாதம்** *எடுத்துக் காட்டுகிறார்.*

விளக்கம்

எண் 115ன் விளக்கம் பார்க்க.

[600]

(ஆதி மூர்த்தியை) வ்யாக்யானம் பண்ணுவதற்கு முன்பேயும் ஒரு பொருளுண்டு இதுக்கு அருளிச் செய்வது. 'பூர்வஜ' என்கிறபடியே நம்மோட்டைக் கலவிக்கு அவன் முற்பாடனாகச் செய்தே, பிரிவில் ஆற்றாமைக்கு நான் பிற்பாடையாகவோ.

(திருவாய்மொழி 5-3-1 ஈடு வியாக்கியானம்)

நிகழ்டம்

எம்பெருமானுடைய அழகு முதலியவற்றிலே அகப்பட்டுக் கலங்கின பராங்குச நாயகி, ஊரார் பழி சொன்னாலும் அதைப் பொருட்படுத்தாமல் மடலூரப் போவதாகக் கூறுகிறாள். இங்கு எம்பெருமானைக் குறிப்பிடும் போது 'ஆதிமூர்த்தி' என்கிறாள். 'ஆதிமூர்த்தி' என்றபடியால் உலகுக்கெல்லாம் காரணமானவனையன்றோ பராங்குசநாயகி ஆசைப்படுகிறாள்! அப்படிப் பட்டவனை ஆசைப்பட்டுப் பெறாதே முடிந்தாலும் அது மிகவும் மதிப்பான விஷயமன்றோ! எனவே தான் இங்கு எம்பெருமானை 'ஆதிமூர்த்தி' என்கிறாள் என்று விளக்கிய உரையாசிரியர், மற்றொரு **நிர்வாஹ***த்தையும் எடுத்துக் காட்டுகிறார்.*

விளக்கம்

"வ்யாக்யானம் பண்ணுவதற்கு முன்பேயும் இதற்கு ஒரு பொருள் (நஞ்சீயர்?) அருளிச் செய்வதுண்டு" என்று கூறி அப்பொருளை உரையாசிரியர் எடுத்துக் காட்டுகிறார். பிரளய காலத்தில் சேதனங்கள் அனைத்தும் இறகொடிந்த பறவைகள் போல், கரணகளேபரங்களை (இந்திரியங்களையும் உடலையும்) இழந்துகிடந்த காலத்தில், அவை கேட்காதிருக்கச் செய்தேயும் தானே அவற்றிற்குக் கரணகளேபரங்களைக் கொடுத்துப் படைக்கும் ஆதிமூர்த்தி அல்லனோ அவன்! என் காரியத்திற்கு அவன் முற்படும்போது, அவனைப் பிரிந்த பிரிவில்

ஆற்றாமைக்கு நான் முற்பட வேண்டாமோ என்ற கருத்து தொனிக்கும்படி ஆழ்வார் ஆதிமூர்த்தி என்கிறார் என்பது அப்பொருளாகும்.

[601]

(ஏசறும் இத்யாதி) இதுக்கு மூன்றுபடியாக அருளிச்செய்வர் - 'இவளை ஒரு பழி சொன்னோமாய் விடவல்லோமே' என்று அதிலே அற்றிருக்கிற என்னுதல்; ஏசுகையிலே துணிந்திருக்கிற. அன்றிக்கே 'ப$_4$க$_3$வத்$_3$விஷயத்திலே கை வைத்திருக்கிறவர்களுக்கு ஒரு பழி சொன்னோமாய்விடவல்லோமே' என்று து$_3$:க்க$_2$ப்பட்டிருக்கிற என்னுதல். 'ஏசற்றிருக்கிற நமக்கு, அதாவது ஏசுமெல்லை கடந்த' என்னுதல்.

(திருவாய்மொழி 5-3-1 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

மடலெடுத்தால் ஊரார் பழிதூற்றுவர் என்று தோழி சொல்லப்புக, பராங்குச நாயகி "ஏசறும் ஊரவர் கவ்வை தோழீ என் செய்யுமே!" (ஏசுகின்ற ஊராருடைய பழிமொழி நம்மை என்ன செய்துவிடும்?) என்கிறாள். இங்கு ஏசறும் ஊரவர் என்பதற்கு மூன்று **நிர்வாஹங்கள்** *காட்டப்பெறுகின்றன.*

விளக்கம்

1. ஏசு அறும் ஊரவர் - ஏசுகையிலே அற்றுத் திரிகிறவர்கள். இவளுக்கு ஏதாவது ஒரு பழி சொல்ல வேண்டும் என்று அதற்காகவே பிறந்திருப்பவர்கள். (அவர்கள் பழி நம்மை என்ன செய்யும்?)

2. ஏசறுதல் - துன்பப்படுதல். எம்பெருமான் விஷயத்தில் ஈடுபட்டிருக்கும் இவளுக்குப் போய் நாம் பழி சொல்ல வேண்டியுள்ளதே என்று துன்பம் கொள்ளும் ஊரார்.

3. ஏசு அற்றிருக்கிற நமக்கு-அதாவது ஊரவர் பழி சொல்லைக் கடந்திருக்கிற - அதை லட்சியம் செய்யாதிருக்கிற நமக்கு (அவர்கள் கூறும் பழி என்ன செய்து விடும்?) என்று மூன்று விதமாக விளக்கங்களை (நம்பிள்ளை?) *அருளிச்செய்வர்.*

[602]

(முன் செய்ய மாமை இழந்து) இதுக்கு மூன்றுபடி அருளிச் செய்வர். தன் பக்கல் கை வைப்பதற்கு முன்னே - பிறந்தபோதே உண்டான நிறத்தை இழந்து என்னுதல்; அன்றிக்கே அல்லாத இழவுகளுக்கு முன்னே நிறத்தை இழந்து என்னுதல்; அங்ஙனன்றிக்கே, முன்னே காணக் காண நிறத்தை இழந்து என்னுதல்.

(திருவாய்மொழி 5-3-2 ஈடு வியாக்கியானம்)

நிகழ்டம்

எம்பெருமானாலே தான் இழந்தவற்றைக் கூறும் பராங்குச நாயகி 'முன் செய்ய மாமை இழந்து' (முதன் முதலில் மேனியின் அழகிய நிறத்தை இழந்தேன்) என்கிறாள். இங்கு 'முன்' என்றுள்ள அடைமொழிக்கு மூன்று நிர்வாஹங்கள் காட்டப்பெறுகின்றன.

விளக்கம்

1. முன் செய்யமாயை - அவனோடு கலப்பதற்கு முன்னமே இருந்த மாமை நிறம்; பிறந்த போது தொடங்கி இருந்த நிறத்தை இழந்தேன். (முன் - மிகவும் பழையதான என்ற பொருளில் இக்கருத்து உரைக்கப்படுகிறது.)

2. மற்றவற்றை இழப்பதற்கு முன்னே, முதலில் என் நிறத்தை இழந்தேன் (முன் - முதன்முதலில் என்ற பொருளில் இக்கருத்து உரைக்கப்படுகிறது.) முதலில் கண்முன்னே கண்டவற்றைப் பறித்துக் கொண்டபின்பன்றோ திருடனும் பணப்பையைப் பறித்துக் கொள்வான். அதுபோல் கண்முன்னே கண்ட நிறத்தைப் பறித்துக் கொண்டு பிறகு மற்றவற்றைப் பறித்துக் கொண்டான். மேலும் அவனும் முதன்முதலில் விரும்பியிருந்தது என் நிறத்தைத்தான். எனவே அதை முதலில் பறித்துக் கொண்டான்.

3. முன் - நான் பார்த்துக் கொண்டிருக்கும் போதே என் கண்முன்னே நிறத்தை இழந்தேன். (முன் - கண்முன் என்ற பொருளில் இக்கருத்து உரைக்கப் படுகிறது.) இம்மூன்று விளக்கங்களை (நம்பிள்ளை?) அருளிச் செய்வர்

[603]

(அவனென்றே கிடக்கும்) "இத்தோஷங்களை உடையவனன்றோ என்று தத்ஸம்பந்தத்தாலே மேல் விழா நிற்கும்" என்று பிள்ளான். "விஶேஷணங்களில் தாத்பர்யமின்றிக்கே விஶேஷ்யத்தில் ஊன்றா நின்றது; என் நெஞ்சுக்கு மாயாவாத ருசியுண்டோ அறிகிறிலேன்" என்பர் சீயர்.

(திருவாய்மொழி 5-3-5 இருபத்து நாலாயிரப்படி வியாக்கியானம்)

நிகழ்டம்

கடியன் கொடியன் நெடியமால் ஆகிலும்
கொடிய என் நெஞ்சம் அவனென்றே கிடக்கும்

என்கிறார் ஆழ்வார். எம்பெருமான், தன் கார்யம் ஒன்றிலேயே நோக்கமுடைய கடியவன்; அது முடிந்து விட்டால் திரும்பியும் பாராமல் போகின்ற கொடியவன்; அவனைத் தடுக்க முடியாதபடியான மேன்மையையுடையவன்; உலகையெல்லாம் தன் காலின் கீழே இட்டுக் கொண்டவன். இப்படிப்பட்டவனாயிருந்த போதிலும்,

அவ்வெம்பெருமானையே என்னெஞ்சு தஞ்சமாகக் கொண்டிருக்கின்றது என்கிறார் ஆழ்வார். இப்படி எம்பெருமான் மீது குற்றங்களைக் கூறிய பின்பும் அவனிடமே தம் நெஞ்சம் ஈடுபட்டிருப்பதாக ஆழ்வார் கூறுவதற்கு இருவகை **நிர்வாஹங்கள்** *எடுத்துக்காட்டப்பெறுகின்றன.*

விளக்கம்

"இந்தக் குற்றங்கள் அனைத்தும் அவனுடையவை அன்றோ என்று அவற்றிலேயே ஈடுபட்டிருக்கும் (என்கிறார் ஆழ்வார்)" என்பது பிள்ளான் தரும் விளக்கம். அதாவது, குணங்களானாலும், அவை எம்பெருமானுடையவை என்றுதான் ஆழ்வார் ஈடுபடுகிறார். அதேபோல் குற்றங்களானாலும், அவை எம்பெருமானிடத்தில் இருப்பவை என்ற காரணத்தினால் அவற்றிலும் ஆழ்வார் ஈடுபாடு கொள்கிறார் என்பது **பிள்ளான்** *கருத்தாகும்.*

"அவனிடம் ஈடுபட்டுவிட்ட என் நெஞ்சானது அவனிடத்தில் எத்தகைய குணங்கள் இருக்கின்றன என்றே பார்ப்பதில்லை. அடை(மொழி)களான (விசேஷணங்களான) இக்குணங்களில் நோக்கு எதுவும் இல்லாமல் அடைகொளியான (விசேஷ்யமான) எம்பெருமான் மீதே என் நெஞ்சு ஈடுபட்டுக் கிடக்கிறது. பரப்பிரம்மத்திற்கு விசேஷணங்கள் (குணங்கள் முதலியவை) ஒன்றுமே கிடையாது என்று கூறுகின்ற மாயாவாத (அத்வைத) மதத்தில் என் நெஞ்சு ஈடுபாடு கொண்டு விட்டதோ அறியேன் (என்கிறார் ஆழ்வார்)" என்று **நஞ்சீயர்** *விளக்கம் அளித்தார்.*[1]

[604]

(வலையுள் - அகப்பட்டேன்) ஆழ்வார் திருவரங்கப்பெருமாள் அரையர் வலையாக அபி$_4$நயித்துப் பாடாநிற்க, திருக்கண்களைக் காட்டியருளினார் எம்பெருமானார்.

(திருவாய்மொழி 5-3-6 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

வாசுதேவனுடைய வலையில் தாம் அகப்பட்டதாக ஆழ்வார் கூறுகின்றார். இத்தொடர்பில் ஓர் **ஐதிஹ்யம்** *கூறப்பெறுகிறது.*

1. ஈடு உரையிலும் இவ்விளக்கங்கள் உரைக்கப்பட்டிருந்தாலும், பிள்ளான் விளக்கம் மட்டுமே திருநாமத்துடன் குறிப்பிடப்பட்டுள்ளது. நஞ்சீயர் விளக்கமும் கூறப்பட்டிருந்தாலும், அவ்விளக்கம் நஞ்சீயர் அருளிச் செய்ததாக அங்கு குறிப்பிடப்படவில்லை. பட்டரால் திருத்திப் பணி கொள்ளப் பெறுவதற்கு முன்பு அத்வைதமதத்தில் மிகச் சிறந்த அறிஞராக விளங்கியவர் நஞ்சீயர் என்பது இங்கே நினைவு கூரத்தக்கது.

விளக்கம்

இப்பாசுரத்திற்கு அபிநயம் பிடிக்கின்றபோது ஆழ்வார் திருவரங்கப் பெருமாள் அரையர் வலை என்பதற்கு (மீன் பிடிக்கும்) வலை போன்று தமது கைகளால் அபிநயம் பிடித்துக் காட்டினார். இதைக் கண்ட எம்பெருமானார், எம்பெருமான் தன் திருக்கண் நோக்கத்தினால் ஆழ்வாரை வசப்படுத்தியமையால், இங்கு ஆழ்வார், தம்மை அகப்படுத்திய வலையாகக் குறிப்பிடுவது எம்பெருமானுடைய திருக்கண்களையே என்பதைத் தெரிவிக்கும் வகையில், 'வலை' என்று திருக்கண்களைக் காட்டியருளினார். அதாவது வலை என்று திருக்கண்களைக் காட்டி அபிநயிக்க வேண்டும் என்று அரையருக்கு உணர்த்தினார்.

[605]

(தலையில் இத்யாதி) இத்திருவாய்மொழியை ஆழ்வான் ராஜேந்திர சோழனில் ஸந்த்$_4$யாஸத$_3$ஸ்ஸிலே நிர்வஹியா நிற்க, ஆமருவி நிரைமேய்த்தான் நம்பியார் என்று நூறு வயஸ்ஸு போந்திருப்பாரொருவர் நடுங்க நடுங்க எழுந்திருந்து நின்று, "ஆழ்வான்! தலைமகள் தலையாலே வணங்கப் பெறுமோ?" என்ன, "பெறும்; ஶிஷ்டாசாரமுண்டு காணும்; ஸ்ரீஜனகராஜன் திருமகள் அநுஷ்டித்தாள் காணும், शिरसा च अभिवादय **(ஶிரஸா ச அபி$_4$வாத$_3$ய) என்று".**

..... "இதுதான் ப்ரணயரோஷம் தலையெடுத்துச் சொல்லுகிற வார்த்தையோ, அபேக்ஷை தோற்றச் சொல்லுகிற வார்த்தையோ?" என்ன, "கீழ், திருவடி வந்தபோது ப்ரணயரோஷத்தாலே வந்த சிவிட்குத் தோற்றச் சொன்ன வார்த்தைகளடைய மாறும்படி குளிர அவன் வார்த்தை சொல்ல, அநந்தரம் திருவுள்ளத்திலே ஒரு ப்ரஸாத$_3$ம் பிறந்து, ப்ராப்தியில்லாமையால் வந்த அவாப்தியும் கிடக்க அருளிச் செய்கிற பாசுரம்" என்றருளிச் செய்தார்.

(திருவாய்மொழி 5-3-7 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

"ஆழிப்பிரான்தன்னை தலையில் வணங்கவுமாங்கொலோ" என்று இப்பாசுரத்தில் பராங்குச நாயகி, எம்பெருமானைக் கண்களால் கண்டு, தன் தலையாலே வணங்க வேண்டும் என்ற தன் ஆசையைத் தெரிவிக்கிறாள். இது குறித்த **ஸம்வாதங்கள்** தெரிவிக்கப்பெறுகின்றன.

விளக்கம்

ஒரு முறை கூரத்தாழ்வான், ராஜேந்த்ர சோழன் எனும் ஊரில் மாலை வேளையில் கூடிய சபையில் (ஸந்த்யா ஸதஸ்ஸில்) இத்திருவாய்மொழியை விளக்கிக் கொண்டிருந்தார். அப்போது நூறு வயது நிரம்பியவரான, ஆமருவி

நிரை மேய்த்தான் நம்பியார் என்பவர் நடுக்கத்துடன் எழுந்திருந்து "ஆழ்வான்! இங்கு நாயகி தன் தலையால் வணங்க வேண்டும் என்று கூறுகிறாளே! பிரிவுத் துயரில் ஆழ்ந்திருக்கும் தலைமகள் அப்படித் தன் தலையால் வணங்குவாளோ?" என்று கேட்டார். அதற்கு ஆழ்வான், "வணங்குவாள். ஏற்கனவே இப்படிச் செய்தவர்கள் உண்டு. இராவணனால் பிரிக்கப்பட்டு அசோகவனத்தில் சிறையிருந்த சீதாப்பிராட்டி அனுமனிடம் சொல்லும் போது,

கௌஸல்யா லோகபர்த்தாரம் ஸுஷுவேயம் மநஸ்விநீ
தம் மமார்த்தே ஸுகம் ப்ருச்ச, சிரஸாச அபிவாதய

(ஸ்ரீராமாயணம் சுந்தரகாண்டம் 38 -56)

(நல்ல மனமுடையவளான கௌசல்யை உலகுக்கெல்லாம் தலைவராக எவரைப் பெற்றாளோ, அவரை என்பொருட்டு நலம் விசாரி; தலையாலும் வணங்கியதாகச் சொல்) என்று கூறியிருக்கிறாள்! எனவே தலைமகள் தலையால் வணங்குவது உண்டு" என்று விடையளித்தார்.

"இப்படிப் பிராட்டி வணங்கியதாகக் கூறியது ஊடலால் உண்டாகும் சீற்றம் தலையெடுத்துச் சொன்ன வார்த்தையோ, அல்லது விருப்பத்துடன் கூறிய வார்த்தையோ?" என்று கேட்க, "முதலில் திருவடி (அனுமன்) வந்தபோது ஊடலால் உண்டான கோபத்தினால் கடுமையாகச் சில வார்த்தைகளைச் சொன்னாள். அவளுடைய கோபமெல்லாம் ஆறும்படி அனுமன் குளிர்ந்த வார்த்தைகளைச் சொல்ல அதனாலே பிராட்டிக்குத் திருவுள்ளத்தில் சீற்றம் தணிந்து, ஆறுதல் ஏற்பட்டது. இராமபிரானோடு சேராமையால் உண்டான குறைபாடு மனத்தில் கிடக்கவும், இப்படி ஒரு வார்த்தையைப் பிராட்டி அருளிச் செய்தாள்" என்று அருளிச் செய்தார்.[2]

[606]

(இரைக்கும் கருங்கடல் வண்ணன்) அனந்தாழ்வான் பணித்தானாக நஞ்சீயர் வந்து ப$_4$ட்டருக்கு, "चापमानय (சாபமாநய) என்றபோது கடல் கீழ்மண் கொண்டு மேல்மண்ணெறிந்தாப் போலேயாய்த்து, இவள் மடலூர்வன் என்ற துணிவைக் கேட்டு அவன் தன் ஸர்வாதி$_4$கத்வம் கலங்கினபடி" என்றருளிச் செய்தார்.

(திருவாய்மொழி 5-3-11 ஈடு வியாக்கியானம்)

1. "தீவினை தீர் வரம் வேண்டி நான் தொழுததென்று விளம்புவாய்" என்று கம்பரும் கூறுகிறார். 'தெய்வம் தொழாள் கொழுநன் தொழுவாள்" என்பது வள்ளுவர் வாக்கு.

2. இப்படி அருளிச் செய்தவர் பெயர் இங்கு குறிப்பிடப்படவில்லை. முதலில் விடை பகர்ந்த ஆழ்வானையே தொடர்ந்து கேள்வி கேட்க, அவரே இவ்விடையையும் அருளிச் செய்தார் என்று கொள்ளலாம். அல்லது இவ்விடையை உரையாசிரியரான நம்பிள்ளை அருளிச் செய்தார் என்றும் கொள்ளலாம்.

நிகழிடம்

'மாசறுசோதி' என்று தொடங்கும் இப்பதிகத்தில் நாயகி நிலையடைந்த ஆழ்வார் எம்பெருமான் மீது மடலூரப் போவதாகக் கூறுகின்றார். இதைக் கேட்டு அஞ்சிக் கலங்கி எம்பெருமான் ஓடி வந்தான் என்பதைக் குறிப்பிடும் வகையில் இப்பதிகத்தின் கடைசிப் பாசுரத்தில் 'இரைக்கும் கருங்கடல் வண்ணன்" (பேரோசையுடன் கூடிய கடலைப் போன்ற தன்மையுடையவன்) என்று ஆழ்வார் அருளிச்செய்துள்ளார். இங்கு இரைக்கின்ற கடல் போன்ற தன்மையை உடையவன் என்று ஆழ்வார் அருளிச் செய்துள்ள சொல்நயம் பற்றிய **நிர்வாஹம்** *ஒன்று கூறப்பெறுகிறது.*

விளக்கம்

இராமபிரான் இலங்கைக்குச் செல்வதற்கு வழிவேண்டிக் கடலரசனை நோக்கிச் சரணாகதி செய்தான். மூன்று நாள்களாகியும் கடலரசன் முகம் காட்டாமல் போகவே கோபம் கொண்டு,

சாபமாநய ஸௌமித்ரே சராம்ச்ச ஆசீவிஷோபமாந்
ஸாகரம் சோஷயிஷ்யாமி பத்ப்யாம் யாந்து ப்லவங்கமா:
(ஸ்ரீராமாயணம் யுத்த காண்டம் 21-22)

(லக்ஷ்மணா! வில்லையும், கூரிய அம்புகளையும் கொண்டு வா; கடலை வற்றும்படி செய்துவிடுகிறேன். வானரர்கள் கால்களால் நடந்து கடலைக் கடக்கட்டும்) என்று கோபத்துடன் கூறினான். இதைக் கேட்டவுடன் மிகவும் அச்சமுற்ற கடலரசன் அலறிப் புடைத்துக் கொண்டு ஓடி வந்து இராமபிரான் முன் நின்றான். அப்படி இராமனுடைய கோபத்தைக் கண்டு, கீழ்மண் மேலெறியும்படியாகக் கடலரசன் கலங்கியது போல, பராங்குச நாயகி மடலெடுப்பதாகக் கூறியவுடன் எம்பெருமானும் அஞ்சிக் கலங்கினான் என்று **அனந்தாழ்வான்** *கூற, அதைக் கேட்டு* **நஞ்சீயர், பட்டரிடம்** *வந்து அதைத் தெரிவித்தார்!*

[607]

(அன்னைமீர்காள்) கூரத்தாழ்வார் ஓரளவிலே நங்கையார் திருவடிச் சார்ந்தவாறே இன்னமுமொரு விவாஹம் பண்ணுவோமோ என்று விசாரித்து, "இதுதான் க்ரமத்தாலே வந்து ஆழ்வானுக்கு விரோத$_4$மாய்த் தலைக்கட்டும். இனித்தான் 'அநாஶ்ரமீ ந திஷ்டேத்' என்று ஶாஸ்த்ரம் சொல்லா நின்றது.

1. "சாபமாநய என்றபோது கடல் பயத்தாலே வெருவுண்டாப்போலே இவள் மடலிலே துணிந்தவாறே ஸர்வாதிகன் கலங்கினபடியென்றுமாம். இது அனந்தாழ்வான் வார்த்தை" என்று இருபத்து நாலாயிரப்படியில் உள்ளது.

இச்சாஸ்த்ரத்தை அநுஷ்டிப்போமோ பாகவத பரிசர்யை பண்ணுவோமோ என்று விமர்சியா 'அஸ்ஸாமாந்யகர்மத்திற் காட்டில், இவ்விசேஷகர்மமே ப்ரபலம்' என்று தவிர்ந்தார்.

(திருவாய்மொழி 5-5-1 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

திருக்குறுங்குடி நம்பியின் வடிவழகில் ஈடுபட்ட ஆழ்வார், நாயகி நிலையையடைந்து, தம் தாயாரைப் பார்த்துக் கூறும் போது "எங்ஙனேயோ அன்னைமீர்காள் என்னை முனிவது நீர்" என்று அருளிச் செய்கிறார். பகவத் விஷயத்தில் ஈடுபட்டவர்கள் வயிற்றில் பிறந்தவர்களாயினும் சீடர்களாயினும் அவர்கள் கொண்டாடத் தக்கவர்களேயன்றி கோபிக்கத் தக்கவர்களல்ல என்று கூறும் உரையாசிரியர் அதற்குச் சான்றாக **ஐதிஹ்யம்** *ஒன்றை எடுத்துக் காட்டுகிறார்.*

விளக்கம்

கூரத்து ஆழ்வார் *(கூரத்தாழ்வானுடைய திருத்தகப்பனார்) தமது மனைவியை (நடு வயதிலேயே) இழந்துவிட்டார். மற்றொரு திருமணம் செய்து கொள்ளலாமா என்று ஆலோசித்தார். அப்படி மறுமணம் செய்து கொண்டால், அம்மனைவி மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் பரமபாகவதரான* **ஆழ்வானைத்** *துன்புறுத்தினால் அது பாகவத அபசாரத்தில் முடியுமே என்று நினைத்தார். கிருஹஸ்தாச்ரமியாக (இல்லறவாழ்க்கையை நடத்துபவராக) இருக்க முடியாது. 'அநாச்ரமீ ந திஷ்டேத்' (ஒரு ஆச்ரமத்திலும் இல்லாதவனாக இருக்கக் கூடாது) என்று சாத்திரம் கூறுகின்றது.[1] எனவே மறுமணம் செய்துகொண்டு சாத்திரத்தைப் பின்பற்றுவதா, அல்லது அடியவரான ஆழ்வானுக்குத் தொண்டு செய்வதா என்று ஆலோசித்தார். முடிவில் அந்தப் பொதுவான தர்மத்தைப் பின்பற்றுவதைக் காட்டிலும், அடியவருக்குத் தொண்டு செய்தல் என்ற விசேஷ தர்மத்தைப் பின்பற்றுவதே சிறந்தது என்று முடிவு செய்து, ஆழ்வானுக்காக, மறுமணம் செய்து கொள்ளாமலே இருந்து விட்டார்.[2]*

[608]

(நிறைந்த இத்யாதி) ஆண்டாள் ஒருநாள் பட்டரையும் சீராமப் பிள்ளையையும் காட்டி "இவர்கள் விவாஹப்ராப்தரானார்கள். பேசாதே இருக்கிறதென்?" என்ன, "ஆகில் நாளை பெருமாள்பாடே போனவாறே

1. ப்ரஹ்மசாரி க்ருஹஸ்தோவா வாநப்ரஸ்தோ அதபிக்ஷுக:
அநாச்ரமீ ந திஷ்டேத் து திநமேக மநாபதி — என்பது (மநு) தர்ம சாஸ்த்ரம்.

2. எண் 4 பார்க்க.

வரக்காட்டு" என்ன, அவர்களையும் கொண்டு, திருமுன்பே நிற்கச் செய்தே பெருமாள் அருளப்பாடிட்டு, "ஒன்று சொல்லுவாய் போலேயிருந்தாயீ!" என்று திருவுள்ளமாக, "இவர்கள் விவாஹப்ராப்தர் ஆனார்கள் என்று சொல்லா நின்றார்கள்," என்ன "நாமே ஸத்₃ருஶமான இடத்திலே ஸம்ப₃ந்தி₄த்துத் தருகிறோம்" என்று அருளிச் செய்ய, பிற்றைநாள் மன்னியைக் கொண்டு வந்து நீர் வார்த்தார்கள்.

(திருவாய்மொழி 5-5-7 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

எம்பெருமானுடைய அழகில் ஈடுபட்ட மனத்தை உடையவளான பராங்குச நாயகி, "நிறைந்த வன்பழி நங்குடிக்கு இவள் என்று அன்னை காணகொடாள்" (நம்முடைய குடிக்கு பெரும்பழியை விளைக்கும் இவள் என்று தாய், எம்பெருமானைக் காண விடுகிறிலள்) என்று கூறுகிறாள். எம்பெருமானே அருள்புரியவேண்டுமே தவிர, நாமாக ஆசைப்படுவதும் பழி என்றிருப்பவள் தாயார் என்றருளிச்செய்த உரையாசிரியர், இத் தொடர்பில் ஓர் **ஐதிஹ்யம்** *கூறுகிறார்.*

விளக்கம்

எண் 348ன் விளக்கம் காண்க.[1]

[609]

(நிறைந்து என்னுள்ளே நின்றொழிந்தான்) ஒருநாள் சீயர் கோவிலுக்கு எழுந்தருளா நிற்க, வழியிலே பிள்ளானைக் கண்டு, "ஈஶ்வரனுக்கு ஸ்வரூப வ்யாப்தியேயோ உள்ளது? விக்₃ரஹ வ்யாப்தியுமுண்டோ?" என்று கேட்க, "ஸர்வவிஷயமாக ஸ்வரூபவ்யாப்தியே உள்ளது. உபாஸகவிஷயத்தில் அவர்கள் பக்கல் அநுக்₃ரஹத்தாலே அவர்கள் அபாஶ்ரயமாக பா₄வித்த விக்₃ரஹத்தோடே எழுந்தருளியிருக்கும். இனி ஸ்வரூபவ்யாப்திக்குப் ப்ரமாணம் கண்டவிடம் ஸாமாந்ய விஷயமாகிறது. விக்₃ரஹவ்யாப்திக்கு ப்ரமாணம் கண்டவிடம் விஶேஷ விஷயமாகிறது" என்று பணித்தானாம்.

(திருவாய்மொழி 5-5-7 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

"நீண்ட பொன்மேனியோடும் நிறைந்து என்னுள்ளே நின்றொழிந்தான்" என்று ஆழ்வார் அருளிச்செய்கிறார். எம்பெருமான் தன் திருமேனியோடு வந்து

1. "பிள்ளைகள் விவாஹார்த்தமாக ஆழ்வான் ப்ரதிபத்தியை நினைப்பது" என்று இருபத்து நாலாயிரப்படியில் உள்ளது.

என் நெஞ்சுள் நிறைந்து விட்டான் என்கிறார். எம்பெருமான் தன் திருமேனியோடு பரவியிருப்பதுண்டோ என்பது பற்றி ஓர் **ஸம்வாதம்** கூறப்பெறுகிறது.

விளக்கம்

ஒருநாள் கோயிலுக்குச் சென்று கொண்டிருந்தபோது திருக்குருகைப் பிரான் பிள்ளானை வழியிலே சந்தித்த நஞ்சீயர், "எம்பெருமான் தன்னுடைய ஸ்வரூபத்தால் மட்டுமே எல்லாவிடத்திலும் பரந்திருக்கின்றானா! அல்லது அவன் திருமேனியோடும் கூடப் பரந்திருப்பானா?" என்று பிள்ளானைக் கேட்டார். அதற்குப் பிள்ளான் "பொதுவாக எம்பெருமான் எல்லாப் பொருள்களிலும் தன் திவ்யாத்ம ஸ்வரூபத்தாலேயே பரந்திருப்பான். உபாஸகர்கள் எம்பெருமானை அழகிய திருமேனியோடு கூடியவனாக உபாஸிப்பதால், அவர்களிடத்தில் அனுக்ரஹத்தால் அவர்கள் உபாஸித்த திருமேனியுடனே அவர்களிடத்தில் எழுந்தருளியிருப்பான். எனவே எம்பெருமானுக்கு ஸ்வரூபவ்யாப்தியே உள்ளது என்று கூறுமிடங்கள்[1] பொதுவாக எம்பெருமான் எங்கும் பரந்திருப்பதைக் கூறுகின்றன. அவனுக்கு விக்ரஹவியாப்தி உண்டு என்று கூறுமிடங்கள்[2] குறிப்பாக அவன் (உபாஸகர்களிடம்) திருமேனியோடு பரந்திருப்பதைக் கூறுகின்றன" என்று விடை அருளிச் செய்தார்.[3]

[610]

(உற்றார்களை அழிப்பேனும்) அன்றிக்கே ஆண்டான் பணித்தானாக இளைய பெருமாள், "அவர்களை ஸௌந்தர்யாதி₃களாலே அழிப்பேனும் நான் என்னா நின்றாள்" என்றும் அருளிச் செய்வர்.

(*திருவாய்மொழி 5-6-7 ஈடு வியாக்கியானம்*)

நிகழிடம்

பராங்குசநாயகி, தன்னை எம்பெருமானாகவே அனுகரித்துப் பேசுகின்றவைகளை அவளுடைய திருத்தாயார் கூறுகின்ற பதிகம் இது. 'உற்றார்களை அழிப்பவனும் யானே' என்று பராங்குச நாயகி கூறுகிறாள். இங்கு உற்றார்களை (எம்பெருமான்) அழிப்பது எப்படி என்பதை விளக்குகின்ற உரையாசிரியர் "எம்பெருமானிடம் சிலர் வந்து தாழ்ந்த பயன்களைக் கேட்டால், அவற்றையே கொடுத்து, தன்னிடமிருந்து அவர்களை அகற்றி விடுகிறான். இதுவே அவர்களை அழிக்கை" என்று உரையிட்டு மற்றொரு **நிர்வாஹ**மும் காட்டுகிறார்.

1. "அந்தர்பஹிச்ச தத்ஸர்வம் வ்யாப்ய நாராயண ஸ்தித:" - இது ஸ்வரூபவ்யாப்தியைக் கூறுமிடம்.
2. "நீலதோயத மத்யஸ்தா வித்யுல்லேகேவ பாஸ்வர" - இது விக்ரஹவ்யாப்தியைக் கூறுமிடம்.
3. இதே ஐதிஹ்யம் மற்றோரிடத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளது. எண் 687 பார்க்க.

விளக்கம்

"தன்னுடைய அழகு முதலியவைகளைக் காட்டி உற்றார்களை எம்பெருமான் அழித்து விடுகிறான். (அதாவது உடை குலையப் பண்ணுகிறான்)" என்று முதலியாண்டான் அருளிச் செய்தார் என்று **இளையபெருமாள்** *என்பவர் கூறியதாக* **(நம்பிள்ளை)** *அருளிச் செய்வர்.*

[611]

(கொடியான் இலங்கை செற்றேனே என்றும்) "இவ்விடத்தில் 'கொடியான்' என்கிறவிடம் திருத்தாயார் வார்த்தை காண்!" என்றருளிச் செய்வர் சீயர், எதிரிகளை இவன் ஒன்றாக மதித்திருந்தானாகாமைக்கு.

(திருவாய்மொழி 5-6-9 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

பராங்குச நாயகியானவள் தன்னை எம்பெருமானாகவே அனுகரித்துக் கொண்டு பேசுகின்றவைகளை அவளுடைய திருத்தாயார் பேசுகின்ற பதிகம் இது. 'கொடியான் இலங்கை செற்றேனும் யானே' என்னும் (கொடியவனான ராவணனுடைய இலங்கையை அழித்தவனும் நான்தான் என்கிறாள்) என்று பாசுரத்திலுள்ளது. இதை விளக்கும் போது நஞ்சீயர் அருளிச்செய்த **நிர்வாஹம்** *ஒன்று காட்டப்பெறுகிறது.*

விளக்கம்

"இங்கு, 'கொடியான்' என்பது மட்டும் தாயாருடைய வார்த்தை; 'இலங்கை செற்றவனும் யானே' என்பதுதான் (எம்பெருமானை அனுகரிக்கின்ற) மகள் வார்த்தை" என்று **நஞ்சீயர்** *கூறுவராம். ஏனெனில் எம்பெருமான் இராவணனை ஒரு பொருட்டாகக் கருதியிராமையால், அவனைக் கொடியான் என்று கூறுவதற்கு இடமில்லை. 'இலங்கையை அழித்தவன் யானே' என்பது மட்டும்தான் எம்பெருமானுடைய (நிலையினை அனுகரிக்கின்ற பராங்குச நாயகியின்) வார்த்தை; (மேலும் எம்பெருமான் தன்னிடத்தில் அபசாரப் பட்டவர்களைக் கொடியவர்கள் என்று நினைக்கவும் மாட்டான்.) ஆனால் பிராட்டியைப் பிரித்த கொடுமையை நினைத்துத் தாயார் இராவணனைக் கொடியான் என்கிறாள் என்பது நஞ்சீயர் கருத்தாகும்.*[1]

1. நஞ்சீயர் அருளிச்செய்த ஒன்பதினாயிரப்படியில் 'கொடியான் என்கிற அம்சம் அத்தனையும் திருத்தாயார் வார்த்தை' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இருபத்து நாலாயிரப்படியிலும் இக்கருத்து இடம் பெற்றாலும் இக்கருத்தைச் சீயர் அருளிச் செய்தார் என்று அங்கு குறிப்பிடப்படவில்லை.

[612]

(கோலங் கொள் இத்யாதி) "நரகத்தோடு ஒத்திருக்கச் செய்தே, வாசலில் கழஞ்சு செம்மண் பூசியிருக்கும் போலே காண்" என்றருளிச் செய்வர்.

(திருவாய்மொழி 5-6-10 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

சுவர்க்க லோகத்தைக் 'கோலங்கொள் சுவர்க்கம்' என்றருளிச் செய்கிறார் ஆழ்வார். இதுகுறித்து ஒரு **வார்த்தை** *எடுத்துக்காட்டப்பெறுகிறது.*

விளக்கம்

ஒவ்வொருவரும் தத்தம் புண்ணியங்களின் பயனாக சுகத்தை அனுபவிப்பதற்குச் சுவர்க்க லோகம் செல்வர். புண்ணியம் தீர்ந்தவுடன் தலைகீழாகப் பிடித்துக் கீழே தள்ளப்படுவர். எனவே சுவர்க்கத்தில் அனுபவிக்கப்படும் மகிழ்ச்சி நிலையானது அல்ல. மேலும் எல்லையற்றதும், நிரந்தரமானதுமான ஆனந்தத்தை விளைக்கின்ற பரமபதத்தை அடைவதற்குப் பாவம் தடையாக இருப்பது போலப் புண்ணியமும் தடையாக இருப்பதனால், புண்ணியத்தின் பயனாக அடையக் கூடிய சுவர்க்கமும் நரகம் போன்றதே. அப்படிப்பட்ட சுவர்க்கத்தை ஆழ்வார் 'கோலம் கொள் சுவர்க்கம்' என்று கூறுவதன் கருத்து யாதெனின், சுவர்க்கமும் நரகத்தைப் போன்றே இருந்தாலும், சுவர்க்கத்தின் முகப்பில் காண்பதற்கு இனிமையாக இருத்தல் பொருட்டு செம்மண்ணால் (வர்ணம்) பூசிக் கோலம் (அழகு) செய்திருப்பர் போலும்! என்று **(நம்பிள்ளை)** *அருளிச்செய்வர்.*

[613]

(உன்னை இத்யாதி) "உன்னைக் காண வேணும் என்று ஆசையாலே தளர்ந்து இனி உபாயாநுஷ்டான க்ஷமனல்லேன்" - இது பூர்வர்கள் நிர்வாஹம்.

(திருவாய்மொழி 5-7-2 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

"அங்குற்றேனல்லேன்; இங்குற்றேனல்லேன் உன்னைக் காணுமவாவில் வீழ்ந்து நான் எங்குற்றேனும் அல்லேன்' என்றருளிச் செய்கிறார் ஆழ்வார். இதற்கு இருவகை **நிர்வாஹங்கள்** *காட்டப்படுகின்றன.*

விளக்கம்

முதலில் **பூர்வாசாரியர்கள்** *கூறிய விளக்கம் கூறப்படுகிறது. "உன்னைப் பெறுவதற்கான ஸாதனத்தை அனுஷ்டித்து முக்தர்களைப் போன்றவனாகவும் நான் இருக்கின்றிலேன்; இங்கே இருந்து ஸாதனங்களை அனுஷ்டிப்பவர்களில்*

ஒருவனாகவும் இருக்கின்றிலேன். உன்னையே அனுபவித்துக் கொண்டு இவ்வுலகியல் தொடர்புகளை நினையாதிருக்கவும் பெற்றிலேன்; உன்னை அடியோடு மறந்து இவ்வுலகில் இன்பங்களையே விரும்பியும் இருக்கின்றிலேன். உன்னைக் காண வேண்டும் என்ற ஆசையினால் உடல் தளர்ந்து இனி ஸாதனத்தை அனுஷ்டிக்கவும் சக்தியற்றவனாக இருக்கின்றேன்" - என்கிறார் ஆழ்வார். இவை பூர்வாசார்யர்களுடைய விளக்கம்.

அல்லது - "நித்ய சூரிகளோடு கலந்திருக்கும்படி அங்கு இருக்கின்றேன் அல்லேன்; ஸம்ஸாரிகளுடன் கலந்து இங்கேயும் இருக்க மாட்டுகின்றிலேன்; நீ வந்து முகம் காட்டும் வரையில் தரித்து ஓரிடத்தில் இருக்கவும் மாட்டுகின்றிலேன்; ஆசையாகிற கடலில் விழுந்து கரையேற மாட்டாமல் தவிக்கின்றேன்" என்கிறார் ஆழ்வார் - என்கிற இரண்டாவது விளக்கத்தையும் காட்டுகிறார் உரையாசிரியர்.

[614]

'வந்தருளி' இத்யாதிக்கு, ப$_4$ட்டர் புஷ்பயாக$_3$ம் அணித்தானவாறே நஞ்சீயரைப் பலகாலும் இயல் கேட்டருளுவர். ஒரு கோடையிலே திருவீதியிலே நீரை விட்டு எழுந்தருளியிருந்து, "இப்பாட்டை இயல் சொல்லும்" என்று சீயரை அருளிச் செய்து தாம் இத்தை அநுஸந்தி$_4$த்திருந்து, அநந்தரத்தே தாமும் இப்பாட்டை இயல் சொல்லி "யமநியமாதி$_3$க்ரமத்தாலே த்$_4$யேய வஸ்துவை மநநம் பண்ணிப் புறம்புள்ள பராக்கை அறுத்து அநுஸந்தி$_4$க்கப்புக்காலும் சுக்கான் பரல்போலே இருக்கக் கடவ நெஞ்சுகள் புகம் செய்யும்படி தா$_4$ர்மிகராயிருப்பார் இவை சில ஈரச் சொற்களைப் பொகட்டுப் போவதே!" என்றருளிச் செய்தார். "நஞ்சீயர் இவ்வார்த்தையை உருத்தோறும் அருளிச்செய்வர்" என்று அருளிச் செய்வர்.

(திருவாய்மொழி 5-7-7- ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

'வந்தருளி என் நெஞ்சு இடங் கொண்ட வானவர் கொழுந்தே' என்று மிகுந்த ஈடுபாட்டுடன் அருளிச் செய்கிறார் ஆழ்வார். இது குறித்து ஓர் **ஐதிஹ்யம்** *கூறப் பெறுகிறது.*

விளக்கம்

திருவரங்கம் பெரிய கோயிலில் பிரம்மோத்ஸவத்தின் பத்தாம் நாளன்று புஷ்பங்களைக் கொண்டு அர்ச்சனை செய்வது போல் செய்யப்படுவதுண்டு. அதற்குப் புஷ்பயாகம் என்று பெயர். அவ்வுத்ஸவம் நெருங்கும் போது பட்டர் பலமுறை தமது சீடரான நஞ்சீயரை ஆழ்வார் பாசுரங்களை இயலோடு சொல்லச் சொல்லிக் கேட்டிருப்பது வழக்கம். அப்படி ஒருமுறை கோடையில், திருவீதியில் குளிர்ச்சியாக நீர் தெளித்து எழுந்தருளியிருக்கின்ற போது நஞ்சீயரை நோக்கி

'வந்தருளி என்கிற பாசுரத்தை இயலோடு சொல்லும்' என்று சொல்ல, அவரும் அப்படியே பாசுரத்தைச் சொல்ல, பட்டரும் இப்பாசுரத்தை அனுஸந்தித்திருந்து இப்பாசுரத்தைத் தாமும் இயலுடன் சொல்லிப் பிறகு இப்பாசுரத்தின் இனிமையில் ஈடுபட்டு அவர் கூறியதாவது:

"யமம், நியமம் முதலிய அஷ்டாங்க யோகத்தால் பரமாத்மாவை த்யானம் செய்து, மற்ற விஷயங்களில் நெஞ்சு செல்லாதபடி கட்டுப்படுத்தி அவனையே அனுஸந்திக்க முயன்றாலும் இளகாமல், சுக்கான் பருக்கைக் கல்போல் இருக்கக் கூடிய கடினமான நெஞ்சுகளையும் நெகிழச் செய்யும் வகையில் தார்மிகர்களான ஆழ்வார்கள், இப்படி பக்திச்சுவை ததும்பும்படி ஈரச் சொற்களாலாகிய பாசுரங்களை அருளிச் செய்துள்ளார்களே! இது என்ன ஆச்சர்யம்!" என்று பட்டர் மிகவும் நெஞ்சுருகிக் கூறினாராம்.[1] ஒவ்வொரு முறையும் 'வந்தருளி' என்ற இப்பாசுரத்தை விளக்கும்போதெல்லாம் நஞ்சீயர் பட்டருடைய இவ்வார்த்தைகளை அருளிச் செய்வர் என்று (நம்பிள்ளை) அருளிச் செய்வர்.

[615]

ஆப்பான் திருவழுந்தூர் அரையர் கையிலே தாளத்தை வாங்கி "வந்தருளி, வந்தருளி" என்று மேல் போகமாட்டாதே படுவாராம்.

(திருவாய்மொழி 5-7-7 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

"வந்தருளி என் நெஞ்சிடம் கொண்ட வானவர் கொழுந்தே" என்கிறார் ஆழ்வார். வெகு தூரமான பரமபதத்திலே எழுந்தருளி இருக்கிற எம்பெருமான், ஸம்ஸாரத்திலே இருக்கிற தம்மளவும் வந்தான் என்றும், நித்யசூரிகள்நாதனாக இருக்கின்றவன் ஒரு ஸம்ஸாரியான தம் நெஞ்சுக்குள்ளே எழுந்தருளினான் என்றும், அதிலும் தாம் பாதிவழி செல்ல, அவன் பாதிவழி வந்தான் என்றிராமல், அவனே தாமிருந்தவிடம் தேடி வந்தான் என்றும் ஆழ்வார் நெஞ்சுருகிச் சொல்லுகிறார் என்றுரைத்த உரையாசிரியர் அதற்குச் சேர **ஐதிஹ்யம்** ஒன்றையும் எடுத்துக் காட்டுகிறார்.

விளக்கம்

ஆழ்வார்கள் அருளிச் செய்த பாசுரங்களை இனிய இசையுடனும் தாளத்துடனும் திருவரங்கம் பெரியகோயிலில், எம்பெருமான் திருமுன்பே அரையர் என்போர் அனுஸந்திப்பர். ஆப்பான் திருவழுந்தூர் அரையர் என்பவர் இப்பாசுரத்தை அனுஸந்திக்கும்போது இதன் பொருளில் மிகமிக ஈடுபட்டவராய், கையில் தாளத்தை வாங்கி, 'வந்தருளி வந்தருளி வந்தருளி' என்றே கூறிக்

1. இதேபோன்ற வார்த்தைகளை எம்பாரும் கூறியதாக எண் 667ல் குறிப்பிடப்பெறுவது காண்க.

கொண்டு மேலே பாசுரத்தைத் தொடர்ந்து கூற முடியாமல் கண்ணீர் மல்க நிற்பாராம்.

[616]

(ஆறெனக்கு இத்யாதி) "உபாயோபேயங்கள் இரண்டும் உன் திருவடிகளேயாம்படி பண்ணித்தந்தாயே" என்று பிள்ளான் பணிக்கும். "இவை இரண்டாலும் உபாயத்தையே சொல்லுகிறது" என்று பட்டர் அருளிச் செய்வர். (நின்பாதமே - எனதாவியுமுனதே) என்று 'நின் பாதமே' என்கிறவிடத்தை இங்கே அந்வயித்து ஸபதமாக்கி நிர்வஹிப்பர் ஆப்பான் திருவழுந்தூர் அரையர்.

(திருவாய்மொழி 5-7-10 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

'ஆறெனக்கு நின்பாதமே சரணாகத் தந்தொழிந்தாய்" என்று ஆழ்வார் அருளிச் செய்கிறார். இதற்குப் பல **நிர்வாஹங்கள்** கூறப்பெறுகின்றன.

விளக்கம்

"ஆறு என்பது உபாயம் (வழி). சரணம் என்ற வடசொல் க்ருஹம் (வீடு = மோக்ஷம்) என்ற பொருளை உடையது; எனவே சரண் என்பது உபேயம் (அடையப்படும் பேறு) ஆகும். ஆக, 'எனக்கு நின்பாதமே ஆறு, சரணாகத் தந்தொழிந்தாய்' என்று கொண்டு, 'உன் திருவடிகளே உபாயம், உபேயம் இரண்டும் ஆம்படி பண்ணித்தந்தாயே' என்கிறார் ஆழ்வார்" என்று **பிள்ளான்** அருளிச்செய்வர்![1]

"'எனக்கு ஆறு நின்பாதமே சரணாகத் தந்தொழிந்தாய்' என்று கொண்டு 'எனக்கு உபாயம் தருமிடத்தில் வேறொன்றை உபாயமாகத் தராதே உன் திருவடிகளையே உபாயமாகத் தந்தாயே' என்கிறார் ஆழ்வார்" என்று **பட்டர்** அருளிச்செய்வர். இப்பதிகத்தைத் தொடங்கும்போது 'நோற்ற நோன்பிலேன்' என்று ஆழ்வார் தமக்குள்ள உபாயசூன்யதையை (உபாயம் எதுவும் தம்மிடத்தில் இல்லாமையை) வெளியிடுகிறார். அதற்குச்சேர முடிவிலும் தம்முடைய உபாயசூன்யதையை இப்பாசுரத்தில் கூறுவது மிகவும் பொருத்தமே என்பதனால் பட்டர் இக்கருத்தை அருளிச் செய்கிறார்.

ஆப்பான் திருவழுந்தூர் அரையர் "ஆறு எனக்கு சரணாகத் தந்தொழிந்தாய்" என்று கொண்டு எனக்கு உபாயமாக உன் திருவடிகளைக் கொடுத்தாய் என்று

1. திருக்குருகைபிரான்பிள்ளான் அருளிச் செய்துள்ள ஆறாயிரப்படியிலும் இக்கருத்தே உள்ளது. பட்டர், பிள்ளான் ஆகிய இருவரும் இவ்வாறு அருளிச்செய்தமை இருபத்துநாலாயிரப்படியிலும் குறிப்பிடப்பெறுகிறது.

பொருளுரைத்து 'நின்பாதமே' என்பதை 'எனதாவியுமுனதே' என்பதுடன் கூட்டி சபதமாக நிர்வஹிப்பர். அதாவது உன் திருவடிகள் மேல் ஆணை; என் ஆவி உன்னுடைய உடைமையே' என்று உறுதிபட ஆழ்வார் கூறுவதாக அவர் விளக்கினார்.

[617]

உத்தர பூ$_4$மியிலே லோகஸாரங்க$_3$மஹாமுநிகள் வர்த்தியா நிற்க, இங்குத்தையானொருவன் அங்கேறச் செல்ல, "பிள்ளாய்! த$_3$க்ஷிணபூ$_4$மியில் விஶேஷம் என்?" என்று கேட்க, "திருவாய்மொழி என்றொரு ப்ரப$_3$ந்த$_4$ம் அவதரித்து, ஶிஷ்டர்கள் பரிக்$_3$ரஹித்துப் போரக் கொண்டாடிக்கொடு போகாநின்றார்கள்" என்ன, "அதிலே உனக்குப் போவதொரு சந்தை சொல்லில் காணாய்" என்ன, "ஆராவமுதே என்கிற இத்தனையும் எனக்குப் போம்" என்ன, "நாராயணாதி$_3$ நாமங்கள் கிடக்க, இங்ஙனேயும் ஒரு நிர்த்தே$_3$ஶம் உண்டாவதே!" என்று அத்ருப்தராய், "இச்சொல்லு நடையாடுகிற தே$_3$ஶத்தேறப் போவோம்" என்று அப்போதே புறப்பட்டுப் போந்தார்.

(*திருவாய்மொழி 5-8-1 ஈடு வியாக்கியானம்*)

நிகழிடம்

எத்தனை அனுபவித்தாலும் ஆராத (தெவிட்டாத) அமுதமாக எம்பெருமான் இருக்கின்றான் என்ற கருத்தில் 'ஆராவமுதே' என்கின்றார் ஆழ்வார். 'ஆராவமுதம்' என்ற இத்திருநாமத்தின் பெருமையை விளக்க, ஓர் **ஐதிஹ்யம்** கூறப்பெறுகிறது.

விளக்கம்

வடதேசத்தில் லோகஸாரங்க மஹாமுனிகள் என்பவர் வசித்து வந்த போது, தென் தேசத்திலிருந்து ஒருவன் அங்கே சென்றிருந்தான். அவனை நோக்கி "பிள்ளாய்! தென் தேசத்தில் என்ன விசேஷம்?" என்று கேட்டார். "தமிழ் நாட்டில் திருவாய்மொழி என்றொரு பிரபந்தம் அவதரித்துள்ளது; அறிஞர்களால் அது கைக்கொள்ளப்பட்டு, மிகவும் கொண்டாடப்பட்டு வருகிறது" என்றான். "அதிலே உனக்குத் தெரிந்ததைக் கூறு" என்றார் அவர். "ஆராவமுதே என்கிற இதுமட்டுமே எனக்குத் தெரியும்" என்றான். 'ஆராவமுதே' என்ற சொல்லைக் கேட்ட அவர் வியப்பில் மூழ்கி "நாராயணன் முதலிய பல திருநாமங்கள் இருக்கும் போது இப்படியும் ஒரு அழகிய திருநாமம் உண்டாவதே!" என்று கூறியதோடு திருப்தியடையாமல் "இப்படிப்பட்ட அழகிய சொல் நடையாடுகின்ற தேசத்திற்குப் போக வேண்டும்" என்று அப்பொழுதே புறப்பட்டு தென் தேசத்திற்கு (தமிழ்நாட்டிற்கு) வந்தார்.

[618]

(ஆகாசத்தை நோக்கி) "என்னுடைய நிராலம்ப₂நதையைப் பார்த்து" என்று ஆண்டான் வார்த்தை.

(திருவாய்மொழி 5-8-4 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

எம்பெருமானைக் காண வேண்டும் என்ற ஆவலினால் 'ஆகாசத்தை நோக்கி அழுவன்' என்கிறார் ஆழ்வார். கஜேந்திராழ்வானுக்கு ஆகாசத்திலிருந்து வந்து தோற்றினாற்போல் தமக்கும் வந்து தோற்றுகிறானோ என்று ஆகாசத்தைப் பார்ப்பதாக இதற்குக் கருத்தருளிச் செய்த உரையாசிரியர், ஆண்டான் அருளிச் செய்த **நிர்வாஹம்** ஒன்றையும் எடுத்துக் காட்டுகிறார்.

விளக்கம்

'உன்னைக் காண வேணும் என்ற ஆவலுடைய நான் என்னுடைய நிராலம்பநதையை (=பற்றுக்கோடு எதுவும் இல்லாத நிலையைப்) பார்த்து அழுவன் என்கிறார் ஆழ்வார் என்பது ஆண்டான் தரும் விளக்கம்.[1] ஆகாசம் என்பது பற்றுக்கோடு எதுவுமில்லாத வெற்றிடம் என்பதைக் கருத்தில் கொண்டு தரப்பட்ட விளக்கம் இதுவாகும்.

[619]

(செழுமாமணிகள் சேரும் திருக்குடந்தை) ஆராவமுதாழ்வார், திருமழிசைப் பிரான் போல்வார் புருஷரத்னங்கள் சேரும் திருக்குடந்தை என்று நிர்வஹிப்பர்கள்.

(திருவாய்மொழி 5-8-9 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

'செழுமாமணிகள் சேரும் திருக்குடந்தை' என்று ஆழ்வார் அருளிச் செய்துள்ளார். 'செழுமாமணிகள்' என்பதற்கு **நிர்வாஹம்** ஒன்று கூறப்பெறுகிறது.

விளக்கம்

"ஆராவமுதாழ்வார், திருமழிசைப்பிரான் போன்ற அரிய மாணிக்கங்கள் சேரும் திருக்குடந்தை" என்று ஆசார்யர்கள் கூறுவர்.

[620]

...... "இதுதான் நான் அனுப₃வித்தேன்" என்று சீயர் அருளிச் செய்வர். "ப₄ட்டர் திருவடிகளை ஆஶ்ரயித்தபின்பு ஒருகால் மேல் நாட்டுக்கு எழுந்தருளி

1. ஆண்டான் இவ்வாறு அருளிச்செய்தமை இருபத்துநாலாயிரப்படியிலும் குறிப்பிடப்பெறுகிறது.

மீண்டு, பெரியத்வரையோடே திருநாளுக்கு உதவ வேணுமென்று வர, திருக்கரம்பன் துறையளவிலே வந்தவாறே அசிந்திதமாக ஆறு பெருகிக்கிடக்க, இராத்திருநாள் எழுந்தருளி இங்குண்டான ஸம்ப்$_4$ரமங்களெல்லாம் செவிப்படுவது, வந்து புகுரப் பெறாதொழிவதாய்க் கொண்டு போர நோவுபட்டோம்" என்று அருளிச் செய்வர்.

(திருவாய்மொழி 5-9 ஈடு வியாக்கியான ப்ரவேசம்)

நிகழிடம்

எம்பெருமானை அனுபவிக்க வேண்டுமென்று மிகவும் விரும்பிய ஆழ்வார் திருவல்லவாழ் எனும் திவ்ய தேசத்தில் போய்ப்புக்கு அவனை அனுபவிக்க நினைத்தார். ஆனால் அவ்வளவும் சென்று அவனை அனுபவிக்க முடியாமல் உடல் தளர்ந்து நிற்கின்ற போது அவ்வூரின் ஆரவாரங்களைக் கேட்டு, மேலும் துக்கமடைந்து, தாமான தன்மையை இழந்து ஒரு பிராட்டி நிலையில் பேசுகிறார்.

எம்பெருமானைக் கலந்து பிரிந்த பிராட்டியான பராங்குச நாயகி, அவனைப் பிரிந்து ஆற்றமாட்டாமல் திருவல்லவாழிற்குச் சென்று அவனை அனுபவிக்க நினைத்து அவ்வூர் அருகில் சென்று, எம்பெருமானைப் பற்றிய நினைவால் உடல் தளர்ந்து அவ்வூர் உள்ளே செல்ல முடியாமல் நோவுபடுகிறாள். அப்போது, அவ்வூர்ச் சோலைகளும், அதன் மணத்தோடு வீசுகின்ற தென்றலும், வண்டுகளின் ஒலியும், நகரில் எழும் ஆரவாரங்களும் அவள் காதில் விழுந்து அவள் துன்பத்தை அதிகமாக்கின. இப்படி எம்பெருமானைக் காணவேண்டும் என்ற ஆவலை அங்கு எழுந்த ஆரவாரங்கள் மேலும் மேலும் வளர்க்க, தாம் உள்ளே செல்ல முடியாமல் வருந்திக் கிடக்கின்ற நிலையினை இத்திருவாய்மொழியில் வெளியிடுகிறார் ஆழ்வார். இத்தொடர்பில் ஓர் **ஐதிஹ்யம்** *கூறப்பெறுகிறது.*

விளக்கம்

இத்திருவாய்மொழியை விளக்கியருளும்போது **நஞ்சீயர்,** *இதே போல் தமக்கும் ஒரு முறை ஓர் அனுபவம் ஏற்பட்டது என்று கூறி அதை விளக்குகிறார். பட்டர் திருவடிகளில் அடிபணிந்து அவருடைய சீடரான பிறகு திருவரங்கத்திலேயே வாழ்ந்து வந்த நஞ்சீயர், ஒருமுறை தம் சொந்த ஊரான மேல் நாட்டிற்குச் சென்றுவிட்டு, மீண்டும் திருவரங்கம் திரும்பினார். அப்போது அழகிய மணவாளப் பெருமாளுக்குப் பெரிய திருநாள் நடந்து கொண்டிருந்தபடியால், அதற்குதவ வேண்டும் என்ற பேராவலுடன் அவர் திருக்கரம்பன் துறையருகில் (உத்தமர்கோயிலருகில்) வந்த போது, திடீரென்று கொள்ளிடம் ஆற்றில் (வடதிருக்காவேரியில்) வெள்ளம் கரைபுரண்டு ஓடியது. ஆற்றைத் தாண்டி அக்கரையிலுள்ள திருவரங்கம் செல்லமுடியாமல் தவித்தார் நஞ்சீயர். இக்கரையில் இருந்து கொண்டே, இரவெல்லாம் எம்பெருமான் புறப்பாடு கண்டருளும் ஆரவாரங்களைக் காதால் கேட்டும், ஆனால் அதேசமயம் அத்திருநாளில் தாம் கலந்துகொள்ள முடியாமலும் நஞ்சீயர் மிகவும்*

துன்பப்பட்டார். இப்படித் தாம் பட்ட துன்பத்தைத் திருவல்லவாழிற்குச் செல்ல முடியாமல் ஆழ்வார் பட்ட துன்பத்துடன் ஒப்பிட்டு நஞ்சீயர் விளக்கினார்.

[621]

(மானேய் நோக்கு நல்லீர்) "நான் திருவல்லவாழிலே போய்ப்புகும்படி உங்கள் கண்ணாலே குளிர நோக்கி ப்ரஸாதி₂க்க வேணுமென்கிறாள்" என்று பிள்ளான் பணிக்கும்.

(திருவாய்மொழி 5-9-1 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

'திருவல்லவாழில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானை நான் என்றைக்கு அடைவேனோ?' என்று தன் தோழியர்களை நோக்கிப் பராங்குச நாயகி கூறுகிறாள். அப்படிக் கூறும்போது தன் தோழியர்களை 'மானேய் நோக்கு நல்லீர்' (மானின் நோக்குப் போன்ற நோக்கை உடையவர்களாகவும், என் நலத்தை விரும்புபவர்களாகவும் உள்ளவர்களே!) என்று விளிக்கிறாள். இதற்குப் பிள்ளான் கூறிய **நிர்வாஹம்** கூறப்பெறுகிறது.

விளக்கம்

இங்குப் பராங்குசநாயகி தோழியர்களின் கண்களைக் குறிப்பிட்டதன் உட்கருத்தை விளக்குகின்ற திருக்குருகைப்பிரான் பிள்ளான் "நான் திருவல்லவாழிற்குச் சென்று புகும்படி, உங்கள் கண்களாலே குளிர நோக்கி அருள வேண்டும் என்கிறாள் (பராங்குச நாயகி)" என்று கூறுவராம்.[1]

[622]

(தேனார் சோலைகள் சூழ்) ஜநநாத₂ப்₃ரஹ்மராயர் திருமுடிக்குறையிலே ஒரு மரம் வெட்டப் புக, அத்தை, எம்பார் கேட்டு, "அல்லாளப் பெருமாளே! ஈச்வர விபூ₄தியை அழிக்கப் பார்த்தாயோ" என்ன, இவர் சொல்லும் வார்த்தை கேட்கைக்காக, "ஈச்வர விபூ₄தியல்லாத இடமும் உண்டோ?" என்ன, "அவைபோலன்று காண் இவை; ஸார்வபெ₄ளமனான ராஜாவும், மஹிஷியுமாக, முற்றூட்டாகக் குடநீர் வார்த்து ஆக்கும் சோலை போலே, பெருமாளும் பெரிய பிராட்டியாரும் கூடக் கை தொட்டு ஆக்குமவை காண்!" என்றருளிச்செய்தார்.

(திருவாய்மொழி 5-9-1 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

"தேனார் சோலைகள் சூழ் திருவல்லவாழ்" என்று, திருவல்லவாழைச் சூழ்ந்திருக்கும் சோலைகள் வர்ணிக்கப் படுகின்றன. திவ்ய தேசத்திலுள்ள

1. பிள்ளான் இவ்வாறு அருளிச்செய்தமை இருபத்துநாலாயிரப்படியிலும் குறிப்பிடப்பெறுகிறது.

சோலைகளும் விரும்பத்தக்கவையே என்பதற்கு ஒரு **ஐதிஹ்யம்** *எடுத்துக் காட்டப்படுகிறது.*

விளக்கம்

திருவரங்கத்தில் திருமுடிக்குறையில் (எம்பெருமான் திருமுடி வைத்து சயனித்திருக்கும் மேற்குப் பக்கத்தில்) இருந்த ஒரு மரத்தை ஜனநாத ப்ரஹ்மராயர் (என்ற அதிகாரி) வெட்ட முயன்றார். இதைக் கேள்வியுற்ற எம்பார் "அல்லாளப் பெருமாளே! எம்பெருமானுடைய செல்வத்தை அழிக்கப் பார்க்கின்றீரே" என்று அவரிடம் கூறினார். எம்பாருடைய பேச்சைக் கேட்க வேண்டும் என்பதற்காக ப்ரஹ்மராயர் "எம்பெருமானுடைய செல்வம் அல்லாத இடமும் உண்டோ! எல்லாமே எம்பெருமானுடைய செல்வம் தானே! இங்குள்ள மரங்கள் மட்டும் தான் எம்பெருமானுடைய செல்வமோ!" என்று கேட்டார். அதற்கு எம்பார் "மற்ற செல்வங்கள் போலன்று இவை; ஒரு நாடு முழுவதும் சக்ரவர்த்தியான அரசனுக்கு உரியது தான் என்றாலும், தானும் தன் அரசியுமாகத் தங்கள் கையால் முழுதும் நீருற்றித் தோட்டங்கள் வளர்ப்பார்கள் அன்றோ! அதுபோல் எம்பெருமானும் பிராட்டியும் சேர்ந்து தங்கள் கையால் தொட்டு வளர்த்தவைகள் திருவரங்கத்திலுள்ள மரம் செடி கொடிகள். எனவே எம்பெருமானுக்கும் பிராட்டிக்கும் மிகவும் விரும்பத்தக்க செல்வங்களான இவற்றை வெட்டக் கூடாது" என்றருளிச் செய்தாராம்![1]

[623]

(தேனார் சோலைகள் சூழ்) நல்லான் ப$_3$ட்டர் ஸ்ரீபாத$_3$த்தை ஆஶ்ரயித்து நெடுங்காலம் ஸேவித்து, பின்பு அந்திம த$_3$ஶையிலே பட்டர் எழுந்தருளி, "என் நினைத்திருந்தாய்?" என்ன, "ஒரு ஸர்வஶக்தி உபகரிக்கும் போது இங்ஙனே க$_4$னக்கவாகாதே உபகரிக்குமது" என்று நினைத்திருந்தேன்" என்ன, "அதுவென்? உன் தே$_3$ஶத்தைவிட்டு ப$_3$ந்து$_4$க்களை விட்டு நெடுந்தூரம் போந்து இங்ஙனே நோவுபட்டுத் திருவடி சேரக்கிடந்தாயாகில் இங்கு உபகாரமென்?" என்ன, "தே$_3$ஶாந்தரத்திலேயிருந்து அப்ரஸித்$_3$த$_4$னாய் விழுந்து போகக் கடவவென்னை, இவ்வளவும் அழைப்பித்து, உம்முடைய திருவடிகளை ஆஶ்ரயிக்கப்பண்ணி, ருசியை விளைப்பித்து, இத்தே$_3$ஶத்திலே உம்முடைய கண் வட்டத்திலே ஶரீர வியோக$_3$ம் உண்டாம்படி பண்ணினானே!" என்ன, "ஆனாலும் தானாக அபி$_4$மானித்த ஶரீரம் போகாநிற்க, நீ இங்ஙன் நினைத்திருந்தது என் கொண்டு?" என்ன, "ப்ரமாணம் கொண்டு நினைத்திருந்தேன்" என்றான்.

(திருவாய்மொழி 5-9-1 ஈடு வியாக்கியானம்)

1. இவ்வைதிஹ்யம் மற்றோரிடத்திலும் இடம்பெற்றள்ளது. எண் 798 பார்க்க. எண் 654ம் பார்க்க.

நிகழிடம்

'தேனார் சோலைகள் சூழ் திருவல்லவாழ்'' என்று திருவல்லவாழைச் சூழ்ந்திருக்கும் சோலைகளையும் ஆழ்வார் வர்ணிக்கின்றார். இதை விளக்குகின்ற உரையாசிரியர் - திவ்ய தேசங்களில் உண்மையான ஈடுபாடு உடையவர்களுக்கு, அங்குள்ளது எல்லாம் விரும்பத்தக்கதாகவே தோன்றும்; வெறுக்கத்தக்க இவ்வுலகமும் கூட எம்பெருமானுடையது எனும் தன்மையால் ஒரு சமயம் விரும்பத்தக்கதாகி விடுகிறது. எல்லாம் அவனுடையது என்பதை நேரே அறிய முடியாதே! பிரமாணத்தால் அன்றோ அறிகிறோம் எனில், ஆழ்வாரைப் பொறுத்தமட்டில் பிரமாணத்தால் அறியும் ஞானமானது ஆழ்வாருக்கு நேரே பார்த்தலால் உண்டாகும் ஞானத்தைவிட அதிகமானது. பிரமாணத்தையே நம்பியவர்களுக்கு இப்படியே எண்ணம் அமைந்திருக்கும். (அதாவது பிரமாணத்தால் பிறக்கும் அறிவு, கண்ணால் நேரே காண்பதைவிடத் தெளிவாக அவர்களுக்கு இருக்கும்) - என்று உரையிட்டு, அதை மேலும் விளக்குவதற்கு **ஐதிஹ்யம்** ஒன்றை எடுத்துக் காட்டுகிறார்.

விளக்கம்

நல்லான் என்பவர் திருவரங்கத்திற்கு வெகு தூரத்திலிருந்த தமது பிறந்தவூரை விட்டு வந்து **பட்டர்** திருவடிகளை அடைந்து அவருடைய சீடராகி அங்கேயே வசித்து வந்தார். நெடுங்காலம் பட்டரைச் சேவித்துக் கொண்டு அவருடனே தங்கியிருந்த அவர் நோய்வாய்ப்பட்டு மரணத்தறுவாயில் இருக்கும் போது பட்டர் எழுந்தருளி "நல்லான், இப்போது என்ன நினைத்திருக்கின்றாய்?'' என்று வினவினார். "எல்லாம் வல்லவனான எம்பெருமான் நமக்கு இவ்வளவு பெரிய உபகாரத்தையன்றோ செய்திருக்கிறான், என்று அவன் அடியேனுக்குச் செய்துள்ள நன்மைகளையே எண்ணிக் கொண்டிருக்கிறேன்'' என்றார் நல்லான். "எம்பெருமான் அப்படி என்ன நன்மைகளை உனக்குச் செய்து விட்டான்! உன் ஊரைவிட்டு, உன் உறவினர்களை விட்டு, இவ்வளவு தூரம் வந்த விடத்தில் இப்படி நோவுபட்டுத் திருவடி சேரும்படியாகக் (உயிர் விடும்படியாகக்) கிடக்கும்படியன்றோ அவன் செய்துள்ளான்! இதில் உபகாரம் என்ன இருக்கிறது?'' என்று பட்டர் கேட்டார். "ஏதோ ஒரு ஊரில், ஒருவருக்கும் தெரியாதவனாக விழுந்து போக வேண்டிய என்னை, இவ்வளவு தூரம் வரவழைத்து, தேவரீருடைய திருவடிகளை அடையும்படி செய்து, பகவானைப் பற்றிய விஷயங்களில் ஆர்வத்தை எனக்கு விளைவித்து, இவ்வூரில் தேவரீருடைய கண் முன்னால் உடலை நீத்துப் பரமபதம் புகும்படியான பாக்யத்தைக் கொடுத்துள்ளானே! இதைவிட வேறு என்ன உபகாரம் வேண்டும்?'' என்று நல்லான் கூறினார். "ஆயினும், தானாக அபிமானம் செய்திருந்த இந்த உடல் போகப் போகிறதே! அப்படி இருக்கும் போது, என்னிடம் வந்து சேர்ந்தது

முதலியவைகளை எம்பெருமான் செய்த உபகாரமாக நீ நினைத்திருப்பது. எதைக் கொண்டு?" என்று பட்டர் கேட்க, அதற்கு நல்லான் "பிரமாணங்கள் அப்படிக் கூறுகின்றபடியாலே அவைகளைக் கொண்டுதான் அப்படி உறுதியாக நான் நினைத்திருக்கிறேன்" என்று கூறினாராம். எனவே உயர்ந்த ஞானம் உள்ளவர்களுக்கு பிரமாணமானது கண்ணால் நேரே காண்பதைவிடத் தெளிவை உண்டாக்கும் என்பது உறுதியாகிறது.

ஒருவன் ஆசார்யனை அடைந்து பேறுபெறுவதற்கும் எம்பெருமானுடைய அருளே காரணம் என்று பிரமாணங்கள் பகருகின்றன. "ஈச்வரஸ்ய ச ஸௌஹார்தம், யத்ருச்சா ஸுக்ருதம் ததா, விஷ்ணோ: கடாக்ஷம் அத்வேஷம் ஆபிமுக்யம் ச ஸாத்விகை: ஸம்பாஷணம் ஷடேதாநி ஹி ஆசார்ய ப்ராப்திஹேதவ:" (எம்பெருமானுடைய எண்ணம், தற்செயலாக ஏற்படும் புண்யம், எம்பெருமானுடைய கடாக்ஷம், எம்பெருமானிடத்தில் பகை இன்மை, அவனிடத்தில் விருப்பம் ஏற்படுவது, நல்லோர்களுடன் பேசுவது ஆகிய இந்த ஆறும் ஒருவன் ஆசார்யனை அடைவதற்குக் காரணங்கள்) என்கிற இந்த சுலோகத்தில் ஆசார்யனை ஒருவன் அடைவதற்கும் எம்பெருமானுடைய அருள் காரணம் என்று கூறப்பட்டுள்ளது. எனவே தான் பட்டரை அடிபணிந்து பேறுபெற்றதும் கூட எம்பெருமான் செய்த உபகாரமே என்று நல்லான் உறுதியாகக் கூறினார்.

[624]

(சூடுமலர்க் குழலீர்) "உங்களைச் சூடு மலர்க் குழலாராக நான் காண்பது என்றோ?" என்று பிள்ளான்.

(திருவாய்மொழி 5-9-3 ஈடு வியாக்கியானம்)

நிகழ்இடம்

எம்பெருமானைப் பிரிந்த ஆற்றாமையால் உடல் தளர்ந்திருக்கிற பராங்குச நாயகி தன் தோழியரை நோக்கிக் கூறும் போது 'சூடு மலர்க் குழலீர்' என்றருளிச் செய்கிறாள். இதற்குப் பல விளக்கங்களைக் கூறுகின்ற உரையாசிரியர் முதலில், **பிள்ளான்** அருளிச் செய்த **நிர்வாஹ**த்தைக் கூறுகிறார்.

விளக்கம்

"'தோழியர்களே! மலர் சூடிய குழலை உடையவர்களாக உங்களை நான் எப்போது காணப் போகிறேன்?' என்கிறாள்" என்று **பிள்ளான்** உரைத்தார். நாயகனைப் பிரிந்த வருத்தத்தினால் நாயகி தனது குழலில் மலர் அணியாமல் இருப்பதனால், அவளுடைய தோழியர்களும் தங்களது குழலில் மலர்களை அணியாமல் இருப்பராதலால், அவர்களை மலரணிந்த குழலார்களாகக் காண

வேண்டும் (அதற்குத் தான் எம்பெருமானோடு கூடவேண்டும்) என்ற கருத்தினால் 'சூடு மலர்க் குழலீர்' என்கிறாள் நாயகி என்பது பிள்ளான் கருத்தாகும்.[1]

[625]

(நிச்சலும் தோழிமீர்காள் இத்யாதி) "மாசறுசோதி தொடங்கி இவ்வளவும் வர ஹிதம் சொல்லுகிற நீங்கள் என்ன ப்ரயோஜனம் பெற்றிகோள்" என்று பிள்ளான்.

(திருவாய்மொழி 5-9-4 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

எம்பெருமானைக் கலந்து பிரிந்த வருத்தத்தினால் அவன் எழுந்தருளியிருக்கிற திருவல்லவாழ் எனும் திவ்ய தேசத்திற்குப் போக முற்பட்ட பராங்குச நாயகியை "இது செய்யத் தக்கது அல்ல" என்று அறிவுரை கூறித் தடுக்க முயன்றனர் தோழியர். அதற்குப் பராங்குச நாயகி "நிச்சலும் தோழிமீர்காள் எம்மை நீர் நலிந்து என் பயன்? (நாள்தோறும் எனக்கு நீங்கள் அறிவுரை கூறுவதால் என்ன பயன்?) என்று தன் தோழியரைக் குறித்துக் கூறுகிறாள். இதற்குப் பிள்ளான் அருளிச்செய்த **நிர்வாஹம்** கூறப்பெறுகிறது.

விளக்கம்

இங்குப் பாசுரத்தில் 'நிச்சலும்' (நாள்தோறும்) என்றுள்ளதைக் கருத்தில் கொண்டு, இத்திருவாய்மொழியில் பராங்குச நாயகி திருவல்லவாழ் செல்ல முயன்றதைத் தடுத்து தோழியர் அறிவுரை கூறியதை மட்டும் கொள்ளாமல், இதற்கு முன் 'மாசறுசோதி' (5-3) என்ற திருவாய்மொழியிலும் மடலெடுக்கப் புகுந்த நாயகியைத் தடுத்து அறிவுரை கூறியதையும் கொண்டு, **பிள்ளான்** பொருளுரைத்தார். "மாசறுசோதி என்ற திருவாய்மொழியிலேயே மடலெடுக்கப் புகுந்த என்னைத் தடுத்து அறிவுரை கூறினீர்கள். ஆனால் உங்கள் எண்ணம் பலிக்கவில்லை. இப்போது நான் திருவல்லவாழ் செல்வதையும் தடுத்து அறிவுரை கூறுகின்றீர்கள். இப்படி மாசறுசோதி முதற் கொண்டு, இதுவரை நீங்கள் நாள்தோறும் என்னைத் தடுத்து என்ன பயன் பெற்றீர்கள்? ஒன்றுமில்லை என்கிறாள் பராங்குசநாயகி" என்று பிள்ளான் அருளிச்செய்தார்.[2]

1. பிள்ளான் அருளிய ஆறாயிரப்படியுரையில் இக்கருத்து காணப்படவில்லை. பிள்ளான் இக்கருத்தை அருளிச்செய்தமை இருபத்து நாலாயிரப்படியிலும் குறிப்பிடப்பெற்றுள்ளது.
2. பிள்ளான் இவ்வாறு அருளிச்செய்தமை இருபத்து நாலாயிரப்படியிலும் குறிப்பிடப்பெற்றுள்ளது.

[626]

"'நீள் கமுகும்' என்றாப்போலே 'பலவும் தெங்கும் வாழைகளும்' என்று 'பச்சிலை நீள்' என்கிறத்தை அவற்றிலேயும் உய்ந்தபிள்ளை கூட்டும்படி காணும்!" என்று சீயர் அருளிச் செய்வர்.

(திருவாய்மொழி 5-9-4 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

திருவல்லவாழை வர்ணிக்கின்ற ஆழ்வார் "பச்சிலை நீள் கமுகும் பலவும் தெங்கும் வாழைகளும்" (பசுமையான, நீண்ட இலைகளை உடைய கமுகு, பலா, தெங்கு, வாழை இவைகளை உடைய திருவல்லவாழ்) என்று அருளிச் செய்துள்ளார். இதுகுறித்து ஒரு **நிர்வாஹம்** *காட்டப்பெறுகிறது.*

விளக்கம்

இங்கு, 'பசுமையான, நீண்ட இலைகளை உடைய' என்கிற விசேஷணத்தை (அடைமொழியை) கமுகிற்கு மட்டும் கொள்ளாமல். பலா, தெங்கு, வாழை ஆகிய ஒவ்வொன்றிற்கும் அடைமொழியாகக் கொண்டு, அதாவது பச்சிலை நீள் கமுகு, பச்சிலை நீள் பலா, பச்சிலை நீள் தெங்கு, பச்சிலை நீள் வாழை என்று **உய்ந்த பிள்ளை** *என்பவர் பொருளுரைத்தார் என்று* **நஞ்சீயர்** *அருளிச் செய்வர்.*

[627]

(பாதங்கள் இத்யாதி) "பாதங்கள் மேலே நித்யமாய்ப் பூவை அணிந்து தொழக் கூடவற்றோ" என்று நிர்வஹிப்பர் சீயர். "ஸ்வாப₄ாவிகமான அழகுக்கு மேலே அழகிதாக அலங்க்ருதமான திருவடிகளைக் கூடவற்றோ" என்றருளிச் செய்வர் பிள்ளை.

(திருவாய்மொழி 5-9-7 இருபத்து நாலாயிரப்படி வியாக்கியானம்)

நிகழிடம்

"பாதங்கள் மேலணி பூந்தொழக் கூடுங்கொல்" என்றருளிச் செய்கிறார் ஆழ்வார். இதற்கு இரு **நிர்வாஹங்கள்** *எடுத்துக் காட்டப்படுகின்றன!*

விளக்கம்

"எம்பெருமானுடைய திருவடிகளின் மேல் நாள்தோறும் பூவை அணிந்து தொழக் கூடுமோ! என்கிறார் ஆழ்வார்" என்று **நஞ்சீயர்** *பொருளுரைத்தார். (பாதங்கள் மேல், பூ - பூவை, அணி - அணிந்து, தொழக்கூடுங்கொல் என்று பொருள் கொண்டு உரைத்த கருத்து இதுவாகும்.)*

"இயற்கையான அழகுக்கு மேல், அழகாக அலங்கரிக்கப்பட்ட திருவடிகளைத் தொழக் கூடுமோ என்கிறார்" ஆழ்வார் என்று **நம்பிள்ளை**

பொருள் உரைத்தார். (பூ அணி பாதங்களை; பூ - அழகு; அணி - அலங்காரம் என்று பொருள் கொண்டு உரைத்த கருத்து இது.)[1]

[628]

(தொல்லருள் இத்யாதி) "நா நீரற்றிருக்கை பாப ப₂லமிறே. நா நீருண்டாய்த் திருநாமம் சொல்ல வல்லோமே என்கிறாள்" என்று அம்மங்கியம்மாள் வாக்யார்த்த₂மாகச் சொல்லும் என்றருளிச் செய்வர்.

(திருவாய்மொழி 5-9-10 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

"தொல்லருள் நல்வினையால் சொலக்கூடுங் சொல் நாராயணன் நாமங்களே?" (அவனுடைய இயற்கையான கருணையினால் உண்டான புண்ணியத்தினால் அவனுடைய திருநாமங்களைச் சொல்லக் கூடுமோ?) என்கிறார் ஆழ்வார். இங்கு 'நல்வினை' என்பதற்கு அம்மங்கியம்மாள் என்பவர் பணித்த **நிர்வாஹம்** *எடுத்துக்காட்டப்பெறுகிறது.*

விளக்கம்

"எம்பெருமானுடைய திருநாமத்தை வாயால் சொல்ல முடியாதபடி நாக்கு நீரற்று வறண்டிருப்பது பாவத்தின் பயன். அதேபோல் நாவில் நீர் வருதல் புண்ணியத்தின் பயன். எனவே எம்பெருமானுடைய இயற்கையான அருளால் நாவில் நீர் உண்டாகி, அவன் திருநாமங்களை வாயாரச் சொல்லக் கூடுமோ என்கிறார் ஆழ்வார்" என்று **அம்மங்கியம்மாள்** *பொருளுரைப்பர் என்று* **(நம்பிள்ளை)** *அருளிச் செய்வர்.*

[629]

"இவ்வாழ்வார்களெல்லாரும் க்ருஷ்ணாவதாரமென்றவாறே போர மண்டி இருப்பர்கள்; இதுக்கு ஹேதுவென்?" என்று ப₄ட்டரைக் கேட்க, "ஒருவனுக்கு து₃:க்க₂ம் சிலநாள் கழிந்தால் பொறுக்கலாம். அணித்தானால் ஆறியிருக்கப் போகாதிறே; அப்படியே அல்லாத அவதாரங்களைப் போலன்றிக்கே, ஸமகாலம் ஆகையாலே 'ஒரு செவ்வாய்க்கிழமை முற்படப் பெற்றிலோம், பாவியேன் பல்லிலே பட்டுத் தெறிப்பதே' என்னும் இழவாலே வயிற்றெரிக்தலேயாயிருக்கும்" என்று அருளிச் செய்தார்.

(திருவாய்மொழி 5-10 ஈடு வியாக்கியான ப்ரவேசம்)

1. இருபத்து நாலாயிரப்படியில் மட்டுமே இருவிளக்கங்களும் கூறப்படுகின்றன. மற்ற எல்லா உரைகளிலும் சீயர் அருளிச் செய்த விளக்கம் மட்டுமே (சீயர் அருளிச் செய்தார் என்று குறிப்பிடப்படாமல்) இடம் பெற்றுள்ளது.

நிகழிடம்

'பிறந்தவாறும் வளர்ந்தவாறும்' என்கிற இத்திருவாய்மொழியில் நம்மாழ்வார் கிருஷ்ணாவதாரத்தில் மிகவும் ஈடுபட்டுப் பாசுரம் அருளிச் செய்கிறார். இத்தொடர்பில் ஒரு **ஸம்வாதம்** *காட்டப்பெறுகிறது.*

விளக்கம்

"ஆழ்வார்கள் எல்லோரும் கிருஷ்ணாவதாரத்திலேயே ஈடுபட்டிருப்பதற்குக் காரணம் என்ன? என்று (**நஞ்சீயர்**) *பட்டரைக் கேட்டார். அதற்கு* **பட்டர்,** *"கலியுகத்திற்குச் சற்று முன்னர் துவாபரயுகத்தின் இறுதியில் எம்பெருமான் கண்ணனாக அவதரித்திருந்தான். கலியுகம் பிறந்த சில நாள்களுக்குள்ளேயே நம்மாழ்வார் அவதரித்தார். அதாவது, நம்மாழ்வார் அவதரித்த நாளுக்குச் சிலநாள்கள் முன்னர்தான் எம்பெருமான் கிருஷ்ணாவதாரத்தை முடித்துக் கொண்டு பரமபதம் ஏகினான். இன்னும் ஒரு சிலநாள்கள் முன்னரே பிறந்திருந்தால் கண்ணபிரானை நேரிலேயே சேவித்திருக்கலாமே, இப்படிப் பிற்பட்டுப் பிறந்தோமே என்று ஆழ்வார் வருந்துகிறார். பல நாள்கள் கழிந்து விட்டால் துக்கத்தைப் பொறுத்துக் கொள்ளலாம். ஆனால் ஏற்பட்ட இழப்பு சற்று முன்னர்தான் எனும்படி மிகவும் நெருங்கிய காலமாக இருந்தால் அவ்விழப்பைத் தாங்கிக் கொள்ள முடியாது. மற்ற அவதாரங்களைப் போல் அல்லாமல் கிருஷ்ணவதாரம் சற்று முன்னர்தான் முடிந்து விட்டது என்றறிந்த ஆழ்வார் 'சில நாள்கள் முன்னர் பிறக்காமல் போய் விட்டேனே! ஒரு செவ்வாய்க் கிழமை (சிலநாட்கள்) முற்பட்டுப் பிறந்திருக்கக் கூடாதா! பாவியேன்! நல்ல இனிமையான பதார்த்தத்தை உண்ண முயலும் போது அது பல்லிலே பட்டுத் தரையில் விழுந்து விட்டது போல, இவ்வளவு அருகில் வந்தும் கிடைக்காமல் போய் விட்டதே!' என்னும் இழப்பால் வயிற்றெரித்தல் காரணமாக அந்த அவதாரத்தில் மிகவும் ஈடுபாடு கொள்கிறார் ஆழ்வார்" என்று அருளிச்செய்தார்!*

[630]

"இவர் அவனுடைய அவதாரங்களையும் ஜகத்ஸ்ருஷ்ட்யாதி$_3$ வ்யாபாரங்களையும், 'தாயர் மகிழ ஒன்னார் தளரத் தளர் நடை நடந்த' என்கிறபடியே ஆஶ்ரிதரை வாழ்விக்கவும், அநாஶ்ரிதரை அழியச் செய்யவும் அடியிட்டு, அப்படி வளர்ந்தருளின க்ருஷ்ணாவதாரத்தையும் அநுஸந்தி$_4$த்து மிகவும் ஶிதி$_2$லரான இவர், 'த$_4$ரித்து நின்று உன்னை அநுஸந்தி$_4$க்க

1. இங்கு இக்கேள்வியைக் கேட்டவர் யார் என்பது குறிப்பிடப்படவில்லை. ஆனால் எண் 1ல் இதே போன்ற கேள்வியை நஞ்சீயர் கேட்க அதற்கு பட்டர் வேறு விதமாக விடையளித்ததாகக் குறிப்பிடப்பெற்றுள்ளது. அங்கு பட்டர் அருளிச் செய்த விடை, இங்கு ஈட்டில் பட்டர் அளித்த விடையைத் தொடர்ந்து உரையாசிரியருடைய வாக்கியங்களாகக் காணப்படுகின்றன.

வல்லேனாம்படி பண்ணியருள வேணும்' என்று அவனை ஶரணம் புகுகிறார்" என்று ஆழ்வான் பணிக்கும்.

அன்றியே, "விஶ்லேஷஸமயத்திலே உன் குணங்கள் புஷ்கலஸ்த்ரமாய்க் கொண்டு மிகவும் நலிய, அத்தாலே நெருக்குண்டு நோவு படுகை தவிர்ந்து, உன் திருவடிகளிலே வந்து சேர்ந்து உன்னைக் கிட்டி அநுப₄விக்கும்படி பண்ணியருள வேணுமென்று அவனைக் குறித்து அருளிச் செய்கிறார்" என்று எம்பார் அருளிச் செய்யும்படி.

அங்ஙனன்றிக்கே, 'ஸர்வேஶ்வரன் க்ருஷ்ணனாய் வந்து திருவவதாரம் பண்ணி, திருவாய்ப்பாடியிலே வளர்ந்தருளா நின்றான் என்று கேட்டு, அங்கே யதா₂ மநோரத₂ம் நமக்குக் கலந்து பரிமாறலாம் என்று தெற்குத் திருவாசலாலே சென்றுபுக, 'இப்போது இங்ஙனே வடக்கில் திருவாசலாலே புறப்பட்டு, தன்னுடைச் சோதியேற எழுந்தருளினான்' என்று கேட்டு, விழுந்து கிடந்து கூப்பிடுகிறார்" என்று பிள்ளான் பணிக்கும் என்றருளிச் செய்வர்.

(திருவாய்மொழி 5-10 ஈடு வியாக்கியான ப்ரவேசம்)

நிகழிடம்

'பிறந்தவாறும் வளர்ந்தவாறும்' என்ற இத்திருவாய்மொழியில் நம்மாழ்வார் கிருஷ்ணாவதாரத்தில் மிகவும் ஈடுபட்டுப் பாசுரங்கள் அருளிச் செய்கிறார். இதற்கு மூன்று **நிர்வாஹங்கள்** *காட்டப்பெறுகின்றன.*

விளக்கம்

1. "ஆழ்வார் எம்பெருமானுடைய அவதாரங்களையும், உலகைப் படைத்தது முதலான செயல்களையும் அனுபவித்தார். 'தாயர் மகிழ ஒன்னார் தளர' என்று பெரியாழ்வார் தமது திருமொழியில் (1-7-11) அருளிச் செய்தது போல, அடியவர்களை வாழ்விக்கவும், அல்லாதவர்களை அழிக்கவும் வளர்ந்தருளின கிருஷ்ணாவதாரத்தை நினைத்து ஆழ்வார் உருகிவிட்டார். அதனால் மேலே தொடர்ந்து அவனை அனுபவிக்க முடியாமல் போகவே, "உள்ளம் உருகாமல் தரித்து நின்று உன்னை அனுபவிக்க வல்லவனாக என்னை ஆக்க வேண்டும் என்று அவனுடைய திருவடிகளிலேயே சரணம் புகுகிறார்" - இது கூரத்தாழ்வான் கூறிய கருத்தாகும்.[1] ("நின்று நின்று நைகின்றேன் உன்னை எங்ஙனம் நினைகிற்பன்" என்று இத்திருவாய்மொழியில் (5-10-6) ஆழ்வார் அருளிச் செய்திருப்பதைக் கருத்தில் கொண்டு ஆழ்வான் இவ்வாறு உரைத்தார்.)

1. இக்கருத்து மட்டுமே பிள்ளான் அருளிச்செய்த ஆறாயிரப்படியில் இடம்பெற்றுள்ளது. பிள்ளான் அருளிச்செய்ததாக இங்கு கூறப்படும் கருத்து அவருடைய ஆறாயிரப்படியில் இடம்பெறவில்லை. மேலும் இங்கு ஆழ்வான் அருளிச்செய்ததாக குறிப்பிடப்படும் இவ்விளக்கம் இருபத்து நாலாயிரப்படியில் இடம் பெறவில்லை.

2. "எம்பெருமானைப் பிரிந்த வருத்தத்தில் இருக்கும்போது அவனுடைய திருக்கல்யாண குணங்கள் நெஞ்சில் நிலைநின்று, மிகவும் வருத்தத்தை உண்டாக்கின. அப்படி வருத்தப்படுவது தவிர்ந்து, அவன் திருவடிகளை அடைந்து, அவனை அனுபவிக்கும்படி பண்ணியருள வேண்டும் என்று அவனைக் குறித்து அருளிச் செய்கிறார்" - இது **எம்பார்** *கூறிய கருத்தாகும்.*[1] *("என் கண்கட்குத் திண்கொள்ள ஒருநாள் அருளாய் உன் திருவுருவே" என்று இத் திருவாய்மொழியில் (5-10-7) அருளிச் செய்துள்ளதைக் கருத்தில் கொண்டு எம்பார் இவ்வாறு உரைத்தார்.)*

3. "எம்பெருமானை நேரில் கண்டு அனுபவிக்க வேண்டும் என்று மிகுந்த பாரிப்புடனிருந்தார் ஆழ்வார். அவன் கண்ணனாக வந்து அவதரித்துத் திருவாய்ப்பாடியில் வளர்ந்தருளுகிறான் என்று கேள்விப்பட்டு, அங்குச் சென்றால் விருப்பப்படி அவனை அனுபவிக்கலாம் என்று நினைத்துத் தெற்கு வாசல் வழியாக (திருவாய்ப்பாடிக்குள்) நுழைந்தார். ஆனால் அங்கே இருந்தவர்கள் "இப்போதுதான் எம்பெருமான் தனது அவதாரத்தை முடித்துக் கொண்டு வடக்குத் திருவாசல் வழியாகப் பரமபதத்திற்கு எழுந்தருளிவிட்டான்" என்று கூறக் கேட்டு, (பாவியேன், இழந்தேனே என்று) விழுந்து துடித்துக் கதறுகிறார் ஆழ்வார்"- இது **பிள்ளான் பணித்த விளக்கமாகும்.**[2] *("செய்து போன மாயங்களும்" என்று இத்திருவாய்மொழியில் (5-10-1) ஆழ்வார் அருளிச் செய்துள்ளதைக் கருத்தில் கொண்டு பிள்ளான் இவ்வாறு உரைத்தார்.)*

[631]

இத்தால் சொல்லிற்றாயிற்று - இப்பாட்டில் மூன்றர்த்தம் சொல்லா நின்றது. அதாவது - அநுகூல ஸம்ஶ்லேஷமும், ப்ரதிகூல நிரஸநமும், மத்$_4$யஸ்த$_2$ ரக்ஷணமுமான இவற்றை 'அது இது உது' என்கிறது" என்று பிள்ளான்.

(திருவாய்மொழி 5-10-2 ஈடு வியாக்கியானம்)

நிகழ்டம்

"அது இது உது என்னலாவனவல்ல என்னை உன் செய்கை நைவிக்கும்" (அந்தச் செயல், இந்தச் செயல், உந்தச் செயல் என்பன அல்ல, அவை உன்னுடைய செயல்கள் என்பதனால் என்னை உருக்கிவிடும்) என்கிறார் ஆழ்வார். இதுகுறித்துப் பிள்ளான் அருளிச்செய்த **நிர்வாஹம்** *கூறப்பெறுகிறது.*

1. இவ்விளக்கத்தைப் பிள்ளை திருநறையூர் அரையர் முதலியோர் அருளிச்செய்ததாக இருபத்து நாலாயிரப்படியில் குறிப்பிடப்பெறுகின்றது.

2. இவ்விளக்கத்தை ஆழ்வான் அருளியதாக இருபத்துநாலாயிரப்படியில் குறிப்பிடப்பெற்றுள்ளது.

விளக்கம்

இப்பாசுரத்திலேயே ஆழ்வார் நப்பின்னைப் பிராட்டியுடன் கலந்த படியையும், கேசி எனும் அசுரனைக் கொன்றபடியையும், ஆய்ச்சியர்களுடன் குரவைக் கூத்து ஆடிய படியையும் ஆழ்வார் அருளிச் செய்துள்ளார். இதைக் கருத்தில் கொண்டு, 'அது' என்பது அனுகூலர்களுடன் கலப்பதையும், 'இது' என்பது விரோதிகளை அழிப்பதையும், 'உது' என்பது பொதுவானவர்களைக் காப்பதையும் கூறுகின்றது என்று பிள்ளான் அருளிச்செய்வர்.[1]

[632]

(உயிருண்ட உபாயங்களும்) …….. பண்டு ஒரு ராஜா "ருத்₃ரதத்வமே பரதத்வம் என்றெழுதி எழுத்திட்டுத் தாருங்கோள்" என்ன, அப்படிப் பலரும் எழுத்திடா நிற்கச் செய்தே, ஒருவர், "வாராய் நீ இவ்வோலை கெடாமல் நோக்கி வைத்தாலிறே இவனுடைய பரத்வம் ஸாதி₄க்கலாவது. நீ நினைக்கிற தே₃வதைகளுக்கு உண்டான உச்ராயங்கள் ஸர்வேஶ்வரனாலே என்று பிரமாணங்கள் சொல்லா நின்றன. ஆனபின்பு, இன்று நீ சொல்ல நான் எழுத்திட்டுப் போகிறேன். நாளை ஒரு விவக்ஷிதன் தோன்றி 'இவன் அஜ்ஞனாயிருந்தானீ' என்னக் கேட்பதில் இன்று நீ நினைத்ததைச் செய்து கொள்ள மாட்டாயோ" என்றார்.

(திருவாய்மொழி 5-10-4 ஈடு வியாக்கியானம்)

நிகழ்டம்

*"கள்ள வேடத்தைக் கொண்டுபோய் புரம் புக்கவாறும் கலந்தசுரரை உள்ளம் பேதம் செய்திட்டு உயிருண்ட உபாயங்களும்" (கள்ள வேடத்தை தரித்துக் கொண்டு திரிபுரத்திலே புக்கபடியும், அசுரர்களோடு கலந்து, அவர்கள் உள்ளங்களை பேதம் செய்து அவர்களுடைய உயிர்களை உண்ட உபாயங்களும்) என்று எம்பெருமான் செய்த செயல்களை ஆழ்வார் அருளிச்செய்கிறார். இவ்வாறு எம்பெருமான் செய்திருக்கச் செய்தேயும் திரிபுரத்தை அழித்தது சிவனே என்னும்படி அவனுக்குப் பெருமையைத் தந்தான். எம்பெருமான் அந்தராத்மாவாய் நிற்கையாலேயே அனைத்துத் தேவதைகளுக்கும் உயர்வு ஏற்படுகிறது என்பதை விளக்குவதற்கு ஓர் **ஐதிஹ்யம்** கூறப்படுகிறது.*

விளக்கம்

முன்பு ஒரு அரசன் சிவனே முழுமுதற் கடவுள் என்று ஓலையில் எழுதிக் கையெழுத்திட்டு தாருங்கள் என்று அனைவரையும் வற்புறுத்தினான். பலரும்

1. பிள்ளானுடைய ஆறாயிரப்படி உரையில் இக்கருத்து இடம்பெறவில்லை. பிள்ளான் இவ்வாறு அருளிச்செய்தமை இருபத்து நாலாயிரப்படி உரையிலும் குறிப்பிடப்பெற்றுள்ளது.

அவனுக்கு அஞ்சிக் கையெழுத்திட்டு வந்தார்கள். அப்போது ஒருவர் **(கூரத்தாழ்வான்)** *(தம்மையும் அப்படிக் கையெழுத்திடும்படி வற்புறுத்தியபோது) அவ்வரசனை நோக்கி, "நீ இவ்வோலை தொலையாமல் காப்பாற்றி வைத்தால்தான் சிவனே முழுமுதற் கடவுள் என்று உன்னால் நிரூபிக்கமுடியும். நீ நினைக்கின்ற தேவதைகளுக்கு உண்டான உயர்வுகள் அனைத்தும் ஸர்வேச்வரனான நாராயணனாலே அளிக்கப்பெற்றவை என்று வேதங்கள் முதலிய பிரமாணங்கள் அனைத்தும் கூறுகின்றன. எனவே, இன்று நீ இப்படிச் சொல்வதற்காக, நானும் எழுதிக் கையெழுத்து இடுகிறேன் என்று வைத்துக் கொள்வோம். நாளை அறிவுள்ள ஒருவன் தோன்றி "வேதங்கள் நாராயணனே பரதெய்வம் என்று கூறாநிற்க, இவன் இப்படி எழுதி வைத்திருக்கிறானே! இவன் அறிவிலி" என்றன்றோ என்னை நினைப்பான். இப்படி ஒருவன் என்னை அறிவிலி என்று கூறுவதைக் கேட்பதை விட, இன்று நீ என்னை என்ன செய்ய வேண்டுமென்று நினைக்கிறாயோ அதைச் செய்துகொள்" என்றாராம்.*[1]

[633]

(வெள்ளநீர் இத்யாதி) இது ஆளவந்தார் அருளிச் செய்தாராகத் திருமாலையாண்டான் பணிக்கும்படி "ப்₃ரஹ்மருத்₃ரர்கள் நடுவே நின்றதொரு முதல் களவுண்டு, அத்தைச் சொல்லுகிறது" என்றாயிற்று. அதாவது ருத்₃ரனையும் தன்னையும் ஸமமாகச் சொல்லலாம்படி த்ரிமூர்த்திமத்₄யஸ்தி₂தியைச் சொல்லுகிறதென்று. இத்தை எம்பெருமானார் கேட்டருளி, "அழகிது. ஆனாலும் அத்தனை தூரம் தேடிப் போக வேணுமோ, இவன்தன் விஷயத்திலே முன்பு பண்ணின உபகாரத்துக்கு ஓரளவு உண்டோ, இதுதானே அமையாதோ" என்று அருளிச் செய்தார்.

(திருவாய்மொழி 5-10-4 ஈடு வியாக்கியானம்)

நிகழ்டம்

"வெள்ள நீர்ச்சடையானும் நின்னிடை வேறலாமை விளங்க நின்றதும்" (கங்கையின் நீர் வெள்ளத்தை சடையிலே தரித்த சிவன் உன்னிடத்தில் வேறுபாடில்லாமல் விளங்கியதும்) என்றருளிச் செய்கிறார் ஆழ்வார். இது குறித்த **நிர்வாஹங்கள்** *கூறப்பெறுகின்றன.*

1. இங்கு இப்படிக் கூறியவர் பெயர் குறிப்பிடப்படவில்லை. ஆயினும் சோழ அரசன் ஒருவன் "சிவாத்பரதரம் நாஸ்தி" என்று எழுத்திட வேண்டும் அனைவரையும் வற்புறுத்தியமை, ஸ்ரீராமானுஜரைக் காப்பதற்காகக் கூரத்தாழ்வான் ஸ்ரீராமானுஜர் வேஷத்தில் சென்று சோழவரசனை மறுத்து வாதம் செய்தமை, இதனால் கோபம் கொண்ட அரசன் ஆழ்வானுடைய கண்களைப் பிடுங்கி விடும்படி உத்தரவிட, ஆழ்வான் தாமே தமது கண்களைப் பிடுங்கிக் கொண்டமை முதலிய வரலாறுகள் ஆறாயிரப்படி குருபரம்பராப்ரபாவத்தில் காணத்தக்கன.

விளக்கம்

"பிரமனுக்கும் சிவனுக்குமிடையில் எம்பெருமான் முதன்முதலில் விஷ்ணு என்ற அவதாரத்தைச் செய்தான். இப்படி அவ்விருவருக்கும் சமமாகத் தன்னையும் சொல்லலாம்படி அவதரித்ததையே இங்கு ஆழ்வார் அருளிச் செய்கிறார்" என்று ஆளவந்தார் கூறியதாகத் திருமாலையாண்டான் எம்பெருமானாரிடம் கூறினார். இதைக் கேட்ட எம்பெருமானார், "இது அழகிய பொருள்தான். ஆனாலும் அவ்வளவு தூரம் செல்ல வேண்டுமோ? இப்பாட்டிலேயே முன்னடிகளில் "கள்ளவேடத்தைக் கொண்டுபோய்" என்று திரிபுர தகனம் செய்வதற்கு உதவிய சரித்திரம் கூறப்பெற்றிருக்கிறது. இப்படி சிவன் திறத்தில் எம்பெருமான் முன்பு செய்துள்ள உபகாரங்களுக்கு ஓர் அளவுண்டோ? சிவன் செய்கிறவை அனைத்திற்கும் எம்பெருமான் அந்தராத்மாவாக நின்று, 'சிவனே செய்தான்' என்று கூறலாம்படி இருக்கின்றானே! எம்பெருமானிடத்தில் வேறுபாடில்லாமல் சிவன் விளங்குகிறான் என்பதற்கு இதுவே போதாதோ?" என்றருளிச் செய்தார்.

[634]

(நின்ற இத்யாதி) வடக்கு நின்றும் போரப் பாடவல்லராயிருப்பார் ஒருத்தர் பெருமாளைத் திருவடி தொழவேணும் என்று வர, ஆழ்வார் திருவரங்கப் பெருமாளரையர் தீர்த்ததினத்தன்று இரா திருமாலையைப் பாடிச் சமைந்து பெருமாளை மத்தக$_3$ஜங்களை ஏத்துமா போலே ஏத்தி, வசமாக்கிக் கணிசங்கொண்டு, "நாயன்தே! தேவர் திருவடிகளுக்குப் போர நல்லானொருத்தன் எழுநூற்றுக்காதம் ஆறு உண்டு தேவரைத் திருவடி தொழ வேணும் என்று வருகிறது. இவனை அழைத்துக் கொண்டு ஸம்ப$_4$ாவனை பண்ணியருள வேணும்" என்ன, பெருமாளும் "அப்படியே செய்கிறோம்" என்று திருவுள்ளமாய், அருளப் பாடிட்டு, திருப்புன்னைக் கீழ் நின்றும் அவர் நின்ற இடத்தளவும் செல்ல, நாலு கோல்தறை திருக்கைத்தலத்திலே எழுந்தருளி, விண்ணப்பம் செய்வார்களை யெல்லாம் அருளப்பாடிட்டு, "வாரிகோள், இவன் வந்த தூ$_3$ரத்துக்கெல்லாம் போருமோ நாம் இவனுக்குச் செய்த தரம்" என்று திருவுள்ளமானார்.

(திருவாய்மொழி 5-10-6 ஈடு வியாக்கியானம்)

விளக்கம்

"நின்றவாறும், இருந்தவாறும், கிடந்தவாறும், நினைப்பரியன" என்று எம்பெருமான் அடியவர்களுக்காகச் செய்த செயல்களை ஆழ்வார் நினைத்து உருகுகிறார். இத்தொடர்பில் ஓர் **ஐதிஹ்யம்** *கூறப்பெறுகிறது.*

விளக்கம்

மிகவும் அழகாகப் பாடவல்லவர் ஒருவர் திருவரங்கத்தில் பெருமாளை ஸேவிக்க வேண்டும் என்று வடதேசத்திலிருந்து வந்தார். அன்றையதினம் தீர்த்தவாரி இரவாகையால், **ஆழ்வார் திருவரங்கப் பெருமாள் அரையர்** *திருமாலை திவ்யப் பிரபந்தத்தைப் பாடி முடித்து, மதயானைகளை வழிக்குக் கொண்டு வருவது போல் பெருமாளை நன்றாகப் போற்றி, தம் வசப்படுத்திக் கொண்டு பெருமாளிடம் விண்ணப்பித்தார்: "நாயன்தே! தேவரீருடைய திருவடிகளுக்கு மிகவும் நல்லவனாக உள்ள இவன் தேவரீரை ஸேவிக்க வேண்டுமென்று எழுநூறு காததூரம் நடந்து வந்திருக்கிறான். அதற்குத் தகுதியாக இவனுக்கு வெகுமதிளிக்க வேண்டும்" என்று வேண்டினார். பெருமாளும் "அப்படியே செய்கிறோம்" என்று கூறி அருளப்பாடிட்டு, திருப்புன்னை மரத்தடியிலிருந்து அவர் நின்றிருந்த தூரம் வரை நாலுகோல் தறையளவு திருக்கைத்தலத்திலே அழகிய நடையுடன் எழுந்தருளினார். விண்ணப்பம் செய்வார்களான அரையர்களையும் அருளப்பாடிட்டு அழைத்து, "வாருங்கள், இவன் நடந்து வந்த தூரத்துக்கெல்லாம் போதுமோ (நாம் இப்போது நடையழகு காட்டி இவ்வளவு தூரம் நடந்த) இந்த வெகுமதி" என்று கேட்டார்.*[1]

[635]

ஒருநாள் ஸ்ரீவைஷ்ணவ வண்ணாத்தான் திருப்பரிவட்டங்களை அழகிதாக வாட்டி, எம்பெருமானார்க்குக் கொண்டு வந்து காட்ட, போர த்ருப்தராய், இவனையும் கூட்டிக் கொண்டு, பெருமாள் பாடேபுக்கு, "நாயன்தே! இவன் திருவரைக்கீடாம்படி இவற்றைத் தொட்ட படி பார்த்தருள வேணும்" என்று காட்ட, கண்டு போர உகந்தருளி, எம்பெருமானாரை அருளப்பாடிட்டு, "இவனுக்காக கம்ஸனுடைய ஈரங்கொல்லி நம் திறத்தில் பண்ணின குற்றம் பொறுத்தோம்" என்று திருவுள்ளமானார்.

(திருவாய்மொழி 5-10-6 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

"நின்றவாறும், இருந்தவாறும், கிடந்தவாறும், நினைப்பரியன" என்று எம்பெருமான் அடியவர்களுக்காகச் செய்த செயல்களை ஆழ்வார் நினைத்து உருகுகிறார். இத்தொடர்பில் வடதேசத்திலிருந்து வந்த ஒருவருவருக்காக எம்பெருமான் நடையழகு காட்டிய ஐதிஹ்யம் கீழே (எண் 634) கூறப்பட்டது. நல்லவன் ஒருவனுக்கு அடியவர் ஒருவருடைய புருஷகாரத்தினால் எம்பெருமான் அப்படி அருள் புரிந்ததுபோல கெட்டவன் ஒருவனுக்கும் புருஷகாரபலத்தினால்

1. இவ்வைதிஹ்யம் மற்றோரிடத்திலும் உள்ளது. எண் 688 பார்க்க.

எம்பெருமான் அப்படி அருள் புரிவான் என்பதற்கு ஓர் **ஐதிஹ்யம்** கூறப்பெறுகிறது.

விளக்கம்

எண் 549ன் விளக்கம் பார்க்க.

[636]

'நின்றவாறும் இருந்தவாறும் கிடந்தவாறும்' என்று ஆழ்வார் பாடா நிற்க, "இவையெல்லாம் தொட்டிலிலே" என்றருளிச் செய்தார் எம்பெருமானார். தொட்டிற் பழுவைப் பிடித்துக் கொண்டு நிற்கும்படியும், தரித்து நிற்கமாட்டாமை விழுந்திருக்கும்படியும், அதுதான் பொறுக்கமாட்டாமை சாய்ந்து கிடக்கும் படியும் சொல்லுகிறது.

(திருவாய்மொழி 5-10-6 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

"நின்றவாறும் இருந்தவாறும் கிடந்தவாறும் நினைப்பரியன" (எம்பெருமான் நின்றபடியும், இருந்தபடியும், கிடந்தபடியும் நினைப்பதற்கும் அரியனவாகும்) என்று ஆழ்வார் ஈடுபட்டு அருளிச் செய்கிறார். இதற்குப் பலவிதமாக விளக்கங்களை அளித்த உரையாசிரியர் எம்பெருமானார் அளித்த **நிர்வாஹம்** ஒன்றையும் எடுத்துக் காட்டுகிறார்.

விளக்கம்

ஆழ்வார் திருவரங்கப் பெருமாள் அரையர் "நின்றவாறும் இருந்தவாறும் கிடந்தவாறும்" என்று ஒருமுறை (அரையர் சேவையில்) பாடியபோது "இவையெல்லாம் (கண்ணபிரான்) தொட்டிலிலே செய்தவை" என்று **எம்பெருமானார்** அருளிச் செய்தாராம். அதாவது சிறு குழந்தையான கண்ணன் தொட்டில் சங்கிலியைப் பிடித்துக் கொண்டு நின்றது; குழந்தையாகையால் தரித்து நிற்க முடியாமல் தொட்டிலிலேயே அமர்ந்து விட்டது; அதுவும் முடியாமல் தொட்டிலிலேயே சாய்ந்து சயனித்தது ஆகியவற்றையே இங்கு 'நின்றவாறும் இருந்தவாறும் கிடந்தவாறும்' என்று ஆழ்வார் அருளிச் செய்கிறார் என்று எம்பெருமானார் அருளிச்செய்தார்.[1] 'பிறந்தவாறும்" என்கிற திருவாய்மொழி முழுவதும் ஆழ்வார் கிருஷ்ணாவதார அனுபவத்தில் ஈடுபட்டு பாசுரம் அருளிச் செய்கின்றபடியால் இப்பாசுரத்தையும் கிருஷ்ணாவதார அனுபவமாகவே கொண்டு எம்பெருமானார் இவ்வாறு பொருள் அருளிச் செய்தார்.

1. 'நின்றவாறும் இருந்தவாறும் கிடந்தவாறும்' என்பதற்கு இவ்வாறு அபிநயம் செய்ய வேண்டும் என்று அரையருக்கு எம்பெருமானார் உணர்த்தினார் என்றும் பொருள் கொள்ளலாம்.

[637]

உருத்தோறும் இத்திருவாய்மொழி அருளிச் செய்யப் புக்கவாறே சீயர் அருளிச் செய்யும் வார்த்தை - "பாண்டவர்கள் கார்யத்துக்காகத் தன்னையோக்கி அவர்கள் கழுத்தைக் கட்டிக் கொண்டு கூடத் திரியச் செய்தேயும் அவர்கள் பட்ட வ்யஸநமெல்லாம் படுகிறார் காணும் இவரும். அவர்கள்தான் ஒரு த$_4$ர்மாப$_4$ாஸம் உண்டு என்றிருக்கையாலே வ்யஸநப்படுகிறார்கள். இவர்க்கு அதுவும் இன்றிக்கேயிருக்க என்செய்யப்படுகிறார்?" என்றருளிச் செய்வர்.

(6–1 ஈடு வியாக்கியான ப்ரவேசம்)

நிகழ்டம்

'வைகல்பூங்கழிவாய்' என்று தொடங்கும் இத்திருவாய்மொழியில், எம்பெருமானோடு உடனே கலக்க வேண்டும் என்ற பேரவாவினால் ஆற்றாமை மீதூர்ந்து நாயகி நிலையை அடைந்த ஆழ்வார், தம் அருகிலுள்ள பறவைகளை எம்பெருமானிடம் தூது விடும்போது தம் துன்பத்தையெல்லாம் அப்பறவை களிடம் கூறி, எம்பெருமானிடம் கூறும்படி கூறுகிறார். இத்தொடர்பில் நஞ்சீயர் அருளிசெய்த **வார்த்தை** *ஒன்று எடுத்துக் காட்டப்பெறுகிறது.*

விளக்கம்

இத்திருவாய்மொழியில் ஆழ்வார் படுகிற துன்பத்தைக் கருத்தில் கொண்டு **நஞ்சீயர்**, *இத்திருவாய்மொழியை விளக்கியருளும் ஒவ்வொரு முறையும் பின்வரும் கருத்துகளைத் தெரிவிப்பாராம். "கண்ணபிரான் பாண்டவர்களுக்கு உற்ற துணைவனாக இருந்து, அவர்கள் போகுமிடங்களுக்கெல்லாம், அவர்கள் கழுத்தைக் கட்டிக் கொண்டு பின் தொடர்ந்து சென்றான். ஆயினும், அவர்கள் படாத துன்பமில்லை. அவர்களைப் போலவன்றோ இங்கு ஆழ்வாரும் துன்பப்படுகிறார். ஆனால் பாண்டவர்களாவது உண்மையையே கடைப்பிடித்தல் என்ற போலித் தருமத்தைக் கைக்கொண்டு (ஸாக்ஷாத் தர்மமாகக் கண்ணபிரானைப் பற்றாமல்) இருந்தமையால் துன்பப்பட்டார்கள். ஆனால் ஆழ்வாரோ அனைத்தையும் விட்டு எம்பெருமானையே எல்லாமாகப் பற்றியிருக்கச் செய்தேயும் ஏன் இப்படித் துன்பப்படுகிறார்?" என்றருளிச் செய்வராம் நஞ்சீயர்.*

[638]

(கைகள் கூப்பி) "அவனுக்கு மறுக்க ஒண்ணாத அஞ்சலியைப் பண்ணுங்கோள். ப$_2$லத்தோடு வ்யபிசரியாத செயலைச் செய்யுங்கோள்" என்று பூர்வர்கள் நிர்வஹிப்பர்கள். பத்தாம் பாட்டிலேயாயிற்று இன்னாப்பு ப்ரஸிங்கி$_3$ப்பது. ப$_4$ட்டர் பத்துப்பாட்டிலும் இன்னாப்புத் தோற்ற

நிர்வஹித்தருளுவர். "முன்பு போலே என்றிராதே, 'பெரிய முதலிகள், கும்பிடுங்கள், கும்பிட்டவாறே முகம் பார்ப்பர். பின்னை முகம் மாறுவதற்கு முன்னே என் தலைமையைச் சொல்லுங்கள்."

(திருவாய்மொழி 6-1-1 இருபத்து நாலாயிரப்படி வியாக்கியானம்)

நிகழிடம்

எம்பெருமானிடத்தில் பறவைகளைத் தூது விடுகின்ற பராங்குச நாயகி "கைகள் கூப்பிச் சொல்லீர்" (எம்பெருமானிடம் சென்று கைகளைக் கூப்பிக் கொண்டு நின்று நான் சொல்கிற வார்த்தைகளைக் கூறுங்கள்) என்கிறாள். இதுகுறித்து இரு **நிர்வாஹங்கள்** காட்டப்பெறகின்றன.

விளக்கம்

"அவனால் மறுக்க முடியாததான அஞ்சலியை (வணக்கத்தை)ச் செய்யுங்கள். எந்த ஒரு செயலைச் செய்தால், நாம் வேண்டிய பலனைக் கொடுக்காமல் அவனால் இருக்க முடியாதோ அப்படிப் பட்ட அஞ்சலியைச் செய்யுங்கள்" என்று **பூர்வாசார்யர்கள்** விளக்கமளித்தனர். 'கைகள் கூப்பி' என்றது ஊடலினால் ஏற்பட்ட கோபத்தினால் சொன்ன சொல்லாகக் கொள்ளலாமோ எனில் இப்பதிகத்தில் பத்தாம் பாசுரத்திலேயே ஆழ்வாருக்கு ஊடலினால் ஏற்பட்ட கோபம் தோன்றுவது என்று கொண்டு இப்பாசுரத்திற்கு இப்படி விளக்கமளித்தனர். ஆனால் **பட்டர்** பத்துப் பாசுரங்களிலும் ஊடலினால் ஏற்பட்ட கோபம் தோன்றுமாறு பாசுரங்களை விளக்குவர். "அவரை முன்பு போல என்று எண்ணியிராதீர்! அவர் மிகவும் மதிப்புடையவராகி விட்டார்; அவர் முன்சென்று கைகூப்புங்கள். அப்படிக் கும்பிட்டால்தான் அவர் உங்கள் முகம் பார்ப்பர். மறுபடியும் முகத்தைச் சடக்கெனத் திருப்பிக் கொள்வதற்குள் என் நிலையை அவருக்குத் தெரிவித்து விடுங்கள்" என்று (ஊடல் தோன்ற) ஆழ்வார் கூறுகிறார் என்று பட்டர் விளக்கியருள்வராம்.[1]

[639]

(பாதம் கைதொழுது) "கைகள் கூப்பி என்றதே. தொழுதார்க்கு நிற்க ஒண்ணாதிறே. உண்ணா நிற்க, மிடற்றைப் பிடிக்காப்போலே இருப்பதொன்றிறே தொழுது வைத்து விழாதே ஒழியுமது" என்று பூர்வர்கள் நிர்வஹிக்கும்படி. "மதித்தானொரு ஸ்ரீவைஷ்ணவன் ஸ்ரீபாதத்தே தலைபட தண்டனிட்டவன்று எனக்கு உண்டு பசிகெட்டாப்போலேயிருக்கும்" என்றருளிச் செய்வர் சீயர்.

(திருவாய்மொழி 6-1-2 ஈடு வியாக்கியானம்)

1. ஈடு முப்பத்தாறாயிரப்படி உரையிலும் இவ்விளக்கங்கள் அருளிச்செய்தமை சுருக்கமாகக் கூறப்பெற்றுள்ளது.

நிகழிடம்

எம்பெருமானிடம் பறவைகளைத் தூது விடுகின்ற பராங்குசநாயகி "பாதம் கைதொழுது பணியீர்" என்கிறாள். "எம்பெருமானுடைய திருவடிகளில் விழுந்து வணங்கிச் சொல்லுங்கள்" என்கிறாள். இதுகுறித்துச் சில **வார்த்தைகள்** *காட்டப் பெறுகின்றன.*

விளக்கம்

"கீழ்ப் பாசுரத்தில் "கைகள் கூப்பி" என்று கூறப்பட்டது. அப்படிக் கைகளைக் கூப்பியவர்களுக்கு அதோடு நின்று விட முடியாது; திருவடிகளில் விழுந்து வணங்கவும் தோன்றும். (அதனால்தான் இப்பாசுரத்தில் "பாதம் கைதொழுது" என்கிறாள் பராங்குச நாயகி.) சோற்றை உண்டு கொண்டிருக்கும் போது கழுத்தைப் பிடிப்பது போலன்றோ, கைகள் கூப்பியவுடன் பாதங்களில் விழுந்து வணங்காமல் இருப்பது" என்று **பூர்வாசார்யர்கள்** *உரைப்பர்.*

"மதிப்புள்ள ஸ்ரீவைஷ்ணவன் ஒருவனுடைய திருவடிகளில் என் தலைபடும் படியாக விழுந்து வணங்கியவன்று எனக்கு வயிறார உண்டு பசி கெட்டாற் போல் இருக்கும்" என்று **நஞ்சீயர்** *அருளிச் செய்வராம்.*

[640]

(கனிவாய் இத்யாதி) "இவளை வென்றோம் என்னும் ஹர்ஷத்தாலே கையில் திருவாழியை ச் சுழற்றி ஸ்மிதம் பண்ணி முதன்மை தோற்ற இருக்கிற இருப்பு" என்று பட்டர் அருளிச் செய்வர்.

(திருவாய்மொழி 6-1-3 இருபத்து நாலாயிரப்படி வியாக்கியானம்)

நிகழிடம்

எம்பெருமானிடம் பறவைகளைத் தூது அனுப்புகின்ற பராங்குச நாயகி 'கறங்கு சக்கரக்கைக் கனிவாய்ப் பெருமானைக் கண்டு' தன்னைப் பற்றிக் கூறும்படி வேண்டுகிறாள். இங்கு 'கறங்குச் சக்கரக் கைக் கனிவாய்ப் பெருமான்' (சுழன்று வருகின்ற சக்கரத்தைக் கையிலே உடையவனாய், கனிபோல் சிவந்த வாயையும் உடைய பெருமான்) என்று பரரங்குச நாயகி கூறியதன் உட்கருத்தை விளக்கி பட்டர் அருளிச்செய்த **வார்த்தை** *எடுத்துக் காட்டப்பெறுகிறது.*

விளக்கம்

"இவளை வென்று விட்டோம் என்ற மகிழ்ச்சியினால் கையிலுள்ள சக்கராயுதத்தைச் சுழற்றி, புன்சிரிப்புடன் வெற்றியால் வந்த முக்கியத்வம் (முதன்மை) தோன்றும்படியாக எழுந்தருளியிருக்கின்ற இருப்பையே

பராங்குசநாயகி "கறங்குச் சக்கரக்கைக் கனிவாய்ப் பெருமான்" என்கிறாள் என்று **பட்டர்** *அருளிச் செய்வர்.*[1]

[641]

(நெடுமாலை) அன்றிக்கே "ப்ரமஹரமான வடிவை எனக்கு உபகரித்து ப$_4$வ்யனாய், இன்று எட்டாதே இருக்கிறவனைக் கண்டு" இது ப$_4$ட்டர் நிர்வாஹம்.

(திருவாய்மொழி 6-1-4 இருபத்து நாலாயிரப்படி வியாக்கியானம்)

நிகழிடம்

எம்பெருமானிடம் பறவைகளைத் தூது அனுப்புகின்ற பராங்குச நாயகி 'கண்ணனை நெடுமாலைக் கண்டு' என் வார்த்தைகளைக் கூறுங்கள் என்கிறாள். இங்கு "கண்ணனை நெடுமாலை" என்று பராங்குச நாயகி கூறுவதன் உட்கருத்தை விளக்குகின்ற பட்டர் அருளிச்செய்த **வார்த்தை** *கூறப்பெறுகிறது.*

விளக்கம்

"தன்னைக் கண்டவர்வர்களுடைய களைப்பை ஆற்றும்படியான தன்னுடைய இனிய வடிவை மிகவும் பணிவுடையவனாய் எனக்குத் தந்துவிட்டு இன்று எனக்கு எட்டாமல் மிகவும் பெரியவனாக இருக்கின்றவன்" என்று **பட்டர்** *கருத்துரைத்தார்.*[2] *(கண்ணன் என்பதற்கு மிகவும் பணிவுடையவன் என்றும், நெடுமால் என்பதற்கு மிகவும் பெரியவன் என்றும் பொருள் கொண்டு உரைத்த கருத்து இதுவாகும்.)*

[642]

(புன்னை மேல்) பிள்ளையமுதனார் திருவிருந்தவரைமார்பனை "இப்பத$_3$த்துக்கு ப$_4$ட்டர் அருளிச் செய்ததென்?" என்று கேட்க, "தன் ஆர்த்தி அவற்றின் செவியிலேபடும்படி உயரச் சொல்லுகிறாள் என்றருளிச் செய்தார்" என்ன, "நெய்தல் நிலத்தில் புன்னை படர்ந்தன்றோ கிடப்பது, இங்ஙனே சொல்லக் கூடுமோ?" என்ன, அவன் ப$_4$ட்டர் பாடே வந்து "இங்ஙனே பணித்தார்" என்ன, இவ்வர்த்த$_2$த்துக்கு நிர்ணாயகம் இசையாயிற்று. அது 'போற்றி' என்று உயரச் சொல்லியிருக்குமோ? தாழச் சொல்லியிருக்குமோ?" என்றருளிச் செய்தார்.

(திருவாய்மொழி 6-1-6 ஈடு வியாக்கியானம்)

1. இக்கருத்து ஈடு முப்பத்தாறாயிரப்படியிலும் குறிப்பிடப்பெற்றிருந்தாலும் அங்கு இது பட்டர் அருளிச்செய்த கருத்து என்று குறிப்பிடப்பெறவில்லை.

2. இக்கருத்து ஈடு முப்பத்தாறாயிரப்படியிலும் குறிப்பிடப்பெற்றிருந்தாலும் அங்கு இது பட்டர் அருளிச்செய்த கருத்து என்று குறிப்பிடப்பெறவில்லை.

நிகழிடம்

எம்பெருமானிடம் தூது செல்லும்படி பறவைகளை இரக்கின்ற பராங்குச நாயகி "போற்றி யான் இரந்தேன் புன்னை மேல் உறை பூங்குயில்காள்" என்கிறாள். இத்தொடர்பில் ஒரு **ஸம்வாதம்** *கூறப்பெறுகிறது.*

விளக்கம்

"புன்னையின் மேலே உறைகின்ற பூங்குயில்களே!" என்ற இப்பதங்களுக்கு பட்டர் அருளிச் செய்யும் விளக்கம் யாது என்று அறிய விரும்பிய **பிள்ளை அமுதனார்**, *பட்டருடைய சீடரான* **திருவிருந்தவரைமார்பன்** *என்பவரை நோக்கி "இப்பதத்திற்கு பட்டர் அருளிச் செய்யும் விளக்கம் என்ன?" என்று கேட்டார். "தன் துயரமெல்லாம் புன்னையின் மேலே உறைகின்ற குயில்களின் செவியிலே படும்படி உயரச் (உரக்கச்) சொல்லுகிறாள் பராங்குசநாயகி என்று பட்டர் அருளிச் செய்தார்" என்று திருவிருந்தவரைமார்பன் கூறினார். இதைக் கேட்ட பிள்ளை அமுதனார் "நெய்தல் நிலத்தில் புன்னை படர்ந்தன்றோ இருப்பது! எனவே தாழவன்றோ சொல்லியிருக்க வேண்டும்! உயரச் சொல்லுகின்றாள் என்பது எப்படிப் பொருந்தும்?" என்று கேட்டார். இதை அப்படியே திருவிருந்தவரை மார்பன் பட்டரிடம் வந்து கூறினார். இதைக் கேட்ட பட்டர் "இங்குப் பொருளை நிர்ணயிக்க உதவுவது இசையன்றோ! (எம்பெருமானைப் பிரிந்த வருத்தத்தினால் கதறுகின்ற பிராட்டியின் பாசுரமாகையாலே) அது உயரச் சொல்லியிருக்குமோ! தாழச் சொல்லியிருக்குமோ?" என்றருளிச் செய்தார்.*

[643]

(ஒரு வண்ணம் சென்றுபுக்கு) இதுக்கு இரண்டு படியாக அருளிச் செய்வர். இத்தலையில் தனிமை நினையாதே போய் நிற்கையாலே, போர முதலிகளாயிருப்பர். மேன்மேலெனப் பிரம்புகள் விழும்; அத்தைப் பொறுத்துப் போய்ப் புகுங்கோள். அன்றியே, வழியிலே நெஞ்சை அபஹரிக்கும் போக்யதையை உடைத்து, அதில் கால் தாழாதே ஒருபடி சென்றுபுக்கு.

(திருவாய்மொழி 6-1-7 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

எம்பெருமானிடம் பறவைகளைத் தூது அனுப்புகின்ற பராங்குச நாயகி "ஒருவண்ணம் சென்றுபுக்கு" என்கிறாள். இதற்கு இரண்டு **நிர்வாஹங்கள்** *காட்டப்பெறுகின்றன.*

விளக்கம்

பராங்குச நாயகியான தன்னைப் பிரிந்து தனிமையில் விட்டுப் போன எம்பெருமான் இப்போது மிகவும் மேன்மையுடன் பெரிய முதலியாக (செல்வச்

செருக்கு உடையவனாக) இருப்பான். எனவே அங்கே சென்றால் உங்களுக்குப் பிரம்படிகள் முதலிய தண்டனைகள் கிடைக்கலாம்; அவற்றையெல்லாம் எனக்காகப் பொறுத்துக் கொண்டு ஒருவாறு தூது செல்லுங்கள் என்று பறவைகளைப் பார்த்துப் பராங்குச நாயகி கூறுகிறாள் என்பது ஒரு விளக்கம்.[1]

எம்பெருமான் இருக்கின்ற இடத்திற்குச் செல்லும் வழியானது மனத்தைக் கவரும் வகையில் மிகவும் அழகாக இருக்கும். அவற்றில் கால் தாழாமல் வருந்தியாகிலும் ஒருவாறு அவற்றை கடந்து எம்பெருமானிடம் செல்லுங்கள் என்று பறவைகளைப் பார்த்துப் பராங்குச நாயகி கூறுகிறாள் என்பது மற்றொரு விளக்கமாகும். இவ்விரண்டு விளக்கங்களையும் **நம்பிள்ளை** *அருளிச்செய்வர்.*

[644]

“சில வண்டுகளைக் குறித்து, ‘அவர் இத்தலையில் ஸத்தையுமில்லை என்றிருப்பர், அவளும் உளள் என்று சொல்லுங்கோள்’ என்கிறாள்” என்று ஆளவந்தார் அருளிச் செய்வர். “இத்தலையில்லையாகில் அத்தலையுண்டாகக் கூடாது. ‘பெண் பிறந்தார் கார்யமெல்லாம் செய்தோம்’ என்று க்ருதக்ருத்யராயிருக்கிறவர்க்கு, ரக்ஷ்யவர்க்கத்திலே நானுமொருத்தி உண்டென்று சொல்லுங்கோள் என்கிறாள்” என்று எம்பெருமானார் அருளிச் செய்வர்.

.......... ஆளவந்தார் அருளிச் செய்ததாகத் திருமாலையாண்டான் பணிக்கும்படி, “இத்தலையைப் பிரிந்தாரில் இருப்பாரில்லை என்று இருக்கையாலே வாராதொழிந்தார் அத்தனை; இத்தலையில் ஸத்தை உள்ளமையை அறிவியுங்கோள்” என்று. இத்தை எம்பெருமானார் கேட்டருளி, “அழகிது, ஆகிலும் ‘இன்றியமையாமை’ என்று தமிழரதொரு ப்ரவாதமும் உண்டு. அதாகிறது ஒரு தலை உண்டானால் ஒரு தலை இன்றிக்கே இராது. இரண்டு தலையும் உண்டாதல், இரண்டு தலையும் இன்றிக்கே ஒழிதல் இத்தனையாயிற்று. அதில் தாம் உளர் ஆகையாலே இத்தலையும் உண்டு என்கை நிஸ்சிதம். ஆனபின்பு ப்ரதிகூலித்தாரைக் கிழங்கெடுத்துப் பொகட்டு, அநுகூலித்தார் தலையிலே முடியை வைத்து க்ருதக்ருத்யராய் ‘இனிக் கர்த்தவ்ய ஶேஷமில்லை’ என்று இருக்கிறவர்க்கு இன்னமும் ரக்ஷ்யவர்க்கம் ஒன்று உண்டு என்று சொல்லுங்கோள்” என்று.

(திருவாய்மொழி 6-1-10 ஈடு வியாக்கியானம்)

1. இவ்விளக்கத்தை அருளியவர் பட்டர் என்று அரும்பதவுரையில் குறிப்பிடப்பெறுகிறது. இதே பதிகத்தில் 1, 3, 4 ஆகிய பாசுரங்களில் (எண் 638, 640, 641) இதேபோல் எம்பெருமான் மேன்மை தோற்ற எழுந்தருளியிருப்பான் என்று பராங்குச நாயகி கூறுவதாக பட்டர் பொருள் உரைத்துள்ளமையால், இப்பாசுரத்திலும் அப்பொருளை பட்டரே உரைத்திருக்கலாம். (மற்றொரு விளக்கம் பூர்வர்களுடையது என்றும் அரும்பத உரையில் குறிப்பிடப்பெறுகிறது.)

நிகழிடம்

எம்பெருமானிடத்தில் பறவைகளைத் தூதனுப்புகிற பராங்குச நாயகி "ஏறு சேவகனார்க்கு என்னையும் உளள் என்மின்களே" என்கிறாள். இதற்கு ஆளவந்தார் எம்பெருமானார் ஆகிய இருவர் அருளிச் செய்த **நிர்வாஹங்கள்** *எடுத்துக் கூறப்படுகின்றன.*

விளக்கம்

"தன்னைப் பிரிந்தவர்கள் எவரும் உயிருடன் தரித்து இருக்கமாட்டார்கள் என்று கருதியே எம்பெருமான் மீண்டும் வரவில்லை. ஆனால் அவனைப் பிரிந்த நான் ஒருத்தி உயிருடன் இருக்கிறேன் என்பதை அவனுக்குச் சொல்லுங்கள் என்கிறாள் பராங்குச நாயகி" என்று **ஆளவந்தார்** *அருளிச் செய்தார் என்று* **திருமாலையாண்டான்** *கூறினார்.*

எம்பெருமானார் *இதைக் கேட்டு, "இப்பொருள் அழகியதுதான்; ஆயினும் உத்தம நாயகனும் நாயகியும் ஒருவரை விட்டு ஒருவர் பிரிந்து வெவ்வேறு இடங்களில் இருந்தாலும் ஒருவர் உயிரோடு இருந்தால் மற்றொருவரும் உயிருடனே இருப்பார்கள். ஒருவர் இறந்து விட்டால், மற்றொருவர் அதை அறியாவிட்டாலும் அவர்களுடைய உயிர் பிரிந்து விடும். இதைத் தமிழ்ப் புலவர்கள் 'இன்றியமையாமை' என்பர். எம்பெருமான் தான் உளனாகையால், நாயகியும் உளள் என்பதை அறிந்தே இருப்பன். அவன் (வாலி, ராவணன் முதலிய) விரோதிகளை அழித்து, (சுக்ரீவன், விபீஷணன் முதலிய) அடியவர்களுக்கு முடிசூட்டிச் செய்ய வேண்டிய செயல்களையெல்லாம் செய்து விட்டோம்; இனிச் செய்ய வேண்டுவது ஒன்றுமில்லை என்று நினைத்திருக்கிறான்! அவனிடம் சென்று இன்னும் அவனால் காப்பாற்றப்பட வேண்டியவள் நான் ஒருத்தி இருக்கிறேன் என்பதைப் போய்ச் சொல்லுங்கள் என்கிறாள் பராங்குச நாயகி" என்று பொருளுரைத்தார்! ("மாறில் போரரக்கன் மதிள்நீறெழச் செற்று உகந்த ஏறுசேவகனார்" என்று இப்பாசுரத்தில் உள்ள அடிகளைக் கருத்தில் கொண்டு எம்பெருமானார் இவ்வாறு அருளிச்செய்தார்.)*

[645]

இனி இத்திருவாய்மொழிதன்னைப் பூர்வாசார்யர்கள் "ப$_4$க$_3$வத் விஷயத்தில் ஸாபத்ந்யம் தோற்ற வார்த்தை சொல்லுகை ஶேஷத்வ லக்ஷணமன்று. வளவேழுலகிற்படியாலே அயோக்$_3$யதாநுஸந்தா$_4$நம் பண்ணுகிறார்" என்று நிர்வஹிப்பர்கள். அத்தை பட்டர் கேட்டு, "என் சொன்னார் ஆனார்கள்! இவர்க்கு

1. இருபத்து நாலாயிரப்படியிலும் ஆளவந்தாரும் எம்பெருமானாரும் இவ்வாறு அருளிச்செய்தமை குறிப்பிடப்பெற்றுள்ளது.

ப₃க₄வத் விஷயத்தில் உண்டான ருசிக்கு ப்ரகாமகம் இத்திருவாய்மொழியாய் இருக்கும். இதுக்கு வேறே ஒரு வழியிடுவதே! ஆனபின்பு, இதுவே பொருளாம் இத்தனை!" என்றருளிச் செய்தார்.

(திருவாய்மொழி 6-2 ஈடு வியாக்கியான ப்ரவேசம்)

நிகழிடம்

'மின்னிடை மடவார்' என்று தொடங்கும் திருவாய்மொழியில் ஆழ்வார், நாயகனுடன் ஊடல் கொண்ட நாயகியின் நிலையை அடைந்து, எம்பெருமானோடு கூட மறுக்கின்றார். இத்திருவாய்மொழியின் கருத்து பற்றி **நிர்வாஹங்கள்** *கூறப்பெறுகின்றன.*

விளக்கம்

இத்திருவாய்மொழியை விளக்கிய **பூர்வாசார்யர்கள்,** *எம்பெருமானுடன் மற்ற பெண்கள் கலப்பதைக் கண்டு ஊடல் கொண்ட நாயகியைப் போல் ஆழ்வார் பேசுகிறார் என்று கூறுவது அவருடைய சேஷத்வத்திற்குப் (அடிமைத் தன்மைக்குப்) பொருந்தாது. எனவே வளவேழுலகு என்ற திருவாய்மொழியிற் போலவே (1-5) தம்முடைய தாழ்வை நினைத்து எம்பெருமானுடன் கூடாமல் அகலுகிறார் என்று பொருளுரைத்தனர். ('உன்றன் திருவுள்ளம் இடர் கெடும் தோறும் நாங்கள் வியக்க இன்புறுதும்'' (திருவாய்மொழி 10-3-9) என்றருளிச் செய்கின்ற ஆழ்வார், மற்ற ஸ்ரீவைஷ்ணவர்களுடன் எம்பெருமான் கலப்பதைத் தமக்குப் பொறுக்க முடியாது என்று கூறுகிறார் என்பது அவருடைய சேஷத்வத்திற்குப் பொருந்தாது என்பது இவ்விளக்கத்தின் கருத்தாகும்.)*

இதைக் கேட்ட பட்டர், "என்ன சொன்னார்கள்? ஆழ்வாருக்கு எம்பெருமான் மீதுள்ள ஈடுபாட்டையெல்லாம் வெளிப்படுத்துவதன்றோ இத்திருவாய்மொழி! அப்படியிருக்க வேறு வழி தேடலாமோ? எனவே ஆழ்வார் எம்பெருமானுடன் ஊடல் கொண்டு பேசுகிறார் என்பதே சரியான பொருள்" என்றார். (எம்பெருமான் மீது ஆழ்வாருக்குள்ள ஈடுபாட்டின் மிகுதியினால் ஆழ்வார் அப்படிப் பேசுவது சேஷத்வத்திற்குப் பொருந்தாததன்று என்பது பட்டர் விளக்கத்தின் கருத்தாகும்.)

[646]

मामका: पाण्डवाश्चैव (மாமகா: பாண்ட₃வாஶ்சைவ) என்கிற இடத்துக்குச் சிறியாத்தான் சொல்லும்படி: "என்னுடையவர்கள் என்றும் பாண்ட₃வர்கள் என்றும் பிரித்தான்; அதுவிறே விநாஶபர்யந்தமாக்கிவிட்டது" என்று.

(திருவாய்மொழி 6-2-1 ஈடு வியாக்கியானம்)

நிகழ்டம்

எம்பெருமானுடன் ஊடல் கொண்ட பராங்குச நாயகி "என்னுடைய பந்தும் கழலும் தந்து போகுநம்பீ" என்கிறாள். 'என்னுடைய' என்று கூறுவதன் உட்கருத்தை விளக்குகின்ற உரையாசிரியர் பராங்குச நாயகி இப்போது முடியப் பார்க்கிறாள் என்றும், அவன் முன் 'என்னுடையது' என்று கூறுவதற்கு மேற்பட முடிவில்லையென்றும் உரையிட்டு, அகங்கார மமகாரங்கள் அழிவைத் தரும் என்பது குறித்துச் சிறியாத்தான் அருளிச்செய்த **வார்த்தை**களை எடுத்துக் காட்டுகிறார்.

விளக்கம்

மகாபாரதப் போர் துவங்குவதற்கு முன்னர் த்ருதராஷ்ட்ரன் சஞ்சயனை நோக்கி "மாமகா: பாண்டவா: சைவ கிமகுர்வத" (என்னுடைய பிள்ளைகளும், பாண்டவர்களும் என்ன செய்தார்கள்?) என்று கேட்டான். இவ்விடத்திற்குச் **சிறியாத்தான்** "திருதராஷ்டிரன் என்னுடையவர்கள் என்றும், பாண்டவர்கள் என்றும் பிரித்தான். 'என்னுடையவர்கள்' என்று அவன் மமகாரத்துடன் சொன்னதே அவர்கள் அழிவிற்குக் காரணமாகி விட்டது" என்றார்.

[647]

(நம்பீ) "கண்ட காட்சி புல்லெழுந்து போனபடியிறே இவள் இங்ஙன் சொல்லுகிறது" என்று பெரிய முதலியார் வார்த்தை.

(திருவாய்மொழி 6-2-1 ஈடு வியாக்கியானம்)

நிகழ்டம்

எம்பெருமானுடன் ஊடல் கொண்ட பராங்குச நாயகி 'என்னுடைய பந்தும் கழலும் தந்து போகு நம்பீ' என்கின்றாள். இங்கு 'நம்பீ' என்று பராங்குச நாயகி எம்பெருமானை விளித்ததன் சொல் நயத்தை விளக்குகின்ற உரையாசிரியர், "உம்முடைய முகம் பழகிய முகமாகத் தெரியவில்லை. மிகவும் மேன்மை உடையவருமாக இருக்கின்றீர்' என்று எம்பெருமானை நோக்கிப் பராங்குச நாயகி கூறுவதாக உரையிட்டார். எம்பெருமானுடைய முகம் பழகிய முகமாகத் தெரியவில்லை என்று பராங்குச நாயகி கூறுவதற்குக் காரணத்தைப் பெரிய முதலியார் **வார்த்தை** கொண்டு விளக்குகிறார்.

விளக்கம்

"தன்னுடன் கலந்து பிரிந்து சென்றுவிட்ட எம்பெருமானைக் கண்டு நெடுநாள்களாகிவிட்டபடியால் முன்பு அவனைக் கண்ட காட்சி அவளுக்குப் புல் முளைத்து விட்டது. (மறந்துவிட்டது.) எனவேதான் அவள் அப்படிக் கூறுகிறாள்" என்று **பெரிய முதலியார் (ஆளவந்தார்)** அருளிச் செய்வர்.

[648]

'இன்னமென் கையகத்து ஈங்கொருநாள் வருதியேல் என் சினம் தீர்வன் நானே' என்கிற இத்தை உய்ந்தபிள்ளை பாடாநிற்கச் செய்தே, காலாலே உதைப்பது, கையாலே தள்ளுவதாய் அபி₄நயித்துக் காட்டினார்; இத்தை எம்பார் கேட்டருளி, "அங்ஙன் அன்று; அது பின்னைப் பெற்றானாகில் அவன் நெடுநாள் ப்ரார்த்தித்துக் கிடந்ததன்றோ! ஆனபின்பு அதன்று பொருள்" என்று முகத்தைத் திரியவைத்துக் காட்டினார். "நீ அகன்று பண்ணினவையெல்லாம் உன் ஸன்னிதி₄யிலே உன்னைப் பண்ணுவேன் என்கிறாள்" என்றருளிச் செய்தார்.

(திருவாய்மொழி 6-2-2 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

எம்பெருமானுடன் ஊடல்கொண்டு பேசுகின்ற பராங்குச நாயகி "போகு நம்பீ" என்றாள். கோபித்துக் கொண்டிருந்த நாயகி, எம்பெருமானைப் 'போ' என்று சொன்னாலும் அவள் முகம் கொடுத்துப் பேசியதே அவனுக்கு மகிழ்ச்சியை விளைவித்தது என்று விளக்கிய உரையாசிரியர், அப்படி அவள் முகம் கொடுக்கவில்லையானால்தான் அவன் முகம் வாடும் என்பதற்கு "இன்னம் என் கையகத்து ஈங்கொருநாள் வருதியேல் என்சினம் தீர்வன் நானே" (இன்னம் ஒரு முறை என்முன் வருவாயானால் என்னுடைய சினத்தை நான் தீர்த்துக் கொள்வேன்) என்ற பெருமாள் திருமொழிப் (6-8) பாசுரத்தை எடுத்துக் காட்டி இதுகுறித்து **ஐதிஹ்யம்** *ஒன்றைக் கூறுகிறார்.*

விளக்கம்

எண் 165ன் விளக்கம் பார்க்க.

[649]

எம்பார்தாம் பா₃ஹ்ய விஷயங்களில் ருசி இல்லாமையாலே பதா₃ர்த்த₂ ஜ்ஞானம் இன்றிக்கே இருப்பர். இப்படி இருக்கையாலே "ஸ்த்ரீகளுக்கு அஸாத₄ாரண சிஹ்நங்கள் எங்ஙனே இருக்கும்படி?" என்று சிங்கப்பிரானைக் கேட்டருளினார் என்று ப்ரஸித்₃த₄மாயிருக்கும். இப்படி இருக்கிறவர்தாம் 'மின்னிடை மடவார்' அருளிச் செய்யப் புக்காராகில், "இந்த ஸந்யாஸி பிரட்டுப் பாடத் தொடங்கினார்" என்பராம் பிள்ளை உறங்காவில்லை தாஸர். இவருடைய ப₄க₃வத்₂விஷயத்தில் அவகா₃ஹநம் இருக்கும்படி!....... எம்பார் "ஈஶ்வரன் முன்னே வந்து நின்றாலும் 'வா' என்பாரையும் கிடையாத ஸம்ஸாரத்திலே அவன் அல்பம் தாழ்த்தான் என்னா, 'போ' என்பாரைப் பெறுவதே!" என்பர்.

(திருவாய்மொழி 6-2-2 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

"மின்னிடை மடவார்" என்று தொடங்கும் இத்திருவாய்மொழியில் நம்மாழ்வார் நாயகி நிலையை அடைந்து எம்பெருமானுடன் ஊடல்கொண்டு பாசுரம் அருளிச்செய்கிறார். இத் தொடர்பில், ஊடல் பாசுரங்களின் உட்கருத்தை எம்பார் மிக அழகாக விளக்குவர் என்பது கீழே (எண் 648ல்) கூறப்பெற்றது. ஆனால் எம்பார் உலகியல் இன்பங்களை முற்றும் துறந்தவர் என்பதை விளக்க **ஐதிஹ்யம்** *ஒன்று கூறப்பெறுகிறது.*

விளக்கம்

எம்பாருக்குத் திருமணம் நடந்தவன்றே, இல்வாழ்க்கையைத் துறந்து துறவறம் பூண்டு விட்டார். எனவே பகவானைப் பற்றிய விஷயங்களைத் தவிர மற்ற விஷயங்களில் ஒன்றும் அறியாதவராக அவர் இருப்பர். "பெண்களுக்குத் தனிப்பட்ட அங்க அடையாளங்கள் எப்படி இருக்கும்?" என்று சிங்கப்பிரான் என்பவரைக் கேட்டார் என்பது மிகவும் பிரசித்தம். ஆனால் அப்படிப்பட்டவர், பராங்குச நாயகி எம்பெருமானுடன் ஊடல் கொண்டு பேசும் 'மின்னிடை மடவார்' என்கிற இத்திருவாய்மொழியை விளக்கியருளும்போது மிகவும் சிருங்காரம் ததும்பும்படி விளக்குவாராம். அதைக் கேட்ட **பிள்ளை உறங்காவில்லி தாஸர்,** *"ஸந்யாஸியான எம்பார் காமரஸம் ததும்பும்படியான பிரட்டுப் பாடல்களைப் பாடத் தொடங்கிவிட்டார்" என்பராம். அந்த அளவுக்கு எம்பார் பகவத் விஷயத்தில் ஊன்றியிருப்பவர். "பகவான் கண்முன்னே வந்து நின்றாலும் 'வா' என்பவர்கள் இல்லாத இவ்வுலகில் அவன் சற்று தாமதித்து வந்தான் என்பதற்காக அவனைப் 'போ' என்கிறாரே ஆழ்வார்!" என்று எம்பார் வியப்பாராம்.*

[650]

(கழகமேறேல் நம்பீ) இவ்விடத்தே ப$_4$ட்டர் அருளிச் செய்வதோர் வார்த்தை உண்டு. "ஸமஸ்தகல்யாண கு$_3$ணாத்மகனாய், உப$_4$யவிபூ$_4$தி யுக்தனாய், ஸர்வாதி$_4$கனாய், ஸர்வ நியந்தாவாய் இருக்கிற ஸர்வேஶ்வரன் நாலு இடைப் பெண்கள் இருந்த இடத்தே புக்கல்லது நிற்கமாட்டாத செல்லாமை விளைய, அவர்கள் 'நீ இங்குப் புகாதே கொள்' என்ன, விலங்கிட்டாற்போலே பேரவும் திரியவும் மாட்டாதே தடுமாறி நின்றான் என்ற ஸௌஶீல்யம் ஆர் அறிந்து கொண்டாட வ்யாஸாதி$_3$கள் எழுதியிட்டு வைத்துப் போனார்களோ?" என்றருளிச் செய்வர்.

(திருவாய்மொழி 6-2-6 வியாக்கியானம்)

நிகழ்டம்

எம்பெருமானுடன் ஊடல் கொண்டு பேசுகின்ற பராங்குச நாயகி "கழகம் ஏறேல் நம்பீ!" (எங்கள் குழுவிற்குள் புகவேண்டாம்) என்கிறாள். இதைக் கேட்டு எம்பெருமான் அப்படியே நின்று விட்டானாம். இதுகுறித்து பட்டர் அருளிச்செய்த **வார்த்தை** *எடுத்துக்காட்டப்பெறுகிறது.*

விளக்கம்

"எல்லாக் கல்யாண குணங்களோடு கூடியவனும், உபய விபூதியை உடையவனும், எல்லோரையும் விட மேன்மையுற்றவனும், எல்லோரையும் ஆணையிட்டு நடத்துபவனுமான எம்பெருமான் இடைப் பெண்கள் சிலர் இருந்த இடத்திற்கு வந்து அவர்கள் குழுவுக்குள் புகுந்தாலல்லது தனக்கு தரிப்பில்லை எனும்படியிருந்தான். ஆனால் அப்பெண்கள் அவனை 'நீ இங்குப் புகவேண்டாம் என்று தடுத்தார்கள். இதைக் கேட்ட எம்பெருமான் விலங்கிட்டது போல் புகவும் முடியாமல் போகவும் முடியாமல் தடுமாறிக் கொண்டு நின்ற இவ்வெளிமையை யார் அறிந்து கொண்டாடுவதற்காக வியாஸர் முதலிய மகரிஷிகள் இச்சரித்திரங்களைத் தங்கள் இதிஹாஸங்களில் எழுதி வைத்துப் போனார்கள்!" என்று இவ்விடத்தில் பட்டர் மிகவும் ஈடுபட்டு அருளிச் செய்வராம்.

[651]

(எம்மை நீ விளையாடுதி) "இவன் சொன்ன மர்மம் எது?" என்று எம்பாரைக் கேட்க, "மயர்வற மதிநலம் அருளப் பெற்றவர் பாசுரமிட மாட்டாமல் 'வன்மம்' என்னாநின்றார். என்னைப் பாசுரமிடச் சொல்லுகிறீகோளோ?" என்று அருளிச் செய்தார்.

(திருவாய்மொழி 6-2-7 ஈடு வியாக்கியானம்)

நிகழ்டம்

எம்பெருமானுடன் ஊடல் கொண்ட பராங்குச நாயகி "வன்மமே சொல்லி எம்மை நீ விளையாடுதி" (வாயால் கூறவும் முடியாத மர்மமான வார்த்தைகளை எங்களுக்குக் கூறி விளையாடுகிறாய்!) என்கிறாள். இதுகுறித்து ஒரு **ஸம்வாதம்** *காட்டப்பெறுகிறது.*

விளக்கம்

இங்குச் சிலர் "அவன் சொன்ன மர்மம் எது" என்று எம்பாரைக் கேட்டார்களாம். (மின்னிடை மடவார் திருவாய்மொழியை மிகவும் சிருங்காரம் ததும்பும்படி எம்பார் விளக்கியருள்வர் (எண் 649) என்பதனால் அவரைக் கேட்டனர் போலும்). அதற்கு எம்பார் "மயர்வறமதிநலமருளப் பெற்ற ஆழ்வாரே

வாய்விட்டுக் கூறாமல் 'வன்மம்' என்று கூறிவிட்ட பிறகு இதற்கு என்னைப் பாசுரமிடச் சொல்கிறீர்களோ? என்னால் முடியாது" என்று பதில் கூறினார்.[1]

[652]

இப்பாட்டைச் சீயர் அருளிச் செய்யா நிற்கச் செய்தே, ஆப்பான் இருந்தவர், "இவர்கள் இவனைக் கடந்து போனார்களாகில் செய்வதென்?" என்று கேட்க, "அது ஆர் காரியம்? பின்னை இரண்டத்து ஒன்று ஸித்$_{3}$தி$_{4}$க்கும் என்றன்றோ அவன் தான் கிடந்தது!" என்றருளிச் செய்தார்.

(திருவாய்மொழி 6-2-8 ஈடு வியாக்கியான அவதாரிகை)

நிகழ்டம்

எம்பெருமானுடன் ஊடல் கொண்ட (கோபிகை பாவனையில்) பராங்குச நாயகி, அவனைத் தங்களுடன் சேர வேண்டாம் என்று கோபத்துடன் கூறியும் அவன் அருகில் வந்து நின்றான். அதைக் கண்ட நாயகி "நாம் இங்கே இருந்தால் அன்றோ இவன் நம்மை நெருங்க முடியும்! நாம் புறப்பட்டுச் செல்வோம்" என்று தன் தோழிகளுடன் அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டாள். அவர்கள் சென்ற ஒற்றையடிப்பாதையின் நடுவில் எம்பெருமான் அவர்களை வழிமறித்தான். இது குறித்து ஒரு ***ஸம்வாதம்*** *கூறப்பெறுகிறது.*

விளக்கம்

இவ்விடத்தை நஞ்சீயர் விளக்கிக் கொண்டிருந்த போது **ஆப்பான் (திருவழுந்தூர் அரையர்)** *"அப்பெண்கள் இவனைத் தாண்டிப் போய் விட்டால் இவன் என்ன செய்வான்?" என்று கேட்டார். அதற்கு நஞ்சீயர், "அப்படிச் செய்தால் அது யாருடைய கார்யம்? அது கண்ணனுக்கு மிகவும் வேண்டிய செயலன்றோ! அவர்கள் அங்கேயே நின்றார்களாகில், தான் நினைத்தது பெறுகிறான். இவனைத் தாண்டிச் சென்றார்களாகில் ஒற்றையடிப் பாதையாகையால், இவன் மேல் இடித்துக் கொண்டுதான் செல்ல வேண்டும். இரண்டில் எது நடந்தாலும் கண்ணனுக்கு மகிழ்ச்சியே" என்று சுவையாக பதிலளித்தார்.*[2]

[653]

"இப்படித் தாழ நின்றவன் ஸர்வேஶ்வரன் என்கிறார்" என்று பிள்ளான் பணிக்கும் என்று அருளிச் செய்வர். அதாகிறது, 'யாவையும் யாவரும் பிழையாமல் - பிணக்கி' என்று கீழே ப்ரஸ்துதமான ஸர்வேஶ்வரத்வத்தை அருளிச்

1. எண் 792 பார்க்க.

2. இருபத்துநாலாயிரப்படி உரையிலும் இந்த ஸம்வாதம் கூறப்பெறுகிறது.

செய்கிறார் - என்று. இதிலே ஒரு வாசி தோற்ற ப$_4$ட்டர் அருளிச் செய்வர் என்று சீயர் அருளிச் செய்வர். அதாவது "சேரோம் என்ற அபி$_4$ஸந்தி$_4$யைக் குலைத்துத் தம்மைச் சேரவிட்டுக் கொண்ட ஆஶ்சர்யத்தைக் கண்டு விஸ்மிதராகிறார்" என்று.

(திருவாய்மொழி 6-3 ஈடு வியாக்கியான ப்ரவேசம்)

நிகழிடம்

எம்பெருமானுடன் ஊடல் கொண்டு அவனைப் 'போகு நம்பீ' என்று 'மின்னிடைமடவார்' எனும் கீழ்த்திருவாய்மொழியில் ஆழ்வார் அருளிச் செய்தார். அதற்கு அடுத்ததான 'நல்குரவும் செல்வும்' என்கிற இத்திருவாய் மொழியில் ஒன்றுக்கொன்று முரண்பட்டவைகளையெல்லாம் தனக்குச் செல்வமாக உடைய எம்பெருமானுடைய தன்மையை (விருத்த விபூதிகத்வத்தை)க் கூறுகிறார். இவ்விருதிருவாய்மொழிகளுக்குமுள்ள தொடர்பு பற்றி ஆசார்யர்கள் இருவருடைய **நிர்வாஹ***ங்களை எடுத்துக் கூறி உரையாசிரியர் விளக்குகிறார்.*

விளக்கம்

'போகு நம்பீ' என்றும் 'கழகமேறேல் நம்பீ' என்றும் கூறும்படி தாழ நின்றவன் அனைத்துலங்களையும் தனக்குச் செல்வமாகவுடைய ஸர்வேச்வரன் என்று அவனுடைய மேன்மையை இத்திருவாய்மொழியில் ஆழ்வார் அருளிச் செய்கிறார் என்று **பிள்ளான்** *அருளிச் செய்தார் என்று* **(நஞ்சீயர்)** *அருளிச் செய்வர். அதாவது கீழ்த் திருவாய்மொழியில் 'பிணக்கி யாவையும் யாவரும் பிழையாமல் பேதித்து' என்று எம்பெருமானுடைய ஸர்வேச்வரத்வத்தை அருளிச் செய்துள்ள ஆழ்வார் இத்திருவாய்மொழியில் அதையே விளக்கியருள்கிறார் என்று பிள்ளான் அருளிச் செய்தார்.*

இவ்விளக்கத்திலேயே சற்று வேறுபாடு தோன்றும்படியாக **பட்டர்** *விளக்கியருள்வர் என்று நஞ்சீயர் அருளிச் செய்வர். அதாவது சேராச் சேர்த்தியுடைய பொருள்களைத் தனக்குச் செல்வமாக உடையவன் எம்பெருமான் என்பதன்றோ 'நல்குரவும் செல்வும்' என்ற இத்திருவாய்மொழியில் கூறப்படுகிறது! கீழ்த்திருவாய்மொழியில் ஊடல் கொண்டு எம்பெருமானுடன் சேரக் கூடாது என்று தாம் கொண்டிருந்த உறுதியைக் குலைத்துத் தம்மைச் சேரவிட்டுக் கொண்ட ஆச்சர்யத்தை நினைத்தே வியப்புடன் ஆழ்வார் இத்திருவாய்மொழியை அருளிச் செய்கிறார் என்பது பட்டர் அருளிச் செய்யும் விளக்கமாகும்.*

[654]

(கண்டுகோடற்கரிய) நல்லாரும், நம்பீ ஸ்ரீஸேநாபதிதா$_3$ஸரும் கூடத் திருமலைக்குப் போகாநிற்க, ஸ்ரீஸேநாபதிதா$_3$ஸர் தண்டையிட்டுத் தூற்றையடிக்க,

நல்லார், "அர்த்த₂காம நிமித்தமான த்₃வேஷம் இத்தோடு இன்றிக்கேயிருக்க, நிர்ஹேதுகமாக ஈச்வரவிபூதியை நலிவதே!" என்ற வார்த்தையை நினைப்பது.

(*திருவாய்மொழி 6-2-3 ஈடு வியாக்கியானம்*)

நிகழ்டம்

"கண்டு கோடற்கரிய பெருமான்" என்று ஆழ்வார் அருளிச் செய்கிறார். எம்பெருமானை விட்டுப் பிரிந்து ஒரு பொருளுக்கும் தனியிருப்புக் கிடையாது என்று இதற்குக் கருத்துரைத்த உரையாசிரியர், எல்லாப் பொருளும் எம்பெருமானுடைய செல்வமே என்பதற்கு ஓர் **ஐதிஹ்யம்** *காட்டுகிறார்.*

விளக்கம்

நல்லார் என்பவரும், நம்பி ஸ்ரீஸேநாபதி தாஸர் என்பவரும் திருமலைக்குச் *சென்று கொண்டிருந்தனர். வழியில் இருந்த முட்புதர்களை அழித்து வழி செய்வதற்காக ஸ்ரீஸேநாபதிதாஸர், கையிலிருந்த தண்டைக் கொண்டு புதர்களை அடிக்க அதைக் கண்ட நல்லார், "செல்வம் ஆசை முதலியவை காரணமாக ஏற்படும் விரோதம் எதுவும் இப்புதர்களுடன் நமக்கு இல்லையே! காரணமில்லாமல் எம்பெருமானுடைய செல்வங்களான இவைகளை ஏன் துன்புறுத்துகிறீர்" என்று கேட்டாராம்.*

[655]

(இகுளாய்) தோழியாய்; இது தமிழர்கள் நிர்வாஹம், நம்முடையவர்கள் செவிலித்தாய் என்று நிர்வஹிப்பர்கள். தாய்க்குத் தோழியாயிருக்குமிறே செவிலித் தாய்; அத்தைச் சொல்லுகிறது.

(*திருவாய்மொழி 6-3-9 இருபத்து நாலாயிரப்படி வியாக்கியானம்*)

நிகழ்டம்

எம்பெருமானை 'இகுளாய்' என்றருளிச்செய்கிறார் ஆழ்வார். இது குறித்த நிர்வாஹங்கள் கூறப்பெறுகின்றன.

விளக்கம்

இகுளை என்பது தோழியைக் குறிக்கும் சொல் ஆகையால் 'தோழியாய்' என்று தமிழர்கள் பொருள் கூறுவர். ஆனால் நம் ஆசார்யர்கள் செவிலித்தாய் என்று பொருள் கூறுவர். தாய்க்குத் தோழியாக இருப்பவள் அன்றோ செவிலித் தாய்; அதனால் அப்பொருள் கொண்டனர் போலும் என்கிறார் உரையாசிரியர்.[1]

1. ஆறாயிரப்படி உரையில் வளர்த்த தாய் என்ற பொருளே காட்டப்படுகிறது. ஆனால் ஒன்பதினாயிரப்படியிலும், ஈடுமுப்பத்தாறாயிரப்படியிலும் தமிழர் உரைத்த பொருளான 'தோழியாய்' என்ற பொருளே கூறப்பெறுகிறது. செவிலித்தாய் என்ற பொருள் கூறப்படவில்லை.

[656]

(தன்னொப்பாரில்லப்பன்) இதுக்குச் சீயர் அருளிச்செய்யும்படி, "மின்னிடை மடவாரிலே அவன் வந்து மேல்விழ, 'நீ எனக்கு வேண்டா' என்று நான் தள்ள, 'உனக்கு ஹிதம் அறிந்தாயோ? நான் உனக்கு வேணுங்காண்!' என்று தன்னை எனக்குத் தந்தவன்" என்று.

(திருவாய்மொழி 6-3-9 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

'தன்னொப்பார் இல்லப்பன்' என்ற ஆழ்வார் அருளிச்செயலுக்கு, 'சிலருக்கு ஒன்றைக் கொடுக்கும்போது, தன்னைப்போலக் கொடுப்பவர் எவரும் இல்லாதபடி கொடுக்கும் பேருபகாரகன்' என்று பொருளுரைத்த உரையாசிரியர், நஞ்சீயர் அருளிச்செய்த **நிர்வாஹம்** *ஒன்றையும் எடுத்துக் காட்டுகிறார்.*

விளக்கம்

'மின்னிடை மடவார்' (6-2) திருவாய்மொழியில் ஆழ்வாரோடு கூடவேண்டும் என்று எம்பெருமான் மேல்விழ, ஆழ்வார் ஊடல் கொண்டு அவனைத் தள்ளினார். அப்போது எம்பெருமான் ஆழ்வாரை நோக்கி, 'உமக்கு எது நன்மை என்பதை நீர் அறிவீரோ? நானன்றோ அதை அறிவேன்! நான் உமக்கு வேண்டும்' என்று கூறித் தன்னைத் தானே ஆழ்வாருக்குக் கொடுத்தான். இப்படி, தன்னை வேண்டாம் என்று தள்ளுபவர்களுக்கும் தானே மேல்விழுந்து தன்னைக் கொடுப்பதில் இவனுக்கு ஒப்பாகச் சொல்லக் கூடியவர் எவரும் இல்லாமையால் எம்பெருமானைத் தன்னொப்பார் இல்லப்பன் என்கிறார் ஆழ்வார் என்பது நஞ்சீயர் தரும் விளக்கமாகும்.

[657]

(நோவ ஆய்ச்சி உரலோடு ஆர்க்க இரங்கிற்றும்) சீயர் இப்பாட்டை இயல் அருளிச்செய்யப்புக்கால், 'நோவ' என்று அருளிச்செய்யும் அழகு காணும்.

(திருவாய்மொழி 6-4-4 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

கண்ணபிரானை யசோதை உரலோடு கட்டியமையைக் கூறுகின்ற ஆழ்வார் 'நோவ ஆய்ச்சி உரலோடு ஆர்க்க' (கண்ணனுக்கு நோகும்படியாக ஆய்ச்சி உரலோடு கட்ட) என்றருளிச்செய்கிறார். இதுகுறித்து நஞ்சீயர் அருளிச்செய்த **வார்த்தை** *எடுத்துக் காட்டப் பெறுகிறது.*

விளக்கம்

இங்கு 'நோவ' (நோகும்படியாக) என்று ஆழ்வார் அருளிச்செய்துள்ளதை அனுஸந்திக்கும்போது நஞ்சீயர், "ஆழ்வார் தம்முடைய திருமேனியிலே கயிறு உறுத்தினாப்போலே 'நோவ' என்று அருளிச்செய்வதே!" என்று மிகவும் ஈடுபட்டு அருளிச்செய்வராம்.

[658]

(பிறந்ததும் வீங்கிருள்வாய்) "இவனும் விழுக்காடு அறியாதே அகப்பட்டுக்கொடு நின்றான். கம்ஸப$_4$யமும் ப்ராப்தமாயிராநின்றது. இருளாலேயிறே நாம் பிழைத்தது. இனி இவ்விருளை ஶரணம் புகுமத்தனையிறே!" என்று பிள்ளை உறங்காவில்லிதா$_3$ஸர் பணிப்பராம்.

(திருவாய்மொழி 6-4-5 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

'.... பிறந்ததும் வீங்கிருள்வாய் பூண்டு ஆய்க்குலம்புக்கதும்' (கண்ணபிரான் பிறந்ததும், அந்த நள்ளிருளிலேயே திருவாய்ப்பாடி சென்று சேர்ந்ததும்) என்று ஆழ்வார் அருளிச்செய்துள்ளார். இத்தொடர்பில் பிள்ளை உறங்காவில்லிதாஸர் அருளிச்செய்த **வார்த்தை** *எடுத்துக் காட்டப்பெறுகிறது.*

விளக்கம்

எண் 117ன் விளக்கம் பார்க்க.

[659]

(அப்பன்தன் மாயங்களே காணும் நெஞ்சுடையேன்) "முடியானேயில் கரணங்களை உடைய ஆழ்வாராகையாலே நெஞ்சுதானே நினைக்கவும்வற்றாய், காணவும்வற்றாய் இருக்கும் என்று பிள்ளான் பணிக்கும்" என்றருளிச்செய்வர்.

(திருவாய்மொழி 6-4-8 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

எம்பெருமானுடைய அற்புதச் செயல்களைக் 'காணும் நெஞ்சுடையேன்' என்று அருளிச்செய்துகொள்கிறார். நெஞ்சு நினைக்கத்தான் செய்யுமே தவிர காணவும் செய்யுமோ என்ற ஐயத்திற்கு விடையாகப் பிள்ளான் அருளிச்செய்த **நிர்வாஹ***த்தை எடுத்துக் காட்டுகிறார்.*

விளக்கம்

எம்பெருமான்மீதுள்ள அளவற்ற ஆசையின் மிகுதியினால் தம்முடைய ஒவ்வொரு இந்திரியமும் மற்ற இந்திரியங்களினுடைய செயல்களையும் செய்ய

விரும்புகின்றது என்று ஆழ்வார் 'முடியானே' என்று தொடங்கும் (3-2) திருவாய்மொழியில் அருளிச்செய்துள்ளார். எனவே ஆழ்வாருடைய நெஞ்சு நினைக்கக் கூடியதாகவும், காணக்கூடியதாகவும் இருக்கும் என்று **பிள்ளான்** *அருளிச்செய்வர்'*[1] *என்று* (**நஞ்சீயர்**) *அருளிச்செய்வர்.*

[660]

(வலக்கை இத்யாதி) இவ்விடக்கை பட்டர் அருளிச்செய்யா நிற்கச் செய்தே வண்துவரைப் பெருமாள் இருந்தவர் "மால் வண்ணனை மலக்கு நாவுடையேன்' என்ன அமையாதோ? 'வலக்கை ஆழி இடக்கைச் சங்கம் இவை உடைய' என்கிற இதுக்குத் தாத்பர்யம் என்?" என்ன, "சோளேந்த்ரசிங்கனை உளுக்காக்கப் பண்ணுகிறேன் என்கிறார்காண்!" என்றருளிச் செய்தார்.

(திருவாய்மொழி 6-4-9 வியாக்கியானம்)

நிகழிடம்

"வலக்கையாழி இடக்கைச் சங்கம் இவையுடை மால் வண்ணனை மலக்கு நாவுடையேன்" (வலது திருக்கையில் ஆழியையும் இடது திருக்கையில் சங்கத்தையும் ஏந்தியிருப்பவனும், கருத்த நிறத்தை உடையவனுமான எம்பெருமானை கலங்கப் பண்ணும் நாவுடையேன்) என்று ஆழ்வார் தம்மைக் கூறிக் கொள்கிறார். இது குறித்து ஒரு **ஸம்வாதம்** *கூறப்பெறுகிறது.*

விளக்கம்

இவ்விடத்தை **பட்டர்** *விளக்கிக் கொண்டிருந்தபோது* **வண்துவரைப் பெருமாள்** *என்பவர் "மால் வண்ணனை மலக்கு நாவுடையேன்" என்றால் போதாதோ? 'வலக்கையாழி இடக்கைச் சங்கம் இவையுடை' என்ற அடைமொழிக்குக் கருத்து என்ன?" என்று கேட்டார். அதற்கு பட்டர், "கலக்கத்திற்கே இடமில்லாதவனையும் கலக்கி விடுகிறேன் என்கிறார் ஆழ்வார். கலங்காதவனான எம்பெருமானுக்குத் தனிப்பட்ட அடையாளமன்றோ ஆழியும் சங்கமும்! கலக்கத்திற்கே இடமில்லாத, நம்பெருமாளுடைய யானையான சோளேந்திரசிங்கனையும் உளுக்காக்க (கலங்கும்படி) செய்கிறேன் என்பாரைப் போலே சங்குசக்கரம் ஏந்திய எம்பெருமானையும் கலக்கி விடுகிறேன் என்கிறார் ஆழ்வார்" என்றருளிச் செய்தார்!*[2] *(சோளேந்திரசிங்கன் என்பது பட்டர் காலத்தில் திருவரங்கம் பெரிய கோயிலில் இருந்த மிகப் பெரிய யானையாகும்.)*

1. பிள்ளான் இவ்வாறு அருளிச்செய்தமை இருபத்துநாலாயிரப்படியிலும் குறிப்பிடப்பெறுகிறது.
2. இருபத்துநாலாயிரப்படி உரையிலும் இந்த ஸம்வாதம் குறிப்பிடப்பெற்றுள்ளது.

[661]

(விண்மிசைத் தன தாமமே புக) ஒரு தீர்க்க₂ தி₃னத்தினன்று நாயிறுபோது ஆண்டானும் எம்பாரும் தங்களிலே ஸங்கித்து, "அஹங்கார மமகார தூ₄ஷிதராய் இருப்பார் பத்துக் கோடிப்பேர் நடுவே அதிஸு குமாரமான திருமேனியைக் கொண்டு பத்து நாள் எழுந்தருளி, நிரபாயமாகப் புக்கருளப் பெற்றபடி கண்டதே!" என்று ஒருவரை ஒருவர் த₃ண்ட₃னிட்டுத் தழுவிக்கொள்ளாநிற்க, சீயர், 'கண்டேன்' என்று அருளிச் செய்வர்.

(திருவாய்மொழி 6-4-10 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

"விண்மிசைத் தனதாமமே புக மேவிய சோதி" (இப்பூவுலகில் அவதாரத்தை முடித்துக் கொண்டு விண்ணில் தன் இருப்பிடமான பரமபதத்தில் சென்று பொருந்தின பரம சோதி) என்கிறார் ஆழ்வார். 'தீங்கு செய்பவர்களே மலிந்த இவ்வுலகில் நின்றும் போய், தன்மீது மிக்க பரிவுள்ளவர்களான நித்ய முக்தர்களே உள்ள பரமபதத்திற்கு எம்பெருமான் எழுந்தருளினானே!" என்று ஆழ்வார் மகிழ்ச்சியுடன் கூறுவதாக இதற்குப் பொருளுரைத்த உரையாசிரியர் இத் தொடர்பில் ***ஐதிஹ்யம்*** *ஒன்றையும் எடுத்துக் கூறுகிறார்.*

விளக்கம்

"திருவரங்கம் பெரிய கோவிலில் ஒருமுறை பிரம்மோத்ஸவம் முடிந்து தீர்த்தவாரியாகி சூரியன் அஸ்தமிக்கும் சமயம் நம்பெருமாள் தம்முடைய ஸன்னிதிக்குள் எழுந்தருளினார். அப்போது ***எம்பாரும் முதலியாண்டானும்*** *சந்தித்து 'அகங்கார மமகாரங்களே வடிவெடுத்தவர்களான பத்துக் கோடிப்பேர் நடுவே, மிகவும் மென்மையான திருமேனியைக் கொண்டு நம்பெருமாள் பத்து நாள் எழுந்தருளி, அபாயம் ஏதுமில்லாமல் உத்ஸவம் முடிந்து ஸன்னிதிக்குள் எழுந்தருளினானே' என்று மகிழ்ச்சியுடன் கூறி (மற்றவருடைய மங்களாசாஸனத்தினால்தான் நம்பெருமாள் ஆபத்தில்லாமல் உத்ஸவம் கண்டருளி முடித்தார் என்று இருவரும் நினைத்து, அதனால்) ஒருவரை ஒருவர் தண்டனிட்டு வணங்கி மகிழ்ச்சியுடன் தழுவிக் கொண்டு நின்றதை நான் கண்டேன்" என்று* ***நஞ்சீயர்*** *அருளிச் செய்வர்.*

[662]

"இத்திருவாய்மொழி ஆழ்வார் ப்ரக்ருதி சொல்லுகிறது" என்று நம்முதலிகள் எல்லாரும் போர விரும்பியிருப்பர்கள்"

(திருவாய்மொழி 6-5 ஈடு வியாக்கியான ப்ரவேசம்)

நிகழ்டம்

எம்பெருமான் மீது ஆழ்வாருக்கு உள்ள ஈடுபாடெல்லாம், "துவளில் மாமணி மாடம்" என்று தொடங்கும் இத்திருவாய்மொழியில் கூறப்படுகிறது. இது குறித்து ஒரு **வார்த்தை** கூறப்படுகிறது.

விளக்கம்

பராங்குச நாயகி நிலையிலுள்ள ஆழ்வாருக்குத் திருத்தொலைவில்லி மங்கலத்து எம்பெருமான் மீதுள்ள ஈடுபாட்டை, தோழி கூறுவதாக அமைந்த திருவாய்மொழி இதுவாகும். எம்பெருமானுடைய தன்மைகளையே கூறவந்த ஆழ்வார் தம்முடைய தன்மையைக் கூறும் திருவாய்மொழி இது என்று நம் ஆசார்யர்கள் இத்திருவாய்மொழியை மிக விரும்பியிருப்பர்களாம்.

[663]

"கீழே க்ருஷ்ணானுப$_4$வத்தைப் பண்ணினார். அந்த ப்ரீதி உள்ளடங்காமையி னாலே பா$_3$ஹ்ய ஸம்ஶ்லேஷ அபேக்ஷை பிறந்து, அது பெறாமையாலே தமக்குப் பிறந்த பாரவஶ்யத்தை அந்யாபதே$_3$ஶத்தாலே அருளிச் செய்கிறார்" என்று பூர்வர்கள் நிர்வாஹம். ப$_4$ட்டர், "கீழ் நிரவதி$_4$க ப்ரீதியாய்ச் சென்றது. அதுக்கும் இதுக்கும் சேர்த்தி இங்ஙனாக வொண்ணாது. தண்ணீர் குடியாநிற்க விக்கினால் ரஸாநுப$_4$வம் கலங்கி நோவுபடுமாபோலே, செல்லுகிற ப்ரீத்யநுப$_4$வம் கலங்கிப் பிறந்த பாரவஶ்யாதி$_3$ஶயத்தை அருளிச் செய்கிறார்" என்று அருளிச் செய்வர்.

(திருவாய்மொழி 6-5 இருபத்து நாலாயிரப்படி வியாக்கியான ப்ரவேசம்)

நிகழ்டம்

ஆழ்வார் கீழ்த் திருவாய்மொழியில் மிகவும் மகிழ்ச்சியுடன் பாசுரம் அருளிச் செய்தார். இத்திருவாய்மொழியில் துன்பத்தால் மிகவும் கலங்கி, தாமான தன்மையை இழந்து, ஒரு பிராட்டி நிலையை எய்தி, தம்முடைய நிலையைத் தோழி கூறுவதாக அமைந்துள்ளது. இப்படிக் கீழ்த் திருவாய்மொழியில் மகிழ்ச்சியையும் இத்திருவாய்மொழியில் துன்பத்தையும் வெளியிடுவதற்குக் காரணம் என்ன என்பதற்கு இரண்டு **நிர்வாஹங்கள்** கூறப்பெறுகின்றன.

விளக்கம்

"கீழ்த் திருவாய்மொழியில் 'குரவையாய்ச்சியரோடு கோத்ததும்' என்று தொடங்கி, கண்ணபிரானுடைய செயல்களையே பேசி ஆழ்வார் அனுபவித்தார். அந்த மகிழ்ச்சி உள்ளடங்காமையினால் அவனை நேரடியாக அனுபவிக்க வேண்டுமென்று ஆசை கொண்டார். ஆனால் இவ்வளவு நேரம் தமக்குப் பிறந்த அனுபவம் மனத்தளவில் ஏற்பட்டது என்பதை உணர்ந்தவாறே, மிகவும் வருந்தி

அவ்வருத்தத்தைத் தோழியின் வாயாலே ஆழ்வார் வெளியிடுகிறார்" என்பது **பூர்வாசார்யர்கள்** தரும் விளக்கமாகும்.

பட்டர், "கீழ்த் திருவாய்மொழி அளவற்ற மகிழ்ச்சியுடன் சென்றது. இத்திருவாய்மொழி ஆழ்வார் அளவற்ற துன்பத்துடன் அலற்றுகிறபடியைக் கூறுகிறது. எனவே அதுவரை தாம் பெற்ற அனுபவம் மனத்தளவிலேயே என்பதை உணர்ந்து கொண்டதால்தான் துன்பத்தை அடைந்தார் என்று இவ்விரு திருவாய்மொழிகளுக்கும் தொடர்பு கூறுவது பொருந்தாது. பின் எப்படிக் கூறுவது எனில், மிகவும் தாகமுள்ள ஒருவனுக்கு ஆவலுடன் குடிக்கின்ற தண்ணீரே விக்கித் துன்பத்தை விளைவிப்பது போல, எம்பெருமானை மகிழ்ச்சியுடன் கீழ்த் திருவாய்மொழியில் அனுபவித்த ஆழ்வாருக்கு, அவ்வனுபவமே கலக்கத்தை ஏற்படுத்த, அதனால் தமக்குப் பிறந்த துன்பத்தை இத்திருவாய்மொழியில் தோழியின் பேச்சால் வெளியிடுகிறார்" என்று விளக்கியருளினார்.[1]

[664]

(நின்று நின்று குமிறுமே) ராஜகோஷ்டியிலே 'உகும் இறும்' என்று சிலர் பொருள் சொல்ல விக்ரமசிங்கன் என்பானொருவன் "அங்ஙனல்ல, கன்றைக் கடக்கக் கட்டி வைத்தால், முலைக்கண் கடுத்துப் பசு அலமந்து படுமாபோலே உள்ளோடுகிற க்லேஶம் வாய்விடமாட்டாதே நோவுபடுகிற இவருக்கு இது வார்த்தையோ?" என்றான்.

(திருவாய்மொழி 6-5-1 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

தொலைவில்லி மங்கலத்து எம்பெருமானிடத்தில் ஈடுபாடுடைய பராங்குச நாயகி அவனை நினைத்து "நின்று நின்று குமிறுமே" என்று தோழி கூறுகிறாள். நெஞ்சில் உள்ள நினைவை வாய்விட்டுச் சொல்லவும் முடியாமல் உள்ளுக்குள்ளேயே குமுறுகிறாள் என்று இதற்குப் பொருளுரைத்த உரையாசிரியர் மற்றொரு **நிர்வாஹ***த்தையும் எடுத்துக் காட்டுகிறார்.*

விளக்கம்

அரசவையில் (இப்பாசுரம் பற்றிய பேச்சு எழுந்த போது) சிலர், 'நின்று நின்று உகும் (உருகி விடுகிறாள்) இறும் (தளர்ந்து விழுகின்றாள்)' என்று சொற்களைப் பிரித்துப் பொருள் கூறினார்களாம். அதைக் கேட்ட **விக்ரமசிங்கன்**

1. ஈடு முப்பத்தாறாயிரப்படியிலும் இவ்விளக்கங்கள் குறிப்பிடப்பெற்றிருந்தாலும் இவற்றை அருளிச்செய்தவர்களின் பெயர்கள் அங்கு குறிப்பிடப்படவில்லை.

என்பவன் "அப்பொருள் சுவையற்றது. தாய்ப் பசுவிடமிருந்து கன்றைப் பிரித்துக் கட்டி வைத்தால், தாய்ப்பசு கன்றிற்குப் பால் கொடுக்க முடியாமல் முலைகடுத்து அலமந்து படுவது போலே, நெஞ்சுக்குள் ஓடுகின்ற துன்பத்தை வாய்விட்டுச் சொல்லமுடியாமல் படுகின்ற பராங்குச நாயகியின் நிலையை 'உகும் இறும்' என்ற சொற்களால் கூறவிட முடியுமோ?" என்றான்.

[665]

(மழை பெய்தால் ஒக்கும் கண்ண நீரினொடு) ஆளவந்தார், மணக்கால் நம்பி பக்கலிலே எம்பெருமானைக் கேட்டவநந்தரம் "உபாயம் இதுக்கு மேலில்லை; இவ்விஷயத்தை இப்போதே ஸாக்ஷாத்கரிக்க விரகில்லையோ?" என்றாராம்.

(திருவாய்மொழி 6-5-5- ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

திருத்தொலைவில்லி மங்கலத்து எம்பெருமானைக் கண்டவுடனே பராங்குச நாயகிக்கு மழை பெய்தாற் போல் கண்ணீரானது தாரை தாரையாப் பெருகத் தொடங்கியது என்கிறாள் தோழி. இதற்குச் சேர ஓர் **ஐதிஹ்யம்** *எடுத்துக் காட்டப் படுகிறது.*

விளக்கம்

மணக்கால்நம்பி *பகவத்கீதையை விளக்குவதன்மூலம் எம்பெருமானைப் பற்றி ஆளவந்தாருக்கு உபதேசித்தார். அக்கீதையின் சரமச்லோகத்தைக் கேட்டவுடனே* **ஆளவந்தார்** *"எம்பெருமானைத் தவிர உபாயம் வேறில்லை. அவனை உடனே காண வழியுண்டோ?" என்று கேட்டாராம். மணக்கால் நம்பி ஆளவந்தாரை திருவரங்கம் பெரிய கோயிலுக்கு அழைத்துக் கொண்டு வந்து பெரிய பெருமாளைக் காட்டினார். பெரிய பெருமாளைச் சேவித்த உடனே ஆளவந்தாருக்கு மழை பெய்தாற் போல் கண்ணீரானது தாரை தாரையாய்ப் பெருகத் தொடங்கியது. (இதேபோல் திருத்தொலைவில்லிமங்கலத்து எம்பெருமானைச் சேவித்தவாறே பராங்குசநாயகியின் கண்களிலிருந்து கண்ணீர் பெருகியது.)*

[666]

(இவள் வாயனகள் திருந்தவே) பட்டர் 'அழகிய மணவாளப் பெருமாள்" என்றால் திருநாமம் நிறம் பெறுமாபோலேயும், சோமாசியாண்டான் 'எம்பெருமானார்' என்றால் திருநாமம் நிறம் பெறுமாபோலேயும், அனந்தாழ்வான் 'திருவேங்கடமுடையான்' என்றால் திருநாமம் நிறம் பெறுமாபோலேயும்.

(திருவாய்மொழி 6-5-7 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

"எம்பெருமானுடைய சின்னங்களும், திருநாமங்களும், மிகவும் விளங்கும்படி பராங்குச நாயகியின் வாயனவாயின" என்று அவளுடைய தோழி கூறுகிறாள். பராங்குச நாயகியின் திருவாக்கால் கூறப் பெற்றபடியால்தான் எம்பெருமானுடைய திருநாமங்களும் நிறம் பெற்றன என்று இதற்குக் கருத்துரைத்த உரையாசிரியர், இதற்குச் சான்றாக ஆசார்யர்கள் சிலருடைய ஈடுபாடுகள் பற்றி **உதாரணம்** *காட்டுகிறார்.*

விளக்கம்

பட்டர் *தம்முடைய ஈடுபாடெல்லாம் தோன்றும்படியாக "அழகிய மணவாளப் பெருமாள்" என்று கூறும்போது அத்திருநாமம் நிறம் பெறும்.* **சோமாசியாண்டான்** *"எம்பெருமானார்" என்னும்போது அத்திருநாமம் நிறம் பெறும்.* **அனந்தாழ்வான்** *"திருவேங்கடமுடையான்" என்னும்போது அத்திருநாமம் நிறம் பெறும்.[1] (அதுபோலவே பராங்குச நாயகி கூறும் போது எம்பெருமானுடைய திருநாமம் நிறம் பெறும்.)*

[667]

(மரங்களும் இரங்கும் வகை) எம்பாரை "மரங்களும் இரங்கக் கூடுமோ?" என்று கேட்க, "இது அருளிச் செய்த அன்று தொடங்கி எத்தனை ப$_4$ாவஶுத்$_3$தி$_4$ இல்லாதார் வாயிலே புக்கது என்று தெரியாது. இங்ஙனே இருக்கச் செய்தே யமநியமாதி$_3$ க்ரமத்தாலே பத$_3$ம் செய்யப் பார்த்தாலும் சுக்கான் பருக்கைபோலே நெகிழாதேயிருக்கிற நெஞ்சுகளும் இன்று அழிகிறபடி கண்டால் ஸமகாலத்தில் மரங்கள் இரங்கச் சொல்ல வேணுமோ?" என்றருளிச் செய்தார்.

(திருவாய்மொழி 6-5-9- ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

"மரங்களும் இரங்கும் வகை மணிவண்ணவோவென்று கூவுமால்" (மரங்களும் இரங்கும்படியாக, மணிவண்ணா என்று கூவுகின்றாள் பராங்குச நாயகி) என்கிறாள் தோழி. இதுகுறித்து ஒரு **ஸம்வாதம்** *கூறப்பெறுகிறது.*

விளக்கம்

"அறிவற்றவையான மரங்களும் இரங்கக் கூடுமோ?" என்று எம்பாரைச் சிலர் கேட்டார்கள். அதற்கு **எம்பார்** *"இத்திருவாய்மொழி தோன்றிய காலம் தொடங்கி, உள்ளத் தூய்மையில்லாதவர்கள் எத்தனை பேர்களுடைய வாயிலே புகுந்தது என்று தெரியாது. அப்படியிருந்தும், யமம், நியமம் முதலிய*

1. இக்கருத்துகள் மற்றும் இரண்டு இடங்களில் குறிப்பிடப்பெற்றுள்ளன. (எண் 245, 311)

அஷ்டாங்கயோகங்களைச் செய்தாலும் சுக்கான் பருக்கைக் கற்கள் போல் சிறிதும் நெகிழாமல் இருக்கும் நெஞ்சுகளும் இன்று உருகுகின்றன! பாறை போன்ற நெஞ்சங்களே இன்று ஆழ்வாருடைய பாசுரம் கேட்டு உருகும் போது ஆழ்வாருடைய காலத்தில் மரங்களும் இரங்கச் சொல்ல வேண்டுமோ?" என்றார்.

[668]

(பின்னை கொல்) நப்பின்னைப் பிராட்டி பிறந்திட்டாளோ? அங்ஙனன்றியே ஸ்ரீபூமிப்பிராட்டி பிறந்திட்டாளோ! எல்லார்க்கும் இவ்வேற்றங்களைக் கொடுக்கும் பிராட்டிதானே பிறந்திட்டாளோ? என்பர்கள் பூர்வர்கள். அங்ஙனன்றியே, 'அவர்களுக்கும் இவள்படி இல்லாமையாலே அவர்களோடு ஒப்பன்று; லோகமெல்லாம் வாழுகைக்கு இவள் ஒருத்தி பிறந்தாளோ' என்றுமாம்.

(6-5-10 இருபத்துநாலாயிரப்படி வியாக்கியானம்)

நிகழ்டம்

"பின்னைகொல் நிலமாமகள் கொல் திருமகள் கொல் பிறந்திட்டாள்" என்று பராங்குச நாயகியைப் பற்றிக் கூறுகிறாள் தோழி. இங்குப் "பிறந்திட்டாள்" என்ற சொல்லை இருவகையாகப் பொருத்தி இரண்டு **நிர்வாஹங்கள்** *கூறப்படுகின்றன.*

விளக்கம்

'பின்னை பிறந்திட்டாள் கொல்,' 'நிலமாமகள் பிறந்திட்டாள் கொல்; 'திருமகள் பிறந்திட்டாள் கொல்' என்று பொருத்தி, ஒரு பொருள் காட்டப்படுகிறது. பராங்குச நாயகிக்கு எம்பெருமான் மீதுள்ள ஈடுபாட்டின் மிகுதியைக் கண்டு, "இவள் பிராட்டிமாரிலே ஒருத்தியோ? நப்பின்னைப் பிராட்டி, பூமிப்பிரர்ட்டி, பெரிய பிராட்டி ஆகியோரிலே ஒருத்தி பராங்குச நாயகியாகப் பிறந்திட்டாளோ?" என்று ஐயப்படுவதாக **பூர்வர்கள்** *அருளிச் செய்வர்கள்.*

'பின்னை கொல்', 'நிலமாமகள் கொல்', 'திருமகள் கொல்', 'பிறந்திட்டாள் கொல்' என்று பொருத்தி மற்றொரு பொருளும் காட்டப்படுகிறது. "பராங்குச நாயகிக்கு எம்பெருமான் மீதுள்ள ஈடுபாட்டிற்குப் பிராட்டிமார் மூவருமே ஒப்பாக மாட்டார்கள். எனவே உலகமெல்லாம் வாழுகைக்கு ஒப்பற்ற ஒருத்தி பிறந்திட்டாளோ?" என்று ஐயப்படுவதாக மற்றொரு பொருள் (இப்பொருளை அருளிச் செய்தவர் யார் என்று உரையில் குறிப்பிடப்படவில்லை.)[2]

1. இதேபோன்ற வார்த்தைகளை பட்டரும் அருளிச்செய்துள்ளார் என்பதை எண் 614ல் காண்க.
2. இரு விளக்கங்களுமே ஈடு உரையிலும் இடம்பெற்றிருந்தாலும் முதல் விளக்கத்தை அருளியது பூர்வர்கள் என்பது இருபத்துநாலாயிரப்படியில் மட்டுமே குறிப்பிடப்பெற்றுள்ளது.

[669]

(அவ்வூர் இத்யாதி) இவள் அவ்வூர் என்கிறது பெண்பிள்ளை சொன்னாப் போலேயிராமை. ஆனால் ஒருகால் சொன்னாளே என்னில் "அது வறைமுறுகலாகையிறே பின்பு தவிர்ந்தது" என்றருளிச் செய்வர்.

(திருவாய்மொழி 6-5-10 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

"திருத்தொலைவில்லி மங்கலத்தைத் தன் தலையாலே வணங்குகின்ற பராங்குச நாயகி அவ்வூரின் திருநாமத்தை கேட்பதில் விருப்பமுடையவளாக இருக்கின்றாள்" என்கிறாள் தோழி. இங்குத் தோழி 'அவ்வூர்' என்றதன் கருத்தை விளக்கும்வகையில் ஒரு **ஸம்வாதம்** *கூறப்பெறுகிறது.*

விளக்கம்

*பராங்குச நாயகி தன்வாயால் தொலைவில்லிமங்கலம் என்று சொல்லும் போதுள்ள இனிமை தன்வாயால் சொல்லும்போது ஏற்படாமையினால், தோழி தன்வாயால் ஊரின் பெயரைச் சொல்லாமல் 'அவ்வூர்' என்கிறாள் என்பது கூறப்பட்டது. ஆனால் இப்பாசுரத்திலேயே தோழி 'தொலைவில்லிமங்கலம் சென்னியால் வணங்கும்' என்று ஊரின் பெயரைத் தானே சொல்லியிருக்கிறாளே என்று கேட்க, "அப்படி ஒரு முறை தான் சொன்னபோது பராங்குச நாயகி கூறுவது போல் இனிமையாக இல்லாமல் வறைமுறுகலாக (கரடுமுரடாக இனிமையற்று) இருந்ததால்தான் மறுமுறை அதைத் தன் வாயால் கூறுவதைத் தவிர்த்தாள்" என்று (***நஞ்சீயர்***) விடையளித்தார்.*

[670]

ஆளவந்தார் கோ₃ஷ்டி₂யிலே "உண்ணுஞ்சோற்றிற் பிராட்டிக்கோ, கள்வன் கொல்லில் பிராட்டிக்கோ அஞ்சவேண்டுவது?" என்று கேட்க, "இருவராய்ப் போனவர்களுக்கு வயிறெரிய வேணுமோ? தனி வழியே போனவளுக்கு அன்றோ வயிறெரிய வேண்டுவது" என்று இருந்த முதலிகள் சொல்ல, "அங்ஙன் அன்று காணுங்கோள்! இருவராய்ப் போனவர்களாகையாலே இருவர்க்கும் அஞ்ச வேணும். தனியே போனவளுக்கு ஒரு ப₄யம் உண்டோ?" என்றருளிச் செய்தார்.

(திருவாய்மொழி 6-7 ஈடு வியாக்கியான ப்ரவேசம்)

நிகழிடம்

இரவில் தன்னோடு படுத்து உறங்கிக் கிடந்த பராங்குச நாயகியைத் தன் அருகில் காணாமையால் வருந்துகின்ற திருத்தாயார் 'திண்ணம் என் இளமான் புகுமூர் திருக்கோளூரே' என்கின்றாள். "இரவில் தனியாகப் புறப்பட்ட என் மகள்

நிச்சயம் திருக்கோளூருக்குத் தான் சென்றிருப்பாள்" என்று தாயார் கூறுவதாக அமைந்துள்ளது 'உண்ணும் சோறு' என்று தொடங்குகின்ற இத்திருவாய்மொழி. இத் தொடர்பில் ஒரு சுவையான **ஸம்வாதம்** காட்டப்பெறுகிறது.

விளக்கம்

இதேபோல் இரவில் தன்னோடு படுத்துறங்கிக் கிடந்த (திருமங்கை ஆழ்வாராகிய) பரகால நாயகியைக் காணாத அவளுடைய திருத்தாயார், நடு இரவில் எம்பெருமான் வந்து அவளை அழைத்துச் சென்று விட்டதாகவும் "அவர்கள் இருவரும் திருவாலிக்குச் சென்றிருப்பார்களோ?" என்று கூறுவதாகவும் ஒரு பதிகம் (பெரிய திருமொழி 3-7) உள்ளது. "அணியாலிபுகுவர் கொலோ!" என்று தாயார் கூறுவதாக இப்பதிகம் அமைந்துள்ளது. **ஆளவந்தார்** காலக்ஷேப கோஷ்டியில் இவ்விரு பதிகங்களையும் ஒப்பிட்டு சுவையான சர்ச்சை ஒன்று செய்யப்பட்டது.

"உண்ணுஞ்சோறு" திருவாய்மொழியில் பராங்குச நாயகி தனியாகப் புறப்பட்டுத் திருக்கோளூர் சென்றாள். 'கள்வன் கொல்" திருமொழியில் பரகால நாயகி எம்பெருமானுடன் சேர்ந்து திருவாலிக்குச் சென்றாள். இவ்விருவரில் யாரைப்பற்றி அதிகம் அச்சம் (கவலை) கொள்ள வேண்டும் என்று சிலர் கேட்டனர். அதற்கு ஆளவந்தார் கோஷ்டியிலிருந்து சிலர் "துணையுடன் சென்ற பரகால நாயகியைக் குறித்து கவலை கொள்ள வேண்டுமோ? இரவில் தனியாகச் சென்ற பராங்குசநாயகிக்குத்தான் என் வருமோ என்று அச்சம் கொள்ள வேண்டும்" என்றார்களாம். இதைக் கேட்ட ஆளவந்தார் "அங்ஙனன்று; பரகாலநாயகி எம்பெருமானுடனன்றோ சென்றிருக்கிறாள். இப்படி இருவராய்ச் சென்றவர்கள் ஒருவர் மீது ஒருவர் மையல் கொண்டு மயங்கிக் கிடப்பர்கள். ஆதலால், எதிரே ஆபத்து வந்தாலும் அவர்களுக்கு அது தெரியாது. எனவே ஆபத்திலே சிக்கிக் கொள்வார்கள். (இராமபிரானும் சீதைப்பிராட்டியும் சேர்ந்து வனவாசத்திற்குச் சென்ற போது இடையில் இராவணனால் ஏற்பட்ட பிரிவு இங்கு நினைவில் கொள்ளத் தக்கது) ஆனால் தனியாகச் சென்றவளான பராங்குச நாயகி, எம்பெருமானிருக்குமிடத்திற்குத் தான் சென்று சேர்ந்தாலல்லது தரித்திருக்கமாட்டாள். எனவே எப்படியும் சென்று சேர்ந்து விடுவாள். எனவே தனியே போனவளுக்காக அஞ்ச வேண்டாம்; இருவராய்ச் சென்றவர்களுக்கே அஞ்ச வேண்டும்" என்று அருளிச்செய்தார். ('திண்ணம் என் இளமான் புகுமூர் திருக்கோளூர்!' (நிச்சயமாக என் பெண் திருக்கோளூருக்குச் செல்வாள்') என்று உறுதியாகப் பராங்குச நாயகியின் திருத்தாயார் கூறியுள்ளதையும் 'அணியாலி புகுவர் கொலோ?' (திருவாலிக்குச் சென்றிருப்பார்களோ?) என்று பரகால நாயகியின் திருத்தாயார் ஐயத்துடன் கூறியிருப்பதையும் கருத்தில் கொண்டு ஆளவந்தார் இவ்வாறு அருளிச் செய்தார் போலும்!)

[671]

(கண்கள் நீர்கள் மல்கி) நஞ்சீயர், "பிள்ளை திருநறையூர் அரையரோடே மூன்று திருவாய்மொழி கேட்டேன். அதில் எனக்கொரு வார்த்தைகளும் சொல்லப் போகாது. ஒரு திருவாய்மொழியை ப்ரஸ்தாவியா, அவர் ஶிதிலராய்க் கண்ணும் கண்ணீருமாய் இருக்கும் இருப்பை நினைத்திருப்பன்" என்று அருளிச் செய்வர்.

(திருவாய்மொழி 6-7-1 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

திருக்கோளூர் எம்பெருமானையே எப்பொழுதும் வாய் பிதற்றிக் கொண்டு கண்ணும் கண்ணீருமாகப் பராங்குச நாயகி இருப்பதாகத் திருத்தாயார் கூறுகிறாள். இப்படி, பகவானுடைய குணங்களிலே ஈடுபட்டுக் கண்ணும் கண்ணீருமாக இருப்பவர்களைக் கண்டு கொண்டிருப்பதே நாம் கண் படைத்தபயன் என்று கூறுகின்ற உரையாசிரியர், இதற்குச் சான்றாக நஞ்சீயர் அருளிச் செய்த **வார்த்தை** *ஒன்றையும் எடுத்துக் கூறுகிறார்.*

விளக்கம்

"பிள்ளை திருநறையூரரையரிடம் மூன்று திருவாய்மொழிகளுக்குப் பொருள் கேட்டேன். அவர் கூறியவை எவற்றையும் இப்போது என்னால் கூறமுடியாது. ஆனால் அவர் திருவாய்மொழிப் பாசுரங்களுக்குப் பொருள் கூறத்தொடங்கி அப்பாசுரங்களில் மிகவும் ஈடுபட்டுக் கண்ணும் கண்ணீருமாக இருப்பர். அதையே எப்போதும் நினைத்திருக்கின்றேன்" என்று நஞ்சீயர் அருளிச் செய்வராம்.

[672]

(கண்கள் நீர் மல்கி) அனந்தாழ்வான் சோழகுலாந்தகனிலே க்ருஷி பண்ணியிருக்கிறான் ஒரு ஸ்ரீவைஷ்ணவனைக் கண்டு "உம்முடைய ஊர் எது?" என்று கேட்க, "என் ஊர் திருக்கோளூர்" என்ன, "அங்கு நின்று போந்தது என்?" என்ன, "தேஹயாத்ரை நடவாமே போந்தேன்" என்ன, "அவ்வூரில் கழுதையை மேய்த்து ஜீவிக்க மாட்டிற்றிலையோ? நிலைநின்ற ஜீவநத்தை விட்டுப் போந்தாயாகாதே!" என்றானாம்.

(திருவாய்மொழி 6-7-1 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

திருக்கோளூர் எம்பெருமானிடத்தில் மிகவும் ஈடுபட்ட பராங்குச நாயகி எப்போதும் அவனையே நினைத்துக் கண்ணீர் பெருக்குவதாகக் கூறுகிறாள்

திருத்தாயார். இப்படி, பகவானுடைய குணங்களில் ஈடுபட்டுக் கண்ணும் கண்ணீருமாக இருப்பவர்களைக் காண்கையே நாம் கண் படைத்த பயன் என்பதற்குச் சான்றாக "ஆஹ்லாத சீத நேத்ராம்பு: புளகீக்ருத காத்ரவாந் ஸதா பரகுணாவிஷ்ட: த்ரஷ்டவ்ய: ஸர்வ தேஹிபி:" என்ற சுலோகத்தை மேற்கோளாகக் காட்டி விளக்குகிறார் உரையாசிரியர். இங்கு 'ஸதா த்ரஷ்டவ்ய: (எப்பொழுதும் காணத்தக்கவர்கள்) என்பதற்கு விளக்கம் கூறும்போது, 'எப்பொழுதும் காண்பதற்குப் பரமபதம் தேடிப் போக வேண்டுமோ? இவ்வுலகிலேயே திவ்யதேசங்களில் தொண்டு செய்வதே சிறந்த பேறு' என்று கூறுகின்ற உரையாசிரியர் அதற்குச் சேர **ஐதிஹ்யம்** ஒன்றை எடுத்துக் காட்டுகிறார்.

விளக்கம்

சோழ குலாந்தகன் எனும் கிராமத்தில் விவசாயம் செய்து கொண்டிருந்த ஸ்ரீவைஷ்ணவன் ஒருவனைப் பார்த்து அனந்தாழ்வான் "உம்முடை ஊர் எது?" என்று கேட்டார். அதற்கு அந்த ஸ்ரீவைஷ்ணவர் "என்னுடைய ஊர் திருக்கோளூர்" என்று விடையளித்தார். அனந்தாழ்வான், "அப்படியாயின் திருக்கோளூரைவிட்டு இங்கு வந்து வசிப்பதற்குக் காரணமென்ன?" என்று கேட்டார். "திருக்கோளூரில் வயிற்றுப்பிழைப்பு நடத்த முடியாமல் போகவே இங்கு வந்தேன்" என்றார் ஸ்ரீவைஷ்ணவர். உடனே அனந்தாழ்வான் "திருக்கோளூரில் ஒரு கழுதையை மேய்த்தாவது பிழைப்பு நடத்தக் கூடாதோ! திவ்யதேசத்தில் வசித்து எம்பெருமானுக்குத் தொண்டு செய்கின்ற, நித்யமான ஆத்மாவிற்கு நிலை நின்ற வாழ்வை விட்டு இப்படி கிராமத்தில் வசிக்கிறீரே!" என்றாராம்.[1]

[673]

(புகுமூர்) எம்பெருமானார் தெற்கே எழுந்தருளா நிற்க, எதிரே வருகிறாள் ஒரு பெண்பிள்ளையைக் கண்டு, "எங்கு நின்றும்?" என்ன, "திருக்கோளூரில் நின்றும்" என்ன, "அவ்வூரில் புக்க பெண்களும் போகக் கடவராய் இருப்பர்களோ?" என்றருளிச் செய்தார்.

(திருவாய்மொழி 6-7-1 ஈடு வியாக்கியானம்)

நிகழ்டம்

திருக்கோளூர் எம்பெருமானிடத்தில் மிகவும் ஈடுபட்ட பராங்குச நாயகி 'புகுமூர் திருக்கோளூரே' என்கிறாள் அவளுடைய திருத்தாயார். திவ்யதேசங்கள் என்பவை இவ்வுலக வாழ்க்கையாகிய காட்டுத் தீயில் அகப்பட்டவனுக்குப்

1. இதுபோன்ற கருத்துகளை வேறோரிடத்தில் எம்பாரும் கூறியிருக்கிறார். எண் 542 பார்க்க.

பொய்கையும் பொழிலும் போன்றவை ஆகையால், திருக்கோளூர் புகுமூரேயன்றி (வெளியே) போகுமூர் அன்று என்று விளக்கிய உரையாசிரியர், அதற்குச் சேர ஓர் **ஐதிஹ்யம்** எடுத்துக் காட்டுகிறார்.

விளக்கம்

எம்பெருமானார் தென்தேச யாத்திரையாக எழுந்தருளிக் கொண்டிருந்த போது எதிரில் வந்து கொண்டிருந்த பெண் ஒருத்தியை நோக்கி "எங்கிருந்து வருகிறாய்?" என்று கேட்டார். அவள் "திருக்கோளூரிலிருந்து வருகிறேன்" என்று விடையளித்தாள். அதைக் கேட்ட எம்பெருமானார் "திருக்கோளூர் புகுமூர் அல்லவோ? அங்கேயுள்ள பெண்களும் அவ்வூரைவிட்டு (வெளியூருக்குப்) போவர்களோ?" என்றருளிச் செய்தார்![1]

[674]

(பூவையித்யாதி)“‘ஊரும் நாடும் உலகமும் தன்னைப் போல்’ என்கிறபடியே இவைதாம் திருநாமத்தைச் சொல்லிற்றானாலாதோ?” என்று பெற்றி நம்பிள்ளையைக் கேட்க, “அதுக்கு வ்யபி$_4$சாரம் உண்டு. ‘பந்து தூதை’ என்கிற இடத்தே தட்டுப் பிறக்கும்” என்ன, “அங்ஙனேயிறே” என்று இசைந்து போனார்.

(திருவாய்மொழி 6-7-3 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

"பூவை பைங்கிளிகள் பந்து தூதை பூம்புட்டில்கள் யாவையும் திருமால் திருநாமங்களே கூவியெழும் என் பாவை" என்று பராங்குச நாயகியைப் பற்றித் திருத்தாயார் கூறுகிறாள். இதற்குப் பொருள் கொள்வது பற்றி ஒரு **ஸம்வாதம்** கூறப்பெறுகிறது.

விளக்கம்

இதற்குப் பொருள் கூற நினைத்த பெற்றி என்பவர், "ஊரும் நாடும் உலகமும் தன்னைப் போல் அவனுடைய பேரும் தார்களுமே பிதற்ற" என்று கீழ்ப்பாசுரத்தில் கூறியுள்ளபடி, அனைவரையும் தம்மைப்போலவே எம்பெருமானுடைய திருநாமங்களையே பிதற்றும்படி ஆழ்வார் செய்பவரன்றோ! எனவே பூவைகள், பைங்கிளிகள், முதலியவை அனைத்தும் எம்பெருமானுடைய திருநாமங்களையே கூறும்படியாக ஆழ்வார் (பராங்குச நாயகி) ஆக்கி விட்டார் என்று பொருள் கூறலாமோ?" என்று கேட்டார். அதற்கு **நம்பிள்ளை**, "அப்படிக் கூறுவதில் ஒரு தடை உண்டு. பூவைகள், பைங்கிளிகள்

1. எம்பெருமானாருக்கு அப்பெண் பதில் கூறினாள் என்றும், அவள் கூறிய பதிலே 'திருக்கோளூர்ப் பெண்பிள்ளை ரஹஸ்யம்' எனும் நூலாக விரிந்தது என்றும் கூறுவர்.

ஆகியவை பறவைகளாகையால் ஆழ்வார் அவைகளைத் திருநாமங்கள் கூறும்படி ஆக்கலாம். ஆனால் பந்து தூதை, பூம்புட்டில்கள் ஆகியவை அசேதநங்கள் (அறிவற்றவை) ஆகையால் அவற்றையும் திருநாமங்களைக் கூறும்படி ஆழ்வார் செய்தார் என்று கூறுவது பொருந்தாது. (எனவே பூவை, பைங்கிளிகள், பந்து, தூதை பூம்புட்டில்கள் இவைகளை விளையாட்டுப் பொருள்களாகக் கொண்டு பராங்குச நாயகி அடையும் இன்பத்தையெல்லாம் எம்பெருமான் திருநாமங்களைக் கூவியெழுவதனாலேயே பெற்றாள் என்று கூறுவதுதான் பொருந்தும்)" என்று கூறினார். இதைக் கேட்ட பெற்றி, "தேவரீர் கூறியதுதான் பொருத்தமானது" என்று இசைந்தார்.[1]

[675]

(கண்டு) "பிள்ளை திருநறையூரரையரும் ப$_4$ட்டருமாக உள்ளே ப்ரத$_8$க்ஷிணம் பண்ணாநிற்க, இட்ட அடி மாறி இடமாட்டாதே கண்களாலே பருகுவாரைப் போலே பார்த்து வாழ்ந்து கொண்டு போகிறபடியைப் பின்னே நின்று கண்டு அனுப$_4$வித்தேன்" என்று நஞ்சீயர் அருளிச் செய்வர்.

(திருவாய்மொழி 6-7-5 ஈடுவியாக்கியானம்.)

நிகழிடம்

"திருக்கோளூரில் பூவியல் பொழிலும் தடமும் அவன் கோயிலும் கண்டு ஆவி உள் குளிர எங்ஙனே உகக்கும் கொல் இன்றே" (திருக்கோளூரில் பூச்சோலைகளையும் தடாகங்களையும் அவனது திருக்கோயிலையும் கண்டு நெஞ்சு நன்கு குளிரும்படியாக எவ்வண்ணம் மகிழ்வாளோ?) என்று தாயார் தன்னுடைய மகளான பராங்குசநாயகியைப் பற்றிக் கூறுகிறாள். இத் தொடர்பில், எம்பெருமானுடைய திருக்கோயிலை மிக விருப்பத்துடன் பிரதக்ஷிணம் செய்த ஆசார்யர்களைப் பற்றிய **ஐதிஹ்யம்** *ஒன்று எடுத்துக் காட்டப் பெறுகிறது.*

விளக்கம்

எண் 42ன் விளக்கம் பார்க்க.

[676]

ஆச்சானும் ஆண்டானுமாகக் கிழக்கே நடக்கிறபோது திருப்பேருக்குக் கிழக்குப் போகவும் மாட்டாதே, ஏறித் திருவடி தொழவும் மாட்டாதே திருப்பேர் நகரான் கோயிலைப் பார்த்துக் கொண்டு இருந்தார்களாம்.

(திருவாய்மொழி 6-7-5 ஈடு வியாக்கியானம்)

1. பெற்றியும் நம்பிள்ளையும் கூறியமை இருபத்து நாலாயிரப்படியிலும் குறிப்பிடப்பெற்றுள்ளது.

நிகழ்டம்

'பூவியல் பொழிலும் தடமும் அவன் கோயிலும் கண்டு' என்ற ஆழ்வார் அருளிச் செயலுக்கு, எம்பெருமான் எழுந்தருளியிருக்கின்ற கோயிலைக் காண்பதே கண் படைத்த பயன் என்று விளக்கம் தருகின்ற உரையாசிரியர், அதற்குச் சேர **ஐதிஹ்யம்** *ஒன்றையும் எடுத்துக் கூறுகிறார்.*

விளக்கம்

ஆச்சானும் ஆண்டானும், *திருவரங்கத்திற்குக் கிழக்கே (திருக்குடந்தைக்கு) எழுந்தருளிக் கொண்டிருந்தனர். அப்போது வழியில் திருப்பேர் நகரான் (அப்பக்குடத்தான்) திருக்கோயிலை அவர்கள் கண்டனர். அத்திருக்கோயிலைத் தாண்டி, மேற் கொண்டு போகவும் முடியாமல், கோயிலுக்குள் சென்று எம்பெருமானைத் தொழவும் முடியாமல், கோயிலையே மிகவும் ஈடுபாட்டுடன் பார்த்துக் கொண்டிருந்தார்களாம்.*

[677]

(ஆவி உள் குளிர) இவ்விடத்தை ப₄ட்டர் அருளிச் செய்யா நிற்கச் செய்தே மேலெழ அருளிச் செய்தாராய், சீராமப்பிள்ளை இருந்தவர், "சீயா! எம்பார் அருளிச் செய்யும் போது 'ஆவி உள் குளிர' என்று முகந்து கொண்டு அருளிச் செய்யும்படி கேட்டறிகை இல்லையோ?" என்று அருளிச் செய்தார்.

(திருவாய்மொழி 6-7-5 ஈடு வியாக்கியானம்)

நிகழ்டம்

"திருக்கோளூரில் பூவியல் பொழிலும் தடமும் அவன் கோயிலும் கண்டு ஆவி உள் குளிர எங்ஙனே உகக்கும் கொல் இன்றே" (திருக்கோளூரில் பூச்சோலைகளையும் தடாகங்களையும் அவனது திருக்கோயிலையும் கண்டு நெஞ்சு நன்கு குளிரும்படியாக எவ்வண்ணம் மகிழ்வாளோ?) என்று தாயார் தன்னுடைய மகளான பராங்குசநாயகியைப் பற்றிக் கூறுகிறாள். எம்பெருமான் எழுந்தருளியிருக்கின்ற திருக்கோயில் அதைச் சுற்றியுள்ள சோலைகள் தடாகங்கள் இவற்றைக் காண்பதே நெஞ்சை நன்கு குளிர்விக்கும் என்ற கருத்தை விளக்குவதற்கு ஓர் **ஐதிஹ்யம்** *எடுத்துக் காட்டப் பெறுகிறது.*

விளக்கம்

இப்பாசுரத்தை **பட்டர்** *விளக்கியபோது 'ஆவி உள் குளிர' என்பதற்கு நெஞ்சு குளிரும்படியாக என்று மேலெழப் பொருளுரைத்தார். அப்போது உடனிருந்த அவருடைய திருத்தம்பியாரான* **சீராமப்பிள்ளை,** *"சீயா!* **எம்பார்** *இப்பாட்டை அருளிச் செய்யும் போது ஆவி உள் குளிர என்று மிகவும் ஆழ்ந்து அனுபவித்து ('உள்' என்ற சொல்லில் அழுத்தம் தந்து) அருளிச் செய்ததை நீர்*

கேட்டதில்லையோ?" என்றாராம். வறண்டு கிடந்த நிலத்தில் மழை பெய்தால் எப்படி நன்றாக உட்பகுதிவரை குளிர்ச்சி பரவுமோ அப்படி எம்பெருமானுடைய திருக்கோயில் முதலாவைகளைக் கண்டால் ஆழ்வாருக்கு நெஞ்சம் உள் குளிரும் என்ற கருத்து தெரிவிக்கப்படுகிறது.

[678]

(மெய்யமர் காதல் சொல்லி) "குணஜ்ஞானத்தாலே த₄ரிக்கும் அளவன்று என்று சொல்லுங்கோள்" என்று சீயர் அருளிச்செய்வர். பிள்ளான் "தம்மைப் போலே பொய்யாய் நிலைநில்லாத காதலன்று என்று சொல்லுங்கோள்" என்று பணிக்கும்.

(திருவாய்மொழி 6-8-2 இருபத்துநாலாயிரப்படி வியாக்கியானம்)

நிகழிடம்

எம்பெருமானிடம் பறவைகளைத் தூது அனுப்புகின்ற பராங்குச நாயகி, எம்பெருமானிடம் தன்னுடைய 'மெய்யமர் காதலை'ச் சொல்லும்படி கிளிகளிடம் கூறுகிறாள். இங்கு 'மெய்யமர் காதல்' என்பதற்கு இரண்டு **நிர்வாஹங்கள்** *கூறப்பெறுகின்றன.*

விளக்கம்

"எம்பெருமானுடைய திருக்கல்யாண குணங்களை அனுபவித்து தரிக்கும் காதல் அல்ல; அவனுடைய மெய்யோடு (திருமேனியோடு) அணைந்தால் அல்லது தரித்திருக்க முடியாத காதல் என்று சொல்லுங்கள் என்கிறாள் பராங்குச நாயகி" என்று **நஞ்சீயர்** *விளக்கம் அருளிச்செய்தார். (மெய் என்பதற்கு உடல் என்ற பொருளில் அருளிச்செய்த விளக்கம் இது.) "அவனுக்கு என்மீது இருக்கும் காதலைப் போல் பொய்யான காதல் அல்ல; எனக்கு அவன்மீதுள்ள காதல் மெய்யான காதல் என்பதை என்று தெரிவியுங்கள் என்கிறாள் பராங்குச நாயகி" என்று* **பிள்ளான்** *விளக்கம் அருளிச்செய்தார்.[1] (மெய் என்பதற்கு உண்மை என்ற பொருளில் அருளிச்செய்த விளக்கம் இது.)*

[679]

(நடந்தாள்) ஒரு நாள் நம்பிள்ளையை, சீயர் கோ₃ஷ்டியிலே வைத்துப் போரக் கொண்டாடியருளி, "தன் ஶிஷ்யனைத் தான் கொண்டாடாநின்றான் என்றிராதே கிடீகோள்; 'கணபுரம் கைதொழும் பிள்ளையைப் பிள்ளை என்று எண்ணப் பெறுவரே' என்று பண்டு சொன்னாரும் உண்டு கிடீகோள்" என்று அருளிச்

1. ஈடு உரையில் பிள்ளான் அருளிச்செய்த விளக்கம் மட்டுமே குறிப்பிடப்பெற்றுள்ளது.

செய்தார். அம்மணியாழ்வான் தன் ஶிஷ்யனைத் தான் தஂண்டனிடா நிற்குமாம். "இது என்?" என்று கேட்க, "அல்லாத வைஷ்ணவர்களை வ்ருத்தத்தாலே அறியவேணும் இவர்கள் நானறிய வைஷ்ணவர்கள் என்று ஆதஂரிப்பன்" என்றானாம்.

(திருவாய்மொழி 6-7-9 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

பராங்குச நாயகியானவள் எம்பெருமானைத் தேடிக் கொண்டு திருக்கோளூருக்குச் சென்றதைக் கூறும் திருத்தாயார் "நேரிழை நடந்தாள்" என்கிறாள். 'என் மகள் போனாள்' என்று கூறாமல் 'நடந்தாள் என்று மிகவும் கௌரவமாகப் பேசுவதற்குக் காரணம் என்ன என்பதை விளக்கும் உரையாசிரியர், "தன் மகளேயாயினும் எம்பெருமானிடம் செல்லப் புறப்பட்டவளானபடியால், அவளை மதிப்புடனே பேச வேண்டும்; வயிற்றில் பிறந்த பிள்ளைகளாலும், சீடர்களானாலும் அவர்கள் எம்பெருமான் அடியவர்களானால் கௌரவத்துடனே பேச வேண்டும்' என்று உரையிட்டு, இதற்குச் சான்றாக இரண்டு **ஐதிஹ்ய***ங்களை எடுத்துக் கூறுகிறார்.*

விளக்கம்

ஒருநாள் **நஞ்சீயர்** *தம்முடைய சீடரான* **நம்பிள்ளை***யைத் தமது காலக்ஷேப கோஷ்டியில் உள்ள எல்லோரும் அறியும்படி மிகவும் கொண்டாடினார். "என்னுடைய சிஷ்யனை நானே கொண்டாடுகிறேன் என்று நினையாதீர்கள். இதே போல் முன்பு கொண்டாடியவர்களும் உண்டு. எம்பெருமானிடத்தில் மிகவும் ஈடுபட்டவளான பரகால நாயகியை, அவளுடைய திருத்தாயார், தன் வயிற்றில் பிறந்த மகள் என்றும் பாராமல் 'கணபுரம் கைதொழும் பிள்ளையைப் பிள்ளை என்று எண்ணப்பெறுவரே' (திருக்கண்ணபுரத்தைத் தொழுகின்ற பிள்ளையைத் தன் பிள்ளை என்று எண்ணலாமோ?) என்று கூறினாள் (பெரிய திருமொழி 8-2-9) அன்றோ!" என்று அருளிச் செய்தார்.[1]*

அம்மணியாழ்வான் *என்பவர் தம்முடைய சிஷ்யனை தண்டனிட்டு வணங்குவார். "ஆசார்யரான நீர் சிஷ்யனை வணங்குவது ஏன்?" என்று கேட்க, அவர், "மற்றவர்கள் வைஷ்ணவர்கள் என்று அவர்களுடைய செயல்களைப் பார்த்துப் பிறகுதான் அறிந்து கொள்ள முடியும். ஆனால் சிஷ்யர்களோ நம்மால் திருத்தப்பட்டு ஸ்ரீவைஷ்ணவர்களாகத் திகழ்பவர்கள் ஆதலால் அவர்களை தண்டனிட்டு வணங்குவதில் குறையேதும் இல்லை" என்றாராம்.[2]*

1. இதேபோல் பிள்ளைதிருநறையூர் அரையர் பட்டரைக் கொண்டாடிய வார்த்தைகளை எண் 137, 364 ஆகியவற்றில் காண்க.

2. எண் 136 பார்க்க.

[680]

"கீழில் திருவாய்மொழியிலே திருத்தாயார், 'எங்ஙனே புகுங்கொல்' என்று நொந்ததுவே ப₂லித்தது, தன் சாபலத்தாலே புறப்பட்டு, முடியப் போக மாட்டாமையாலே தன்னுடைய நகர உபவநத்தளவிலே தளர்ந்து கிடந்து, அவ்வளவிலும் வரக்காணாமையாலே, தன் த₃ஶையை அவனுக்கு அறிவிக்கை ஒழிய மற்றோர் உபாயம் காணாமையாலே கண்ணால் கண்ட பக்ஷிகளைத் தூது விடுகிறாள்" என்று ப₄ட்டர் நிர்வஹிப்பர். பிள்ளான், "திருக்கோளூரிலே சென்று, ஸம்ஶ்லேஷம் வ்ருத்தமாய், தை₃வ யோக₃த்தாலே விஶ்லேஷம் பிறக்கத் தூது விடுகிறாள்" என்று நிர்வஹிக்கும். "தன் ஐஶ்வர்யப் பரப்பாலே மறந்திருந்தான் அத்தனை. ஆஶ்ரிதரோடு ஏகரஸனாயிருக்கும் என்று ஐஶ்வர்யம் பற்றாசாகத் தூது விடுகிறாள்" (என்று பட்டர்.) "தக்கோர்மை பற்றாசாகத் தூதுவிடுகிறாள்" என்று பிள்ளான் பணிக்கும்.

(திருவாய்மொழி 6-8 இருபத்து நாலாயிரப்படி வியாக்கியான ப்ரவேசம்)

நிகழிடம்

"பொன்னுலகாளிரோ" என்று தொடங்கும் பதிகத்தில் ஆழ்வார் பறவைகளை எம்பெருமானிடம் தூது விடுகிறார். இப்படித் தூது விடுவதற்குக் காரணம் பற்றி **நிர்வாஹங்கள்** *கூறப்பெறுகின்றன.*

விளக்கம்

"இதற்கு முன் அருளிச்செய்த பதிகத்தில் பராங்குசநாயகி திருக்கோளூருக்குச் செல்ல ஒருப்பட்டாள் என்பது கூறப்பட்டது. எம்பெருமானைப் பிரிந்திருக்கின்ற வருத்தத்தினால் அவள் இளைத்துக் கிடக்கின்ற நிலையினைப் பார்த்திருந்த அவளுடைய திருத்தாயார், "எங்ஙனே புகுவாள்?" என்றாள். முடிவில் அதுவே பலித்துவிட்டது. திருக்கோளூருக்குப் புறப்பட்டவள் நகரத்தின் உபவனத்தளவுமே வந்தாள். அதற்கு மேல் செல்ல முடியாமல் தளர்ந்தாள். அப்போதும் எம்பெருமான் வரக் காணாமையினால் தன்னுடைய நிலையினை அவனுக்குத் தெரிவிப்பதைத் தவிர வேறு வழி எதுவும் தோன்றாமையினால், கண்ணால் கண்ட பறவைகளை அவனிடம் தூது விடுகிறாள்" என்று பட்டர் அருளிச் செய்வர். "பராங்குசநாயகி திருக்கோளூருக்குச் சென்று சேர்ந்து எம்பெருமானோடு கலந்து நன்கு அனுபவித்தாள். ஆனால் தைவவசத்தால் பிரிவு ஏற்பட்டு விட்டது. பிரிவின் ஆற்றாமையினால் அவனிடம் பறவைகளைத் தூது விடுகிறாள்" என்று **பிள்ளான்** *அருளிச் செய்தார். (திருக்கோளூருக்குச் செல்ல முடியாமையினால் தூது விடுகிறாள் என்பது பட்டர் தரும் விளக்கமாகும். திருக்கோளூருக்குச் சென்று எம்பெருமானோடு கலந்த பிறகு ஏற்பட்ட பிரிவினால் தூது விடுகிறாள் என்பது பிள்ளான் தரும் விளக்கமாகும்.*

“எம்பெருமான் உபய விபூதிக்கும் நாயகன் ஆகையால் எங்கோ ஒரு மூலையில் இருக்கும் தன்னை (ஆழ்வாரை) மறந்திருக்கக்கூடும். அவன் அடியவர்களுடன் ஒரு நீராகக் கலக்கும் தன்மை உடையவன். எனவே தன்னைப் பற்றி அவனுக்கு நினைவூட்டினால் நிச்சயம் வந்து விடுவான் என்று நினைத்து, அவனுடைய ஐகரஸ்யம் (அடியவர்களோடு ஒரு நீராகக் கலக்கும் தன்மை) பற்றாசாகத் தூதுவிடுகிறாள்” என்று **பட்டர்** *அருளிச் செய்தார். “இப்பதிகத்தில் பல பாசுரங்களிலும் ‘இதுவோ தக்கவாறு?’’ என்று அருளிச் செய்யப் பெற்றுள்ளமையால், எம்பெருமானுடைய ஆந்ருசம்ஸயம் (அடியவர்களிடம் அருளுடைமை அல்லது தக்கோர்மை) பற்றாசாகத் தூது விடுகிறாள் என்று* **பிள்ளான்** *அருளிச் செய்தார்!*

[681]

(பொன்னுலகு ஆளீரோ புவனி முழுது ஆளீரோ) அருளாளப்பெருமாள் எம்பெருமானார் நோவிலே பிள்ளை உறங்காவில்லி தாஸரைக் கொண்டு ஆழ்வான் புக, “ஆழ்வான் பண்ணின நெஞ்சாறல் ஆறுவது ஆளவந்தார் ஸ்ரீபாதத்தேறப் போனாலிறே’ என்ற வார்த்தையை நினைப்பது.

(திருவாய்மொழி 6-8-1 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

எம்பெருமானுக்குத் தன்னுடைய நிலையைச் சொல்லும்படி பறவைகளைத் தூதனுப்பும் பராங்குச நாயகி, அவைகள் செய்யும் செயலுக்குக் கைம்மாறாக நித்ய விபூதி, லீலா விபூதி ஆகிய இரண்டு விபூதிகளையும் ஆளக் கொடுப்பதாக அருளிச் செய்கிறாள். எம்பெருமானுடையதான இரண்டு உலகங்களையும் இவள் தன் விருப்பப்படி பறவைகளுக்குக் கொடுக்குமளவுக்கு எம்பெருமானே ஆக்கி வைத்திருக்கிறான் என்று விளக்கிய உரையாசிரியர். இத்தொடர்பில் ஓர் **ஐதிஹ்யம்** *காட்டுகிறார்.*

விளக்கம்

அருளாளப் பெருமாள் எம்பெருமானார் *நோய்வாய்ப்பட்டு எழுந்தருளியிருந்தபோது அவருடைய உடல்நிலை பற்றி வினவுவதற்காகக்* **கூரத்தாழ்வான், பிள்ளை உறங்காவில்லி தாஸருடன்** *சென்றார். அப்போது அருளாளப் பெருமாள் எம்பெருமானார், “ஆழ்வான் செய்த நெஞ்சாறல் (வருத்தம்) தீருவது ஆளவந்தார் திருவடிகளை அடைந்தால் அன்றோ!” என்று அருளிச் செய்தார். (பரமபதத்தைக் கொடுக்கும் வல்லமை கூரத்தாழ்வானுக்கு இருந்தபோதும் அவர்*

1. ஈடு உரையிலும் பட்டர் பிள்ளான் ஆகியவர்கள் அருளிச்செய்தமை சுருக்கமாகக் குறிப்பிடப் பெற்றுள்ளது.

தமக்கு அருளாமல் இப்படித் தாம் நோயால் வருந்தும்படியும், அந்தச் சமயத்தில் நோயின் துன்பத்தைப் பற்றி விசாரிப்பதற்காக ஆழ்வான் வந்ததிருப்பதையும் பார்த்து இவைகளால் ஏற்பட்ட நெஞ்சு துக்கம் பரமதத்திற்குப் போனால்தான் தீரும் என்றார் அருளாளப்பெருமாள் எம்பெருமானார். தம்முடைய ஆசார்யரான எம்பெருமானார் பூவுலகில் எழுந்தருளியிருந்தபடியால் 'ஆளவந்தார் ஸ்ரீபாதத்தேறப் போனால்' என்று அருளிச் செய்தார்.)

[682]

(பொன்னுலகாளீரோ புவனி முழுதாளீரோ) "இவள் தான் உப₄ய விபூ₄தியும் கொடாநின்றாளாகில், அவன் வந்தால் தானும் அவனும் எங்கே இருப்பது?" என்ன, "இக்குருவி காட்டின இடத்தே" என்று அனந்தாழ்வான் வார்த்தை.

(திருவாய்மொழி 6-8-1 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

எம்பெருமானுக்குத் தன்னுடைய நிலையைச் சொல்லும்படி பறவைகளைத் தூதனுப்பும் பராங்குச நாயகி அவைகள் செய்யும் செயலுக்குக் கைம்மாறாக நித்ய விபூதி, லீலா விபூதி ஆகிய இரண்டு விபூதிகளையும் ஆளக் கொடுப்பதாக அருளிச் செய்கிறாள். இதுகுறித்து ஒரு **ஸம்வாதம்** கூறப்பெறுகிறது.

விளக்கம்

"இரண்டு உலகங்களையும் அக்குருவிக்குக் கொடுத்துவிட்டால், பின்னர் அவன் வந்தால், அவனுடன் தான் கூடி இவள் எங்கே இருப்பாள்?" என்று கேட்க, "அக்குருவி காட்டுகிற இடத்திலே" என்று அனந்தாழ்வான் அருளிச்செய்தார்.

[683]

(நன்னலப் புள்ளினங்காள்) "உங்கள் தரத்துக்கு அது ஓர் அறுகும் தாளிப்பூவுமிறே" என்பராம் பிள்ளை அமுதனார்.

(திருவாய்மொழி 6-8-1 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

எம்பெருமானுக்குத் தன்னுடைய நிலையைச் சொல்லும்படி பறவைகளைத் தூதனுப்பும் பராங்குச நாயகி அவைகள் செய்யும் செயலுக்குக் கைம்மாறாக நித்ய விபூதி, லீலா விபூதி ஆகிய இரண்டு விபூதிகளையும் ஆளக் கொடுப்பதாகக் கூறுகிறாள். அப்படிக் கூறும்போது அப்பறவைகளை 'நன்னலப் புள்ளினங்காள்' (சிறந்த குணங்களை உடைய பறவைகளே!) என்று அழைக்கிறாள். இதுகுறித்துப் பிள்ளை அமுதனார் அருளிச்செய்த **வார்த்தை** ஒன்று கூறப்பெறுகிறது.

விளக்கம்

“சிறந்த குணம் உடைய பறவைகளே! உங்களுக்கு நான் தருவதாகச் சொன்ன இரண்டு உலகங்களும், உங்களுடைய பெருமையைப் பார்த்தால், ஓர் அறுகம் புல்லையும், நீர்த்தாளிப்பூவையும் போல் மிகமிக அற்பமானவை அன்றோ!” என்கிறாள் பராங்குசநாயகி என்று **பிள்ளையமுதனார்** *அருளிச்செய்வர்.*

[684]

(நன்னலப் புள்ளினங்காள்) ஆளவந்தார்க்குப் பச்சையிட்ட மணக்கால் நம்பியையும் போலே இருந்ததீ உங்கள்படி!

(திருவாய்மொழி 6-8-1 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

எம்பெருமானுக்குத் தன்னுடைய நிலையைச் சொல்லும்படி பறவைகளைத் தூதனுப்பும் பராங்குச நாயகி அப்பறவைகளை “நன்னலப் புள்ளினங்காள்” (சிறந்த குணங்களை உடைய பறவைகளே!) என்று அழைக்கிறாள். பறவைகளின் நற்குணங்களுக்கு மணக்கால் நம்பியை **உதாரணம்** *காட்டுகிறார் உரையாசிரியர்.*

விளக்கம்

நாதமுனிகளின் திருப்பேரனாரான **ஆளவந்தார்** *அரசவைப் பண்டிதனை வாதப்போரில் வென்று பாதிராஜ்யத்தைப் பரிசாகப் பெற்று அரசாண்டு வந்தார். நாதமுனிகளின் திருவுள்ளப்படி அவரைத் திருத்திப் பணிகொண்டு ஸ்ரீவைஷ்ணவஸம்ப்ரதாய அர்த்தங்களைத் தெரிவிக்க வேண்டும் என்று எண்ணிய* **மணக்கால் நம்பி** *அவரைத் திருத்திப் பணிகொள்வதற்காகத் தாமே பலமுறை எழுந்தருளித் தூதுவளைக்கீரையைக் கொடுத்து, அவரைச் சந்திப்பதற்கு வாய்ப்பு ஏற்படுத்திக்கொண்டு, வாய்ப்புப் பெற்றவுடன் அவருக்கு கீதையின் அர்த்தங்களை உபதேசித்து, ஸம்ப்ரதாயார்த்தங்களில் ஈடுபாடு கொள்ளும்படி செய்தார். இவ்வாறு தாமே தேடிப்போய் ஆளவந்தாருக்கு உபதேசித்த மணக்கால் நம்பியைப் போல, பறவைகளும் தாமே தேடிவந்து பராங்குசநாயகிக்குத் தூது செல்லும்படியான நற்குணத்தை உடையவையாக இருக்கின்றன என்று உரையாசிரியர் கூறுகிறார்.*

[685]

(என் குழல் மேல்) “பிராட்டியைக் கண்ட ஹர்ஷம் நடுவில் மதுவனம் அன்றாகில் ராஜபுத்ரர்கள் முதுகோடே போம்” என்று பட்டர் அருளிச் செய்வர்.

(திருவாய்மொழி 6-8-3 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

எம்பெருமானிடம் வண்டுகளைத் தூதனுப்புகின்ற பராங்குச நாயகி, அவனுக்குத் தன்னுடைய நிலையை அறிவித்து வந்தால் அதற்குப் பரிசாகத் தன்னுடைய தலைமேலே இருக்கும்படி கூறுகிறாள். இத்தொடர்பில், இராமபிரானுக்காகத் தூது சென்ற அனுமன் சீதைப்பிராட்டியைக் கண்டு திரும்பி வந்ததும், மகிழ்ச்சியினால் வானரங்கள் மதுவனத்தை அழித்தமையை எடுத்துக் காட்டும் உரையாசிரியர், அதுபற்றி பட்டர் அருளிச்செய்த **வார்த்தை** *ஒன்றை எடுத்துக்காட்டுகிறார்.*

விளக்கம்

எண் 294ன் விளக்கம் பார்க்க.

[686]

(தன் மன்னு நீள்கழல்மேல் தண்டுழாய் நமக்கன்றி நல்கான்) அருளாளப் பெருமாள் எம்பெருமானாருடைய அந்திமதசையிலே, "திருவுள்ளத்தில் ஓடுகிறது என்?" என்ன, "ஒரு பக்ஷி எம்பெருமானுடைய திருவுள்ளத்தைப் புண்படுத்தினபடி என் என்று கிடந்தேன்" என்றார். இதுக்குக் கருத்தாகப் பிள்ளை அருளிச் செய்யும் வார்த்தை, "நாம் பண்ணின ஶரணாகதி ஆகையாலே பலத்தோடு அவ்யபிசாரியாக மாட்டாது, இனி ஶரண்யன் நீர்மையில் ஏற்றத்தாலே நமக்கு ஒரு குறையில்லை என்கிறது" என்று.

(திருவாய்மொழி 6-8-6 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

எம்பெருமான் தன்னுடைய திருவடிகளில் சாத்தியுள்ள திருத்துழாயை அடியவர்களுக்கன்றி வேறு எவருக்கும் கொடுக்கமாட்டான் என்று ஆழ்வார் அருளிச் செய்துள்ளார். அவன் அடியவர்களுக்கே ஆட்பட்டவன் என்று விளக்கிய உரையாசிரியர் இத்தொடர்பில் ஓர் **ஐதிஹ்யம்** *அருளிச்செய்கிறார்.*

விளக்கம்

அருளாளப்பெருமாள் எம்பெருமானாருடைய *இறுதிக் காலத்தில் அவருடைய திருவுள்ளத்தில் அப்போது ஓடுகின்ற நினைவு எதைப் பற்றியது என்று கேட்க, அவர், "ஒரு பறவை எம்பெருமானுடைய திருவுள்ளத்தைப் புண்படுத்தி விட்டதே என்று நினைத்திருக்கிறேன்" என்றாராம். அதாவது, விபீஷணன் இராமபிரானைச் சரணடைந்தபோது அவனை ஏற்றுக் கொள்ளக் கூடாது என்று சுக்ரீவன் முதலானோர் கூறினர். இராமபிரான் தன்னுடைய சுதந்திரத்தன்மையால் சுக்ரீவன் முதலியவர்களுடைய வார்த்தைகளைமீறி விபீஷணனை ஏற்றுக்கொண்டிருக்கலாம். ஆனால் அப்படிச் செய்யாமல்*

அடியவர்களுக்கு வசப்பட்டிருக்கும் தன்னுடைய உண்மையான தன்மையை வெளிப்படுத்தும் பொருட்டு சுக்ரீவன் முதலானாரையும் இசைவித்து விபீஷணனை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று கருதி இராமபிரான் ஒரு புறாவின் கதை முதலிவைகளைக் கூறி சரணாகதி தர்மத்தின் உண்மையான தன்மைகளை விளக்கிக் கூறினான். ஒரு புறாவானது தன் மனைவியான பெண் புறாவை அபகரித்த வேடனுக்குத் தன் உயிரை ஈந்து அவனுடைய பசியைத் தீர்த்தது. 'ஒரு பறவையின் செயல் இப்படி இருக்குமானால் ரகுவம்சத்தில் பிறந்த நான் எவ்வளவு செய்யவேண்டும்! 'தோஷோ யத்யபி தஸ்யஸ்யாத்' (குற்றமுள்ளவனையும் நான் ஏற்றுக் கொள்வேன்) என்று நான் கூறியதையும் முன்பே புறா செயலில் காட்டிவிட்டதே! நான் இப்போது அப்படிச் செய்தாலும், அது ஏற்கனவே புறா செய்ததைச் செய்ததாகவே அன்றோ ஆகும்! ஒரு பறவை தன் உயிரையும் விட்டு வேடனைக் காத்தது; ஆனால் நாம் அப்படிச் செய்திலோமே' என்று இராமபிரான் திருவுள்ளம் புண்பட்டது. ''இப்படி ஒரு பறவை எம்பெருமானுடைய திருவுள்ளத்தைப் புண்படுத்தியதே என்று நினைத்திருந்தேன்'' என்று அருளாளப் பெருமாள் எம்பெருமானார் அருளிச் செய்தார். இதற்குக் கருத்தாக நம்பிள்ளை, ''வேடுவனுடைய செயல்களால் அவன் காப்பாற்றப்படவில்லை; மாறாக புறாவின் நற்குணங்களால்தான் வேடன் காப்பாற்றப்பட்டான். அதுபோலவே நாம் செய்யும் சரணாகதி நமக்குப் பலத்தைக் கொடுக்கமாட்டாது. சரண்யனான எம்பெருமானுடைய நீர்மை முதலிய திருக்கல்யாணகுணங்களே நமக்குப் பலத்தைக் கொடுக்கின்றன. ஆகையால் ஒரு குறையும் இல்லை'' என்றருளிச் செய்தார். (தன்னுடைய வீடான மரத்தின் அடியிலே ஒதுங்கியவன் என்ற ஒரே காரணத்திற்காகப் புறாவானது தன்னுடைய இரக்க குணத்தினால் தனக்கு நேரே எதிரியான வேடனைத் தன் உயிரை ஈந்து காத்தது. ஆனால் அப்புறாவானது தன்னைக் காக்கும் என்று அறியாமலே அம்மரத்தடியில் ஒதுங்கினான் வேடன். அவ்வேடப்போலவே தான் நாமும் ஆகிறோம். நமக்குப் பேறு கிடைப்பது எம்பெருமானுடைய இரக்க குணத்தாலேயே அன்றி நம்முடைய செயல்களால் அன்று என்பது கருத்து.)

[687]

(என்னை) "இப்படி துர்க்கஶைையானாள் இவள் என்று இவள் வைவர்ண்யத்தைத் தம்முடம்பிலே காட்டவும் வற்றாகாதே இவை!" என்று சீயர் அருளிச் செய்வர்.

(திருவாய்மொழி 6-8-10 ஈடு வியாக்கியானம்)

நிகழ்டம்

எம்பெருமானிடம் தன்னுடைய நிலைமையைத் தெரிவிக்கும்படி பறவைகளைத் தூது விடுகின்ற பராங்குச நாயகி, "என்னை இன்னவாறு இவள்

காண்மின் என்று" (என்னை இவள் இன்னவாறு ஆனாள்) என்று கூறும்படி வேண்டுகிறாள். இங்கு பராங்குச நாயகி எப்படிப்பட்ட நிலைமையை அடைந்தாள் என்று சொற்களால் கூறாமல், "இன்னவாறு" என்று கூறியதேன் என்ற கேள்விக்கு பராங்குச நாயகியின் நிலை சொற்கால் வர்ணிக்க முடியாது என்று விளக்கமளித்த உரையாசிரியர், தொடர்ந்து நஞ்சீயர் அருளிச் செய்த **வார்த்தை***யையும் எடுத்துக் கூறுகிறார்.*

விளக்கம்

"பராங்குச நாயகியினால் தூது அனுப்பப்படுகின்ற பறவைகள், எம்பெருமானைப் பிரிந்த வருத்தத்தினால் பராங்குச நாயகியின் மேனியில் ஏற்பட்டுள்ள பசலை நிறத்தையும் தங்கள் உடம்பில் ஏறிட்டுக் கொண்டு காட்டாதோ!" என்று நஞ்சீயர் அருளிச் செய்வர்.

[688]

(ஞாலத்தூடே நடந்தும்) வடதே$_3$ஶத்தினின்றும் போரப் பாடவல்லாரயிருப்பார் ஒருத்தர் பெருமாளைத் திருவடி தொழ வேண்டும் என்று வர, ஆழ்வார் திருவரங்கப் பெருமாள் அரையர் ஒரு தீர்த்ததினன்று திருமாலையைப் பாடிச் சமைந்து பெருமாளை ஒரு மத்தக$_3$ஜத்தைக் கைவஶப்படுத்துமாபோலே ஏத்தி வஶமாக்கிக் கணிசங் கொண்டு "நாயன்தே! தேவரீர் திருவடிகளுக்குப் போர நல்லான் ஒருவன் தேவரைத் திருவடி தொழ நெடுந்தூரமுண்டு வந்திருக்கிறது. இவனை அழைத்துக் கொண்டு ஸம்ப$_4$ாவனை பண்ணியருளவேணும்" என்ன, அவரைப் பெருமாள் அருளப்பாடிட்டு, திருப்புன்னைக் கீழினின்றும், அவர் நின்ற இடத்தேறத் திருக்கைத்தலத்தே எழுந்தருளி, விண்ணப்பம் செய்வார்களை அருளப்பாடிட்டு, 'வாரிகோள்! இவன் வந்த தூ$_3$ரத்துக்கெல்லாம் போருமோ நாம் செய்த தரம்" என்று திருவுள்ளமானார்.

(திருவாய்மொழி 6-9-3 ஈடு வியாக்கியானம்)

நிகழ்டம்

"ஞாலத்தூடே நடந்தும்" என்று அருளிச்செய்கிறார் ஆழ்வார். ஒரு அடியவரைப் புருஷகாரமாகக் கொண்டு எம்பெருமானுடைய நடையழகைக் காணவேண்டும் என்று வேண்டினால் அவர்களுக்காக நடக்கும் எம்பெருமான், தானே வந்தாலும் பொருட்படுத்தாதவர் முன்னே அன்றோ நடந்தான் என்று உரைத்த உரையாசிரியர், இத்தொடர்பில் ஓர் **ஐதிஹ்யம்** *கூறுகிறார்.*

விளக்கம்

எண் 634ன் விளக்கம் பார்க்க.

[689]

(தடந்தாமரைகட்கே) பிள்ளானுடைய அந்திமத₃ஶையிலே நஞ்சீயர் நோவு அறியப் புக்கிருக்க, 'கூவிக்கொள்ளும் காலம் இன்னம் குறுகாதோ' என்று பலகால் சொல்ல, இத்தைக் கேட்டு சீயர் அழ, "சீயரே! நீர் கிடந்து அழுகிறதென்? அங்குப் போய்ப் பெறப்புகுகிற பேறு இதிலும் தண்ணிது என்று தோற்றி இருந்ததோ?" என்று பணித்தான்.

(திருவாய்மொழி 6-9-9 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

நம்மாழ்வார், "தடம் தாமரைகட்கே கூவிக்கொள்ளும் காலம் இன்னம் குறுகாதோ" (தாமரை போன்ற திருவடிகளுக்கு அழைத்துக் கொள்ளும் காலம் இன்னம் குறுகாதோ) என்று எம்பெருமானை நோக்கி அருளிச் செய்துள்ளார். பிறவிஷயங்கள் துன்பத்தையே தருவன என்றும், எம்பெருமானுடைய திருவடிகளே மிக இனிமையானவை என்றும், எனவே தாழ்ந்த விஷயங்களை விட்டு, இனிமையானவையான எம்பெருமானுடைய திருவடிகளை உடனே அடைய ஆழ்வார் விரும்புகிறார் என்றும் கருத்துரைத்த உரையாசிரியர் இத்தொடர்பில் ஓர் **ஐதிஹ்யம்** *காட்டுகிறார்.*

விளக்கம்

பிள்ளானுடைய இறுதிக் காலத்தில் அவருடைய நிலையினை அறிந்து கொள்வதற்காக நஞ்சீயர் சென்றார். அப்போது பிள்ளான் தனக்கு உடனே வீடுபேறு அடைவதில் உள்ள துடிப்பை வெளிப்படுத்தும் வகையில், 'கூவிக் கொள்ளும் காலம் இன்னம் குறுகாதோ' என்று பலமுறை கூறிக் கொண்டிருந்தார். பிள்ளானைப் பிரிய வேண்டுமே என்ற வருத்தத்தால் நஞ்சீயர் அழத் தொடங்கினார். அப்போது பிள்ளான், "சீயரே! எதற்காகக் கிடந்து அழுகிறீர்! நான் பெறப் போகின்ற பேறு இந்த ஸம்ஸாரத்தைக் காட்டிலும் தாழ்ந்தது என்று தோன்றுகிறதோ? (இதைவிட மிக உயர்ந்த பேற்றை அன்றோ நான் அடைய போகிறேன். அப்படியிருக்க, நீர் வருந்தி அழலாமா?) என்று அருளிச் செய்தாராம்.

[690]

நம்பிள்ளை சீயரை ஒருநாள், "பஞ்சமோபாயம் என்று கொண்டு ஒன்று உண்டு என்று சொல்லா நின்றார்கள். நாட்டிலேயும் அங்ஙனே இருப்பது ஒன்று உண்டோ?" என்று கேட்டருள, "நான் அறிகிறிலேன்; இனி சதுர்த்தோ₂பாயம்தான் ப₄க₃வானேயாயிருக்க வ்யோமாதீதம் சொல்லுவாரைப் போலே, 'அவனுக்கும் அவ்வருகே ஒன்று உண்டு' என்கையிறே; அது நான் கேட்டறியேன்" என்றார்.

“ஆனால் ‘ஆவா’ என்கிற பாட்டு அருளிச் செய்யும் போது ‘எனக்குத் தனியே ஒரு ஸாத$_4$னம் கண்டு தரவேணும் என்கிறார்’ என்று அருளிச் செய்கையாயிருக்குமே!” என்ன, “அதுவோ! அது உன் ப்ரதிபத்தியில் குற்றம் காண்! அதுக்கு இங்ஙனேகாண் பொருள், ‘நீயும் உளையாயிருக்க, நான் இங்ஙனே இழப்பதே!” என்கிறார்காண்!” என்றருளிச் செய்தார்.

நஞ்சீயர் ஸ்ரீபாதத்திலே ஆஶ்ரயித்தான் ஒருவன், எம்பெருமானே உபாயமாகில் ப்ரபத்தி கொண்டு இங்குச் செய்கிறது ஒன்றும் கண்டிலேன்” என்ன, செவியைப் புதைத்து, “நாதமுனிகள் தொடங்கி இவ்வளவும் வர, நம் ஆசார்யர்கள் பரமரஹஸ்யமாக உபதே$_3$ஶித்து ஓராண் வழியாய்க் கொண்டு போந்த இதின் சீர்மை அறியாத உனக்கு, மஹாபாபியேன்! இத்தை வெளியிடுவதே!” என்று திருமுடியிலே அடித்துக் கொண்டு திருப்பள்ளியறையிலே புக்கருளினார்.

(திருவாய்மொழி 6-10-4 ஈடு வியாக்கியான அவதாரிகை)

நிகழிடம்

“பூவார்கழல்கள் அருவினையேன் பொருந்துமாறு புணராயே” (உன்னுடைய மலர் போன்ற திருவடிகளை நான் அடையும் வழியை நீயே கூறவேண்டும்) என்று எம்பெருமானைக் குறித்து நம்மாழ்வார் அருளிச் செய்துள்ளார். “உன்னை அடைவதற்கு உறுப்பாக நீ ஏற்கனவே காட்டியுள்ள ஸாதனங்கள் எனக்கு உபயோகப்படவில்லை. எனவே எனக்குத் தனியாக ஒரு வழி காட்டியருள வேணும்” என்கிறார் ஆழ்வார் என்று இதற்கு விளக்கமளித்த உரையாசிரியர் இத்தொடர்பில் தமக்கும் நஞ்சீயருக்கும் இடையில் நடைபெற்ற **ஸம்வாதம்** *ஒன்றையும்,* **ஐதிஹ்யம்** *ஒன்றையும் எடுத்துக் காட்டுகிறார்.*

விளக்கம்

நம்பிள்ளை *ஒரு நாள் நஞ்சீயரை, “கர்மம், ஞானம், பக்தி, ப்ரபத்தி ஆகிய நான்கு உபாயங்களுக்கும் மேற்பட்டதாக ஐந்தாவது உபாயம் என்று ஒன்று உண்டு என்று சிலர் கூறுகிறார்களே! அப்படி ஐந்தாவது உபாயம் என்று ஒன்று உண்டோ?” என்று கேட்டார். அதற்கு* **நஞ்சீயர்**, *“நான்காவது உபாயமான பிரபத்திதான் பகவானேயாயிருக்கும்போது, பகவானுக்கும் மேற்பட்டது ஒன்று உண்டோ? தஹராகாசம் என்று கூறப்படுகிற நாராயணனுக்கும் அப்பால் ஒன்று உண்டு என்று சொல்லுபவர்களைப் (சைவர்களைப்) போல அன்றோ, பகவானும் மேற்பட ஒன்று உண்டு என்று சொல்லுகை. அப்படி நான் கேட்டறியேன்” என்று அருளிச் செய்கிறார். “ஆனால், ‘ஆவா என்னாது’ என்கிற பாட்டிற்கு விளக்கம் அருளிச் செய்கிறபோது, ‘ஏற்கனவே நீ வைத்த ஸாதனங்கள் எனக்கு உடலாகின்றனவில்லை; எனவே எனக்குத் தனியே ஒரு ஸாதனம் கண்டு தரவேணும்’ என்று ஆழ்வார் அருளிச் செய்வதாக அன்றோ அருளிச் செய்தது!*

ஏற்கனவே உள்ள (கர்மம், ஜ்ஞானம், பக்தி பிரபத்தி என்கின்ற நான்கு) ஸாதனங்களும் பயன்படவில்லை என்றும், ஐந்தாவதாக ஒரு ஸாதனத்தை அருளவேண்டும் என்றும் ஆழ்வார் கேட்பதாக அன்றோ இதற்குப் பொருளாகிறது!" என்று நம்பிள்ளை கேட்டார். "அதுவோ! அது உம்முடைய நினைவின் குற்றமன்றோ! அப்படி ஆழ்வார் கேட்பதற்கு உண்மையான பொருள் அதுவன்று. 'எம்பெருமானே! ஸித்தோபாயமான நீ உள்ளவனாய் இருக்கின்ற போதும் நான் உன்னை இழக்கின்றேனே!" என்ற வருத்தத்தில் ஆழ்வார், அவ்வாறு அருளிச்செய்கிறார். வேறு ஸாதனம் கண்டு தர வேண்டும் என்று நினைத்து அப்படி அவர் அருளிச் செய்யவில்லை" என்று நஞ்சீயர் விடை அளித்தார்.

நஞ்சீயருடைய சீடன் ஒருவன், "எம்பெருமானே உபாயம் என்றால் பின் சரணாகதியை எதற்குச் செய்ய வேண்டும்? சரணாகதியால் ஒரு பயனும் இல்லையே!" என்றான். இதைக் கேட்ட நஞ்சீயர் காதைப் பொத்திக் கொண்டு, "நாதமுனிகள் தொடங்கி இன்று வரை நம்முடைய ஆசார்யர்கள் 'மிகமிக ரஹஸ்யமாக உபதேசித்து வந்த அர்த்ததை இதன் பெருமை அறியாத உனக்குப் போய் நான் வெளியிட்டேனே! நான் மஹாபாபியேன்" என்று கூறிக் கொண்டே தலையில் அடித்துக் கொண்டு திருப்பள்ளியறைக்குள் சென்று விட்டார். (எம்பெருமானே உபாயம் என்றால் சரணாகதி செய்ய வேண்டியது ஏன் என்பது கேள்வி. எம்பெருமானே உபாயம் என்றாலும், பேற்றைப் பெறுவதற்கு தன்னுடைய இசைவைத் தெரிவிக்கும் வழிதான் சரணாகதி என்பது விடையாகும். இது சரணாகதனுக்குத் தகுதியாக ஆகுமே தவிர உபாயமாக ஆகாது. முதல் நிலையில் சரணாகதியானது அதிகாரி விசேஷணமாக இருக்கும். மேல் மேல் நிலைகளில் இச்சரணாகதியே அடையப்படும் பயனாகவும் இருக்கும் என்ற கருத்துகள் தொடர்ந்து ஈட்டுரையில் அருளிச்செய்யப்பட்டுள்ளன.)

[691]

(ஆவா என்னாது) நஞ்சீயர், "ஒருவனுக்குப் பராநர்த்த$_2$ம் அஸஹ்யமாய் இருந்ததாகில் நமக்கு ப$_4$க$_3$வத்ஸம்ப$_3$ந்த$_4$ம் உண்டு என்று அறுதியிடலாம். அது ப்ராப்தம் என்றிருந்தானாகில் நமக்கு ப$_4$க$_3$வத்ஸம்ப$_3$ந்த$_3$ம் இல்லை என்று தனக்கேறக் கைவாங்க அமையும்" என்று அருளிச் செய்தார்.

(திருவாய்மொழி 6-10-4 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

"ஆவா என்னாது உலகத்தை அலைக்கும் அசுரர்" (ஐயோ! ஐயோ! என்று இரக்கம் கொள்ளாமல் உலகோர்களைத் துன்புறுத்தும் அசுரர்கள்) என்று ஆழ்வார் அருளிச்செய்துள்ளார். எம்பெருமானுக்கு விருப்பமானதைச் செய்வதாவது, அவனுடைய உலகத்தில் உள்ளவர்களிடத்தில் அன்பு

செலுத்துவதேயாகும் என்றுரைத்த உரையாசிரியர், இத்தொடர்பில் நஞ்சீயர் அருளிச்செய்த **வார்த்தை** ஒன்றை எடுத்துக் காட்டுகிறார்.

விளக்கம்

எண் 202ன் விளக்கம் பார்க்க.

[692]

(திருவேங்கடத்து எம்பெருமானே!) பட்டர், "நித்யத்திலே 'அமுது செய்யப் பண்ணும்போது ஸ்தோத்ரத்தை விண்ணப்பம் செய்வது' என்று, "என்ன ஸ்தோத்ரத்தை விண்ணப்பம் செய்வது?" என்ன, "அடியேன் மேவி அமர்கின்ற அமுதே, பச்சைமாமலைபோல் மேனி என்கிற பாட்டுக்கள் போலே இருக்குமவற்றை விண்ணப்பம் செய்வது" என்று அருளிச் செய்தார்,

(திருவாய்மொழி 6-10-7 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

"அடியேன் மேவி அமர்கின்ற அமுதே" என்று எம்பெருமானை நம்மாழ்வார் அமுதமாக அருளிச் செய்துள்ளார். இத்தொடர்பில் ஓர் **ஸம்வாதம்** *கூறப்படுகிறது.*

விளக்கம்

எம்பெருமானுக்குத் திருவாராதனம் செய்யும் முறையை விளக்கி எம்பெருமானார் அருளிச் செய்துள்ள நித்யக்ரந்தத்தில் எம்பெருமானுக்குத் தளிகைகள் ஸமர்ப்பிக்கும் போது "ச்ருதிஸுகை: ஸ்தோத்ரை: ஸ்துத்வா" (செவிக்கினிய செஞ்சொற்களால் துதித்து) என்று அருளிச் செய்துள்ளார். "என்ன ஸ்தோத்ரத்தை விண்ணப்பம் செய்ய வேண்டும்?" என்று பட்டரைக் கேட்க, "அடியேன் மேவி அமர்கின்ற அமுதே, பச்சை மாமலை போல் மேனி முதலிய பாசுரங்களை விண்ணப்பம் செய்வது" என்று அருளிச் செய்தார்![1]

1. 'அடியேன்மேவி' என்ற இப்பாசுரத்தில் எம்பெருமானை 'அமுது' என்றும், 'பச்சைமாமலை' என்கிற பாசுரத்தில் அவனுடைய திருநாமத்தை 'இச்சுவை' என்றும் அருளிச்செய்துள்ளபடியால் எம்பெருமானுக்குச் சுவையான அமுது படைக்கும்போது இப்பாசுரங்களை விண்ணப்பிக்க வேண்டும் என்று பட்டர் கூறியிருக்கலாம். அல்லது, இவ்விரண்டு பாசுரங்களிலும் ஆழ்வார்கள் ஆறு விளிகளால் எம்பெருமானை அழைத்துள்ளனர். 'பச்சைமாமலை' பாசுரத்தின் வியாக்கியானத்தில், நம்முடைய நாவுக்கு ஆழ்வார் அறுசுவை அடிசில் இடுகிறார் என்று அருளிச்செய்யப்பட்டுள்ளது. எனவே 'இப்பாசுரங்களில் உள்ள ஆறு திருநாமங்கள் என்னுடைய நாவிற்கு அறுசுவை அடிசிலாக இனிப்பது போல, எம்பெருமானே! உனக்கு நான் ஸமர்ப்பிக்கும் இந்தத் தளிகையும் அறுசுவை அடிசிலாக இனிக்க வேண்டும்' என்ற கருத்தில் இதுபோன்ற பாசுரங்களை விண்ணப்பிப்பது என்று பட்டர் அருளிச்செய்திருக்கலாம்.

[693]

(நோலாது இத்யாதி) स ब्रह्मा स शिवस्सेन्द्रः (ஸ ப்$_3$ரஹ்மா ஸ ஶிவஸ்ஸேந்த்$_3$ர:) "இங்ஙனே இருக்கச் செய்தேயும் அஹிர்புத்$_4$ந்யஸம்ஹிதையிலே இவர்களுடைய வாக்யங்களை ப்ரமாணமாகக் கொண்டு போராநின்றோமே என்னில், ஸத்வம் தலையெடுத்தபோது சொல்லுமவை எல்லாம் கொள்ளக் கடவோம்; இவை கைக்கொண்டோம் என்னா, இவர்கள் தாங்கள் உத்தே$_3$ஶ்யர் ஆகார்கள்; 'காக்கை வாயிலும் கட்டுரை கொள்வர்' என்றுண்டே" என்று ப$_4$ட்டர் அருளிச் செய்தார்.

(திருவாய்மொழி 6-10-8 ஈடு வியாக்கியானம்)

நிகழ்டம்

"நோலாது ஆற்றேன் உனபாதம் காண என்று நுண்ணுர்வின் நீலார் கண்டத்தம்மானும் நிறை நான்முகனும் இந்திரனும் - சூழவிரும்பும் திருவேங்கடத்தானே!" (உனது திருவடிகளைக் காண்பதற்குரிய சாதனங்களைச் செய்யாமலே இருந்தும், உன்னைப் பிரிந்து ஆற்றமாட்டேன் என்று சிவன், பிரமன் இந்திரன் முதலியவர்கள் வழிபடுகின்ற திருவேங்கடத்தானே!) என்று ஆழ்வார் அருளிச் செய்துள்ளார். இத்தேவதைகள் ஸாத்விக குணம் தலையெடுத்தபோது எம்பெருமானைத் துதிப்பர்கள் என்றும், ராஜஸ தாமஸ குணங்கள் தலையெடுத்தபோது அகங்காரம் மிக்கவர்களாய், 'நானே இறைவன்' என்றும் கூறிக்கொள்வர்கள் என்று விளக்கிய உரையாசிரியர், பட்டர் அருளிச்செய்த **வார்த்தை** *ஒன்றை எடுத்துக் கூறுகிறார்.*

விளக்கம்

அஹிர்புத்ந்ய ஸம்ஹிதை என்பது பாஞ்சராத்ர ஆகம நூலாகும். இது சிவனால் கூறப்பட்டது. இந்த ஸம்ஹிதையில் உள்ள "அஹமஸ்மி அபராதாநாம் ஆலய:" முதலிய வாக்கியங்களை நாம் பிரமாணமாகக் கொள்கிறோமே என்னில், அந்த தேவதைகள் சத்துவம் தலையெடுத்த போது கூறுகின்ற வாக்கியங்களையெல்லாம் பிரமாணமாகக் கொள்ளக் கடவோம். (ராஜஸ தாமஸ குணங்கள் தலையெடுத்தபோது கூறும் வாக்கியங்களைப் பிரமாணமாகக் கொள்ளமாட்டோம்.) அவர்கள் சொன்ன வார்த்தைகளைக் கைக் கொண்டோம் என்பதற்காக, அவர்கள் உற்றவர்களாகிவிட மாட்டார்கள். 'காக்கை வாயிலும் கட்டுரை கொள்வர்' (பெரியாழ்வார் திருமொழி 5-1-1) என்று அருளிச் செய்யப்பட்டுள்ளபடி காக்கையின் கரைதலுக்கும் பொருள் கொள்பவர்கள் காக்கையைக் கைக்கொள்வதில்லை அல்லவா! அதுபோல, சிவன் முதலானவர்கள் சத்துவம் தலையெடுத்தபோது கூறிய வார்த்தைகளைக் கைக்கொண்டாலும், அவர்கள் உற்றவர்களாக மாட்டார்கள் என்று பட்டர் அருளிச் செய்தார்.

[694]

(உறை மார்பா!) ஒருநாள் ப$_4$ட்டர் பிள்ளை அழகிய மணவாள அரையர்க்கு த்$_3$வயம் அருளிச் செய்கைக்காக "எல்லாரும் போங்கோள்" என்ன, நஞ்சீயரும் எழுந்திருந்துபோய், 'நம்மை இராய் என்று அருளிச் செய்திலர்' என்று வெறுத்திருக்க, அப்போதே "சீயர் எங்குற்றார்?" என்று தேடி அழைத்துக் கூட வைத்துக் கொண்டிருந்து த்$_3$வயத்தை அருளிச் செய்யா நிற்கச் செய்தே, அப்போது அருளிச் செய்த வார்த்தை என்று சீயர் அருளிச் செய்வர். "இவ்வாத்மவஸ்து ஶேஷமாகில், அவன் ஶேஷியாகில், இங்குப் பிராட்டி ஸம்ப$_3$ந்த$_4$த்தால் செய்கிறது என்?" என்று கேட்க, "அது இருக்கிறபடி கேளீர்! ராவணனுக்கும் காகத்துக்கும் ஸம்ப$_3$ந்த$_4$மும் அநுஷ்ட$_2$ானமும் ஒத்திருக்க, இனி ராவணன் ஶாபத்தாலே கிட்டமாட்டாதே இருப்பது ஒன்று உண்டிறே. அங்ஙன் அன்றிக்கே ஜநநி பக்கல் அபராத$_4$த்தில் கைதொடனாயிருக்கத் தலை கொண்டு தப்பினானிறே அவள் ஸந்நிதி$_4$ உண்டாகையாலே. அவள் கடக்க இருக்கையாலே ராவணன் தலை அறுப்புண்டான். போக்கற்றுச் செயல் மாண்டு நின்ற நிலை அவனுக்கும் ஒக்குமிறே. இங்ஙனே இருக்கச் செய்தேயும் கார்யகரமாயிற்றில்லையிறே அவனுக்குப் பிராட்டி ஸந்நிதி$_4$ இல்லாமையாலே."

(திருவாய்மொழி 6-10-10 வியாக்கியானம்)

நிகழிடம்

'அகலகில்லேன் இறையும் என்று அலர்மேல் மங்கை உறை மார்பா' (ஒரு நொடியும் அகலமாட்டுகிறிலேன் என்று அலர்மேல் மங்கை உறையும்படியான திருமார்வை உடையவனே!) என்று நம்மாழ்வார் அருளிச் செய்துள்ளார். எம்பெருமானை விட்டு ஒருபோதும் பிராட்டி பிரிவதில்லை என்று துவய மந்திரத்தில் கூறப்பட்டுள்ளதை இது விளக்குகிறது என்று கூறிய உரையாசிரியர், இக்கருத்தை பட்டர் ஒருமுறை விளக்கிய **ஐதிஹ்யம்** *ஒன்றை எடுத்துக் கூறுகிறார்.*

விளக்கம்

ஒருமுறை **பட்டர், பிள்ளை அழகிய மணவாள அரையர்** *என்பவர்க்கு துவயமந்திரத்தின் பொருளை உபதேசிக்க விரும்பினார். அம்மந்திரத்தின் பொருளை மிகவும் ரகசியமாகவே உபதேசிப்பது மரபு ஆதலால், தம் முன்னே கூடியிருந்தவர்கள் அனைவரையும் எழுந்து வெளியிலே செல்லும்படி கூறினார். பட்டருடைய அருமைச் சீடரான* **நஞ்சீயர்** *உட்பட அனைவரும் எழுந்து வெளியே சென்றுவிட்டனர். ஆனால் நஞ்சீயர், 'நம்மை இரு என்று சொல்லவில்லையே' என்று மனத்திற்குள் நினைத்து வருந்தினார். அப்போது பட்டர் மந்திரத்தின் பொருளை உபதேசிப்பதற்கு முன், "நஞ்சீயர் எங்கே?" என்று கேட்டு, அவரைத் தேடி அழைத்துக் கூட வைத்துக் கொண்டிருந்து அரையருக்கு*

துவயத்தின் பொருளை உபதேசித்தார். "அப்போது பட்டர் அருளிச் செய்த வார்த்தை" என்று நஞ்சீயர் பின் வருவனவற்றை அருளிச் செய்தார்.

"எம்பெருமானுக்கு இந்த ஆத்மா அடிமைப்பட்டது; அவன் இவ்வாத்மாவிற்குத் தலைவன்; இடையில் பிராட்டியைப் புருஷகாரமாகப் பற்ற வேண்டிய அவசியம் என்ன?" என்று (பட்டரைக்) கேட்க, "அதைச் சொல்லுகிறேன் கேளும்; உலகத்துக்கெல்லாம் தாயான சீதைப் பிராட்டியின் பிள்ளைகள் என்ற ஒரே விதமான சம்பந்தத்தை உடையவர்களான காகாசுரன், இராவணன் ஆகிய இருவரும் ஒரேவிதமான தவற்றைத்தான் செய்தார்கள். அதாவது உலகத்துக்கெல்லாம் தாயான பிராட்டியிடம் காமம் கொண்டார்கள். அதிலும் இராவணனுக்கு ஏற்பட்டிருந்த ஒரு சாபம் காரணமாக சீதைப்பிராட்டியை அவனால் தொட முடியவில்லை. ஆனால் காகாசுரனோ, பிராட்டியின் திருமார்பைத் தீண்டி ரத்தம் பெருகும்படி செய்து ராவணனை விட அதிகமாக அபசாரப்பட்டான். அப்படியிருந்தும் அவனுடைய தலை தப்பியது. ஆனால் ராவணனோ தலை அறுப்புண்டான். இதற்கு என்ன காரணம்? காகாசுரன் அபசாரப்பட்டது பெருமாளும் பிராட்டியும் சேர்ந்திருக்கின்ற நிலையிலே; ஆனால் இராவணனோ பிராட்டியைப் பிரித்துவிட்டான். இராமபிரான் எய்த பாணத்திலிருந்து தப்பிப்பதற்காகப் பறந்து ஓடிய காகாசுரன் முடிவில், பறப்பதற்கு சக்தியில்லாமல் செயல் மாண்டு இராமபிரான் திருவடிகளில் விழுந்தபோது சீதைப்பிராட்டி இராமபிரான் அருகில் இருந்தபடியால், காகாசுரன் வதம் செய்யப்படாமல் தப்பிப் பிழைத்தான். ஆனால், இதே போல் இராவணனும் மரிப்பதற்கு முதல் நாள் போரில் தன்னுடைய வில்லையும் எறிந்து விட்டுச் செயல் மாண்டு நின்றபோதும் அந்நிலை அவனுடைய உயிரைக் காத்துக் கொள்ளப் பயன்படவில்லை. அவன் இராமபிரானிடமிருந்து சீதைப் பிராட்டியைப் பிரித்து விட்டமையால் (அதாவது, அவள் அருகில் இல்லாதபடியால்) முடிவில் தலையறுப்புண்டான். எனவே பிராட்டியின் புருஷகாரத்தாலேயே காகாசுரன் பிழைத்தான் என்பதும், பிராட்டி பிரிந்திருந்தமையால் புருஷகாரம் செய்வாரில்லாமல் இராவணன் முடிந்தான் என்பதும் புலனாகிறது அன்றோ!" என்று பட்டர் அருளிச் செய்தார்![1]

[695]

பிள்ளை திருநறையூர் அரையர், "இப்பாட்டுக்களில் பூர்வார்த்த₄மடைய புலியின் வாயிலே அகப்பட்ட ப்ரஜை, தாய் முகத்திலே விழித்துக் கொண்டு, புலியின் வாயிலே கிடந்து நோவுபடுமாபோலேயாயிருக்கிறது" என்று அருளிச் செய்வர்.

(திருவாய்மொழி 7-1 ஈடு வியாக்கியான ப்ரவேசம்)

1. "இவள் ஸன்னிதியாலே காகம் தலை பெற்றது; அது இல்லாமையாலே ராவணன் முடிந்தான்" என்று பிள்ளைலோகாசார்யர் முமுக்ஷுப்படியில் (135) அருளிச்செய்துள்ளதும் காண்க.

நிகழிடம்

"உண்ணிலாவிய ஐவரால் குமை தீற்றி" என்று தொடங்கும் பதிகத்தில் ஆழ்வார், பாசுரம்தோறும் முதல் இரண்டு அடிகளில், இந்திரியங்களின் வாயில் அகப்பட்டுக் கொண்டு தாம் படும் பாட்டை எம்பெருமானிடம் விண்ணப்பிக்கிறார். இதை விளக்கிய பிள்ளை திருநறையூரரையர் அருளிச்செய்த **வார்த்தை** எடுத்துக்காட்டப்பெறுகிறது.

விளக்கம்

"புலியின் வாயில் அகப்பட்டுக் கொண்ட குழந்தை தாயை நோக்கிக் கதறுவது போல, இந்திரியங்களிடம் அகப்பட்டுக் கொண்ட ஆழ்வார் எம்பெருமானை நோக்கி, இப்பதிகத்தில் பாசுரந்தோறும் முன் இரண்டடிகளில் கதறுகிறார்" என்று பிள்ளை திருநறையூரரையர் அருளிச் செய்தார்.

[696]

(எண்ணிலாப் பெருமாயனே!) அன்றிக்கே, "எண்ணிறந்த மஹாஶ்சர்யமான குணங்களை உடையவனே!" என்று பிள்ளான் பணிக்கும்படி.

(திருவாய்மொழி 7-1-1 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

"எண்ணிலாப் பெருமாயனே!" என்று ந

இங்கு மாயன் என்ற சொல்லுக்கு எம்பெருமா

ாசிரியர் பிள்

என்று விண்ணப்பம் செய்ய, "எல்லாம் செய்கிறோம்" என்று திருவுள்ள

பிறந்த நாளை மன்னியைக் கொண்டு வந்து கொடுத்தார்கள்.

(திருவாய்மொழி 7-2 ஈடு வியாக்கியான ப

நிகழிடம்

எம்பெருமானைப் பிரிந்த வருத்தத்தினால் துடிக்கின்ற நம்மாழ்வா தாமான தன்மையை இழந்து, ஒரு நாயகியின் நிலையை அடைந்து, அதிலு தம்முடைய நிலையினைத் தம்வாயில் சொல்வதற்கும் சக்தியில்லாதவராய், த நிலையைத் தாய் கூறுவதாக "கங்குலும் பகலும்" என்று தொடங்குகின்ற பதிக

நிகழ்டம்

எம்பெருமானைப் பிரிந்த வருத்தத்தினால் துடிக்கின்ற நம்மாழ்வார், தாமான தன்மையை இழந்து, ஒரு நாயகியின் நிலையை அடைந்து, அதிலும் தம்முடைய நிலையினைத் தம்வாயில் சொல்வதற்கும் சக்தியில்லாதவராய், தம் நிலையைத் தாய் கூறுவதாக "கங்குலும் பகலும்" என்று தொடங்குகின்ற பதிகம் அமைந்துள்ளது. தாயானவள் தன் மகளை ஸ்ரீரங்கநாதன் திருவடிகளில் இட்டு வைத்துக் கொண்டிருந்து, தன் மகள் அழுவது, தொழுவது, மோகிப்பது, அரற்றுவது, அடைவுகெடப் பேசுவது, நெடுமூச்சு எறிவது, அதுவும் மாட்டாதொழிவது, திகைத்து நிற்பது முதலியவற்றை ஒவ்வொன்றாக எடுத்துச் சொல்லி, "இவள் திறத்தில் நீர் என்ன செய்வதாகத் திருவுள்ளம் பற்றி இருக்கிறீர்?" என்று ஸ்ரீரங்கநாதனையே கேட்பதாக இப்பதிகம் அமைந்துள்ளது. இது குறித்து பட்டர் அருளிச்செய்த **வார்த்தை** எடுத்துக்காட்டப்பெறுகிறது.

விளக்கம்

இப்பதிகத்தை விளக்கியருளும்போதெல்லாம் பட்டர், "ஆழ்வாருக்கு ஓடுகின்ற நிலையும் அறியாமல், அவருடைய உள்ளக்கிடையும் இன்றிக்கே இருக்கிற நாம் இத்திருவாய்மொழியில் என்ன சொல்ல முடியும்?" என்று தம் திருமுடியில் கைவைத்துக் கொண்டிருப்பராம்.

[698]

ஆண்டாள் ஒருநாள் ஆழ்வானுக்கு, "பிள்ளைகள் விவாஹப்ராப்தர் ஆனார்கள். இவ்விடையாட்டம் ஒன்றும் ஆராயாதிருக்கிறதென்?" என்ன, "ப$_4$க$_8$வத்குடும்பத்துக்கு என்னை இன்றிருந்து கரையச் சொல்லுகிறாயோ? நாளை நான் வாசித்துச் சமையக் கொள்ள அங்கே வரக்காட்டு" என்ன, ப$_4$ட்டரையும் சீராமப்பிள்ளையையும் கொடுத்துப் போகவிட, வாசித்துச் சமைந்து பெருமாள் திருவடிகளிலே நிற்க, "ஒன்று சொல்லுவாய்போலே இருந்தாயீ!" என்று திருவுள்ளமாக, "இவர்கள் விவாஹப்ராப்தராகாநின்றார்கள் என்னா நின்றார்கள்" என்று விண்ணப்பம் செய்ய, "எல்லாம் செய்கிறோம்" என்று திருவுள்ளமானார். பிற்றை நாளே மன்னியைக் கொண்டு வந்து கொடுத்தார்கள்.

(திருவாய்மொழி 7-2 ஈடு வியாக்கியான ப்ரவேசம்)

நிகழ்டம்

எம்பெருமானைப் பிரிந்த வருத்தத்தினால் துடிக்கின்ற நம்மாழ்வார், தாமான தன்மையை இழந்து, ஒரு நாயகியின் நிலையை அடைந்து, அதிலும் தம்முடைய நிலையினைத் தம்வாயில் சொல்வதற்கும் சக்தியில்லாதவராய், தம் நிலையைத் தாய் கூறுவதாக "கங்குலும் பகலும்" என்று தொடங்குகின்ற பதிகம்

அமைந்துள்ளது. தாயானவள் தன் மகளை ஸ்ரீரங்கநாதன் திருவடிகளில் இட்டு வைத்துக்கொண்டிருந்து, தன் மகளின் நிலையை அவனுக்குத் தெரிவித்து, "இவள் திறத்தில் நீர் என்ன செய்வதாகத் திருவுள்ளம் பற்றி இருக்கிறீர்?" என்று ஸ்ரீரங்கநாதனையே கேட்பதாக இப்பதிகம் அமைந்துள்ளது. எல்லா நிலைகளிலும் எம்பெருமானையே பரிகாரம் கேட்கும் குடி அன்றோ என்றுரைத்த உரையாசிரியர், இத்தொடர்பில் ஓர் **ஐதிஹ்யம்** காட்டுகிறார்.

விளக்கம்

எண் 348ன் விளக்கம் பார்க்க.

[699]

அகளங்கப்₂ரம்மராயர் அடையவளைந்தான் செய்யாநிற்கச் செய்தே, மதிள் போக்குகைக்காக இளையாழ்வான் அகத்தை வாங்கப்புக, ப₄ட்டர் அதைக் கேட்டருளி, "வாரீர் பிள்ளாய்! நீர் செய்கிற மதிள் பெருமாளுக்கு ரக்ஷகம் என்று இராதே கொள்ளீர்; இங்குக் கிடக்கிற நாலு குடியும் காணும் பெருமாளுக்கு ரக்ஷை. ஆனபின்பு, நீர் செய்கிறவை எல்லாம் அழகிது. இவை எல்லாம் நாம் செய்கிறோம் என்று இராதே பெருமாள் செய்விக்கிறார் என்று இரீர். உமக்கு நல்வழி போகைக்கு உடலாம் காணும்!" என்று அருளிச் செய்தார்.

(திருவாய்மொழி 7-2 ஈடு வியாக்கியான ப்ரவேசம்)

நிகழிடம்

எம்பெருமானைப் பிரிந்த வருத்தத்தினால் துடிக்கின்ற நம்மாழ்வார், தாமான தன்மையை இழந்து, ஒரு நாயகியின் நிலையை அடைந்து, அதிலும் தம்முடைய நிலையினைத் தம்வாயில் சொல்வதற்கும் சக்தியில்லாதவராய், தம் நிலையைத் தாய் கூறுவதாக "கங்குலும் பகலும்" என்று தொடங்குகின்ற பதிகம் அமைந்துள்ளது. தாயானவள் தன் மகளை ஸ்ரீரங்கநாதன் திருவடிகளில் இட்டு வைத்துக்கொண்டிருந்து, தன் மகளின் நிலையை அவனுக்குத் தெரிவித்து, "இவள் திறத்தில் நீர் என்ன செய்வதாகத் திருவுள்ளம் பற்றி இருக்கிறீர்?" என்று ஸ்ரீரங்கநாதனையே கேட்பதாக இப்பதிகம் அமைந்துள்ளது. எல்லா நிலைகளிலும் எம்பெருமானையே பரிகாரம் கேட்கும் குடி அன்றோ என்றுரைத்த உரையாசிரியர், இக்கருத்தையே பட்டர் ஒருமுறை அருளிச் செய்த **ஐதிஹ்யம்** *ஒன்றினை எடுத்துக் காட்டுகிறார்.*

விளக்கம்

அகளங்கப்ரம்மராயர் என்பவர் திருவரங்கம் பெரிய கோயிலுக்கு ஒரு பெரிய மதிளைக் கட்டத் தொடங்கினார். அம்மதில் அடையவளைந்தான் என்று வழங்கப் பெறுகிறது. அம்மதிளைக் கட்டி வரும்போது, வழியில் இளையாழ்வான் என்பவருடைய இல்லம் வழியில் குறுக்கிட்டது. அதை இடித்துத் தள்ளி விட்டு

மதிள் கட்ட அகளங்கப்ரம்மராயர் முற்பட்டபோது, பட்டர் அவரிடத்தில் "பிள்ளாய்! நீர் கட்டுகின்ற மதிள்தான் பெருமாளைக் காக்கின்றது என்று நினையாதிரும். இத்தலத்தைச் சுற்றிலும் வாழ்கின்ற (இளையாழ்வானைப் போன்ற) ஸ்ரீவைஷ்ணவர்களே பெருமாளைக் காத்து வருகின்றார்கள் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளும். நீர் செய்வது எல்லாம் அழகிய செயல்கள்தான். ஆயினும் 'இவையெல்லாம் நான் செய்தேன்' என்று இறுமாப்புக் கொள்ளாதிரும். எல்லாவற்றையும் பெருமாளே செய்கிறார் என்று அறிந்து கொள்ளும். அதுதான் நீர் உய்வதற்கு வழியாகும்" என்று அருளிச் செய்தார்.

[700]

(சங்கு சக்கரங்கள் என்று கைகூப்பும்) 'சங்கு சக்கரம் என்று கை கூப்பும் என்று இயல் ஆனாலோ?' என்று பிள்ளை திருநறையூர் அரையர், "பஹுவசநத்துக்குப் பொருள் கண்டிலோமீ" என்ன, "இசையிலே தூக்கின இடத்து இரண்டும் இசைந்து கிடக்கையாலே, சொல்லிப் போருகிறபடியே 'சங்கு சக்கரங்கள்' என்ன அமையும்" என்று ஆப்பான் நிர்ணயித்தார்.

(திருவாய்மொழி 7-2-1 இருபத்து நாலாயிரப்படி வியாக்கியானம்)

நிகழிடம்

மகளின் நிலையினை வர்ணிக்கின்ற திருத்தாயார் "சங்கு சக்கரங்கள் என்று கைகூப்பும்" (சங்கு சக்கரங்கள் என்று சொல்லிக் கை கூப்பும்) என்று கூறுவதாகப் பாசுரம் அமைந்துள்ளது. இதுகுறித்து ஒரு **ஸம்வாதம்** *கூறப்பெறுகிறது.*

விளக்கம்

"இங்கு சங்கு என்று ஒருமையில் கூறிவிட்டு, சக்கரங்கள் என்று பன்மையில் கூறப்பட்டுள்ளதே! இப்படிக் கூறுவதற்குப் பயன் ஏதும் இல்லாமையால், 'சங்கு சக்கரம் என்று கை கூப்பும்' என்றே பாடம் கொள்ளலாமோ?" என்று **பிள்ளை திருநறையூர் அரையர்** *கேட்டார். அதற்கு* **ஆப்பான் (திருவழுந்தூர் அரையர்)** *இசையில் பாடும் போது சங்கு சக்கரங்கள் என்று கொள்வது மிகவும் பொருந்தி இருக்கின்றமையால், உள்ளபடியே 'சங்கு சக்கரங்கள்' என்று கொள்வதே சரியானது என்று நிர்ணயம் செய்தார்.*[1]

[701]

(வட்கிலள் இறையும்) இதற்குச் சீயர் அருளிச்செய்வது "இவள் முடிந்தாள்" என்று.

(திருவாய்மொழி 7-2-3 ஈடு வியாக்கியானம்)

1. ஈடு முப்பத்தாறாயிரப்படி உரையில் இந்த ஸம்வாதம் குறிப்பிடப்பெறவில்லை.

நிகழிடம்

தன்னுடைய மகளான பராங்குச நாயகியின் நிலையை ஸ்ரீரங்க நாதனுக்குத் தெரிவிக்கின்ற தாயார் "வட்கிலள் இறையும்" (சிறிதும் வெட்கம் இல்லாதவளாக இருக்கிறாள்) என்று கூறுவதாகப் பாசுரம் அமைந்துள்ளது. இதுகுறித்து நஞ்சீயர் அருளிச்செய்த **வார்த்தை** *எடுத்துக்காட்டப்படுகிறது.*

விளக்கம்

"தன்னுடைய மகள் முடிந்தாள் என்று தாயார் கூறுகிறாள்" என்று நஞ்சீயர் கூறினாராம். அதாவது பெண்மைக்கு இலக்கணமே வெட்கம் தான்; அதைத் தன்மகள் இழந்தாள் என்று தாயார் கூறுவது, தன் மகள் முடிந்தாள் என்று கூறுவதற்கு ஒப்பாகும் என்பது நஞ்சீயர் கருத்தாகும்.

[702]

(தேறும்) உய்ந்த பிள்ளை பாடும்போது, "கெட்டேன்; இவள் தேறும் என்பதே!" என்று சீயர் அருளிச் செய்வராம்.

(திருவாய்மொழி 7-2-5 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

தன் மகள் பராங்குசநாயகியின் நிலையை ஸ்ரீரங்கநாதனுக்குத் தெரிவிக்கும் தாயார் "சிந்திக்கும் திசைக்கும் தேறும்" (சிந்திக்கின்றாள், அறிவு கெடுகின்றாள், தெளிவடைகின்றாள்) என்கிறாள். இதுகுறித்து ஓர் **ஐதிஹ்யம்** *கூறப்பெறுகிறது.*

விளக்கம்

இப்பாசுரத்தை **உய்ந்த பிள்ளை** *என்கின்ற அரையர், பெருமாள் திருமுன்பே பாடும் போது கேட்ட* **நஞ்சீயர்** *"ஐயோ கெட்டேன்! இவள் தேறும் என்கிறாளே!" என்று அருளிச் செய்தாராம். அறிவு கலங்கிய நிலையில் இருக்கின்றவள் திடீரென்று தேறினால், அது மிகமிக ஆபத்தாகையால், இது அணையப்போகும் விளக்கின் ஒளி போல், முடிவிற்கு முன் ஏற்படும் தெளிவோ என்று அஞ்சிய நஞ்சீயர் இப்படி அருளிச் செய்தார்.*

[703]

(திருவரங்கத்துள்ளாய் என்னும்) "பெருமாளே! என்னும்" என்று சீயர்.

(திருவாய்மொழி 7-2-5 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

தன்னுடைய மகளான பராங்குச நாயகியின் நிலையை ஸ்ரீரங்கநாதனுக்குத் தெரிவிக்கின்ற தாயார், "திருவரங்கத்துள்ளாய் என்னும்" (திருவரங்கத்தில்

உள்ளவனே! என்கிறாள்) என்று கூறுகிறாள். இதுகுறித்து நஞ்சீயர் அருளிச்செய்த **வார்த்தை** *எடுத்துக்காட்டப்பெறுகிறது.*

விளக்கம்

திருவரங்கத்தில் எழுந்தருளியுள்ள எம்பெருமான் பெரியபெருமாள் என வழங்கப் படுபவர் ஆதலின் "பெருமாளே என்கிறாள்" என்று நஞ்சீயர் கூறுவர்.

[704]

"ஆஶ்ரிதரை வாழ்விக்கையும் அநாஶ்ரிதரை நலிகையுமன்றிக்கே, இப்போது விபரீதமாயிற்றோ உம்முடையபடி என்கிறாள்" என்று பிள்ளான்.

(திருவாய்மொழி 7-2-7 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

தன்னுடைய மகளான பராங்குச நாயகியின் நிலையை ஸ்ரீரங்கநாதனுக்குத் தெரிவிக்கின்ற தாயார் "பால துன்பங்கள் இன்பங்கள் படைத்தாய்" (மிகுந்த துன்பங்களையும் இன்பங்களையும் படைத்தவனே!) என்று தன் மகள் கூறுவதாகக் கூறுகிறாள். இதற்குப் பிள்ளான் அருளிய **நிர்வாஹம்** *எடுத்துக் காட்டப்பெறுகிறது.*

விளக்கம்

"அடியவர்களை வாழ்விக்கையும், அடியவர்கள் அல்லாதவர்களைத் துன்புறுத்துகையும் தான் உன்னுடைய தன்மை. ஆனால் (அடியவளான எனக்கு இப்போது துன்பத்தைத் தந்திருப்பதால்) இப்போது உன்னுடைய அத்தன்மை தலைகீழாக மாறிவிட்டது" என்று பராங்குச நாயகி எம்பெருமானைக் குறித்துக் கூறுவதாகப் பிள்ளான் பொருள் அருளிச் செய்தார்.

[705]

(என்னுடைக் கோமளக் கொழுந்தே) "தூஸை முறுகினால் வைத்யர் கண் முகம் பாராதாப்போலே, மகள் அவஸ்தையைக் கண்டு தளர்ந்து பெரியபெருமாள் முகம் பாராதே வார்த்தை சொல்லுகிறாள்" என்று அருளிச் செய்வர். இப்பாட்டில் ஒரு தலைக்கட்டு இன்றிக்கே இருக்கும் இதுக்குக் கருத்து, "பரிஹரிக்கும் எல்லை கழிந்தாள்: நாம் இவர்க்குச் சொல்லுவது என்?" என்று தன்னிலே நோவுபடுகிறாள்" என்று வங்கிப்புரத்து நம்பி பணிக்கும்.

(திருவாய்மொழி 7-2-7 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

தன்னுடைய மகளான பராங்குச நாயகியின் நிலையை ஸ்ரீரங்கநாதனுக்குத் தெரிவிக்கின்ற தாயார், இப்பதிகத்தில் ஒவ்வொரு பாசுரத்திலும்

'திருவரங்கத்தாய்' என்று எம்பெருமானை நோக்கிக் கூறுவதாகவும், 'இவளை என்ன செய்யப்போகிறாய்?' என்று அவனையே கேட்பதாகவும் அமைந்துள்ளது. ஆனால் இப்பாசுரத்தில் மட்டும் தாயார் அவ்வாறு கூறாததற்குக் காரணத்தை விளக்கும்வகையில் **நிர்வாஹங்கள்** கூறுப்பெறுகின்றன.

விளக்கம்

"நோயாளியின் நிலைமை மிகவும் கவலைக்கிடமாகிப் பிழைக்க முடியாத நிலை ஏற்பட்டு விட்டால், மருத்துவர் பிறர் முகத்தைப் பார்க்காமல் அவர்களுக்கு நிலைமையைத் தெரிவிப்பது போல, எம்பெருமானுடைய பிரிவால் மிகவும் வருந்தி முடியும் நிலையிலுள்ள மகளைக் கண்ட தாயார், பெரியபெருமாளுடைய முகத்தைப் பாராமலே மகளுடைய நிலையைத் தெரிவிக்கிறாள்; எனவேதான் இப்பாசுரத்தில் 'திருவரங்கத்தாய்' என்று தாயார் கூறவில்லை" என்று **நஞ்சீயர்** அருளிச் செய்வர்.

இப்பதிகத்தில் அமைந்துள்ள பாசுரங்கள் அனைத்திலும் "என் மகளை என்ன செய்ய நினைத்திருக்கிறாய்?" என்று ஸ்ரீரங்கநாதனைத் தாய் கேட்பதாக உள்ளது. ஆனால் இப்பாசுரத்தில் அப்படி அன்றிக்கே "கோலமா மழைக்கண் பனி மல்க இருக்கும் என்னுடைக் கோமளக் கொழுந்தே" என்றுள்ளது. எனவே இப்பாசுரத்தில் மட்டும் ஒரு தலைக்கட்டு (முடிவு) இல்லாமல் இருப்பதற்குக் காரணம் என்ன என்பதற்கு 'என் மகளுக்கு இனிமேல் ஒரு பரிகாரமும் இல்லை. அந்த நிலைகளையெல்லாம் இவள் கடந்து விட்டாள். எனவே ஸ்ரீரங்கநாதனுக்கு நாம் எதைச் சொல்லுவது?' என்று தனக்குள் வருந்துகிறாள் தாயார் என்று **வங்கிப்புரத்து நம்பி** அருளிச் செய்வர்.

[706]

(என்திருமகள்சேர் மார்பனே என்னும்) அனந்தாழ்வான் தன் பெண்பிள்ளையை 'என் திருமகள்' என்று திருநாமம் சாத்தினான். ப$_4$ட்டர், பெருமாளுக்கு, "அடியேனை 'ஸ்த்ரீத$_4$னமாகப் பிராட்டிக்கு வந்தவன்' என்று திருவுள்ளம் பற்றவும், நானும் 'இவர் எங்கள் நாய்ச்சியாருக்கு நல்லர்' என்று அவ்வழியே அழகிய மணவாளப் பெருமாள் என்று நினைத்திருக்கவும் ஆக வேணும்" என்று வேண்டிக் கொண்டார்.

(திருவாய்மொழி 7-2-9 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

"என் திருமகள் சேர் மார்பனே!" (என்னுடைய திருமகள் சேர்ந்த மார்பை உடையவனே!) என்று பராங்குச நாயகி கூறுவதாகத் தாயார் கூறுகிறாள். இங்கு 'என்' என்பது 'மார்பன்' என்ற சொல்லில் அந்வயிக்காமல் (சேர்க்காமல்)

'திருமகள்' என்ற சொல்லில் அந்வயிக்கிறது என்று உரைக்கின்றார் உரையாசிரியர். (அதாவது, ஆழ்வார் தம்மைத் திருமகளைச் சேர்ந்தவராக நினைத்திருக்கிறாரேயல்லது எம்பெருமானைச் சேர்ந்தவராக நினைத்திருக்க வில்லை என்பது கருத்து.) இத் தொடர்பில், **ஐதிஹ்யங்கள்** கூறுகிறார்.

விளக்கம்

அநந்தாழ்வான் தம்முடைய மகளுக்கு 'என் திருமகள்' என்றே பெயரிட்டிருந்தாராம். பெருமாளிடத்தில் **பட்டர்**, "அடியேனை ஸ்த்ரீதனமாக (=திருமணத்தின் போது மனைவியுடன் வந்த சொத்தாக) பிராட்டிக்கு வந்தவன் என்று திருவுள்ளம் பற்ற வேண்டும். எங்கள் நாய்ச்சியாருக்கு வேண்டியவர் என்பதனால் தேவரீரை அடியேனும் அழகியமணவாளப்பெருமாள் (மாப்பிள்ளை) என்று நினைத்திருக்க வேண்டும்" என்று வேண்டிக் கொண்டார்! (இவ்வாறு பட்டரும் தம்மைப் பிராட்டியைச் சேர்ந்தவராகவே கூறிக் கொண்டார்.)

[707]

(சேர் மார்பனே)... பெருமாளுக்கு விண்ணப்பம் செய்யுமவை கேட்கைக்காக, நஞ்சீயரை அழைத்தருளித் தாம் அமுது செய்யாநிற்கச் செய்தே, இத் திருவாய்மொழி இயலைக் கேட்டருளாநிற்க, இப்பாட்டளவிலே வந்தவாறே, 'என் திருமகள்சேர்மார்பனே என்னுமென்னுடை ஆவியே என்னும்' என்று இயலைச் சேர்த்து அருளிச் செய்ய, அத்தைக் கேட்டுக் கையை உதறி, 'ஸ்ரீரங்கநாத!' என்று அணையிலே சாய்ந்தருளினார் ப$_4$ட்டர் என்று அருளிச் செய்வர். "அப்போது திருமேனியிலே பிறந்த விக்ருதியைக் கண்டு, 'இவர்க்கு ப$_4$க$_3$வத்ப்ராப்தி அணித்தாகிறதோ?' என்று அஞ்சியிருந்தேன்" என்று சீயர் அருளிச் செய்வர்.

(திருவாய்மொழி 7-2-9 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

திருவரங்கனையே நினைத்துத் தன்மகளான பராங்குச நாயகி கூறுவனவற்றைத் தாய் கூறுவதாக அமைந்துள்ளது 'கங்குலும் பகலும்' என்று தொடங்கும் பதிகம். இப்பதிகத்தில் இப்பாசுரத்தில் 'என்திருமகள் சேர் மார்பனே என்னும் என்னுடை ஆவியே என்னும்' என்று தாயார் கூறுவதாகப் பாசுரம் அமைந்துள்ளது. இதற்கு, "என்னுடைய திருமகளானவள் சேர்ந்த மார்பை உடையவனே என்கிறாள்; என்னுடைய உயிரானவனே என்கிறாள்" என்று இரண்டு வாக்கியமாகப் பொருள் உரைக்காமல் "என்னுடைய திருமகளானவள் சேர்ந்த மார்பை உடையவனான என்னுடைய உயிரே! என்கிறாள்" என்று பொருள் உரைத்து அத்தொடர்பில் ஓர் **ஐதிஹ்யம்** கூறப்படுகிறது.

1. ஸ்ரீகுணரத்னகோசத்தில் 51ம் சுலோகத்தில் இக்கருத்தை பட்டர் அருளிச்செய்துள்ளார்.

விளக்கம்

பட்டர், எம்பெருமான் திருமுன்பே கவிகள் விண்ணப்பிப்பார். மற்றும் புராண சுலோகங்களுக்கும் பொருள் உரைப்பார். அப்படி உரைக்கும் போது ஆழ்வார்கள் பாசுரங்களை மேற்கோளாகக் கூறும் பொருட்டுப் பாசுரங்களைத் திரட்டி எடுப்பதற்காகத் தாம் அமுது செய்யும் போது நஞ்சீயரைப் பாசுரங்களைச் சொல்லச் சொல்லிக் கேட்பது வழக்கம். அப்படி பட்டர் ஒருமுறை நஞ்சீயரை அழைத்துத் தாம் அமுது செய்யும் போது 'கங்குலும் பகலும்' என்று தொடங்கும் இப்பதிகத்தின் இயலைக் கேட்டுக் கொண்டிருந்தார். நஞ்சீயர் இப்பாசுரத்தை இயல் சொல்லும் போது, ('என்திருமகள் சேர் மார்பனே என்னும், என்னுடைய ஆவியே என்னும்' என்று இரண்டு வாக்கியமாகப் பிரித்துச் சொல்லாமல்) 'என்திருமகள்சேர் மார்பனே என்னுமென்னுடை ஆவியே என்னும்' என்று இயலைச் சேர்த்துக் கூறிவிட்டார். (இப்படிச் சேர்த்துக் கூறியபடியால், 'என்னுடைய திருமகளானவள் சேரும்படியான மார்பை உடையவன் என்று சொல்லப்படுகின்ற என்னுடைய ஆவியே' என்கிறாள் பராங்குச நாயகி என்ற பொருள் கிடைக்கின்றது. அதாவது ஆழ்வாருடைய உயிர் என்பது ஒரு வாயுவல்ல; திருமகளோடு கூடிய எம்பெருமானே என்பது கருத்து.) இதைக் கேட்டுக் கொண்டிருந்த பட்டர். அப்படிக் கூறியதன் அர்த்தத்தில் நெஞ்சை இழந்தவராய், கையை உதறி, 'ஸ்ரீரங்கநாத' என்று கூறிக்கொண்டே அணையிலே சாய்ந்து விட்டார். அப்போது அவருடைய திருமேனியில் ஏற்பட்ட மாறுபாட்டைக் கண்டு "இவர்க்கு எம்பெருமானை அடையும் தருணம் (மரணம்) நெருங்குகிறதோ!" என்று அஞ்சிவிட்டேன் என்று நஞ்சீயர் அருளிச் செய்தார்.

[708]

(மூவுலகு இத்யாதி) "மூவுலகாளியே கடிகமழ் கொன்றைச் சடையனே நான்முகக் கடவுளே என்னும் வடிவுடை வானோர்க்குத் தலைவனே என்னும்" என்று திருமாலையாண்டான் வையதி$_4$கரண்யமாக்கி நிர்வஹிக்கும், 'என்னும்' என்னுமது என்னுமவனாய். இத்தை எம்பெருமானார் கேட்டருளி ஸாமாநாதி$_4$கரண்யத்தாலே அருளிச் செய்தருளினார். த்ரைலோக்யத்துக்கும் கடவனான இந்த்$_3$ரனுக்கு அந்தர்யாமியாய் நின்று அவனுடைய அதி$_4$காரத்தை நிர்வஹிக்கிறவனே! என்னும்; பரிமளத்தை உடைத்தான கொன்றையை ஜடையிலே உடைய ருத்$_3$ரனுக்கு அந்தர்யாமியாய் நின்று அவனுடைய பத$_3$த்தை நிர்வஹிக்கிறவனே! என்னும்; அவர்களோடு இவ்வருகுள்ளாரோடு வாசியற, எல்லார்க்கும் நிர்வாஹகனாயிருக்கிற சதுர்முக$_2$னாகிற தே$_3$வதைக்கு அந்தர்யாமியானவனே! என்னும்.

(திருவாய்மொழி 7-2-10 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

பராங்குச நாயகி, எம்பெருமானைப் பற்றிக் கூறும்போது, "மூவுலகாளியே என்னும் கடிகமழ் கொன்றைச் சடையனே என்னும் நான்முகக் கடவுளே என்னும் வடிவுடை வானோர்க்குத் தலைவனே என்னும்" என்று கூறுவதாக அவளுடைய தாயார் கூறுகிறாள். இதற்கு இரு **நிர்வாஹங்கள்** *கூறப்படுகின்றன.*

விளக்கம்

திருமாலை ஆண்டான் *இவ்வரிகளை வையதிகரண்யமாக்கி (வெவ்வேறு பொருள்களைக் கூறுகின்ற சொற்களாகக் கொண்டு) பொருள் உரைத்தார். அதாவது மூவுலகாளி, கடிகமழ் கொன்றைச் சடையன், நான்முகக் கடவுள் என்று சொல்லப்படுகின்ற வானோர்க்கு (தேவதைகளுக்கு)த் தலைவனே என்கிறாள் என்பது அவர் அளித்த விளக்கமாகும். இவ்விளக்கத்தில் மூவுலகாளியே (இந்திரனே), கொன்றைச் சடையனே (சிவனே), நான்முகக் கடவுளே (பிரமனே) என்ற சொற்கள் தனித்தனியே அந்தந்த தேவதைகளைக் குறித்து, வானோர்க்குத் தலைவனே என்பது, இப்படிப்பட்ட தேவதைகளுக்குத் தலைவனான எம்பெருமானைக் குறிக்கின்றது என்று திருமாலையாண்டான் பொருளுரைத்தார். இதைக் கேட்ட* **எம்பெருமானார்** *இவ்வரிகளுக்கு ஸாமாநாதிகரண்யத்தில் (ஒரே பொருளைக் கூறுகின்ற வெவ்வேறு சொற்களாகக் கொண்டு) பொருள் உரைத்தார். மூவுலகாளியே என்னும் = மூவுலகங்களை ஆளுகின்ற இந்திரனுக்கு அந்தர்யாமியாக நின்று அவனுடைய அதிகாரத்தை நிர்வகிப்பவனே! என்கிறாள்; கடிகமழ் கொன்றைச் சடையனே என்னும் = வாசனை உடைய கொன்றை மலரைச் சடையிலே அணிந்த சிவனுக்கு அந்தர்யாமியாக நின்று அவனுடைய தொழிலான அழித்தலைச் செய்பவனே! என்கிறாள். நான்முகக் கடவுளே என்னும் = நான்முகனான பிரமனுக்கு அந்தர்யாமியாக இருந்து அவனுடைய தொழிலான படைத்தலைச் செய்பவனே! என்கிறாள் என்று பொருள் உரைத்தார். இவ்விளக்கத்தில் மூவுலகாளியே கொன்றைச் சடையனே நான்முகக் கடவுளே என்ற சொற்கள் அனைத்தும் எம்பெருமானையே (அந்தர்யாமியாகக்) குறிக்கின்றன என்று அவர் உரைத்தார்.*

[709]

(அடி இத்யாதி) "ஜீவிப்பாரைப் போலே யிருந்து, முடிந்து கொடு நின்றாள்" என்று பூர்வர்கள் நிர்வாஹம், அங்ஙனேயானால், மேல் ப்ரப$_3$ந்த$_4$ம் நடவாது என்று, "ஸம்ஶ்லேஷிக்கப் பெறாளோ என்று தோற்றும்படி அவஸந்நையான இவள் கிட்டி ஸம்ஶ்லேஷிக்கப் பெற்றாள், காளமேக$_4$நிப$_4$ஶ்யாமமான பெரியபெருமாள் திருவடிகளை" என்று எம்பெருமானார் நிர்வஹித்தருளினார்.

(திருவாய்மொழி 7-2-10 இருபத்துநாலாயிரப்படி வியாக்கியானம்)

நிகழிடம்

தன் மகளான பராங்குச நாயகியைப் பற்றிக் கூறுகின்ற திருத்தாயார், "அடி அடையாதாள் போல் இவள் அணுகி அடைந்தனள் முகில் வண்ணன் அடியே" என்கிறாள். இதற்கு இரண்டு விதமான **நிர்வாஹங்கள்** *கூறப்பெறுகின்றன.*

விளக்கம்

'இவள் உயிர் வாழ்பவளைப் போலே இருந்து, திடீரென்று முடிந்து விட்டாள்' என்று தாயார் கூறுவதாக எம்பெருமானாருக்கு முற்பட்ட **ஆசாரியர்கள்** *பொருள் உரைத்தனர்.*

"அப்படி முடிந்துவிட்டாளாகில், மேலே தொடர்ந்து பிரபந்தம் அருளிச் செய்திருக்க முடியாதன்றோ! எனவே இவள் முடிந்தாள் என்பது பொருந்தாது. எம்பெருமானுடைய திருவடிகளைக் கிட்டமாட்டாள் என்றே நினைக்கும்படி இருந்த இவள், காளமேகம் போன்ற திருநிறத்தை உடைய பெரிய பெருமாள் திருவடிகளைக் கிட்டி விட்டாள் (அதாவது எம்பெருமானுடன் ஸம்ச்லேஷத்தை (கூடி அனுபவிக்கும் ரஸத்தை)ப் பெற்று தரிக்கப்பெற்றாள்)" என்று **எம்பெருமானார்** *பொருள் உரைத்தார்.*[1]

[710]

(முகில் இத்யாதி) "பெரிய பெருமாள் திருவடிகளிலே திருவாய்மொழி ஆயிரமும் சொல்லிற்று, 'திருமோகூர்க்கு ஈத்த பத்து', 'திருவேங்கடத்துக்கு இவை பத்து' என்று பிரித்துக் கொடுத்த இத்தனை; பெருமாள் திருப்பலகையில் அமுதுபடியிலே மற்றைத் திருப்பதிகள் நாயன்மார்க்கும் அளந்து கொடுக்குமாபோலே" என்று பிள்ளை அருளிச் செய்வர்.

(திருவாய்மொழி 7-2-11 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

"முகில்வண்ணன் அடிமேல் சொன்ன சொல்மாலை ஆயிரத்து இப்பத்தும்" என்று நம்மாழ்வார் அருளிச் செய்துள்ளார். இதற்கு நம்பிள்ளை அருளிச்செய்த **நிர்வாஹம்** *கூறப்பெறுகிறது.*

விளக்கம்

"திருவாய்மொழி ஆயிரம் பாசுரங்களும் பெரிய பெருமாளை (ஸ்ரீரங்கநாதனைக்) குறித்தே ஆகும். அப்படிப் பாடியுள்ள பாசுரங்களிலிருந்து சிலவற்றை, 'திருமோகூர்க்கு ஈத்த பத்து' (திருவாய்மொழி 10-1-11),

1. ஈடு வியாக்கியானத்தில் எம்பெருமானார் திருநாமம் குறிப்பிடப்பெறவில்லை. "என்று அருளிச்செய்யும்படி" என்று மட்டுமே அங்கு உள்ளது.

'திருவேங்கடத்துக்கு இவை பத்து' (திருவாய்மொழி 6-10-11) என்று மற்ற திவ்யதேசங்களுக்கும் பிரித்துக் கொடுத்தார் அவ்வளவேயாகும். பெரிய பெருமாள் திருமடைப்பள்ளியில் மற்றைத் திருப்பதி எம்பெருமான்களுக்கும் பெரிய பெருமாளுடைய அமுதுபடியிலிருந்து அளந்து கொடுப்பது போலவே, நம்மாழ்வார் பாசுரங்களும் கொடுக்கப்பட்டன" என்று **நம்பிள்ளை** *அருளிச் செய்வர்!*

[711]

அன்றிக்கே பிள்ளான் பணிக்கும்படி.........

(திருவாய்மொழி 7-3 ஈடு வியாக்கியான ப்ரவேசம்)

நிகழிடம்

இதற்கு முன் அருளிச்செய்த "கங்குலும் பகலும்" என்று தொடங்கும் திருவாய்மொழியில் மோகித்துக் கிடந்த பராங்குச நாயகி (நிலையிலுள்ள நம்மாழ்வார்), தெளிவு பெற்று, தென் திருப்பேரெயில் என்கின்ற திருத்தலத்தில் வீற்றிருக்கின்ற மகரநெடுங்குழைக்காதனிடம் செல்ல முற்படுகிறாள். மோகித்துக் கிடந்தவளுக்குத் தெளிவு ஏற்பட்டதற்குக் காரணம் என்ன? என்பதற்கு, பெரிய பெருமாளுடைய பற்றிலார் பற்ற நிற்கும் தன்மை தொடக்கமான திருக்கல்யாண குணங்களையும் அழகு முதலியவற்றையும் தானே வாய்வெருவியும், திருத்தாயார் சொல்லக் கேட்டும் ஒருவாறு தரிப்பை அடைந்த பராங்குச நாயகி, அதனால் தெளிவு ஏற்பட்டுத் தென்திருப்பேரெயில் செல்ல முற்படுகிறாள் என்று விளக்கிய உரையாசிரியர், பிள்ளான் அருளிய **நிர்வாஹம்** *ஒன்றையும் காட்டுகிறார்.*

விளக்கம்

"'கங்குலும் பகலும்' திருவாய்மொழியின் கடைசிப் பாசுரத்தில் 'இவள் அணுகி அடைந்தனள் முகில் வண்ணன் அடியே' என்று அருளிச்செய்யப் பெற்றிருப்பதால், பெரிய பெருமாளுடன் பராங்குச நாயகிக்குக் கலவி ஏற்பட்டது. பிரிந்து கூடாவிடில் இரண்டு தலைக்கும் அழிவு ஏற்படும் என்று கருதி எம்பெருமான் பராங்குச நாயகியைப் பிரிந்தான். அப்பிரிவின் காரணமாக வருத்தமடைந்த பராங்குச நாயகி, 'அவனிருக்குமிடம் போய்ச் சென்றல்லது நில்லேன்' என்கிறாள். அதைக் கேட்ட தோழிகள், 'இப்படிச் செய்வது உன் தகுதிக்குப் பொருந்தாது' என்று தடுத்தும் கேளாமல், 'நானேயாகிலும் போகை தவிரேன்' என்கிறாள்" என்று **பிள்ளான்** *உரைத்தார்.*

உரையாசிரியர் கூறிய விளக்கத்தில் மோகித்துக் கிடந்த பராங்குச நாயகி எம்பெருமானோடு கலக்கப் பெறாமலிருந்தும், அவனுடைய குணங்களைப்

1. நம்பிள்ளை இவ்வாறு உரைத்தமை இருபத்து நாலாயிரப்படியிலும் குறிப்பிடப்பெறுகிறது.

பேசியதாலே தரித்துத் தெளிவு பெற்றாள் என்று கூறப்பட்டது. பிள்ளான் அருளிய விளக்கத்தில் மோகித்துக் கிடந்த பராங்குச நாயகிக்கு எம்பெருமானுடன் கலவி ஏற்பட்டமையால் தெளிவு ஏற்பட்டது என்பது கூறப்படுகிறது.

[712]

(தாமரை கண்ணன்) இவ்விடத்தே நிலாத்துக்குறி பகவர் வார்த்தையை அருளிச் செய்வர் சீயர்.

(திருவாய்மொழி 7-3-1 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

"வெள்ளைச் சுரிசங்கொடு ஆழியேந்தி" என்று எம்பெருமான் சங்கு சக்கரங்களை ஏந்தியமையை அருளிச்செய்கிறார் ஆழ்வார். எம்பெருமான் சங்கு சக்கரங்களுடன் எழுந்தருளியிருப்பான் என்பதை விளக்குவதற்கு ஒரு **ஐதிஹ்யம்** கூறப்பெறுகிறது.

விளக்கம்

எண் 269ன் விளக்கம் பார்க்க.

[713]

(நெஞ்சினூடே) நஞ்சீயர் கோவிலுக்கு எழுந்தருளாநிற்க, வழியிலே பிள்ளானைக் கண்டு, "ஈஶ்வரனுக்கு ஸ்வரூப வ்யாப்தியோ? விக்₃ரஹ வ்யாப்தியும் உண்டோ?" என்று கேட்க, "ப₄ாஷ்யகாரர் தோற்ற அருளிச் செய்து கொண்டு போந்தது ஸ்வரூப வ்யாப்தியாயிருக்கும். ஆகிலும் எம்பார் ஒருநாள் 'உபாஸக அநுக்₃ரஹார்த்தமாக ஆஶ்ரிதருடைய நெஞ்சிலே விக்₃ரஹத்தோடே வ்யாபித்து இருக்கும்' என்று அருளிச் செய்யக் கேட்டேன்" என்று பணித்தான்.

(திருவாய்மொழி 7-3-1 ஈடுவியாக்கியானம்)

நிகழிடம்

"வெள்ளைச் சுரிசங்கொடு ஆழியேந்தித் தாமரைக் கண்ணன் என் நெஞ்சினூடே புள்ளைக் கடாகின்ற ஆற்றைக் காணீர்!" (சங்கு சக்கரங்களை ஏந்தியவனாய் தாமரைக் கண்ணனான எம்பெருமான் என் மனத்தினுள் கருடப் பறவையைச் செலுத்துகின்ற விதத்தைத் காணுங்கோள்!) என்று நம்மாழ்வார் அருளிச் செய்துள்ளார். இவ்வாறு அடியவர்களுடைய நெஞ்சில் எம்பெருமான் எழுந்தருளியிருப்பான் என்பதற்கு ஒரு **ஸம்வாதம்** கூறப்பெறுகிறது.

விளக்கம்

நஞ்சீயர் ஒருநாள் கோயிலுக்குச் சென்று கொண்டிருக்கும்போது வழியில் பிள்ளானைக் கண்டார். "எம்பெருமான் தன்னுடைய ஸ்வரூபத்தால் மட்டும்

எங்கும் பரவியிருக்கின்றானா? அல்லது திருமேனியோடும் பரவி யிருக்கின்றானா?" என்று நஞ்சீயர் பிள்ளானைக் கேட்டார். அதற்குப் **பிள்ளான்**, "**ஸ்ரீ பாஷ்யகாரரான எம்பெருமானார்** தம்முடைய நூல்களில் எம்பெருமானுக்கு ஸ்வரூபவ்யாப்தியையே அருளிச் செய்துள்ளார். ஆயினும் ஒருமுறை **எம்பார்**, 'உபாஸகர்களுக்கு அருள் புரியும் பொருட்டு எம்பெருமான் அவர்களுடைய நெஞ்சங்களில் திருமேனியோடு எழுந்தருளியிருப்பான்' என்று அருளிச் செய்யக் கேட்டிருக்கிறேன். (எனவே எம்பெருமானுக்கு விக்ரஹவ்யாப்தியும் உண்டு)" என்று அருளிச்செய்தார்.[1]

[714]

(வந்து வீற்றிருந்த) दीपो नेत्रातुरस्येव प्रतिकूलासि मे दृढम् (தீ₃போ நேத்ராதுரஸ்யேவ ப்ரதிகூலாஸி மே த்₃ருட₄ம்) இதுக்கு ஆளவந்தார் அருளிச் செய்யும்படி- "நேத்ரதோ₃ஷத்தால் வந்தது போக்கி, தீ₃பதோ₃ஷத்தால் வந்ததன்று" என்று.

(திருவாய்மொழி 7-3-7 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

பராங்குச நாயகி நிலையிலுள்ள ஆழ்வார், நாயகனான எம்பெருமான் வீற்றிருக்கும் தென்திருப்பேரெயில் மாநகருக்குச் சென்று அவனை அடைய முற்படுகிறார். 'பேரெயில் சூழ்கடல் தென்னிலங்கை செற்றபிரான் வந்து வீற்றிருந்த பேரெயிற்கே புக்கு' (பெரிய மதில்கள் சூழ்ந்த கடலுக்கு நடுவே உள்ள அழகிய இலங்கை நகரத்தை அழித்த பிரான் வந்து வீற்றிருந்த திருப்பேரெயிலில் புகுந்து) என்று ஆழ்வார் அருளிச்செய்துள்ளார். இங்கு ஆழ்வாருடைய நிலையை சீதைப்பிராட்டியுடன் உரையாசிரியர் ஒப்பிடுகிறார். இராவணனை அழித்தபிறகு சீதைப்பிராட்டியை ஸ்நாநம் செய்வித்து, அலங்கரித்து வரும்படி விபீஷணனிடம் இராமபிரான் கூறுகிறான். அதன்படியே அவனும் சீதையிடம் கூற, முதலில் மறுத்த சீதை, பிறகு அவனுடைய நிர்ப்பந்தத்தினால் குளித்து அலங்கரித்து இராமபிரான் முன் வந்து நின்றாள். அப்போது இராமபிரான் கோபத்துடன் இருந்ததைக் குறிப்பிட்டு, இப்போது அவ்வாறில்லாமல் அணைக்கலாம்படி திருப்பேரெயிலில் குளிர்ந்த முகத்துடன் எழுந்தருளியிருப்பதாக ஆழ்வார் கருதுகிறார் என்று விளக்கினார். இத்தொடர்பில், இராவணனைப் போரில் மாய்த்தபிறகு, தன் முன்னே அழைத்து வரப்பெற்ற சீதைப் பிராட்டியைக் கண்ட இராமபிரான் "தீபோ நேத்ராதுரஸ்யேவ ப்ரதிகூலாஸி மே த்ருடம்" (கண் நோய் உள்ளவனுக்கு விளக்கு எரிச்சலூட்டுவது போல நீ எனக்கு வேண்டாதவளாய்

1. இந்த ஸம்வாதம் மற்றோரிடத்திலும் குறிப்பிடப்பெற்றுள்ளது. எண் 585 பார்க்க.

இருக்கிறாய்; இது நிச்சயம்) (ரா.யு. 118-17) என்று கூறிய சுலோகத்தை எடுத்துக் காட்டி, அதற்கு ஆளவந்தார் அருளிச்செய்த **வார்த்தை** *ஒன்றையும் எடுத்துக் காட்டுகிறார்.*

விளக்கம்

"கண்ணில் நோய் உள்ளவனுக்கு விளக்கைக் கண்டால் எரிச்சல் உண்டாவது கண்களில் உள்ள நோயின் குற்றத்தாலேயே தவிர, விளக்கின் குற்றத்தால் அன்று. (அதுபோல, சீதைப்பிராட்டியின் மீது இராமபிரானுக்குக் கோபம் ஏற்பட்டது இராமபிரானுடைய குற்றத்தாலேயே தவிர, சீதையிடம் எந்தக் குற்றமும் இல்லை) என்று **ஆளவந்தார்** *அருளிச்செய்தார்.*

[715]

देवकुमाररूपम् (தே₃வகுமாரரூபம்) "இவர்க்கும் அவ்வளவேயோ?" என்று சிறியாத்தான் கேட்க, "கண்ணெச்சிலாம் என்று தரம்போராதாரை ஒப்பாகச் சொல்லி ரிஷி கரி பூசுகிறான்" என்றார்.

(திருவாய்மொழி 7-4 ஈடு வ்யாக்யான ப்ரவேசம்)

நிகழிடம்

இராமபிரான் நடத்திய வெற்றிச் செயல்களைக் கண்டு மகிழ்ந்த தசரத சக்ரவர்த்தியைப் போல, ஆழ்வாரும் எம்பெருமானுடைய வெற்றிச் செயல்களைக் கண்டு மகிழ்ந்து "ஆழியெழ" என்று தொடங்கும் பதிகத்தை அருளிச் செய்கிறார் என்ற உரையாசிரியர், தொடர்ந்து, இராமபிரானுடைய வெற்றிச் செயல்களுக்கு மகிழ்ந்து தசரதன் கூறும்போது "தேவகுமாரரூபம்" (தேவகுமாரனான சுப்ரமண்யனை அல்லது மன்மதனைப் போல் அழகிய உருவம் உடையவன்) என்று கூறியதை எடுத்துக் காட்டி, இத்தொடர்பில் ஒரு **ஸம்வாதம்** *காட்டுகிறார்.*

விளக்கம்

"இராமபிரானுடைய அழகுக்கு சுப்ரமண்யனை அல்லது மன்மதனையோ ஒப்பாகச் சொல்வது?" என்று **சிறியாத்தான்** *கேட்க, "இராமபிரானுடைய அழகுக்கு எவரையுமே ஒப்பாகச் சொல்ல முடியாது. ஆனால் இராமபிரானுடைய அழகுக்குக் கண்ணெச்சில் ஏற்பட்டுவிடுமோ என அஞ்சி, வால்மீகி ரிஷியானவர், அவனுக்குச் சிறிதும் ஒப்பில்லாதவனை ஒப்பிட்டுக் கரிபூசி (த்ருஷ்டிப் பொட்டு வைத்து) த்ருஷ்டி கழிக்கிறார்" என்று* **(பட்டர்)** *அருளிச் செய்தார்.*[1]

1. சிறியாத்தான் கேட்ட வேறொரு கேள்விக்கு பட்டர் விடை அருளியததாக எண் 213ல் குறிப்பிடப் பெற்றுள்ளமையால், இக்கேள்விக்கும் விடையை பட்டர் அருளியதாகவே கொள்ளலாம்.

[716]

"கீழே 'கண்ணபிரானுக்கு என் பெண்மை தோற்றேன்' என்று கொண்டு, இத்தலையில் தோல்விக்கு எதிர்த்தலையான அத்தலையில் விஜயங்களை அநுஸந்திக்கிறார்" என்று பிள்ளை திருநறையூர் அரையர் பணிக்கும்படி.

(*திருவாய்மொழி 7-4 வ்யாக்யான ப்ரவேசம்*)

நிகழிடம்

"ஆழியெழ" என்று தொடங்கும் திருவாய்மொழியில் ஆழ்வார் எம்பெருமானுடைய வெற்றிகளைப் பேசுகிறார். இப்படிப் பேசுவதற்குக் காரணம் என்ன என்பது பற்றிப் பிள்ளை திருநறையூர் அரையர் அருளிச்செய்த **நிர்வாஹம்** *கூறப்பெறுகிறது.*

விளக்கம்

"இதற்கு முன்னர் அருளிச் செய்த திருவாய்மொழியில் 'கண்ணபிரானுக்கு என் பெண்மை தோற்றேன்' என்று ஆழ்வார் அருளிச் செய்துள்ளார். தம்முடைய தோல்விக்கு எதிரான அவனுடைய வெற்றிகளை இத் திருவாய்மொழியில் ஆழ்வார் அருளிச் செய்துள்ளார்" என்று **பிள்ளைதிருநறையூர் அரையர்** *அருளிச் செய்வர்.*

[717]

(ஆழி எழ)"ஆயிரம் காதம் பறப்பதன் குட்டி ஐந்நூற்றுக் காதம் சிறகடிக் கொள்ளும்" என்று பிள்ளை அருளிச் செய்வர்.

(*திருவாய்மொழி 7-4-1 இருபத்து நாலாயிரப்படி வியாக்கியானம்*)

நிகழிடம்

எம்பெருமான் திரிவிக்ரமனாக ஓங்கி வளர்ந்தபோது அவனுடைய சக்கராயுதமும் வளர்ந்தது என்பதனை நம்மாழ்வார் "ஆழி எழ" என்று அருளிச்செய்துள்ளார். இதுபற்றி நம்பிள்ளை அருளிச்செய்த **வார்த்தை** *ஒன்று எடுத்துக் காட்டப்பெறுகிறது.*

விளக்கம்

"ஆயிரம் காதம் பறக்கும் வலிமையுடைய பறவையின் குட்டி ஐந்நூறு காதம் சிறகடித்துக் கொள்ளும் (பறக்கும்). (அதுபோல எம்பெருமான் வளர்ந்தவாறே சக்கராயுதமும் ஓங்கி வளர்ந்தது)" என்று **நம்பிள்ளை** *அருளிச் செய்வர்.*[1]

1. ஈடு வியாக்கியானத்திலும் இக்கருத்து குறிப்பிடப்பெற்றிருந்தாலும், "பிள்ளை அருளிச்செய்வர்" என்று அதில் குறிப்பிடப்பெறவில்லை.

[718]

(ஆழி எழ) பிள்ளையுறங்காவில்லிதாஸர் "மஹாமதி: என்றது மதிகேடர் என்கிறபடியோ!" என்றார். பிள்ளைதாம் பெருமாள் எழுந்தருளும் போது "எங்கேனும் ஒரு சலனம் பிறக்கில் நம் ப்ராணனை விடுமத்தனை" என்று சொட்டையை உருவிப் பிடித்துக் கொண்டு ஸேவிப்பாராம். நம் முதலிகள் அத்தைக் கண்டு இவரை 'மஹாமதிகள்" என்றழைப்பர்கள்.

(திருவாய்மொழி 7-4-1 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

எம்பெருமான் திரிவிக்கிரமனாக ஓங்கி வளர்ந்தபோது அவனிடம் மிக்க பரிவு கொண்ட சக்கராயுதமும் ஓங்கி வளர்ந்தது என்று ஆழ்வார் அருளிச் செய்துள்ளார். இத்தொடர்பில், துர்யோதனனுடைய சபையில் கண்ணபிரான் தூது எழுந்தருளியபோது, பொய்யாசனம் இட்டு வஞ்சிக்கப் பார்த்ததை நினைத்து பயப்பட்ட விதுரர், தம்முடைய இல்லத்திலும் கண்ணனுக்குத் தாம் இட்டிருந்த ஆஸநத்தைத் தடவிப்பார்த்ததை எடுத்துக் கூறுகின்ற உரையாசிரியர், மஹாபாரதத்தில் உள்ள, "ஸம்ஸ்ப்ருசந்நாஸநம் சௌரே: விதுரஸ்ஸ மஹாமதி:" (பேரறிஞரான அந்த விதுரர் கண்ணனுடைய ஆஸனத்தை நன்கு தடவிப்பார்த்தார்) என்ற சுலோகத்தையும் மேற்கோளாகக் காட்டி, அது குறித்துப் பிள்ளை உறங்காவில்லி தாஸர் அருளிச்செய்த **வார்த்தை** *ஒன்றை எடுத்துக் காட்டுகிறார்.*

விளக்கம்

இந்த சுலோகத்தில் "மஹாமதி:" (பேரறிஞர்) என்றுள்ளதற்குப் **பிள்ளை உறங்காவில்லி தாஸர்** *"மஹாமதி: என்றால் அறிவு இல்லாதவர் என்று பொருளோ!" என்றாராம். (கண்ணபிரான் மீதுள்ள அளவற்ற பரிவினால், தாம் இட்ட ஆஸனத்தையே ஐயம் கொண்டு தடவிப் பார்க்குமளவிற்கு விதுரருக்கு ஏற்பட்ட அறிவுகேட்டைக் கருத்தில் கொண்டு, இப்படி அருளிச் செய்தார்.) இப்படிப்பட்ட பிள்ளை உறங்காவில்லி தாஸரோ, நம்பெருமாள் புறப்பாடு கண்டருளும்போது ஒரு கத்தியை (சொட்டையை) உருவிப் பிடித்துக் கொண்டு ஸேவித்து வருவராம். பெருமாள் எழுந்தருளும்போது, பெருமாள் திருமேனிக்கு ஏதேனும் சலனம் (அசைவு) ஏற்பட்டால், அந்தக் கத்தியால் தம்மைக் குத்திக் கொண்டு உயிரை விட்டு விடுவதற்காகவே அப்படிச் செய்வாராம். இதைக் கண்ட நம் ஆசார்யர்கள் அவரை 'மஹாமதிகள்' (பேரறிஞர்) என்றே வழங்குவார்கள்.[1] இதேபோல் எம்பெருமானிடம் பரிவுள்ள ஆயுதாழ்வார்களும் பரிவுடன் பொங்கி எழுந்தார்கள் என்று உரையாசிரியர் காட்டுகிறார்.*

1. எண் 218 பார்க்க.

[719]

(அப்பன் ஊளியெழ) "ஓரோ க்ஷோப$_4$ங்கள் உண்டானால் நம்முடைய அடையவளைந்தானுக்கு உள்ளே புகும்போது திருவாசலில் பிறக்கும் ஆரவாரம் போலே, திருவயிற்றில் புகுகிற போது பிராணிகளுக்கு உண்டான ஸம்ப்$_4$ரமத்$_4$வனிகள் கிளர. அன்றியே 'இவற்றை உறிஞ்சுகிறபோதை த்$_4$வநி காண்' என்று அம்மாள் பணிக்கும்படி" என்று அருளிச் செய்வர்.

(திருவாய்மொழி 7-4-4 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

"அப்பன் ஊளி எழ உலகம் உண்ட ஊணே" (என் அப்பன் ஒலி உண்டாகும்படியாக உலகத்தை உண்ட ஊண் இருந்தது) என்று ஆழ்வார் அருளிச் செய்துள்ளார். எம்பெருமான் உலகங்களை உண்டபோது ஏற்பட்ட பேரொலி எது என்பது பற்றி **நிர்வாஹங்கள்** *கூறப்பெறுகின்றன.*

விளக்கம்

முற்காலத்தில் திருவரங்கத்தில் (ஏழாம் மதிலான) அடையவளைந்தான் மதிளுக்கு வெளியிலேயே அனைவரும் வசித்து வந்தனர். காவிரியில் வெள்ளம், அல்லது அந்நியர் படையெடுப்புகள் ஏற்பட்டால் அனைவரும் பாதுகாப்புக் கருதி அடையவளைந்ததான் மதிளுக்குள்ளே சென்று தங்குவார்கள். அப்படித் தங்குவதற்காக அடையவளந்தான் திருவாசலுக்குள்ளே பெருந்திரளாக மக்கள் செல்லும்போது பெருத்த ஆரவாரத்துடன் புகுவது போல, எம்பெருமான் உலகங்களை விழுங்கியபோது, பிராணிகள் அனைத்தும் ஆரவாரத்துடன் அவன் வாய்க்குள் புகுந்தன. அந்த ஓசையையே ஆழ்வார் 'ஊளி எழ' என்று அருளிச் செய்துள்ளார். அல்லது, 'எம்பெருமான் உலகங்களை விழுங்கியபோது இவற்றை யெல்லாம் உறிஞ்சியதால் ஏற்பட்ட ஒலியை ஆழ்வார் ஊளி எழ என்று அருளிச் செய்கிறார்' என்று **அம்மாள்** *பணிப்பர் என்று* **நம்பிள்ளை** *அருளிச் செய்வர்.*

[720]

ஆழ்வான் ஒருகால் இத்திருவாய்மொழி அடங்கலும் ராமாவதார விஷயமாக்கி நிர்வஹித்தான்.........

(திருவாய்மொழி 7-5 ஈடு வியாக்கியான ப்ரவேசம்)

நிகழிடம்

"கற்பார் இராமபிரானை அல்லால் மற்றும் கற்பரோ" என்று தொடங்கி நம்மாழ்வார் ஒரு பதிகம் அருளிச் செய்கிறார். இதுபற்றி ஆழ்வான் **நிர்வாஹம்** *கூறப்பெறுகிறது.*

விளக்கம்

*இப்பதிகத்தில் எம்பெருமானுடைய பல்வேறு அவதாரங்களில் அவன் காட்டியுள்ள கல்யாணகுணங்களை ஆழ்வார் பேசியுள்ளார். மற்ற அவதாரங்களில் காட்டிய குணங்களும் இராமபிரானுடைய குணத்தில் ஒருபகுதியே ஆதலால் **ஆழ்வான்** ஒருமுறை இத்திருவாய்மொழியிலுள்ள பத்துப் பாசுரங்களையும் இராமாவதார விஷயமாகவே ஆக்கி விளக்கினார்![1]*

[721]

'பட்டர் ராமாவதாரத்தில் போர பக்ஷபதித்திருப்பர்' என்று அவர் அருளிச் செய்யுமது கேட்கைக்காகச் சிறியாத்தான் ஒருநாள், "பெருமாளுக்கு எல்லா நன்மைகளுமுண்டாகிலும், கழுத்திலே ஓலை கட்டி, 'தூது போ' என்னப் போன க்ருஷ்ணன் நீர்மை இல்லையே!" என்ன, "அது அங்ஙனல்ல காண்! கழுத்திலே ஓலை கட்டி, 'தூது போ' என்பார் இல்லாமை தவிர்ந்தார் அத்தனை காண்" என்று அருளிச் செய்தார்.

(திருவாய்மொழி 7-5 ஈடு வியாக்கியான ப்ரவேசம்)

நிகழிடம்

*"கற்பார் இராமபிரானை அல்லால் மற்றும் கற்பரோ" என்று தொடங்கி நம்மாழ்வார் ஒரு பதிகம் அருளிச் செய்கிறார். இத்தொடர்பில் ஒரு **ஸம்வாதம்** கூறப்பெறுகிறது.*

விளக்கம்

எண் 213ன் விளக்கம் பார்க்க.

[722]

"மேல் சொல்லப் புகுந்த கு₃ணங்களை ப்ரக்ருத்ய கீழிற்பாட்டிற் சொன்ன கு₃ணம், கு₃ணஹாநி என்னும்படி மேலிற்பாட்டுக்கள் கு₃ணாதி₄க்₂யம் சொல்லுகிறது" என்றருளிச் செய்வர்.

(திருவாய்மொழி 7-5-2 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

*"கற்பார் இராமபிரானை அல்லால்" என்று தொடங்குகின்ற திருவாய்மொழியில் பாசுரம் தோறும் எம்பெருமானுடைய பல்வேறு அவதாரங்களில் அவன் காட்டியுள்ள திருக்கல்யாண குணங்களைப் பற்றிப் பேசுகிறார் ஆழ்வார். இதுபற்றி ஒரு **வார்த்தை** எடுத்துக்காட்டப்பெறுகிறது.*

1. ஆழ்வான் இவ்வாறு அருளிச்செய்தமை இருபத்துநாலாயிரப்படியிலும் குறிப்பிடப்பெற்றுள்ளது.

விளக்கம்

"ஆழ்வார் ஒரு பாசுரத்தில் பேசிய குணத்தைக் காட்டிலும் அடுத்த பாசுரத்தில் பேசுகின்ற குணம் உயர்ந்தது. எனவே மேல் பாசுரங்களில் பேசப் போகின்ற குணத்தைப் பார்க்கும்போது அதற்கு முன்னர் அருளிச் செய்த பாசுரத்தில் அருளிச் செய்தது குணமே அல்ல என்னுமளவிற்கு எம்பெருமானுடைய குணங்களின் மேன்மையைச் சொல்லுகிறார் ஆழ்வார்" என்று (நம்பிள்ளை) அருளிச் செய்வர்.

[723]

(தன்மை அறிவாரை அறிந்துமே) ஆளவந்தார், "ஶிஶுபாலன் பெற்றிலன் காண்!" என்று அருளிச் செய்வர். அது என்? என்னில், "இதுக்கு அடியாகச் சொல்லலாவதொரு ஸாத₄நம் இவன் கையில் இல்லாமையாலே, நாட்டை நலியாமைக்குக் கொற்றவன் வாசலுக்குள்ளே சுழற்றி எறிந்தான் அத்தனை காண்!" என்று அருளிச் செய்வர்.

(திருவாய்மொழி 7-5-3 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

"சிசுபாலன் திருவடி தாள்பாலடைந்த தன்மை" (சிசுபாலன் கண்ணபிரான் திருவடிகளை அடைந்த தன்மை) என்று ஆழ்வார் அருளிச் செய்துள்ளார். இத்தொடர்பில் ஒரு **ஸம்வாதம்** *காட்டப்பெறுகிறது.*

விளக்கம்

எண் 134ன் விளக்கம் பார்க்க.

[724]

(தெளிவுற்று இத்யாதி) "அர்ஜுநன் தான் எம்பெருமானைப் பெற்றானோ இல்லையோ?" என்று நம்பிள்ளை சீயரைக் கேட்க, "உமக்கு அது கொண்டு கார்யம் என்? இது சொன்னவன் ஸர்வஸாத₄ரணனாகில், ப₄க₃வது₃க்தி என்னுமிடம் நிஶ்சிதமாகில், தங்தாமுடைய கர்மாநுகூலமாகவும், ருச்யநுகூல மாகவும் பெறுகிறார்கள்; பெற்றவர்களை ஆராய்ந்து பார்த்து அத்தாலேயோ நாம் பற்றப் பார்க்கிறது!" என்று அருளிச் செய்தார்.

(திருவாய்மொழி 7-5-1 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

"தெளிவுற்று வீவின்றி நின்றவர்க்கு இன்பக் கதி செய்யும் தெளிவுற்ற கண்ணனை" (உபாயம் உபேயம் இரண்டும அவனே என்ற ஞானத்தைப் பெற்று

அதில் நிலை நின்றவர்களுக்கு மோக்ஷத்தைத் தருகின்ற கண்ணபிரானை) என்று ஆழ்வார் அருளிச் செய்துள்ளார். அர்ச்சுனனுக்கு கீதையை உபதேசித்து, "நீ சொன்னபடி செய்கிறேன்" என்று அவனும் கூறும்படி செய்தவன் என்று விளக்கிய உரையாசிரியர், இத்தொடர்பில் ஓர் **ஸம்வாதம்** காட்டுகிறார்.

விளக்கம்

"கண்ணபிரானிடம் கீதை முழுவதும் உபதேசம் கேட்ட அர்ச்சுனன் முடிவில் எம்பெருமானை (மோக்ஷத்தை) அடைந்தானா?" என்று **நம்பிள்ளை** கேட்க, "அதைப்பற்றி உமக்கு என்ன விசாரம்? அவன் பெற்றால் பெறுகிறான், அல்லது இழந்தால் இழக்கிறான். கீதையை உபதேசித்தவன் எல்லாருக்கும் பற்றுவதற்குப் பொதுவானவனான எம்பெருமான்; கீதை பகவானே திருவாய் மலர்ந்தருளியது; அவரவர் தத்தம் வினைப்பயன்களுக்குச் சேரவும், தங்கள் தங்கள் விருப்பத்திற்குச் சேரவும் பயனை அடைகிறார்கள். மேலும், ஏற்கனவே பெற்றவர்களை ஆராய்ந்து பார்த்து அதனாலேயோ நாம் எம்பெருமானைப் பற்றப் பார்க்கிறது?" என்று **நஞ்சீயர்** விடை அளித்தார். (வெட்டிவேர், பச்சைக் கருப்பூரம் முதலியவை சேர்ந்து குளிர்ந்த தண்ணீர் இருந்தால் அது குடித்து தாகம் தீர்ந்தவனைக் கண்டோ தாகம் கொண்டவன் தண்ணீர் குடிப்பது? என்று உரையாசிரியர் தொடர்ந்து அருளிச்செய்துள்ளார்.)

[725]

"அம்மங்கியம்மாள் 'இத்திருவாய்மொழி பாடக்கேட்டு, அநுப$_4$வித்துப் போரும் இதுக்கு மேற்பட இதில் ஓடுகிற ஆர்த்திக்கு நம்மால் பாசுரமிட்டுச் சொல்லப் போகாது' என்று பணிக்கும்" என்று அருளிச் செய்வர்:

(திருவாய்மொழி 7-6 ஈடு வியாக்கியான ப்ரவேசம்)

நிகழ்டம்

எம்பெருமானையே உபாயமாகப் பற்றின உடனே எம்பெருமானைப் பெற்று அனுபவிக்கப் பெறாத துன்பத்தின் மிகுதியால் கதறி "பாமரு மூவுலகும் படைத்த பற்பநாபாவோ" என்று தொடங்கும் பதிகத்தை நம்மாழ்வார் அருளியுள்ளார். இதுபற்றி அம்மங்கியம்மாள் அருளிச்செய்த **வார்த்தை** ஒன்று கூறப்பெறுகிறது.

விளக்கம்

"இத்திருவாய்மொழியைப் பாடக்கேட்டு அனுபவிக்கும் இதற்கு மேற்பட இப்பதிகத்தில் ஆழ்வாருக்கு ஓடுகின்ற துன்பத்தைச் சொற்களால் விளக்க நம்மால் முடியாது" என்று அம்மங்கியம்மாள் கூறுவர் என்று (**நம்பிள்ளை**) அருளிச் செய்வர்.

[726]

(கூற்றியல் கஞ்சனைக் கொன்று) "ராஜத்₃ரோஹிகளைக் கொல்லும் போது ராஜசிஹ்நங்களை வாங்கிக் கொல்லுமாபோலேகாண்!" என்று அம்மாள்.

(திருவாய்மொழி 7-6-10 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

"கூற்றியல் கஞ்சனைக் கொன்று" என்று கண்ணபிரான் கம்ஸனைக் கொன்றமையை ஆழ்வார் அருளிச்செய்துள்ளார். இத்தொடர்பில், "கேசேஷு ஆக்ருஷ்ய விகலத் கிரீடமவநீதலே, ஸ கம்ஸம் பாதயாமாஸ தஸ்யோபரி பபாத ச" (கம்ஸனுடைய முடியைப் பிடித்து, அவனுடைய கிரீடம் பூமியில் விழும்படி செய்து, அவனைக் கீழே தள்ளி, அவன்மீது தானும் விழுந்தான்) என்ற ஸ்ரீவிஷ்ணு புராண சுலோகத்தை (5-20-86) மேற்கோளாகக் காட்டிய உரையாசிரியர், கம்ஸனுடைய கிரீடத்தை பூமியில் விழும்படி செய்ததற்குக் காரணம் என்ன என்பது பற்றி அம்மங்கியம்மாள் அருளிச்செய்த **வார்த்தை***யைக் கூறுகிறார்.*

விளக்கம்

"அரசனுக்கு துரோகம் செய்தவர்களுக்கு மரணதண்டனை விதித்து அவர்களைக் கொல்லும்போது, அரசனால் அவர்களுக்கு அளிக்கப்பட்டிருந்த அரச சின்னங்களை எடுத்துவிட்டுப் பிறகு அவர்களைக் கொல்வதுபோலக் கண்ணபிரானும், கம்ஸனுடைய அரசகிரீடத்தைக் கீழே தள்ளிவிட்டுப் பிறகு அவனைக் கொன்றான்" என்று **அம்மங்கியம்மாள்** *அருளிச் செய்வர்.*[1]

[727]

(உய்விடம் இத்யாதி) 'அப₃லைகளை நலியுமாபோலே அஸுர ராக்ஷஸர்களுக்கும் ஸ்நேஹத்தை விளைத்து பா₃த₄கமாகாநின்றது' என்று ஒரு தமிழன் இட்டு வைத்தான் என்றத்தை சீயர் கேட்டருளி, "இப்பொருள் அழகிது, ஆனாலும் அபக்ஷத₃ர்மம்; அஸுர ராக்ஷஸர்களுக்கும் பா₃த₄கமாகாநின்றது என்று இப்போது சொல்லுகை தேட்டமன்றே! ஆனபின்பு அது வேண்டா!" என்று அருளிச் செய்தார்.

(திருவாய்மொழி 7-7-6 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

எம்பெருமானுடைய வடிவழகு தனக்கு உருவெளிப்பாட்டில் தோன்றித் தன்னை வருத்துகின்றது என்று (பராங்குச நாயகி நிலையில்) அருளிச்செய்கின்ற

1. அம்மங்கியம்மாள் இவ்வாறு அருளிச்செய்தமை இப்பாசுரத்தின் இருபத்து நாலாயிரப்படியிலும் குறிப்பிடப்பெற்றுள்து. மற்றோரிடத்திலும் இவ்வார்த்தை குறிப்பிடப்பெற்றுள்ளது. எண் 745 பார்க்க.

ஆழ்வார், "உய்விடம் ஏழையர்க்கும் அசுரர்க்கும் அரக்கர்கட்கும் எவ்விடம் என்று இலங்கி மகரம் தழைக்கும் தளிர்கொல்" (பெண்களுக்கும் அசுரர்களுக்கும் அரக்கர்களுக்கும் உய்விடம் எங்கே? என்று கொண்டு விளங்கி மகரத்தின் வடிவாகத் தழைக்கின்ற தளிர்களோ!) என்று எம்பெருமானுடைய திருக்குண்டல காதுகளை வருணித்துள்ளார். இதுபற்றி **நிர்வாஹங்கள்** கூறப்பெறுகின்றன.

விளக்கம்

"ஏழையர்க்கும் அசுரர்க்கும் அரக்கர்கட்கும்" என்று பாசுரத்தில் உள்ளதைக் கருத்தில் கொண்டு ஒரு **தமிழன்** "பெண்களை எம்பெருமானுடைய திருக்காதுகளின் அழகு அன்பை விளத்து வருத்துவது போலவே, அசுரர்களையும் அரக்கர்களையும் கூட அன்பை விளைத்து வருத்துகின்றது" என்று பொருள் உரைத்தானாம். இதைக் கேட்ட **நஞ்சீயர்**, "இப்பொருள் அழகியதே! ஆயினும் பராங்குச நாயகியானவள், தன்னை எம்பெருமானுடைய அழகு வருத்துகின்றது என்று கூறுகின்ற இந்தப் பதிகத்தில் அரக்கர்களுக்கும், அசுரர்களுக்கும் எம்பெருமானுடைய அழகு அன்பை விளைத்து வருத்தத்தை உண்டாக்குகின்றது என்று கூறுவது இப்போது பொருத்தம் அன்று. எனவே அப்பொருள் வேண்டாம்! (அரக்கர்களும் அசுரர்களும் எம்பெருமானுடைய அழகு கண்டால் பொறுக்கமாட்டாமல் வருந்துவர்; பெண்கள் அவ்வழகைக் கண்டால், அவனை அடையமுடியவில்லையே என்று வருந்துவர் என்று பொருள் கொள்வதே தகும்)" என்று அருளிச் செய்தார்.

[728]

(அங்கண் மலர் இத்யாதி) "கீழில் திருவாய்மொழியிலே 'விள்கின்ற பூந்தண்டுழாய் விரைநாற வந்து' என்று சொன்னத்தை ஸ்மரிக்கிறார்" என்று பிள்ளான் பணிக்கும்.

(திருவாய்மொழி 7-8-2 ஈடு வியாக்கியானம்)

நிகழ்டம்

"அங்கண் மலர்த் தண் துழாய் முடி அச்சுதனே" (அழகிய குளிர்ந்த திருத்துழாயைத் திருமுடியிலே அணிந்த அச்சுதனே!) என்று ஆழ்வார் அருளிச் செய்துள்ளார். இதுபற்றிப் பிள்ளான் அருளிச்செய்த **நிர்வாஹம்** கூறப்பெறுகிறது.

விளக்கம்

"இதற்கு முன்னர் அருளிச் செய்த பதிகத்தில் எம்பெருமானுடைய அழகை வருணித்தபோது 'விள்கின்ற பூந்தண் துழாய் விரை நாற வந்து' என்று (7-7-9) தாம்

1. நஞ்சீயரால் மறுக்கப்பட்ட இப்பொருளும் அவர் அருளிச்செய்த ஒன்பதினாயிரப்படி உரையில் இடம்பெற்றுள்ளமை நோக்கத்தக்கது.

அருளிச் செய்ததை இப்போது ஆழ்வார் மீண்டும் நினைக்கிறார்" என்று **பிள்ளான்** *அருளிச் செய்வர்.*

[729]

(கள்ளவிழ் இத்யாதி) "கீழில் திருவாய்மொழியிலே 'சூழவும் தாமரை நாண்மலர்போல் வந்து தோன்றும்' என்றத்தை ஸ்மரிக்கிறார்" என்று பிள்ளான் பணிக்கும். அத்தை சீயர் கேட்டருளி, "கீழோடுகிற ரீதியின்படியே இதுவும் ஆகப் பெற்றதாகில் அழகிது; அங்ஙன் அன்றிக்கே இது ரஸாந்தரமாய், அறிவுண்டான பின்பு ப்ரகரணத்தோடு பொருந்தாது" என்று அருளிச் செய்தாராம்.

(திருவாய்மொழி 7-8-4 ஈடு வியாக்கியானம்)

நிகழ்டம்

"கள்ளவிழ் தாமரைக் கண்ணனே" (தேன் பெருகுகின்ற தாமரைபோன்ற திருக்கண்களை உடையவனே!) என்று எம்பெருமானை விளித்து ஆழ்வார் அருளிச் செய்துள்ளார். இதுபற்றி இரண்டு **நிர்வாஹங்கள்** *எடுத்துக் காட்டப் பெறுகின்றன.*

விளக்கம்

"இதற்கு முன்னர் அருளிச் செய்துள்ள பதிகத்தில் 'சூழவும் தாமரை நாண்மலர் போல் வந்து தோன்றும் கண்டீர்' என்று (7-7-1) தாம் அருளிச் செய்துள்ளதையே ஆழ்வார் மீண்டும் நினைக்கிறார்" என்று **பிள்ளான்** *அருளிச் செய்தார். இதைக் கேட்ட* **நஞ்சீயர்,** *"இதற்கு முன்னர் அருளிச் செய்த பதிகத்தில் ஆழ்வாருக்கு இருந்த நிலையே இப்பதிகத்திலும் தொடருமானால் அப்படிக் கொள்ளலாம். ஆனால் அப்பதிகத்தில் ஆழ்வாரின் நிலை வேறு; இப்பதிகத்தில் ஆழ்வாரின் நிலை வேறு. முன்னர் அருளிச் செய்த பதிகத்தில் ஆழ்வார் எம்பெருமானுடைய அழகு தம்மை வருத்துகின்றமையை (ஒரு பிராட்டி நிலையில் நின்று) பேசினார். ஆனால் இப்பதிகத்தில் அவனுடைய பெருமைகளைக் கண்டு ஆச்சர்யத்துடன் பேசுகிறார். எனவே அப்பொருள் இந்த ப்ரகரணத்திற்குப் பொருந்தாது" என்று அருளிச் செய்தாராம்.*[1]

[730]

(சுடர் நீண்முடியாய்) "'முற்ற இம்மூவுலகும் விரிகின்ற சுடர் முடிக்கே ஒற்றுமைக் கொண்டது' என்றது பின்னாட்டுகிறது" என்று பிள்ளான்.

(திருவாய்மொழி 7-8-7 ஈடு வியாக்கியானம்)

1. நஞ்சீயரால் மறுக்கப்பட்ட இப்பொருளே அவர் அருளிச்செய்த ஒன்பதினாயிரப்படி உரையில் இடம்பெற்றுள்ளமை நோக்கத்தக்கது.

நிகழிடம்

"சுடர் நீண்முடியாய்" (ஒளிர்கின்ற திருமுடியை உடையவனே!) என்று ஆழ்வார் அருளிச் செய்துள்ளார். இதுபற்றிப் பிள்ளான் அருளிச்செய்த **நிர்வாஹம்** காட்டப்படுகிறது.

விளக்கம்

"இதற்கு முன்னர் அருளிச் செய்துள்ள பதிகத்தில் 'முற்ற இம்மூவுலகும் விரிகின்ற சுடர் முடிக்கே ஒற்றுமைக் கொண்டது' என்று (7-7-10) தாம் அருளிச் செய்ததை ஆழ்வார் மீண்டும் நினைக்கிறார்" என்று **பிள்ளான்** அருளிச் செய்வர்.

[731]

(வல்லதோர் இத்யாதி) இதுக்கு இரண்டுபடியாக அருளிச் செய்வர்........

(திருவாய்மொழி 7-8-10 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

"வல்லதோர் வண்ணம் சொன்னால் அதுவே உனக்காம் வண்ணமே' (தங்கள் வல்லமைக்குச் சேர யார் எது சொன்னலும், சொன்ன அளவே உனக்கு வடிவாம்) என்று ஆழ்வார் அருளிச் செய்துள்ளார். இதற்கு இரண்டு **நிர்வாஹங்கள்** காட்டப்பெறுகின்றன.

விளக்கம்

ஒருவன் தன் வல்லமையெல்லாம் கொண்டு எம்பெருமானைப் பற்றிப் பேசினாலும் ஏதோ சிறிது பேசினான் என்று கூறலாமே தவிர, எம்பெருமானுடைய பெருமைகளுக்கு ஓர் எல்லை இல்லையே என்கிறார் ஆழ்வார் என்பது ஒரு விளக்கம். அப்போது 'அதுவே(ா) உனக்காம் வண்ணம்?" (அன்று) என்று பொருள் கொள்ள வேண்டும். ('அதுவே' என்பதற்குப் பிரிநிலை ஏகாரப் பொருளில் கொண்ட பொருள் இதுவாகும்.)

எம்பெருமானிடத்தில் அன்புள்ளவர்கள் எவ்வளவு தாழ்ந்தவர்கள் ஆயினும், அவர்கள் ஏதோ ஒன்றைச் சொன்னால் 'ஸ்ரீவைகுண்டத்தில் நித்யசூரிகள் நடுவில் அவர்களுக்கும் கூடப் பேச்சுக்கு நிலமன்றிக்கே இருக்கிற நம்மை மிகத் தாழ்ந்தவனான இவன் அறிந்தவன் போல் கூறுகிறானே!' என்று எண்ணாமல், அத்தாழ்ந்தவன் கூறியவற்றையே எம்பெருமான் தனக்கு அளவாகக் கொண்டிருப்பான் என்கிறார் ஆழ்வார் - என்பது இரண்டாம் விளக்கம். ('அதுவே' என்பதற்குப் தேற்றத்து ஏகாரப் பொருளில் கொண்ட பொருள் இதுவாகும்.) இவ்விரு விளக்கங்களையும் **நம்பிள்ளை** அருளிச்செய்வர்.

[732]

(என் சொல்லி நிற்பனோ) இதுக்கு ஆளவந்தார் அருளிச் செய்யும்படி. "ஸர்வேஶ்வரன் செய்யப்புக்கால் அரியதும் ஒன்று உண்டோ?" என்றாம். அங்ஙன் அன்றிக்கே, எம்பெருமானார், "இவர்தாம் சொன்னாராகிலும் ஒருபடிபோகச் சொல்லித் தலைக்கட்டுவர். அவனும் தானே சொன்னானாகில் நிரவத்₃யமாய்த் தலைக்கட்டும். சிறுப்ரஜை எழுத்திடப் புக்கால் தானே ஏதேனும் ஒருபடி இட்டுத் தலைக்கட்டும். பிதாவாதல், உபாத்₄யாயனாதல் இடப்புக்கால் தானே எழுத்தாயிருக்கும். அங்ஙனன்றிக்கே, இவன் கையைப் பிடித்து இடுவிக்கப் புக்கவாறே, இவன் ஓரிடத்தே இழுக்க, அவன் ஓரிடத்தே இழுக்க, குதறிக் கொட்டியாய், ரூபம் அழிந்து, சிதறிப் போம். அப்படியே என்னை உபகரணமாகக் கொண்டு, கவிபாடா நிற்கச் செய்தேயும், என்னால் வரும் தோ₃ஷம் தன்பக்கல் ஸ்பர்ஶியாதபடி பாடுவித்தான் என்கிறார்" என்று.

(திருவாய்மொழி 7-9-1 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

"என்னால் தன்னை இன்கவி பாடிய ஈசனை...... என் சொல்லி நிற்பனோ!" (என்னால் தன்னை இனிய பாசுரங்களைப் பாடுவித்துக் கொண்ட ஈசனை யான் என்ன சொல்வேன்!) என்று ஆழ்வார் அருளிச் செய்துள்ளார். இதற்கு ஆளவந்தார், எம்பெருமானார் ஆகிய இருவரும் அளித்த **நிர்வாஹங்கள்** *எடுத்துக் காட்டப் பெறுகின்றன.*

விளக்கம்

"மிகத் தாழ்ந்தவனான என்னைக் கொண்டன்றோ எம்பெருமான் தன்னைக் கவிபாடுவித்துக் கொண்டான்! ஸர்வேச்வரனான எம்பெருமான் ஒன்றைச் செய்ய வேண்டும் என்று நினைத்தானாகில் அவனால் முடியாததும் உண்டோ? (வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம் அன்றோ!) எனவே மிகத் தாழ்ந்தவனான என்னைக் கொண்டு தன்னைக் கவிபாடுவித்துக் கொண்டான்" என்று (ஆழ்வார் அருளிச் செய்வதாக) **ஆளவந்தார்** *அருளிச் செய்தார்.*

அங்ஙன் அல்லாமல் **எம்பெருமானார்** *வேறுவிதமாகப் பொருள் உரைத்தார். "ஆழ்வார் தாமே பாடினாராகிலும் ஏதோ ஒருவகையாகச் சொல்லி முடித்துவிடுவர். எம்பெருமான் தானே சொன்னானாகில் ஒரு குற்றமும் இல்லாதபடி சொல்லி முடிப்பான். ஆனால் இவ்விரண்டுபடியும் அல்லாமல், என்னைக் கொண்டன்றோ அவன் கவி பாடுவித்துக் கொண்டான்! ஒரு சிறு குழந்தை தானே ஏதோ எழுதப் புகுந்தால், ஏதேனும் ஒருவகையாக எழுதிவிடும். தந்தையோ, ஆசிரியரோ எழுதத் தொடங்கினால் அதை அழகாகவே*

எழுதிவிடுவர். ஆனால் இவ்விரண்டுபடியாகவும் இல்லாமல் தந்தையோ, ஆசிரியரோ ஒரு சிறுகுழந்தையின் கையைப் பிடித்துக் கொண்டு எழுதுவித்தால், குழந்தை ஒருபக்கம் இழுக்க, தந்தை அல்லது ஆசிரியர் ஒருபக்கம் இழுக்க, எழுதுவது எழுத்தாகவே இல்லாமல், குதறிக் கொட்டியாய், கிறுக்கலாய், உருவமே இல்லாமல் சிதைந்து போயிருக்கும். அதுபோலவே எம்பெருமானும் என்னைக் கொண்டு கவிபாடுவித்துக் கொள்ளச் செய்தேயும் என்னால் வரும் குற்றம் எதுவும் தன்பக்கல் தீண்டாதபடி அழகுறப் பாடுவித்தான் என்கிறார் ஆழ்வார்" என்று எம்பெருமானார் விளக்கியருள்வர்!

[733]

(என் முன் சொல்லும்) நம்பி திருவழுதி வளநாடு தாஸர் "ஸ்ரீகீ₃தை போவான் ஒருவன் ஸங்க்₄யாஸத₃ஸ்ஸிலே வந்து கண்டால் பின்னை இவனுக்கு உழக்கு அரிசியைக் கொடுப்பித்து விடுமத்தனைபோக்கி, அங்கு அவர்கள் உள்ளிடம் கொடார்கள். திருவாய்மொழி அப்₄யஸித்தான் ஒரு விண்ணப்பம் செய்வான் சென்றால், ஸர்வேஶ்வரனும் க்₃ராமத்திலுள்ளாரும் புறப்பட்டு, எதிர்கொண்டு, தங்கள் இருப்பிடத்தை ஒழித்து, அவனுக்குக் கொடுத்து ஆத₃ரியா நிற்பர்கள்" என்று ப்ரஸாதி₃ப்பர்.

(திருவாய்மொழி 7-9-2 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

எம்பெருமான் தன்னைக் கொண்டு திருவாய்மொழி பாடுவித்தான் என்று ஆழ்வார் அருளிச்செய்துள்ளார். எம்பெருமான் தானே நேரில் அருளிச் செய்த பகவத்கீதையைக் காட்டிலும் ஆழ்வாரைக் கொண்டு பாடுவித்த திருவாய்மொழியே உயர்ந்தது என்றுரைத்த உரையாசிரியர், இத்தொடர்பில் நம்பி திருவழுதிவளநாடு தாஸர் அருளிச்செய்த **வார்த்தை** ஒன்றை எடுத்துக் காட்டுகிறார்.

விளக்கம்

"ஸ்ரீமத் பகவத்கீதையைக் கற்றவன் ஒருவன் வந்தால் அவனுக்கு ஓர் உழக்கு அரிசியைக் கொடுத்து அனுப்பி விடுவார்கள். அவன் தங்குவதற்குத் தங்கள் இல்லத்தில் இடம் கொடுக்காமல் வாசல் திண்ணையிலேயே கிடக்கும்படி கூறிவிடுவார்கள். ஆனால், திருவாய்மொழி கற்றவன் ஒருவன் வந்தால் அவனை அவ்வூர்க் கோயிலில் அர்ச்சாவிக்ரஹமாக எழுந்தருளியிருக்கும் எம்பெருமான் முதற்கொண்டு, கிராமத்திலுள்ளவர்கள் அனைவரும் எதிர்கொண்டழைத்து, வரவேற்று, தங்கள் இல்லத்தையும் அவன் தங்குவதற்காக ஒழித்துக் கொடுத்து,

1. இதே போன்ற கருத்தை எம்பார் அருளிச் செய்ததாக எண் 735ல் குறிப்பிடப்பெறுவது காண்க.

அவனுக்கு விருந்தும் படைத்து உபசரிப்பார்கள்" என்று நம்பி திருவழுதிவளநாடு தாஸர் கூறுவாராம்.[1]

[734]

(ஆம் முதல்வன் இவன் என்று தன் தேற்றி) இங்கே அருளிச் செய்யும் வார்த்தை, "திருப்புற்றுக்குக் கிழக்கே கரியமாணிக்காழ்வார் திருமுன் பின்ஸோபாநத்திலே ஆளவந்தார் எழுந்தருளியிருக்க, உடையவர் திருப்புற்றுக்குக் கிழக்காக எழுந்தருளியிருக்கிறவரைக் கண்டு 'ஆம் முதல்வன் இவன்' என்று அருளிச் செய்தாராம்" என்று.

(திருவாய்மொழி 7-9-3 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

தம்மைக் கொண்டு எம்பெருமான் தானே கவிபாடுவித்துக் கொண்டான் என்று அருளிச் செய்கின்ற நம்மாழ்வார், "ஆம் முதல்வன் இவன் என்று தன் தேற்றி" (நம்மைக் கவி பாடுவதற்கு இவன் முதல்வன் ஆம் என்று தன்னை (=எம்பெருமானை) நான் தெளியும்படி பண்ணினான்) என்கிறார். இத்தொடர்பில் இதே போல் ஆளவந்தார், எம்பெருமானாரை 'ஆம் முதல்வன் இவன்' என்று கடாக்ஷித்த **ஐதிஹ்யம்** *எடுத்துக் காட்டப் பெறுகிறது.*

விளக்கம்

காஞ்சீபுரத்தில் வரதராஜப்பெருமாள் திருக்கோயிலில் அமைந்துள்ள திருப்புற்றுக்குக் கிழக்கே உள்ள கரியமாணிக்காழ்வார் ஸன்னிதியின் முன்படியில் **ஆளவந்தார்** *எழுந்தருளியிருந்தபோது, திருப்புற்றுக்குக் கிழக்காக* **உடையவர்** *எழுந்தருள்வதை ஆளவந்தார் கண்டு, 'ஆம் முதல்வன் இவன்' (நம் ஸம்ப்ரதாயத்திற்கு இவன் முதல்வனாம்) என்று அருளிச் செய்தாராம் என்று* **(நம்பிள்ளை)** *அருளிச் செய்வர்.*

[735]

(என்னாகியே) இவ்விடத்துக்கு எம்பார் அருளிச் செய்யும்படி "தான் பாடினானாகில், நிரவத்₃யமாய்த் தலைக்கட்டும். நான் பாடினேனாகிலும் வருந்தி ஒருபடி தலைக்கட்டும். என்னை உபகரணமாகக் கொண்டு கவி பாடாநிற்கச் செய்தேயும் என்னோட்டை ஸ்பர்ஶத்தால் வந்த தோ₃ஷம் தட்டாதபடி கவிபாடித் தலைக்கட்டினான்' என்று.

(திருவாய்மொழி 7-9-4 ஈடு வியாக்கியானம்)

1. இவ்வார்த்தை மற்றோரிடத்திலும் குறிப்பிடப்பெற்றுள்ளது. (எண் 787 பார்க்க.) திருவாய்மொழி 1-9-6 பாசுர ஈடு அரும்பத உரையில் இதுபற்றி விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது காண்க.

நிகழிடம்

எம்பெருமான் தன்னைக் கொண்டு திருவாய்மொழி பாடுவித்தான் என்கின்ற ஆழ்வார் "என்னாகியே தப்புதலின்றித் தனைக் கவிதான் சொல்லி" (என்னைக் கொண்டு பாடச் செய்தேயும் குற்றங்கள் எதுவும் இல்லாமல் தன்னைக் கவிபாடிக் கொண்டான்) என்று அருளிச்செய்துள்ளார். இதுகுறித்து **எம்பார்** அருளிச்செய்த வார்த்தை எடுத்துக் காட்டப்பெறுகிறது.

விளக்கம்

எண் 732ல் எம்பெருமானார் அருளிச் செய்த விளக்கம் காண்க.

[736]

(தன்னை உறப்பல இன்கவி சொன்ன) என்றதுக்குச் சீயர் அருளிச் செய்யும்படி- "यतो वाचो निवर्तन्ते (யதோவாசோ நிவர்தந்தே) என்று வேதங்கள் மீண்ட விஷயத்தை மறுபாடுருவச் சொன்ன" என்று. அன்றிக்கே பிள்ளான் பணிக்கும்படி "ஸர்வவேச்வரனுக்குச் சால உற்றது என்கிறார்" என்று.

(திருவாய்மொழி 7-9-9 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

"என்னால் தன்னை உறப்பல இன்கவி சொன்ன" (என்னைக் கொண்டு தன்னை உறப்பல இனிய கவிகள் சொன்ன) என்று ஆழ்வார் அருளிச் செய்துள்ளார். இதுபற்றி **நிர்வாஹங்கள்** காட்டப்பெறுகின்றன.

விளக்கம்

"தன்னை உறப் பல இன்கவி சொன்ன' என்பதற்கு **நஞ்சீயர்**, "யதோ வாசோ நிவர்தந்தே' (எம்பெருமானுடைய ஆனந்த குணத்தை அளவிட முடியாமல் முடியாமல் வேதங்களும் மீண்டன) என்று கூறியுள்ளபடி, வேதங்களும் அளவிட்டு அறியமுடியாமல் மீண்ட விஷயத்தை மறுபாடுருவ (முழுவதுமாக, பூர்ணமாக)ச் சொன்ன" என்று அருளிச் செய்வர். ('உற' என்பதற்கு முழுமையாக என்று பொருள் கொண்டு இவ்விளக்கம் அருளிச் செய்யப்பட்டது.)

"எம்பெருமானுடைய பெருமைக்குத் தகுதியாக சொன்ன" என்று **பிள்ளான்** அருளிச் செய்வர். ('உற' என்பதற்கு தகுதியாக என்று பொருள் கொண்டு இவ்விளக்கம் அருளிச் செய்யப்பட்டது.)[1]

[737]

(மனத்து ஈங்கு நினைக்கப் பெற) முற்காலத்தில் இடையாற்றுக்குடி நம்பி என்பார் ஒருவர் உண்டு. அவர் திருநாள்கள்தோறும் பெருமாளை வந்து

1. பிள்ளான் இவ்வாறு அருளிச்செய்தமை இருபத்துநாலாயிரப்படியிலும் குறிப்பிடப்பெற்றுள்ளது.

ஸேவித்துப் போனால், மறித்துத் திருநாள் வருந்தனையும் அதுதன்னையே போதுபோக்காக ஸ்மரித்துக் கொண்டிருப்பாராயிற்று. ஒருநாள், ஒருநாளில் வ்ருத்தாந்தத்தை அநுஸந்தி₄யாநிற்கச் செய்தே, "அமுது செய்கைக்குப் போது வைகிற்று' என்றார்களாய், "ஆகில் வருகிற திருநாள் அணித்தாகிறது" என்றாராம். அவர் நூறு வயஸ்ஸும் புகுகையாலே, ப₃லஹாநி பிறந்து, திருமுளைத் திருநாளில் பெருமாள் புறப்பட்டருளுகைக்கு உதவ வந்து புகுரப் பெற்றிலர். பெருமாளும் தேடியருளிக் காணாமை, "நம் இடையாற்றுக்குடியான் வந்திலன்; நம் கண்ணாலம் அல்லவோ!" என்று திருவுள்ளமானாராம். அவர்தாம் ஆறாம் திருநாளிலே ஸேவித்திருக்கச் செய்தே, "நாம் உனக்குச் செய்ய வேண்டுவது என்?" என்று கேட்டருள, "தேவரீர் தந்தருளின ஶரீரத்தைக் கொண்டு போரக் காரியம் கொண்டேன்; இனிப் போக்குவரத்துக்கு யோக்₃யமாகாதபடி போர ஜரித்தது" என்ன, "வாராய்! மெய்யே இளைத்தாயாகில், இங்ஙனே இரு" என்று அருளிச் செய்தார். பெருமாள் நடுவில் திருவீதி வாசலுக்கு அவ்வருகே எழுந்தருளுங்காட்டில் திருநாட்டுக்கு எழுந்தருளினார்.

(திருவாய்மொழி 7-10-4 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

"வாய்க்கும் கொல் நிச்சலும் எப்பொழுதும் மனத்து ஈங்கு நினைக்கப் பெற கண்ணபிரான் மலரடிப் போதுகளே" (கண்ணபிரானுடைய திருவடித் தாமரைகளை எப்போதும் இங்கே இருந்து மனத்திலே நினைக்கும்படியான பேறு நாடோறும் வாய்க்குமோ?) என்று ஆழ்வார் அருளிச் செய்துள்ளார். தாம் இருந்தவிடத்தில் இருந்து கொண்டே அவனை மனத்தில் நினைத்துக் கொண்டு போதுபோக்கியவர் ஒருவரைப் பற்றிய **ஐதிஹ்யம்** *ஒன்று இங்கே எடுத்துக் காட்டப் பெறுகிறது.*

விளக்கம்

முற்காலத்தில் **இடையாற்றுக்குடி நம்பி** *என்பவர் திருவரங்கத்தில் நடைபெறும் திருநாள்கள் தோறும் திருவரங்கத்திற்கு வந்து பெருமாளை ஸேவித்துச் செல்வாராம். அடுத்த திருநாள் வரும்வரை தாம் ஸேவித்த திருநாள்களையே ஒவ்வொரு தினமாக நினைத்து நினைத்துப் போது போக்கிக் கொண்டிருப்பாராம். அப்படி ஒருமுறை ஒரு திருநாளின் வைபவத்தை மனத்திற்குள் நினைத்துக் கொண்டிருந்தபோது, அவருடைய உறவினர்கள் "அமுது செய்வதற்கு (உணவு உண்பதற்கு) உரிய போதாகி விட்டதே!" என்று அழைக்க, "ஆகில் வருகிற திருநாள் அணித்தாகிறது (நெருங்குகிறது)" என்றாராம். (அதாவது, 'இப்போது மனத்தில் நினைத்து அனுபவித்துக் கொண்டிருந்த முதல் திருநாள் முடிந்து விட்டது. இனி இரண்டாம் திருநாளை அனுபவிக்க வேண்டும்.*

இதோ வருகிறேன்' என்றார்.) எம்பெருமானுடைய திருநாளில் அவ்வளவு ஈடுபாடு உடைய அவருக்கு நூறு வயது நிரம்பிவிட்டபடியால், உடலில் வலிமை குறைந்துவிடவே, ஒரு திருநாளின் திருமுளைத் திருநாளில் (திருநாளின் தொடக்கத்தினின்று) பெருமாள் புறப்பாட்டிற்கு அவர் வந்து சேரவில்லை. பெருமாள் அவரைத் தேடிக் காணாமல் "நம் இடையாற்றுக் குடியான் வந்திலனே! இது நம்முடைய கல்யாணம் (உத்ஸவம்) அல்லவோ! ஏன் அவன் வரவில்லை?" என்று திருவுள்ளமானாராம். இடையாற்றுக்குடி நம்பி எப்படியோ சிரமப்பட்டு ஆறாம் திருநாளிலே திருவரங்கம் வந்து திருநாளைச் சேவித்திருக்கும் போது, பெருமாள் அவரைப் பார்த்து "நாம் உமக்கு என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டருள, அவர், "தேவரீர் தந்தருளின இந்த உடலைக் கொண்டு வேண்டியமட்டும் தேவரீருடைய அனுபவத்தைச் செய்தேன். ஆனால் இப்போது இவ்வுடல் சென்று வருவதற்குத் தகுதியில்லாதபடி மிகவும் இளைத்துவிட்டது" என்றார். "வாராய்! உண்மையாக இளைத்துவிட்டாயானால், இங்கே இரு" என்று பெருமாள் அருளிச் செய்தார். பெருமாள் நடுவில் திருவாசலுக்கு அப்புறம் எழுந்தருளுவதற்குள் அவர் திருநாட்டுக்கு எழுந்தருளிவிட்டார்.

[738]

(பலர் அடியார் முன்பு அருளிய) "கிழக்குக்கை ராஜாக்கள் பொல்லாங்காலே இங்கே நலிவு பிறக்குமளவில் செய்வதென்?" என்று எம்பெருமானார் அத்தை அநுஸந்தி₄த்தருளி, "இத்தே₃ஶத்தை விடாதே நோக்கிக் கொண்டிருந்தோம்; இவ்விடத்துக்கும் அழிவு வரும்படி ஆஸுரவர்க்க₄ம் மேலிடாநின்றது; மேல் செய்ய அடுப்பது என்?" என்று பெரியநம்பிக்கு அறிவிக்க, "நான் பெருமாளுடைய திருவெல்லையிலே ஒரு ப்ரத₃க்ஷிணம் வரும்படியாக உம்முடைய ஶிஷ்யர்களிலே ஒருவரைப் போரவிடுவது" என்ன, "அதுக்கு ஆவார் ஆர்?" என்ன, "என் பின்னே போரா நின்றால், 'ஒருவன் பின்னே போகாநின்றேன்' என்று தன் நெஞ்சில் படாதே ச₂ாயை போலே என்னைப் பின்செல்வான் ஒருவன் ஆகவேணும்" என்ன, "அதுக்கு ஆவார் ஆர்?" என்ன, "ஆழ்வானைப் போக விடலாகாதோ!" என்றாராம்.

(திருவாய்மொழி 7-10-5 ஈடு வியாக்கியானம்)

நிகழ்டம்

"பலர் அடியார் முன்பு அருளிய பாம்பணை அப்பன்" (அடியவர்கள் பலர் இருக்க, அவர்களுக்கு முன்னே எனக்கு அருளிய எம்பெருமான்) என்று ஆழ்வார் அருளிச் செய்துள்ளார். 'வால்மீகி, பராசரர், வேதவியாசர், முதலாழ்வார்கள்

போன்ற பலர் உண்டாயிருக்க, என்னைத் தேடியெடுத்து திருவாய்மொழி பாடும்படி அருள் புரிந்தானே! என்று வியக்கின்றார் ஆழ்வார்' என்றுரைத்த உரையாசிரியர், இத்தொடர்பில் ஓர் **ஐதிஹ்யம்** எடுத்துக் காட்டுகிறார்.

விளக்கம்

திருவரங்கத்திற்குக் கிழக்கே ஆண்டு வந்த அரசர்களின் கொடுங்கோலால் வைணவத் திருக்கோயில்களுக்கு ஆபத்து ஏற்பட்டது. (தீவிர சைவனான சோழ அரசன் ஒருவன் வைணவத் திருக்கோயில்களை இடித்து, விக்ரகங்களை உடைத்து அழிக்க முற்பட்டான்.) திருவரங்கத்திற்கும் ஏதாவது ஆபத்து வந்துவிடுமோ என்று அஞ்சிய எம்பெருமானார், "நாம் திருவரங்கத்தை இதுவரை காத்து வந்தோம். ஆனால் இவ்விடத்திற்கும் அழிவு ஏற்படுத்த அசுரக் கூட்டம் வந்துவிடும் போன்றுளதே! இதற்கு என்ன செய்வது?" என்று பெரிய நம்பியிடம் கேட்டார். அதற்குப் **பெரிய நம்பி**, "(சுற்றிநாம் வலம் செய்ய நம் துயர் கெடும் கடிதே என்றபடி) எம்பெருமானைப் பிரதக்ஷிணம் செய்தால் ஆபத்துக்கள் நீங்கும். எனவே நான் பெருமாளுடைய திரு எல்லையிலே பிரதக்ஷிணம் செய்ய எண்ணுகிறேன். அப்போது என்பின்னே வரும்படியாக உம்முடைய சிஷ்யர்களிலே ஒருவரை நீர் அனுப்ப வேண்டும்" என்றார். "யாரை அனுப்புவது?" என்று எம்பெருமானார் கேட்க, "என் பின்னே வரும்போது, 'இவர் பின்னால் நாம் போக வேண்டியிருக்கின்றதே!' என்று நினையாமல் என்னை நிழல் போலப் பின்தொடருபவனாக அவன் இருக்க வேண்டும்" என்று பெரிய நம்பி அருளிச் செய்தார். "அப்படிப்பட்டவர் யார்?" என்று எம்பெருமானார் கேட்க, "**கூரத்தாழ்வானை** அனுப்பலாகாதோ?" என்று பெரிய நம்பி அருளிச் செய்தாராம். (எம்பெருமானாருடைய அடியவர்கள் பலர் முன்னிலையில் கூரத்தாழ்வான் ஒருவரே இப்பெருமை உடையவர் என்று பெரியநம்பிகள் அருளிச் செய்தமை இங்கே குறிப்பிட்டுக் காட்டப்பெறுகிறது.)

[739]

(ஆனையின் நெஞ்சிடர் தீர்த்த பிரான்) இதுக்கு பட்டர் அருளிச் செய்யும்படி, "ராஜபுத்ரனைச் சிறையிலே இட்டு வைத்தால், கைக்கூட்டனுக்கும் பாலும் சோறும் இடுவாரைப் போலே காண்!" என்று.

(திருவாய்மொழி 7-10-8 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

"ஆனையின் நெஞ்சிடர் தீர்த்தபிரான்" என்று ஆழ்வார் அருளிச் செய்துள்ளார். கஜேந்திரனுக்கு வீடுபேறும், அவனுடைய காலைப் பிடித்துக் கொண்ட முதலைக்கு சாபவிமோசனமும் அருளினான் என்றுரைத்த

உரையாசியர், இத்தொடர்பில் பட்டர் அருளிச்செய்த **வார்த்தை** ஒன்றை எடுத்துக்காட்டுகிறார்.

விளக்கம்

எண் 257ன் விளக்கம் பார்க்க.

[740]

"இதுதான் ஓர் உக்தி மாத்ரமாய், உம்முடைய நெஞ்சு பரமபதத்தை விரும்பினாலோ?" என்ன, "அத்தை என் நினைவுக்கு வாய்த்தலையிலே இருக்கிற ஸர்வேஶ்வரனைக் கேட்டு கொள்வது" என்று இங்ஙனே அருளிச் செய்வர் சீயர். அன்றிக்கே, பிள்ளான், "'நீர் திருவாறன்விளையே ப்ராப்யம் என்றிருக்கிறீர்; ஈஶ்வரன் ஸ்வதந்த்ரன் அன்றோ! அவன் பரமபதத்தைத் தரிலோ?' என்ன, 'அவன் ஸர்வஜ்ஞன் அன்றோ! அறியானோ?' என்கிறார்" என்று.

(திருவாய்மொழி 7-10-10 ஈடு வியாக்கியானம்)

நிகழ்டம்

"சிந்தை மற்றொன்றின் திறத்தது அல்லாத் தன்மை தேவபிரான் அறியும்" (என்னுடைய நெஞ்சு திருவாறன்விளை எனும் திருத்தலத்தைத் தவிர வேறு எதையும் நினைத்திராத தன்மையை தேவபிரான் அறிவான்) என்று ஆழ்வார் அருளிச் செய்துள்ளார். இதற்கு இரு **நிர்வாஹங்கள்** காட்டப்பெறுகின்றன.

விளக்கம்

"சிந்தை மற்றொன்றின் திறத்தது அல்லாத் தன்மை என்று கூறுகிறீரே! இப்படி நீர் கூறுவது வெறும் வாய் வார்த்தையேயாய், உம்முடைய நெஞ்சு பரமபதத்தை விரும்புகின்றதோ?" என்று ஆழ்வாரைக் கேட்க, "நான் திருவாறன் விளையைத்தான் விரும்புகிறேன் என்பதை, என்னுடைய நினைவிற்கு வாய்த்தலையிலே இருக்கின்ற தேவபிரானே நன்கு அறிவான். அவனையே கேட்கலாம்" ஆழ்வார் அருளிச் செய்வதாக **நஞ்சீயர்** பொருளுரைத்தார்.

"சிந்தை மற்றொன்றின் திறந்தது அல்லாத் தன்மை என்று திருவாறன் விளையைத் தவிர, உம்முடைய நெஞ்சு வேறு எதையும் விரும்பாது என்று நீர் கூறுகின்றீரே! எம்பெருமான் சுவதந்திரன் அல்லனோ! அவன் நீர் கேட்பதைக் கொடுக்காமல் பரமபதத்தைக் கொடுத்தால் என்ன செய்வது?" என்று ஆழ்வாரைக் கேட்க, "அவன் எல்லாம் அறிந்தவன் அன்றோ! ஒருவன் விரும்பியதை அன்றோ கொடுக்க வேண்டும்! நான் எதை விரும்புகிறேன் என்பதை தேவபிரான் நன்கு அறிவான்" என்று ஆழ்வார் அருளிச் செய்வதாகப் பிள்ளான் பொருளுரைத்தார்.

[741]

(நல்கி உரைப்பர் தம் தேவியர்க்கே) உடையவர், திருக்கோட்டியூர் நம்பி தமக்கு அத்யந்த ரஹஸ்யமாக உபதேசித்த சரமச்லோகார்த்தத்தைத் தெற்காழ்வார் திருமுன்பே எடுத்துக் கைநீட்டினவர்களுக்கு அவர்கள் விஷயத்தில் உகப்பாலே அத்தை அருளிச் செய்தாரிறே.

(திருவாய்மொழி 7-10-1 ஈடு வியாக்கியானம்)

நிகழ்டம்

நம்மாழ்வார் தாம் அருளிச் செய்த "இன்பம் பயக்க" என்று தொடங்கும் பதிகத்தைக் கற்பவர்களை நித்யசூரிகள் தங்கள் தேவிமார்களுக்கு, 'இவர்கள் பரிசுத்தர்கள்' என்று விரும்பிக் கூறுவர்கள் என்று அருளிச் செய்துள்ளார். இதை விளக்கும் வகையில் ஓர் **ஐதிஹ்யம்** கூறப்பெறுகிறது.

விளக்கம்

திருக்கோட்டியூர் நம்பி, தமக்குப் பரமரஹஸ்யமாக உபதேசித்த சரமச்லோகத்தின் பொருளை, திருக்கோட்டியூரில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானான தெற்காழ்வாருக்கு கைங்கர்யம் செய்பவர்களுக்கு, அவர்களிடத்தில் உள்ள மிக்க அன்பாலே, உடையவர் உபதேசித்தது போல, நித்யசூரிகளும் தங்கள் மனைவியருக்குக் கூறுவர்கள்.

[742]

இத்திருவாய்மொழிக்கு ஆளவந்தார்அருளிச்செய்யும் ஸ்லோகம் இது.

(திருவாய்மொழி 8-1 ஈடு வியாக்கியானம் ப்ரவேசம்)

நிகழ்டம்

எம்பெருமானோடு கூடப்பெறவேண்டும் என்று பாரித்த ஆழ்வாருக்கு அப்பாரிப்பு உடனே நிறைவேறாமையினால் வருத்தம் உண்டாயிற்று. பிராட்டிமார் அருகே எழுந்தருளியிருக்க, நித்யஸூரிகளும் உண்டாயிருக்க, நினைத்தபடி காரியம் செய்து தலைக்கட்டவல்ல சக்தியும் அவனுக்கு உண்டாயிருக்க, தமக்கும் அவனை அடைவதில் உண்டான ஆசை குறைவற்றிருக்க, தாம் நினைத்தபடி அவனோடு கூடப்பெறாமையினால் ஆழ்வாருக்கு வெறுப்பு உண்டாயிற்று. அதனால் எம்பெருமானையே நோக்கி, "பிரானே! நீ அடியார்களுக்கு வசப்பட்டவன் என்றும், நினைத்தவற்றை நடத்த சக்தியுள்ளவன் என்றும் நான் கொண்டிருந்தேன். ஆனால் நான் ஒருவன் தோன்றி உனக்கு இவை பொய்யாகப் போகின்றன போலும்! எனக்கு பாக்கியம் இல்லாமையினாலேயே இவை பலிக்கவில்லை போலும்!" என்று விண்ணப்பம் செய்கிறார். இதற்கு இணையாக ஆளவந்தார் வால்மீகி ஸ்ரீராமாயணத்தில் உள்ள ஒரு சுலோகத்தை எடுத்துக் காட்டிய **நிர்வாஹம்** கூறப்பெறுகிறது.

விளக்கம்

இராவணனால் சிறைவைக்கப்பட்டு அசோக வனத்தில் இருந்த சீதைப் பிராட்டி, இராமபிரான் பற்பல நற்குணங்கள் பொருந்தியவனாக இருந்தும், தனக்கு அவை உதவக் காணாமையாலே, தன்னுடைய துர்ப்பாக்கியமே அதற்குக் காரணம் என்று கூறுகிறாள். அந்த சுலோகமாவது: "க்யாத: ப்ராஜ்ஞ: க்ருதஜ்ஞச்ச ஸாநுக்ரோசச்ச ராகவ:, ஸத்வ்ருத்தோ நிரநுக்ரோசச்ச சங்கே மத்பாக்ய ஸங்க்ஷயாத்" (ராமா. சு.கா. 21-13) (ராகவன் அறிவுடையவர்; தன்னைக் கிட்டுபவர்களை அறிபவர்; இரக்கமுடையவர்; நன்னடத்தையுடையவர்; இவ்வாறு எதிரிகள் திரளிலும் புகழப்படுபவர்; இப்போது எனக்கு முகம் காட்டாமையினால், இரக்கம் அற்றவரோ என்று சந்தேகிக்கிறேன். இது என்னுடைய துர்ப்பாக்கியத்தினால் போலும்) என்று சீதைப் பிராட்டி கூறிய சுலோகத்தை **ஆளவந்தார்** இங்கு ஆழ்வாருடைய நிலைக்கு ஒப்பிட்டுக் கூறுவராம்.

[743]

'மங்கிய அருவாம் நேர்ப்பம்' என்று பக்ஷத்$_4$ஸமஷ்டி$_2$ என்றும், 'வான்புலன் இறந்தது' என்று முக்தஸ்வரூபத்தைச் சொல்லுகிறது என்றும் பிள்ளான்.

(திருவாய்மொழி 8-1-6 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

நம்மாழ்வார் எம்பெருமானைக் குறித்து, "மங்கிய அருவாம் நேர்ப்பமும் நீயே, வான்புலன் இறந்ததும் நீயே" என்று அருளிச்செய்துள்ளார். இதற்கு விளக்கம் தருகின்ற உரையாசிரியர், 'மங்கிய அரு = காரியமாகிய தன்மை முழுவதும் அழிந்து, சூட்சும நிலையை அடைந்திருக்கிற, நேர்ப்பமும் நீயே = அவ்யக்தமும் நீ இட்ட வழக்கு; வான் = அவ்யக்தத்தையும் வியாபிக்கக் கூடியதாய், புலன் இறந்ததும் நீயே = இந்திரியங்களுக்கு எட்டாததான ஜீவர்களின் தொகுதியும் நீ இட்ட வழக்கு' என்று பொருளுரைத்தார். அதாவது அவ்யக்தமும் எம்பெருமான் இட்டவழக்கு, பத்த ஆத்ம ஸ்வரூபமும் எம்பெருமான் இட்ட வழக்கு என்றபடி. தொடர்ந்து, இதே சொற்றொடர்களுக்குப் பிள்ளான் கூறிய **நிர்வாஹ**த்தையும் எடுத்துக் காட்டுகிறார்.

விளக்கம்

'மங்கிய அருவாம் = இல்லாதவைக்குச் சமமாய், சூட்சும நிலையில் உள்ள, நேர்ப்பமும் நீயே = பத்த ஆத்மாக்களின் தொகுதியும் நீ இட்ட வழக்கு; வான் - பரமாகாசமான பரமபதத்தில் உள்ள, புலன் இறந்ததும் நீயே = இந்திரியங்களுக்கு எட்டாததான முக்த ஆத்மாக்களின் ஸ்வரூபமும் நீ இட்ட வழக்கு' என்பது **பிள்ளான்** தரும் விளக்கம். அதாவது பத்த ஆத்மாக்களின் (இவ்வுலகில் கட்டுண்டு கிடக்கின்ற ஜீவாத்மாக்களின்) ஸ்வரூபமும் எம்பெருமான் இட்ட வழக்கு;

பரமபதத்தில் உள்ள முக்தாத்மாக்களின் ஸ்வரூபமும் எம்பெருமான் இட்ட வழக்கு என்றபடி.[1]

[744]

(தவிர அருள் நீண்முடியானை) "இவர் ப₄யம் போம்படி, 'உம்முடைய அபேக்ஷிதம் செய்கிறோம்' என்று ஶிர:கம்பநம் பண்ணினான் போலே காண்" என்று அம்மங்கியம்மாள்.

(திருவாய்மொழி 8-3-11 ஈடு வியாக்கியானம்)

நிகழ்டம்

எம்பெருமானுக்கு விபவாவதாரத்திலும் அர்ச்சாவதாரத்திலும் பரிவு கொள்பவர்கள் யாரும் இல்லையே! அவனுக்கு யாரால் என்ன தீங்கு வந்துவிடுமோ என்று அஞ்சிப் பரிவு கொண்டு நம்மாழ்வார் ஒரு பதிகம் அருளிச்செய்துள்ளார். அப்பதிகத்தின் கடைசிப் பாசுரத்தில் "உரையாவெந்நோய் தவிர அருள் நீண்முடியானை" என்று ஆழ்வார் அருளிச் செய்கிறார். எம்பெருமானுக்கு என்ன ஆபத்து வந்து விடுமோ என்று அஞ்சுகின்ற கொடிய நோய் தீரும்படியாக, நீண்ட திருமுடியை உடைய எம்பெருமானைக் குறித்து ஆழ்வார் அருளிச் செய்த பதிகம் என்று இதற்குப் பொருளுரைத்த உரையாசிரியர், 'நீண்முடியானை' என்ற சொற்றொடருக்கு அம்மங்கியம்மாள் அருளிச்செய்த **நிர்வாஹத்தை** *எடுத்துக் காட்டுகிறார்.*

விளக்கம்

தன் முன்னே அஞ்சி நின்ற ஆழ்வாரை நோக்கி எம்பெருமான் "உம்முடைய விருப்பத்தை நாம் நிறைவேற்றுகிறோம்; நீர் அஞ்ச வேண்டாம்" என்று தன்னுடைய நீண்ட கிரீடமணிந்த தலையை ஆட்டினான் போலும்! எனவேதான் நம்மாழ்வார் "அருள் நீண்முடியானை" என்று அருளிச்செய்கிறார் என்று **அம்மங்கியம்மாள்** *கூறினார்.*

[745]

(கஞ்சனைத் தகர்த்த) "ராஜத்₃ரோஹிகளைக் கொல்லும்போது ராஜசிஹ்நங்களை வாங்கிக் கொல்லுமாபோலே, தான் கொடுத்த முடியை வாங்கிக் கொன்றது" என்று அம்மங்கியம்மாள் பணிப்பர்.

(திருவாய்மொழி 8-4-1 ஈடு வியாக்கியானம்)

1. பிள்ளான் அருளிச்செய்துள்ள ஆறாயிரப்படி உரையில் இவ்விளக்கம் மட்டுமே இடம் பெற்றுள்ளது. ஒன்பதினாயிரப்படி, பன்னீராயிரப்படி உரைகளில், பிள்ளானுடைய விளக்கமும் குறிப்பிடப்பட்டிருந்தாலும், அதை அருளிச்செய்தவர் பிள்ளான் என்பது குறிப்பிடப்படவில்லை. இருபத்துநாலாயிரப்படி உரையில் பிள்ளான் விளக்கம் அருளிச்செய்தமை குறிப்பிடப்பட்டுள்ளது.

நிகழ்டம்

"கஞ்சனைத் தகர்த்த சீர்கொள் சிற்றாயன்" என்று கம்ஸனைக் கொன்ற கண்ணபிரானை நம்மாழ்வார் போற்றுகின்றார். இத் தொடர்பில், "கேசேஷு ஆக்ருஷ்ய விகலத் கிரீடமவநீதலே, ஸ கம்ஸம் பாதயாமாஸ தஸ்யோபரி பபாத ச" (கம்ஸனுடைய முடியைப் பிடித்து, அவனுடைய கிரீடம் பூமியில் விழும்படி செய்து, அவனைக் கீழே தள்ளி, அவன்மீது தானும் விழுந்தான்) என்ற ஸ்ரீவிஷ்ணுபுராண சுலோகத்தை (5-20-86) மேற்கோளாகக் காட்டுகிறார் உரையாசிரியர். தொடர்ந்து, கண்ணபிரான் கம்ஸனைக் கொல்வதற்கு முன் அவனுடைய கிரீடத்தை பூமியில் விழும்படி செய்ததற்குக் காரணம் என்ன என்பது பற்றி அம்மங்கியம்மாள் அருளிச்செய்த **வார்த்தை***யைக் கூறுகிறார்.*

விளக்கம்

எண் 726ன் விளக்கம் பார்க்க!

[746]

(காணவாராய்) பிள்ளான் "எம்பெருமானைப் பெற்று அனுப$_4$விக்கும் நாடு காண்" என்னுமாம், 'இல்லையாகில் கூப்பிடாதோ' என்று.

(திருவாய்மொழி 8-5-2 ஈடு வியாக்கியானம்)

நிகழ்டம்

எம்பெருமானை உடனே காணவேண்டும் என்று கதறுகின்ற நம்மாழ்வார், "காணவாராய் என்றென்று கண்ணும் வாயும் துவர்ந்து அடியேன் நாணி நன்னாட்டு அலமந்தால், இரங்கி ஒருநாள் நீ அந்தோ காணவாராய்" என்று அருளிச்செய்கிறார். இங்கு, "அடியேன் நன்னாட்டு அலமந்தால்" (அடியேன் நல் நாடாகிய இவ்வுலகத்தில் அலமந்தால்) என்றுள்ள சொற்றொடர்களுக்கு விளக்கம் அளிக்கும்போது 'நன்னாடு' என்பதற்குப் பல பொருள்களைக் காட்டுகின்ற உரையாசிரியர், பிள்ளான் அருளிச்செய்த **நிர்வாஹம்** *ஒன்றையும் கூறுகிறார்.*

விளக்கம்

"இவ்வுலகமானது எம்பெருமானைப் பெற்று அனுபவித்துக் கொண்டிருக்கின்றபடியால் நன்னாடு என்று ஆழ்வார் அருளிச் செய்கிறார். ஆனால் இவ்வுலகம் எம்பெருமானைப் பெற்று அனுபவித்துக் கொண்டிருக்கின்றதோ எனில், அப்படி அனுபவிக்காவிட்டால், உலகத்தில் உள்ளவர்களும் தம்மைப்போல் கதறமாட்டார்களோ? அவர்கள் அப்படிக் கதறி எம்பெருமனை அழைக்காதபடியினால் அவர்கள் எம்பெருமானைப் பெற்று

1. இருபத்துநாலாயிரப்படி வியாக்கியானத்திலும் இவ்வார்த்தை உள்ளது.

அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று ஆழ்வார் கருதுகிறார்" என்று **பிள்ளான்** அருளிச்செய்தார்.[1] (உலகில் உள்ளவர்கள் பிற விஷயங்களில் ஈடுபட்டு எம்பெருமானை மறந்திருந்தபடியால் கதறவில்லை என்பதை அறியாமல், அவர்கள் எம்பெருமானை அனுபவிக்கின்றபடியால்தான் கதறவில்லை என்று ஆழ்வார் கருதிவிட்டார் என்பது பிள்ளான் அருளிச்செய்த விளக்கத்தின் கருத்து.)

[747]

(அல்லல் இத்யாதி) "உன்னைக் காட்டாதே அருமைப்படுத்தப் பார்த்தாயாகில் நாட்டார் 'தண்ணிது' என்கிற அஜ்ஞானம் வருவது ஓர் உபாயம் ஏதோ?" என்றருளிச்செய்வர் ப$_4$ட்டர், இப்போது மறந்து பிழைக்கலாம் என்னுமத்தாலே. "திருவடிகள் என் ஹ்ருத$_3$யத்திலே ப்ரகாஶியாநிற்க து$_3$:க$_2$ாத்மக$_2$மாம் அஜ்ஞாநம் வருகைக்கு உபாயமுண்டோ?" என்னும் அம்மாள், உண்டாகில் உண்டு உடுத்துத் திரியலாமே நாட்டாரோபாதி!

(திருவாய்மொழி 8-5-5 ஈடு வியாக்கியானம்)

நிகழ்ிடம்

எம்பெருமானுடைய வடிவழகு தம்முடைய இதயத்தில் குடிகொண்டு இடைவீடின்றி நினைவுக்கு வந்து நலிகின்றதால், அதை மறந்து பிழைப்பதற்கு ஒரு வழி சொல்ல வேண்டும் என்று எம்பெருமானையே நம்மாழ்வார் கேட்கின்றார். இங்கு "அல்லல் என்னும் இருள் சேர்தற்கு உபாயம் என்னே" என்று ஆழ்வார் அருளிச்செய்துள்ளமைக்கு பட்டர், அம்மாள் ஆகிய இருவரும் கூறிய **நிர்வாஹங்கள்** எடுத்துக் காட்டப்படுகின்றன.

விளக்கம்

"எம்பெருமானே! நீ உன்னை எனக்குக் காட்டாமல் அருமைப்படுத்தப் பார்த்தாயாகில், உலகோர்கள் மிகவும் தாழ்ந்ததாகக் கொள்ளும் அறியாமை எனக்கு வருவதொரு வழி நீயே சொல்ல வேண்டும்" என்கிறார் ஆழ்வார் என்று **பட்டர்** அருளிச்செய்வர். அறியாமை வந்து விட்டால், அவனை மறந்துவிடலாம், அதனால் அவனைப் பெறாமல் துடிக்கின்ற வருத்தமும் மறைந்துவிடும் என்று கருதி ஆழ்வார் அப்படி அருளிச்செய்வதாக பட்டர் விளக்கம் உரைத்தார்.

"எம்பெருமானுடைய வடிவழகு என்னுடைய நெஞ்சில் நன்கு பிரகாசித்துக் கொண்டிருக்கும்போது, துக்கரூபமான அறியாமை வருவதற்கு ஏதேனும் வழியுண்டோ?" என்கிறார் ஆழ்வார் என்பது, அம்மாள் அளித்த விளக்கமாகும். அறியாமை உண்டானால் மற்ற ஸம்ஸாரிகளைப் போலத் தாமும் உண்டு, உடுத்துத் திரிந்து போதைப் போக்கலாமே என்று கருதி ஆழ்வார் அப்படி அருளிச்செய்வதாக **அம்மாள்** விளக்கம் உரைத்தார்.

1. இருபத்து நாலாயிரப்படியிலும் பிள்ளான் அருளிச்செய்தமை குறிப்பிடப்பெற்றுள்ளது.

[748]

(அந்தண் குருகூர்ச் சடகோபன்) उपतिष्ठन्तु मां सर्वे (உபதிஷ்டந்து மாம் ஸர்வே) என்கிறபடியே இவ்வாற்றாமைக்கெல்லாம் ஆடல் கொடுத்த ஆழ்வார் என்று ஆளவந்தார் நிர்வாஹம்.

(திருவாய்மொழி 8-5-11 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

எம்பெருமானோடு உடனே கூடப்பெறாமையால் தமக்கு உண்டான ஆற்றமையை "மாயக் கூத்தா" என்கிற திருவாய்மொழியில் (8-5) அருளிச்செய்த ஆழ்வார், அப்பதிகத்தின் கடைசிப் பாசுரத்தில் தம்மை "அந்தண் குருகூர்ச் சடகோபன்" என்று அருளிச் செய்துகொள்கிறார். இதுபற்றி ஆளவந்தார் அருளிச்செய்த **நிர்வாஹம்** கூறப்பெறுகிறது.

விளக்கம்

உபதிஷ்டந்து மாம் ஸர்வே வ்யாதய: பூர்வ ஸஞ்சிதா:
அந்ருணோஹம் கமிஷ்யாமி தத்விஷ்ணோ: பரமம் பதம் (மஹாபாரதம்)

(எல்லா நோய்களும் என்னை வந்து அடையட்டும்; நான் கடன் கழித்தவனாக விஷ்ணுவினுடைய அந்தப் பரமபதத்தை அடையப்போகிறேன்) என்று பீஷ்மர் கூறியதுபோல, எம்பெருமானைப் பிரிந்த வருத்தத்தினால் ஏற்பட்ட ஆற்றாமைக்கெல்லாம் இடம்கொடுத்தவராகத் தம்மை ஆழ்வார் கூறிக் கொள்வதாக ஆளவந்தார் அருளிச்செய்தார்.[1]

[749]

(சடகோபன் சொல்) (பாலோடு அமுதன்ன ஆயிரத்திப்பத்து) பாலென்கிறது சோலைத் திருக்கடித்தானத்துறை திருமாலை; அமுதென்கிறது சடகோபன் சொல் என்கிற வாசகத்தை. இது ஆளவந்தார் நிர்வாஹம்.

(திருவாய்மொழி 8-6-11 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

திருக்கடித்தானம் எனும் தலத்தில் எழுந்தருளியுள்ள எம்பெருமானைப் பற்றிய பதிகத்தின் இறுதிப் பாசுரத்தில், "சோலைத் திருக்கடித்தானத்து உறை திருமாலை மதிள் குருகூர்ச் சடகோபன் சொல் பாலோடு அமுதன்ன ஆயிரத்து இப்பத்தும்" என்று நம்மாழ்வார் அருளிச்செய்துள்ளார். இங்கு ஆழ்வார் தம்முடைய பதிகத்தை, 'பாலோடு அமுதன்ன இப்பத்து' என்று அருளிச் செய்துள்ளதற்கு ஆளவந்தார் அருளிய **நிர்வாஹம்** எடுத்துக்காட்டப் பெறுகிறது.

1. இருபத்துநாலாயிரப்படி வியாக்கியானத்திலும் ஆளவந்தார் அருளிச்செய்தமை கூறப்படுகிறது.

விளக்கம்

ஆழ்வார் அருளிச்செய்த இப்பதிகத்தின் கருப்பொருள் (விஷயம்) எம்பெருமான். அவனைப் பற்றிய சொல்லோ ஆழ்வார் அருளிச் செய்த திருவாய்மொழி. இவை இரண்டும் சேர்ந்தது பாலும் அமுதமும் சேர்ந்தாற் போன்றது. பால் என்றது திருக்கடித்தானத்து எம்பெருமானையும் அமுது என்றது ஆழ்வார் அருளிய பாசுரங்களையும் குறிக்கும் என்று ஆளவந்தார் அருளிச்செய்வர்.[1]

[750]

(அழைத்தேற்கு) "இவன் ப்ரணயித்வத்தை அறியாதே தாழ்த்தானாகவும் நாம் அபி₄நிவிஷ்டராகவும் நினைத்துக் கூப்பிட்டு, என்ன காரியம் செய்தோம் என்கிறார் காண்!" என்னும் பிள்ளான்.

(திருவாய்மொழி 8-7-1 ஈடு வ்யாக்யானம்)

நிகழிடம்

'எல்லியும் காலையும்' என்ற கீழ்த் திருவாய்மொழியில் (8-6) எம்பெருமானோடு தாம் கூடப் பெறாமையால் உண்டான ஆற்றாமையெல்லாம் தோன்றும்படி பாசுரங்களை அருளிச்செய்தார். ஆனால், 'இருத்தும் வியந்து' என்ற இத்திருவாய்மொழியில் (8-7) தம்மிடத்தில் மிக மிக அன்பு உடையவனாக எம்பெருமான் வந்து, தம்முடைய கருத்தையே தானும் உடையவனாகக் கொண்டு தம்மையே பார்த்துக் கொண்டு எழுந்தருளியிருப்பதாக அருளிச் செய்கிறார். இதற்குப் பிள்ளான் அருளிச்செய்த **நிர்வாஹம்** கூறப்பெறுகிறது.

விளக்கம்

"எம்பெருமான் மீது நான் கொண்டிருக்கின்ற அன்பை அறியாமையினால், அவன் என்னோடு கலப்பதற்கு வராமல் தாமதித்தான் என்றும், எனக்குத்தான் அவனிடத்தில் மிகுந்த அன்புள்ளது என்றும் நினைத்தன்றோ கீழே கதறினேன்! அவனுக்கு என்மீதுள்ள அளவற்றை அன்பை அறியாமல் என்ன காரியம் செய்துவிட்டேன்!" என்று ஆழ்வார் கருதுவதாகப் **பிள்ளான்** பொருளுரைத்தார்.[2]

[751]

(இதுவல்லால் பொருள்தானெனில் மூவுலகும் பொருளல்ல) "நாட்டார் ஐஶ்வர்யங்களில் தலையாக நினைத்திருப்பது த்ரைலோக்ய ஐஶ்வர்யத்தை ஆயிற்று. இவன் என் ஹ்ருத₃யத்திலே புகுந்தபின்பு அத்தையும் ஒரு பொருளாக நினைத்திரேன்" என்று ஆளவந்தார் நிர்வாஹமாகத் திருமாலையாண்டான் பணிக்கும். "என் ஹ்ருத₃யத்திலே வீற்றிருந்த இதொழிய வீற்றிருந்தேழுலகும் தனிக்

1. இருபத்துநாலாயிரப்படி வியாக்கியானத்திலும் ஆளவந்தார் அருளிச்செய்தமை கூறப்படுகிறது.
2. இருபத்துநாலாயிரப்படி வியாக்கியானத்திலும் பிள்ளான் அருளிச்செய்தமை கூறப்படுகிறது.

கோல் செல்ல இருக்கிற ஐஸ்வர்யத்தையும் ஒரு புருஷார்த்தமாக நினைத்திருக்குமோ? என்று பார்த்தால், அதுவும் அவனுக்கு ஒரு சரக்கல்ல" என்று எம்பெருமானார் நிர்வாஹம்.

(திருவாய்மொழி 8-7-3 இருபத்துநாலாயிரப்படி வியாக்கியானம்)

நிகழிடம்

"அவன் என்னுள் இருள்தானற வீற்றிருந்தான் இதுவல்லால் பொருள்தானெனில் மூவுலகும் பொருளல்ல" என்று நம்மாழ்வார் அருளிச் செய்துள்ளார். இதற்கு ஆளவந்தார், எம்பெருமானார் ஆகிய இருவரும் அருளிச்செய்த **நிர்வாஹங்கள்** எடுத்துக் காட்டப்பெறுகின்றன.

விளக்கம்

"உலகில் உள்ளவர்கள் மிகப் பெரிய செல்வமாக நினைத்திருப்பது மூவுலகங்களையும் ஆளும் செல்த்தையாகும். எம்பெருமான் என்னுடைய நெஞ்சுக்குள் புகுந்த பின்பு, மூவுலகச் செல்வத்தையும் நான் ஒரு பொருளாக நினைக்க மாட்டேன் என்று ஆழ்வார் அருளிச் செய்கிறார்" என்று **ஆளவந்தார்** அருளிச் செய்ததாகத் **திருமாலையாண்டான்** கூறினார்.

(எம்பெருமான் தமக்கு மயர்வற மதிநலம் அருளிய பிறகு, மூவுலகாளும் ஐச்வர்யத்தை ஆழ்வார் ஒரு பொருளாக நினைக்க மாட்டார் ஆகையால்,) "என்னுடை நெஞ்சுக்குள் புகுந்த பின்பு, வீற்றிருந்து ஏழுலகும் தனிக்கோல் செல்ல இருக்கின்ற செல்வத்தையும் எம்பெருமான் ஒரு பொருளாக நினைத்திருக்குமோ என்றால், என் இதயத்திற்குள் அவன் இருக்கின்ற செல்வத்தை விட ஏழுலகச் செல்வத்தையும் அவன் ஒரு பொருளாக நினைத்திருக்க மாட்டான் என்று ஆழ்வார் அருளிச்செய்கிறார்" என்று **எம்பெருமானார்** அருளிச் செய்தார்.[1]

[752]

(மதியாலே) "இவன் படியை அறிந்துகொண்டேன் என்கிறார்" என்னும் அம்மாள். அன்றிக்கே, 'மதி: அநுமதி:' என்றாக்கி, அநுமதிமாத்ரத்தாலே என்று பட்டர்.

(திருவாய்மொழி 8-7-9 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

"மாலை வயிற்றில் கொண்டு மன்ன வைத்தேன் மதியாலே" (எம்பெருமானை மதியாலே என்னுள்ளே பேராதபடி வைத்தேன்) என்று ஆழ்வார் அருளிச்செய்துள்ளார். இங்கு 'மதியாலே' என்றுள்ளதற்கு அம்மாள், பட்டர் ஆகிய இருவரும் அருளிச்செய்த **நிர்வாஹங்கள்** எடுத்துக் காட்டப் பெறுகின்றன.

1. ஈடு வியாக்கியானத்திலும் இவ்விருவரும் இப்பொருள்கள் உரைத்தமை கூறப்படுகிறது.

விளக்கம்

'மதியாலே' என்பதற்கு ஞானத்தாலே என்று பொருள்கொண்டு, எம்பெருமானுடைய தன்மைகளையெல்லாம் நன்கு அறிந்து கொண்டு அவனை என்னுள்ளே நன்கு வைத்தேன் என்று ஆழ்வார் அருளிச்செய்வதாக **அம்மாள்** பொருளுரைத்தார்.

'மதியாலே' என்பதற்கு அனுமதியாலே என்று பொருள்கொண்டு, எம்பெருமானை என்னுள்ளே வைப்பதற்கு நான் வேறு எதுவும் செய்யவில்லை; அவன் என்னுள்ளே தங்கியிருப்பதற்கு நான் அனுமதி செய்தது மாத்திரமே! அந்த அனுமதியாலே அவனை என்னுள்ளே நன்கு வைத்தேன் என்கிறார் ஆழ்வார் என்று **பட்டர்** பொருளுரைத்தார்.[1]

[753]

(அடியேன் உள்ளான்) திருக்கோட்டியூர்நம்பி ஸ்ரீபாதத்திலே ஆறுமாஸம் ஆழ்வான் ஸேவித்துநின்று போரப் புக்கவாறே "ஆழ்வான்! ஆழ்வார் 'அடியேன் உள்ளான்' என்றபடி கண்டாயே!" என்ன, "க்ருதார்த்த₂னானேன்" என்று போந்தானாம்.

(திருவாய்மொழி 8-8-2 ஈடு வியாக்கியானம்)

நிகழ்டம்

ஆழ்வார் எம்பெருமானை 'அடியேன் உள்ளான் உடலுள்ளான்' என்று அருளிச்செய்துள்ளார். இது பற்றி ஓர் **ஐதிஹ்யம்** கூறப்பெறுகிறது.

விளக்கம்

ஆத்மாவுக்கு அந்தரங்க நிருபகம் (தனிப்பட்ட அடையாளம்) ஜ்ஞாத்ருத்வமா? (அறிவுடைமையா) அல்லது சேஷத்வமா? (அடிமைத் தன்மையா) என்பதை அறிந்து வர, எம்பெருமானார் கூரத்தாழ்வானை திருக்கோட்டியூர் நம்பியிடம் அனுப்பினார். அவரிடம் ஆறுமாதம் காத்திருந்த **கூரத்தாழ்வான்** புறப்படும்போது **திருக்கோட்டியூர் நம்பி** அவரை அழைத்து "ஆழ்வான்! ஆழ்வார் 'என்னுள்ளான்' என்றருளிச் செய்ய வேண்டிய இடத்தில் 'அடியேனுள்ளான்' என்றருளிச் செய்துள்ளது கண்டீரே! (எனவே ஆத்மாவுக்கு சேஷத்வமே நிருபகம்)" என்று அருளிச் செய்தார். இதைக்கேட்ட கூரத்தாழ்வான், "கிருதார்த்தன் ஆனேன் (பயன் பெற்றவனாக ஆனேன்)" என்று கூறினார்.

அடியேன் என்கிற சொல் ஆழ்வார் திருவாக்கில் பல்வேறு இடங்களில் வந்திருந்தாலும், அவ்விடங்களில் எல்லாம் உடலோடு கூடிய ஆத்மாவே அடியேன் என்ற சொல்லால் கூறப்படும். ஆனால் இப்பாசுரத்தில் (8-2-2) மட்டும்,

1. இருபத்துநாலாயிரப்படி உரையிலும் இவ்விருவரும் இப்பொருள்கள் உரைத்தமை கூறப்படுகிறது.

(எம்பெருமான் ஆன்மாக்கள், அஃறிணைப் பொருள்கள் ஆகிய எல்லாவற்றிலும் உள்ளான் என்ற கருத்தில்) 'அடியேன் உள்ளான் உடல் உள்ளான்' என்று ஆழ்வார் அருளிச் செய்துள்ளார். உடல் உள்ளான் என்பதைத் தனிப்படக் கூறிவிட்டபடியால் 'அடியேன் உள்ளான்' என்பதற்கு வெறும் ஆத்மா மட்டுமே பொருளாகிறது. அப்படி ஆத்மாவைக் கூறும்போது ஆத்மாவில் உள்ளான் என்றோ, என் உள்ளான் என்றோ கூறாமல், அடியேன் உள்ளான் என்றே ஆழ்வார் அருளிச்செய்துள்ளபடியால், ஆத்மாவுக்கு அடிமைத் தன்மையே தனிப்பட்ட அடையாளமாகும் என்று திருக்கோட்டியூர் நம்பி அருளிச்செய்தார்.

[754]

"கீழ் ப$_4$க$_3$வத்ப்ரகாரமாக ஆத்மா அநுஸந்தி$_4$க்கப்பட்டது; இதற்கு மேல் நாலு பாட்டு, படகூதமான ஸௌக்ல்யத்தைப் பிரித்து நிஷ்கர்ஷக ஸப்$_3$த$_3$த்தையிட்டு வ்யவஹரிக்குமா போலே, 'எம்பெம்மானோடு' என்கிற பாட்டளவும் கேவல ஆத்மஸ்வரூபத்தைச் சொல்லுகிறது" என்று எம்பார் அருளிச்செய்யும்படி. ஆண்டான் "ப்ரகாரமான வேஷத்திலே சொல்லுகிறது" என்னும்.

(திருவாய்மொழி 8-8-5 ஈடு வியாக்கியான அவதாரிகை)

நிகழிடம்

'நின்ற ஒன்றை உணர்ந்தேனுக்கு' என்று ஆழ்வார் அருளிச் செய்துள்ளார். 'நித்தியமான ஆத்மாவை உணர்ந்து கொண்ட எனக்கு' என்று இதற்குப் பொருளுரைத்த உரையாசிரியர், எம்பெருமான் ஆத்மாவை ஆழ்வாருக்கு எப்படிக் காட்டிக் கொடுத்தான் என்பது பற்றி, எம்பார் ஆண்டான் ஆகிய இருவரும் அருளிச்செய்த **நிர்வாஹங்களை** எடுத்துக் காட்டுகிறார்.

விளக்கம்

"இதற்கு முன்னர் அருளிச்செய்த பாசுரத்தில் பகவானுக்கு உடலாக (பகவானுக்கு ப்ரகாரமாக) ஆத்மா இருப்பது கூறப்பட்டது. இதற்கு மேல் உள்ள நான்கு பாசுரங்களில், ஆத்மாவின் தன்மை தனிப்படக் கூறப்படுகிறது. துணியில் இருக்கும் வெண்மை என்ற குணத்தைத் தனிப்படக் கூறுவதுபோல ஆத்மாவின் தனித்தன்மை கூறப்படுகிறது" என்று **எம்பார்** அருளிச்செய்தார்.

"முன்னர் அருளிச்செய்த பாசுரத்தில் ஆத்மாவை பகவானுக்கு உடலாகக் கூறியது போலவே, இதற்கு மேல் உள்ள பாசுரங்களிலும் ஆத்மாவை பகவானுக்கு உடலாக (ப்ரகாரமாகவே) கூறுகிறார் ஆழ்வார்" என்று **ஆண்டான்** அருளிச்செய்தார்.

1. "ஆழ்வானுக்குத் திருக்கோட்டியூர் நம்பி, "அடியேனுள்ளான் என்னப்பெற்றபடியென்!" என்று பணித்தார்" - என்று இருபத்துநாலாயிரப்படி உரையிலும் உள்ளது. எண் 145, 375 பார்க்க.

[755]

(நல்லுறைப்பு) ஆண்டான் பணிக்கும்படி - 'நின்றவொன்றை உணர்ந்தேனுக்கு' என்னும் பாட்டுத் தொடங்கி நிஷ்க்ருஷ்ட ஆத்மாநுஸந்த₄ான மாத்ரமே அன்றிக்கே, ப₄க₃வச்சேஷத்வ பர்யந்தமாக அநுஸந்தி₄க்கிறது. இப்பாட்டில் 'எம்பெம்மானோடு ஒத்தே சென்று அங்கு உள்ளம் கூடக் கூடிற்றாகில்' என்கிற அந்திமஸ்ம்ருதியும் எம்பெருமான் தனக்கு ஶேஷமாக இவ்வாத்ம வஸ்துவை நினைத்திருக்குமாபோலே இவனும் அவனோடொத்து, அவன் நினைவோடொத்து அத்த₃ஶையிலே ஶேஷத்வாநுஸந்த₄ானம் கூடுமாகில் நல்ல வாய்ப்பு என்று.

(திருவாய்மொழி 8-8-8 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

"எம்பெம்மானோடு ஒத்தே சென்று அங்கு உள்ளம் கூடக் கூடிற்றாகில் நல்லுறைப்பு" (எம்பெருமானோடு ஒத்துச் சென்று, அவனோடு நெஞ்சு கூடப்பெற்றதாகில் நல்ல வாய்ப்பு) என்று ஆழ்வார் அருளிச்செய்துள்ளார். மரணத்தறுவாயில் தெளிவு பிறந்து, எம்பெருமானுடைய தன்மையை அனுஸந்தித்து, அவனோடு ஒத்த பெருமை ஆத்மாவுக்கு உண்டு என்று அநுஸந்தித்தல் கூடிற்றாகில் நல்ல வாய்ப்பு என்று பொருள் உரைத்த உரையாசிரியர், ஆண்டான் அருளிச்செய்துள்ள மற்றொரு **நிர்வாஹ***த்தையும் எடுத்துக் காட்டுகிறார்.*

விளக்கம்

இப்பதிகத்தில் 'நின்றவொன்றை உணர்ந்தேனுக்கு' என்ற ஐந்தாம் பாசுரம் தொடங்கி ஆத்மாவின் தன்மை அநுஸந்திக்கப் பட்டது மட்டுமின்றி, பகவானுக்கு ஆத்மா அடிமைப்பட்டது என்பதும் அனுஸந்திக்கப்பட்டது. எட்டாம் பாசுரமான இப்பாட்டில், எம்பெருமான் இவனைத் தனக்கு அடிமையாக நினைத்திருப்பதுபோல, இவனும் அவனோடு ஒத்துத் தன்னை அவனுக்கு அடிமையாகவே நினைத்து, அந்திமஸ்ம்ருதியிலும் (அதாவது உயிர் உடலினின்றும் நீங்கும்போது ஏற்படும் நினைவிலும்) எம்பெருமானுக்கு ஆத்மாவானது அடிமைப்பட்டது என்ற நினைவு கூடுமாகில் நல்ல வாய்ப்பு என்று ஆண்டான் பொருள் அருளிச்செய்வர்.

('எம்பெம்மானோடு ஒத்தே சென்று' என்பதற்கு ஆத்மா எம்பெருமானோடு ஒத்த (ஸமமான) சுத்தியை உடையது என்று முதலில் பொருள் உரைக்கப்பட்டது. ஆண்டான் காட்டிய விளக்கத்தில் எம்பெருமானுடைய நினைவோடு ஒத்துச் சென்று - அதாவது எம்பெருமான் இவனைத் தனக்கு அடிமையாக நினைத்திருப்பது போல, இவனும் அவனுடைய நினைவோடு ஒத்துத் தன்னை

அவனுக்கு அடிமையாக நினைத்து - என்ற பொருள் கூறப்படுகிறது. இந்நினைவு - அதாவது எம்பெருமானுக்குத் தான் அடிமைப் பட்டவன் என்கிற நினைவு அந்திமஸ்ம்ருதியிலும் உண்டாகுமானால் அது நல்ல வாய்ப்பு என்று ஆண்டான் விளக்கினார்.)[1]

[756]

"ப்ரீதியில் அந்யாபதேஶமுள்ளது இத்திருவாய்மொழி ஒன்றுமே" என்று ஆழ்வான் நிர்வஹிக்கும்படி.

(திருவாய்மொழி 8-9 ஈடு வியாக்கியான ப்ரவேசம்)

நிகழிடம்

"கண்கள் சிவந்து" என்கிற முன் திருவாய்மொழியில் ஆத்மாவின் தன்மையை - ஆத்மா எம்பெருமானுக்கு அடிமைப்பட்டது என்று - அருளிச்செய்த ஆழ்வார், அதனால் மகிழ்ச்சியை அடைந்தார். அந்த மகிழ்ச்சியின் மிகுதியால், தாமான தன்மை அழிந்து ஒரு பிராட்டியின் நிலையை அடைந்து, தம்முடைய தன்மையை - எம்பெருமானுக்குத் தவிர வேறு எவருக்கும் ஆட்படாத தன்மையை அதாவது அநந்யார்ஹ சேஷத்வத்தைத் தோழி கூறுவதாகப் பாசுரம் அருளிச்செய்கிறார். இதுபற்றிக் கூரத்தாழ்வான் அருளிச்செய்த **வார்த்தை** *ஒன்று கூறப்பெறுகிறது.*

விளக்கம்

"மகிழ்ச்சியில் அந்யாபதேசமாக அருளிச்செய்த திருவாய்மொழி இது ஒன்று மட்டுமே" என்று கூரத்தாழ்வான் அருளிச்செய்தார்.[2] *ஆழ்வார் தாமான தன்மையை இழந்து ஒரு பிராட்டியின் நிலையை அடைந்து பேசும் பதிகங்கள் அந்யாபதேசப் பதிகங்கள் எனப்படும். அப்பதிகங்களில் பதினேழு பதிகங்கள் பிராட்டியே கூறுவதாகவும், ஏழு பதிகங்கள் அவளுடைய தாயார் கூறுவதாகவும், மூன்று பதிகங்கள் தோழி கூறுவதாகவும் அமைந்துள்ளன. இவ்விருபத்தேழு பதிகங்களுள், 'கருமாணிக்கமலை' என்று தொடங்கும் இப் பதிகம் ஒன்று மட்டுமே மகிழ்ச்சியில் அருளிச்செய்யப்படும் பதிகம்; மற்றவை அனைத்தும் எம்பெருமானைப் பிரிந்த வருத்தத்தினால் அருளிச்செய்யப்பட்டவை என்பதனையே ஆழ்வான் சுட்டிக் காட்டுகின்றார்.*

1. ஒன்பதினாயிரப்படி வியாக்கியானத்திலும் இப்பொருளும் உரைக்கப்பட்டுள்ளது. ஆனால் அங்கு ஆண்டான் பெயர் குறிப்பிடப்படாமல், "என்றும் சொல்லுவர்" என்று மட்டும் குறிப்பிடப் பெற்றுள்ளது. இருபத்துநாலாயிரப்படி வியாக்கியானத்தில் இப்பொருளை ஆண்டான் அருளிச்செய்துள்ளமை குறிப்பிடப்பட்டுள்ளது.

2. ஆழ்வான் அருளிச்செய்தமை இருபத்து நாலாயிரப்படி உரையிலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

[757]

(புகழும் பொருபடையான செழுங்கதிராழி முதல் ஏந்தி) हेतिभिश्चेतनावद्भिः उदीरित जयस्वनम् **(ஹேதிபி$_4$ஶ்சேதநாவத்$_3$பி$_4$: உதீ$_3$ரித ஜயஸ்வநம்) என்கிறபடியே திவ்யாயுத$_4$ங்கள் அவனைப் புகழா நிற்கும் என்று ஆளவந்தார் நிர்வாஹம்.** शत्रोः प्रख्यातवीर्यस्य रञ्जनीयस्य विक्रमैः **(ஶத்ரோ: ப்ரக்$_2$யாதவீர்யஸ்ய ரஞ்ஜநீயஸ்ய விக்ரமை:) என்கிறபடியே 'கையும் ஆயுத$_4$ப் பொருத்தமும் இருந்தபடி என்!' என்று ஶத்ருக்கள் புகழும்படியைச் சொல்லுகிறது என்று எம்பெருமானார் அருளிச்செய்வர்.**

(திருவாய்மொழி 8-9-3 இருபத்து நாலாயிரப்படி வியாக்கியானம்)

நிகழிடம்

"செழுங்கதிராழி முதல் புகழும் பொருபடை ஏந்தி" என்று ஆழ்வார் அருளிச்செய்துள்ளார். இங்கு 'புகழும் பொரு படை' என்பதற்கு இரண்டு **நிர்வாஹ**ங்கள் எடுத்துக் காட்டப்பெறுகின்றன.

விளக்கம்

"ஹேதிபி: சேதநாவத்பி: உதீரித ஜயஸ்வநம்" (ஞானமுடைய (திருவாழி முதலிய ஆயுதங்களால் புகழப்பெற்ற வெற்றி ஒலியை உடையவனை) என்று ரகுவம்சத்தில் கூறப்பட்டுள்ளபடி, புகழும் பொருபடை என்பதற்கு ஆயுதங்களால் புகழப் படுகின்ற எம்பெருமான் என்று **ஆளவந்தார்** *பொருளுரைத்தார்.*[1]

"சத்ரோ: ப்ரக்யாத வீர்யஸ்ய ரஞ்ஜநீயஸ்ய விக்ரமை:" (எதிரிகளிடமும் பிரசித்தமான வீரத்தை உடையவனும் தன் பராக்ரமங்களால் எதிரிகளையும் மகிழச் செய்கின்றவன்) (ஸ்ரீராமாயணம் யுத்த காண்டம் 106-6) கூறியுள்ளபடி புகழும் பொருபடை ஏந்தி என்பதற்கு "கையும் ஆயுதங்கள் பொருந்தியிருக்கிற அழகும் என்னே!" என்று பகைவர்களும் கூடப் புகழும்படியாக ஆயுதங்களை ஏந்தி என்று **எம்பெருமானார்** *பொருளுரைத்தார்.*[2]

[758]

(புரவார் கழனிகள் சூழ்) பட்டர் "அவ்வூரில் ப்$_3$ராஹ்மணர்கள் இறுத்து மாய்கிறார்கள்; இவர் ஊருக்குச் சிறப்புச் சொல்லிப் போருகிறாரிறே" என்று அருளிச் செய்வர்.

(திருவாய்மொழி 8-9-9 ஈடு வியாக்கியானம்)

1. இப்பொருளும் ஈடு வியாக்கியானத்தில் குறிப்பிடப்பட்டிருந்தாலும், இப்பொருள் ஆளவந்தார் அருளிச்செய்தது என்பது குறிப்பிடப்படவில்லை.
2. எம்பெருமானார் இப்பொருள் அருளிச் செய்தமை மட்டும் ஈட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நிகழிடம்

குட்ட நாட்டுத் திருப்புலியூர் எனும் திருத்தலத்தை வர்ணிக்கின்ற ஆழ்வார் "விரைவார் இசை மறை வேதியர் ஒலி வேலையில் நின்று ஒலிப்ப, கரவார் தடம் தொறும் தாமரைக் கயம் தீவிகை நின்று அலரும் புரவார் கழனிகள் சூழ் திருப்புலியூர்" (எங்கும் பரந்துள்ள ஸ்வரத்தை உடைய வேதத்தின் ஒலியும், வேதத்தின் அர்த்தங்களை விசாரம் பண்ணும் வேதியர்களின் ஒலியும் கடலலைகளைக் காட்டிலும் முழங்க, முதலைகள் உள்ள தடாகங்களில் மலர்ந்த தாமரைகள் நிலைவிளக்குகள் போல் எரிய, செழுமை நிறைந்த கழனிகளால் சூழப்பட்ட திருப்புலியூர்) என்று அருளிச் செய்கின்றார். இதுகுறித்து பட்டர் அருளிச்செய்த சுவையான **வார்த்தை** ஒன்று எடுத்துக்காட்டப்பெறுகிறது.

விளக்கம்

"அவ்வூரில் உள்ள அந்தணர்கள், வேதகோஷமும் வேதவிசார கோஷமும் செய்து சிரமப் படுகிறார்கள்; ஆனால் ஆழ்வாரோ அதை ஊரின் செழுமையாகக்கூறி ஊரின் சிறப்பை வர்ணிக்கிறார்" என்று பட்டர் அருளிச்செய்தார். ('ப்ராஹ்மணர்கள் இறுத்து மாய்கிறார்கள்' என்பது பட்டர் திருவாக்கு. இறுத்து மாய்தலாவது கப்பம் கட்டி சிரமப்படுகை. வேதமோதுதலும் வேதவிசாரம் செய்தலும் கப்பம் கட்டி சிரமப்படுதல் போல் மிகவும் சிரமமான செயல்கள் என்பது பட்டர் கருத்துப் போலும்! அந்தணர்கள் வேதமோதியும் வேதவிசாரம் செய்தும் சிரமப்பட்டுக் கொண்டிருக்க, அதை ஆழ்வார் மிகவும் எளிதாக ஊரின் சிறப்பாகக் கூறிவிட்டார் என்று பட்டர் நயமாக உரைத்தார்.)

[759]

அம்முணியாழ்வான் போசளராஜ்யத்தினின்றும் வந்த நாளிலே பட்டர் கண்டருளி, "நீ ஸ்ரீவைஷ்ணவர்களுக்குப் போர அடிமை செய்து போந்தாய் என்று கேட்டோம். உன் ப்ரக்ருதிக்குச்சேர நெடுமாற்கடிமையைக் கேள்" என்று அருளிச்செய்தார்.

(திருவாய்மொழி 8-10 ஈடு வியாக்கியான ப்ரவேசம்)

நிகழிடம்

நம்மாழ்வார் அருளிச்செய்த 'நெடுமாற்கடிமை' என்று தொடங்கும் திருவாய்மொழி அடியவர்களுக்கு ஆட்பட்டிருத்தலின் சிறப்பைக் கூறுகின்றது. அத்தொடர்பில் ஓர் **ஐதிஹ்யம்** எடுத்துக் காட்டப் பெறுகின்றது.

விளக்கம்

அம்முணியாழ்வான் என்பவர் போசள ராஜ்யத்தில் (ஹொய்சல ராஜ்யம் அதாவது தற்பொழுதைய கர்நாடகம்?) வசித்து வந்தவராவார். அவர் அங்கு ஸ்ரீவைஷ்ணவர்களுக்குப் பல தொண்டுகள் புரிந்து வந்தார். ஒருமுறை அவர் திருவரங்கத்திற்கு வந்து பட்டரிடம் ஆச்ரயித்தார். அப்போது பட்டர், "நீர்

ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு நிறைய தொண்டுகள் செய்பவர் என்று கேள்விப் பட்டோம். உம்முடைய தன்மைக்குச் சேர, அடியவர்களுக்குத் தொண்டு செய்தலின் சிறப்பை விளக்கி ஆழ்வார் அருளிச்செய்துள்ள 'நெடுமாற்கடிமை' எனும் திருவாய்மொழியை உரைக்கின்றேன், கேளும்" என்று அருளிச்செய்தார்.

[760]

(சிறுமா மனிசராய்) "சிறுமை பெருமையாகிற விருத்$_3$த$_4$ த$_4$ர்மத்$_3$வயத்துக்கு ஏகத$_4$ர்மியில் ஸமாவேஶம் கூடும்படி எங்ஙனே?" என்று பட்டர் பா$_3$ல்யத்திலே ஆழ்வானைக் கேட்க, "நம்மோடொக்க அங்க₃பாநாதி$_3$கள் தா$_3$ரகம் என்னலாய், ப$_4$க$_3$வத்$_3$விஷயத்தில் அவகா$_4$ஹநம் பார்த்தால் நித்யஸூரிகளோடு ஒப்பர் என்னலா யிருக்கிற ஆண்டான், அருளாளப்பெருமாள், ஸ்ரீ கோவிந்தப் பெருமாள் இவர்கள் காண் சிறுமாமனிசர் ஆகிறார்" என்று பணித்தான்.

(திருவாய்மொழி 8-10-3 ஈடு வியாக்கியானம்)

நிகழ்டம்

எம்பெருமானுடைய அடியவர்களின் பெருமை கூறுகின்ற ஆழ்வார் "சிறு மா மனிசர்" என்று அருளிச்செய்துள்ளார். இதுபற்றி ஓர் **ஐதிஹ்யம்** *கூறப்பெறுகிறது.*

விளக்கம்

மிகவும் சிறிய வயதில் பட்டர், தமது திருத்தகப்பனாரான கூரத்தாழ்வானிடம், "சிறுமா மனிசர் என்றால் சிறுமையும் பெருமையும் உடையவர்கள் என்று பொருள் அல்லவா? சிறுமை பெருமை ஆகிய இரண்டும் ஒன்றோடொன்று முரண்பட்டவை அன்றோ? சிறுமை பெருமை இரண்டும் ஒருவரிடத்தில் ஒன்று சேர்ந்திருக்குமோ? எனவே ஆழ்வார் சிறுமை பெருமை இரண்டும் உடைய அடியவர்கள் என்று கூறியதன் பொருள் என்ன?" என்று வினவினார். அதற்குக் கூரத்தாழ்வான், "முதலியாண்டான், அருளாளப்பெருமாள் எம்பெருமானார், (ஸ்ரீகோவிந்தப்பெருமாள் என்கிற) எம்பார் முதலியவர்களும் நம்மைப்போல் உணவு, தண்ணீர் முதலியவைகளை உட்கொள்ளுவதால் நம்மைப்போல் சிறுமை உடையவர்கள் என்றே தோன்றும். ஆனால் அவர்களுக்கு எம்பெருமானிடம் உள்ள ஈடுபாட்டின் ஆழத்தை நோக்கினால் மிகப் பெருமை உடையவர்கள் என்பது தெரியும். எனவே வடிவில் சிறுத்து, ஞானத்தில் பெருத்த அவர்களைப் போன்றவர்களே சிறு மா மனிசர்" என்று விடை அளித்தார்.

[761]

(கொண்ட இத்யாதி) திருவனந்தபுரத்துக்குச் சாத்தாகப் போகாநிற்கச் செய்தே, திருக்கோட்டியூரிலே செல்வ நம்பி திருமாளிகையிலே போய்ப் புக்கார்களாய்,

நம்பிதாம் அஸங்கிஹிதராயிருக்க, நங்கையார் நூறு வித்துக் கோட்டை கிடக்க, அவற்றைக் குத்தி ஸ்ரீவைஷ்ணவர்களை அமுதுசெய்யப் பண்ணிவிட, பிற்றை நாள் நம்பி வந்து, "அவை செய்தது என்?" என்ன, "பரமபத₃த்திலே விளைவதாக வித்தினேன்" என்றாளாம்.

தொண்டனூர் நம்பி, எச்சான் என்று சில மஹாபுருஷர்கள் உண்டிறே, ப₄ாக₃வத ஶேஷத்வமே யாத்ரையாய்ப் போந்தவர்கள், அவர்கள்படியே ஆகப் பெறுவர்கள்.

(திருவாய்மொழி 8-10-11 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

'நெடுமாற்கடிமை' என்று தொடங்கும் திருவாய்மொழியில் அடியவர்களுக்கு ஆட்பட்டிருத்தலின் சிறப்பை அருளிச்செய்கின்ற நம்மாழ்வார், அப்பதிகத்தின் இறுதிப் பாசுரத்தில் அப்பதிகம் கற்பவர்களுக்குப் பயன் அருளிச்செய்யும்போது "நல்ல பதத்தால் மனை வாழ்வர் கொண்ட பெண்டிர் மக்களே" (அடியவர்களுக்கு ஆட்பட்டிருத்தலின் சிறப்போடு, மனமொத்த குடும்பத்தினராய் வாழ்வர்) என்று அருளிச்செய்துள்ளார். இதை விளக்குவதற்காக ஓர் **ஐதிஹ்யம்** *எடுத்துக் காட்டப்பெறுகிறது.*

விளக்கம்

திருக்கோட்டியூரில் வாழ்ந்து வந்த **செல்வ நம்பி** *ஸ்ரீவைஷ்ணவ அடியவர்களுக்குத் தொண்டு செய்வதில் மிகுந்த ஈடுபாடு உடையவர். ஒருமுறை ஸ்ரீவைஷ்ணவர்கள் பலர், திருவனந்தபுரத்திற்கு யாத்திரை செல்லும் வழியில் திருக்கோட்டியூரில் செல்வநம்பியின் திருமாளிகைக்கு வந்து சேர்ந்தனர். அப்போது செல்வ நம்பி வெளியூர் சென்றிருந்தார். அவருடைய மனைவியான* **நங்கையார்** *மட்டுமே ஊரில் இருந்தார். வந்திருந்த ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு உணவு படைக்க வேண்டிப் பார்த்தபோது, களஞ்சியத்தில் அரிசி இருக்கவில்லை. விதை நெல் மட்டும் நூறு கோட்டை இருந்தது. நங்கையார், அந்நூறுகோட்டை விதை நெல்லையும் குத்தி அரிசியாக்கி, ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு விருந்து படைத்து விட்டார். மறுநாள் ஊர் திரும்பிய செல்வ நம்பி, விதைப்பதற்காகச் சென்று பார்த்தபோது விதைநெல் சிறிதும் இல்லாததைக் கண்டு தம் மனைவியிடம் வந்து "விதை நெல் அனைத்தும் காணோமே? அவற்றை என்ன செய்தாய்?" என்று கேட்டார். அதற்கு நங்கையார் "அவை அனைத்தையும் நான் விதைத்து விட்டேன்" என்றாள். "எங்கே விதைத்தாய்?" என்று செல்வ நம்பி கேட்க, "பரமபதத்தில் விளையும்படி (அடியவர்களின் வயிற்றில்) விதைத்துவிட்டேன்" என்று பதில் கூறினாள். இதைக் கேட்டு செல்வநம்பி மிக மகிழ்ந்தார்.*

'நெடுமாற்கடிமை' திருவாய்மொழியைக் கற்பவர்கள், அடியவர்களுக்குத் தொண்டு செய்வதில் மனமொத்த தம்பதிகளாய்த் திகழ்ந்த செல்வநம்பியும்

நங்கையாரும் போல ஆவர் என்ற கருத்தில் இவ்வைதிஹ்யத்தை எடுத்துரைத்த உரையாசிரியர், தொடர்ந்து, ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு அடிமை செய்வதையே இயல்வாகக் கொண்டிருந்த பெரியோர்களான தொண்டனூர் நம்பி, எச்சான் என்பவர்களைப் போல ஆவர்கள் என்றும் கூறுகிறார்.

[762]

ஆப்பான் திருவழுந்தூர் அரையர் ஆஶ்ரயித்ததும் திருவாய்மொழி கேட்டதும் ஆழ்வானோடேயிறே. "'சயமே அடிமை தலைநின்றார்' என்றது ஸ்ரீப$_4$ரதாழ்வான் போல்வாரை; 'நீக்கமில்லா அடியார்' என்றது இளையபெருமாள் போல்வாரை; 'கோதில் அடியார்' என்றது ஸ்ரீஶத்ருக்$_4$நாழ்வான் போல்வாரைக் காணும்" என்று ஆழ்வான் பணித்தானாகப் பணிப்பர்.

(திருவாய்மொழி 9-1 ஈடு வியாக்கியன ப்ரவேசம்)

நிகழிடம்

அடியவர்களின் பெருமையைக் கூறும் 'நெடுமாற்கடிமை' என்று தொடங்கும் திருவாய்மொழியில் நம்மாழ்வார் பல சொற்றொடர்களால் அடியவர்களைக் குறிப்பிடுகிறார். அவர் அருளிச்செய்துள்ள சொற்றொடர் களுக்குத் ஏற்றவர்களான புராண புருஷர்களைப் பற்றிக் கூரத்தாழ்வான் கூறிய **வார்த்தை** எடுத்துக் காட்டப்பெறுகிறது.

விளக்கம்

ஆப்பான் திருவழுந்தூர் அரையர் சீடராக இருந்ததும், திருவாய்மொழியைக் கற்றதும் கூரத்தாழ்வானிடத்திலேயாகும். எனவே கூரத்தாழ்வான் கூறியவற்றை நன்கு அறிந்தவரான ஆப்பான் திருவழுந்தூர் அரையர் அடியவர்கள் பற்றி நம்மாழ்வார் அருளிய சொற்றொடர்களுக்கு **கூரத்தாழ்வான்** அருளிச்செய்த விளக்கங்களைக் கூறுகிறார். "சயமே அடிமை தலை நின்றார்" (8-10-2) என்பது, ஸ்வயமே அடிமையில் தலைநின்றவர், அதாவது ஸ்வயம்ப்ரயோஜனமாக (வேறு பயன்களைக் கருதாமல்) எம்பெருமானுடைய மகிழ்ச்சியையே கருத்தில் கொண்டு தொண்டு செய்வதன் மேலெல்லையில் நின்றவர்களைக் குறிப்பதாதலின் இராமபிரானுடைய திருவுள்ளத்தைப் பின்சென்று, அவனைப் பிரிந்திருக்கின்ற வருத்தத்தையும் பாராமல் அயோத்திக்குத் திரும்பி அரசாட்சியாகிற பாரத்தைச் சுமந்து அடிமைத்தனத்தின் எல்லையில் நின்ற பரதாழ்வான் போல்வாரைக் குறிக்கும்; "நீக்கமில்லா அடியார்" (8-10-10) என்பது, ஒருபோதும் எம்பெருமானைப் பிரியாது அடிமைசெய்பவர்களைக் குறிப்பதாதலின், இராமபிரானைவிட்டு ஒருபோதும் பிரியாமல் அடிமை செய்த இலக்குமணன் போல்வாரையும்; "கோதில் அடியார்" (8-10-9) என்பது குற்றமற்ற அடியவர்களைக் குறிப்பதாதலின், இராமபிரானைப் பற்றும் குற்றமும் இல்லாமல் அவனுடைய

அடியவனான பரதாழ்வானையே பற்றினவனான சத்ருக்னாழ்வான் போல்வாரையும் என்றும் கூரத்தாழ்வான் அருளிச்செய்தார்.[1]

[763]

(என்னே என்பாரும் இல்லை) "ஐயோ என்னக் கடவாருமில்லை" என்று சீயர் அருளிச்செய்வர். பிள்ளை திருநறையூர் அரையர், "அர்த்தி₂த்தவனுக்கு இட்டே த₃ரித்₃ரனாய், இவனுடைய ஸர்வஸ்வத்தையும் கொண்டு ஸம்ருத்₃த₄ர் ஆனவர்கள், 'ஏன்' என்ற மாத்ரத்திலே 'இவனுடைய ப₃ந்து₄' என்று ஜீவிக்கலா யிருக்குமாகில், அதிலும் லோபி₄களாய் ஓர் இன்சொல்லுச் சொல்லார்" என்பர்.

(திருவாய்மொழி 9-1-3 இருபத்துநாலாயிரப்படி வியக்கியானம்)

நிகழிடம்

உலகின் இயல்புகளை வெறுப்புடன் கூறுகின்ற நம்மாழ்வார் "பொருள் கை உண்டாய் செல்லக் காணில், போற்றி என்று ஏற்றெழுவர், இருள்கொள் துன்பத்தின்மை காணில் என்னே என்பாரும் இல்லை" (கையில் பொருள் இருக்கின்றபோது மற்றவர்கள் போற்றி என்று வாழ்த்தி ஏதேனும் பெற்றுக் கொண்டு போவர்கள்; அறிவின்மையையும் துன்பத்தையும் விளைக்கும் வறுமையைக் கண்டார்களாகில் 'ஏன்' என்பவர்களும் இலர்) என்று அருளிச்செய்கிறார். இங்கு 'என்னே என்பாரும் இல்லை' என்பதற்கு நஞ்சீயர், பிள்ளை திருநறையூர் அரையர் ஆகிய இருவரும் அருளிச்செய்துள்ள **நிர்வாஹங்கள்** *எடுத்துக்காட்டப்பெறுகின்றன.*

விளக்கம்

'என்னே என்பாரும் இல்லை' என்பதற்கு, "வறுமையில் வாடுபவனைக் குறித்து 'ஐயோ' என்று இரங்குபவர்களும் எவரும் இலர்" என்று **நஞ்சீயர்** *பொருளுரைத்தார்.*[2]

"தன்னிடம் வந்து யாசித்தவனுக்கெல்லாம் தானம் கொடுத்தே ஒருவன் வறியவனாகி விட, அவனிடம் தானம் வாங்கியே மற்றொருவன் செல்வந்தன் ஆகிவிட்டான்; இப்படிப்பட்ட செல்வந்தன் அந்த வறியவனைக் கண்டபோது, 'என்ன? எப்படி இருக்கிறாய்?' என்று விசாரித்த மாத்திரத்தில், மற்றவர்கள், 'அந்தச் செல்வந்தனுக்கு இவன் உறவினன் போலும்!' என்று நினைத்தால், அது கொண்டே இவனுக்கு ஒரு மதிப்பு ஏற்பட, இந்த வறியவன் தன் வாழ்க்கையை

1. இக்கருத்துகள் திருவாய்மொழி 8-10-10 பாசுரத்தின் ஈடு உரையிலும் குறிப்பிடப் பெற்றிருந்தாலும் அவை கூரத்தாழ்வானால் அருளிச்செய்யப்பட்டவை என்று அங்கு குறிப்பிடப் பெறவில்லை.

2. நஞ்சீயர் அருளிச்செய்த விளக்கம் ஈடு உரையிலும் குறிப்பிடப் பெற்றிருந்தாலும், அவ்விளக்கம் நஞ்சீயர் அருளிச்செய்தது என்று குறிப்பிடப்படவில்லை.

நடத்திக் கொள்ளலாம். ஆனால், அவனிடம் தானம் வாங்கியே செல்வந்தனானவனும் தனக்கு தானம் கொடுத்தவனை 'ஏன்' என்றும் கூறாத கல்நெஞ்சனாக இருந்து விடுகிறான் - என்பதைத்தான் ஆழ்வார் 'என்னே என்பாரும் இல்லை' என்று ஆழ்வார் அருளிச்செய்கிறார்" என்று **பிள்ளை திருநறையூர் அரையர்** விளக்கம் அளித்தார்[1]!

[764]

(மாயவன் இத்யாதி$_3$) "இந்த மாயவன் அடிபரவுகை சூதுசதுரங்க$_3$த்தோபாதி காலக்ஷேபமாக்குகிற புன்மை இல்லாதவர்கள்" என்று பட்டர்.

(திருவாய்மொழி 9-1-8 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

"மாயவன் அடிபரவிப் போழ்து போக உள்ளகிற்கும் புன்மை இலாதவர்க்கு" (எம்பெருமானுடைய திருவடிகளைத் துதித்து அதனாலேயே போதுபோக்கின்ற, புன்மை இல்லாதவர்களுக்கு) என்று நம்மாழ்வார் அருளிச் செய்துள்ளார். 'எம்பெருமானுடைய திருவடிகளைத் துதித்துப் போதைப் போக்குகின்றவர்களாய், புன்மை இல்லாதவர்களான (நன்மை உடையவர்களான) அடியவர்களுக்கு' என்று பொருள் உரைத்த உரையாசிரியர், **பட்டர்** *அருளிச்செய்த* **நிர்வாஹம்** *ஒன்றை எடுத்துக் காட்டுகிறார்.*

விளக்கம்

மாயவன் அடிபரவுதலையும் போதுபோக்கிற்காகச் செய்வது புன்மையே ஆகும் என்ற கருத்தில், "சூதாடுதல், சதுரங்கம் விளையாடுதல் முதலியன செய்பவர்கள் அவற்றைச் செய்வது அச்செய்கைகளினால் போதுபோகிறது என்கிற காரணத்தினால்தானே தவிர, அவை மகிழ்ச்சி அளிக்கின்றது என்பதால் அல்ல! அதேபோன்று எம்பெருமானைத் துதிப்பதையும் போதைப் போக்குவதற்காகச் செய்வதும் புன்மையே ஆகும். அப்படி எம்பெருமானைத் துதிக்கும் செயல்களையும் போதுபோக்கிற்காகச் செய்யும் புன்மை இல்லாதவர்களுக்கு என்று **பட்டர்** *பொருளுரைத்தார்.*

[765]

(நின் கோயில் சீய்த்து) திருக்கண்ணமங்கையாண்டான் அங்கே ஒரு திருமகிழடியிலே இருந்து சருகைத் திருவலகிடா நிற்க, கூட வாசித்து நாஸ்திகனாயிருப்பான் ஒருவன், "ப$_4$க$_3$வான் உபாயம்; நாம் அநந்யப்ரயோஜநர்; இப்போது இந்த க்லேசத்துக்குப் ப$_2$லமென்?" என்ன, திருவலகிட்ட இடத்தையும்

1. பிள்ளை திருநறையூர் அரையர் இவ்விளக்கம் அருளிச்செய்தமை ஈடு உரையில் குறிப்பிடப் பெற்றுள்ளது.

இடாதவிடத்தையும் காட்டி, "இவ்விடமும் அவ்விடமும் இருந்தபடி கண்டாய்க்கு ஒரு பலமுமில்லை என்று தோற்றியிருந்ததோ?" என்றான்.

(திருவாய்மொழி 9-2-1 ஈடு வியாக்கியானம்)

நிகழ்டம்

"நின் கோயில் சீய்த்துப் பல்படிகால் குடிகுடி வழி வந்தாட் செய்யும் தொண்டரோம்" (உனது திருக்கோயிலைத் திருவலகிடுதல் முதலிய தொண்டுகளைச் செய்து தொன்று தொட்டு பரம்பரையாக வந்து அடிமை செய்கின்ற அடியவர்களாகிய நாங்கள்) என்று ஆழ்வார் அருளிச் செய்துள்ளார். 'ஒரு துரும்பு கூட நறுக்குவதில்லை என்றிருக்கிறவர்களும்கூட ஒரு திவ்ய தேசத்தில் வசிக்க வேண்டும்; இவ்வுடலிலிருந்து விடுபட்டுப் பரமபதம் சென்று சேர்ந்த பிறகு செய்ய வேண்டும் என்று ஆசைப்படுகின்ற கைங்கர்யத்தை இவ்வுடலோடு இருக்கும்போதே திவ்யதேசங்களில் செய்யும் பேறு கிட்டினால் அதை ஒருவன் விடுவானோ? நம்மாழ்வாரும் 'வயலணி அனந்தபுரம் கடைத்தலை சீய்க்கப் பெற்றால் கடுவினை களையலாமே' என்று அருளிச்செய்துள்ளார் அன்றோ!' என்று விளக்கம் அளித்த உரையாசிரியர், திருக்கண்ணமங்கை ஆண்டான் என்பவரைப் பற்றிய **ஐதிஹ்யம்** ஒன்றை இத்தொடர்பில் கூறுகிறார்.

விளக்கம்

திருக்கண்ணமங்கை ஆண்டான் என்பவர் எம்பெருமானையே உபாயமாகக் கொண்டு, தம்முடைய செயல்கள் அனைத்தையும் விட்டவராவார். (இதன் விளக்கத்தை எண்167ல் காண்க.) அவர் திருக்கண்ண மங்கைத் திருத்தலத்திலுள்ள பத்தராவிப் பெருமாள் திருக்கோயிலில் ஒரு மகிழ மரத்தடியில் காய்ந்து உதிர்ந்திருந்த சருகுகளைப் பெருக்கித் தள்ளிக் கொண்டிருந்தார். அவருடன் கூடப் படித்தவனும், நாஸ்திகனுமான ஒருவன் அவரைப் பார்த்து, "நீர் எம்பெருமானையே உபாயமாகக் கொண்டு, உம்முடைய செயல்கள் எல்லாவற்றையும் விட்டவர் அன்றோ! அப்படியிருக்கும்போது, இப்போது நீர் செய்கின்ற இந்தச் செயலுக்கு (பெருக்குவதற்குப்) பயன் என்ன?" என்று கேட்டான். அதற்கு ஆண்டான், பெருக்கின இடத்தையும், பெருக்காத இடத்தையும் காட்டி "பெருக்கின இடத்திற்கும் பெருக்காத இடத்திற்கும் உள்ள வேறுபாட்டைக் காண்கின்ற உனக்கு ஒரு பலமும் இல்லை என்று தோன்றுகிறதோ? (பெருக்கின இடம் சுத்தமாவது ஒரு பலம் அன்றோ? இப்படித் திருக்கோயிலைச் சுத்தம் செய்வது ஒரு கைங்கர்யம் அன்றோ?) என்று பதில் கூறினார். வேறு உபாயங்கள் எதையும் பற்றாமல் எம்பெருமானையே உபாயமாகக் கொள்பவர்கள் செய்யும் செயல்கள் எல்லாம் கைங்கர்யங்களாக (தொண்டாகவே) ஆகும் என்பது ஆண்டான் கருத்து ஆகும். எனவே சாதனமாக எதையும் செய்யக் கூடாதே தவிர, கைங்கர்யமாக எதையும் செய்யலாம் என்ற கருத்து கூறப்படுகிறது.

[766]

(உன் தாமரைக் கண்களால் நோக்காய்) பிள்ளை தேவப்பெருமாள் அரையர் 'உன் தாமரைக் கண்களால் நோக்காய், நோக்காய் என்று பலகாலும் சொல்ல, ஆழ்வார் எழுந்திருந்து, "பிள்ளாய்! நீ இங்ஙனே திருவுள்ளம் புண்படும்படி பலகாலும் நிர்ப்$_8$ப$_4$ந்தி$_4$க்கிறதென்? அழகிய மிடற்றைத் தந்தாராகில், நல்ல பாட்டைத் தந்தாராகில், பிள்ளைகளையும் ஐஶ்வர்யத்தையும் தந்தாராகில், என் செய்யாதாராக நீ இங்ஙனே கிடந்து படுகிறது?" என்றருளிச் செய்தாராம்.

(திருவாய்மொழி 9-2-1 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

"தொண்டரோர்க்கு அருளிச் சோதிவாய் திறந்து உன் தாமரைக் கண்களால் நோக்காய்" (உன் அடியவர்களாகிய எங்களுக்கு உனது திருவாயைத் திறந்து பேசி, உனது தாமரைக் கண்களால் கடாட்சித்து அருள வேண்டும்) என்று எம்பெருமானை நம்மாழ்வார் வேண்டுகிறார். இத்தொடர்பில் **ஐதிஹ்யம்** *ஒன்று கூறப்பெறுகிறது.*

விளக்கம்

திருவரங்கத்தில் ஒரு அத்யயன உற்சவத்தில் பெருமாள் திருமுன்பே இப்பாசுரத்தைவிண்ணப்பித்தபோது, **பிள்ளை தேவப்பெருமாள் அரையர்** *என்பவர் எம்பெருமானை நோக்கி, "உன் தாமரைக் கண்களால் நோக்காய், நோக்காய்......" என்று மறுபடியும் மறுபடியும் இதையே சேவித்துக் கொண்டு மேலே பாடாமல் நின்றார். எம்பெருமானிடத்தில் ஏதோ எதிர்பார்ப்பவர் போல அவ்வரையர் 'நோக்காய், நோக்காய், நோக்காய்" என்று சேவித்துக்கொண்டிருப்பதைக் கேட்ட (அவருடைய திருத்தகப்பனாரான)* **ஆழ்வார் திருவரங்கப் பெருமாள் அரையர்,** *"பிள்ளாய்! எதற்காக நீ எம்பெருமான் திருவுள்ளம் புண்படும்படியாகப் பலமுறை 'நோக்காய் நோக்காய்' என்று அவனை வற்புறுத்துகிறாய்? அவன் உனக்கு என்ன குறை வைத்திருக்கிறான்? உனக்கு அழகிய குரலைத் தந்து, அருளிச்செயலிலும் உன்னை வல்லவனாக்கி, உனக்கு பிள்ளைகளையும் கைங்கர்யச்செல்வத்தையும் தந்து, இவ்வளவும் செய்திருக்கிற போது, அவன் உனக்கு என்ன செய்யவில்லை என்று நினைத்து நீ இப்படிப் படுகிறாய்?" என்று அருளிச்செய்தாராம்.*

[767]

(புளிங்குடி இத்யாதி) பட்டர் திருநாராயணபுரத்தில் வெறுப்பிலே "தேவர் ஸ்வாதந்த்ர்யம் எல்லாம் காட்டினாலும் பின்னையும் பண்ணின விஶ்வாஸத்தில் குலைதல் இன்றிக்கே இருக்கும்படி எலும்பு உரமுடைய எம்பெருமானார் போல்வார்

பக்கல் செய்யுமத்தை எலி எலும்பனான அடியேன் பக்கலிலும் செய்வதோ? 'மஹாவிஸ்வாஸபூர்வகம்' என்கிறபடியே, ஏதேனும் ஒன்று வந்தாலும் 'இங்குத்தைக்கு ஒன்று வருவதாய் வந்தது அன்று; இதுக்கு அடி நம்முடைய பாபம்' என்று, பண்ணின விஸ்வாஸம் குலையாதார் விஷயத்திலே செய்யுமத்தை, இதுதானே ஹேதுவாக நெஞ்சு நெகிழும்படி இளநெஞ்சர் பக்கலிலும் அத்தைச் செய்யக் கடவதோ?" என்றாராம்.

(திருவாய்மொழி 9-2-4 ஈடு வியக்கியானம்)

நிகழிடம்

"தெளிந்த என் சிந்தை அகம் கழியாதே என்னை ஆள்வாய்" (தெளிந்திருக்கின்ற என்னுடைய நெஞ்சில் பிரியாதிருந்து என்னை ஆள்பவனே!) என்று நம்மாழ்வார் அருளிச்செய்துள்ளார். இங்கு 'தெளிந்த என் சிந்தை' என்பதற்கு, 'எத்தனை கலக்கங்கள் வந்தாலும் கலங்காத நெஞ்சு' என்று பொருளுரைத்த உரையாசிரியர், இத்தொடர்பில் ஓர் **ஐதிஹ்யம்** *காட்டுகிறார்.*

விளக்கம்

பிள்ளைதிருநறையூர் அரையர் *என்பவர் பட்டரைக் காட்டிலும் வயதில் மிகவும் மூத்தவர்; பட்டரின் மதிப்பிற்கும் அன்புக்கும் உரியவர்; அவர் தொட்டியம் திருநாராயணபுரம் என்ற திருத்தலத்தில் எம்பெருமானுடைய திருமேனியைக் காப்பதற்காகத் தம்முடைய குடும்பத்துடன் உயிர்த்தியாகம் செய்துவிட்டார். (இதன் விளக்கத்தை எண் 153ல் பார்க்க.) இச்செய்தியை அறிந்து மிகவும் வருத்தமடைந்த* **பட்டர்**, *"எம்பெருமானே! உன்னுடைய சுதந்திரத் தன்மைகளை யெல்லாம் காட்டினாலும், உன்னிடத்தில் கொண்டுள்ள நம்பிக்கையில் சிறிதும் நழுவாத மன வலிமை உடைய* **எம்பெருமானார்** *போல்வாரிடத்தில் செய்பவற்றை, சிறிதும் மனவலிமை அற்றவனான அடியேனிடத்திலும் செய்யலாமோ? (சோழ அரச சபையில் தம்முடைய சீடரான கூரத்தாழ்வான் கண்களையும், தம்முடைய ஆசார்யரான பெரிய நம்பிகள் உயிரையும் இழந்தமையை எம்பெருமானார் கேட்டுத் தாங்கிக் கொள்ள வேண்டியிருந்ததைக் கருத்தில் கொண்டு பட்டர் இங்ஙன் அருளிச்செய்தார் எனலாம்.) எம்பெருமானைப் பற்றும்போது 'மஹாவிச்வாஸபூர்வகமாக' (அவனே நம்மைக் காப்பான் என்ற மிக்கநம்பிக்கை முன்னாக)ப் பற்ற வேண்டும் என்று கூறப்பட்டுள்ளபடியால், ஏதேனும் துன்பங்கள் நேர்ந்தாலும் 'இது நம்மைத் துன்புறுத்துவதற்காக எம்பெருமான் தந்த துன்பங்கள் அல்ல; நாம் செய்துள்ள பாவங்களே இப்படி நம்மைத் துன்பத்திற்கு உள்ளாக்குகின்றன' என்ற எண்ணத்துடன், எம்பெருமான்மீது கொண்டுள்ள நம்பிக்கையில் சிறிதும் குறையாமல் இருப்பவர்கள் திறத்தில் செய்ய வேண்டியவற்றை, இதுதானே காரணமாக நெஞ்சு சிதைந்துபோகும்படி இருக்கும் மனவலிமையற்ற அடியேன்*

போல்வாரிடத்தும் இப்படிச் செய்யலாமோ? (அரையருக்கு ஏற்பட்ட இவ்வாபத்தைத் தடுக்காததன் மூலம் நீயே காப்பவன் என்ற நம்பிக்கையைக் குலையும்படி செய்யலாமோ?)" என்றாராம்.

[768]

(நீ காணவாராயே) பிள்ளை அழகிய மணவாள அரையரைப் பெருமாள் ஒருநாள் அருளப்பாடிட்டு, "நாம் இங்ஙனே நடக்கிறோம்; நீ அதுக்கு ஈடாக ஆடிக் காண்" என்ன, "தம்பிரானே! என்னால் அந்த நடைக்கு ஈடாக ஆடப் போமோ? 'கானகம்படி உலாவி உலாவி' இத்யாதி. தேவருடைய குழலோசையைக் கேட்டவாறே பாடல் தவிர்ந்தார்கள்; தேவருடைய ஸ்வாப$_4$விகமான நடைக்கு தங்களுடைய ஶிக்ஷாப$_3$லத்தால் உண்டான ஆடல் தவிர்ந்தார்கள்; குரக்குக் கைகொடு கூழ் துழாவி அடியேன் தேவர் திருமுன்னே ஆட வல்லேனோ!" என்றாராம்.

(திருவாய்மொழி 9-2-4 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

"நீ காண வாராயே" என்றருளிச்செய்கிறார் நம்மாழ்வார். திருப்புளிங்குடி எம்பெருமானுடைய நடையழகைக் காண நம்மாழ்வார் ஆசைப்படுவதாக விளக்கிய உரையாசிரியர், இத்தொடர்பில் **ஐதிஹ்யம்** *ஒன்றைக் கூறுகிறார்.*

விளக்கம்

ஒருநாள் திருவரங்கத்து எம்பெருமானான நம்பெருமாள், ஆடற்கலையில் மிகவும் வல்லவரான **பிள்ளை அழகிய மணவாள அரையரை** *அருளப்பாடிட்டு அழைத்து, "நான் இங்ஙன் நடையழகு காட்டுகிறேன்; என்னுடைய நடையழகுக்கு ஈடாக உம்மால் ஆடமுடியுமோ?" என்று கேட்டான். அதற்கு அரையர், "தம்பிரானே! உன்னுடைய நடைக்கு ஈடாக என்னால் ஆடமுடியுமோ? 'கானகம்படி உலாவி உலாவிக் கரும் சிறுக்கன் குழல் ஊதினபோது மேனகையொடு திலோத்தமை அரம்பை உருப்பசி அரவர் வெள்கி மயங்கி வானகம்படியில் வாய் திறப்பின்றி ஆடல் பாடல் அவை மாறினர் தாமே' என்று பெரியாழ்வார் (3-6-4) அருளிச்செய்துள்ளார் அன்றோ! உன்னுடைய குழல் ஓசையைக் கேட்டவாறே (மேனகை, திலோத்தமை, ரம்பை, ஊர்வசி முதலிய அப்ஸரஸ்ஸுக்கள்) பாடல் தவிர்ந்தார்கள்; உன்னுடைய இயல்பான நடையைக் கண்டவாறே, பல நாள் பயிற்சி செய்து கற்றிருந்த ஆடலையும் தவிர்ந்தார்கள் (என்று அவர் அருளிச்செய்துள்ளார் அன்றோ!) கையை அசைக்கமுடியாதபடி குரக்குவாதம் வந்தவர்கள் பாத்திரத்தில் உள்ள கூழைத் துழாவி எடுத்து உண்பதுபோலவன்றோ அடியேனுடைய ஆடல் இருப்பது! தேவரீருடைய இயல்வான நடைக்கு முன்னே அடியேன் ஆட வல்லேனோ!" என்றாராம்.*

[769]

(தமது சொல் வலத்தால்) வங்கிப்புரத்து நம்பி 'விஜயஸ்வ' என்ன, ஆண்டான் சொன்ன வார்த்தையை நினைப்பது.

(திருவாய்மொழி 9-2-8 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

"தங்கள் அன்பாரத் தமது சொல்வலத்தால் தலைத் தலைச் சிறந்து பூசிப்ப" (அவரவர்கள் தங்கள் தங்கள் அன்புக்குச் சேர, தாங்கள் சொல்லக் கூடிய சொற்களைக் கூறித் தோத்திரம் செய்ய) என்று நம்மாழ்வார் அருளிச் செய்துள்ளார். இத்தொடர்பில் ஓர் **ஐதிஹ்யம்** *கூறப்படுகிறது.*

விளக்கம்

கண்ணபிரானுடைய அவதார தினமான ஸ்ரீஜயந்தியன்று புறப்பாடு கண்டருளும் எம்பெருமானைச் சேவிக்கச் சென்ற **வங்கிப்புரத்து நம்பி,** *ஸ்ரீவைஷ்ணவர் திரளில் நின்று சேவிக்காமல் இடைச்சிகள்கள் திரளில் நின்று சேவித்தார். அவர் சேவித்துவிட்டு வந்ததும்* **முதலியாண்டான்,** *"ஸ்ரீவைஷ்ணவர்களோடு நின்று சேவிக்காமல், இடைச்சிகள் நடுவில் நின்று பெருமாளை சேவித்ததற்குக் காரணம் என்ன?" என்று வங்கிப் புரத்து நம்பியைக் கேட்டார். அதற்கு நம்பி, "ஸ்ரீவைஷ்ணவர்களாகிய நாம் நம்மை ஞானிகளாக நினைத்துக் கொண்டிருப்போம். ஆனால் அறிவொன்றும் இல்லாத ஆய்ச்சிகளாகையால் அவர்களிடம் எம்பெருமானுடைய அருளானது பள்ளத்தில் பாயும் நீர்போல் தடையின்றிப் பாயும். எனவேதான் நானும் அவர்களோடு நின்று சேவித்தேன்" என்றார். "அவர்களோடு சேர்ந்து நின்றபோது அவர்கள் பெருமாளை எப்படித் தோத்திரம் செய்தார்கள்? நீர் எப்படித் தோத்திரம் செய்தீர்?" என்று ஆண்டான் கேட்டார். அதற்கு நம்பி, "அவர்கள் 'பால் உண்பீர்; பழம் உண்பீர்; பொன்னாலே பூணூல் இடுவீர்; அழுந்த இரட்டை உடுப்பீர்; நூறு பிராயம் புகுவீர்' என்றார்கள். நான் வழக்கம் போல் 'விஜயஸ்வ, விஜயீபவ' என்று கூறினேன்" என்றார். இதைக் கேட்ட ஆண்டான், "அவ்விடைச்சிகள் அழகிய மென்மையான தமிழில் எம்பெருமானைத் துதித்திருக்க, அங்கு போயும் நீர் முரட்டு ஸம்ஸ்க்ருதத்தை விடவில்லையே! எங்கிருந்தாலும் நாம் நாம்தான்; அவர்கள் அவர்கள்தான், இங்கே எழுந்தருள்வீர்" என்று அருளிச் செய்தார்.[1]*

[770]

(இதனுளும் இருந்திடாய்) "நமக்கு இவையெல்லாம் இங்கே காணலாமிறே! சாய்ந்தருளின அழகு பெரியபெருமாள் பக்கலிலே காணலாம்; நின்றருளின அழகு

1. ஆண்டானுக்கும் வங்கிப்புரத்து நம்பிக்கும் இடையே இவ்வாறு உரையாடல் நடைபெற்றதாக இப்பாசுரத்தின் ஈட்டு அரும்பத உரையில் குறிப்பிடப்பெற்றுள்ளது.

நம்பெருமாள் பக்கலிலே காணலாம்; இருப்பில் உண்டான அழகு பெரியபிராட்டியார் பக்கலிலே காணலாம்" என்று பட்டர் அருளிச் செய்வர்.

(திருவாய்மொழி 9-2-9 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

திருப்புளிங்குடியில் எம்பெருமான் சயனித்திருக்கும் அழகை அனுபவித்த ஆழ்வார், அவன் வீற்றிருக்கும் அழகையும் காண ஆசைப்படுகிறார். இத்தொடர்பில் பட்டர் அருளிச்செய்த **வார்த்தை** *ஒன்று கூறப்பெறுகிறது.*

விளக்கம்

"எல்லா நிலைகளிலும் எம்பெருமானுடைய அழகை நாம் திருவரங்கத்திலேயே காணலாம். அவன் சயனித்திருப்பதால் உண்டான அழகைப் பெரிய பெருமாளிடம் (மூலவரிடம்) காணலாம்; நின்ற நிலையிலிருப்பதால் உண்டான அழகை நம்பெருமாளிடம் (உத்ஸவரிடம்) காணலாம். வீற்றிருப்பதால் உண்டான அழகைப் பெரிய பிராட்டியாரிடம் (ஸ்ரீரங்கநாச்சியாரிடம்) காணலாம்" என்று அருளிச் செய்வராம்.[1]

[771]

ப்ரணவார்த்தமும், நமஸ்ஸப்தார்த்தமும், வ்யாபகத்வமும், அவ்யாபகத்வமும் அல்லாத வ்யாபக மந்த்ரங்களிலும் உண்டு; அதில் தாம் ஆதரித்தருளிற்றுத் திருவஷ்டாக்ஷரம் என்னுமிடத்தை ஓராயிரத்தாலே அருளிச் செய்கிறார். இது நடுவில் திருவீதிப்பிள்ளை அருளிச் செய்யும்படி.

(திருவாய்மொழி 9-3 ஈடு ப்ரவேசம்)

நிகழிடம்

"ஓராயிரமாய் உலகேழ் அளிக்கும் பேராயிரம் கொண்டதோர் பீடு உடையன் நாராயணன்" என்று எம்பெருமானைப் போற்றுகின்றார் ஆழ்வார். இப்பதிகத்தில் திருமந்திரத்தின் பொருளை ஆழ்வார் அருளிச் செய்வதாக விளக்குகின்ற உரையாசிரியர், நடுவில்திருவீதிப்பிள்ளை பட்டர் அருளிச்செய்த **வார்த்தை** *ஒன்றைக் கூறுகிறார்.*

விளக்கம்

"பிரணவத்தின் பொருளும், நம: என்ற சொல்லின் பொருளும், எங்கும் பரந்திருத்தலும், பரந்திராமையும் வாசுதேவன், விஷ்ணு என்னும் மற்ற வியாபக மந்திரங்களிலும் உண்டு. அதில் ஆழ்வார் மிகவும் ஆதரித்தருளியது 'ஓம் நமோ நாராயணாய' எனும் திருவெட்டெழுத்து என்பதனை 'ஓராயிரமாய்' என்று

1. எண் 187 பார்க்க.

தொடங்கும் இத்திருவாய்மொழியில் அருளிச் செய்கிறார்" என்று நடுவில் **திருவீதிப் பிள்ளை (பட்டர்)** அருளிச் செய்வர்.

[772]

(ஆயிரம் கொண்டதோர் பீடு உடையன்) கோயிலாத்தான் புத்ரவியோக₃த்திலே ப₄ட்டர் ஸ்ரீபாத₃த்திலே வந்து தன் ஸோகமெல்லாம் தோற்ற விழுந்து கிடக்க, அவர் அருளிச் செய்த வார்த்தையை நினைப்பது.

(திருவாய்மொழி 9-3-1 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

"பேராயிரம் கொண்டதோர் பீடு உடையன்" என்று நம்மாழ்வார் அருளிச் செய்துள்ளார். உலகனைத்தையும் பாதுகாக்கும் எம்பெருமானுக்கு, அதற்குத் தகுதியாக ஆயிரம் திருப்பெயர்கள் உண்டாயிருக்கும் என்று விளக்கிய உரையாசிரியர், இத்தொடர்பில் ஓர் **ஐதிஹ்யம்** கூறுகிறார்.

விளக்கம்

பட்டருடைய சீடரான கோயிலாத்தான் என்பவர் தம்முடைய மகனுக்குத் தம் ஆசார்யரான பட்டரின் திருநாமத்தையே இட்டிருந்தார். அம்மகன் சிறுவயதிலேயே இறந்துவிட, மிகுந்த துக்கத்தோடு பட்டரிடம் வந்து அவர் திருவடிகளில் தலை சாய்த்துக் கிடந்தார். அப்போது பட்டர், "பிள்ளை இறந்து விட்டான் என்றன்றோ நீ துக்கப்படுகிறாய்! அதற்கு நீ துக்கப் படவேண்டாம்; அப்பெயர் உடைய நாம் இருந்தோமே!" என்று கூறி, தம்மைப் போல ஒரு விக்ரகத்தை ஏறியருளப் பண்ணி, அவருக்குக் கொடுத்தருளினார்!

[773]

(இரந்து கனமே சொல்லினே) இரந்து சொல்லுகைக்கு மணக்கால் நம்பியோடு ஒப்பர்.

(திருவர்ய்மொழி 9-3-5 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

"மனமே உன்னை இரந்து கனமே சொல்லினேன்" (மனமே உன்னை இரந்து கேட்டுக் கொள்கிறேன்; எம்பெருமானை அடையும் ஆசையை நழுவ விடாதே) என்கிறார் நம்மாழ்வார். இங்கு இரந்து சொன்னேன் என்று ஆழ்வார் அருளிச்செய்துள்ளதை விளக்கும் உரையாசிரியர், இரந்து கூறுவதற்கு மணக்கால் நம்பியை **உதாரணம்** காட்டுகிறார்.

1. இச்செய்திகள் இப்பாசுரத்தின் அரும்பதவுரையில் கூறப்பெற்றுள்ளன.

விளக்கம்

ஆளவந்தாருக்கு ஆசார்யரான மணக்கால் நம்பி, ஆளவந்தார் இருக்குமிடம் தேடிச் சென்று அவரை இரந்து கேட்டுக் கொண்டு, அவருக்கு உபதேசங்கள் செய்தாற்போல் ஆழ்வாரும் தம்முடைய நெஞ்சை இரந்து கேட்டுக் கொண்டு எம்பெருமானை விடாதிருக்குமாறு கூறுகிறார் என்பது கருத்து.

[774]

(புனம் இத்யாதி) ஒரு திருமுளைத் திருநாளினன்றாக இப்பாட்டை அருளிச் செய்து, முன்னாள் கையார் சக்கரத்துக்குப் புறப்பட்டருளினபடி திருவுள்ளத்திலே கிடந்து, "புனமேவிய பூந்தண்டுழாய் அலங்கல் இனம் ஏதுமிலான் ஆகையாவது, நேற்றுப் புறப்பட்டருளினபடியிறே" என்று அருளிச் செய்தார்.

(திருவாய்மொழி 9-3-5 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

"புனம் மேவிய பூந்தண் துழாய் அலங்கல் இனம் ஏதும் இலான்" (புனத்தில் பொருந்திய அழகிய குளிர்ந்த திருத்துழாய் மாலை அணிந்தவனாய், ஒப்பில்லாதவனானவன்) என்று எம்பெருமானை ஆழ்வார் வருணிக்கின்றார். அழகிய திருத்துழாய் மாலை அணிந்த அழகுடன் எழுந்தருளியிருப்பவன் ஆதலால் அவ்வழகுக்கு ஒப்பில்லாதவன் எம்பெருமான் என்று இதற்கு விளக்கம் அளித்த உரையாசிரியர், இத்தொடர்பில் **ஐதிஹ்யம்** *ஒன்றை எடுத்துக் கூறுகிறார்.*

விளக்கம்

ஒரு திருமுளைத் திருநாளில் (பிரம்மோத்ஸவத்திற்கு முதல் நாள் நடைபெறும் அங்குரார்ப்பண உத்ஸவத்தன்று) **நஞ்சீயர்,** *முன்பு ஒருநாள் கையார் சக்கரத்தன்று நம்பெருமாள் அழகிய திருத்துழாய் மாலையை அணிந்து கொண்டு புறப்பாடு கண்டருளினபடியை நெஞ்சிலே நினைத்துக் கொண்டார். "புனமேவிய பூந்தண்டுழாய் அலங்கல் இனமேதுமிலான் ஆகையாவது (அழகிய திருத்துழாய் மாலை அணிந்து கொண்டு ஒப்பில்லாதவனாக ஆகையாவது) அன்றைய தினம் கையார் சக்கரத்திற்குப் புறப்பாடு கண்டருளியபோது எழுந்தருளியிருந்த நிலையன்றோ!" என்று அருளிச் செய்தார்.*

[775]

இப்படி ஸௌலபனான உன் திருவடிகளிலே கிட்டப் பெற்றாலும் ஆஶ்ரயணத்தில் ஆபிமுக்யத்தில் ஸந்துஷ்டனாம் உன் ஶீலவத்தையை அநுஸந்தித்து ஒரு ப்ரவ்ருத்தி பண்ண க்ஷமனாகிறிலேன் என்கிறார். அன்றிக்கே இங்ஙனே ஒரு மூன்று பாட்டு தம்முடைய அயோக்யதையைச் சொல்லுகிறார்

என்பாரும் உண்டு. இவை எல்லாம் அல்ல; அவன் ஸந்நிதி₄யில் க்ரமத்தில் பரிமாற வொண்ணாதபடி அழிக்கும் அவனுடைய ஶீலகு₄ணத்தைச் சொல்லுகிறது என்று நம்முடையவர்கள் நிர்வஹிக்கும்படி.

(திருவாய்மொழி 9-3-9 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

"மாமலர் நீர் சுடர் தூபம் கொண்டு தொழுது எழுதும் என்னும் இது மிகை ஆதலின் தழுவுமாறு அறியேன் உன தாள்களே" (சிறந்த பூக்கள், தண்ணீர், தீபம், தூபம் இவை கொண்டு அடிமை செய்து உய்வோம் என்னும் இதுவும் உனது திருவுள்ளத்திற்கு மிகை ஆதலின் உன் திருவடிகளில் அடிமை செய்யும் வழி அறியேன்) என்று ஆழ்வார் அருளிச் செய்துள்ளார். இதற்கு **நிர்வாஹங்கள்** *கூறப்படுகின்றன.*

விளக்கம்

"உன்னை அடைய வேண்டும் என்று நான் நினைத்த மாத்திரத்திலேயே மிகவும் மகிழ்ச்சி அடைகிற உன்னுடைய சீல குணத்தை நினைத்தவாறே அதிலே மயங்கி ஒரு செயலும் செய்ய முடியாதவனாக இருக்கின்றேன்" என்று ஆழ்வார் அருளிச் செய்கிறார் என்பது ஒரு விளக்கம்.

"இப்பாசுரம் தொடங்கி ஒரு மூன்று பாசுரங்களால் எம்பெருமானுக்குத் தொண்டு செய்வதற்குத் தகுதியில்லாத தம்முடைய தாழ்வைக் கூறுகிறார் (நைச்யாநுஸந்தானம்) என்று கூறுபவர்களும் உண்டு. ஆனால், 'கண்கள் சிவந்து' என்று தொடங்கும் (8-8) திருவாய்மொழியில் எம்பெருமான் ஆழ்வாருக்கு ஜீவாத்மாவின் உயர்வைக் காட்டிக் கொடுத்த பிறகு தம்முடைய தாழ்வை ஆழ்வார் கூறுவதில்லை ஆதலால் இது பொருந்தாது.

'நம்மிடத்திலிருந்து ஒன்றை விரும்பிப் பெறுதலும் மிகையாம்படி இருக்கின்ற எம்பெருமானுடைய உபாயமாகும் தன்மையினை ஆழ்வார் அருளிச் செய்கிறார்' என்று கூறுபவர்களும் உண்டு. இவை ஒன்றும் அல்ல.

"அவன் திருமுன்பே முறையாக அடிமை செய்யமுடியாதபடி அழிக்கின்ற அவன் சீல குணத்தைச் சொல்லுகிறார்" என்று **நம் ஆசார்யர்கள்** *விளக்குவார்கள்!*

[776]

(நண்ணாதொழியேன்) "அவனைக் கிட்டாதொழியில் நான் த₄ரியேன்"-இது ஆத்தான் நிர்வாஹம்.

(திருவாய்மொழி 9-4-2 ஈடு வியாக்கியானம்)

1. இப்பாசுரத்தின் இருபத்துநாலாயிரப்படியிலும் இந்நிர்வாஹங்கள் கூறப்பெறுகின்றன.

நிகழ்டம்

"நண்ணாது ஒழியேன் என்று நான் அழைப்பன" என்று ஆழ்வார் அருளிச்செய்துள்ளார். 'எம்பெருமானே! உன்னைக் கிட்டாமல் விடமாட்டேன்; உன்னை அடைந்தே தீருவேன்!' என்று ஆழ்வார் கூறுவதாக விளக்கிய உரையாசிரியர், ஆத்தான் அருளிச்செய்த **நிர்வாஹம்** ஒன்றையும் கூறுகிறார்.

விளக்கம்

'எம்பெருமானே! உன்னைக் கிட்டாவிடில் நான் தரிக்கமாட்டேன்' என்று ஆழ்வார் கூறுவதாக ஆத்தான் அருளிச் செய்தார்![1]

[777]

(பிழைக்கின்றது அருள் என்று பேதுறுவனே) "வரையாதே ரக்ஷித்த மஹாகு₃ணம் எனக்கு உதவாமையாலே இழக்கப்புகா நின்றாய் என்று பேகணியாநின்றேன்" என்று ஆளவந்தார் அருளிச் செய்யும்படி. அத்தை எம்பெருமானார் கேட்டருளி, "இது பொருள் அழகியது; ஆனால், இப்போது இவர்க்கு ஒடுகிற த₃ஶைக்குச் சேராது. ஆனபின்பு, பசுக்களும் இடையரும் வர்ஷத்திலே நோவுபடாதபடி மலையை எடுத்து மறித்த இம்மஹாகு₃ணத்துக்கு நான் புறம்பாகிறேனோ? என்று பேகணியாநின்றேன்" என்று.

(திருவாய்மொழி 9-4-3 ஈடு வ்யாக்யானம்)

நிகழ்டம்

"மழைக்கு அன்று குன்றம் எடுத்து ஆநிரை காத்தாய்! பிழைக்கின்றது அருள் என்று பேது உறுவனே" (அன்று மழையைத் தடுப்பதற்காக மலையை எடுத்துக் குடையாகப் பிடித்து ஆநிரையைக் காத்தவனே! உன்னுடைய அருளானது தப்புகின்றது என்று நான் வருந்துகிறேன்) என்று ஆழ்வார் அருளிச் செய்துள்ளார். இதற்கு ஆளவந்தார், எம்பெருமானார் ஆகிய இருவரும் அருளிச் செய்த **நிர்வாஹங்கள்** எடுத்துக் காட்டப் பெறுகின்றன.

விளக்கம்

"அக்காலத்தில் பசுக்களைக் காத்த நீ இப்போது எனக்கு உதவாமல் இருக்கின்றாய். எனவே அனைவரையும் காப்பவன் என்ற அந்த மஹாகுணத்தை இன்று நீ இழக்கப் போகின்றாயே என்று நான் வருந்துகிறேன்" - என்று ஆழ்வார் அருளிச் செய்வதாக ஆளவந்தார் பொருள் உரைத்தார். எம்பெருமானார், இப்பொருளை (திருமாலையாண்டான் வாயிலாகக் கேட்டு) "இப்பொருள் மிகவும் அழகியதுதான். ஆயினும் எம்பெருமான் திருவருள் தமக்குக்

1. இருபத்து நாலாயிரப்படியிலும் ஆத்தான் இவ்வாறு அருளிச்செய்தமை கூறப்பெறுகிறது.

கிடைக்காமையினால் வருத்தத்துடன் அருளிச் செய்கின்ற ஆழ்வாருடைய இப்போதைய நிலைக்கு இப்பொருள் பொருந்தாது. எனவே, "பசுக்களும் ஆயர்களும் மழையினால் துன்பப்படாமல் காத்த இம்மஹாகுணத்திற்கு நான் புறம்பாக ஆகிவிட்டேனோ என்று வருந்துகின்றேன்" என்று ஆழ்வார் அருளிச் செய்வதாகப் பொருள் உரைத்தார்.

'அவ்வருள் உன்னை (எம்பெருமானை)த் தப்பிப் போகின்றது என்று வருந்துகிறேன்' என்கிறார் ஆழ்வார் என்பது ஆளவந்தார் அளித்த விளக்கமாகும். 'அவ்வருள் என்னை (ஆழ்வாரை)த் தப்பிப் போகின்றது என்று வருந்துகிறேன்' என்கிறார் ஆழ்வார் என்பது எம்பெருமானார் அளித்த விளக்கமாகும்.[1]

[778]

(எனக்கு ஆரருள் செய்யும் நெடியானை) பிள்ளை அகளங்கப்₃ரம்மராயர் ப₄ட்டரை ஸமாத₄ாநம் பண்ணவேணும் என்று இருகைமதவாரணம் என்கிறவனை வரக் காட்டினாராய், அவனைத் திருவுள்ளத்திலே விஷயீகரித்திருப்பர் என்னுமத்தைப் பற்ற, அவனும் வந்து சில வார்த்தைகளை விண்ணப்பம் செய்து, திருவுள்ளமும் ப்ரஸந்நமாயிருக்கிற அளவிலே, "இவனுடைய வைஷ்ணவத்வம் இருக்கும்படி திருவுள்ளம் பற்றியிருக்கை உண்டே" என்றார்களாய், "சொல்லவேணுமோ? கர்ப்பத₃ாஸர்களன்றோ!" என்றது தொடக்கமாக இப்பாட்டை அருளிச் செய்தார்.

(திருவாய்மொழி 9-4-10 ஈடு வ்யாக்யானம்)

நிகழிடம்

"அடியான் இவன் என்று எனக்கு ஆரருள் செய்யும் நெடியானை" (இவன் நம்முடைய அடியவன் என்று கொண்டு தன் பெருமைக்குச் சேர எனக்கு அருள் செய்தவனை) என்று எம்பெருமானை நம்மாழ்வார் போற்றுகின்றார். இத்தொடர்பில், எம்பெருமானுடைய அருளானது அடியவர்கள் திறத்தில் மிக்கிருக்கும் என்பதற்கு ஓர் **ஐதிஹ்யம்** *எடுத்துக் காட்டப் பெறுகிறது.*

விளக்கம்

திருவரங்கம் பெரிய கோயிலில் வாழ்ந்து வந்த பட்டருக்கும், அவருடைய அடியவனும், திருவரங்கநகருக்கு அதிகாரியுமான (அரசன்?) அகளங்க பிரம்மராயன் என்பவனுக்கும் இடையே கருத்து வேற்றுமை ஏற்பட்டுவிட்டது. அதனால் பட்டர் திருவரங்கவாஸத்தை வெறுத்துத் திருக்கோட்டியூரிலே சில

1. இப்பாசுரத்தின் இருபத்துநாலாயிரப்படியிலும் இந்நிர்வாஹங்கள் கூறப்பெறுகின்றன.

வருடங்கள் வசிக்க நேர்ந்தது. அப்போது பட்டரை ஸமாதானப் படுத்துவதற்காக, **அகளங்க பிரம்மராயன்**, *பட்டருடைய திருவுள்ளத்திற்கு மிகவும் உகந்தவனும், திருவரங்கனுக்குச் சிறந்த தொண்டு புரியும் குலத்தில் பிறந்த வைஷ்ணவனுமான* **இருகைமதவாரணம்** *என்கின்ற திருவேளைக்காரனை அவரிடம் அனுப்பி வைத்தான். அவனும் பட்டர் மகிழும்படியாகச் சில வார்த்தைகளைச் சொன்னான். அப்போது அருகில் இருந்தவர்கள், "இவனுடைய வைஷ்ணத்வம் தேவரீர் திருவுள்ளம் அறியாததன்றே!" என்று இருகைமதவாரணனைப் பற்றி எடுத்துரைத்தனர். அதைக் கேட்ட பட்டர், "சொல்ல வேண்டுமோ? கருவிலே திருவுடையவன் அன்றோ! பிறக்கும்போதே அழகிய மணவாளனுக்குத் தொண்டு செய்யும் குலத்தில் பிறந்தவன் அன்றோ!" என்று கூறி, 'அடியான் இவன் என்று எனக்கு ஆரருள் செய்யும் நெடியானை' என்ற இப்பாட்டை அனுஸந்தித்தாரம்.*

[779]

(தவம் செய்தில்லா வினையாட்டியேன்) "அவனைப் போலே பிரிவுக்குச் சிளையாதபடி ப$_4$ாக்$_3$யத்தைப் பண்ணப் பெற்றிலேன்" என்று பிள்ளான் பணிக்கும்.

(திருவாய்மொழி 9-5-3 ஈடு வியாக்யானம்)

நிகழிடம்

எம்பெருமானைப் பிரிந்திருக்கும் வருத்தத்தில் பாசுரம் அருளிச் செய்கிற நம்மாழ்வார், "தவம் செய்தில்லா வினையாட்டியேன்' என்று தம்மைக் கூறிக் கொள்கிறார். இதுபற்றிப் பிள்ளான் அருளிச்செய்த **வார்த்தை** *கூறப்பெறுகிறது.*

விளக்கம்

"என்னைப் பிரிந்திருந்தபோதும் எம்பெருமான் எந்தவித வருத்தமும் இல்லாதிருக்கிறான்; அவனைப்போல நானும் அவனைப் பிரிந்தாலும் வருத்தப்படாமல் இருக்கலாம். ஆனால் அவனைப்போல வருந்தாமல் இருப்பதற்கு நான் பாக்கியம் பண்ணப் பெற்றிலேன்" என்கிறார் ஆழ்வார் என்று **பிள்ளான்** *விளக்கம் உரைப்பர்.*[1]

[780]

(தழைநல்ல இத்யாதி) 'தாம் தாம் முடிய நினைப்பார் 'நாடு வாழ்க' என்பாரைப் போலே சொல்லுகிறாள்" என்று ஆளவந்தார் நிர்வாஹம். "நான் பட்டபாடு நாடு படாதொழிய வேணும்' என்று எம்பெருமானார். "நான் முடிய, என் ஆர்த்தி கண்டு நோவுபடாதே லோகம் அடங்கப் பிழைக்குமாகாதே!" என்று பட்டர்.

(திருவாய்மொழி 9-5-10 ஈடு வியாக்கியானம்)

1. பிள்ளான் இவ்வாறு அருளிச்செய்தமை இருபத்துநாலாயிரப்படியிலும் கூறப்பெற்றுள்ளது.

நிகழ்டம்

எம்பெருமானைப் பிரிந்த வருத்தத்தினால் நாயகி நிலையை அடைந்த ஆழ்வார், தம் ஆற்றாமையை நீக்கிக் கொள்ள, பூஞ்சோலைக்குச் செல்லப் அங்கிருந்த குயில், மயில் முதலிய பறவைகளும் எம்பெருமானையே நினைப்பூட்டி, வருத்தத்தை மேலும் அதிகமாக்க, முடிவில் வருத்தத்தின் மிகுதியினால் உயிரே பிரியுமளவுக்கு ஆகியது. அப்போது நாயகி, பறவைகளைப் பார்த்து, " இழை நல்ல ஆக்கையும் பையவே புயக்கற்றது, தழைநல்ல இன்பம் தலைப்பெய்து எங்கும் தழைக்கவே" *(ஆபரணங்கள் அணிந்த என் உடலும் பசையற்றதாயிற்று; உலகம் எல்லாம் இன்பத்தைப் பெற்று சுகமாக வாழ்ந்திடுக) என்று கூறுவதாகப் பாசுரம் அமைந்துள்ளது. தன் உயிர் நீங்கும் நிலையில் 'உலகம் இன்பமாக வாழ்ந்திடுக!' என்று கூறியதன் கருத்து என்ன என்பது பற்றி மூன்று* **நிர்வாஹங்கள்** *எடுத்துக் காட்டப் பெறுகின்றன.*

விளக்கம்

"உலகில் அவரவர்கள் தங்கள் உயிர் பிரியும் போது, 'நான் முடிந்தாலும் நாடு சுகமே வாழ்க' என்று கூறிக் கொண்டு உயிர் விடுவது போல, பராங்குச நாயகியும் உலகம் இன்பமாக வாழ்ந்திடுக! என்கிறாள்" என்று **ஆளவந்தார்** *அருளிச் செய்தார்.*

"நான்தான் எம்பெருமானிடம் ஈடுபட்டுப் படாதபாடு பட்டு உயிர் பிரியுமளவு துன்பத்தை அனுபவிக்கிறேன். உலகத்திலுள்ளவர்கள் என்னைப் போல் எம்பெருமானிடம் ஈடுபட்டுத் துன்பப்படாமல், இன்பமாக வாழட்டும் என்கிறாள் பராங்குச நாயகி" என்று **எம்பெருமானார்** *அருளிச் செய்தார்.*

"இதுவரையில் நான்பட்ட பாடுகளையெல்லாம் கண்டு உலகமும் துன்பத்தில் மூழ்கியிருக்கிறது; இப்போது நான் உயிர் விடப் போகிறேன்; இனி நான் படும் வேதனைகளைக் கண்டு துன்பப்பட வேண்டாமல் உலகம் பிழைக்குமன்றோ! எனவேதான் உலகம் இனி இன்பமாக வாழட்டும் என்கிறாள் பராங்குசநாயகி" என்று **பட்டர்** *அருளிச் செய்தார்.*[1]

[781]

"கடலைத் தரை காண்பாரைப்போலே இருத்தும்வியந்தில் அனுபவத்தை இதிலே கொண்டு வந்து சேர்ப்பதே நம் முதலிகள்!" என்று வித்$_3$த$_4$ராய் அருளிச் செய்வர். "அப்ரிதிக$_3$ர்ப்$_3$ப$_4$கு$_3$ணாநுஸந்த$_4$னம்" என்று ஆளவந்தார் அருளிச் செய்யும் சங்கை இதுக்கு.

(திருவாய்மொழி 9-6 ஈடு வியாக்கியான ப்ரவேசம்)

1. இருபத்துநாலாயிரப்படியிலும் இந்நிர்வாஹங்கள் கூறப்பெறுகின்றன.

நிகழிடம்

எம்பெருமானைப் பிரிந்திருக்கின்ற வருத்தத்தின் மிகுதியினால் ஆழ்வாருக்கு உயிர் பிரியுமளவிற்குத் துன்பம் ஏற்பட்டது என்பது இதற்கு முன்னர் அருளிச் செய்த "இன்னுயிர்ச் சேவல்" என்று தொடங்கும் பதிகத்தில் (9-5) அருளிச்செய்யப் பெற்றது. ஆயினும் அப்படி உயிர் பிரியாமல் ஆழ்வார் தொடர்ந்து பாசுரங்களை அருளிச்செய்கிறார். இதற்குக் காரணம் என்ன? எம்பெருமான் வந்து ஆழ்வாரோடு கலந்து ஆழ்வாரை உயிர்தரிக்கச் செய்தானோ என்று பார்த்தால், அப்படி அவன் செய்ததாக ஆழ்வார் அருளிச்செய்யவில்லை. எனவே ஆழ்வார் தரித்திருப்பதற்கு வேறு காரணம் இருக்க வேண்டும். இதற்கு முன்னர் 'இருத்தும் வியந்து' என்று தொடங்கும் பதிகத்தில் (8-7) எம்பெருமான் தானே வந்து ஆழ்வாருடைய நெஞ்சில் வீற்றிருந்ததாக ஆழ்வார் மிக்க மகிழ்ச்சியுடன் அருளிச் செய்துள்ளார். அப்படி எம்பெருமான் வந்து தம்மோடு கலந்ததை இப்பொழுது நினைத்துக் கொண்ட ஆழ்வார், அந்த அனுபவம் இப்போது ஏற்படுவதுபோல் ஒரு அறிவு பிறந்து, ஒருவாறு தரித்து நின்று, தொடர்ந்து பாசுரங்களை அருளிச் செய்கிறார் என்று ஆசார்யர்கள் விளக்கம் உரைத்தனர். இதுபற்றி ஆசார்யர்களுடைய **வார்த்தைகள்** *எடுத்துக் காட்டப்பெறுகின்றன.*

விளக்கம்

*"கடலில் மூழ்கி அதன் ஆழத்தளவும் சென்று அதன் தரையைத் தொட்டு ஒரு பிடி மண் எடுத்து வருவாரைப்போல, எங்கோ ஆழ்வார் அருளிச் செய்துள்ள 'இருத்தும் வியந்து' என்கிற (8-7) பதிகத்தின் அனுபவத்தை 'உருகுமால்' என்ற (9-6) இப்பதிகத்திலே கொண்டு வந்து சேர்த்து நம்முடைய ஆசார்யர்கள் விளக்கம் அருளிச் செய்துள்ளனரே! என்னே அவர்களுடைய ஆராய்ச்சி!" என்று வியப்புடன் (**நஞ்சீயர்**) அருளிச்செய்வர்.*

எம்பெருமானோடு சேரப்பெறாத வருத்தத்தில் இருக்கும்போதும் அவனுடைய சீலகுணத்தை இப்பதிகத்தில் ஆழ்வார் அனுபவிக்கிறார். எனவே வருத்தத்தை உட்கொண்ட குணானுஸந்தானம் என்று **ஆளவந்தார்** *அருளிச் செய்வர்.*[1]

[782]

(உனக்கு) "நான் உனக்கு ஆட்செய்யும் நீர்மை என்பான் என், நீ எனக்கு ஆட்செய்யும் நீர்மை என்னாமல்?" என்ன, "இச்சொலவையும் இழப்பரோ, பாவியார்" என்று எம்பார்.

(திருவாய்மொழி 9-6-2 ஈடு வியாக்கியானம்)

1. ஆளவந்தார் அருளிச்செய்தமை மட்டும் இருபத்துநாலாயிரப்படியிலும் குறிப்பிடப்பெறுகிறது.

நிகழிடம்

"நினைகிலேன் நான் உனக்கு ஆட்செய்யும் நீர்மையே" (உனக்கு ஆட்செய்யும் விதத்தை நான் நினைக்கமாட்டுகின்றிலேன்) என்று ஆழ்வார் அருளிச் செய்துள்ளார். "எம்பெருமானே! நீ என்னிடம் தாழ நின்று ஆட்செய்து காட்டின சீல குணத்தை நெஞ்சாலும் நினைக்க மாட்டுகிறிலேன்" என்று ஆழ்வார் அருளிச் செய்வதாக விளக்கிய உரையாசிரியர் இத்தொடர்பில் ஒரு **ஸம்வாதம்** *காட்டுகிறார்.*

விளக்கம்

"எம்பெருமான் தன்னுடைய சீல குணத்தால் ஆழ்வாருக்கு ஆட்செய்தானாயின், ஆழ்வார் 'நீ எனக்கு ஆட்செய்யும் நீர்மை' என்றன்றோ எம்பெருமானை நோக்கி அருளிச் செய்திருக்க வேண்டும்! அப்படி அருளிச் செய்யாமல், 'நான் உனக்கு ஆட்செய்யும் நீர்மை' என்று அருளிச் செய்துள்ளது ஏன்?" என்று கேட்க, எம்பார், "ஆழ்வாரை அடிமை கொள்வதாக வந்த எம்பெருமான் ஆழ்வாரிடம் அடிமை கொள்ளாமல் ஆழ்வார்க்குத் தாழ நின்று அடிமை செய்தான். எனவே செயலால்தான் எம்பெருமானுக்கு ஆழ்வார் அடிமை செய்ய முடியவில்லை; சொல்லாலேயாவது அவ்வடிமையை இழந்துவிடக் கூடாது என்பதனால்தான் ஆழ்வார், 'பாவியேன் உனக்கு நான் ஆட்செய்யும்படியை நினைக்கமாட்டுகின்றிலேன்' என்றருளிச் செய்கிறார். சொல்லாலேயாவது எம்பெருமானுக்குத் தாம் அடிமை செய்வதாகக் கூறுவதையும் ஆழ்வார் இழக்க விரும்புவரோ?" என்று அருளிச் செய்தார்.

[783]

(புன்கண்மை) "மீள உயிர்ப்பெய்து" என்றாய்த்து நிர்வஹிப்பது, "இது தான் ஶப்$_{3}$த$_{3}$த்தோடே சேர்ந்திருக்கிறதில்லை; இந்த ஶ்ருதமான அர்த்த$_{2}$த்தோடே ஶப்$_{3}$த$_{3}$த்தையும் சேரச் சொல்லி வசிக்கும்படி எங்ஙனே?" என்று விசாரியா நிற்கச் செய்தே, "கோதான இது திரியவும் புன்கண்மை எய்தும்போது மீளவும் உயிர்ப்பெய்தாகவேணுமிறே! அர்த்த$_{2}$ ஸ்வபா$_{4}$வத்தாலே தன்னடையே வரும்" என்று நான் சொன்னேன்; சீயர் போர ப்ரீதராயருளினார்' என்று அருளிச் செய்வர்.

(திருவாய்மொழி 9-6-6 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

"அங்கண்ணன் உண்ட என் ஆருயிர்க் கோது இது புன்கண்மை எய்தி" (மிக்க காதலனான அந்தக் கண்ணபிரானால் அனுபவிக்கப் பெற்று கோதாகிவிட்ட இந்த ஆத்மாவானது வருத்தத்தை அடைந்து....) என்று ஆழ்வார் அருளிச் செய்துள்ளார். இதுகுறித்து ஓர் **ஐதிஹ்யம்** *கூறப்பெறுகிறது.*

விளக்கம்

'என்னுடைய ஆத்மாவானது அவனுடைய அன்பின் மிகுதியினால் நன்றாக அனுபவிக்கப் பட்டு வெறும் கோதாக (சக்கையாக) ஆகிவிட்டது. பிறகு சற்று உயிர் வந்து, அதற்குப் பிறகு வருத்தம் எய்தி, அவனைப் பற்றிப் புலம்பா நின்றது' என்று ஆழ்வார் அருளிச் செய்துள்ளதாக இதற்கு (பட்டரால்) விளக்கம் அளிக்கப் பட்டுள்ளதை **நஞ்சீயர்** *கேட்டிருந்தார். 'வெறும் கோதாகி விட்ட ஆத்மாவிற்குச் சற்று உயிர் வந்ததாகப் பாசுரத்தில் சொல் இல்லையே! ஆனால் கேட்ட அர்த்தத்தைப் பாசுரத்தில் கொள்வதற்கு வழி என்ன?' என்று நஞ்சீயர் ஆராய்ந்து கொண்டிருந்தபோது,* **நம்பிள்ளை,** *"கோதாகிவிட்ட ஆத்மா மறுபடியும் வருந்தவேண்டும் என்றால், இடையில் அதற்குச் சற்று உயிர் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும் என்று பொருள் தன்னடையே கிடைக்கும்" என்று கூறினார். இதைக் கேட்ட நஞ்சீயர் மிகவும் மகிழ்ந்து நம்பிள்ளையைக் கொண்டாடினார்.*

('உள்ளம் புகுந்து என்னை நைவித்து நாளும் உயிர்ப் பெய்து கூத்தாட்டுக் காணும்' என்று ஆண்டாள் அருளிச் செய்துள்ளாள் அன்றோ! வருத்தத்தின் மிகுதியினால் உயிர் பிரியும் நிலை ஏற்படும்போது 'இவ்வளவோடு இவளை முடிந்து பிழைக்க விடலாமா? இன்னும் துன்பப்படுத்த வேண்டாமா?' என்று எண்ணி எம்பெருமான் மறுபடியும் சிறிது உயிரைக் கொடுத்துக் துடிக்க விடுகிறான் என்கிறாள் ஆண்டாள். கசையடி கொடுத்து ஒருவனை தண்டிப்பவர்கள் உயிர் போகும் தருணம் வந்தவாறே அவனுக்குத் தண்ணீர் கொடுத்துத் தேறுதலை உண்டாக்கி, ஓரளவு தரித்தவாறே மீண்டும் கசையடி கொடுப்பர்கள். அதுபோல முடியப் போகும் உயிரை மறுபடியும் உண்டாக்கி எம்பெருமான் வருத்துகிறான் என்பது ஆண்டாள் அருளிச் செய்வதன் கருத்தாகும். அதேபோல் கோதான ஆத்மாவனது புன்கண்மை (வருத்தம்) அடைய வேண்டுமானால் அதற்கு வருத்தம் அடைவதற்காகவே சற்று உயிர் கொடுக்கப் பட்டிருக்க வேண்டும் என்ற பொருள் தன்னடையே கிடைக்கும் என்பது நம்பிள்ளையின் விளக்கமாகும்.)

[784]

(ஆருயிர் பட்டது எனதுயிர் பட்டது) "இங்கு எனது உயிர் பட்டது ஆங்கு ஆர் உயிர் பட்டது?" என்று எம்பெருமானார். "எல்லாரும் கு₃ணாநுப₄வமாகில் பண்ணுகிறது, இவர்க்கு இவ்வாசி கூடினபடி என்?" என்று நான் கேட்க, "நவோடை₄யான ஸ்த்ரீக்கு ப₄ர்த்தாவினுடைய கரஸ்பர்ஶம் பட்டவாறே, வேர்ப்பது விடுவது ஆமாபோலே, இவர் அனுப₄வத்தில் புதியராகையாலே வருகிறது காணும்" என்று சீயர் அருளிச் செய்தார்.

(திருவாய்மொழி 9-6-9 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

"ஆருயிர் பட்டது எனதுயிர் பட்டது" (நான்பட்டபாட்டை வேறு யார் பட்டார்?) என்று ஆழ்வார் அருளிச்செய்துள்ளார். இது பற்றி எம்பெருமானார் அருளிச்செய்த **வார்த்தை** *ஒன்றும், நம்பிள்ளைக்கும் நஞ்சீயருக்கும் இடையே நடைபெற்ற* **ஸம்வாதம்** *ஒன்றும் எடுத்துக் காட்டப் பெறுகிறது.*

விளக்கம்

எண் 281ன் விளக்கம் பார்க்க.

[785]

(தெளிவிசும்பு இத்யாதி) "பரமபதஂம் தேஶமாயிருக்க, அத்தைக் காற்கடை கொண்டு என் நெஞ்சிலே நித்யவாஸம் பண்ணுகிறவன்" என்று சிற்றாட்கொண்டான் பணிக்கும். "பரமபதத்தில் பண்ணும் வ்யாமோஹத்தை என் நெஞ்சிலே பண்ணி வர்த்தியா நின்றான்" என்று எம்பெருமானார்.

(திருவாய்மொழி 9-7-5 இருபத்து நாலாயிரப்படி வியாக்கியானம்)

நிகழிடம்

"தெளிவிசும்பு திருநாடாத் தீவினையேன் மனத்து உறையும்" (தெளிந்த விசும்பாகிய பரமபதமாகப் பாவியான என்னுடைய மனத்தைக் கொண்டு) எம்பெருமான் எழுந்தருளியிருக்கிறான் என்று ஆழ்வார் அருளிச் செய்கிறார். இதற்கு இரண்டு **நிர்வாஹங்கள்** *காட்டப்பெறுகின்றன.*

விளக்கம்

"உயர்ந்த இருப்பிடமான பரமபதம் இருக்க அதை அலட்சியம் செய்து, என்னுடைய நெஞ்சில் நிரந்தரமாக வசிக்கிறவன்" என்று ஆழ்வார் அருளிச் செய்வதாகச் சிற்றாட்கொண்டான் பொருள் உரைத்தார்.[1]

"மிக உயர்ந்த இருப்பிடமான பரமபதத்தின்மீது தான் கொண்டுள்ள அன்பையெல்லாம் என் நெஞ்சின் மீது கொண்டிருக்கிறவன்" என்று ஆழ்வார் அருளிச் செய்வதாக எம்பெருமானார் பொருளுரைத்தார்.[2] *(எம்பெருமானிடம் பறவைகளைத் தூது அனுப்புகிற பதிகமாதலின் நெஞ்சிலேயே எழுந்தருளி இருப்பவன் எம்பெருமான் என்று கொள்வது, அவனிடத்தில் தூது விடுவதாக*

1. ஈடு முப்பத்தாறாயிரப்படியில், "சிற்றாட்கொண்டான், 'கொம்பது பருத்தியாக அங்காடி பாரித்து, தனக்குப் பரமபதம் கலவிருக்கையாயிருக்க, அத்தைக் காற்கடை கொண்டு, ஸந்நிஹிதரைப் போலேயிருக்க என் நெஞ்சிலே ப்ரகாசியா நின்றான்' என்று. இதுதான் இத்திருவாய்மொழிக்குச் சொன்ன வாக்யார்த்தத்தோடு சேராது; ஓரோர் அவஸரங்களிலே சொல்லிப்போம் வார்த்தையிறே" என்றுள்ளது.

2. எம்பெருமானார் அருளிச்செய்த பொருளும் ஈடுமுப்பத்தாறாயிரப்படியில் குறிப்பிடப் பெற்றிருந்தாலும் அது எம்பெருமானார் அருளிச்செய்தது என்று குறிப்பிடப்பெறவில்லை.

அமைந்துள்ள இப்பதிகத்தின் கருத்துக்குச் சேராது என்று கருதி எம்பெருமானார் இப்பொருள் உரைத்தார் போலும்!)

[786]

பெரிய முதலியார் ப்ராப்யஸித்₃தி₄யில் த்வரையாலே எப்போதும் இத் திருவாய்மொழியை அநுஸந்தி₄யா நிற்பர். ஆகையாலே இத்தைப் பெரியமுதலியார் திருவாய்மொழி என்றாய்த்துச் சொல்லுவது, அத₂வா, விட்ட தூதர்கள் தாழ்த்தார்கள் என்று, தாமே அவன் வர்த்திக்கிற தே₃ஶத்தேறப் போக ஒருப்படுகிறார் என்பாரும் உண்டு.

(திருவாய்மொழி 9-8 ஈடு வியாக்கியான ப்ரவேசம்)

நிகழிடம்

எம்பெருமானை உடனே அடைய வேண்டும் என்ற ஆசையின் மிகுதியினால் அவனிடம் பறவைகளைத் தூது விட்ட ஆழ்வார், அத்தூதர்கள் மீண்டு வந்து செய்தி சொல்லும்வரை பொறுத்திருக்க முடியாமல், திருநாவாய் எனும் திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள எம்பெருமானைக் காண வேண்டும் என்ற ஆவல் பிறந்து, தாம் இருந்த இடத்தில் இருந்து கொண்டே 'என்றைக்கு நான் திருநாவாய் செல்லப் போகிறேன்! என்றைக்கு நான் அவனுக்குத் தொண்டுகள் செய்யப் போகிறேன்!' என்றிப்படிப் பலவாறாக 'அறுக்கும் வினை' என்று தொடங்கும் இப்பதிகத்தில் அருளிச்செய்கிறார். இதுகுறித்து இரண்டு **நிர்வாஹங்கள்** *கூறப்பெறுகின்றன.*

விளக்கம்

பெரியமுதலியார் *என்று போற்றப் பெறுகின்ற* **ஆளவந்தார்**[1] *வீடுபேற்றில் உள்ள ஈடுபாட்டினால் இத்திருவாய்மொழியை எப்போதும் அனுசந்தித்துக் கொண்டிருப்பர். அதனால் இத்திருவாய்மொழி 'பெரியமுதலியார் திருவாய்மொழி' என்றே வழங்கப்பட்டது.*

அவனிடத்தில் செய்தியைச் சொல்லுவதற்காக அனுப்பிய தூதர்கள் திரும்பி வராமல் தாமதிக்கவே அவன் எழுந்தருளியிருக்கின்ற தேசத்திற்குத் தாமே தேடிக்

1. பெரிய முதலியார் என்பது நாதமுனிகள், ஆளவந்தார் ஆகிய இருவரையுமே குறிக்கும். நம்பிள்ளை எண் 553ல் பெரிய முதலியார் என்று நாதமுனிகளையே குறித்துள்ளார். அழகிய மணவாளப்பெருமாள் நாயனார் எண்94ல் நாதமுனிகளையும், கண்ணிநுண்சிறுத்தாம்பு வ்யாக்யான ப்ரவேசத்தில் ஆளவந்தாரையும் பெரிய முதலியார் என்று குறித்துள்ளார். இப்பாசுரத்தின் அரும்பத உரையில், இங்குப் பெரிய முதலியார் என்பது ஆளவந்தாரை என்று குறிப்பிடப் பெற்றுள்ளது. ஆளவந்தார் அருளிய ஸ்தோத்ரரத்னத்தில் இத்திருவாய்மொழியில் அருளிச் செய்யப்பட்டிருப்பதுபோல், 'என்றைக்கு நான் உன்னை அடையப்போகிறேன்? என்றைக்கு நான் உனக்குத் தொண்டு செய்யப் போகிறேன்?' என்று பல சுலோகங்களில் (30, 31, 46) அருளிச்செய்துள்ளதைக் கருத்தில் கொண்டு அரும்பத உரையில் இவ்வாறு உரைத்திருக்கலாம்.

கொண்டு செல்கிறார் ஆழ்வார் என்றும் சிலர் இத்திருவாய்மொழிக்குப் பொருள் கூறுவர்கள்.

[787]

(குறுக்கும் வகை உண்டுகொலோ) எம்பெருமானார் திருவடிதொழ எழுந்தருளாநிற்க, "திருநாவாய் எத்தனையிடம் போரும்?" என்று எதிரே வருகிறார் சிலரைக் கேட்டருள, "குறுக்கும்" என்றார்களாய், அத்தைக் கேட்டு, "இப் ப$_4$ாஷையாலே அருளிச் செய்வதே ஆழ்வார்!" என்று போர வித்$_3$க$_4$ரா யருளினார்.

(திருவாய்மொழி 9-8-1 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

"திருநாவாய் குறுக்கும் வகை உண்டுகொலோ கொடியேற்கே" (திருநாவாய்த் திருத்தலமானது கொடியேனான எனக்குக் குறுகும் வகை உண்டோ?) என்று ஆழ்வார் அருளிச் செய்துள்ளார். இங்கு ஆழ்வார் 'குறுகும் வகை உண்டுகொலோ' என்று அருளிச் செய்யாமல் (குறுகுதல் = அருகிருத்தல்), 'குறுக்கும் வகை உண்டுகொலோ' என்று அருளிச் செய்துள்ளது குறித்து ஓர் **ஐதிஹ்யம்** கூறப்படுகிறது.

விளக்கம்

எம்பெருமானார் மலைநாட்டுத் திருப்பதி யாத்திரை எழுந்தருளிய போது, திருநாவாய் எனும் திருத்தலத்திற்குச் சென்று கொண்டிருந்தார். அப்போது எதிரே வந்த சில மலையாளர்களை நோக்கி, "திருநாவாய் இன்னும் எவ்வளவு தூரம் இருக்கும்?" என்று கேட்டார். அதற்கு அம்மலையாளர்கள் "குறுக்கும்" என்று விடை அளித்தார்கள். (குறுக்கும் என்ற மலையாளச் சொல்லு;க்கு அருகில் உள்ளது என்று பொருள்.) இதைக் கேட்ட எம்பெருமானார், 'குறுக்கும் வகையுண்டு கொலோ' என்று ஆழ்வார் அருளிச் செய்துள்ளதை நினைத்துக் கொண்டு, "இத்தலத்தைப் பற்றிய பாசுரத்தில் இத்தலத்து (மலையாள) மொழியாலேயே ஆழ்வார் அருளிச்செய்துள்ளாரே!" என்று மிகவும் ஈடுபட்டாராம்.

[788]

(தென்திருநாவாய் என்தேவே - தெருளேதரு) "மருளே இன்றி உன்னை என் நெஞ்சத்து இருத்தும் தெருளே தரு தென் திருநாவாய் என் தேவே, அருளாது ஒழிவாய் அருள் செய்து அடியேனைப் பொருளாக்கி உன் பொன்னடிக் கீழ்ப் புக வைப்பாய் திருவுள்ளமானபடி செய்" என்றாம் பிள்ளான் பணிப்பது.

(திருவாய்மொழி 9-8-8 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

அருளாதொழிவாய் அருள் செய்து அடியேனைப்
பொருளாக்கி உன் பொன்னடிக் கீழ்ப் புகவைப்பாய்
மருளே இன்றி, உன்னை என் நெஞ்சத்து இருத்தும்
தெருளே தரு தென்திருநாவாய் என் தேவே!

என்பது ஆழ்வார் அருளிச் செய்துள்ள பாசுரமாகும். இதற்கு இருவகை **நிர்வாஹங்கள்** *காட்டப் பெறுகின்றன.*

விளக்கம்

அருளாதொழிவாய் = 'இவன் பட்டது படட்டும்" என்று அருள் செய்யாமல் இருந்தாலும் இருந்திடு; அருள் செய்து = அல்லது, எனக்கு அருள் செய்து, அடியேனைப் பொருளாக்கி = பொருளல்லாத என்னையும் ஒரு பொருளாக ஆக்கி, உன் பொன்னடிக் கீழ் வைப்பாய் = உன் திருவடிகளின் கீழே வைக்கிலும் வைத்துக் கொள், மருளே இன்றி உன்னை என் நெஞ்சத்து இருத்தும் தெருளே தரு = அறிவின்மை சிறிதும் இல்லாதபடி உன்னை என் மனத்தில் எப்போதும் வைத்துக் கொள்ளும்படியான தெளிவை நீ எனக்குத் தரவேண்டும்; தென் திருநாவாய் என் தேவே! என்கிறார் ஆழ்வார் என்பது உரையாசிரியர் காட்டும் முதல் வகை விளக்கமாகும். 'எனக்கு நீ அருள் செய்தாலும் சரி, அருள் செய்யாவிட்டாலும் சரி, உன்னை என்னுடைய நெஞ்சுக்குள்ளே நான் வைத்திருக்கும்படியான தெளிவைத் தா' என்று ஆழ்வார் வேண்டுவதாக இவ்விளக்கத்தின் கருத்து அமைகிறது. இவ்விளக்கத்தில் 'தென் திருநாவாய் என் தேவே, தெருளே தரு' என்பது 'தென்திருநாவாய் எம்பெருமானே எனக்குத் தெளிவைத் தருக' என்று ஆழ்வார் வேண்டுவதாகப் பொருள் கொள்ளப்பட்டது. (தரு என்பது தருக என்பதன் கடைக் குறைத்தலாகக் கொள்ளப்பட்டது.)

பிள்ளான், *இப்பாசுரத்திற்கு வேறுவகையான விளக்கம் அளித்தார். மருளே இன்றி உன்னை என் நெஞ்சத்து இருத்தும் = அறிவின்மை சிறிதும் இல்லாமல் உன்னை என்னுடைய நெஞ்சுக்குள்ளே இருத்தும்படியான, தெருளே தரு = தெளிவைத் தந்த, தென் திருநாவாய் என் தேவே = திருநாவாய் எம்பெருமானே! அருளாதொழிவாய் = அருள் செய்யாமல் இருந்தாலும் இருந்திடு; அருள் செய்து உன் பொன்னடிக் கீழ்ப் புகவைப்பாய் = அருள் புரிந்து உன் திருவடிகளின் கீழே வைத்தாலும் வைத்திடு; உன் விருப்பப்படி செய்து கொள் என்கிறார் ஆழ்வார் என்பது பிள்ளான் தரும் விளக்கமாகும். 'தென்திருநாவாய் எம்பெருமானே! உன்னை என்னுடைய நெஞ்சுக்குள்ளே இருத்தும்படியான தெளிவைத் தந்த நீ எனக்கு அருள் செய்தாலும் செய் அல்லது அருளாமல் இருந்தாலும் இருந்திடு, உன் விருப்பம் போல் செய்து கொள்' என்று ஆழ்வார் அருளிச் செய்வதாகப் பிள்ளான் உரைத்தார். ('தெருளே தரு' என்பதை 'தெளிவைத் தருக' என்று*

வினைமுற்றாகக் கொண்டு பிற ஆசார்யர்கள் பொருள் உரைத்தனர். 'தெளிவைத் தந்த' என்று வினையெச்சமாகக் கொண்டு பிள்ளான் பொருள் உரைத்தார்.)

[789]

பெற்றி ஒருநாள், நம்பி திருவரங்க நாராயணதாஸர் என்பாரொருவர் என்பக்கலிலே திருவாய்மொழி கேட்டு, அங்கே சென்றாராய், "இன்று பிள்ளைபாடு விநோதஂம் என்?" என்று கேட்டவாறே, "அறுக்கும்வினை சாற்றினோம்" என்றாராய், "நாளை மல்லிகைகமழ் தென்றலும் மாலைப்பூசலும் என்னாய்!" என்று பணித்தாராம்.

(திருவாய்மொழி 9-9-1 ஈடு வியாக்கியான ப்ரவேசம்)

நிகழிடம்

"மல்லிகைகமழ்" என்று தொடங்கும் இப்பதிகத்தில் திருவாய்ப்பாடியில் உள்ள கோபிகைகள் எல்லோரும் கண்ணபிரானைப் பிரிந்து ஓர் மாலையில் பட்ட துன்பத்தைத் தாம் ஒருவரே படுவதாக (கோபிகையின் பாவனையில்) ஆழ்வார் அருளிச் செய்துள்ளார். இப்பதிகத்தை 'மாலைப்பூசல்' என்றே நம் ஆசார்யர்கள் அருளிச் செய்வர் என்பதற்கு ஓர் **ஐதிஹ்யம்** *கூறப்படுகிறது.*

விளக்கம்

நம்பி திருவரங்கநாராயண தாஸர் என்பவர், நம்பிள்ளையிடம் திருவாய்மொழி காலக்ஷேபம் கேட்டுவிட்டு, (நஞ்சீயரின் சீடரான) பெற்றி என்பவரிடம் சென்றார். பெற்றி, 'இன்று நம்பிள்ளை காலக்ஷேபத்தில் என்ன விசேஷம்?" என்று கேட்டார். அதற்கு தாஸர், "இன்று 'அறுக்கும் வினை' திருவாய்மொழியை நம்பிள்ளை காலக்ஷேபம் ஸாதித்து முடித்தார்' என்று சொல்ல, பெற்றி, "அப்படியென்றால் நாளை மல்லிகை கமழ் தென்றலும் மாலைப் பூசலும் என்று சொல்!" என்றாராம்.

[790]

"ப்ராப்யவஸ்துவைப் பெறும்படியை மநோரதிஂத்தார் கீழில் திருவாய்மொழியிலே; மநோரதஂ ஸமநந்தரம் பெறக் காணாமையாலே திருவாய்ப்பாடியிலுள்ளார் க்ருஷ்ணனைப் பிரிந்து ஒரு ராத்ரி பட்ட வ்யஸநத்தை இவர் ஒருத்தரும் படுகிறார்" என்று ஆளவந்தார் அருளிச் செய்யும்படி என்று திருமாலையாண்டான் பணிக்க, அத்தை எம்பெருமானார் கேட்டருளி, "முன்பே ஆற்றாமையாலே தற்பு அற்றிருக்கிறவர் ஆகையாலே அத்தனை ஆடல்

1. இவ்விளக்கமே பிள்ளான் அருளிய ஆறாயிரப்படி உரையில் காட்டப்பெற்றுள்ளது.

கொடுக்கைக்கு வேண்டும் ஆச்ரயம் போராது; ஆனபின்பு அவனைப் பிரிந்து ஒரு ஸந்த்₄யையிற்பட்ட நோவைப் படுகிறார்" என்று அருளிச் செய்தார்.

(திருவாய்மொழி 9-9 ஈடு வியாக்கியான ப்ரவேசம்)

நிகழிடம்

"மல்லிகைகமழ்" என்று தொடங்கும் இப்பதிகத்தில் திருவாய்ப்பாடியில் உள்ள கோபிகைகள் எல்லோரும் கண்ணபிரானைப் பிரிந்து பட்ட துன்பத்தைத் தாம் ஒருவரே படுவதாக (கோபிகையின் பாவனையில்) ஆழ்வார் அருளிச் செய்துள்ளார். இது பற்றி **நிர்வாஹங்கள்** கூறப்பெறுகின்றன.

விளக்கம்

"இதற்கு முன்னர் அருளிச் செய்த 'அறுக்கும் வினை' என்கிற திருவாய்மொழியில் (9-8) எம்பெருமானைப் பெறும்படியை ஆழ்வார் எண்ணினார். எண்ணியவுடன் எம்பெருமானை அடையாமையால் மிகுந்த வருத்தம் ஏற்பட்டுத் திருவாய்ப்பாடியில் உள்ள பெண்கள் அனைவரும் கண்ணனைப் பிரிந்து ஓர் இரவிலே பட்ட துன்பத்தை ஆழ்வார் ஒருவரே படுகிறார்" என்று **ஆளவந்தார்** அருளிச் செய்தார் என்று **திருமாலை ஆண்டான்** அருளிச் செய்தார்.

"எம்பெருமானை அடையாத வருத்தத்தினால் முன்பே பலம் இழந்து இருக்கின்ற ஆழ்வாருக்கு ஓர் இரவு முழுவதும் வருந்திக் கிடக்குமளவுக்கு அவருடைய உடலில் வலிமை இராது. எனவே திருவாய்ப்பாடிப் பெண்கள் அனைவரும் ஒரு அந்தி வேளையில் பட்ட துன்பத்தைத் தாம் ஒருவரே படுகிறார்" என்று **எம்பெருமானார்** அருளிச் செய்தார்!

[791]

(அது மணந்தகன்ற) "இப்படி அவகாஹித்த இவர் பாசுரமின்றிக்கே பாடாநிற்க, நாம் இதுக்கு என்ன பாசுரமிட்டுச் சொல்லுவது? மோருள்ளதனையும் சோறேயோ?" என்று எம்பெருமானார் அருளிச்செய்வர்.

(திருவாய்மொழி 9-9-8 இருபத்துநாலாயிரப்படி வியாக்கியானம்)

நிகழிடம்

கண்ணபிரானுடன் கலந்து பிரிந்த கோபிகையின் பாவனையில் பாசுரம் அருளிச்செய்யும் ஆழ்வார் "அது மணந்து அகன்ற நம் கண்ணன் கள்வம் கண்ணனில் கொடிது" (அப்படிக் கலந்து பிரிந்த கண்ணனுடைய தீம்புகள் அவனைக் காட்டிலும் கொடிது) என்று அருளிச்செய்துள்ளார். இங்கு 'அது

1. இருபத்துநாலாயிரப்படியிலும் இந்நிர்வாஹங்கள் கூறப்பெறுகின்றன.

மணந்து அகன்ற' என்பதற்கு எம்பெருமானார் அருளிச்செய்த **வார்த்தை** *எடுத்துக் காட்டப்பெறுகிறது.*

விளக்கம்

"எம்பெருமானோடு கலந்தது எப்படி என்பதை ஆழ்வாரே பாசுரமிட்டுச் சொல்ல முடியாமல் 'அது மணந்து' (அப்படிக் கலந்து) என்று அருளிச் செய்துவிட்டார். இதை நாம் எப்படி விளக்கமுடியும்? மோர் உள்ளவரையும் சோறிட முடியுமோ? (அதுபோலக் கேள்விகள் உள்ளவரை பதில் கூறிவிட முடியுமோ?)" என்று எம்பெருமானார் *அருளிச்செய்தார்!*

[792]

(இடையிடை அதுமொழிந்து) எம்பார் இவ்விடத்தே வந்தவாறே, "மோர் உள்ளதனையும் சோறேயோ? தே₂ஶிகரும் கூடப் பாசுரமிட்டுச் சொல்லமாட்டாதே, 'அது' என்னா நிற்க, மத்₄யஸ்த₂ரான நாம் இதுக்கு என்ன பாசுரமிட்டுச் சொல்லுவது?" என்று அருளிச் செய்தார்.

(திருவாய்மொழி 9-9-9 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

"ஊதும் அத் தீங்குழற்கே உய்யேன் நான் அது மொழிந்து இடை இடை" (இடையிடையே தன் கருத்து நிறைந்த அம்மொழிகளை இட்டு, ஊதுகின்ற குழலோசைக்கு நான் முடிந்து போகின்றேன்) என்று (ஆய்ச்சி பாவனையில்) நம்மாழ்வார் பாசுரம் அருளிச் செய்கிறார். இதுபற்றி எம்பார் அருளிச்செய்த **வார்த்தை** *கூறப்பெறுகிறது.*

விளக்கம்

"இடையிடை அது மொழிந்து" என்ற *இடம் வந்தவாறே,* எம்பார் *"மோர் உள்ளவரை சோறு இட முடியுமோ?*[1] *கேள்விகள் இருக்கும்வரை பதில் கூறி விட முடியுமோ? ஆய்ப்பெண்ணிடம் அவன் காதல் வயப்பட்டு சொன்ன வார்த்தைகளை, இதைக் கூறுவதில் வல்லவரான ஆழ்வாரும் கூடக் கூறமுடியாமல் 'அது' என்று கூறிவிட்டாரே! அப்படியிருக்க இடையில் நாம் அந்த வார்த்தை இப்படிப்பட்டது என்று எப்படிக் கூறமுடியும்?" என்றாராம்.*[2]

1. "மோர் உள்ளதனையும் சோறேயோ" என்பதன் விளக்கத்தை எண் 562ன் அடிக்குறிப்பில் காண்க. இதே போன்ற வார்த்தையை எம்பார் அருளிச்செய்ததாக எண் 562, 792 ஆகிய இடங்களில் கூறப்படுகிறது. இப்பாசுரத்தின் ஈடு வியாக்கியானத்தில் இவ்வார்த்தை இடம்பெறவில்லை.

2. "மோர் உள்ளதனையும் சோறேயோ" என்பதன் விளக்கத்தை எண் 562ன் அடிக்குறிப்பில் காண்க. இதே போன்ற வார்த்தையை எம்பெருமானார் அருளிச்செய்ததாக எண் 791ல் கூறப்படுகிறது.

[793]

(திருக்கண்ணபுரத்து அண்டவாணன் அமரர் பெருமானையே) प्रतिमास्वप्रबुद्धानां **(ப்ரதிமாஸ்வப்ரபு$_3$க்$_3$க$_4$நாம்) இதுக்கு ஆளவந்தார் அருளிச் செய்யும்படி "அம்மேட்டிலும் ஏறிப்பாயா நின்றால், தே$_3$ஶிகருக்குச் சொல்லவேணுமோ?"என்று.**

(திருவாய்மொழி 9-10-3 ஈடு வியாக்கியானம்)

நிகழ்டம்

"திருக்கண்ணபுரத்து அண்டவாணன் அமரர் பெருமானையே" (திருக்கண்ணபுரத்தில் எழுந்தருளியுள்ளவன் உலகங்களுக்குத் தலைவனாய், நித்யசூரிகளுக்கு நாதனானவன்) என்று நம்மாழ்வார் அருளிச் செய்துள்ளார். எம்பெருமானுடைய எளிமை முதலிய கல்யாணகுணங்களை அனுபவிப்பதற்கு நித்யசூரிகளும் வரும்படியான பெருமை உடையது திருக்கண்ணபுரம் என்று விளக்கிய உரையாசிரியர், எளியவர்களான உலகோர்களுக்காகப் பூவுலகில் அர்ச்சாவதாரமாக எழுந்தருளியிருக்கின்ற எம்பெருமானுடைய நிலை, மேன்மையின் எல்லையில் நிற்பவர்களான நித்யஸூரிகள் அனுபவிக்கப் பயன்படுமோ என்ற ஐயத்திற்கு ஆளவந்தார் அருளிய **வார்த்தை***யை விடையாக எடுத்துக் கூறுகிறார்.*

விளக்கம்

"அக்நௌ திஷ்டதி விப்ராணாம் ஹ்ருதி திஷ்டதி யோகிநாம். ப்ரதிமாஸ்வப்ரபுத்தாநாம் ஸர்வத்ர ஸமதர்சிநாம்" (அந்தணர்களுக்கு வேள்வியிலும், யோகிகளுக்கு உள்ளத்திலும், ஞானமற்றவர்களுக்கு விக்கிரகங்களிலும், ஞானிகளுக்கு எல்லாவிடத்திலும் எம்பெருமான் இருக்கிறான்) என்ற பிரமாணத்தின்படி, அர்ச்சாவதாரமாக எழுந்தருளியுள்ள நிலை ஞானம் அற்றவர்களுக்குத்தானே! ஞானம் மிக்கவர்களான நித்யஸூரிகளுக்கு அர்ச்சசாவதாரத்தால் என்ன பயன்? என்றதற்கு **ஆளவந்தார்,** *"ஞானம் அற்றவர்களுக்கும்கூட அர்ச்சாவதாரத்தை அனுபவிக்கமுடியும் என்றால், ஞானத்தில் மிக்கவர்கள் (இன்னும் நன்றாக) அனுபவிக்கமுடியும் என்பதைக் கூறவும் வேண்டுமோ? ஞானம் அற்றவர்களான மேட்டிலும் ஏறிப்பாய்கிறது எனும் போது வல்லவர்களான நித்யசூரிகளிடம் (பள்ளத்தில்) பாய்வது சொல்லவும் வேண்டுமோ?" என்று அருளிச் செய்தார். (ப்ரதிமாஸு அப்ரபுத்தாநாம் அபி என்று ஒரு அபி சப்தத்தைச் சேர்த்து இவ்வர்த்தம் அருளிச்செய்தார் ஆளவந்தார். ஞானமற்றவர்களுக்கும்கூட ப்ரதிமைகளில் (அர்ச்சை=பொம்மை) எம்பெருமான் சேவை சாதிக்கிறான் என்றால், ஞானம் உள்ளவர்களுக்குக் கேட்கவேண்டுமோ? என்பது ஆளவந்தார் அருளிச்செய்யும் விளக்கமாகும்.*

[794]

(அசுரர் இத்யாதி) "இவர் இப்போது அறிந்தபடி எங்ஙனே?" என்று கேட்க, "விடுகாதானாலும் தோடிட்டு வளர்ந்த காது என்று தெரியும் காண்!" என்று அருளிச் செய்தருளின வார்த்தை.

(திருவாய்மொழி 10-1-1 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

"அசுரரைத் தகர்க்கும் தோளுநான்குடை" (அசுரர்களைத் தகர்க்கும்படி வலிமை பொருந்திய நான்கு தோள்களை உயைவன்) என்று திருமோகூர் எம்பெருமானைப் போற்றுகின்றார் நம்மாழ்வார். இதுபற்றி ஒரு **ஸம்வாதம்** *கூறப்பெறுகிறது.*

விளக்கம்

*"எம்பெருமானுடைய தோள்களைக் கண்ட மாத்திரத்திலேயே அத்தோள்கள் அசுரர்களைத் தகர்க்கும் வலிமை பொருந்தியது என்று ஆழ்வார் எப்படி அறிந்து கொண்டார்?" என்று (**நம்பிள்ளை**) கேட்க, "வளர்ந்து நீண்டு தொங்குகின்ற காதில் தோடு அணியவில்லையானாலும், அது தோடிட்டு வளர்ந்த காது என்று தெரியுமல்லவா? அதுபோலத் தோள்களைப் பார்த்தவாறே அது அசுரர்களைத் தகர்க்கும் வலிமை பொருந்திய தோள்கள் என்பது தெரியும்" என்று (**நஞ்சீயர்**) விடை அருளிச் செய்தார்.*

[795]

"ஒருநல்சுற்றம் என்கிற திருமொழியிலே பல திருப்பதிகளையும் அருளிச் செய்த இதுக்குக் கருத்து என்?" என்று சீயர் ப$_4$ட்டரைக் கேட்க, "பிறந்தகத்தில் நின்றும் புக்ககத்திற்குப் போம் பெண்பிள்ளைகள் ப$_8$ந்து$_4$க்கள் இருந்த இடமெங்கும் கண்டு வினவப்போமா போலே, ப்ராப்யபூ$_4$மி அணித்தானவாறே திருப்பதிகள் தோறும் புகுகிறார்" என்று அருளிச் செய்தார்.

(திருவாய்மொழி 10-2 ஈடு வியாக்கியான ப்ரவேசம்)

நிகழிடம்

நம்மாழ்வார் "பண்டை நாளாலே' எனும் திருவாய்மொழி (9-2) தொடங்கி திருப்புளிங்குடி, திருக்காட்கரை, திருமூழிக்களம், திருநாவாய், திருக்கண்ணபுரம், திருமோகூர், திருவனந்தபுரம் என்று பல திவ்யதேசங்களை அனுபவித்துள்ளார். இத்தொடர்பில் 'மாறன் பணித்த தமிழ் மறைக்கு ஆறு அங்கம் கூற அவதரித்த'வரான திருமங்கையாழ்வாரும் இதே போல் பல திவ்யதேசங்களை அனுபவித்துள்ளது பற்றி ஒரு **ஸம்வாதம்** *எடுத்துக் காட்டப் பெறுகிறது.*

விளக்கம்

திருமங்கையாழ்வார் 'ஒருநல் சுற்றம்' என்று தொடங்கும் (10-1) திருமொழியில் ஒவ்வொரு பாசுரத்திலும் இரண்டு திவ்யதேசங்கள் வீதம் ஒன்பது பாசுரங்களில் பதினெட்டு திவ்யதேசங்களை அனுபவித்துள்ளார். "பல திவ்யதேசங்களை இப்படி ஒரே சமயத்தில் திருமங்கையாழ்வார் அனுபவிப்பதற்குக் காரணம் என்ன?" என்று நஞ்சீயர் பட்டரைக் கேட்டார். அதற்கு பட்டர், "பிறந்தகத்திலிருந்து புக்ககத்திற்குப் போகும் பெண்ணானவள், தங்கள் உறவினர்கள் இருக்குமிடத்திற்கெல்லாம் சென்று, அவர்களிடம் கூறிக்கொண்டு விடைபெற்றுச் செல்வதுபோல, ஆழ்வாரும், தாம் அடைய வேண்டிய பரமபதத்திற்குச் செல்லும் பொழுது கிட்டிவிட்டதாகையால், திவ்யதேசங்கள் தோறும் புகுகிறார்" என்று விடை பகர்ந்தார்.

[796]

(நாளும் இத்யாதி) ஒரு திருவேட்டையிலே ப$_4$ட்டர் திருவூற்றங்கரையிலே பேரோலக்கமாக இருக்க, "ஸந்த்$_4$யை ஆனது" என்று சிலர் விண்ணப்பம் செய்ய, "நாம் பெருமாள் அழகிலே துவக்குண்டு, இன்று ஒரு நாளும் கர்த்தவ்யத்திலே அல்பம் தாழ நின்றோம் என்றால் யமன் கேட்கவோ? ஒரு ராஜா இருந்து நாட்டுக் கணக்குக் கேட்டுக் கொடு வாரா நின்றால் ராஜாவுக்கு அந்தரங்க$_3$னாயிருப்பான் ஒருவன் பேரை வாசித்தால், 'ஓங்காண்! அதுகிடக்க மேலே சொல்!' என்றால் பின்னை ஒரு காலமும் அப்பேர் எடுத்து வாசிக்கப் பெறாது காண்!" என்றாராம். இந்த ப்ரஸங்க$_3$த்திலே 'உனக்காகித் தொண்டுபட்ட நல்லேனை வினைகள் நலியாமை நம்பு நம்பீ' என்று அருளிச் செய்தார்.

(திருவாய்மொழி 10-2-1 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

"கேசவா என்ன நாளும் கொடுவினை செய்யும் கூற்றின் தமர்களும் குறுக்கில்லார்" (கேசவா என்று எம்பெருமானுடைய திருநாமத்தைச் சொன்னால், நாள்தோறும் கொடிய செயல்களைச் செய்யும் யமனுடைய தூதர்களும் கிட்டமாட்டார்கள்) என்று நம்மாழ்வார் அருளிச் செய்துள்ளார். இத்தொடர்பில் ஓர் ***ஐதிஹ்யம்*** *எடுத்துக் காட்டப்பெறுகிறது.*

விளக்கம்

ஒரு திருவேட்டை உத்ஸவத்தன்று, பட்டர் திருவூற்றங்கரையில் பெரிய திரளுடன் வீற்றிருந்து எம்பெருமானுடைய திருக்கல்யாண குணங்களை விளக்கி அனுபவித்துக் கொண்டிருந்தார். அப்போது மாலை சூரியன் மறையும் நேரம் வந்தவாறே, சிலர், "ஸந்த்யாவந்தனம் செய்வதற்குரிய நேரம் வந்துவிட்டதே!

(எனவே உபந்யாஸத்தை நிறுத்திவிட்டு ஸந்த்யாவந்தனம் செய்யச் செல்லலாமே!)" என்று விண்ணப்பித்தனர். அதைக் கேட்ட பட்டர், "நாம் பெருமாள் அழகில் ஈடுபட்டு, இன்று ஒருநாள் செய்யவேண்டிய காரியத்தைச் செய்வதற்குத் தாமதித்தோம் என்றால், இதை யமன் குற்றமாகக் கணக்கிட்டுக் கேட்டு விடுவானோ? ஓர் அரசன் நாட்டின் கணக்குகளைக் கேட்டுவரும்போது, அவன் முன்னே வரி செலுத்தத்தவறியவர்கள் பட்டியலைப் படித்துக் கொண்டு வரும்போது, அரசனுக்கு மிக வேண்டியவனாக இருப்பவன் ஒருவனுடைய பெயரை வாசித்தால், 'ஓங்காண்! அந்தப் பெயர் இருக்கட்டும்; மேலே அடுத்தவன் பெயரை வாசி' என்று அரசன் கூறிவிட்டால், பிறகு மறுபடியும் அப்பெயரை அரசன் முன்னே வாசிக்க முடியாதன்றோ! (அதுபோல எம்பெருமானுக்கு மிகவும் வேண்டிய அடியவர்களான நம்மீது யமன் குற்றப்பட்டியல் வாசிக்கமுடியுமோ?)" என்றார். இத்தொடர்பில், 'சொல்லாய் திருமார்பா! உனக்காகித் தொண்டுபட்ட நல்லேனை வினைகள் நலியாமை நம்பு நம்பீ' (பிராட்டியைத் திருமார்விலே கொண்டவனே! இதற்கு ஒரு பதில் கூறவேண்டும். உனக்கு அடிமைப் பட்டவனான என்னைப் பாவங்கள் நெருங்காதபடி அங்கீகரித்தருள வேண்டும்) என்று திருமங்கையாழ்வார் அருளிச் செய்துள்ள (பெரிய திருமொழி 6-3-9) பாசுரத்தை அருளிச் செய்தார்.

[797]

(குன்று நேர் மாடம்) "பிள்ளை திருநறையூர் அரையரும் பட்டரும் உள்ளே புக்கு ப்ரத₃க்ஷிணம் பண்ணாநிற்க, நான் ஸேவித்துப் போனேன்; அல்லாதாரெல்லாம் விரைந்து சடக்கென வாராநிற்க, இவர்கள் திருமாளிகைகளையும் திருக்கோபுரங்களையும் கண்ணாலே பருகுவாரைப்போலே பார்த்துக் கொண்டு வருகிறபடியைக் கண்டு, 'அல்லாதார்க்கும் இவர்களுக்கும் செயல் ஒத்திருக்கச் செய்தே, இவர்களான வாசி என்!" என்றிருந்தேன்' என்றருளிச் செய்வர்.

(திருவாய்மொழி 10-2-2 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

திருவனந்தபுரத்தை வருணிக்கின்ற ஆழ்வார் "குன்று நேர் மாடம்" என்று அருளிச்செய்கிறார். எம்பெருமான் எழுந்தருளியுள்ள இடங்கள் மிகவும் ஈடுபட்டு வர்ணிக்க வேண்டுமளவுக்கு இனிமையாக இருக்கும் என்பதற்கு ஓர் **ஐதிஹ்யம்** *காட்டப்பெறுகிறது.*

விளக்கம்

எண் 42ன் விளக்கம் பார்க்க.

[798]

(சேர் செருந்தி) பிள்ளை ஜநநாதப்₂ரம்மராயர் திருமுடிக்குறையிலே மரம் வெட்டுவியாநிற்க எம்பார் அருளிச் செய்த வார்த்தையை நினைப்பது.

(திருவாய்மொழி 10-2-2 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

திருவனந்தபுரத்தின் இயற்கை அழகை வருணிக்கும் நம்மாழ்வார் "சேர் செருந்தி" என்று அருளிச்செய்துள்ளார். திவ்யதேசங்களில் உறையும் தாவரங்களும் மிகவும் விரும்பத்தக்கவை என்றுரைத்த உரையாசிரியர், இத் தொடர்பில் ஓர் **ஐதிஹ்யம்** *காட்டுகிறார்.*

விளக்கம்

எண் 622ன் விளக்கம் பார்க்க.

[799]

ஆச்சான் திருவாலிநாடு த₃ாஸர் நல்லன சில சுரவன் பாக்குகளை ப₄ட்டருக்குக் கொடுவந்து கொடுத்தாராய், அவற்றைக் கண்டு, "இவை இருந்தபடி என்! திருவருள் கமுகினின்றும் வந்தவையோ" என்று அருளிச் செய்தாராம்.

(திருவாய்மொழி 10-2-2 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

"குருந்து சேர் செருத்தி புன்னை மன்றலர்பொழில் அனந்தபுரநகர்" (குருந்தோடு சேர்ந்த செருந்தி, புன்னை, மன்றிலே அலர்ந்த பொழில் இவற்றை உடைய திருவனந்தபுரம்) என்று ஆழ்வார் அருளிச் செய்துள்ளார். இவை அனைத்தும் எம்பெருமானுடைய கடாக்ஷத்தாலேயே செழித்து வளர்கின்றன என்பதற்கு ஓர் **ஐதிஹ்யம்** *கூறப்படுகிறது.*

விளக்கம்

ஆச்சான் திருவாலிநாடு தாஸர் என்பவர் மிகவும் நல்லனவான சில உயர்ந்த பாக்குகளை பட்டரிடம் ஸமர்ப்பித்தார். அவற்றின் செழிப்பைக் கண்ட பட்டர், "இப் பாக்குகள் எவ்வளவு நன்றாக இருக்கின்றன! இவை திருவருள் கமுகிலிருந்து வந்தவையோ!" என்றாராம். (திருப்புலியூர் எனும் திவ்யதேசத்தின் பாக்கு மரங்களை வருணிக்கின்ற ஆழ்வார் 'திருவருள் கமுகு' என்று (திருவாய்மொழி 8-9-6) வருணித்துள்ளார். தண்ணீரால் வளருகை அன்றிக்கே, பெருமானும் பிராட்டியும் கடாக்ஷிக்க அதனாலே வளருகின்ற கமுகு என்று அங்கு கருத்து உரைக்கப்பட்டுள்ளது. (கமுகு = பாக்குமரம்.) அப்படிப்பட்ட கமுகிலே இருந்து வந்த பாக்குகளோ இவை! என்பது பட்டர் அருளிச் செய்ததன் கருத்தாகும்.)

[800]

(எந்தை நாமம்) சீயர் ப$_4$ட்டரை "திருநாமம் சொல்லும் போது ப்ரயதனாய்க் கொண்டு சொல்ல வேணுமோ?" என்று கேட்க, "கங்கை$_3$யிலே முழுகப் போமவனுக்கு வேறொரு உவர்க்குழியிலே முழுகிப்போக வேணுமோ? மேலுண்டான நன்மையைத் தருகிற இது அதி$_4$கார ஸம்பத்தியையும் தரமாட்டாதோ?" என்றருளிச் செய்தாராம்.

(திருவாய்மொழி 10-2-5 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

"எண்ணுமின் எந்தை நாமம்" என்று ஆழ்வார் அருளிச்செய்துள்ளார். எம்பெருமானுடைய திருநாமத்தைச் சொல்லுவதற்குத் தகுதி எவையும் தேவை இல்லை என்றுரைத்த உரையாசிரியர், இத்தொடர்பில் **ஸம்வாதம்** *ஒன்றை எடுத்துக் காட்டுகிறார்.*

விளக்கம்

எண் 66ன் விளக்கம் பார்க்க.

[801]

(இற்பிறப்பறுக்கும்) ஒரு செட்டியை 'இவன் தமிழுக்கு தே$_3$ஶிகனாயிருக்கும்' என்று ப$_4$ட்டருக்குக் காட்டினார்களாய், "உனக்கு ஏதேனும் அபேக்ஷை உண்டாகில் கேட்கலாகாதோ?" என்ன, "சிலர் காண்கிற தே$_3$ஹத்துக்கு அவ்வருகு ஆத்மாவும் இல்லை, த$_4$ர்மாத$_4$ர்மங்களும் இல்லை, ஈஶ்வரனும் இல்லை என்றிரா நின்றார்கள். சிலர், இத்தே$_3$ஹம்தான் அஸ்த்தி$_2$ரம் என்று இதின் தோ$_3$ஷத்தை த$_3$ர்ஶித்து அவ்வருகே ஸ்த்தி$_2$ரமாயிருப்பது ஒன்றைப் பற்ற வேணும் என்றிரா நின்றார்கள். விஷயம் ஒன்றாயிருக்க இவ்விரண்டு பரிமாற்றமும் நடக்கிறபடி எங்ஙனே?" என்ன, मम माया दुरत्यया **(மம மாயா து$_3$ரத்யயா) என்றும்** मायमेतां तरन्ति ते **(மாயாமேதாம் தரந்தி தே) என்றும் சொல்லுகிறபடியே, ப$_4$ாக்$_3$யவான்களுக்கு இதினுடைய தோ$_3$ஷதர்ஶனத்தைப் பண்ணிக் கழித்துக் கொள்ளுகைக்கும், பாக்யஹீனர்க்கு இதிலே போ$_4$க்$_3$யதாபு$_3$த்$_3$தி$_4$ பண்ணி அனர்த்த$_2$ப்படுகைக்கும் உடலாம்படி கர்மாநுகு$_3$ணமாக இத்தை இடையெடுத்துக் காணும் ஈஶ்வரன் பண்ணிற்று" என்று அருளிச் செய்தார்.**

(திருவாய்மொழி 10-2-5 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

"எண்ணுமின் எந்தை நாமம் இற்பிறப்பு அறுக்கும்" (எம்பெருமானுடைய திருநாமத்தைக் கூறுங்கள்; தாழ்ந்ததான இப்பிறவி நீங்கும்) என்று ஆழ்வார் அருளிச் செய்துள்ளார். இவ்வுடலின் தாழ்வினைக் கண்டும் இதில் வெறுப்பு

ஏற்படாமைக்குக் காரணம் என்ன? என்பதற்கு விளக்கமாக ஓர் **ஐதிஹ்யம்** *காட்டப்பெறுகிறது.*

விளக்கம்

ஒரு செட்டியை 'இவன் தமிழில் மிகவும் வல்லவன்' என்று பட்டரிடம் அறிமுகப்படுத்தினார்கள். பட்டர் அவனைப் பார்த்து, "உனக்கு ஏதேனும் ஐயம் இருக்குமாயின் கேட்கலாமே!" என்றார். அவன், "கண்ணால் காண்கின்ற உடலுக்கு மேற்பட ஆத்மா என்று ஒன்று இல்லை; தர்மமும் அதர்மமும் இல்லை; இறைவனும் இல்லை என்று சிலர் கூறுகின்றார்கள். சிலர் நம்முடைய உடல் நிலையற்றது என்று இதனுடைய தாழ்வை அறிந்து கொண்டு, இதற்கும் மேற்பட நிலையானது ஒன்றைப் பற்ற வேண்டும் என்று கூறுகின்றார்கள். உண்மை என்பது இவ்விரண்டில் ஏதோ ஒன்றாய் இருக்க, ஒரே உடலைப் பற்றி இவ்விரண்டு கொள்கைகளும் ஏற்பட்டபடி எங்ஙனே?" என்று கேட்டான். அதற்கு பட்டர் "மம மாயா துரத்யயா (என்னுடைய மாயை கடக்க அரியது) என்று கீதையில் (7-14) கூறிய எம்பெருமானே 'மாமேவ யே ப்ரபத்யந்தே மாயாம் ஏதாம் தரந்தி தே' (என் ஒருவனையே எவர்கள் பற்றுகிறார்களோ அவர்கள் இந்த மாயையைக் கடக்கிறார்கள்) என்றும் கூறியிருக்கிறான் அன்றோ! (கடக்க அரியது என்று கூறியவனே கடப்பதற்கு வழியும் கூறியிருக்கிறான்.) எனவே நல்லவர்கள் உடலின் தாழ்வினைக் கண்டு இதனைக் கழித்துக் கொள்வதற்கும், மற்றவர்கள் இவ்வுடலிலேயே இனிமை உண்டு என்று மயங்கி அழிந்து போவதற்கும் உறுப்பாக அவரவர்கள் செய்த வினைப்பயன்களை நிறுத்து அளவிட்டு எம்பெருமானே செய்து வைத்த மாயைதான் இவை. புண்ணியம் செய்தவர்கள் எம்பெருமானைப் பற்றி உய்வு பெறும்படியாகவும், பாவம் செய்தவர்கள் அவனை உணராமல் உடலில் இனிமையுள்ளதாகக் கருதி வீழ்ந்து போகும்படியாகவும் எம்பெருமானே செய்துள்ளான்" என்று அருளிச் செய்தார்!

[802]

(பாதம் இத்யாதி) திருவத்$_4$யயனம் பாடா நிற்க, இத்தைக் கேட்டருளி, ஆளவந்தார், 'நமக்கு ஆழ்வாரோடே ஒரு ஸம்ப$_8$ந்த$_4$ம் உண்டாகவேணும்' என்று அப்போதே ஸ்ரீபாத$_8$த்தை உடையாரையும் கூட்டிக் கொண்டு எழுந்தருளினார்.

(திருவாய்மொழி 10-2-8 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

'அனந்தபுரம் படமுடை அரவில் பள்ளி பயின்றவன் பாதம் காண நடமினோ நமர்கள் உள்ளீர் நாம் உமக்கு அறியச் சொன்னோம்"

1. இவ்வைதிஹ்யம் மற்றோரிடத்திலும் உள்ளது. எண் 207 பார்க்க.

(திருவனந்தபுரத்தில், படத்தையுடைய ஆதிசேஷன்மீது கண்வளருகிறவனுடைய திருவடிகளைச் சேவிப்பதற்கு நம்முடையவர்கள் செல்லுங்கள்; நாம் உங்களுக்கு அறியும்படி சொல்கிறோம்) என்று ஆழ்வார் அருளிச் செய்துள்ளார். இத்தொடர்பில் ஓர் **ஐதிஹ்யம்** கூறப்பெறுகிறது.

விளக்கம்

இப்பாசுரத்தைத் திருவரங்கம் பெரியகோயிலில் திருஅத்யயன உத்ஸவத்தின் போது அரையர் ஒருவர் பாடுவதைக் கேட்ட ஆளவந்தார், 'ஆழ்வார் தம்மோடு தொடர்பு உடையவர்களைத் திருவனந்தபுரத்திற்குச் சென்று எம்பெருமானைச் சென்று சேவிக்குமாறு அருளிச்செய்கிறார். அப்படிச் சேவிப்பதன் மூலம் நாம் ஆழ்வாருடன் தொடர்பு உடையவர்களாக ஆவோம்' என்று எண்ணி, உடனே தம்முடைய சீடர்களையும் அழைத்துக் கொண்டு திருவனந்தபுர யாத்திரை எழுந்தருளினார். (ஆழ்வாருடைய பாசுரத்தில் 'நமர்கள் உள்ளீர் (நம்மைச் சேர்ந்தவர்கள்) - நடமினோ' என்று அருளிச்செய்யப் பெற்றுள்ளமையைக் கருத்தில் கொண்டு ஆளவந்தார் இவ்வாறு செய்தார்.)

[803]

(நாம் உமக்கு இத்யாதி) ज्ञानानि अल्पी भविष्यन्ति **(ஜ்ஞாநாநி அல்பீ ப$_4$விஷ்யந்தி) அவன் போனால் பின்னைக் கொள்வாரும் கொடுப்பாரும் இன்றிக்கே பரிமாற்றம் அறும். இதுக்கு ப$_3$ட்டர் அருளிச் செய்ததாகப் பரிஹையப்பர், "ஒரு மதிப்பன் தலையிலே கிடவாதவன்று கொள்வார் கொடுப்பார் இன்றியே எளிவிலையனாய்ப்போம்."**

(திருவாய்மொழி 10-2-9 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

"நாம் உமக்கு அறியச் சொன்ன நாள்களும் நணியவான" (நீங்கள் அறியும்படி நாம் கூறின நாள்களும் குறுகி விட்டன) என்று ஆழ்வார் அருளிச் செய்துள்ளார். "நான் பரமபதம் போக வேண்டிய நாள் நெருங்கிவிட்டது. நான் பரமபதம் சென்று விட்டால் உங்களுக்கு நன்மை கூறுவார் எவரும் இலர்" என்று ஆழ்வார் கூறுவதாக விளக்கம் அளித்த உரையாசிரியர், பாரதப்போரின் முடிவில் பீஷ்மர் அம்புப் படுக்கையில் படுத்திருந்தபோது கண்ணபிரான் தருமரை நோக்கிக் கூறிய வார்த்தைகளை மேற்கோளாகக் காட்டுகிறார். "தஸ்மிந் அஸ்தமிதே பீஷ்மே கௌரவாணாம் துரந்தரே, ஜ்ஞாநாநி அல்பீ பவிஷ்யந்தி ததஸ்த்வாம் சோதயாம்யஹம்" (கௌரவர்களின் தலைவரான பீஷ்மர் மறைந்து விட்டால் ஞானங்களும் குறைந்துவிடும். எனவே நான் உன்னை அவசரப்படுத்து கிறேன்) என்று கண்ணபிரான் தருமனிடம் கூறி, பீஷ்மரிடம் அனுப்புகிறான். இதுபற்றி பட்டர் அருளிச்செய்த **வார்த்தை** கூறப்பெறுகிறது.

விளக்கம்

இங்கு 'ஜ்ஞாநாநி அல்பீ பவிஷ்யந்தி' என்றுள்ளதற்கு, "உயர்ந்த ஞானம் உள்ளவர்களுடைய அறிவுரைகளே பயனுள்ளவை. அப்படி உயர்ந்த ஞானம் இல்லாதவர்கள் ஏதேனும் சொன்னாலும் அச்சொல் கொள்வார் கொடுப்பார் இல்லாமல் மதிப்பற்றதாய் வீணாகவே போகும்" என்று **பட்டர்** *அருளிச் செய்தார் என்று* **பரிஞையப்பர்** *என்பவர் கூறினார்.*

[804]

(துணை பிரிந்தார் துயரமும்) "துணை என்றால் த்₃விஸ்லிஷ்ட₂மாய் அன்று காண் இருப்பது!" என்னும் ஆச்சான்.

(திருவாய்மொழி 10-3-4 ஈடு வியாக்கியானம்)

நிகழ்டம்

கண்ணனைப் பிரிந்து துன்பப்படுகின்ற கோபிகையின் பாவனையில் பாசுரம் அருளிச்செய்யும் நம்மாழ்வார், "துணை பிரிந்தார் துயரமும் நினைகிலை கோவிந்தா" என்றருளிச்செய்கிறார். இத்தொடர்பில் ஆச்சான் அருளிச்செய்த **வார்த்தை** *எடுத்துக்காட்டப் பெறுகிறது.*

விளக்கம்

எண் 228ன் விளக்கம் பார்க்க!

[805]

(விரும்பி) பிள்ளை அமுதனார் "ஒரு பசுவின் காலிலே முள் பாய்ந்தால் இடையன் தலைகாண் சீக்கொள்ளுவது!" என்பராம்.

(திருவாய்மொழி 10-3-4 ஈடு வியாக்கியானம்)

நிகழ்டம்

பசுக்களிடத்திலேயே அன்பையெல்லாம் கொண்டிருக்கின்ற கண்ணபிரான் தாங்கள் படும் துயரத்தையும் நினைப்பதில்லை என்று ஆய்ச்சிகள் கூறுவதாக ஆழ்வார் பாசுரம் அருளிச் செய்துள்ளார். இங்கு 'தொழுத்தனில் பசுக்களையே விரும்பி' என்று பாசுரத்தில் உள்ள ஏகாரத்தைக் கருத்தில் கொண்டு பிள்ளை அமுதனார் அருளிச்செய்த **வார்த்தை** *எடுத்துக் காட்டப்பெறுகிறது.*

விளக்கம்

"ஒரு பசுவின் காலில் முள் தைத்தால், அப்பசுவினுடைய இடையன் தலையில் சீப்பிடிக்கும்" என்பராம் அமுதனார். (முள் தைத்ததனால் பசு படும் வேதனையை

1. இருபத்து நாலாயிரப்படியிலும் ஆச்சான் அருளிச்செய்த இவ்வார்த்தை குறிப்பிடப்பெற்றுள்ளது.

விட, இடையன் அதிகமான வருத்தத்தை அடைவான்; அதுபோலக் கண்ணனும் பசுக்களின் துன்பத்தையே பொறுக்கமாட்டான். ஆனால் இடைப் பெண்களாகிய நம்முடைய துன்பங்களைப் பொருட்படுத்துவதில்லை என்பது கருத்து.)[1]

[806]

(இவையும் பத்து அவற்றின் சார்வே) "அவற்றினருகே இதுவும் ஒரு திருவாய்மொழியே!" என்று ஆஶ்சர்யத்திலேயாக்கியாய்த்துச் சீயர் அருளிச் செய்ததும் வ்யாக்₂யானம் பண்ணிற்றும்.

(திருவாய்மொழி 10-3-11 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

கண்ணபிரானுக்குக் கம்ஸனால் என்ன தீங்குவிளையுமோ என்று அஞ்சி, ஆய்ச்சிகள் கண்ணபிரானைப் பசுமேய்க்கப் போக வேண்டாம் என்று பரிவுடன் கூறுகின்ற வார்த்தைகளை உட்கொண்டு நம்மாழ்வார் அருளிச் செய்த பதிகம் 'வேய்மருதோளிணை' என்று தொடங்கும் பதிகமாகும். இப்பதிகத்தின் இறுதிப் பாசுரத்தில் நம்மாழ்வார் 'இவையும் பத்து அவற்றின் சார்வே' என்று அருளிச் செய்துள்ளார். 'இப்பதிகமும் மற்றைப் பதிகங்களுக்குக் கூறிய பயனைத் தரும்' என்று விளக்கிய உரையாசிரியர் நஞ்சீயர் அருளிய **நிர்வாஹம்** ஒன்றையும் எடுத்துக் காட்டுகிறார்.

விளக்கம்

"மற்ற பதிகங்களை விட இப்பதிகம் கருத்தாழத்தில் உயர்ந்து ஆதலின், அவற்றின் சார்வு - மற்ற பதிகங்களுக்கு இடையே, இவையும் பத்தே - இப்பதிகமும் ஒரு பதிகமே! என்று ஆழ்வாரே ஆச்சர்யத்துடன் அருளிச் செய்கிறார்" என்று **நஞ்சீயர்** விளக்கம் அளித்ததோடு மட்டுமல்லாமல், இப்படியே வியாக்கியானமும் செய்தருளியுள்ளார்.[2]

[807]

அங்ஙன் அன்றிக்கே, பிள்ளான் ஓர் உருவிலே, "நீ பசுமேய்க்கப் போக வேண்டா என்றாள்; ஆகில் தவிர்ந்தேன் என்றான்; இவன்தனை ஸுலப₄ன் இல்லை கிடீர், இவன் ப₄க்திலப₄்யன் என்னுமிடம் நிஶ்சிதம் என்கிறார்" என்று பணித்தான்.

(திருவாய்மொழி 10-4 வியாக்கியான ப்ரவேசம்)

1. இருபத்து நாலாயிரப்படியிலும் அமுதனார் அருளிச்செய்த இவ்வார்த்தை குறிப்பிடப்பெற்றுள்ளது.
2. நஞ்சீயர் அருளிச்செய்த ஒன்பதினாயிரப்படியில் இவ்விளக்கமே இடம்பெற்றுள்ளது.

Released by Maaran's Dog ,Toronto , Canada

நிகழிடம்

"சார்வே தவநெறி" என்று தொடங்கும் பதிகத்தின் கருத்தைப் பலவாறு விளக்கியருளுகின்ற உரையாசிரியர், பிள்ளான் அருளிச் செய்த **நிர்வாஹம்** *ஒன்றை எடுத்துக் காட்டுகிறார்.*

விளக்கம்

"இதற்கு முன்னர் 'வேய்மரு தோளிணை' என்று தொடங்கும் பதிகத்தில் ஆய்ச்சிகள் கண்ணபிரானுக்குக் கம்ஸனால் என்ன தீங்கு விளையுமோ என்று அஞ்சி மிகவும் பரிவு கொண்டு, அவனைப் பசுமேய்க்கப் போக வேண்டாம் என்று தடுத்தார்கள். அதைக் கேட்ட கண்ணபிரானும் அவர்கள் கூறியதற்கு இசைந்து பசுமேய்க்கப் போவதில்லை என்று கூறினான். உடனே ஆழ்வார், அவனைப்போல் எளியவன் வேறு யாரும் இலன்; அவன் பக்தியாலே அடையத் தக்கவ்ன் என்பதை அடுத்த பதிகமான 'சார்வே தவநெறி' என்று தொடங்கும் பதிகத்தில் அருளிச் செய்கிறார்" என்று **பிள்ளான்** *விளக்கம் அளித்தார்.*[1]

[808]

ஆளவந்தார் அருளிச் செய்ததாகத் திருமாலையாண்டான் பணிப்பது - ப்ரபத்தி விஷயமாகவாய்த்து 'வீடுமின்முற்றவும்'. உடையவரும் அப்படியே ப்ரபத்தி விஷயமாக அருளிச் செய்து கொண்டு போந்து, $ப_4$ாஷ்யம் அருளிச் செய்த பின்பு, ரஹஸ்யோபாயத்தை வெளியிட ஒண்ணாது என்று வீடுமின் முற்றத்தையும் $ப_4$க்தி விஷயமாக்கி அருளிச் செய்தார்.

(திருவாய்மொழி 10-4 ஈடு வியாக்கியான ப்ரவேசம்)

நிகழிடம்

'சார்வே தவநெறிக்குத் தாமோதரன் தாள்கள்' என்று தொடங்கும் இப்பதிகத்தில் பிரபத்தியோகத்தை அருளிச்செய்கிறார் ஆழ்வார். 'வீடுமின் முற்றவும்' என்று தொடங்கும் இரண்டாம் பதிகத்தில் கூறப்பட்ட பிரபத்தியை இங்கு மறுபடியும் கூறித் தலைக்கட்டுகிறார் என்று விளக்கிய உரையாசிரியர், இத்தொடர்பில் ஓர் **நிர்வாஹம்** *கூறுகிறார்.*

விளக்கம்

எண் 420ன் விளக்கம் பார்க்க.

[809]

"ஆக, முதல் திருவாய்மொழியில் சொன்ன ப்ராப்யஸ்வருபத்தையும், ப்ராப்தி $ப_2$லமான கைங்கர்யத்தையும் கெடுமிடரிலே 'படமுடையரவில் பள்ளி பயின்றவன்'

1. இருபத்துநாலாயிரப்படியிலும் பிள்ளான் அருளிச்செய்தமை குறிப்பிடப்பெற்றுள்ளது.

என்றும், 'கடைத்தலை சீய்க்கப் பெற்றால்' என்றும் அருளிச் செய்து, அக்கைங்கர்யத்தில் களை பறித்து, 'உன்தன் திருவுள்ளம் இடர்கெடுந்தோறும் நாங்கள் வியக்க இன்புறுதும்' என்று உத்தர க₂ண்ட₃த்தில் நமஶ்ஶப்த₃ார்த்த₂த்தை அருளிச்செய்து, கெடுமிடராலும் வேய்மருதோளிணையாலும் முதல் திருவாய்மொழியை நிக₃மித்து, சார்வே தவநெறியாலும், கண்ணன் கழலிணையாலும் வீடுமின் முற்றத்திலும் பத்துடையடியவரிலும் சொன்ன ப₄க்தி ப்ரபத்திகள் ஸ்வஸாத்₄யத்தோடே பொருந்தினபடியை அருளிச்செய்தார்" என்று ஆளவந்தார் அருளிச் செய்ததாகத் திருமாலையாண்டான் பணிப்பது.

(திருவாய்மொழி 10-4 ஈடு வியாக்கியான ப்ரவேசம்)

நிகழிடம்

'சார்வே தவநெறிக்குத் தாமோதரன் தாள்கள்' என்று தொடங்கும் இப்பதிகத்தில் பிரபத்தியோகத்தை அருளிச்செய்கிறார் ஆழ்வார். இதை விளக்கும் வகையில் ஆளவந்தார் அருளிச்செய்த **நிர்வாஹம்** *காட்டப்பெறுகிறது.*

விளக்கம்

நம்மாழ்வார் 'உயர்வற உயர்நலம்' என்று தொடங்கும் முதல் திருவாய்மொழியில் அடையத்தக்க பரம்பொருளின் தன்மையை 'உயர்வற உயர்நலம் உடையவன்', 'அயர்வறும் அமரர்கள் அதிபதி' - என்றிப்படிப் பலவாறாக அருளிச் செய்தார். அடையப்படும் பயனாக கைங்கர்யத்தை 'சுடரடி தொழுதெழு' என்று அருளிச் செய்தார். இதையே 'கெடுமிடராயவெல்லாம்' என்று தொடங்கும் (10-2) திருவாய்மொழியில் 'படமுடை அரவில் பள்ளி பயின்றவன்' என்று பரம்பொருளின் தன்மையையும், 'கடைத்தலை சீய்க்கப் பெற்றால்' என்று கைங்கர்யத்தையும் சொல்லி முடித்தார். துவயத்தின் பின் வாக்கியத்திலுள்ள 'நம:' எனும் சொல் எம்பெருமானுக்குச் செய்யும் கைங்கர்யத்தில் தன்னுடைய (ஜீவாத்மாவினுடைய) மகிழ்ச்சி என்கின்ற களையை நீக்குகிறது என்று கூறுவர். அப்பொருளை 'வேய்மரு தோளிணை' என்று தொடங்கும் (10-3) திருவாய்மொழியில் 'உன்றன் திருவுள்ளம் இடர் கெடுந் தோறும் நாங்கள் வியக்க இன்புறுதும்' என்று அருளிச் செய்தார். ஆக, 'உயர்வற' என்று தொடங்கும் முதல் திருவாய்மொழியில் கூறிய பொருளை, 'கெடுமிடர்', 'வேய்மரு தோளிணை' என்று தொடங்கும் திருவாய்மொழிகளில் சொல்லி முடித்தார். 'வீடுமின் முற்றவவும்' என்று தொடங்கும் இரண்டாம் திருவாய்மொழியில் பிரபத்தியையும், 'பத்துடைய அடியவர்' என்று தொடங்கும் மூன்றாம் திருவாய்மொழியில் பக்தியையும் ஆழ்வார் அருளிச் செய்தார். அவற்றை முறையே 'சார்வே தவநெறி' (10-4) 'கண்ணன் கழலிணை' (10-5) என்று தொடங்கும் திருவாய்மொழிகளில் சொல்லி, பக்திப்ரபத்திகள் அதன் பலத்தோடு

பொருந்தினபடியை அருளிச் செய்து முடிக்கிறார். (நம்மாழ்வார் தொடக்கத்தில் சொன்னவைகளையே முடிவிலும் சொல்லித் திருவாய்மொழியை முடிக்கிறார். தொடக்கத்தில் முதல்பத்தில் முதல் திருவாய்மொழியில் சொன்ன பொருள்களை முடிவில் பத்தாம் பத்தில் இரண்டு, மூன்று திருவாய்மொழி களிலும், முதல்பத்தில் இரண்டாம் திருவாய்மொழியில் சொன்ன பொருள்களை முடிவில் பத்தாம்பத்தில் நான்கு ஐந்து திருவாய்மொழிகளிலும் சொல்லி முடிக்கிறார்.) இப்படி ஆளவந்தார் அருளிச் செய்ததாகத் திருமாலையாண்டான் அருளிச் செய்வர்.

[810]

(அது நமது விதிவகையே) "அது நம்முடைய ப₄ாக்₃யாநுகு₃ணமாகவிறே" என்று அதுக்குப் பூர்வர்கள் நிர்வஹிக்கும்படி. இத்தை எம்பெருமானார் கேட்டருளி, "இத்திருவாய்மொழியில் மேலோடுகிற ரஸத்தோடு சேராது. நாம் விதி₄த்தபடியே செய்வானாயிருந்தான் என்கிறார்" என்று அருளிச் செய்வர்.

(திருவாய்மொழி 10-6-1 ஈடு வியாக்கியானம்)

நிகழ்டம்

"ஆழியான் அருள் தருவான் அமைகின்றான் அது நமது விதிவகையே" (நம்முடைய விதிவகையே எம்பெருமான் அருள் செய்யப் பாரிக்கிறான்) என்று நம்மாழ்வார் அருளிச் செய்துள்ளார். இங்கு 'விதிவகையே' என்பதற்கு இரண்டு **நிர்வாஹங்கள்**[1] *காட்டப்பெறுகின்றன.*

விளக்கம்

"எம்பெருமான் நம்முடைய புண்ணியங்களுக்குத் தகுதியாக நமக்கு அருள் செய்யப் பாரிக்கிறான்" என்று **பூர்வாசாரியர்கள்** *பொருள் உரைத்தனர். (விதி என்பது பாக்யத்தைக் குறிக்கிறது என்ற கருத்தில் இவ்வாறு அருளிச் செய்யப் பட்டது.)*

எம்பெருமானார், *"இத்திருவாய்மொழி முழுதும் எம்பெருமான் அடியவர்களுக்குப் பரதந்த்ரனாய் (வசப்பட்டவனாய்) இருப்பவன் என்றே ஆழ்வார் அருளிச் செய்துள்ளார். எனவே எம்பெருமான் புண்ணியத்திற்கு தகுதியாகவே அருள் செய்யப் பாரிக்கிறான் என்று கூறுவது இங்கு பொருந்தாது. எனவே 'விதிவகையே' என்பதற்கு 'நாம் விதித்த வகையே' என்று பொருள் கொள்ள வேண்டும். அதாவது தாம் விதித்தபடியே (உத்தரவிட்டபடியே) செய்பவனாக எம்பெருமான் இருந்தான் என்று ஆழ்வார் அருளிச் செய்கிறார் என்பதே பொருந்தும்" என்று அருளிச் செய்தார்!*

1. இருபத்து நாலாயிரப்படியிலும் இந்நிர்வாஹங்கள் கூறப்பெறுகின்றன.

[811]

(நமது விதிவகையே) तदानुजानन्तमुदारवीक्षणैः (தத$_3$நுஜாநந்தமுத$_3$ாரவீக்ஷணை:) "இது ப$_4$ட்டர் அருளிச் செய்ய நான் கேட்டேன்" என்று அருளிச் செய்தார். "சேனைமுதலியார் சட்டையும் மயிர்க்கட்டும் கையும் பிரம்புமாய் வந்து புகுரப் புக்கவாறே, நாய்ச்சிமாருந்தானுமாய் ஸ்வைரமாக இருக்கிற அது தவிர்ந்து, நாய்ச்சிமாரும் ஸிம்ஹாஸநத்தில் ஒரு மூலைகளிலே ஒதுங்க, தானும் ஸவிநயமாக இருக்குமாய்த்து, வ்ருத்$_3$த$_4$ ஸாமந்தரைக் கண்ட ராஜாக்களைப் போலே. இவர்தாமும் 'இவ்விருப்புக்குத் தண்ணீர்த் துரும்பாக ஒண்ணாது' என்று, ஜக$_3$ந்நிர்வாஹத்துக்கு வேண்டுமவற்றைப் பாசுரப்பரப்பற விண்ணப்பம் செய்வராய்த்து. பிராட்டிமாரோடு இருக்குமதிலும் இனிதாயிருக்குமிறே அவனுக்கு, இவர்தம்மைக் காண. प्रियेण (ப்ரியேண) இறே. 'இன்னானை ப்$_3$ரஹ்மாவாக்க வேணும். இன்னானை மாற்ற வேணும்' என்று வேண்டுமவற்றைச் சுருங்க விண்ணப்பம் செய்வர். 'ஐயர் யாதொன்று சொல்லிற்று, அவை எல்லாம் அப்படியே!' என்று கண்களாலே மேலெழுத்திட்டுக் கொடுக்கும்." இவ்வார்த்தை அருளிச் செய்தபோது, கிடாம்பியாச்சானோடு, அல்லாதாரோடு வாசியறக் குமிழி நீருண்டது.

ஆச்சான்தான் ப$_4$ட்டர்க்கு ஸ்நேஹித்திருக்கும் போர. இளையாழ்வான், ஆச்சானை, "ப$_4$ட்டர்தம்மை ஆஶ்ரயித்தவர்களிற் காட்டிலும் நீர் தாழ அநுவர்த்திப்பான் என்?" என்று கேட்க, "நீ அன்று கண்டிலை காண்! எம்பெருமானார் ப$_4$ட்டர் கையிலே புஸ்தகத்தைக் கொடுத்துத் திருமுன்பே ஒரு ஶ்லோகத்தை விண்ணப்பம் செய்வித்துத் திருப்பிரம்புக்குப் புறம்பாகக் கொண்டு புறப்பட்டுச் சுற்றும் பார்த்தருளி, 'நம்முடையார் அடங்கலும் நம்மை நினைத்திருக்குமாபோலே இவனை நினைத்திருங்கோள்' என்று அருளிச் செய்தார்."

(திருவாய்மொழி 10-6-1 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

"ஆழியான் அருள் தருவான் அமைகின்றான் அது நமது விதிவகையே" (எம்பெருமான் நம் கட்டளையின்படியே அருள் செய்யப் பாரிக்கின்றான்) என்று ஆழ்வார் அருளிச் செய்வதாக எம்பெருமானார் அருளிச் செய்த பொருளை எடுத்துக் காட்டிய உரையாசிரியர், இத்தொடர்பில் விஷ்வக்ஸேனர் (சேனை முதலியார்) சொன்னபடியே எம்பெருமான் கேட்கின்றான் என்று ஸ்தோத்ர ரத்னத்தில் ஆளவந்தார் அருளிச் செய்துள்ள (42ம்) சுலோகத்தையும், அந்த சுலோகத்தை பட்டர் மிகமிகச் சுவையாக விளக்கிய ***ஐதிஹ்ய****த்தையும் நினைவு கூர்கிறார்.*

விளக்கம்

த்வதீயபுக்தோஜ்ஜித சேஷ போஜிநா த்வயா நிஸ்ருஷ்டாத்மபரேண யத்யதா ப்ரியேண ஸேநாபதிநா ந்யவேதி தத் ததா நுஜாநந்தமுதாரவீக்ஷணை:

(உன்னாலே அமுது செய்யப்பட்டு மிகுந்த ப்ரஸாதத்தை உண்பவரும், உன்னாலே வைக்கப்பட்ட உலகனைத்தின் பொறுப்புகளை உடையவரும், உனக்கு மிகவும் ப்ரியமானவருமான சேனைமுதலியாரால் யாதொரு விஷயம் யாதொரு படியாக விண்ணப்பம் செய்யப்பட்டதோ, அந்த விஷயத்தை 'அப்படியே!' என்று அழகிய திருக்கண் நோக்கங்களாலே நியமித்தருளுகிற....) என்பது ஆளவந்தார் ஸ்தோத்ர ரத்னத்தில் அருளிச்செய்துள்ள சுலோகமாகும்.

"இந்த சுலோகத்தை **பட்டர்** *விளக்கி அருளிச் செய்ய நானே நேரில் கேட்டேன்" என்று* **நம்பிள்ளை** *அருளிச் செய்வார்.*

"உலகனைத்தையும் நிர்வாகம் செய்யும் பொறுப்பைச் சேனை முதலியாரிடம் ஒப்படைத்துவிட்டு, எம்பெருமான் பிராட்டிமாருடன் ஏகாந்தமாக இருக்கையில் சேனைமுதலியார் தமது பதவிக்கு உரிய சட்டை, மயிர்க்கட்டு, பிரம்பு இவற்றுடன் வருவார். அவரைக் கண்டவுடன் எம்பெருமான் பிராட்டிமாரை விட்டு விலகி நிற்க, பிராட்டிமார்களும் சிங்காதனத்தின் ஒரு மூலையிலே ஒடுங்கி நிற்பர். எம்பெருமானும், வயதில் மூத்த அமைச்சர்களைக் கண்டு அவர்களை விட வயதில் சிறியவனான அரசன் பணிவுடன் நிற்பதுபோலப் பணிவுடன் நிற்பான். அப்போது சேனைமுதலியார், எம்பெருமானும் பிராட்டிமாரும் சேர்ந்திருக்கிற சேர்த்திக்குத் தாம் இடையூறாக நிற்கக் கூடாது என்பதனால், உலக நிர்வாகத்திற்காகத் தாம் தெரிவிக்க வந்த செய்திகளை மிகவும் சுருக்கமாக விண்ணப்பிப்பார். எம்பெருமானோ, பிராட்டிமாருடன் கூடியிருப்பதைக் காட்டிலும் இவரைக் காணுவதை மிகவும் இனிமையானதாக நினைத்திருப்பான். 'இன்னானை ப்ரம்ம பதவியில் நியமிக்க வேண்டும்; இன்னானை இந்தப் பதவியிலிருந்து மாற்ற வேண்டும்' என்பன போன்றவற்றை மிகச் சுருக்கமாகச் சேனைமுதலியார் எம்பெருமானிடம் விண்ணப்பிப்பார். 'ஐயர் எவையெல்லாம் சொல்லிற்று, அவை அவை அப்படியே ஆகட்டும்' என்று எம்பெருமான் கண்பார்வையினாலேயே ஒப்புதல் வழங்கிவிடுவான்" என்று கண்ணால் காண்பது போல் பட்டர் விளக்கியருள, அதைக் கேட்டுக் கொண்டிருந்த கிடாம்பியாச்சானும் மற்றவர்களும் பட்டருடைய வார்த்தைகளில் மிகவும் ஈடுபட்டு மெய்மறந்தனர்.

கிடாம்பியாச்சான் *பட்டரிடம் மிகவும் அன்பும் மதிப்பும் உடையவராக இருப்பர்.* **இளையாழ்வான்** *என்பவர், கிடாம்பியாச்சானிடம், "எம்பெருமானாருடைய சீடரான நீர், பட்டருடைய சீடர்களைக் காட்டிலும் அவரிடம் மிகத்தாழ நின்று பழகுவது ஏன்?" என்று கேட்டார். அதற்குக்*

கிடாம்பியாச்சான், "அன்று எம்பெருமானார் செய்த செயலை நீ பார்க்கவில்லை அன்றோ! எம்பெருமானார் பட்டர் கையில் புத்தகத்தைக் கொடுத்து, பெருமாள் திருமுன்பே திருப்பிரம்புக்குள்ளே (பெருமாளுக்கு மிகவும் அருகில்) அழைத்துச் சென்று ஒரு சுலோகத்தை விண்ணப்பிக்கும்படி செய்து, பிறகு திருப்பிரம்புக்கு வெளியே அழைத்துக் கொண்டு புறப்பட்டு, சுற்றிலும் இருந்தவர்களைப் பார்த்து, "நம்முடையவர்கள் எல்லோரும் நம்மை (எம்பெருமானாரை) நினைத்திருப்பது போலவே இவனையும் (பட்டரையும்) நினைத்திருங்கள்" என்று அருளிச் செய்தார். (அதனால்தான் நான் பட்டரை எம்பெருமானாரைப் போலவே நினைத்து மிகவும் தாழநின்று பழகுகிறேன்)" என்று அருளிச்செய்தார்.

[812]

(நரகத்தை நகு நெஞ்சே) பிள்ளை அழகிய மணவாள அரையர் க்ரந்தியைப் பார்த்துச் சொன்ன வார்த்தையை நினைப்பது.

(திருவாய்மொழி 10-6-5 ஈடு வியாக்கியானம்)

நிகழ்டம்

"நான் ஏறப்பெறுகின்றேன் நரகத்தை நகு நெஞ்சே" (நான் பரமபதத்தை அடையாநின்றேன். ஆதலால் ஸம்ஸாரமாகிற நரகத்தைப் பார்த்து நெஞ்சே! சிரி) என்று ஆழ்வார் அருளிச்செய்கிறார். இத்தனை நாள்கள் தம்மைத் துன்புறுத்திய இவ்வுலக வாழ்க்கையைத் திரும்பிப் பார்த்து, 'உன்னை வென்று விட்டேன்' என்று கூறிச் சிரி என்று ஆழ்வார் தம் நெஞ்சைக் குறித்த அருளிச் செய்வதாக விளக்கிய உரையாசிரியர், பிள்ளை அழகிய மணவாளப் பெருமாள் அரையர் அருளிச் செய்த **வார்த்தையை** *எடுத்துக் காட்டுகிறார்.*

விளக்கம்

பிள்ளை அழகிய மணவாள அரையர் *திருமேனியில் ஒரு க்ரந்தி (கட்டி)யால் வருந்திக் கொண்டிருந்தார். அவர் பரமபதத்திற்குப் போகின்ற நிலை அடைந்தபோது, 'உன்னை வென்றேன் அன்றோ!' என்று க்ரந்தியைப் பார்த்து சிரித்துக் கொண்டே கூறினாராம்.*

[813]

(ஆட்செய்மின்) "ஆழங்காலிலே இழிந்து அமிழ்வார் அவ்விடத்தே கொண்டைக்கோல் நாட்டுமாபோலே கொண்டைக்கோல் நாட்டுகிறார்" என்று சிற்றாட்கொண்டான். உடையவர், "இன்னார் உயிர் என்னாமையாலே அவன் உயிரைக் காத்து ஆட்செய்மின்கள்" என்று அருளிச் செய்வர்.

(திருவாய்மொழி 10-7-1 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

"செஞ்சொற் கவிகாள் உயிர் காத்து ஆட்செய்மின்" (செவ்விய சொற்களைக் கொண்டு கவிபாடும் புலவர்களே உயிர்காத்து, அடிமை செய்யுங்கள்) என்று ஆழ்வார் அருளிச் செய்துள்ளார். எம்பெருமான் அடிமை கொள்ளுபவன் போலப் புகுந்து தன்னுடைய எளிமைக் குணத்தைக் காட்டி உயிரைக் கொள்ளை கொள்பவன் ஆதலால், அந்த நீர்மைக் குணத்தில் முழுகிப் போகாமல் இருந்து அடிமை செய்யப் பாருங்கள் என்கிறார் ஆழ்வார். இங்கு **நிர்வாஹங்கள்** காட்டப் பெறுகின்றன.

விளக்கம்

இவ்விடத்தில் சிற்றாட்கொண்டான் என்பவர், "நீர்நிலைகளில் ஆழங்களில் அமிழ்பவர்கள், மற்றவர்கள் அவ்வாழங்களில் சிக்கிக் கொள்ளக் கூடாது என்று எச்சரிக்கை செய்வதற்காக ஆழங்களின் அளவைக் காட்டும் கொண்டைக்கோல் நட்டுவைப்பது போல, ஆழ்வாரும், எம்பெருமானுடைய சீலகுணத்தில் மற்றவர்கள் அமிழ்ந்து போகாமல் இருப்பதற்காக 'உயிர் காத்து ஆட்செய்மின்' என்று கூறி கொண்டைக்கோல் நாட்டுவதுபோல் மற்றவர்களை எச்சரிக்கிறார்" என்று அருளிச் செய்தார்.[1]

உடையவர், "இங்கு 'உயிர் காத்து ஆட்செய்மின்' என்று உள்ளதே தவிர யாருடைய உயிரைக் காத்து ஆட்செய்ய வேண்டும் என்று அருளிச் செய்யப் பெறவில்லை. எனவே எம்பெருமானுடைய உயிரைக் காத்து ஆட்செய்யுங்கள் என்று ஆழ்வார் அருளிச் செய்கிறார்" என்று பொருள் உரைத்தார். அதாவது எம்பெருமான் தன்னுடைய எளிமைக் குணத்தைக் காட்டி தம்மோடு அவன் கலந்து பரிமாற நினைக்கும் போது, 'அவன் உயர்ந்தவனாயிற்றே, நாம் தாழ்ந்தவர்களாயிற்றே, அவனோடு நாம் எப்படிக் கலந்து பரிமாறுவது' என்று நினைத்துப் பின்வாங்க நினைப்பது அவனை இழப்பதற்குக் காரணமாகிவிடும்; எனவே அப்படிப் பின்வாங்கி அவனை இழக்காமல் அவன் உயிரைக் காத்து அவன் விரும்புகின்ற அடிமையை அவன் நமக்குச் செய்வதற்கு இசைந்து வாழுங்கள் என்று ஆழ்வார் அருளிச் செய்வதாக உடையவர் அருளிச் செய்தார்.

[814]

(நண்ணா அசுரர் நலிவெய்த) அவ்யபதேஶ்யனுக்கு அநந்தரத்திலவன் தமப்பன் செய்ததைக் கேட்டு, "இவன் என்செய்தான் ஆனான்!" என்று கர்ஹித்தான். "ஒரு மதிளை வாங்குங்காட்டில் அத்தர்ஶனம் குலைந்ததோ,

1. இக்கருத்து இருபத்து நாலாயிரப்படியிலும் குறிப்பிடப்பெற்றிருந்தாலும் இப்படிக் கூறியவர் சிற்றாட்கொண்டான் என்பது அங்கு கூறப்பெறவில்லை.

ஸ்ரீராமாயணம் என்றும் திருவாய்மொழி என்றும் வலியன இரண்டு மஹாப்ரப₃ந்த₄ங்கள் உண்டாயிருக்க!" என்றானாய்த்து.

(திருவாய்மொழி 10-7-5 ஈடு வியாக்கியானம்)

நிகழ்டம்

"*நண்ணா அசுரர் நலிவு எய்த, நல்ல அமரர் பொலிவு எய்த, எண்ணாதனகள் எண்ணும் நன்முனிவர் இன்பம் தலைச்சிறப்ப*" *திருவாய்மொழி அவதரித்ததாக ஆழ்வார் அருளிச் செய்கிறார். அசுரர்கள் நலியும்படியாகத் திருவாய்மொழி அவதரித்தது என்றதன் தொடர்பில் ஒரு* **வார்த்தை** *எடுத்துக் காட்டப்படுகிறது.*

விளக்கம்

கூரத்தாழ்வான் திருக்கண்களை இழப்பதற்கும், பெரியநம்பிகள் பரமபதிப்பதற்கும் காரணமாக அமைந்த சோழவரசனை நம் ஆசார்யர்கள் அவ்யபதேச்யன் (பெயர் சொல்லவும்கூடத் தகாதவன்) என்றே கூறுவர். அவன் கழுத்தில் புண் வந்து மாண்டமையால் அவனைக் க்ருமிகண்டன் என்றும் கூறுவதுண்டு. (கி.பி 1070 முதல் 1116 வரை சோழ நாட்டை ஆட்சி செய்தவனான முதற்குலோத்துங்க சோழனே இவ்வரசன் என்பர்.) மிகத் தீவிர சைவனாகையால், இவ்வரசன் ஸ்ரீவைஷ்ணவமதத்தை அழிப்பதற்காகப் பல கொடுஞ்செயல்கள் புரிந்தான். துவேஷத்தினால் திருக்கண்ணபுத்துக் கோவிலின் திருமதிள்களை இடித்தான். இவனுக்குப் பிறகு இவனுடைய மகன் பட்டத்திற்கு வந்தான். (கி.பி 1116 முதல் 1134 வரை சோழ நாட்டை ஆண்டவனான விக்ரமசோழனே இவன் என்பர்.) இவனே அவ்யபதேச்யனுக்கு (பெயர் சொல்லத்தகாதவனுக்கு) அனந்தரத்திலவன் (பிறகு வந்த மகன்). இவன் தன் தந்தை வைணவத்தை அழிப்பதற்காகச் செய்த செயல்களைக் கேட்டு, "என் தந்தை என்ன காரியம் செய்தான்! ஒரு மதிளை இடித்துவிட்டால் வைணவம் அழிந்துவிடுமோ? திருவாய்மொழி என்றும், ஸ்ரீராமாயணம் என்றும் இரண்டு சிறந்த நூல்கள் இருக்கும்போது ஸ்ரீவைஷ்ணவத்தை யாரால் என்ன செய்யமுடியும்?" என்றானாம்.[1]

[815]

(யானாய்த் தன்னைத் தான்பாடி) நம்பி திருவழுதி வளநாடு தா₃ஸர் "ஸ்ரீகீ₃தையை அப்₄யஸித்தான் ஒருவன் ஸங்க்₄யாஸத₃ஸ்ஸிலே சென்றால், பலருமாக நாழி அரிசியைக் கொடுத்து, விஶ்வஸிக்கமாட்டாமையாலே

1. இவ்வரசன் தன் தகப்பனைப்போல் அல்லாமல் வைணவத்தில் பற்று உள்ளவனாகவே இப்படிக் கூறியிருக்கலாம். எண் 276, 309 முதலியவிடங்களில் குறிப்பிடப்படும் விக்ரம சோழதேவன் இவனே என்று கொண்டால் அவன் ஆசார்யர்களாலும் மதிக்கப்பட்டவன் என்றும் அதனலேயே அவனுடைய இவ்வர்த்தை இங்கே குறிப்பிடப்பெறுகிறது என்றும் கொள்ளலாம்.

'புறந்திண்ணையிலே கிட' என்பர்கள். திருவாய்மொழி கற்றான் ஒரு விண்ணப்பம் செய்வான் சென்றால், ஸர்வேஶ்வரன் அகப்படப் புறப்பட்டு எதிர்கொண்டு அகம் ஒழித்துக் கொடுத்து அமுதுபடியும் எடுத்துவிட்டு ஸத்கரிப்பர்கள்" என்றாராம்.

(*திருவாய்மொழி 10-7-5 ஈடு வியாக்கியானம்*)

நிகழிடம்

"யானாய்த் தன்னைத் தான்பாடி" (என்னைக் கொண்டு தானே தன்னைப் பாடிக் கொண்டான்) என்று ஆழ்வார் அருளிச்செய்துள்ளார். எம்பெருமான் தானே பாடினானாகில், அது கீதையைப்போல இருக்கும் என்றுரைத்த உரையாசிரியர், இத்தொடர்பில் நம்பிதிருவழுதிவளநாடு தாஸர் அருளிச்செய்த **வார்த்தை***யை எடுத்துக் காட்டுகிறார்.*

விளக்கம்

எண் 733ன் விளக்கம் பார்க்க.

[816]

(மடித்தேன் இத்யாதி) எம்பெருமானார் உலாவி அருளுகிறவர் முடியப் போகாதே நடுவே மீண்டருள, எம்பார் கதவை ஒருச்சரித்து, "திருமாலிருஞ்சோலை யாகாதே திருவுள்ளத்தில் ஓடுகிறது" என்ன, "ஆம், அப்படியே" என்று அருளிச் செய்தார்.

(*திருவாய்மொழி 10-8-3 ஈடு வியாக்கியானம்*)

நிகழிடம்

"மடித்தேன் மனைவாழ்க்கையுள் நிற்பதோர் மாயையை" (மனை வாழ்க்கையில் நிற்பதற்குக் காரணமான மாயையைத் திருப்பிவிட்டேன்) என்று ஆழ்வார் அருளிச் செய்துள்ளார். இங்கு 'மடித்தேன்' என்றுள்ளதற்குச் சேர ஓர் **ஐதிஹ்யம்** *கூறப்படுகிறது.*

விளக்கம்

எம்பெருமானார் *தமது மடத்திற்குள்ளே உலாவியருளுகிறபோது திருவாய்மொழிப் பாசுரங்களை மனத்திற்குள்அநுஸந்தித்துக் கொண்டே உலாவுவர். அவருடைய நடையழகைக் காணவேண்டும் என்பதற்காக* **எம்பார்** *கதவிற்குப் பின்னால் நின்று கொண்டு எம்பெருமானார் உலாவுவதைக் கண்டு களிப்பார். ஓரிடத்திலிருந்து ஒரு குறிப்பிட்ட தூரம் வரை நடந்து சென்று திரும்பிக் கொண்டிருந்த எம்பெருமானார், திடீரென்று அக்குறிப்பிட்ட தூரம் செல்வதற்கு முன்னமே சடக்கெனத் திரும்பி விட்டார். தமக்குள்ளே மிக மெதுவாக 'திருமாலிருஞ் சோலைமலை என்றேன் என்ன ..' என்று தொடங்கும் திருவாய்மொழிப் பதிகத்தை அநுஸந்தித்துக் கொண்டே உலாவியருளிய*

எம்பெருமானார், இப்பாசுரத்தில் 'மடித்தேன்' (திரும்பினேன்) என்ற ஆழ்வார் அருளிச்செயலை அனுஸந்தித்தபோது அதன் அர்த்தத்தில் நெஞ்சு சென்றபடியால் தாம் வழக்கமாகச் செல்லும் தூரம்வரை செல்லாமல் சட்டென்று திரும்பிவிட்டார். எம்பெருமானார் இந்தப் பாசுரத்தை அனுஸந்தித்துக் கொண்டிருந்தமையால்தான் சடக்கெனத் திரும்பியிருக்க வேண்டும் என்று ஊகித்த எம்பார், கதவைச் சிறிது சாய்த்து, "திருமாலிருஞ்சோலைப் பாசுரம் திருவுள்ளத்தில் ஓடுகிறதோ!" என்று எம்பெருமானாரைக் கேட்க எம்பெருமானாரும், "ஆம், அப்படியே!" என்றாராம்.

[817]

(உணர்த்தல் ஊற்றேனே)....... "இதற்கு ஈச்வரன் சொன்ன உத்தரம் என்?" என்று சீயர் ப$_4$ட்டரைக் கேட்க, "'இவர் தலையிலே ஒரு பழியை ஏறிட்டு, நெடுநாள் இழந்த நாம் சொல்லுவது என்?' என்று லஜ்ஜாவிஷ்டனாய்க் காலாலே தரையைக் கீறி நிற்குமித்தனைபோக்கி, வேறு உத்தரம் உண்டோ?" என்று அருளிச் செய்தார்.

(திருவாய்மொழி 10-8-9 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

"இன்று என்னைப் பொருளாக்கித் தன்னை என்னுள் வைத்தான், அன்று என்னைப் புறம்போகப் புணர்த்தது என் செய்வான்?" (எம்பெருமான் இன்று என்னையும் ஒரு பொருளாக ஆக்கி, என் நெஞ்சுக்குள்ளே தானே தன்னை வைத்தான். ஆனால் அனாதிகாலமாக நான் புறம்போகும்படியாக (=பல பிறவிகள் பிறக்கும்படியாக) என்னைத் ஒதுக்கி வைத்தது எதற்காக?) என்று கேட்பதாக ஆழ்வார் பாசுரம் அமைந்துள்ளது. இதுபற்றி ஒரு **ஸம்வாதம்** கூறப்பெறுகிறது.

விளக்கம்

"இப்படி ஆழ்வார் கேட்ட கேள்விக்கு எம்பெருமான் அளித்த விடைதான் என்ன?" என்று **நஞ்சீயர்** பட்டரைக் கேட்க, **பட்டர்**, "எம்பெருமான் என்ன பதில் கூறுவான்? 'ஆழ்வார்மீது ஏதோ ஒரு பழியை ஏறிட்டு, அவரைக் கைக்கொள்ளாமல் நெடுநாள் இழந்திருந்தது நம்முடைய தவறன்றோ! இவருக்கு நாம் என்ன பதிலைச் சொல்வது?' என்று வெட்கப்பட்டுக் கொண்டு காலால் தரையைக் கீறிக் கிடப்பது தவிர வேறு பதில் உண்டோ?" என்றார்!

[818]

(எதிரெதிர் இத்யாதி) மிளகாழ்வான் படைவீட்டிலே அகரத்துக்குச் செல்ல, "நீ ஆந்தராளிகன்; உனக்குப் பங்கில்லை" என்ன, "நன்மையில் குறை உண்டாய்ச்

1. இருபத்துநாலாயிரப்படி வியாக்கியானத்திலும் இந்த ஸம்வாதம் கூறப்பெற்றுள்ளது.

சொல்லுகிறிகோளோ, அன்றோ?" என்ன, "நன்மையில் குறையில்லை; இதிறே ஹேது" என்ன, "நம் நெஞ்சில் இல்லையாகிலும், இவர்கள் வைஷ்ணவர்கள் என்று கைவிடப் பெற்றோமிறே" என்று புடவையை முடிந்து ஏறவிட்டுக் கூத்தாடினான்.

(திருவாய்மொழி 10-9-4 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

பரமபதத்தில் தாம் பெற்ற பேறுகளை அருளிச்செய்யும் ஆழ்வார் "எதிரெதிர் இமையவர் இருப்பிடம் வகுத்தனர்" என்றருளிச்செய்கிறார். இவ்வுலகில் ஸ்ரீவைஷ்ணவர்களை, அவர்கள் வைஷ்ணவர்கள் என்ற ஒரே காரணத்திற்காகச் சிலர் அவமதிக்கின்றனர் என்றும், அந்த ஸ்ரீவைஷ்ணவர்களைப் பரமபதத்திலுள்ள நித்யமுக்தர்களும் கௌரவிக்கின்றனர் என்றுமுரைத்த உரையாசிரியர், இத் தொடர்பில் ***ஐதிஹ்யம்*** *ஒன்றைக் கூறுகிறார்.*

விளக்கம்

எண் 523ன் விளக்கம் பார்க்க.

[819]

இப்பாட்டில் பதயோஜனை ஆழ்வான்படி.

(திருவாய்மொழி 10-10-1 ஒன்பதினாயிரப்படி வியாக்கியானம்)

நிகழிடம்

"முனியே நான்முகனே முக்கண்ணப்பா" என்று தொடங்கும் இப்பாசுரத்தின் பதங்களுக்குக் கூரத்தாழ்வான் அருளிச் செய்த ***நிர்வாஹம்*** *கூறப்பெறுகிறது.*

விளக்கம்

'நான்முகனே! முக்கண்ணப்பா!' என்ற சொற்கள் நான்முகனுக்கு அந்தர்யாமியாகவும், முக்கண்ணனான உருத்திரனுக்கு அந்தர்யாமியாகவும் உள்ள எம்பெருமானையே (ஸாமாநாதிகரண்யத்தாலே) குறிக்கின்றது என்ற கருத்தைக் கூரத்தாழ்வான் அருளிச் செய்திருக்கலாம்.[1]

1. எல்லா வியாக்கியானங்களிலுமே இப்பொருள் கூறப்பெற்றிருந்தாலும், இந்நிர்வாஹத்தை அருளிச்செய்தவர் கூரத்தாழ்வான் என்பது ஒன்பதினாயிரப்படியில் மட்டுமே குறிப்பிடப் பெற்றுள்ளது. மற்ற வியாக்கியானங்கள் எதிலும் கூரத்தாழ்வான் திருநாமம் குறிப்பிடப் பெறவில்லை.

[820]

(என் கள்வா) "நிர்ஹேதுகமாக உன் வடிவழகைக் காட்டி என்னை விஷயீகரித்தவனே" என்று ஆழ்வான் நிர்வாஹம்.

(திருவாய்மொழி 10-10-1 இருபத்து நாலாயிரப்படி வியாக்கியானம்)

நிகழிடம்

"என் கள்வா" என்று ஆழ்வார் அருளிச் செய்துள்ளமைக்குக் கூரத்தாழ்வான் அருளிச்செய்த ***நிர்வாஹம்*** *கூறப்பெறுகிறது.*

விளக்கம்

"எந்தக் காரணமும் இல்லாமல் நீயே வந்து உன்னுடைய வடிவழகைக் காட்டி என்னை ஆட்கொண்டவனே!" என்று ஆழ்வார் அருளிச் செய்வதாகக் கூரத்தாழ்வான் பொருளுரைத்தார்!

[821]

(கோலமலர்ப் பாவைக்கு அன்பாகிய என் அன்பேயோ) ப$_3$ட்டர் சரம த$_3$ஶையிலே அருளிச் செய்த வார்த்தை, "ரஹஸ்யத்தின்படியாயிருந்தபடி கண்டதே! இப்பாட்டை நம்முடையார் த்$_3$வயத்தோடே அநுஸந்தி$_4$ப்பது, பெரியபிராட்டியாருக்கு ஸ்நேஹியாகையாலே அவன் பரிக்$_3$ரஹமான நமக்கு அன்பனாம்" என்று சீயரைக் குறித்து அருளிச் செய்தார்.

(திருவாய்மொழி 10-10-7 ஈடு வியாக்கியானம்)

நிகழிடம்

"கோலமலர்ப் பாவைக்கு அன்பாகிய என் அன்பேயோ" (பெரிய பிராட்டியின் மீதுள்ள அன்பின் மிகுதியினால் அவ்வன்பே காரணமாக அவளால் அங்கீகரிக்கப்பட்ட என்னிடமும் அன்புள்ளவனே!) என்று ஆழ்வார் அருளியுள்ளார். இதுகுறித்து பட்டர் அருளிச்செய்த ***வார்த்தை*** *கூறப்பெறுகிறது.*

விளக்கம்

பட்டர் *தம்முடைய இறுதிக் காலத்தில்* நஞ்சீயரைப் *பார்த்து, "இப்பாட்டு ரஹஸ்யமான த்வயத்தின்படி இருப்பது கண்டீர் அல்லவா! (த்வயத்தில் பிராட்டியுடன் கூடியுள்ள நாராயணன் அன்றோ கூறப்படுகின்றான்!) இப்பாட்டை நம்முடையவர்கள் துவயத்துடன் சேர்த்து அநுஸந்திக்க வேண்டும். அவன் பெரியபிராட்டிக்கு அன்பன் ஆகையால், அவளால் அங்கீகரிக்கப்பட்ட நமக்கும் அன்பனாவான்" என்று அருளிச் செய்தார்.*

1 இருபத்துநாலாயிரப்படியில் மட்டுமே இது ஆழ்வான் நிர்வாஹம் என்று கூறப்பெற்றுள்ளது. மற்ற வியாக்கியானங்களில் ஆழ்வான் திருநாமம் கூறப்பெறவில்லை.

இந்நூலில் இடம்பெறும் பெயர்களும் அவற்றின் எண்களும்

அகளங்கநாட்டாழ்வான்	150, 568
அகளங்கப்ரம்மராயர்	699, 778
அப்பன்	517
அம்மணியாழ்வான்	136, 679, 759
அம்மங்கியம்மாள்	231, 329, 463, 557, 571, 628, 719, 725, 726, 744, 745, 747, 752
அனந்தாழ்வான்	31, 51, 75, 102, 126, 149, 160, 187, 245, 311, 317, 387, 505, 510, 534, 606, 666, 672, 682, 706
அருளாளப்பெருமாள் எம்பெருமானார்	35, 40, 328, 681, 686, 760
அவ்யபதேச்யனுக்கு அனந்தரத்திலவன்	814
அழகப்பெருமாள் அரையர்	215
ஆச்சான்(அல்லது) ஆ(ய்)த்தான்	79, 131, 585, 676, 776, 804
ஆச்சான் திருவாலிநாடுதாஸர்	799
ஆச்சான்பிள்ளை	74
ஆச்சிமகன்	357, 566
ஆட்கொண்டவில்லிசீயர்	77
ஆண்டாள் (கூரம்)	56, 84, 88, 196, 348, 387, 608, 698
ஆண்டான்	54, 145, 163, 380, 487, 503, 529, 610, 618, 661, 676, 754, 755, 760, 769
ஆப்பான் திருவழுந்தூர் அரையர்	17, 133, 237, 239, 274, 320, 342, 376, 587, 595, 615, 616, 652, 700, 762
ஆமருவிநிரைமேய்த்தான் நம்பியார்	605
ஆலவாயுடையான்	243
ஆழ்வார் திருநறையூரரையர்	274

ஆழ்வார் திருவரங்கப் பெருமாள் அரையர் 17, 33, 36, 53, 206, 281, 446, 504, 604, 634, 636, 688, 766

ஆழ்வான் 4, 23, 28, 29, 34, 36, 62, 68, 82, 92, 97, 105, 145, 169, 180, 182, 195, 196, 198, 236, 255, 265, 268, 348, 375, 379, 383, 385, 411, 419, 427, 446, 462, 492, 522, 555, 572, 579, 605, 607, 630, 632, 681, 698, 720, 738, 753, 756, 760, 662, 819, 820

ஆளவந்தார் 46, 57, 94, 97, 98, 102, 109, 134, 141, 144, 176, 233, 292, 312, 329, 335, 349, 358, 362, 402, 412, 420, 466, 468, 474, 477, 478, 482, 490, 491, 505, 508, 550, 559, 573, 592, 593, 596, 633, 644, 665, 670, 681, 684, 714, 723, 732, 734, 742, 748, 749, 751, 757, 777, 780, 781, 790, 793, 802, 808, 809

இடையாற்றுக்குடிநம்பி 737

இருகைமதவாரணம் 778

இளையபெருமாள் 610

இளையாழ்வான் 699, 811

உடையவர் எம்பெருமானார் பார்க்க

உய்ந்தபிள்ளை 8, 165, 626, 648, 702

எங்களாழ்வான் 16, 319

எச்சான் 761

எம்பார் 3, 8, 37, 49, 89, 90, 120, 125, 133, 142, 165, 214, 225, 229, 260, 294, 321, 345. 352, 354, 368, 415, 418, 420, 426, 428, 467, 472, 479, 486, 487, 488, 489, 500, 502, 503, 542, 548, 562, 579, 584, 589, 622, 630, 648, 649, 651, 661, 667, 677, 713, 735, 754, 760, 782, 792, 798, 816

எம்பெருமானார் 8, 23, 32, 33, 36, 39, 40, 46, 50, 57, 84, 85, 87, 96, 101, 108, 128, 142, 145, 149, 166, 189, 190, 193, 195, 224, 233, 235, 255, 263, 275, 281, 297, 300, 311, 318, 333, 334, 335, 338, 365, 366, 381, 382, 383, 384, 385, 386, 387, 395, 397, 416, 420, 425, 428, 437, 463, 466, 468, 474, 485, 490, 491,

492, 501, 508, 515, 524, 527, 530, 531, 532, 549, 555, 559, 572, 575, 592, 593, 596, 597, 604, 633, 635, 636, 644, 666, 673, 708, 709, 713, 732, 734, 738, 741, 751, 757, 767, 777, 780, 784, 785, 787, 790, 791, 808, 810, 813, 816

ஜீயன் திருக்குருகைப் பெருமாள் அரையர் 570

ஒப்பில்லாத பெருமாள் 252

கரிகால்சோழப்ரம்மராயன் 541

காங்கேயன் 194

கிடாம்பிப் பெருமாள் 161

கிடாம்பியம்மாள் 254

கிடாம்பியாச்சான் 101, 235, 347, 383, 575, 811

குருகைகாவலப்பன் 353, 478

குறும்பறுத்தநம்பி 9, 249

குன்றத்து சீயர் 425

கூரத்தாழ்வான் ஆழ்வான் பார்க்க

கூரத்து ஆழ்வார் 4, 169, 607

கேசவதீக்ஷிதர் 338

கோயிலாத்தான் 772

கோளரியாழ்வான் 186, 435

சிங்கப்பிரான் 649

சிற்றாட்கொண்டான் 11, 498, 581, 785, 813

சிறியாண்டான்பெருமாள் 237

சிறியாத்தான் 60, 130, 153, 156, 159, 213, 228, 277, 356, 393, 526, 646, 715, 721, 804

சிறியாழ்வானப்பிள்ளை 25

சீராமப்பிள்ளை 177, 314, 427, 499, 608, 677, 698

செல்வநம்பி 761

சுந்தரபாண்டியத்தேவர் 127, 285

சுப்ரமண்யபட்டர் 91, 365

சொட்டை நம்பி 141, 358, 559

சொண்டர் 568

சோமாசியாண்டான் 311, 666

சோழசிகாமணிப்பல்லவராயர் 174

தம்பி அப்பிள்ளையாழ்வான் 178

தமிழன் 222, 438, 476, 543, 574, 655, 727

திரிபுராதேவியார் 139, 189, 193

திருக்கச்சிநம்பி 27, 333

திருக்கண்ணமங்கையாண்டான் 114, 179, 765

திருக்குருகைப்பிரான்பிள்ளான் பிள்ளான் பார்க்க

திருக்கோட்டியூர்நம்பி 47, 49, 141, 145, 335, 375, 377, 385, 461, 741, 753

திருமகிழ்மாலை மார்பன் 178

திருமலை நம்பி 89, 133, 138, 331, 352, 356, 386, 443, 548,

திருமழிசைதாஸர் 380

திருமாலையாண்டான் 144, 420, 437, 466, 468, 474, 482, 491, 592, 593, 597, 633, 644, 708, 751, 790, 808, 809

திருவாய்க்குலத்தாழ்வார் 261, 554

திருவாய்மொழிப்பிள்ளை 25, 38

திருவிருந்தவரைமார்பன் 642

திருவிளக்குப்பிச்சன் 226

தெற்காழ்வான் 186, 435

தேவப்பிள்ளை 67

தொண்டனூர்நம்பி 83, 761

நங்கையார் 4, 607, 761

நஞ்சீயர் 1, 5, 10, 14, 16, 24, 40, 41, 42, 43, 48, 61, 66, 71, 77, 78, 83, 86, 93, 95, 103, 115, 119, 121, 122, 123, 124, 126, 127, 129, 131, 135, 136, 152, 154, 167, 168, 170, 173, 174, 181, 190, 191, 192, 200,

201, 202, 205, 208, 211, 212, 216, 219, 221, 222, 227, 230, 231, 238, 251, 261, 272, 278, 279, 281, 284, 285, 286, 288, 290, 293, 295, 306, 307, 318, 319, 320, 323, 330, 331, 332, 339, 363, 367, 372, 372, 376, 377, 380, 390, 394, 399, 401, 404, 421, 431, 432, 440, 441, 444, 447, 447, 448, 453, 465, 473, 475, 494, 507, 514, 525, 533, 536, 537, 538, 540, 541, 551, 552, 556, 558, 560, 563, 567, 569, 574, 576, 594, 596, 600, 603, 606, 609, 611, 614, 620, 626, 627, 629, 637, 639, 652, 653, 656, 657, 661, 669, 671, 675, 678, 687, 689, 690, 691, 694, 701, 702, 703, 705, 707, 712, 713, 724, 727, 729, 736, 740, 763, 774, 781, 783, 784, 794, 795, 797, 800, 806, 817

நடுவில்திருவீதிப்பிள்ளைபட்டர் 771

நம்பி ஏறுதிருவுடையார்தாஸர் 83, 439

நம்பி திருவரங்கநாராயணதாஸர் 789

நம்பி திருவழுதிவளநாடுதாஸர் 107, 163, 198, 347, 449, 733, 815

நம்பிள்ளை 10, 25, 40, 93, 115, 116, 121, 122, 123, 129, 148, 157, 158, 199, 201, 204, 205, 210, 212, 219, 222, 231, 240, 242, 244, 247, 248, 252, 256, 271, 272, 278, 281, 284, 286, 291, 304, 324, 331, 332, 337, 338, 339, 390, 391, 393, 394, 403, 405, 406, 407, 413, 422, 442, 460, 513, 520, 521, 522, 528, 533, 536, 541, 547, 563, 564, 567, 569, 588, 594, 601, 602, 612, 614, 627, 628, 643, 674, 679, 686, 690, 710, 717, 719, 722, 724, 725, 731, 734, 783, 784, 789, 794, 811

நம்பி ஸ்ரீகோவர்த்தனதாஸர் 174

நம்பி ஸ்ரீஸேநாபதிதாஸர் 654

நம்பி ஸ்ரீஹநுமத்தாஸர் 255

நல்லார் 654

நல்லான் 623

நாதமுனிகள் (94), 553, 690

நாலூராச்சான்பிள்ளை 6, 7, 10, 13, 21, 25, 38,

நாலூர்பிள்ளை 6, 21, 22, 25

நிலாத்துக்குறிபகவர் 269, 315, 535, 712

ப்ரஸாதவிடைக்காரன் 7

பட்டர் 1, 5, 10, 11, 12, 14, 18, 24, 31, 42, 43, 44, 45, 48, 52, 55, 56, 59, 61, 63, 65, 66, 67, 69, 70, 72, 76, 78, 80, 81, 83, 88, 95, 97, 99, 100, 104, 105, 106, 107, 110, 111, 112, 113, 118, 119, 124, 132, 135, 140, 143, 146, 147, 148, 151, 152, 154, 155, 160, 167, 170, 172, 174, 175, 176, 177, 181, 183, 184, 186, 187, 188, 198, 200, 203, 207, 209, 211, 213, 214, 216, 217, 220, 221, 223, 225, 232, 234, 235, 237, 238, 239, 242, 243, 244, 245, 246, 250, 251, 253, 254, 256, 257, 262, 266, 267, 269, 273, 274, 277, 283, 284, 286, 288, 293, 296, 299, 301, 302, 303, 305, 306, 308, 310, 311, 314, 315, 316, 317, 322, 327, 330, 331, 336, 343, 344, 346, 348, 350, 351, 356, 357, 359, 360, 361, 362, 363, 364, 367, 371, 373, 376, 377, 380, 387, 388, 389, 392, 396, 399, 400, 401, 403, 404, 405, 406, 407, 414, 417, 423, 424, 427, 431, 434, 435, 438, 439, 447, 450, 451, 454, 455, 456, 457, 458, 459, 465, 469, 470, 471, 472, 476, 480, 481, 483, 484, 494, 495, 496, 497, 499, 509, 514, 516, 525, 526, 534, 535, 544, 545, 546, 548, 551, 557, 560, 561, 566, 577, 583, 585, 586, 587, 588, 590, 598, 599, 606, 608, 614, 616, 623, 629, 638, 640, 641, 642, 645, 650, 653, 660, 663, 666, 675, 677, 679, 680, 685, 692, 693, 694, 697, 698, 699, 706, 707, 715, 721, 739, 747, 752, 758, 759, 760, 764, 767, 770, 772, 778, 780, 795, 796, 797, 799, 800, 801, 803, 811, 817, 821

பண்டிதர் 585

பத்மநாபப்பெருமாள் 25

பரிஞையப்பர் 775

ப்ாலிகைவாளிப்பிள்ளை 537

பாஷ்யகாரர் எம்பெருமானார் பார்க்க.

பிள்ளான் 30, 40, 136, 154, 224, 241, 371, 429, 432, 433, 440, 441, 452, 464, 493, 511, 552, 603, 609, 616, 621, 624, 625, 630, 631, 653, 659, 678, 680, 689, 696, 704, 711, 713, 728, 729, 730, 736, 740, 743, 746, 750, 779, 788, 807

பிள்ளை 517

பிள்ளை அமுதனார் 2, 234, 259, 262, 271, 280, 282, 369, 445, 580, 591, 642, 683, 805

பிள்ளை அழகியமணவாள அரையர் 118, 185, 209, 264, 694, 768, 812

பிள்ளை அழகியமணவாளப் பெருமாள் அரையர் 216

பிள்ளை உறங்காவில்லிதாஸர் 15, 58, 117, 218, 258, 287, 326, 334, 340, 378, 379, 446, 565, 568, 649, 658, 681, 718

பிள்ளைதிருக்கண்ணபுரத்து அரையர் 270

பிள்ளை திருநறையூரரையர் 17, 42, 86, 137, 161, 162, 164, 171, 184, 221, 256, 289, 316, 331, 337, 342, 363, 364, 370, 390, 392, 408, 436, 471, 485, 489, 494, 506, 582, 671, 675, 695, 700, 716, 763, 797

பிள்ளை தேவப்பெருமாளரையர் 766

பிள்ளைப்பிள்ளையாழ்வான் 73, 178, 182, 355, 375, 411, 518

பிள்ளையாத்தான் 194, 536

பிள்ளையாழ்வான் 585

பிள்ளைலோகாசார்யர் 20, 40

பிள்ளை விழுப்பரையர் 174, 237, 351, 376, 587

பூர்வர்கள் 301, 303, 310, 343, 409, 430, 484, 613, 619, 638, 639, 645, 655, 662, 663, 668, 709, 810

பெரிய திருமலை நம்பி 443

பெரிய தேவப்பிள்ளை 135

பெரியநம்பி 40, 57, 108, 233, 263, 300, 333, 522, 738

பெரியமுதலியார் 94, 298, 553, 647, 786

பெரிய வங்கிப்புரத்துநம்பி 410

பெரியவாச்சான்பிள்ளை 19, 26

பெற்றி	123, 227, 674, 789
பொன்னாச்சியார்	340
மணக்கால்நம்பி	178, 665, 684, 773
மாறநேர்நம்பி	108, 233, 263, 313,
மிளகாழ்வான்	519, 523, 539, 818
முதலியாண்டான்	ஆண்டான் பார்க்க.
முன்புள்ள முதலிகள்	154, 362, 416, 459, 483, 501, 545, 561,
யாதவராயர்	219
ராமானுஜதாஸர்	64, 377
லோகஸாரங்கமஹாமுனிகள்	617
வங்கிப்புரத்துநம்பி	130, 255, 328, 366, 374, 578, 705, 769
வடக்குத்திருவீதிப்பிள்ளை	19, 40, 197
வடமதுரைப்பிறந்தான் மகன்	273
வடுகநம்பி	32, 35, 39
வண்டர்	568
வண்துவரைப்பெருமாள்	660
வரந்தரும்பெருமாள் அரையர்	227
வளவன் பல்லவதரையன்	377
வாணவதரையன்	132
விக்ரமசிங்கன்	664
விக்ரமசோழதேவர்	276, 309
வீரசுந்தரன்	345
வீரப்பிள்ளை	537
வேல்வெட்டிநம்பியார்	199, 247, 460
ஸ்ரீநம்பி குஹதாஸர்	148
ஸ்ரீபராங்குசதாஸர்	210
ஸ்ரீபராங்குச நம்பி	446
ஸ்ரீவத்ஸாங்கதாஸர்	330
ஸ்ரீவைஷ்ணவ வண்ணாத்தான்	549, 635
ஜநநாத ப்ரம்மராயர்	622, 798

Released by Maaran's Dog ,Toronto , Canada